# நூற்றாண்டு மலர்

1913 - 2013



RAMANATHAN COLLEGE


யா/இராமநாதன் கல்லூரி

சுன்னாகம் - 2014

# நூற்றாண்டு மலர்

**1913 - 2013**

**யா/இராமநாதன் கல்லூரி**
**சுன்னாகம்**
**- 2014 -**



கல்லூரி ஸ்தாபகர் துணைவியார் மகளுடன்...



இராமநாதேஸ்வரம் - சமாதி ஆலயம்

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | "நூற்றாண்டு மலர்" |
| உரிமை | : | மலர்க்குழு |
| வெளியீடு | : | இராமநாதன் கல்லூரி |
| பதிப்பு | : | 2014 |
| அச்சுப்பதிப்பு | : | கரிகணன் (பிறைவேட்) லிமிட்டெட்,<br>இல. 681, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.<br>தொலைபேசி இல: 021 222 2717 / 18 |
| பிரதிகள் | : | 500 |
| பக்கங்கள் | : | 455 + lxxxvii |

| | | |
|---|---|---|
| Title | : | "Centenary Souvenir" |
| Published by | : | Ramanathan College |
| Published in | : | 2014 |
| Printers | : | Harikanan (Pvt) Ltd.,<br>No. 681, K.K.S. Road, Jaffna.<br>Tel: 021 222 2717/18 |
| Copies | : | 500 |
| Pages | : | 455 + lxxxvii |

# கல்லூரிக் கீதம்

**இராகம்: காம்போதி** **தாளம்: ஆதி**

மணிபரந்த மாகடலே மாலுருவ மாயிடினல்
அணிகிளரு மவனிதயத் தாமரைகா ணம்மானை
அணிகிளரு மவனிதயத் தாமரையிற் றிருவெழுந்து
பணிகொள்ளும் பொன்னிலங்கைப் பண்பிதுகா ணம்மானை
பண்பிதுநேர் பொன்னிலங்கைப் போற்றுதுங்கா ணம்மானை

பொன்னிலங்கைத் திருநுதலாய்ப் பொலிவதுசீர் யாழ்ப்பாணம்
என்றுபல ரேத்துவது மியல்பேகா ணம்மானை
என்றுபல ரேத்துநுதற் கெழிற்திலக மாய்விளங்கும
பொன்றாத பொன்ராம நாதனிட மம்மானை
பொன்ராம நாதன்றன் கல்லூரி யம்மானை

**இராகம்: பூபாளம்** **தாளம்: ரூபகம்**

அரிபடர்ந்த மதர்க்கண்ணா ரரியயனுங்க காணாத
விரிமலர்ச்சே வடிகாணும் வியைப்புடைத்திக் கல்லூரி

**இராகம்: பௌளி**

பண்மிழற்றும் பாவையர்கள் பரமனது பதம்பாடி
விண்களிக்கச் செயும்கீர்த்தி விரகுடைத்திக் கல்லூரி

**இராகம்: கல்யாணி**

திங்கள்சேர் வான்முகத்தார் திருநீற்றுத் தேசுடனே
மங்களஞ்சேர் வாழ்வுபயில் மாண்புடைத்திக் கல்லூரி

**இராகம் ஆனந்தபைரவி**

பொன்பூர்த்த மேனியர்கள் பூக்கொய்து பரமனுக்கப்
பண்மாலை யணிவிக்கும் பாங்குடைத்திக் கல்லூரி

**இராகம்: பெஹாக்**

தித்தித்த தேன்மொழியார் தீங்கரும்பிற் சுவைமிகுந்த
முத்தமிழின் பயன்றிளைக்கும் மகிழ்வுடைத்திக் கல்லூரி

**இராகம்: கேதாரகௌளை**

கிஞ்சுகவாய்க் கன்னியர்சங் கீதநயம் பலவிசைத்து
விஞ்சையர்போல் வீணைபயில் வியப்புடைத்திக் கல்லூரி

**இராகம்: சிந்துபைரவி**

நித்திலத்தை யொத்தநகை நாண்மடவார் நிலைநிரையாச்
சித்திரத்தைப் போலியங்கும் சீருடைத்திக் கல்லூரி

**இராகம்: காபி**


வண்ணமணிப் பூவாடை வனிதையர்கள் பன்மொழியிற்
சொன்னகலை பல பயிலுஞ் சதுருடைத்திக் கல்லூரி

**இராகம்: தோடி**

பால்போன்ற நிலவொளியிற் பந்தாடிப் பூவையர்கள்
நூல்நூற்று நலம்புரியும் நோன்புடைத்திக் கல்லூரி

ஈழத்தைக் காத்திவ் விருநிலத்தைத் தன்புகழாற்
சூழ்ராம னாதன்றன் கல்லூரி – வாழியவே
தாவி லூழித் தண்ணளி
மாவலி கங்கை மணலினும் மிகவே.

ஆக்கம்:
சு. நடேசபிள்ளை
B.A., B.L. (Ex-Senator)



# சு. நடேசபிள்ளை

B.A, B.L, (Ex - Senator)

கல்லூரிக் கீதம் இயற்றியவர்

# மலரின் உள்ளே......


ஆசிச்செய்திகள்... :- ix - xiii

வாழ்த்தியல்... :- xvii - lxxxvii

பேருரையியல்... :- – 58

வரலாற்றியல்...

1. நூற்றாண்டு விழாக் காணும் கல்லூரியின் நீங்காத நினைவுகள் 61 – 77
2. கல்லூரி வரலாறு 78 – 86
3. ஆன்மீகவாதியான அரசியல்வாதி 87 – 93
4. இளைய தலைமுறையும் சேர். பொன். இராமநாதனும் 94 – 99
5. இராமநாதன் அவர்களின் கல்விப் பணி 100 – 101
6. Ramanathan College Chunnakam Foundation, Fond Memories of 100 Years and The Future 102 – 105
7. இராமநாதன் கல்லூரியில் மகாத்மா காந்தி 106 – 114
8. சேர். பொன். இராமநாதன் அவர்களின் நினைவாலயங்களும் அவரது பணிகளும் 115 – 128
9. Sir Ponnampalam Ramanathan A National Figure With an International Reputation 129 – 130
10. சேர். பொன். இராமநாதன் அவர்களின் மகத்தான பணிகள் 131 – 132

நினைவியல்...

1. இந்துப்பண்பாட்டின் வற்றா ஊற்று 135 – 137
2. கல்லூரி நினைவுகள் 138 – 143
3. Celebrating the Centenary of Ramanahan College 144 – 146
4. தாவரங்கள் பேசின தத்துவங்கள் தந்தன 147 – 149

| | | |
|---|---|---|
| 5. | My Alma Moter - Ramanathan College in My Memory Ever | 150 – 154 |
| 6. | எம்மை வழிகாட்டி வளர்த்த அன்னை | 155 – 158 |
| 7. | இராமநாதன் கல்லூரியே வாழிய வாழியவே | 159 – 160 |
| 8. | இராமநாதன் கல்லூரியின் பொற்காலச் சிற்பி – திருமதி பிள்ளை | 161 – 171 |
| 9. | வித்தை விருட்சமாக்கிய வியத்தகு வித்தியாலயம் | 172 – 174 |
| 10. | பதினெண் வருடங்களின் பல்துறை அனுபவங்களும் வாழ்த்துக்களும் | 175 – 190 |
| 11. | கடந்து வந்த பாதையில் கல்லூரிச் சுவடுகள் | 191 – 192 |
| 12. | இராமநாதன் கல்லூரியின் கலைப்பணி – நாட்டிய நாடகங்கள் | 193 – 198 |
| 13. | இராமநாதன் கல்லூரியில் எனது அனுபவம் | 199 – 203 |
| 14. | நீங்கா நினைவில் நிறைந்தவர்கள் | 204 – 217 |
| 15. | இராமநாதன் கல்லூரியில் எனது குடும்பப்பிணைப்பு ஓர் ஆவணப்பதிவாக அமைகின்றது. | 218 – 233 |
| 16. | ஆடற்கலையில் கல்லூரியின் சாதனைகள் | 234 – 241 |
| 17. | இமைப்பொழுதும் மறவோம் | 242 – 245 |
| 18. | Early Days of Ramanathan College | 246 – 247 |
| 19. | மனது மறக்காத விடுதி வாழ்க்கை – (1972 – 1977) | 248 – 251 |
| 20. | என்றும் என் நன்றிக்குரியவர்கள் | 252 – 253 |
| 21. | ஏற்றமுற வைத்த ஏணிகள் | 254 – 257 |
| 22. | என் உள்ளத்திலிருந்து | 258 – 259 |
| 23. | இராமநாதன் கல்லூரியால் வளப்பட்ட என் பரம்பரை | 260 – 261 |
| 24. | மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியும் சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாரும் | 262 – 265 |


**கல்லூரி ஆசிரியர், மாணவர் கருத்தியல்.....**


| | | |
|---|---|---|
| 1. | கல்லூரி வரலாறு | 269 – 277 |
| 2. | பூகோள சூடேற்றமும் பச்சை வீட்டு வாயுக்களும் | 278 – 284 |
| 3. | "ஈழத்து மஹாகவி உருத்திரமூர்த்தி" ஒரு நோக்கு | 285 – 288 |
| 4. | இந்துக்களின் அன்றாட வாழ்வில்... | 289 – 291 |
| 5. | தாட்சாயினியின் சிறுகதையில் பெண்ணியம் பற்றிய ஒரு நோக்கு | 292 – 300 |

| | | |
|---|---|---|
| 6. | Brief History of Sir. Pon. Ramanathan and Some Anecdotes of the 100 Years of College History | 301 – 304 |
| 7. | யா/இராமநாதன் கல்லூரியில் விசேட கல்வித்துறைச் செயற்பாடுகள் | 305 – 312 |
| 8. | குழந்தைப் பருவத்திலிருந்தே தலைமைத்துவத்திற்கு அத்திபாரமிடுங்கள் | 313 – 314 |
| 9. | மாற்றுவலுவுள்ள மாணவர் சாதனைகள் | 315 – 316 |
| 10. | விவசாயமன்றம் – 2013 | 317 – 320 |
| 11. | யா/இராமநான் கல்லூரி இந்துமன்றமும் அதன் செயற்பாடுகளும் | 321 – 324 |
| 12. | புகழின் சிகரம் இராமநான் கல்லூரி | 325 |
| 13. | தாய் நிலம் | 326 |
| 14. | இராமநாதன் கல்லூரி மாதா | 327 |
| 15. | கற்றவற்றில் சில கண்டுபிடியுங்கள் பார்க்கலாம் | 328 – 330 |
| 16. | உண்மை விருட்ச முறை | 331 – 333 |
| 17. | சிந்தனைத் துளிகள் | 334 |
| 18. | கல்வி விருட்சமே நீ நீடூழிவாழ்க | 335 – 336 |
| 19. | சர்வதேச மகளிர் தினமும் புதுமைப் பெண்களும் | 337 – 340 |
| 20. | தொலைபேசிகள் தொல்லையாக | 341 |
| 21. | கல்லூரியின் மடியில் | 342 |
| 22. | விடியலே | 343 |
| 23. | கல்லூரி அன்னை | 344 |
| 24. | தேசிய வீரர் சேர். பொன். இராமநாதன் | 345 – 346 |
| 25. | Techer's Day | 347 |
| 26. | எங்கள் கல்லூரி வாழியவே | 348 |
| 27. | நெப்போலியன் பொனபாட் | 349 – 350 |


ஆய்வியல்...


| | | |
|---|---|---|
| 1. | பல்துறை விற்பன்னரான பண்பாளர் சுப்பையா நடேசபிள்ளை (21.05.1895 – 15.01.1965) | 353 – 360 |
| 2. | மீயறிகையும் எழுதும் முயற்சியும் | 361 – 364 |

| | | |
|---|---|---|
| 3. | சமஸ்கிருத இலக்கியங்களில் காணப்படும் புராதன இந்தியரின் கேளிக்கைகள், திருவிழாக்கள் | 365 – 367 |
| 4. | நிதி நெருக்கடியும் உலகப் பொருளாதாரத்தில் அதன் விளைவுகளும் | 368 – 374 |
| 5. | ஈழத்தமிழ்ச் சமூகமும் ஆவணவாக்கமும் | 375 –389 |
| 6. | நினைவாற்றலும் மாணவர்களும் | 390 – 392 |
| 7. | பெண்களின் கல்வியும் சமுதாய முன்னேற்றமும் | 393 – 397 |
| 8. | இணுவையூர் சின்னத்தம்பிப் புலவரின் பஞ்சவன்னத் தூது பற்றிய ஒரு ஆய்வு | 398 – 405 |
| 9. | சிறுவர் இலக்கியக் கோலங்களும் அறுவடைகளும் – ஒரு அவதானிப்பு | 406 – 416 |
| 10. | தொற்றா மற்றும் தொற்று நோய்களை தவிர்த்தல் எப்படி | 417 – 418 |
| 11. | இயற்கையோடு தமிழ் பேசும் சோலைக்கிளி | 419 – 423 |
| 12. | இந்து மெய்ஞானிகளின் விஞ்ஞானச் சிந்தனைகள் | 424 – 427 |
| 13. | சாதகமற்ற கற்றல் பின்புலம் கொண்ட பிள்ளைகளுக்கான நாளாந்த வகுப்பறைகள் | 428 – 437 |
| 14. | முரண்பாடுகளற்ற மாணவ சமுதாயத்தை உருவாக்குவோம் | 438 – 440 |
| 15. | இராமநாதன் கல்லூரியின் இணைபிரியா உறவுகள் | 441 – 442 |
| 16. | இராமநாதன் கல்லூரி பழைய மாணவர் சங்கங்கள் மேற்கொண்ட கோவில் புனருத்தாரணப் பணி | 443 – 445 |
| 17. | பரிகாரக் கற்பித்தலும் ஆசிரியரும் | 453 – 455 |

# ஆசிச் செய்திகள்



# ஆசிச்செய்தி

நல்லை திருஞானசம்பந்த ஆதீன குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

நல்லை திருஞானசம்பந்த ஆதீன குருமகா சன்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகள் வழங்கிய ஆசியுரை

சைவத் தமிழர்களின் பெருமைக்குரிய பெருந்தலைவர் சேர்.பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் அப் பெருமகனின் உள்ளத்தில் எழுந்த கல்விப் பெருங் கோயில்கள் நூறு ஆண்டுகளுக்கு முன் வடிவம் பெற்றன. சைவப் பெண்கள் பண்பாட்டுப் பாரம்பரியத்தோடு நல் அறிஞர்களாகத் திகழ வேண்டும் என அவர் கண்ட கனவு நனவாகியது. நூற்றாண்டு விழாக் காணும் இராமநாதன் கல்லூரி இராமநாத வள்ளலின் கனவை நவாக்கிய உன்னதமான அடையாளச் சின்னம். இக் கல்லூரியின் நூற்றாண்டு விழாக் குறித்து வாழ்த்துவதில் ஆனந்தம் அடைகிறோம். இக் கல்லூரி யாழ்ப்பாணத் தமிழர்களின் மாபெரும் சொத்தாகும். எந்தக் கல்லூரிக்கும் இல்லாத தனித்துவமான பண்பாடு கடந்த நூறு ஆண்டுகளாக இக் கல்லூரியில் பேணப்பட்டு வருகிறது. இராமநாத வள்ளலின் சிந்தனையை இக் கல்லூரிச் சமூகம் காப்பாற்றி வந்துள்ளது. சைவ மக்களின் பாரம்பரியத்தை இத்தகைய கல்லூரிகள் என்றைக்கும் தவறாது பின்பற்ற வேண்டும். பரமேஸ்வராக் கல்லூரி பல்கலைக்கழகம் ஆகி விட்டது. அக் கல்லூரி வளாகம் இராமநாதனின் சொத்து அப் பெருமகனார் எம் மக்களின் கல்விக்காக வழங்கிய சொத்துக்கள் கோடான கோடி பெறுமதியானவை. அச் சொத்துக்களை கண்ணை இமை காப்பது போல காப்பது கல்விச் சமூகத்தின் தலையாய கடமையாகும். வேற்று நாகரீகம் நிறைந்த உலகில் இராமநாத வள்ளலின் சிந்தனையை செயல் வடிவில் காக்கும் இராமநாதன் கல்லூரி பல்லாண்டு பல்லாண்டு சீரிய நெறியில் சிறக்க பார்வதி பரமேஸ்வரனைப் பிரார்த்தித்து நல்லாசி கூறி அமைகின்றேன்.


"என்றும் வேண்டும் இன்ப அன்பு"



# ஆண்டுகள் நூறு நிறைவுபெறும் இராமநாதன் கல்லூரி

மருதனார்மடத்தில் இயங்கும் இராமநாதன் கல்லூரி புகழ்பெற்ற பல அறிஞர்கள், ஆசிரியர்கள் இருந்து நடாத்தி வந்த கல்லூரியாகும். பண்டிதர்கள், அறிஞர்கள் இக்கல்லூரியை வழிநடாத்தி வந்திருக்கிறார்கள். சமஸ்கிருத பாஷைக்கும் இடமிருக்கும் இக்கல்லூரியில் கல்வி கற்ற பலர் சமஸ்கிருத அறிஞர்களாகப் பிரகாசிக்கிறார்கள். தேசப்பற்று மிக்க பெரியார் சேர். பொன் இராமநாதன் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட இக்கல்லூரி இன்றும் சிறப்புற கல்வித்தானம் வழங்கி வருவது போற்றுதற்குரியதாகும். இதன் நூற்றாண்டு விழா சிறப்புற நடைபெற எல்லாம் வல்ல இறைவன் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

**சிவஸ்ரீ. தா. மகாதேவக்குருக்கள்.**



# ஆசிச்செய்தி

முன்னாள் அதிபர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சுன்னாகம் அவர்களின் ஆசிச்செய்தி

ஈழத் திருநாட்டில் எழுந்த கல்வித் தலங்களில் இராமநாதன் கல்லூரி தனித்துவமானது. இணுவில் எல்லையில் சித்தர்கள் வாழ்ந்த மருதனார்மடசூழலில் சுன்னாகப் பட்டினத்தில் இவ் உன்னத கல்லூரி **1913**ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. மனிதர்களில் சிலர் புனிதர்களாக இறைவனால் படைக்கப்படுகிறார்கள். அப் புனிதர்களில் ஒருவராக ஈழத்தமிழர்கள் பெற்றெடுத்த மாமேதை சேர்.பொன். இராமநாதன் அவர்கள். இவர் தன் வாழ்நாளில் சாதித்தது ஏராளம் ஆத்மீகம், அரசியல், அறப்பணி, என தன் உயிர் பிரியும் வரை பிறவிப் பயனை தர்மத்திற்காகப் பயன்படுத்தினார். சிவ பக்தனாகிய இராமநாதவள்ளல் தான் தேடிய சொத்துக்கள் அனைத்தையும் சிவப்பணிக்கே சமர்ப்பணம் என பொதுப்பணிக்குக் கையளித்த உத்தமர் எவருக்கும் அஞ்சாதவர் ஆங்கில ஏகாதிபத்தியம் சிங்கள சமூகம், இஸ்லாமிய சமூகம் அனைவராலும் ஏகோபித்த தலைவராக நேசிக்கப்பட்ட பெருமான். இப் பெருமான் நல்லைநகர் நாவலர் பெருமானின் தீர்க்க தரிசனத்தை உணர்வு பூர்வமாக சுவாசித்து அதற்கு உயிர் கொடுத்ததன் விளைவாய் உருவாக்கிய கல்விச் சாலைகளே இரண்டு.

1. இராமநாதன் கல்லூரி
2. பரமேஸ்வராக் கல்லூரி

இவ்விரு கல்லூரிகளும் சைவத் தமிழர்களின் உயர் பண்பாட்டு அரண்களாக விளங்கின. இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன் மகாஞானிகளின் ஆசீர்வாதத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இராமநாதன்கல்லூரியின் நூற்றாண்டு விழாவை கல்லூரிச் சமூகம் கோலாகலமாகக் கொண்டாடுவதை இட்டு மிகவும் ஆனந்தம் அடைகின்றேன். இக் கல்லூரியில் ஆரம்பக் கல்வி கற்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இதனைப் பெரும் பேறாகக் கருதுகிறேன்.ஒரு நாட்டில் அரண்மனை போன்று மிகப் பிரமாண்டமான கட்டடங்களோடு பல ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்த இராமநாதன் கல்லூரி அழகுக்கு நிகராக யாழ்

குடாநாட்டில் வேறு ஒரு பாடசாலையைச் சொல்ல முடியவில்லை. மிஷனரி மார்ரின் செல்வாக்கோடு உருவாக்கப்பட்ட பாடசாலைகளுக்கு சவாலாக ஈழத்தமிழன் துணிந்து காட்டிய மாபெரும் கல்விக் கூடம் தான் இராமநாதன் கல்லூரி. இராமநாதன் கல்லூரி திறக்கப்பட்ட வேளை இந்து சாதன் பத்திரிகையில் தமிழிலும் ஆங்கிலத்திலும் கல்லூரியின் அழகை ஆசிரியர் தலையங்கத்தில் அற்புதமாக சித்தரித்துள்ளார். பிற நாட்டு சர்வ கலாசாலைகளுக்கு நிகராக பிரமிக்கத் தக்க பாடாசாலையை இராமநாத வள்ளல் உருவாக்கியுள்ளார். அன்று ஆட்சியில் இருந்த ஆங்கிலேயர்களும் ஆள் பதிகளும் கல்லூரியின் தோற்றம் கண்டு கல்லூரியை பார்வையிட்ட ஆள்பதிவுகளின் குறிப்புக்களை ஈழத்துக் கல்வி வரலாற்றாளர்கள் தம் ஆய்வுகளில் முதன்மைப் படுத்தியுள்ளனர்.

சரித்திர பிரசித்தி பெற்ற இராமநாதன் கல்லூரியின் கிழக்கு எல்லையே நான் பிறந்து வளந்த வீடு. எனது சிறிய பராயம் முதல் இன்றுவரை இராமநாத ஈஸ்வரரை வீதியால் செல்லும் போது வணங்காத நாள் இல்லை. எனது வாழ்வில் அத்திவாரமாக விளங்கும் இராமநாதன் கல்லூரியின் சிறப்பை பெறுமதியை எழுதி முடிக்க முடியாது. அதிகாலையில் இரமநாதன் கல்லூரி வளாகத்தில் உறைந்திருக்கும் நடராஜப் பெருமான் கோயில் மணியோசையை யானும் என் குடும்பமும் நித்தமும் கேட்கும் பாக்கியம் பெற்றோம். இக் கல்லூரி மேடைதான் யான் முதல் அரங்கேறிய மேடை. சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசையில் எனது வகுப்பாசிரியர் திருமதி அமிர்தவல்லி அம்மையார் அவர்கள் என்னைப் பேசுவதற்கு ஏற்பாடு செய்தார். 2ஆம் வகுப்பு மாணவனாகிய நான் சபையில் இருந்த அதிபர் செல்வி.கனகசபை அவர்களைக் கண்டவுடன் மேடையில் நின்று பேசமுடியாமல் மறு பக்கமாக இறங்கி ஓடினேன். எனது ஆசிரியர் என்னை கலைத்துப் பிடித்து நாடியைத் தடவி மீண்டும் மேடையில் ஏறி பேசவைத்த காட்சி என் உள்ளத்தில் பசுமையாக உள்ளது. இன்று உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பல ஆயிரம் மேடைகளில் உரையாற்ற இராமநாதன் கல்லூரி அன்று எனக்குத் தந்த வாழ்வே என்பதை இன்றும் நன்றியோடு மீள நினைந்து போற்றுகின்றேன். இராமநாதன் கல்லூரி வைபவங்கள், விழாக்கள் தனித்துவமானவை. நூல்களில் கற்ற விடயங்களை விட இராமநாதன் கல்லூரி சூழலை சுவாசித்ததனால் பெற்ற அறிவு பெரிதெனக் கருதுகிறேன். எத்தனையோ நாட்டிய நாடகங்கள் , இசை நடன அரங்குகள், ஆன்றோர்களின் சொற்பொழிவுகள் கல்லூரி அரங்குகளில் காணும் வாய்ப்பை என்னைப் போன்ற பல மாணவர்கள் பெற்றார்கள். யான் மாணவனாகக் கற்ற காலத்தில் சுமார் 2000மாணவர்கள் கற்றார்கள். ஆறு இல்லங்கள் விளையாட்டுப் போட்டியை அணி செய்தது. ஜானகி இல்லத்தில் பங்குபற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது ஜானகி இல்லத்தின் நிறம் கத்தரிப்பூ இவ் இல்லத்தின் நிறத்தை யான் உருவாக்கிய சிவபூமி பாடசாலையின் கொடியாகப் பயன்படுத்தி வருகிறேன். இக் கல்லூரியின் பெருமையை அணுஅணுவாக ரசித்து பல பழைய மாணவர்கள் காலத்துக்காலம் எடுத்துரைப்பர். போரின் அனர்த்தங்களினால் இக் கல்லூரிக்கு ஏற்பட்ட

இழப்புக்கள் இடையூறுகள் ஏராளம். பழய சூழலில் இருந்து கல்லூரி மாற்றம் பெற்றது. மீண்டும் பழைய நிலையை அடைய கல்லூரி சமூகம் அயராது பாடுபடுகின்றது. கல்லூரியை மெருகூட்டி நூற்றாண்டு விழாக்கான அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் முயல்கின்றனர். கல்லூரி அபிமானிகள் அனைவருக்கும் என் நல்வாழ்த்தையும் நல்லாசியையும் கூறுகிறேன்.

இக் கல்லூரி வரலாற்றின் இராமநாத வள்ளலுக்கு உருவச் சிலையை அமைக்கும் குழுவில் யானும் ஒருவனாக இணைந்து பங்குபற்றிய காலத்தை நினைத்து மகிழ்கின்றேன். அன்றைய அதிபர் திருமதி ஆனந்தி சிவஞான சுந்தரம் அவர்களின் அயராத முயற்சியாலும் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் ஆளுமையாளும் அன்றைய பாடசாலை அபிவிருத்தி சங்க நிர்வாகிகளின் அர்ப்பணிப்பினாலும் கம்பீரமான உருவச்சிலை கல்லூரி முன்றலில் நிறுவப்பட்டமை ஓர் வரலாற்று நிகழ்வாகும். இராமநாத வள்ளலின் பெரும் கருணையால் உருவாக்கப்பட்ட இராமாதன் கல்லூரியின் வரலாற்றுப் பாரம்பரியங்களை எக்காலத்திலும் எவரும் மாற்றிவிடக் கூடாது. கல்லூரியின் சைவப் பண்பாட்டு உடை சமயக் கலாசார பாரம்பரியம் மற்றும் கல்லூரிச் சொத்துக்கள் எக்காலத்திலும் பாதுகாக்கப்பட வேண்டும். நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கல்லூரியின் புனிதம் பெற உழைத்த கனடா, லண்டன், கொழும்பு, உள்ளூர் பழைய மாணவர்களுக்கு என்றும் நாம் நன்றியுடையோம். லண்டனில் இருந்து வருகை தந்து தன் பொழுதை செலவு செய்து கல்லூரியை புதுமெருகூட்டிய இணுவிலைச் சேர்ந்த சிவநெறியாளர் திரு.நடராஜா சச்சிதானந்தம் அவர்கட்கும் இராமநாத ஈஸ்வரர் கோயிலை புனருத்தாரணம் செய்வித்த ஸ்தாபகர் குடும்ப உறுப்பினர் கௌரவ திரு. டி.என்.சுவாமிநாதர் அவர்களுக்கும் பேராசிரியர் சிற்றம்பலம் அவர்கட்கும் மேல்மாடி ஆலயம் மற்றும் பிரதான மண்டப புணருத்தாரணத்திற்கு உதவிய கனடா பழைய மாணவர் சங்க உறுப்பினர்களுக்கும் அப் பணியில் தொடர்பாடலை ஏற்படுத்தி உதவிய அகில இலங்கை இந்து மாமன்ற தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் அவர்கட்கும் நன்றியையும் வாழ்த்தையும் கூறுகின்றேன். இராமநாதன் கல்லூரி சூரிய சந்திரர் நிலைபெற்று உள்ளது போல் பிரகாசிக்க வேண்டும் என துர்க்காதேவியை பிரார்த்தித்து அமைகின்றேன்.

**செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன்**
தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
சிவபூமி அறக்கட்டளை இயக்குனர்
இந்து ஆய்வு நிலையம்
அகில இலங்கை இந்துமாமன்றம்
முன்னாள் அதிபர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி
சுன்னாகம்.




அதிபர்

திருமதி. கமலராணி கிருஸ்ணபிள்ளை (S.L.P.S. 2 -1, B.A. (Hons), PGDE )

கல்லூரியின் புகழ் பூத்த அதிபர்கள் வரிசையில்



Dr.லேடி இராமநாதன்



திருமதி. ஆர்.ஆர். நவரட்ணம்
1914 - 1917



திருமதி. என்.பி.பிள்ளை
1944 - 1956



திருமதி. ரி. முத்துக்குமாரு
1957 - 1964



திருமதி. யோ.கனகசபை
1964 - 1969



திருமதி. கா. கணேசன்
1965



திருமதி. இ. அருணாச்சலம்
1969 - 1980



செல்வி.ப.ஆறுமுகம்
1980



திருமதி. யோ. இராஜரட்ணம்
1980 - 1983



திருமதி. பு. சச்சிதானந்தம்
1983 - 1986



திருமதி. ஞா. சோமசுந்தரம்
1986 - 1988



திருமதி. ஸ்ரீமதி குமாரசாமி
1988 - 1990



திருமதி. ம. திருச்சிற்றம்பலம்
1990 - 1992



திருமதி. சோ.கைலாசநாதன்
1996



திருமதி. சு. விவேகானந்தன்
1996




திருமதி. ஆ. சிவஞானசுந்தரம்
1992 - 1996. 1996 - 2010



திருமதி. வே. சண்முகரட்ணம்
2011 - 2012

# வாழ்த்தியல்




# Education; The power to meet challenges

It gives me immense pleasure in extending felicitation in the event, The 100th Anniversary Celebration of Ramanathan College, Jaffna.

Education is essential for everyone. It is the level of education that helps persons earn respect and recognition. It is indispensable part of life both personally and socially. The talents, skills, and abilities of each student need to be identified, nurtured, and encouraged so that he/she is able to reach greater heights. Students need to be provided with a platform to think, express and exhibit their skills. It is necessary to empower them to negotiate several issues that confront them, with the teacher being a facilitator. We often make the critical mistake of considering children like a blank notebook that is yet to be written upon. In doing so, we often fail to realize that each child has his/her own individuality, special skills, and talents. Therefore, a good educational system is one that helps a child to nurture his /her talents and overcome shortcomings by providing appropriate, all - encompassing education. This enables the child to develop his/her personality and equips the child to face the challenges of life.

Ramanathan College has been functioning with a noble vision and mission clearly reflecting its social responsibility. The school provides effective and efficient support and facilities to academic mission and maintains a supportive environment for all students and teachers. I convey my warm wishes to the principal and all of the academic staff for their invaluable attempt and greet the students warmly for the future prospects of their creativity.

**Bandula Gunawardhana**
Minister of Education




කාර්යාලය / அலுவலகம் / Office: 94 11 2301591, 94 11 2133805

මහාචාර්ය තිස්ස විතාරණ පා.ම.
பேராசிரியர் திஸ்ஸ விதாரண பா.உ.
**PROF. TISSA VITARANA M.P.**
විද්‍යාත්මක කටයුතු පිළිබඳ අමාත්‍ය (ජ්‍යෙෂ්ඨ)
விஞ்ஞான அலுவல்களுக்கான (சிரேஷ்ட) அமைச்சர்
MINISTER (SENIOR) FOR SCIENTIFIC AFFAIRS

ෆැක්ස් / தொலைநகல் / Fax: 94 11 2301573

නිවස / வதிவிடம் / Residence: 94 11 2805695


## Message from Tissa Vitarana, Senior Minister of Scientific Affairs

I am extremely happy to participate in the in the centenary celebrations of Ramanathan College and to send this message to mark the occasion.

Ramanathan College was founded in 1913 at the height of British colonial rule. At that time the various educational institutions catered to the needs of Christians. Buddhists, Hindus and Muslims were neglected. The first Buddhist boys' school was established in Colombo, Ananda College, overcoming the resistance of the colonial administration largely through the efforts of an American Colonel. Henry Steel Olcott.


In such a context the establishment of Ramanathan College by Sir Ponnambalam Ramanathan at that time was a tremendous achievement. We are all proud that Ramanathan College has performed well, overcoming all the obstacles, and provided a good education which has respected Hindu traditions and culture. I congratulate all those who had contributed to these achievements.

I thank the principal, the staff and the old girls who have invited me to participate at this historic occasion. I wish Ramanathan College all the best in the future.

T. V. Vitarana

...............................................

Prof. Tissa Vitarana
Senior Minister of Scientific Affairs



# பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது வாழ்த்துச் செய்தி

*யாழ். இராமநாதன் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் விஷேட மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதற்கு சந்தர்ப்பம் கிட்டியமையையிட்டு நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன்.*

*1907ஆம் வருடம் ஜூன் மாதம், 3ஆம் திகதி அடிக்கல் நாட்டப்பட்டு 1913ஆம் வருடம் ஜனவரி மாதம் 20ஆம் திகதி திறந்து வைக்கப்பட்ட இக் கல்லூரியானது, யாழ்ப்பாணத்தில் பெண்களின் உயர் கல்விக்கென நிறுவப்பட்ட சைவப் பெண்கள் ஆங்கிலப் பாடசாலை என்ற பெருமையை தன்னகத்தே கொண்டதாகும்.*

*101 மாணவிகளையும் 12 ஆசிரியர்களையும் கொண்டதாக சேர். பொன். இராமநாதன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரியானது, இதுவரையில் பல்வேறு உயரிய கல்விச் சமூகத்தை உருவாக்கித் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆரம்பத்தில் ஆங்கில மொழி மூலமான கல்வி அறிவைப் புகட்டி வந்த இக்கல்லூரி பின்னர், மாணவிகளது அவசியம் கருதி தமிழ் மூலமான கல்வி அறிவைப் புகட்டும் பணியையும் ஆரம்பித்தமை இதற்கு மேலும் வசதியாக அமைந்திருந்தது.*

*சேர். பொன். இராமநாதன் அவர்களது சிறப்பைப் பறைசாற்றும் முகமாக, அண்மையில் சேர்.பொன். இராமநாதன் வீதி, தென் பகுதியான மாத்தறையில் என்னால் திறந்து வைக்கப்பட்டதை இச் சந்தர்ப்பத்தில் பதிவில் வைக்க விரும்புகின்றேன். அன்னாரது பெயர் தமிழர் மத்தியில் மட்டுமல்லாது, சிங்களவர்கள் மத்தியிலும் இன்று வரை போற்றப்படுவதையே இது உணர்த்துகின்றது.*

இக் கல்லூரியின் தொடக்கத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் அடித்தளமிட்ட பெருந்தகை சேர். பொன். இராமநாதன் அவர்களுக்கு எனதும் எமது மக்களினதும் நன்றிகள் என்றென்றும் உரித்தாகும், அவரை இச்சந்தர்ப்பத்தில் பெருமதிப்புடன் நினைவு கூறுகின்றேன்.

இக் கல்லூரியின் உயரிய பணிகளில் தம்மை அர்ப்பணித்துள்ள அனைத்து அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், மாணவிகளுக்கும், பழைய மாணவிகளுக்கும், பெற்றோர்களுக்கும், ஏனைய அனைவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகும்.

இக் கல்லூரி இன்னும் பல வருடங்கள் நிலைத்து வளர எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**டக்ளஸ் தேவானந்தா பா. உ**
செயலாளர் நாயகம் - ஈ.பி.டி.பி.
பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும்
சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்



# Message from the Hon. Governor NP

I am extremely happy to send this message to the maggazine which is going to publish to mark the century celebration of J/ Ramanathan College.

I understand that this college was established in 1913 by our Nation prominent leader Sir Ponnampalam Ramanathan to provide the education to female students in central part of Valikamam of Jaffna district with the atmosphere of Hindu civilization and Tamil tradition.

Even though concept of women's education and women's development emerged after independent but establishment of Ramanathan College in 1913 is proof and result of our nation's leaders visionary thinking.

Presently there about 2000 students are receiving education at this college and I am confidents that's college will continue to produce competent, accomplished younger female generation to do their best to the country in future.

I congratulate the principal, staff, students, parents, well-wishers and magazine committee for all their efforts and wish them the best of everything where education is concerned may you have a prosperous future.

Wish you all the very best.

**GA Chandrasiri,**
Governor,
Northern Province.



# நூற்றாண்டு விழாக் காணும் இராமநாதன் கல்லூரி பார் புகழ் ஈட்டட்டும்

யாழ்ப்பாணம் மருதனார்மடம், இராமநாதன் கல்லூரி 1913 ஆம் ஆண்டு சேர்.பொன்னம்பலம் இராமநாதன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. எனவே கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தான வெளிவீதியின் மேற்குப் புறத்தே அமைந்திருந்த இராமநாதன் பாடசாலையை சைவம் வளரவும் தமிழ்க் கலாசாரம் வளமுறவும் இப் பாடசாலையை மருதனார் மடத்துக்கு மாற்றினார் சேர்.பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் அக்காலத்தில் கிறிஸ்தவ மிசனறி யிடமே கல்வி இருந்தது. இதன் காரணமாக ஆங்கிலக் கல்வியும் சுதேசிகளான நம்மவர்களை கிறிஸ்தவ மதத்துக்கு மாற்றி கல்வி கற்க வசதியளிக்கும் தன்மையும் இருந்தது. இதனால் நமது சைவ தமிழ்க்கலாசாரத்திற்கே பேரிடியாக இருந்த காலம் அது. இதன் காரணமாக இராமநாதன் கல்லூரி மகளிருக்காக அமைக்கப்படலாயிற்று.

சைவச் சூழலிலே கல்வி வளரவேண்டும் என்ற உயர் கருத்தோடு 150 அடி சற் சதுர முற்றத்தைச் சுற்றி மண்டபம், வகுப்பறை, மாணவியர் விடுதி பிரார்த் தனைக் கூடம் முதலான வசதிகளுடன் இராமநாதன் கல்லூரி மகளிருக்காக நிறுவப்படலாயிற்று. இக்கல்லூரியின் முதல் அதிபராக அக்கால கல்விமுறைக் கமைய புளோறன்ஸ் எமேறி நியமிக்கப்பட்டார். இவர் தமது சைவமுறைகளை அனுசரித்துப் பாடசாலையை நடாத்தினர். இவரின் பின்னரும் ஆங்கில அதிபர்கள் ஐவர் பணிபுரிந்துள்ளனர். இதன் மூலம் பெண்கல்வி எனும் சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் கனவு நிறைவாகியது


கேரளத்தைச் சேர்ந்த செல்லம்மாள் பிள்ளையின் சேவைக்காலம் இராமநாதன் கல்லூரியின் பொற்காலம் எனக் கூறுவர். ஆங்கிலப் புலமை, நிர்வாகக் திறமை கொண்ட அவர் கல்வி, கலை, இசை, நடனம், நாட்டியம் போன்றனவற்றில் மிக்க ஆர்வங் கொண்டு விளங்கியமையால் இராமநாதன் கல்லூரி கல்வி கலை சைவ கலாசாரத்தில் நல்ல வளர்ச்சியைக் கண்டது.

இராமநாதன் கல்லூரிக்கு சீமாட்டி லீலாவதி இராமநாதன் அவர்களின் பங்களிப்பும் சிறப்பானது. அவரின் நல்ல ஆளுமை கொண்ட முகாமைத் துவத்தால் இக்கல்லூரி ஏனைய கல்லூரிகளுக்கும் முன் மாதிரியாக விளங்கியது. கால்முட்டப்பாவாடை, அரைத்தாவணி, தலைப் பின்னல் இவை எல்லாம் இராமநாதன் கல்லூரி மாணவியர்க்கான தனி லட்சணங்களாகும் சீமாட்டி லீலாவதி இராமநாதன் அவர்களின் கலை ஆர்வத்தால் மாணவியரி டையே கோலம் போடுதல், இசை, நடனம், நாட்டியம், நாடகம் முதலான வற்றில் போட்டிகளை நடாத்தி பரிசில்களை வ்ழங்கி வந்தமையால் இயல் பாகவே மாணவியர் இவற்றில் ஆர்வங்காட்டினர். மஹாராஜபுரம் சந்தானம் அவர்களை அதிபராகக் கொண்டு இக் கல்லூரி வளாகத்தில் இசைப் பிரிவு ஆரம்பிக்கப் பட்டது. அஃது இன்று யாழ்ப்பாணப் பல்கலை கழக நுண்கலைப் பீடமாக உள்ளமையால் சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் அன்றைய கனவு இன்று நனவாகியுள்ளது.

ஸ்ரீ சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் சமாதியில் சிவலிங்கம் அமைக்கப்பட்டு சிவாலய பூசைகள் நடைபெறுகின்றன. சிவாலய தரிசனம் என்றுமே கல்லூரி மாணவியர் ஆசிரியர், அதிபர் எல்லோ ருக்கும் உள்ளமையை இங்கு கூறலாம். இராமநாதன் கல்லூரியில் கல்வி கற்ற மாணவியர் இன்று ஆசிரியர்களாக, அதிபர்களாக, அரச நிர்வாகிகளாக, வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக, சட்ட வல்லுனர்களாக நற்சேவை புரிகின்றனர்.

நூற்றாண்டு விழாக்காணும மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி மேன் மேலும் வளர வேண்டும் நல் மாணவியரை உருவாக்க வேண்டும் என சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் உறவினர் என்ற வகையிலும் தனிப்பட்ட முறையிலும் பொன்னம்பல வாணேஸ்வரரைப் பிரார்த்தித்து அதிபர், ஆசிரியர், மாணவியரையும் பாடசாலையையும் வாழ்த்துகின்றேன்.

**D. M. சுவாமிநாதன்**



# இராமநாதன் கல்லூரி
# நூற்றாண்டு மலர் 1913-2014
## வாழ்த்துச் செய்தி


சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் இரு கல்லூரிகளை வட இலங்கையில் உருவாக்கினார். திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி ஆண்களுக்கும், மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி பெண்களுக்காகவுந் திறக்கப்பட்டன. இன்று பரமேஸ்வராக் கல்லூரி தான் யாழ் பல்கலைக்கழகமாக உருமாறியுள்ளது. இராமநாதன் கல்லூரி தொடர்ந்து சிறந்த கல்விப் பணியாற்றி வருகின்றது. சேர். பொன். இராமநாதன் வாழ்ந்த காலத்தில் ஆண்களுக்குப் பாடசாலைகள் அமைத்தது ஒரு பெரிய காரியமாகக் கொள்ள முடியாது. ஆனால் சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் பெண்களுக்கு, அதுவுந் தமிழ்ப் பேசும் பெண்களுக்கு, ஒரு தலை சிறந்த கல்விக் கூடத்தைக் கட்டிக் கொடுத்தது ஒரு புரட்சிகரமான கைங்கரியம் என்று கொள்ளலாம். அங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியைகள், மாணவிகள் ஆகியோர் தமிழ்பேசும் இந்து மக்களின் கலாசாரம், பண்பாடு என்பவற்றிற்கு எடுத்துக் காட்டாக விளங்கி வந்துள்ளனர். அவர்களின் நடை, உடை, பாவனை தமிழ் - இந்து பாரம்பரியத்தை வெளிக்காட்டுவனவாக அமைந்து வந்துள்ளன.

வேம்படியில் கல்வி கற்ற என் தாயார் தமது உறவினரான சேர். பொன். இராமநாதன் கொழும்பிலிருந்து வந்திருந்து, இராமநாதன் கல்லூரி ஆசிரியைகள், மாணவியருடன் அளாவளாவும் போது தானும் தரையில் பாயில் உட்கார்ந்து அவரின் வாயிலிருந்து புறப்பட்ட சொற்களைச் செவிமடுத்து நின்றதாகப் பல தடவைகள் கூறியுள்ளார். சேர். பொன். இராமநாதன் மீது அளவுகடந்த மரியாதையும், பயபக்தியும் அவருக்கிருந்ததை நான் அவதானித்திருக்கின்றேன். பெண்கல்வியில் முக்கியத்துவம் உணர்ந்து பரமேஸ்வராக் கல்லூரி கட்ட முதலே அவரால் இராமநாதன் கல்லூரி கட்டி முடிக்கப்பட்டது. ஒரு ஆணின் கல்வி தனிப்பட்டது. ஒரு பெண்ணின் கல்வியோ குடும்பத்தை முன்னேற்றும் சிறப்பம்ஸம் பொருந்தியது. இராமநாதன் கல்லூரி பராரம்பரியத்தில் வளர்ந்த மாணவிகள் சமயத்திலும், கல்வியிலும் சிறந்து விளங்கி தத்தமது வாழ்விலும் பிரகாசித்தனர். இந்தப் பாரம்பரியம் என்றென்றும் தொடர வேண்டும். இன்று நூறு வருடங்களை முடித்திருக்கும் இக் கல்லூரி நிரந்தரமாக மேலும் மேலும் நூற்றாண்டுகள் காண இறைவன் உதவிய புரிய வேண்டும்.

அன்புடன்



**நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன்**
முதலமைச்சர்
வடமாகாண சபை



# ஆசிச்செய்தி

தனித்துவமான பண்பாட்டுப் பாரம்பரியங்களைக் கொண்டிருந்த நம் நாட்டிலே 19ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவ மிஷனரிமாரின் வருகை நமது கல்வி பண்பாட்டு பாரம்பரியத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. கிறிஸ்தவ சூழலில் கல்வி கற்று அந்நிய கலாசார மோகத்தில் ஈடுபட்டு நமது கலை கலாசாரங்களை மறந்து விடுவரோ என ஆறுமுகநாவலர் வழியில் வந்த பலரும் எண்ணினர்.

இந்நிலையிலேயே நாவலர் வழிவந்த சேர்.பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் சைவப்பெண்கள் சைவச் சூழலில் கல்வி பெற வேண்டுமென்ற நோக்குடன் 1913 ஆம் ஆண்டில் இராமநாதன் கல்லூரியினை ஸ்தாபித்தார். இராமநாதன் கண்ட கனவினை பல் ஆண்டுகாலமாக இக்கல்லூரி நிறைவேற்றி வருவது நாம் அறிந்ததே.

உலகெங்கும் வாழும் தமிழர்கள், இராமநாதன் கண்ட கனவு இன்னும் மெய்ப்பட வேண்டும் என்று விரும்புபவர்கள் எனவே நமது நாட்டில் வாழும் தழிழ்ப்பெண்கள் தமது கலை கலாசாரம் பண்பாடு அழியாது சீரும் சிறப்புடனும் வாழ எனது நல்லாசிகள். அமரர் சேர். பொன். இராமநாதனின் சமாதியைத் தாங்கி நிற்கும் அழகிய கோயில், அவரது எண்ணங்களையும், அவர் நேசித்த தழிழையும், அவர் சைவத்தின் மீது வைத்த மாறாப்பற்றையும் வெளிக்காட்டி நிற்கின்றது.

யாழ் மண்ணில் வேறு எந்தக் கல்லூரிகளும் கொண்டிராத பெருமளவான நிலப்பரப்பில் அமைந்துள்ள இக்கல்லூரி மேலும் மேலும் பல வளங்களைப் பெற அரசும், உலகெங்கும் வாழும் தழிழரும் கல்லூரியில் நாட்டம் கொண்ட அனைவரும் உதவ முன் வர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

**த. குருகுலராசா**
அமைச்சர்,
கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை இளைஞர் விவகாரம்
வடக்கு மாகாண சபை,
யாழ்ப்பாணம்.



# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

*கலை, கலாசாரம், கல்வி மற்றும் பாரம்பரியப் பண்பாடுகள் எனும் பல்வேறு சிறப்பம்சங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் கல்வி ஒளி பரப்பிவரும் யா/இராமநாதன் கல்லூரி தனது கல்விப் பணியில் நூற்றாண்டுகளை நிறைவு செய்வதனையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.*

*1913இல் சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களினால் பெண்கள் கல்லூரியாக ஆரம்பித்து வைக்கப்பட்ட இக் கல்லூரியில் இம் மாவட்ட மாணவிகள் மாத்திரமல்லாது ஏனைய மாவட்டங்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்தும் இக் கல்லூரியின் பண்பாட்டு விழுமியங்களைப் பின்பற்றும் நோக்கில் கல்வி பயில வந்துள்ளமை மிகவும் பெருமைக்குரியதாகும். இந்த வகையில் யாழ் மாவட்டத்தில் உள்ள பிரபல பாடசாலைகளில் ஒன்றாக விளங்கும் இக் கல்லூரி விடுதி வசதிகளுடன் கூடிய அழகிய கட்டிடத் தொகுதி, விளையாட்டு மைதானம் போன்ற பௌதீக வளங்களுடன் தனக்கெனத் தனித்துவமான பண்புகளைக் கொண்டுள்ளமை வரலாறு கண்ட உண்மையாகும். இத்தகைய சிறப்புக்களையுடைய இப் பாடசாலை வருடா வருடம் க.பொ.த. (சா/த), க.பொ.த (உ/த) பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளை யடைந்து சாதனை படைத்து வருவதோடு ஏனைய துறைகளிலும் பல வெற்றிகளையீட்டி வருவது அனைவரும் அறிந்ததே.*

*இவ்வாறு தன் நூற்றாண்டு காலக் கல்விப் பணியினால் தலை நிமிர்ந்து நிற்கும் யா/இராமநாதன் கல்லூரி மென்மேலும் உயர்வு பெற்று மாணவர்களின் கல்விச் செல்வத்தை வளர்த்து நல்லதொரு நாளைய சந்ததியை உருவாக்கும் உன்னத கைங்கரியத்தைத் தொடர்ந்தும் மேற்கொள்ள எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.*

**சுந்தரம் அருமைநாயகம்**
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலர்
யாழ் மாவட்டம்.



பிரதி அதிபர்

திருமதி. நந்தினி சிவராஜன் (S.L.T.S. 1 B.A, Dip in Edu, Dip in Dance )







பகுதித் தலைவர்கள்

## கல்லூரியில் சேவையாற்றிய உப அதிபர்கள் வரிசையில்...



திருமதி பரமேஸ்வரி பரராஜசிங்கம்



திருமதி அங்கயற்கண்ணி சிவப்பிரகாசப்பிள்ளை



திரு. வே. ஏகாம்பரநாதன்



திருமதி பத்மினி அருளானந்தம்



திருமதி பரிமளம் பத்மநாதன்



திரு. வை. பாலேந்திரா



திருமதி பத்மாவதி தியாகலிங்கம்



திருமதி சிவஜோதி கந்தசாமி



திரு. த. கெங்காதரன்

## நூற்றாண்டு விழா ஒருங்கமைப்புக் குழு



இடமிருந்து வலம் (இருப்போர்):- திரு. சி. சிவராஜன், திருமதி. ந. சிவராஜன், திருமதி.வை.கணேசபிள்ளை, திருமதி. ப. தியாகலிங்கம், திருமதி. கு. விஜயரகுநாதன் திருமதி. சி. கந்தசாமி, திருமதி. க. இராமநாதன், திருமதி. க. கிருஸ்ணபிள்ளை, திருமதி. ஆ. சிவஞானசுந்தரம், திருமதி. ச. சிவநாதன், திருமதி. வே. சண்முகரட்ணம் திருமதி. ப. கேசவன், செல்வி. சே .ஜெயந்தி, திருமதி.ச.கனேஸ்வரன், திரு.செ.இலகுநாதன்

இடமிருந்து வலம் (நிற்போர்):- திருமதி. ஜெ. வரதராஜன், திருமதி. க. லிங்கேஸ்வரன், திருமதி. வி. ஜெயராஜா, திருமதி. கோ. இராமச்சந்திரன், திருமதி. த. குமாரதாஸ் திருமதி. வி. பிரதாபன், திருமதி. கா. உதயகுமாரன், திருமதி. சு. சீனிவாசகம், திருமதி. வி. நரேந்திரா, திருமதி. சி. ஸ்ரீதரன், திரு. தி. விக்கினேஸ்வரன், திரு. ச. பாலமுரளி திரு. நி. மதிரூபன், திரு. S. புவிநாயகம், திரு. அ. சிவகுமார்

**தலைவர் - திருமதி. க. கிருஸ்ணபிள்ளை செயலர்- திருமதி. ச. சிவநாதன் பொருளாளர்- திருமதி. ப. கேசவன்**

ஆசிரியர் குழாம் - 2013





பழைய மாணவர் சங்க செயற்குழு - 2013



பழைய மாணவர் சங்க செயற்குழு - 2002



# கௌரவ ஆளுநரின் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

இராமநாதன் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி வாழ்த்துச்செய்தி வெளியிடுவதில் பேருவகை அடைகின்றேன். தனித்துவமான பண்பாட்டுப் பாரம்பரியங்களைக் கொண்டிருந்த நம் நாடு அன்னியர் ஆட்சிக்குட்பட்ட போது பண்பாட்டு பாரம்பரியங்களில் பல சிதைவுகளை எதிர்கொண்டது. இக்கால கட்டத்தில் வடக்கிலும், தெற்கிலும் பல சுதேசிய சிந்தனையாளர்கள் மொழியையும் இன பாரம்பரியங்களையும் காப்பாற்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இந்த வகையில் யாழ்ப்பாணத்தில் தோன்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் தமிழையும் சைவத்தையும் தனது இரு கண்களாகப் போற்றி பாதுகாத்தவர் அந்தப் பாரம்பரியத்தில் வந்த சேர் பொன் இராமநாதன் அவர்கள் சைவப் பெண்பிள்ளைகள் சைவச் சூழலில் கல்வி பெறவேண்டும் என்ற உயர்ந்த நோக்குடன் 1913 ஆம் ஆண்டு இராமநாதன் கல்லூரியை ஸ்தாபித்தார். அத்துடன் அதன் வளர்ச்சிக்காக பல பௌதீக வளங்களையும் ஒருங்கிணைத்தார். என்ன கனவுடன் இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதோ அதைக் கடந்த நூற்றாண்டுகளாக தனது சேவை மூலம் நிரூபித்து வருவதை நாம் அனைவரும் நன்கறிவோம்.

இக்கல்லூரி நூற்றாண்டைக் கடந்து நிற்கும் இவ்வேளையில் இதை ஸ்தாபித்து இதற்காக விசாலமான நிலத்தை ஒதுக்கீடு செய்து எதிர்கால வளர்ச்சியை நூற்றாண்டுக்கு முன்பே திட்டமிட்ட பெரியாரை இச் சந்தர்ப்பத்தில் நன்றியுணர்வோடு நினைவு கூறுவது யாழ்ப்பாண கல்விப்பாரம்பரியத்தின் பால் அக்கறையுடையவர்கள் அனைவரதும் மிக முக்கிய கடமையாகும். அத்துடன் கடந்த நூறு வருடங்களாக அதிபர்களாகவும், ஆசிரியர்களாகவும் மற்றும் பல நலன்விரும்பிகள் பங்களிப்பை ஆற்றியிருக்கின்றார்கள் அவர்களின் நன்றியுணர்வு நினைவு கூரப்படவேண்டும். இக்கல்லூரி நூற்றாண்டைக் கடந்து இன்னும் பல நூற்றாண்டு தனது பாரம்பரியத்தை இழக்காமல் எமது சமூகத்திற்கு கல்விப்பணியாற்றவேண்டும். என்று மனதார வாழ்த்தி நிற்கின்றேன். அத்துடன் நூற்றாண்டு விழா சிறப்புற வாழ்த்துவதுடன் இதற்காக உழைக்கும் அதிபர், ஆசிரியர் குழாம், பாடசாலைச்சமூகம் மற்றும் அனைத்து நல் உள்ளங்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

**இ. இளங்கோவன்**
ஆளுநரின் செயலாளர்,
வடமாகாணம்.



# வாழ்த்துச் செய்தி

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இலங்கைவாழ் மக்கள் ஆங்கிலேயரால் அறிமுகப்படுத்திய வெள்ளை அங்கி அணிந்து (White Colour Job) அரச பதவிகளுக்கு ஆசைப்பட்டு பிரித்தானியர் சொன்னபடி யாழ்ப்பாண தீபகற்ப மக்கள் இந்துசமயத்தைக் கைவிட்டு கிறிஸ்தவசமயத்திற்கு மதம் மாறியதால் அவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட பெரிய கிறிஸ்தவ பாடசாலைகளில் கல்வி கற்கும் வாய்ப்பும், அரச பதவிகளும் வழங்கப்பட்டது. அத்தோடு மதமாற்றம் செய்யப்பட்டதால் இவர்கள் கிறிஸ்தவமதத்தைப் பின்பற்றிப் பைபிளைத் தமது வேதமாக ஏற்றுக்கொண்டனர். இதனைக் கண்டு மனம் பொறுக்காத சேர். பொன். இராமநாதன் பெண்களுக்கு இராமநாதன் கல்லூரியை 26 ஏக்கரிலும் ஆண்களுக்குப் பரமேஸ்வராக் கல்லூரியையும் ஸ்தாபித்தார். இராமநாதன் வாய்ச் சொல் வீரர் அல்ல அவர் செயல் வீரர். அவரின் செயல் வீரத்திற்கு எடுத்துக் காட்டுக்களே இராமநாதன் கல்லூரியும் பரமேஸ்வராக் கல்லூரியும் ஆகும்.

இங்கிலாந்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த மெதடிஸ்த திருச்சபையினர் ஆண்களுக்கு யாழ்ப்பாண மத்திய கல்லூரியையும் அருகில் சென். பீற்றஸ் தேவாலயத்தையும் கட்டினார்கள். அதன்பின் பெண்களுக்கு வேம்படிப் பாடசாலையை 13 மாணவிகளுடன் ஆரம்பித்தார்கள். பருத்தித் துறையில் ஹாட்லிக் கல்லூரியையும் வட்டுக்கோட்டையில் யாழ்ப்பாணக் கல்லூரியையும் ஆரம்பித்தார்கள். கிறிஸ்தவ மதத்தில் மக்களை இணைப் பதற்காகப் பாடசாலைகளுடன் தேவாலயங்களும் கட்டப் பட்டன.

சேர். பொன். இராமநாதனின் தந்தையார் பொன்னம்பலம் முதலியார் கொழும்பு கொச்சிக்கடையில் எல்லோரும் அதிசயிக்கும்படி இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட கருங்கற்களைக் கொண்டு அங்கிருந்து வருகைதந்த சிற்பாச்சாரியார்கள் அழகிய பிரமாண்டமான பொன்னம்பலவாணேச்வரர் எனும் சிவாலயத்தைக் கட்டுவித்து 1912ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்வித்தார். இக் கோவில் இன்னும் பல நூற்றாண்டுகள் அடியார்களுக்கு அருள்பாலிக்கும் தலமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இதன் பின்பு யாழ்ப்பாண சைவமங்கையரின் கல்வியை இந்துக் கலாசாரப் பண்பாட்டுடன் வளர்க்க எண்ணி 1913ஆம் ஆண்டு மருதனார்மடம் சுன்னாகத்தில் இராமநாதன் கல்லூரியும் நிறுவி அக் காலத்தில் உயர் கல்வி கற்ற தமிழ்ப் பெண்கள் இன்மையால் இப் பாடசாலைக்கு அதிபர்களாகப் பிரித்தானியப் பெண்களே நியமிக்கப்பட்டனர். இந்தியாவிலிருந்து ஆசிரியர்கள் வரவழைத்து அவர்கள் மூலம் ஆங்கிலக் கல்வியைப் போதித்தமையினால் அந்தக் காலத்தில் இலங்கையில் பாராளுமன்றத்திலும் சரி அமைச்சுக்களிலும் சரி உயர் அரச பதவிகளிலும் சரி தமிழர்கள் பதவி வகித்தமைக்கு வித்திட்டவர் சேர். பொன். இராமநாதன் வள்ளலாரே.

அதன் பின் ஆண்களுக்காக திருநெல்வேலியில் 1921ஆம் ஆண்டு பரமேஸ்வராக் கல்லூரியைக் கட்டுவித்தார். இக் கல்லூரியின் மேற் தளத்திற் குறங்கூன் தேக்குமரத்தில் பலகை அரிந்து மேல் மாடித்தளம் அமைத்து மேல் தளத்திற்குச் செல்லும்படிகளும் அதே மரத்தில் செய்வித்தார். இக் கல்லூரி 1974 ஆம் ஆண்டு இலங்கை பல்கலைக்கழகத்தின் வளாகமாக இருந்து பின் சர்வகலாசாலையாக மாற்றம் பெற்றது. இது சேர். பொன். இராமநாதனின் உயர்ந்த பணியை எடுத்துக் காட்டுகின்றது.

1913.01.20 ஆம் ஆணடு ஆரம்பிக்கப்பட்ட யாழ். இராமநாதன் கல்லூரியின் 100ஆவது ஆண்டு மலருக்கு ஆசிரியுரை வழங்க எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை இட்டு யாழ்ப்பாண மாநகர முதல்வர் என்ற முறையிலும் எனது தாயார் படித்த பாடசாலை என்ற முறையிலும் எல்லாவற்றிற்கும் மேலாக யாழ்ப்பாண மாநகர மக்கள் சார்பிலும் கல்வியில் மேன்மேலும் வளர்ச்சி பெற வாழ்த்துகிறேன்.

திருமதி யோ. பற்குணராசா,
B.A (Hons), Dip-in-Edu,M.Phi, SLIS, J.P.U.M,
முதல்வர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.



# வாழ்த்துச் செய்தி


யா/இராமநாதன் கல்லூரி நூற்றாண்டு சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

1913ஆம் ஆண்டு சைவப் பெண்கள் சைவச் சூழலில் கல்வி பெற வேண்டும் என்கின்ற நோக்கில் உருவாக்கப்பட்ட இப்பாடசாலையில் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து தமிழ் பெண்கள் விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்று பல்கலைக்கழகம் சென்றுள்ளதுடன் கல்வி அறிவும் பண்பாடும் ஒழுக்க விழுமியமும் உள்ள சமூக உருவாக்கத்தில் பெரும் பங்களிப்பினை வழங்கி யுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். எனது தாயாரும் இப் பாடசாலையின் பழைய மாணவி என்று கூறுவதில் பெருமையினையும் கௌரவத்தினையும் பெற்றுக் கொள்கின்றேன்.

இச் சிறப்பு மலரானது 100ஆவது ஆண்டின் கல்விச் சேவையின் அடையாளமாக மாணவர்களின் ஆக்கத்திறன், எழுத்தாற்றல், சிந்தனை வெளிப்பாடு, மாணவர்களின் சாதனைகள் மற்றும் ஆசிரியர்களின் கல்விசார் ஆக்கங்கள் ஆகியவற்றைத் தாங்கி வெளிவருவது சிறப்பிற்குரியதாகும். பரீட்சைப் பெறுபேறுகளில் தனக்கென ஓர் உயர்வான இலக்கினை எட்டி சாதனை படைக் கும் இக்கல்லூரி இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் தனக்கேயுரிய பாணியில் வெற்றிகள் பலவற்றை ஈட்டி கல்லூரி அன்னைக்கும் பெருமை தேடித் தந்துகொண்டிருக்கின்றது. எமது தமிழ் கலாசாரம் பண்பாடு பாரம்பரியங்கள் சமூக சமய விழுமியங்களைக் கட்டிக்காத்து வளர்த்தெடுப்பதில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுப் பதற்குத் தேவையான அனைத்து ஒத்துழைப் பினையும் வழங்குவதற்கு நாம் என்றும் தயாராக இருக்கின்றோம். இம்மலர்

வெளியீட்டுக்குத் தமது ஆக்கபூர்வ மான செயற்பாடுகளை வழங்கிவரும், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்நாடு, வெளிநாடுகளில் உள்ள பழைய மாணவர்கள் கல்விச் சமூகத்தினர் யாவரையும் இச்சந்தர்ப்பத்தில் வாழ்த்துவதுடன் நூற்றாண்டு விழா சிறப்புமலர் வெளியீடு சிறப்புற அமைய எனது நல்லாசிகளையும் வழங்கி நிற்கின்றேன்.

**சி. சத்தியசீலன்**
செயலாளர்
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர் விவகார அமைச்சு,
யாழ்ப்பாணம்



# புதுமைப் பெண் படைக்கும் புத்திரியே நீ வாழி!

இராமநாதனின் இதயத்தில் கருவாகி
இந்துமத மங்கையரின் கருவூலமாய்
இயற்கை வளம் கொழிக்கும் சுன்னாகத்தில்
இலக்கணமாய் மிளிரும் தாயே வாழி!

பதின் மூன்றில் பாலகியாய் அவதரித்து
பண்புறு கல்வியினைச் செழுமை செய்து
பாரதியின் பாதையிலே பயணம் செய்யும்
பாவையரை நமக்கீந்த தாயே வாழி!

பத்துத் தசாப்தம் பழுதுறாப் பணி செய்து
எத்திசையும் புகழ் பரப்பும் ஏந்தல்களையீந்த
உத்தமியே ராமநாதனின் புத்திரியே
பத்தினியே நீ வாழி! பார் போற்ற வாழி!


1913ஆம் ஆண்டு சேர். பொன். இராமநாதனின் சிந்தனையில் உருவாகிய முதற் சைவப் பெண் பாடசாலையின் நூற்றாண்டு விழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டிலா மகிழ்ச்சியடைகிறேன்.

பாராதி காட்டிய பாதையிலே புதுமைப் பெண்களைப் படைக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையே இராமநாதன் கல்லூரி. ஆழ்ந்த கல்வியறிவும், ஒழுக்க சீலமும், சமயப்பண்பாடும் வாய்ந்த பெண்களே ஆண்களைவிடத் தேசிய முன்னேற்றத்திற்கு அதிகம் உதவுவர் என்ற இராமநாதனின் சிந்தனையின் வெளிப்பாடே இராமநாதன் கல்லூரி.

“அறிவுத்திறனும், அறநெறியும், சமயப்பண்பும் ஒன்றிணைந்த மகளிர் மூலமும், தமிழ் நெறிப்பண்பும், சைவநெறி மரபும் இணைவதன் மூலமும் நாட்டின் மறுமலர்ச்சி புது மெருகு பெறும், நாடு வளர்வுறும் எனும் சிந்தனையில் எழுந்தது இராமநாதன் கல்லூரி’ எனப் பேராசிரியர் P. சத்தியசேகரம் குறிப்பிட்டுள்ளார். இராமநாதன் கல்லூரியை உருவாக்கிய சேர். பொன். இராமநாதன் கல்லூரி மாணவிகளின் தேவையறிந்து விடுதி வசதியையும் ஏற்படுத்தியிருந்தார். சுமார் 200 மாணவிகள் கல்லூரி விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்பதற்கான வசதிகள் இருந்தன. கல்லூரியின் வளர்ச்சி கருதி 10.03.1913 இல் அறங்காவற்குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. இக் கல்லூரி படிப்படியாக வளர்ச்சியடைந்து 1947 ஆம் ஆண்டு முதற்தரப் பெண்கள் கல்லூரியாக தரமுயர்த்தப்பட்டது. கடந்த நூறு ஆண்டுகளில் இக் கல்லூரியில் கல்வி கற்ற பெண்கள் கலை, விஞ்ஞானப் பட்டதாரிகளாக, வைத்திய கலாநிதிகளாக நாடு போற்றும் வகையில் சேவையாற்றி வருகின்றனர்.

நூற்றாண்டு விழாக்காணும் இராமநாதன் கல்லூரி
நீடித்த கல்வியைத் தொடர்ந்து வழங்கி, வளர வாழ்த்துகின்றேன்.

வ. செல்வராசா
மாகாணக் கல்விப்பணிப்பாளர்
வடமாகாணம்.



# நூற்றாண்டு நிறைவில், மீண்டும் தொடங்கும் மிடுக்கு

யா / இராமநாதன் கல்லூரி நூற்றாண்டு காணும் இவ்வேளை சேர்.பொன். இராமநாதன் அவர்கள் எமது நினைவுகளில் நிறைந்துள்ளார். நவீன சிந்தனையின் வழியில் இந்துப் பாரம்பரியத்தை உருவாக்கிய இப் பெரியார் இலங்கை மக்களால் ஒருங்கே மதிக்கப்பட்டவர்.

இந்து மாணவரின் கல்வியையும், அவர்களின் உயர்ந்த ஒழுக்க சீலப் பயிற்சியையும், செய்யும் செயல்களில் நிறைவையும், கடவுள்பாற் செய்யும் இதய பூர்வமான பக்தியையும், இராச்சியத்தில் வைக்க வேண்டிய பற்றுறுதியையும் முக்கிய குறிக்கோளாகக் கொண்டு ஆடவர்க்கென யா/பரமேஸ்வராக் கல்லூரியையும், மகளிருக்கென யா / இராமநாதன் கல்லூரியையும் உருவாக்கினார். பரமேஸ்வராக் கல்லூரி இன்று பல்கலைக்கழகமாகத் திகழ்கிறது. இராமநாதன் கல்லூரி நீடித்த நிலைத்த புகழுடன் கல்விப் பணியாற்றி வருகின்றது.

ஆரம்பகாலத்தில் இக் கல்லூரி தனக்கெனத் தனித்துவமான பண்புகளைக் கொண்டிருந்தது. உன்னதமான பாடசாலைக் கொள்கைகளை வகுத்துக் கொண்டது; இங்கு கற்ற மாணவியர் தமக்கென உயரிய கலாசாரங்களைப் பேணிவந்தனர்; ஒழுக்க விழுமியங்களைக் கண்ணேபோற் போற்றிவந்தனர்; தமது சமய இனமரபுகளுக்கேற்ப நல்லதொரு சூழலில் தமது கல்வியைப் பெற்றனர்; பல மாணவியர் மத்தியில் குறிப்பாகத் தம்மை இனங்காட்டக் கூடிய தனித்துவத்துடன் மிளிர்ந்தனர்; நாட்டின் நாலா புறத்திலிருந்தும் இக்கல்லூரியை நாடி வந்த மாணவியர் தங்குமிட வசதியுடன் நிறைவான கல்வியைப் பெற்று வந்தனர்.

இடைக்காலத்தில் நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக ஆதரவற்ற சிறுமியர் பலர் உருவாக்கப்பட்டனர்; தவிர அநாதரவான பாடசாலைகள் பல உருவாகின; இந் நிலையில் இக் கல்லூரி தனது இறுக்கமான நடைமுறைகளைத் தளர்த்தியது; இக் கல்லூரியை நாடிவந்த அனைத்துச் சிறுமியரும் அரவணைக்கப்பட்டனர்; கல்வியுடன் புகலிடமும் பெற்றனர்; இடம் பெயர்ந்த கலவன் பாடசாலைகளுக்கும் புகலிடம்

யா / இராமநாதன் கல்லூரி நூற்றாண்டு காணும் இவ்வேளை சேர்.பொன். இராமநாதன் அவர்கள் எமது நினைவுகளில் நிறைந்துள்ளார். நவீன சிந்தனையின் வழியில் இந்துப் பாரம்பரியத்தை உருவாக்கிய இப் பெரியார் இலங்கை மக்களால் ஒருங்கே மதிக்கப்பட்டவர்.

இந்து மாணவரின் கல்வியையும், அவர்களின் உயர்ந்த ஒழுக்க சீலப் பயிற்சியையும், செய்யும் செயல்களில் நிறைவையும், கடவுள்பாற் செய்யும் இதய பூர்வமான பக்தியையும், இராச்சியத்தில் வைக்க வேண்டிய பற்றுறுதியையும் முக்கிய குறிக்கோளாகக் கொண்டு ஆடவர்க்கென யா/பரமேஸ்வராக் கல்லூரியையும், மகளிருக்கென யா / இராமநாதன் கல்லூரியையும் உருவாக்கினார். பரமேஸ்வராக் கல்லூரி இன்று பல்கலைக்கழகமாகத் திகழ்கிறது. இராமநாதன் கல்லூரி நீடித்த நிலைத்த புகழுடன் கல்விப் பணியாற்றி வருகின்றது.

ஆரம்பகாலத்தில் இக் கல்லூரி தனக்கெனத் தனித்துவமான பண்புகளைக் கொண்டிருந்தது. உன்னதமான பாடசாலைக் கொள்கைகளை வகுத்துக் கொண்டது; இங்கு கற்ற மாணவியர் தமக்கென உயரிய கலாசாரங்களைப் பேணிவந்தனர்; ஒழுக்க

**ஆ. ராஜேந்திரன்**
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடமாகாணம்.




# வாழ்த்துச் செய்தி

புகழ் பூத்த இராமநாதன் கல்லூரி இவ்வாண்டு நூற்றாண்டு நிகழ்வுகளை சிறப்புற ஏற்பாடு செய்து பழைய மாணவர்களாலும், கல்லூரி நிர்வாகத்தினாலும் பல இடங்களிலும் கொண்டாடி வருகின்றனர். அதன் தொடர்ச்சியாக நூற்றாண்டு விழாச் சபையினரால் வெளியீடு செய்யப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி அளிப்பதில் பேருவகையடைகிறேன்.

ஈழத்திருநாட்டின் தேசிய வளர்ச்சிக்காகவும் அரசியல் சுதந்திரத்திற்காகவும் இன ஒற்றுமையுடன் பாடுபட்ட சேர். பொன். இராமநாதன் அவர்கள் தனது மொழி, பண்பாடு, சமயம் என்பவற்றிலும் அக்கறை காட்டத் தவறவில்லை. தனது சமூகம் பெண்கல்வியில் காட்டுகிற அக்கறையைப் பார்க்குமுகமாக இராமநாதன் கல்லூரியை நிறுவினார். உயர் அந்தஸ்திலுள்ள இவர் கல்லூரியை ஆரம்பித்து சமூகத்தில் ஏற்படுத்திய விழிப்புணர்வின் பிரகாரம் வீட்டினுள் இருந்த பெண்கள் சிறப்பான பண்புள்ள கல்வி பெற்ற பிரஜைகளாக, சமூக சிற்பிகளாக உருவாக்கப்பட்டனர்.

அரசு இக்கல்லூரியைப் பொறுப்பேற்கும் போது இராமநாதன் அவர்களால் உருவாக்கப்பட்ட நியமங்களை நிறைவேற்றுவதாக ஏற்றுக்கொண்டது. ஆனால் காலத்திற்குக் காலம் மாற்றம் பெறும் கல்வி நிர்வாகிகள் அவற்றைக் கண்டு கொள்ளாத தன்மை காணப்படுகிறது. கடந்த 100 வருடங்களாக பல்லாயிரம் பெண்களை சீரிய பண்பாளர்களாக உருவாக்கிய இக்கல்லூரி தொடர்ந்து இன்றும் பல நூற்றாண்டுகள் தனது இலக்கை நோக்கிப் பயணிக்க என் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

ப. விக்கினேஸ்வரன்
ஓய்வுநிலை மாகாணக் கல்விப்பணிப்பாளர்
வடக்குமாகாணம்.



# வலிகாமம் கல்வி வலயத்தின் கல்விப்பணிப்பாளரின் ஆசியுரை

வலிகாமம் கல்வி வலயத்தில் மருதனார்மடத்தில் தமிழ் மாணவியருக்கு அறிவினையும் பண்பினையும் ஊட்டுகின்ற கல்லூரியாகவும், சைவநெறி மரபினையும் தமிழ்ப் பண்பாட்டினையும் பேணிப்பாதுகாக்கும் அரணாகவும் அமைந்து 100 ஆண்டுகளைக் கடந்து நூற்றாண்டு விழாக் காணுகின்றது இராமநாதன் மகளிர் கல்லூரி.

1913ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை யாழ்ப்பாணத்திலே பெண்களின் உயர்கல்விக்கென நிறுவப்பட்ட முதலாவது சைவப் பாடசாலையாக அமைந்து, அதன் பின்னர் தோன்றிய சைவப் பெண்கள் பாடசாலைகளுக்கெல்லாம் ஆரம்பக் கல்விக்கூடமாக அமைந்தமை குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும். சைவ மாணவியர் தமது பண்பாட்டு மரபுக்கேற்ற சூழலில் கல்விபயில வேண்டும் என்பதே சேர். பொன். இராமநாதன் அவர்களின் சிந்தனையாக அமைந்ததென்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இன்று 100 ஆண்டுகளைக் கடந்துள்ள இக் கல்லூரி அதன் பிற்பட்ட 25 - 30 ஆண்டு காலப்பகுதிகளில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளின் காரணமாகத் தனது பணிகளைச் செவ்வனே ஆற்றுவதில் சில சிக்கல்களையும் பிரச்சினைகளையும் எதிர்கொண்டபோதிலும் இக்கல்லூரி தனது பழைய மாணவர்களினதும், பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகளினதும் அளப்பரிய பங்களிப்பின் ஊடாகத் தற்போது மீண்டும் தனது நிலையினைத் தக்கவைக்கும் முயற்சிகளில் வெற்றி காண ஆரம்பித்துள்ளது.

துறைக்கேற்ற பொருத்தமான ஆசிரியர் வளங்களைத் தற்போது பெற்றுள்ள இக்கல்லூரி சைவ மரபினையும் தமிழ்ப் பண்பாட்டினையும் பேணும் வகையில் தனது செயற்பாடுகளை முன்னெடுக்க முற்பட்டுள்ளமை பாராட்டுக்குரியது.

வலிகாமம் கல்வி வலயத்தில் மருதனார்மடத்தில் தமிழ் மாணவியருக்கு அறிவினையும் பண்பினையும் ஊட்டுகின்ற கல்லூரியாகவும், சைவநெறி மரபினையும் தமிழ்ப் பண்பாட்டினையும் பேணிப்பாதுகாக்கும் அரணாகவும் அமைந்து 100 ஆண்டுகளைக் கடந்து நூற்றாண்டு விழாக் காணுகின்றது இராமநாதன் மகளிர் கல்லூரி.

1913ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை யாழ்ப்பாணத்திலே பெண்களின் உயர்கல்விக்கென நிறுவப்பட்ட முதலாவது சைவப் பாடசாலையாக அமைந்து, அதன் பின்னர் தோன்றிய சைவப் பெண்கள் பாடசாலைகளுக்கெல்லாம் ஆரம்பக் கல்விக்கூடமாக அமைந்தமை குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும். சைவ மாணவியர் தமது பண்பாட்டு மரபுக்கேற்ற சூழலில் கல்விபயில வேண்டும் என்பதே சேர். பொன். இராமநாதன் அவர்களின் சிந்தனையாக அமைந்ததென்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**செல்வரட்ணம் சந்திரராஜா**
கல்விப்பணிப்பாளர்
வலிகாமம் கல்விவலயம்

நூற்றாண்டு மலர்க் குழு



இதழாசிரியர்
திருமதி.குககுமாரி விஜயரகுநாதன்
(B.A. Dip in Edu, M.Ed, M.Phil, S.L.P.S)
அதிபர், யா/நல்லூர் ஸ்ரீவிக்கினேஸ்வரா வித்தியாலயம்

இடமிருந்து வலம் (இருப்போர்):- திருமதி.ச.சிவநாதன், திருமதி.வை.கணேசபிள்ளை, திருமதி.ந.சிவராஜன், திருமதி.சி.கந்தசாமி, திருமதி.க.கிருஸ்ணபிள்ளை திருமதி.கு.விஜயரகுநாதன், திருமதி.ஆ.சிவஞானசுந்தரம், திருமதி.க.இராமநாதன், திருமதி.ப.கேசவன்

இடமிருந்து வலம் (நிற்போர்):- திரு.தி.விக்கினேஸ்வரன், திருமதி.சு.சீனிவாசகம், திருமதி. வி.பிரதாபன், திருமதி.கா.உதயகுமாரன், திருமதி.கோ.இராமச்சந்திரன் திருமதி.ஐ.வரதராஜன், திரு.நி.மதிரூபன்



# அதிபரின் வாழ்த்துச் செய்தி

*சைவத்தமிழ்ப் பெண்களுக்கென சேர்.பொன்.இராமநாதவள்ளலால் 1913ம் ஆண்டு கட்டப்பட்டதே இக்கல்லூரி. பெண்களின் தனித்துவம் பேணும் வகையில் அமைந்தது. கலை, கலாச்சாரம், பண்பாடு பேணிக்காக்கும் நிலைக்களனாக, சேர். பொன். இராமநாதனின் நினைவாலயமாகத் திகழ்கின்றது. எத்தனையோ சவால்களை எதிர்கொண்டும் தன் தனித்துவத்தை இழந்துவிடாது சாதனைகள் பல படைத்து, நூறு ஆண்டுகளை நிறைவு செய்து நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் வேளையில் யான் உவகை கொள்வதோடு வாழ்த்தினையும் தெரிவிக்கின்றேன்.*

*எனது தாயாரும் நானும் இக்கல்லூரியின் பழைய மாணவிகள் என்ற வகையிலும், இக்கல்லூரியின் அதிபர் என்ற வகையிலும் நூற்றாண்டு மலருக்கு ஆசி வழங்குவதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.*

*அந்நியர் ஆதிக்கத்தின் கீழ் சிக்கித் தவித்த சைவக்குடும்பங்கள், பெண்களுக்கு மட்டுமல்ல ஆண்களுமே கல்வி கற்க மறுக்கப்பட்ட காலப்பகுதியில் பெண்பிள்ளைகள் கல்விகற்கக் கலங்கரை விளக்குமாக அமைந்தது இராமநாதன் கல்லூரி. பெண்கல்வியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது.*

*பல வளங்களையுடைய இக்கல்லூரி எத்தனையோ கல்வியியலாளர்களை, வைத்திய நிபுணர்களை, சிறந்த பொறியியலாளர்களை, பேராசிரியர்களை, கலைஞர் களை, ஆசிரியர்களை சிறந்த இல்லத்தரசிகளை உருவாக்கியதோடு, சகலதுறைகளிலும் ஏனைய கல்லூரிகளுக்கு முன்னோடியாகத் திகழ்ந்து சாதனைகள் படைத்துள்ளது. கலை கலாச்சாரத்தை வளர்த்து சேர்.பொன்.இராமநாதனின் கனவை நனவாக்கி வெற்றி கண்டுள்ளது.*

*இத்தகைய பெருமைக்குரிய இராமநாதனின் கல்லூரியைச் சைவத்தமிழ் உலகம் வாழ அமைத்துத் தந்த மகானும் தேசியத்தலைவருமான வள்ளல் சேர். பொன். இராமநாதன் அவர்களையும், அவரது பாரியார் லேடி இராமநாதன் அவர்களையும் இவர்களுக்குப்பின் கல்லூரியின் பண்பாட்டைக் கட்டிக்காத்த சேர். பொன்.*

இராமநாதன் அவர்களின் மருகர் திரு.சு.நடேசபிள்ளை, அவர்தம் பாரியார் சுந்தரி நடேசன் அவர்களையும் நன்றிப் பெருக்கோடு வணங்குகின்றேன்.

தொடர்ந்து கல்லூரி வளர்ச்சியில் தன்னலமற்றுப் பணியாற்றிய அதிபர்கள், ஆசிரியர்களை வாழ்த்தி நன்றி பாராட்டுகின்றேன். மேலும் பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பாடசாலை அபிவிருத்திக்குழு, பழைய மாணவர் சங்கம், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், கல்வித்திணைக்களத்தினர் அனைவரது ஒத்துழைப்புடன் கல்லூரி இன்று புதுப்பொலிவுடன் விளங்கி தலைநிமிர்ந்து நிற்கின்றது. கொழும்பு, அவுஸ்ரேலியா, கனடா, இலண்டன் ஆகிய இடங்களிலுள்ள பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் கல்லூரி வளர்ச்சியில் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளனர். அவர்களுக்கெல்லாம் நன்றி கலந்த பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றேன்.

வெள்ளிவிழா, பொன்விழா, பவளவிழாவினைக்கண்டு நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடும் எமது கல்லூரி நூற்றாண்டு விழாவில் மலரினை வெளியிடுவதையிட்டு பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

இன்று நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் எமது கல்லூரி பல துறைகளிலும் வளர்ந்து கலை கலாச்சாரத்தை வளர்த்தெடுக்க அருந்தொண்டாற்ற வேண்டுமெனவும், இப்புனிதமான கல்விப்பணி வளர்ந்து பல சாதனைகள் படைத்து உயர வேண்டுமென எல்லாம் வல்ல பார்வதி சமேத நடராஜப்பெருமானின் பாதாரவிந்தங்களைப் பணிந்து அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

வாழ்க இராமநாதன் கல்லூரி
வளர்க அதன் பணி

**திருமதி கமலராணி கிருஷ்ணபிள்ளை**
B.A, Dip in Edu, S.L.P.S



# பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

*"கற்க கசடற கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"*

எனும் திருவள்ளுவரின் வாசகத்திற்கமைய அறிவொளி பரப்பி இருள் அகற்ற இளங்கதிர் என உதித்தவர் கருவிலே திருவுடைய சேர்.பொன் இராமநாதன் அவர்கள். அவர் தமிழ் மக்கள் எல்லோரும் கல்வி கற்று பன்னரும் கலை ஞானத்தால் பண்பினால் உன்னத நிலைபெற்று முதன்மையுற வேண்டும் என்ற கனவை நனவாக்க சைவத்தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்களைப் பேணும் வகையில் 1913ஆம் ஆண்டு இராமநாதன் மகளிர் கல்லூரியை நிறுவினார். இது இலங்கையில் சுதேசிகளால் ஆரம்பிக்கப்பட்ட முதற் பெண்கள் கல்லூரியாகும். 25 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் பாரிய கட்டிட அமைப்பைக் கொண்டதும் கலை நுணுக்கம் வாய்ந்ததும் ஆசிரியரும் மாணவரும் உடனுறைந்து கல்வி கற்கும் வாய்ப்பினை உடையதும் வழிபாட்டிற்கென அமைந்த நடராஜர் ஆலயத்தையும் சரஸ்வதி மண்டபத்தையும் உள்ளடக்கியதுமான கலை, பண்பாட்டு புரட்சியின் சின்னமாக அமைந்துள்ளது. "கருதரிய சிற்சபையில் ஆனந்த நடமாடும் கருணாகரக் கடவுளே திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய்" என்பது சேர்.பொன் இராமநாதன் அவர்களுடைய தாரக மந்திரம். இதுவே இராமநாதன் கல்லூரியின் மகுட வாசகமுமாகும். இவ்வாறு விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில கல்லூரிகளில் பழம் பெருமை வாய்ந்த இக்கல்லூரிக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அளவிலா ஆனந்தமும் பெருமையும் அடைகின்றேன்.

மருத்துவம், பொறியியல், கலைத்துறை மற்றும் பல்வேறு துறைகளிலும் கல்வியில் சிறக்க நன் மாணவச் செல்வங்களை உருவாக்கிய, உருவாக்கும் அதிபர், ஆசிரியர்கள் சிறந்ததும் உயர்ந்ததுமான கல்விச் சேவையை ஆற்றுவார்கள், ஆற்றவேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்து நூற்றாண்டு விழா கொண்டாடும் இத்தருணத்தில் கல்விப் பணியில் மென்மேலும் வளரவும் சகல வழிகளிலும் வளர்ச்சி பெறவும் உளமார வாழ்த்துகின்றேன். வாழ்க!

**திரு. மு. நந்தகோபாலன்**
பிரதேச செயலாளர்
வலிதெற்கு, உடுவில்



# மங்காத புகழ் பரப்பும் இராமநாதன் கல்லூரி

மங்காத புகழ் பரப்பி வாழ்ந்த இராமநாதன்
எங்கும் தன் நிழல் பரப்பி ஏற்றமுடன் வாழ்ந்தார்
மங்கையர்கள் கற்பதற்காய் ஆக்கினார் கல்லூரி
மகிழ்வுடனே கற்று உயர்வடைந்தார் வாழி!

முதறிஞர் கலைவாணர் போற்றும் உயர் கல்லூரி
கலைஞர் பலர் தரிசித்த கலைசார்ந்த கல்லூரி
மங்கையர்கள் அணியெனவே திகழ்ந்த கலைஞானம்
செறிந்த உயர் கல்லூரி சிறப்புடன் வாழி

விரிந்த பல இடம்கொண்ட விரிவான கல்லூரி
நடராஜர் நிர்த்தனத்தை கண்ட பெருங்கல்லூரி
ஆலயங்கள் ஆசி பெற்ற அதிஉயர் கல்லூரி
ஆண்டு பல அவனியிலே வாழி வாழி

பதினெண் வருடங்கள் கல்லூரியின்
பற்பல சாதனைகள்
கண்டு மகிழ்ந்தேன் களிப்பு மிகக் கொண்டேன்
சிறப்பெல்லாம் பெற்று உயர்ந்திருக்கும் இவ்வேளை
நூற்றாண்டைக் கண்ட உயர் கல்லூரி
வாழ்க வாழ்கவே.

**திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம்**
B.A. (Hons) Dip in Edu, S.L.P.S 1, S.L.E.A.S
முன்னாள் அதிபர்

இராமநாதேஸ்வர மஹா கும்பாபிஷேகம்









பழைய மாணவர் சங்க செயற்குழு – லண்டன்



பழைய மாணவர் சங்க செயற்குழு - 2001
( கனடாக் கிளை )

பழையமாணவர் சங்கம் – கொழும்பு



மாணவத் தலைவிகள்



2008



2013



# யா/ இராமநாதன் கல்லூரி தொடர்பான எனது பார்வையில்.....

*யாழ் இராமநாதன் கல்லூரி தனது நூறு ஆண்டுகள் நிறைவையொட்டி நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதையிட்டு யான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். பெரு விருட்ச மாக நின்று உலகில் தன்புகழ் நிறுவிச் சாத னைகள் படைத்த இக்கல்லூரியின் நூற்றாண்டு விழா மலருக்கு வாழ்த்துக்களைத் தெரி விப்பதில் மனநிறைவு அடைகின்றேன். இவ் வரிய வாய்ப்பினை அளித்த எல்லாம் வல்ல சிவகாமசுந்தரி நடராஜப் பெருமானை மெய் யன்போடு பிரார்த்திக்கின்றேன். நான் அதிப ராகப் பணியாற்றக் கிடைத்த சந்தர்ப்பத் திற்காக கல்லூரியை வாழ்த்தி வணங்குகின் றேன்.*

*14.02.2011 தொடக்கம் 01.07.2012 வரையான குறுகிய காலத்தில் அதிபராகப் பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றிருந்தேன். எனது தாயார் இக்கல்லூரியின் பழைய மாணவி சரவணை நாகேஸ்வரி வித்தியா லத்தில் ஆரம்பக் கல்வியைக் கற்று இடை நிலைக் கல்வியை யாழ் இராமநாதன் கல்லூரி யின் விடுதியில் தங்கியிருந்து கற்றார். ஆசிரிய ராக நியமனம் பெற்று 35 ஆண்டுகள் யாழ் இந்து ஆரம்ப பாடசாலை ஆசிரியராக கடமை யாற்றினார். எனது தாயாருக்கு கல்வி தந்து உருவாக்கிய இக்கல்லூரியில், அதிபராகக் கடமையாற்றக் கிடைத்தமையை ஒரு பேறா கக் கருதி முழு மனநிறைவோடு என்னால் முடிந்தவரை இக் கல்லூரியை வளர்க்கச் செயற்பட்டேன். இறைவன் திருவருளால் குறுகிய காலச்சேவையுடன் யான் படித்த கல்லூரியாகிய வேம்படி மகளிர் கல்லூரிக்கு அதிபராக நியமனம் பெற்றமையினால் இக் கல்லூரியில் தொடர்ந்து பணியாற்ற முடிய வில்லை. இக் கல்லூரியில் எனது சேவைக் காலம் குறுகிய காலமாயினும் நீண்ட காலத் தொடர்பு போன்ற ஒரு உணர்வு எனனுள்ளத் தில் பதிவாக இருக்கின்றது. இக் கல்லூரியில் இருந்த காலத்தில் ஒத்துழைத்த அனைத்து உள்ளங்களையும் வாழ்த்துகின்றேன்.*

*சைவத் தமிழ்ப் பெண் பிள்ளைகளுக் காய் 1913ஆம் ஆண்டு சேர். பொன். இராம நாதன் அவர்களால் நிறுவப்பட்டது. சிறந்த இல்லத்தரசிகளைத் தோற்றுவிக்க வேண்டு மென்ற வள்ளலாரின் சீரிய சிந்தனையில் வளர்ந்த இக் கல்லூரி, பெண்களுக்கான கல்*

வியை வழங்கிப் பெருமையோடு 100 ஆண்டு சேவையை நிறைவு செய்து பெருமிதங் கொள் கின்றது. இவற்றுக்கெல்லம் உந்து சக்தியாக இருந்தவர்கள் முன்னைய அதிபர்கள், ஆசிரி யர்களே. அவர்கள் தங்கள் சேவையை அர்ப் பணிப்புடன் வழங்கி வந்துள்ளார்கள். தற் போது கல்லூரிச் சமூகம் இணைந்து நூற்றா ண்டு விழாவைக் கொண்டாடுவது மகிழ்சிக் குரியதாகும்.

இக் கல்லூரியானது தனியே கல்வி வழங்கும் சேவையை மட்டுமன்றி, சமூகத் திற்கே ஒரு சமூக நிறுவனமாக தனது சேவையை ஆற்றி வருகின்றது குறிப்பிடத்தக்கது. அண்மை யில் அமைக்கப்பட்ட வலிகாமம் கல்வி வல யம், வடமாகாணப் பணிமனை, யாழ் இராம நாதன் நுண் கலைக்கல்லூரி ஆகியன செவ் வனே வளரத் தனது நிலப்பரப்பை பகிர்ந்து வழங்கி யாழ் மாவட்டத்திற்கு மகத்தான சேவையை ஆற்றியது என்றால் மிகையாகாது மேலும் பாடசாலை யாழ் பிரதேசத்தின் பல் வேறு இடப்பெயர்வு காலத்தில் கூட யூனியன் கல்லூரி காங்கேசன்துறை மகாவித்தியாலயம் உட்பட பல பாடசாலைகளுக்கு தனது கட்டங்கள், நிலங்களை வழங்கி அனைத்துப் பிரதேச மாணவர்களின் கல்விக்கும் ஒளியூட்டி தனது சேவையை ஆற்றிய பெருமையைக் கொண்டது. இடம்பெயர்வு காலத்தில் தெல் லிப்பளை துர்க்கா இல்ல மாணவிகள் இப் பாடசாலை விடுதியில் இயங்கியதும் குறிப் பிடத்தக்கது. இந் நூற்றாண்டு கால வளர்ச் சியில் கல்லூரி கடந்து வந்த பாதை பல சோத னைகள வேதனைகளை தாண்டி தற் போதும் கல்வி மட்டுமன்றி இணை ப்பாடவிதானமும், தமிழ்த்தினம், ஆங்கிலத்தினம் ஆகியவற்றி லும், தனது பெயரை தேசிய மட்டம் வரை நிலை நிறுத்தி சேவை யாற்றி வருகின்றது. என்றால் மிகையாகாது.

யாழ் பிரதேசத்தில் இந்து மாணவி களுக்கு என விடுதியுடன் கூடிய பாடசாலை யாக இக் கல்லூரியே தன் சேவையை ஆற்றி வருகின்றது. யாழ் மாவட்டம் மட்டுமன்றி வடமாகாணத்தின் பல இடங்களிலிருந்தும் மாணவர்கள் இப் பாடசாலை விடுதியில் தங்கியிருந்து கற்பதுடன் இடப் பெயர்வு காலத்தில் தாய், தந்தையரை இழந்த மாண வர்கள்கூட இங்கு வந்து கல்வி பயின்றதுடன் தமது பாதுகாப்பையும் அதிபர் ,விடுதிப் பொறுப்பாசிரியர், ஆசிரியர்கள் வாயிலாகப் பெற்று வந்தனர்.

இக் கல்லூரியின் நிர்வாகச் செயற் பாட்டில் அதிபர்களுக்கு சவாலாக அமை கின்ற பாரிய பிரச்சினையாக இருப்பது பௌதீக வளத்தைப் பேணிப் பாதுகாப்பதும், உச்சப்பயன்பாட்டைப் பெறுவதிலும் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளமை யுமாகும். நல்ல நிலவளம், நீர்வளம் உள்ள பிரதேசம் எனினும் கல்லூரி ஆரம்ப காலத்தில் இராமநாதன் அவர்களின் வழி நடத்தலில் மாணவிகள் பல்வேறுபட்ட

செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். தையல், கைப்பணி வேலைகள் மூலம் அறி வைப் பெற்றுள்ளனர். 1960இல் அரசு பொறுப் பேற்ற பின் 23 கல்விசாரா ஊழியர்கள் இருந்து பராமரித்த பிரதேசத்தில் தற்போது 06 கல்விசாரா ஊழியர்கள் உதவ்யுடன் நிர் வகிப்பது என்பது மிகுந்த வேதனைக் குரியது. பாடசாலை அழகுபடுத்தி நிலம் பண்படுத்தி சுத்தப்படுத்துவதும் சொற்ப காலத்தில் மீண் டும் அது பழைய நிலையில் பற்றைக் காடாக காட்சி தரும் நிலை அப்பாடசாலையை நிர்வ கித்த சகல அதிபர்களும் எதிர்நோக்கிய பிரச் சினையாக இருந்து வருகின்றது.தற்போது கல்லூரியின் நலன் விரும்பி ஒருவரால் பாடசாலை பௌதீகவளம் மேம்படுத்தப் பட்டு வருவது கல்லூரி சமூகத்திற்கு மிக்க மகிழ்ச்சியூட்டுகின்றது.

இக் கல்லூரியின் பௌதீக வளத்தையும் அதன் உச்சப்பயனையும் முழுமையாகப்பெறு வதற்கு போதிய கல்விசாரா உத்தியோகஸ்தர் கள் நியமிக்கப்பட்டு பாடசலையின் ஆரம்பப் பிரிவு, இடைநிலைப் பிரிவு ஆகியன இரண் டாக வகுக்கப்பட்டு ஆரம்பப் பாடசாலை யாகவும் , இடை நிலைப் பாடசாலையாகவும் இயங்க கல்வி உத்தியோகத்தர்கள் ஆவன செய்வார் களாயின், கல்லூரி தன் கல்வியில் எதிர் பார்க்கக்கூடிய வளர்ச்சியை இலகுவில் அடையும் என நான் கருதுகின்றேன்.

யாழ்ப்பாணத்தில் அதிக நிலவளம் கொண்ட பாடசாலையாக இருப்பினும் , சரியான கட்டட வசதிகள் அற்ற பாடசாலை யாகவும், கட்டடங்கள் ஆரம்பப் பிரிவிற்குக் கூட பொருத்தமற்றதாகவும் காணப்படு கின்றது. ஆரம்பப் பிரிவு பாடசாலை க்குரிய கட்டட அமைப்பு அற்றதாக அங்குமிங்கும் அமைந்த சிறிய தனித்தனியான வகுப்புக்கள் இருக்கின்றன. இவை யாவும் தற்காலிகமாக இராமநாதன் நுண்கலைக்கல்லூரி இங்கு இய ங்கிய வேளையில் அமைக்கப்பட்ட கலைக் கூடங்களாகவே இன்றும் காணப்படுகின்றன. இது இப் பாடசாலையின் ஆரம்பப்பிரிவு மாணவர்கள் எதிர்நோக்குகின்ற ஒரு துர்ப்பாக் கியநிலை என்றுதான் குறிப்பிட விரும்புகின் றேன். இக் கல்லூரியின் பெரும்பகுதி வளங்கள் நீண்டகாலமாக வலயம், கோட்டம் ஆகிய வற்றின் நிர்வாக அலுவலகமாகவே தொழிற் பட்டன. கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி, சிவஞானசுந்தரம் அவர்கள் காலத்தில் வலயத்திற்கென ஒருபகுதி நிலத்தை வலயம் பெற்று கொண்டது. திருமதி. ரெ. இருதய நாதன் வலிகாமம் வலய கல்விப்பணிப்பாள ராக கடமையாற்றிய காலத்தில் கல்லூரியின் வடகிழக்குப் புறமாக வலிகாமம் வலயக் கட்டடம் நிரந்தரமாக அமைக்கப்பபட்டது. இதன்பேறாக வலயம், வடமாகாணப் பணி மனை கூட அக் கட்டடதில் இருந்து சிறந்த சேவையாற்றி வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

இத்தகைய சேவைகளை வழங்கி உதவிய இக் கல்லூரியின் வளர்ச்சியிலும், பௌதீக வளர்ச்சியிலும் வடமாகாணம் வலிகாமம் வலயம் இனிவரும் காலங்களி லாவது ஆரம்பப்பிரிவு மாணவர்களிற்கு தனி யான ஒருகட்டட வசதியையும், அதே போன்று இடைநிலை வகுப்புக்களுக்கான, பொருத்தமான தனித்தனியான வகுப்ப றைகள் அமைந்த கட்டடத் தொகுதியையும் வழங்க முன்வந்தால் இக் கல்லூரி மாணவர் களின் கல்வி நிலை உயர்ந்து வினைத்திறன் அதிகரிக்கவும் வாய்ப்பாக அமையும் . இதற்கு எல்லாம் வல்ல சிவகாமசுந்தரி சமேத நட ராஜப் பெருமான் அனைத்து கல்வி நிர்வாக உத்தியோக த்தர்களுக்கும் அருள் பாலிக்க வேண்டுகின்றேன். இந்தச் சிந்தனையை கல் லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், சார்பிலும் சொற்பகால அதிபர் பதவிக் காலத்தில் கல் லூரி நிர்வாகத்தில் பெற்ற அனுபவத்தினாலும் இதனை முன்வைக்கின்றேன்.

மிகக் குறுகிய காலத்தில் இப் பாட சாலையில் சேவையாற்றிப் பல அனுபவங் களைப் பெற முடிந்தது. அங்கு நீண்ட கால மாகக் கனடா வாழ் பழைய மாணவர்களின் உதவியுடன் திருத்த வேலைகள் முன்னெடு க்கப்பட்டு, வேலைகள் பூர்த்தி செய்யப்படாது இருந்த சேர். பொன் இராமநாதன் அவர்க ளால் அமைக்கப்பட்ட ஆரம்பக் கால விடுதிக் கட்டடம், நடராஜப்பெருமான் ஆலயம் புணருத்தாரணம் என்பன நிறைவேற்றப்பட் டது. நடராஜப் பெருமானுக்கு **21.06.2012** இல் சிறப்பாக கும்பாபிஷேகம் நிகழ்த்தக் கிடைத்த சந்தர்ப்பம் எனது வாழ்நாளில் என் னால் மறக்க முடியாது. இது நான் செய்த சேவைக்கு இறைவனால் வழங்கப்பட்ட பெரும்பேறென எண்ணி பெருமைப்படுகின் றேன். இதனை அக் காலத்தில் நிறைவேற்ற பல அன்பு உள்ளங்கள் பக்கத்துணையாக நின்று செயற்பட்டனர். அந்த வரிசையில் கனடாப் பழையமாணவர்கள். D. M. சுவாமி நாதன் அவர்கள் (பொறியியலாளர்) போரா சிரியர் திரு. சிற்றம்பலம் அவர்கள், ஓய்வுநிலை ஆசிரியர்களான பண்டிதர் கணேசபிள்ளை, திருமதி. ச. கனகேஸ்வரன். திருமதி, ஜெயராசா என்போரும் ஏனைய முன்னின்று உழைத்த ஆசிரியர்களும் எனது நன்றிக்குரிய வர்களாவர்.

கல்லூரியின் விடுதி வசதிகூட மாண வர்களுக்குப் போதியளவில் இல்லை. பல சிரமங்களின் மத்தியில் விடுதி மாணவர்கள் கல்விகற்கின்றனர். எனவே விடுதித் தொடர் பிலும் கல்லூரியின் கரிசனை மிக்க பழைய மாணவர்கள், சமூகப் பெரியோர்கள், நலன் விரும்பிகள், கல்வி நிர்வாகிகள், அதிபர், ஆசிரியர்கள், கூடிய வசதி வாய்ப்பை வழங்கி மாணவர் கல்விக்கு உரம் ஊட்ட முன்வர வேண்டும் என்றும், அதற்கு நடராஜப் பெருமான் அருள் பாலிக்க வேண்டும் என்றும் பிரார்த் திக்கின்றேன்.

மேலும் இவ் வேலைகளுக்காக பழைய மாணவர்களால் வழங்கிய உதவிக்கு மேலதி கமாக நூலகப் பகுதியைத் திருத்துவதற்கென ஒரு மில்லியன் பணத்தை தனது பாராளுமன்ற நிதி ஒதுக்கீட்டின் மூலம் D.M சுவாமிநாதன் வழங்கி உதவினார். இதன் மூலம் நூலகப்பகுதி திருத்தியமைக்கப்பட்டது.

வள்ளலாரின் கனவு நனவாக சமாதி கோயிலின் அருகாமையிலுள்ள மடத்து வீட்டி னையும் திருத்தி கோயிலின் பாராமரிப்புக் கென திரு. லக்ஷ்மன் குடும்பத்தினரையும், அங்கு அமர்த்த உதவியுள்ளார். யாழ் பல் கலைக்கழகத்தில் இராமநதான் அறங்காவல் அமைப்பின் தலைவர் பேராசிரியர் க. சிற்றம் பலம் அவர்கள் வள்ளலாரின் பெயரைக் காப் பாற்றி சமாதி கோயிலை சிறப்புற புனருத் தாரணம் செய்து சிறப்பாக பூசை வழிபாடு களில் விடுதி மாணவர்களும் நாளும் ஈடுபட வேண்டும் என்ற நல் நோக்கில் தானாக முன்வந்து பல உதவிகள் , வழிகாட்டல்களில் ஈடுபட்டதுடன் இராமநாதன் அவர்களின் வழியில் வாரிசான திரு. D. M சுவாமிநாதன் அவர்களை பல தடவை கொழும்பு சென்று சந்தித்து ஊக்கப்படுத்தி கல்லூரியின் நூலக ப்பகுதியை திருத்துவதற்கான வேலை களையும் நிறைவேற்ற உதவினார். சமாதி ஆலயம் திருத்தப்பட்டு, புணருத்தாரணம் செய்யப்பட்டு நாளாந்தப் பூசை வழிபாட் டிற்கு அந்தண சிவாச்ச ாரியாரையும் தனது செலவிலேயே D.M சுசுவாமிநாதன் அவர்கள் நியமித்துள்ளார். இவையாவும் இறைவனின் செயற்பாடுகளே

தொடர்ந்து கல்லூரியின் பழைய மாணவர், இணுவில் வாழ் பெரியோர்கள் அனைவரும் கல்லூரியின் தேவைகளை நிறைவு செய்வதில் அதிக சிரத்தை எடுத்து செயற்பட வேண்டும் என நான் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். கல்லூரி அதிபர் திருமதி. க. கிருஷ்ணபிள்ளை அவர்களையும், சக ஆசிரியர்களையும் வாழ்த்துவதோடு அனைவருக்கும் நடராஜப் பெருமானின் அருள்கிடைக்க வேண்டுவதுடன் நூற்றாண்டு மலர் மணம் பரப்பி எழுக என வாழ்த்துகின்றேன்.

திருமதி வேணுகா சண்முகரத்தினம்
முன்னாள் அதிபர்
யாழ் இராமநாதன் கல்லூரி



# இராமநாதன் கல்லூரி
# நூற்றாண்டு விழா - 2013

மேற்படி கல்லூரியின் நூற்றாண்டு விழா நடைபெறுவதையிட்டு , மிகவும் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன். இக்கல்லூரியில் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக மாணவியாகவும் ,ஆசிரியையாகவும் , பின் உப அதிபராகவும் இருந்துள்ளேன் இக் காலப்பகுதியில் கல்லூரி வீறுநடை கொண்டு, பல துறைகளிலும் முன்னேற்றம் கண்டு பிரகாசம் அடைந்திருந்தது. எனலாம்.

"A" தர கல்லூரியாக இருந்து பலரும் பயன் பெறும்படி திகழ்ந்தது. மேலும் பல வளங்களும் பெற்று அதி உன்னத வளர்ச்சி அடைந்து சீரும் சிறப்புமாகத் திகழ நான் நடராஜப் பெருமானை வேண்டிக் கொள்கின்றேன்.

வாழ்க இராமநாதன் கல்லூரி
வாழ்க இதன் அதிபர் ஆசிரியர்கள், மாணவிகள்
Men may come and men may go but go on For Ever"

திருமதி அங்கையற்கண்ணி சிவப்பிரகாச பிள்ளை
30.08. 2013



# திக்குத் திசை தெரியாது தத்தளித்தவர்க்கு ஒளிகாட்டி கரையேற்றிய "கலங்கரை விளக்கு"

ஆங்கிலேயர் ஆட்சியில் நிர்வாகத்திற்கு அறிஞர்கள் தேவையாக இருந்த காலத்தில் தமது சமயத்தை கல்வி எனும் போர்வையுள் மறைத்து, பாடசாலைகளை அவர்கள் அமைத்து கல்வி அறிவு ஊட்டிய காலத்தில் - அறிவு வளர்ச்சியடையும் போது நம் சமயமும் வளரவேண்டும் என்றும் பண்பாடு கலாசாரம் பேணப்பட வேண்டும் என்றும் சிந்தித்து செயலாற்றிய ஆறுமுகநாவலருடன் நட்பு பூண்டமையாலும், சி.வை. தாமோதரம்பிள்ளையின் தொடர்புகளாலும் தூண்டப்பட்ட சேர்.பொன் இராமநாதன் அவர்கள் சைவத்தையும் கல்வியையும் வளர்க்க அரும்பாடுபட்டார்.

இந்த அரிய பெரிய நோக்கத்தை நிறைவேற்ற 1913ஆம் ஆண்டில் மருதனார் மடத்தில் ஒரு பெண்கள் விடுதிப் பாடசாலையை உருவாக்கினார். பெண்களின் கல்வி வளராத, பெண்கள் பாடசாலைகளுக்கு விரும்பிச் செல்லாத அந்தக் காலத்தில் இவ்வாறான ஒரு விடுதிப் பாடசாலை தமிழ் பெண்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. அக்காலத்தில் உடுவிலில் மிஷனரிமார்களின் பெண்கள் விடுதிப் பாடசாலையும் இயங்கி வந்தமை நினைவு கூரப்பட வேண்டியதாகும். அத்துடன் அவர் 1921இல் திருநெல்வேலியில் ஆண்களுக்கென பரமேஸ்வராக் கல்லூரியையும் நிறுவியதுடன் அங்கே ஓர் பரமேஸ்வரன் ஆலயத்தையும் நிறுவினார்.

மேலும் சேர் பொன் இராமநாதன் கொழும்பில் பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தை கருங் கல்லினால் கட்டி சைவப் பணியை வளர்த்தார். இவ்வாறு அவரின் தொண்டுகள் பல்கிப் பெருகின கல்வியில் நாட்டமின்றி இருண்ட வாழ்வியல் வீழ்ந்து கிடந்த பெண்கள் சமூகத்தினை தலையெடுக்க வழிகாட்டிய கலங்கரை விளக்காக இருந்தது இராமநாதன் மகளிர் கல்லூரி என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அங்கே தமிழ்ப் பெண்கள் தமது சமயச் சூழ் நிலையில் தம் மொழியையும் கலாசாரத்தையும் பேணி வந்தனர். அத்தகைய ஓர் பாடசாலையில் - பெண்களின் இருண்ட கல்விப் பரப்பில் விடுபட்டு தம் அறிவைப் பெருக்க அமைந்த இந் நிறுவனத்தில் நானும் ஒரு மாணவியாக விளங்கியதில் பெருமை அடைகின்றேன்.

நான் எனது 6ஆம் வகுப்பு கல்வியிலிருந்து மேல் வகுப்பு வரை இங்கேயே கற்றேன். கல்வி கற்ற கால எண்ணங்களை எண்ணி அசைபோட்டு உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமையடைகின்றேன். எனது ஆரம்பக் கல்வியை தமிழ் பாடசாலைகளிலும், விக்ரோறியாக் கல்லூரியிலும் கற்ற பின் இராமநாதன் கல்லூரிக்கு வந்தேன். அப்போதிருந்த கல்விச் சூழல், சமுதாயக்கண்ணோட்டம் இவற்றிற்கிடையில் இராமநாதன் கல்லூரியில் நான் கற்ற கல்வியையும், அதிபரையும், ஆசிரியர்களையும் எண்ணி புளகாங்கிதம் அடைகின்றேன்.

என் தாய்த்திருநாடு, அங்கே இராமநாதன் கல்லூரி, பெரியமாடிக்கட்டடம் பல வகுப்பறைகள், கற்றற்கேற்ற சூழல், அங்கே பாரதம் தந்த பெருமாட்டி திருமதி செல்லம்மாபிள்ளை என்ற அதிபர், பல நலமும் பெற்ற கனிவான ஆசிரியமணிகள், இவர்களிடம் எமக்குக் கிடைத்த அன்பு, பண்பு, கலாசாரம், கண்டிப்புடன் கூடிய கல்வி இவை பற்றி எவ்வளவு சொன்னாலும் உள்ளம் சளைக்காது.

எமது அதிபர் அவர்கள் மாணவிகளை மட்டும் வழி நடத்தவில்லை எமக்குக் கற்பித்த ஆசிரியர்களையும் நல்வழி நடக்கச் செய்தார். இதனால் மாணவிகளாகிய நாம் பல நன்மைகளைப் பெற்றோம். வளங்களைப் பெற்றோம், பல சிந்தனையுடன் கூடிய அறிவினைப் பெற்றோம், அதிபர் திருமதி செல்லம்மாபிள்ளை அவர்களின் எழில் மிகு தோற்றம் அவரிடம் எம்மைப் பணிய வைத்தது. அவர் கல்வியில் மட்டுமல்லாது கலைத்துறைகளான சங்கீதம், நடனம் என்பவற்றிலும் அதீதமான நாட்டம் கொண்டவராக விளங்கினார். அதனால் நாம் கல்வியில் மட்டுமல்லாது முத்தமிழிலும் சிறந்து விளங்கினோம்.

எமது கல்லூரியில் எந்த நிகழ்ச்சியாயினும் மேடை ஏறுவதென்றால் அவர் முன் ஒத்திகை பார்த்து சரி என்ற பின்னரே அது மேடை ஏறும். அவர் சகலகலா வல்லவராகத் திகழ்ந்தார். ஒரு தடவை மேடையேற்றுவதற்காக சங்கீத ஆசிரியை திருமதி சுபத்திரா அவர்களை "சாருகேசி" இராகத்தில் ஒரு தெலுங்கு கீர்த்தனை பழக்கினார். அதிபர் ஒத்திகை பார்க்கும் போது ஒருவரியில் இராகம் மாறுபடுவதாக சுட்டிக்காட்டினார். அத்தகைய நுணுக்கமான அறிவு பெற்றுத் திகழ்ந்தவர் திருமதி செல்லம்மாபிள்ளை இவ்வாறாக பாதுகாபட்டாபிஷேகம் என்ற நாடகம் பழகிய பொழுது கூட எம்முடன் இருந்து உடை முதல் அனைத்து பங்களிப்புகளையும் சரிபார்த்துத் திருத்திய பின்பே மேடையேற்ற அனுமதித்தார். ஆங்கில நிகழ்ச்சிகளில் அவருக்குப் பரிச்சயம் இருந்த போதும் அதில் துறைபோன தனது கணவர் திரு. பிள்ளை அவர்களை அழைத்து வந்து ஒத்திகை பார்ப்பார். இவ்வாறாக கண்ணை இமைகாப்பது போல மாணவர்களை எல்லா வகையிலும் பாதுகாத்து வழிகாட்டிய அந்த அதிபருக்கு நிகராக என் வாழ்நாளில் நான் கண்டதே இல்லை. அவரிடம் நேர முகாமைத்துவம் இருந்தது அது எம்மிடையேயும் பரவி இருந்தது.

எமது அதிபர் திருமதி செல்லம்மாபிள்ளை அவர்கள் எமது காலத்தில் பரமேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் விழாவிற்கு இந்தியாவிலிருந்து N.S. கிருஷ்ணன், K. B. சுந்தராம்பாள் போன்றவர்களை அழைத்து எமது கல்லூரியில் தங்க வைத்தார். அத்துடன் R.P. சேதுப்பிள்ளை, மு. வரதராசனார், கல்கி கிருஷ்ணமூர்த்தி, பெரியசாமித்தூரன், இராசமாணிக்கனார் போன்றவர்களும் அந்த விழாவிற்கு வந்திருந்தனர். அவர்கள் அனைவரையும் பார்க்கவும், பேசவும், அவர்களின் சிறப்பு உரைகளைக் கேட்கவும் வாய்ப்புக் கிடைத்தமை எமக்கு மறக்க முடியாதது. யோகி சுத்தானந்த பாரதியாரின் கையால் பரிசு பெறும் வாய்ப்பும் எமக்குக் கிடைத்தமை பெரும் பாக்கியம். இப்படியான பல வித ஆற்றல்களைக் கொண்ட அதிபர் எமக்குக் கிடைத்தமை நாம் செய்த புண்ணியமே. திருமணம் குறுக்கே வந்ததனால் நான் மேலே படிக்க முடியாது போனது. ஆனாலும் எமது திருமணத்திற்கு வந்து எம்மை வாழ்த்தியதுடன் எம்மை கல்லூரிக்கு அழைத்து உணவளித்தது இன்றும் என் மனதில் பசுமையாக உள்ளது. அவரை இன்றும் நான் ஒரு தெய்வமாக நினைத்து வழிபடுகிறேன்.

அவரின் அழகுத்தோற்றம், கல்லூரியில் காலைப்பிரார்த்தனை மாலையில் மேல் மாடியில் உள்ள நடராஜரை வணங்க எம்மையும் அழைத்துச் செல்லும் பாங்கு என்பன அவரை என்றும் எம் மனக்கண்முன் கொண்டு வருகிறது. இத்தனைக்கும் இராமநாதன் கல்லூரியே காரணம் என நினைக்கும் போது அதனை என்றுமே மறக்க முடியாத இன்பம்.

இராமநாதன் கல்லூரி சேர். பொன் இராமநாதனின் நல்லெண்ணத்தில் உதித்தது இக் கல்லூரி மேலும் பல மாணவிகளுக்கு கலங்கரை விளக்காகத் திகழ வேண்டும் என்றும் வாழ்த்துகின்றேன்.

**திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம்**
பழைய மாணவி
லண்டன்.



# வாழ்த்துச் செய்தி

கல்வியழகும் - கலையழகும் கலந்துறையும் யாழ்ப்பாணத்தில் தமிழும் - சைவமும் தழைத்தோங்கும் மருதனார்மடத்தில் கலங்கரை விளக்காய் - கல்விப்பசியோடு வந்தவர்களுக்கெல்லாம் கற்பகதருவாய் காமதேனுவாய் கல்வி மழை பொழிந்த கார்மேகம் எங்கள் இராமநாதன் கல்லூரி என்றால் அது மிகையாகாது!

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய்" என்ற பொய்யாமொழிப் புலவரின் கூற்று பெற்றதாய்க்கு மட்டுமல்ல தாய்க்கு நிகரான எங்கள் கல்லூரிக்கும் பொருந்தும். எங்கள் கல்லூரியில் கல்வி கற்று இன்று நல்ல நிலையில் உள்ள அத்தனை பேருமே நன்றியுணர்வோடுதான் இருக்கின்றோம்.

"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி - அவையத்து
முந்தி யிருப்பச் செயல்"

என்ற குறள் கூட எங்கள் தந்தைக்கு நிகராக எங்களை எல்லா அவைகளிலும் முந்தியிருக்கச் செய்த எங்கள் கல்லூரிக்கும் பொருந்தும் இத்தகைய குறளுக்கு ஈடாக இன்னுமொரு குறளையும் அருளிச் செய்த வள்ளுவன் மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை என்னோற்றான் கொல் எனுஞ் சொல்" என்று கடமையை எமக்கு உணர்த்தியுள்ளார். எம்மை கற்றவர் அவையில் கல்வியறிவோடு முந்தி இருக்கச் செய்த எங்கள் தந்தையைப் போல் இன்று உலகெங்கும் பரந்து வாழும் எம் கல்லூரியின் பழைய மாணவர்கள் தாங்கள் வாழும் தேசங்கள் அனைத்திலும் பழைய மாணவர் சங்கங்களை அமைத்து எமது கல்லூரிக்கு மிக நல்ல பெயரை ஏற்படுத்தி பல நல்ல கைங்கரியங்களை ஆற்றி வருகிறார்கள். அந்தவகையில் கனடா நாட்டில் வாழும் நாமும் இராமநாதன் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தை நிறுவிப் பல நல்ல காரியங்களை செய்து வருகின்றோம். அதிலும் எனக்குக் கிடைத்த பெரும் பேறு எமது சங்கத்தின்


செயலாளராக பல ஆண்டுகள் பணி புரிவதுடன் எமது தாய் நாட்டிற்கும் கனடாவிற்கும் இடையில் ஒரு பாலமாய் இருந்து பணியாற்றுவது இறைவன் எனக்கிட்ட வரம். அடிக்கடி நான் கல்லூரிக்குச் சென்று அங்கு என்னதேவை என்பதை அறிந்து அந்தக் குறைகளை நிவர்த்தி செய்வதற்குரிய வசதிமுறைகளை எமது சங்கத்தின் ஊடாக செய்து வருகிறேன்.

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"

அந்த வகையில் எமது கல்லூரிக்கும் அங்கு கல்வி கற்கும் மாணவச் செல்வங்களுக்கும் தேவையறிந்து உதவ நாம் எப்பொழுதும் சித்தமாக உள்ளோம். கல்விக்கு நிகர் இந்த உலகில் எதுவுமே இல்லை என்பதால் எல்லோர்க்கும் கல்விக் கண்திறக்க காலமெல்லாம் நாம் உழைப்போம்.

வாழ்க எங்கள் கல்லூரி
வளர்க அதன் நற்பெயர் என வாழ்த்தி விடை பெறும்

**செல்வராணி தயாபரநிதி**
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
கனடா



# வாழ்த்துச் செய்தி

பெருமகன் சேர். பொன். இராமநாதவள்ளல் நிறுவிய கல்லூரி அதன் நூற்றாண்டு விழா கொண்டாடப்போவதையிட்டு பெருமிதமடைகின்றேன். கோடான கோடி பெண்களுக்குக் கல்வி புகட்டியதோடு பல கலைகளையும் கற்பித்து வாழ்வாங்கு வாழ வைத்த கல்லூரித் தாய்க்கு எடுக்கப்படும் விழா வெகு விமரிசையாக நடைபெறுமென நம்புகின்றேன்.

நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக மாணவியாகவும், ஆசிரியையாகவும் நான் கல்லூரியில் கழித்த காலத்தை நினைத்துப் பார்க்கும்போது பூரிப்படைகின்றேன். சென்ற வாரம் நான் கல்லூரிக்குச் சென்று அதிபரோடும் சில ஆசிரியரோடும் பாடசாலையைச் சுற்றிப்பார்வையிட்டேன். அதிபர் அவர்கள் எனது மாணவி என்பதில் மிகப் பெருமையடைகின்றேன். அவுஸ்ரேலியாவிலிருந்து யாழ்ப்பாணம் சென்றிருந்தும் விழா நடக்கும் வரை அங்கு தங்க முடியவில்லையே என்று கவலைப்படுகின்றேன்.

இன்று வரை இராமநாத வள்ளலின் இலட்சியங்களையும் கோட்பாடுகளையும் கடைப்பிடித்து வருகின்றது எங்கள் கல்லூரி. இது இலங்கையில் முதன் முதலாக இந்துப் பெண்களுக்கென்றே கட்டப்பட்ட கல்லூரியாகும். இது சைவமும் தமிழும் வளர்ப்பதோடு, சங்கீதம், நடனம், நாடகம், விளையாட்டு, தையற்கலை சமையற்கலை ஆகிய பல கலைகளிலும் புகழ்பெற்று விளங்குவது தமிழ்சைவ உலகிற்கே பெருமைய ளிக்கின்றது.

ஜனவரிமாதம் நடக்கப்போகும் நூற்றாண்டு விழா வெகு விமரிசையாக நிறைவு பெற சிவகாம சுந்தரி சமேத நடராஜப்பெருமான் அருள்புரிவாராக.

**திருமதி புவனேஸ்வரி சண்முகலிங்கம்**
இளைப்பாறிய ஆசிரியை,
யா/ இராமநாதன் கல்லூரி

சிவகாமசுந்தரி சமேத நடராஜப் பெருமானின் கும்பாபிஷேகக் கிரிகைகள் - 2012





சேர் பொன் இராமநாதன் உருவச்சிலை
திரைநீக்கம் - 1994



சேர் பொன் இராமநாதன் உருவச்சிலைக்கு
மாலை அணிவித்து கௌரவித்தல்

## கல்லூரி இல்ல மெய்வல்லுநர் போட்டி



1992



1994









2013

# வாழ்த்துச் செய்தி

நூற்றாண்டு நிறைவில் எம்மையெல்லாம் வாழ வழிசமைத்த எம் இராமநாதன் கல்லூரி அன்னையை அகம் மகிழ்ந்து நன்றியோடு வாழ்த்துகிறோம். எமது கல்லூரி உலகம் உள்ளவரை உச்சப் பணியாற்றி புகழோடு மிளிர இறையருளை வேண்டுகிறோம். எம் கல்லூரி நிறுவினரின் கனவுகள் என்றும் நிலைத்து சைவத்தமிழ்ப் பண்பாடு ஓங்கி வளர வேண்டும் உலகெங்கும் பரந்து வாழும் எம்கல்லூரி பழைய மாணவிகள் சைவப்பண்பாட்டின் மகிமையை உலகம் அறிந்து போற்றும்படி வாழ வேண்டும். வாழ்க கல்லூரி

**திருமதி சகுந்தலா குமாரசிங்கம்**
கொழும்பு பழைய மாணவர் சங்கம்
செயலாளர்



# நூற்றாண்டு விழாக்காணும் கல்லூரித்தாயை வாழ்த்தும் பிரதி அதிபர்

"குருவும் தாரமும் விதிப்படியே" என்று ஆன்றோர் கூறியதை நினைத்துப்பார்க்கின்றேன். ஒருவரின் வாழ்க்கையை உயர்த்துவதில் கல்விக்கூடம் எவ்வளவு முக்கியமானது. சிறுமியாக கல்லூரி வளாகத்தில் ஓடித்திரிந்த நான் இன்று பிரதியதிபராக பணியாற்றுகின்றேன். எனக்கு அறிவூட்டி மனித சமூகத்தில் மனிதராக வாழ வைத்த தாய்க்கு சேவை செய்வதில் புளகாங்கிதம் அடைகின்றேன். எங்கள் ஸ்தாபகர் இராமநாதவள்ளலுக்கு லிகிதராகப் பணிபுரிந்தவர் எனது தாத்தா தம்பித்துரை கிளாக்கர். அவர் மகள் சாவித்திரி பரராஜசிங்கம் ஆசிரியராகவும், 3ஆம் தலைமுறையில் நானும் என்னுடன் சகோதரிகளான மாலினியும், ரோகினியும் கல்வி கற்று உயர்நிலை அடைந்துள்ளனர். 4ஆம் தலைமுறையில் எனது மகளும் கல்வி கற்க வழிவகுத்த கல்விச்சாலையின் புகழைப் பேசுவது பெருமை தருகின்றது.

எங்கள் ஸ்தாபகரின் புனித சேவையில் உருவாக்கப்பட்ட விடயங்களை பேணிப்பாதுகாக்கவேண்டியது அனைவரது கடமையாகும். இதில் முக்கியமானது கல்லூரியில் அமைக்கப்பட்ட இராமநாதேஸ்வரர் ஆலயம் "கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்புடன் எடுத்த பொற் பாதத்துடனும் ஆடல் வல்லானாய் நடராஜப்பெருமான் சிவகாமி அம்மையுடன் மேல்மாடி ஆலயத்தில் திருவருள் பாலித்துக்கொண்டிருக்கும் அருங்காட்சியாகும்.

சைவமும் தமிழ் மணமும் ஒருங்கே கமழும் புனிதம் வாய்ந்த கவின்மிகு பெண்கள் கல்லூரி 100 ஆண்டுகள் நிறைவு செய்துள்ள இவ்வேளையில் இதனை நிறுவிய பெருமகனாரையும் அவர் வழி நின்று கல்லூரியை நிர்வகிக்கும் பொறுப்பினை ஏற்றுப் பணிபுரிந்தவர்களையும் நினைவு கூர்வது எம் தலையாய கடமையாகும்.விசேடமாக தன்னலம் கருதாது நற்பணிபுரிந்த அதிபர்களினதும் ஆசிரியர்களினதும் பணி மிக உயர்வானது. இக்கல்லூரி நூற்றாண்டு விழதுாடிவனை சிறப்பாக கொண்டாடி பல நூற்றாண்டுகள் தழைத்தோங்க எல்லாம் வல்ல இறைவனின் அருளாசி வேண்டி எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மன நிறைவடைகின்றேன்.

**திருமதி நந்தினி சிவராஜன்**
(பழைய மாணவி,
பிரதி அதிபர், யா/இராமநாதன் கல்லூரி.



# அகரம் தந்து சிகரமாக்கிய அறிவாலயம் வாழ்க....

அன்னையின் கரம்பற்றியபடி அதிசயமாக பிரமாண்டமான கட்டங்களைப் பார்த்த வண்ணம் மேல் மாடி ஏறினேன். அழகான நடராஜப் பெருமான் அருகே சிவகாமசுந்தரி பாடசாலைக்குக் கூட்டிச் செல்வதாகக் கூறிய அம்மா என்னைக் கோயிலுக்கா கூட்டி வந்தா என யோசித்த வண்ணம் அம்மாவுடன் கும்பிட்டேன். கும்பிட்ட கரத்தை அணைத்தது ஒரு அன்புக் கரம் "என்ரை பிள்ளை படிக்க வந்திட்டா. ஒரு தேவாரம் பாடு குஞ்சு" என்று அணைத்தவர் கூற அவர் அன்புக்குக் கட்டுப்பட்டு என் மழலையில் தேவாரம் பாடினேன். என்னோடு அவரும் சேர்ந்து கணீரெனப் பாடினார். அவர்தான் இராமநாதன் கல்லூரியின் இசை ஆசிரியை செல்வி. யோகாம்பிகை செல்லையாபிள்ளை. (அம்பியக்கா) அன்று தொட்டு அவரோடு இணைந்து தினமும் கல்லூரி காலைப் பிரார்த்தனையில் தேவாரம் பாடும் பெரும் பேறு பெற்றவள் யான். என்னைத் தொடர்ந்து என் சகோதரர்களும் கல்லூரிப் பிரார்த்தனையில் பாடும் வாய்ப்பைப் பெற்றனர். பாடசாலை சென்ற முதல் நாள் கோயில்தான் இது பாடசாலையல்ல என்று எண்ணிய எனக்கு இன்றும் என் கல்லூரி கோயிலாகவே தெரிகிறது.

அமுதவல்லியக்காவின் அரவணைப்பில் அரிச்சுவடி பயின்று அனைத்து ஆசிரியர்களினதும் ஆளுமைத் திறன்களால் வளப்படுத்தப்பட்டேன். அகில இலங்கை மட்டத்தில் நடாத்தப்பட்ட இசைப் போட்டியில் முதலிடம் பெற வைத்தவர் என் இசை ஆசிரியையே. மகாவித்துவான் வீரமணி ஐயரிடம் பிரத்தியோகமாக யான் நடனம் கற்றபோதும் கல்லூரி கலைநிகவுகள் நாட்டிய நாடகம் பரிசில்களைப் பெற வைத்தவர்கள் கல்லூரி நடன ஆசிரியர்களான கீதாஞ்சலி நல்லையா, திரு ஏரம்பு சுப்பையா பாடசாலை நேரத்தில் வகுப்பிலிருந்து கற்றவை, கல்லூரி ஒழுங்கு முறைகளால் பெற்றவை யாவும் என்னை வளப்படுத்தின.

அழகான கல்லூரியின் அன்றாட நிகழ்வுகளே அற்புதமானவை. நாம் செய்யும் குறும்புகள் குழப்படிகள் ஆசிரியர்களின் பொறுமையைச் சோதித்த வேளைகளிலும் கண்டிப்பர் தண்டிப்பதில்லை. அங்கயற்கண்ணியக்காவிடம் (என் அம்மா) செல்லுவோம் என மிரட்டுவர். சொல்ல மாட்டார்கள். அரவணைத்து எம்மை

ஆளாக்கினர். கல்லூரிப் பரிசளிப்பு விழாவொன்றால் காலை மாலை இசை நடனப் பயிற்சிகள்; சோர்வடையவிடாது சுவையான சிற்றுண்டிகள் வழங்கப்படும். மகோற்சவம் போல் மகோன்னதமாகக் கொண்டாடுவோம். கல்விச் சுற்றுலாக்கள் என் பெற்றோரே கல்லூரியுடன் இணைந்து கூட்டிச் செல்வது வழக்கம். குண்டுமணி மாஸ்டர் (எனது தந்தை) குதூகலமாக கூட்டிச் செல்வார். எல்லா மாணவிகளையும் தம் பிள்ளைகள் போல் அரவணைத்து அணைத்து இலங்கையையும் அறியச் செய்தவர்கள் என் பெற்றோர். புவியியல் ஆசிரியையான என் அம்மா நான்கு தலைமுறை மாணவிகளை கற்பித்தவர் மட்டுமல்ல அவர்களனைவரும் நாட்டையும் அறியச் செய்தவர். கல்லூரிக்கும் எம் குடும்பத்திற்கும் இருந்த பிணைப்பால் கல்லூரி நிகழ்வுகளை எம் குடும்ப நிகழ்வாக அன்று கருதுவோம். என் சகோதரர்கள் எல்லோருமே இங்குதான் கற்றுயர்ந்தனர். சேர். பொன். இராமநாத வள்ளலின் அளப்பரும் கல்விப் பணியில் கல்வி பெற்றது மட்டுமன்றி அவர்நாமத்தால் விளங்கும் இராமநாதன் அக்கடமியின் ஆரம்ப கால இசைமேதைகளிடம் பயிலும் வாய்ப்புப் பெற்றவள் யான். இத்தகைய வாய்ப்புக்களே இன்று என்னை ஐரோப்பிய நாட்டில் ஆயிரக்கணக்கான மாணவர்கட்கு இசை பயிற்றுவிக்கும் தகைமையைத் தந்தது. அண்மையில் இந்திய நாட்டின் உயர் விருதை யான் பெற அத்திபாரமிட்டதும் என் கல்லூரியே.

**சிவசக்தி சிவனேசன்**
பாரதீய வித்தியா பவன், இங்கிலாந்து.

# இராமநாதன் கல்லூரி பல்லாண்டு வாழியவே

செந்தமிழோடு சிவநெறி பேணித் தெய்வக்
கலைகள் பல வளர்க்கும்
அந்தமில் புகழான் இராமநாதன் வள்ளல் காட்டிய
இராமநாதன் கல்லூரி வாழியவே

திரிகரண சுத்தியும் காரியசித்தியும் மகுட
வாசமாய் கொண்டதிக் கல்லூரி
அரி பிரமாதி தேவரும் போற்றும் பான்மையில்
உயர்ந்த கல்லூரி வாழியவே

இல்லத்தரசிகள் இனிய சொல்லழகியர்
இலட்சியப் பெண்கள் பலரை
பல்லோரேத்தும் பண்புடைப் பெண்டிராய்
பயந்த இக் கல்லூரி வாழியவே

கடமையும் பொறுப்பும் கண்ணெனப் போற்றி
நற்சேவை செய்யும் அதிபரோடு
திடமான சிந்தனையும் தியாக உணர்வும்
கொண்டுழைத்த ஆசிரியரும் வாழியவே

அல்லும் பகலும் அயராது உழைக்கும் பண்பான
பெண்மை பாரினில் துலங்க
கல்லூரிச் சேவைக்கு முன்னின்றுழைக்கும்
பழைய மாணவர் பெற்றோரும் வாழியவே

எழிலுறு நுண்கலை அறிவியல் கணனி ஆங்கிலமோடு
விளையாட்டு கல்வி நூற்றாண்டு காலம்
வளமுறக் கற்று வான் புகழ் கண்ட வள்ளல் இராமநாதன்
கல்லூரி பல்லாண்டு வாழிய வாழியவே!!!

பழைய மாணவர்சங்கம்

# பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரின் வாழ்த்துச் செய்தி

நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் இராமநாதன் கல்லூரிச் சமூகம் பெருமையுடன் வெளியிடும் நூற்றாண்டுவிழா மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். பல்லாயிரம் சைவத் தமிழ்ப் பெண்களைப் பயிற்றுவித்த பெருமைமிகு கல்லூரி சைவத் தமிழர் பண்பாட்டை பாரெங்கும் பரப்பி நிற்கின்றது. இக்கல்லூரியில் கற்ற மாணவிகள் இன்றும் இக் கல்லூரி கலை பண்பாட்டில் தனித்துவத்துடனேயே திகழ்கின்றது. இக் கல்லூரி கல்விச் செயற்பாடுகளில் மேலும் உயரவும் தமிழர் தம் பண்பாட்டை நிலை நிறுத்தவும் வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து கல்லூரி நிறுவுநர் பணியையும் நன்றியுடன் போற்றி அமைகிறேன்.

**அ. சிவகுமார்**
செயலாளர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்



# PARAMESHVARA COLLEGE OLD BOYS ASSOCIATION

# PLEDGE AT THE SAMADHI OF RAJA RISHI RAMANATHAN

## *OUR SPIRITUAL GURU*

Parameshvara College Old Boys' Association wish to place our sincere Congratulations to the Present and Past Principals, Staff and Students of Ramanathan College for continuing the Religious Activities of the College and in the field of Carnatic Music, Dancing since the inception of the College, for the past 100 years and we jointly wish the Old Girls Association of the College in Sri Lanka and abroad on the occasion of the Centenary Celebration of the much revered Institution of learning founded by Raja Rishi Ramanathan. This celebration is a holy venture & is indeed dedicated to our Spiritual Guru and for all of us to dedicate ourselves to bring about a cultural renaissance drawing out the ideals from the teachings and philosophy of this Great Guru.

This is the need of the hour so as to change the despondency state of humanity to a Divine State, freed from the negative energies and conditioned by love based relationship.
Ramanathan College could take the lead to promote this spiritual activity. Ramanathan Samadhi should serve as the nerve centre to promote this Holy Venture.

Also it is important to note that this dedication goes deep from the very source of divine energy centre- "RAMESWARAM" reputed to have been founded in Hoary Antiquity by Sri Rama on the Triumphant return to Ayodhya from Lanka and named after the Great Founder- "LORD RAMA" .Raja Rishi Ramanathan's father, Sri Ponnambalam Mudaliyar, in January 1850 went on a pilgrimage with his family and relatives to South India and at Rameswaram "as a humble suppliant" he invoked the deity there to grant him another Son, who would dedicate himself to the service of his country and the religion. He also made a vow that if the prayer were answered he would name the child after the name of the deity there. Accordingly a son was born, whom the jubilant parents in the ecstasy of their joy named "RAMANATHAN".

( Ref: page 56- Sir Pon. Ramanathan- Vol.1 by Sri. M.Vaithilingam)



# வாழ்த்துரை

**கடந்த 100 ஆண்டுகளாக யா/இராமநாதன் கல்லூரி**

கம்பீரமாக நின்று கல்விச்சேவையை வழங்கிக் கொண்டிருக்கும் எமது கல்லூரியின் நூற்றாண்டு மலருக்கு பழைய மாணவர் சங்க செயலாளர் என்ற வகையில் வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். கடந்த நூறு ஆண்டுகளாகப் பல இலட்சக்கணக்கான மாணவர்களுக்கு கல்விச் செல்வத்தை வாரி வழங்கி அவர்களின் வாழ்விற்கு ஒளி விளக்காக விளங்கும் எமது கல்லூரி தனக்கேயான சிறப்பம்சங்களில் சற்றேனும் குறையாது இன்றுவரை நிலைத்து நின்று தனி இடத்தைப் பெற்றுள்ளது என்பது யாவரும் அறிந்த விடயம். சைவப் பெண்கள் - தமிழ் கலாசாரம் பண்பாட்டுடன் நல்ல பெண்மணிகளாகத் திழக வேண்டும் என்னும் நல்ல நோக்கத்துடன் எமது ஸ்தாபகர் மதிப்புக்குரிய சேர். பொன். இராமநாதவள்ளல் அவர்களால் இக்கல்லூரி நிறுவப்பட்டது. தூர இடங்களில் இருந்து வரும் மாணவர்களின் வசதி கருதி கல்லூரியுடன் விடுதிச்சாலையும் சேர்த்தே கட்டப்பட்டுள்ளது. வீட்டில் முடங்கிக் கிடந்த பெண்பிள்ளைகளுக்கு நம்பிக்கை என்னும் ஒளியை ஊட்டினார். அவர்கள் அச்சமின்றி சமூகத்தில் நடமாடச்செய்தார். அவர்கள் சிறந்த பிரஜைகளாக, சிறந்த இல்லத்தரசிகளாக, சிறந்த கல்விமான்களாக, சிறந்த அலுவலர்களாக பல துறைகளிலும் பிரகாசிக்க வேண்டும் என்பது அன்னாரின் நோக்கமாக இருந்தது. முத்தமிழுடன் ஆங்கிலம், விளையாட்டு என்பவற்றின் அவசியத்தையும் நன்குணர்ந்த வள்ளலார் இவற்றைப் போதிப்பதற்கான ஆசிரியர்களை தென்னிந்தியா, லண்டன் போன்ற தேசங்களில் இருந்து வரவழைத்தார். அவர்கள் தங்குவதற்கான விடுதிகளையும் கல்லூரி வளவிலேயே அமைத்துக் கொடுத்தார். இவ்வாறான சேவைகளால் அக்காலத்தில் கல்வி பயின்ற மாணவிகள் தமிழ் பண்பாட்டில் மேம்பட்டவர்களாக எல்லோராலும் போற்றப்பட்டார்கள். அவர்களுக்கு தனிச் சிறப்பும் மதிப்பும் சமூகத்தில் கிடைத்தது.

விடுதிச்சாலையில் தங்கியிருந்து கல்வி பயிலும் மாணவர்களின் வழிபாட்டிற்காக எமது கல்லூரி மேல்மாடியில் சிவகாமசுந்தரி சமேத சிதம்பர நடராஜர் ஆலயத்தை அமைத்துள்ளார். அத்துடன் வெள்ளிக்கிழமை தோறும்

சகல மாணவர்களுக்குமான கல்லூரியின் காலைப் பிரார்த்தனை ஆலயத்திலேயே மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற நடைமுறையையும் உருவாக்கினார். அன்று தொட்டு இன்று வரை இவ்வழக்கம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இராமநாத வள்ளல் சமாதி நிலை அடைந்தபோது அவரின் திருவுடல் கல்லூரி வளாகத்திலேயே அடக்கம் செய்யப்பட்டு அதன் மேலே இராமநாதேஸ்வரரர் ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. எமது ஸ்தாபகர் இங்கே தோன்றாத்துணையாக வீற்றிருந்து எமது கல்லூரிக்கு நல்லாசிகளை வழங்கிக்கொண்டிருக்கின்றார்.

இக்கல்லூரி அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்ட பின்னரும், கல்லூரி சமூகத்துடன் எமது பழைய மாணவர்கள் சங்கமும் இணைந்து இவ்வாலயங்களில் உற்சவங்களைச் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றோம்.

ஆரம்ப காலங்களைப் போன்றே இக்காலத்திலும், இக்கல்லூரி மாணவர்களின் பண்பாடு பேணப்பட்டு வருகிறது. சகல துறைகளிலும் சிறந்த பெறுபேறுகள் கிடைக்கப்பெற்று கல்லூரியின் பெருமை நிலைநாட்டப்பட்டு வருவது பாராட்டுக்குரியது. இவ்வாறு பேரும் புகழும் மிக்க எமது கல்லூரி இன்னும் நீண்டகாலம் சிறப்பாகச் செயற்பட்டு சிறந்த மாணவர்களை உருவாக்க வேண்டும், கல்லூரி மேன்மேலும் மேலோங்கிச் செல்ல வேண்டும் எனப் பழைய மாணவர் சங்க நிர்வாக சபையினர் சார்பாக சிவகாமசுந்தரி சமேத சிதம்பர நடராஜப்பெருமானை வணங்கி வாழ்த்துகின்றேன்.

'வாழ்க இராமநாதன் புகழ்;
வளர்க இராமநாதன் கல்லூரி'

**திருமதி வி. ஜெயராசா**
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
யா/இராமநாதன் கல்லூரி



# எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்க செயற்பாடுகள்

*ஆரம்பத்தில் சைவ மங்கையர் சபையாக இருந்த அமைப்பே மீண்டும் 1981இல் பழைய மாணவர் சங்கமாக உருப்பெற்றது. சைவ மங்கையர் சபையை, 1924இல் நிறுவியவர் சேர். பொன். இராம நாதன் அவர்களே. சைவப் பெண்கள் அனைவரும் சமூகப்பணியில் ஈடுபடச் செய்யும் நோக்கில் இச்சபை உருவாக் கப்பட்டது. இச்சபையின் தலைவராக லேடி இராமநாதன் அவர்களே நீண்ட காலமாக இருந்து பணியாற்றினார்.*

*இச்சபை பெண்கல்வி தொடரப் பண உதவி புரிந்தும், ஏழைச் சிறுமிகளுக்கு வாழ்வளித்தும், தொடர்ந்து பெண் இனத்திற்குப் பெரும் பணி ஆற்றியது. எமது கல்லூரியின் முதற் தமிழ் பெண் அதிபராக இருந்த திருமதி இரட்ணா நவரட்ணம் அவர்கள் தமது காலத்தி லேயே கல்லூரியின் நன்மை கருதிச் சைவ மங்கையர் சபையைத் தொடர்ந்து நடாத்தினார். சபை மூலம் அங்கத்தவர்களுக்கு சமய போதனைகள், ஆங்கிலம், மனையியல், தையல் ஆகிய துறைகளில் வாராந்த விடு முறை நாட்களில் பயிற்சி அளிக்கப்பட்டது. இச் சபை காலக்கிரமத்தில் செயலிழந்தது.*

*எமது கல்லூரியின் பழைய மாணவி யும், ஆசிரியருமாகிய திருமதி யோ. இராஜரட்ணம் 1980இல் அதிபர் பதவிக்கு வந்தார். இவரே 1981ஆம் ஆண்டு பழைய மாணவர் சங்கத்தை உருவாக்கினார். எமது பழைய மாணவர் சங்கமானது கல்வித்திணைக்கள யாப்பு விதிக்கமை வாக 20.11.1964ஆம் திகதி இடப்பட்ட 27ஆம் இலக்கச் சுற்று நிருபத்திற்கு அமை வாகவும் செயற்படுகின்றது. இதன்படி கல்லூரிப் பழைய மாணவர்களும், கல்லூரியின் கடந்த கால ஆசிரியர்களும், தற்போதய ஆசிரியர்களும் அங்கத்துவம் பெறத் தகுதி உடையவர்கள் என்று கூறப் பட்டுள்ளது.*

*சாதாரண அங்கத்தவர்கள் 100/= வும் ஆயுட்கால அங்கத்தவர்கள் 1000/= வும் செலுத்தி அங்கத்தவராகலாம்.*

இச்சங்கத்தின் செயலாளராக ஆரம் பத்தில் திருமதி சாரதா நாகநாதனும், அவர்களுக்குப் பின் திருமதி கு. அப்புத் துரை அவர்களும் இருந்தனர். திருமதி கு. அப்புத்துரை 1985-2004 வரையான காலப்பகுதியில் (19 வருடங்களுக்கு) தொடர்ச்சியாகப் பதவி வகித்து தன் முயற் சியால் அதிக அங்கத்தவர்களைச் சேர்த்து இச் சங்கம் பலமானதொரு சங்கமாகச் செயற்பட உதவினார்கள்.

திரு. கு. அப்புத்துரை ஓய்வு பெற்ற தையடுத்து இணைச் செயலாளராக இருந்த திருமதி கோ. இராமச்சந்திரன் செயலாளராகச் சிறிதுகாலம் கடமை யாற்றினார். அவர்களும் இச் சங்கம் திறமையாகச் செயற்பட பல வழிகளிலும் செயற்பட்டார். 2007ஆம் ஆண்டிலிருந்து திருமதி வி. ஜெயராஜா அவர்கள் சங்கச் செயலா ளராக இன்றுவரை பதவி வகித்துக் கொண் டிருக்கின்றார். பழைய மாணவர் சங்கச் செயற்பாடுகள் யாவற்றையும் தமது சுகவீனத்தையும் பொருட் படுத்தாமல் சிறப்பாகச் செயற்படுத்திக் கொண்டிருக் கின்றார். ஆரம்ப காலத்தில் பழைய மாணவிகளே சங்கத் தலைவர்களாக பதவி வகித்தனர். தற்போது அரசாங்க நிபந்தனைகளுக்கமைவாக கல்லூரி அதிபர்களே தலைமைப் பொறு ப்பை வகிக்கின்றனர்.

எமது கல்லூரி பழைய மாணவர் சங்கமானது ஆரம்பகாலம் தொடக்கம் இன்றுவரை கல்லூரியின் அபிவிருத் திக்கும், வளத்திற்கும் தன்னாலான பங்க ளிப்பைச் செய்து வருகின்றது. கல்லூரி வாசல் பெயர் வளைவுகள், திருமதி அருணாசலம் மண்டபத்திற்குரிய யன்னல் வலை அமைப்பு, மேடைத் திருத்தம், இரும்புக் கதவு என்பவற்றிற்கு நிதிப் பங்களிப்பு செய்யப்பட்டது. கனடா, லண்டன், அவுஸ்திரேலியா அமெரிக்கா, கொழும்பு வாழ் பழைய மாணவர் சங்கங்களும் மண்டபத் திருத்தம், கல்லூரி முகப்பு வளைவு ஆலய புனருத்தா ரணம் என்பவற்றிற்கும் தமது பங்களிப்பைச் செய்து வருகின்றன.

மேலும் பழைய மாணவர் சங்கம் கல்லூரி நிகழ்வுகளான ஆசிரியர் தினம், பரிசளிப்பு விழா, விளையாட்டுப் போட்டிகள், தேசிய மட்டப் போட்டிகளுக்குச் செல்லும் மாணவர்களுக்கான போக்கு வரத்துச் செலவு என்பவற்றிற்கும் நிதி உதவி செய்கின்றனர். சிவகாமசுந்தரி சமேத நடராஜர் ஆலயத்தில் மாதாந்தம் நடைபெறும் நடேசர் அபிஷேகம் (உத்தர நட்சத்திரம்) ஆனி உத்தர மணவாழக்கோல விழா, கல்லூரி நிறுவுனர் குருபூஜை என்ப வற்றைக் கல்லூரி இந்து மன்றத்துடன் இணைந்து நடாத்தி வருகின்றோம்.

இன்னும் அமரத்துவமடையும் அதிபர், ஆசிரியர்கள், சங்க நிர்வாகசபை உறுப்பினர்கள், அவர்களின் நேரடி உறவினர்களின் நிகழ்வில் கலந்து கொண்டு கல்லூரி சமூகத்துடன் சேர்ந்து அஞ்சலி செலுத்தி வருகின்றோம்.

திருமதி அருணாசலம் மண்டபத்தில் (பிரதான மண்டபம்) காட்சிப்படுத்தப்பட்டுள்ள அதிபர்களின் புகைப்படங்களின் செலவினங்களையும் சங்கம் வழங்கியது. 18.07.2003இல் நடைபெற்ற சமாதி ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி விழாவின் போது திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் தலைமையில் பழைய மாணவர் சங்கம் திருவூஞ்சல் ஒன்றை வெளியிட்டது. இத்தொகுப்பு பழைய மாணவர் சங்க நிர்வாகசபை உறுப்பினரான திருமதி வை. கணேசபிள்ளையவர்களால் எழுதப்பட் டது. இதன் செலவை பழைய மாணவர் சங்க நிர்வாகசபை உறுப்பினரான திருமதி ச. கனகேஸ்வரன் ஏற்றுக்கொண்டார். பாடசாலை அலுவலக மலசலகூடமும் நவீனமுறையில் பழைய மாணவர் சங்கத் தினரால் திருத்தி அமைக்கப்பட்டது.

பழைய மாணவியும் எமது கல்லூரி யின் சிரேஷ்ட ஆசிரியர் திருமதி அ. சிவப்பிரகாசபிள்ளையின் புத்திரியுமான லண்டனில் வசிக்கும் திருமதி சிவசக்தி சிவனேசன் அவர்கள் கல்லூரியின் பரிச ளிப்பு விழாவிற்கு வருடாந்தம் நிதிப் பங்களிப்பு வழங்கிக் கொண்டிருக்கின்றார். அவர்களுக்கும் நாம் நன்றியுடையவராவோம்.

சிவகாமசுந்தரி நடேசர் ஆலயத்தை முற்றாகத் திருத்தப் பெருந்தொகைப் பணத்தை கனடா, லண்டன், அவுஸ்தி ரேலியா பழைய மாணவிகள் செலவு செய்துள்ளனர். அத்துடன் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் டி.எம். சுவாமிநாதன் அவர்களும் பங்களிப்புச் செய்ததுடன் யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் திரு. க. சிற்றம்பலம் அவர்களின் அனுசரணையுடன் அப்பொழுது அதிபராக இருந்த திருமதி வேணுகா சண்முகரட்ணம் தலைமையில் தடைப்பட்டிருந்த ஆலய கும்பாபிஷேகம் 21.06.2012 இல் சிறப்பாகச் செய்து முடிக்கப்பட்டது. இவ் ஆலய புனருத்தாரணத்திற்கு தொடர்பாடலாளராக திருமதி சி. பாலாம்பிகை, திருமதி ச. கனகேஸ்வரன் இருந்தனர்.

இச்சங்கம் எதிர்காலத்தில் வளர்ச்சியடைய கல்லூரியின் அண்மைக்காலப் பழைய மாணவர்களின் ஒத்துழைப்பும் அவசியம் என்பதை தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றோம்.

"பழைய மாணவர் சங்கப்பணி தொடரட்டும்"

திருமதி இ. பாலசிங்கம்
பழைய மாணவர் சங்க
நிர்வாகசபை உறுப்பினர்

பாடசாலை அபிவிருத்திக் குழு



பாடசாலை அபிவிருத்திச் சங்கம் - 2013





# செயலாளரின் உள்ளத்திலிருந்து........

இராமநாதனால் ஆரம்பிக்கப்பட்ட இராமநாதன் கல்லூரி 1913ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையான நூறு வருடங்களில் அதன் கல்விச் செயற்பாடு வினைத்திறன் வாய்ந்ததாக இருந்தது என்பதற்கு உலகெங்கும் பரந்து வாழும் பழையமாணவர்கள் சான்றாகும். பழைய மாணவர்கள் நமது நாட்டுக்கலை கலாசாரங்களைப் பாதுகாப்பவர்களாகவும் அதை வளர்க்கும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுப்பவர்களாகவும் இருக்கின்றனர். அத்தோடு மருத்துவர்கள் சட்டவல்லுனர்கள், விஞ்ஞானிகள், சமூகத்தில் உயர் பதவி வகிப்பவர்கள், நல்ல கலைஞர்கள் என பல அறிவுடைய பெண்கள் உருவாவதற்கு அடிஅத்திபாரமிட்ட கல்லூரியின் ஸ்தாபகர் சேர். பொன். இராமநாதனது தூரநோக்கு மகோன்னதமானது.

இராமநாதன் கல்லூரிக்கு இலங்கையின் சகல பாகங்களிலிருமிருந்து விடுதிவசதிகளுடன் இரண்டாம் நிலைக் கல்வி கற்க பெண்கள் பலர் முன்பு விரும்பு வந்தனர். 1960 அறுபதுகளிலும் 1970 எழுபதுகளிலும் பல்கலைக்கழக அனுமதி பெற்று வருடா வருடம் நூற்றுக்கணக்கான மாணவர்கள் பாடசாலையிலிருந்து பஸ்வண்டிகளில் சென்றதைப் பற்றி அறிந்து நானும் பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என இளவயதில் கனவு கண்டு இக்கல்லூரியில் கல்வி பயிலச் சென்றேன். என்னைப் போல் பல்கலைக்கழக கனவு கண்டு கற்றவர் பலர் இருக்கின்றனர்.

இக் கல்லூரியில் கல்விகற்கும் போது பாவாடை தாவணி அணிந்தும் பருவமடைந்த பிள்ளைகள் சேலை அணிந்தும் செல்வதென்பதே தனி அழகு. அதற்காகவே இக் கல்லூரியில் கல்வி கற்க விரும்பிய என்போன்ற பெண்களே ஆயிரம் ஆயிரம் பாட்டும் பரதமும் தையலும் அழகியற் கலைகளும் சிறந்த முறையில் கற்பிக்கலாம் எனத் தமிழப்பண்பில் நாட்டம் கொண்டு தங்கள் பெண்பிள்ளைகள் இக்கல்லூரியிலேயே கல்வி பயில வேண்டும் என விருப்பிய பெற்றோர்கள் பலர்.

இளமைக்கால எனது கனவுகளை நனவாக்கிய இக்கல்லூரி நான் ஆசிரியராகப் பணிபுரியவும் இடமளித்தது ஆசிரிய பணியில் இடமாற்றம் பெற்று இக் கல்லூரியில் கற்பித்த சந்தர்ப்பத்தில் எனக்குகற்பித்த ஆசிரியர்களுடன் இணைந்து பணியாற்றும் வாய்புக் கிடைத்ததை பெரும்பேறாக் கருதுகிறேன்.


தமிழ்ப் பண்பாட்டின் சின்னமாகவும் சைவமும் தமிழும் இணைந்த பாரம்பரியத்தை முதன்மைப் படுத்திய வகையில் கல்விச் செயற்பாடுகள் இக் கல்லூரியில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன இது இராமநாதனின் தூரநோக்கின் பெறுபேறயாகும். இன்றும் மாணவர்களால் ஆடலும் பாடலும் கவின் கலைகளும் ஆற்றுகைப்படுத்தும் வேளைகளில், தன்னிகரில்லா தனிப் பெருமையை இக்கல்லூரி பெற்று பல பரிசுகளையும் வெற்றிக் கேடயங்களையும் தனதாக்கிக் கொண்டதை நினைவு கூரும்போது உள்ளம் பரவசமடைகிறது. தேசிய மட்டத்தில் மாணவர்களின் இணைபாடவிதானச் செயற்பாடு கல்லூரியின் தரத்தை மேலும் ஒருபடி உயர்த்தியுள்ளது. இந்நிலையில் எனது கல்லூரியின் நூற்றாண்ட விழா செயலணியின் செயலாளராகவும் பணிபுரியவைத்த கல்லூரி அன்னைக்கு சிரம்வாழ்த்தி வணங்குகிறேன்.

நன்றி

**திருமதி சசிகலா சிவநாதன் (ஆசிரியர்)**

செயலாளர் - நூற்றாண்டு விழா செயலணி

பழைய மாணவர் இராமநாதன் கல்லூரி



# சேர் பொன் இராமநாதன் இல்ல நிதியம்

ஒருநாட்டின் செழிப்புக்கு ஆதாரமானவை நிலவளமும் நீர்வளமும் மூலப்பொருட்களுமேயாகும். ஒருமனிதனுக்கு வளத்தைக் கொடுப்பது அவனது அறிவாகும். அதற்கு மூலதனமாக விளங்குவது கல்வி. ஒரு இனத்தின் வளர்ச்சியானது பெண்களிலேயே தங்கியிருக்கின்றது. பெண்களே குழந்தைகளுக்கு தாய்ப்பாலுடன் தாய்ப்பாசத்தையும் அளிக்கின்றனர். இவ்வுணர்வுகளேதாய்மொழிப்பற்றையும் தாய்நாட்டுப்பற்றையும் வளர்க்கின்றன. "பெற்றதாயும் பிறந்தபொன்நாடும் நற்றவவானில் நனிசிறந்தனவே"என்பர். அதேபோன்று எமது கலாசாரத்தைப் பேணுகின்ற பெண்கள் சைவப்பற்றுள்ளவர்களாகவும் தமிழ்ப்பற்றுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும் என்றஉயரியசிந்தனையில் வள்ளல் பெருந்தகையான சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் ஒருசகாப்தத்திற்குமுன்னரே இராமநாதன் மகளிர் கல்லூரியைமருதனார்மடத்தில் நிறுவினார்.

கடந்த நூறு வருடங்களில் பல்லாயிரக்கணக்கானபெண்கள் இக்கல்லூரியில் கற்றுஉலகின் பலபாகங்களிலும் செல்வச்செழிப்புடன் பலர் போற்றவாழ்கின்றனர். அத்துடன் இராமநாதன் கல்லூரியில் படித்தவர் என்றாலேமற்றவரால் ஒருகணம் நினைத்துப் பார்க்கக் கூடிய சிறந்த அணிகலனாகதிகழ்ந்துள்ளார்கள்.

தற்சமயம் கல்லூரி வளாகமும்,கட்டிடங்களும் சீர்திருத்தப்பட வேண்டியநிலையில் உள்ளன. அதேநேரம் சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் வாழ்ந்த இல்லமும் புனர்நிர்மாணிக்கப்பட்டு பாதுகாக்கப்பட

வேண்டிய அவசியத்தில் உள்ளது. இப்பாரியபொறுப்பு இக்கல்லூரியில் கற்றஅனைவரையுமேசாரும். அதுமட்டுமல்லாது இலங்கைவாழ் தமிழர்கள்,புலம் பெயர் தமிழர்கள் அனைவரதுகடமையும்கூட.


அத்துடன் இப்பகுதிபிரதேச சபை, வடமாகாணசபை, வடக்கு மாகாண கல்வித்திணைக்களம் ஆகியனவற்றைச் சேர்ந்தஅதிகாரிகள் பொறுப்புணர்ச்சியுடன் தமது முழுமையான பங்களிப்பினை வழங்க முன்வரவேண்டும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் சேர். பொன். இராம நாதன் அவர்கள் இன்னும் பலசைவப்பெரியார்கள் ஆரம்பித்து வைத்த பாடசாலைகளில் கல்விகற்றவர்களின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் தான் இன்றையதமிழ்ச்சமுதாயம். ஆதலால் எமது மூதாதையரின் நற்பணிதொடரப்படவேண்டும்.

சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் விட்டுச்சென்ற மூலதனங் களைப் பராமரிக்கும்அறக்கட்டளைகளும்,அவற்றின் தலைவர்களும் சேர்ந்து ஒருநிதியத்தைஆரம்பித்தல் காலத்தின் கட்டாயமாகும். இப்ப ணியை ஆரம்பித்துநிறுவுனரின் இல்லத்தைப் புனரமைப்பதுஎம் மக்கள் அனைவரதும் பொறுப்பாகும். இராமநாதன் கல்லூரியும் அவரது இல்லமும் இன்னும் பல நூறு வருடங்களுக்குபாதுகாக்கப்படவேண்டும். இதுவேநாம் அவருக்குச் செய்யும்கைமாறாகும். சேர்.பொன் இராமநாதன் அவர்களால் ஆண்களுக்காகஆரம்பிக்கப்பட்டகல்லூரி தான் பரமேஸ் வராக்கல்லூரி. இன்று அது ஒரு பல்கலைக்கழகமாக மிளிர்ந்து எமது சமுதாயத்திற்குஉயர் கல்வியைவழங்குகின்றது. இப்பல்கலைக் கழகத்தில் கல்விபயில்பவர்களும், பணிபுரியும் கல்விமான்களும் இந் நிதியத்திற்கு உதவி செய்வது அவர்கள் கடமையாகும்.

எமதுநாட்டின் தலைசிறந்தகோவில்களில் பொன்னம்பல வாணே ஸ்வரர் கோவிலும் ஒன்றாகும். இக்கோவிலைதென்னிந்தியக் கோவில்கள்

போன்றுமிகவும் சிறப்பாக நிறுவியுள்ளார். ஈழத்தின் தனிக்கருங்கற் கோயில் என்றசிறப்பும் பெறுகின்றது.தற்போது இக்கோவில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு. டி. எம் சுவாமிநாதன் அவர்கள் தலைமை யில் சீராகவும் சிறப்பாகவும் நிர்வகிக்கப்பட்டுவருகின்றது. அதேபோன்று இராமநாதவள்ளலின் இல்லத்தையும் மீள் நிர்மாணிப்பதற்கு திரு. டி. எம். சுவாமிநாதன் முன்னின்றுஆவனசெய்யவேண்டும். "கேடில் விழுச் செல்வம் கல்வி"அதைஎமதுசமூகத்திற்குவழிகோலியவர் தெய்வ மேயாவார். அவர் பணிஎம் பணியாகும். நூற்றாண்டுவிழாக் கொண் டாடவிருக்கும் இச்சமயத்தில் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழையமாணவர்கள்,கல்லூரி அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் மற்றும் சகலபணியாளர்களுக்கும் எமதுவாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

திரு. நடராஜா சச்சிதானந்தம்
லண்டன்



# MESSAGE - 100th ANIVERSARY OF RAMANATHAN COLLEGE, JAFFNA, SRILANKA

I consider it a great privilege t be asked to send a message on this grand occasion for this temple of education founded and nurtured by one of the most illustrious and philanthropic scholar of last century, Sir Ponnampalam Ramanathan. He realised that during that era there was a need for a girl's school for Hindu children to be educated upholding Saiva traditions. He believed that education should be wholesome and not just the knowledge of perishable things in life. there is a need to awaken the mind to spiritual areas of life. He focussed on character buliding and moulding the young mind to adhere to proper values, like truth, courage, social consciousness, compassion, respectful of reason and not wilfully harming others.

Youth of a nation are the trustees of postertiy (Lord Beaconsfield)

Students are the hope of the future. The future leaders of the noation are to rese from the students (Gandhiji)

Tall walls and gates do not make a school but students and good geachers make a school (Gandhi ji)

The founder of the school made sure that all aspects of education such as religious education and curricular education were amply provided for with plnty of land, gardens and buildings including a temple for children to worship every day.

As a result of thirty years of war and resulting neglect a premier institution has reached rock bottom status.

I admire the commitment of the principal and the RamanathanCollege development society for taking steps to renovate the school and to celebrate the centenary.


I wish to impress upon the principal and teachers the need to provide excellent teaching so as to inspire the young minds to seek good eduction and good values. If learning in schools if proper there should be no need to engage extra tuition. Children should be guided to spend time to learn other important aspects of life such as fine arts and spiritual matters.

Apart from teaching mathematics, science and social subjects teaching of languages is very important. By the age of sixteen and student should have mastered Tamil Language and got proficiency in English, Sinhalese and if possible Sanskrit. Teaching of other European languages to desiring pupils could be an option.

I realise the infrastructure of our society has be badly damaged and continuing to be eroded by various undesirable influences. it is a challenge thrown on the society to clean up the evils. The school is a point to bring about a change.

It is the duty of every Tamil to support the school in this endeavour.

**Dr. S. Navaratnam**
5 Windy Hill, Hutton
Brentwood, Essex, CM13 2HF
United Kingdom
15 th December 2013



# தமிழர் பாரம்பரியத்தின் தாய்ப் பீடம்
# இராமநாதன் மகளிர் கல்லூரி

ஆன்மீக ஞானம், கல்வி ஞானம், தமிழ்க் கலை, கலாச்சார பாரம்பரியம் பேணி நமது வருங்கால சந்தியினர் வாழ்வின் ஒளிவிழக்காக வாழவேண்டுமென்ற உயர் நோக்கத்தை ஒரு நூற்றாண்டுக்கும் முன்னர் மக்களுக்குப் போதித்த ஒரு உத்தம தீர்க்கதரிசி சேர். பொன் இராமநாதன் அவர்கள்.

அவரது அன்றைய சிந்தனைகளும், போதனைகளும், செயற்பாடுகளும், ஆக்கங்களும் இன்றும் ஆயிரங்கால் மண்டபம் போல உறுதியாக எமது சந்ததியினர் வாழ்வின் மையமாக இருப்பது இதற்கு ஒரு உதாரணமாகும்.

ஆன்மீகத்திற்கும், தமிழர் சைவ மரபு வாழ்க்கைக்கும் கொழு ம்பில் ஸ்ரீபொன்னம்பலவாணேசர் ஆலயத்தை சேர். பொன் இராம நாதன் அவர்கள் இந்திய ஆலய சிற்ப சாஸ்த்திர முறைக்கமைய கருங்கல் மண்டபத்துடன் நிறுவியிருந்தார்கள்.

ஆனால் தமிழர்கள் பிரதேசமான யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சைவ சமயத்தைச் சாடந்தவர்கள் ஆன்மீகத்திலும், கல்வியிலும் ஏக காலத்தில் அறிவுபெறவேண்டும் என்னும் பெருநோக்குடன் இரண்டு அறிவாலயங்களை (கல்விக் கூடங்களை) அமைத்திருந்தார். அவை சைவ மகளிர்க்கான இராமநாதன் மகளிர் கல்லூரியும், ஆண்களுக்கான பரமேஸ்வராக் கல்லூரியுமாகும். இவைகளை சேர். பொன் இராமநாதன் அவர்கள் தாம் நிகழ்த்திய உரைகளிலும், அமைப்பின் கோட்பாடுகளிலும் "அறிவாலயங்கள்" என்று கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சைவ சமயக் கோட்பாடுகள், சைவசித்தாந்தக் கொள்கைகள், மரபு, சம்பிர தாயம், சடங்குகள், கிரயைகள் போற்றப்பட்டு அதற்கமைய மக்கள் தமது வாழ்க்கையை அமைக்க வேண்டும் என்பது அவரது நிலையான கொள்கையாக இருந்தது. இதன்மூலம் ஒரு எடுத்துக்காட்டான குணசீலர்களைக் கொண்ட சமுதாயத்தை உருவாக்கலாம் என்பதிலும் உறுதி கொண்டிருந்தார். ஆனால் இவற்றிற்கெல்லாம் அறிவு அவசியம் என்பதை உறுதிப்படுத்தும் செயற்களுக்கு கலங்கரைவிளக்காக அமைக்கப் பட்டவை தான் இந்த அறிவாலயங்கள். இன்று நூற்றாண்டு விழாக்காணும் இரமநாதன் மகளிர் கல்லூரியின் பெருமைபற்றி பலரும் இம்மலரில் தமது கருத்துக்களையும், அனுப வங்களையும் பதிவு செய்திருப்பார்கள். அந்தப் பகிர்வில் மக்கள் வாழ்வில் இக்கல்லூரி

ஏற்படுத்திய ஏற்படுத்திக் கொண்டிருக்கும் ஒருசில விடயங்களைப் பகிர்வது எனது நோக்கமாகும். சமய அடிப்படையான வாழ்க்கைமுறை, அத்துடன் பெண்களுக்கான அடக்கம், பொறுமை, அன்பு, கடமையுணர்வு, கண்ணியம் உட்பட நடை உடை பாவனைகளுடன் ஆய கலைகள் யாவும் முற்று முழுதாக கற்றுக் கொடுக்கப்படும் ஒரு நிலையமாகவும் பேணப்படுவதுடன், அவற்றைக் காப்பாற்றவும் வேண்டுமெனவும் சேர். பொன் இராமநாதன் அவர்கள் கொண்டிருந்த ஆர்வம் இன்றுவரை காப்பாற்றப்பட்டு வந்திருப்பதை யாவரும் அறிவார்கள்.

"இசையால் இறைவனைக் காணலாம்" என்னும் சமயகுரவர்களான நாயன்மார்கள் தத்துவத்தில் நம்பிக்கை கொண்டிருந்த பெரியார் இராமநாதன் அவர்கள் இராமநாதன் கல்லூரியில் ஆலயம் அமைத்து தேவார இன்னிசையை மாணவிகள் பாடி மகிழ்வதற்கான ஏற்பாட்டைச் செய்திருந்தார். இந்த இன்னிசைப் பயிற்சி பிற்காலத்தில் கர்நாடக சங்கீதத்தை பயிற்றுவிக்கும் முதல்தர இசை வளர்க்கும் பீடமாக அமைந்து, பல சிறந்த கலைஞர்களை உருவாக்கிப் பெருமைபெற்றது.

மக்களும் இக்கோட்பாடுகளால் நன்மைகள் பெற்றுப் பயன் அடைந்தனர். நாடு தழுவிய உணர்வாக இவை பரிமாணித்து மலர்ச்சி பெற்றிருந்தன. உதாரணமாக இங்கு கல்வி கற்கும் மாணவிகள் அணியும் உடையைக் குறிப்பிடலாம். பாதம் வரை நீண்டுள்ள பாவாடை, முழங்கை வரையிலான மேல்சட்டை, மார்பகத்துக்கு மேலான தாவணி - இவை தனித்துவ நிறைவாகப் பேணப்பட்டன.

இராமநாதன் கல்லூரிக்குப் பின்னர் இந்து சமயத்தவர்களினால் ஆரம்பிக் கப்பட்ட அநேகமான பெண்கள் பாடசாலைகளிலும் தமிழர் பண்பாட்டைப் பேணும் இச்சீருடை பின்பற்றப்பட்டது. பெண்களின் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் அடக்கமான, கண்ணியமான வாழ்வுக்கு இந்த உடை அமைப்பு பிள்ளையார் சுழியாக இருந்தது. சிறு வயதிலிருந்தே இந்த உணர்வெல்லாம் இளம் உள்ளங்களில் பசுமரத்து ஆணிபோல் நிலைகொள்ள வளர்க்கப்பட்டன. இராநாதன் கல்லூரியில் கல்விகற்கும் மாணவிகளின் வாழ்க்கை நெறிப் பயிற்சியில் மக்களும் ஆர்வம் கொண்டனர். ஒரு பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றால் எப்படிப் பெற்றார்கள் பெருமைப் படுவார் களோ அதற்கொப்பாக இங்கு கல்விகற்றுத் தேறிய வயது வந்த மாணவிகளை மதித்தனர்.

கல்யாணப் பேச்சின்போது "பெண் எங்கு கல்வி கற்றவர்?" எனக் கேட்பதுண்டு. அதற்கு "இராமநாதன் கல்லூரி" என்று கூறினால் எதுவித தடையுமின்றி கல்யாணத் திற்குச் சம்மதித்துவிடுவார்கள். விவாகத்துக்கான பொருத்தம் பாராமலே இராமநாதன் கல்லூரியில் கல்வி கற்றமைக்காகத் திருமணத்திற்குச் சம்மதித்த சமய, பாரம்பரியப் பற்றாளர்கள் பலர் என் ஞாபகத்தில் உள்ளனர். இப்படித் திருமணம் செய்தவர்களில் இருவர் இங்கு கல்விகற்றுப் பின்னர் ஆசிரியைகளாக கல்லூரியில் கடமையாற்றிய வர்கள். இராமநாதன் கல்லூரி இன்று "ஆல்போல் தளைத்து, அறுகு போல் வேர் ஊன்றி" மக்களின் நன்மதிப்பைப்பெற்றுச் சாகாவரம் பெற்ற சரித்திரமாக மலர்வதற்குச்

சேர். பொன் இரமநாதன் அவர்களின் "கடவுளுடனான ஆன்ம உறவு" பக்கபலமாக இருந்துள்ளது. சைவ சித்தாந்தத்தில் இவருக்கு இருந்த ஞானம் அளப்பரியது. அதனால் இவரைச் "சிந்தாந்த வித்தகர்" எனவும் அழைத்தனர்.

நாம் சிறு வயதில் கல்வி கற்ற சமயத்தில கல்வி பற்றிப் படிக்கும் போதெல்லாம் "கல்வி காலத்தால் அழியாதது. எவராலும் பறிக்க முடியாதது, நெருப்பினால் எரிக்க முடியாதது" என்றெல்லாம் கற்றதுண்டு. இவை யாவும் சேர். பொன். இராமநாதன் அவர்களின் உள்ளத்தில் ஒலித்திருக்கவேண்டும். அதற்கமைய காலத்தால் அழியாத அப்பயனை அனுபவிக்கின்றோம். சமீபகாலச் சம்பவங்களினால் நாம் பாதிக்கப்பட்ட போதும் உலகளாவிய ரீதியில் நமது சந்ததியினரின் வாழ்க்கை வளம்பெற கல்வி அறிவுதான் வழிவகுத்தது.

ஒரு தீர்க்கதரிசி, அறிஞர், சமயஞானி, தமிழ் பற்றாளர், சைவ சித்தாந்த வித்தகர் அறிவாலய ஸ்தாபகர் சேர். பொன் இரமநாதன் அவர்களினால் நிறுவப்பட்ட இராமநாதன் கல்லூரி நூற்றாண்டுப் பயிராக அல்ல ஆல விருட்சமாக இன்னும் பல நுற்றாண்டுகளுக்கு வளர்ந்து, வாழ்ந்து, நமது இளம் சந்ததியினரை வாழ்வாங்கு வாழவைக்கும் எனக் கூறி எனது பதிவை நிறைவு செய்கிறேன்.

பொங்கு தமிழ் சைவமதை புகட்டுதற்கு
தங்கமனம் சேர். பொன் இராமநாத வள்ளல்
தாராள மனதாலே தந்தநல் கலைக்கோயில்
இராமநாதன் மகளிர் கல்லூரி முதிர்
நுற்றாண்டு விழாக் கண்டு இன்னும்
பல நூறாண்டு நூறாண்டு வாழ
இராமநாதன் அடி வணங்கி
இறைவன் தாள் இறைஞ்சுவோம்

கலாநிதி பொன் பாலசுந்தரம்
இலண்டன்



# முதிர் கனிகளின் முத்தான வாழ்த்துக்கள்



திருமதி இராஜேஸ்வரி இராமலிங்கம் — திருமதி நாகரத்தினம் கதிரித்தம்பி

அகவை 103ஐக் கடந்து 104ஆவது வயதில் வாழ்ந்து வரும் அம்மையார் கல்லூரித் தாயை நன்றியோடு போற்றுகின்றார். நல்லூர் செட்டித் தெருவில் கல்வி வளமும் பொருள் வளமும் நிறைந்த குடும்பத்தில் பிறந்த இராஜேஸ்வரி தமது ஆரம்பக்கல்வியை சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் கற்றார். சைவத் தமிழ்ப் பண்பாட்டில் தம் மகளை வளர்க்க விரும்பிய பெற்றோர் இவரை இராமநாதன் கல்லூரியின் விடுதியில் சேர்த்துப் படிக்க வைத்தனர். அன்றிலிருந்து இன்றுவரை சைவத்தமிழ்ப் பண்பாடு மிளிர வாழ்ந்து வருகின்றார். மும்மொழி ஆற்றல் மிக்கவர். இவரது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள், கொப்பாட்டப் பிள்ளைகள் அனைவரும் கல்வியில் உயர்ந்து உயர் பட்டங்கள் பதவிகளுடன் இனிது வாழ்கின்றனர். இவர்கள் உயர்வு சேர். பொன். இராமநாதனின் "ஒரு பெண்ணைக் கற்பித்தால் அவள் குடும்பமும் சமூகமும் கற்கும்" என்ற சிந்தனை விதையின் அறுவடையே.

அகவை 103இல் வாழ்ந்து வரும் அம்மையார் தன் கல்லூரி அன்னையின் நூற்றாண்டு விழாவிற்கு வாழ்த்துக்கள் நல்குகிறார். இவர் கொக்குவில் செல்லப்பா நாகம்மா தம்பதியின் சிரேஷ்ட புத்திரி திரு. செல்லப்பா அவர்கள் தன் வீட்டிலேயே திண்ணைப்பள்ளி நடாத்தி கல்விப் பணி செய்தவர். அத் திண்ணைப் பள்ளியே கொக்குவில் இந்துக் கல்லூரியின் தோற்றுவாய்க்கு அத்திபாரமானது. தந்தையாரின் திண்ணைப் பள்ளியில் ஆரம்பக்கல்வி பெற்ற நாகரத்தினம் அம்மையார் 10 வயதில் இராமநாதன் கல்லூரியில் இணைந்து விடுதியிலிருந்து கற்றார். தான் பெற்ற கல்வி, கலாசார அனுபவங்களை இன்றும் பலருடன் பகிர்ந்து மகிழ்கிறார். அவருடைய பிள்ளைகள் பேரப்பிள்ளைகளும் கல்விமான்களாகவும், கருணை உள்ளத்தினராகவும் பயனுற வாழ்கின்றனர். இராமநாதன் கல்லூரியின் வழிகாட்டலே தம் வம்சத்தின் வளமான வாழ்விற்கு அத்திபாரம் என்று கூறி மகிழ்ந்து கல்லூரியை வாழ்த்துகிறார். அம்மையார் கல்லூரி வளர்ச்சிக்காக ஒருலட்சத்து முப்பதாயிரம் ரூபாவையும் தந்துள்ளார்.



# மலர் ஆசிரியர் மகிழ்வுடன்...

என் வாழ்வை வளப்படுத்திய வளம் மிகு கல்லூரி அன்னையின் மாண்புறு பணிகளை மலர் வடிவாக ஆவணப்படுத்துவது யான் பெற்ற பெரும் பேறு. எத்தனையோ வித்தகிகளை விளைவித்த கல்லூரி வரலாறு காலம் கடந்தும் போற்றப்பட வேண்டியது. சைவத் தமிழ்ப் பெண்களை தலை நிமிர்ந்து தரணி போற்ற வாழவைத்த முதற் கல்லூரி. கண்ணியமான மாதாசிகளையும், கல்வியியலாளர்களையும், கலைஞானிகளையும் வைத்திய கலாநிதிகளையும், சட்ட வல்லுனர்களையும் அரசியல் அறிஞர்களையும் அள்ளித் தந்து அகமகிழ்வுடன் அகவை நூறைத் தாண்டிய எம் கல்லூரி அன்னை அகிலம் உள்ளவரை அற்புதமாக ஒளிர்வாள். கலைமகள், திருமகள் கடாட்சங்களுடன் காலமெல்லாம் கலங்கரை விளக்காக சைவத்தமிழர் வாழ்வை வழிப்படுத்துவாள். கல்லூரி அன்னையின் கழல்களை மனதிருத்தி கருத்துடன் மலராக்கத்திற்கு உதவிய ஒவ்வொருவரையும் நன்றியோடு உள்ளத்தால் வணங்குகிறேன்.

இத்தனை பெருமை மிகு கல்லூரியைப் படைத்த ஞான புருஷர் வள்ளல் சேர். பொன். இராமநாதன் மானிடம் உள்ளவரை மானசீகமாக சைவத் தமிழர் எல்லோராலும் போற்றப்படுவார். தெய்வீக சிந்தையால் செயற்கரிய செத் செயல் வீரரை செம்மனத்தார் என்றும் சேவித்து மகிழ்வர். கல்லூரி நாமமும் நிறுவுனர் நாமமும் நாளும் நாம் உச்சரித்து வணங்கும் மந்திர உச்சாடனங்களே எனக் கூறி வாழ்த்தி வணங்கி அமைகிறேன்.

நன்றி

**திருமதி. குககுமாரி விஜயரகுநாதன்**
B.A,Dip in Edu, M.Ed, M.Phil, S.L.PS
பழைய மாணவி இராமநாதன் கல்லூரி
அதிபர் யா/நல்லூர் ஸ்ரீ விக்னேஸ்வரா

# பாவலர் தெ. து. துரையப்பாபிள்ளை கல்லூரியை வாழ்த்துகிறார்

## இராமநாதன் கல்லூரி மங்கல வாழ்த்து

### வெண்பா

*அன்பேசம் பூரணமா மானந்த மேதெவிட்டா*
*வின்பேப்ர காசமய வீசனே - அன்பாயிங்*
*கித்தருண மெங்கட் கினிய சமுகவருள்*
*சித்தநிறை யத்தா திகழ்ந்து.*

### கட்டளைக்கலித்துறை

*சீரா ரிலங்கைத் திருமாது செய்த செழுந்தவத்தின*
*ஏரார் விளைவென வெய்தி யிசைபெற் றிகழுமுதும்*
*பேரார்ஸ்ரீ மான்கௌ ரவராம நாதப் பெருந்துரையே*
*நேரார் துதியுமக் கித்தரு ணத்து நிகழ்த்துவமே.*

*யாழ்ப்பாண மங்கையக் கெழிலார் திலக மெனவொளிரு*
*மாப்புகழ் சேர்வலி காமம் வடக்கினில் வைகுமியாம்*
*பாப்புக லற்கரும் பன்னன்றி நீர்புரி பண்பையெண்ணி*
*நாப்புக னற்றுதி நன்றி யுடனிங்கு நல்கினமே.*

*முன்னாட் டமிழர் பிரதி நிதியென மூதிலங்கைக்*
*கின்னா தரவு புரிந்தீ ரக்ஷிங் கெவரறியார்?*
*இந்நாட் கலைஞர் நிதிக்கீர்த்தி யெங்கட் கியலுகின்றீர்*
*நன்னா வலர்பெரு மானேயெம் நன்றி நவின்றனமே.*

*ஐயாஸ்ரீ மான்கௌ ரவராம நாத வருத்துரையே*
*செய்யாள் கடாட்சந் திகழ்ந்திடு நீர்பெண்கள் சீர்கழகம்*

மெய்யா யிலங்கைக்கு வேண்டுமென் றெண்ணி விழைந்தெவருஞ்
செய்யாப் பெருநன்றி செய்தீர் பிரதியென் செய்குவமே.

எங்கள்நன் னாட்டுக் கெவரா யினுமுன் னியல்நலமுந்
துங்க மிகுந்தநுங் கல்லூரிக் கீடு சொலுந்தகைத்தோ
மங்கள யாழ்நகர் வைபத்தி லுள்ள வரையுமுமக்
கிங்கித மார்துதி யித்தேச விந்துக்க ளீகுவதே.

பெண்கள்நம் சாதி சமய மிரண்டினும் பின்னமிலா
தொண்கலை கற்க வுயர்ந்தகல் லூரி யுவந்தளித்தீர்
கண்கள் பரம னருளுங் கருணைக் கவினிகரப்
பெண்கள்கல் லூரிதந் தீரைய வெந்நன்றி பேசரிதே.

இலங்கைத் தமிழர் சிரமேநல் வாணி யெழிலம்சமே
நலங்கிளர் ருங்கௌ ரவராம நாத நரேந்திரனே
பலங்கிள ரிந்துநற் பெண்கள்கல் லூரி பரிந்தளித்திர்
பொலன்கொளச் சாலைக்கு நேரோ வளக புரிநகரே.

சித்திர மாண்பு திகழ்விஸ்வ கர்மன் செழுந்திறனோ
டித்தகை மாட்சி விரைவலங் கார மினிதறச்செய்
வித்தவன் சிற்ப வியனூ லநுபவ மிக்குடைய
வித்தகன் ஸ்ரீகந்த சாமியின் நாமம் விளங்குகவே.

பாட்டலங் காரஞ் சுவைகல்வி கற்றிடு பாவையரே
வீட்டலங் காரம் மதியலங் காரம் விசும்பினுக்கு
நீட்டலங் காரம் பயோததிக் கேயெழில் நீடுமியாழ்
நாட்டலங் காரஞ் சிறீராம நாதன் கலாநகரே.

தேசாபி மானஞ் சிவபக்தி ஞானந் திகழறிவு
நேசா தரவு நிறைராம நாத நிருபனெனும்
வாசால சிங்க வரோதய னேயிந்த வையகமுந்
தேசாரும் விண்ணுந் தெரிந்தீ கினுநன்றி தீர்க்கரிதே

இந்தநன் னாட்டுக் கியம்பற் கருநல மென்றுமுறத்
தந்தஸ்றீ மான்கௌ ரவராம நாதநம் தன்மமன்னா

புந்தி மகிழ்வு சுகநிதி யாயுள்ளசம் பூரணமாம்
எந்த வரமுஞ் சிவபெரு மானுமக் கீகுகவே.

## பதம்

**இராகம்: ஆரபி** **ஆதி தாளம்**

### பல்லவம்

நன்றி சொல்வோம் - சுப
நயக வுரவராம நாதத் துரையே நாங்கள்.

### அனுபல்லவம்

வெற்றியுடன் ஸி.எம்.ஜி வென்ற கெம்பீரா
வேந்தரின் கே.ஸி.ஆம் விருதணி வீரா நன்றி....

### சரணங்கள்

எங்கள் நன்னாடுயர் வெய்திமென் மேலும்
இருநிலை யுறப்பெண்கட் கெழிலொளி காலும்
துங்கநுங் கழகமாம் சுபவரம் போலும்
துணைபிறி தொன்றில்லைத் துதிசொல்வ மேலும் நன்றி....

நல்லுப காரியாய் நயந்தரு சீலா
நானில முழுதும் போற்றிடுங் கலைநூலா
வல்லுநர் யாரும் வணங்கநு கூலா
வாழ்கவென் றேத்தினம் மாமகி பாலா. நன்றி....


பூர்வ நம்மிந்திய பூவையர் மாட்சி
புகன்றிடுஞ் சரித்திரங்கள் புனித நற்சாட்சி
ஆர்வமுட னினியவ் வானந்தக் காட்சி
அருளநுங் கழகமே யரும்பெருஞ் சூட்சி நன்றி....

அருமறை புகல்சிவ அன்பின் ப்ரகாசா
அரிவையர் கழகமிங் கருளு நிவேசா
திருவள ரிலங்கையின் செழுந்தவ ராசா
செப்புவந் துதி அநு தினமெங் கணேசா நன்றி....

சுகபல நிதியாயுள் சுபவநு போகம்
தூய சுகானந்த சுகிர்தநல் யோகம்
அகமதிற் சிவமெனு மன்பின் ப்ரவாகம்
ஆகுக வுமக்கின்னு மாண்டிங் கனேகம். நன்றி....

## வாழி

திருநிறையுஞ் சைவநிதஞ் செழித்து வாழி
தேசுறுமா முகினிரைகள் சிறந்து வாழி
தெருணிறையும் பெண்கள்கல்வி திகழ்ந்து வாழி
சீரரச னைந்தாம்ஜோர்ச் தினமும் வாழி
பொருணிறையும் ஸ்ரீமானாம் ராமநாதன்
பொற்கழக மநுகூலம் பொலிந்து வாழி
அருணிறையுந் துரையவர்கள் சர்வ பாக்ய
மார்ந்திகமே னீடூழி வாழி வாழி.



# இராமநாத வள்ளல் நடேச மான்மியம்

மகாவித்துவான் வீரமணிஐயர்

**அவையடக்கம்**

செந்தமிழ்ப் புலமை சேரும்
    சுண்ணாபூர்க் குமாரசாமி
தந்திடும் மரபில் வந்த
    தையலே அதிபர் மாதே
பைந்தமிழ் ஆசிரி யீர்
    பாவையாம் மாணவிகளே
தந்தனன் வணக்கம் இந்தத்
    தமிழ்க் கவிபாடத்தானே

பாரதத்தில் பண்பாட்டில்
பெரிய சின்னம்
பண்புமிகு ஈழநாட்டில்
சேவை செய்த
சாரமிகு சித்தாந்தத்
தேன் பிலிற்றும்
சரித்திரப் புகழ் பெற்ற
நடேசன் சேவை
ஆரிவர்போல் புவியினிலே ஆற்றிவைத்த
அன்னாரின் புகழ் தன்னைப் பாடுவோமே
சீரெல்லாம் பெற்றே
அவர்தம் சேவை
செகத்தினிலே தமிழ்ப் பெண்மை
வாழி! வாழி!

தலைவாரிப் பூச்சூடி என்றும் தளிர்க்
கரத்தில் வளைகளொலி குலுங்கநல்ல
பலவண்ணப் பாவாடை சட்டை பண்பான
தாவணியும் பாவையர்கள் அணிந்து
திருநீறு நெற்றியிலே பூசி திலகமிட்டு
தமிழ்ப் பெண்மை காத்து
தலையாய கல்லூரிப் பண்பைத் தவறாது
நங்கையர்கள் காக்க வேணும் என்றார்

கல்லூரித் தமிழ்ப் பெண்மை காக்க
காசினியில் சேவை செய்த
கவின்லீலா வதியார்
பல்லூழி தமிழ்ப் பண்பு வாழப்
பரமேஸ்வரா என்றும்
பண்புடன் வாழி
வல்லானாம் இராமநாதப் பேர்
வள்ளலும் நடேசனின்
வளநாமம் வாழி
எல்லாம் அவன் செய்வதென்றே
எடுத்தோதும் பெரியாரின்
ஆசிகளும் வாழி வாழி

தெள்ளு தமிழீழ
தேசம் புகழ் பெரியான்

அள்ள தமிழ் நெஞ்சம்
அத்தனையும் போற்றிசெய்யும்
வள்ளல் இராமநாதன்
வாய்த்த நடேச பிள்ளை
உள்ளக் கவி பாட
ஓங்காரன் காப்பதாமே

கல்வியும் கலைகளும்
கவினுறு செந்தமிழ்
நல்வகைச் சைவமும்
நானிலம் போற்றிட
வல்லவன் பைந்தமிழ்
வள்ளலி ராமநாத
நல்லவன் புகழோடு
நடேசனைப் போற்றுவாம்

ஈழவள நாட்டில்
எத்தனையோ செந்தமிழின்
வேழங்கள் உதித்தனரே
வேழத்துள் வேங்கையென
சூழத்தமிழ்க் கல்வி
சுந்தரக் கலை வளர்த்த
ஆழத் தமிழ் மணக்கும்
அன்பனே ராமநாதன்
ராமநாத வள்ளலவன்
இலங்கையில் செய்தபணி
பூமிதனில் யாருமே
புரிந்திடாத பெருஞ் செயலே
பாவையருக்கொரு பள்ளி
பசுந்தமிழ்க்கலைக்கூடம்
ஆவல் மிகு மாணவர்க்கு
அமைத்தான் பரமேஸ்வரா



சிந்தனைக்கு அப்பாலே
செயலிருக்கும்
சீரிய எண்ணங்கள்
செயலிலாற்றும்
அந்தமிலா ஆற்றலும்
மிக்க அண்ணல்
அருங்கலை ராமநாத
அண்ணல் தோற்றம்
செந்தமிழ்ப் பண்பாடு
சிறந்திருக்கும்
சொல் செயல் மனமதுவும்
சைவம் காக்கும்
வந்த வரை வாழவைக்கும்
வண்மையோடு
வாய்குளிர மனம் குளிரச்
சொல்லினிக்கும்

மூச்செல்லாம் கலை கல்வி
உயர்ச்சியில் தான்
மூதறிஞன் ராமநாத
வள்ளல் சொல்லும்
பேச்செல்லாம் தமிழ்ப் பண்பு
பாண்பாட்டில் தான்
பெருங்குணமும் பேரறிவும்
பெரிதுமுள்ளான்
வீச்செல்லாம் வியன்தமிழின்
வளர்ச்சியில் தான்
விளங்குதிரு ராமநாத
வள்ளல் செய்த
நீச்சலெலாம் தமிழ் சைவம்
நீடு கல்வி

நிலத்தினிலே கலைகளையே
வாழ்விக்கத்தான்

எத்தனை எத்தனை சாதனை செய்தான்
எங்களி ராம நாதன்
அத்தனையும் செய்த அரும்பெரும்
வள்ளல்
ஆரெவர் பாரிலே உளரோ
சித்தம் தன்னிலே செந்தமிழ்ப் பண்பு
சீரிய சைவம் காக்க
இத்தரை மீது இராமநாதன் போல்
இனியெவர் மண்ணிலே
பிறப்பார்சைவம் தழைக்க
சாதனை புரிந்து
சரித்திரம் படைத்திட்ட தீரன்
வையகமீதில் ராமநாத
வள்ளல் போல்
இங்கு யார் உண்டு
தையலாளர் பயிலக்
கல்விக் கூடம்
தரணியில் இனிதே அமைத்தார்
அய்யனின் சேவை அவனியில் எவரும்
ஆற்றிட முடியுமோ சொல்வீர்

செம்பாதக் குமிழ்மிதி வடியும் தோன்றும்
செக்கச் செவேலெனசே வடிகள் தோன்றும்
நம்பாரதப்பண்பின் பின் பஞ்சகச்சம்
நளின வெண்மெனமைத் துயிலும் தோன்றும்
வெண்பாலின் நிற வெள்ளை அங்கி தோன்றும்
விளங்கிடு பொன்பொத்தான் மிளிர்ந்து தோன்றும்
பாண்பான வெண்தலைப்பா இலங்கித் தோன்றும்
பண்புதவழ் செந்தமிழ் நடேசனுக்கே.

அறிவு செறி அமைதிதவழ் சாந்தம் தோன்றும்
அழகுபொலி வதனத்தில் ஒளியும் தோன்றும்
பெரியவனாம் நடேசபிள்ளை பொலிவு தோன்றும்
பேசரிய பேரன்பின் இதயம்தோன்றும்
அரிய தமிழ்ப்பண்பாட்டின் சிகரம் தோன்றும்
ஆனந்தப்புன்முறுவல் இதழில் தோன்றும்
உரிய தமிழ்ப்பண்பான மிடுக்குத் தோன்றும்
உயர்ந்த தமிழ்ப் பண்பாளன்
நடேசனுக்கே

எண்ணரிய தமிழ் நூல்கள்
ஆராய்ந்து ஆங்கே
எழுதிய பல நூலின் குவியல் தோன்றும்
மண்ணதனில் சாந்தமொடு
மாண்பு போற்றும்
மகிமை பெறுதன்னடக்கம்
மிளிர்ந்து தோன்றும்
எண்ணமெலாம் இனிக்குமொழி
தமிழில் தோன்றும்
ஏடெல்லாம் கலை கல்வி
எழுத்தில் தோன்றும்
கண்ணெனவே தமிழ் காத்த
பரம்பரையான
கவீந்தமிழன் கல்விமானாம்
நடேசனுக்கே

இத்தரை மீதினில் இன்தமிழ் வாழ்ந்திட
இரவு பகலாக
இயற்தமிழ் இசைத்தமிழ்
இனித்திடும் நாடக
இனிய தமிழ் எழுதி
சுத்தமாய் இலக்கணச்

சொற்பொழிவாற்றிய
சைவ நற்சித்தாந்த
சாகரமாய்மிளிர் சரித்திரம் படைத்த
செந்தமிழ்ப்புலவோனாம்
நித்தமும் விபூதி அநுட்டான -நெறிகளில்
விளங்கிடு சைவப் பழம்
அத்தனாம் நடேச பிள்ளையெனும் அந்த
உத்தமன் பேர் வாழி.

வள்ளலாம் இராமநாதன்
வாரிசென வாய்த்திதொரு
உள்ளத் தூய்மை நிறை
உயர்ந்த நடேச பிள்ளை
எள்ளத்தனையேனும்
இன்னலில்லா நெஞ்சகத்தான்
அள்ளக்குறைந்திடாத
அன்பனவன் பேர் வாழி

பெண்கல்வி உயர்வு பெற
பேராசிரியர் அவன்
கண்ணெனவே இராமநாதன்
கல்லூரி காத்திட்டான்
மண்ணதனில் நடேசப்பிள்ளை
மாண்புதனைப் போற்றுகையில்
கண்ணீர் வருகுதடி
கவின்தமிழனை நினைத்தால்

அரசியலில் சேவை செய்தான்
ஆசானாய்த் தானிருந்தான்
பரம சிவன் பாதத்தை
பக்தியுடன் நேசித்தான்
கரம் மலரிலெழுத்தாணி
கவின் தமிழின் மலர் பிலிற்றும்
மதுரரஸத் தமிழ்த்தேனை
மாந்தியே மயங்கிடுவார்.

சரித்திரம் படைத்திட்ட
சகுந்தலை வெண்பாவும்
விரித்திடும் சித்தாந்த
வியன்நூல்கள் விரிந்துரைத்து
சிரித்திடும் வாக்கியங்கள்
சிந்தனை சொல்லாட்சி
உரித்தான செந்தமிழ் நடையும்
உயர்ந்தவன் தான் நடேசபிள்ளை
கல்லூரிப் பாட்டிலே
கவின் தமிழ் கன்னியர்கள்
நல்லூழி காலமாக நற்றமிழைப் பேணிடவே
வல்லான் வழிவகுத்தான்
வண்டமிழ்ப் பெண்மையினை
நல்லாள் பாட்டினிலே
நயம் பெறத்தந்து விட்டான்
செந்தமிழின் பெண்மையினை
சிறப்புற பாடிவைத்தான்
பைந்தமிழின் பாவையர்கள்
பந்தாடல் பார்த்து நின்றான்
நற்றமிழ் நங்கையரின்
நல்லுடைகள் நெற்றியிலே
தந்திடும் திருநீற்றின்
தகைமைதனைப் பாடி வைத்தான்.

வெண்ணிலவில் பூவையர்கள்
விளங்கிடு பூம்பந்தாடல்
கண்ணில் இனிக்கும் வண்ணம்
காட்டிவிட்டான் கவின்தமிழில்
வண்ணநூல் நற்று மானம்

வாழ்வினிலே காக்கும் மார்க்கம்
நண்ணிய பாட்டில் காட்டி
நடேசனே வியந்துநின்றான்

நல்லவன் புகழும் வாழி
நடேசனின் நாமம் வாழி
வல்லவன் இராமநாத
வள்ளலின் புகழும் வாழி
கல்வியும் வாழி வாழி
கலைகளும் வாழி வாழி
கல்லூரி அதிபரோடு
கவினாசிரியர் வாழி.

ஆங்கிலேய சைவ வித்தகி
நவரத்ன மணிமாலை
தன்னை என்றும்
நங்கையரும் அணிந்திடவே
செய்த மேதை
ஆவலுடன் அன்பினொடு
அறிவு ஆற்றல்
அடக்கமொடு பக்திமிளிர்
சைவம் பேணி
சேவையொடு பதி பக்தி
தேசபக்தி
செந்தமிழ்பண்பாடு மிக்க நாணம்
பாவையருக் கிருக்க வேண்டும்
என்ற பண்பை
பக்குவமாய் நவரத்ன
மாலை ஓதும்

இராமநாதன் இல்லறமோ
இனிது ஆங்கே
பூமலராம் மாண்பெண்
லீலா என்னும்
பூவையினால் இராமநாதன்
புரிந்து செய்த
சேவை தனைப் பேருலகம்
வியந்தே நிற்கும்
மேலை நாட்டுப் பெண்ணெனிலும்
லீலா என்றும்
சேலையுடைத் தரித்தே செந்
தமிழின் பண்பு
காலை யொடு மாலைவரை
கணவன் சேவை
வேளை தவறாமல் செய்த
விந்தை என்னே!

# பேருரையியல்

## பரிசளிப்பு விழா



2010



2012




2013

நினைவுப் பேருரை வழங்கிய பழைய மாணவிகள் சிலர்













# SIR P. RAMANATHAN'S SELECT SPEECHES IN COUNCIL - EXCERPTS

**Compiled by Mrs. S. K. Sundaresan**

*on the importance of having select English books on Ethics and science translated into the Vernaculars of the Island.*

on the third of December, 1879, the Hon Mr. J. P. Obeyesekera, the Sinhalese Representative/ drew the attention of the Government to the necessity there was for providing the vernacular schools of the island with a suitable series of Sinhalese books, and asked whether, if any. and if so, what steps had been taken to meet that Want in consequence of the report, dated the 2nd February, 1871, made by the committee on the subject of vernacular Education, to the government.

In seconding this motion Mr. Ramanathan Said :-

The Hon. the Sinhalese member has pointed out that the subject of providing vernacular schools with Sinhalese book has not received that attention from the government which it called for, and has pathetically appealed to his excellency not to allow the literature of his race to die out. I certainly think that Sinhalese schools should be furnished with a proper set of elementary books, but that alone is not sufficient. for what is the Sinhalese youth to do after he has read the reading books of standards 1, 2, 3 and 4 ? At present the great ambition of the Sinhalese youth. who has picked up a smattering of English in the Anglo - vernacular schools is to assume the external phases of western civilization only, without caring to aspire to those really sound elements of it which make that civilization valuable. when the Sinhalese youth comes to know a little English, his mind becomes unsettled. he discards the plough. the Honourable and useful calling of his ancestors, idles away his time or becomes a petition - drawer or clerk on a miserable pittance. This is not as it should be...

What the Sinhalese and Tamil youth lack most is character. it is the duty of the government to develop it. the youth of the country ought to be made to think on sound lines, without prejudice. wayward inclination or caprice. I know of no book that can effect this object better than smiles "Self - help" the like of which does not exist in Tamil or Sinhalese prose.,

***Speech on the proposed revised code of education for 1881, and the grant-in-aid-system.***

Mr. Ramanathan said :

...I have always taken a deep interest in the cause of education... The Pansala education of the Sinhalese districts was a copy of the Pathasala system indigenous to India with which we have been made familiar by sir George Campbell. In the Tamil districts there was a corresponding Institution in the school of the Hereditary village teacher. The education imparted in these institutions was by no means high or liberal. it was elementary and adapted to the necessities of village life...

The Sinhalese and Tamil peoples of this country always set store by education of this kind it is mentioned of king Vijayabahu III, who reigned in 1240, that he established a school **in every village** and charged the priests who superintended them to take nothing from the pupils, promising that he would himself reward them for their trouble, such was the policy of Englightened Sinhalese sovereigns, the policy of bringing free education to the very doors to the people the Dutch pursued the same policy.

*On the Religious Intolerance of certain Christian Missionary managers grant-in-aid schools in the Northern Pprovince of Ceylon.* (11th February 1884)

Mr. Ramanathan said :

I rise, sir. to call the attention of this council to the memorial I had the honour to present a fortnight ago from certain hindu inhabitants of the jaffna peninula, complaining of religious intolerance on the part of certain christain missionary managers of grant in-aid schools.

The specific nature of the grievances complained of appears in the memorial itself and that is that children who are obliged to go to these missionary schools are forced by the

missionaries, under pain of fines and expulsion, to read bible whether they liked it or not which in my estimation is an excellent book, and to rub off those sectarian marks of devotion to religion which hindus are enjoyed by their ancient spiritual teachers to put on their forehead. It is needle now to go into the reasons of these practices. They are matters of faith, about the validity of which this council will not enquire judge.

I desire to approach the subject of the complaints made in the memorial with a due Sense of the great work done by the missionaries on the field of general education. I am not at all antagonistic to their labours amongst us. I have always Endeavoured to be tolerant in the widest sense of the word in matters of religious faith and religious enthusiasm. My opinions are well-known to all communities, and Christian missionaries have always courted my help in the solution of educational questions.

In the year 1880 their leaders came to me in a body and asked me to present their grievances to this council, and I gladly did my best for them. I have no fear of being misunderstood. your excellency's words that it is your intention to maintain perfect neutrality between the different creeds in Ceylon, have been recently quoted with approval by his lordship the bishop of Colombo.

I beg in the first place to call your attention to the fact that there are no government schools, either English or Anglo- vernacular, in the northern Province of Ceylon, and that English education is imparted almost exclusively by the different Christian missionary bodies who have located themselves there. It appears that religious intolerance on the part of some of the managers has varied with varying times and circumstances and that it has been steadily growing ever since the champion reformer of Hindus in the northern province died in 1879.

H. E The Governor : who did you say?

Mr. Ramanathan :

The Hindu reformer named Arumuga navalar. Hindu boys who, for want of their own English schools, resort to the missionary schools. Have learnt to make mental reservations and are getting skilled in the art of dodging. the holy ashes put on at home during worship are carefully rubbed off as aproach the

Christian school and they affect the methods of Christian boys while at school, I know of as they many cases in which even baptized boys and teachers, when they cease to be connected with such schools, appear in their true Colors, with broad stripes of consecrated ashes and rosaries, to the great merriment of the people and the deep chagrin of the missionaries there is a great. deal too much of hypocrisy in Jaffna in the matter of religion, owing to the fact that the love of the missionaries for proselytes is as boundless as the love of the jaffnese to obtain some knowledge of english at any cost. I cannot help thinking, sir that the policy pursued by some of the christian managers of great-in-aid schools is a ruinous mistake. It stands condemned by the Roman catholic bishop, the Right Rev. Bonjean, who has had several years of experience in the Northern province.

If the government are unwilling to have a conscience clause, though I cannot conceive for what reason they should be unwilling. they should at all events give the inhabitants of the northern province the same advantages which are given to the inhabitants of other provinces. In the western province there are 26 English and anglo-vernacular government schools ; in the central province there are 11 ; in the southern province 10 ; but there are no such schools in the nothern province I feel, sir, that I have only to state my case to enlist the sympathy of hon. members around this table, and i will not dwell any longer upon the subject.

*He (Ramanathan) taught us that man does not live by bread alone that man's life upon this planet find's its true meaning and fulfilment not in self-love but in self-denial and service...*
*-M. Vythilingam,.*

*"When the great men of ceylon were vying with one another to secure gubernatorial smiles, Ramanathan's 11 unders were directed against gubernatorial miseeds. the high water-mark of his services to ceylon was the heroic role he played in connection with the riots of 1915."*
*-Handy Perinbanayagam.*

# THE FIRST PRIZE GIVING REPORT 1915

*[We feel honoured to reproduce the speech made by his excellency the governor of Ceylon SRI ROBERT CHALMERS and the vote of thanks rendered by sir ponnambalam Ramanathan at the first prize-giving function of Ramanathan college, held on 2nd march 1915 in the college hall - Editor]*

His Excellency the governor, having distributed the foregoing prizes, rose amid cheers and said :

**Ladies and gentle men,**

When I first arrived in this colony on the 18th October, 1913. I remember well that in the legislative council chamber an address was read to me in silvery tones. an address of welcome coupled with admonitions and that address was read by the founder of this college, Mr. Ramanathan. Since that first public meeting of Ramanathan, I have had various opportunities of long conversations with Mr. Ramanathan, as with kanagasabai and every other member of the legislative council, not exclusively on public affairs in the ordinary sense, but also in the way of interchange of views on all things that they and I and other members of the council take interest in. Restricting myself for the moment to one of the things Mr. Ramanathan is always most anxious to talk about education. Now. I happen to take a lively interest in education. More particularly in its higher aspects and conversations that i have had with Mr. Ramanathan made me seek for an opportunity to come up to Jaffa, and take the opportunity of returning the compiment that he paid to me on the 18th October, 1913 by visiting the college in which he is so much interested. and by administering an address to him in return. but let not Mr. Ramanathan be alarmed, as i was (in the strictest confidense I say it),when I arriver in the colony and had to face music on quite unknown instruments(laughter).

As I say Mr.Ramanathan has frequently told me of his general views on education and of the peculiar interest which he takes interest which he takes in this particular application of the principals he holds dear. I am always interested - deeplyintereste in tha serions efforts of any man who has at heart the carrying out of any work which appeals to his heart. Be he whpo he may be, - be his work cast on these lines, or on those. If you come to think of it, what you have to do first of all in approaching the work of anyone. is to try and understand what that man or woman really means. what is this aim? What are the principals which guide them? first put yourself in their place; put yourself under their conditions; observe, and then see what you think. That is the beginning of wisdom in all these matters. It is appreciation and not depreciation. (Applause)

Well, what does Mr. Ramanathan aim at, at this particular moment, in the ideas and principals that he adheares to? first and foremost, you will realise on entering the corridors, that this is a school for girls; that is the simple primary fact that you observe I dare say, if you cross- examined Mr.Ramanathan as in other days. he cross examined others at the bar, we should elicit from him that he had other views beyond, and extensions of his views, but as a very practical man, Mr. Ramanathan engaged on one thing at a time, and it's a girls school which is opened now.I am acquainted as many of you are, with some tamil proverbs on the subject of the education of woman. Those proverbs are not favorabvle to the higher education of the woman. Nevertheless, I think if I were asked what, on the hole, in the intellectual and moral sphere has been the greatest gain that has come to the east from the west- it would be just this realm; that of the recognition of the need for higher education for woman it is not the eastern idea of woman it is not the natural and immediate product of eastern thought, life and criticism. the east has always had. It's own traditions; it has large ideals of culture and education for man. but the enlarged civilization which I suggest the west has added so much, the civilization which is awaiting us , is at your doors today , and will be brought still nearer to morrow; that civilization , I say, requires the educations of women no less than of men. (Applause)

I remember hearing in a different context a very homely illustrations of the need for the joint progress of both sexes, and that very simple and homely illustration came

from a carriage with two pairs of wheels the little ones running round fast and the big ones more slowly, and yet because of their joint action the whole carriage runs at one uniform pace. so it should be with education. you cannot neglect in the education of women the essentials of the educational life and conditions and ideals of the men of whom they are the natural partners in life. (Applause) I may be expressing Mr. Ramanathan's view in this.

There is another aspect which I do not hesitate to touch upon in this connection. I should say that Mr. Ramanathan's work is associated primarily with the education of women. There is a special feature of it. further that observation and that appreciation, which I suggest to you is desirable, must recognize and see. This is a Hindu college it is an institution which, while seeking to instruct, as far as may be, in the ideals, the methods and the examples of the west, yet bases itself essentially on the development and on the fulfilment of what is national to the people who come the college.

I am quite certain and say very frankly and clearly, no people which ignores its own past and which does not seek to realise itself can hope to have any future at all. (**hear, hear**) but it should not stand on the lines of the past only; it should grow from the roots of its past and still be itself, though its growth will be enhanced and enriched by absorbing into self what it sees and feels to be the best from elsewhere.

We hope, as everyone hopes, to see education in Ceylon advanced towards still higher ideals, and so to give the freest scope for the healthy and organic development of the best of which each individual is Capable in self realization. (Loud applause)

Mr. P. Ramanathan said :

Ladies and Gentlemen, I see by the clock that we have about four more minutes to conclude the hour which his excellency has marked out for us, and my pleasant duty now is to propose to you to accord a vote of heart - felt thanks to his excellency for so graciously Coming to this college and spending sixty long minutes amongst us, the pregnant speech which he has delivered really deprives me of the power of speaking freely. My heart is so full and so deeply appreciative of the *observations made by him, that I do not*

think that I ought to add any words on this occasion, and so divert your attention from his words.

We who are very near him have the privilege of knowing him quite well, not only from the speeches that he has delivered on public platforms, but also from conversations and observations of his doings. permit me to relate an incident which occured not many months ago on the road from Colombo to mount Lavinia. It brought home to us all, at the time, the spirit of self. effacement and broad sympathy which adorns his Excellency. one day when he and lady chalmers were driving near mount Lavinia, They witnessed a marriage procession; they got down from their motor car, went up to the bride and bridegroom, who were sinhaleese villagers, and offered their congratulations to the happy couple who wondered who they were. (Applause) incidents like this go deep into the hearts of every one. we know him to be most unassuming and kind - hearted. and to be ever ready to uplift the people. time is flying I beg that you will accord to his excellency your best thanks by standing up in a body and tendering them to him with acclaim (Loud applause, the whole audience standing up)

Then his excellency the Governor replied..

Mr. Ramanathan, ladies and gentleman, I am very much obliged to you for the very kind reception given to me. I am greatful to the founder and the president of this college for giving me the opportunity to see this beautiful college. what a striking picture it was to go along the corridor and see the girls moving in their pretty attire, and to hear the exquisite music - one of the prettiest scenes that I have ever seen ! (Applause)

"Politics or the art of good government of the people is one of the noblest of human arts and an instrument of self - culture into the bar gain"
- Sir P. Ramanathan.

"If the country is really in peril we should all vote for Ramanathan"
- Sir Jemes Peris

பரிசளிப்பு விழா



1980



1999



2003

பரிசளிப்பு விழா



1992



1993




1998

# FOUNDER'S MEMORIAL ADDRESS AT RAMANATHAN COLLEGE 6TH DECEMBER - 1978

**By Mr. Justic A. Vythiyalingam**

*Mrs. Arunasalam/ Distinguished Guests, Member of the staff and students of Ramanathan College, Ladies and gentlemen,*

On behalf of my wife and myself I wish to express our deep gratitude to you for the great honour you have done us in inviting me to deliver the founder's memorial address. when i received your invitation I thought it was a mistake and that you had confused me for that patient, painstaking and erudite scholar Mr. Vythilingam who had written the monumental biography in two volumes, of your great and illustrious founder the late revered sir ponnampalam Ramanathan,

It was only when I receive a letter from Mr. R. N. Sivapiragasam that I discovered that the real reason for your invitation was, not on account of any achievements of my own, but because my wife happens to be an old girl of your institution. I am aware that having established this college for the education of young Hindu girls, your founder went on to establish Parameshwara college for the education of Hindu boys so that your old girls might find suitable husbands similarly nurtured in Hindu religions, culture and traditions. I do not know if my wife is disappointed that she did not marry an old boy of parameswara college, but I can assure you that for my part, I am proud and happy that I married an old girl of Ramanathan College.

Long before the time of U. N. Sponsored Children's day and The present day homage to youth, sir ponnampalam ramanathan used to say that the boys and girls of a country are its greatest national asset and that national regeneration and Could be achieved only through the regeneration and rehabilitation of youth. It is fitting therefore that on an occasion like this we should remember the life and work of this pre-eminent and transcendental personality so that it may serve as a model for emulation and a source of inspiration to the youth of today.

His was a varied and many splintered genius and he was as sound an authority on philosophy, religion, literature, education and the arts as he

was pre-eminent in the law. There are few instances in history in which a man has touched life at so many points with so much distinction and has left them all adorned and enriched by his contact. when we look back on his career and achievements we are truly amazed at his versatility. little wonder that the first prime minister of free Ceylon, the late Rt. Hon. D. S. Senanayake called him the greatest Ceylonese not merely of his time and age but of all time. Nor was his name and fame confined to this country only. India acclaimed him as the finest exponent of Saiva Sithantham and one well versed in the Vedic lore. England received him as an Parliamentarian patriot and statesman. America welcomed him as a religious teacher, sage and philosopher. in Malaya he was received, where ever he went, with admiration and respect.

Thus did fate conspire to make him take to the law - a career in which he was to atta in such spectacular successes and was to prepare him for the role he was to play in later life. on his return from madras his uncle persuaded sir Richard Morgan one of the ablest of our Attorney Generals to take on sir ponnampalam ramanathan as apprentice student at law.

To this advantage of an excellent training sir ponnampalam Ramanathan added his own qualities of a commanding personality, a striking voice, a lucidity of Exposition, a prodigious memory and an impressive command of the English language as an advocate he was eloquent and persuasive and he was always calm. cool and collected and nothing ever seemed to ruffle him. In cross - examination he affected an air of gentleness, which was extremely deceptive with his witnesses and wormed things out of them which harsher methods might have failed to do, by putting the witness on his guard. he had a remarkable way in re - examination of undoing all that a cross - examiner had gained for his case and put his evidence in a very different light.

They say that a genius is 90 percent perspiration and ten percent inspiration and so it was with sir ponnampalam Ramanathan. He brought to the practice of the profession, as in all the other spheres of his activities, an immense capacity for hard work and for long hours of sustained effort, he would pour over his briefs from cover to cover, search for precedents and look up the law with a theroughness and the closets attention to the minutest detail until he complete mastery over the facts and law. add to this a dauntless courage and a tenacity of purpose and you have an unbeatable combination for success and success in the profession did come to him very early in his career.
Ramanathan's bed was not one of roses all the way. He had many disappointments in life but he took all of them with his usual stoicism. one such disappointment came to him in 1902 When on the retirement of sir john Bonsor, the attorney - General, Mr. Charles Layard was appointed as the Chief justice. having filled the post of solicitor - General for ten years with such distinction and success Ramanathan should have been appointed to succeeded Mr. Layard. But it was not to

be and Mr. J. H. Templar senior crown council, who was very much junior to Ramanathan was appointed attorney - General. It was little consolation to him that in1903 he was appointed as one of his majesty's council, learned in the law, the first Tamil to be so honored. It would appear that the avenue of elevation to the spreme Court bench would also not be poen to him and in 1905 he retired prematurely from the post of solicitor - General.

Within three years of his entering the legal profession Ramanathan had labored among the worm - eaten, decayed and discolored, with the ink all but bleached, records in the dusty record rooms of the supreme court and had, unaided, selected and copied the more important judgements. on one occasion when he appeared as the junior to the queen's advocate sir Richard Cayley, in appeal, Ramanathan was able to give him some valuable reference to cases which had been decided earlier, to support his arguments. Sir Richard was much impressed by the manuscripts in which thes judgements had been kept and recommended to the government that they should be published under government patronage. Thus was published the reports of cases known as the Ramanathan Reports (1820-33, 1843-55, 1860-62, 1863-68. 1872-1875 and 1876) They are held in great esteem even today by judges and lawyers and as recently as a month ago of the judgements reported in his reports.

At the instance of the chief justice Sir john phear Ramanathan there after edited a semi government report known as the supreme court circular until 1879. when the Government started publishing its own reports of cases Ramanathan became the edited the first eight volumes of the new law reports.

In the practice of his profession he always maintained the highest traditions of the bar and set himself lofty standards of rectitude and integrity which was a source of inspiration to the junior members of the Bar whom he always befriended and helped as a recognition of his pre-eminence at the bar and the high esteem in which he was held by the judiciary and the bar the inner temple conferred on him one of its rarest honours, which only two or three others could boast of ,by admitting him as a barrister honoris causa.

He believed in the independence of the judiciary and defended it fiercely and with all the eloquence at his command. In 1912 two of the trustees of the maha devala and the kataragama devale were dismissed by the district committee administrating the Buddhist temporalities ordinance. The trustees filed action in the district court of kandy and the government brought in legislation to amend the Buddhist temporalities ordinance which would have made it impossible for the plaintiffs to proceed with their action, for according to the government it was a mischievous and useless litigation and an abuse of the process of court.

He got the unofficial to act together and very soon, young as he was the other unofficial members followed his lead and stood solidly behind him He

extracted from the British government the promise that it would respect the wishes of the unofficial members if they were unanimous in preference to the views of the official majority. The first phase of his activities as a legislator ended in1892 when he accepted the post of solicitor general though he came back to it for three short spells when he took his seat in the executive council as acting attorney general. By that time however he had attained the eminence of being the senior un official member.

It was the time of the riots of 1915. Beginning as a purely parochial and insignificant incident in kandy it took the familiar turn that such incidents now take Rumor mongers stepped in and spread the rumour that the dalada maligawa had been sacked. Hooligans and toughs of every area took advantage of the situation. there was murder arson and looking all over the country. Fighting for dear life against the German hordes in the first world war the British officials panicked and saw in this purely communal affair an organized attempt to overthrow their government. Martial law was declared and hundreds of innocent persons particularly among the wealthy and powerful singhalese were arrested, court marttalled and thrown into prisons. Many paid the supreme penalty.

Ramanathan threw himself with a frenzy to put a stop to the mischief. He went here, there, and everywhere, pleading for the return to reason, and sanity allaying fears and stopping the damage. In the council he rose to great hights and pleased with sustained eloquence and compelling reason for the end of martial law, the release of the prisoners, the reduction of community fines which had been imposed by special commissioners quite arbitraily and for the punishment of the quitly officials. He made six impassioned speeches in the council which he published in a book, which is unfortunately now rare, under the title of "Riots and the martial law in Ceylon." He braved the seas which were ridden with enemy action submarines to Proceed to England and acquaint the British public and parliament of the true position. His campaign was successful and he was received by a grateful nation as no other national hero was acclaimed either before or after.

He fought hard and long to see that the railway was extended to jaffna. officials saw this as a useless project to take the railway through the arid and waste lands of the north central and northern Provence and were unanimous in their opinion that it would not pay its way. Ramanathan persisted with dougged perseverance and ultimately succeeded in getting this great boon for the people of jaffna. what was thought to be a non profitable extension. the line to the moon as some called it, is today the most profitable as also the most neglected of all the lines in the entire railway.

In an impassioned speech at the prize day at ananda college in 1904 he exclaimed " If sinhalese lips will not speak the sinhalese language who else is there to speak it ! He exhorted the audience that it was their "duty to cultivate the study of the sinhalese language on all occasions were english has no buisness." beliving firmly in the

immence superiority of the religious and spiritual values of hindu and buddhist tradions and culture over the materialism of the west, he fought incessantly in and outside council for the increasing establishment of more and schools in the national languages.

His knowledge of christianity was acclaimed in America and England where he went on lecture tours. he wrote a commentary of st. john mathew and st. john and his book on western pictures for estern students is an account of his american lecture tour. He knew the teaching of islam and made a close study of the life and works of buddha. but his crowing achievement and his priceless gift to the hindus of srilanka is the ponnampala vhaneshvarar temple in colombo. built out of pure granite stone by expert architects and temple workmen from india on agamic principles, it is one of the noblest examples of hindu architecture and sculpture.

Sir ponnampalam Ramanathan was fortunate in his wife, the devoted and gracious lady ramanathan highly talented, of great culture and refinement. She took a passionate interest in the Hindu religion, culture , traditions to familierise herself with the people and the country she visited the home of every student of ramanathan college in-order to study their home life background and conditions of work. many years ago when I was a little boy six years old, I remember her comming to our house in the remote village of karukamapanai as my elder sister was then a student of ramanathan college. on the 30-11-1930 his immoratal souldeparted his mortal remains, which were interned in the samadhi in your institution.

I am happy to have had of this opportunity of paying my humble tribute to this national reputation for his memory is well worth cherishing, well worth handing down to our children and our children;s children as precious heir - loom.

**Jaffna Railway**

"It is not a wild scheme ; it is a very practicable scheme. It is a scheme that will do the greatest good to ceylon... I shall never case to agitate until the railway to jaffna is an accomplished fact."

**-Ramanathan.**

"If sinhalese lips will not speak the sinhalese Language who else is there to speak it..? How is a nation to be lifted out of error reformed and advanced into plains of higher knowledge except by its own language?"

**-Sir. pon. Ramanathan.**

"If public servants appeal to the legislative council on a question of pay or promotion any grievance, I do not think they could be considered to be quality of a breach of discipline."

**-Ramanathan.**



# யா/இராமநாதன் கல்லூரி நிறுவுநர் நினைவுரை 1994

ஆர். எஸ். நடராசா,
M.A., Dip - in - Ed, S.L.E.A.S.
அதிபர்
பலாலி ஆசிரிய கலாசாலை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

ஈழத்தில் முதல் சைவப் பெண்கள் கல்லூரியை நிறுவிப் பெண்கள் உயர்கல்வி வரலாற்றுக்குப் புதிய பரிமாணம் தந்த நிறுவுனரை நினைவு கூர்ந்து அவர் வழங்கிய செழுங்கலைச் செல்வ வாய்ப்புக்களைச் செவ்வனே பயன்படுத்தி தமிழ்ச் சமூகத்தை மேம்படுத்தும் முனைப்போடு இன்று இங்கு நாம் கூடியுள்ளோம்.

ஒரு சமூகத்தின் பண்பாட்டுச் செல்வங்கள் சந்ததிதோறும் விளக்கம் பெற்று உணரப்பட்டு அவற்றின் உச்சப்பயன் பெறச் செய்யும் வாய்ப்புக்கள் திட்டமிட்டு வழங்கப் படவேண்டும்.

நமது வாழ்வுச் சூழல் சதா மாறிக் கொண்டிருப்பதனைக் கருத்திற் கொண்டு காலத்துக்குப் பொருத்தமான உத்திகளைப் பயன்படுத்தி நமது முன்னோர் அரும்பாடு பட்டுச் சேர்த்து வைத்த பண்பாட்டுச் செல்வங்களை உணர்ந்து சிறப்பாகப் பயன்படுத்தி மக்கள் முன்னேற உதவ வேண்டியது கற்றறிந்த சான்றோர் கடனாகும். எம்முன்னோர் மக்கள் முன்னேற்றத்தை இலக்காகக் கொண்டு ஆற்றிய வரலாற்று முக்கியத்துவம் மிக்க பணிகள் எமது வாழ்வுக்கு ஆக்கமும் ஊக்கமும் தருவனவாகும். தொடரும் பரம்பரைகள் தொல்லைப்படாது அறிவொளியின் துணைக் கொண்டு வையத்துள் வாழ்வாங்கு வாழக் கல்விச் சாலைகள் வழங்கிய வள்ளல் சேர். பொன்னம்பலம் இராமநாதனை நினைவு கூர்ந்து அவரது மாசற்ற கல்விப் பணிகளைப் பயன்படுத்திப் பலரும் முன்னேற்றம் காண முயற்சிக்க வேண்டும் என்பதால் அவசியமான சில கருத்துக்களைச் சமர்ப்பிக்க விழைகின்றேன்.

நடுவூருள் நற்கனி மரம்போல் பல்கலை பயிற்றிப் பணியாற்றும் இராமநாதன் கல்லூரியை நிறுவிய வள்ளல் சேர். பொன்னம்பலம் இராமநாதனின் கல்விச் சிந்தனையும் அவரின் எதிர்பார்ப்புக்களும் என்ன என்பதை ஆராய்வதும் அவர் கல்வி நோக்கத்தை நிறைவுறுத்தும் முயற்சியில் மக்கள் ஈடுபடல் நமது சமூகத்துக்குப் பெரும் பயன்தரும் என்பதனைப் பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள்.

"இலங்கையின் தவப்புதல்வர்களில் ஒருவர் சேர் பொன்னம்பலம் இராமநாதன் என்பதில் எவர்க்கும் கருத்து வேறுபாடு இல்லை..... இவ்வுலகில்

தம்புகழ் நிறுவிச் சென்ற பெருமக்களுள் ஒருவர் என்பதை ஊரும் உலகமும் ஒப்புக்கொண்டுள்ளன."[1]

எனப் பாராட்டினார்

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர்.

"தமிழ் மக்களின் மானத்துக்கு ஈனம் நேரும் பொழுது உயிரினும் மானம் சிறந்ததெனக் கொண்ட பழந்தமிழ் மக்களின் வழித்தோன்றலாகிய இராமநாதன் என்னும் வீரபுருஷர் இல்லையே எனயாம் வாட்ட மடைகின்றோம்."[2]

என சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் அருமையை எண்ணி ஏங்கினார் சிங்கள மக்களின் தலைவரான சேர் ஜெறாட் விஜயக்கோன்.

"சிங்கள மக்களை இவர் (இராமநாதன்) பாதுகாத்ததுபோல் அவர்களது சொந்தச் சாதியார் கூட பாதுகாத்திருக்க மாட்டார்கள்"[3]

எனப் பாராட்டினார்.

சென்னைப் பல்கலைக் கழகத்துத் துணை வேந்தராயிருந்த பேராசிரியர் சிட்டி பாபு

"சேர் பொன்னம்பலம் இராமநாதன் ஓர் உலகமேதை அவரது ஞாபகம் மென்மேலும் துலங்கச் செய்யும் ஆக்கங்கள் இடம்பெறுவது மனித முன்னேற்றத்துக்கு என்றும் உதவும்"

என மதிப்பீடு செய்தார். இன்னும் பற்பல ஆன்றவிந்தடங்கிய கல்விச் சான்றோரால் நம்பெரும் மதிப்புக்குரிய பெருமகனாகக் கொள்ளப்பட்டவரே இக் கல்லூரியின் நிறுவுநர்.

நல்லை நகர் நாவலர் பெருமானால் 28 வயது இளைஞராக இருந்த பொழுது தெரிவு செய்யப்பட்டுச் சட்ட நிரூபண சபைக்குத் தமிழர் பிரதிநிதி ஆக்கப்பட்டதிலிருந்து ஐம்பது ஆண்டுகள் நாவலரின் வாரிசாய் ஒப்பற்ற தேசியத் தலைவராய் அரும்பணி ஆற்றிய சேர் பொன்னம்பலம் இராமநாதனின் கல்விப் பணிக்கு நிலையான நினைவாலயமாய் நிலைத்து நிற்பது அவர் அமைத்த இராமநாதன் கல்லூரியே.

1851ஆம் ஆண்டு சித்திரை 16ஆம் திகதி கொழும்பு செட்டித் தெருவில் அமைந்த மாளிகை போன்ற வீட்டில் பொன்னம்பல முதலியாருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தவர் இராமநாதன். திரு. குமாரசாமி இவரது அண்ணன் அருணாசலம் இவரது தம்பி. இலங்கைச் சட்ட நிரூபண சபையில் 1834ஆம் ஆண்டில் தமிழரின் முதற்பிரதிநிதியான முதலியார் இவரது தாய்வழிப் பேரன். கலாயோகி ஆனந்தக்குமாரசாமியின் தந்தை சேர் முத்துக்குமாரசாமி இவரது தாய் மாமன்.

கொழும்பு அக்கடமியிலும் சென்னை இராசதானிக் கல்லூரியிலும் கற்ற இவர் பட்டம் பெறுமுன் சட்டம் பயின்று 22ஆவது வயதில் வழக்கறிஞரானார். மாமன் சேர் முத்துக்குமாரசாமியாலும் இராணி வழக்கறிஞர் சேர் றிச்சேட்மோர்கனாலும் நெறிப் படுத்தப்பட்ட இராமநாதன் கீழைத்தேச மேலைத்தேச விழுமியங்களின் திரளமைப் பாய் உருவானார். 1879ஆம் ஆண்டு ஆறுமுக நாவலர் பெருமானின் முயற்சியால், திடீரென மரணமடைந்த மாமன் சேர் முத்துக்குமார சாமியின் இடத்துக்கு நியமிக்கப்பட்டார். தமிழ் அறிஞர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களின் அன்பையும் இலக்கணம்

இராமசாமி எனப்பட்ட அருட்பரானந்தரின் ஆன்மீக வழிகாட்டலையும் பெற்று நிறை மனிதனாய் உருவானார்.

அரசியல், சட்டம், கல்வி, சமயம், சமூகம், ஆத்மீகம் எனப் பல துறைகளில் அரும்பணி ஆற்றினராயினும் கல்வித் துறையே அவருக்கு ஈடில்லாப் புகழ் தந்து நிற்பது. அவரது பல்துறைப் பணிகளை நன்கு ஆராய்ந்த சேர் பரன் ஜெயதிலகா,

"சேர் பொன்னம்பலம் இராமநாதனின் வியத்தகு பல்துறைப் பணிகளுள் அவருக்கு நிலைத்த நினைவுச் சின்னமாக நிலைக்கப் போவது அவரது கல்விப் பணியே"

எனக் குறிப்பிட்டுள்ளார்.

இராமநாதன் அவர்களும் சாதனை நிறைந்த தம் பற்பல பணிகளுள் அதிக திரிகரண சுத்தியோடு ஈடுபட்டு காரிய சித்தி, கண்டபணி கல்விப்பணியே என்பதனை தனது வாக்காலும் வாழ்வாலும் உறுதிப்படுத்தி யுள்ளார். இராமநாதன் அவர்களின் கல்விப் பணி பற்றி நன்கறிந்த அறிஞர் அம்பிகைபாகன் அவர்கள்.

"சேர் இராமநாதன் இலங்கை மக்களுக்கு குறிப்பாக தமிழ் மக்களுக்குப் பல அரிய தொண்டுகள் செய்துள்ளார். அவற்றுள் தலைசிறந்தது இராமநாதன் கல்லூரியைத் தாபித்ததாகும்."[6]

எனக் குறிப்பிட்டுள்ளார்.

இக் கருத்தையே 27.11.1927இல் இராமநாதன் கல்லூரிக்கு வருகைதந்த மகாத் மாகாந்தி அடிகளும்

"சேர் இராமநாதனின் பரோபகாரத்துக் கும் சிந்தனைச் சிறப்புக்கும் நினைவாலய மாக நிலைத்துநிற்கும் இந் நிறுவனத்திற்கு வராதிருந்திருப்பேனாயின் என் வாழ்வெல் லாம் கவலைப்பட்டிருப்பேன்."[7]

எனக் கூறினார்.

இவற்றில் இருந்து இராமநாதன் கல்லூரி இந் நாட்டில் சைவத் தமிழ்ப் பெண்கள் உயர்கல்விக்கு கலங்கரை விளக்காய் இருந்தது எனக் கொள்ளலாம்.

சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் இராமநாதன் கல்லூரியை அமைத் தது மக்களின் நீண்டகாலக் கோரிக்கையை நிறைவுறுத்திய செயற்பாடாகும். 10.05.1905 இல் வெளியான 'இந்துசாதனம்' பத்திரி கையில் சைவப்பெண்களுக்கு உயர் கல்வி நிலையம் ஒன்றினை என்பதை அமைக்க வேண்டும் என்னும் விடயம் விரிவாக விளக் கப்பட்டுள்ளது. இது இராமநாதன் அவர் களின் சிந்தனையைத் தூண்டியிருக்கலாம், அவர் அமெரிக்கா, இங்கிலாந்து, இந்தியா ஆகிய நாடுகளை காணப்பட்ட பெண்கள் உயர் கல்வி நிலையங்களை நேரடியாக அறிந்து கொண்டார். அமெரிக்காவில் 1905ஆம் ஆண்டில் அவரது எதிர்காலத் திட்டம் பற்றி வினவியபோது

"நவீன நிலைமைக்கு ஏற்ற கல்வியினையும் எமது பண்டைய நூல்களில் பொதிந்து கிடக்கும் இலக்கிய தத்துவ அறிவையும் இணைத்துத் தகுந்த கல்லூரி அமைப்பதே எனது முழு முயற்சியுமாகும்."[8]

என விடையளித்தார்.

சைவ ஆண்பிள்ளைகளுக்கு அவர்களின் சமயச் சூழலில் உயர்கல்வி பெறக் கல்லூரிகள் இருந்தன. ஆனால் சைவப்பெண்களுக்கு அவ்வாறான கல்வி பெற வாய்ப்பிருக்க

வில்லை. யாழ்ப்பாணத்தில் அன்றிருந்த கிறிஸ்தவ கத்தோலிக்கப் பெண்கள் பாடசாலையில் கல்விகற்ற சைவப்பெண் பிள்ளைகள் தமது சொந்தப் பண்பாட்டு விழுமியங்களை அறியாதவராயும் தேசிய உணர்வு அற்றவராயும் உருவானமை அவரை வேதனைப்படுத்தியிருக்க வேண்டும். எனவே சைவப்பெண்கள் உயர்கல்விக்கு உதவும் வகையில்

> "கோப்பாயில் இருபது ஏக்கர் நிலத்தை வாங்கினார். அவ்விடம் போக்குவரத்து வசதி குறைந்தது எனச் சுட்டிக் காட்டவே அவ் விடத்தை விட்டுச் சுன்னாகத்தில் அதே விஸ்த்தீரணமான நிலத்தை வாங்கினார். கோப்பாயில் இராமநாதன் அவர்கள் வாங்கிய நிலத்தில் ஒரு பகுதியிலேயே இப்போது ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை இயங்கி வருகின்றது"[9]

சுன்னாகத்தில் மருதனார்மடச் சந்தியில் வாங்கப்பட்ட நிலத்தில் 03.06.1910 அன்று காலை 7.30 மணிக்கு அடிக்கல் நாட்டி கட்டிட வேலை ஆரம்பிக்கப்பட்டது. கட்டிடம் வளர்ச்சியுற்ற காலத்தில் இராமநாதன் அவர்கள் சென்னையில் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்

> "பத்து வயதிற்கும் பதினெட்டு அல்லது பத்தொன்பது வயதிற்கும் இடைப்பட்ட பெண் பிள்ளைகள் பண்பு மிக்க ஆங்கில இந்துப்பெண்களிடம் கல்வி பெறுவர்" [10]

எனத் தனது பெண்கள் உயர் கல்வி நிலையத்தில் தான் வழங்க உத்தேசித்த கல்விச் சூழலை விளக்கினார். அப் பேட்டியில் அவர் மேலும் குறிப்பிடுகையில் ஆங்கில நாட்டினதும் சொந்தப் பண்பாட்டினதும் சிறந்த விழுமியங்களைப் பெண்கள் பெற்று நல்ல மனைவியராக வேண்டிய கல்வியைப் பெற வாய்ப்பு ஏற்படுத்தப்படும் எனக் குறிப்பிட்டார். மேலும் அவர் அங்கு குறிப்பிடுகையில்

> "கடந்த பதினெட்டு மாதங்களில் பல உள்நாட்டுப் பள்ளிக்கூடங்கள் இக் கல்லூரியில் கற்பதற்குப் பெண்பிள்ளைகளைத் தயாரிக்க உருவாக்கப்பட்டுள்ளன."[11]

என்றார்.

இதனால், தான் அமைக்கவிருந்த சைவப் பெண்கள் கல்லூரி ஏற்கனவே இயங்கி வந்த கிறிஸ்தவப் பெண்கள் உயர் கல்விப் பள்ளிக் கூடங்களில் கல்வி கற்று வந்த சைவப் பெண்பிள்ளைகளைக் கவரும் நோக்கமற்றது என்பதனைத் தெளிவுறுத்தினார்.

07.12.1911 இல் வெளியான 'இந்து ஒகன்' பத்திரிகையில்

> "திரு. இராமநாதனின் பெண்கள் கல்லூரி யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட உள்ளது. அது இலங்கைத் தேசியத்தின் வரலாற்றில் புதிய சகாப்த்தத்தை உருவாக்குவதாய் இருக்கும்"[12]

எனக் குறிப்பிடப்பட்டது.

தனது கல்லூரிக்குச் சிறந்த அதிபரைத் தெரிவு செய்வதில் அதிக அக்கறை செலுத்தினார். அவரின் தேடுதலின் பெறுபேறாய் இங்கிலாந்தின் இலக்கிய வட்டத்தில் பெரும் மதிப்புப் பெற்றவரும் அறிஞர் பேனாட்ஸ் சோபின் அன்புக்கும் உரியவராய் இருந்த திருமதி புளோறன்ஸ் ஏமேறி என்பவரே அதிபராகத் தெரிவானார். ஆத்மீகத் துறையிலும் ஈடுபாடுமிக்க இவர் மீண்டும் இங்கிலாந்துக்குத் திரும்பிச் செல்வதில்லை என்ற வைராக்கியத்தோடு தனது பதவியை ஏற்று தன்னைத் கல்லூரிக்கு முழு மையாக அர்ப்பணிக்க முன்

வந்தார். அதிபரோடு 11 ஆசிரியர்கள் கல்லூரி ஆரம்பிக்கப்படுமுன்னரே நியமிக்கப்பட்டனர்.

திறக்கப்படவுள்ள இலங்கையின் முதற் சைவப்பெண்கள் கல்லூரியை நிறுவியவருக்கு நன்றி தெரிவிக்க 15.01.1913இல் கலையரசு சொர்ணலிங்கத்தின் தந்தை திரு. எஸ். கே. லோட்டன் தலைமையில் கூட்டப்பட்டு வள்ளல் இராமநாதனின் கல்விப் பணிப் பங்களிப்பினைப் பலரும் பாராட்டி நன்றி தெரிவித்தனர். புதிய கல்லூரி, இராமநாதன் கல்லூரி எனப் பெயரிடப்பட்டு 20.01.1913 திங்கள் காலை 10.00 மணிக்குச் சமயச் சடங்குகளுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந் நிகழ்ச்சியை விமர்சித்த 'இந்து ஒகன்' பத்திரிகை 'இலங்கை இந்துக்கள் தம் வாழ்வின் என்றும் நினைவில் வைத்திருக்கும் நாள்' 13 எனக் குறிப்பிட்டது. இக் கல்லூரிக்கு அன்று மக்களிடம் இருந்த வரவேற்பினைக் காட்டுவதாகும்.

முதல் அதிபர் புளோறன்ஸ் ஏமேறியின் ஆளுமைச் சிறப்பும் நிறுவுநரும் அவர் பாரியார் லீலாவதி அவர்களும் கல்லூரியை தமது சொந்தக் குழந்தைபோலக் கருதிப் பணியாற்றியதும் 'கீழைத்தேசத்தில் ஒப்பற்ற கல்வி நிறுவனம்' என்னும் அளவுக்குக் கல்லூரியினை விருத்தியுறச் செய்தன. இக் கல்லூரிக்கு இலங்கையில் பல பாகங்களில் இருந்தும் மலேசியா, சிங்கப்பூர், பர்மாவில் இருந்தும் சைவசமயப் பண்பாட்டுப் பின்னணியில் உயர் கல்வி பெற மாணவிகள் வந்து கல்வி பெற்றமை குறிப்பிடத் தக்கது.

ஔவையாரின் 'ஆத்தி சூடி' இராமநாதன் அவர்கள் எழுதிய விளக்கவுரையோடு இக் கல்லூரியின் ஒழுக்கப்போதனையின் அடிப்படையாய் அமைந்தது. சைவசமயக் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்த குருகுலக் கல்விச் சூழலை வழங்குவதாகவே கல்லூரி இயக்கப்பட்டது. புலன்களின் புன்மை நீக்கிப் பக்திப் பரவசமூட்டும் வகையில் தேவார திருவாசகம் பண்ணோடு பாராயணம் செய்யும் தமிழர் பாரம்பரியம் கல்லூரியில் பேணப்பட்டது. பெண் பிள்ளைகள் அணிந்த சீருடையும் தமிழர் சமூக விழுமியங்களைப் பேணிக் காத்து மேலும் சிறப்புறுத்தும் வகையில் அமைந்தது. அக்காலப் பெண்கள் உயர்கல்வி நிலையச் சீருடையில் தேசியத்தை மீள வலியுறுத்தும் முக்கியமான நடவடிக்கையாகக் கருதப்பட்டது.

சேர். பொன்னம்பலம் இராமநாதன் தனது கல்லூரியில் தேசிய கல்விப் பண்பாட்டுப் பாரம்பரியம் மறுமலர்ச்சி பெறவும் சிறப்புறவும் வேண்டிய வாய்ப்புக்களையும் வசதிகளையும் ஏற்படுத்தினார்.

இவரது கல்வி முயற்சிகள் துரிதமாகப் பயன்தர இவர் அன்று தேசிய மட்டத்தில் பெற்றிருந்த பெரு மதிப்பும் காரணமாய் இருந்தது. இக் கல்லூரி நாட்டின் உயர்மட்டத்தாரின் கவனத்தைப் பெற்றதோடு தேசிய பண்பாட்டுத் திட்டங்கள் உருவாக்கப்படும் வள நிலையமாகவும் செயற்பட்டது குறிப்பாகச் சைவமக்களுக்குப் பெரும் கல்விப் பயன்தந்த பரமேஸ்வராக் கல்லூரியை நிறுவவும் சைவவித்தியா விருத்திச் சங்கத்தை உருவாக்கவும் சைவப் பெண்கள் ஆசிரிய கலாசாலையை நிறுவவும் இக் கல்லூரி விருத்தியால் பெற்ற அனுபவத்திரள் ஆக்கமும் ஊக்கமும் தந்தது எனலாம்.

இக் கல்லூரியின் கல்விப் பயனை விரிவுபடுத்த நிறுவுநர் சைவச் சிறுமியர் நிறைவாழ்வு

இல்லத்தினை ஆரம்பித்தார். பழைய மாணவியர் தொடர்ந்து கல்வி விழுமியங்களைப் பேணி அவற்றை மேலும் விருத்தியுறச் செய்ய வேண்டும் என்னும் விருப்பில் சைவமங்கையர் சபையினை அமைத்தார். அச்சபையில் அவர் 1927ஆம் ஆண்டு பங்குனித்திங்களில் இச்சபையினர் மத்தியில் பேசும் போது.

"பழைய மாணவியரும் ஆசிரியரும் நல்லறிவுச் சுடரையும் சமயத்தையும் தாம் மேற்கொண்ட வாழ்வு வட்டத்தினை ஒளி பெறச் செய்வதில் ஒன்றிணைவார்களாக"14

என வேண்டுகோள் விடுத்தார். இதன் படியே பாக்கியம் கந்தசாமி என்னும் இராமநாதன் கல்லூரிப் பழைய மாணவி மாத்தளை நகரில் பாடசாலையை அமைத்தார். நிறுவுநரின் நீண்டகாலக் கல்விப் பணிக்கு ஊற்றாக அமைந்த இராமநாதன் கல்லூரி பலராலும் நயக்கப்பட்ட தமிழர் பண்பாட்டுக் கருவூலமாகக் காணப்பட்டது. இக் கருத்தினை உடுவில் கிறிஸ்தவப் பெண்கள் கல்லூரியில் நீண்டகாலம் அதிபராயிருந்த செல்வி எல். ஜீ. புக்வால்ரர் அம்மையார்.

"தமிழ் மொழியிலும் இந்திய இசையிலும் மக்களின் சீரிய பாரம்பரியப் பழக்க வழக்கங்களிலும் இங்கேயே பெரும் புதையலைக் கண்டுகொள்ள அவரும் கல்லூரியும் உதவினர்" 15

என வாழ்த்தி மகிழ்ந்தார்.

1935 ஆம் ஆண்டில் இலங்கையில் ஆள்பதியாயிருந்த திரு. றெஜினோல்ட் ஸ்ரப்ஸ் இருபத்திரண்டு ஆண்டுகள் இடைவெளியின் பின்; கல்லூரிக்கு வந்த பொழுது கல்லூரி நிறுவுநரின் இலட்சியங்களை நிறைவுறுத்தும் வகையில் செயற்படக் கண்டு.

"இன்று எனது நண்பர் பொன்னம்பலம் உயிரோடு இருந்தால் பெண்பிள்ளைகளின் இன்றைய செயற்பாடுகளைக் கண்டு பெருமகிழ்வெய்தியிருப்பார்" 16

தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியதையும் கருத்திற்கொண்டு கல்லூரியின் வளர்ச்சியை உய்த்துணரலாம்.

கல்விப் பணிக்கே தன்னை முழுமையாக அர்ப்பணித்த நிறுவுநரும் அவர் குடும்பத்தினரும் கல்லூரிக்கென விட்டுச் சென்ற வளங்களும் தன்னலன் பெரிதெனக் கருதா அதிபர்களும் ஆசிரியர்களும் கல்லூரி துரித வளர்ச்சியடைய உதவினர். 1962 இல் 27 மாணவிகளும் 1963 இல் 26 மாணவிகளும் பல்கலைக்கழக அனுமதி பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆனால் கல்லூரியின் இன்றைய நிலை மகிழ்ச்சிக்குரியதாயில்லை. நிறுவுநரின் இலட்சியக் கல்விக்கருமத் தொடர் நிறைவேறும் வாய்ப்புக்கள் இல்லை. வளங்கள் மிகுந்த இராமநாதன் கல்லூரி இன்னும் முன்னேற்றம் கண்டிருக்கலாம்.

ஒரு நிறுவனத்தின் முன்னேற்றத்துக்கு அந்நிறுவன ஆளணித் தொகுதியினரின் அர்ப்பணம் மிக முக்கியம். இங்கு ஆசிரியப் பணியினை மேற்கொள்பவர்கள் நிறுவுநர் இலட்சியங்களை நிறைவுறுத்தும் முயற்சியில் தொடர்ந்து பங்களிப்புச் செய்ய எதிர்பார்க்கப் படுகின்றனர்.

இலங்கையில் கல்விப் பணிக்கு சேர் பொன்னம்பலம் இராமநாதன் ஆற்றிய பணிபோல் எவரும் ஆற்றினாரில்லை. அவர் வழங்கிய வளங்களே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உருவாகி வளர்ச்சியுறப் பெரிதும்

உதவின. எனினும் பரமேஸ்வராக் கல்லூரியை நினைவு கூர்வதற்கும் அது தமிழுக்கும் சைவத் துக்கும் கல்விக்கும் ஆற்றிய பணியை பிற் சந்ததியார் அறிந்து ஊக்கம் பெற வாய்ப்பு அற்றுப் போயிற்று. வரலாற்று முக்கியத்துவம் மிக்க இராமநாதன் கல்லூரியாவது முறை யாகப் பேணப்பட்டுத் தமிழர் கல்வி வரலாறு விளக்கமுறச் செய்வதை நாம் நம் கடனாகக் கருத வேண்டும்.

சைவத் தமிழர் கல்வி மேம்பாட்டுக்குப் பெரும் பணியாற்றிய நிறுவுநரைத் தக்க முறையில் நினைவு கூரச் செய்யும் அம்சங்கள் உருவாக்கிப் பேணப்படுவது கல்விப் பணி யாகும். இராமநாதன் கல்லூரி வளவில் சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் சிலை நிறுவப்படுவது ஒரு சமூகத் தேவை. அவர் கல்விப் பணி தொடர்பான அரும் பொருட் காட்சிச்சாலை அமைவதும் நன்மை பயப்பதாகும்.

இவ் வேண்டுகோளைக் கல்லூரி நிறுவு நரின் கல்வி இலட்சியத்தோடு இணைத்துக் கண்டு தெளிந்து தேசிய மறுமலர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் அவர் இராமநாதன் கல்லூரி மூலம் வழங்கிய பங்கும் பணியும் உணரப்பட வேண்டும். தமிழர் தேசிய நலனில் அக்கறை கொண்டோர் திரிகரண சுத்தியோடு நிறுவுநரையும் அவர் தமிழர் இலட்சியக் கல்லூரியாய் அமைந்த இராமநாதன் கல்லூரி யையும் நன்கு அறிந்து பிற்சந்ததியார் பயன் படச் செய்யும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

கல்விக்கு முன்னுரிமை கொடுக்கும் சமூகமே முன்னேற்றம் காணமுடியும். இன்று வளர்ச்சியடைந்த நாடுகள் எல்லாம் கல்வி ஆய்வு கூடங்களாகச் செயற்படக் காண்கின் றோம். அங்கு கல்வி நிலையங்கள் பல நூற்றாண்டுகள் பழைமை மிக்கனவாய் இருக் கின்றன. அவை தேசிய முன்னேற்றக் கல்வி நிலையங்களாகத் தொடர்ந்து மதிக்கப்படும் நிலையில் பேணப்படுகின்றன. இவற்றைக் கருத்திற்கொண்டு செயற்படுவது சிறந்த கல்விப் பணியாகும். இராமநாதன் கல்லூரி நின்று நிலைத்துப் பயன்தர வேண்டும். இக் கருத்தை வலியுறுத்திய கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை அவர்களின் பாடலை நினைவூட்டி அமைகின்றேன்.

"குன்றை வில்லாய் வளைத்த பிரான்
குகனை ஈன்ற கண்ணுதலான்
மன்றுள் நடனம் செய்கின்ற
மங்கை பாகன் திருவருளால்
என்றும் என்றும் தழைத்தோங்கி
இராமநாதன் கல்லூரி
நன்று நாடும் சுன்னாக
நகரில் வாழ்க வாழ்கவே" 17

அடிக்குறிப்பு:

1. கைலாசபதி க. பேராசிரியர் - சேர் பொன்னம்பலம் இராம நாதன் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம். சொக்கன் 1976 பக்கம் IV

2. சுவாமி விபுலானந்தர் - Ramanathan College Jubilee Souvenir 1936 P 79

3. விஜயகோன் ஜெறால்ட் சேர் - "ஶ்ரீலங்கா" ஏப்ரல் 1951 மலர் 3 இதழ் 5 பக்கம் 8

4. சிட்டிபாபு பேராசிரியர் - 27.09.1982 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய சேர் பொன் இராமநாதன் நினைவுச் சொற்பொழிவு

5. ஜெயதிலகா பரண் சேர் - Ramanathan College Silver Jubilee Souvenir 1936 P 49

6. அம்பிகைபாகன் ச. - Ramanathan College Special Number 1980 P 16

7. காந்தி மகாத்மா - With gandhiji in Ceylon Mahadev Desa Tnepiecane Madras 1928 P 146

8. இராமநாதன் பொ. சேர் - Western Pictures for Eastern Students Thacker & Co Londan 1907 P 109

9. அம்பிகைபாகன் ச. - Ramanathan College Diamand Jubilee Number 1973 P 17

10. Hindu Organ - 09.08.1911 P 23 Col 3

11. Ibid

12. Hindu Organ - 07.02.1912 P 123 Col 3

13. Hindu Organ - 22.01.1913

14. இராமநாதன் பொ. சேர். - Ramanathan College Silver Jubilee Souvenir 1936 P 8

15. Book Walter S.G. - Ramanathan College Silver Jubilee Souvenir 1936 P 16

16. Reginold Stulebs - Ramanathan College Silver Jubilee Souvenir 1936 P. 12

17. தேசிகவிநாயகம்பிள்ளை கவிமணி - "மலரும் மாலையும்" பாரிநிலையம் ஒன்பதாம் பதிப்பு சென்னை பக்கம் 253



# ஈழத்துச் சைவசித்தாந்த அபிவிருத்திப் பணியில் சேர். பொன். இராமநாதன் - (1930-1951)

கலாநிதி திருமதி கலைவாணி இராமநாதன்
பேராசிரியர்

சேர். பொன். இராமநாதன் அவர்களது நினைவுப் பேருரையின் பொருட்டு இன்று "ஈழத்துச் சைவசித்தாந்த அபிவிருத்திப் பணியில் சேர் பொன். இராமநாதன்" என்னும் தலைப்பில் இந்த உரை அமைகின்றது.

**அறிமுகம்**

உலகத்திலே உயர்ந்த பிறவி எடுத்த மக்கள் அனைவரதும் விருப்பம் நீடித்த துன்பியல் கலப்பற்ற ஆனந்தம் தரும் ஒழுக்க வாழ்வியலை நாடுவதாகும். எல்லா சமயங்களும் நல்லொழுக்கத்தை அடிநிலையாகக் கொண்டே அமைந்துள்ளன. அன்றியும் சமயநெறிகளுள் சைவசித்தாந்தம் முதன்மையானது. உலகம், உயிர், இறை என்னும் முப்பொருள் உண்மையினை அறிவினடிப் படையில் கூடிய ஒழுக்க நெறியுடன் ஏற்றுக் கொண்டது சைவசித்தாந்தமாகும். சைவம் - சித்தாந்தம் என்னும் சொற்றொடர்களில் 'சைவம்' என்பது உலக மக்களின் சமய வாழ்வியலையும் நம்பிக்கையையும் நெறிப் படுத்தி நிற்பது எனவும், 'சித்தாந்தம்' என்பது சமகால அறிவுநிலைக்குரிய விமர்சன ரீதியான அணுகுமுறையிலே அறிவாராய்ச்சியியலை அத்திவாரமாகக் கொண்டு மனித நம்பிக்கையினை நெறிப்படுத்தி நிற்கும் மெய்யியல் எனலாம்.

சமய மெய்யியல் ஆய்வுகளில் அறிவினை மூலதனமாகக் கொண்ட சமுதாயத்திலே ஐதீக நிலையிலே காணப்பட்ட மரபுச் செய்திகளை அறிவுசார் நிலைக்கு எடுத்துச் செல்லுதலை உட்பொருளாகக் கொண்டது சைவசித்தாந்தம். 'சைவம்' என்பது நம்பிக்கையுணர்வுசார் நெறி எனில் 'சித்தாந்தம்' அந்த நம்பிக்கையுணர்வினை அறிவு நிலையுடன் கூடிய மெய்யியற் சிந்தனையாக உருவாக்கம் செய்யும் முயற்சியின் செயற்றிட்டமாகும். எனவே சைவசித்தாந்த மெய்யியலானது சமய வாழ்வையும் தத்துவ நெறியினையும் ஒன்றிணைக்கும். மெய்யியற் சிந்தனையானது சமயமும் தத்துவமும் ஒன்றினை ஒன்று நிறைவு செய்வன. இவை இரண்டும் இணைந்து செல்லும் சிறப்பு இந்தியமெய்யியலிற்கே குறிப்பாக சைவசித்தாந்த தத்துவத்திற்கே உரியதாகும். இம்மரபு சமய நிலையிலும், தத்துவ நிலையிலும், அறிவியல் நிலையிலும் அமைகின்றது. உலக கலாச்சார பண்பாட்டு வளர்ச்சியில் எழுபது கோடி மக்களின் வாழ்ந்த- வாழ்கின்ற ஆன்மீக வாழ்வின்

வடிவமே இந்துசமய தத்துவ மரபாகும் என்பது கீழைத்தேய ஞானியரைப் பற்றி நூல்கள் எழுதி நோபல் பரிசு பெற்றவரும் பிரெஞ்சு நாட்டவருமான றோமேயின் ரோலாண்ட் என்பவரின் கருத்தாகும்.

**சேர் பொன். இராமநாதன் அவர்கட்கோர் முகவுரை**

கீழைத்தேய ஆன்மீக சிந்தனையாளர் வரிசையில் சிறப்பிடம் பெற்று விளங்குபவர்களில் சேர். பொன். இராமநாதனும் ஒருவராவர். ஈழத்து சைவ மெய்யியற் சிந்தனை வளர்ச்சியில் சேர். பொன். இராமநாதன் அவர்கள் தமக்கென ஒரு தனியான முத்திரை பதித்தவர். சைவ மெய்யியல் வளர்ச்சியில் மட்டுமன்றி அரசியல், விடுதலை, ஒருமைப்பாடு, கல்வி வளர்ச்சி, தமிழ் வளர்ச்சி, கலை பண்பாட்டு வளர்ச்சி, சமுதாய சீரமைப்பு எனப் பல் துறைகளிலும் ஆளுமையுள்ள ஒரு சித்தாந்த சிந்தனையின் சீரிய வடிவமாக ஒரு கர்ம யோகியாக விளங்கினார். 19ஆம் நூற்றாண்டிலே தமது உயர்ந்த கொள்கைகள், பணிகள், மனிதநேயம் என்னும் உதார குணங்களால் தமிழ் மக்கட்கு மட்டு மன்றி சகல இனத்தவர்கட்கும் உதவும் கரங்களாகப் பணி செய்தார்.

1850 முதல் 1900 வரையுள்ள 50 ஆண்டு காலப்பகுதி ஆங்கிலேயர் ஆதிக்கத்தின் கீழ் சுதேசிகள் அடக்கி ஒடுக்கப்பட்ட நிலை காணப்பட்டது. 1851இல் ஈழத்தமிழ் மக்கள் வாழ்வில் விடிவெள்ளி போலத் தோன்றிய சேர் பொன். இராமநாதன் அவர்களின் வளர்ச்சி யானது அவரைத் தமிழ் மக்களின் தலைவனாக, ஏழைகளின் நண்பனாக, இனமத வேறுபாடு கடந்த ஆற்றல் மிக்க அரசியல் வாதியாக, சைவ சமயப் பிரசாரகராக சித்தாந்த கோட்பாடுகட்கு இலக்கணமானவராக சர்வ தேசத்தில் பெரும் புகழ் ஈட்டிக் கொடுத்தது. அவரது சைவ சித்தாந்தம் தழுவிய வாழ்க்கைச் சிந்தனைகள் சமய கலாச்சாரப் பண்பு விருத்தி அனைத்தின் பதிவுகட்கும் அவர் வளர்க்கப்பட்ட குடும்பச் சூழலும் பிரதான காரணமாக அமைந்தது. தமது உலகியல் வாழ்வின் பிற்பகுதியில் ஒரு இல்லற ஞானியாகவே திகழ்ந்தார். யக்ஞவல்லியர், ஜனகர் போன்ற உபநிடத ரிஷிகளின் வாழ்வு போலவும் தமது வாழ்வினை அமைத்துக் கொண்டவர். பிற்காலம் அவரிடம் ஏற்பட்ட சமய சித்தாந்த மனவெழுச்சியானது அவரது தந்தையாரிடமிருந்தும் குடும்ப முன்னோர்களிடமிருந்தும் சுவீகரித்துக் கொள்ளப்பட்டதாகவே காணப்படுகின்றது. அவரது தந்தையார் பொன்னம்பல முதலியார் தமது குழந்தைகட்கு இலகுவில் பதியக்கூடியவாறு சிறந்த சமயக்கல்வி, சமய வாழ்வு என்பவற்றின் பயிற்சியையும் அளித்ததுடன் அவற்றுக்கு உதாரணமாக சமய வாழ்வும் வாழ்ந்து காட்டினார்.

எம். வைத்திலிங்கம் அவர்களால் எழுதப்பட்ட 'சேர். பொன். இராமநாதன் அவர்களது வாழ்க்கை வரலாறு' பற்றிய ஆங்கில நூலில் அன்னாரது வாழ்வியல் சுவடுகள், பதிவுகள் அனைத்தும் விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இளவயதிலே சேர் பொன். இராமநாதன் அவர்களிடமிருந்த சமய சித்தாந்த வேட்கையானது நாற்பது வயதெல்லை தாண்டியதும் ஆன்மீக தாகமாக மாறி அலையலையாக அவற்றுள் அன்னாரை அள்ளிச் சென்றது. வேத நூல்கள், சைவாகமங்கள் முதலிய வடமொழி இலக்கியங்

களையும் கீழ்நாட்டு மேல்நாட்டு புனிதத் திருநூல்கள் பலவற்றையும் கற்று ஆழமான அனுபவரீதியான ஆராய்ச்சியில் ஈடுபட்டார். இந்து மெய்யியலின் சகல பரப்பளவையும் நுட்பமாகப் பரிசோதித்து அவற்றின் ஆழத்தை கண்டறியும் முயற்சி செய்தார். இக்கால கட்டத்திலேதான் அவரது வாழ்வையே மாற்றியமைக்கும் திறனுடைய - ஆத்மீக நியமத்தை ஒழுங்குபடுத்தி வளர்த்தெடுக்கும் ஞானியர் ஒருவரை அடைந்தார். அதன் பயனாக சேர். பொன். இராமநாதன் அவர்களது அஞ்ஞான விவேகத்தை அகற்றி மெய்ஞ் ஞானத்தை ஊட்டும் சற்குருவான குருநாதர் ஒருவர் வந்தடைந்தார். 'தேடச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே' என்னும் தாயுமானவர் வாக்கிற்கேற்பவும் "தெளிவு குருவின் திரு மேனி காண்டல்...... திருவார்த்தை கேட்டல்...... குருவுரு சிந்தித்தல் தானே" என்னும் திருமூலர் கூற்றிற்கேற்பவும் சேர். பொன். அவர்களிற்கும் அஞ்ஞானம் அகற்றிய மெய் ஞானம் வளர்க்கும் சற்குரு வாய்க்கப் பெற்றார். இராமநாதனின் மருமகராக அப்பெரிய ஞான வான் என்பவர் திரு. சு. நடேசப்பிள்ளை அவர் களின் பேரனான தஞ்சாவூரைச் சேர்ந்த அருட் பரானந்த சுவாமிகளாவர்.

"அந்தஸ்தும் செல்வவளமும் உள்ள ஒருவரிடத்தில் வழமையாகக் காணப்படும் ஆடம்பரத்திற்கும், பகட்டுக்கும் மேற்கத்தைய உலகளாவிய வாழ்க்கைமுறையில் தோய்ந்து போய் இராஜபோக வாழ்வு வாழ்ந்து கொண்டிருந்த விலைமதிப்புள்ள இராமநாத னுடைய நிலவிரிப்புக்களைக் கொண்ட அரண்மனை போன்ற அவரது சுகஸ்தான் இல்லத்தில் தமது காலணியற்ற பாதங்களைப் பதித்து மிடுக்கான பார்வையுடன் இராம நாதன் முன் தோன்றினார்" 3 என்னும் இந்துசாதனப் பத்திரிகையின் குறிப்புரை அருட்பரானந்த சுவாமிகள் ஞான வருகை யினைத் தெளிவாக அறிவித்திருக்கின்றது. சுவாமிகளின் வருகையானது அவரது வாழ் விலே ஞானப்பரவெளி என்னும் பாதையா கிய புதியபாதை ஒன்றினைத் திறந்து விட்டது. புலன் அனுபவத்திற்குரிய உலகளாவிய வாழ்வில் இருந்து அவரை வெளியே இழுத்து ஆன்ம ஞானக் கரைசேர்க்கும் முயற்சியிலும் அதனை உறுதியுடன் நிலைப்படுத்தும் நோக்கு டனேயே சுவாமிகளின் இந்த வருகையானது இறைவனின் வழிகாட்டல் போலவே அமைந்தது.

அருட்பரானந்த சுவாமிகளின் சீடரான சேர். பொன். இராமநாதன் அவர்கள் தமது சகோதரர் அருணாசலம் அவர்களுடன் இணைந்து சைவ சமயம், சித்தாந்த மெய்யியல் ஆகியவற்றைக் கற்றதுடன் யோகப்பயிற்சி, தியானம் என்ப வற்றிலும் தமது குருவினது வழிகாட்டலின் கீழ் நன்கு பயிற்சி பெறுவதில் தீவிரமாக ஈடுபட்டார். வேதசிவாகமங்களிற் காணப் பட்ட சமய மெய்யியற் பொக்கிசங்கள் யாவும் குருவானவரின் அருட்பார்வையினால் விரிந்து சைவசித்தாந்த மெய்யியலைக் கற்கு மளவிற்கு இவரது வாழ்விலே பெரும் திருப்பு முனையானது. உலகளாவிய தோற்றப்பாடு களின் உண்மை நிலைபற்றிய நம்பிக்கை யின்மை, ஆன்மீகத்தின் பெறுமதிகளில் தீவிரமான தேடலின் ஆர்வம், இவற்றால் புலன்நுகர்வு விடயங்களிலிருந்து மனமானது படிப்படியாக விலகிச் செல்ல ஆன்மீகத் தேடலில் அதிகளவு நாட்டம் உண்டானது. சமயசித்தாந்தம் பிரதான இடத்தை எடுத்துக் கொண்டது. சமய நூல்களைக் கற்பதில்

ஆர்வமதிகமானது. தியான, யோகப் பயிற்சிகளில் பலமணி நேரம் செலவிட்டார்.

சேர். பொன். இராமநாதன் தமது சைவப்பணி, சமுதாயப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு சித்தபுருசர்களது நல்லாசிகளும் கிடைத்தன. யோகர்சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள் என்போரும் ஆசீர்வதித்துச் சென்றனர். எனவே அவரது அரசியற்பணி, சட்டம், தேசீயம், சமூகம் முதலிய துறைகளிலும் மன ஒருமைப்பாட்டுடன் நன்கு கவனம் செலுத்தவும் முடிந்தது. அவரது அறிவுசார் புலமையானது கல்வி, சமயம், சித்தாந்தம், பொருளியல், கலை, கலாச்சாரம் ஆகிய சகல துறைகளையும் தழுவிநின்றது.

**'சைவசித்தாந்தம்' ஒரு சுருக்கமான விளக்கம்**

சைவசித்தாந்தம் தற்காலத்திலே தத்துவமாக ஏட்டளவில் மட்டுமன்றி மக்களது சமயவாழ்வியலாகவும் பரிணமித்து வரும் காலமாகும். ஈழமாகிய சிவபூமியில் சித்தாந்தம் ஒரு வாழ்வியல் சிந்தனை என்பதனைப் பண்டிதமணி அவர்கள் 'கந்தபுராணக் கலாசாரம்' என்ற பெயரில் அழைத்ததன் மூலம் சமூகமயப்படுத்தினர். கந்தபுராணம் சைவசித்தாந்த முப்பொருள் தத்துவத்தின் விளக்கமாகவும் - பதி - கந்தன், பசு: மக்கள் (ஆன்மாக்கள்) பாசமாகிய மும்மலங்கள் சூரன், சிங்கன், தாரகன் எனவும் தெளிவாக அங்கு விளக்கப்பட்டிருக்கின்றது. உலகினைப் படைத்து நடாத்தும் முதல்வன் ஒருவன் உள்ளான். அவனது அருட்குணங்கள் பல்வேறு பெயர்களாலும் குறிப்பிடத்தக்கன. அப்படியாயினும் அவனை "சிவன்" எனக் குறித்தல் இந்நெறியின் முதன்மைக் கொள்கையாகும். அதனால் அது 'சைவம்' எனவும், நெறியின் அறிவியல் அடிப்படை (The Rational of The Religion) 'சித்தாந்தம்' எனவும் ஆனது.

சைவசித்தாந்தம் உண்மைப்பொருளை அடித்தளமாக வைத்து ஒழுக்க நெறியினை உணர்த்துவதாகும். 'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு' என்பது இக்கொள்கையின் முதல் சிறப்பு விதியாகும். இதனை "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலர். அன்பே சிவமாவது ஆரும் அறிகிலர்" என்றார் திருமூலர். "தம்மையுணர்ந்து தமையுடையதனை உணர்வார் எம்மையுடைமை எமை இகழார் - தம்மை உணரார் உணராரே" என்பது சிவஞானபோத நூற்பாயிரத்தின் அவையடக்கமாகும். சைவசித்தாந்த நெறியிலே கூறப்படும் ஒழுக்க மெய்யியல் இருவகைப்படும். ஒன்று பொது ஒழுக்கம் - அவையாவன: சிவஞான சித்தியாரின் வாக்குப்படி 'ஒழுக்கம்' அன்பு, அருள், ஆசாரம், உபசாரம், உறவு, சீலம் வழுக்கிலாத்தவம், தானங்கள், வந்தித்தல், வணங்கல், வாய்மை, அழுக்கிலாத்துறவு அறிவொடு அர்ச்சித்தல் ஆதி - இழுக்கிலா அறங்கள் எனப்பட்டன. இவை 'இறைவன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து ஒழுகுதல் எனக் குறிக்கும். (Obedience to God)

ஏனையது சிறப்பொழுக்கம், இறைவனது அருளாற்றலில் நம்பிக்கையுடன் ஈடுபட்டு மனதை ஒருமுகப்படுத்தி திறனுணர்ந்து மனம் பற்றி மெய்யுணர்வு தலைப்பட்டு அவன் அருட்குணங்களில் தோய்ந்து - முடிவில் சிவனுடன் ஒன்றிக் கலந்து அவன் வண்ணமாய் சிவமாய் ஒன்றுதற்கு சாதனை செய்து கொண்டே இருப்பது இதனை 'அவனே தானேயாகிய அந்நெறி' என சிவஞான போதம் சுட்டும். சிவஞானபோதம் சித்தாந்தத்தின் அதிகாரப் பிரமாண சாத்திரங்

களில் முதன்மையானது. இந்நூலில் நான்கு இயல்கள் காணப்படுகின்றன. அவை பிரமாண இயல், இலக்கண இயல், சாதனை இயல், பயன் இயல் என்பன பிரமாணங்கள். இலக்கணங்கள் என்னும் முதலிரு இயலும் அறிவாராய்ச்சி அடிப்படையில் - அளவை கள், தாக்கவாதங்கள் மூலம் உட்பொருளை நிறுவும் முயற்சியாக உள்ளன. அடுத்துள்ள இரண்டு இயல்களும் மேற்குறித்த இறைவனது - உயிர்களது - உலகினது - உண்மையியல்பை உணர்ந்து அறிவால் தெளிந்து கொண்டால் அவற்றுள் சிக்குண்டு உலையாது அவற்றின் பிடியிலிருந்து தன்னை விடுவிக்கும், மார்க் கங்களில் ஈடுபடுதலைச் சாதனையாகவும் - அச்சாதனையின் பயன் 'வீடுபேறு' அல்லது 'மோட்சநிலை' அடைதல் எனவும் நிறுவி யுள்ளது. இச்சாதனை இயலே சைவசித்தாந்தம் கூறும் சிறப்பொழுக்கமாகும்.

அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்காக உணர்த்தப்படும் இந்த நான்கு நிலையிலும் மனிதனானவன் ஆற்றும் சாதனைகளே அவனைச் 'சாதனையாளன்' என உலம் போற்ற வைக்கின்றது. சைவசித்தாந்தம் கூறும் இந்த நால்வகை சாதனை மார்க்கங் களையும் வாழ்விலே கடைப்பிடித்து ஈழத்து சைவசித்தாந்த அபிவிருத்திப் பணிகளில் பெரும் சாதனை படைத்தவருள் சேர். பொன். இராமநாதன் அவர்கள் தன்னிகரற்ற சித்தாந்த சாதனையாளராக விளங்கினார். அன்னார் ஈழத்தமிழ் சமூகத்ினருக்கும் உலகிற்கும் ஆற்றிய சைவசித்தாந்த அபிவிருத்திப் பணி களை மேற்கொண்டு நோக்கலாம்.

**சைவசித்தாந்த அபிவிருத்திப் பணியில்**

அருட்பரானந்த சுவாமிகளால் ஆட் கொள்ளப்பட்டு இல்லற ஞானிகளாக வாழ்ந்த இருவரில் ஒருவர் சேர். பொன். இராமநாதன், அடுத்தவர். சேர். பொன். அருணாசலம் ஆவார். இருவரும் சுவாமி விவேகானந்தர், சுவாமி அரவிந்தர் என்பார் போன்று மேலை நாடுகளில் வேதாந்த விளக்கம் செய்தமை போன்று ஆங்கிலமொழி மூலம் சைவசித் தாந்த மெய்யியலை உலகறியச் செய்தவர்கள். தாயுமானவர் பாடல், திரு முருகாற்றுப்படை போன்ற சைவமெய்யியல் பொதிந்த இலக்கிய ஆக்கங்களை சேர்.பொன். அருணாசலம் இதமான ஆங்கில நடையில் மொழிபெயர்த் தார். பல்துறை விற்பன்னரும் விவேகஞானியு மான சேர். பொன். இராம நாதன் அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் சமய, மெய்யி யற் சொற்பொழிவுகள் ஆற்றினர். 1905ஆம் 1906ஆம் ஆண்டுகளில் சைவசித்தாந்தம் என்று சொல்லாமலேயே விவிலிய நூற்கருத்து க்கட்கு விளக்கமளிக்கும் வகையில் வாழ்வியல் இலட்சி யத்தை விளக்கமாக உரைக்கும் வகையாலும் சைவசித்தாந்தப் புதைபொருள் முழு வதையும் மேலைத்தேச மக்கள் நன்கு புரிந்து கொள்ளு மாறு விளங்க வைத்தார்.

சைவசித்தாந்த அபிவிருத்திப் பணிகள் என்னும் இப்பகுதியில் சேர்.பொன் இராம நாதன் அவர்கள் சைவசித்தாந்த மெய்யியலை ஐயம் திரிபறக் கற்றுணர்ந்து, அதனைத் தமது வாழ்நாளில் கடைப்பிடித்து சாதனையாக் கியமையுமே அன்னாரது முக்கியமான சித் தாந்த விருத்திக்குரிய பணியாகும். சைவசித் தாந்த மெய்யியல் காட்டும் வாழ்வியலில் எவ்வாறு அபிவிருத்தி பெறவேண்டும் என்ற வேணவாவினால் அவர் என்னென்ன பணிகள், சேவைகள், தொண்டுகள் ஆற்ற வேண்டும் என்பதும், அதற்கான அடித்தளம் எப்படி அமைய வேண்டும் என்பதனையும் சேர்.

பொன். இராமநாதன் அவர்கள் எவ்வாறு சாதித்தார் என்பதுவே இப்பகுதியில் கூறப் படும் விடயமாகும். அந்த வகையில் சைவசித் தாந்தத்தின் முதல் நூலான சிவஞானபோத வழிகாட்டலின் வழி நின்று அது கூறும் சாதனை இயலுக்கு வடிவமும் வாழும் பண்பும் கொடுத்தமையே அவரது உன்னதமான ஆளு மையாகும். சைவசித்தாந்த மெய்யியல் பற்றிப் பேசும் போது பலரும் பிரமாணவியலும் இலக்கணவியலும் தான் சைவசித்தாந்தம் என விளங்கிக் கொண்டு பேசுவதே இயல்பாக உள்ளது. அதனால் அவை வெறும் சாத்திர ஞானமாகவே நின்று விடுகின்றன.

சேர். பொன். இராமநாதன் அவர்கள் அவற்றையும் கடந்து சித்தாந்த சாத்திர ஞானத்தின் இலட்சியமாகிய சாதனை - பயன் இயலின் வழிநின்று சித்தாந்த ஞானசாத னைகட்கு அபிவிருத்தி வடிவம் கொடுத்து இயக்க ஆற்றலை வழங்கியமை மிகப்பெரும் சாதனையாகும். ஞானம் என்பது வெறும் ஏட்டுக்கல்வி அல்ல, வாழ்வியற் கல்வி என்ப தனை தமது ஒவ்வோர் பணிகளிலும், சேவை களில் நிலைபெறச் செய்தார். அத்தகைய அவரது சைவசித்தாந்த அபிவிருத்திப் பணிகளைப் பின்வருமாறு அடையாளம் காட்டலாம்.

1. சரியை நெறியில் அவரது பணிகள்
2. கிரியை நெறியில் அவரது பணிகள்
3. யோக நெறியில் அவரது பணிகள்
4. ஞான நெறியில் அவரது பணிகள் எனப் பகுத்து நோக்குவது சாலப் பொருத்தமாகும்.

"சங்கரனை அடையும் நன்மார்க்கம் நான்கு - அவை
சரியை, கிரியை, யோகம் ஞானம் என
நவிற்றுவதும் செய்வர்."
(சித்தியார் சாதனை இயல்)

சித்தாந்தம் கூறும் சாதன மார்க்க ங்களில் மேற்குறிப்பிட்ட நான்கு நெறிகளும் தேவாரகால நாயன்மார்கள் வாழ்ந்து காட்டிய சாதனைகளாகும். அந்த மார்க்கத்தில் சரியை எனில் உழவாரப் பணி மட்டுமே எனவும்; கிரியை எனில் ஆலயப் பூசைக்கிரியைகள் எனவும்; யோகம் எனில் மூக்கைப்பிடித்துக் காற்றை நிறுத்தி மூச்சுப் பயிற்சி செய்தல் எனவும் ஞானம் என்பது சித்தாந்த சாத்திரப் பயற்சி பெறுதல் மாத்திரம் என்பதாகவுமே நம்மில் பலரும் விளக்கம் கண்டுள்ளனர்.

நான்கு வகையான சாதனமார்க்கங்கள் அவை மட்டுமல்ல அவற்றிற்கு மேலும் உள் ளன என்பதனை நாயன்மார்களே செயற்படுத் திக் காட்டினர். நாட்டிலே பஞ்சம் வந்தால் இறைவனிடம் படிக்காசு பெற்றுப் பஞ்சம் தீர்ப்பதும், நோய்வாயப்பட்டால் நோயைத் தீர்த்து அடியவர்களை ஆதரிப்பதும், இறந் தாரைத் துயிலெழுப்பி மக்கள் தம் துயர் துடைப்பதும் மிகப்பெரிய சமூகசேவையென சம்பந்தர் அறிவுறுத்தினார். கிரியை என்பது திருக்கோயில் பூசை கிரியைகள் மட்டுமல்ல - சமுதாயத்திற்கும் மக்கட்கும் ஆற்றும் துயர் துடைப்பும் பணிகளும் கிரியை என்னும் செயல்வழி அறச்செயல் என்பதைச் சம்பந்தர் வாழ்வியல் விளக்கியது. அப்பர் சுவாமிகள் சமணரின் கொடுமைகளை எல்லாம் இறைய ருளால் தாங்குவதானது உலகிலே முதன்முதன் அகிம்சைக் கோட்பாட்டின் வழி மறத்தை வென்ற நிலையையும், அப்பரின் சித்தாந்த வாழ்வியல் உணர்த்தியது. அப்பர் சுவாமிகள் மேற்கொண்ட ஆரா அன்பினால் அப்பர் ஆற்றிய ஆலயத் திருத்தொண்டினை சமுதாய

அறப்பணியாக்கியவர் அப்பூதியடிகள். திருநாவுக்கரசர் தண்ணீர்ப்பந்தல், திருநாவுக்கரசர் அன்னதானமடம், என அனைத்து அறப்பணியையும் அப்பர் சுவாமிகட்கு அர்ப்பணமாக்கிய அப்பூதியடிகள் வாயிலாக சரியைப் பணிகள் யாவை என்பது விளக்கமுறும்.

யோகவாழ்வு என்பது கணவன் மனைவி இருவரும் அன்பினால் இணைந்த வாழ்வெனவும், குடும்ப வாழ்வானது தாம்பத்திய யோகம் எனவும் சுந்தரரின் தோழமை நெறி புலப்படுத்தியது. யோகம் எனில் இறை அன்பினில் இணைதல் - பாசங்களை விட்டுப் பிரிதல் எனவும் யோக சூத்திரம் கூறும். அன்பால் இணையும் கணவன் மனைவியர் வாழ்வு தியாகமாகவும் தாம்பத்ய யோகமாகவும் அமைவதே சிறப்பு என்பதனை சைவசித்தாந்தம் இவ்வாறு எடுத்துக்காட்டியது. ஞான மார்க்கம் அன்பு நெறியில் அறிவும் உணர்வும் சமப்படும். மனச் சமநிலையினைக் குறிக்கும் என்பது பகவத்கீதை தரும் விளக்கமாகும். சைவசித்தாந்தத்திலும் இருவினையொப்பு - மலபரிபாகம் என்றும் ஞானவிருத்தி நிலையில் ஒருவருக்கு விருப்பு வெறுப்புக்கள், இன்பதுன்பங்களை சமமாக நோக்கும் பாவனையில் பக்குவம் ஏற்பட்டால் மனச் சமநிலை சித்தியாகும் என சித்தாந்த சாத்திரங்களும் கூறியுள்ளன.

இத்தகையதொரு சாதனைப் பணிகளின் அபிவிருத்தியை மிகவும் நுட்பமாக தமது ஞானக் கண்ணாகிய அறிவுக் கண்ணால் விளங்கிக் கொண்டு தான் வாழ்ந்த சமூகத்திற்கும் தனது நாட்டுக்கும் சேர்.பொன். இராம நாதன் அவர்கள் சைவசித்தாந்த ஞான விருத்தியின் அடிப்படைகளிலிருந்து பெரும் பணியாற்றி சாதனை படைத்தார். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரால் மிகவும் நேசிக்கப்பட்ட நம்பிக்கை நட்சத்திரமாக சேர். பொன் இராமநாதன் அவர்கள் விளங்கினார். நாவலர் தாம் ஆற்றிய சைவ சித்தாந்த பணிகளையும், அரசியல் நெறிகளையும் சேர். பொன். இராம நாதன் மூலமே காரியப்படுத்த நினைத்து அவரைச் சட்ட சபைக்கும் அனுப்பும் முயற்சியில் வெற்றி பெற்றவர். நாவலர் பெருமானின் சைவ மறு மலர்ச்சி இயக்கத்திலும், சித்தாந்த பணி விருத்தியிலும் அன்னாரின் வாரிசாகவே இராமநாதன் அவர்கள் விளங்கினார்கள்.11 நாவலர் மறைந்த பின்னரும் அவரது சமய தத்துவ கலாச்சாரப் பணிகளை அவரைப் போலவே தனிமனிதனாக நின்று எந்தவித அறைகூவலையும், சவால்களையும் எதிர் கொண்டு வெற்றியுடன் செயற்பட்டவர் இராமநாதன் அவர்கள். நாவலர் ஆரம்பித்து வைத்த சைவ மெய்யியல், கலாசார மறு மலர்ச்சியை சமுதாயத்தில் வேரூன்றச் செய்வதற்கு இராமநாதன் அவர்களிடமிருந்த பொருள் வளமும், மேலைநாட்டு பிரயாணத் தொடர்புகளும் நல்லதொரு வாய்ப்பாக அமைந்தன. அதிலும் இராமநாதன் அவர்களும் நாவலரைப் போன்று கிறிஸ்தவ மிஷனரிமாருடைய யுக்தியைப் பயன்படுத்தி சைவ சித்தாந்த விருத்தியினை சமுதாயத்தில் வேரூன்றச் செய்வதில் வெற்றி பெற்றார்.

## சைவசித்தாந்த சாதனைகளில் சரியைத் தொண்டு

சைவசித்தாந்தம் அறிவாராய்ச்சி இயலில் இலக்கண இயல், பிரமாண இயல் போன்ற அளவைப் பிரமாணங்களின் நுட்பங்களை விளக்கியுள்ளமையினை சிவஞான சித்தியார், சங்கற்பநிராகரணம், பரமோட்ச நிராச காரிகை போன்ற சாத்திர நூல்களால் அறிய முடியும். அவ்வாறே சிவஞானபோதம் கூறும் சாதனை இயல் என்பதில் கூறப்படும் நான்கு மார்க்கங்களில் திருக்கோயில் அமைத்தலும், திருக்கோயில் வழிபாடுமே கிரியா நெறி யாகும் என்னும் நிலைப்பாட்டினின்று மேலும் ஒருபடி உயர்ந்து சேர். பொன் அவர்கள் அத் தொண்டு நெறியானது சமுதாய சேவையாக வும் பரிணமிக்க வேண்டும் என்னும் மார்க்கத் தினையும் செயலாற்றுவதன் மூலம் நிறுவினர். சைவசித்தாந்தத்தில் ஆன்மீக விடுதலைக்குரிய சாதன மாகவும் கலைகளின் உறைவிடமாக வும், சைவநறியின் நிறுவனமயப்படுத்தப் பட்ட நிலையமாகவும் திருக்கோயில்கள் செயற்பட்டு வருகின்றன. அறிவியல் உண்மை களைப் பரிசோதிப் பதற்கும் தீர்மானிப் பதற்கும் பரிசோதனைக் கூடங்கள்(Laborataries) இருப்பது போல தனிமனிதனது நடத்தைக் கோலங்கள் பண் பாட்டு விழுமியங்கள், அறநெறிகள், சேவை கள், சமூக மேம்பாட்டு ஆன்மவிருத்தி என்பவற்றில் (Training Centers) பயிற்சி அளிக்கும் சுயபரிசோதனைக் கூடங்களாக ஆலயங்கள் விளங்கின. அதுவே திருக்கோயில் வழிபாட்டின் இலட்சியமாகும். சோழமன்னர்கள் காலம் அமைந்த திருக் கோயிற் பணிகள் இவற்றினை உள்ளடக் கியனவாகவே விரிவாக்கம் பெற்றிருந்தன. காலப்போக்கில் கோயில்கள் தனியார் ஆளு மையில் வளர்ச்சியடையத் தொடங்கியதும் அங்கு நித்திய, நைமித்திய பூசைகட்கு மட்டுமே முக்கியத்துவம் வழங்கப்படலா யிற்று. அரச ஆதரவும் நிதிவளமும் இருந்த போது ஆற்றிய சமூகப் பணிகள் பிற்காலம் போதிய நிதி உதவி இன்மையால் மறைந்து அருகிப் போயின.

சேர். பொன் அவர்கள் தமது அரசியல் பிரவேசம் ஊடாகவும் நிதிவளம் மிக்க குடும் பத்தில் வந்தவராதலாலும் அவற்றின் வளங்கள் மூலம் சித்தாந்த மார்க்கமான சரியை நெறி யினை சமுதாய சேவையாகவே மாற்றிக் கொண்ட திருக்கோயில் பணிக்கும் முக்கியத் துவம் வழங்கினார். இந்துக்கள் வாழ்விலே 'இந்து' ஒருவனின் ஆன்மீக இலட்சியத்தை அடையும் வழிகளையும் அனைத்து மக்களின் சமூகப் பண்பாட்டு உருவாக்கத்திலும் திருக்கோயில்களின் பணி உன்னதமானது. கோயிலில் அமைந்துள்ள இறைவனும் கொடித்தம்பமும் சித்தாந்தம் கூறும் பதிப் பொருளையும் கொடித்தம்பத்தில் உள்ள சேலை பசுவாகிய ஆன்மாவையும் சேலையில் சுற்றப்பட்ட கயிறு பாசமாகிய மலங்களையும் குறிக்கின்றது. எனவே முப்பொருள் தத்துவத் தின் விளக்கமாகவே திருக்கோயில்கள் அமைந் துள்ளன. இத்தகைய உன்னத நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு கொழும்பு மாநக ரில் சேர். பொன் அவர்கள் பொன்னம்பல வாணேஸ்வரர் ஆலயத்தை அமைத்தார்.

இதனை 1856இல் பொன்னம்பல முதலியாரே முதலில் கட்டு வித்தார்.[12] பின்னர் 1907ஆம் ஆண்டிலே சேர். பொன் அவர்கள் மீண்டும் இக் கோயிலைப் புனருத்தாரணம் செய்து தனிக்கருங்கல்லால் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த கோயிலாகக் கட்டுவித்தார். வேதாகம அடிப்படையில் சிற்பசாஸ்திர விதிகட்கமைய இக்கோயில் அமைத்ததுடன் தானே அதன் முகாமையா ளராக இருந்து ஆகம முறைப்படி விழாக்களை ஒழுங்குபடுத் திப் பரிபாலனத்தையும் செய்து வந்தார்.[13]

சைவப் பெண்களுக்கும், ஆண்களுக்கு மாக நிறுவப்பட்ட இராமநாதன் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரிகளிலும் வழிபாட்டிற் கென ஆலயங்களை அமைப்பித்தார். மருத னார்மடம் இராமநாதன் கல்லூரியில் ஒரு நடேசர் கோயிலையும் (பரமேஸ்வராக் கல்லூரியான) யாழ் பல்கலைக்கழகத்தில் பரமேஸ்வரன் கோயிலையும் அமைப்பித்து முழுமுதற் கடவுளான சிவனுக்கு மூன்று ஆலயங்களினைக் கட்டுவித்தார். 'இக்கல்வி நிலையங்களில் அறிவுத் திறனுடன் அறநெறிப் பட்ட வாழ்வுடன் கூடிய தமிழ் சைவ மெய் யியல் கல்வியும் சித்தாந்த மரபும் ஒன்றிணைய வேண்டும்.'[14] என்னும் சீரிய சிந்தனையின் விளைவாக எழுந்தவையே இத்திருக் கோயில் களாகும். 1917ஆம் ஆண்டிலே தமிழ் நாட் டிலே சிதம்பரம் போன்ற திருக்கோயில் களின் சுதந்திரமான வழிபாடு, நிதிவளம் என்ப வற்றில் பாரிய அச்சுறுத்தல்கள் அக்கால அரசியற் சூழ்நிலை காரணமாக ஏற்பட்டது. அவற்றின் பிரச்சினைகளை விசாரிக்க ஒரு கொமிசனும் ஏற்படுத்தப்பட்டது. அந்தச் சமயத்தில் சேர். பொன். இராமநாதன் அவர்க ளும் அங்கு இருந்தமையால் தமது தீர்க்கமான சட்ட ஆலோசனைகளின் வழி சிதம்பரம் உட்பட்ட பல திருக்கோயில் சிக்கல்களைத் தீர்த்து வைத்தமையினை[15] தமிழ்நாட்டு அறிஞர்குழு வெகுவாகப் பாராட்டி வாழ்த்திய மையும் அன்னாரின் திருக்கோயிற் பணிகட் குச் சிறந்த எடுத்துக்காட்டாகின்றது. சைவசித் தாந்த முதல் நூலான சிவஞானபோதம்

"......... மாலறநேயமும் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரசன் எனத் தொழுமே"
(சூ12)

எனக் குறிப்பிட்டவாறு பண்பாட்டு விருத்தியில் அதிக கவனம் செலுத்தினார்.

சேர். பொன் அவர்களின் சீரிய ஆத்ம ஞான சிந்தனையால் இவ் ஆலயங்கள் சைவசித்தாந்த சாதனை வரிசையில் மக்கள் சரியைத் தொண்டில் நின்று ஆன்ம ஈடேற்றம் பெறும் வகையில் இக்கோயில்களில் ஆறு காலப் பூசை, மூன்று காலம், காலை, மாலை பூசை முறைகளையும் ஏற்படுத்தி சைவமக்கள் அதீத பயன் அடையுமாறு பணியாற்றினார். சைவநாயன்மார்கள் பக்திமார்க்கம் சிறக்கும் பொருட்டு - அடியார்கள் மேன்மை ஓங்கவும் ஆலய வழிபாட்டை வழமையாக்கினார். சேர்.பொன் அவர்கள். இவற்றுடன் சைவமக் களின் அறிவுத்திறன், ஆன்மீகக் கல்வியின் மேம்பாடு சிறக்கவேண்டி ஆலயங்களை கல்விச்சாலைகளுடன் இணைத்து - வித்தியால யங்கள் என்னும் பெயருக்குப் பொருள் விளங்குமாறு பணிசெய்தார். சேர். பொன்

அவர்கள் சிவபூசை, குருபூசை, மகேஸ்வர பூசை என்பன ஆலயங்களில், மடங்களில், சமய நிறுவனங்களில், கல்வி நிலையங்களில் கொண்டாடப்பட வேண்டும் எனவும் விரும்பினார். மக்களது வழிபாட்டு சுதந்திரத்தை மிகவும் வற்புறுத்தினார். 1918ஆம் ஆண்டு கதிர்காமத்திதல யாத்திரை செல்பவர்கள் அப்பகுதி பிரதேச அரச அதிபர் அல்லது உதவி அரசாங்க அதிபரிடமிருந்து உத்தரவு பெற வேண்டும். அதற்காக 1000/= ரூபா செலுத்த வேண்டுமென ஒரு வர்த்தகமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.[16] இச்சட்டம் தமிழ் மக்கட்கு மட்டுமே என அறிந்த சேர். பொன் அவர்கள் இங்கிலாந்தைச் சேர்ந்தவர்கள் இவ்வளவு அநாகரிகமாக நடப்பதா? என அவகளது தவறைச் சுட்டிக் காட்டி வாதாடி அடியவர்கள் யாவரும் சுதந்திரமாக வழிபாடு செய்யவும் யாத்திரை மேற்கொள்ளவும் பேருதவி புரிந்தார். 'சைவப் பண்புகளைப் பேணிக் காத்த பெருந்தகை' என்று கா. கைலாசநாதக் குருக்களும் அன்னாரது சைவ மெய்யியல் பங்களிப் பினைப் போற்றியுள்ளனர். அவரது தந்தையார் கார்த்திகேயக் குருக்களே சேர். பொன் அவர்க ளின் குடும்ப சோதிடராக விளங்கியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.[17]

சேர். பொன் அவர்களது திருக்கோயிற் பணிகள் தமிழகத்திலும் விரிவாக்கம் பெற்றன. குறிஞ்சி நிலக் கடவுளான முருகனுக்கு கொடைக்கானலில் கோயில் அமைத்த பெருமையும் இவருக்குண்டு. அவரது மனைவியான லீலாவதி இராமநாதன் அவரது இக்கருத்தினை நிறைவு செய்யப் பேராதரவாக விளங்கினார். சைவக் கோயில்கள் குறைவாக உள்ள கொடைக்கானலில் தமது சொந்தப் பணத்தில் நிலம் வாங்கி கோயில் அமைத்து 'குறிஞ்சி யாண்டவர் கோயில்' எனப் பெயரிட்டுக் குழந்தை வேலாயுதசாமியை அங்கு எழுந்தருளச் செய்தார். இவை பற்றிய விபரத்தை க. ச. குலரத்தினம் எழுதிய 'வள்ளல் கௌரவ சேர்.பொன். இராமநாதன்' என்னும் கையெழுத்துப் பிரதியாகவுள்ள ஓர் கட்டுரையில் விளக்கமாகக் காணமுடியும்.[18] இவ்வாறாக சைவக்கோயில் வளர்ச்சிகளினூடாக சைவசித்தாந்தம் கூறும் திருக்கோயில் வழிபாட்டினைத் தமிழகத்திலும் நிலைபெறச் செய்யுமாறு பணியாற்றிப் பெருமை பெற்றார்.

**சைவசித்தாந்த நோக்கில் அமைந்த கிரியைத் தொண்டு**

சரியை, கிரியை என்னும் சைவ சித்தாந்த மரபிலே திருக்கோயிற் தொண்டு மாத்திரமன்றி மனித சமுதாய முன்னேற்றத்திற்காக ஆற்றும் உயர் ஆத்மீகக் கல்விப் பணியும் - உயர் கிரியா நெறியின் பாற்படும் என்பதனை சேர். பொன். அவர்களது வாழ்வு உணர்த்தி நிற்கின்றது. "சரியை, கிரியை என மருவுபவை யாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தமென ....." என்ற சிவப்பிரகாச நூலின் வாக்கிற்கேற்ப தமது வாழ்வினைச் சித்தாந்த மார்க்கத்தில் வகுத்துக்கொண்டார். தன்னை ஒரு 'சைவசித்தாந்த மார்க்க' எனக் கல்வெட்டில் எழுதி வைத்தான் பல்லவ மன்னன் மகேந்திரன். சேர். பொன். அவர்களும் தமது சித்தாந்தமார்க்கத்தை கிரியைநெறி எனும் செயல்வழி ஆக்கமாகத் தாம் நிறுவிய கல்லூரிகளில் வாயிலாக முன்னெடுத்தார்.

தமிழகத்திலும் கல்வி பயின்ற தமது இளமைக் காலங்களிலும் வேதம், ஆகமம், இதிகாசம், புராணங்கள், சைவத்திருமுறைகள், சைவ மெய்யியல் கோட்பாடுகளில் நன்கு கற்றுப் பயிற்சி பெற்றதனால் தமது சித்தாந்த மறைஞானக் கல்வியினைத் தாம் அமைத்த கல்லூரிகள் ஊடாக முன்னெடுக்கும் வகையில் பாட போதனைகளை அமைத்தார்.

ஆறுமுகநாவலரால் அரசியற் பணிகட்கு அறிமுகப்படுத்தப்பட்டது போன்று அவரைப் போலவே சைவம், தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் என்பவற்றை நன்கு ஆதரித்து வளர்த்தார். பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய தத்துவங்களிலும் ஆழமான புலமை கொண்டிருந்தார். சமரச சன்மார்க்க நெறியே அவரது இலட்சியமானது. குறிப்பாக சைவசித்தாந்தம், வேதாந்தம் முதலியவற்றிலும் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தார்.[19] இலங்கைக்கு என ஒரு கல்விக் கொள்கையை உருவாக்கியவர்களில் இராமநாதன் அவர்களும் ஒருவராவார். தமது கல்விக் கோட்பாட்டின் அடிப்படையில் இராமநாதன் கல்லூரியின் தேசிய பண்பாட்டு மறுமலர்ச்சியினை சமய மெய்யியல் பண்பாட்டுச் சித்தாந்தங்கள் ஊடாக வளர்ப்பதில் ஆர்வம் காட்டினார்.[20] அவரால் நிறுவப்பட்ட இரு கல்லூரிகளிலும் மேலை நாட்டு, இந்திய, இலங்கை ஆசிரியர்கள் கல்வி புகட்டினர். விஞ்ஞானம் மட்டுமன்றி சமய, கலாசார தத்துவ வித்தைகளும் போதிக்கப்பட்டன. இராமநாதன் கல்லூரியில் சைவசித்தாந்தம் பற்றிய கலந்துரையாடல்களும் நடாத்தப்பட்டமை[2013] இராமநாதன் அவர்களது சைவசித்தாந்த ஈடுபாட்டினை மேலும் புலப்படுத்துவதாகும். இவரது கல்விப்பணியை மதிப்பிடும் இந்து ஓகன் (Hindu Organ) பத்திரிகையானது 'எல்லாத்தேச இனத்தவரும் ஒன்றாகக் கற்கக்கூடிய பெரிய கல்லூரியை அமைத்து கீழைநாட்டு, மேலை நாட்டு உன்னதமான சிந்தனைச் செல்வங்களைக் கற்பிப்பதில் பாடுபட்டுள்ளார் எனக் குறிப்பிட்டது. நவீன நிலைக்கு ஏற்ற கல்வியையும் எமது பண்டைய நூல்களில் பொதிந்து கிடக்கும் இலக்கிய தத்துவ அறிவினையும் இணைத்து தகுந்த கல்லூரி ஒன்றினை அமைப்பதே எனது நோக்கம் எனவும் தமது போட்டியில் தெரிவித்தார்.[21] தமது துணைவரின் கல்விச் சிந்தனையையும், கல்விப் பணியையும் கருத்தாகக் கொண்டே லீலாவதி அம்மையார் தொடர்ந்தும் அயராது உழைத்து வந்தார். இவர் தனது துணைவரை ஆத்மீக குருவாகக் கொண்டு 1906ஆம் ஆண்டு முதல் அவரால் எழுதப்பட்ட 'கீழ்நாட்டு மாணவர்கட்கு மேல்நாட்டுக் காட்சிகள்' (The Westrn Pictures to Eastern Students) என்னும் நூலானது இராமநாதன் அவர்களின் சொற்பொழிவுகளை அடிப்படையாக வைத்துச் சமயம், சித்தாந்தம், மொழி, கலாசாரம் என்பவற்றைத் தெளிவுபடுத்தி விளக்க எழுந்த நூலாகும்.

சைவவித்யா விருத்திச்சங்கம் ஸ்தாபித்து சேவையாற்றிய போதும் சரி, சைவசாரியார் பயிற்சிக்காக ஒரு கல்லூரியை நிறுவிய பணியிலும் சரி, கல்வியின் பரந்த நோக்கம் என்பது 'சைவசமயப் பண்பாட்டு மரபும் சைவ நெறியும், சைவம் புகட்டும் நித்திய மான தத்

துவ மரபும் கருணையையும் பரப்புவதாகும்' என்றே விளக்கப்பட்டது.[22] மேலும் கோயில் கட்கு அருகிலே பாடசாலைகள் அமைத்தது மட்டுமன்றி கல்லூரிகட்குள்ளேயும் கோயில் கள் அமைத்தமையானது மக்களிடமும் மாணவர்களிடமும் சமய மெய்யியல் உணர்வு டன் கல்வியையும் இணைத்துப் பண்பாட்டு உணர்வுகளைப் பலப்படுத்து வதாகவும் அமைந்தது. இராமநாதன் அவர்களது உறவினரான கலாயோகி ஆனந்த குமாரசு வாமி அவர்கள இலங்கைப் பல்கலைக் கழகத்தை ஆரம்பிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தவர்களில் ஒருவர். அவர் தமது கருத்தில் "மக்கள் விரும்பும் மேல்நாட்டுக் கல்வியைத்தான் இங்கு நடை முறைப்படுத்துவதாயின் அவ்வாறான பல் கலைக்கழகம் தேவையற்றதாகும். கீழைத்தேய பண்பாடு, தத்துவம், மொழி, இசை, கலை இவற்றைப் பெறக்கூடிய வகையில் பல்கலைக் கழகம் உருவாக வேண்டும். இப்பல்கலைக் கழகத்தில் கீழைத்தேய மேலைத்தேய பண் பாடுகள் சங்கமிக்க வேண்டும். 13 என இலங்கை பல்கலைக்கழகத்தின் குறிக்கோள் களைச் சுட்டிக்காட்டி அவை எப்படி அமைய வேண்டும் என்பதையும் குறிப்பிட்டார். மேலும் 'இலங்கை முழுமைக்கும் ஒரே பல்கலைக் கழகம் என்ற கருத்தையும் இராமநாதன் அவர்கள் ஏற்கவில்லை. அவரது உயர் கல்விக் கனவை நனவாக்கும் வகையில் வட இலங்கை யில் யாழ்ப்பாணத்திலே கலாசாரப் பல்கலைக் கழகமொன்று உருவாக்க விழைந்த போதிலும் 1974ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தான் அது சாத்தியமானது. அவரது பரமேஸ் வராக் கல்லூரியை மையமாகக் கொண்டு அமைக் கப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தமிழ்மொழி, இந்துநாகரிகம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கட்கு முதன்மை அளிக்கப் பட்டது. முதலில் இப் பல்கலைக் கழகம் மனித பணியியல் பீடமாக இந்து நாகரிகம், வரலாறு, தமிழ், சமஸ்கிருதம், சிங்களம் ஆகிய துறை களுடன் தான் ஆரம்ப மானது. விஞ்ஞான பீடமும் நிறுவப்பட்டது. பின்னர் மனிதப் பண்பியல் பீடம் கலைப் பீடமாக மாறியது. இந்துநாகரிகத்திற்கென தனியானதொரு துறை உலகப் பல்கலைக்கழகங்களில் இல்லாத ஒரு துறை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலேயே தனித்துறையாக ஆரம்பித்து கொழும்புப் பல்கலைக்கழகத்தில் 'தமிழ் - இந்து பண்பாட்டுத்துறையாக' முதன்முதல் ஆரம்பித்த பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தனித்துறையாக அமைந்து விளங்குவதற்கு இராமநாதன அவர்களது தீர்க்கதரிசனமும் ஊற்றாக அமைந்தது எனில் தவறில்லை.

இவ்வாறாக இராமநாதன் அவர்கள் சைவசித்தாந்தத்தை ஒரு கலாசார ஊடக மாகவே நிலைபெறச் செய்வதில் தனது கல்லூரிகளையும் திருக்கோயில்களையும் கல்விப்பணிகளையும் சரியை, கிரியை நெறி களாகவே பாவித்து அதில் வெற்றியும் கண் டார். அதன் பயானகவே பிற்கால வாழ்வில் யோகசாதனையிலும் ஞானசாதனையிலும் ஈடுபட்டு பெரும் பணியாற்ற முடிந்தது.

**சைவசித்தாந்த யோகசாதனையில் ஆற்றிய பணிகள்**

சேர். பொன். இராமநாதன் சித்தாந்த அபிவிருத்திப் பணியில் அவரது நூலாக்கப் பணிகள் பெறுமதி வாய்ந்தனவாகும். அன்னாரது மனச் சமநிலை பேணும் யோக வாழ்வினை அத்தகைய நூலாக்கங்களில் காணமுடியும். சதா புறம் நோக்கியே உலக

விவகாரங்களில் ஈடுபட்டு சிதறிக்கிடக்கும் ஐம்பு லன்களை உள்முகமாகத் திருப்பி ஒருமைப் படுத்தி சிவத்தியானத்தில் ஈடுபடுத்து வதால் யோகநலம் கைகூடும். ஆன்மா ஈடேற் றமும் அடையலாம் என்பது சைவசித்தாந்தம் கூறும் உன்மைகளில் ஒன்றாகும். "கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர் ஓடும் செம் பொன்னும் ஒக்கநோக்குவர்" என்னும் சேக் கிழார் வாக்கு இவ்வுண்மையை எடுத்துக் காட்டும் இராமநாதன் அவர்களும் தமது சைவ அபிவிருத்தியை அடிப் படையாகக் கொண்ட புறச்சரியை என்னும் சமுதாய மேம்பாட்டுக்கான அபிவிருத்திப் பணிக ளுடன் நின்றுவிடாது தன்னையும் சாஸ்திரக் கருத்துக்களையும் யோகநிலையில் நின்று ஆய்ந்து விளக்கி உள்ளமைக்கு அவரால் ஆக்கப்பட்ட நுலாக்கங்கள் தக்க சான்றாகும்.

இவரது ஆத்ம ஞான நூலாக்கங்களில் பகவத்கீதை விருத்தியுரை, ஆத்திசூடி மந்திர விளக்கம், திருக்குறள் பாயிரம், இராமநா தேயம் போன்றவை குறிப்பிடத்தக்கன. செந்தமிழ் இலக்கணம் என்ற நூலும், பொன் னம்பலம் இராமநாதனின் தெரிந் தெடுத்த பேச்சுக்கள் என்பவற்றிலிருந்தும் அவரது சைவ சித்தாந்த ஞானத்தை உணரலாம்.[24] பகவத் கீதைக்கு அவர் எழுதிய தமிழ் மொழிபெயர்ப் பையும் விருத்தியுரையையும் கற்றுணர்ந்த மு. சர்வேஸ் வரசர்மா என்னும் வடமொழி அறிஞர் சங்கரர், இராமானுஜர் உரைகளால் விளங்க முடியாதவற்றை இந் நூலைக் கற்று இராம நாதனின் ஞானோப தேசத்தினால் அறிய முடிந்ததெனவும் குறிப்பிட்டார்.[25] அதனால் பகவத் கீதைக்குச் சைவசித்தாந்த பரமாக விளக்கவுரை கண்டவர் எனவும் பாராட்டப்பட்டார். தர்மசாத்திர நூல்களி லுள்ள விடயங்களைத் தொகுத்து "இராமநா தேயம்" என்ற நூலாக வெளியிட்டார். அவரது ஆத்திசூடி உரை, இலக்கண உரை என்பன அன்னாரின் சித்தாந்த அறிவுநுட்பம், சமய ஞானம் அறி வாற்றல் என்பவற்றை நன்கு புலப்படுத்தியுள்ளன. வேதாகமங்களையும் பகவத்கீதையினையும் சைவத்திருமுறைக ளுடன் வேறுபல நூல்க ளையும் கற்றுணர்ந்த இராம நாதன் அவர்கள் அவற்றில் கூறப்பட்ட படி சமயானுட்டானங்களையும் கடைப் பிடித்து ஒழுகினார். யோக நெறியில் அவருக்கி ருந்த ஈடுபாடு இந்நூல்களைக் கற்றுத் தோர்ந் ததனால் ஏற்பட்ட பயிற்சியானது அவரது கம்பீரமான தோற்றத் திற்கும் நீண்ட ஆயுள் காலத்திற்கும் ஒரு காரணம் எனவும் அறிஞர் புகழ்ந்துள்ளனர்.[27] ஆடம்பரச் சூழல், ஆங்கி லக்கல்வி இவற்றின் மத்தியில் பார்வைக்கு கனவானாகவும் மனப் பக்குவத்தில் கர்ம யோகியாக - செயல் வீரராக சைவத்தமிழ் மக்களின் கலை, கலாச்சார, வடிவத்தின் பிரதி நிதியாகவே வாழ்ந்தார்.

ஆத்திசூடி என்ற நூலிற்கு எழுதிய மந்திர விளக்கத்தால் "எவன் விதிக்கப்பட்ட கருமங்களை அனுசரித்தும்; விலக்கப்பட்ட கருமங்களை நிஷேசித்தும் வாழ்வானோ அவனுக்கு சித்த சுத்தி உண்டாகிப் பேரன்பும் பேரறிவும் தலைப்படும்" என்ற விளக்கமானது அன்னாரின் மனப்பக்குவத்தையும் யோக வாழ்வின் விழுமியங்களையும் நன்கு வெளிப் படுத்தியுள்ளது.[28] இந்துக்கள் அனைவரும் தனது தினசரி வாழ்விலே ஆன்மவித்தையில் அபிவிருத்தியடைய வேண்டுமெனில் இரவில் பெரும்பகுதியை ஞானநூல்களை வாசிப் பதிலும் ஓதி உணர்வதிலும் யோக சாதனை களில் ஈடுபட்டு இறை வழிபாட்டிலே

சாதனை செய்பவர்களாக இருக்க வேண்டும் என்னும் அறிவுரையானது அன்னாரின் சைவ சித் தாந்த வாழ்வியல் அனுபவவாக்காகும். இதனை "சகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்து வளி - இரண்டும் சலிப்பற்று அகமார்க்கம் அறிந்து அவற்றின் பொருள் உணர்ந்து அங் கணைந்து போய் முழுச்சோதி நினைந் திருத்தல்.[29] யோக மார்க்கமாகும் எனச் சித்தியார் குறிப்பிட்டுள்ளது. இவ்வாறு யோக சாதனை வழிநின்று சித்தாந்த ஞானமார்க்கம் கைகூடப் பெற்றதுடன் அதனை உணர்ந்த வாறு சாத்திர நூல்கள் வாயிலாகவும் எழுதி வைத்தார்.

**சைவசித்தாந்த ஞானசாதனை அபிவிருத்திப் பணிகள்**

சேர். பொன். இராமநாதன் அவர்கள் தஞ்சாவூர் அருட்பரானந்த சுவாமிகளுடன் ஏற்பட்ட தொடர்பிலிருந்து அவரிடத்தில் சைவசித்தாந்த ஞானத்திலும் ஒப்புயர்வற்ற ஆளுமைதிறன் வெளிப்பட்டது. இலங்கை சட்டநிரூபணசபையில் அவருக்களித்த பிரியா விடையில் அவரது உயர்ஞான வேட்கை பதிவாகியுள்ளது. அப்போது அவர் ஆற்றிய பதிலுரையில் 'இதுவரை நியாயத்துறையிலும் சட்ட நிரூபணசபையிலும் ஆற்றிய பணிகளை விட மேலானபணி ஒன்று இருப்பதாக உணர்கிறேன். அதனை அறிந்து கொண்ட பின் இந்நாள்வரை என் வாழ்நாளெல்லாம் நீதிமன் றத்திலும் அரசியல் அரங்கிலும் வீணாகி விட்டன என்பதனையும் உணர்ந் தேன்' என்ற கூற்றில்[30] அவரது சைவசித்தாந்த ஞானத்தின் மேலுள்ள அதீத ஆர்வமும் பற்றும் விடுதலை வேட்கையும் வெளிவந்துள்ளது. 1893ஆம் ஆண்டு இந்து மதம் உலகப்பிரசித்தி பெற்ற காலமாகும். அந்த ஆண்டில்தான் சிக்காக்கோ நகரில் ஏற்பாடு செய்யப்பட்ட அகில உலக சமய மகாசபையில் சுவாமி விவேகானந்தர் வேதாந்தம் பற்றிய சொற் பொழிவை ஆற்றி பெரியதோர் விழிப்புணர் வைத தோற்று வித்திருந்தார். அதனைத் தொடர்ந்து அமெரி க்கா, பிரித்தானிய மக்களி டையே ஏற்பட்ட கீழைநாட்டு சைவ மெய்யியல் தொடர்பான ஆர்வமானது சேர். பொன். இராமநாதன் அவர்களால் அம்மக்க ளிடையே பன்மடங்கு செல்வாக்குப் பெற்றது.

இராமநாதன் அவர்களது சைவசித் தாந்த ஞானத்தின் ஒப்புயர்வற்ற ஆளுமைத் திறன் காரணமாக 1905இல் சென்னை சைவ சித்தாந்த மகாசமாஜம் சிதம்பரத்தில் நடாத் திய முதலாவது சைவசித்தாந்த மாநாட்டுக்கு அவரைத் தலைமை தாங்க அழைத்தது. இந்நிகழ்வானது அவரின் ஞானவாண்மை விருத்திக்கு ஓர் அத்தாட்சியானதுடன் அக் கால சைவசித்தாந்த மேதை கள் அனைவரை யும் திருப்திப்படுத்தும் சைவ சித்தாந்த ஞானவானாக அறியப்பட்டிருந்தமையினை அறிவிப்பதாகவுமுள்ளது.[31] இவற்றிலும் அதிகமாகப் பன்மடங்கு அன்னாரது சைவ சித்தாந்த அறிவியல் மேதைத்தனம் பெருவீச் செடுத்து பெருக்கெடுத்தோடுதற்கு அவரது 1905ஆம் 1906ஆம் ஆண்டுகளில் அவர் மேற் கொண்ட அமெரிக்கச் சுற்றுலாப் பேருரைகள் சான்றாக அமைந்தன. சுவாமி விவேகானந்தர் வேதாந்த ஞானத்தை விளக் கியது போன்று இராமநாதன் அவர்கள் தமது சைவசித்தாந்த ஞானத்தைத் தமது விளக்கவுரையில் எடுத்துரைத்தார். பல்துறை விற்பன்னராகிய இராமநாதன் அவர்கள் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் ஆற்றிய சமய சித்தாந்தச் சொற்பொழிவுகள்

'சைவசித்தாந்தம்' என்று சொல்லாமலே விவிலிய நூல்கருத்துக்கட்கு விளக்கம் கொடுக்கும் வகையில் சித்தாந்த ஞான சிந்தனைகளை விளக்கினார். அத்தகைய விளக்க விருத்தியுரைகளினால் சைவ சித்தாந்தப் பொருள் முழுவதையும் மேலைத்தேச மக்கள் நன்கு மனம் கொள்ளுமாறு பதிய வைத்தார். அவர்களும் 'சர்க்கரையில் பொதிந்த மருந்து சர்க்கரை என்றே விழுங்கிப் பயன் பெறுவார் போல சைவசித்தாந்தம் என்றறியாமலே சைவசித்தாந்த உண்மைகளைத் தெளிந்தறியும் நிலை உண்டாயிற்று[32] என்ற அறிஞர் மு. கந்தையா என்பவரின் பாராட்டுரை இராமநாதன் அவர்களின் சைவசித்தாந்த அபிவிருத்திப் பணிகளை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது.

அன்னார் 'பொஸ்ரன்' நகரில் யூதர்கள் மத்தியில் பேசிய 'ஜெருசலேம் ' என்ற பேச்சினை நுட்பமாக ஆராய்ந்தால் அதனுள் பொதிந்துள்ள சைவசித்தாந்தக் கருத்துக்களை விளங்கமுடியும். 'ஜெருசலேம்' என்பது மனிதனுக்குள்ளிருக்கும் தெய்வீகசக்தி (The holy Sprit with in) ஜெருசலேம் என்ற பலஸ்தீனமும் அங்கிருக்கும் தெய்வமும் மனிதனுக்கும் அவனுக்குள்ளேயிருக்கும் தெய்வீக சக்தியினை அறிகுறியான புறக் குறியீடுகளாகும் என விளக்கியதுடன் வேத வசனத்தை விளக்கும் போது 'எருசலேமிற்குத் திரும்புங்கள்' அதுவே உங்கள் பௌதீகப் பெறுபேறுகட்கு உகந்ததாகும் என்று கூறும் போது எமது மனமும் பொறிபுலன்களையும் உள்ளிருக்கும் இறைவனை நோக்கித் திரும்பாமல் லௌகீகப் பேறுகளை நாடிப் போவதால் விளையும் அனர்த்தங்களை சைவசித்தாந்த அணுகுமுறையினைக் கையாண்டு விளக்கவிருத்தி செய்தார். இதன் மூலம் தன் தேசத்தையும் தமது ஆத்மஞானப் பண்பாட்டையும் விட்டு விலகுவது ஆத்மார்த்தமான தார்மீகரீதியினான (Denationalization) தவறு என்பதையும் நன்கு சுட்டிக் காட்டினார்.[33] இது அவரது சைவசித்தாந்த ஞான விருத்தியில் அன்னாருக்கு இருந்த புலமை நுட்பத்தை அறிவிக்கின்றது.

இராமநாதன் அவர்களின் ஞான விருத்திப் பாங்கினை அறிந்து கொழும்பு வந்து அன்னாரது ஆத்ம போதனையால் திருப்தியுற்றவர் 'மைறன் பெல்ப்' என்னும் (Myron phelp) அமெரிக்கராவார். அவரது ஏற்பாட்டின் பேரிலேயே இராமநாதன் அவர்களது அமெரிக்கச் சுற்றுலா நிகழ்ச்சிகள் அமைந்தன. அன்னாரது சொற்பொழிவுகளால்தான் நவீன செல்நெறியில் சைவசித்தாந்தம் அங்கெல்லாம் தனது ஆத்ம ஞானத்தை விதைக்க முடிந்தது. அவர் அறித்த சைவசித்தாந்த ஞானவிளக்கமானது இரு வேறு நூல்களில் தேக்கிவைக்கப்பட்டுள்ளது. ஒன்று R.L. ஹரிசன் என்றும் லீலாவதி அம்மையார் அவர்கள் இராமநாதனது சொற்பொழிவுகளை உடனிருந்து கேட்டுத் தொகுத்து வைத்த 'கீழைநாட்டு மாணவருக்கான மேலை நாட்டுக்காட்சிகள்' என்ற நூல். ஏனையது இராமநாதன் அவர்களது சைவசித்தாந்தப் புலமைகள் அடங்கிய அவரது பிரசங்கங்களை மட்டும் தனியாக எடுத்து நூலாக மைறன் பெல்ப் என்பார் வெளியிட்ட ஆன்ம கலாசாரம் (Soul Culture) என்னும் நூலாகும்.[34] தனது அமெரிக்கப் பிரசங்கத்திலே சைவநெறி பற்றிப் பேசும் போது எமது சமயத்தை 'இந்து சமயம்' என அழைப் பதில்லை. நாம் அதனைச் 'சைவம்' அல்லது 'சைவமார்க்கம்' என அழைப்போம். அகில உலகிற்கும். பொது

வான ஒரே கடவுளை வணங்கும் சமயம். அதுவே சிவம் - ஒரே அமைதியும் ஆற்றலும் வாய்ந்ததென்பது அதன் பொருள் என 'இந்து' என்றாலும் 'சைவம்' என்றாலும் அதன் உட்பொருள் ஒன்றே என்பதனையும் துல்லிய மாகத் தெளிவாக்கினார்.[35]

சென்ற் மத்தேயு, ஜோன் ஆகியோர் களது சுவிசேஷத்தில் எழுதிய நற்செய்திகட்கு இராமநாதன் அவர்கள் அளித்த விளக்கவுரைகள், சைவசித்தாந்த ஞான விளக்கங்கள், அனைத்தும் சமயங்களின் அடிப்படைத் தத்துவ[36] ஒருமைப்பாட்டை விளக்கு வதாகவும் அமைந்தது. இந்நூல்கள் அன்னாரது ஒரு முற்றுமுணர்ந்த தத்துவ ஞானியாகவே காட்டுகின்றன. இராமநாதனது ஏழு பிரசங் கங்களின் விடயங்களின் சாரமானது 'ஆன்ம கலாசாரம்' என்ற நூலில் திரட்டப் பட்டுள்ளது. (Soul Culture) குறித்த பிரசங்கங்களின் நடுநாயகமாகத் திகழும் 'ஞானத்திறவு கோல்' (Key of Knowledge) என்ற பகுதி 'எல்லாச் சமயங்களுக்கும் இன்றியமையாத ஒன்றாய் அமைந்து சைவ சித்தாந்த ஞானத்தின் அகண்ட வியாபகப் பண்புக்கு அத்தாட்சியாய் இருப்பது குறிப் பிடத்தக்கது'[37] என மு. ஞானப்பிரகாசம் அவர்களும் தமது கட்டுரையில் கூறியிருப்பது இங்கு மனம் கொள்ளத் தக்கது. ஆன்ம கலாசாரம் என Myron Phelp குறிப்பிட் டிருப்பது 'சைவசித்தாந்த கலா சாரம்' என்பது புலனாகும் போது 'சைவமெய் யியலானது ஒரே காலத்தில் சமய நெறியா கவும் மெய்யியல் கலாசாரமாகவும் தன்னை வெளிப் படுத்தும் வாய்ப்பினையும் சேர். பொன் இராமநாதன் அவர்களே தமது பிரசங்கத்தின் மதிநுட்பத்தால் விருத்தியுறச் செய்தமையும் இங்கு பிரதானமாகச் சுட்டிக்காட்ட வேண்டிய சிறப்பம்சமாகும். இவ்வாறாக இராமநாதன் அவர்களால் மேல்நாடுகளில் சைவசித்தாந்த ஞானமானது நன்கு விருத்தி பெற்றதுடன் உன்னதமான மகிமையும் பெற்றது என்பதனை இதுவரை கூறிய விடயங்கள் புலப்படுத்தி நிற்கின்றன.

**முடிவுரை**

வேதாகமங்கள் என்னும் விருட்சத்தில் வேரோடி முளைவிட்டு காலம் தோறும் நிகழ்ந்த சமுதாய வரலாற்றுப் பரிமாணங் களினூடாக வெளி வந்து இன்றைய அணுவாயுதத் தகவல் தொழில்நுட்ப யுகத்தின் சவால்களையும் எதிர்கொண்டு மனித வாழ்வை நெறிப்படுத்துவதில் சைவசமய நெறிக்கும் முக்கிய பங்குண்டு. இந்துசமயம் இன்றும் உலகளாவிய நிலையில் போற்றப் பட்டாலும் அங்கு கூறப்படும் உண்மைகள், மெய்யியற் சிந்தனைகள் என்பவற்றின் ஆழமும் நுட்பமும் அறியாத இந்துக்களே அவைகளிற்கெதிராக சில சீர்கேடுகளை விளைவிக்கின்றனர். அன்பு நெறியே இறை உணர்வு, அன்பு உணர்வே சிவம் - அன்பே வடிவானவன் இறைவன். பக்தியுடன் கூடிய ஒழுக்கச் சீலமான வழிபாட்டையே இறைவன் விரும்புகின்றான். இந்துக்கள், கருணையை உள்ளத்தில் வளர்த்து 'அன்பு தான் சிவம்' என்பதனை நடத்தையில் வெளிப் படுத்த வேண்டும். ஆண்டவன் வாழும் கோயில் அடியவர்களது உள்ளக் கமலமாகும். அதனாலே 'உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது' என்றார் விபுலானந்தர் 'பல நூல் படித்து நீ அறியும் கல்வி - பொது நலம் நினைத்து நீ வழங்கும் செல்வம் - பிறர் உயர்வினில் உனக்கிருக்கும் இன்பம் - இவை அனைத்திலுமே இருப்பது தான் தெய்வம்' என்னும் கவிஞர் ஒருவரின் கூற்றிலே

இறைவன் இருப்பிடம் எது என்பது தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. சேர். பொன். இராமநாதனது சேவைநல மேம்பாட்டினை இவ்வரிகள் ஆழமாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளன. இவை அனைத்தையும் உள்வாங்கியே சைவசித்தாந்த வாழ்வியலைத் தமது சொந்த வாழ்விலே கடைப்பிடித்துப் பிற்கால மனித சமுதாயத்திற்கு ஓர் உதாரணபுருசராக வாழ்ந்த சேர். பொன் இராமநாதனது சைவசித்தாந்தப் பணிகள் ஈழத்து சைவசித்தாந்த வளர்ச்சியில் அழியாத ஓர் முத்திரையைப் பதித்துள்ளன என்பது இக்கட்டுரையால் பெறப்படும் உண்மையாகும்.

இன்றைய வாழ்விலே உலக அமைதி - சமாதானம் ஊசலாடிக் கொண்டிருக்கிறது எனில் அதற்கு அளிவியலை வளர்த்த மனிதன் ஆன்மவியலை வளர்க்காமல் போனதே காரணமாகும். விஞ்ஞான வசதிகளைத் தனது வாழ்வுடன் இணைத்த மக்கள் மெய்ஞ்ஞான வாழ்வியலைத் தம்முடன் இணைக்க மறந்து விட்டனர். அதனால் இளம் தலைமுறையினரிடம் அறிவுத்திறன், உழைப்புத்திறன், ஆக்கத்திறன், ஆளுமை, சொல்வளம், அனைத்தும் இருந்தாலும் சாந்தி, சமாதானம், அமைதி என்பன கேள்விக்குறியாயுள்ளது. மதநல்லிணக்கத்திற்கும் சமுதாயப் புரிந்துணர்விற்கும் சைவ சித்தாந்த ஞானமே சிறந்த சாதனம் என்பதனை இராமநாதன் போன்ற பலரும் மேல்நாட்டினருக்கும் உணர்த்திச் சென்றனர். இத்தகைய அற உணர்வு மேலோங்க வேண்டுமென்று தன்னலமற்ற சேவைமார்க்கத்தில் நின்று இளம் சந்ததியினரை நெறிப்படுத்தும் கல்வி, சமயப் பண்பாட்டுணர்வுடன் கூடிய கல்லூரிகளையும், கோயில்களையும் அமைத்துப் பணிசெய்தார். சைவத்தமிழ்ப் பண்பாட்டில் வளரும் மாணவ சமூகம் ஒழுக்க விழுமியமுள்ள நாளைய தலைமுறைகளாக வளர வேண்டுமென்ற வேணவாவினால்தான் ஔவையார் கூறிய ஆத்திசூடி, கொன்றை வேந்தன், ஸ்ரீ இராமநாதேயம் என்னும் தர்மசாத்திர பாடநூல்களையும் தாமே உருவாக்கினார். பகவத்கீதைக்கு சைவ சித்தாந்த பரமாக விளக்கவுரை எழுதி எல்லோரும் சுயநலமற்ற கர்மயோகியாகத் தொண்டுப் பணி செய்ய வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

சைவசித்தாந்த ஞானத்தின் ஒழுக்கவியல் பகுதியே சிவஞானபோதம் முதலிய சாஸ்திரங்கள் கூறும் 'சாதனை இயல்' என்னும் பகுதியாகும்.[38] அந்நெறியில் நான்கு வகைப் படிநிலைகளிலும் நின்று சேவையாற்றிய திறமையினை இராமநாதன் அவர்களது வாழ்க்கை மதிப்பீடுகள் உணர்த்தியுள்ளன என்பதும் இக்கட்டுரையாற் பெறப்படும் சரியை என்பது சரியான பாதையைத் தெரிந்து திருவருட் துணையுடன் கூடிச் செல்லுதல் எனப் பண்டிதர் கந்தையர் அவர்களும் விளக்கியுள்ளார். உண்மைச் சரியை என்பது பற்றற்ற பண்புடன் பணிசெய்தலாகும். இது நிஷ்காமிய கர்மா எனப்படும். இந்நிலையில் பலன் கருதாது பணியாற்றுவதனால் இருவினை ஒப்பும் மலபரிபாகமும் ஏற்பட்டு சத்திநிபாதம் என்னும் திருவருட்பேறு கைகூடும். சரியை, கிரியைத் தொண்டினால் பணிவிடை செய்யும் போது மூலமலமாகிய ஆணவம், வலிகுன்றி விடும் ஆணவமலத்தை வலிகெடச் செய்வதே தொண்டு நெறியாகும். பதவி ஆசை கொண்டு சுயநல வெறியுடன் போரிட்டு ஆணவத்தால் அழிந்த பேரரசர்

களையும் பேரரசுகளையும் வரலாற்றில் காணமுடியும். பலன் கருதாது பணிவிடை செய்து மக்கட் சமுதாயத்தை வாழவைத்த பெருந்தகை யாளரான நாயன்மார்கள் புத்த பெருமான், யேசுபிரான் நபிகள்நாயகம், போன்ற தெய்வீக புருசர்கள் இன்றும் கடவுள் நிலையில் வைத்து வணங்கப்படும் தெய்வங் களாக நிலைபெற்றி ருக்கின்றனர். சேர். பொன். இராமநாதன் அவர்களும் இவ்வாறே சரியை, கிரியை, எனும் சைவசித்தாந்தம் காட்டிய தொண்டுப் பணியில் தன்னை அர்ப்பணித்து அழியாப் புகழ் பெற்ற தர்ம வானாக விளங்கினார்.

இமயம், நியமம் முதலிய ஐந்து படிகளும் யோகத்தில் கிரியையாகும். திருக்கோயிற் பணிகள் கிரியையிற் சரியை - இறைவனுக்காற்றும் பூசைக்கருமங்கள் கிரியையில் கிரியை, இவற்றினைச் சாத னைக்குக் கொண்டுவந்து கேட்டல், தெளிதல், சிந்தித்தல், நிட்டைகூடல் என்பன ஞானத்தின் பாற்பட்ட சரியையாகும். இவற்றின் வழி காட்டலின் படி உயிர்களிடம் அன்புபூணுதல், பிறருக்கு உதவுதல், ஏழைகட்கு உணவு வழங் கல் ஆதரவற்ற சிறுவர்க்குக் கைகொடுத்தல், முதியோரைப் பேணுதல் எனப் பலதரப்பட்ட தொண்டுப்பணிகளாக இராமநாதன் அவர் களது வாழ்க்கையில் அவை வளர்ந்து சென் றன. அன்னாரது கல்விப்பணி திருக்கோயிற் பணி கள், சிறுவர் இல்லப்பணி, சைவவித்தியா விருத்திச் சங்கப்பணி ஆசிரிய பயிற்சி கலா சாலைப் பணிகள் என ஆறுமுகநாவலரது வழியில் அவைகள் விருத்தி அடைந்துள்ள மையினை அவரது வாழ்க்கை வரலாற்றுப் பதிவுகளில் பேணி வைக்கப்பட்டுள்ளன. திருக்கோயில் வழிபாடும், திருக்கோயிற் தொண்டும் மட்டும் தொண்டு நெறி அல்ல. மக்கட் சமுதாயத்திற்குச் சேவையாற்றுவதும் சரியையின் பாற்பட்டதேயாகும். என வாழ்ந்தவர் இராமநாதன் அவர்கள்.

வாழ்வின் பிற்பகுதியில் யோகத்தையும் யாகவழிபாடுகளையும் தியாகமாக மாற்றி ஆத்மஞானத்கதிற்காக அனைத்தையும் தியா கம் செய்யத் துணிந்தவர். 'ஈனமிலா நற் பொருளைக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல்' என்னும் நான்கும் ஞானத்தில் அடங்கும், என்றது சிவப்பிரகாசம் என்னும் சித்தாந்த சாத்திரம் 'எஞ்ஞான மில்லாதேன் இன்பப்பெருமானே - அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே - மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே'[39] என மணிவா சகரும் இறைவனை ஞானக்கொழுந்தாக வணங்கினார். சைவசித்தாந்தத்தில் ஞான விருத்தி பெறுவதற்கு நால்வகைச் சாதனை மார்க்கங்களில் நன்கு பயிற்சி பெற்றிருத்தல் அவசியம். 'அரும்கலைகள் பல தெரிந்தும் ஆரணங்கள் படித்தும் - சிறப்புடைப் புராணங் கள் உணர்த்தும் வேதசிரப்பொருளை மிகத் தெளிந்து சென்றார். சைவத் திறத்தடைவர். சரியை, கிரியை, யோகம் செலுத்திய பின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர்'[40] என்பது சைவசித்தாந்தம் காட்டும் ஆத்மஞான மார்க் கமாகும்.

சைவசித்தாந்த மெய்யியல் சமரசசன் மார்க்க நெறியை அத்திவாரமாகக் கொண் டது. அது கூறும் நால்வகை முத்திகளில் பரமுத்தியாகிய சிவசாயுச்சிய முத்தி சன் மார்க்க முத்தி என்றே திருமந்திரமும், சிவ ஞான சித்தியாரும் குறிப்பிடும். தாயுமா னருவம் சித்தர்கள் சித்தாந்தம் சைவசித்

தாந்தம் என்பதனையும் அது சமரச சன்மார்க்கத்தில் அகில உலகத்தவரையும் அரவணைத்துச் செல்லும் நெறி என்பதனையும் 'வேதாந்த சித்தாந்த சமரசநிலை கண்ட வித்தகச் சித்தர் கணம், என்றும் சிறப்பித்தார். இத்தகைய சமரசசன்மார்க்க நெறியினைத் தமது வாழ்விலே கைக்கொண்டு ஒழுகியதனால் தான் சேர். பொன். இராமநாதன் அவர்களும் தமது வாழ்வில் தமிழ், சிங்கள, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமூகத்தவர் அனைவரையும் அரவணைத்து சர்வமதசமரச நோக்கில் தீர்க்கதரிசனத்துடன் தமது அரசியல், சமய, சமூக, சித்தாந்த பணிகளை முன்னெடுத்துச் சென்று சைவசித்தாந்த வாழ்வியல் சமரச சன்மார்க்க நெறி என்பதனையும் நிறுவினர்.

ஞானமார்க்கம் விடுதலைக்குரிய மார்க்கம் என எல்லாச் சமயங்களும் ஏற்றுக் கொள்ளும் சித்தாந்தம் அத்தகைய ஞானம் பசுஞானம், பாசஞானம், பதிஞானம் எனப் பகுத்து பதிஞானத்தை அடைவதற்கு தசகாரியம் என்னும் பத்துப்படி நிலைகளைச் சுட்டியுள்ளது. பாசஞானத்தினின்றும் விடுபடுவதற்கு ஒருவரது உள்ளுணர்வாகிய ஆத்மசிற்சக்தி ஞானம் உதவ வேண்டும். 'ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை - ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று' என்றது திருமந்திரம்.[41] மேலும் 'அஞ்ஞானம் விடப் பந்தமறும் முக்தியாகும். ஈனத்தார் ஞானங் களல்லா ஞானம் - இறைவனடி ஞான மென்பர்'[42] என்பது சித்தாந்த உறுதிப்பாடு ஞானமாகிய பேரறிவு - பேரன்பு நிலையடைதற்கு சுயகட்டுப்பாடு, மனக்கட்டுப் பாட்டுப் பயிற்சி, தன்னலமற்ற தியாகப் பண்புகள் இன்றியமையாதன. அறிவாளிகளாக இருக்கும் அனைவருக்கும் விடுதலை எளிது எனில் அயோக்கியர்களுக்கும் முத்தி கிடைத்து விடும் என்பதனாற் போலும் ஞானமெனும் பேரன்பில் - பேரறிவில் - பேரறத்தில் நிலை பெற்றவர்க்கே முக்திநெறி சாத்தியமாகும் எனச் சித்தாந்த சாத்திரங்கள் குறிப்பிட்டிருக்க வேண்டும். அறிவாளிகளைப் பலரும் வணங்குவதில்லை. ஆனால் ஞானிகளை யாவரும் வணங்கிச் செல்வதற்கு இதுவும் ஒரு காரணமாகலாம். எனவே தான் 'ஆணவத் தோடத்து விதமான படி மெஞ் ஞானத் தாணுவினோ அத்துவிதமாகு நாள் எந்நாளோ' என எந்நாட்கண்ணியில் தாயுமானவர் வேண்டுகின்றார்.

ஆகவே இவ் வழியில் நின்று தமது தொண்டுப்பணியில் ஆணவத்தை அகற்றி அஞ்ஞானத்தை ஞானமாகிய பேரன்பினால் அழித்து சைவசித்தாந்த ஞானத்தை நுட்பமாக உணர்ந்து கொண்டு அது கூறும் நான்கு சாதனைமார்க்கங்களில் வாழ்ந்து காட்டி தன்னலமற்ற சேவைமார்க்கத்திற்கு தன்னை அர்ப்பணித்து சைவசித்தாந்த அபிவிருத்திப் பணிக்கோர் மாற்றுவடிவம் அமைத்துக் கொடுத்தவர் இராமநாதன் அவர்கள். அன்னாரது சேவையினால் மேல்நாடுகளில் சைவசித்தாந்த மகிமையுடன் தமிழர் தம் மகிமையும் நன்மதிப்புற்றது.[43] அவரால் மேல்நாட்டில் விதைக்கப்பட்ட சைவமெய்யியல் விதைகள் முளைத்துப் பயிராகி உலகெங்கும் வளர்ச்சி கண்டு வருவதற்கு இராமநாதனது சைவசித்தாந்த அபிவிருத்திப்பணிகள் ஆணிவேராய் அமைந்தன. அத்தகைய பெருமானாரின் சைவசித்தாந்த ஆன்மீக கலாசார சிந்தனைகளிலிருந்தும் சாதனைகளிலிருந்தும் புதியதோர் உலகம் காண ஞான

ஒளியினையும் நன்நம்பிக்கையினையும் புத் தூக்கத்தினையும் உண்மை ஞானம் என்பத னையும் ஒவ்வொருவரும் அவசியம் பெற வேண்டும். அதற்கு அன்னாரது ஆன்மீக ஒளிச்சுடர் ஒளிரும் தீபமாக விளங்கி இப்பல் கலைக்கழக நிறுவனமும் துறைசார் புலமைத் துவமும் ஆன்மீக விழுமியங்களும் மென் மேலும் வளர்ந்து நிலைபெற வேண்டும் என்பதே இந்நினைவுரையின் பெறுபேறாக வேண்டும்.

**அடிக்குறிப்புக்கள்**

1. சந்திரசேகரம், ப.1987, கல்வியற்கோவை, கல்விக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், ப. 21
2. Vaithilingam, V, 1977, The Life of Sir Ponnalpalam Ramanathan Vol 1-11, (1910-1930) Jaffna.
3. குமாரவடிவேல், இ. இராமநாதன் ஓர் கர்மயோகி - அவர் வாழ்வில் ஏற்பட்ட திருப்புமுனை, இந்துசாதனம், 11.11.2000.
4. வச்சிரவேல் முதலியார். க, 1985, சைவசித்தாந்தமும் சிவாலயங்களும், சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள், தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் மணிவிழாச்சபை வெளியீடு, ப. 2
5. திருவிளங்கம், மு. 1971, சிவஞானசித்தியார் சுபக்கம், (புத்துரை) யாழ்ப்பாணம் கூட்டு றவுத்தமிழ் நூற்பதிப்பகம் யாழ்ப்பாணம், சு.2: 113, ப. 193
6. சிவஞானபோதச்சிற்றுரை, சு.2.
7. கந்தையா பண்டிதர், மு. 1985, ஈழத்து சைவசித்தாந்த தொன்மை மேன்மைகள் (ஆதிநாகர் முதல் அமெரிக்கச் சுவாமிகள் வரை) சிவத்தமிழ் ஆராய்ச்சி கட்டுரைகள், ப.34
8. மேப்டி, ப. 34
9. சித்பவானந்தர். சுவாமி, 1975, பகவத்கீதை (விளக்கவுரை), இராமகிருஷ்ண தபோ வனம், திருச்சி, கர்மயோகம், சு.3.4, 19, 25, பக்தியோகம், 12:13, 14; 18,19.
10. திருவருட்பயன் (8ம் பதிப்பு), சு. சிவபாதசுந்தரனார் உரை, அதி; 2.1; பக். 74-76
11. வேலுப்பிள்ளை. ஆ. 1988, அரசகேசரியின் இரகுவம்சமும் அது எழுந்த இந்துப் பண்பாட்டுச் சூழலும், சேர். பொன். இராமநாதன் நினைவுப் பேருரை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், ப.1
12. சொக்கலிங்கம். எஸ், 1976, சேர். பொன். இராமநாதன் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம், பக். 40-41
13. a). Vaithlingam M, Opcit, Vol. II, P.335
    b). Leelawathi Ramanathan, 1907 Westernpictures For Eastern Students, London, P. 238
14. சந்திரசேகரம்,ப, 1987, இந்துசமயக் கல்வி மறுமலர்ச்சி, சீமாட்டி லீலாவதி இராம

நாதன் நினைவுப் பேருரை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், ப.11

15. a.) Vaithilingam, M, Opcit, pp. 337-339
b) சிவசாமி.வி, 2005, இந்துப் பண்பாடு அன்றும் இன்றும், (பதிப்பாசிரியர்) ப. கணேசலிங்கம், தமிழ்நாடு, ப.205.

16. மங்கையற்கரசி. திருச்சிற்றம்பலம், 2007, இலங்கை இந்து மதப்பரப்பில் சேர். பொன் இராமநாதன், இந்து ஒளி, அகில இலங்கை இந்துமாமன்றம் கொழும்பு, பக். 327 - ப. 328

17. மேற்படி, ப. 329

18. கணேசலிங்கம், ப, 2005, இந்தியநாட்டுத் தமிழகக் கொடைக்கானலில் சேர். பொன் இராமநாதன் அமைத்த குறிஞ்சி ஆண்டவர் கோயில், நல்லைக்குமரன் மலர், சைவசமய விவகாரக்குழு, யாழ்ப்பாண மாநகரசபை வெளியீடு, ப. 152.

19. சிவசாமி. வி, 2005, மு.கு.நூ, பக் 197-198

20. a). சந்திரசேகரம், ப, சீமாட்டி லீலாவதி நினைவுப்பேருரை ப. 10
b) சிவசாமி, வி, 2005, மு. கு. நூ, பக். 197-198

21. சந்திரசேகரம், ப, சீமாட்டி லீலாவதி நினைவுப்பேருரை ப. 11

22. மேற்படி, ப. 20

23. மேற்படி, ப.16

24. Vaithilingam, M, Opcit, P. 144

25. சிவசாமி, வி. மு. கு. நூ, ப. 203

26. Vaithilingam, M, Opcit, P.145

27. சிவசாமி. வி. மு. கு. நூ, ப. 213

28. கலைவாணி இராமநாதன், 2003, சேர். பொன் இராமநாதனது இந்துப்பண் பாட்டுச் சிந்தனைகளும் பணிகளும், 2ஆம் உலக இந்து மாநாட்டுச் சிறப்பு மலர், கொழும்பு, ப. 311

29. சிவஞான சித்தியார், 8.2.273

30. கலைவாணி இராமநாதன், மு.கு. நூ. ப. 311

31. கந்தையா, பண்டிதர்.மு. 1994 சைவ சித்தாந்த விளக்கவிருத்தியில் யாழ்ப்பாண அறிவியல் மேதையின் சுவடுகள், சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை யாழ்ப்பாணப் பலைகலைக்கழகம், ப. 25

32. கந்தையா, பண்டிதர், மு, ஈழத்துச் சைவசித்தாந்த தொன்மை மேன்மைகள், மு.கு.நூ, ப. 34

33. மேற்படி, ப. 35

34. கந்தையா.மு, சைவசித்தாந்த விளக்க விருத்தியில் யாழ்ப்பாண அறிவியல் மேதையின் சுவடுகள், மு. கு. நூ, ப. 26

35. மேற்படி, ப. 29

36. a). மேற்படி, பக். 31-34
b). Ampikaipahan S. 1976 The Contribution of sri Ponnampalam Ramanathan to the study of comparative Religion pp, 12.15

37. Janaprahasam, M, 1994, Sankya Thoughts A Shiva view point, Mahathmaprinting works, Jaffna p.8

38. சிவஞானசித்தியார், சைவசாதனைகள், ப.270

39. மணிவாசகர், திருவாசகம், சிவபுராணம், வரி: 37-38

40. சிவஞானசித்தியார், ப.எ.263, பக். 461 465

41. திருமூலர், திருமந்திரம், பா. எ. 1467

42. சிவஞான சித்தியார், பா.எ 279

43. கந்தையா, பண்டிதர் மு. சிவத்தமிழ் ஆராச்சிக் கட்டுரைகள் ப. 35

## உசாத்துணை நூல்கள்


1. Ramanathan, SIR PON 1926, Report of the Hindu board of Education, 1930, presidential adress, delivered by Sir.p. Ramanathan, 1926.

2. இராமநாதன், சேர்.பொன் 1921, ஆத்திசூடி மந்திர விளக்கம், திருமகள் அச்சகம், சுன்னாகம்.

3. இராமநாதன், சேர். பொன். 1927, திருக்குறள் பாயிர இராமநாதபாஷ்யம், யாழ்ப்பாணம்.

4. சுந்தரம்பிள்ளை நடராசா, 1992, சேர். பொன் இராமநாதனின் கல்விச் சிந்தனையும் கல்விப் பணியும், (முதுகலைமாணிப்பட்ட) ஆய்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

5. சிவசாமி. வி. 1999, சேர்.பொன் இராமநாதனின் சமயப்பணி கல்விசார் பங்களிப்பு - ஓர் வரலாற்று நோக்கு நினைவுப்பேருரை, இராமநாதன் கல்லூரி சுன்னாகம்.

6. சொக்கலிங்கம், எஸ், 1976 சேர். பொன் இராமநாதன் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம், பரமேஸ்வராக்கல்லூரி இயக்குநர் சபை வெளியீடு, யாழ்ப்பாணம்.

7. பொன்னம்பலபிள்ளை. ச. 1931, ச, 1931 இராமநாத மாண்மியம் சுன்னாகம்.

8. இராமநாதன். பொ., 1914 பகவத்கீதை தமிழ்மொழிபெயர்ப்பும் விருத்தியுரையும், (பாதிப்பு) ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, நாவலர் அச்சகம், யாழ்ப்பாணம்.

9. Ramanathan, Sir.p. 1932 The aims of studens at parameshewara college Jaffna.

10. *பரமேஸ்வரம், பரமேஸ்வர ஆலய மகாகும்பாபிஷேக மலர்,* **1991,** *யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி*

11. *சேர். பொன். இராமநாதன் உருவச்சிலை திறப்பு விழா சிறப்புமலர்,* **1994** *இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.*

12. *ரோமன்ட் றோலன்ட், விவேகானந்தர், சாகித்ய அக்கடமி, புதுடில்லி,* **1963.**

13. Rajaratnam, S, 1930, Hindu Education in Jaffna.

14. Chandrasegaram,P, 1982, The Hindu Religion Philosophical Perspective of Ceylon, University of Jaffna.



# யா/இராமநாதன் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவு நாளும் - 2007 நினைவுப் பேருரை


கலாநிதி ஆறு. திருமுருகன்
அதிபர்
யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி
கந்தரோடை.


மதிப்பார்ந்த அதிபர் அவர்களே, பிரதம விருந்தினர் உயர்திரு ப. விக்னேஸ்வரன் அவர்களே அவர்களது பாரியார் அவர்களே, சிறப்பு விருந்தினர்களே, ஆசிரியப் பெருந் தகைகளே, பழைய மாணவர்களே, பெற் றோர்களே, அன்பார்ந்த மாணவர்களே, கல் விச்சமூகமே உங்கள் அனைவருக்கும் எனது பணிவான வணக்கம்.

என் வாழ்வில் ஒளி தந்து,வழி தந்து வாழவைத்த என் இனிய கல்லூரி வளாகத்தில் நின்று பேசுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சி யடைகின்றேன். 1967ஆம் ஆண்டு முதல் இக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைக் கற்ற யான் 19970வரை இக் கல்லூரி வளாகம் முழுவதும் ஓடிஆடிக் குறும்புகள் செய்த இனிய நாளை மீளவும் நினைத்துப் பார்க்கின்றேன்.இக் கல்லூரி மேடை தான் நான் ஏறிய முதல் மேடை. இன்று உலகின் பல பாகங்களுக்கும் சொல் ஆற்றலால் செல்லும் வாய்ப்பைப் பெற்ற யான் முதன் முதலாக சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசைக்கு எனது ஆரம்பக் கல்வி ஆசிரியர் திருமதி.அமுதவல்லி அக்கா அவர் களின் முயற்சியில் மேடை ஏற்றப்பட்டேன். அதிபர் செல்வி கனகசபை முன்றலில் மேடையில் ஏறிய யான் பயத்தினால் இறங்கி ஓடிவிட்டேன். என் ஆசிரியத் தெய்வம் அமிர்தவல்லி அக்கா பிடித்துக் கொண்டு வந்து மீண்டும் மன்றாடி மேடை யேற்றினார்கள். நான் அவரையே பார்த்த வண்ணமாகப் பேசினேன். அவர் அன்று இக் கல்லூரி மேடையில் ஏற்றிய வாழ்வு இன்று வரை தொடர்ந்து கொண்டு இருக்கின்றது. இன்று சைவத் தமிழர்களின் தலையாய பெண் பாடசாலையை நிறுவிய இராமநாத வள்ள லின் வருடாந்த நிறைவு வைபவம் குறித்து சில விடயங்களை எடுத்துரைப்பது என் கட னாகும்.

இலங்கைத் திருநாட்டிலே அன்னியர் ஆட்சியால் சுதேசிகளின் சொத்துக்கள் பறி போனது மட்டுமன்றி பண்பாட்டுப் பாரம் பரியங்களுக்கும் எத்தனையோ இடையூறுகள் ஏற்பட்டன. குறிப்பாக ஆங்கிலேயரது ஆட் சிக் காலத்தில் மிஷனரிகளின் செல்வாக்கால் மதமாற்றச் செயற்பாடுகள் வலுப் பெற்றி

ருந்தன. ஆங்கிலக் கல்விக்காகவும் தொழில் வாய்ப்புக்காகவும் பலர் மதம் மாறினர். இச் சூழலில் இருந்து சைவத் தமிழரைக் காப்பாற்றுவதற்கு நல்லையில் ஓர் ஞாயிறு எழுந்தது. நல்லைநகர் ஆறுமுகநாவலர் என்ற அத் தெய்வீக புருஷரால் ஏற்பட்ட சைவத் தமிழ் எழிற்சியே இன்று நாம் காணும் கோயில்களும் பாடசாலைகளும் எனலாம். இத்தகைய பெருந்தகை சுதேசிகளே எம் பாரம்பரிய பண்பாட்டைப் பேண ஊர் தோறும் பாடசாலைகளை அமைத்து வித்தியாதானம் செய்யுங்கள் என விடுத்த அறைகூவலுக்கு மதிப்புக் கொடுத்தவர் சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் **16-04-1851** இல் பிறந்த இப் பெருமகன் ஆற்றிய தொண்டுகள் அளப்பெரியன. மனித வாழ்வில் பலர் பிறக்கிறார்கள் இறக்கிறார்கள். ஆனால் சமூகத்திற்குப் பயன் தரக்கூடிய உன்னத காரியங்களைச் செய்பவர்கள் இறந்தவர்களாக எண்ண முடியாது நேசிக்கப்படுவார்கள் எனச் திருவள்ளுவர் திருக்குறளில் அழகாக விளக்குகிறார்.

ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான்
மற்றயவர் செத்தாருள் வெளிக்கப்படுவர்.

எனவே பல நல்ல காரியங்களை வாழ்நாள் முழுவதும் செய்த ஒப்புரவாளராகிய இராமநாத வள்ளல் இறந்தாரில் ஒருவராக கருதப்படாது. நீள நினைந்து போற்றப்படும் தகுதிக்குரியவராக விளங்குகிறார். தினமும் கல்லூரிக் கீதத்தில் கடவுள் போல் மாணவர்கள் புகழ்மாலை பாடுகிறார்கள்.

சேர்.பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் வாழ்வில் ஆன்மீகக் குருவாக நின்று ஆற்றுப்படுத்தியவர். சுவாமி அருட்பரானந்தர் அவர்கள் அப்பெரியாரின் உபதேசங்கள் இராமநாதன் அவர்களின் பரோபகாரச் சிந்தனைக்கு வழிகோலியது. தென்இந்தியாவில் தஞ்சாவூரில் பிறந்த அருட்பரானந்தர் **1888** இல் இராமநாதவள்ளலுக்கு ஞான தீட்சை வழங்கினார். சுவாமிகளின் சிந்தனைகளுக்கு செயல்வடிவம் கொடுப்பதே வாழ்வெனக் கருதிய இராமநாதன் அவர்களின் வாழ்வு பல நிலைகளில் மாற்றம் பெற்றது. தன் வல்லமையால் உழைத்தவற்றை பார்வதி பரமேஸ்வரன் மேல் ஆணைகொண்டு தர்மம் செய்ய முன்வரச்செய்தது. **1893**இல் சுவாமிகள் சமாதி அடைந்தார். அவரது சமாதி மேல் லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து குருவை நித்திய பல வழிபாட்டில் பூஜித்தார். இலங்கைச் சட்டசபையில் படித்த இலங்கையருக்கான வாய்ப்பில் அங்கம்வகிக்கும் பேறுபெற்ற இராமநாதனின் அரசியல் பிரவேசத்திற்கு நல்லைநகர் நாவலர்பெருமானின் தொடர்பே முதன்மைக் காரணம் என வரலாறு கூறுகிறது. ஆங்கிலேயர் ஆட்சியில் தன் ஆளுமையாலும் ஆற்றலாலும் செல்வாக்குப் பெற்ற சேர். பொன். இராமநாதன் அவர்கள் நாவலரின் கருத்துக்களை நிலைநாட்டுவதில் அக்கறை காட்டினார். இந்துக்களின் சீர்திருத்த வீரர் என நாவலரை இலங்கை சட்ட நிர்மண சபையில் வர்ணித்த இராமநாதன் அவர்கள் எம் சமூகத்தை கல்வியால் மேம்படுத்தி எம் பாரம்பரிய பண்பாட்டை பேண வேண்டும் என்ற நாவலர் பெருமானின் சிந்தனைக்கு உயிர்

கொடுக்க முனைந்ததன் விளைவே இராம நாதன் கல்லூரியும் பரமேஸ்வராக் கல்லூரியும் எழுவதற்கு வித்திட்டது

இராமநாதன் அவர்களின் வாழ்வில் அவரது இரண்டாவது மனைவியாகிய அவுஸ்திரேலியப்பெண்மணி லேடி இராம நாதன் (லிலாவதி) அவர்களின் ஒப்பற்ற சேவையும் அன்னாரின் பணிகளுக்கு பெருந்து ணையாக அமைந்தது எனலாம்.

சைவக் கல்விப் பாரம்பரியத்தையும் கல்விப் பண்பாட்டுப் பாரம்பரியத்தையும் காப்பதற்கு பெண்களுக்கு கல்வி வழங்கினால் எதிர்காலம் மிகவும் பயனாக அமையும். எனக்கருதிய பெருந்தகைக்கு பாடசாலை அமைக்க வேண்டும் என்ற ஆர்வம் பிறந்தது. அமைதியான கிராமத்தில் சகலவசதிகளும் கொண்ட பாடசாலையை அமைக்கப் பெரி யார் திட்டமிட்டார். ஆரம்பத்தில் கோப்பாய் இருபாலையில் தற்போது ஆசிரிய கலாசாலை அமைந்துள்ள காணியைக் கொள்வனவு செய்தார். எனினும் அங்கு பாடசாலை அமைக்கும் திட்டம் கைகூடவில்லை. நல்லூார் கந்தனை தரிசிக்க சென்ற வேளை தவத்திரு செல்லப்பா சுவாமிகளின் தரிசனம் கிடைத்தது. உதறடா உதறடா என்று தர்மவழியை சுவாமிகள் எடுத்துரைத்தார் என வாய்மொழியாகக் கூறுவர். எஜமான் துரை எனப் போற்றப்பட்ட இராமநாதனை ஏழைகளின் பங்காளனாக மாற்றியவர்கள் ஞான நிலையில் நின்ற ஆன்மிகப் பெரிய வர்கள். அப்பெரியார்களின் ஆசியோடு இணுவில் எல்லையில் மருதனார் மடம் அருகே சுடலையோடு கூடிய இப்பெருங் காணியைக் கொள்வனை செய்து இராமநாதன் கல்லூரியை கட்டும் முயற்சியியை வள்ளல் ஆரம்பித்தார். லேடி இராமநாதன் அவர்கள் அவுஸ்திரேலியாவில் தான் கற்ற உயர் பாடசாலையின் வடிவங்களை உள்மனதில் கொண்டே இப்பாடசாலைக்கான அழகுத் தோற்றத்தை நிர்ணயித்தார் என்பர். விடுதிச் சாலை பூங்கா நடுப்பகுதியில் முற்றம் பெண் கள் விடுதிக்கான பாதுகாப்பு வளர்ச்சிக்கான விளையாட்டிடம் எதிர்கால பயிற்சிகளுக் கான வசதிகள் எனப்பூரண கல்விக் கூடத்தை அமைக்கத்திட்டமிட்டனர். 1909 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டது. அடிக்கல் நாட்டப்பட்ட அன்றும் செல்லப்பா சுவா மிகள் பனையோலை விசிறியைக் கொண்டு வந்து கப்பல் போல பாடசாலை கட்டுவாய் என ஆசிர்வதித்ததாக ஏழாலை பண்டிதர் மு கந்தையா அவர்கள் தனது உரையில் ஒருமுறை விளக்கினார்கள்.



# யா/ இராமநாதன் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவு நாளும் 2012


திருமதி குககுமாரி விஜயரகுநாதன்
B.A, Dip in Edu, M. Ed, M.Phil, S.L. P.S
பழைய மாணவி,
அதிபர் யா/ நல்லூர் ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயம்


## நினைவுப்பேருரை

எல்லாம் வல்ல இறையருளைத் துணைக் கொண்டு ஆத்மீக ஞானியும் அளப் பரும் தர்மவானுமாகிய எம் கல்லூரி நிறுவு னரை நீள நினைத்து வணங்கி, இன்றைய விழாவின் மதிப்பார்ந்த தலைவரும் கல்லூரி முதல்வருமாகிய திருமதி. வேணுகா சண்முக ரத்தினம் அவர்களே, விழாவின் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டி ருக்கும் யாழ் மாவட்ட அரச அதிபர் திருமதி. இமெல்டா சுகுமார் அவர்களே, சிறப்பு விருந் தினராக வருகை தந்திருக்கும் இக் கல்லூரி யின் புகழ் பூத்த முன்னாள் அதிபர் திருமதி. ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்களே, கல்லூரி யின் மதிப்பார்ந்த ஆசிரியப் பெருந்தகைகளே, அன்புக்குரிய மாணவச் செல்வங்களே, பெற்றோர்களே, பழைய மாணவிகளே, நலன் விரும்பிகளே தங்கள் அனைவருக்கும் என் பணிவான வணக்கங்கள்.

யான் தங்கள் முன்னிலையில் நிறுவு னர் நினைவுரை ஆற்ற வாய்ப்பளித்த இறைவ னுக்கு நன்றி கூறுகிறேன். என்னை வழிப்படுத் திய இக் கல்லூரியின் அர்ப்பணிப்பு நிறை நல்லாசிரிரியர்களை நீள நினைந்து நன்றி யோடு வணங்கி இக் கல்லூரியின் வராற்றில் முக்கிய அங்கம் வகித்தோராகிய கல்லூரி அதிபர்கள், அவர்களின் ஆளுமைத் திறன்கள் பற்றிய வரலாற்றுப் பதிவுகளை ஆய்வு செய்து நிறுவுனர் நினைவுப் பேருரையை "சைவத் தமிழ்ப் பெண்களின் கலங்கரை விளக்கான இராமநாதன் கல்லூரியின் வரலாற்றில் தடம்பதித்த அதிபர்கள்" என்ற தலைப்பில் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்த மிடும் கருணாகரக் கடவுளே, 'திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய்' என்ற மகுட வாசகத்தைக் கொண்டதே இராம நாதன் கல்லூரி , கல்வியின் நோக்கம், தேவை, பயன் எனப் பல்வேறு கோணங்களில், பல் வேறு காலங்களாக பன்னாட்டுக் கல்வியிய ளார்கள் ஆய்வுகளை மேற்கொண்டு கருத்துக் களை முன்வைத்துள்ளனர். அவர்கள் கருத்துக் கள் அனைத்தையும் உள்ளடக்கிய ஒரே வாசகமாக விளங்குவது இராமநாதன் கல்லூரி யின் மகுடவாசகமான திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய் என்பதாகும். இம் மகுட வாசகம் நின்று நீடு நிலைக்க உண்மை யாக உழைத்தவர்கள் அனைவரையும் நினை த்து போற்றுவது நம் கடன். அந்தவகையில்

கல்லூரியின் அதிபர்களாக அர்த்தபுஷ்டியுடன் கடமையாற்றிய அன்னையர்களை நன்றியோடு போற்றுவதாக இந்த நினைவுப் பேருரை அமைகின்றது.

"When you educate a man you educate an individual" but when educate a woman you educate a whole family and there by the entire soiciety"

"ஆண்மகன் ஒருவனுக்குக் கல்வியளிக் குங்கால் தனிமனிதன் ஒருவனே கற்றோன் ஆகின்றான். ஒரு பெண்ணுக்கு அறிவு புகட்டுங்கால் அவள் குடும்பத்தினர் அனைவரையும், அதன் மூலம் சமுதாயம் முழுவதையுமே அறிவுடையவர் ஆக்குகின்றோம்" என்பது எமது கல்லூரி நிறுவுனரின் வேத வாக்கு, வார்த்தையோடு நில்லாது செயல் வடிவம் கொடுத்து தன் பெரும் பொருட் செல்வத்தை சைவத் தமிழ்ப் பெண்களின் கல்விச் செல்வத்திற்காய் முதலிட்ட புருஷோத்தமர் நம் ஸ்தாபகர். அம் முதலீடே யாழ்ப்பாணத்தின் இராமநாதன் கல்லூரி நூற் றாண்டு நிறைவை அண்மித்துக் கொண்டிருக்கும் இராமநாதன் கல்லூரியின் பெருமைகள் அளப்பரியன. ஈழத்தில் சைவத்தமிழ் பண்பாட்டுச் சூழலில் விடுதியோடு ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பெண்கள் கல்லூரி இராமநாதன் கல்லூரியே. இலங்கையில் இரண்டாவது மிகப் பெரிய நிலப்பரப்பில் (25ஏக்கர்) ஆரம்பிக்கப்பட்ட கல்லூரியும் இக் கல்லூரியே. நன்னீரும், செழிப்பான மண் வளமும் நிறைந்த மருதனார்மட நாற்சந்திக்கருகில் பெரு நிலப் பரப்பில் கம்பீரமாக நின்று நிலைக்கின்றது இக் கல்லூரி. இயற்கை எழிலும் தெய்வீகப் பொலிவும் நிறைந்த சூழலும் இரு சிவாலயங்களையும் தன்னகத்தே கொண்ட அருள் நிறை கல்லூரியாக இக்கல்லூரி அமைந்துள்ளது. இக் கல்லூரி ஸ்தாபகர் வள்ளல் சேர். பொன்னம்பலம் இராமநாதனின் கனவை நனவாக்க உழைத்த உத்தம அதிபர்களின் பணிகளும் மகத்தானவை. மனந்திறந்து போற்றுதற்குரியவை.

1913ஆம் ஆண்டில் ஜனவரி 21ஆம் திகதி இக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. "பள்ளித்தலமனைத்தும் கோயில் செய்குவோம்" என்ற பாரதி கூற்றுக்கேற்ப கல்வியால் கடவுளைக் காண வைக்கும், உண்மையைக் காணவைக்கும் உயர் நிலையமாக கல்லூரி ஸ்தாபகமானது. நம் நாட்டு மகளிர் நற்கல்வி பெற அனுபவமும் ஆளுமையும் மிக்க அதிபர்களை எம் ஸ்தாபகர் உலகளாவிய ரீதியில் கடைந்தெடுத்து, அழைத்து வந்து அரியணை ஏற்றினார். அந்த வகையில் எம் கல்லூரியின் முதலாவது அதிபர்.

**1. திருமதி. புளோரன்ஸ் பெயர் எம்றி**
**Mrs. Florence Fair Emerry - 1913-1915**

திருமதி புளோரன்ஸ் அம்மையார் லண்டன் Queens Collegeல் கற்று கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழியிலும் ஆங்கில இலக்கியத்திலும் சிறப்புப் பட்டம் பெற்று முதல் தரத்தில் சித்தியடைந்தவர். இவர் "பெண்களின் சமூகநிலை" என்ற ஆய்வுக் கட்டுரையை எழுதியவர். முற்போக் குச் சிந்தனையாளராக லண்டனில் அறியப் பட்டவர். இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா முதலான நாடுகளின் முதல்தர ஆங்கில இலக்கிய விரிவுரையாளராகக் கடமையாற்றியவர். நிறைந்த அழகி, நடிப் பாற்றல் மிக்கவர், பிரபல நாடக ஆசிரியர் Bernard Shaw வின் நாடகங்கள் நடித்துப் புகழ் ஈட்டியவர். இவர் இந்திய

தத்துவ ஞானங்களில் ஈடுபாடு கொண்டவராக விளங்கி இந்தியக் கல்விப் புலத்தினருக்கும் அரும்பணியாற்றினார். சேர். பொன்.இராமநாதனின் ஆன்மீகப் பேச்சுக்களால் கவரப்பட்டவர்.

இவரது பல்துறை நிபுணத்துவத்தையும் ஆளுமையையும் கண்டே சேர். பொன். இராமநாதன் இக் கல்லூரியின் முதலாவது அதிபராக இவரை நியமித்தார். நிர்வாகத் திறனும் தமிழர் பாரம்பரியத்தை மதிக்கும் தன்மையும் கொண்டவர். இவர் மூன்று ஆண்டுகள் இக் கல்லூரியை சிறப்பாக செயற்படுத்தியவர். துரதிஷ்டவசமாக அம்மையார் நோய்வாய்ப்பட்டதால் (புற்றுநோய்) சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். பின்னர்

**2.Miss. Mebel A.Needham**
**செல்வி. மேபிள் ஏ. நீடாம் (1916-1917)**

அதிபர் பதவியில் அமர்த்தப்பட்டார். இவர் லண்டன் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றதுடன் ஆசிரிய கலாசாலையில் பூரண பயிற்சியையும் பெற்றவர். இவரது கலாசாலை அதிபர் Miss. E. PHughes (கூக்ஸ்) இவரைப் பற்றி வருமாறு குறிப்பிட்டார். செல்வி மேபிள் திருப்திகரமான ஆர்வமும், புத்திக்கூர்மையும், கடின முயற்சியும் அறிவுத்தாகமும் உடைய மாணவர். இவரது கல்விக் கொள்கை சாந்த அறிவும், ஆங்கிலப் புலமையும் இலங்கைக்கு பெரிதும் உதவும் என்றார். அவ்வண்ணமே கல்லூரி பயன் பெற்றது. இவரது சேவை 1917ல் நிறைவுற

**3.Lady.L.Ramanathan 1918-1924-1931**
**சீமாட்டி லீலாவதி இராமநாதன்**

இவர் சேர்.பொன். இராமநாதனின் அனைத்துப் பணிகளுக்கும் உதவியதுடன் ஒரு மகத்தான புத்திக்கூர்மையுடைய மூல வளமாக எம் கல்லூரிக்கு விளங்கியவர். இவரே இராமநாதன் கல்லூரியின் அமைப்பிற்கும் ஆரம்பிப்பதற்கும் குறிப்பிடத்தக்க சிறந்த பங்காற்றியவர். தான் கற்ற மேற்கத்தைய பல்கலைக்கழக அமைப்பில் எம் கல்லூரியை அமைப்பித்தவர். கல்லூரியின் தலைவராக ஆரம்ப காலத் திலிருந்தே அருந்தொண டாற்றினார். இராமநாதனின் பின் இராமநாதன் கல்லூரியையும் பரமேஸ்வராக் கல்லூரியையும் நிர்வகித்தார். இவர் பெண்களுக்கான சிறந்த நவீன கல்வியை வழங்கினார். அதாவது சமய நம்பிக்கையுடைய ஆங்கிலம், தமிழ் இணைந்த நல்ல பாரம்பரியங்களுடனான கல்வியை தமிழ் இனத்திற்கு வழங்கினார். 1924ல் இருந்து சைவ மங்கையர் சபைத் தலைமையையும் சிறப்பாக ஆற்றினார். இவரது சிறப்பான சேவையைப் போற்றி இலங்கைப் பல்கலைக் கழகம் தனது முதலாவது பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. அவுஸ்திரேலியா நாட்டிலிருந்து யாழ் மண்ணுக்கு வந்து அழகு தமிழ்பேசி, சைவத்தமிழ்ப் பண்பாடு பேணி, வாழ்ந்துகாட்டி கல்லூரிச் சமூகத்தை வழிப்படுத்திய சீமாட்டி லீலாவதி இராமநாதனை சைவத் தமிழ்ச்சமூகம் என்றும் நன்றியோடு போற்ற வேண்டும். எம் நிறுவனரின் சிந்தனையில் தோன்றியவற்றிற்கு செயல் வடிவம் தந்து நின்று நிலைக்கச் செய்த மாதரசி. அடுத்து வந்த அதிபர்

**4. Mrs. Milicent Mackenzine (M.A)**
**திருமதி மிலிசென்ற் மக்கென்சின் 1919-1920**

இவர் இங்கிலாந்திலிருந்து வருகை தந்த பெரும் கல்வியியலாளர். இவரும் இவரது கணவர் பேராசிரியர் ஜோண் மக்கென்சின் பிரபல தத்துவப் பேராசிரியர். இவர்கள் இருவரும் 2 ஆண்டுகள் இக்கல்லூரி வளாகத்தில் தங்கியிருந்து கல்லூரி மேம்பாட்டிற்கு

மகத்தான பணியாற்றியுள்ளனர். இவரைத் தொடர்ந்து

**5.Miss. Madeline. Hinsdlay 1921-1924**
செல்வி மடலின் கின்ஸ்லே

(பயிற்றப்பட்ட பட்டதாரி) பதவி ஏற்றார் இவருடைய விஷேடமான கற்பித்தல் நுட்பங்கள் விடாமுயற்சி கல்லூரிக்கான கடமை உணர்வு இறை சிந்தனை அர்ப்ப ணிப்பு சேவை அனைத்தும் இவரை மிகப் பிரபலமான அதிபராக்கியது...இவரது கடமை நிறைவில் இங்கிலாந்து செல்லும் போது Sir.P.R, இராமநாதன், லேடி இராமநாதன் கல்லூரி ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவரும் பிரிவுத் துயரால் வேதனைப்பட்டனர். இவரது பணியினைத் தொடர்ந்து மீண்டும் சீமாட்டி லீ. இராமநாதன் 1931 வரை பொறுப்பேற்றார் பின்னர்

**6. Miss.Vera Flava M.A Hons**
செல்வி வேரா புளாவா 1932-1936

கடமை ஏற்றார். இவரே ஆங்கிலேய அதிபர்களில் இறுதியானவர் இவரது 5 வருட சேவையில் கல்லூரி பல்துறை முன்னேற்றம் கண்டது. மாணவிகள் பாடசாலை மட்ட பட்டிமன்றங்களிலும் விளையாட்டுகளிலும் பங்குபற்ற ஊக்குவிக்கப்பட்டனர். இவரது அர்ப்பணமான சேவையில் மாணவிகள் இங்கிலாந்து மற்றிக்குலேசன் பரீட்சைக்கு தோற்றினர். இவர் ஒரு சிறந்த ஆசிரியராகவும் சிறந்த நிர்வாகியாகவும் விளங்கினார். இவர் சுத்தம், நேரந்தவறாமை, கடின உழைப்பு போன்றவற்றை வலியுறுத்தி வழிப்படுத் தினார். இவரது கடுமையான பாரபட்சமின்மை, உறுதியான தன்மை, ஆக்கபூர்வமான விமர்சனம் போன்றவை இவரது பணிக்கு வியக்கத்தக்க வெற்றியைத் தந்தது.

**இராமநாதன் கல்லூரியின் தலைமைத் துவத்தை ஏற்ற முதலாவது பெண் அதிபர்**

**1. செல்வி இரத்தினா செல்லையா பின் (திருமதி இரத்தினா நவரத்தினம் M.A) Madras 1937-1943**

1933இல் ஆசிரியராக இருந்தவர் இது வரை காலமும் ஆங்கிலப் பெண்களே அதிபர்களாக பணியாற்றினர் செல்வி R .R செல்லையா தான் இக் கல்லூரியின் முதலா வது தமிழ்ப் பெண் அதிபர். இறைபக்தி மதிநுட்பம் செயற் திறன் மும்மொழி ஆற்றல் நிறைந்த நம் நாட்டு பெண் தலைவி. இவர் காலத்தில் கல்லூரி வெள்ளி விழாக்கண்டது. ஸ்தாபகரின் கனவை நனவாக்கத்தக்க ஆற்றலும் ஆளுமையும் மிக்கவராக விளங்கி நற்பணி புரிந்து 1944இல் கல்வி அதிகாரியாக பதவி உயர்வு பெற்று பின் வட மாகாண கல்விப்பணிப்பாளராக உயர் பதவி வகித்தவர். கல்வித்துறையில் உயர் நிர்வாகப் பதவி வகித்த முதற் பெண்மணி இவர் என்பது எமது கல்லூரிக்குப் பெருமையளிப்பதாகும். பதவி யிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் சமயப்பணி களும் சமூகப் பணிகளும் விருப்புடன் மேற்கொண்டவர். கல்லூரி நிகழ்வுகளில் உரிமையுடன் கலந்து கொண்டவர்.

**2. திருமதி N. P பிள்ளை (Madras) 1944-1956**

மிகச் சிறந்தத அதிபராக இராமநாத னின் மருகர் சு.நடேசபிள்ளை அவர்க ளாலும் Lady Ramanathan ஆலும் தேர்ந் தெடுக்கப்பட்டு 13ஆண்டுகள் கல்லூரியை செம்மை நெறியில் வழிநடத்தி பெருமை சேர்த்தவர் திருமதி பிள்ளை. பாரதப் பெண்மணியான இவர் நம் நாட்டுப் பெண்களுக்கு நற்பணி புரிந்தார்.

இவர் காலத்தில் இலவசக் கல்வி அறிமுக மானதால் மாணவர் தொகை பல்கிப் பெருகியது. முதலாம் தரக் கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டு பல்துறை வளர்ச்சி கண்டது. Sir.P. இராமநாதனின் செயலாளராக 1928ஆம் ஆண்டிலிருந்தது கடமையாற்றியவர் என்ப தால் அன்னாரின் இலட்சியங்களை நன்கு உணர்ந்து செயற்பட்டார். இவர் மாணவர் மத்தியில் பல் துறைகளிலும் ஒரு விழிப்புணர்ச் சியை ஏற்படுத்தியதோடு அதிபர் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நெருங்கிய சமூகத் தொடர்பினையும் அன்புப் பிணைப்பினையும் தோற்றுவித்தார். இவர் காலத்தில் கலாசாரத்துறையில் தமிழ்ப் பண்பாடு கூடுத லாகப் பரிணமிக்கத் தொடங்கியது. ஆரம்ப காலத்தில் றோஸ்; டேய்சி; ஜஸ்மின் லோட் டஸ் லில்லி வயலயற் என்ற பெயர்களுடன் விளங்கிய கல்லூரி இல்லங்கள் தமயந்தி, அருந்ததி, சகுந்தலா, ஜானகி, கண்ணகி, லீலாவதி எனப் புராண இதிகாச காவிய நாயகிகளின் பெயருடன் மிளிரத்தொடங்கின. எந்த மாற்றத்தைப் பெண் சமுதாயத்தில் பொன். இராமநாதன் கொண்டுவர விரும்பி னாரோ அந்த மாற்றத்தில் முழுமையான வெளிப்பாடாக பேரெழிலும், பண்பட்ட ஆளுமையும், நிமிர்ந்த மென்நடையும், நேரிய பார்வையும், நிறை கல்வியும், கேரளநாட்டு கலைஆர்வமும் எல்லாவற்றிற்கும் மேலாக அன்பு நிறைந்த ஒரு மென் உள்ளமுமாகக் திகழ்ந்து கல்லூரிச் சமூகத்தை கொள்ளை கொண்டார். இவர் காலத்தில் இலவசக் கல்வியால் சாதி மத பேதமின்றி எல்லாக் குழந்தைகளுக்கும் கல்லூரிக் கதவுகள் அகலத் திறக்கப்பட்டன. பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரிய வளம் போதாமையால் பட்டதாரி ஆசிரியர்கள் தமிழ்நாடு மற்றும் கேரளாவி லிருந்து வருவிக்கப்பட்டனர். அதிபரின் அற்புத செயற்றிறனால் சில வருடங் களில் எம் மாணவிகள் கூட்டம் கூட்டமாக பல்கலைக் கழகம் சென்றனர். பிற்காலத்தில் பழைய மாணவிகள் பலர் கல்லூரியின் பட்டதாரி ஆசிரியர்கள் ஆகி விசுவாசமாகப் பணியாற் றியமைக்கு அம்மையாரின் அர்ப்பணிப்பான சேவையே காரணம். இவரது கணவர் திரு. பிள்ளை அவர்கள் கல்லூரியின் நூல்நிலையப் பொறுப்பாளராக விளங்கி மாணவிகளின் நூலகப்பயன்பாட்டிற்கு உறுதுணையாக விளங்கினார். இத் தம்பதிகள் என்றும் எம் நன்றிக்குரியவர்கள். இங்கிருந்து ஓய்வு பெற்று தாயகம் திரும்பிய இவர் திருமதி.பிள்ளை சிலகாலம் காரைக்குடி அழகப்பா கல்லூரியில் சிறந்த அதிபராகக் கடமையாற்றினார். என்பதும் எமது கல்லூரிக்குப் பெருமை சேர்ப்பதே இவரைத் தொடர்து

**3.திருமதி கூ. முத்துக்குமாரு**

**B.Sc (Calcatta) Eng trained 1957-1964 மார்ச்**

1925ஆம் ஆண்டு பயிற்றப்பட்ட ஆசிரியையாக இக்கல்லூரியில் சேவையைத் தொடங்கிய திருமதி T. முத்துக்குமாரு அவர்கள் பின்னர் கல்கத்தா பல்கலைக்கழக விஞ்ஞான மாணிப் பரீட்சையில் தேறிப்பயிற் றப்பட்ட பட்டதாரி ஆசிரியராகப் பணி புரிந்தார். 1957ல் இவர் அதிபரானார். இவரு டைய காலத்திலேயே 1963ஆம் ஆண்டில் கல்லூரிப் பொன்விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஆசிரியராகக் கடமை யாற்றிய காலத்தில் தாவரவியலை மாணவி கட்கு சிறப்பாகக் கற்பித்தார். நீண்ட கால மாக இங்கு ஆசிரியராக பணியாற்றியதன் காரணத்தினால் அவர் அதிபராக இருந்த காலத்தில் ஆசிரியர்களாகக் கடமையாற்றிய பலர் அன்னாருடைய மாணவிகளாக இருந்

தமையால் அனைவரும் இணைந்து கல்லூரி முன்னேற்றத்திற்கு உழைக்கும் சிறந்த சூழ் நிலை உருவாகியது. இவரைத் தொடர்ந்து

**4. செல்வி யோகாம்பிகை கனகசபை**

**M.A. Calcatta**

1964 மார்ச் - 1969 மார்ச் வட மராட்சிப் பெண்கள் கல்லூரி, மாத்தளை பாக்கியா வித்தியாலயம்; சாவகச்சேரி மகளிர் கல்லூரி; ஆகிய பல பெண்கள் கல்லூரிக ளிலும் பல ஆண்டுகளாக கடமையாற்றிய அனுபவத்துடன் செல்வி யோ.கனகசபை அவர்கள் இக்கல்லூரியில் அதிபர் கடமையை ஏற்றார். அன்னாருடைய இவ் அனுபவ முதிர்ச்சியாலும் செயல்ஆற்றலினாலும் கண்டிப்பான இயல்பினாலும் கல்லூரியும் விடுதியும் பல்லாற்றாலும் நற்பயன் எய்தின. விடுதி மாணவிகளுக்கு பல வசதிகளையும் அமைத்துக் கொடுத்ததுடன் பழுதடைந்த நிலையிலிருந்த பல கட்டிடப் பகுதிகளுக்கான திருத்த வேலைகளையும் மேற்கொண்டனர். கல்லூரியில் பல வகுப்பறைகளைக் கொண்ட "சுந்தரி மண்டபம்" இவர் காலத்தில் அமைக் கப்பட்டது. இவரது நேர்த்தியான நிர்வாகத் திறத்தினால் கல்லூரி இணை பாட செயற்பாடுகளிலும் முன்னணி வகித்தது. நாட்டிய நாடகங்கள் பல சிறப்பான முறையில் அரங்கேறின. மாணவர் ஒழுக்கம், நடை, உடை, பண்பாட்டில் உறுதி பேணப் பட்டதோடு கல்விச் செயற்பாடுகளிலும் உயர்வெய்தினர்.

**5.திருமதி காயத்திரிதேவி கணேசன்**

**B.Sc (Annamalai)Eng Trained**

1965 ஜனவரி 1965 மார்ச் இராமநா தன் கல்லூரிப் பழைய மாணவியாகிய திருமதி கணேசன் அதிபராக விளங்கினார். அவர்கள் 1948ஆம் ஆண்டு முதல் 1964ஆம் ஆண்டு வரை முதலாம் தர விசேட ஆசிரியையாக இங்கு கடமையாற்றினார். விஞ்ஞானத்தில் பட்டம் பெற்று ஆசிரியராகப் பணி புரிந்த முதல்ப்பழைய மாணவி இவரேயாவார். மூன்று மாதங்கள் இங்கு அதிபராகக் கடமை யாற்றிய இவர் சாவகச்சேரி மகளிர் கல்லூரி யிலும் பின்னர் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றார்.

**6.திருமதி இராஜநாயகம் அருணாசலம்**

**B.A.Post Grad Trd, Teacher Counsellers Certificat S.L.E.S Class iv ஏப்ரல் 1969 - 1980 ஆகஸ்ட்**

1945ஆம் ஆண்டில் இளம் பட்டதாரி ஆசிரியையாகக் கல்லூரியிற் சேர்ந்த திருமதி இ.அருணாசலம் அவர்கள் பட்டப்பின் பயிற்சி பெற்று 1948இல் பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர் ஆயினர். 1958இல் இவர் முதலாம் தர விசேட பதவியைப் பெற்றார். 1966இல் உதவி அதிபரானார். 1969ஆம் ஆண்டு அதிபரானார். 24ஆண்டுகளாகப் பெற்ற பயிற்சியும் அனுபவமும் அதிபராகப் பதவி ஏற்ற காலத்தில் இவருக்கு உறுதுணை யாயின. ஆறு ஆண்டுகளுக்கு மேல் கல்லூரி விடுதிச் சாலையில் தங்கியிருந்தமையாலும் லேடி இராமநாதன் அம்மையாருடைய தொடர்பினாலும் சேர் இராமநாதன் அவர் களுடைய இலட்சியங்களை நன்கு புரிந்து கொண்டு அவற்றிற்கேற்பச் செயற்பட்டார். இவர் காலத்தில் 1973ஆம் ஆண்டில் வைர விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அரசியல், வரலாறு ஆகிய பாடங்களை உயர்தர வகுப்பிற் கற்பித்து மாணவர்கள் பலர் பல்கலைக்கழகம் புகுவதற்குத் துணைபுரிந்து அவர்களுடைய நன்றிக்கும் மதிப்புக்கும் உரியவரானார். இவர் காலத்தில் கல்லூரிக்குத் தேவையான பல புதிய கட்டிடங்கள் அமைக் கப்பட்டன. கல்லூரி பிரதான பெரிய மண்ட

பமும் திருமதி.அருனாசலம் காலத்திலேயே உருவானது. எமது கல்லூரியின் உடற்பயிற்சிக் குழுக்கள் பல தடவை தேசிய மட்டத்தில் முதல் இடங்கள் பெற்றமையும் குறிப்பிடத் தக்கது. இசை நாட்டிய நாடகங்களின் வளர்ச்சியிலும் இவர் மிகுந்த அக்கறை காட்டியவர். நடராஜப் பெருமான் மீது மட்டற்ற பக்தி உடையவர். சாந்தமான அதே சமயம் நேர்த்தியான நிர்வா கத் திறனுடன் கல்லூரியை வழிநடாத்தியவர். இதனால் தேசிய மட்டத்தில் கல்லூரியின் இசை, நடனம், நாட்டிய, நாடகம், உடற் பயிற்சி என்பவற்றில் முதல் இடங்களைப் பெற்றமை வரலாற்றுச்சிறப்பே

**7.திருமதி.பத்மாசனி ஆறுமுகம்**

**B.Sc, Dip in Edu, S.L.E.A.S.**

1970 மே - 1970 யூலை மானிப்பாய் மகளிர் கல்லூரியில் அதிபராகக் கடமை யாற்றிக் கொண்டிருந்த செல்வி ப.ஆறுமுகம் அவர்களிடையில் இரண்டு மாதகாலம் வரை இங்கு அதிபராகக்கடமை புரிந்தவர். மானிப் பாய் மகளிர் கல்லூரியிலும், வேம்படி மகளிர் கல்லூரியிலும் அதிபராகக் கடமையாற்றிய பின்னர் மன்னாரில் கல்விப் பணிப்பாளராக கடமை புரிந்து ஓய்வு பெற்றார். பின் ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் கல்வித் திணைக் களத்தில் சேவைக்கு அமர்த்தப்பட்டு உயர் பதவி வகித்தமை பெருமைக்குரியதாகும்.

**8.திருமதி.யோகலட்மி இராசரத்தினம்**

**B.A Madras Dip In Edu. (Cey) Tamil Trained September 1980-1983 February**

இக் கல்லூரி பழைய மாணவி யாகிய திருமதி இராஜரத்தினம் அவர்கள் 1949ஆம் ஆண்டு முதல் 1983இல் ஓய்வு பெறும் வரை இங்கு கடமையாற்றினார். 1955இல் கல்வி டிப்ளோமாப் பட்டம் பெற்று 1968 முதல் பகுதித் தலைவராகவும் 1969 முதல் உப அதிபராகவும் 1980 செப்ரெம்பர் தொடக்கம் அதிபராகவும் கடமை புரிந்தனர். கல்லூரி வளர்சியில் பல்துறையிலும் இவருடைய பணி சிறந்து விளங்கியது. உயர்தர வகுப்புக்களில் புவியியலை திறம்படக் கற்பித்து மாணவிகள் பல்கலைக் கழகம் புகுவதற்கு உதவினார். இவரிடம் புவியியல் கற்ற மாணவிகள் பலர் புவியியலை சிறப்புப் பாடமாகக் கற்றுப் பட்டம் பெற்றுள்ளனர். பழைய மாணவர் சங்கத்தை புனரமைத்ததன் மூலம் பழைய மாணவிகளுக்கும் பாடசாலைகளுக்குமி டையே தொடர்பை ஏற்படுத்த இவர் கார ணமாக இருந்தார். என்பது குறிப்பிடத்தக்கது. தனது சேவைக் காலத்தின் பின்னரும் கல்லூரி வளர்ச்சியில் அக்கறையுள்ள பழைய மாணவி யாக விளங்கி பழைய மாணவர் சங்க கனடா கிளையின் தலைமைத்துவத்தை ஏற்று கல்லூ ரிக்காய் உழைத்தவர்.

**9. திருமதி புவனேஸ்வரி சச்சிதானந்தம்**

B.A.Hons (London) Eng. Trained S.L.E.A.S.
1983-1986 ஏப்

ஒன்பது ஆண்டு காலம் இக்கல் லூரியில் பயின்று லண்டன் இடைமாணிப் பரீட்சையில் சித்தியடைந்து பின்னர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து பயிற்சி பெற்று பயிற்றப்பட்ட ஆசிரியராக 1951ஆம் ஆண்டி லிருந்து கடமையாற்ற வந்த திருமதி பு. சச்சிதானந்தம் அவர்கள் 1952ஆம் ஆண்டில் தமிழை விசேட பாடமாகக் கொண்டு லண் டன் கலைமாணிப் பரீட்சையில் தேறி பயிற்றப் பட்ட பட்டதாரி ஆசிரியை ஆகினார். 1953 ஆம் ஆண்டு முதல் வேறு பல பாடசாலை களில் உதவி ஆசிரியராகவும் 1968இல் அதிபராகப் பதவி உயர்வு பெற்று காங்கேயன் துறை மகாவித்தியாலயம், மானிப் பாய் மகளிர்

கல்லூரி, வீமன் காமம் மகாவித்தி யாலம் ஆகியவற்றில் அதிபராகவும் கடமை யாற்றிய அனுபவத்துடன் 1983இல் இக் கல்லூரியின் அதிபர் கடமையை ஏற்றுச் சிறப்பாக பணி புரிந்தனர். இனிமையாகப் பேசும் பழகும் பண்பால் கல்லூரிச் சமூகத் தைக் கவர்ந்தவர்.

**10. திருமதி ஞானேஸ்வரி சோமசுந்தரம்**

**B.A.Hons, (Cey) Dip in Edu. 1986-1988 ஜனவரி**

இராமநாதன் கல்லூரியின் சிறந்த மாணவிகளுள் ஒருவராகிய திருமதி ஞா. சோமசுந்தரம் அவர்கள் 1946இல் நடைபெற்ற இலங்கைப் பல்கலைக்கழக புகுமுகப் பரீட் சையில் திறமையாகத் தேர்ச்சி யடைந்து தமிழுக்கான புலமைப் பரிசில் பெற்று பல்கலைக்கழகம் புகுந்து தமிழை விசேட பாடமாகக் கொண்டு சிறப்புப் பட்டம் பெற்றார். 1951 முதல் 1988 ஆம் ஆண்டு தொடக்கத்தில் ஓய்வு பெறும் வரை இங்கேயே கட்மையாற்றினார். 1958இல் கல்வி டிப்ளோமா பட்டம் பெற்ற இவர் 1969 முதல் பகுதித் தலைவராகவும் 1980 செப்ரெம்பர் தொடக்கம் உப அதிபராகவும் 1986 ஏப்ரல் முதல் அதிபராகவும் கடமையாற்றினார். இவருடைய நீண்டகால ஆசிரியச் சேவையில் தமிழ், வரலாறு, சமஸ்கிருதம் ஆகிய பாடங்களை உயர்தர வகுப்பில் திறமையாகக் கற்பித்து மாணவிகள் பலர் பல்கலைக்கழகம் புகுவதற்கு காரணமாயினார் சமயம், கலாசாரம் ஆகிய பகுதிகளுக்குப் பொறுப்பாக இருந்து பணி புரிந்தார். இவர் காலத்தில் பழைய மாணவருக்கும் பாடசாலைக்கும் இடையேயுள்ள தொடர்பு மேலும் நெருக்கமுற்றமை குறிப்பிடத்தக்கது. அபூர்வமான நினைவாற்றல் மிகுந்தவர் என்பதால் பாடசாலைச் சமூகம் சார்ந்த எத் தகவலையும் உடனடியாக வழங்கத்தக்க தகவல்ப் பெட்டகமாகவும் விளங்கினார். விளங்குகிறார். எம் கல்லூரி கலை இலக்கிய நாட்டிய நாடகத் துறைகளில் மேம்பட அரும்பாடு பட்டவர். தம் கணவர் முத்தமிழ் வல்ல திரு.சோமசுந்தரம் முன்னாள் கல்விப் பணிப்பாளர் அவர்களையும் எம் கல்லூரி கலைத்துறைக்கு முழுமையாகப் பயன்படுத்தி தேசிய மட்டத்தில் பல முதல் இடங்களைப் பெற உழைத்த ஒரு நல்லாசிரியர் திருமதி ஞானேஸ்வரி சோமசுந்தரம் இவர் எம் கல்லூரியின் நன் மாணவியாகவும் அபிமானம் மிகு பழைய மாணவியாகவும் பல்லாயிரம் மாணவிகளைக் கற்பித்து நிறைவு கண்ட நல் ஆசிரியை ஆகவும் சேவையின் நிறைவில் நல் அதிபராக விளங்கியதோடு இன்றும் எம் கல்லூரியின் வளர்ச்சிக்கு நல்ல ஆலோசகராகவும் விளங்குகிறார். இவர் எம் கல்லூரிக்கு இறைவன் தந்த ஒரு பெரும் சொத்து நீடு வாழ்ந்து எமக்கு வழிகாட்ட இறையருளை வேண்டுகிறோம். வெள்ளி விழா, பொன்விழா, வைரவிழா, பவளவிழா கண்டு அனைத்திலும் ஆர்வத்துடன் பங்களித்து மகிழ்ந்த எம் அபிமான ஆசிரியையும் கல்லூரியின் முன்னாள் அதிபருமாகிய திருமதி ஞானேஸ்வரி சோமசுந்தரம் நூற்றாண்டு விழாவிலும் நல் ஆலோசகராகவும் கௌரவ விருந்தினராகவும் கலந்து மகிழ மகிழ்விக்க சிவகாம சுந்தரி சமேத நடராஜப் பெருமான் அருள்பாலிப்பாராக.

**11. திருமதி.ஸ்ரீமதி குமாரசாமி**

**B.A(Ceylon, Dip in Edu, S.L.E.A.S (1988-1990)**

இராமநாதன் கல்லூரியின் புகழ் பூத்த பழைய மாணவி இறை பக்தியும், கலைஞானமும், பன்மொழி ஆற்றலும் மிக்க ஒரு அதிபர் 1959ஆம் ஆண்டிலிருந்தே இக் கல்லூரியின்

ஆசிரியையாகக் கடமையாற் றியவர். நான்கு தலைமுறை மாணவர்களை நயமாகக் கற்பித்த அனுபவத்துடன் அதிபர் பதவியை ஏற்றவர். அன்பினால் அனை வரையும் அரவணைத்து வழிப்படுத்திய ஒரு அன்னை. ஆற்றொழுக்குப் போல் மென்மை யான இனிய குரலில் தமிழிலும் ஆங்கிலத் திலும் பேசவல்ல பேச்சாளரும் கூட. எம் கல்லூரியில் அழகும் ஆளுமையும் மிக்க நல்லாசிரியையாக பலரைக் கவர்ந்தவர். முத்த மிழிலும் ஆற்றலும் ஆசையும் கொண்டவர். இதனால் கற்பித்த காலத்தில் வரலாற்று இலக்கிய நாடகங்களை நெறிப்படுத்தி மேடையேற்றியதோடு தாமும் பாத்திரமேற்று நடித்துள்ளார். அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் கல்லூரியின் பவள விழாவை மிகச் சிறப்பாக மூன்று நாட்கள் கொண்டாட வேண்டுமென முனைப்புடன் செயற் பட்டவர். முதல் நாள்க் கொண்டாட்டம் மிகச் சிறப்பாக நடந் தேறியது நாட்டில் யுத்த மேகங்கள் சூழ்ந்த தால் ஏனைய நிகழ்வுகள் பிற்போடப்பட்டு பின்னர் அமைதியாகக் கொண்டாடப் பட்டது. "பவள மலர்" சிறப்புமலராகக் வெளியிடப் பட்டது. சேவை நிறைவில் எம் அதிபர் கல்வித் திணைக் களத்தில் இணைந்து பணியாற்றி அமையும் அவரது திறமைக்கு சான்றாகும்.

**12. திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்**

**B.A, Dip in Edu, S.L.E.A.S (1990-1992)**

இராமநாதன் கல்லூரியின் பழைய மாணவி சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரின் வழித்தோன்றல் சைவத் தமிழ்ப் பண்பாட்டின் வடிவமாகவும் ஆசார சீலராகவும் நிறைந்த தமிழ்ப் புலமையாளராகவும் விளங்கியவர். ஆங்கில வடமொழிப் புலமையும் மிக்கவர். கோப்பாய் ஆசிரியக் கலாசாலையில் நீண்ட காலமாக விரிவுரையாளராக கடமை யாற்றியவர். கல்லூரிப் பற்றால் அதிபர் பதவியை ஏற்று திறம்படச் செயற்பட்டவர். நாட்டில் ஏற்பட்ட யுத்த கால இடர்பாடுகள் பலவற்றிற்கும் இறை துணையுடன் முகம் கொடுத்து இடம் பெயர்ந்த பல பாட சாலைகள் நமது கல்லூரி வளாகத்தில் தம் பணி தொடரவும் உதவியவர். தெல்லிப்பளை துர்க்காபுர மகளிர் இல்லக்குழந்தைகள் அன்னை சிவத்தமிழ்ச் செல்வியின் அரவணை ப்புடன் தொடர்ந்து வாழ வாழிடம் வழங்கி யவர் வந்தாரை வரவேற்கும் பண்பு மிக்கவர். கல்லூரியை தன் நற்சிந் தனைகளால் நெறிப் படுத்தியவர். இராமநாதேஸ்வர ஆலயத்தின் மகாகும் பாபிசேகத்தை தன் முயற்சியால் பாடசாலைக் சமூகம் பழைய மாணவர் உதவியுடன் மாண்புற நடாத்தி சேவையில் நிறைவு கண்டவர்.

**13. திருமதி ஆனந்தி சிவஞான சுந்தரம்**

**B.A, Dip in Edu S.L.P.S.I, S.L.E.A.S (1993-2011)**

பேராதனைப் பல்கலைக்கழக அரச அறிவியல்த்துறைப் பட்டதாரியும் இலங்கை அதிபர் சேவை தரம் 1இன் பரீட்சையில் மிக இள வயதில் சித்தியடைந்தவருமான ஆனந்தி சிவஞான சுந்தரம் 1993 இல் இராமநாதேஸ்வர ஆலய மண்டலாபிசேக பூர்த்தி விழாவில் அன்று கல்லூரிக்கு அதிபர் நியமனம் பெற்று வந்தவர். நன்னாளில் அவர் சேவை எம் கல்லூரியில் ஆரம்பித்ததால் 18ஆண்டுகள் கல்லூரியின் அதிபர் பதவியை அலங்கரித்துப் பெருமை சேர்த்தார். நம் கல்லூரி ஸ்தாபகரின் சிந்தனைகளை செயல் வடிவம் பெற வைக்க நீண்டகாலம் உண்மையாக உழைத்தவர். எமது கல்லூரி பழைய மாணவியாக இல்லாத போதும் இம் மாபெரும் கல்லூரியின் அதிபர்

பொறுப்பை தமக்கு ஆண்டவன் மிக இளவய தில் தந்துள்ளான் என்ற பொறுப் புணர்வுடன் கண்ணியமாகக் கடமையாற்றியவர் கல்லூரிப் பண்பாட்டுப் பாரம்பரியங்களை பேணிய தோடு பல்துறைகளிலும் கல்லூரி முன்னேறப் பாடுபட்டவர். நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தின் தாக்கங்கள் எம் கல்லூரியைப் பல வழிகளிலும் பாதித்த போதும் கல்லூரிச் செயற் பாடுகளைச் தொய்யவிடாது துணிச்சலுடன் முன்னெ டுத்துச் சென்றவர். குருகுல முறையில் பெண் கள் கல்வியையும் வாழ்வியற் பயிற்சிக ளையும் பெற வேண்டும் என எம் நிறுவுனர் ஆரம்பித்த விடுதிகள் யுத்த காலத்தில் செயல் இழந்து இருந்தன. திருமதி சிவஞான சுந்தரமே மீண்டும் விடுதியை இயங்க வைத்து தாமும் பாடசாலையில் தங்கியிருந்து மாணவிகள் பாதுகாப்புடன் தங்கிக் கற்க வழிவகுத்தவர். கல்லூரி வரலாற்றில் ஆதரவற்ற சிறுமிகளு க்கும் கல்லூரி வளாகத்தில் நிறுவுனர் அடைக்கலம் வழங்கிக் கற்பித்ததாக குறிப் பிடப்படுகிறது. திருமதி சிவஞானசுந்தரமும் வன்னியில் இருந்து வந்த சிறுமிகள் பெற்றோரோடு தொடர்பு கொள்ள முடியாது விடுதியில் இருந்த வேளை எவ்வித கட்ட ணமும் அறவிடாது அவர்கள் தங்கியிருந்து தம் கல்வியைத் தொடர அர்ப்பணிப்புடன் உதவி யுள்ளார் இயல்பாகவே இரக்கசுபாபமுள்ள நம் அதிபர் தன் நிர்வாகத்திலும் நெகிழ்வுத் தன்மை கொண்டவராக ஆசிரியர்கள், மாண வர்களை அரவணைத்து வழிநடாத்தினர். இதனால் கல்லூரி கல்விச் செயற்பாட்டிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் தேசிய மட்டத்திலும் பல சாதனைகளை நிலைநாட்டியது. அழகுணர்ச்சி மிக்க அதிபர் மாணவிகளின் கலை நிகழ்வுகள், பாண்ட் வாத்திய நிகழ்வுகள் யாவற்றிலும் மாணவி களை அழகுபடுத்தி மெருகூட்டுவதில் அக்கறையாக விளங்கியவர். அரங்க நிகழ்வு கள் மண்டப ஒழுங்குகளில் நேர்த்தியையும் அழகையும் தானே முன்னின்று வழிப்ப டுத்துவர். கல்லூரி ஸ்தாபகரின் ஆளுமைகள், ஆற்றல்கள் பற்றிக் கற்றும், கேட்டும் உணர்ந்த அதிபர் அன்னாரை இறைநிலையில் வைத்து மதித்தார். இதனால் நம் கல்லூரி ஸ்தாபகருக்கு கல்லூரி வளாகத்தில் ஓர் உருவச் சிலை நிறுவ எண்ணினார். உள்ளுதல் உயர்வானதால் காரியம் சித்தியானது. அதிபரின் முயற்சியால் கல்லூரி அபிமானிகளின் உதவியுடன் அவர் காலத்தில் ஸ்தாபகரின் உருவச் சிலை கல்லூரி வளாகத்தில் நிறுவப்பட்டது. மிக நீண்ட காலம் கல்லூரி முதல்வராக முனைப்புடன் செயற்பட்ட திருமதி சிவஞானசுந்தரம் தம் சேவை நிறைவில் கல்விப் பணிமனையில் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

**14. திருமதி சோமேஸ்வரி கைலாசநாதன்**
**B.sc, Dip in Edu, S.L.T.S.I**

யுத்த கால இடப்பெயர்வின்போது கல்லூரி அதிபர் பொறுப்பை ஏற்றவர். திருமதி சோ. கைலாசநாதன் இவர் கல்லூரியின் பழைய மாணவியும் எமது கல்லூரியின் கணித ஆசிரியையும் ஆவார். அமைதியும் ஆளுமையும் மிக்கவர். தாம் ஓய்வு பெறும் வரை பொறுப்புடன் தலைமைத்துவத்தை நிறைவேற்றியவர்.

**15.திருமதி சுபத்திரா விவேகானந்தன்**
**B.A, S.L.T.S.I**

திருமதி சோ.கைலாசநாதன் ஓய்வு பெற்ற போது கல்லூரியின் தலைமைத்துவப் பொறுப்பை உப அதிபராக இருந்த திருமதி சுபத்திரா விவேகானந்தன் ஏற்றுக் கொண்

டார். 1961ஆம் ஆண்டிலிருந்து தன் சேவைக்காலம் முழுவதும் எம் கல்லூரியிலேயே ஆசிரியராக, பகுதித் தலைவராக, உப அதிபராக, அதிபராகச் சிறப்புற கடமையாற்றியவர். நான்கு தலைமுறையினரை நிறைவாகக் கற்பித்த நல்லாசிரியை இனிமையாகப் பேசும் பண்பும், மலர்ந்த முகமும், பக்குவமான நடையும் இவர் பல மாணவரை ஈர்த்தன. தமிழ் மொழியையும், ஆங்கில மொழியையும் கசடறக் கற்பிக்கும் ஆற்றல் உள்ளவர். இவரிடம் ஆரம்ப வகுப்பில் இருந்து உயர்தரம் வரை கற்கும் வாய்ப்புப் பெற்றவள். யான் இன்றும் எனக்கு நல்வழி காட்டியாகவும் கல்லூரிக்கு நல் அபிமானி யாகவும் விளங்குகிறார்.

இடப்பெயர்வின் பின் மீண்டும் திருமதி ஆ.சிவஞானசுந்தரம் அதிபர் கடமையைப் பொறுப்பேற்று , 2011ஆம் ஆண்டு நிறைவுறும் வரை சிறப்புற வழி நடாத்தினார்.

**16. திருமதி வேணுகா சண்முகரத்தினம்**
**B.Sc, Dip, in Edu, M.Ed, S.L.P.S.I**

தற்போது திருமதி வேணுகா சண்முகரத்தினம் எமது கல்லூரியின் அதிபர் பதவியைப் பொறுபேற்றுள்ளார். கல்விச் சிறப்பு மிகு குடும்பத்திலிருந்து வந்தவர். பெற்றோர் இருவரும் தகை சான்ற ஆசிரியர்கள். இவரது தாயார் இக் கல்லூரியின் பழைய மாணவி செயல் ஆற்றலும் கல்வித் தகைமைகளும் நிறைந்த தற்போதைய அதிபர் திருமதி வேணுகா சண்முகரத்தினம் எம் கல்லூரியை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல அரும்பாடு படுகிறார். அவருக்கு இறை ஆசியும் அனைவர் அனுசரணையும் என்றும் கிட்டும்.

எம் கல்லூரியின் வளர்ச்சியில் பங்கு பற்றிய அதிபர்கள் அர்ப்பணிப்பான சேவைகள் வழங்கிய ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் அனைவரையும் நன்றியோடு வணங்கி சேர். பொன். இராமநாதனின் அளப்பெரும் தருமத்தால் அகிலம் முழுவதும் அறிவாட்சி செய்யும் எம் கல்லூரி மாணவிகள் அனைவர் சார்பிலும் ஸ்தாபகரின் பணியை நன்றி யோடு போற்றி, இவ்வுரையாற்றி நன்றிகூற வாய்ப் பளித்த கல்லூரிச் சமூகத்தையும் வாழ்த்தி மேலும் எம் கல்லூரிச் ஓங்கி வளர வாழ்த்தி அமைகிறேன்.

# வரலாற்றியல்



# நூற்றாண்டு விழாக்காணும் கல்லூரியின் நீங்காத நினைவுகள்

திருமதி. க. கிருஷ்ணபிள்ளை,
அதிபர்,
யா/இராமநாதன் கல்லூரி

இராமநாதன் கல்லூரி இன்று நூற்றாண்டு அகவையை நிறைவு செய்து அளப்பெருஞ் சாதனைகளை நிலைநாட்டி நூற்றாண்டு விழாவைக் கொண்டாடு வதையிட்டு அதிபர் என்ற முறையில் யான் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம்
செய்திட வேண்டுமம்மா அவர்
பங்கையக் கரங்கள் பார்த்தல்லவோ
பாரினில் நல்லறங்கள் வளருதம்மா"

என்ற தேசியவிநாயகம் பிள்ளை அவர்களின் பாடல் நினைவிற்கு வரும் போதெல்லாம் இராமநாதன் கல்லூரியை நினைவுகூருவேன். யானும் எனது தாயாரும் இக் கல்லூரியின் பழைய மாணவர்கள். தாயாரின் வழிகாட்டலில் இக் கல்லூரியில் யான் கல்வி கற்றேன். அரிச்சுவடி ஏந்தி நான் படிக்க வந்த பள்ளியிலே ஓடி ஆடி விளையாடிக் கற்றவற்றையும், இன்று இக் கல்லூரியின் அதிபராக இருக்கும் பேற்றையும் நினைக்கும் போது என் மனம் நிறைவான ஆனந்தமடைகின்றது.

"மாதா பிதா குரு தெய்வம்" என்பது வெறும் வாக்கியங்கள் அல்ல. மகாவாக்கியங்கள். இவர்களை நான் மனதார நேசிக்கின்றேன். யான் கற்ற கல்லூரியில் அதிபராகப் பணிபுரியவும், நூற்றாண்டு விழாவைக் கொண்டாடவும் வைத்த நடராஜப் பெருமானையும், சேர். பொன். இராமநாத வள்ளலாரையும், முதற்கண் சிரந்தாழ்த்தி வணங்கி, ஏணியாக இருந்து கற்பித்து என்னை உருவாக்கிய ஆசிரியப் பெருந்தகைகளையும் பெற்றோரையும் நன்றியுணர்வோடு இந்த இடத்தில் வாழ்த்தி வணங்குகின்றேன்.

101 மாணவர்களோடும் 12 ஆசிரியர்களோடும் ஆரம்பித்த இக் கல்லூரி இன்று ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களையும் பல ஆசிரியர்களையும் கொண்டு விளங்குகிறது. எத்தனையோ வளர்ச்சிப் படிகள் கண்டு, பல சாதனைகளை நிலைநாட்டிப் பல கல்வியியலாளர்களை, நல்ல இல்லத்தரசிகளை உருவாக்கிய பெருமையோடு, தலை நிமிர்ந்து வெள்ளி விழா, பொன்விழா, வைரவிழா பவளவிழாக் கண்ட பெருமிதத்தோடு நூற்றாண்டு விழா வைக் கொண்டாடுவதையிட்டு யான் மகிழ்ச்சி அடைவதோடு, கல்லூரியானது மேலும் மேலும் பல வளர்ச்சிகள் கண்டு உலகில் தன்புகழ் நிறுவ வேண்டுமென வாழ்த்தி வணங்குகின்றேன்.

சேர். பொன். இராமநாதன் அவர்கள் சைவத்தமிழ்ப் பெண்களுக்கென மருதனார் மடத்தில் 25 ஏக்கர் பெரு நிலப்பரப்பில் 1913ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம் திகதி இக் கல்லூரியை நிறுவினார். இது இலங்கை யின் முதல் சைவத்தமிழ் பெண்கள் கல்லூரி என்ற பெருமைக்குரியது. இது சைவத்தமிழ் பண் பாட்டின் சின்னமாக விளங்குகின்றது. இதற்கு அமைவாகவே கல்லூரியின் கட்டிட அமைப் புக்கள் விளங்குகின்றன. கல்வியின் மூலம் தேசபக்தியையும், தெய்வ பக்தியையும் ஒழுக் கத்தையும் வளர்க்கலாம் என்பதை ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே அறிந்து செயலாற்றி யவர் சேர். பொன். இராமநாதன் அவர்கள். அந்நியர் வருகையும், கிறீஸ்தவ பாதிரிமாரின் மத மாற்றக் கொள்கையிலும் நம் நாட்டு மக்கள் பண்பாடு பாரம்பரியங்கள் சீரழிக்கப் பட்ட நிலையில் நாவலர் வழி நின்று சைவத் தமிழ்ப் பண்பாடு பேணிப்பாதுகாக்கும் வகை யில் இக் கல்லூரியைக் கட்டினார். பெண் கல்விக்குப் பெருமை கொடுத்து, எமது பண் பாடு பாரம்பரியங்களைப் பேணிக்காத்த சேர். பொன். இராமநாதன் அவர்களை நன்றியுணர் வோடு நினைவு கூருவது எமது ஒவ்வொரு வருடைய தலையாய கடமை யுமாகும். எமது கல்லூரி ஸ்தாபகர் ஒரு பெரிய மகான். ஈழம் வாழ் மக்களால் இனமத வேறுபாடின்றிப் போற்றப்படும் தேசியத் தலைவன். அவரது பணிகள் சமயம், கல்வி, சமூகம், அரசியல் என ஒன்றுடனொன்று விஞ்சிக் காணப்படினும், அவரது கல்விப் பணியால் பெரும் பயன் அடைந்த நாம் அன்னாரின் கல்விப்பணியைத் தலைசிறந்த பணியெனக் கொண்டு அவரை இன்று நினைவு கூருகின்றோம். இக் கல்லூரி யில் சைவத்தமிழ் பண்பாடு பேணும் வகையில் கல்வி புகட்டப்பட்டது. குரு குலக்கல்விமுறை பேணப்பட்டது. மாணவிகள் சிவசின்னம் அணிந்தவராய் பாவாடை, தாவணி, பூமாலை, பொட்டு அணிந்தவராய் ஆலயத் தொண்டுக ளில் பயிற்சி உடையவராய் பண்ணோடிசை பாடுபவராய் காணப்பட்டனர். அவர்கள் காலை, மாலை வேளைகளில் பிரார்த்தனை யின் போது பாட வேண்டிய திருமுறைப் பாட ல்களை ஸ்தாபகரே தொகுத்தளித்துள்ளார். வெறும் பட்டங்கள், பதவிகள் வகிக்கவும், உத்தியோகத்திற்காகவும் இங்கு கல்வி புகட் டப்படவில்லை. சிறந்த குடும்பப் பெண்களை, புராண இதிகாசங்களில் காணப்படும் இலட் சியப் பெண்களை உருவாக்கும் வகையிலும், கலாசாரம் பேணும் வகையிலுமே கல்வி புகட்டப்பட்டது. நாட்டிற்கு சிறந்த சேவை யாற்றும் மக்களை உருவாக்கித் தருபவர்கள் பெண்களே என்ற உயரிய நோக்கத்தில் ஒரு பெண்ணுக்குக் கொடுக்கும் கல்வி அவளோடு நின்றுவிடாது, ஒரு நல்ல சமூகத்தையே உரு வாக்கும் என்ற கொள்கையை உடையவராகக் காணப்பட்டார். சேர். பொன். இராமநாதன் அவர்கள்.

அவரது தூய நினைவு வீண்போக வில்லை. இன்று உலகளாவிய ரீதியிலும், இலங்கையிலும் இராமநாதன் கல்லூரியில் பயின்ற மாணவிகள் என்று பெயர் சொல்லு மளவிற்குச் சிறந்த வாழ்க்கை வாழ்கின்றனர். கனடா, இங்கிலாந்து, அமெரிக்கா, அவுஸ்தி ரேலியா, சிங்கப்பூர், மலேசியா நாடுகளில் இசைத்தமிழ்க் கல்லூரிகள் வைத்தும், நடனப் பள்ளிகள் வைத்தும் கலையை வளர்ப்பதோடு நாயன்மார் குருபூசைகள் கொண்டாடியும், திருமுறை மன்றங்கள் வைத்துச் சைவத்தையும், தமிழையும் வளர்க்கின்றனர். மேலும் வைத் திய நிபுணர்களாகவும், சட்டவல்லுனர்க

ளாகவும், பொறியியலாளர்களாகவும் உயர் பதவிகள் வகிக்கின்றனர் என்றால் இது இராம நாதன் கல்லூரி வழங்கிய பயிற்சியும் கல்விக் கொடையுமே என்பதைப் பெருமையுடன் கூறுகின்றேன்.

இன்று இக்கல்லூரி வெள்ளிவிழா, பொன்விழா, வைரவிழா, பவளவிழாக்களைக் கொண்டாடி நூற்றாண்டு விழாவைக் கொண் டாடுகின்ற பெருமையோடு தலைநிமிர்ந்து நிற்கின்றது. அத்தோடு உலகெங்கும் பரந்து வாழும் இராமநாதன் கல்லூரிப் பழைய மாணவிகள் நன்றியுணர்வோடு நூற்றாண்டு விழாவை ஆங்காங்கு கொண்டாடுகின்றார் கள் என்பதை அறிந்து பெருமகிழ்ச்சியும், மனநிறைவும் அடைகின்றேன். இவையாவும் வெறும் கொண்டாட்டங்கள் அல்ல. நன்றிக் கடன் கொண்டாட்டங்களே. இவையாவும் சேர் பொன் இராமநாதன், சீமாட்டி லீலாவதி அம்மையார், திரு. திருமதி சு. நடேசபிள்ளை ஆகியோருக்கு நாம் செய்யும் நன்றிக் கடன் களே.

எமது கல்லூரி நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகின்ற இந்த வேளையில், நூற் றாண்டு கால வளர்ச்சிப் பாதையில் ஏற்பட்ட இன்னல்கள், மாற்றங்கள், உயர்வு தாழ்வு களையும் நாம் சிந்தனைக்கு எடுக்க வேண்டி யுள்ளது. இந்த வகையில் எத்தனையோ மேடுபள்ளங்களை எமது கல்லூரி சந்தித் துள்ளது. ஆயினும் அது தன் இலட்சியத்தில் பின்வாங்காத வளர்ச்சியைக் கண்டுள்ளது. எனவே கல்லூரியின் நூற்றாண்டு கால வளர்ச் சியை 1913 தொடக்கம் 1986 வரையான காலப்பகுதியாகவும், 1987 தொடக்கம் இற்றை வரையான காலப்பகுதியாகவும் பார்க்கலாம்.

1913 தொடக்கம் 1986 வரை கிட்டத் தட்ட 75 ஆண்டு காலப்பகுதி அதி உன்னதமான காலப்பகுதியாகக் கொள்ளலாம். கல்லூரி சகல துறைகளிலும் கொடி கட்டிப்பறந்த காலமது. இந்த வளர்ச்சிக்கு வழிகாட்டிகளாக இருந்த ஸ்தாபகர், அவரது மருகர் திரு. சு. நடேசபிள்ளை, அக்காலத்தில் இருந்த அதிபர் கள், ஆசிரியர்களை நாம் நன்றிப் பெருக்கோடு நினைவு கூரவேண்டும். தகுதி வாய்ந்த தமிழ்ப் பெண்ணாசிரியர்கள் அக்காலத்தில் இல்லாத தனால் ஆளுமைமிக்க ஆங்கிலப் பெண் மணிகளே. 1936ஆம் ஆண்டு வரை அதிபர்க ளாக நியமிக்கப்பட்டனர். எமது இனத்திற்கும், மதத்திற்கும் புறம்பானவர்கள், எமது பண் பாட்டுப் பாரம்பரியங்களையும், இலட்சியங் களையும் பேணிப் பாதுகாத்தனர் என்றால் அத்தனை பேரும் எமது வணக்கத்துக்குரிய வர்களே. இந்த வகையில் முதல் அதிபராக அங்கம் வகித்த ஆங்கிலப் பெண்மணி சிறந்த கல்வியாளரும், ஆத்மீகப்பண்பு உடைய வருமாகிய திருமதி புளோறன்ஸ் எமெறி ஆவார். இவருடன் பதினொரு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் எல்லோரை யும் நன்றி பாராட்டுகின்றேன்.

1937 தொடக்கம் தமிழ்ப் பெண்மணி களே அதிபர்களாக கடமையாற்றும் வாய்ப்புக் கிட்டியது. கல்லூரி மாணவர்கள் இலங்கை, இந்தியா, லண்டன் பல்கலைக்கழகங்களில் பயின்று பட்டதாரி ஆசிரியர்களாக இங்கு வந்து கடமையாற்றினர். இந்த வழியில் 1980 இல் 28 பட்டதாரி ஆசிரியர்கள் இங்கு பழைய மாணவிகளாகப் பணி புரிந்தனர். இற்றைவரை 15இற்கும் மேற்பட்ட தமிழ்ப் பெண்ணதிபர் கள் இக்கல்லூரியை வளம்படுத்தியுள்ள னர். இவர்களுள் 1937 இல் செல்வி R. R.

செல்லையா (திருமதி R. R. நவரட்ணம்) முதல் பெண் அதிப ராகக் கடமையேற்ற பெருமைக் குரியவரா வார். அடுத்து 1946இல் திருமதி N. P பிள்ளை அவர்கள் இந்திய நாட்டிற் பிறந்து ஈழம் வந்து எமது கல்லூரியில் 13 ஆண்டுகள் அதிபராகப் பணிபுரிந்தவர். இவரது காலத்தில் புராண இதிகாச காலப் பெண்களின் பெயர் களே கல்லூரி இல்லங்களின் பெயர்களாக விளங்கின. இது எமது பண்பாட்டுப் பாரம் பரியம் பேணி நின்றமைக்குச் சான்றாகும். இவர்கள் எல்லோரையும் நான் நன்றி கலந்த உள்ளத்தோடு நினைவு கூருகிறேன். எல்லா அதிபர்களும் ஏதோ ஒரு வகையில் கல்லூரி யின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர்களே.

மேலும் திருமதி T. முத்துக்குமாரு, செல்வி யோகாம்பிகை கனகசபை, திருமதி காயத்திரி கணேசன், திருமதி இராசநாயகம் அருணா சலம், செல்வி பத்மாசனி ஆறுமுகம், திருமதி யோகலட்சுமி இராசரத்தினம், திருமதி புவனே ஸ்வரி சச்சிதானந்தம், திருமதி ஞானே ஸ்வரி சோமசுந்தரம் என்போர் இக்காலப் பகுதியில் கடமையாற்றிய அதிபர்கள் இவர்க ளூட் பெரும்பாலானவர்கள் காலத்தில் யான் இங்கு கல்வி கற்றுள்ளேன். இவர்கள் என் வணக்கத் திற்குரியவர்களாவர்.

இக்கால கட்டங்களில் வருடா வருடம் பெருந்தொகையான மாணவர்கள் பல்கலைக் கழகம் சென்றனர். பலர் கலைப்பட்டதாரிக ளாகப் பட்டம் பெற்றுக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர். மேலும் மகப்பேற்று வைத்தியர் செல்வி சிவா சின்னத்தம்பி, திருமதி மங்கை யற்கரசி மகாதேவா, திருமதி வேத நாயகி வேலும்மயிலும், செல்வி ஸ்ரீஜெயதேவி பொன்னுத்துரை என்போரை சிறந்த வைத்திய நிபுணர்களாகக் கல்லூரி தோற்றுவித்துப் பெருமை கொண்டது.

திருமதி ருக்மணி வெற்றிவேலு இராம நாதன் காலத்து ஆசிரியர். இவர் இராமநாதன் கல்லூரித் தமிழ்ப் பாடசாலை அதிபராக இருந்து பல தமிழ் ஆசிரியர்களை உருவாக்கி யவர். பின்பு இராமநாதன் கல்லூரி ஆரம்பப் பிரிவு அதிபராக நீண்டகாலம் பணியாற் றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இவரைத் தொடர்ந்து திருமதி குமாரசுவாமி, திருமதி தெ. செல்லையாபிள்ளை, திருமதி சி. சின்னத்துரை, திருமதி கு. அப்புத்துரை, திருமதி ஜெயரூபன் ஆசிரியர்கள் ஆரம்பப் பிரிவுத் தலைவர்களாகப் பணிபுரிந்துள்ளனர்.

1987இற்கு பின்னுள்ள காலப்பகுதியில் கல்லூரி பலவழிகளில் இன்னல்களையும், அழிபாடுகளையும் சந்தித்தது. நாட்டில் ஏற் பட்ட யுத்தகாலச் சூழ்நிலை, வன்செயல்கள், இடப்பெயர்வுகள், இந்திய அமைதி காக்கும் படை வருகை என்பவற்றால் பாதிக்கப்பட்ட நிலையில் 1988 இல் திருமதி குமாரசுவாமி ஸ்ரீமதி அதிபரானார். இவரது காலத்தில் போர்ச்சூழலில் பவளவிழா நடந்தேறியது குறிப்பிடத்தக்கது.

பல வழிகளில் சேதமடைந்து இழப்புக் களைக் கொண்டிருந்த கல்லூரியை வளர்த் தெடுக்க அரும்பாடுபட்டவர். திருமதி குமார சுவாமி அவர்கள். இவருக்கு பக்கபலமாக உதவியவர் திரு. ஏகாம்பரநாதன் ஆசிரிய ராவார். இவர்களது முயற்சியால் கல்விக்கந் தோர் கதிரை, மேசை, அலுமாரி, தட்டச்சுப் பொறிகள், விளையாட்டு உபகரணங்கள், இசைக்கருவிகள் என்பவற்றையும், T.R.R.O ஸ்தாபனம் ஒலிபெருக்கி, தட்டச்சுப்பொறி,

பிரதியாக்கம் செய்யும் கருவி ஆகியவற்றையும் மானிப்பாய் சுந்தரேசன், மஸ்கென் நிறுவனங் கள் தளபாடங்களையும் பாடசாலைக்கு வேண்டிய கொடித்தம்பம், நீர்க்குழாய் ஆகிய வற்றையும் தந்துதவின. திரு. செ. இலகுநாதன் அவர்கள் (பா. அ. ச. செயலாளர்) விளை யாட்டு மைதானத்தை சமநிலைப் படுத்தி உதவியும், நடராஜர் பீடத்தை செல்வி துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்க ளும், கரும்பலகை விளையாட்டு உபகரணங் களை பழைய மாணவர்கள் திருமதி சோம சுந்தரம் அவர்கள் மூலமும் தந்துதவியும், கல்லூரி வளர்ச்சிக்கு உதவினர். இக்கால கட்டத்தில் இடம்பெயர்ந்த விடுதி மாணவர் களையும் ஆசிரியர்களையும் பாதுகாப்பாக இருக்க இடந்தந்துதவிய உடுவில் மகளீர் கல்லூரி அதிபர் செல்வி செல்லையா ஆவார். இவர்கள் எல்லோருக்கும் நன்றிக் கடப்பாடு டையேன்.

"காலத்தினாற் செய்த நன்றி சிறுது எனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

என்ற வள்ளுவன் வாக்கைக் கூறித் திருப்தியடைகின்றேன். இக்காலகட்டத்தைத் தொடர்ந்து திருமதி மங்கையற்கரசி திருச் சிற்றம்பலம், திருமதி ஆனந்தி சிவஞான சுந்தரம், (தற்காலிக அதிபர்களாக திருமதி கைலாயநாதன் திருமதி சுபத்திரா விவேகா னந்தன் ஆகியோரும் பின்னர் மீண்டும் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம், திருமதி வேணுகா சண்முகரத்தினம் என்போர் கல்லூரி அதிபர்க ளாக இருந்த சிறந்த பணிகளை ஆற்றியுள்ள னர். இவர்கள் சைவத்தையும் தமிழையும் பண்பாட்டுப் பாரம்பரியங்களையும் மேலும் அழிந்துவிடாது பாதுகாத்த பெருமைக்குரிய வர்கள். அறுபது வருட காலமாகக் கும்பாபி ஷேகம் காணாத சமாதி ஆலயத்தை கல்லூரி நன்மை கருதி புனர்நிர்மாணம் செய்து கும்பா பிஷேகம்செய்து வைத்தவர் திருமதி மங்கை யற்கரசி திருச்சிற்றம்பலம். திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்கள் 19 வருட காலம் அதிபராக கடமையாற்றிய பெருமைக் குரியவர். இவரது காலத்தில் மூடியிருந்த விடுதிச்சாலை மீண்டும் இயங்கியது. சேர். பொன் இராமநாதன் அவர்களுக்கு சிலை ஒன்றும், சரஸ்வதி சிலை ஒன்றும் நிர்மாணிக்க ப்பட்டது. மேலும் கூடைப்பந்தாட்ட ஆடு களமும் வீதிகளும் செப்பனிடப்பட்டன. இவரது காலத்தில் கல்லூரி அடிக்கடி அகதி முகாம்களாக்கப் பட்டும். இடம் பெயர் பாட சாலைகள் கல்லூரி வளாகத்தில் இயங்கியும், கல்வி அலுவலகங்கள் இயங்கியும் நெருக்கடி கள் இருந்த போதும், கல்லூரிப் பண்பாட்டு பாரம்பரியங்கள் பேணுவதிலும், பாடசாலை மாணவர் கல்வியிலும் இவரது கவனம் இருந்தது. பல மாணவர்கள், நுண்கலைப்பீட த்திற்கும், பல்கலைக்கழகத்திற்கும் தேசிய கல்வியற் கல்லூரிக்கும் சென்றுள்ளனர். இவர் காலத் தில் தமிழ்த்தினப் போட்டியில் தேசிய மட்டத் தில் 4 தடவைகள் நாட்டிய நாடகம் பரிசில்க ளைப் பெற்று பெருமை கண்டது. இதேபோல் விளையாட்டுத்துறை, இசைத் துறைகளிலும் பல தேசிய மட்டப் பரிசில் களையும் கல்லூரி பெற்றுக் கொண்டது. இவரைத் தொடர்ந்து திருமதி வேணுகா சண்முகரட்ணம் அவர்கள் ஒரு வருட காலம் அதிபராக இருந்தார். இவரது அயராத முயற்சியால், பாலஸ்தாபனம் பண்ணி வைத்தி ருந்த நடராஜர் ஆலயத்திற்கு 21.06.2012 இல் கும்பாபிஷேகம் நடை பெற்றது. இதற்கு

உதவியவர்களையும் நாம் மறந்துவிடக் கூடாது. கனடா பழைய மாணவி கள் சங்கம் பெருந்தொகைப் பணம் செலவு செய்து பேராசிரியர் திரு. க. சிற்றம்பலம், சேர். பொன். இராமநாதனுடைய வாரிசாக விளங் கும் D. M. சுவாமிநாதன் அவர்கள் உதவியோடு இக் கும்பாபிஷேகம் நடாத்தி வைக்கப் பட்டது.

இவ்வாறு இந்த ஒரு நூற்றாண்டு காலப் பகுதியிலும், இக்கட்டான சூழ்நிலையில் கல்லூரியின் வளர்ச்சியில் கண்ணும் கருத்து மாய் அர்ப்பணிப்போடு பாடுபட்ட அதிபர் களையும், ஆசிரியர்களையும், அவர்களது பணிகளையும் மதிக்கின்றேன். பாராட்டு கின்றேன். அவர்கள் எல்லோருக்கும் எனது வணக்கத்தையும் நன்றியையும் கூறுகின்றேன். அவர்கள் காலத்திற்குக் காலம் கல்லூரியைப் பாதுகாக்காவிட்டால் இன்று நாம் இந்த விழாவைக் கொண்டாட முடியாது என்பதை நன்றியுடன் தெரிவிக்கின்றேன்.

நான் இக் கல்லூரியை 26.09.2012 இல் பொறுப்பேற்றேன். எனது காலத்தில் இறை வன் திருவருளால் கல்லூரி வளாகத்தை லண்டன் வாழ் பழைய மாணவிகள், நலன் விரும்பிகள் உதவி பெற்று பல நாட்கள் பணி யாட்களை வைத்துத் துப்பரவு செய்தும், 100 மரக்கன்றுகள் ஆங்காங்கு நடப்பெற்றும், பிரதான மண்டபம் பெருந்தொகைப் பணம் செலவிட்டுத் திருத்தியும் வர்ணந் தீட்டியும் தந்தவர் பொறியியலாளர் திரு. ந. சச்சிதானந் தன் அவர்கள். எந்தவித எதிர்பார்ப்புமின்றி தன்னை இப்பணிக்கு அர்ப்பணித்து அளப் பரிய பணியைச் செய்துள்ளார். அவரது பணி கள் மேலும் தொடர உள்ளன. அப் பெருந்த கையை நன்றியுணர்வோடு நானும் எனது பாடசாலைச் சமூகமும் பாராட்டுகின்றோம்.

இன்று இக் கல்லூரியில் 1020 மாணவர் களும் 58 ஆசிரியர்களும் கற்பிக்கின்றனர். ஆரம்ப வகுப்பு முதல் உயர்தர வகுப்பு வரை (கலை, வர்த்தக விஞ்ஞான, கணித) நடை பெறுகின்றன. பாடவிதானத்திற்கமை வாக எல்லாப் பாடங்களும் நடைபெறு கின்றன. உயர்தர வகுப்பில் தமிழ், நடனம், இசை, வர்த்தகம், விஞ்ஞானம், அரசியல், புவியியல், மனையியல், சமஸ்கிருதம், விவ சாயம், இந்துசமயம், இந்துநாகரீகம் என்பன பாட ங்களாகக் கற்பிக்கப்படுகின்றன.

**ஆரம்பகாலத்திலிருந்து 1987 வரையும் அதற்குப் பின்னுள்ள 2012 வரையான காலப்பகுதியில் கல்லூரியின் கல்விச் செயற்பாடுகளும் உதவி யோரும்**

தற்போது கல்வித்துறையில் ஏற்பட்ட மாற்றங்களை ஒட்டிப் பல்வேறு மன்றங் களூடாக மாணவர்களது ஆளுமை விருத்தி செய்யப்படுகின்றது. இம்மன்றங்கள் தோற்றம் பெற முன் சமயத்துறை, தமிழ்த்துறை, இசைத் துறை, விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், விளையாட்டுத் துளைகளூடாக மாணவர் களின் செயல்திறன்கள் வெளிக்கொண்டுவரப் பட்டன. இந்த வகையில் எமது கல்லூரியும் சகல துறைகளிலும் ஏனைய பாடசாலை களுக்கு முன்னோடியாக விளங்கியுள்ள மையை எடுத்துக்காட்டாமல் விட முடியாது.

ஆரம்பக் கல்விக்கு பொறுப்பாசிரிய ராக இருந்த திருமதி ருக்குமணி வெற்றிவேலு அவர்களும் தொடர்ந்து திருமதி குமாரசாமி யும் அவர்களுக்குப் பின் வந்த திருமதி தெய்

வானைப்பிள்ளை செல்லையா அவர்களும் தொடர்ந்து திருமதி சின்னத்துரை சிவபாக்கியம் அவர்களும், திருமதி கு. அப்புத்துரை அவர்களும் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்குச் சகல துறைகளிலும் பயிற்சி கொடுத்தும், போட்டிகளிலும் வெற்றியீட்டவும் செய்துள்ளனர். புலமைப்பரிசில் பரீட்சைகளிலும் பலர் தெரிவாகினர். மாணவர்கள் உயர்தர வகுப்புக்கள் வரை கற்க அத்திவாரமிட்ட இவர்களது பணிகளைப் பாராட்டுகின்றேன். அழகியல் கலை தொடர்பில் செல்வி சரஸ்வதி மேனன், திருமதி பரமேஸ்வரி, செல்வி அம்பிகை செல்லையாப்பிள்ளை ஆகியோர் இசைத்துறையிலும் கீதாஞ்சலி நல்லையா ஏரம்பு சுப்பையா, திருமதி சாந்தினி சிவநேசன் ஆகியோர் நாட்டிய, நாடக, நடனத்துறைகளிலும் சாதனையாளர்களாக விளங்கினர். இவர்களது காலத்தில் பல நாட்டிய நாடகங்கள் தேசிய மட்டப் பரிசில்களைப் பெற்றன. இவற்றை எழுதியவர் எமது கல்லூரி ஆசிரியராகவும் அதிபராகவும் விளங்கிய ஞானேஸ்வரி சோமசுந்தரத்தின் கணவர் கல்விப் பணிப்பாளர் திரு. சோமசுந்தரம் ஆவார்.

பின்னுள்ள காலப்பகுதியில் தமிழ்த்தினப் போட்டிகள் கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம், தேசியம் என்ற முறையில் நடாத்தப்பட்டன. எமது கல்லூரியின் நடன, இசை, நாட்டிய, நாடகத்துறைகள் முன்னணியில் நின்றன. இக்காலகட்டத்தில் நந்தினி சிவராஜன் இத்துறைக்குப் பொறுப்பாசிரியராக இருந்தார். இவரது நடன நாட்டிய நாடகங்கள், கோட்டம் முதல் தேசியம் வரை மேடை ஏறின. விருதுகள் பெற்றன. தேசிய மட்ட விருதுகளும் மாகாண மட்ட பரிசுகளையும் பெற்றுக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்தவர் திருமதி நந்தினி சிவராஜன் அவர்கள்.

2007 ஆம் ஆண்டில் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய வேள்வி காத்த வீரன் என்ற நாட்டிய நாடகம் தேசிய விருது பெற்றது. 12க்கும் மேற்பட்ட நாட்டிய நாடகங்களை திருமதி நந்தினி சிவராஜன் அவர்கள் மேடை ஏற்றினார். இவருக்கு இசைத்துறையில் ஒத்துழைத்தவர்கள் செல்வி மாது சிரோன்மணி, திருமதி வி. நரேந்திரா, திருமதி ஞா. சிவநேசன், திருமதி கு. அன்பரசி, திருமதி பொ. திலகவதி, திருமதி சி. தாரணி, திருமதி ம. ஜெயநாதன் என்போராவர். 12 நாட்டிய நாடகங்களையும் எழுதியவர் திருமதி வை. கணேசபிள்ளை ஆசிரியராவர். இவரால் எழுதப்பட்ட நல்லதங்காள் இசை நாடகமும் செல்வி ஈஸ்வரி கிருஸ்ணன் அவர்களால் மேடையேற்றப்பட்டு மாகாண மட்டப் பரிசைப் பெற்றது. இவர்களது பணியை யான் மனதாரப் பாராட்டுகின்றேன். நந்தினி சிவராஜன் பிரதி அதிபராகக் கடமை ஏற்க திருமதி வி. செல்வாம்பிகை இத்துறையை நல்ல முறையில் வளர்த்தார். தற்போதைய நுண்கலை மன்றச் செயற்பாடுகள் யாவும் 2013 ஆம் ஆண்டு நுண்கலை மன்றத்தில் இணைக்கப்பட்டுள்ளன. ஆரம்ப காலத்தில் வெற்றியீட்டிய சாதனையாளர்களும் அதற்குப் பொறுப்பான ஆசிரியர்களும் பவள விழா மலரில் காட்டப்பட்டுள்ளனர்.

சமய கலாசாரத் துறையை வளர்ப்பதில் கண்ணுங்கருத்துமாய் உழைத்தவர் திருமதி அ. சிவப்பிரகாசபிள்ளையாவார். அவரைத் தொடர்ந்து திருமதி வை. கணேசபிள்ளை இத்துறைக்குப் பாடுபட்டார். அவரைத் தொடர்ந்து திருமதி சு. சீனிவாசகம் சமயத்

துறைக்குப் பொறுப்பாக இருந்து செயற் பட்டார். இத்துறையானது சமய விழாக்கள், திருமுறை விழா, சமயகுரவர் குருபூசைகள், நவராத்திரி விழா, நடராஜர் ஆலய அபிடே கங்களைச் செய்ததோடு சைவ சமயப் போட்டி களிலும் மாணவர்களை ஈடுபடுத்திப் பரிசில் கள் தங்கப்பதக்கம் பெற வைத்துள்ளது குறிப் பிடத்தக்கது. நடராஜர் ஆலயத்தில் சமய குரவரது திருவுருவப்படங்களை வைத்துள்ள தோடு கோலம், மாலை போட்டிகளை வைத்துக் கலை விழாவில் மாணவர்களுக்குப் பரிசில்கள் கொடுத்தும் ஊக்குவித்தது. இத்தகைய கலாசாரத்துறை ஆசிரியர்களை வாழ்த்துகின்றேன்.

கணித, வர்த்தக, விஞ்ஞானத்துறையில் ஆர்வமுள்ள திரு. சண்முகரத்தினம், திருமதி ச. கல்யாணசுந்தரேசன், திரு. வெ. ஏகாம்பர நாதன், திரு. அமிர்தலிங்கம், S. இராமதிலகம், திருமதி கா. செல்லம்மா, திருமதி. மங்கையற் கரசி, திருமதி இ. சண்முகலிங்கம், திருமதி நா. சாரதா, திருமதி ப. பத்மநாதன், திருமதி ஜெ. திருவேங்கடவல்லி என்போர் இத்துறையை நன்கு வளர்த்துள்ளனர்.

இராமநாதன் கல்லூரித் தமிழ்த் துறையை பிரகாசிக்கச் செய்தோர் வரிசையில் திருமதி ஞேனேஸ்வரி சோமசுந்தரம், திருமதி அருள்தியாகராஜா, திருமதி பு. சண்முகலிங் கம், திருமதி சு. விவேகானந்தன், திருமதி குமாரசுவாமி, திருமதி நகுலாம்பிகை ஆகி யோர் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்களைத் தொடர்ந்து திருமதி. வை. கணேசபிள்ளை இத்துறைக்குப் பொறுப்பாக இருந்துள்ளார். இவர்களது காலத்தில் நாடகங்கள் பல மேடையேறின. முன்னைய அதிபர் ஆனந்தி சிவஞானசுந்தரத்தின் தந்தையார் கலாபூஷ ணம் திரு. செ. நடராஜாவினால் எழுதப்பட்ட அகத்தியர் என்ற நாடகம் மேடையேறி பலரது பாராட்டுக்களையும் பெற்றது. மேலும் சகுந் தலை, கைகேகிவரம், கர்ணன், குமணன் நாட கங்கள் திருமதி வை. கணேசபிள்ளை அவர்க ளால் மேடையேற்றப்பட்டன. கல்வியமைச் சினால் நடாத்தப்பட்ட கட்டுரை, கவிதை, சிறுகதை, பாவோதல் போட்டிகளில் மாகாண தேசிய மட்டம் வரையான பரிசில்களை மாணவர்கள் பெற்றுள்ளனர். இத்துறைக்கு திருமதி ப. தியாகலிங்கம், திருமதி ப. கலைவாணி, திருமதி ச. தேவகௌரி, திருமதி கே. ஆனந்தரத்தினம் ஆகியோர் பொறுப்பாக இருந்து இத்துறையை வளர்த்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இத்துறையை வளர்த்த அனைத்து ஆசிரியர்களையும் வாழ்த் துகிறேன்.

விளையாட்டுத்துறையை மேம்படுத்தி யவர்கள் திருமதி புனிதவதி மகாலிங்கம், (செல்வி கதிரவேலு) அவர்கள் இவரைத் தொடர்ந்து திருமதி குமாரசுவாமி, திருமதி கணேசலிங்கம், செல்வி கந்தசாமி, செல்வி காமினி முருகையா இத்துறையில் தேசிய மட்ட கேடயங்களும் சேர்த்ததோடு இல்லப் போட்டிகளையும் நடாத்தினர். மனையி யலுக்கு திருமதி தாமோதரம்பிள்ளை, திருமதி மகாலிங்கம் திருமதி சாவித்திரி என்போரும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. தொழில் மகத் துவம் பேணும் வகையில் வாழ்க்கைத்திறன் கல்வியும் மாணவருக்குப் போதிக்கப்பட்டது. விவசாயத்திற்குப் பொறுப்பாக திரு. செல்வக் குமார், திருமதி துரைராஜா, திருமதி பத்மாவதி

ஆகியோர் இருந்து கற்பித்தமை குறிப்பிடத் தக்கது.

நூல்நிலையத்திற்கு ஆரம்ப காலத்தில் திரு. பிள்ளை அவர்களே பொறுப்பாக இருந் தார். அதனைத் தொடர்ந்து ஆசிரியர்களே நடாத்தி வந்துள்ளனர். ஏராளமான கல்வித் துறை சார்ந்த நூல்களே இங்கே இருந்தன. நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக அவை நிலைகுலைந்துபோனபோது கௌரவ அமைச்சர் திரு. தேவராஜ் அவர்களும், அவரது காரியதரிசி திரு. மாணிக்கவாசகர் அவர்களும் ஒரு தொகுதி நூல்களை அன்பளிப்புச் செய்தனர். அந்த நல்ல உள்ளங்களை நன்றி பாராட்டுகின்றேன்.

மேலும் சித்திரம், தையற்கலை சமயத் தொண்டர்களும் வழிகாட்டல்கள் சிறு தோழர் என்னும் துறைகளும் இயங்கின. இவற்றிற்கு முறையே திருமதி தம்பிரத்தினம், திருமதி சிவப்பிரகாசம், திருமதி புஸ்பநாதன் என்போரும், திருமதி இராசேஸ்வரி, செல்வி யோ. சுப்பிரமணியம் ஆகியோர் தையற் கலைக்கும் பொறுப்பாக இருந்தனர். வழி காட்டல்கள் சிறுதோழர்கள் செல்வி நாகலிங் கம் பொறுப்பாக வழிநடாத்தினர்.

முறைசாராக் கல்வியானது பாடசாலை யில் கற்று வெளியேறி மேற்படிப்போ, உத்தி யோகமோ, கிடைக்காத பிள்ளைகளுக்கு வரப் பிரசாதமாக அமைந்தது. இத்துறையில் ஹோட்டல் முகாமைத்துவம் பயின்ற மாண விகள் வெளிநாடுகளில் பெயர் பெற்று விளங் குகின்றனர். இக்கல்வியினை ஊக்குவித்தவர் களான கல்விப்பணிப்பாளர் செல்வி. பெரிய தம்பி, திரு. சுப்பிரமணியம் ஆகியோருக்கு எனது நன்றிகள்.

விடுதிப் பொறுப்பினை ஆரம்பத்தில் செல்வி ஆறுமுகம் தங்கம்மாவும் பின்பு திருமதி அருளானந்தமும் ஏற்று நடாத்தினர். நாட்டில் ஏற்பட்ட இடப்பெயர்வின் பின் தடைப்பட்டிருந்த விடுதிச்சாலை திருமதி ஆ. சிவஞானசுந்தரத்தின் முயற்சியால் மீண்டும் இயங்கி வருகிறது.

பழைய மாணவர் சங்கத்தை ஆரம்ப நிலையில் தலைவியாக திருமதி சோமசுந்தரம் இருந்து வழிநடாத்தினார். அதனைத் தொடர் ந்து அதிபர்கள் தலைமையில் செயலாளர் அப்புத்துரை சகல பொறுப்புக்களையும் நடத்தி வந்தார். இவர்களது காலத்தில் முன் வளைவு, பிரதான மண்டபத் திருத்த வேலை கள் சுருக்குக் கேற், யன்னல், மேடை என்பன திருத்த வேலைகள் செய்யப்பட்டன. இச்சங் கம் சகல துறைகளிலும் ஒத்துழைத்துள்ளது. இராமநாதேஸ்வரருக்கு திருவூஞ்சல் ஒன்றை யும் வெளியிட்டுள்ளது.

கல்லூரி அபிவிருத்திச் சபையும் பாட சாலை வளர்ச்சிக்கு முற்றுமுழுதாக உதவி வந்துள்ளது. இதன் செயலாளர்களாக திரு. சி. இலகுநாதன், திரு. வ. இராசதுரை, திரு. அ. நாகராஜா, திரு. சி. சிவராஜன், திரு. S. சஞ்ஜீ வன் ஆகியோர் காலத்துக்குக்காலம் இருந்து கல்லூரியின் வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்கள் ஆவார்.

1988 - 1990 களில் பவள விழா, நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்கள் மத்தியிலும் அப்போதிருந்த அதிபர் திருமதி சிறீமதி

குமாரசுவாமி தலைமையில் நடந்தேறியது. பவளவிழா ஞாபகார்த்தமாகச் சைவச் சிறுவர் பாடசாலை ஒன்றும், மருந்துச் செடிப் பண்ணை ஒன்றும், இராமநாதன் அவர்களின் உடைமைகள் சிலவற்றைத் தேடி நூதன சாலை ஒன்றும் அமைக்கப்பட்டது. அது நாட்டுச் சூழல் காரணமாகச் சிதைந்துவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. 1987 - 1990க்குப் பின்பு மாணவர் கல்வியில் பல மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. கணினி முறை புகுத்தப்பட்டன. தொடர்ந்து கல்லூரி வளர்ச்சிக்குப் பாடுபட்ட மன்றங்கள் சங்கங்களின் செயல்பாடுகள் இங்கே தரப்படுகின்றன. வளர்ச்சிக்கு உதவிய இம்மன்றங்களை நான் பாராட்டுகின்றேன்.

**மன்றச் செயற்பாடுகள் (2013)**

கல்லூரியின் நாளாந்த கற்றல் நெறிகளைத் தவிர்ந்த விஷேட ஆக்க முயற்சிக் குழுக்கள் அதாவது மன்றங்கள் உள்ளன. அவை காலத்துக் காலம் கல்லூரி வளர்ச்சிப் படிகளில் புகழையும்பெருமையையும் ஈட்டித் தருவன. மாணவர்களின் ஆளுமையை வளர்ப் பனவாக உள்ளன.

**ஆரம்பப்பிரிவு மன்றம்**

**இதன் பொறுப்பாசிரியர் திருமதி ஜெ. சந்திரசிறீ**

ஆரம்பப் பிரிவு மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்குகளை வளர்க்கும் வகையில் இம்மன்றம் செயல்ப்படுகின்றது. ஆண்டு தோறும் கால்கோள் விழா நடாத்தப்படுகிறது. சிறுவர் அரங்குச் செயற்பாடுகள் நடைபெறு கின்றன. மன்றம் சுற்றாடல், கணித முகாம் களை நடாத்துகின்றது. மாதம் இருமுறை ஆரம்பக் கல்வி மன்றம் கூடி மாணவர் திறமைகள் வெளிக்கொண்டு வரப்படுகின்றது. கோட்டம், வலயம், மாகாண மட்டப் போட் டிகளில் மாணவர்கள் பங்குபற்றிப் பரிசில்கள் பெற்றுள்ளனர். பண்ணிசைப் போட்டியில் வலயமட்டத்தில் ந. கௌதமன் (தரம் - 3) 1ஆம் இடத்தையும், தரம் 2இல் ந. கௌசிகன் 2ஆம் இடத்தையும் பெற்றனர். அவர்களைப் பாராட்டுவதுடன் எதிர் காலத்தில் ஆரம்பக் கல்வி மன்றம் வளர வாழ்த்துகிறேன்.

**இந்து மன்றம்**

திருமதி க. லிங்கேஸ்வரன் அவர்கள் இதன் பொறுப்பாசிரியராக இருந்து வரு கின்றார். சைவப் பண்பாட்டுடன் மாணவர் களை உருவாக்கும் பணியில் இம்மன்றம் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. கல்லூரி யில் அமைந்துள்ள ஆலயங்களில் பூசைவழி பாடுகள், அபிஷேகங்கள், விழாக்கள், கொண் டாடப்படுவதோடு மாணவர்கள் தொண்டு படு செயல்களில் ஈடுபடுத்தப்படுகின்றனர். சைவபரிபாலனசபை, விவேகானந்தர் சபை யினரால் நடாத்தப்படும் சமய அறிவுப் போட் டியில் மாணவர்கள் பங்குபற்றி பரிசில்கள் எடுத்துள்ளனர். பாடசாலை ரீதியில் கோலம், மாலை, பேச்சுப் போட்டிகளை வைத்து மாணவர்களுக்கு மன்றம் பரிசில்களை வழங்கு கின்றது. இம்மன்றம் வளர வாழ்த்துகின்றேன்.

**தமிழ் மன்றம்**

இதன் பொறுப்பாசிரியராகத் திரு. தி. விக்னேஸ்வரன் அவர்கள் செயற்பட்டு வருகின் றார்கள். தமிழைப் பிழையின்றி எழுதுவும், வாசிக்கவும், பேசவும் மாணவர்களின் ஆற்றல் களை வெளிக்கொண்டு வரும் வகையில் விவாத அரங்குகளை வைத்தும், பட்டிமன்றம் வைத்தும், பேச்சுப்போட்டி, கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டிகள் வைத்தும் பரிசில்கள் வழங்கியும், ஊக்குவிப்பதோடு,

தமிழ்த்தினப் போட்டிகளில் மாணவர்களைப் பங்கு கொள்ள வைத்து கோட்டம், வலயம், மாகாணம், தேசியம் வரையிலான பரிசில்க ளைப் பெற்றுள்ளது. யாழ்ப்பாணக் கல்லூரி யில் இடம் பெற்ற விவாதப் போட்டியில் செல்வி அ. கொன்சிஸ்ரா 2012 இல் சிறுவர் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் கூறுவதோடு மன்றம் மேலும் பல விருதுகளைப் பெற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**கிறித்தவ மன்றம்**

இதன் பொறுப்பாசிரியர் திருமதி அ. ஜெயசீலன் செயற்பட்டு வருகின்றார். 140 மாணவர்கள் வரை உள்ளனர். இவர்களுக்கான பிரார்த்தனை வெள்ளிதோறும் இடம்பெறு கின்றது. 2012 இல் நடைபெற்ற சமய பரீட் சையில் செல்வன் அருளப்பு 3ஆம் இடத்தைப் பெற்று ஆயரினால் கௌரவிக்கப்பட்டு பரிசில்களையும் பெற்றுள்ளார். மேலும் ஜெ. பிரசாந்தி க.பொ.த உயர்தர பிரிவில் கிறிஸ்தவ நாகரீகத்தில் 'A' சித்தி பெற்றுப் பல்கலைக் கழகம் சென்றுள்ளார். இம்மன்றம் வளர எனது பாராட்டுக்கள்.

**கணித விஞ்ஞான மன்றம்**

திரு. ச. பாலமுரளி அவர்கள் இம் மன்றப் பொறுப்பாசிரியராக இருந்து செயற் படுகின்றார். வாரம் ஒருமுறை இம்மன்றங்கூடி மாணவர் அறிவு, திறன், மனப்பாங்கு வளர்க் கப்படுகின்றது. சிறந்த பெறுபேறுகளைப் பெற்று மாணவர்கள் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். செல்வி ந. வைஷ்ணவி புத்தாக்கப் போட்டியில் தேசிய மட்டத் திற்குத் தெரிவாகியுள்ளார். வினாடி வினாப் போட்டியில் கோட்ட மட்டத்தில் 1ஆம், 2ஆம், 3ஆம் இடங்களையும், ஆங்கிலமொழி மூலம் வலய மட்டத்தில் 1ஆம் இடத்தையும், தமிழ்மொழி மூலமும் மாணவர்கள் பங்கு பற்றிப் பரிசில்கள் பெற்றுத் தந்துள்ளார். அவர்களைப் பாராட்டுவதுடன் மன்றம் எதிர்காலத்தில் சிறந்த வெற்றிகளைப் பெற வாழ்த்துகிறேன்.

**சமூக விஞ்ஞான மன்றம்**

இம்மன்றம் பொறுப்பாசிரியர் திருமதி தே. லிங்கேஸ்வரன் ஆவர். இம்மன்றத்தி னூடாக மாணவர்களது ஆக்கத்திறன், பொது அறிவுத்திறன் வளர்க்கப்படுகிறது. வருடந் தோறும் இம்மன்றம் கல்லூரி மட்டத்தில் பொது அறிவுப் பரீட்சை ஒன்றை நடாத்தி வருகின்றது. பாடசாலை மட்டக் கணகாட்சி நடத்தப்படுகின்றது. கோட்டம், வலய மட் டப் பரிசில்களை மாணவர்கள் பெற்றுள் ளனர். களப் பயன்பாடு மேற்கொள்ளப் படுவது குறிப்பிடத்தக்கது. மன்றம் வளர எனது ஆசிகள்.

**கட்டாயக்கல்வி**

இதன் பொறுப்பாசிரியராக இருந்து பணியாற்றுபவர் திருமதி மோ. ரவீந்திரன் அவர்கள். கல்வி ஒவ்வொரு மாணவர்களதும் அடிப்படை உரிமை என்ற கோட்பாட்டைக் கடைப்பிடித்து, கல்வித் திணைக்கள வளவாள ர்களினால் ஆசிரியர்கள், பெற்றோர்களுக் கான செயலமர்வுகள் நடாத்தப்படுகின்றன. கல்லூரிக்குச் சமூகமளித்து இடைவிலகிய மாணவர்களின் விபரங்கள் தேடிக் கண்டு பிடித்து அவர்களைக் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி முன்னேற்றங்கண்டுள்ளனர். இதனால் கல்லூரி இடைவிலகல் மாணவர்கள் இல்லாதிருப்பது கட்டாயக்கல்விக்குழுவின் வெற்றியென யான் கருதுகின்றேன். மேலும் இவர்களது பணி தொடரட்டும் என வாழ்த்து கிறேன்.

**உயர்தர மாணவர் மன்றம்**

திருமதி யோ. பாலச்சந்திரன் அவர்கள் உயர்தர மாணவர் மன்றப் பொறுப்பாசிரியராக இருந்து வழிநடத்தி வருகின்றார். இம்மன்றமானது கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய துறைகளை உள்ளடக்கியதாக அமைந்தள்ளது. மாணவர்களின் உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக்கொண்டு வருவதே இம்மன்றத்தின் நோக்கமாகும். மாணவர்களிடையே இருந்த தலைமைத்துவப் பண்பை வளர்ப்பதில் அக்கறை காட்டும் முகமாக மாதம் இருமுறை மாணவர் மன்றம் கூடுகின்றது. ஒன்றுகூடல் நிகழ்வுகள் நடத்தப்படுவதோடு அயல் பாடசாலைகளின் ஒன்றுகூடல் நிகழ்வில் மாணவர்கள் கலந்து கொள்கின்றனர். 09.02.2013இல் எமது கல்லூரியில் நடைபெற்ற உயர்தர மாணவர் மன்ற ஒன்றுகூடலில் கல்லூரியின் பழைய மாணவியும், பேராசிரியையுமாகிய திருமதி கலைவாணி இராமநாதன் அவர்களைப் பிரதம விருந்தினராக அழைத்து ஒன்றுகூடல் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது குறிப்பிடத் தக்கது. மன்றம் மேலும் வளர எனது ஆசிகள் என்றுமுண்டு.

**நுண்கலை மன்றம்**

இம் மன்றத்தின் இயக்குனராக இருந்து வருபவர் திருமதி ம. ஜெயநாதன் அவர்கள். இம் மன்றம் இசை, நடனம், நாடகம், சித்திரம் ஆகிய துறைகளில் வளர்ச்சி கண்டு மாணவர்கள் காலத்திற்குக் காலம் பரிசில்களும் பாராட்டுகளும் பெற்று வருகின்றனர். நாட்டிய நாடகம், தனிநடனம், குழு இசை என்பன தமிழ்த்தினப் போட்டிகளில் தேசிய மட்ட விருதுகளைப் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளது. இம்மன்றம் மேலும் வளர வாழ்த்துகிறேன்.

**விவசாய விஞ்ஞான மன்றம்**

இம் மன்றத்தின் பொறுப்பாசிரியராக இருந்து வழிநடத்துபவர் திருமதி க. லிங்கேஸ்வரன் அவர்கள் தரம் 10 - 13 வரை விவசாய விஞ்ஞானம் ஒரு பாடமாக மாணவர்கள் கற்கின்றனர். இப்பாடமானது செயற்பாட்டுடன் கூடியது. விவசாய மன்றமானது நிலவளத்தைப் பயன்படுத்திப் பயிர்களை வளர்த்து, காய்கறிகளை மாணவர் மதிய போசனத்திற்குக் கொடுத்து உதவுகின்றது. பொறியியலாளர் திரு. ந. சச்சிதானந்தன் அவர்கள் 100 மரக்கன்றுகள் தந்துதவி எமது மன்றம் வளர ஊக்குவித்துள்ளார். அவருக்கு எனது பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவிக்கின்றேன்.

**மனைப்பொருளியல் மன்றம்**

இம்மன்றப் பொறுப்பாசிரியர் திருமதி கனகலிங்கம் அவர்கள் இம்மன்றத்தினூடாக ஆக்கத்திறன், அறிவுத்திறனை மாணவர் மத்தியில் வளர்ப்பதோடு உடலாரோக்கியம் பேணும் நோக்குடன் செயற்படுகின்றது. கல்லூரி அனைத்து நிகழ்வுகளிலும் தாகசாந்தி, விருந்து உபசாரப் பணிகளைச் செய்து வருகின்றது. மன்றம் தன் பணிகளை மேலும் தொடர வாழ்த்துகின்றேன்.

**சுகாதார மன்றம்**

இம்மன்றச் செயற்பாடுகள் யாவையும் திருமதி ஜெ. வரதராஜன் அவர்கள் கவனித்து வருகிறார்கள். மாணவர்களது சுகாதாரச் செயற்பாடுகள் யாவும் அதாவது உடல், உளரீதியான பாதிப்புகள் வராமல் தடுப்பதற்குரிய விழிப்புணர்வுச் செயற்பாடுகள் இம்மன்றத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. முதலுதவிக் கருத்தரங்கு பெற்றோர் கூட்டம், போசா

க்கு, டெங்கு ஒழிப்பு தொடர்பான கருத்தரங்குகள் வைப்பதன் மூலம் வெற்றி கண்டுள்ளது. வலிகாம வலயத்தின் உடுவில் கோட்ட சுகாதார மேம்பாட்டு மருத்துவ முகாம் 17.10.2013 இல் எமது கல்லூரியில் இடம்பெற்றது. இதன் ஒழுங்குகள் யாவற்றையும் மன்ற மாணவர்களே செய்தமை பாராட்டு தற்குரியது. 2012 - 2013களில் இம் மன்ற மானது விழிவலுவிழந்த 20 மாணவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி பெற வைத் துள்ளது. இம் மன்றம் தொடர்ந்து பணியாற்ற வாழ்த்துகிறேன்.

**ஆங்கில மன்றம்**

இம்மன்றப் பொறுப்பாசிரியராக இருந்து செயற்படுபவர் செல்வி. ஜெ. வயித்திலிங்கம் அவர்கள். மாணவர்கள் ஆங்கில மொழியைச் சரியாக எழுதவும், வாசிக்கவும், போட்டிகளில் பங்குகொண்டு வெற்றியீட்டவும் இம் மன்றம் கண்ணுங்கருத்துமாய் இருக்கின்றது. 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆங்கில தினப் போட்டியில் கோட்டத்தில் 37 இடங்களையும், வலயத்தில் 7 இடங்களையும், மாவட்டத்தில் 5 இடங்களையும், தேசியத்தில் 2 இடங்களையும் பெற்றுள்ளனர்.

2013இல் இம் மன்றத்தின் பெரும் முயற்சியால் கோட்டம், வலயம், மாகாணம் வரையிலாக 43 இடங்களையும் மாகாண மட்டத்தில் தங்கம், வெண்கலப் பதக்கங்களையும் பெற்றுக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். செல்வி சு. ஜனனி தங்கப் பதக்கத்தையும், மா. தர்மிலா, செல்வி மோ. லக்ஷிகா, இ. உஷான் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுள்ளனர். 2013 இல் இம் மன்றம் புத்தகக் கண்காட்சி ஒன்றை நடாத்தியுள்ளது. திரு. செந்தில்நாதன் 300 புத்தகங்களையும், இறுவட்டுகளையும் இம்மன்றத்திற்கு அன்பளிப்புச் செய்துள்ளார். அவரை யான்மனதாரப் பாராட்டுவதோடு மன்றம் எதிர்காலத்தில் மேலும் சாதனைகளைப் படைக்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

**வழிகாட்டலும் ஆலோசனையும்**

திருமதி ஜெ. வரதராஜன் இதன் பொறுப்பாசிரியராக இருந்து செயல்பட்டு வருகின்றார். இதற்கென ஒதுக்கப்பட்ட அறையில் ஆசிரியர்கள், மாணவர்கள் உளரீதியான ஆலோசனைகள் பெறுகின்றனர். தரம் 9 , தரம் 10, தரம் 12, மாணவர்களுக்கு பாடத் தெரிவுக்கான வழிகாட்டல்களை இம் மன்றம்செய்து வருகின்றது. இந்த வருடம் ஒக்ரோபர் மாதம் உளநல நாளுக்கான கவிதைப் போட்டியில் வா. வர்த்திகா தேசியமட்டப் பரிசில் பெற்றுக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார் என்பதைக் கூறுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**அனர்த்த முகாமைத்துவக்குழு**

மாணவர்கள் பாதுகாக்கப்படும் நோக்கில் இக்குழு இயங்குகின்றது. ஜெ. வரதராஜன் பொறுப்பில் ஏனைய ஆசிரியர்கள் அங்கம் வகிக்கிறார்கள். மாணவர்களை அனர்த்தங்களிலிருந்து பாதுகாக்க அவசர தொலைபேசி இலக்கங்கள் பொருத்தமான இடங்களில் பொருத்தப்பட்டும், அபாய மணியொன்றும் பொருத்தப்பட்டுள்ளது. மாணவர்கள் தக்க பாதுகாப்பறிந்து பாதுகாப்பாக இருப்பதுடன் அனர்த்த முகாமைத்துவக் கோட்டமட்டப் போட்டியில் செல்வி. வ. வர்த்திகா 3ஆம் இடத்தைப் பெற்றுள்ளார். இக்குழு மேலும் வலுப்பெற்று மாணவர் பாதுகாப்பாயிருக்க உதவ வேண்டுமென வாழ்த்துகிறேன்.

**பாதுகாப்புக்குழு**

'சுரக்கும் பவ்வ' என்னும் பாதுகாப்புக் குழுவும் எமது பாடசாலையில் இயங்கி வருகிறது. இக்குழுவில் ஆசிரியர், பெற்றோர் அங்கம் வகிக்கின்றனர். இக்குழு மாணவர்க ளின் பாதுகாப்புக்கான அத்தனை நடவடிக் கைகளையும் மேற்கொண்டு வருகின்றது.

**குருளைச்சாரணியம்**

இதன் பொறுப்பாசிரியர் திருமதி சி. கிரிதரன் அவர்கள் 08.08.2012 இல் ஆரம்பிக் கப்பட்ட இவ்வமைப்பில் ஆரம்பப்பிரிவு மாணவர்கள் செயற்பட்டு வருகின்றனர். 06.06.2013இல் சின்னஞ்சூட்டு வைபவம் நடைபெற்றது. வருடாந்தப் பாசறை நிகழ்வில் காங்கேசன்துறை மாவட்ட குருளைச்சாரணர் பிரிவில் எமது பாடசாலை 1ஆம் இடம் பெற்றுப் பெருமை சேர்த்துள்ளது.

**பெண் சாரணியம்**

இம் மன்றப் பொறுப்பாசிரியர் திருமதி அ. ஜெயசீலன் அவர்கள். இம்மன்றம் கல்லூரி யின் நிகழ்வுகளில் சிறப்பான பணியினை ஆற்றி வருகின்றது. இவர்கள் சாரணர் பாசறைப் பயிற்சி பெற்றும் புதிய மாணவர்கள் சின்னஞ்சூட்டப்பட்டுச் சத்தியப்பிரமாணம் செய்து பெண் சாரணிகளாகுகின்றனர். 17.04.2013 தொடக்கம் 5 நாட்கள் பயிற்சிக்கு 3 மாணவர்கள் பொலநறுவை சென்று வந்துள்ளனர். சிறந்த தலைமைத்துவப் பண்புடன் இம் மன்றம் வளர வாழ்த்துகிறேன்.

**விசேட கல்வி**

நீண்ட காலமாக மாற்று ஆற்றலுள் ளோர்களுக்கான விசேட கல்வி வழங்கப்பட்டு வருகின்றது. பார்வை குறைவானவர்கள் சிறப்பாக செயற்பட்டு வருகின்றனர். 136 மாணவர்கள் விசேட கல்வி பெறுகின்றனர். கோட்ட, வலய, மாவட்ட தமிழ்த்தினப் போட்டிகளில் பங்குபற்றிப் பரிசில்கள் பெற்று ள்ளனர். செல்வி தயாளினி வெற்றிவேலு பல்கலைக்கழகம் சென்றுள்ளார். செல்வி வில்வராசா நளாயினி தங்கப்பதக்கத்தைப் பெற்றுள்ளார். இவ்விசேட கல்விச் செயற்பாடு களை திருமதி மோ. ரவீந்திரன் கவனித்து வருகிறார். மேலும் விசேட கல்வியில் அனை வரும் மேலோங்க வேண்டுமென வாழ்த்து கின்றேன்.

**உடற்கல்வி**

திருமதி ப. மயில்வாகனம் இத்துறையை வழிநடத்தி வருகின்றார். ஆண்டுதோறும் இல்லப்போட்டிகள் நடத்தப்படுகின்றன. வலய, மாகாண, தேசிய மட்டப் போட்டி களில் கடந்த காலம் தொடக்கம் பல பரிசில் கள், கேடயங்கள் பெற்றுக் கல்லூரிக்குப் பெருமை சேர்க்கின்றது. விளையாட்டுத்துறை எதிர்காலத்தில் வெற்றிகளீட்ட வாழ்த்துகி றேன்.

**நூலகம்**

1930ஆம் ஆண்டு கல்லூரியோடு நூலகமும் இணைத்துக் கட்டப்பட்டு ஏராள மான நூல்கள் பயன்பாட்டில் இருந்தன. 1987இல் சிதைவடைந்தும், பொலிவிழந்தும் காணப்பட்ட நூலகம் இன்று புத்துயிர் பெற்று விளங்குகின்றது. கனிசமான பெறுமதி வாய்ந்த நூல்களைக் கொண்டு நூலகம் விளங் குகின்றது. மாணவர்கள் நேரகுசி அடிப்படை யில் பயன்படுத்துகின்றனர். வாசிப்பு மாதத்

தில் நூலகம் போட்டிகளை வைத்து மாண வர்களை ஊக்குவிக்கின்றது. இதன் பொறுப் பாளராக திருமதி மா. உதயகுமாரன் இருக் கின்றார். 27.10.2013 இல் நூலகம் "இராம ஒளி" என்ற நூலை வெளியிட்டது. மேன் மேலும் நூலகப் பயன்பாடு வளரவேண்டு மென வாழ்த்துகிறேன்.

**விடுதிச்சாலை**

அதிபர், பிரதி அதிபர்,அபிவிருத்திச் சங்கச் செயலாளர், பெற்றோர் அடங்கியகுழு ஒன்று விடுதிச்சாலையை மேற்பார்வை செய் கின்றது. மாணவர்கள் கட்டுப்பாடு, ஒழுங்கு கள் கவனிக்கப் படுவதோடு கல்லூரியின் பண்பாட்டுப் பாரம்பரியங்கள் பேணிக்காக் கும் நோக்குடன் விடுதி மாணவர்கள் வளர்த் தெடுக்கப்படுகின்றார்கள். 'அன்பேசிவம்' என்ற அமைப்பினர் மூலம் விடுதி மாணவர் களுக்கு இலவசமாக சீருடை வழங்கப்பட்டு ள்ளது. 15 மாணவர்கட்கு தலா 1500 ரூபா அன்பளிப்புச் செய்கின்றனர். விடுதி நல்ல முறையில் இயங்கி வளர இறைவன் அருள் புரிவாராக.

**பழைய மாணவர் சங்கம்**

இக் கல்லூரியின் அனைத்துச் செயற் பாடுகளுக்கும் தோளோடு தோள் நின்று உதவி வருவது பழைய மாணவர் சங்கம், இதன் செயலாளராக இருந்து செயற்படுபவர் திருமதி ஜெயராசா அவர்கள். விளையாட்டுத் துறை, தமிழ்த்தினப் போட்டி, பரிசளிப்பு விழா, ஆசிரியர் தினம், நிறுவுநர் தின அன்னதானச் செலவு யாவற்றுக்கும் பண உதவி புரிந்து வருகின்றனர். சீரற்றுக்கிடந்த மலசலகூடத்தை நவீன முறையில் திருத்தித் தந்துள்ளனர். இவர்களது செயற்பாடுகள், ஒத்துழைப்புகள் கல்லூரிக்கு என்றும் தேவை எனக் கூறிப் பழைய மாணவர் சங்கம் தம்பணி தொடரப் பாராட்டி வாழ்த்துகிறேன். இதில் ஆயுள் அங்கத்தவராகவும் சாதாரண அங்கத்தவ ராகவும் கணிசமான அங்கத்தவர் உளர்.

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**

இச்சங்கமானது பெயருக்கேற்றாற் போல் கல்லூரியின் முன்னேற்றத்திற்கு பல வழிளில் உதவி வருகிறது. எதுவித வேதனமும் இன்றி பெற்றோருடைய உதவியுடன் பாட சாலைச் சுற்றுப் புறங்களைத் தூய்மை செய்தும் ஆரம்பப் பாடசாலை வகுப்புகள் வர்ணம் தீட்டித் தந்தும், சுந்தரி மண்டபத்தின் ஓலைகள் விலக்கப்பட்டு சீற் பொருத்தியும் தந்துள்ளனர். அபிவிருத்திச் சங்கத்தினரின் பணி பாராட்டுக்குரியது. சங்கத்தினரை மனதாரப் பாராட்டி வாழ்த்துகிறேன். இதன் செயலாளராக திரு. S. சிவகுமரன் அவர்கள் செயற்பட்டு வருகிறார்.

பாடசாலையில் அக்கறை கொண்டு ர்ப்பணிப்போடு செயற்படும் மேற்படி மன் ங்களை குழுக்களைப் பாராட்டுவதுடன் மேலும் கல்லூரி அபிமானிகள் நலன் விரும்பிகள் கல்லூரிக்குத் தங்கள் நன்றிக் கடன்களைச் செய்ய முன்வந்துள்ளனர். அவர்களையும் வாழ்த்துகிறேன்.

கல்லூரி நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்குப் பலரும் உதவி புரிந்துள் ளனர். இந்த வகையில் நூல் நிலையத்தையும், அதிபர் அறை ஆகியவற்றையும் பெருந் தொகைப் பணம் செலவளித்துத் திருத்தி வர்ணம் தீட்டி அழகுற அமைத்துத் தந்த

பேராசிரியர் சிற்றம்பலம் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள். ஆலய புனருத்தாரண வேலைகளோடு மதில், கட்டடம் திருத்தியும், நாளாந்த பூசைக்கு அந்தணர்களை நியமித்தும், பூசை வழிபாட்டுக்கு உதவியாளரையும் நியமித்துத் தந்த மதிப்பிற்கு உரிய கௌரவ பா.உ. சுவாமிநாதன் அவர்களுக்கு எமது மனார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள் கிறேன். ஆலயப் பூசைகளுக்கு திருமதி W. சுந்தரலிங்கம் கமலாட்சி, செல்வி தங்கம்மா அவர்களும் நிதி உதவியுள்ளனர். அவர்களை யும் யான் மனதார நேசிக்கிறேன். திரு. பா. அருணாசல முதலியார், பழைய மாணவிக ளான தனது தாயார் திருமதி சி. பாலசுப்பிர மணியம், மாமியார் திருமதி ந. நாகரத்தினம் ஞாபகார்த்தமாக ஒரு லட்சம் ரூபா பெறுமதி யான மின் இணைப்பு மணியைப் பொருத்து வதற்கு அன்பளிப்புச் செய்துள்ளார்.

பழைய மாணவர்கள் மலசலகூடம் திருத்தித் தந்துள்ளனர். திருமதி சிறீதரன் சரஸ்வதி மண்டபப் படிகள் மாபிள் பதித்துத் தந்துள்ளார். திருமதி க. லிங்கேஸ்வரன் சரஸ்வதி படத் திருத்த வேலைகள் செய்து கண்ணாடி பதித்துத் தந்துள்ளார். ஆண்டு தோறும் விளையாட்டுத்துறை மாணவர் களுக்கு பழைய மாணவியும் நரம்பு வைத்திய நிபுணருமான திருமதி அஜந்தா கேசவராஜ் அவர்கள் 10,000/= பெறுமதியான சப்பாத்துக் களை வழங்கிவருகிறார். அவர்களுக்கு எனது நன்றிகள்.

பார்வதி சமேத இராமநாதேஸ்வரப் பெருமான் ஆலயத்திற்குத் திருமதி வை. கணேசபிள்ளையின் முயற்சியால் சேர். பொன். இராமநாதனின் மனைவி செல்லாச்சி அம்மையார் ஞாபகார்த்தமாக உறவினரான சதானந்தன் மகிந்தராஜாவினால் 2003ஆம் ஆண்டு திருவூஞ்சல் ஒன்று செய்துதரப்பட் டது. அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக் கின்றேன். பார்வதி சமேத இராமநா தேஸ்வரப் பெருமான் உலா வருவதற்கு செல்வி சு. கனகலிங்கம் அவர்கள் அலங்காரச் சகடை ஒன்று செய்து தந்துள்ளார். திருமதி யோ. சுலோசனாதேவி ஆசிரியர் அவர்கள் தமது சொந்தச் செலவில் பூந்தோட்டம் ஒன்றை அமைத்துத் தந்துள்ளார். இவர்களுக்கு இறைவன் அருள் கிடைக்கவேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

நூற்றாண்டு கால வளர்ச்சியில் கல்லூரி பல நூல்களை வெளியிட்டுள்ளது. 58 - 59 களில் திருமதி அ. சிவப்பிரகாசபிள்ளையின் வழிகாட்டலில் உயர்தர வகுப்பினரால் 'யூத்' (Youth) என்ற சஞ்சிகை வெளிவந்தது.

கல்லூரியின் 25 ஆவது நிறைவை யொட்டியும் 50 ஆண்டு கால நிறைவை யொட்டியும், 75 ஆண்டு கால நிறைவை யொட்டியும், முறையே வெள்ளிவிழா மலர், பொன்விழா மலர், பவளவிழா மலர்கள் வெளிவந்தன. 1998இல் திருமதி பத்மநாதனின் வழிகாட்டலில் வர்த்தகப் பிரிவு மாணவர்கள் 'வர்த்தகி' என்ற நூலை வெளியிட்டனர். 1998 இல் தமிழ்மன்றம் திருமதி வை. கணேசபிள் ளையின் வழிகாட்டலில் "பஞ்சாமிர்தம்" என்ற சஞ்சிகையை வெளியிட்டது. 2008 ஆம் ஆண்டு உயர்தர மாணவர் மன்றம் திருமதி கேதீஸ்வரி ஆனந்தரத்தினம் வழிகாட்டலில் "இராமநாதம்" என்ற நூலை வெளியிட்டது. 2010ஆம் ஆண்டு ஆனந்தம் என்ற மலரைக் கல்லூரிச் சமூகம் வெளியிட்டது. 2013இல்

நூலகப் பொறுப்பாளர் திருமதி காஞ்சனமாலா உதயகுமார் அவர்களின் வழிகாட்டலில் நூலகக் குழுவினர் "இராம ஒளி" என்ற நூலை வெளியிட்டனர். இத்தகைய நூல்கள் வெளி வருவதற்கு வழிகாட்டிய ஆசிரியர்கள், குழுக்கள், அதிபர்கள், பங்களிப்புச் செய்த மாணவர்கள் அனைவருக்கும் சேர். பொன். இராமநாத வள்ளலுடைய ஆசி கிடைக்க வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

கல்லூரியின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட உதவியது நூற் றாண்டுக் குழுவாகும். இதன் செயலாளர் திருமதி சிவநாதன் சசிகலா, உபசெயலாளர் திரு. இலகுநாதன், பொருளாளர் திருமதி ப. கேசவன் ஆகியோருக்கு என் பாராட்டுக்களும் நன்றிகளும். நூற்றாண்டு விழா மலரினை வெளியிட உதவிய மலர்க்குழுவினருக்கும், மலர் ஆசிரியர் திருமதி குககுமாரி விஜயரகு நாதன் அவர்களுக்கும், நிதிக்குழுவினருக்கும் பண உதவி, சரீர உதவி புரிந்து விழாவைச் சிறப் பித்த அனைவருக்கும் எனது ஆசிகளை யும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு ஆணுக்குக் கொடுக்கும் கல்வியி லும் ஒரு பெண்ணுக்குக் கொடுக்கும் கல்வி யானது ஒரு சமூகத்தை மட்டுமல்ல நாட் டையே வாழ வைக்கும் என நம்பினார் இராம நாதன் அவர்கள். எனவே சிறந்த இல்லத்தர சிகள், இலட்சியப் பெண்கள் தோன்ற வேண்டு மென்ற இராமநாதன் அவர்களுடைய இலட்சி யத்தைக் காலமெல்லாம் நிலைக்கச் செய்ய எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்று வாழ்த்துவதோடு, இன்று நூற்றாண்டு விழா வைக் கொண்டாடும் எமது கல்லூரி ஏற்றம் பல கண்டு, பல சாதனைகள் படைத்து வளர வேண்டுமென்று

"கருதரிய சிற்சபையில் ஆனந்த
நிர்த்தமிடும் கருணாகரக் கடவுளை
திரிகரண சுத்தியுடன் வணங்கி
வாழ்த்தி நிற்கின்றேன்."

"வாழ்க இராமநாதன் கல்லூரி வளர்க அதன் புகழ்"

# கல்லூரி வரலாறு (மறுபிரசுரம்)

திருமதி ஞானேஸ்வரி சோமசுந்தரம்
B.A. Hons. Dip. in Edu.
முன்னைநாள் அதிபர் இராமநாதன் கல்லூரி

யாழ்ப்பாணத்திலே மருதனார்மடத்திலே நாற்புறமும் மதிலால் சூழப்பட்ட விஸ்தீரணமான நிலப்பரப்பிலே, தமிழ்ப் பெண்களுக்கு அறிவினையும், பண்பினையும் ஊட்டும் அருங்கலைக் கூடமாகவும், சைவ நெறி மரபினையும் தமிழ்ப் பண்பாட்டினையும் பேணிக்காக்கும் அரணாகவும் அமைந்து 75 ஆண்டுகளுக்கு மேலாக அரும் பணியாற்றி வருகின்றது இராமநாதன் கல்லூரி.

மனையறம் காக்க வல்ல நன் மங்கையரையும், பல்கலை பயின்று பயன் பெற வாழும் பாவையரையும், மகளிர்க்குரிய மாண்பெலாம் மேவிய நங்கை யரையும், அறிவொளி பரப்பும் அரிவை யரையும் பொது நலம் பேணிப் புவிநனி சிறக்கப் பணிபல புரியும் பூவையர்களையும் சைவநன்னெறியில் வழுவாது நின்றொழுகும் மங்கையக்கரசி யரையும் உருவாக்கி அளித்துவரும் சிறப்பினையுடையது இக் கல்லூரி.

பிரதான வாயலினூடாகக் கல்லூரி மண்டபத்துள் புகும் பொழுதே மேன்மாடிக்குச் செல்லும் படிக்கட்டுகளின் மேலுள்ள மாடத்தில் அமைந்திருக்கும் கலைத் தெய்வமாம் சரஸ்வதி தேவியின் அருட் கோலமும், மண்டபத்தின் முன்னும் படிக் கட்டின் ஆரம்ப இடத்திலும் மாணவிகளின் கைவண்ணத்தை எடுத்துக் காட்டுவனவாய் அமைந்துள்ள வண்ண மலர்க் கோலங்களும் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே ஈர்க்கும் வகையில் காட்சி அளிக்கும் வெள்ளைக் கலை பூண்டு வீணையும் ஏட்டுச் சுவடியும், ஜபமாலையும் ஏந்திய கையினளாய், கலைகளையெல்லாம் அள்ளித் தருபவளாய் விளங்கும் கலைமகளைப் பணிந்து அவளி ன்னருள் பெற்று, படிக்கட்டுக்களின் மேலே றிச் சென்றால் தூய்மைக்கு இருப்பிடமாய், கர்ப்பூரவாசனையும் சுகந்த தூபத்தின் நறு மணமும், நாண்மலர் மாலைகளின் இனிய மணமும் கமழும் ஆலய மண்டபத்திலே "கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப் புடனும் எடுத்தபொற்பாதத்துடனும்" ஆடல் வல்ல வனாய் நடராஜப் பெருமான் சிவகாமி அம்மை யுடன் திருவருள் பாலித்துக் கொண்டிருக்கும் அருட்காட்சியினைக் காணலாம். இவ்வாலய மண்டபத்திலேயே கல்லூரி விடுதி மாணவிகள் காலையிலும் மாலையிலும் கூடி, முறைப்படி நடைபெறும் சிவபூஜை கண்டு பண் சுமந்த பாடல்களால் பரமனது பதம் பாடிப் பரவி வழிபாடியற்றி இறைவனின் இன்னருளை வேண்டித் தத்தம் கடமைகளில் ஈடுபட்டு வருவர்.

சைவமணமும் தமிழ்மணமும் ஒருங்கே கமழும் புனிதம் வாய்ந்த கவின்மிகு மிப்பெண்கல்லூரி 75 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள இவ்வேளையில், இதனை நிறுவிய

பெருமகனாரையும், அவர் தம்சீவிய நோக்கினையும், அவர் வழி நின்று கல்லூரியை நிர்வகிக்கும் பொறுப்பினை ஏற்றுப் பணி புரிந்தவர்களையும் நினைவு கூர்வது எம் தலையாய கடனாகும்.

முதற்கண் சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் இத்தகைய ஒரு பெண்கள் கல்லூரியை நிறுவுவதற்கான காரணத்தையும் அதற்குத் தூண்டுகோலாக இருந்த அக்காலச் சூழ்நிலையையும் அறிந்து கொள்ளல் அவசியமாகும். 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கல்வி அறிவு வாய்க்கப்பெற்ற சைவப் பெண்கள் தொகை மிகக் குறைவாகவே இருந்தது. வேத கால இந்தியாவிலும் பண்டைத் தமிழகத்திலும் பெண்களுக்கிருந்த உன்னத ஸ்தானத்தையும் மாதவப் பெரியோருடன் சமானமாக நின்று அவர்கள் ஆன்மீகத் தர்க்கங்களில் ஈடுபட்டதையும் அரசரும் போற்றும் மதிநலம் வாய்ந்தவர்களாய் விளங்கிய நிலை காலப்போக்கில் மாற அவர்கள் அறியாமை மூடநம்பிக்கை ஆகியவற்றில் ஆழ்ந்து கிடப்பதையும் கண்டு அதனை அவர் மாற்றியமைக்க முற்பட்டனர். ஆழ்ந்த கல்வியறிவும் ஒழுக்க சீலமும் சமயப் பண்பாடும் வாய்ந்த பெண்களே ஆண்களைவிடத் தேசிய முன்னேற்றத்திற்கு அதிகம் உதவுவர் எனவும் அவர் கருதினர். பெண் கல்வியின் இன்றியமையாமையும் அதனாற் சமுதாயம் அடையும் பெரும் பயனையும் கருத்திற் கொண்டு நம்பியர்க்கெனப் பரமேஸ்வராக் கல்லூரியை நிறுவ முன்னரே இல்லறத்தை நல்லறமாக்கவும் நன்மகளை உருவாக்கவும் வல்ல, நங்கையர்க்கென இராமநாதன் கல்லூரியை நிறுவ எண்ணினர். அத்துடன் ஈழம் வாழ் சைவ மங்கையர் தம் பண்பாட்டு மரபுக்கேற்ற சூழலில்- தமிழ் மரபும் சைவநெறியும் ஒருங்கே விரவிய விழுமிய சூழலில் - கல்வி பயில வேண்டியதன் அவசியத்தையும் உணர்ந்து செயற்பட்டனர்.

1910ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3ஆம் திகதி யாழ்ப்பாணத்திலுள்ள பிரமுகர்கள் பலர் முன்னிலையில் இராமநாதன் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அப்போது யோகர் சுவாமிகள் குருவாகிய செல்லப்பா சுவாமிகளின் அவ்விடத்திற் பிரசன்னமாகி , சேர்.பொன்.இராமநாதன் அவர்களுக்குப் பன்னோலை விசிறி ஒன்றினை அன்பளிப்பாகக் கொடுத்து ஆசிர்வதித்தார் என அறிகிறோம். இங்ஙனம் பெரியோர் ஆசியைப் பெற்ற இக் கல்லூரி 1913ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம் திகதி நல் ஓரையில் மு.ப 10.00 மணிக்கு சம்பிரதாயச் சடங்குகளுடன் திறந்து வைக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திலே பெண்களின் உயர் கல்விக்கென நிறுவப்பட்ட முதற் சைவப் பெண் பாடசாலை இது என்பதும், பின்னர் தோன்றிய சைவப் பெண் பாடசாலைகளுக்கெல்லாம் வழிகாட்டியாக அமைந்தது என்பதும் குறிப்பிடத்தக்கனவாம். இக் கல்லூரி ஆரம்பித்தமையை அடுத்து வெளிவந்த இந்து ஓர்கன் பத்திரிகை "கல்லூரியின் ஆரம்பம் தமிழர் வரலாற்றில் புதிய சகாப்தத்தை உருவாக்கும். இலங்கை இந்துக்கள் தம் வாழ்வில் என்றும் நினைவிருத்தும் தினம் எனக் குறிப்பிட்டமையும் நோக்கற்பாலது அக்காலத்தில் இக் கல்லூரியை அமைத்த பணி ஒரு தேசிய மறுமலர்ச்சிப் பணி என்றே கருதப்பட்டன. 'அறிவுத்திறனும் அறநெறியும், சமயப் பண்பும் ஒன்றிணைந்த மகளிர் மூலமும், தமிழ் நெறி மரபும் சைவநெறி மரபும் இணைவதன் மூலமும் நாட்டின் மறுமலர்ச்சி புது மெருகு பெறும், நாடு வளர்வுறும் என்னும் சிந்தனையில் எழுந்தது இராமநாதன் கல்லூரி' எனப் பேராசிரியர் ப.சந்திரசேகரம் குறிப்பிட்டுள்ளமையும் நினைவு கூறத்தக்கது.

ஒரு மாணவனுடைய தார்மீக ஆன்மீக அறிவியல்புகள் வளர்த்தற்கு அவன் சீரிய பண்புடைய ஆசிரியர்களுடன் கூடி வாழ்ந்து அவர்களை எல்லா வகையிலும் அடியொற்றி நடத்தல் அவசியம் என்ற கொள்கையை பண்டைய இந்தியாவின் 'குரு குலவாச

முறையின் கருவூலமாக அமைந்தி ருந்தது. இக்குருகுலவாச முறையைச் செயன் முறைப்படுத்துவதே இக் கல்லூரியின் பிரதான குறிக்கோளாக அமைந்திருந்தது.' இதன் மூலம் மனைக்கும் மக்கள் சமுதாயத்திற்கும் தக்க சேவை புரியும் திறனையும், ஆற்றலையும் வளர்க்க முடியும் என்றும், பெண்கள் சிறுவயதிலேயே வாழ்விலே நன்நோக்கையும் செயலில் நேர்மையும் கடைப்பிடிப்பது ஒழுகக்கற்றுக் கொள்ளல் அவசியம் என்றும் கருதி 200 மாணவிகள் வரை விடுதியில் தங்கி இருந்து கல்விபயில்வதற்கேற்ற இட வசதி யையும் ஏற்படுத்தினர். அவருடைய நோக்கத் திற்கமைய அக்காலத்தில் பெரும்பாலான மாணவிகள் விடுதியில் தங்கியிருந்தே கல்வி கற்றுப்பெரும்பயன் எய்தினார். பெற்றோர், தம் பெண் குழந்தைகள் சைவநெறி மரபு களைப் பேணி அறநெறி நின்று நல்வாழ்வு வாழ்வதற்கேற்ற பயிற்சியைப் பெறுவதற்குரிய சிறந்த இடமாக இதனைக் கருதியமையால் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் மாணவிகள் இராமநாதன் கல்லூரி விடுதிச் சாலையை நாடி வந்து சேர்ந்தனர். அவர்கள் அனைவரும் தூய சைவ உணவினை உண்டு, தமிழ்ப் பண்பாட் டுக்குரிய உடையணிந்து, திருநீறும் திலகமும் தரித்த திரு நுதலினராய், படியவாரிப் பின்னபட்ட கூந்தலில் மலர் மாலை சூடி மங்களகரமாகக் காட்சியளிப்பர்.

1916ஆம் ஆண்டில் வெளிவந்த இராமநாதன் கல்லூரிச் சஞ்சிகையில் விடுதி மாணவிகள் மேற்கொள்ள வேண்டிய ஒருங்கு விதிகள் விரிவாகத் தரப்பட்டுள்ளன. ஒழுங் கான வாழ்க்கைக்கேற்ற அம்சங்கள் யாவும் அங்கு இடம் பெற்றுள்ளதுடன் ஆலய வழிபாட்டிற்கும் இசைப் பயிற்சிக்கும் முக்கிய இடம் அளிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். கல்லூரிப் பூந்தோட்டத்திலே பூத்துக் குலுங்கும் மலர்களைப் பறித்து அழகிய சரங்களும் மாலைகளும் கட்டி இறைவனுக்கு சாத்தித் திருத்தொண்டு புரிந்து மகிழ்வதும், நிறுவுநரால் தெரிவு செய்து தொகுக்கப்பட்ட திருமுறைப் பாடல்களையும் பிரார்த்தனைப் பாடல்களையும் காலை, மாலைப் பூசை நடைபெறும் போது இசைநயம் பெருகப் பாடுவதும் கல்லூரி விடுதியின் அன்றாட நிகழ்ச்சிகளாகும். இவற்றையெல்லாம் திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் கல்லூரிக் கீதத்தில் தொகுத்து அழகிய சொல்லோவியமாக வரைந்துதந்துள்ளனர். விடுதியில் வதியும் மாணவிகளின் நலனைப் பேணுவதிலும், ஆலய வழிபாட்டிலும் ஏனைய செயற்பாடு களிலும் அவர்களை நெறிப்படுத்துவதிலும் பெரும் பணி புரிந்தவர்களில் செல்வி R.தங்கம்மா (திருமதி தங்கம்மா நடராஜா) அவர்களும், செல்வி M.ஆறுமுகம் அவர்களும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்களாவர். அவர்கள் சேவை என்றும் நினைவு கூரத்தக்கது. இவர்களுக்குப் பின் இப்பொறுப்பினை வகித்த ஆசிரியைகளும் அவர்கள் காட்டிய வழி நின்று தம் பணியைச் செவ்வனே ஆற்றி வருகின்றனர்.

மேற்றிசையின் லௌகிகஞானமும் கீழ்த்திசையின் ஆன்மீக ஞானமும் இணைந்த கல்வியை அளிக்க வேண்டும் என்பதே சேர்.இராமநாதன் அவர்களின் நோக்கமாகும். கல்வி, மக்களுடைய ஆன்மீக வளர்ச்சிக்கும் நல்லொழுக்கத்திற்கும் வழி வகுப்பதாக இருக்க வேண்டும். கல்வியின் மூலம் உள்ளச் சமநிலை பெற்ற உயர் மக்களை உருவாக்கல் வேண்டும் மனம் வாக்குக் காயம் என்பன தூய்மையாக இருக்க வேண்டும் என்னும் நோக்குடன் அதற்கேற்ற வகையிலே கல்வி பயிற்றுவதற்கேற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. 'திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய் - கருதறிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடும் கருணாகரக் கடவுளே' என்பதனையே கல்லூரியின் குறிக்கோள் வாசகமாக அமைத்தனர். அத்துடன் மேல் நாட்டு நாகரீக மோகத்தால் விரைவில் அழிந்து போகும் நிலையிலிருந்த பழைமையான பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற பெரு நோக்குடன் இதனை இந்துப் பண்பாட்டின் உறைவிடமாக ஆக்கமுற்பட்டனர். அதனாலேயே மாணவி

கள் ஆங்கில மொழியறிவைப் பெறும் அதே சமயத்தில் தமிழ் மொழியிலும் பயிற்சி பெறவும், அவர்களுக்கு வேதம், ஆகமம், தர்மசாத்திரங்கள், இதிகாசம், புராணம், தேவாரம், திருவாசகம் என்பனவற்றைப் போதிப்பதற்கும் வழி வகுத்தனர். நவீன நிலைமைக்கு ஏற்ற கல்வியினையும் எமது பண்டைய நூல்களில் பொதிந்து கிடக்கும் அறிவினையும் இணைத்ததோடு மாணவிகள் இறைபக்தி உடையவராகவும், மனைகளும் சமூகத்திற்கும் பயனுடையவர்களாகவும் விளங்குதற்குரிய அறிவினைப் பெறுவதற்கேற்ற பாடங்கள் போதிக்கப்படல் வேண்டும் எனவும் விதித்தனர்.

சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் 1930ஆம் ஆண்டிலே தாம் சமாதி அடையும் வரை இக் கல்லூரியோடு சேர்ந்து அமைந்திருந்த தமது இல்லத்தில் வதிந்து கல்லூரி நடைமுறைகளை எல்லாம் தாமும் தம் வாழ்க்கைத் துணைவியாகக் கொண்ட தாம் மேற்கொண்ட காரியங்களிலெல்லாம் கை கொடுக்க வல்ல ஆற்றலும் அறிவும் வாய்ந்த லீலாவதி அம்மையாருகக் கண்காணித்து வந்தனர். தமக்குப் பின்னரும் இக் கல்லூரி இடையூறின்றி நன்கு நடைபெற வேண்டும் எனக் கருதி 'பிருந்தாவன்' என்னும் தென்னந் தோட்டத்தையும் வேறு நிலங்களை கல்லூரிக்கு நன்கொடையாக எழுதி வைத்தார் 13.02.1913இல் ஓர் அறங்காவற் குழுவையும் முறைப்படி அமைத்தார். லேடி இராமநாதன் அம்மையாரைக் கல்லூரியின் தலைவராக (President) நியமித்து, கல்லூரி அதிபர், ஆசிரியர், ஏனைய அலுவலகர் ஊழியர்கள் ஆகியோரை நியமிக்கும் நீக்கும், கண்காணிக் கும் பொறுப்பினை அவருக்கு அளித்தார்.

சேர்.இராமநாதன் அவர்களுடைய மறைவுக்குப் பின்னர் 1953ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை லேடி இராமநாதன் அம்மையார் தம் தலைவர் ஏற்றி வைத்த சைவ மங்கையர்க்கான கல்வியெனும் பெருவிளக் கைச் சுடர் தூண்டி மேலும் ஒளி பெருகச் செய்தார். அன்னாருடைய கல்விச் சேவை யினைப் பாராட்டு முகமாக இலங்கைப் பல்கலைக்கழகம் 1942ஆம் ஆண்டு நடை பெற்ற அதன் முதலாவது பட்டமளிப்பு விழாவில் அவருக்கு LLD பட்டம் அளித்துக் கௌரவித்தது. அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பாகங்களி லும், பரமேஸ்வராக் கல்லூரியிலும், இராம நாதன் கல்லூரியிலும் அவருக்குப் பாராட்டு விழாக்கள் எடுக்கப்பட்டன. இராமநாதன் கல்லூரியில் அவருக்கு எடுத்த பெருவிழா வினை அங்கு அப்போது கல்வி பயிலும் பேறு பெற்ற மாணவிகளும், பழைய மாணவிகளும் எப்போதும் மகிழ்வுடன் நினைவு கூர்வர்.

லேடி இராமநாதன் அம்மையா ருக்குப் பின்னர் அன்னாரின் மருகராகிய கலாநிதி சு.நடேசபிள்ளையவர்களும் அவர் துணைவியராகிய சிவகாமசுந்தரி நடேசபிள் ளையவர்களும் கல்லூரி நிர்வாகப் பொறு ப்பை ஏற்று நடாத்தினர்.

1.12.60 இல் வித்தியாபதியின் நிர்வாகத்திற்குட்பட்ட இக் கல்லூரியை 15.07.62இல் அரசாங்கம் பொறுப்பேற்றது. 101 மாணவிகளுடனும் 12 ஆசிரியர் களுடனும் ஆரம்பித்த இக் கல்லூரியின் முதலாவது அதிபர், திருமதி. Florence Far Emery என்னும் ஆங்கிலப் பெண்மணி ஆவார். அக் காலத்தில் கல்வி அறிவும் தகைமையும் வாய்ந்த தமிழ்ப் பெண்கள் இல்லாமையால் ஆங்கிலப்பெண் மணிகளே 1936ஆம் ஆண்டு வரை அதிபர்களாகக் கடமை ஆற்றி வந்தனர். 1937ஆம் ஆண்டு முதல், தமிழ்ப் பெண்கள் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றத் தொடங்கினர். (கல்லூரி அதிபர்களைப் பற்றிய விவரம் மலரில் வேறோரிடத்தில் இடம் பெறுகின்றது).

ஆரம்ப காலத்தில் கல்லூரியில் கற்பிப்பதற்கேற்ற சைவப் பெண் ஆசிரியர்கள் கிடைப்பது மிக அரிதாக இருந்தது. செல்வி V. Clapham என்ற ஆங்கிலப் பெண்ணும்,

திரு.S.வீரசாமிப்பிள்ளை B.A.திரு.C.K. சுவாமிநாதன் B.A, திரு.M. கார்த்திகேசு (பயிற்றப்பட்ட ஆசிரியர்) ஆகிய ஆண் ஆசிரியர்களும் ஆரம்ப காலத்தில் ஆசிரியர் களாக கடமையாற்றியவர்களில் சிலராவர். திரு. சோமசுந்தரம் அவர்கள் ஆரம்பகாலம் முதல் 1944ஆம் ஆண்டு வரை சமயம், தேவாரம், புராணம், இசை ஆகியவற்றைப் போதிப்பவராகவும், மாணவிகளின் ஆலய வழிபாட்டை நெறிப்படுத்துபவராகவும் கடமையாற்றினார். திரு நவநீதகிருஷ்ண பாரதியார் திரு. V.மகாலிங்கம் போன்ற தமிழ் அறிஞர்களும் ஆசிரியர்களாகக் கடமை யாற்றினர். 1925ஆம் ஆண்டில் திரு. கணபதிஐயர் B.A.திரு.இராமச்சந்திர ஐயர் B.A.திருமதி.T. முத்துக்குமாரு (பயிற்றப்பட்ட ஆசிரியை) ஆகியோர் கடமையிற் சேர்ந்தனர்.

பட்டதாரிகளான பெண் ஆசிரியர் கள் தொகை 1948ஆம் ஆண்டுவரை மிகவும் குறைவாகவே இருந்து வந்தது. விஞ்ஞானத் துறையில் பட்டம் பெற்றவர் எவருமே இருக்கவில்லை.1933ஆம் ஆண்டில் செல்வி R.செல்லையா B.A.Hons Madras (திருமதி R.R. நவரத்தினம்) முதல் தமிழ்ப் பெண் பட்டதாரி ஆசிரியராகக் கடமை ஏற்றார். திருமதி. விஸ்வநாதனும் ஒரு பட்டதாரி ஆசிரியையாக விளங்கினார். 1943 இல் செல்வி மகேஸ்வரி தம்பு B.A.Hons London (திருமதி மகேஸ்வரி மகாதேவா இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் கற்றுப் பட்டம் பெற்று இங்கு சில காலம் ஆசிரியையாகக் கடமையாற்றினார். இராமநாதன் கல்லூரிப் பழைய மாணவியரில் முதலில் பட்டம் பெற்றவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. அப்போதிருந்த எனைய பட்டதாரி ஆசிரியைகள் பாரத நாட்டைத் தாயகமாகக் கொண்டவர்கள். செல்வி R. குமாரசுவாமி B.A.Madras 1945ஆம் ஆண்டு ஆசிரியையாகச் சேர்ந்தார்.

1947ஆம்ஆண்டு ஜுலை மாதம் முதலாம் தரக் கல்லூரியாகத் தரம் உயர்த்தப் பட்டமை கல்லூரி வளர்ச்சியில் ஒரு முக்கிய மான கட்டமாகும். இக்காலம் முதல் விஞ் ஞானக் கல்வியும் வளர்ச்சி பெறத் தொடங்கியது. எனினும் தாவரவியலைப் பாடமாகக் கொண்டு கல்க்கத்தா பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்ற திரு.கூ. முத்துக்குமாரு தவிர்ந்த ஏனைய விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியைகள் அனை வரும் இந்திய நாட்டைச் சேர்ந்தவர்களாகவே விளங்கினர். 1948ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பௌதிகவியல் விஞ்ஞானமாணிப்பட்டம் பெற்ற செல்வி.காயத்திரிதேவி பொன்னுத் துரை (திருமதி.காயத்திரிதேவி கணேசன்) ஆசிரியையாகச் சேர்ந்தார். இதனையடுத்து இந்தியப் பல்கலைக்கழகங்களில் கலை மாணிப் பட்டம் பெற்ற ஆசிரியைகர்களும், இலண்டன் பல்கலைக்கழத்திலும், இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் கலைமாணிப்பட்டம் பெற்ற ஆசிரியைகளும்கப் பட்டதாரி ஆசிரி யர்கள் தொகை படிப்படியாக அதிகரித்தது. இவர்களிற் பெரும் பாலானோர் இக் கல்லூரிப் பழைய மாணவிகள் என்பது குறிப்பிடத் தக்கது. இந்திய நாட்டைச் சேர்ந்த விஞ்ஞான மாணிப் பட்டதாரி ஆசிரியைகள் காலப் போக்கில் தம் தாயகம் திரும்பிவிட 1955, 1956ஆம் ஆண்டுகளில் இந்தியப் பல்கலைக் கழகங்களில் விஞ்ஞானமாணிப்பட்டம் பெற்ற எம் நாட்டு ஆசிரியைகள் விஞ்ஞானக் கல்விக்குப் பொறுப்பேற்றனர். இப்போது இலங்கைப் பல்கலைக்கழகங்களில் விஞ்ஞா மாணிப் பட்டம் பெற்ற ஆசிரியர்களும் உள்ர். 1980ஆம் ஆண்டுகளாகப் பட்டதாரி ஆசிரி யர்கள இங்கு கடமை ஆற்றினர். கடந்த சில ஆண்டுகளாகப் பட்டதாரி ஆசிரியர் தொகை குறைந்து பயிற்றப்பட்ட ஆசிரியர் தொகையே மேலோங்கி வருகின்றது.

ஆரம்ப காலத்தில் மாணவிகள் கேம்பிரிட்ஜ் ஜுனியர், சீனியர் பரீட்சை களுக்கும் பின்னர் இலண்டன் மற்றிக்கு லேஷன் பரீட்சைக்கும் தோற்றினர். 1914ஆம் ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற கேம்பிரிட்ஜ் சீனியர் பரீட்சையில் சௌந்தரநாயகி வீராசாமி என்ற மாணவி சித்தி பெற்றார். முதல்

சீனியர் பரீட்சையில் சௌந்தரநாயகி வீராசாமி என்ற மாணவி சித்தி பெற்றார். முதல் முதலாக இக் கல்லூரியிலிருந்து இப் பரீட்சையில் சித்தி எய்திய பெருமைக்குரிய இம் மாணவி சில ஆண்டு இங்கு ஆசிரியை யாகக் கடமையாற்றிய பின்னர் அரசாங்கப் புலமைப் பரிசில் பெற்று ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்குச் சென்று பயிற்றப்பட்ட ஆசிரியை ஆயினார்.

தம் பெண்கள் தமிழில் ஆழ்ந்த அறிவும், ஆங்கிலக் கடிதங்களையும் கணக்கு களையும் புரிந்து கொள்வதற்குப் போதுமான ஆங்கில அறிவும் பெற வேண்டும். என்று பெற்றோர் சிலர் விரும்பினர். அவர்கள் விருப்பத்திற்கமைய 1914ஆம் ஆண்டு மே மாதம் தமிழ்ப் பகுதி தனியாக ஆரம்பிக்கப் பட்டதாக அறிகிறோம். இப் பகுதியில் தமிழ் மொழிக்கும், இலக்கியத்திற்கும் 4 மணி நேரம் ஒதுக்கப்பட்டன. ஆங்கிலப் பகுதியில் 2 மணி நேரமே இப் பாடங்கள் போதிக்கப்பட்டன சமய போதனைக்கும் ஒழுக்கநெறிப் போத னைக்கும் தமிழ் மொழியே பயன்படுத்தப் பட்டது.

1938ஆம் அண்டு தொடக்கம் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியிலும் பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் உயர்கல்வி பயின்று கல்லூரி மாணவிகளிற் சிலர் பட்டதாரிகளாயினர். மாணவிகள் சிலர் மருத்துவக் கல்லூரியிற் சேர்ந்து வைத்திய கலாநிதிகளாயினர். இப்போது சிறந்த மகப்பேற்று வைத்தியராக விளங்கும் செல்வி சிவா. சின்னத்தம்பி எம் கல்லூரிப் பழைய மாணவியாவார். செல்வி மங்கையர்க்கரசி கனகசபை (திருமதி.ம.மகாதேவா) செல்வி, வேதநாயகி கணபதிப்பிள்ளை (திருமதி V.வேலும்மயிலும்) செல்வி ஸ்ரீ ஜெயதேவி பொன்னுத்துரை ஆகியோரும் வைத்தியத் துறையிற் பட்டம் பெற்றனர்.

1943ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கைப் பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புக் களும் H.S.C. வகுப்புக்களும் ஆரம்பிக்கப் பட்டன. ஆண்டு தோறும் மாணவிகள் பல்கலைக்கழம் சென்றனர். இதே காலப்பகுதி யில் இலண்டன் இடைமாணிப் பரீட்சைக்கும் கலைமாணிப் பரீட்சைக்கும் மாணவிகள் பயிற் றப்பட்டனர். 1951ஆம் ஆண்டில் செல்வி சகிதேவி தியாகராஜாவும் (திருமதி. ச. கந் தையா)1952ஆம் ஆண்டில் செல்வி. புவனேஸ்வரி சுவாமிநாதனும் (திருமதி.பு .சண்முகலிங்கம்) இங்கேயே தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்றுக் கலைமாணிப் பட்டம் பெற்றனர். திரு. S. நடேசபிள்ளை, நவநீதகிருஷ்ண பாரதியார், அக்காலத்தில் அதிபராகக் கடமையாற்றிய திருமதி. N. P. பிள்ளை ஆகியோர் தமிழையும் திரு .P. இராமஐயர் உப பாடமாகிய சமஸ்கிருதத் தையும் கற்பித்தனர். இலண்டன் க.பொ.த. வகுப்புக்களும் பின்னர் இங்கு நடைபெற்றன.

1960ஆம் ஆண்டு முதல் பெருந் தொகையான கலைப்பிரிவு மாணவிகள் இங்கிருந்து பல்கைலக்கழகம் சென்றனர். 1963இல் 27 மாணவிகளும் 1962இல் 27 மாணவிகளும் 1963இல் 26 மாணவிகளும் 1965இல், 34 மாணவிகளும் பல்கலைக்கழகம் சென்றதை சிறப்பாகக் குறிப்பிடலாம். இவ்வாண்டுகளின் இராமநாதன் கல்லூரியே அகில இலங்கையிலும் கலைத்துறையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று மிகக் கூடிய தொகை மாணவிகளைப் பல்கலைக்கழகம் அனுப்பியது.

1970ஆம் ஆண்டுக்குப் பின்னர் மொழிவாரித் தரப்படுத்தல் முறை காரணமாக பல்கலைக்கழகப் பிரவேசம் பெறும் மாணவர் தொகை குறைய ஆரம்பித்தது. எனினும் 1972ஆம் ஆண்டு முதல் மாணவர் சிலர் விஞ்ஞானப் பிரிவிலும் (மருத்துவம், பல் மருத்துவம், விவசாயம், உயிரியல், விஞ் ஞானம்) பல்கலைக்கழகப் பிரவேசம் பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. 1978ஆம் ஆண்டு முதல் 35% மாணவரும் இப்போது 300% மாணவருமே திறமை அடிப்படையில் பல்கலைக்கழகங்களிற் சேர்த் துக் கொள்ளப்படுவதால் எம் மாணவிகள் பலர் பல்கலைகழக அனுமதி பெறுவதற்கான தகுதி நிலையைக் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் அடைந்துள்ள போதிலும், சிறு தொகையினரே பல்கலைக்கழகம் சென்று கல்வியைத் தொடரக் கூடியதாய் உள்ளது. எனினும் திறமை அடிப்படையில் எம் மாணவிகள் சிலர் மகாபொல புலமைப் பரிசில் பெற்றுள்ளனர் என்பது கல்லூரிக்குப் பெருமையளிப்பதாகும். இசை, நடனம், சமஸ்கிருதம், தமிழ், இந்து கலாச்சாரம் ஆகிய பாடங்களுக்குத் தோற்றும் மாணவிகளே பெரும்பாலும் இவ்வாறு மிகச் சிறந்த பெறு பேறுகளைப் பெற்று வருகின் றனர். நுண்கலை பயிலும் கலைப்பிரிவு மாணவிகளிற் பலர் யாழ் பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலைப் பிரிவுக்கும் ஆண்டு தோறும் தெரிவு செய்யப்படுகின்றனர். 1987ஆம் ஆண்டுப் பெறு பேற்றின் படி உயிரியல் விஞ்ஞானப் பிரிவு மாணவி ஒருவரும் திறமை அடிப்படையில் மகாபொல புலமைப்பரிசில் பெற்றுள்ளார்.

1976ஆம் ஆண்டு முதல் வர்த்தகப் பிரிவு வகுப்புகளும் நடைபெற்று வருவதால் இப் பிரிவிலும் மாணவிகள் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகிப் பல்கலைக்கழகம் சென்றுள்ளனர்.

பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்ற மாணவிகளிற் பலர் ஆசிரிய நியமனம் பெற்று நாட்டின் பல பாகங்களிலும் கடமை யாற்றி வருகின்றனர். 1983 ஆம் ஆண்டு நடைபெற்ற ஸ்ரீ லங்கா நிர்வாக சேவைப் பரீட்சையில் இருவர் நிர்வாக சேவைக்குத் தெரிவு செய்யப்பட்டு நிர்வாகத்துறையில் பணியாற்றுகின்றனர்.

கல்வித்திணைக்களத்தின் பாடத் திட்ட ங்களைப் பின்பற்றுவதோடு நின்று விடாது, நிறுவுநரின் பெருநோக்கிற்கமைய இன்றும் சமய அனுஷ்டானத்தோடு கூடிய சமயக் கல்வியைப் போதிப்பது, புனித நாட்களில் விழா வெடுப்பதும் தவறாது நடை பெற்று வருவதைக் காணலாம். சமய நிறுவனங் களால் நடாத்தப்படும் பரீட்சைகளுக்கும் ஏனைய போட்டிகளுக்கும் தோற்றி மாண விகள் பல பரிசில்களையும் பெற்றுள்ளனர்.

இராமநாதன் கல்லூரியைப் பற்றிக் குறிப்பிடும் போது அதன் ஓர் அங்கமாகச் சில ஆண்டுகள் (1926 - 1947) விளங்கிய இராமநாதன் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிக்கும் ஒரு தனி இடம் உண்டு. தம் பாடசாலைகளு க்குத்தக்க பெண் ஆசிரியைகளைப் பெறு வதில் பெரிதும் இடருற்ற இந்துப் பாடசாலை களின் குறையை நிவர்த்தி செய்வதை நோக்க மாகக் கொண்டு 1926 ஆம் ஆண்டிலே பெண்களுக்கான ஓர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியை சேர். இராமநாதன் நிறுவினார். திரு. K. M. விஸ்வலிங்கம் அதன் தலைமை யாசிரியராகக் கடமையாற்றினார். 1938ஆம் ஆண்டில் அவர் ஓய்வு பெற திருமதி அழக

முத்து மயில்வாகனம் அதனைப் பொறுப் பேற்றார். அவருக்குப் பின்னர் திரு. A. S. சுந்தரராஜ ஐயங்கார் அவர்களும் அவரை யடுத்து திருமதி இராஜராஜேஸ்வரி கணேச லிங்கமும் அதன் தலைமையா சிரியர்களாக இருந்தனர். இப் பயிற்சிக் கல்லூரி 1947ஆம் ஆண்டில் முடப்படும் வரையும் ஆசிரியைகள் பலரைக் கல்விப் பணிக்குப் பயிற்றுவித்து அளிக்கும் அரும் பணியை ஆற்றி வந்தது.

ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிலே பயிற்சி பெறும் மாணவிகளின் நலனுக்காக 1926ஆம் ஆண்டில் சிரேஷ்ட தராதரப் பத்திர வகுப்பு வரை கற்பிக்கும் ஒரு சாதாரண பாடசாலை யும் அவரால் ஆரம்பிக்கப்பட்டது. தமிழ் மொழி மூலம் இங்கு பாடங்கள் கற்பிக் கப்பட்டமையால் இது இராமநாதன் தமிழ்ப் பாடசாலை என வழங்கப்பட்டது. திருமதி ருக்மணி வெற்றிவேற்பிள்ளை இப் பாடசா லையின் தலைமையாசிரியையாகக் கடமை ஆற்றினார். இராமநாதன் கல்லூரியிலும், இராமநாதன் தமிழ்ப் பாடசாலையிலும் கற்று சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி எய்திய மாணவிகள் சிலர் இராமநாதன் ஆசிரியப்பணியை மேற்கொண்டனர். பின் னர் இப் பாடசாலை இராமநாதன் கல்லூரி யுடன் இணைக்கப்பட்டது.

சேர். இராமநாதன் அவர்களின் பரோ பகார சிந்தனைக்கும் வள்ளற்ற ன்மைக்கும் எடுத்துக்காட்டாக அநாதைச் சிறுமிகளுக்கெ ன அவரால் இராமநாதன் கல்லூரியின் ஒரு பகுதியில் அமைக்கப்பட்ட அநாதை இல்லம் விளங்கியது. சைவ அநாதைச் சிறுமிகள் சைவ அநாதை இல்லத்தில் வதிவதற் குரிய வழி யினை வகுத்ததன் மூலம் இந்து சமுதாயத்திற்கு அவர் ஆற்றிய பணி அளவிடற்கரியது.

சைவப்பெண்கள் அனைவரையும் ஒன்றிணைத்து அவர்களைச் சமூகப் பணியில் ஈடுபடச்செய்யும் நோக்குடன் 1924ஆம் ஆண்டிலே 'சைவ மங்கையர் சபையினை' இராமநாதவள்ளல் அமைத்தார். இச்சபையின் தலைவராக லேடி இராமநாதன் அம்மையாரே பல காலம் இருந்து அரும்பணி ஆற்றினார். இச்சபை சைவ மாணவிகள் கல்வியைத் தொடர்வதற்கு நிதி உதவி அளித்தது என்றும் ஏழைச் சிறுமிகளை ஆதரித்துக் கல்வி கற்பித்து வந்தது என்றும் அறிகின்றோம். சபைத் தலை வராகிய லேடி இராமநாதன் அம்மை யாருடைய பணிகளை நினைவு கூருமுகமாக ஆண்டுதோறும் இந்து நாகரிகம், சமயம் தத்துவம் கலை ஆகிய துறைகளில் ' லீலாவதி இராமநாதன் பெருமாட்டி நினைவுப் பேருரை நிகழ்த்துவதற்கும், யாழ் பல்கலைக் கழகத்தில் இந்து நாகரிகத்துறையில் பட்டப் பின் படிப்பை மேற்கொள்வதற்குத் திறமை அடிப்படையில் புலமைப் பரிசில் வழங்கு வதற்குமாக இரு அறக்கட்டளைகளை இச் சபையினர் நிறுவியுள்ளனர். 1965 ஆம் ஆண்டு வரை இச் சபையினரே சேர். இராமநாதன் அவர்களுடைய குருபூஜையை நடாத்தும் பொறுப்பை ஏற்று அப்பணியைச் சிறப்பாக ஆற்றி வந்தனர். அக்காலத்தில் குமாரசுவாமி ப்புலவர் அவர்களுடைய கதாப்பிரசங்கம் சிறப்பு நிகழ்ச்சியாகப் பெரும்பாலும் இடம் பெற்று வந்தது.

1938 ஆம் ஆண்டிலே பெண்களுக்கு மிகவும் அவசியமான தையற்கலைப் பயிற்சிக் கான விசேட வகுப்பினை ஆரம்பித்ததன் மூலம் பெண்குலத்திற்கு அரும்பணி ஆற்றியது இக் கல்லூரி. இயந்திர சித்திரத்தையற் கலையிலே (Machine Embroidery) தேர்ச்சி

பெற்ற செல்வி யோகபகவதி இளையதம்பி ( திருமதி யோ. மகாலிங்கம்) இந் நெறியைப் பொறுப்பேற்று நடாத்தி வந்தார். பல வண்ண நூலினால் எழில் மிகு சித்திரத்தையலை விரைவினில் அமைக்கும் இவ்வாற்றலைப் பெறப் பெருந்தகையான மாணவிகள் எம் கல்லூரியை நாடி வந்தனர். பாடசாலைக் கல்வியை முடித்த பெண்களுக்குப் பயன்மிகு பயிற்சியாக இது அமைந்ததுடன் பல நூற்றுக் கணக்கான பெண்கள் பல இடங்களிலும் தையற் பயிற்சி நிலையங்களை நிறுவி இக் கலையினைப் பரப்புவதற்கு இவ் வகுப்பே முன்னோடியாக இருந்தது என்று கூறுதல் தவறாகாது. இவ் வகுப்பு இன்றும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இராமநாதன் கல்லூரியின் சிறப்பான இன்னொரு அம்சம், அங்கு சேர். பொன் இராமநாதன் அவர்களின் சமாதி ஆலயம் அமைந்திருத்தலாகும். இலங்கையின் பல் வேறு பாகங்களிலுமுள்ள தலைவர்களும் பிறநாட்டுப் பெரியோரும் வந்து தரிசித்து அப்பெரியாருக்கு அஞ்சலி செலுத்தும் ஒரு புனித ஸ்தலமாக அது விளங்குகிறது. தம் தலைவரின் சமாதிமேல் அமைந்துள்ள இவ் வாலயத்தைக் கருங்கற் பணியாக அமைத்த பெருமைக்குரியவர் லேடி இராமநாதன் அம்மையார் அவர்கள்.

தனித்துவம் வாய்ந்த இக் கல்லூரியிற் கல்வி பயிலவும் பணி புரியவும் வாய்ப்பினைப் பெற்றவர்கள் அதனைப் பெறற்கரும் பேரும் பேறெனவே கருதுவர். தன்னலங்கருதாது நற்பணி புரிந்த ஆசிரியர்கள் பணியால் மேனிலையுற்ற இக்கல்லூரியின் வெள்ளி விழாவினையும் பொன்விழாவினையும் வைரவிழாவினையும் சிறப்பாக கொண்டாடி மகிழ்ந்தோம். அதுபோன்று பவளவிழா வினையும் கொண்டாடுவதற்கு கல்லூரியைச் சார்ந்தவர்கள் முயலுங்கால் நாட்டில் ஏற் பட்ட அசம்பாவிதங்களால் கல்லூரி பெரிதும் பாதிக்கப்பட்டது. கல்லூரி விடுதி யில் அப் போது தங்கியிருந்த 68மாணவிகளும் ஆசி ரியைகள் ஊழியர்கள் உட்பட்ட மேலும் பதின்மரும் அகதிகளாகக் கல்லூரயை விட்டு நீங்க நேர்ந்த போது அவர்கள் அனைவருக்கும் புகல் அளித்து உண்டியும் உறையுளும் அன்புடன் நல்கி பலரும் பலவிதமான இடர் களுக்குட்பட்ட வேளையில் சகலவசதிகளு டனும் வாழவைத்த உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் செல்வி s. செல்லையா அவர்களுக்கு எம் கல்லூரி என்றென்றும் நன்றி பாராட்டும் கடப்பாடு உடையதாகும். உடைமைகளை இழந்தபோதிலும் அனை வரும் பாதுகாப்பாக இருக்கவும் மாணவிகள் அனைவரையும் அவர் தம் பெற்றோரிடம் ஊறின்றி ஒப்படைக்கவும் துணைபுரிந்த இறைவனின் இன்னருளையும் போற்றித்துதிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

நாட்டு நிலைமை காரணமாக நலிவுற்ற எம் கல்லூரி ஒரளவு சீரடைந்துள்ள இவ் வேளையிலே பவள விழாவினைக் கொண் டாடுவதற்கு மீண்டும் முயற்சிகள் மேற் கொள்ளப்படுவது வரவேற்கத் தக்க தாகும். எம் கல்லூரி இழந்த சிறப்பினை எல்லாம் மீளப் பெற்று நிறுவுனர் பெருநோக்கிற்கமைய தம் நாட்டையும், மொழியையும் சமயத் தையும் பேணிக் காக்க வல்ல நன் மங்கையரை உருவாக்கும் பணியில் வெற்றி பெற்று சிறப்புறுவதாகுக.

# ஆன்மீகவாதியான அரசியல் வாதி

கலாநிதி செ. திருநாவுக்கரசு
ஒய்வுநிலை விரிவுரையாளர்
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

இலங்கை மாதாவின் தவப்புதல் வர்களில் சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களும் ஒருவர். இவர் மானிப்பாயைச் சேர்ந்த - கொழும்பில் வாழ்ந்துவந்த பிரபுத்துவக் குடும்பத்தில் பிறந்தவர். பிரித்தானியரின் ஆளுகைக்குட்பட்டிருந்த அன்றைய இலங்கையில் இவரும், இவரது உறவினர்களும் மிக உயர்வான அரச உத்தி யோகங்களையும் சட்ட நிருபண சபை உறுப்பினர் பதவிகளையும் வகித்தனர். மேலும் இலங்கையின் சுதந்திரத்துக்காகவும், இலங்கை மக்களின் தனித்துவம் வாய்ந்த பண்பாட்டினைக் கட்டிக் காப்பதற்காகவும் அரும்பாடுபட்டு உழைத்தனர். இதனாற்றான் சேர். பொன். இராமநாதன் அவர்கள் மிகப்பெரிய இலங்கையர்" என நாட்டின் முதற் பிரதமனரான D.S சேனநாயக்கா குறிப்பிட்டுள்ளார். சேர். பொன் இராமநாதன் இலங்கைத் தேசியத்துக்காகப் பாடுபட்ட அதே வேளையில் தமிழ்த்தேசிய நலன் களுக்காகவும் , தமிழர் பண்பாட்டு நிலை நிறுத்தல்களுக்காகவும், அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். இலங்கையின் தேசிய வீரராக உயர்ந்து நிற்கையில் சிறந்ததொரு தமிழர் தலைவராகவும் போற்றப் படுகின்றார்.

சேர். பொன். இராமநாதன் அவர்கள் அரசியல் வாதியாகவும், ஆன்மீகவாதியாகவும், ஆசிரியராகவும், எழுத்தாளராகவும், கலாரசிகராகவும், பொறுப்புணர்வு மிக்க சமூக வாதியாகவும், பன்முகப் பரிமாணங்களை வெளிக்காட்டியவர். இலங்கையில் சைவத் தமிழ் மறுமலர்ச்சி மூலவரான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் ஆதரவுடன் தமது 28 ஆவது வயதில் (1879இல்) சட்ட நிருபண சபையில் தமிழர்களின் பிரதி நிதியாக விளங்கியவர். அன்றிலிருந்து அவரது இறுதிக் காலம்வரை ( 1930) இலங்கை அரசியலில் செல்வாக்கு மிக்க ஒருவராகவும் சட்டநிருபணசபை உறுப்பினராகவும், தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய தலைவராகவும் பணியாற்றியவர். முதன் முதல் படித்த இலங்கையர் பிரதிநிதியாகப் பெரும்பான்மை இனத்தவரான சாம். பி. பெர்னாண்டோ என்பவருடன் போட்டியிட்டு 1911இல் வெற்றிவாகை சூடியதன் மூலம்; தான் ஒரு தேசியத் தலைவர் என நிருபித்தவர். மறுமுறையும் படித்த இலங்கையர் பிரதிநிதியாக ( 1916) இல் தெரிவாகி 1911 - 1921 வரை பதவிவகித்தவர்.

1921இல் பிரித்தானிய மகாராணியால் "சேர்" பட்டம் அளித்துக் கௌரவிக்கப்பட்டவர். இலங்கையின் சொலிசிற்றர் ஜெனரலாக 1892 - 1906 வரை பணியாற்றிய பெருமைக்குரியவர் 1922ஆம் ஆண்டிலிருந்து சட்ட நிரூபண சபைப் பிரதிநிதி பதவியை இறக்கும் வரை (1924 - 1930 வலிகாமம் வடக்குக்குரிய தமிழர் பிரதிநிதி) வகித்தவர். சேர். பொன். இராமநாதன் அவர்களின் ஐம்பத்தோராண்டு கால அரசியல் கால அரசியல் வாழ்வு சாதனைகள் பலவற்றையும், சோதனைகள் பலவற்றையும் தாண்டியே வந்துள்ளது. 1915 ஆம் ஆண்டு இடம்பெற்ற கம்பளை செலபெரஹர ஊர்வலம் தொடர்பாகச் சிங்கள - முஸ்லீம் இனங்களுக்கிடையே ஏற்பட்ட கலவரம் காரணமாக அன்றைய சிங்களத் தலைவர்களான D. S சேனநாயக்கா, D. R விஜயவர்த்தனா டாக்டர் ஹாசியாஸ் பெரேரா, E. T டிசில்வா, F.R டயஸ் பண்டார நாயக்கா, H அமரசூரிய, A, H மொலமூரே ஆகியோரும் வேறு பலரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்களை விடுதலை செய்வதற்காக முதலாம் உலக யுத்தத்தின் ஆபத்துக்களையும் பொருட்படுத்தாமல் கப்பலின் பல நாட்கள் பிரயாணஞ் செய்து இலண்டன் மாநகரை அடைந்து அங்கு குடியேற்ற நாட்டு மந்திரியைச் சந்தித்து நிலைமையை விளக்கி சிங்களத் தலைவர்களின் விடுதலையை ஏற்படுத்தியவர் சேர். பொன். இராமநாதன் அவர்கள். அவர் நாட்டுக்குத் திரும்பி வரும் போது கொழும்புத் துறைமுகத்திலிருந்து அவரது வீடுவரைக்கும் குதிரை வண்டியில் ஏற்றிக் குதிரைகளுக்குப்பதிலாகத் தாமே இழுத்து வந்து நன்றிக் கடனைக் காட்டினர். சிங்கள மக்கள் சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கை யின் தேசிய வீரர் வரிசையில் அவரையும், அவரது தம்பியார் சேர். பொன். அருணாசலம் அவர்களையும் கௌரவித்து, முந்தைய இலங்கைப் பாராளு மன்றத்தின் முன்றலில் சிலைகளும் வைக்கப்பட்டன. பிற்காலத்தில் சிலைகள் இடம் மாறிவிட்டன. இலங்கை யின் சுதந்திரத்தை மீட்டெடுப் பதற்காக 1919இல் நிறுவப்பட்ட இலங்கைத் தேசிய காங்கிரசின் தலைவராக அருணாசலம் செயற்பட, இராமநாதன் அவர்களும் இணைந்து பாடுபட்டார். இருப்பினும் கொழும்பில் தமிழர்களின் பிரதிநிதித்துவம் தொடர்பாக ஏற்பட்ட சர்ச்சைகளினாலும் சிங்களத் தலைவர்களின் மாறுபட்ட செயற்பாடுகளினாலும், சேர். பொன். அருணாசலமும் சேர். பொன. இராம நாதனும் தேசிய காங்கிரசிலிருந்து விலகித் தமிழருக்கான ஓர் அமைப்பை உருவாக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டனர். முதன் முதலில் இலங்கையின் தேசியம் குறிப்பிடத்தக்க விதத்தில் பிளவு பட்டது.

சேர் பொன் இராமநாதன் காலத்தில் இலங்கையின் விடுதலைக்கான போராட்டங்கள் நிறுவனமயப்படுத்தப்பட்டு முன்னெடுக்கப்பட்டன. அவர் காலமாகிப் பதினெட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் தான் பிரித்தானியரிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்றது. இந் நிலையில் தமிழர்களின் உரிமைகளை நிலை நிறுத்துவதில் இராமநாதன் போன்றவர்கள் விட்ட தவறு

தான், இன்றைக்குத் தமிழர்களின் இழி நிலைக் குக் காரணம் எனக் கூறுவோர் இருக்கி றார்கள். அந்நிய ஏகாதிபத்தியத்துக் கெதிரான போராட்டத்தில் இலங்கையர் அனைவரும் ஒன்று பட்டு இணைய வேண்டிய தேவை அப் போதிருந்தது. மேலும் பிரிவினையை ஏற்படு த்தக்கூடிய சூழலும் காணப்பட வில்லை.

ஆங்கிலம் அரச கரும மொழியாக விருந்தது. ஆங்கிலம் கற்ற மத்தியதர வர்க்கத் தினராகிய தமிழர்கள் பலர் தங்கள் வீதாசாரத் திற்கும் அதிகமாக உயர்ந்த அரசாங்க உத்தி யோகங்களில் ஈடுபட்டிருந்தனர். இத் தருண த்தில் சட்ட நிருபணசபை விகிதாசாரப் பிரச் சினை பற்றிய முரண் பாடுகளே காணப்பட் டன. நிலமை இப்படியிருக்க சேர். பொன். இராமநாதன் மீது குற்றஞ் சாட்டுவதில் நீதி யில்லை இதே போன்றதாகவே பெண்கல்வி, சர்வசனவாக்குரிமை சம்பந்தமான இராம நாதன் அவர்களின் கருத்துக்களும் விமர்சிக்க ப்படுகின்றன.

எத்தனையோ நாடுகளில் தாமதமா கவே பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப் பட்டது. பெண்ணடிமைத்தனம் செல்வாக் குப் பெற்றிருந்த காலகட்டத்தில் பெண்கள் ஆணாதிக்கத்தின் கீழ் வாழ்ந்திருந்த சூழ்நிலை யில் பெண்கள் கல்வி பெறுவதில் பல்வேறு தடைகளையும் எதிர்கொண்ட வேளையில், பெண்கல்வி தாழ்நிலையில் காணப்பட்ட போது சிந்தனாபூர்வமாகச் செயற்பட முடி யாத நிலையில் இத்தகைய குறைபாடுகள் ஓரளவுக்காவது நிவர்த்தி செய்யப்பட்ட பின்னர் அவர்களுக்கு வாக்குரிமையளிப்பது பயனுடைய தாயிருக்கும் என இராமநாதன் கருதினார். அதே போன்றே சர்வசன வாக்கு ரிமை பொது நன்மை பயப்பதாகவும், சனநாய கத்தன்மை வாய்ந்ததாகவும் சமூக ஏற்றத்தாழ் வினைக் குறைப்பதாகவும் இருந்த போதிலும் சிறு குழந்தையின் கைகளில் கொடுக்கப்படும் கூர்மையான ஆயுதம் போன்று சுயாதிக்கமு டன் வாக்களிக்கும் பக்குவம் பெறாத பாமர மக்களுக்கு உடனடியாக வாக்குரிமை வழங் குவது சிந்தித்துச் செயற்பட வேண்டிய காரி யம் எனவும் சேர். பொன் . இராமநாதன் கூறினார். இதனைக் கருத்திற் கொண்டு தமிழர் களில் ஒரு பகுதியினர் அவரை உயர்வர்க்கச் சிந்தனையாளரென்றும் சாதீயத்தடிப்புள்ளவ ரென்றும், விமர்சித்தனர். இன்றும் அந்த மனப்பாங்குகளிலிருந்து மாறாமலும் உள் ளனர். அற்ப சொற்ப சலுகைகளுக்காகச் சோரம்போய்த் தமது வாக்குரிமையைச் சுய நலத்துக்காகவும், அறிவுபூர்வமற்ற முறையி லும் அளிக்கக் கூடிய பலரை எமது நாட்டில் இன்றுங் கூடக் காணமுடிகிறது. தமிழ் - சைவப் பண்பாடு தழுவிய கல்வியைப் பெண் கள் பெறுவதற்காக 1913ஆம் ஆண்டு இராம நாதன் கல்லூரியை நிறுவி, தகுதி வாய்ந்த வர்களை வெளி நாடுகளிலிருந்தும் உள்நாட் டிலிருந்தும் முதல்வர்களாகப் பணியாற்றச் செய்து விழுமியங்களைக் கடைப்பிடிக்கக் கூடிய கலைத்திட்டத்தினை நடைமுறைப் படுத்தி, ஆங்கிலக் கல்வியின் அவசிய முணர் ந்து அதனைக் கற்பிக்கச் செய்து பல்லாயிரக் கணக்கான பெண்கள் அறிவுக்கண் பெறச் செய்தவர் இராமநாத வள்ளல் என்பதையும் நாம் கவனத்தில் கொண்டால் அவரது

சிந்தனைத் தூய்மையைப் புரிந்து கொள்ள வியலும்.

சேர்.பொன். இராமநாதனின் அரசியல், கல்வி, சமூகப்பணிகளுக்கப்பால் அவரது ஆன் மீகப்பணி விரிவடைந்து காணப்படுகின்றது." தவமும் தவமுடையார்க்கு ஆகும். "என்பத ற்கிணங்க அவரது குடும்பச்சூழலிலிருந்தும் ஆன்மீக நாட்டமுடையவராக அவர் வளர்வதற்கான ஏதுக்கள் காணப்பட்டன. தமது இளம் வயதிலேயே மனைவியை இழந்து விட்ட இராமநாதனின் தந்தையார் பொன்னம்பலம் அவர்களின் பிற்காலம் துறவு வாழ்க்கை போல் கழிந்துது. 1854ஆம் ஆண்டு தமது 19ஆவது வயதில் தாயார் இறந்தபோது இராமநாதன் அவர்களுக்கு மூன்று வயது. தம்பியார் அருணாசலத்துக்கு ஒரு வயது. இந் நிலையில் பாட்டியார் விசாலாட்சியம்மையின் அரவணைப்பில் பேரக் குழந்தைகள் வளர்ந்தனர். வீட்டி லேயே நந்தவனம் அமைத்துச் சிவபூசை செய்து வந்த தந்தையாரின் ஆன்மீகப் பாதையின் செல் வாக்குப் பிள்ளைகளிலும் பிரதிபலித்ததில் வியப்பில்லை. 1857இல் கொழும்பு கொச்சிக்கடையில் பொன்னம் பலவாணேஸ்வரர் ஆலயத்தை இராம நாதனின் தந்தையார் கட்டத் தொடங்கினார். சிறிய ஆலயமாயிருந்த அதனை இந்தியா விலிருந்து பெறப்பட்ட கருங்கற்கள் கொண்டு பேராலயமாகப் பிற்காலத்தில் அமைத்தவர் சேர். பொன் . இராமநாதன் அவர்கள் . இலங்கையிலேயே முழுவதும் கருங்கல்லாற் கட்டப்பட்ட சைவ ஆலயம் என்ற பெருமை இச் சிவன் கோவிலுக்கே யுரியது. தலைநகரில் தந்தை தொடக்கி வைத்த சைவப் பணியை முடித்து வைத்ததில் இராமநாதன் அவர்களின் உள்ளம் அமைதி கண்டது.

குருவடிவாய் எழுந்தருளியிருக்கும் திருவருளின் கடைக்கண் பார்வை இராம நாதன் அவர்கள் மீது படியும் காலமும் வந்து சேர்ந்தது. ஓய்வின்றி நாட்டுக்காக உழைத்துக் கொண்டிருக்கும் ஒருவரை நாடித் தஞ்சாவூர் இராணியின் வேண்டுகோளினைத் தெரியப் படுத்தும் தூதுவராக , இலக்கணம், இராம சாமிப்பிள்ளை எனும் சுவாமி அருட் பரானந்தர் கொழும்புக்கு வந்து இராமநாதன் அவர்களைச் சந்தித்தார். இராணியின் பேரனு க்கே பட்டம் கிடைக்க வேண்டுமென்ற வேண்டுகோள் இராமநாதன் மூலமாகப் பிரித்தானிய அரசிடம் தெரிவிக்குமாறு கோரப்பட்டது. 1888இல் முதன் முதலாக சுவாமி அருட்பரானத்ந தருடனான சந்திப்பு இராமநாதன் அவர்களுக்கு ஏற்பட்டதனால் அவரது உள்ளத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. இகலோகவாழ்வின் நிச்சயமற்ற தன்மையைப் புரிந்து கொண்டு ஆத்மீக சுத்தியுடன் செயற்படக் கூடிய உளத்திண்மை உருவானது. தஞ்சை அரச வம்சத்தவர்களின் உறவினரான தில்லைநாத சுவாமிகளே சுவாமி அருட்பரானந்தரின் ஞான குருவாவார். சுவாமி அருட்பரானந்தரே இராமநாதனின் ஞானகுருவாய் விளங்கி நல்லுபதேசம் அருளியவர். தமது சகோதரர் அருணாச லத்தையும், நண்பர் எட்வேட் காப்பென்

ரரையும் சுவாமிகளிடம் உபதேசம் பெறச் செய்து சீடர்களாக மாற்றியவர் இராமநாதன் அவர்களே. தமது 37ஆவது வயதில் ஏற்பட்ட சைவசமய நோக்கிலான இறை சிந்தனையும் , அர்ப்பணிப்பும் தம்மை இதுவரை வாழ்ந்த நெறியிலிருந்து மாற்றியமைத்ததை இராம நாதன் அவர்கள் உணர்ந்து கொண்டார். மெல்ல மெல்லப் பிரபுத்துவ வாழ்வுக்குரிய அடையாளங்கள் அவரிடமிருந்து விலகிக் கொண்டன. மேனாட்டுப் பண்பாட்டு விருப்பம் தளர்ந்தது. புகைத்தலும் குடித்தலும் வெறுப் பானது . ஆன்மீகப் பற்று அதிகரித் தது; உடலின் அநித்தியம் உணரப்பட்டது; சிந்தையும் செயலும் ஒன்றாகும். விருப்பு ஏற்பட்டது. இயந்திரம் போல லௌகீகக் கடமைகளைச் செய்துவந்தாலும், மன மானது தவறவிட்ட ஆட்டுக்குட்டியைத் தேடித் திரியும் . இடையனைப்போலப் பரம்பொருள் நாடியே நின்றது. அருட் பராநந்தரின் மீதான அளவு கடந்த குரு பக்தியும், அடிக்கடி அவரைத் தேடிச் சென்று உபதேசம் பெற்றமையும் புதியதொரு உலகத் தினை நோக்கிய பாதையில் செல்வதற்கு இராமநாதன் அவர்களை நெறிப்படுத்தியது. அவரது வாழ்வியலில் எஞ்சியிருந்த 42வருட காலங்களிலும் அவர் மேற்கொண்ட அரசியல், சமயம், சமூகம், கல்வி, கலை முதலான அனைத்துப் பணிகளிலும் அவரது ஆன்மீக நாட்டம் புலப்பட்டது. கொழும்பில் சிவாலயம் அமைத்தமை, இராமநாதன் கல்லூரி , பரமேஸ்வராக் கல்லூரி ஆகிய வற்றை நிறுவி ஒழுக்க நியமங்களுடனான ஆன்மீக வளர்ச்சிக்கான கல்வியை வழங்கியமை, கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்காக ஐந்து ஏக்கர் காணி வழங்கியமை , சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தை உருவாக்கியமை, தாமுருவாக்கிய கல்லூரிகளில் ஆசிரியர் பயிற்சிநெறிகளை இணைத்தமை முதலான பன்முகப் பணிகளில் இதனைக் காணவியலும்.

18. 07. 1893இல் தமது ஞான குருவானவர் தஞ்சாவூரில் சமாதியடைந்த போது அச்சமாதியில் லிங்கமொன்றினைப் பிரதிஷ்டை செய்தும், தொடர்ந்து அவ்விடத்தில் நித்தியபூசைகள் நடைபெற ஏற்பாடுகள் செய்தும் தமது குருவுக்கான அஞ்சலியை நிறைவேற்றினார். தமது ஞானகுருவின் உறவினரான சுப்பையா நடேசபிள்ளை என்னும் தமிழறிஞரை இலங்கைக்கு வரவழைத்து முப்பது ஆண்டு கள் பரமேஸ்வராக் கல்லூரி அதிபராகப் பணியாற்றவும் தமது இரண்டாந்தாரமான லீலாவதி (Harri son) அம்மையாருக்குப் பிறந்த சிவகாம சுந்தரிக்குக் கணவராக ஆக்கிக் கொள்ளவும் முடிந்ததற்குக் காரணம் இராம நாதன் அவர்கள்பால் நிறைந்திருந்த குருபக்தி யாகும்.

1906இற்குப் பிந்திய காலத்தில் தமிழ் நாட்டிலிருந்து யாழ்ப்பா ணத்துறைமுகம் ஊடாக நாடு திரும்பிய சேர். பொன். இராமநாதன் அவர்கள், நல்லூர் முருகனைத் தரிசிக்க விரும்பி, படாடோபமான குதிரைவண்டியில் பரி வாரத்தினர் சூழ, நவீன ஆடைகளணிந்தவராய் ( தலைப்பாகை, வேட்டி, கோட்டு, சப்பாத்து) வந்து

சேர்ந்தார். அப்போது எதிர்பாராத விதமாக "இறங்கடா! இன்னும் இருட்டிலதான் நிக்கிறாய்! துறவடா! என்னும் வார்த்தைகள் ஆங்காரமாக ஒலித்தன. அவ்வார்த்தைக ளுக்குரியவர் அழுக்கேறிய ஆடையுடன் விசர்க் கோலங்கொண்டு நின்ற செல்லப்பா சுவாமிகள். இச் செயலானது இராமநாதனது உள்ளத்தை மேலும் ஒளிபெறச் செய்தது. யாழ்ப்பாணத்தில் அன்று தங்கிவிட்டு மறுநாள் சாதாரண மனிதராக வந்து செல்லப்பா சுவாமிகளைச் சந்தித்து உரையாடியதாகவும், அதனூடாக மேலும் இராமநாதன் பக்குவம் பெற்றதாகவும் பெரியவர்கள் சொல்லியிருக்கின்றனர். அத்துடன் இராமநாதன் கல்லூரிக்கான அத்திவாரக்கல் நாட்டுந்தினத்தன்று திடீரெனக் கோவணதாரியாகத் தோன்றிய செல்லப்பா சுவாமிகள் தமது கையிலிருந்த பனையோலை விசிறியினால் அத்திவாரக் கல்மீது வீசிக் காற்றெழச் செய்து விட்டு அவ் விசிறியை இராமநதான் அவர்களிடம் கொடுத்து "கப்பல் போலக்கட்டடா!" எனக் கூறிச் சென்றதும் , இராமநாதன் அவர் கூறியது போல் பெரிய கட்டிடங்களுடன் கூடியதாகக் கல்லூரியை அமைத்ததும், செல்லப்பர் கொடுத்த விசிறியைப் பலகாலம் பாதுகாத்து வைத்திருந்ததும். வரலாற்றுச் சம்பவங்களாகும். அவுஸ்ரேலிய மாதுவான ஹரிசன் ( லீலாவதி) அம்மையார் 1906ஆம் ஆண்டு இராமநாதன் அவர்களை மணஞ்செய்து கொண்டார். அப்போது இராமநாதனின் முதல் மனைவியார் உயிருட னிருந்தார். வழக்கறிஞர் நாயகமாகவும், சிலவேளைகளில் சட்டத்துறை நாயக முமாகவும் பணியாற்றிய இராமநாதனுக்கு அமெரிக்க நாடு விடுத்த அழைப் பினையடுத்து, இலங்கையின் ஆள்பதியாக அப்போது இருந்த ஹென்றி பிளேக் ( 1903 - 1907) அவர்கள் ஓராண்டுகால ஓய்வினை வழங்கினார். அமெரிக்காவில் சேர் . பொன். இராமநாதன் அவர்கள் கீழைத்தேய தத்துவத்தை மேல்நாட்டவர்க்கு உணர்த்தும் உன்னத உரைகளை நல்லாசிரியப் பாங்கில் ஆற்றிப் பெரும் மதிப்பினைப் பெற்றுக் கொண்டார். கிறீன் ஏக்கர் பல்கலைக்கழகப் பிரிவான மொன்சல்வாற் பாடசாலையில் இடம் பெற்ற சமய ஒப்பீட்டு மாநாட்டில் 1905 - 1906 ஆண்டுப்பகுதியில் கலந்து கொண்டு ஆத்மீக உரையாற்றினார். ஹாவாட், யேல், நியூயோக், கேணல், பல்கலைக்கழகங்களிலும் உரை நிகழ்த்தினார். அதே போன்று இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் உரையாற்றியிருக்கிறார். 1917இல் மைலாப்பூரில் நடைபெற்ற திருவள்ளுவர் விழாவுக்குத் தலைமை தாங்கியுள்ளார்.

இராமநாதன் அவர்களது ஆன்மீக உபதேசங்களால் கவரப்பட்டவர்களில் மைறன் பெல்சஸ் ( அமெரிக்கா) ஆர். எல். ஹரிசன் (அவுஸ்ரேலியா) எலிஸ்வொன் ரன்சில்மன் பிக்கற்( நியூசிலாந்து) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவார்கள். இராமநாதன் அவர்களை மணமுடித்துக் கொண்ட ஹரிசன் ( லீலாவதி அம்மையார் அவர்கள் தமது கணவரின் பல்துறைப் பணிகளிலும் பங்கெடுத்துக் கொண்டவர் . 1953இல் தாம் இறக்கும் வரை கணவரின் கல்வி - ஆன்மீ கப்பணிகளை முன்னெடுத்தவர். இராமநாதன் கல்லூரியின் கட்டிட

அமைப்பானது ஹரிசன் அம்மையார் கல்வி கற்ற அவுஸ் ரேலிய நாட்டுக் கல்லூரியின் கட்டிட அமைப்பை ஒத்ததாகும். இராம நாதன் அவர்களது வாழ்வியலில் ஹரிசன் அம்மையாரைப் போலவே மருமகனாய் வந்த சுப்பையா நடேசபிள்ளை அவர்களும் பெரும் பங்கு வகித்திருந்தார். இலக்கியவாதியாக , தமிழறிஞராக, அரசியலில் நாடாளுமன்ற உறுப்பினராக, கல்விப்பணியாளராக , முகா மையாளராக ஆசிரிய விரிவுரையாளராகப் பன்முகப் பரிமாணங்களை வெளிப்படுத் தியவர். தமது மாமனாரின் எழுத்துப் பணிக ளுக்குப் பெருந்துணையாக அமைந்தவர். அவரது இலட்சியங்களை நிறைவேற்று வதே தமது கடனெனக் கொண்டு வாழ்ந்தவர். திருமண வாழ்வில் அடைந்திட்ட சுகங்க ளிலும் பார்க்க இராமநாதனின் கல்விசார் செயற்பாடுகளால் வெற்றி பெற்றிட்ட ஆத்ம சுகங்கள் நடேசபிள்ளை அவர்களை வாழ் வித்தன . 1966இல் தாம் இறக்கும் வரை இராமநாதன் அவர்களின் ஆன்மீக வேட்கை யைப் புரிந்து கொண்ட பணிவுள்ள மனித னாவே நடேசபிள்ளை அவர்கள் செயற்பட் டார். இராமநாதன் அக்கடமியையும் உரு வாக்கினார்.

சேர். பொன் . இராமநாதன் அவர்களது ஆன்மீக உரைகள் யாவும் நூலாக வெளி வந்துள்ளன.

1. An eastern Exposition if the Gospel of Jesus According to st. Mathew ( 1898)
2. An Eastern Exposition of the Gospel & Jesus According to st . Jogn ( 1902)
3. The Culthre of the Souh Amoung western Nation ( 1907)
4. The Spirit of the East Contrasted with the spirit of the west ( 1905)
5. On Faith of Love cf God ( 1897)
6. Tamil Translation Of Bhagavat Hheethe பகவத்கீதை மொழிபெயர்ப்பு(1914)
7. Tirukkural ( 1919) திருக்குறள்பாயிரமும் இராமநாதீயமும்
8. Shri Ramanathan Dhamasasha ( Lession) செந்தமிழ் இலக்கணம் (1927)
9. ஆத்திசூடி மந்திர விளக்கம்

ஆகியவை இராமநாதன் அவர்களியற்றிய முக்கிய நூல்களாகும்.

இவற்றுள் ஆத்திசூடி விளக்கம் பகவத் கீதை, திருக்குறள், செந்தமிழ் இலக்கணம் ஆகியவை தமிழிலானவை. " Select Speeches of PonnampalamRamanathan" என்னுந் தலைப்பில் இராமநாதன் அவர்களது சொற்பொழிவுகளும் நூலாக ( 1929) வெளி வந்துள்ளது. சேர். பொன். இராமநாதன் அவர்கள் ஆன்மீக வாதியான ஓர் அரசியல் வாதியாவார். நாற்பது ஆண்டுகள் வரையி லான அவரது வாழ்க்கைப் பகுதியை ஆன்மீகமே வழி காட்டிச் சென்றுள்ளது. தனது பல்விதப் பணிகளையும் ஒரு வித ஆன்ம வேட்கையுடன் ஆற்றிய பெருந்தகை அவர். அவரது தனிமனித இலட்சியங்கள் மனிதகுல ஈடேற்றத்துக்கான தரிசனங்கள் அவரது வாழ்க்கை மனித குலத்துக்கு வழிகாட்டு தல்களை வழங்கியுள்ளது. என்பதே சரியானதாகும்.



# இளைய தலைமுறையும் சேர். பொன் இராமநாதனும்


திருமதி. செல்வநாயகி ஸ்ரீதாஸ்

விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், கனடா வளாகம்

தலைவர், இராமநாதன் கல்லூரி பழைய மாணவர் சங்கம், கனடாக் கிளை,

முன்னாள் சிரேஷ்ட வரிமதிப்பாளர், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை


இலங்கையில் தமிழ் மக்களும் தமிழ் மொழியும் இந்து சமயமும் அவலத்திற் குள்ளாகியிருக்கும் இக்கால கட்டத்திலே மொழியும் மதமும் வரலாற்று ஓட்டத்திலே அழிந்து விடாது கட்டிக் காத்த பெரியார் களை நாம் நினைவுகூர வேண்டியது அவசியம் என்பது ஒருபுறம் இருக்க, நமது வருங்காலச் சந்ததியினருக்கு, எமது இளைய தலைமுறை யினருக்கு எமது இனம், மொழி, மதம், பண் பாடு ஆகியவற்றின் தொன்மையையும் செறிவையும் இவற்றுடன் பின்னிப் பிணைந் திருக்கும் எமது பாரம்பரியத்தையும் விழுமிய ங்களையும் நுகர வகை செய்வதோடு அவை அழிந்து போகாது காக்க வேண்டிய அவர் களது பாரிய கடமையைப், பொறுப்பை விளக்கிக் கூற வேண்டிய கட்டாய நிலையில் நாம் இருக்கிறோம். எமது பண்பாட்டைக் கட்டிக் காக்க எமது முன்னோர்கள் ஆற்றிய அரும் பணிகளையும் அவர்களது வரலாற் றையும் எடுத்துக் கூறுவதன் மூலம் இனத் திற்கும் மொழிக்கும் மதத்திற்கும் அவர்கள் ஆற்றவேண்டிய கடமையை நாம் அவர்க ளுக்கு வலியுறுத்தியே ஆகவேண்டும்.

இலங்கையில் பௌத்தம் தோன்றி அரசமதமாக அங்கீகாரம் பெற்று வளர்வதற்கு முன்னதாகவே தமிழும் சைவமும் வளர்ச் சியுற்ற நிலையில் அங்கு விளங்கியதற்குத் திடமான வரலாற்றுச் சான்றுகள் ஆதாரங்கள் உள்ளன. கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் பௌத்தம் அரச மதமாக மாறிய பின்னரும் சைவசமயம் பௌத்தத்துடன் சம அந்தஸ்தை அனுபவித்து வந்தது. அந்தக் காலத்தில் சமயக் காய்ச்சல் இருந்திருக்கவில்லை. இதற்கு அக்காலத்து அரசர்கள், அரச செல்வாக்குப் பெற்ற பெரியார்கள், மதத் தலைவர்கள், மதத் தாபனங்களின் புரிந்துணர்வு, பரந்த மனப் பான்மை, சகிப்புத் தன்மை ஆகியவையே காரணங்கள் எனலாம். காலப்போக்கில் தமி ழனின் மேம்பாடு சிங்களவரின் மனப்பான் மைக்குச் சோதனையாக அமைந்தது. பொறாமை தலை தூக்கியது. "பௌத்தம்" ஒன்றே உயர் மதமாகக் கருதப்பட வேண்டும் என்ற நிலை ஒன்று உருவாகியது. இது சிறிது சிறிதாக வளர்ந்து கைமுனு என்னும் இள வரசன் காலத்தில் தமிழரைச் சிங்களவர் பரம வைரிகளாகக் காணும் ஒருகால கட்டத்தை வரலாற்றிலே நாம் சந்திக்கிறோம். சிறு வயதில், எனது பாடப்புத்தகத்தில் படித்த கதை ஒன்று நினைவுக்கு வருகிறது.

பட்டத்து இளவரசன் கைமுனு சிறுவனாக இருந்த காலத்தில் ஒருநாள் கை கால்களை முடக்கிக் கொண்டு படுத்திருந்தானாம்.

அவனது தாயார், ஏன் இவ்வாறு உறங்கு கிறாய், கை கால்களை நீட்டி உறங்கலாமே என்று கேட்டாராம். அதற்குச் சிறுவன் கைமுனு, வடக்கே தமிழரும் ஏனைய பக்கங் களில் கடலும் நெருக்கும் போது நான் எப்படிக் கை கால்களை நீட்டி நிம்மதியாகப் உறங்குவது என்று பதில் உரைத்தானாம். இந்தச் சம்பவத்தின் உள் அர்த்தத்தை வலிந்து ஆராயவேண்டியதேயில்லை. வடக்கே பலமுள்ள தமிழன் ஆள்கிறான். அவனை அழிக்கும் வரை நான் நிம்மதியாகத் தூங்க முடியாது என்பதாகும். பிற்காலத்தில் தமிழ ருக்கும் சிங்களவருக்குமிடையே ஏற்பட்ட இனக் கலவரங்கள் தற்செயலாக நடந்த விபத்துக்களன்று. காலங்காலமாக வளர்க் கப்பட்டு வந்த இனத் துவேசத்தின் வெளிப் பாடுகளே எனலாம். இக் கதை தமிழ் மாண வர்களின் பாடப் புத்தகங்களில் இடம் பெற்றிருக்குமேயானால் நிச்சயமாகச் சிங்களப் பாடப் புத்தகங்களிலும் இடம் பெறாதிருக்க முடியாது. அறியாத பாலப் பருவத்திலேயே சிறார் மனத்தில் இனத் துவேசம் விதைக்கப் படுகிறது. பிற்காலத்தில், இவை போன்ற கதைகள் பாடப்புத்தகங்களிலிருந்து அப்புறப் படுத்தப்பட்டன என்றாலும் காலம் கடந்த முயற்சி அது. வித்து விருட்சமான பின் மரத்தைச் சாய்ப்பது அப்படி ஒன்றும் இலகு வான காரியமல்ல. பண்டு தொட்டு இன்று வரை அரசியல் ஆதாயத்திற்காக அப்பாவிப் பொதுமக்கள் பலியாக்கப்பட்டது தான் எமது வரலாறு.

மகாசேனன் என்னும் பௌத்த மன்னன் திருக்கோணேஸ்வரம் உள்ளிட்ட பல இந்து ஆலயங்களை அழித்தான் என்று கூறும் அதே வரலாறு மானவர்மன், 1 ஆம் விஜயபாகு, 1 ஆம் பராக்கிரமபாகு, 6 ஆம் பராக்கிரமபாகு, 1 ஆம் ராஜசிங்கன் உள்ளிட்ட பல பௌத்த மன்னர்கள் இந்து மதத்தை ஆதரித்த வர லாற்றையும் கூறுகிறது.

மேனாட்டார் வருகையால் அரசியல் கைமாறி மொழி, மதம், பண்பாடு எல்லாமே சிதைவுற்று புறக்கணிக்கப்பட்டன. கிறித்தவப் பாதிரிமார் வருகையால் சைவம் நலிவுற்றது. ஆங்கிலக் கல்வி தமிழைப் புறக்கணிக்க வைத் தது. ஆதாயம் கருதி மக்கள் மதம் மாறினர். சமூகப் புரட்சிக்கு இவை வழி கோலின. சைவமும் தமிழும் நலிந்த காலத்திலே காரைக் கால் அம்மையாரும் அப்பரும் சம்பந்தரும் சுந்தரரும் மாணிக்கவாசகரும் தமிழ் நாட் டிலே தோன்றித் தமிழையும் சைவத்தையும் அழிந்து விடாது காத்தது போல ஆறுமுக நாவலர் போன்ற சைவப் பெரியார்கள் தோன்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினர். இவ்வாறு உந்தப்பட்டு சேவை ஆற்றிய பெரியார்கள் வரிசையில் சேர் பொன் இராமநாதன் அவர்கள் முன்னிலையில் வைத்து எண்ணத் தக்கவர்.

16 ஆம் நூற்றாண்டு முதல் 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை இலங்கை மேலை நாட்டார் ஆதிக்கத்துக்கு உட்பட்டி ருந்த காலம். தீமையிலும் ஒரு நன்மை விளையாமலில்லை. இன, மத, மொழி வேறு பாடுகளைக் களைந்து இலங்கையர் என்னும் ஒரு குடைக் கீழ் தமிழரும் சிங்களவரும் ஒருங்கிணைந்தனர். இந்த இடைப்பட்ட காலத்தில் தான் தமிழன் தனது திறமையைக் காட்டும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. காலத்தின் கட்டாயம் பெரும் தலைவர்களை உரு வாக்கியது.

திரு. பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் சைவ நெறியிலும் அனுட்டா னத்திலும் பெரும் பற்றும் நம்பிக்கையும்

கொண்ட குடும்பத்தில் பிறந்தார். இவரது தந்தை பொன்னம்பல முதலியார், மாமனார் சேர் முத்துக்குமாரசுவாமி, சகோதரர் அருணா சலம் அனைவருமே 19 ஆம் நூற்றாண்டின் பிற் பகுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இலங்கை அரசியல், சமயம், மொழி, பண்பாடு போன்ற சகல துறைகளி லும் வரலாற்றுப் புகழ் ஈட்டியவர்கள். இராமநாதன் அவர்கள் இலங்கையில் குயின்ஸ் அகடமியிலும் (தற்போதய றோயல் கல்லூரி) பின்னர் இந்தியாவில் பிரசிடென்சி கல்லூரி யிலும் (Presidency College) கல்வி பயின்றார். இந்து மதம் மட்டுமன்றி பௌத்தம், கிறித் தவம், இஸ்லாம் முதலிய பல மதக்கோட் பாடுகளையும் கற்றறிந்தார். மதங்களுக் கிடையே இருந்த ஒருமைப்பாடுகளை ஆராய்ந்து கட்டுரைகளும் வெளியிட்டார். கிறித்து மதம் சம்பந்தமாக இவர் வெளியிட்ட கருத்துக்கள் மேல் நாட்டார் கவனத்தைக் கவர்ந்ததுடன் கிறித்தவ அறிஞர்களின் பாராட்டையும் பெற்றன. இவர் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றதுடன் லத்தீன், கிரேக்கம், சிங்களம் முதலிய மொழிகளிலும் பரிச்சயம் பெற்றிருந்தார். இவரது மொழியறிவும் சமயஅறிவும் பிற்காலத்தில் அவரது சாதனைகளுக்குப் பெரும் அத்தி வாரமாக அமைந்தன.

அவரது ஆழ்ந்த கல்வியறிவு சமயப் பற்று எல்லாவற்றிற்கும் மேலாக அவரிடம் காணப்பட்ட பேச்சுவன்மை பெரியார் ஆறுமுகநாவலருக்கு இவரிடம் பெரியதொரு ஈடுபாட்டை ஏற்படுத்தியது. தமிழையும் சைவத்தையும் காக்கவல்ல "தமிழரின் பிரதிநிதி" யாக இவரை இனங்கண்டு தமக்கு வாரிசாகக் கொண்டதுடன் அமையாது அவரின் அரசியல் பிரவேசத்திற்கும் ஆறுமுகநாவலரே வழி வகுத்தார். 1879 ஆம் ஆண்டு இலங்கைச் சட்ட சபையில் தமிழரின் பிரதிநிதியாக இருந்த, சேர். முத்துக்குமார சுவாமி அவர்கள் இறந்ததும் ஏற்பட்ட வெற்றிடம் ஆறுமுகநாவலரின் விதந்துரை யின் பேரில் இராமநாதன் அவர்களால் நிரப்பப்பட்டது. 1912 ஆம் ஆண்டு சட்ட சபையில் கல்வி கற்ற இலங்கையருக்கான ஒதுக்கீட்டில் பெரும்பான்மையினத்தவரி டையே பெருமதிப்புப் பெற்றிருந்த மாக்கஸ் பெனாண்டோ என்னும் சிங்களவரை எதிர்த் துப் போட்டியிட்டு வென்றார். வெள்ளை யரிடையே இவர் மதிப்பு நாளுக்கு நாள் உயர்ந்தது.

அறிவால் ஆற்றலால் அரசியல் சாணக்கியத்தால் சிங்கள இனவாதிகள் மத்தி யிலும் பெருமதிப்புப் பெற்றார். இலங்கை அரசியலில் தனக்கென ஓரிடத்தை நிலை யாக்கிக் கொண்டார். தமிழையும் சைவத் தையும் வளர்க்கப் பாடுபட்ட அதே வேளை யில் இலங்கையர் என்னும் தேசீய உணர்வால் கட்டுண்டு அனைத்து இலங்கையரினது மேம்பாட்டிற்காகவும் உழைத்தார்.

முதலாம் உலகப்போர் நடந்த காலத் திலே சிங்களவருக்கும் முஸ்லீம்களுக்கு மிடையே இனக் கலவரம் மூண்டது. சிங்களத் தலைவர்கள் சிறைப்படுத்தப் பட்டார்கள். சிங்களத் தலைவர்களின் விடுதலைக்காகப் போர்க்காலச் சூழலில் பயங்கரமான கடற் பயணத்தை மேற்கொண்டு லண்டன் மாநகர் சென்று ஆங்கிலேய ஏகாதிபத்தியத்துடன் வாதிட்டு வெற்றியோடு இலங்கை திரும் பினார். இவரது இப்பெரும் வெற்றி சிங்களத் தலைவர்களால் நன்றியுடன் பாராட்டப் பட்டது. சேர் பொன் இராமநாதன் அவர்க ளைச் சிங்களத் தலைவர்கள் குதிரை வண்டி

யில் ஏற்றி குதிரைகளுக்குப் பதிலாகத் தாமே இழுத்து ஊர்வலமாக அழைத்து வந்து கௌரவித்தார்கள். இச்சம்பவம் நிழல் படமாக அவர் வீட்டை அலங்கரித்ததை எம்மில் பலர் கண்ணாரக் கண்டிருக்கிறோம்.

ஆங்கிலேய ஆட்சியாளர்கள் மத்தியில் அவருக்கிருந்த பெரும் செல்வாக்கு நாட்டிற்குப் பல அரிய செயல்களைப் புரிவதற்கு அருந்துணையாயிற்று. வடக்கே யாழ்ப்பாணத்திற்குப் புகைவண்டி வசதி பகற் கனவாக இருந்த காலம் அது. மிக்க சிரமத்தின் பேரில் வடக்கிற்குப் புகையிரதவண்டி வசதி செய்தார். ஆங்கிலேயர் ஆட்சியில் பருத்தித்துறை, காங்கேயன்துறை, யாழ்ப்பாணத்துறை, ஊர்காவற்றுறை ஆகிய நான்கு துறைமுகங்களும் மூடப்பட்டிருந்தன. இதனால் தமிழ் வர்த்தகர்கள் பெரும் பாதிப்படைந்தனர். மீண்டும் இத் துறைமுகங்களைத் திறக்க வழிசெய்தார் சேர். பொன். ராமநாதன் அவர்கள்.

இலங்கையைச் சகல துறைகளிலும் தன்நிறைவு பெற்ற நாடாக மாற்றவேண்டிய பாரிய பொறுப்பு அக்காலத் தலைவர்களுக்குச் சவாலாக இருந்தது. "எமது நாட்டிற்குரிய உணவை நாமே உற்பத்தி செய்ய வேண்டும், உற்பத்தியைப் பெருக்கி இறக்குமதியைக் குறைக்க வேண்டும். தூர்ந்து போன குளங் களை மறுபடியும் பாவனைக்குக் கொண்டு வரவேண்டும். காடழித்து நாடாக்க வேண் டும்" என்ற கோசத்துடன் வெள்ளையரின் கொள்கைகளுக்கெதிராகக் குரல் கொடுத்தார். இவர் அக்கால அரசியலில் சாதித்தவை எண்ணிலடங்கா. இன்று எமது குறைகளை முறையே பிரஸ்தாபித்து நிவர்த்தி காண இவரை ஒத்த தலைவர் ஒருவர் நம்மிடையே இல்லையே என அங்கலாய்க்கிறோம்.

கல்வியுடன் சமயமும் இணைத்தே கற்பிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை நன்குணர்ந்து பிற்காலத்தில் தான் தாபித்த இரு கல்லூரிகளிலுமே பாடத்திட்டத்தில் சமயத்தையும் இணைத்துக் கொண்டார். தேசிய மட்டத்திலும் இக் கருத்தை வலியுறுத்தி அரசாங்கமே கல்விக் கொள்கையை வகுத்து அனைவருக்கும் கல்வி வசதி அளிக்க வேண்டும் என்று "இலவசக் கல்வி" கருத்தையும் முன் வைத்தவர் சேர் பொன் ராமநாதன் அவர்களே.

இந்து சமயம் தோன்றி பெருவிருட்சமாக வளர்ந்திருக்கும் இந்தியாவிலேயே இல்லாத நிலையில் இலங்கையிலே மதம் கட்டாயபாடமாகப் பாடசாலைகளிலே கற்பிக்கப்படுவதற்கான ஆரம்ப முயற்சியில் ஈடுபட்டிருந்தார் சேர் பொன் இராமநாதன் அவர்கள். அதன் பலனைத் தான் பிற்காலத்தில் நாம் அனுபவித்தோம்.

சைவச் சிறுவர்கள் சைவச் சூழலிலே தான் கல்வி கற்க வேண்டும் என்ற கருத்தில் அசையா நம்பிக்கை கொண்டிருந்தார். இவரது இந்த நம்பிக்கையின் பலனே "இராமநாதன் கல்லூரி" யாக 1913 ஆம் ஆண்டு உருப்பெற்றது. பெண்கல்வியின் அவசியத்தை நன்குணர்ந்த இவரது இம் முயற்சி ஆயிரக் கணக்கான இல்லத்தரசிகளை இன்று உருவாக்குவதில் வெற்றி கண்டிருக்கிறது. "ஓர் ஆணைக் கற்பிப்பதிலே ஒரு தனிநபரே கற்பிக்கப் படுகிறான். ஒரு பெண்ணைக் கற்பிக்கும் போது ஒரு குடும்பம் முழுவதுமே அதன் மூலம் முழுச் சமுதாயமுமே கற்பிக்கப் படுகிறது" என்னும் கருத்தை முற்றாக நம்பிச் செயற்பட்டார்.

1921 ஆம் ஆண்டு ஆண்பிள்ளைகள் கற்பதற்காக "பரமேஸ்வராக் கல்லூரி"யை

நிறுவினார். "பரமேஸ்வராக் கல்லூரியின் இலட்சியங்கள்" என்னும் நூலிலே இவரது கல்வி பற்றிய கொள்கை நன்கு புலனாகிறது. "இந்திய ஞானிகளின் சிந்தனைப் பொக்கிஷங் களுடன் தமிழ், சமஸ்கிருத இலக்கியச் செல்வங்களும் இணைந்து பிரித்தானியரின் மிகச் சிறந்த கல்வி அம்சங்களுடனும் தமிழ்ச் சிறுவர் பயனடையும் வாய்ப்பினை ஏற்படு த்தவே பரமேஸ்வரக் கல்லூரி நிறுவப்ப ட்டது" என விதந்து உரைக்கப்பட்டிருக்கிறது. மாணவர்கள் கீழைத் தேயக் கல்வி மட்டுமன்றி ஆங்கிலம், விஞ்ஞானம் முதலிய மேனாட் டார் கல்வியையும் பயில வேண்டும் என்பது இவரது நோக்கமாகும்.. பரமேஸ்வராக் கல் லூரியின் விஞ்ஞான ஆய்வுக்கூடம் நிறுவுவ தற்காகக் கொழும்பிலிருந்த "சுகஸ்தான்" என்னும் தனது வீட்டை வங்கியிலே ஈடு வைத்தார் என்றும் பின்னர் அது மீட்கப்ப டாமலே போய் விட்டது என்றும் அறியப் படுகிறது. அவரது கல்வித் தொண்டின் மகத்துவத்திற்கு இதை விட உயர்ந்த சான்று வேண்டுமா?

இப் பரமேஸ்வரக் கல்லூரியை மையமாகக் கொண்டே 1979 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப் பட்டது. சேர். பொன். இராமநாதனின் கனவு ஓரளவுக்கு நனவாகியது எனலாம். இந்த ஏற்றத்தில் பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் துரைராஜா போன்ற பெரியார் களின் பங்கையும் மறப்பதற்கில்லை. வரலாறு தந்த இந்தப் பெரியாரால் பயனடைந்த நாம் குறைந்த பட்சம் இந்தப் பல்கலைக் கழகத் திற்கு சேர். பொன். இராமநாதன் பல்கலைக் கழகம் என்று பெயர் சூட்டி அவரை கௌரவித்திருக்கலாம். செய்யவில்லையே! இராமநாதன் நுண்கலைப் பிரிவைப் பற்றி யாராவது கூற எத்தனித்தால் அவர்களுக்கு ஒரு தகவல்: இக் கலைக் கல்லூரி இராமநாதன் வளவிலேயே அவரது மருகர் திரு. சு. நடேசபிள்ளை அவர்களால் அவர் பெயரில் ஆரம்பிக்கப்பட்டு இந்தியாவிலி ருந்து தருவிக்கப்பட்ட மகாராஜபுரம் விசுவ நாத ஐயர், சித்தூர் சுப்பரமணயம் பிள்ளை, கல்யாணகிருக்ஷ்ண பாகவதர் போன்ற இசை மேதைகளின் பங்களிப்பின் பேரில் நடாத்தப் பட்ட பெருமைக்குரியது. இக் கல்லூரியைப் பல்கலைக் கழகத்துடன் இணைத்துக் கொண்டார்களே ஒழிய புதிதாக ஆரம்பித்த கலைத் கூடத்திற்கு சேர். பொன். இராம நாதனது பெயர் சூட்டப்படவில்லை.

சேர். பொன். இராமநாதன், சேர். பொன். அருணாசலம் அவர்களின் சேவையை நினைவு கூரும் முகமாக பேராதனைப் பல்கலைக் கழகத்திலுள்ள 9 விடுதிகளில் இரண்டிற்கு இராமநாதன் விடுதி, அருணா சலம் விடுதி என்று பெயர் சூட்டப்பட்டி ருப்பது என்னவோ உண்மைதான். யாழ்ப் பாணப் பல்கலைக் கழகம் எதிர்காலத்தில் "இராமநாதன் பல்கலைக் கழகம்" என்ற பெயரில் வழங்குமா? இந்தக் கேள்விக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் தான் பதில் தரவேண்டும்.

இன்று இலங்கையில் கற்கோயில் ஒன்று உண்டென்றால் அது கொழும்பிலுள்ள பொன்னம்பலவாணேசர் கோவில் தான். பண் டைக் காலத்தில் முடியுடை வேந்தருக்கு மட்டுமே சாத்தியமான இது 20 ஆம் நூற் றாண்டில் வாழ்ந்த சாதாரண ஒரு தனிநப ருக்குச் சாத்தியமாகிய மகத்துவத்தை எம்மால் வியக்காமலிருக்க முடியுமா?

இவரது மண வாழ்க்கை ஒரு சுவையான காவியம். இவரது ஆன்மீக ஆராய்ச்சியில் இவருக்குத் துணை புரியும் மாணவியாக வந்து பின்னர் அவரது செயலாளராகக் கடமை

யாற்றி அதன் பின் அவர் துணைவியருமாகிய இவரது இயற்பெயர் செல்வி. எல். ஆர். ஹட்சன் என்பதாகும். நான் இராமநாதன் கல்லூரி விடுதியில் ஏழு ஆண்டுகள் தங்கிப் படித்திருக்கிறேன். கல்லூரியில் சேர்ந்த காலத்தில் எனக்கு ஏற்பட்ட சந்தேகங்களுள் முக்கியமானது "யார் இந்த லீலாவதி" என்பதாகும். விடுதி இல்லங்கள் மொத்தம் ஆறு. பெயர்கள் முறையே அருந்ததி, சகுந்தலா, ஜானகி, கண்ணகி, லீலாவதி, தமயந்தி. நான் அறிந்த வகையில் லீலாவதி என்ற பெயரில் எந்தவொரு புராண இதிகாச நாயகியும் இல்லை. பின்னர் தான் தெரியவந்தது அது லேடி இராமநாதனுக்குத் திருமணத்தில் சூட்டப்பட்ட பெயர் என்பது. சேர். பொன். இராமநாதனுக்குப் பின் அவரது கொள்கைகளை அணுவும் பிசகாது செயல் படுத்திய இந்த அம்மையார் பற்றிக் குறிப்பிடுகையில் அவர் மருகர் செனேற்றர். சு. நடேசபிள்ளை அவர்கள் இவரை ஆண்டாளுக்கு ஒப்பிட்டுள்ளார்,

"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன்நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே"

என்னும் அப்பர் பாடலையும் நினைவு கூர்ந்தார்.

பிறந்தோம், வாழ்ந்தோம் மடிந்தோம் என்றிருக்கக் கூடாது. இளைய தலைமுறைக்குப் பாரிய கடமை காத்திருக்கிறது. முதலில் நாம் தமிழர். எமது இனம், மொழி, கலாச்சாரம் பாரம்பரியம் மிகப் பழமை வாய்ந்தது. இதனை நாம் தொலைத்து விட்டு விலாசமற்ற தபாலாகி விடக்கூடாது. பெரியார் விட்டுச் சென்ற சுவடுகளைத் தொடர்வோம்.

"பெற்ற தாயும் பிறந்த பொன் நாடும்
நற்றவ வானில் நனி சிறந்ததுவே"

இராமநாதன் கல்லூரி மாணவிகள் உலகின் எந்தப் பகுதியில் இருந்தாலும் "இராமநாதம்" என்னும் பிணைப்பால் இணைக்கப்பட்டவர்களாக கற்ற கல்லூரியின் பெருமையைப் பாரம்பரியத்தைப் பாதுகாத்தே நிற்கிறார்கள். சேர். பொன். இராமநாதனின் கனவை நனவாக்கிக் கொண்டிருக்கும் நங்கையராக விளங்குவது அவர்களது தனித்தன்மை. வேறு எந்தக் கல்லூரியும் சொல்லிக் கொள்ள முடியாத பல தனித் தன்மைகளைக் கொண்டவர்கள் இவர்கள்.

"நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவதில்லையாம்"

என்னும் பாரதியாரின் கனவைக் கருத்திற் கொண்டு தன் கல்லூரியைக் கட்டமைத்துக் கொண்டதனால் தானோ என்னவோ இராமநாதன் கல்லூரி மாணவியர் இக் கவிதைக்கு இலக்கணமாக விளங்குகின்றனர். இராமநாதன் கல்லூரி என்னும் கலைச் சாலையிலே கல்வியால், கலையால், பண்பாட்டால் புடம் போடப்பட்ட நாங்கள் என்றென்றும் அந்தக் கல்லூரியை நினைவில் நிறுத்தி மற்றையோருக்கு முன்மாதிரியாக வாழ்ந்து காட்டுவோம்.

# இராமநாதன் அவர்களின் கல்விப் பணி

க. சி. குலரத்தினம்

சேர்.பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் செய்த சமயத் தொண்டு, அரசியல் தொண்டு, தேசியத் தொண்டு போலக் கல்வித் தொண்டும் பெரியது. அவரின் கல்வி கொள் கையை ஆரம்பத்தில் எல்லோரும் விளங்கிக் கொள்ள வில்லை. இன்று எல்லோரும் நன்றாய் விளங்கிக் கொண்டுள்ளார்கள்.

நாட்டில் கட்டாயக் கல்வி, இலவசக் கல்வி, தாய்மொழிக் கல்வி, சமயக் கல்வி, தார்மீகக் கல்வி என்றெல்லாம் அமைய அறுபது ஆண்டுகளுக்கு முன் வித்திட்ட பெரியவர் இராமநாதன் அவர்கள். இரண்டு தலைமுறை காலத்துக்கு மேலாகி மூன்றாம் தலைமுறையினரும் அவர் வகுத்த வழியில் கல்வி கற்கின்றார்கள்.

இராமநாதன் தாமே வேதம், ஆகமம், உபநிடதம், கீதை, இதிகாசங்கள், புராணங்கள், திருமுறைகள், சித்தாந்த சாஸ்திரங்கள் என்னும் பாரம்பரிய நூல்களில் நன்றாக ஊறிப் பழுத்தவர். அவர் எங்கள் நாட்டுக்கும் இனத்திற்கும் மதத்திற்கும் அமையக் கூடிய சனாதன தர்மத்தையே பெரிதும் விரும்பினார்.

கல்விச் சமயம் சார்ந்ததாய் அமைதல் வேண்டும். அது உழைப்பிற்கும் உள வளர்ச்சிக்கும் வழி காட்ட வேண்டும். திரிகரண சுத்திக்கும் காரிய சித்திக்கும் அடிகோல வேண்டும் என்று கருதினார். பாடசாலைக் கல்வி காலையில் வழிபாட்டுடன் ஆரம்பித்து மாலை வழிபாட்டுடன் நாட் பாடம் நிறைவேற வேண்டும் என்றார். வழிபாடில்லாத கல்வி கல்வியாகாது. செய்யும் தொழிலே தெய்வம் எனக் கருதுவதற்கு வழிபாட்டோடு கூடிய கல்வியே அத்திவார மாய் அமைவது பள்ளித் தலம் அனைத்தும் கோயில்கள் செய்வோம் என்றும் மெய்ஞ் ஞானம் இல்லாத விஞ்ஞானம் குருடு என்றும் கல்வியின் அனர்ந்த வர்க்கம் சமயம் என்றும் பிற்காலத்தவர் பெருமையோடு இன்று பேசுகின்றார்கள்.

இராமநாதன் அவர்களின் கல்விக் கொள்கையைப் பலர் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் விளங்கிக் கொள்ளாதவராயும் இருந் தார்கள். எல்லோரும் கல்வி கற்றல் வேண்டும். கல்வி கட்டாயமானதாய் அமைதல் வேண்டும் என்பதை வற்புறுத்துவதாகவே அவர் வாக்குரி மைக்கு முன் கல்வி கிடைக்க வேண்டும் என்றார். (Educationmst preceed franchise). குதிரை வண்டியில் குதிரையை முன் புறத்தி லேயே பூட்டுவது போல கல்வி முதலில் அமைய வேண்டும் என்றார். கல்வி இல்லா தவர் காகம், கோழி முதலிய சின்னங்களுக்குக் கன்னப் புள்ளடி போடும் வகையிலமைந்த வாக்களிப்பு முறை ஐம்பதாண்டுகளாகியும் இன்னும் மாறவில்லை. நாடு முழுக்க ஒரு லட்சம் ஆசிரியர்கள் கல்வி கற்பித்தும் எம்ம வர் எழுத்தைப் பார்த்து வாக்களிக்கப் பழகவில்லை. இது பழைய பல்லவியின் பிழை.

இராமநாதன் அவர்கள் இருபெருங் கலைக் கல்லூரிகளை மிக விசாலமான நிலப் பரப்பில் அமைதியான குளிர்மையான

சூழலிலே யாழ்ப்பாணத்திலே அமைப்பதற்கு திசை திருப்பி விட்டவர் அரியாலை சட்டத் தரணி காசிப்பிள்ளை அவர்கள். கொழும்பில் சுகஸ்தானத்தில் வாழ்ந்த வரை "ஐயா யாழ்ப்பாணத்தை முன்னேற்றுங்கள்" என்று இங்கே திசை திருப்பி விட்டார். திசை திரும் பிய ஆறு எமக்கு வளஞ் செய்தது.

நாட்டுக்குக் கல்விப் பணி புரியவந்த இராமநாதன் அவர்கள் தம் பேர்த்தியாரையும், தாயாரையும் நினைத்தார். தாய்மை உள்ள த்தை அறிந்தார். தசரதனும் தாயொக்கும் அன்பில் தரணியை ஆண்டதை அறிந்தார். தாயொருத்தி பதினாறு மதகுருமாருக்கு சமம் என்னும் அயர்லாந்துப் பழமொழியை உணர்ந் தார். புராணோதிகாசங்களில் வரும் பாரத மணிகளை நினைத்தார். செம்பியன் மாதே வியார் கோப்பெரும் பெண்டு, குந்தவை, வானவன் மாதேவி முதலாய வரலாற்றுப் பெண்களை நினைத்தார். மங்கயர்க்கரசியார் புனிதவதியார், திலகவதியார் முதலான திருமு றைப் பெண்களை நினைத்தார். திருவள்ளுவர் வகுத்த இல்லாளை பதிவிரதைகளை, சகதர்மி ணிகளை நினைத்தார். மங்கயர் மாண்பினை உணர்ந்தார். நம் நாட்டில் மங்கயரை உரு வாக்க விரும்பினார். தாய் படித்தவளாய் இருந்தால் அவள் பிள்ளைகளே அன்றிச் சுற்றமும் சூழலும் சமூகமும் திருந்தும் எனத் துணிந்தார்.

பெண்களுக்கான கல்லூரியை மருத னார்மடத்தில் விசாலமான வளவில் உறுதி யான கட்டடம் அமைத்து நாளது 20.01. 1913இல் நல்ல வேளையில் நாட்பாடத்தை ஆரம்பித்தார். மகளிர் குருகுல வாசம் செய்து உடனுறைந்து பணிவன்புடன் பாடம் படிக்க வழி வகுத்தார். நாளாந்த பாடங்களோடு ஞானசாத்திரம், தர்மசாத்திரம் என்பன கற்பதற் காக இதிகாசங்கள், புராணங்கள், திருமுறை கள், சித்தாந்த சாத்திரங்கள் படிக்கவும் வசதி செய்தார். தாய் மொழியிற் பாண்டித்தியம் பெறுவதற்குப் பெண்களை மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டித பால பண்டிதர் பரீட்சைகள் எடுக்கப் பழக்கினார். ஆங்கில மொழியின் இன்றியமையாமையை கருதிப் பெயர் பெற்ற ஆங்கிலப் பட்டதாரிப் பெண்களை வரவழை த்து ஆசிரியைர்களாய் இருத்தினார். வட மொழி அறிவு தேவையெனக் கண்டு மகோ பாத்தியாயர்களை நியமித்தார். காலைப் பிரார்த்தனை முடியும் வேளைகளில் தாமே உபன்னியாசங்கள் செய்து வந்தார். இங்ஙனமே ஆண்களை உருவாக்குவதற்குத் திருநெல் வேலியில் பரமேஸ்வராக் கல்லூரியை 1921ஆம் ஆண்டில் ஆரம்பித்தார். ஈஸ்வரன், பரமேஸ்வரன் என்றாற் போல பரமேஸ்வராக் கல்லூரியைப் பெருங் கலைக் கல்லூரி என்றும் பல்கலைக்கழகம் எனவும் கருத அவர் அமைத்தார். அவர் நோக்கம் நாள் பல கழிந்து நிறைவேறியுள்ளது.

இராமநாதன் அவர்களின் கல்விப் பணி சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலைகளை உரு வாக்கத் தூண்டியது சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் தந்தை என மதிக்கப் பெற்ற இராமநாதனின் சேவையால் நாட்டில் இந்து சமயம் மதம் என வழங்கும் சைவமும் எங்கள் மொழி என நாம் போற்றும் தமிழும் தரம் உயர்ந்தன.

இராமநாதன் அவர்களை ஆறாண்டுக் காலமும் அவர் எழுப்பிய பரமேஸ்வராக் கல்லூரியைப் பன்னிரண்டு ஆண்டுகளும் கண்ட பழைய அனுபவத்தின் ஒரு துளியே இது. இராமந ாதன் ஒரு மனிதன். "The elements were so composed in him, that nature would stant up and say he is a man".

# Ramanathan College Chunnakam: Foundation, fond memories of 100 Years and the future

**Mrs. Savithiridevi Navaratnam UK.**
Chapter

Celebrations are joyous, especially such as this one - a celebration of 100 years of an educational Institution, which played a pivotal role in our lives and on the values of our Tamil community. All of us do have our nostalgic moments, fresh memories of that air and fond memories of deep - rooted associations. Mine is a Special one: such that my grandfather Played a key role in the formation of a school for girls and I became a student and a teacher of the same college almost half a century later. Now, further half a century later, I am writing this article with the hope of getting us together in action in saving that great asset. Again, it is very joyous in sharing that celebration - but a painful one this time as the infrastructure we relied so much for generations, is on the verge of collapsing.

In this Short article, I would like to share the history of our alma mater and its present form and its future.

without any formidable question, part of the credit for the formation of our alma mater goes to Mrs Rasammah Velupillai who thought about the necessity for a school for girls in the Northern part of Sri Lanka--- Maruthanar Madam. In one way it is not very surprising to see her initiative - she a sister- in law of Navaliyoor Soma Suntharapulavar - who is known for his unsatiatedthrive for emanating knowledge to people. In 1909, Mrs Rasammah Velupillai prepared a petition of appealli indicating the need for a school for local girls along with then a priest of Uduvil Kanthaswamy Temple, SriSangara Suppaiah. Sir Ponnampalam Ramanathan, then a Solicitor General of by then known as the Ceylon, who realised the significance of the request, swiftly acted and bought 50 acres of land in Maruthanar Madam for the great cause of establishing our Alma mater.

with the visionary thoughts of Sir P Ramanathan, in 1910, the foundation stone for our great school was laid. by Mr S. Thatchanamoorthy, who was then the principal of Uduvil christian Sabapathipillai School, also Played a Pivotal role in the formation of the school. Shortly after forming Ramanathan College for girls, in 1921, Sir P. Ramanathan also formed a

college for boys to operate parallel- Parameshwara College, which later become the University of Jaffna in 1974.

All throughout our life we encounter various connections and associations. As I mentioned before, the connection between me and my school. was laid well before I was born: through my grandfather the I ate periyathambi Muthuthambi construction of the Sir P Ramanathan' visionary School. Later, my paternal aunty completed her teacher' s training at the very same school. My mother, her sisters and my sisters further enriched and strengthened this connection all were students of the Ramanathan College. And when I became a student, I readily became integrated with her.

Needless to say, buildings are only a part of any infrastructure such as this and staff members and students soon added to form up the school. In January 1913, our alma mater started functioning with the capability of accommodating 200 pupils to be boarded in school. This is, by the standards at that time, was a considerable achievement.

The motto of the school

கருத்தரிய சிற் சபையில் ஆனந்த நர்த்தமிடும்
கருணாகர கடவுளே, திரிகரணா சுத்தியும்
காரிய சித்தியும் அருள்வாய்.

wanted the best for the college and stressed the significance of securing clear mind before securing the success. ,

The school started functioning under the administration of Sir P. Ramanathan and Mrs. Leelavathi Ramanathan and remained so until their demise. Very interestingly, a British born leading actress and a woman activist florence Beatrice Emery (nee) farr learned that Ramanathan had established Ramanathan Girls College, and at the age of fifty- two she moved to Ceylon to her first vocational position as a teacher. she was appointed as a Lady principal by Ramanathans and the administration of the school was turned over to her. with her organizational skills and With her tolerance and respect for the Tamil traditions, the school thrived under her administration. It is very interesting to learn that farr kept up her correspondences with her husband, and sent him her translations of Tamil Poetry. Farr's administration started off with 12 teachers and 101 students.

Though the medium of teaching was Engilsh, theschool emphasised the cultural underpinnings of the society in its teaching activities. Although not stipulated, it is interesting to know their leisure time activities at that time - an era where technological impacts such as ipads, TVs and computers are of unheard of. Leisure time activites included various sports

activities, embroidery, catering, practicing kolam ( a form of painting on the floor with rice and chalk), making Garlands and servicing local temples.

Despite the fact that it was administered by a native English woman, the college structure was well - thought and included prayers as Part of the college culture.It is not surprising that the college facilitated this with a temple a meditation hall which housed the GodNadesar, Sivakami, Lord Ganesh and Siva Lingam.

The college made slow but steady progress over the years. In 1926,as the school expanded to include music school, they also started the Tamil teachers training division. Following up on the trainnig college, they needed a practising place- and for that reason they started off Grade 1to SSC.

The college regrettably lost her founder - Sir P.Ramanathan in November 1930 The college established a monumental building to recognise the great contributions of the founder within the campus.Though this was a great loss, the college continued further with the tireless effort of Lady Leelavathy Ramanathan. The monumental building is the first point of entrance to the college.

In 1943, the college progressed and started off preparing students for university entrance. As the college expanded, the recognition grew rather considerably. in 1947 the School was elevated to the highest grade ( Grade1) status and the school has started coaching students for the Cambridge University Entry Exams.

After the demise of Lady Ramanathan in 1953, ther son- in - law, Mr S. Nadesapillai took over the administration of the school.

The steady progress and the recognition led to the school being taken over by the Government on 1st of December 1960. At the time of take over, the school was already teaching, catering, various vocational qualifications, fine arts and various sports. The School also had 1400 students among which more than 300 were boarded in school.

Later in 1960'S, Mr. S. Nadesapillai, ( who was also a member of parliament, Minister of posts) setup an independent unit to excel in fine arts. The inauguration carried out at an auspicious moment by my father Late Mr. M. S. Swaminathan. It was a great honour that Maharajapuram VishvaNathayar and his son Santhanam, who were straight disciples of Swamy Thiyagaraja served as first teachers of the unit. The unit grew and excelled in vocal, dance, veenaand miruthangam. The unit became closely associated to the university of jaffna.

Everything in life goes through the test of time and our alma mater wasn't an exception. The school was damaged partly during the 1987 riots but then the very active principal Mrs Srimathy kumarasamy swiftly made the school functioning as normal within a short period of time. Her efforts later paved a way to celebrate our Diamond Jubilee celebrations in 1988 with a great joy and significance.

As time goes by, structures deteriorated and in 2006 with the support of various old Girls Associations of our alma mater throughout the globe, OGA (UK Branch) managed to accumulate a siginficant amount of funds to refurbish the mian temple of the college. Various individuals who had strong connections with the school also strengthened the effort.

Looking back - our alma mater and we have come a long way. As humans, we rarely stand the test of time but our alma mater will be. To be more precise, it is almost 100 years since our alma mater was formed. over the last 100 Years, there have been 18 principals among which six are native English speakers. we wish our alma mater to stand there for our future generations - carrying the same value and underpinnings.

Realise this great wish in to a reality is not a distant prospect for those are capable. Among many possibilities, ensuring that the original infrastructure setup by the founder stands there for next few generations is a great one and in fact princeless too. Towards this, the current Principal of the college, Mrs Kamalarani Krishnapillai, has turned to us for support a mother turning towards her childern.

As of now, the main priority is to renovate and refurbish some parts of the college, including the monument, which requires 8.5 M Sri Lankan Rupees( around £ 45,000). for an individual, it is of course a hefty amout - but not for us - especially when we are together. If the founder of our alma mater, sir P . Ramanathan, could be able to do what he achieved all these single handedly, wouldn't it be unreasonable if we do not offer support to sustain his efforts?

I cannot conclude this article without offering our since re gratitude to Dr. S. N. aratnam and Mr. N. Sachithananthan for his support in organising a fund raising musical concert in may 2013 which gathered rather notable amount of contributions. we also would like to extend our sincere thanks to all Hindu temples in various part of the UK who all contributed towards this cause. There is no success without individuals - and our sincere thanks to all who contributed towards this. Let' s give generously and help the school sustain our greatest assets of all times.



# இராமநாதன் கல்லூரியில் மகாத்மா காந்தி

மைதிலி தயாநிதி,
Ph.D. (Toronto)
பழைய மாணவி

1969 ஆம் ஆண்டு ஒக்டோபர் இரண்டாம் திகதி வியாழக்கிழமை அன்று பிற்பகலில் இராமநாதன் கல்லூரி பிரதான மண்டபத்தில் மகாத்மா காந்தியின் நூறாவது பிறந்த தினம் கொண்டாடப்பட்டது. அவ் விழாவில் இடம் பெற்ற நான்கு நிகழ்ச்சிகள் மாத்திரம் வருடம் பல கழிந்தும் என் நினைவில் நிற்கின்றன. முதலாவதாக, இராமநாதன் கல்லூரியில் ஆசிரியையாகக் கடமையாற்றிக் கொண்டிருந்த எனது தாயார் ஞானேஸ்வரி சோமசுந்தரம் (ஞானாக்கா) அவர்கள் காந்தியின் இளமைப்பருவ நிகழ்வுகளை சத்திய சோதனை எனும் காந்தியின் சுயசரிதையை ஆதாரமாகக் கொண்டு சுவையாகக் கூறினார். இரண்டாவதாக, கதராடையும், காந்தி குல்லாயும் அணிந்த தியாகி இராஜ கோபால் அவர்கள் இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் காந்தியுடனான தனது அனுபவங்களை மிக்க உற்சாகத்துடன் விவரித்தார். அவர் கூறிய விவரங்கள் எதுவும் என் ஞாபகத்தில்லை. ஆனால் உடல் மொழி மூலம் அவர் வெளிப்படுத்திய காந்தியத்தில் அவருக்கிருந்த ஆர்வமும், ஈடுபாடும், துடிப்பும் என்னை ஆச்சரியம் கொள்ள வைத்தன. காந்தியவாதியான அவரை ஓரிரு தடவைகள் இவ் விழாவிற்கு முன்னரும் கல்லூரியில் கண்டிருக்கிறேன். காந்தி நூற்றாண்டு விழாவினைக் கல்லூரி கொண்டாடிட அவர் ஓர் உந்துசக்தியாக இருந்தாரோ என்று இப்பொழுது எண்ணத் தோன்றுகிறது. மூன்றாவதாக, கல்லூரி இசையாசிரியை அம்பிகை அக்கா (யோகாம்பிகை செல்லையாபிள்ளை) காந்தி மீது சுப்பிரமணிய பாரதியார் இயற்றிய வாழ்க நீ எம்மான் என்ற பாடலைத் தோடி ராகத்தில் விருத்தமாகப் பாடினார். இறுதியாக, நானும் வேறு சில மாணவியரும் சேர்ந்து, அம்பிகை அக்கா இந்த விழாவிற்கென்றே எமக்கு விசேடமாகப் பயிற்றுவித்த காந்தியின் பிரார்த்தனைப் பாடல்களான ரகுபதி ராகவ, வைஷ்ணவ ஜனதோ என்பவற்றைப் பாடினோம். இந்த விழாவினைப் பல வருடங்களுக்குப் பின்னர் நினைவு மீட்டிப் பார்க்கும் போது, இராமநாதன் கல்லூரிக்கும் காந்திக்கும் இடையில் எத்தகைய தொடர்பிருந்தது என்ற கேள்வி என் மனதுள் எழுந்தது. அதற்கு விடை தேடுமுகமாக அமைந்ததே இச்சிறு கட்டுரை.

மகாத்மா என்று பிற்காலத்தில் கொண்டாடப்பட்ட மோகன்தாஸ் காந்தி 1927 ஆம் ஆண்டு இலங்கைக்கு முதன் முதலில்

விஜயம் செய்தார். அதுவே அவரது இறுதி விஜயமுமாகும். காந்தியை இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுத்தவர் பட்டியலில் இராமநாதன் கல்லூரித் தாபகர் சேர். பொன். இராமநாதன் அவர்கள் இடம்பெற மாட்டார். அதற்கு வேறு காரணங்கள் உள. காந்தி எர்வடா (Yerwada) சிறையிலிருந்து விடுவிக் கப்பட்டபோது, பௌத்த மத சீர்திருத்தவாதி அநாகரிக தர்மபால அவரை இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளுமாறு 1924 பெப்ரவரி 7 ஆம் திகதி அன்று தந்தி மூலம் கேட்டுக் கொண்டார் என்றும், ஏறத்தாழ மூன்றரை வருடங்கள் கழித்தே அவ் அழைப் புக் கனிந்தது என்றும் வரலாற்றாசிரியர்கள் இராமசந்திர குஹா அவர்கள் கூறுகின்றார்கள் (2003). ஆனால், காந்தியை இலங்கைக்கு முதன்முதலில் அழைத்தவர்கள் யாழ்ப்பாண மாணவர்களே என்று மகாதேவ் தேசாய் குறிப்பிட்டுள்ளார். " Jaffna students, it will be remembered, were the first to invite Gandhiji, and then the other friends took up the proposal"(1928:22). காந்தி, நேரு முதலிய இந்தியத் தலைவர்களை வழிகாட்டிகளாக வரித்துக் கொண்ட யாழ்ப்பாணம் மாணவர் காங்கிரஸ் (இது யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரஸ் எனப் பின்னர் பெயர் மாற்றம் பெற்றது). காந்தியின் இலங்கை விஜயம் குறித்துத் தீவிர ஆர்வம் காட்டியது. வட்டுக் கோட்டையில் அமைந்திருந்த யாழ்ப்பாணக் கல்லூரியை (Jaffna College) மையமாகக் கொண்டியங்கிய இளைஞர் காங்கிரஸினைச் சேர்ந்த துரைராஜசிங்கம், ஹன்டி பேரின்ப நாயகம், J. V. செல்லையா என்போர் வெவ் வேறு தருணங்களில் காந்தியைச் சந்தித்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தருமாறு கேட்டுக்கொண்டனர். (Durairajasingam, 1978) அத்துடன் இலங்கை சட்ட சபையில் இந்தியத் தமிழர் பிரதிநிதியாக அங்கத்துவம் வகித்த மு.யு. நடேச ஐயரும் காந்திக்கு அழை ப்பு விடுத்திருந்தார் (Durairajasingam, 1978) 1924 ஆம்ஆண்டு டிசம்பர் மாதம் தனது முதலாவது மாநாட்டை நடாத்திய யாழ்ப் பாணம் இளைஞர் காங்கிரஸ் யாழ்ப்பாணத் திற்கு காந்தியை அழைத்துத் தனது புதிய அரசியல் சமூகத் திட்டங்களுக்கு வலுவும், வீறும் சேர்க்க விழைந்தது.

இந்திய தேசிய காங்கிரஸை அடி யொற்றித் தனது இலட்சியங்களை அமைத் துக் கொண்ட இளைஞர் காங்கிரஸ் 1920 களில் ஒரு பெரும் மக்கள் சக்தியாக மலர்ந்தி ருந்தது. காலனித்துவ அரசுடன் (colonial government) இசைந்து நின்ற கிறிஸ்தவ மிஷனறிமார்கள், அரசியலில் இலங்கையர்க ளின் பங்களிப்பினை அதிகரிக்கும் நோக்கில் காலனித்துவ அரசிடமிருந்து அரசியல் யாப்பு சீர்திருத்தங்களை வேண்டி நின்ற தமிழ், சிங்கள அரசியல் வாதிகள் என்பவர்களுடன் மாறுபாடு கொண்ட மூன்றாம் அணியாக யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரஸ் 1924 ஆம் ஆண்டளவில் உருவானது

(கொரிகாந்தன், 1992). காந்தியைப் பின்பற்றி நாடளாவிய ரீதியில் காலனித்துவ அரசிடமிருந்து முழுமையான சுயாட்சியை யும் (பூர்ண ஸ்வராஜ்), தாய்மொழிக் கல்வி யையும் வலியுறுத்திய இளைஞர் காங்கிரஸ் யாழ்ப்பாணத்தின் சாதிய அமைப்புக்கு எதிராகவும் கிளர்ந்தெழுந்தது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு (ஹரிஜன்) ஆலயங்களைத் திறந்து விடல் வேண்டும் என்றும் பாடசாலைகளில் சாதி வேறுபாடின்றி மாணவர் அனைவரும் சமமான ஆசனங்களில் அமருதல் வேண்டும் என்றும் அதாவது, தாழ்த்தப்பட்ட சாதி மாணவர்களைத் தரையில் அமர்த்தும்

வழக்கம் கைவிடப்படல் வேண்டும் என்றும் குரல் கொடுத்தது. சமூக சீரழிவுகளுக்குக் காரணமான மதுவும், சீதனமும் ஒழிதல் வேண்டும் என்று பாடுபட்ட காங்கிரஸ் தேசிய உடை அணிதலையும், சமூக சேவையில் இளைஞர் ஈடுபடுதலையும் பெரிதும் ஊக்கு வித்தது. அத்துடன், கிராமங்களில் அடிமட்ட மக்களுடன் தொடர்பு கொண்டு சமூக சீர்திரு த்த செயற்திட்டங்களை மேற்கொள்வதற்காக இளைஞர் சேவை அமைப்புகளை கிராமங்க ளில் ஆரம்பித்தது (Jane Russell 2011: 475). காந்தியத்தை எந்த அளவுக்கு இளைஞர் காங்கிரஸ் அங்கத்தினர் ஏற்றுக் கொண்டனர் என்பது பற்றி இராமநாதனின் சுயசரிதையை எழுதிய வைத்திலிங்கம் கூறுகிறார்;

*புத்திஜீவிகள் தாம் முன்னர் பெருமை யுடன் அணிந்த ஐரோப்பிய உடையினைக் களைந்து வீட்டில் நெய்யப்பட்ட கதரா டையை உடுத்தினர், காந்திக் குல்லாய் அணிந்தார், கதர் தறியில் நூல் நூற்றனர், காந் திய இலக்கியத்துள் திளைத்தர், விடாமுயற்சியு டன் காந்தியக் கொள்கைகளை, இலட்சியங் களை, வாழ்க்கை முறையை, சமூகக் கட்ட மைப்பினை உடைக்கும் நுட்பத்தினைப் பிரசாரம் செய்தனர்....(1977 : 712)*

காந்திய ஆதரவாளர்களான இளைஞர் காங்கிரஸின் அழைப்பின் பேரில், 1927 நவம் பர் 12 ஆம் திகதி தன் மனைவி கஸ்தூரிபாய், ராஜாஜி அவரின் மகள் லக்ஷ்மி, செயலாளர் மகாதேவ் தேசாய், பியரெலால் என்போரு டன் மூன்று வாரகால விஜயம் மேற்கொண்டு கப்பல் மூலமாகக் கொழும்பு வந்து சேர்ந்த காந்தி, நவம்பர் 27 ஆம் திகதி யாழ்ப்பா ணத்திற்கு புகையிரதம் மூலம் சென்றார். புகை யிரத நிலையத்தில் அவரைப் பார்க்க மக்கள் வெள்ளம் அலை மோதியது. யாழ்ப்பாணத் தில் பல இடங்களுக்கும் சென்ற காந்தி பிரித் தானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவோ, அல்லது இலங்கை அரசியற் சட்ட சீர்திருத் தங்கள் பற்றியோ பேசாது, சமூக சீர்திருத் தத்திட்டங்கள் தொடர்பாக மட்டும் தனது கருத்துக்களைக் கூறினார் (Ramachandra Guha, 2003). யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரஸ் தீவிரமாக அமுற்படுத்திய மதுவிலக்குத் திட்டத்தைப் பாராட்டினார். யாழ்ப்பாண மண்ணில் ஊறியிருந்த தீண்டாமைக் கொடு மையினை நீக்குமாறு மக்களைக் கேட்டுக் கொண்டார். யாழ்ப்பாணத்தில் இந்துக்க ளுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இடையில் ,ஏற்பட்டிருந்த மன இடை வெளியினைக் குறைக்க இந்துக்கள் தாமாகவே முன்வந்து செயலாற்ற வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். (Ramachandra Guha, 2003). அத்துடன் யாழ்ப்பாணத்தில் நிலவிய சீதனப் பிரச்சினைக்குத் தன்னுடைய தீர்வினை இராமநாதன் கல்லூரி மாணவியர் முன் வைத்தார்.

இராமநாதன் கல்லூரிக்கு காந்தி விஜ யம் செய்த போது இராமநாதன் அவர்கள் அங்கிருக்கவில்லை. லேடி இராமநாதனே முன்னின்று காந்தியை வரவேற்பதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்திருந்தார். இராமநா தன் தான் கொழும்பிலிருந்து வரவியலாமையை அறிவிக்குமுகமாகத் தந்தி ஒன்றினை அடித்தி ருந்தார். அந்த தந்தியினை லேடி இராமநா தன் காந்தியிடம் கொடுத்தார். இராமநாதன் அவர்கள் தான் வரும்போது கல்லூரியில் இல் லாதது காந்தியை உறுத்தியிருக்க வேண்டும். கல்லூரி அளித்த வரவேற்பு, பணநன்கொடை என்பவற்றுக்கு மகுடம் வைத்தாற் போன்று

இராமநாதனின் தந்தி இருந்தது என்கிறார் காந்தி.

கல்லூரி காந்திக்குக் கொடுத்த வரவேற்பில் கலந்து கொள்ள இராமநாதன் அவர்கள் ஆர்வம் காட்டவில்லை. இராமநாதன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றாசிரியர் வைத்திலிங்கம் கூற்றுப்படி, காந்தியின் எளிமையான கடின வாழ்வு, ஆசாபாசங்களை ஹுத்த மேலான இலட்சிய வாழ்வு, அவரின் எளிமையான கடின வாழ்வு, அவரின் சத்தியத்திற்கான அர்ப்பணிப்பு, என்பன இராமநாதனைக் கவர்ந்தன. (1977:712) ஆனால், காந்தியின் அரசியல் இலட்சியமும், இராமநாதனின் அரசியல் இலட்சியமும் வெவ்வேறாக இருந்தன. காந்தி பிரிட்டிஷ் ஆட்சியினை இந்தியாவில் முடிவுக்குக் கொண்டு வரல் வேண்டும் என்ற இலட்சியத்துடன் செயற்பட்டவர். இராமநாதன் உட்பட இலங்கை சிங்கள, தமிழ்த்தலைவர்கள் பிரித்தானியகாலனிதுவ அரசாங்கத்தில் சுதேசிகளான சிங்களவரும், தமிழரும் அதிக பிரதிநிதித்துவம் பெறுவது குறித்து காலனித்துவ அரசுடன் பேச்சுவார்த்தையில் அச்சமயத்தில் ஈடுபட்டிருந்தனர். சட்டசபையில் இராமநாதன் அரசியல் சீர்திருத்தங்கள் பற்றி உரையாற்றும் போது, காந்திய வழிகளான பகிஷ்கரிப்பு, ஒத்துழையாமை முதலியனவற்றினால் இலங்கையர்கள் கவரப்படுவதற்குக் காரணம், அரசாங்கம் சுதேசிகளின் பிரதிநிதித்துவம் குறித்த கோரிக்கைகளில் அதிக அக்கறை செலுத்தாமையே ஆகும் என்றார்.( வைத்திலிங்கம்1977:713) அத்துடன், காந்தியின் ஒத்துழையாமை, சத்தியாக்கிரகம், விதேச துணி பகிஷ்கரிப்பு என்னும் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய விரோதக் கொள்கைகளில் தனது அதிருப்தியை மிக வெளிப்டையாகவே இராமநாதன் கூறினார். "காந்தி இந்து மத சாஸ்திரங்களை சரிவர அறிந்தவர் அல்லர்... சத்தியாக்கிரகம் என்பதன் பொருள் உண்மைக்காக அர்ப்பணிப்பு... அரசாங்கத்துடன் ஒத்துழைக்க மறுக்கின்றமை, ஒத்துழையாமை மூலம் நாட்டின் அமைதியைக் குலைக்கின்றமை என்பன சத்தியாக்கிரகம் ஆகா..." என்று இராமநாதன் காந்தியத்தைச் சாடினார் (வைத்திலிங்கம் 1977: 713) காந்தியை அபாயகரமான வழிகாட்டி ( Unsafe guide)" என்று வர்ணித்த இராமநாதன் காந்தியத்தினால் ஈர்க்கப்பட்ட வெகுசனப் போராட்டம் எல்லை மீறிப் போகலாம் என்று அஞ்சியதுடன், தமிழர் காந்தியத்துடன் தம்மைத் தொடர்புறுத்தலால் பிரிட்டிஷ் ஆட்சியாளரின் அதிருப்திக்கு ஆளாவதுடன், தமிழர்களின் வருங்கால அரசியல் வாழ்க்கையையும் அது பாதிக்கலாம் என்று கருதினார். இதனால், காந்திக்கு வழங்கப்பட்ட வரவேற்பில் அவர் நேரடியாக சம்பந்தப்பட விரும்பாமல் இருந்தனர் எனலாம். அதேசமயம் லேடி இராமநாதன் தலைமையில் கல்லூரியில் காந்திக்கு வரவேற்பளிப்பதற்கு அவர் தடையாக அமையவும் இல்லை.

ஆங்கிலக் கல்வி பெற்ற தமிழ், சிங்கள இனத்தினரின் பிரதிநிதியாக விளங்கிய இராமநாதன் இனவாத சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டவராக விளங்கினார் என்பதை இங்கு குறிப்பிடல் அவசியம். இலங்கைத் தீவகப் பண்பாட்டின் ஆரம்பகால கர்த்தாக்கள் தமிழ் , சிங்களம் எனும் இரு இனங்களுமே என்று நம்பிய அவர் இந்து - பௌத்த கல்லூரி ஒன்றினைக் கொழும்பில் அமைக்க விழைந்தும், சிங்கள புத்திஜீவிகள் ஒத்துழையாமையால் அது கைகூடாது போயிற்று. பௌத்தர்கள் தமக்கெனத் தனியாக ஆனந்தாக் கல்லூரியை அமைத்துக் கொண்டனர். அக் கல்லூரி

யின் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்ட இராமநாதன் சிங்களவர் தமது தேசியத் துவத்தினை இழக்காதிருக்கத் தாய்மொழி யினைக் கற்றலின் அவசியத்தை வலியுறுத் தினார். (வைத்திலிங்கம் 1977: 45) பௌத்த புனித தினமான வெசாக்கை பொது விடுமுறை நாளாக்கும் முயற்சி யில் இராமநாதன் முன்னணிப் பங்கு வகித்தார். (Gruge 2011: 165) மேலும் இராமநாதன் கிறிஸ்தவர் மீதும் காழ்ப்புணர்ச்சி பாராட்டி யவரல்லர். கிறிஸ்தவ மிஷனறி நடாத்திய பாடசாலைகளுக்கு தானே நிதி உதவி புரிந்த துடன், அரச நிதி உதவி கிடைப்பதற்கும் ஆதரவளித்தார் (வைத்திலிங்கம் 1971: 253) மிஷனறி பிக்னெல் கேட்டுக் கொண்டதற் கிணங்க, யாழ்ப்பாணக் கல்லூரிக்கு ரூபா 50,000 அரசு மானியம் வழங்குவது தொடர் பான பிரேரணைக்கு ஆதரவளித்தார். இராம நாதன் பற்றி பிக்னெல் கூறும்பொழுது," இல ங்கை மக்களுக்குப் பிரதிநிதியாகவும், இலங் கையில் பிளவு பட்டிருந்த எல்லா சமூகத்தின ரையும் ஒன்றிணைப்பவராகவும் திகழ்ந்தார்" என்று கூறுகின்றார். (வைத்திலிங்கம் 1971: 251). எனினும், யாழ்ப்பாண சமூக அமைப் பைக் கட்டிக் காக்க முனைந்தமையும் ( wilson 2000 :58) பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்குச் சார்பான போக்கும் இராமநாதனை யாழ்ப் பாணம் இளைஞர் காங்கிரஸின் அடிப்படைத் தத்துவங்களுக்கு எதிரானவராக்கின. அத்து டன், இளைஞர் காங்கிரஸைப் போலன்றி, இலங்கை, இந்தியா இரு நாடுகளையும் அரசியல் ரீதியிலும், பண்பாட்டு ரீதியிலும் வெவ்வேறு கூறுகளாகவே இராமநாதன் நோக் கினார்.

காந்தியின் இலங்கை விஜயத்தின் பிரதான நோக்கம் தனது கதர்த் திட்டத்திற்கு நிதி சேகரிப்பதற்கே ஆகும். அழகிய உபசரிப்புடன் ரூபா 1111.00 காந்தியின் பொது நல சேவைக்கு லேடி இராமநாதனால் வழங்கப்பட்டது. அது மட்டுமன்றி, லேடி இராமநாதன் அதற்கு அடுத்த வருடமும் காந்தி ஜிக்கு நிதி சேகரித்து அனுப்பினார். காந்தியின் ஒத்துழையாமை, சத்தி யாக்கிரகக் கொள்கை களை இராமநாதன் கண்டித்த அதே வேளை, கல்லூரியில் காந்திக்குப் பகிரங்க வரவேற்பும், நிதியும் வழங்கப்பட்டமை பல கேள்விகளை எழுப்புகிறது. இதற்குரிய பதில்களை இராம நாதன், லேடி இராமநாதன், மருகர், சு. நடேச பிள்ளை தொடர்பான மூல ஆவணங்களை ஆராய்வதன் மூலம் மட்டுமே பெறக் கூடிய தாக இருக்கும்.

1927ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இராம நாதன் கல்லூரி மாணவிகளுக்கு காந்தி ஆத்தி ரிகை டிசம்பர் இரண்டாம் திகதி SPEECH AT SIR RAMANATHAN GIRLS' SCHOOL, JAFFNA என்Collected Works பாகம் நாற்பதில் காணலாம்.

ஆரம்பத்தில் தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின் நேர்த்தியினையும், எளிமை யினையும் தான் கவனிக்கத் தவறவில்லை என்று காந்தி கூறுகிறார். ஆனால் அது பற்றிய விவரம் எதையும் காந்தி தனது பேச்சில் மாண வியரை இருவித செயற்பாடுகளில் ஈடுபடு மாறு கேட்டுக்கொண்டார். ஒன்று ஏழை மக் களுடன் மானசீகத் தொடர்பினை ஏற்படுத்து வதற்காக கதர் நூற்கும் வழக்கத்தை ஏற்படுத் திக் கொள்ளுதல் இரண்டாவது, சமூக வாழ் வில் ஈடுபடுதல். முதலாவது செயற்பாடு காலனித்துவ ஆட்சிக்கும் சுரண்டலுக்கும் எதிராகப் போராடும் சாதாரண இந்திய

மக்களுடன் அடையாளப்படுத்துதலை நோக்கமாகக் கொண்டது. இந்திய வளங்கள் சுரண்டப்படுவதற்கும், அவை பிரித்தானியாவிற்கு ஏற்றுமதி செய்ய ப்பட்டு, சந்தைப் படுத்தப்படுவதற்காக இந்தியாவிற்கு மீண்டும் விற்பனைக்கு விடப்படுவதையும், எந்திரமயமாக்கலின் விளைவாகப் பாரம்பரிய நெசவாளர் முதலான தொழிலாளர்கள் வறுமைப் பிடியுள் சிக்குண்டு கிடப்பதையும் எதிர்க்கும் குறியீட்டு மதிப்புக் கொண்டதாகக் கைராட்டினத்தில் கதர் நெய்தலை காந்தி மாற்றினார். காந்தியும் அவரது சபர்மதி ஆசிரமவாதிகளும் தினந்தோறும் கை ராட்டினத்தில் நூல் நூற்றனர். கதர் ஆடை அணியும் வழக்கம் ஊக்குவிக்கப்பட்டதுடன், இங்கிலாந்திலிருந்து இறக்குமதியான விசேடத் துணிகள் புறக்கணிக்கப்பட்டன அத்துடன் பகிரங்கமாகத் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. பிரிட்டிஸ் ஏகாதிபத்தியத்தின் கீழ் இலங்கை , இந்தியா இரண்டுமே இச் சமயத்தில் நான் படிக்கும் காலத்திலும் (1965 - 10977) விருந்தினர்களை வரவேற்பதில் கல்லூரி மிகுந்த அக்கறை செலுத்தியது. என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். விருந்தினர் வரவேற்புடன் தொடர்புடையதாக மூன்று அம்சங்கள் இலங்கின. (அ) சிறுமிகள் ஆன் விருந்தினர்களை மாலையிட்டு வரவேற்றல், பெண் விருந்தினர்களுக்கு பூச்செண்டு கொடுத்து வரவேற்றல் (ஆ) பாட்டு, வாத்தியக் கருவிகள் இணைந்த பின்னணி இசையில் மேன்மாடிக் கோயிற்படிகளிலிருந்து மாணவியர் நடனமாடியபடியே இறங்கி வந்து விருந்தினர்களை வரவேற்றல். எனது தாயார் இயற்றிய " நல்வரவாகுக நும்வரவே ஐய" என்ற ஆரபி ராகம் ஆதி தாளத்தில் அமைந்த கீர்த்தனையை இசை ஆசிரியை அம்பிகை அக்கா கம்பீரமாக இசைக்க, மாணவியர் நடனமாடுவர். இப் பாடலுக்குரிய நடனத்தை நடன ஆசிரியர்களாகப் பணி புரிந்த நல்லையா மாஸ்ரரும், ஏரம்பு சுப்பையாமாஸ்ரரும் வடிவமைத்தார்கள் (இ) விருந்தினர்க்குச் சுவையான, பார்வைக்கினிய சிற்றுண்டி கொடுத்து உபசரித்தல். இதில் கல்லூரியில் மனையியல் கற்பித்த ஆசிரியைகளான திருமதி இராஜேஸ்வரி முருகரட்ணம், செல்வி, சுந்தரமூர்த்தி, திருமதி தாமோதரம்பிள்ளை அவர்கள் நினைவு கூரப்பட வேண்டியவர்கள்

பொருளாதார ரீதியாக சுரண்டப்படுவதாக காந்தி கருதினார். அதனால் எளிமையான வாழ்வினையும், கதர் நூல் நூற்றலையும் மேற்கொள்ளுமாறு இராமநாதன் கல்லூரி மாணவிகளுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

இரண்டாவது செயற்பாடான சமூக நலனிற்காகப் பெண்கள் தம்மை அர்ப்பணித்தல் என்பதை , யாழ்ப்பாண சமூகத்தில் நிலவிய சீதனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வாக காந்தி முன்வைத்தார் எனலாம். சமூகத் தீமைகளுள் ஒன்றாக சீதனத்தைக் கருதிய யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரஸ், யாழ்ப்பாணத்தில் நிலவிய சீதனப் பிரச்சினை பற்றி ஏலவே காந்திக்கு விரிவாகக் கூறியிருக்கலாம். என்று ஊகிக்கலாம். தனக்கு ஏற்கனவே லேடி இராமநாதனால் தரப்பட்டிருந்த கல்லூரி சஞ்சிகையில் காணப்பட்ட திருமண அறிவிப்புக்களைப் பார்வையிட்டதாக மாணவியருக்குக் காந்தி கூறுகிறார். இத்தகைய அறிவிப்புக்களில் இராமநாதன் கல்லூரியில் கல்வி கற்ற இன்னாரின் மகள் கல்வித்தகமையையும் உத்தியோகமும் கொண்ட இன்னாரைத் திருமணம் புரிந்துள்ளார் என்ற விபரங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. இவ் அறிவிப்புக்கள் கல்லூரி தாபிக்கப்பட்டதன் நோக்கத்திற்கு இயை

வாகவே இருந்தன. ஆங்கில மொழி மூல மாகப் பெண்கள் கல்வி பெறுதலை நோக்க மாகக் கொண்டு1913 ஆம் ஆண்டில் இராம நாதன் கல்லூரி தாபிக்கப்பட்டது. சமூகத்தில் பெண்களின் இடம் குறித்த கருத்துக்களில் இராமநாதன் ஆர்வம் கொண்டிருந்த போதும், பெண்களுக்குரிய இடம் இல்லமே எனும் கருத்துநிலையில் அவர் மிக உறுதியாக இருந் தார். ஆரவாரமும் போட்டியும், மிக்க வெளி உலகம் இறைவனால் ஆண்களுக்காகப் படைக்கப்பட்டது என்றும் சரியான வழியில் திட்ட மிடப்பட்டு வழங்கப்படும் கல்வியி னால் எல்லாத் திறமைகளும் விருத்தியாக் கப்பட்ட பெண், வீட்டை ஆள்பவளாகவும், வெளி உலகச் செயற் பாடுகளில் ஈடுபட்டிரு க்கும் இல்லத்தலைவனை விட, இனத்தின் நன்மையில் அதிக செல்வாக்கு செலுத்துப வளாகவும் இருப்பவள் என்று இராமநாதன் கருதினர். வைத்திலிங்கம் ( 1971 : 556) ஆங்கிலக் கல்வி பெற்று உத்தியோகங்களில் அமரும் இந்து வாலிபர்கள் திருமணம் முடித்ததற்கு ஏற்ற ஆங்கில மொழி தெரிந்த, ஆனால் இந்து – தமிழ்ப் பண்பாட்டில் திளைத்த – பெண்களை உருவாக்குவது கல்லூரியின் பிரதான நோக்கமாக இருந்தது. இதனால், இந்துப் பண்பாட்டு அமிச ங்களை மாணவியருக்குப் புகட்டு வதிலும் விருத்தி செய்தலிலும் கல்லூரி அதிக கவனம் செலுத்தியது.

பெண்கல்வி, திருமணம் முதலான விடயங்களில் காந்தியின் கருத் துக்கள் இராமநாதனின் கருத்துக்களை விட வேறானவையாகவே இருந்தன. திருமணம் என்பது பெண்களுக்கு அவசியமானதொன்று என்று காந்தி கருதவில்லை. ஒரு ஆணுக்குப் பெண் தன் வாழ்க்கையை முழுமையாக அர்ப்ப ணிப்பதை அர்த்த மில்லாத தொன்றா கவே அவர் நோக்கி னார். பாடசாலைக் கல்வி முடிவு ற்றதுடன், இல்லறத்தில் ஈடுபடுவதால் பெண்கள் பொம்மைகளாக , பொது வாழ்க்கை யிலிருந்தே மறைந்து விடுகின்றனர் என்கிறார். காந்தி மாணவியர் பொது வாழ்வில் ஈடுபடல் வேண்டும் என்ற கருத்தினை அழுத்தமாக முன் வைத்த காந்தி, கல்லூரியின் முதலாவது அதிபர் எமறியை ( Ms. Florence FARR Emery *( 1860 - 1917)* நல்லதொரு எடுத்துக் காட்டாக குறிப்பிடு கின்றார். (எமறி பற்றிய வாழ்க்கைக் குறிப்பு களை குமாரி ஜயவர்த்தன அவர்கள் எழுதிய The white woman sother biurden: western women and South Asia during British Colonial rule எனும் நூலிற் காணலாம்) திருமணத் திற்குப் பதிலாகப் பெண்கள் சமூக சேவையில் ஈடுபடும் போது அவர்கள் தம் வாழ்கையை வீட்டிற்குள்ளேயே குறுக்கிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமும், அத்துடன், சீதனம் பற்றிய பேச்சும் அவசியமில்லாது போய் விடுகின்றன என்பது காந்தியின் உபதேசத்தின் சாராம்சமாகும்.

திருமண வாழ்க்கையிலும் பிரமச் சரியத்தை அனுஷ்டிப்பதன் அவசியத்தை வலியுறுத்தும் காந்தி ஒவ்வொரு பெண்ணும் கட்டாயம் திருமணம் செய்து கொள்ள வேண்டியது என்பது அவசியமில்லை என்று இராமநாதன் கல்லூரி மாணவியருக்குக் கூறியதில் வியப்பில்லை. சீதனம் கேட்கும் ஆடவரைத் திருமணம் புரிய மறுக்க வேண் டும் என்று அறிவுறு த்துகிறார் காந்தி. இதனால் திருமண மாகாதே வாழ்நாள் முழுவதுமிருக்க அல்லது நெடுங்காலம் திருமண மாகாம லேயே இருக்க வேண்டி நேரிடலாம். அது ஒரு பயனுள்ள காலமே. பொது வாழ்வில்

ஈடுபடுவதற்கு நேரம் கிடைக் கும் . அதே சமயம் தக்க துணையையும் தேடலாம். கடுந்தவமூலம் சிவனைக் கணவனாகக் பெற்ற பார்வதி போன்று அழகையோ உத்தியோகத் தையோ பார்க்காது ஒருவரின் நற்குணங் களை மட்டும் பார்த்துத் திருமணம் செய்ய வேண்டும் என்று மாணவியருக்குப் புத்திமதி கூறுகின்றார்.

காந்தியின் இக் கருத்துக்கள் எவ்வ ளவு தூரம் இராமநாதன் கல்லூரி மாணவிய ரைப் பாதித்தன என்று சொல்ல இயலாது. ஆனால், யாழ்ப்பாணத்தில் நெடுங்கலாம் விவாகமாகாத பல கன்னியருக்கு இராம நாதன் கல்லூரி விடுதி நல்லதொரு மனை யாக விளங்கிற்று. காந்தியைக் கல்லூரி மறக் கவுமில்லை. காந்தி நாள் என்று ஒரு தினத்தைப் பல வருடங்களாகக் கல்லூரி கொண்டாடி வந்தது என்று எனது தாயார் கூறியிருக்கிறார். நான் படிக்கும் காலங்களில் காந்தியின் பிறந்த நாளன்று எனது தாயாரும், பின்னர் செல்வி. சின்னத்தம்பியும் காந்தி பற்றிய வரலாற்றுக் குறிப்புகளையும், கதைகளையும் கல்லூரியில் காலைப் பிரார்த்தனையின் பின்னர் மாணவிக ளுக்குக் கூறி வந்தனர். அத்துடன் கை ராட்டி னத்தில் நூல் நூற்கும் வழக்கமும் சில காலம் மாணவியரிடையே இருந்து வந்தது. 1935ஆம் ஆண்டு சு. நடேசப்பிள்ளையவர்கள் தாம் இயற்றிய கல்லூரி கீதத்தில் இவ் வழக்கம் இருந்ததைக் குறிப்பிடுகின்றார்.

**பால்போன்ற நிலவொளியில் பந்தாடிப் பூவையர்கள்**
**நூல்நூற்று நலம் புரியும் நோன்புடைத்திக் கல்லூரி**


உசாத்துணை நூல்கள் :

Desai, Mahadev. 1928 with Gandhiji in Ceylon: a journal of the tour with autorised version of all important speeches. Triplicane, Madras: S. Ganesan.

Durairajasingam, S. 1978. Mahatma Gandhi in Ceylon: The Memory of a Visit ffty years ago Triveni.

Retrieved from http:/ / Yabaluri. org/ TRIVENI/ CDWEB/ mahatma gandhi inceylonjan 78. htm

Guha, Ramachandra. 2003 . Ghandhi in Jaffna. Hindu.

Retrieved from http:// www. hindu. com/ mag/ 2003/09/28/ Stories 20030992800160300 htm.

Russell, Jane 2011. The Dance of the Turkey Cock. The Sri Lanka Reader: History Culture, Politics. Ed. John Holt . The Duke University Press . 471 - 490.

Subramanian, Nirupama. 2002. Two Collections. Hindu. Retrieved from http:// www. hindu. com/ thehindu /lr/2002/ 08/04/ stories / 2002080400360500. htm

Vythilingam, M. 1971/ The Life of Sir Ponnambalam Ramanathan. Vol . l. Colombo: Ramanathan Commemoration Society.

Vythilingam, M. 1977/ Ramanathan of Ceylon: The Life of Sir Ponnambalam Ramanathan. Vol. II. Cunnakam: Thirumakal Press.

Wilson, Jeyaratnam A. 2000.Sri Lankan Tamil Nationalism: its Origin and Development in the 19 and 20th Centuries. Vancouver, Canada: UBC Press.

*கௌரிகாந்தன், அ. 1992. யாழ்ப்பாண சமூக உருவாக்கமும் விபுலானந்தரும். யாழ்ப்பாணம்: சாளரம்.* - Retrieved from Noolaham http :/ www. noolaham. net/ Project/ 02/193/193.htm

Collected Works of Gandhi / Volume 40/ Speech At Sir Ramanarthan Girls' Scchool Jaffna ( 2nd December 1927)



# சேர். பொன் இராமநாதன் அவர்களின் நினைவாலயங்களும் அவரது பணிகளும்

**கலாபூஷணம் பண்டிதை திருமதி வை. கணேசபிள்ளை**
ஒய்வுநிலை ஆசிரியர்,
இராமநாதன் கல்லூரி.

ஈழத்தாய் பெற்றெடுத்த தவப்புதல்வன் சேர் பொன் இராமநாதன், தமிழர்களின் தலைமகன். சிறந்த தேசியத்தலைவர், பல் துறைப் புகழீட்டிய மகான். சிறந்த ஆத்ம ஞானி. எண்பது ஆண்டுகள் வாழ்ந்து நாட்டிற்கு ஆற்றிய சேவைளில் சமயப்பணியும், கல்விப் பணியும், நிலை பெற்று விளங்குகின்றன. இராமநாதன் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி, பொன்னம்பலவாணேச்சரர் கோயில் உள்ளவரை அவர் புகழ் நிலை பெற்று வாழும்.

### நினைவாலயங்கள்

1927ஆம் ஆண்டு இராமநாதன் கல்லூரிக்கு வருகை தந்த மகாத்மா காந்தியடிகள் "இராமநாதன் அவர்களின் பரோபகாரப் பண்பின் நினைவாலயமாக இக் கல்லூரி நிலைத்து நிற்கும்" என வாழ்த்திச் சென்றார். தனது வாழ்விற் பெரும் பகுதியைக் கல்விப் பணிக்காகச் செலவழித்த பணியாளர் சேர். பொன் இராமநாதன் என்றும், அவர் ஒரு உலகமேதை என்றும் சென்னைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் சிட்டி பாபு சுட்டிக்காட்டினார்.

"சிறுவர் சிறுமியர்க்கு கல்வி இரு கூடம்
நிறுவினான் பெயர் என்றும் நிற்கும் - பெரும்பெயரான்
சென்னைக்குப் பச்சையப்பன் சீர் யாழ்ப்பாணத்திற்கு
மன்னு இராமநாதன்"

எனப் பிரான்சிங் கிங்ஸ்பரி தனது ஆய்வில் குறிப்பிட்டுள்ளார்.

ஆத்மீகத்தின் நிலைக்களங்களாக அமைந்த கல்லூரிகளும் ஆலயங்களும் அவரது நினைவாலயங்களாகும். இந்த வகையில் அவரது நினைவாலயங்களாக விளங்குபவை மருதனார் மடத்தில் பாரிய நிலப்பரப்பில் அமைந்த இராமநாதன் கல்லூரி, அதனோ டிணைந்த நடராஜர் ஆலயம், கல்லூரி வளாகத்தில் அமைந்த சமாதி ஆலயம், திருநெல்வேலியில் அமைந்த பரமேஸ்வராக் கல்லூரி, பரமேஸ்வரன் ஆலயமும், கொழும்பு கொச்சிக் கடையில் அமைந்த பொன்னம்பலவாணேச்சரர் ஆலயம், கோடைக்கானலில் அமைந்த குறிஞ்சிக்குமரன் ஆலயமும் ஆகும். இவை யாவும் சேர். பொன். இராமநாதன் அவர்களின் புகழினை நிலை நிறுத்தும் நினைவாலயங்களாகும்.

### இலங்கையின் முதல் சைவத்தமிழ்ப் பெண்கள் கல்லூரி (இராமநாதன் கல்லூரி) நிறுவல்

காலமெல்லாம் நிலைத்திருக்க வேண்டுமென்ற நினைவோடு கட்டப்பட்டது இக்

கல்லூரி, எந்த ஒரு வள்ளலாலும் நினைத்துப் பார்க்க முடியாத அளவில், 1913ஆம் ஆண்டு பெருந்தொகை நிதியை செலவழித்துக் கட்டப்பட்டது.

அந்நியர் ஆதிக்கத்தின் பிடியில் நம்நாடு சிக்கித்தவித்த காலம், மக்கள் சுதந்திரமற்ற வராய் சுதேச கலாசாரத்தைப் பேண முடியாத வர்களாய் வாழ்ந்தனர். கல்வி, சமயவாழ்வு, பண்பாடு யாவும் சீரழிக்கப்பட்ட நிலையில் மதம் மாற்றம் ஒன்றையே இலக்காக மக்களுக் குக் கல்வி புகட்டப்பட்டது. கிறீஸ்தவப் பாதிரிமார் ஆங்காங்கு பாடசாலைகளை அமைத்துக் கல்வி புகட்டினர். வேறு வழியி ன்றி சைவப்பிள்ளைகள் கிறீஸ்தவ பாடசாலை களை நாடினர். இளைய தலைமுறையினர் சைவத்தைக் காட்டிலும் கிறிஸ்தவத்தை நன்கு அறிந்திருந்தனர். அவர்களது நடை, உடை, பாவனை யாவும் மேல்நாட்டுப்பாணியில் அமைந்திருந்தன. இதனால் பாதிக்கப்பட்ட பெற்றோர் நெஞ்சங்கள் குமுறினர். குமுறல்கள் வெடித்துப் புரட்சி உருவாகும் நிலை ஏற்பட்டது. இந் நிலையில் ஆறுமுகநாவலர் தோன்றித் தலைமை தாங்கிச் சமய மறுமலர்ச் சிக்கு வித்திட்டார்.

இந்த வகையில் ஆறுமுக நாவலரின் வழிகாட்டலைப் பின்பற்றி அஞ்சா நெஞ்ச மும் தற்துணிவுங் கொண்ட இராமநாதன் தன் இலட்சியத்தை நிறைவேற்றினார். பெண் கல்வியில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் 1913ஆம் ஆண்டு மருதனார் மடத்தில் இராமநாதன் கல்லூரி நிறுவப் பட்டது. இது இலங்கையில் நிறுவப்பட்ட முதற் சைவப் பெண்கள் கல்லூரி என்ற பெருமையை உடையது.

**கல்லூரியின் அமைவிடமும் அமைப்பும்**

சைவத்தமிழ்ப் பண்பாட்டு மரபு காக்கும் சூழலில் பெண்கள் கல்வி பயில வேண்டிய அவசியத்தை உணர்ந்து அதற் கேற்ப மருதனார்மடத்தில் வடகீழ் பகுதியில் இருபந்தைந்தேக்கர் நிலப்பரப்பை வாங்கி, அதில் பாரிய அளவிலான கல்லூரியை நிறுவினர். 1910ஆம் ஆண்டு யூன் மாதம் 3ஆம் திகதி, யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சான்றோர் முன்நிலையில் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டப் பட்டது. அப்பொழுது யோகர் சுவாமிகளின் குருவாகிய செல்லப்பாச் சுவாமிகள் அவ்விடத்திற்கு எழுந்தருளி வந்து ஒரு பனை ஒலை விசிறி ஒன்றை சேர். பொன். இராமநாத னுக்கு அன்பளிப்புச் செய்துள்ளார். இது இறைவன் நேரிலே வந்து ஆசீர்வதித் துள்ளார் என்றே கொள்ளவேண்டும். இவ் வாறு அனுபூதி மான்களுடைய ஆசீர்வாதத் துடன் ஆரம்பிக்கப்பட்ட கல்லூரி 1913ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம் திகதி நல்ல முகூர்த்தத்தில் சம்பிரதாயச் சடங்குகளுடன் திறந்து வைக்கப்பட்டது. இச் சம்பவத்தை வெளியிட்ட "இந்து ஓகன்" பத்திரிகை "இக் கல்லூரியின் ஆரம்பம் தமிழர் வரலாற்றில் புதிய சகாப்தத்தை உருவாக்குமென்றும், இது இந்துக்கள் தம் வாழ்வில் நினைவிற் கொள்ள வேண்டிய தினம் என்றும், இப் பணி தேசிய மறுமலர்ச்சிப் பணி" என்றும் சிறப்பித்தது.

பாரிய நிலப்பரப்பில் அமைந்த இக் கல்லூரி பலம் வாய்ந்த கட்டட அமைப்பைக் கொண்டது. நூற்றைம்பது அடி சதுரமான முற்றத்தினைச் சுற்றி மண்டபம், வகுப்பறைகள் நூல்நிலையம், மாணவர் விடுதி, ஆராதனைக் கூடம், கலாசார மண்டபம், எனப் பல வசதிகளோடு கூடியதும், நவீனமாகக் காட்சி

தரும் வகையில் கல்லூரி நிர்மாணிக்கப் பட்டது. நடராஜர் ஆலயமும் சரஸ்வதி மண்ட பமும் திட்டமிடப்பட்ட வகையில் அமைந்தன. "பண்பாட்டுப் புரட்சியின் சின்னமாகக் கல்லூரி விளங்கியது"

"கருதரிய சிற்சபையின் ஆனந்த நிர்த்தமிடுங்
கருணாகரக் கடவுளே - திரிகரணசுத்தியும்
காரிய சித்தியும் அருள்வாய்"

என்பது கல்லூரியின் மகுடவாசகம், ஆத்மீகத்தின் அடிப்படையில், சைவத்தமிழ்ப் பண்பாட்டுப் பாரம்பரியங்கள் பேணும் வகை யில் இக்கல்லூரி அமைந்தது. அதனைச் சுட்டிக் காட்டுவதாக இம் மகுடவாசகம் அமைந்து ள்ளது. பெண் கல்வியின் மறுமலர்ச்சியும் பண்பாட்டுப் புரட்சியின் சின்னமாக இக்கல் லூரி விளங்குவதையும் காணலாம்.

ஒரு சமூகத்தை விழிப்படையச் செய்வ தும் உயர்த்துவதும் கல்வி என்றால்; அத்து ணைச் சிறப்புடையது சமயக்கல்வி என்ற கொள்கையை முன்னெடுத்ததோடு நடை முறைப்படுத்தியவர் சேர். பொன். இராமநாத னேயாவார். இதன் பேறாக அமைந்தவையே இராமநாதன் கல்லூரியும் பரமேஸ்வராக் கல்லூரியுமாகும்.

பெண் கல்வி புறக்கணிக்கப்பட்டிருந்த காலத்தில் சமூகத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திப் பெண்கல்வியில் வியத்தகு மாற்றத்தை ஏற்படுத்தினார். ஒரு ஆணுக்குக் கொடுக்குங் கல்வியிலும், ஒரு பெண்ணுக்குக் கொடுக்கும் கல்வியானது ஒரு சமூகத்தையே அறிவுடையோராக்கும் என்ற கருத்தின் வெளிப்பாடாக அமைந்ததே இராமநாதன் கல்லூரி. பெண்கல்வி புறக்கணிக்கப்பட்டு, சைவத்தமிழ்ப் பண்பாடு சீரழிந்து போன போது சைவத்தமிழ்ப் பெண்களுக்காக ஏற்படுத்தப்பட்டதே இராமநாதன் கல்லூரி. அது தனக்கெனத் தனித்துவமான கொள்கை களைக் கொண்டிருந்தது.

**இராமநாதன் கல்லூரியின் தனித்துவம்**

"பொன் பூத்த மேனியினார் பூக்கொய்து பரமனுக்குப் பன்மாலை அணிவிக்கும் பாங்குடைத்திக் கல்லூரி" என்றும், "திங்கள் சேவண்முகத்தார் திருநீற்றுத் தேசுடனே மங்களஞ் சேர் வாழ்வுபயில் மாண்புடைத்திக் கல்லூரி" என்றும், திரு. சு. நடேசபிள்ளை அவர் கள் கல்லூரியின் மகத்துவத்தைச் சுட்டிக் காட்டுகின்றார். பூக்கொய்து பன்மாலை பரமனுக்கு அணிவிக்குத்திறன், திருநீற்றுத் தேசுடன் விளங்கல், மங்களஞ்சேர் வாழ்வு பயில் மாண்புகளை இக்கல்லூரியில் பயிலும் மாணவர்கள் கொண்டிருந்தனர் எனக் கூறு மிடத்து; இங்கே கல்வி பயிலும் மாணவர்கள் சமூகத்தில் இனங்காணப்பட்டனர். கல்வி முறை வழிபாடு, நடை, உடை, பாவனை, பண்பு ஒழுக்கம் யாவற்றிலும் கல்லூரி மாண விகள் இனங்காணப்பட்டனர். பாதம் வரை நீண்ட பாவாடை சட்டையுடன், தாவணி அணிந்து, கூந்தலைப் பின்னிவிட்டு மலர் மாலை சூடி நீறு பூத்த நெற்றியில் திலக மிட்டு மங்கள கரமாகக் காட்சி அளித்தனர்.

ஆரம்பத்தில் சேர். பொன். இராம நாதன் அவர்கள் கட்டுப்பாடு, ஒழுக்கங்கள், கல்விக் கோட்பாடுகளை வரையறுத்து தானே முன்னி ன்று நடாத்தியும், ஆழமான அறிவும் சைவா சார சீலமும் உள்ள ஆசிரியர் களைத் தேர்ந்து கற்பிக்கும் பணியிலும் ஈடுபடுத்தினார். மாணவர்கள் ஆசிரியருட னுறைந்து கற்கும் குருகுலக் கல்வி முறை

பேணப்பட்டது. மாணவர்கள் கல்வி கற்றலோடு நில்லாது ஆலயப்பணி களிலும் ஈடுபடுத்தப்பட்டனர். பண்ணோடி சைபாட இசைப்பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்கென அமைந்த பூந்தோட்டத்தில் மலர் பறித்து மாலைகள் தொடுத்து மாணவர்கள் காலை மாலை வேளைகளில் நடராசப் பெருமானுக்கு வழிபாடாற்றினர்.

மாணவர்கள் சைவ உணவையே உண்டனர். மாணவர்கள் சைவத் தமிழ்க் கலாசாரம் பேணும் வகையில் உருவாக்கப்பட்டனர். சைவத் தமிழ்ப் பண்பாட்டு மறுமலர்ச்சியின் உன்னத நிலைகண்டு இலங்கையின் பல பாகங்களில் இருந்தும், சிங்கப்பூர், இந்தியா முதலிய வெளிநாடுகளில் இருந்தும் மாணவர்கள் இராமநாதன் கல்லூரிக்கு வந்து தங்கியிருந்து கற்றார்கள் என்றால் இராமநாதன் எந்த இலட்சியத்தை முன்வைத்தாரோ அது நிறைவேறியுள்ளது என்பதே அர்த்தமாகும்.

சைவத்தமிழ்க் கலாசாரம் பேணும் வகையில் புராண, இதிகாச இலக்கியங்கள் கூறும் இலட்சியப் பெண்களை உருவாக்கும் பணி தொடர்ந்தது, பலர் உருவாக்கப்பட்டனர். பலர் உயர்பதவிகளை வகித்தனர். வைத்தியத்துறை, நீதித்துறை, கல்வித்துறை, சமயத்துறை, நடனத்துறை, இசைத்துறைகளில் உயர்ந்து வெளிநாடுகளிலும் தங்கள் செல்வாக்கைச் செலுத்தி இராமநாதன் கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர். திருமண வைபவங்களில் கூட இராமநாதன் கல்லூரி மாணவர்கள் என்றால் பெருமதிப்புச் சமூகத்தில் காணப்பட்டது. சேர். பொன். இராமநாதன் அவர்களால் ஏற்றி வைத்த கலாச்சாரத்தீபம் சமுகத்தில் சுடர் விட்டுப் பிரகாசித்தது. இந்த வகையில் இராமநாதன் நினைவாலயமாகிய இக்கல்லூரி ஒரு நூற்றாண்டு காலத்தில் எத்தனையோ சாதனைகளை நிலை நாட்டி விட்டது என்றே கூறலாம்.

**ஆடவல்லானுக்கு ஒரு ஆலயம்**

ஒரு நூற்றாண்டு காலத்திலும் காலத்தால் அழியாத நினைவாலயமாக விளங்குவது நடராஜர் ஆலயமாகும். சைவமணமும் தமிழ் மணமும் ஒருங்கிணைந்து வளரும் இக்கல்லூரியில் ஆட வல்லான் நடராஜப்பெருமானுக்கு மேல் மாடியில் ஓர் ஆலயம் அமைத்துத் தந்தவர் சேர். பொன். இராமநாதவள்ளலார். ஆத்மீகத்தின் நிலைக்களன்களாக விளங்குபவை ஆலயங்கள். எனவே ஆத்மீகத்துடனிணைந்த கல்வியை வழங்க வேண்டுமென்று எண்ணிய வள்ளல் நன் எண்ணத்தை "பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்" என்ற பாரதி வழிநின்று நிலைநிறுத்தியுள்ளார். அவர் ஆற்றிய பணிகள் ஒவ்வொன்றும் காலத்தால் அழியாத நினைவாலயங்களாக அமைந்துள்ளன.

இவ்வாலயமானது கல்லூரியின் மேற்குப் புறவாயில் முகப்பில் மேல்மாடியில் அமைந்துள்ளது. பாரிய இரும்புத்தூண்கள் இக்கட்டடத்தைத் தாங்கி நிற்கின்றன. பிரதான வாயினூடாகக் கல்லூரி மண்டபத்துள் நுழையும் பொழுதே சரஸ்வதி மண்டபம் அமைந்திருத்தலைக் காணலாம். நடராஜப் பெருமானைத் தரிசிக்கச் செல்லும் மேல் மாடிப் படிக்கட்டின் மேல் மாடத்தில் கல்லூரித் தெய்வம் கலைமகள் அமர்ந்திருந்தலைக் காணலாம். படிக்கட்டுக்கள் வண்ண வண்ணக் கோலங்களால் அழகு செய்யப்பட்டிருக்கும். .நவராத்திரிக் காலங்களில் சரஸ்வதி கல்லூரிக் கலைத் தெய்வத்திற்குக் கொலு வைத்து விசேட ஆராதனைகள் நடைபெறும்.

படிக்கட்டு வழியே சென்று ஆடவல் லானையும், சிவகாமசுந்தரியையும் தரிசிக்க வாய்ப்பு உண்டு. பாரிய இரும்புத் தூண்கள் தாங்கி நிற்கும் ஆலயம் பலம் வாய்ந்த பலகைகளினால் அமைந்த நிலப்பகுதியையும், ஓட்டினால் வேயப்பட்ட கூரையையும், அதனை மறைத்து அடிக்கப்பட்ட பலகைகள் வர்ண வேலைப்பாடுகளுடன் கூடியதாக அமைந்துள்ளது. பாரிய மரக்கதவுகள் ஆங் காங்கே பொருத்தப்பட்டுள்ளன. ஆலயத் திற்குத் தேவையான பொருட்கள் வைப்பதற் குக் களஞ்சிய அறை, கண்டாமணி அடிப்பதற் குரிய அறை வடக்கும், தெற்குமாக அமைக்கப் பட்டுள்ளது.

மரத்தினாலான அழகிய வேலைப் பாடுகளோடு கூடிய ஆலயம் போன்ற அமைப் பில் செய்யப்பட்டு யாழிகள் பொருத்தப்பட்ட பீடத்தில் ஆடவல்லான் நடராஜப் பெருமான் சிவகாமசுந்தரி சமேதராக இருக்கை கொண்டு அருள் பாலித்துக் கொண்டிருந்தலைக் காணலாம். பெருந்தொகையான மாணவர் களும், ஆசிரியர்களும் வழிபடக்கூடிய வழிபாட்டுத் தலமாக இது அமைந்துள்ளது.

ஆலயத்திற்கென அமைநத் பூந்தோட் டத்தில் மலர்கள் பறித்து மாலைகள் தொடுத்து இறைவனுக்குச் சாத்தி வழிபடுவதும், நிறுவு நரால் தெரிவு செய்த திருமுறைப் பாடல் களைப் பண்ணோடு, பாடுவதும், காலை மாலை வேளைகளில் பூசையிற் கலந்து கொள்வதும் விடுதி மாணவர்களின் அன்றாட நிகழ்வுகளாகும். ஆடவல்லானுக்குரிய அபி டேகங்கள் யாவும், நவராத்திரி, சிவராத்திரி விழாக்கள், நாயன்மார்கள் குருபூசைகள், திருமுறை விழாக்கள் யாவும் இவ்வாலயத்தில் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன.

**புனருத்தாரண வேலைகள்**

இத்தகைய ஆலயமானது ஒரு நூற் றாண்டு பழமை வாய்ந்தது. காலத்திற்குக் காலம் ஏற்பட்ட அனர்த்தங்களினாலும் முதுமையினாலும் தன்தனிப் பொலிவை இழந்தது. மேற்கூரை, சுற்றிவர அமைந்த கட்டடங்கள், நிலப்பகுதி, கதவுகள் பழுத டைந்தன. இதனைக் கண்ணுற்ற (அப்பொழுது கல்லூரியில் தங்கி இருந்த) துர்க்காதுரந்தரி அம்மா அவர்கள் 1998ஆம் ஆண்டு மூன்று லட்சம் ரூபா செலவில் ஓரளவு திருத்தவேலை கள் செய்து அதே ஆண்டில் கும்பாபிஷேகமும் நடாத்தி வைத்தார்.

தொடர்ந்து ஆலயம் பழுது பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்ட பொழுது அப் பொழுது அதிபராக இருந்த சிவஞானசுந்தரம் அதிபர் அவர்களும், ஆசிரியர்களும் நலன் விரும்பிகளும் பழைய மாணவர்களிடம் உதவி கோரி நின்றனர். இதனைச் செவிமடுத்த கனடாப் பழைய மாணவர் சங்கம் திருத்த வேலைகளைச் செய்து தர முன்வந்தது. அவுஸ்திரேலிய, இலண்டன் பழைய மாணவர் களும் இவர்களுடன் இணைந்து கொண்ட னர். திருத்த வேலைகளுக்காக 2009ஆம் ஆண்டு நடராஜர் சிவகாமசுந்தரி சமேதராக, இலிங்கம், ஏனைய விக்கிரகங்கள் யாவும் சமாதி ஆலயத்துள் வைக்கப்பட்டுப் பூசை வழிபாடுகள் நடைபெற்றன. வழிபாட்டுக் குரிய தலம் நிலை குலைந்ததால் கல்லூரி பலவழிகளிலும் பாதிக்கப்பட்டது.

50 இலட்சம் ரூபாவை பழைய மாண வர்கள் திருத்த வேலைகட்குச் செலவழித் திருந்தனர். திருத்த வேலைகள் பல்வேறு தடைகளை எதிர்கொண்டது. அப்பொழுது கல்லூரிக்குப் புதிய அதிபராக வேணுகா சண்முகரட்ணம் நியமிக்கப்பட்டிருந்தார். வழி

பாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி வேணுகா சண்முகரட்ணமும், பழைய மாண வர்களும், ஆசிரியர்களும் எடுத்த முயற்சியால் ஆலயத்திருப்பணிகள் அவசரமாக முடித்துத் தரப்பட்டன. கீழ்மாடி வேலைகள் முற்றாகத் திருத்தப்படாதநிலையிலும், தாமதிக்கப்பட்ட சில திருப்பணிகளை விரைவுபடுத்த சேர். பொன். இராமநாதன் அவர்களின் வழித் தோன்றல் D.M. சுவாமிநாதன் (பா.உ) அவர்க ளும், இந்து மாமன்றத்தலைவர் க. நீலகண்டன் அவர்களும், பேராசிரியர் க. சிற்றம்பலம் அவர்களும் ஒத்துழைத்து எடுத்த கடும்முயற் சியால் கும்பாபிஷேகம் நடைபெற இறைவன் திருவருள் கிட்டியது. நல்ல உள்ளம் படைத்த வர்களின் உதவியால் நடராஜர் ஆலயம் புதுப்பொலிவும் இளமையும் பெற்று எழுந்து நின்றது. அதிபர் திருமதி சண்முகரட்ணம் தலைமையில் 21.06.2012இல் குடமுழுக்குப் பெருவிழா சிவகாமசுந்தரி நடராஜப் பெரு மானுக்கு நடைபெற்றது. அதனைத் தொடர் ந்து புதிய அதிபராக நியமிக்கப்பட்ட திருமதி கமலராணி கிருஷ்ணபிள்ளை அவர்கள் கல் லூரி நடவடிக்கைகள், ஆலயம் யாவற்றையும் கவனித்து வருகின்றார். ஒரு நூற்றாண்டைக் கண்ட நினைவாலயங்கள் பல பிரமுகர்களு டைய ஆசியுடன் நூற்றாண்டு விழாவைக் கொண்டாட உள்ளது மகிழ்வான விடயம்.

**கல்லூரி வளாகத்தில் அமைந்த சமாதி ஆலயம்.**

இற்றைக்கு எண்பது வருடங்களுக்கு மேலாக இராமநாதன் அவர்களின் நினை வாலயமாகத் திகழ்ந்துகொண்டிருப்பது இந்து சமாதி ஆலயமாகும். இது கல்லூரி வளாகத் தின் தென்மேற்குத் திசையில் அமைந்துள்ளது. பேரறிஞர்களாலும், வெளி நாடுகளில் இருந்து வரும் பிரமுகர்களினாலும் வணக்கத்திற்குரிய ஆலய மாக இருப்பது ஒரு தனிச்சிறப்பாகும்.

பிரம்மச்சாரியம், கிருகஸ்தம் வானப் பிரகஸ்தம், சந்நியாசமென்ற வாழ்க்கைப் படி நிலைகளில் வாழ்ந்து அருட்பரானந்தசுவாமி களிடம் குரு உபதேசம் பெற்று முழுத்துறவு பூண்டு வாழ்ந்த ஆத்மஞானியே சேர். பொன். இராமநாதன் அவர்கள். இவர் 1851ஆம் ஆண்டு அவதரித்து எண்பது ஆண்டுகள் நிலவுலகில் வாழ்ந்து செயற்கரிய சாதனை களை நிலைநாட்டி 1930ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 26ஆம் நாள் இறைவனுடன் இரண்டறக் கலந்தார்.

இவர் சுகவீனமுற்று இறைபதம் அடைந்த கொழும்பு உவார்ட்பிளேசிலுள்ள சுகவாசஸ்தலத்தில் இருந்து இவரது பூதவுடல் கொழும்பு புகையிரத நிலையத்திற்கு ஊர்வல மாகக் கொண்டு செல்லப்பட்டது. இலட் சோப இலட்சம் மக்கள், பெரியார்கள், அரசினர் இறுதி அஞ்சலி செலுத்தினர். பின்பு கோட்டையில் இருந்து இவரது பூதவுடல் புகையிரதம் மூலம் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வரப்பட்டு ஏற்கனவே அமைக்கப் பட்டிருந்த கட்டடத்தில் சமாதியாக இருத்தி, வேண்டிய கிரியைகள் உரிய முறைப்படி செய்து, மேலே இலிங்க பிரதிஷ்டை வைக்கப் பெற்று அபி டேக ஆராதனை வழிபாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இச்சமாதியைக் கோயிலாகக் கட்டிய வர் அவரது மனைவி லேடி இராமநாதன் அவர்களே. முழுதும் கருங்கற்பொழிவினால் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கூரை விமானம், தூண்கள், நிலம், படிகள், நந்தி, பலிபீடம் யாவும் கருங்கற்களினால் அமைந்தவை. இருபது தூண்கள் ஆலயத்தைத் தாங்கி நிற்கின்றன. கருவறையில் இராமநாதன் அவர் களின் சமாதிமேல் லிங்கம் பிரதிட்டை அமைந்துள்ளது. தூண்களில் அழகிய சிற்ப

வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. நாயன்மார்களின் உருவங்கள், இராமர், மகாவிஷ்ணு, முருகன், விநாயகர், சிவன், இரணியவதம் எனப் பல புராண இதிகாசக் கதைகள் கூறுமளவிற்குச் சிற்ப வேலைப்பாடுகள் திராவிட சிற்பமுறையில் அமைந்துள்ளன. படிக்கட்டுக்களில் யானையின் துதிக்கை போன்ற அமைப்புக்கள் காணப்படுகின்றன. அருகே வசந்த மண்டபத்தில் சிவன், பார்வதி, விநாயகர், முருகன் முதலிய எழுந்தருளி விக்கிரகங்கள் உள்ளன.

ஆண்டுதோறும் இராமநாதனின் குரு பூசை தினமும், மணவாளக்கோல விழாவும் சிறப்பாக அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களினால் கொண்டாடப்பட்டு வருகின்றன. மணவாளக் கோல விழாவில் பாடுவதற்கு இராமநாதேஸ்வரர் ஊஞ்சல் பாட்டும் ஆடுவதற்குத் திரு ஊஞ்சலும் உள்ளன. 2013 ஆனி உத்திரத்தில் இராமநாதேஸ்வரர் ஊர்வலமாகப் பவனிவரச் சகடை ஒன்றை ஆசிரி யர் செல்வி சு. கனகலிங்கம் அன்ப ளிப்புச் செய்துள்ளார்.

**அறுபது ஆண்டுகளின் பின் நடந்த கும்பாபி ஷேகங்கள்**

1930ஆம் ஆண்டு கட்டப் பெற்ற இச் சமாதிக் கோயில் நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களினால் தூண்கள் உடைந்தும், மேற்கூரை பழுதடைந்தும் காணப்பட்டது. திருத்த வேலைகளுக்காக லிங்கம் பாலஸ்தாபனம் செய்யப்பட்ட நிலையில் மீதி வேலைகள் செய்து முடிபடாமல் சில காலம் காணப்பட்டது. இந் நிலையில் 1990ஆம் ஆண்டு அதிபராக நியமிக்கப்பட்ட திருமதி மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் அவர்களின் விடாமுயற்சியினால் துர்க்கா துரந்தரியுதவியோடு, பழுதடைந்த தூண்கள் சரிபார்த்தும், திருத்த வேலைகள் செய்யப்பட்டும் 1992ஆம்ஆண்டு ஒக்டோபர் 14ஆம் திகதி புனருத்தாரண மகாகும்பா பிஷேகம் செய்யப்பெற்றது. இது அறுபது ஆண்டுகளின் பின் நடந்த முதலாவது கும்பாபி ஷேகமாகும். தொடர்ந்து 2003ஆம் ஆண்டில் கும்பாபிஷேகமொன்றும் நடைபெற்றது. மீண்டும் ஆலயத்தில் மேற் கூரை வெடிப்புக்கள் காணப்பட்டது. இதன் திருத்த வேலைகளை சேர். பொன். இராமநாதன் அவர்களின் வழித் தோன்றல் D.M சுவாமிநாதன் (பா.உ) அவர்க ள் இந்தியச் சிற்பிகளை வரவழைத்துச் சிறந்த முறையில் திருத்த வேலைகளை முடித்து, பிராயச்சித்த அபிடேக வேலைகளைத் தானே நிறைவேற்றி, ஆலயத் திருப்பணி வேலை கட்கும், பூசைகள் ஒழுங்காக நடைபெறுவதற்கும் தொண்டர்களையும், அந்தணர்களையும் நியமித்துத் தந்துள்ளார் ஆலயம் செவ்வனே நடைபெறுகின்றது. சமாதி நினைவாலயம் காலமெல்லாம் நிலைத்து நின்று சேர். பொன். இராமநாதன் அவர்களின் புகழினை உலகிற்கு எடுத்துக் கூறும் நினைவாலயமாகத் திகழும்.

**பரமேஸ்வராக் கல்லூரி நிறுவல்**

இராமநாதன் சைவப் பண்பாட்டுச் சூழலில் மருதனார்மடத்தில் கட்டிய இராமநாதன் கல்லூரி சைவப்பண்பாட்டு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது. ஆத்மீக விருத்திக்கும் கல்வி விருத்திக்கும் பெரும் பணி ஆற்றியது. இதனைக் கண்ட மக்கள் நம்பிக்கை அதிகரித்தது. பெண் பிள்ளைகளின் கல்விக்கு ஆற்றிய பணி போல் ஆண் பிள்ளைகளின் கல்வியும் உயரப் பணிபுரிவார் என்ற கருத்தும் நம்பிக்கையும் மக்கள் மனதில் எழுந்தது. 1920ஆம் ஆண்டு கீரிமலையில் கூடிய இந்து இளைஞர் மகாநாட்டில் சைவப் பெற்றோர் சார்பாக விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட சேர். பொன். இராமநாதன் அவர்கள் ஆர்வத்

தோடு செயற்ப்பட்டார். அக்காலச் சூழ்நிலையில் யாழ்ப்பாணத்தில் இருந்த பாடசாலைகள் உலகியல் ஈடுபாடு உள்ளதாக இருந்ததே ஒழிய தேசிய பண்பாட்டின் அடிப்படையில் உயர் கல்வி பெற வாய்ப்பு இல்லாதிருந்தது. எனவே தேசிய பண்பாட்டின் அடிப்படையில் மெய்யறிவு தரவல்ல உயர்கல்வியினைப் பெற்றோர் நாடி நின்றனர். இதன் பேறாக நிறுவப்பட்டதே பரமேஸ்வராக் கல்லூரியாகும்.

தேசிய சமயப்பண்பாட்டுக் கல்வியானது ஆத்மீக வாழ்வுக்கு வழி செய்யும் என்ற நோக்கில் பெண்களுக்காக அமைத்த இராமநாதன் கல்லூரி விழுமியங்களை ஆண்களுக்கும் வழங்க வேண்டிய அவசியத்தை இராமநாதன் உணர்ந்த செயற்பட்டார். கல்லூரியை அமைப்பதற்கு நிலந்தேடிய பொழுது ஞானப்பிரகாச முனிவர் வழிவந்த சுப்பிரமணியம் என்பவரின் உதவியினால் 1920ஆம் ஆண்டு திருநெல்வேலியில் 25 ஏக்கர் நிலப் பரப்பு வாங்கப்பட்டது. (இந் நிலப்பரப்பில் 5 கிணறு களும், திருவாத்தி மரங்களும் ஒரு ஞானியின் சமாதியும் இருந்ததாகக் கூறப்படுகின்றது) இந்தப் பாரிய நிலப்பரப்பில் அன்று இலங் கையில் எங்குமே காணப்படாத பாரிய அமைப்பாக கல்லூரி உருவாக்கப்பட்டது. கல்லூரியின் நோக்கம்; ஆத்மீக அறிவுத்துறையில் உத்தமமான மனிதரை உருவாக்க வேண்டுமென்பதாகும். இதற்குக் குருகுல வாசமே நல்லது. தாவர உணவுண்டு சாத்வீக வாழ்வு வாழும் பயிற்சியைப் பெற ஆசிரியருடன் உடனுறைந்து மாணவர்கள் கற்றலே மேலானது என்று எண்ணிய இராமநாதன் விடுதிச் சாலையையும் நிறுவினார்.

22.08.1921ஆம் ஆண்டு கல்லூரி நிறுவப்பட்டது. கல்லூரி அழகானதும், உறுதியானதும், போதியளவு நீள அகலமுடையதும் மேல்மாடிப் படிகள் தேக்கம் பலகையினால் ஆனவையாக இருந்தன. அகன்ற விசாலமான வகுப்பறைகள், விசாலமான மண்டபம், மாணவர் விடுதி, பரந்த விளையாட்டுத்திடல், சிவாலயம், நூல்நிலையம் யாவும் மாணவருக்குத் தேசிய பண்பாட்டுக்கல்வி விழுமியங்கள் வழங்கும் வகையில் அமைந்து காணப்பட்டன.

**விடுதிச்சாலை**

நூறு மாணவர்கள் தங்கி இருப்பதற்கு விடுதியும் இரவில் குளிர்மையாக உறைவதற்கு கிடுகினால் வேய்ந்த உறுதியான வீடுகள் சாணியினால் மெழுகப் பெற்று அமைத்துக் கொடுக்கப்பட்டது. விடுதி மேற்பார்வையாளராகச் சைவப் பெரியார் சிவபாதசுந்தரனாரை நியமித்திருந்தார். இவர் தலைமை ஆசிரியராகவும் பணிபுரிந்தார். கல்லூரியின் முதல் அதிபராக இருந்தவர் சேர் அருணாசலம் அவர்களின் மைந்தன் மகாதேவா அவர்களாவர். இக் கல்லூரியில் தலைசிறந்த ஆங்கிலேயர் இந்தியர், இலங்கயைர், அறிஞர்கள் ஆசிரியர்களாகக் கடமையாற்றினார்.

மாணாக்கர் ஆசாரசீலராய்த் தூய உடை உடுத்து, திருநீறு பூசிச் சந்தனப் பொட்டிட்டு வருதல் வேண்டும். காலை மாலை வேளைகளில் மாணவர்கள் வழிபாட்டிற்கென அமைந்த மண்டபத்தில் பரமேஸ்வரனைத் தினமும் வழிபடவேண்டும் என்பதும் அறிவுறுத்தலாக இருந்தது. பிரார்த்தனைக்கென ஒழுங்குசெய்யப்பட்ட தேவார திருவாசகங்கள் பண்ணோடிசைத்து வணங்குதல், நவராத்திரி, சிவராத்திரி விழாக்கள் நாயன்மார் குருபூசைதினங்கள் வருடத்தில் ஆறு அபிடேகங்களும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன.

பல்வேறு இனமதத்தைச் சேர்ந்தவரும் கற்றிருக்க வாய்ப்பு இருந்தது. பர்மா, ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் மாணவர்கள்

கற்றிருந்தனர். சிங்கள மாணவர்களும் கற்றார்கள். எங்குமில்லாத அளவுக்குக் கல்லூரி ஆய்வு கூடமும், நூலகமும், இருந்தன. நூல்கள் பல்கலைக்கழகத்திற்குப் போதுமான அளவு இருந்தன. அன்பளிப்புச் செய்தவை, காலத்திற்குக் காலம் தேடியவை, தமிழ், ஆங்கிலம், வடமொழியில் ஏராளமான நூல்களும், பிரித்தானிய கலைக்களஞ்சியங்களும், புதிய நூல்களும் விறாக்கைகளில் ஒழுங்காக அடுக்கப்பட்டிருந்தன. ஆய்வுகூடமும் முதற் தரமானதாக அமைந்திருந்தன. ஆய்வுக்கு வேண்டிய உலோக வகைகள் கருவிகள் யாவும் அணியணியாக இருந்தன. எல்லா வசதிகளும் இருந்ததினாலே இரசாயன வகுப்பு நடைபெற்றது.

சேர். பொன். இராமநாதன் அவர்களால் எழுதப்பெற்ற "பரமேஸ்வராக் கல்லூரி மாணவரின் இலட்சியங்கள்" என்ற நூல் மாணவர் பெற்றோர் மக்கள் அனைவரும் கல்லூரி வழங்கும் கல்வியின் தன்மையை உணரும் வகையில் எழுதியுள்ளார். கல்லூரியானது இந்திய ஞானிகளின் ஞானத்தோடு தமிழ் வடமொழி இலக்கியச் செல்வங்களும் இணைந்து, பிரித்தானியரின் மிகச்சிறந்த கல்விப் பாங்கினைத் தமிழ்ச் சிறுவர் பெறக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தும் வகையிலே கல்லூரி தாபிக்கப்பட்டது. இக்கல்வியில் இம்மையிலும் மறுமையிலும் இன்பம் பெறலாம் என்பதும்; நல்ல மாணவர்கள் நாடெங்கிலும் உருவாகும் வாய்ப்பும் சுட்டிக் காட்டப்படுதலில் சேர். பொன். இராமநாதன் அவர்கள் அதி உன்னதமான கல்வி இலக்குகளையும் கொண்டிருந்தார் என்பது புலனாகும். கல்வியின் மூலம் சமுதாயத்தையும் நாட்டையும் உயர்த்தலாம் என்பது இராமநாதனின் இலக்காக இருந்தது. ஆசிரியப் பணி மூலம் ஆத்மீக விழுமியங்களை மாணவர் மத்தியில் விருத்தி செய்தமை கல்லூரி வரலாற்றில் சிறப்பம்சமாகும். ஆங்கிலேயரை ஆசிரியராக நியமித்ததினால் வரப்பட்ட மாணவர் தொகை நாளுக்கு நாள் கூடவே இராமநாதன் அவர்களின் இலட்சியம் நிறைவேற்றக்கூடியதாக அமைந்தது.

பரமேஸ்வராக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியில் இருந்து பல்கலைக்கழகக் கல்வி வரை கல்வி வழங்கப்பட்டது. தேசிய பண்பாட்டு மறுமலர்ச்சி, ஆன்மீக விருத்தி முன்னேறிக் காணப்பட்டது. ஆங்கிலக் கல்வியில் கல்லூரி முன்னேற்றமடைந்தது போல் ஆத்மீகத்திலும் மேலோங்கிக் காணப்பட்டது. 1921ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து ஆரம்ப இடைநிலை வகுப்புகளும், 1922இல் இலண்டன் பல்கலைக்கழக விஞ்ஞான இடைநிலைப் பரீட்சை வகுப்புக்களும் நடைபெற்றன. 1924இல் கல்லூரி இலண்டன் பல்கலைக் கழகப் பட்டப்பரீட்சைக்கு மாணவரைத் தயார் செய்யும் கல்லூரியாக அப்பல்கலைக் கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்டது. ஆரம்பக் கல்வியில் இருந்து பல்கைலக்கழகக் கல்வி வரை பரமேஸ்வராக் கல்லூரி உயர்ந்து நிற்கின்றது. பத்திரிகை வாயிலாக மக்களை சேர். பொன். இராமநாதனுக்குப் பாராட்டுக் களையும் நன்றிகளையும் தெரிவித்தவண்ணமிருந்தனர். சேர். பொன். இராமநாதன் அவர்கள் கல்லூரியை வளம்படுத்த வளங்களையும் விட்டுச்சென்றுள்ளார். 1930இல் நிறுவுனரின் மறைவுக்குப் பின் அவரது பாரியாரும் மருகர் சு. நடேசபிள்ளையும் கல்வி நிர்வாகப் பொறுப்பை ஏற்று நடத்தினர். முப்பது வருடங்களாகச் ஸ்ரீமான சு. நடேசபிள்ளை அவர்கள் கல்லூரியின் அதிபராக இருந்து நல்ல முறையில் செயற்பட்டார்.

பாடசாலைகளை அரசு பொறுப்பேற்ற சிலகாலங்களில் பரமேஸ்வராக் கல்லூரி **06.10.1947**இல் பல்கலைக்கழகத்தின் யாழ்ப் பாண வளாகமாக இயங்கியது. இலங்கையின் வடபகுதியில் பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற இராமநாதனின் கனவு நனவாகியது.

சேர். பொன். இராமநாதன் தற்துணிவும் அஞ்சாநெஞ்சமும் கொண்ட செயல் வீரர். அச் செயலுக்கு எடுத்துக் காட்டுக்களாக விளங்கு பவை இராமநாதன் கல்லூரி, அதனோடி ணைந்த ஆலயங்கள், பரமேஸ்வராக் கல்லூரி, அதனோடிணைந்த ஆலயமும், பொன்னம்பல வாணேச்சரமாகும். இராமநாதன் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி கல்லூரிகளோடி ணைந்த ஆலயங்கள் பொன்னம்பலவாணேச் சரம் என்பன அவரது பணியை நிலைநிறுத்தும் நினைவாலயங்களாக மிளிரும்.

**பரமேஸ்வரன் ஆலயம்**

யாழ் பல்கலைக்கழகத்தின் இருதயமாக இருப்பது பரமேஸ்வரன் ஆலயம். சேர். பொன். இராமநாதன் அவர்களின் செயற்கரிய செயல்களில் ஒன்று பரமேஸ்வராக் கல்லூரி யின் அங்கமாக இது விளங்குவது **1921**ஆம் ஆண்டு பரமேஸ்வராக் கல்லூரி அமைத்த காலத்தில் இருந்து **1928**ஆம் ஆண்டு வரை கல்லூரியின் மேல்மாடியில் வழிபாடுகள் நடைபெற்று வந்தன. பரமேஸ்வரனின் பெயரால் கல்லூரியை அமைத்த இராமநாதன் அவர்கள் பெருமானுக்குக் கற்கோயில் ஒன்றை எழுப்ப வேண்டும் என்று நினைத்திருந்தார். அவரது எண்ணம் கைகூடியது. **1926**ஆம் ஆண்டு ஆலயத்திற்கு அத்திபாரம் அமைக்கத் திருவருள் கூட்டியது. உரிய சுபமுகூர்த்த வேளையிலே சங்கு, சேமக்கலம், மங்கல முரசு ஒலிப்ப; வேதியர் வேதமோத; திருமுறைகள் பண்ணோடிசைப்ப அதிபர் மகாதேவா, சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் தம்பி தட்ஷணாமூர்த்தி முதலானோர் முன்னிலை யில் சேர். பொன். இராமநாதன் பரமேஸ்வரன் நாமத்தை உச்சரித்தபடி அத்திபார திரவியங் களை இட்டார். அன்று தொடக்கம் கட்டட வேலைகள் தொடர்ந்தன. பாரிய கருங்கற்கள் வியாங்கொடையில் இருந்து புகையிரதமுலம் பரமேஸ்வரா அயலில் வந்து குவிந்தன. அவற்றை மாடுகள் பூட்டிய இரும்பு வண்டிகள் ஆலயத்தில் சேர்த்தன. சில்லுகள் சில சமயம் புதைந்த போது கல்லூரி மாணவர் களும் சேர்ந்து திருப்பணிக்கு உதவினர். ஆலயம் உருவாகியது. வடக்குத் தெற்காக நீளமும், அகலமும் கொண்ட அழகான மண்டபம், **12** பாரிய கற்றூண்கள் தாங்கி நின்றன. **1928**ஆம் ஆண்டு கும்பாபி டேகமும் நிறைவுற்றது.

கும்பாபிடேகத்திற்குக் குருக்கள் போட்ட ப்பட்டியலைக் குறைத்துக் குறைவாகச் செய்ய லாமே என்று கேட்ட வாமதேவனைப் பார்த்து; மகனே கும்பாபிடேக வைபவத்தில் மந்திரலோபம், காரியாலோபம், திவிய லோபம், சிறிதளவு இருத்தலாகாது. சிவபெரு மான் எமக்குத்தந்த செல்வத்தில் உலோபத் தன்மை காட்டலாகாது. மகனே மனங் கோணாமல் தெய்வகாரியத்தைச் செய்வாய் என்றும், சேர, சோழ, பாண்டிய, பல்லவ, விஜயநகர வேந்தர் வழியில் சைவப்பண்பாடு நிலவச் செய்தல் வேண்டும் என்றும் கூறிய போது மகன் பூரண சம்மதத்துடன் ஏற்றுச் சென்று செயற்பட்டார்.

ஒருமுறை தனது நண்பன் தட்சஷணா மூத்தியை அழைத்துப் பரமேஸ்வரன் எழுந்த ருளப் போகும் இப்புதிய ஆலயக் கர்ப்பகிருகம் வெப்பமதிகமுள்ளதாயிருக்கும். சுவர்களின் சுண்ணாம்புச் சூட்டைத் தணிப்பதற்கு சந்த

ணக் கட்டைகளை ஊறவைத்து அரைத்துச் சந்தனக் குழம்பால் அப்புதல் வேண்டுமென்று அறிவுறுத்தினார். இவை இராமநாதன் அவர்களின் பக்தியை எடுத்துக் காட்டுவன. இவ்வாறாக 1928இல் கும்பாபிடேகம் நடைபெறும்போது மண்டபத்திலுள்ளும் புறமும் அலங்கார மண்டபங்கள் போட்டு யாக குண்டங்கள் அமைத்து வேதவிற்பன்னர்கள் பலர்கூடி சாமகானம் பாடிக் கிரியைகள் செய்த னர். திருமுறைகள் ஓதப்பெற்றன. கும்பாபி டேகம் முடித்து மண்டலாபிஷேகப் பூர்த்தியில் மகேஸ்வர பூசையும் நடைபெற்றது.

ஆலய வளர்ச்சிக்கேற்ப பல்கலைக் கழகமும் வளர்ச்சியுற்றது. மீண்டும் 1991இல் கும்பாபிடேகம் ஒன்று நடைபெற்றது. இக் கும்பாபிடேகத்தையும் ஆலயத்திருப்பணி வேலைகளுக்குப், பல்கலைக்கழக இந்து மன்றம், ஆலய இயக்குநர் சபை, துணை வேந்தர், சைவப்பெரியார்கள், பேராசிரியர்கள் அனை வரும் உதவினர். மன்றப் பொருளாளர் பேராசிரியர் சிற்றம்பலம் அவர்களின் அயரா முயற்சியினால் ஆலயம் கோபுரம், பரிவாரக் கோயில்கள், வைரவர் கோயில், சண்டேசுவரர் கோயில், வசந்தமண்டபம் ஆகியன கட்டப்பெற்று 1991.06.02இல் கும்பாபிடேகம் நடைபெற்றது. ஆலயத்தில் ஒழுங்கான பூசை வழிபாடுகள், சிவராத்திரி, நவராத்திரி, குரு பூசைத் தினவிழாக்கள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. இவற்றை இந்துமன்றம், இயக் குநர் சபையும் கவனித்து வருகிறது.

**பொன்னம்பலவாணேச்சரம்**

சிவபூமி என்று சொல்லப்படும் ஈழ நாட்டில் பல சிவாலயங்கள் உள்ளன. மிகப் பழமை வாய்ந்தவையும் சரித்திரப் புகழ் வாய்ந்தவையும், திருமுறையில் இடம்பெற்றவையும் பெயர் கூறுமளவில் நினைவாலயங்களாக விளங்குகின்றன. கோணேச்சரத்தை எடுத்துக் கொண்டால், ஞானசம்பந்தரையும், இராவணனையும் நினைவு கூருகின்றோம். இவ்வாறே பொன்னம்பலவாணேச்சரத்தைக் கண்டவர்களுக்கும் கேட்டவர்களுக்கும் சேர். பொன். இராமநாதனின் நினைவாலயம் என்பதை மறக்கமாட்டார்கள். இது சேர் பொ இராமநாதன் அவர்களின் புகழைக் கொழும்பு மாநகரில் பறைசாற்றி நிற்கும் நினைவாலயமாகும்.

தனிக் கருங்கற் பொழிவினால் ஆக்கப்பட்டதும் வானுற ஓங்கிய கோபுரங்களை உடையதுமாகும். திராவிட கட்டடக் கலையின் அற்புத சிற்பக் கலைப்படைப்புக்களைக் கொண்டு விளங்கும் பெருமையை உடையது. எந்த ஒரு அரச பொருளாதார உதவியும் இன்றித் தன் செலவிலேயே இருபது லட்சம் ரூபாவிற்கும் மேலான பணத்தைச் செலவழித்துத் தனி ஒரு மனிதனாக நின்று கட்டி முடித்த பெருமைக்குரியவர் சேர். பொன். இராமநாதன் அவர்கள் சேர, சோழ, பாண்டிய விஜய நகர மன்னர்கள் ஒரு ஆலயத்தைக் கட்டத் தொடங்கினால் அது அவர்களின் அடுத்த சந்ததியினரே கட்டி முடித்த வரலாறுகள் தான் உள்ளன. ஆனால் தற்துணிவும், ஆத்ம பலமும் ஆளுமையும், கொண்ட இராமநாதன் ஒருவரால் இவ்வாலயத்தைக் கட்ட முடிந்தது என்றால் இது பேசி முடியாத பெருமைக்குரிய நினைவாலய மாகும். கட்டுமானப் பணிகளுக்கு சிற்பிகளும் மனித வளங்களும் இந்தியாவில் இருந்தே வரவழைக்கப்பட்டனர். கருங்கற்கள் வியாங் கொடையில் இருந்து எடுக்கப்பட்டது.

**1. ஆலயத் தோற்றம்**

கொழும்பு மாநகரில் ஒரு சிவாலயம் அமைக்க வேண்டுமென்ற எண்ணம் இராமநாதனின் தந்தையார் பொன்னம்பல முதலியா

ருக்கு இருந்து வந்தது. இறைவன் திருவருளால் அவர் ஒரு மாதுளம் பழத்தைக் கனவிலே கண்டார். அதனைப் பிரித்துப் பார்க்கும் பொழுது உள்ளே சிவலிங்கத்தைக் கண்டார். இறைவனருள் கிடைத்தது என்பதை உணர்ந்த பொன்னம்பலம் முதலியார் ஆலயங் கட்டு வதில் ஆர்வம் கொண்டார். இதற்குரிய காணியை கப்டன் ஜோன் எவாவுல் ஸ்ரோன் என்பவரிடமிருந்து தனது சொந்தப் பணத்தில் வாங்கினார். 1856ஆம் ஆண்டு ஆலயத்தைக் கட்டி முடித்துக் குடமுழுக்கும் செய்து வைத்தார். இவ்வாலயத்தைப் பராமரிக்க கம்பளையில் 500 ஏக்கர் நிலத்தை வாங்கி விட்டார். அதன் வருமானத்தைக் கொண்டு ஆலயம் பராமரிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

**நிர்வாகக் கடமை**

இவ்வாலய நிர்வாகக் கடமைகளே அவரது பரம்பரையில் தோன்றும் முதல் ஆண் வாரிசுக்கே வழங்கப்பட வேண்டுமென்னும் வரையறையும் செய்யப்பட்டது. பொன்னம் பலம் முதலியார் காலஞ்செல்ல அவரது மூத்த புதல்வனைக் குமாரசுவாமியிடம் நிர்வாகப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. 1905இல் குமாரசுவாமியின் மறைவிற்குப் பின் அவரது சகோதரன் சேர். பொன். இராமநாதன் அவர்கள் கோயில் நிர்வாகப் பணிக்கு வாரிசானார். ஆலயப் பணியை நல்ல முறையில் சேர். பொன். இராமநாதன் அவர்கள் முன்னெடுத் தார். அயரா முயற்சியும், தன்நம்பிக்கையும், அற்பணிப்பும் செயல் வீரமுங் கொண்ட இராமநாதன் அவர்கள் பொன்னம்பலவாணேச்சரத்தைக் கற்றகோயிலாக்கிய பெருமைக்குரியவராவார். செங்கற்களாலும், சூழைச் சுண்ணாம்புக் கலவையாலுங் கட்டப்பட்ட ஆலயம் இன்று தனிக் கருங்கற் பொழிவினால் ஆக்கப்பட்ட திருத்தலமாக விளங்க வைத்தவர் சேர். பொன். இராமநாதன் அவர்களே. சைவத் தமிழ் மக்கள் போற்றும், காலத்தால் அழியாத பெரும் நினைவாலயமாகும். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் மறைவிற்குப் பின் இராமநாதன் இராசேந்திரன், இராமநாதன் வாமதேவன், சோமசுந்தரம் மகாதேவா, பத்ம நாதன் ஆகியோர் நிர்வாகப் பணிக்கு வாரிசுக ளாயினர். பத்மநாதனின் மறைவுக்குப் பின் 1974ஆம் ஆண்டு தொடக்கம் பரிபாலன சபை உறுப்பினராகவும், ஆலய அறங்காவல ராகவும் பொறுப்பேற்று ஆக்க பூர்வமான பணிகளை இராமநாதன் வழித்தோன்றல் திரு. டி.எம். சுவாமிநாதன் (பாராளுமன்ற உறுப் பினர்) அவர்கள் செவ்வனே செய்து வருகின்றார்.

**கும்பாபிடேகங்களும் திருப்பணிகளும்**

1907ஆம் ஆண்டு ஆரம்பித்த புனர் நிர்மாணப்பணியானது 1912ஆம் ஆண்டள வில் பூர்த்தியானது. 1912ஆம் ஆண்டு நவம்பர் 21ஆம் திகதி கும்பாபிடேகம் நடைபெற்றது. ஆலயப் பணிகளில் ஈடுபடும் தொண்டர்கள், அர்ச்சகர்கள் இருப்பதற்கு இருப்பிட வசதியும் செய்து கொடுக்கப்பட்டது.

மேலும் திருப்பணி வேலைகள் முன்னெ டுக்கப்பட்டன. 1967இல் கிழக்கு வாசல் இராச கோபுரமும் மேற்கு வாசல் கோபுரங்களும் அமைக்கப்பட்டன. 1974 சிவாகம சௌந்தரி அம்பாள் விக்கிரகம் பிரதிட்டை செய்யப் பட்டது. 1986இல் நவக்கிரக ஆலயமும், சண் டேஸ்வரர் ஆலயமும், கட்டப்பட்டதுடன் சந்தான கோபாலர் திருவுருவம் பிரதிட்டை செய்யப்பட்டுக் கும்பாபிடேகங்கள் நடை பெற்றதுடன் 1999இல் புனருத்தாரண கும்பாபிடேகமும் நடைபெற்றது. கோயில்

வெளி வீதியில் அமைந்த முத்துமாரி அம்மனுக்கும் ஆஞ்சநேயருக்கும் தனிக் கோயில்கள் உள்ளன. சந்திரபவானும் சூரிய பகவானும் பிரதிட்டை செய்யப்பட்டன. தினமும் நடைபெற்று வரும் கோமாதா பூசைக்குரிய பசுமாடுகளும், அபி சேகத்திற்கு பால்தரும் பசுக்கள், வசிப்பதற்குரிய கோமாதா இல்லமும் அமைக்கப்பட்டுள்ளது கோயிலின் சிறப்பம்சமாகும். இவ்வாலயத்தில் ஈசான மூலையில் ஸ்ரீ சொர்ண புஸ்கரணி தீர்த்தத் தடாகம் அமைந்துள்ளது. தலவிருட்சம் மகிழமரமாகும்.

இவ்வாலயத்தின் கர்ப்பக் கிருகத்தில் பொன்னம்பல வாணேஸ்வரரும், அர்த்த மண்டபவாயில் இருமருங்கும் விநாயகரும், முருகனும், மகாமண்டபத்தில் நடராஜ மூர்த்தியும், சொர்ணாம்பிகையும், துவாரபாலகர்கள், அக்கினி குண்டம், ஸ்தம்பத்தை அடுத்து நந்தி பலிபீடம் என்பவற்றைக் காணலாம். கோஷ்ட தெய்வங்களாக, நர்த்தனவிநாயகர், தட்சணாமூர்த்தி, லிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை, சண்டேஸ்வரப் பெருமானையும் காணலாம். மேலும் சோமஸ்கந்த மூர்த்தி ஆலயம், பஞ்சலிங்க தலம், விஸ்ணு ஆலயம் சண்முகப் பெருமான் ஆலயம் அமைந்துள்ளமை சிறப்பம்சங்களாகும்.

**நித்திய அக்கினி நித்திய உற்சவம்**

நித்திய அக்கினி குண்டத்தில் சிவாச்சாரியரால் நித்தியாக்கினி வளர்க்கப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து சுவாமியும் அம்பாளும் பல்லக்கில் உள்வீதி வலம் வருவர். அடியவர்கள் சங்கு, சேமக்கலம் ஒலிக்க "ஓம் நமச்சிவாய" என்ற மந்திரம் உச்சரித்துச் செல்வர். திருமுறைப் பாராயணமும் நடைபெறும். மாலை வேளைகளிலும் இக் கோமம் நடைபெறுதல் வழக்கம். ஆறுகாலப் பூசைகளும் ஆகம விதிப்படி நடைபெறுகின்றன.

**திருத்தலத்தின் சிற்பக்கலை**

இலங்கையில் இந்து மத வரலாற்றில் கருங்கல்லால் மட்டுங் கட்டப்பட்ட ஆலயமாக விளங்குவது பொன்னம்பலவாணேச்சரமாகும். இதன் கோபுரம், சிற்பங்கள் அனைத்தும் தமிழகத்தின் பண்டைய திராவிடக் கலையைப் பிரதிபலிப்பனவாக அமைந்துள்ள கலைக்களஞ்சியமாக அமைந்துள்ளன. வானளாவிய கோபுரங்கள், உள்புறத்திலமைந்த கோஷ்டங்கள், தனித்தனி ஆலயங்கள் உட்புறக் கூரை முகப்பைத் தாங்கி நிற்கும் தூண்கள், சுற்றி அமைந்த மதில்கள் யாவும் திராவிட சிற்பக்லையினைப் பிரதிபலிக்கின்றதோடு, சிற்பியின் அற்புத கற்பனா சக்தியின் படைப்புநுணுக்கத்தையும் கண்டு களிக்கலாம்.

தூண்களில் சிவபிரான் அம்பாளுடன் ரிஷபாரூடராய் எழுந்தருளி இருக்கும் காட்சி, அர்த்தநாரீஸ்வர வடிவம், சந்தான கோபால கிருஷ்ணன் சிற்பம் யாவும் உள்ளங்கவர் காட்சிகளாகும். ஒவ்வொரு கருங்கற்தூண்களிலும் சிங்கத்தின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. சிங்கம் வாயைப் பிளந்த வண்ண முகம் சாந்தமாகவும், அதேசமயம் சிங்கத்தின் இல்பான தோற்றம், கம்பீரம் எடுப்பான தோற்றத்தைக் காணலாம் கருங்கற் பொழிவினால் ஆக்கப்பட்ட சங்கிலியை வாயில் கௌவிய வண்ணம் சிங்கத்தின் தத்துரூபமான உருவத்தினை சிற்பி வடிவமைத்துள்ளமை காணக்கூடியதாக உள்ளது. மேலும் தூண்களில் அழகிய பறவைகள், விலங்குகளின் வடிவங்களும் பொழியப்பட்டுள்ளன. சிவலிங்கத்தின் மீது பாலைச் சொரியும் பக்திப் பரவச

மான பசுவின் தோற்றம், பிருங்கி முனிவரின் தோற்றம், சிவனின் பல்வேறு தோற்றங்கள், பிரதோஷ மூர்த்தி, கண்ணனிடந் தப்பிய கண்ணப்பரின் தோற்றம் திருக்கலியாண சிற்பம் என்பன முழுதும் கருங்கற்பொழி வினால் ஆக்கப்பட்ட அற்புதக் கலைப்படைப் புக்களைக் காண லாம். மேலும் இவ்வாலயத் தில் சேர். பொன். இராமநாதனையும், அவரது மனைவியாரின் தோற்றத்தையும் தனித்தனி சிற்பங்களாகப் பொழியப்பட்டுள்ள காட்சி ஒவ்வொரு வருடைய உள்ளத்திலும் நற் பதிவை ஏற்படுத் தும், திராவிட சிற்பக் கலைச் செழுமையை இவ்வாலயம் கொண்டு மிளிர்கின்றது. செயற்கரிய சாதனையைச் செய்துமுடித்த சேர். பொன். இராமநாதன் அவர்களின் நினைவாலயமாக அமைந்துள்ள பொன்னம்பலவாணேச்சரம் இலங்கையில் பிரசித்திபெற்ற கருங்கல்லான தனிப்பெரும் நினைவாலயமாகும். சைவத்தமிழ் மக்கள் என்றும் நன்றியுணர் வோடு பேணிப் பாது காக்க வேண்டிய கடப்பாடுடையர்.

# Sir Ponnampalam Ramanathan A National Figure with an international Repukation

**By Mrs. Sivasothy Sivasambu Kandasamy**
Old Girl and Retd. vice Principal
Ramanathan College.

I am very proud of writing about Sir. Pon. Ramanathan as an old student, as a teacher and as a vice principal, Ramanathan College. Sir. Pon. Ramanathan was born in 1851 to a noble and illustrious Tamil family, already highly distinguished in public service. In his early days he chose to live not a life of ease and indulgence but a life of continuous service to the society. He qualified as an advocate at the age of 22 and entered the legislative council at the age of 28 as a member nominated to represent the Tamil community. He suceeded his uncle Sir. Mutthucumaraswamy. As a legislator he achieved a greal deal. During that period according to the road ordinance of 1861 which was causing immense hardship and suffering to the people, because it required every adult male to offer free of all payments 6 days compulsory labours on roads. So in 1880 he moved ammendments to the Road Ordinance of 1861 Also in 1880 he moved that a post office Savings Bank be established.

**Services to the Lankan Communities:-**

To Buddhism : In 1885 he did a great service for Buddhism by setting in motion agitation which secured the accepance of Vesak Day as a National Holiday. A brilliant speech by him ensured the inactments of the Buddhist Temporalities Bill. His talk was appreciated and the media in 1889 stated, "The Buddhist as a natianl sect, owe Mr. Ramanathan a deep debt of gratitude. His interest in the question of vesak holiday and the Buddhist Temporalities Bill, his encouraging words to the Buddhist students of the Pali College and Theosophical society and a host of other Services to Buddhism have endeared him immensiy to the Buddhists of Sri Lanka"

**Service to Muslim Community**

In 1885 he rendered a signal service to the muslim community by sucess fully opposing the passage of the ordinance for the registration of Mohammedan marriages which the muslim community Found offensive.

**Service to Hindu**

He did much for the Hindus. He had the Ponnambala vaster Temple in Colombo, Originally built and endowed by his father;

renovated and rebuilt. He Founded the Ramanathan College for girls and the Parameshwara College for boys. Which is functioning as theJaffna Campus, He was the president of Thiruvalluvar. Maha sabai in madras - (Chennai) - the leading Tamil Cultural Body of the time He was considered as the father of Hindu Board of education. His work on the establishment of a National - Univer is widely acknowled ged A Hall of residence at the Peradeniya Campus named after him.


**Service to christians:-**

He was an author of considerahle distinction. In 1898 and 1902 he gave to the world two monumental volumes on st Mathew and st Jhon. They are exhaustive, authoriative and illuminating. interpritations of the christian gospel in the light of his Gnani - Yoga. Internationally these books were widely acclaimed. He translated Bhavat Geeta from sanskrit into Tamil in 1904. Another work in 1906 the culture of the soul among the western nations was published in New - York.

In the field of legal education his woork was outstanding. He was the main in re - organising the entire scheme of legal education in 1888. Nearly 4 years he had delivered lectures arranged by the council of legal education. He was the solicitor General of Sri Lanka for 14 years. In 1915 riots in Sri Lanka broke between muslims and sinhalese due to procession of Esala perehera and many great sinhalese including Dias Bandaranyaka were retained in jail. Sir Ramanathan as a solicitor argued and released them after 46 days.

He believed passionately in national unity. He was proud of his own people - the Tamils of whom he was the representative. But he cared deeply for all other races and communities in habit ing our Island home. A statesman and sage, Scholar, jurist, author, philosopher and man of religion, palriot and philanthropist, educational reformer idol of the nation, his versatality was astounding. It did not seem possible that one man could have had the audacity to attempt to do so much let alone accomplished so much of inestimable value to the society. in which he lived. His life had a sweep of Breath caking majesty one can go on at length with the chronical of Ramanathans achievements in so many areas of national life. But time does not permit such a recitation - nor is it required for his life is well documented.

Finally exlend my deep grattiude to those who helped to write this article and to my husband late Ponnambalam kandasamy an adovcate gave me the legal points.



# சேர். பொன். இராமநாதன் அவர்களின் மகத்தான பணிகள்

சு. தேவமனோகரன்
M.A. MED PGDE
PGDEM SLEAS III
பிரதிக் கல்விப் பணிப்பாளர் திட்டமிடல்
வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம்

*சேர் பொன் இராமநாதன் அவர்களது பணிகள் அவர் வாழ்ந்த காலத்தின் தேவைக் கேற்றவாறு அமைந்துள்ளது. 16.04.1851இல் பிறந்த இவர் கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி கற்று மேற் படிப்புக்களை வெளிநாடுகளுக்குச் சென்று கற்றார். கல்வித் துறையில் உயர்ந்த நிலையில் இருந் தமையால் இவரது பணி அரசியல், சட்டம், சமூகம், சமயம், மொழி சார்ந்ததாக அமைந்திருந்தது.*

*கல்வி கற்ற இலங்கையர் என்ற பெருமையைப் பெற்ற இவர் ஆங்கிலேயரின் ஆட்சியிலிருந்த இலங்கை சுதந்திரம் பெறுவதற்குப் பணியாற்றினார். இலங்கை சட்டவாக்கக் கழகத்தில் உறுப்பினராக இருந்த போது இலங்கைச் சட்டக் கல்லூரியை நிறுவுவதிலும் முன்னின்று உழைத்தார்.*

*1913இல் இணுவில் மருதனா மடத்தில் சைவப் பெண் பிள்ளைகள் கல்வி கற்பதற்கு வசதியாக இராமநாதன் கல்லூரியை மிகப் பெரிய அளவு காணியில் மிகப் பெரிய கல்லூரியாக அமைத்தார். இக் கல்லூரி அமைவிடம் சிறப்பாக அமைந்த காரணத்தினால் (யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியும் கைதடி மானிப்பாய் வீதியும் சந்திக்கும் முக்கியமான இடம்) பிள்ளைகள் இலகுவாகப் பாடசாலைக்கு வரக்கூடியதாக அமைந்தது. இப் பாடசாலை பரந்த இடத்தைக் கொண்டமைந்துள்ளதால் பின் வந்த காலங்களில் பல பாடசாலைகள் தற்காலி கமாக நடைபெறுவதற்கும் கல்வி அலுவ லகம் செயற்படுவதற்கும் இன்னும் பல தேவைகளுக்கும் பயனுடையதாக அமைந் தது.*

*1921இல் ஆண் பிள்ளைகள் கல்வி கற்பதற்காக பரமேஸ்வராக் கல்லூரியை அமைத்தார். இது பரந்த இடத்தைக் கொண்டமைந்ததால் பின்வந்த காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிப்பதற்கு வழிவகுத்தது. இங்கே பரமேஸ்வரன் ஆலயம் கட்டப்பட்டிருப்பது மிகச்சிறப்பானதாகும். யாழ்ப்பாணத்திலிருந்து 3 கிலோ மீற்றர் தூரத்தில் போக்குவரத்து வசதிகளுடன் அமைந்ததால் பல்கலைக்கழகத்திற்கு இன்று அனைவரும் இலகுவாகப் போய்வரக்கூடியதாக உள்ளது.*

*1915 இல் இலங்கையில் சிங்கள முஸ்லிம் கலவரம் ஏற்பட்டபோது அதனைச்*

சுமூகமாகத் தீர்த்து வைப்பதில் சேர். பொன். இராமநாதன் அவர்கள் முக்கிய பங்காற் றினார்.

*1912*இல் பொன்னம்பலவாணேச் சரம் சிவன் கோவில் கருங்கற்களால் இவரால் கட்டப்பட்டதாகும். பகவத் கீதையை தமிழில் மொழி பெயர்த்தமையும் இவரது சமயப் பணிக்கு ஓர் எடுத்துக் காட் டாகும். நாவலர் அவர்களின் பணியைத் தொடர்ந்து இவரது சைவசமயம் சார்ந்த பணிகள் குறிப்பிடக் கூடிய அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தவை யாக அமைந்தன.

இவரது பணிகளில் முக்கியமாக குறிப் பிடக்கூடிய இன்னொரு பணி கொழும்பு யாழ்ப்பாணத்தினூடாகக் காங்கேசன் துறை வரையிலான புகையிரதப் பாதையை அமைத் ததாகும். பெருந்தொகைப் பணத்தில் செய்யப் பட்ட இப்பணிக்குத் தடைகள் இருந்த போதும் இதனூடாகப் பின் வந்த காலங்களில் போக்குவரத்து வசதியாக்கப்பட்டதுடன் இதன் மூலம் பெரிய வருமானமும் கிடைத் தது.

*26.11.1930.* இல் இவர் இறக்கும் வரை தம்மாலான பணிகளை நாட்டிற்கும் மக்களு க்கும் செய்துள்ளார். இவரது பணி கள் இன்று வரை நினைவு கூரப்படுகிறது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இவருக்கு சிலை வைக்கப் பட்டுள்ளதுடன். மாணவர்கள் விடுதி ஒன்றிற் கும் இவரது பெயர் சூட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். கொழும்பில் முன் னைய பாராளுமன்றத்தின் முன்னாள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்றலில் இராமநாதன் கல்லூரி வளவில் இவரது சிலை கள் நிறுவப்பட்டுள்ளன. தனது சொத்துக் களைப் பொதுமக்களுக்கு அர்ப்பணித்தமை இவரது தன்னலமற்ற பணியாக மதிக்கப் படுகிறது.

இவரால் பெண் பிள்ளைகள் கற்பதற் கென கட்டப்பட்ட இராமநான் கல்லூரி நூற்றாண்டு கடந்த நிலையில் நூற்றாண்டு விழா கொண்டாடுவதற்கான செயற் பாடுகளைச் செய்து கொண்டிருக்கின்றது. பாடசாலைக் கட்டடங்கள் புது மெருகூட் டப்பட்டு சுற்று மதில்கள் மீளமைக்கப்படு கிறன. நூற்றாண்டுகளிற்குப் பின்னர் புதிய பாடசாலையாகக் காட்சி தருகின்றது. இங்கு பணியாற்றும் அதிபர் ஆசிரியர்கள் மாணவர் களது பெற்றோர் களது நலன் விரும்பிகளினது முயற்சியால் இப்பாடசாலையில் நூற்றாண்டு விழா உன்னதமாகக் கொண்டாடப்படுவதற் கான வேலைத்திட்டங்கள் நடைபெறு கின்றன. இப் பாடசாலை மென்மேலும் பல சாதனைகள் படைத்து இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு கல்விப் பணி ஆற்ற வேண்டும்.

# நினைவியல்



# இந்துப் பண்பாட்டின் வற்றா ஊற்று

சகிதேவி கந்தையா
B.A. Hons Tamil Dip. in. Ed Lady
இராமநாதன் அம்மையாரால்
தங்கப்பதக்கம் வழங்கப்பெற்றவர்.

19ஆம் நூற்றாண்டு நீலக் கடல் சூழ் எம் உலகின் பெரும் பகுதி சூரியனே மறையாத பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜமாக - மேலை நாட்டு நாகரிகம் கிறிஸ்தவமதமென ஒரு புதுமையின் விஸ்தீரணத்தில் பொலிவு பெறத் தொடங்கிய காலப்பகுதி கிறீஸ்துவச் செமினறி (வட்டுக் கோட்டை), கிழக்காசியாவின் முதற் பெண்கள் பாடசாலை (உடுவில்) விரிந்த உயர்ந்த கல்லூரியாக யூனியன் கல்லூரி (தெல்லிப் பளை)யென யாழ்ப்பாணக் குடாநாடு கிறீஸ் தவப்பள்ளிகளின் பெருமை மிகு நிலைக்களமானது. புதியன கண்டு அதிசயித்த எம் பெற்றோரும் தம் பிள்ளைகள் செல்லும் பாதையை அக் கல்லூரிகளை நோக்கித் திசை திருப்பினர். காலங்காலமாக ஒரு பண்பாட்டில் யாழ்ப்பாணத்தில் பெருமையுடன் வாழ்ந்த மக்களை இந்நிலை மிக வருத்தியது. பிள்ளைகளை என்ன செய்வது? யாரிடம் எடுத்துரைப்பது? யார் உளர் ஒருவர் -

அக்காலப் பகுதியில் சிங்கள முஸ்லிம் மக்களின் பெருமதிப்பைப் பெற்ற தமிழ்த்தலைவன், படித்தோர், பிரதிநிதி, செஞ்சொற்சான்றோன் பல்வேறு நாடுகள் விஜயத்தால் உருவான ஒரு முழுமையான ஆளுமையின் கம்பீர வடிவம் சேர். பொன் இராமநாதன் எம் சிறுதீவின் பல்வேறு வளர்ச்சிகளையும் சிந்தித்து நிர்மாணித்துச் செயற்படுத்திய சீராளன். உள்ளத்தில் ஒரு பெரும் புயல் கருக்கட்டி மையம் கொண்டது. சிலப்பதிகாரம், புறநானூறு, திருக்குறள், இத்தியாதி இலக்கியச் சிறப்புக்கள் நிறைந்த எம் இன்பத் தமிழ், பல்லாயிரம் ஆண்டுகள் கங்கா நதிதீரம் தொட்டுப் பரந்த, உயர்தத்துவங்களில் உருவான எம் சமயம் - நிறங்குன்றி சிறுகச் சிறுக மறைந்து போவதா? பார்த்துக் கொண்டு வாழா இருக்கலாமா?

வழிதேறா கல்வி அதுவும் பெண் கல்வி, எம் நாட்டில் நீண்ட காலம் நிலைத்து நிற்கும் தன் பெரும் செயற் பாட்டின் பண்பாட்டுப் புரட் சியை பெண்கல்வியை முன்வைத்துத் தொடங் கினார். பெரியார்-நிலைத்தது இவர் சீரிய சிந்தனை - நீண்ட காலம் நிலை பெயராது நிலைத்தது. 100 ஆண்டுகள் கிளைபரப்பி நிலைத்தது.

மருதனார் மடம் சந்தியில் தன் பரம்பரைச் சொத்து காடுமண்டிக் கிடக்கிறது - காடு கொன்று நாடாக்கினர்.

வழிதேறா பாடின் எழுந்தது Eton, Harow வுக்கு நிகராக மாணவர் ஆசிரியர் உடன் உறைந்து கற்க பெண் பாடசாலை பொறுக்கி யெடுத்த ஆசிரியர் திறமை மிகு (principal) தலைமை ஆசிரியர் மேலை நாட்டின் திறமை தெரிந்தவர் - பின் தமிழ்மக்கள் தந்த நிர்வாகத்திற னுடைய கீழ்நாட்டவர் தலைமையில் கல்லூரி இயங்கி யது

செய்வது அறியாது வீட்டில் அடைப ட்டுக் கிடந்த பெண்கள் கிளம்பினார்கள் புற்றீசலாய், நிறைத்தனர். பாடசாலையை நிறை திருநீற்றுப் பூச்சுடன் பட்டுப் பாவா டையில் வெண்நிலவில் பந்தாடி மகிழ்ந்தனர். கற்றனர் பல கலைகளை. நீல கண்டன் அருள் மழையில் நனைந் தனர். பிரபஞ்ச எழிலை (Mocrocosim) ஒரு சிறு பவழப் பேழை யில் வளர்த்து (Microsim) உலகுக்கு ஈர்த்த பெருமை இராமநாத வள்ளலுக்குண்டு இவர் நிறுவியது ஒரு பெண் கல்லூரி, ஒரே ஒரு அலைவரிசை. 100 ஆண்டுகளாக இது விடாது உலகிற்கு ஒலி பரப்பிக் கொண்டிருக்கும் செய்தி களோ விரிந்தவை, புரட்சிகரமானவை கேட்டு எம்மை மாற்றும் பல்வேறு பண் பாட்டுச் செழுமை மிக்கவை. இந்தப் பெண்கள் அலைவரிசை (Channel) உலகிற்கு எடுத்துக் கூறியது....

பழம் பெரும் பண்பாடு புத்துடையில் ஆங்கில மொழி தந்த எல்லா நிறை கல்வியும் தமிழ் சைவப் பண்பாட்டிற் குழைத்து, விஞ் ஞானம் மெய்ஞானத்துடன் பல்கலையும், பாங்காக - நடனம் பூக்கோலம், மாலை கட்டுதல், இறைவனை அலங்கரித்தல் புரிந்து ணர்வு டன் நடந்து கொள்ளும் தனிப்பண்பு, கிறீஸ்தவக்கல்லூரிகட்கு ஒரு வகையில் போட்டியாக எழுந்தாலும் தன் பண் பாட்டை வளர்க்கும் ஒரு குறியுடன் மாத்திரம் செயற்பட்டு அவர்கட்குரிய மதிப்பைக் கொடுத்து எமதை நாம் வாங்கும் ஒரு உயர் பண்டமாற்று முறையை, தாபகரின் விஸ்வ ரூப ஆளுமை எமக்கே உரியது. இதனால் பாடசாலையும் ஓங்கி உலகளந்த கல்லூரியாக ஒரு தனி முத்திரை பெற்றது. தமிழ் நாட்டு அறிஞர், சங்கீத வித்தகர், நடன மேதைகள் எங்கள் கல்லூரியை வந்து பார்ப்பதில் பெருமையும் கண்டனர்.

மருதனார்மடச் சந்தியில் ஒலித்த சைவத் தமிழ்ப்பண்பு சுற்றுச் சூழலைவிழித் தெழச் செய்து பிற பாடசாலைகளையும் (மகாஜனா) தட்டி எழுப்பி பல்வேறு புதிய பாடசாலை கட்கும் வித்திட்டது. திரு. இராஜ ரத்தினம் அவர்கள் ( Hindu Board) இத்துடன் நிற்கவில்லை.

இன்று இது ஒரு கோளவியல் (Global) அலைவரிசை. கனடா நாட்டில் எம் கல்லூ ரியில் கற்ற இல்லத்தரசிகள் உயர்பண்பாட்டு டன் எடுக்கும் நவராத் திரிக் கொலு, லண்டன் மாநகரில் அரங் கேறும் நாட்டிய நாடகங்கள் உகண்டாவில் நளினமாகத் தோகை விரித் தாடும் வண்ணமயில், ஜேர்மனியில் நடை பெற்ற நடனப் போட்டி திகைக்கத் தான் செய்கிறது.

இங்கு வரையப்பட்டது தனிப்பட்ட ஒரு மூதாட்டியின் உளறல் அல்ல. உண் மையின் விரிவே பல்லாயிரம் பெண்களை உருவாக்கி மகிழ்ந்த எம் கல்லூரி என்னைப் போற்றி வளர்த்த அன்புத்தாய் என் பெரிய

தாயார் 2ஆம் மாணவி. தாயார் 6ஆம் மாணவி. நான் முதலாம் வகுப்பு முதல் பி. ஏ. hons Tamil வரை படித்துப் பின் ஆசிரியை யாய்க் கடமையாற்றிய கல்லூரி என் ஆளுமைக்கு ஒரு வடிவம் உண்டென்றால் அது இக் கல்லூரி தந்தது. கத்தோலிக்கப் பெருந்தகை Fr தனி நாயகம் உலகம் வலம் வந்த உத்தமன். 59 ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் எடுத்த புத்தகக் கண்காட்சிக்கு என்னை காரியத ரிசியாக்கிக் கூறியது. எம் கல்லூரியின் மதிப்பை தெற் றெனக் காட்டுகிறது தமிழ் பண்பாடென்றால் அது இராமநாதன் கல்லூரியில் தான் உண்டு" சேர் இராமநாதன் கொணர்ந்த புரட்சி உருப் பெற்று மற்றவர் மனதில் பெருமையுடன் மதிக்கப்படுகின்றது.

நான் எடுக்கும் அடுத்த அடிஎன் கடைசியடியாக இருக்கலாம். இதனால் என்னைப் பலர் மதிக்க ஒரு பண்பாட்டுச் சூழலில் உலவவிட்ட என் அன்னையின் " றோஜா" மலர்ப்பாதங்களில் என் சிரசைத் தொட்டு மகிழ்கிறேன்.

அன்னையே

மணிதரளம் வீசி அலைகொள் விரி நதியாய் என்றும் பரக்க உன்புகழ்.



# கல்லூரி நினைவுகள்

திருமதி ஞானேஸ்வரி சோமசுந்தரம்
முன்னைநாள் அதிபர்
தலைவர் - பழைய மாணவர் சங்கம், கொழும்புக்கிளை

இராமநாதன் கல்லூரி தனிப்பெருஞ் சிறப்புடையது. இதுவே இலங்கை வாழ் இந்துமதப் பெண்களுக்கென விடுதி வசதி யோடு கூடிய முதல் ஆங்கிலக் கல்லூரி ஆகும். அத்துடன் பின்னர் தோன்றிய இந்து மதப் பெண்கள் பாடசாலைகளுக்கெல்லாம் முன் மாதிரியாகவும் விளங்கியது. அப்பாடசாலை களின் ஆரம்பக் காலத்தில் அவற்றில் கற்பிப் பதற்கு வேண்டிய ஆசிரியைகளிற் பெரும் பகுதியினரையும் இராமநாதன் கல்லூரியே அளித்து வந்தது. இத்தகைய பெருஞ் சிறப்பு வாய்ந்த எம் கல்லூரி நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவது பெரும் மகிழ்ச்சிக்குரிய தாகும். எனக்கு இக் கல்லூரியுடன் மிக நீண்ட காலத் தொடர்பு நாற்பது ஆண்டுகள் உண்டு என்பதில் நான் பெருமிதம் அடைகின்றேன். மூன்று ஆண்டுகள் மாத்திரமே நான் இங்கு மாணவியாக இருந்தேன். எனினும் முப்பத் தியேழு ஆண்டுகள்வரை ஆசிரியைகாகப் பணி புரியும் பெரும் பேற்றினைப் பெற்றிருந் தேன். இக் கல்லூரியில் நான் உதவி ஆசிரியை யாகவும், பின்னர் பிரதி அதிபராகவும் இறுதி யில் அதிபராகவும் பணி புரிந்தேன். அக் காலப்பகுதியில் நடைபெற்ற நிகழ்வுகளையும் நான் பெற்ற அனுபவங்களையும் இக் காலத்தவரும் அறியும் பொருட்டு இக் கட்டு ரையை எழுத முன்வந்தேன்.

இக் கட்டுரையை எழுதுவதற்கு இன் னொரு தூண்டுதலும் உண்டு. ஆரம்ப காலத்தில் கல்லூரி எவ்வாறு இருந்தது என்பது பற்றி அறிய வேண்டும் என்ற ஆவல் எனக்கு காலம் கடந்து தோன்றியது. கல்லூரி விழாக் களிலெல்லாம் Admission No 2 எனத் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டு வந்து சிறப்பித்த திருமதி ரங்கநாயகி கனகசபை அவர்களிட மிருந்து அக் கால நிகழ்வுகள் பற்றி அறியாமல் விட்டோமோ என்ற ஆதங்கம் எனக்கு ஏற் பட்டது. இதற்கு ஈடு செய்யும் முகமாக கல்லூரியின் திறப்பு விழா அன்றே இக் கல்லூரியில் கல்வி பெற வேண்டி சேர்ந்த திருமதி சிவநாயகி தியாகராஜா அவர்களிட மிருந்து பவளவிழா மலருக்கு ஒரு கட்டுரை யைப் பெற்றோம். தொண்ணூறாவது மாணவியாக அனுமதி பெற்ற அவர். தாம் அங்கு கற்ற காலத்து நிகழ்ச்சிகள் சிலவற்றை விரிவாகவும் அழகாகவும் எழுதியுள்ளார். அத்துடன் 1933ஆம் ஆண்டு இக் கல்லூரியில் ஆசிரியையாகச் சேர்ந்து 1936ஆம் ஆண்டு முதல் 1943ஆம் ஆண்டு வரை அதிபராகவும் கடமையாற்றிய திருமதி இரத்தினா நவரத்தினம் அவர்கள் 11 ஆண்டுகள் தாம் இக்கல்லூரியில் சேவை புரிந்த காலம் பற்றிய தம் நினைவுகளை பவளவிழா மலரில் எம்மோடு பகிர்ந்து கொண்டுள்ளார். மேலும்

பவளவிழா மலரில் வெளிவந்த திருமதி மகேஸ்வரி மகாதேவா அவர்களின் நினைவு நிகழ்ச்சி என்ற ஆக்கம் சேர். பொன். இராம நாதன் அவர்கள் சமாதி நிலை அடைந்த காலம் முதல் 1939ஆம் ஆண்டில் வெள்ளி விழா கொண்டாடப்பட்ட காலப்பகுதி வரை இங்கு கடமையாற்றிய ஆசிரியப் பெருமக்கள் பற்றியும் வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தின் சிறப்பு பற்றியும் எமக்கு அறியத் தருகிறது.

1943ஆம் ஆண்டுதான் நான் இக் கல்லூரியில் கற்கத் தொடங்கிய போதிலும் எனது மூத்த சகோதரிகள் நால்வர் எனக்குமுன் அங்கு கல்வி கற்றமையால்1930ஆம் ஆண்டு தொடக்கம் இக் கல்லூரி பற்றி நான் ஓரளவு அறிவேன். பல தடவை நான் அங்கு சென்று வந்ததுண்டு. எனது மூத்த சகோதரி ஒருவர் அங்கு படிக்கச் சேர்ந்த அன்று நானும் என் தந்தையாருடன் அங்கு சென்ற நினைவு உண்டு. அப்போது கல்லூரி அதிபராக கடமை ஆற்றியவர் செல்வி கார்ல்ரன் (Carleton) என்னும் ஆங்கிலப் பெண்மணி ஆவார். அக்காலத்தில் அங்கு நடைபெற்ற விளை யாட்டுப் போட்டி ஒன்றிற்கும் சென்றிருந் தேன்.

1939ஆம் ஆண்டு கல்லூரியின் 25ஆண்டு நிறைவாக வெள்ளி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது என்பதை அப்போது அங்கு மாணவிகளாக இருந்த என் சகோதரிகள் இருவர் அவ்விழாவைப் பற்றி விதந்து கூறியது என் நினைவில் இன்றும் உள்ளது. வெள்ளி விழாவிற்கு அக் காலத்தில் தேசாதிபதியாக இருந்த மாண்புமிகு (Caledcot) கல்டிக்கொற் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அதனைச் சிறப்பித்தார் எனவும் இளங்கோவடிகளின் முத்தமிழ்க் காவியமான சிலப்பதிகாரம் மாண விகளால் நடிக்கப்பட்டது எனவும் அவர்கள் மூலம் அறிந்தேன். பரமேஸ்வராக் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்து கொண்டிருந்த கொக்குவில் குமாரசாமிப்புலவரும், கல்லூரி ஆசிரியை பண்டிதை இராஜராஜேஸ்வரி அவர்களும் சமய பாட ஆசிரியரான திரு. சோமசுந்தரம் அவர்களும் அந் நாடகத்தை மேடையேற்ற உதவினர் என்பதையும் அவர்கள் மூலம் அறிந்தேன். அந் நாடகத்தில் பிரதான பாத்திரம் ஏற்று நடித்த மாணவிகளின் பெயர்களும் இப்பொழுதும் என் நினை விலுண்டு.

நான் 1943ஆம் ஆண்டு Prep.S.S.C வகுப்பில் சேர்ந்தேன். அப்பொழுது நான் பெற்ற அனுபவம் மிகச் சிறந்தது. அக்காலத்தில் சமய பாடம் பரீட்சைக்குரிய பாடமாக இருக்காவிடினும் இரண்டு பாட நேரம் சமய பாடத்திற்கு ஒதுக்கப்பட்டிருந் தது. ஒரு பாடநேரம் ஆறுமுகநாவலரின் நான்காம் பாலபாடத்திலிருந்து சில பகுதி களைப் படித்தோம். மற்றப் பாட நேரத்தில் நாங்கள் அனைவரும் எழுந்து நின்று கல்லூரி ஆலயத்தில் காலை மாலை நடைபெறும் பூசையின் போது பாடப்படும் திருமுறைப் பாடல்களையும் பக்திப் பாடல்களையும் சமய பாட ஆசிரியர் திரு. சோமசுந்தரம் அவர்களின் வயலின் இசையுடன் பாடுவோம். அக் காலத்தில் இராமநாதன் கல்லூரியில் கற்ற அனைவருமே அவரை மறக்க மாட்டார்கள்.

தமிழ் மொழியை எமக்குக் கற்பித்த செல்வி. இராஜேஸ்வரி குமாரசாமி அவர்களை நான் என்றும் நினைவு கூர்வேன். அவர் தமிழில் மிக்க பாண்டித்தியம் உடையவர். அவர் கற்பிக்கும் பாடம் அப்படியே மனதில் பதிந்து விடும். என்னைப் பாராட்டி ஊக்கம் அளித்த அவரை நான் எப்பொழும் நன்றியுடன் நினைவு கூர்வேன்.

வரலாற்றுப் பாடத்தையும், ஆங்கி லத்தையும் கற்பித்த திரு. கணபதி ஐயரவர்கள் மிகவும் திறமை வாய்ந்தவர். நகைச்சுவையுடன் அவர் கற்பிக்கும் பாடம் நினைவில் எப் பொழுதும் நிலைத்திருக்கும். இசையிலும் வல்லவர். பல இசைக்கருவிகளை இசைக்கும் ஆற்றல் உடையவர்.

ஆங்கிலத்தில் சிறப்புத் தகைமை பெற்ற செல்வி.இரத்தினா செல்லையா (திருமதி. இரத்தினா நவரத்தினம்) அவர்க ளிடம் ஆங்கில இலக்கியம் கற்கும் பெரும் பேறும் அப்போது எமக்குக் கிடைத்தது.

மாணவிகள்மீது தந்தையைப் போல் அன்பு காட்டி அவர்கள் நலனிலும் முன்னேற் றத்திலும் மிகவும் அக்கறை உள்ளவராய் கணித பாடத்தைத் திறம்படப் போதித்த திரு. இராம ச்சந்திர ஐயர் அவர்களை என்றும் நன்றியுடன் நினைவு கூர்வோம். 1955ஆம் ஆண்டு சேவையிலிருந்தபோதே அவர் எதிர்பாராது மரணம் அடைந்தபோது கல்லூரி முழுவதுமே சோகத்தில் மூழ்கியது.

வடமொழியைக் கற்கும் வாய்ப்பும் எமக்கு அப்போது கிட்டியது. எனது சகோதரி செல்வி. மகேஸ்வரி தம்பு (திருமதி. ம .மகா தேவா) அவர்களே அப் பாடத்தைக் கற்பித் தார். மாணவிகள் பலர் ஊக்கமுடனும் ஆர்வத் துடனும் அம் மொழியைத் தொடர்ந்து கற்பதற்கு அவர் வித்திட்டார் எனலாம். இலண்டன் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வடமொழிக் கல்வி உதவியது.

தாவரவியலைக் கற்பித்த திருமதி. முத்துக்குமாரு அவர்களும் சுகாதாரமும் உடற் கல்வியும் எனும் பாடத்தைக் கற்பித்த திருமதி. விஸ்வநாதன் அவர்களும் என்றும் மாணவிகள் மனதில் நிலைத்து நிற்பர்.

1945ஆம், 1946ஆம் ஆண்டுகளில் நான் H.S.C வகுப்பில் கல்வி கற்ற காலம் என் மனதில் மிக ஆழமாய் பதிந்துள்ளது. எனது பாடசாலை வாழ்க்கையில் மிகவும் மகிழ்ச் சிகரமான காலப்பகுதி இதுவே. அதிபர், ஆசிரியர்களின் பாராட்டும் ஆதரவும், மனதிற் கினிய நண்பர்களின் உறவு, கல்லூரியின் மிக உயர்ந்த வகுப்பில் கற்பதால் ஏற்பட்ட மதிப்பு எல்லாம் அப்பொழுது எனக்கு கிட்டியது. கல்லூரியின் சிறந்த மாணவிகளுள் ஒருவராக நான் கருதப்பட்ட காலம் அது. அவ்வகுப்பில் எமக்குக் கற்பித்த ஆசிரியர்கள் என்றும் என் நன்றிக்கும் நினைவுக்கும் உரியவர்கள்.

எம் ஆசிரியர்களுள் சிறப்பாக குறிப் பிடத்தக்கவர்கள் திரு. A.S. சுந்தரராஜ ஐயங்கார் அவர்கள். இராமநாதன் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் அதிபராக இருந்த அவர் 1946ஆம் ஆண்டு முதல் இராமநாதன் கல்லூரியில் ஆசிரியராகப் பணி புரிந்தார். தமிழ் இலக்கியக் கடலில் ஆழ்ந்து மூழ்கிய அன்னாரிடம் தமிழ் கற்க நேர்ந்தது பெறற் கரும் பெரும்பேறெனவே கருதுகிறேன். கம்பராமாயணம், திவ்ய பிரபந்தம் ஆகிய இலக்கியங்களில் மிகவும் ஈடுபாடு உடையவர், கம்பராமாயணத்தின் சுவை மிகுந்த பல பகுதிகளையும் அவர் எமக்கு அறிமுகப் படுதினார். திவ்விய பிரபந்தப் பாடல்களை பக்தி உணர்வுடன் படித்துக் காட்டினார். பாட நூல்களுக்கு அப்பாலும் பல நூல்களைக் கற்று இலக்கியச் சுவையை நுகர்வதற்கு வழிகாட்டி யவர் அவரே. தமிழ் இலக்கியத்தினை மேலும் தொடர்ந்து கற்றுச் சுவைத்து மகிழும் வண்ணம் ஆற்றுப் படுத்திய சீர்மிகு ஆசான் அவர். கற்பித்தலில் எவ்வித பயிற்சியுமின்றி நான் இராமநாதன் கல்லூரியில் பணி புரிய வந்த ஆரம்பகாலத்தில் அவர் S.S.C வகுப்பில் தாம் படிப்பிக்கும் போது என்னையும் அழைத் துச் சென்று , மாதிரி வகுப்பு நடத்திக்காட்டி என்னை வழிப்படுத்தியதை என்றும் நன்றியு டன் நினைவு கூர்வேன். 1957 ஆம் ஆண்டு கல்வி டிப்ளோமாப் பட்டம் பெறுவதற்கு முன்னரே ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் நீண்ட காலம் கற்பித்த அனுபவம் பெற்ற ஐயங்கார் அவர்களுடைய வழிகாட்டலைப் பெற்றமை எனது பெரும் பேறாகும்.

ஐரோப்பிய வரலாற்றைக் கற்பித்த செல்வி குமாரசாமி (திருமதி அருணாசலம்) இலங்கை வரலாற்றைக் கற்பித்த திருமதி வாசுதேவன் ஆகிய இருவரும் அளித்த உற்சாகத்தையும் என்றும் மறக்க முடியாது.

வடமொழியில மகாமகோபாத்யாயப் பட்டம் பெற்ற திரு.இராமையர் அவர்களிடம் வட மொழியைக் கற்றோம். ஆங்கிலப் பாடத்திற்கு நான் பரீட்சைக்குத் தோற்றா விடினும் திரு. கணபதி ஐயர், அதிபர் திருமதி பிள்ளை ஆகியோரிடம் ஆங்கில இலக்கியம் கற்கும் வாய்ப்பும் அப்போது எனக்குக் கிட்டியது.

இவ்வாசிரியர்கள் என்மீது வைத்திருந்த நம்பிக்கைக்கு ஏற்றவாறு 1946ஆம் ஆண்டு நடைபெற்ற H.S.C பரீட்சையில் முதலாம் பிரிவில் - தமிழ் மொழியில் அதி விசேட சித்தியுடன் தேறினேன் அத்துடன் தமிழ் மொழிக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று பல்கலைக்கழகம் சென்றேன். புலமைப் பரிசிலுக்கான நேர்முகப் பரீட்சையின் போது அப்போது தமிழ்த்துறைப் பேராசியராக விளங்கிய சுவாமி விபுலானந்தரின் அருகில் இருந்து உரையாடும் வாய்புக் கிட்டியது. பல்கலைக்கழகத்தில் பேரறிஞரான அவரிடம் கற்கும் பாக்கியம் கிடைக்கும் என மகிழ்ந்தேன். ஆனால் 1947ஆம் ஆண்டு ஜுலை மாதம் அவர் அமரத்துவம் அடைந்ததால் அவரிடம் கற்கும் பேறு இழந்தமையையிட்டு மனம் மிக வருந்தினேன்.

ஆசிரியர்கள், அதிபர் திருமதி பிள்ளை, லேடி இராமநாதன் அம்மையார் ஆகியோரின் பாராட்டோடும் ஆசியோடும் பல்கலைக்கழகம் சென்று 1951ஆம் ஆண்டு சிறப்புப் பட்டதாரி ஆசிரியையாக இராம நாதன் கல்லூரியில் சேர்ந்து 37 ஆண்டுகள் அங்கு சேவை புரிந்தேன். தமிழ், இந்து சமயம், இலங்கை வரலாறு, வடமொழி ஆகிய வற்றைக் கற்பித்தேன். என்னிடம் கற்ற மாணவிகள் பலர் கல்வித்துறையில் மேனிலை அடைந்து உயர் பதவி வகிப்பது எனக்கு மிகுந்த மனநிறைவைத் தருகிறது.

1961ஆம் ஆண்டு எம் கல்லூரி அரசாங்கத்திற்குத் கையளிக்கப்பட்ட போதிலும் அங்கு ஆசிரியர்களாக இருந்த எவரும் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அக்காலத்தில் அங்கு ஆசிரியர்களாக இருந்தவர்களிற் பெரும்பான்மையினர் கல்லூரிப் பழைய மாணவிகளே ஆவார். காலப் போக்கில் புதிய ஆசிரியைகள் இடமாற்றம் பெற்று எம் கல்லூரியில் பணி புரிய வந்தனர். அவர்களிற் சிலரும் எம் கல்லூரி பழைய மாணவிகளாக இருந்தனர். எங்களிற் பலர் ஓய்வு பெறும் வரை இங்கேயே கடமை ஆற்றினோம்.

நான் ஆசிரியப் பணியை ஏற்ற போது திருமதி.பிள்ளை அவர்கள் அதிபராக இருந்தார். 1956இல் அவர் ஓய்வு பெற்றார். அவர் காலத்தில் பழைய மாணவிகளிற் பலர் அங்கு ஆசிரியைகளாக இருந்தோம்.

அவர் காலத்தில் ஆசிரியையாகக் கடமை புரிவது, மகிழ்ச்சிகரமானதாக இருந்தது. அவர் மாணவிகளிடத்தும் இளம் ஆசிரியைகளிடத்தும் ஓர் அன்னை போல் அன்பு காட்டியவர். அவருடைய வழி நடத்தலில் நாங்கள் எங்கள் கடமைகளை மிகவும் அர்ப்பணிப்புடனும் கடமை உணர்ச்சியுடனும் ஆற்றி வந்தோம். 1951ஆம் ஆண்டு எங்களிற் சிலர் அவர் தலைமையில் அனுராத புரம், மிகிந்தலை, தம்புல்ல, சிகிரியா, பொலனறுவை போன்ற சரித்திரச் சிறப்பு வாய்ந்த புராதன இடங்களுக்கு மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களிற்கும் 1955ஆம் ஆண்டு கதிர்காமம், நுவரேலியா, சிவனொளிபாதமலை ஆகிய இடங்களுக்கும் சுற்றுலாச் சென்றமை நான் என்றும் மறக்க முடியாத இன்பமான நிகழ்ச்சிகளாகும்.

இளம் ஆசிரியைகளின் முன்னேற்றத்திற்கு அவர் ஆற்றிய பங்களிப்பு மிகவும் சிறப்பானது மாணவியாக இருந்த காலத்தில் நான் மேடைப்பேச்சில் அதிகம் ஈடுபட்டதில்லை. திருமதி பிள்ளை அவர்கள் அளித்த ஊக்கதினாலும் அமைத்துத் தந்த சந்தர்ப்பங்களினாலும் மேடைககூச்சமின்றி சொற்பொழி

வாற்றும் திறமை எனக்கு ஓரளவு உண்டாயிற்று. இலண்டன் A.L பரீட்சைக்கு மாணவிகளுக்கு தமிழ் கற்பிப்பதற்கும் எனக்கு வாய்ப்பளித்தார். பாரத நாட்டைச் சேர்ந்தவராகிய அவர் 1956ஆம்ஆண்டு டிசம்பர் மாதம் ஓய்வு பெற்று இந்தியாவுக்குப் பிரயாணமானபோது கல்லூரியில் ஆசிரியைகளாக கடமையாற்றிக் கொண்டிருந்த எம்மிற் சிலரும், பழைய மாணவிகளிற் சிலரும் தலைமன்னார் வரை சென்று அவருக்குப் பிரியாவிடை அளித்து வந்தமையும் மறக்கற்பாலதன்று.

திருமதி பிள்ளையை அடுத்து அதிபராகக் கடமையாற்றியவர் திருமதி. முத்துக்குமாரு அவர்கள். 1925ஆம் ஆண்டு முதல் தாவரவியலை மாணவிகளுக்குக் கற்பித்த அவர் காலத்திலேதான் எம் கல்லூரிப் பொன் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. அவருக்குப் பின் அதிபராக வந்தவர் செல்வி.கனகசபை ஆவர். அனுபவ முதிர்ச்சியும், செயல் திறனும் மிகுந்த இவர் விடுதி மாணவிகளுக்குப் பல வசதிகளையும் அமைத்துக் கொடுத்ததுடன் பழுதடைந்த நிலையிலிருந்த பல கட்டிடப் பகுதிகளுக்கான திருத்த வேலைகளையும் மேற்கொண்டார். இவருடைய காலத்தில் நாட்டிய நாடகங்கள் பல கல்லூரியில் சிறப்பாக மேடையேறின என்பது குறிப்பிடத் தக்கது. திருமதி.பிள்ளையவர்கள் காலத்திலேயே எம் கல்லூரியின் நாட்டிய நாடகத்திற்கு வித்திடப்பட்டது. அது பயன் தரு விருட்சமாக வளர்ச்சி பெற்றது. செல்வி. கனகசபை காலத்திற்தான் இராமன் சீதையோடும், இலட்சுமணனோடும் சுமித்திரைபாற் சென்று கானேக விடைபெறும் ஒரு காட்சி மட்டுமே திருமதி பிள்ளையவர்கள் காலத்தில் மேடையேற்றப்பட்டது. அப்போது மாணவியாக இருந்த எனக்கு முதன் முதலாக ஒரு நாட்டிய நாடகக் கலைவிழாவினைக் காணும் வாய்ப்புக் கிட்டியது. இசையும் நடனமும் இணைந்த இக்கலை வடிவம் மிகப் புதுமையாக இருந்த துடன் மனதைப் பெரிதும் கவர்வதாகவும் இருந்தது. 1965 ஆம் ஆண்டளவில் செல்வி யோகாம்பிகை செல்லையாபிள்ளை இராமநாதன் கல்லூரியில் இசை ஆசிரியையாக இணைந்து கொண்டார். அவர் திருமதி பிள்ளை காலத்தில் அடிக்கடி மேடையேற்றப்பட்ட இந்த நாட்டிய நாடகத்தில் சுமித்திரையாக நடித்திருக்கிறார். அதனை அடிப்படையாகக் கொண்டு இந்த நாட்டிய நாடகப் பகுதியைக் கல்லூரியில் தன் மாணவிகளைக் கொண்டு ஒருமுறை மேடையேற்றினார். அதைப் பல ஆண்டுகளுக்குப்பின் பார்த்த பொழுதுதான் இராமன் வனம் செல்வதற்கு முன் பெற்ற நிகழ்வுகளையும் இணைத்து இராமன் கானேகலை உச்சக்கட்டமாகக் கொண்ட ஒரு முழு அளவில தான நாட்டிய நாடகத்தை அமைக்கும் எண்ணம் என் மனதில் உருவானது. இவ் எண்ணத்தை உவகையுடனும் உற்சாகத்துடனும் ஏற்றுக் கொண்ட அதிபர் செல்வி கனகசபை அவர்கள் நடன ஆசிரியர் கீதாஞ்சலி நல்லையா அவர்களை எம் கல்லூரியில் நடனஆசிரியராக நியமிப்பதற்கு ஆவன செய்து உதவினார் திரு. k. k சோமசுந்தரம் அவர்கள் மேடை ஏற்றுவதற்கு ஏற்ற வகையில் நாடகப் பிரதியை ஆக்கி அளித்ததுடன் நாடகத்தை நெறிப்படுத்தியும் உதவினார். இம் மூவரதும் கூட்டணியில் இலக்கிய நயம் வாய்ந்த பல நாட்டிய நாடகங்கள் மேடையேற்றப்பட்டு பலரது பாராட்டையும் பெற்றன. 1971 ஆம் ஆண்டு கீதாஞ்சலி நல்லையா அவர்கள் ஓய்வு பெற்ற பின்னர் கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையா அவர்களும் அவருக்குப் பின் திருமதி சாந்தினி சிவநேசன் செல்வி கிருசாந்தி சேனாதிராஜா செல்வி நந்தினி பரராஜசிங்கம் ஆகியோரும் தொடர்ந்து தரம் வாய்ந்த நாட்டிய நாடகங்களை மேடையேற்றினர்.

செல்வி. கனகசபை அவர்களுக்குப் பின் அதிபர் பொறுப்பை ஏற்றவர் எம் ஆசிரியையாகிய திருமதி R. அருணாசலம் அவர்கள் தமது மாணவியாக இருந்த என்னிடம் அவர் காட்டிய அன்பையும் பரிவையும் என்மீது வைத்திருந்த நம்பிக்கையையும் நான் என்றும் நினைவிற் கொள்வேன். நீண்ட காலம் இக் கல்லூரியில் ஆசிரியை

யாகப் பணியாற்றியதால் சக ஆசிரியைகளுடன் நட்புடன் பழகி அவரவர்க் கேற்ற பணிகளை அவர்களுக்கு வழங்கி அவர்களுடைய நன்மதிப்பையும் ஒத்துழைப்பையும் பெற்று விளங் கினார். அவர் காலத்தில் 1973 ஆம் ஆண்டு வைர விழா கொண்டாடப்பட்டு வைரவிழா மலரும் வெளியிடப்பட்டது. அடுத்ததாக அதிபர்களாக வந்த திருமதி யோ.இராசரத்தினமும் பு. சச்சிதானந்தமும் எம் கல்லூரிப் பழைய மாணவிகளாவர் திருமதி யோ. இராசரத்தினம் கல்லூரியில் நீண்ட காலமாக ஆசிரியையாகப் பணி புரிந்தவர். அனைவரையும் அரவணைத்துச் செல்லும் பண்புடையவர். அவர்கள் இருவரது காலத்திலும் நான் பிரதி அதிபராகக் கடமை ஆற்றினேன். நாங்கள் நண்பர்களாகவே பழகினோம். திருமதி பு. சச்சிதானந்தத்தைத் தொடர்ந்து நான் அதிபரானேன்.

இராமநாதன் கல்லூரியில் இருந்ததன் பயனாக வேறெங்கும் பெற முடியாத நன்மைகளை நான் எளிதில் பெற்றேன். பெரியோர் சிலரைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தமையை சிறப்பாகக் குறிப்பிடவேண்டும். யோகி சுத்தானந்த பாரதியார், சச்சிதானந்த யோகீஸ்வரர், குன்றக்குடி அடிகளார் ஆகிய ஆன்மீகப் பெரியார்களின் அருள் மொழிகளைச் செவி மடுத்தோம் தனிநாயகம் அடிகளார் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் போன்ற தமிழ் அறிஞர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ்ந்தோம். இசை மேதைகளாகிய K. B. சுந்தராம்பாள், M. S சுப்புலட்சுமி, சித்தூர் சுப்பிரமணியபிள்ளை, மகாராஜபுரம் சந்தானம், கல்யாண கிருஷ்ண பாகவதர், சீர்காளி கோவிந்தராஜன் ஆகியோரின் இன்னிசை கேட்டுப் பரவசமடைந்தோம். அத்துடன் குமாரி கமலா, லலிதா பத்மினி, செல்லப்பன் - பவானி போன்ற நடனமணிகளையும் J. K. சண்முகத்தின் நாடகக்குழு கலைஞர்களையும் நேரில் காணும் சந்தர்ப்பமும் எமக்குக் கிட்டியது.

இராமநாதன் கல்லூரியில் நான் பெற்ற நற்பலங்கள் பல அவற்றை என்றும் நன்றியுடன் நினைவு கூர்வோம்.

கல்லூரி நினைவுகள் என்றும் நிலைத்து நிற்பன. அவை என் மனதை விட்டு நீங்கா நினைவுகளாகும்

# Celebrating the Centenary of Ramanathan College

**Ranganajaki Pathmanathan**

a citadel of education and culture. Our thoughts go back to the formative Period of this hallowed institution, a 100 years ago. To uplift and upgrade the quality of life of Tamil women, was the basic theme and motive of the foundation of this institution. Achievements of the Past pupils of the college, in the field of education, Professionalism, and politics is meritorious and noteworthy. It gives us pleasure to reminisce on the greatness and the achievement of Sir. Ponnampalam Ramanathan, the founder father of this hallo wed institution, who has thrown a world of opportunities, before the vast student population that passed through, during the last ten decades. His uncle Sir Muthucoomaraswamy was the first Asian and non Christian to be called to the English Bar, a result of his campaign against the pernicious regulation in the U. K, that barred non Christians entering the 'Inns of court' Sir Muthucoomaraswamy was the first Asian to be knighted in the British empire. Sir P. Ramanathan was nominated to the Tamil seat in the legislature, after the demise of his uncle Sir Muthucoomara swamy. This was the beginning of his Colorful Political career. At that time, the legislature consisted only of the nominated members, presided over by the English governor who was like a supreme overlord which was criticized by Ramanathan as"aGovernor's government". Thus he became a fearless critic of the government, and the champion of every national cause, be it Sinhalese, Tamil or Muslim, and regularly clashed with every governor, legislators and officials.

During his fourteen years in the legislative council, he chalked up Several notable achievements, in spite of all possible opposition by British rulers. He campaigned for the revival of Buddhist and Hindu education by establishing national Schools throughout the country. Even Sinhala nationality like Anagarika Dharmapla hailed as father of Buddhist renaissance, eagerly joined him in this

crusade, which led to the founding of a chain of schools like Ananda collegein the south and Jaffna Hindu College in the North, It must be noted here that, Ramanathan was not anti Christian, but opposed religious intolerance. He gave the Christians the famous "commentaries on the gospels of St Matthew and St John", the monumental work on Christianity, which became famous even in the United States In the field of politics Sir P. Ramanathan shone pre eminently as a statesman.

He rose above the narrow and petty limits of politics and the barriers of race and religion, proving himself as a vehement nationalist. These were several of his accomplishments to prove that he was above all a true nationalist.

In the legislative council, he was responsible for the passing of the Buddhist Temporalities Act of 1888, which regulated the wealth of the Buddhist temples. He successfully fought for the declaration of Vesak as a national holiday. In the field of law, his contribution was outstanding. There was no ' Law college' at that time, and those wishing to study law, needed the goodwill of an English barrister, like the way Ramanathan did with the help of his uncle Muthucoomaraswamy who was an English barrister. He wanted this dependency to end. His efforts led to the founding of the Ceylon law college' thereby he gave lawyers a local habitation and a name. The idea of law Reports' was conceivedby him. The fifteen volumes of carefully edited and indexed 'law reports' is a signal service to the legal profession that comprises all Ceylonese - Sinhalese, Tamils, Muslims. He went further and founded the Council of Legal Education' to regulate the affairs of the legal profession.

In the year 1907, Sir P. Ramanathan decided to settle down in his native jaffna and dedicate his life to Religion and Education. This was the time, the movement for freedom from British rule, was beginning in neighboring India. At this juncture the then Sinhala leadership, appealed to Sir P. Ramanathan to return from his sojourn in jaffna, to lead a struggle for ' constitutional reforming Ceylon. He answered this clarion call for service to his nation, and returned to the political arena again, to fight for constitutional reform. In the restructured council there was one seat called "Educated Ceylonese seat" for all the Ceylonese. It So happened that this electoral contest was waged between Sir. Marcus Fernando and Sir P. Ramanathan, for the one seat to represent the educated Ceylonese. Sir p. Ramanathan won by a resounding majority largely On the votes of Sinhalese. In 1915 the Sinhalese Muslim riots broke out, which was mistakenly judged by the English Governor as an attempt by the Sinhalese to upset the British rule, at the time Britain was engulfed in world War - I on the governor' s

order, the entire Sinhala leadership, fifty in number, were clapped in jail. Martil law was declared with orders to shoot at sight if violated. In Spite of heroic efforts by Ramanathan the governor remained adamant, and refused to release the leaders. Unbent, Ramanathan decided to take the battle to the parliment at westminster amidst the perils of a raging world war undaunted, brushing aside all advice and warnings, Ramanathan set sail to England to Plead the cause of his countrymen, all of whom were of a different community. As a result of his efforts at white Hall, he obtained an" order of Parliament" for the release of the Sinhala leaders. The day of Ramanathan's return to Ceylon will go down in history as an unforgettable landmark in the political history of Ceylon. As his Ship docked in colombo harbour, the cream of Sinhala leadership had lined up at the jetty to receive him, He was carried on the shoulders of some gathered to greet him and placed on the decorated Landeau amidst scenes of unprecedented emotion and joy.

The Sinhalese leaders dismantled the horses from the landeau shafts, and dragged the carriage all the way from the harbor to hiresidence at Suhasthan Gardens in Horton place in Colombo That truly was his finest hour and was also the finest hour of the Tamil nation. That truly was the finest hour of the Sinhalese nation as well.

The father of the Sinhala Buddhist renaissance, the great Anagarika Dharmapala wrote to Sir. P. Ramanathan in 1915 " when you leave the shores of this island there will be no one to defend the poor Sinhala race, they will be doomed without you" Some of the quotes of eminent men of the time, gives an indication of the true measure of greatness of Sir P. Ramanathan. Then Governor of Ceylon Sir Herbert Stanley, with whom Ramanathan clashed daily in the legislature, said" If I were a Ceylonese, I will feel specially proud of Ramanathan He was a man who touched every part of national life, and achieved distinction in every one of them"

The late K.P. S Menon an officer of the Indian Civil Service and a diplomat, said of him " a National Statesman with an international reputation, who bestrode, the political arena of his time, both at home and abroad as a colossus" Ceylons first prime Minister, D.S Senanayake called him, " The greatest Ceylonese of all times !This Speaks Volumes.

Sir P.Ramanathan was a towering nationalist Mis Patriotism knew no racial or religious barriers Today as we celebrate the century of this Educational institution, bestowed on us by Sir. P. Ramanathan, we are immersed, in a wave ot thoughts that swell in our mind , reminding us of his achievement, national International we are indeed blessed that a person of incomparable greatness was the Founding Father of Ramanathan College - our Alma

# தாவரங்கள் பேசின;
# தத்துவங்கள் தந்தன

திருமதி செல்லம்மா கார்த்திகேசு
முன்னைநாள் ஆசிரியை,
இராமநாதன் கல்லூரி

கதிரவன் கரந்த்தான் காரிருள் கவிந்தது
கண்களை மூடினேன் கனவுலகில் கால் பதித்தேன்
கல்லூரி வாயிலில் களிப்புடன் நான் நின்றேன்.
வாயில் காப்போனென வளர்ந்ததோர் வேம்பு
விருப்புடன் மேல்தொட்டு மோப்பதற்கு மலர்தந்து
சுந்தரக் கிளைகளைச் சிரந்தனில் தாங்கிக்
கரகம் போல் அசைந்தாடிக் களிப்புடனே வரவேற்று
நெருக்கமாய் வந்து சுருக்கமாய்ச் சொன்னது :
உனக்கொருவன் வேம்பாகில் நீ கருப்பஞ்சாறாகு
உள்வாங்கிக்கொண்டு உவகையுடன் உட்சென்றேன்.
எட்டி அடிவைத்தேன் எதிரிலே மஞ்சாடி
பட்டப் பகலிலே பகலவன் வெப்பினிலே சட்டென்று
வெடித்துச் சரளமாய் விதை பரப்பிக்
கொட்டிக் கிடந்த குருதி நிற மஞ்சாடி
செங்கம்பளம் விரித்து மங்கலமாய் வரவேற்று
சொன்னது ஒருகதை உன்னதமானது
குப்பையிலே போனாலும் குண்டுமணி மங்காது
பவள விற்பனைக்குப் பாதுகாப்புத் தருவது போல்
மஞ்சாடி மரங்களுக்கு மதிலமைத்த செவ்வரத்தை
மாங்கனிகள் தூங்கும் மாவின் முன் நிறுத்திவிட
வாயிலே நீரூறி நாவிலே வழிந்துவரப்
பழைய நினைவுகள் பாய்ந்தோடி அலைமோதச்
சொக்கிப்போய்ச் சிலையாய் நின்றுவிட்டேன்.
எட்டிப் பிடுங்கி எவருங்காணாமல்
உப்புடன் சேர்த்து உடைத்த மாங்காயைப்
பங்கு போட்டுப் பகிர்ந்துண்ட நாட்கள்! நாம்

அக்கம் பக்கம் அகல விழித்தேன்
சிற்பக் கலையின் சிகரம் என்ன
பொற்புற அமைந்த பொன் (இ) ராமநாதனின்
சித்திரச் சமாதி சீராய் ஒரு புறம்
மறுபுறம் இருந்தது மகானின் மணிமனை
அண்ணாந்து பார்த்தேன் விண்ணோக்கிச் சிவன்கோயில்
முன்னின்றொரு செடி மூக்கைத் துளைத்தது;
மனோரஞ்சிதமாய் மலர்ந்து நின்றது.
மஞ்சட்பூக்கள் மயக்கும் நறுமணம்
பிஞ்சுக் காய்கள் பிறந்த பூக்கள்
எட்டிப் பிடித்து ஏறும் கிளைகள்
கொத்துக் கொத்தாய்க் குனிந்தாடும் கனிகள்
விளக்கொளி கண்ட விட்டிற் பூச்சிபோல்
சுற்றிச் சுற்றிச் சுகந்தம் நுகர்ந்தேன்!
சுடுபடவில்லை. சுவீகரிக்கப்பட்டேன்
புன்னகை பூத்தது புரிய வைத்தது.
புகழ்மணம் வீசவாழ் புகழ் உன்னை நாடிவரும்
தென்றிசை நோக்கினேன் தென்னஞ்சோலை
கன்னஞ் சிவந்த கனகக் குலைகள்
கணக்கில்லாமல் காய்தாங்கி நின்றன
பாளைகள் வாய் திறந்து பல்வரிசை பல காட்டித்
தாள்நோக்கித் தலைகுனிந்து தாளம் போல் நிறங்காட்டி
வில் வளைந்த வீரனென விறல் காட்டி நின்றன.
தாளுண்ட நீரைத் தலையாலே நான் தருவேன்
வேலுண்ட கண்ணாய் விடாய் தீரக்குடி
தெங்கு சொன்ன தேன்மொழி கேட்டு

அகங்குளிர அருந்தினேன் இளநீர்
முற்பகல் செய்யில் பிற்பகல் விளையும்என
விளங்க வைத்து விடையுந் தந்தது.
கிழக்கே சென்றேன் வழக்கமாய் உண்ணும்
மரவள்ளிக் கிழங்கும் நிறவள்ளிக் கொடியும்
உரம் போட்டு வளர்த்த உருளைக் கிழங்கும்
உருட்டி முழிசி வெருட்டிக் கூறின.
அளவோடு கிழங்குண்டால் பலமோடு வாழலாம்
அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு
சர்க்கரை வியாதி சரித்து வீழ்த்திடும்
நிலத்தைப் பார்த்தேன் நிலத்தைப் போர்த்துப்
பச்சைப் பசேலெனப் பயன்தரும் படர்கள்:
வல்லாரை, மொசுமொசுக்கை வளமான கீரைவகை
காலைச் சுரண்டிக் கதைகள் கூறின.
சிறுகால வாழ்வில் பெருவாழ்வு தருவோம்
எல்லாக் குடிசைக்கும் ஏறிபிறங்குவோம்
நில்லாமல் ஓடும் நீரிழிவு நோயும்
அகத்தி முருங்கை, அழகிய குறிஞ்சா
இகத்தில் வாழ்வு இதந்தர அளிக்கும்
கனிப் பொருள் தந்து காப்பாற்றி வைக்கும்
கிழக்கு மூலையில் குடிகொண்ட கொண்டல்
மஞ்சள் குடைவிரித்து மங்கலமாய் நின்றது
சுருக்கிய குடையென நெருக்கமாய் மஞ்சரிகள்
குட்டிப் பூக்கள் கூம்பின் நுனியில்
மொட்டுப் பூக்கள் நட்ட நடுவில்
வட்டப்பூக்கள் நெட்டின் அடியில்
தலைகீழாய்த் தொங்கித் தாண்டவமாடிப்
பூச்சொரிந்து நின்ற புதுமை தானென்னே!
குளு குளு என்று கூட்டமாய் நின்ற
வாழை மரங்கள் வந்தன எதிரே
நீளக் குலைகள் நிறம்மாறிப் பழுக்க
பச்சை, மஞ்சள் படரும் நிலையில்
பொத்தி தள்ளிப் பொலிவுடன் முட்டி
புத்தி சொன்னது பத்தியாய் ஒரு மரம்
வாழைக்குத் தானீன்ற காய் கூற்றம் - கூற்றமே
இல்லிற்கிசைந்தொழுகாப் பெண்
பெண்ணே இசைபடவாழ், வசைபட வாழாதே
வாய்க்கால் கடந்து வடபால் சென்றேன்
கல்லும் முள்ளும் காலைப் பிளந்தன
ஊ.... என்று கூச்சலிட்டு உளறித் தள்ளினேன்
முறுவல் பூத்து முட்செடி சொன்னது:
வாழ்வுப்பாதையில் வருந்தலுமுண்டு, வழுக்கலுமுண்டு.
வீழ்வு வராமல் விழிப்பாயிரு
தர்க்கம் தொடர்ந்தது, தலைகுனிய வைத்தது.
வாதிட்டு என்னுடன், வாயடைக்கச் செய்தது.
எங்களுக்கு ஓரறிவு , உங்களுக்கு ஆறறிவாம்!
நிலைகொண்ட எம்மை நிம்மதியாய் வாழ விடு
தற்காப்புக்காகத் தரப்பட்ட முட்களிலே
சொற்காக்கா மனிதனே, சொன்னோமோ கால் வைக்க?
யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு
விலகி நீ சென்றால் வில்லங்கம் வந்திடுமோ?
ஊர்சுற்றிப் பேர்சொல்லி, உழல்வோமா தொழில் தேடி
குந்தி இருந்தாலும் சொந்த உழைப்புத்தான்
காற்றுள்ள போதே தூற்றக் கற்றுக்கொள்
பரிதியின் கிரணங்கள் பகலிலே ஒளிவீசக்
கரியமில வாயுவும் கணக்காகக் கிடைத்து விட்டால்
வேர் உறிஞ்சும் நீரை விரைவாகக் கடத்தி
பச்சைக் கலங்களிலே தொகுத்ததனைச் சமைத்து
வருவோர்க்கு மாப்பொருளும் வாழ்வதற்கு ஒட்சிசனும்"
சொந்த உழைப்பிலே சோராமல் தந்திடுவோம்.
நஞ்சைத் தானுண்டு நல்லமிர்தம் தந்தவன் போல்
நஞ்சுவளி நாம் ஏற்று உயிர்க்காற்றை உவந்தழிப்போம்
எம்மில் பல வர்ணம் என்ன நிறம் உம்மிலுண்டு?
வெள்ளை, கறுப்பு வேறெந்த நிறமுமில்லை
சூரியன் தந்துதவ சுவீகரித்துக் கொண்டாலும்
வானவில் காட்டும் வர்ணங்கள் ஏழுமுண்டு
வெப்பில் அலைந்தோர்க்கு தட்பநிழல் தந்திடுவோம்
உப்பில் எவ்வகையும் உயிர்காக்கும் எவ்வுணவும்
தப்பாமல் தந்து தரணியில் வாழவைப்போம்
அறுபிரிவில் உணவுகளை அறுசுவையில் தந்திடுவோம்.
உயிர் காக்கும் மூலிகைகள் எல்லாமே எம்மிலுண்டு
சஞ்சீவி மூலிகையால் உயிர் பெற்றான் இலக்குவனும்
நெல்லிக் கனியுண்டு நெடுங்காலம் வாழ்ந்த ஔவை
சரித்திரம் வேண்டுமா? சான்று பகர்வதற்கு
வாய்ப்பேச்சில் பல பெரியோர், வாழ்ந்து காட்டுகிறோம்.

போதனையிலும் சாதனையே சிறந்தது
கொடை என்னும் காந்தம் கொள்பவரை ஈர்த்துவிடும்
இடித்துரைத்த புத்திமதி இதயத்தில் இருத் திவைத்து
வடித்தெடுத்த கருத்துக்கள் படிந்து மனதில் பதித்துப்
பின் கற்பக தருக்களைக் கடைசியாய்க் கண்டேன்
எடுப்பாய்க் கருமேனி எழுந்தோங்கி நின்ற (து) பனை
வடுக்கள் கொண்டது, மிடுக்காய் நின்றது
உச்சியில் மாத்திரம் பச்சோலை நீட்டி
நுங்கும் பாளையும் நுரைக்கும் கள்ளும்
தங்கு கங்கும் தன்னில் காட்டி
தருக்குற்று நின்றது தானே உயர்ந்ததென்று
வற்றிய ஓலை வசை பாடிக்கலகலக்கச்
சுற்றி வீறாய்ச் சுழல் காற்று வந்தது
பற்றிப் பனையைப் படாரென முறித்தது
நானும் அதிர்ந்தேன் தரையும் அதிர்ந்தது
அகந்தை அடங்கி அசைவும் நின்றது
அரசறிய வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே என
முணு முணுப்பு மாத்திரம் முனகிக் கேட்டது
வற்றிய ஓலை கலகலக்கும் என்றும்
பச்சோலைக்கில்லை ஒலி எனப் பாடமும் தந்தது
கல்லூரியைச் சுற்றிக் கனதூரம் நடந்த பின்
உள்ளே சென்றேன் உறவாட வென்றெண்ணி
நாற்சாரில் நடுமுற்றம் நம்மவர்க்குப் புதிதல்ல
ஓடிவிளையாடி ஒய்யாரமாய் நடந்த நிலம்
வடகிழக்கு முற்றத்தில் திடமுடனே கிளைபரப்பி
" அரசு" தான் என்று அகந்தையுடன் நின்ற மரம்
நின்ற இடம் தெரியாமல் நிரந்தரமாய் நீங்கிவிட
எங்கே சென்றாய்? எழுப்பினேன் கேள்வி
வெள்ளிவிழாக் கண்டாய், பொன்விழாவும் கண்டாய்
புத்தர் தேர்ந்தெடுத்த போதிமரம் நான் என்றாய்
எடுத்த பேச்சை முடித்துவிட முன்
புத்த மதக் கொள்கை இப்போ புதைந்து விட்ட
காரணத்தால் வெட்டி விழ்த்தி வேரோடு அழித்து விட்டார்.
காற்றோடு கலந்து வந்து காதோரம் சொன்னது
கிழப் பருவ மகிழமரம் கிழக்குக் கரையோரம்
மடல் பெரிது தாழை , மகிழினிது கந்தம்
உடல் சிறியதென்றிருக்க வேண்டாம்
வயோதிபம் வதைத்தாலும் வாசனையே வீசினிற்போம்.
என்று கூறி அசைத்தது கிளைகளை உதிர்த்தது
பூக்களை அள்ளி, மோந்து அப்பால் சென்றேன்.
முட்டை விளாங்கனி முந்துவோர்க்கீந்த
விளாத்தியைக் காணேன். விரக்தியடைந்தேன்
வினவினேன். உடனே விடையும் கிடைத்தது
நீ எறிந்த கல்லும் நான் போட்ட கனியும்
தோற்று விட்ட காரணத்தால் "தொம்" என்று வீழ்ந்து
ஒட்டை உடைந்ததென்று ஒழித்துக் கட்டிவிட்டார்.
கலக்கமுடன் வந்து துலக்கமாய்ச் சொன்னது
மேற்கு முன்றலில் மேலோங்கி உயர்ந்த நெல்லி.
தளை கிளை எல்லாம் தரமான கனிகள்
உலுப்பிவிட்டால் உடனே விழும்பதம்
உயிர்ச்சத்து " சீ " யின் உறைவிடமதுவென்று
கொக்கி யொன்றெடுத்துக் கொப்பில் கொழுவி
உறுதியாய் உலுப்ப உதிர்ந்தன கனிகள்
அள்ளி எடுத்து ஆசையாய் உண்ணுமுன்
துள்ளி வந்தது துரத்தும் ஒரு குரல்
இராசம்மாக்கா இருட்டில் வந்து
வெருட்டியடித்து விரட்டி விடவே
ஓட்டம் பிடித்தேன் ஒளிந்து மறைய
தடக்கி விழுந்தேன் தரையில் கிடந்தேன்
விழித்த பின் கண்டேன் வேறொரு காட்சி
வடக்கு முன்றலுக்கு வனப்பூட்டிய பூமரங்கள்
பழகிய முகமென்று பக்குவமாய்ச் சுற்றி நின்று
தேன் துளி தெளித்துத் தேற்றி நின்றன
திறந்த வெளியரங்கின் திறமையெல்லாம் ரசித்து
வாஞற ஓங்கி வளர்ந்து நின்ற வில்வமரம்
முதிர்பருவமெய்த முசுறு கடித்ததென்றோ?
காரணம் புரியவில்லை , கண்ணெதிரில் தெரியவில்லை.
டாங்.. டாங்.. கோயில் மணியோசை கோபுரத்தில் கேட்டது
சோலை வளங் கண்ட சோமனும் மறைந்துவிட
இருளைக் கலைத்தபடி இரவி எழுந்துவர
பட்சிசாலங்கள் பண்ணிசைத்து வரவேற்க
அருணனின் கதிர்கள் அருட்டி எழுப்பிவிட
நானும் விழித்தேன். நானிலமும் விழித்தது
அகிலமெங்கும் உயிரினங்கள் ஆர்ப்பரித்து நிற்க
மரங்கள் மட்டும் மௌனித்து நின்றன.

# My Alma Moter - Ramanathan College in my Memory Ever

**Mrs. Neelambikai Shanmugam**
Retired graduate Teacher
Old girls, and Ramanathan College.

First of All, I offer my most loving and humble respects to my Alma - mater - Ramanathan College. I congratulate her on her 100th Anniversary and pray to Lord Nadarajah presiding diety in her, to bless her with the power of providing itself the centre of strolling mother hood which is so much wanted all over the world.

You have helped us Cold students of your institution to preserve and the culture of the Hindu Religion in the Tamil Community for which we gratefully remember you.

"So visit you - Mother Alma Mater is a pilgrimage. The memory" of Sri Ponnampalam Ramanathan remains here in the surroundings with her association. His ideas for the formation of the character of our future mothers for the learning they should acquire and the culture and religious values they should contiue to be realized"

In 1980, U. S. A Ambassador in Ceylon Donald R. Teussant Commented :-

"One of the strengths of Sri Lanka is its educational system and it has been inspiring to see the quality of one of the countries' best educational institutionis - Ramanathan College"

The glory of Ramanathan College issues from the clean vision of the founder. Sir Ponnambalam Ramanathan who was a statesman philosopher and above all an Education Sir Ramanathan's extra ordinary foreright has provided Jaffna with the best possible means of preserving the Tamil culture through the education of girls.

According to Sir Ramanathan, was "the true conservation, the guardian Angel of a nation's culture and torch bearer of a people's civilization".

"He was sure that the intellectual, moral and spiritual discipline she would import to her children in their impressionable years were of more

encluring value than all the sulseguant training they would have"

He declared :- "When a man is educated you educate an Individual But when you educate a woman you educate a family And thereby the Entire society"

Therefore found this Ramanathan College first for girls and later parameshware College for boys. He made it a point to have a temple attached to the school. "While providing for the leairng of the usual subjects as for curicular he laid emphasies on the importing of religious knowlege. He also insisted on instruction in Home science, Music and fine Arts to the pupils of Ramanathan College" He wanted every girl to have an all sound Education to blossom into a young lady equipped to develop all her abilities and talents. He set up a hostel where Hindu Tradition was observed.

The Resident students benefited a lot in the taining to the good mothers. They attended the temple daily and also cleaned the shrine and made garlands for deities. Children were taught the art of kolam and also to make different types of thoranams with coconut leaves and festoons to decorate the temple during festival days. Before partaking food they sing thevarams (Divine songs). This activity is sanctifying food by offering food as prasatham to god. By Sanctifying, the food we eat will have good influence. That is - good thoughts good feeling and good health.

Refreshing my memories of school days at Ramanathan College. I could remember the graudeur and festivity that mained the celeberations of Navarathri, Sivarathri and other celebrations in the school temple. We day scholars too, with the guidance of the Elder students, learnt to the garlands and make thoranams and the art of *kolam during the navarathri festival.* During thes festival days we were in and out of the temple during free periods and intervals and enjoy helping in the decoration and clearing of the temple. Elder students had sisterly affection towards as quided us lovingly . This loving all and serving all is instilled in my character.

Special festivals practised by the students of Ramanathan College during our student life are

1. greeting of each other with a Namaskaram with palms, held together infront of the chest. (not hello)

2. A uniform- a full skirt up to the ankles. full sleeve blouse and a thavani

3. Plaiting the hair with a kuncham at the end and flowers placed on head.

4. Vibhuthi and pottu on the forehead, made known the Hindu faith & custom.

All these were observed regularly by all students . Sir .P.Ramanathan's Mission was to mould the students as well equipped, educated and culture persons based in the High ideals of Hindu culture and Tradition.

Now old students of Ramanathan College though scattered in different countries have established old girls association to provide the motivation for the creation of bond and a network supporting the manifestation of the vision of sir p. Ramanathan among the future generations.

I am fortunate to have had all round education in these high ideals during my student days and teaching career before 1960 in his "citaded of culture" Ramanthan college though I had to settle in colombo after marriage (as my husband was in the administrative service) good departement the moral spritual discipline imported to me in of great value as a guiding and guarding factor in my life time, to guide my children and my students in my teaching career at colombo and nere by the society my to my Alma Mater.

Let me know remember my school days. It's a pleasure bringing to mind the members of the good old days of my student Mr. N. pellai's Principalship.

When I enter the school in the mornings I could see lady Ramanathan seated by the window of her Bungalow Hall looking out to greet us and see to our discipline. Dress code and behaviour. As we Quickly tread in to the evtiance hall of the school, load Natarajah the presiding deity, welcomes us We feel very blissful Ramanathan college is a shrine and it us a Pilgrimage getting into it. as it is Holy Atmosphere.

It was Lady Ramanathan who managed the college, when I was student. She was in her eighties managing the college steadfastly pursuing the ideas of sir Ramanathan. She was very kind gentle with a smile wishes everyone "Namaskaram" in our traditional way when she used to supervise the entire school in her wheel chair.

I could remember "Sund" (her *daughter) with innocent child like face,*

often walking along the veranda of the school Quander angle with a sweet Smile to us who happen to.

I fondly remember with gratitude some of my teachers who dedicated service and moulded us in the ideas of the founder. To mention a few I had Mrs. Pillai then principal , for English Literature Shakespeare's drama and words worth's poetryWe students sit spell bound so absorbed that we do not heed the bell sound. Inspite of her principal's responsible work, she was prompt in time to class If at all Mrs. Pillai is unavoidably busy Mrs. Pillai promptly in to take our lessons. We really enjoyed hearing to his grand fatherly story tellings and interesting narratives.

We had MathsMaster Ramachandran for Maths. How he churned our brains and even gave healthhints. So that our brains could work "Flash" He took great pains and encouraged us. I got distinction in Maths in the S.S.C (G.C.E O/L) exam. It was my reward to him for his painstaking drilling of our brains. Though I graduatedge in Bio-science and taught Botany, Zoology in the Advanced level classes in my teaching career, I still have the knowledge to teach maths to G. C.E ( O / L) and I teach maths when my service in needed.

Mr. Iyankar Our Tamil Literature Master Addresses me as "English Lady" to remind me of my weakness in Tamil and encouraged me to score high marks. Well I succeeded in scoring 'B' in Tamil. Lit in S.S.C exam.

Mr. Iyankar's classes were interesting especially when herrecites Manimehalai and Silappathikaram stanza and explanations. He recites with rhythm and we listen owe stricken.

Miss. Manoranjtham. Arumugam was senior teacher and warden of the hostel was also dedicated to her services.

Later she was principal at saiva Mangayar kalagam, Colombo. I was able to be in. touch with her as I am at Colombo.

She is no more now. Still, I remember her as Mano Akka who practised and taught Hindu I deas and Tamil Culture even in Colombo at Saiva mangayar kalagam. During this time of her administration as principal the scholl rose to heights in culture and standard of Education. It was Ramanathan College fouder's ideals that Mano Akka introdeced in this school and now I feel saiva mangayar kalagam is a shiny star. Her tremendous service to Colombo Hindu Tamil Children is appreciated.

Son. in. Low Mr. S. Nadesan succeeded Lady Ramanthan. Mr. Nadesan Contributed much to the further development of the College. Mr. Nadesan composed the college song. Later, Brahasini Veeramani Iyer gave it the dance poem. This dance poem was very much appreciated by all, when It was presented by the coldege students at college functions. The sweet memory of the beauty and grace of this dance poem of the college song cherrished still in my memory.

Let us therefore keep in memory the services rendered for educatign us and it is our duty to help the school to make the children who are being educated there to blossom in to young women who would lead a good and noble life

May the Almighty guide the principal and staff of Ramanathan College in all the activities they are involved in and related to the welfare of education on of the pupils there.

*"Education is not merely for Living But is for Life"*

*"The end of Education is character"*

*"For perfection of an Individual secular Education and spiritual Education is needed"*

*Sri Bhagavan Baba*

# எம்மை வழிகாட்டி வளர்த்த அன்னை

திருமதி தங்கம் ஜெகதலபிரதாபன்
பழைய மாணவி

மாணவிகளாகிய நம்மை வளர்த்த அன்னை இன்று 100 ஆண்டுகள் நிறைவுற்றுள்ளாள். இக்கால எல்லையில் நமது தாயாகிய இராமநாதன் கல்லூரி பல்லாயிரம் குழந்தைகளை அன்புடன் அறிவீந்து வழிகாட்டி வளர்த்து புகழ் நாட்டியுள்ளாள்.

அன்னாரது புகழ் அன்று மலேசியாவில் வாழ்ந்த யாழ். தமிழ் மக்களை எட்டி இருந்தது. அங்கு வாழ்ந்த எனது குடும்பம் இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் தாய் நாடு திரும்பியது. தமிழ் பண் பாட்டுடன் சிறந்த சைவ சமய சூழலில் தமது பெண் பிள்ளைகள் கல்வி கற்பதை விரும்பிய எனது பெற்றார். எனது மூத்த சகோதரி சிவகாமியையும் என்னையும் 1947ஆம் ஆண்டு இராமநாதன் கல்லூரி யில் சேர்த்தார்கள்.

உயர்ந்த மதில்களால் சூழப்பட்ட செஞ் சோலையாய் மரஞ்செடிகள் நிறைந்த பரந்த நிலப் பரப்பில் அமைந்து இருந்தது நமது கல்லூரி. வளாகத்தில் புகும் பொழுது கல்லூரியின் முற்பாகம் கம்பீரமாகக் காட்சியழித்து நம்மை "வா" என்று வரவேற்றமை நமது உள்ளத்தில் பெரு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

தமிழ்க் கலாச்சாரத்திற்கு ஏற்ப மாணவி களாகிய நாம் நீண்ட பாவாடை அணிந்து, தாவணி உடுத்தல் வேண்டும். நன்றாகத் தலை வாரி, தலைமயிர் எங்கும் பறக்காமல் ஒற்றைப்பின்னல் பின்னி குஞ்சம் கட்டல் வேண்டும். உயர் வகுப்பு (HSC) மாணவிகள் சேலை உடுத்தல் அவசியம். நாங்கள் படிக்கும் காலத்தில் நமது கல்லூரி ஸ்தாபகராகிய வள்ளல் சேர். பி. இராமநாதன் அவர்களின் பாரியார் லேடி இராமநாதன் உடல் நலமற்று இருந்ததால், அவர் சக்கர நாற்காலியில் இடையிடையே பாடசாலை விடுதியைப் பார்வையிட வருவார். அப்பொழுது சீராக உடை அணியாது அவரது கூரிய கண்களில் நாம் தென்படு வோமானால் நம்மை உடனே கண்டித்து விடுவார்.

பாடசாலை விடுதி அப்பொழுது ஒன்பது இல்லங்களைக் கொண்டிருந்தது. ஒவ்வொரு இல்லத்திலும் 30இற்கும் குறையாத மாணவிகள் இல்லங்கள்: ஜானகி, சீதா, சகுந்தலை, கண்ணகி, லீலாவதி போன்ற காவியப்பெயர்களால்

அழைக்கப்பட்டன. விடுதியில் வசித்து வந்த ஆசிரியைகள் ஒவ்வொரு இல்லத்திற்கும் பொறுப்பாயிருந்து நம்மை வழி நடத்தி வந்தனர்.

பள்ளிக்கூட மேல் மாடியில் விசால மான மண்டபம். அங்கு நர்த்தனம் புரியும் நடராஜப் பெருமான் அம்பாள் சமேதராய் எழுந்தருளியிருக்கும் காட்சி கண் கொள்ளாக் காட்சியாகும்.

காலையிலும் மாலையிலும் 6.00 மணிக்குப் புரோகிதர் வந்து பூசை செய்வது வழக்கம். பூசையின் இறுதியில் நாம் பக்திப் பாடல்களை பாடிக் கொண்டு, இரு வரிசைகளில் கோயிலை வலம் வருவோம். அன்று பாடிய "தில்லையம்பல நடராஜா, செழுமை நாதனே...." என்ற கீதம் இன்றும் எனது காதுகளில் ஒலிக்கின்றது.

நித்திய பூசையைவிட, சமயகுரவர்களுக்கும் பூசை எடுக்கப்படும். சைவ விழாக்கள் சிறப்பாக சரஸ்வதி பூசை கொண்டாடப்படும். மார்கழி மாதத்தில் இசை பாடும் மாணவிகள், அதிகாலையில்சேமக்கலம் அடித்து, இல்லம் இல்ல மாகச் சென்று திருவெம்பாவை பாடி இல்ல மாணவிகளை துயில் எழுப்புவர்.

ஆலயப் பணிபுரிய ஒரு சிறு தொண்டர் குழாம் காலத்துக்குக் காலம் நியமிக்கப்படுவார். அவர்கள் காலையில் மலர் கொய்தல், மாலை கட்டல், ஆலயத்தை சுத்தப் படுத்தி, பூசைகளுக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்தல் போன்ற கடமைகளுக்கு பொறுப்பா யிருப்பர்.

ஆசிரியைர்கள், இல்லங்கள் சுத்தமாகவும், கட்டில் விரிப்புகள் சீராக விதிக்கப்பட்டிருப்பதையும், பொருள்கள் அந்த அந்த இடத்தில் இருப்பதையும் திடீர் சோதனை செய்து கரும்புள்ளி, செம்புள்ளி இடுவர். வருட இறுதியில் சிறந்த மாணவிக்கும், சிறந்த இல்லத்திற்கும் பரிசில் வழங்குவர். இப்போட்டி உணர்வு நம்மை ஊக்குவிக்கும்.

சைவ ஆசாரப்படி, நமது உணவு சைவ உணவாகும். மதிய போசனத்திற்கு வேண்டிய மரக்கறிகளை வெட்டும் பொறுப்பினை ஒவ்வொரு தினமும் ஒவ்வொரு இல்லம் ஏற்பதோடல்லாமல் இரவு உணவையும் அவர்களே பரிமாறல் வேண்டும். தேவாரம் பாடிய பின்னரே உணவருந்துவோம்.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவிகளைத் தவிர மற்றவர்கள் ஒன்பது மணிக்குப் படுக்கைக்குச் செல்ல வேண்டும். கூட்டாக, ஒரு குடும்பமாகத் தேவாரம் பாடி துயில் கொள்ளச் செல்வோம். விடுதியில் இருந்த ஆசிரியைகள், செல்வி மனோரஞ்சிதம் ஆறுமுகம், செல்வி இராசையா, செல்வி ஞானரத்தினம், செல்வி கோமதி, செல்வி புவனேஸ்வரி சுவாமிநாதன் போன்றோர் நமக்குப் பெரும் பணி ஆற்றியுள்ளார்கள். ஆசிரியைகளை நாம் 'அக்கா' என்று அன்புடன் அழைப்போம்.

இல்லங்களுக்கிடையிலான இசைப் போட்டி, நாடகப் போட்டி, சமையற் போட்டி, சேலை அணியும் போட்டி, ஒரு குடும்பத்தவர் விருந்தினரை வரவேற்று உணவு பரிமாறி உபசரிக்கும் போட்டி ஆகியவற்றில் நம்மைப் பங்கு கொள்ளச்

செய்து ஒவ்வொரு துறைகளிலும் நம்மை வல்லுநர் ஆக்க அவர்கள் எடுத்த முயற்சிகளை நம்மால் மறக்க முடியாது.

மனோரஞ்சித அக்கா முழு விடுதிக்கும் பொறுப்பாய் இருந்தார். நாம் ஏதாவது பிழை செய்திருந்தால் அவரைக் கண்டவுடன் நடுநடுங்கிப் போவோம். ஆனால் எங்களுக்கு ஏதாவது பிரச்சனை என்றால் அவரிடத்தே செல்வோம். நமது குறைகளைப் பெற்ற தாய் போல் பொறுமையுடன் கேட்டு அவை நியாயமானவை என்றால் நமக்கு ஆறுதல் கூறி அவற்றைத் தீர்த்து வைப்பார்.

அவர் தொடர்பில் ஒரு சம்பவம். படத் திரை என் கண்முன்னே ஓடுகிறது. சனி, ஞாயிறுகளில் மதிய உணவின் பின் மாணவிகள் சிறிது நேரம் உறங்குதல் வேண்டும். விடுதி மாணவத் தலைவியாய் நான் இருந்த படியால் அவ்வேளை அமைதி காக்கும் பொறுப்பு எனக்கு இருந்தது.

ஒதுக்கான ஓர் இடத்தில் தோடைமரம் ஒன்று காய்களின் பாரம் தாங்காது தலை குனிந்து நின்றது. ஆரெஞ்சு நிறத்துடன் காட்சியளித்த ஓர் அழகிய பழம் நம் கவனத்தை ஈர்த்தது. திட்டமிட்டபடி, இல்லங்களைச் சுற்றிப் பார்வையிட்டு, பின் எனது சினேகிதி ராஜமணியும், நானும் பழத்தைப் பறித்து விட்டோம் என்ற மகிழ்ச்சியுடன் திரும்பினோம். நம்மைப் பார்த்துக்கொண்டு விறாந்தையில் நின்றவர் மனோரஞ்சித அக்கா. மாணவிகள் கனிகளைப் பறிக்கலாகாது என்பது கட்டளை. மனோரஞ்சித அக்காவைக் கண்டவுடன் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. மேனி நடுங்க, அவரை நிமிர்ந்து பார்க்க சக்தி அற்றவளாய் தலை குனிந்து நின்றோம்.

"இங்கே வாருங்கள்" என்று கூறிய அவர், ராஜமணியிடம், "ஓடிப்போய் ஒரு கத்தி எடுத்து வாருங்கள்" என்று பணித்தார். தப்பினோம், பிழைத்தோம் என்று ராஜமணி காற்றாய்ப் பறந்து விட்டாள். மனோரஞ்சித அக்கா வைத்தவிழி வாங்காமல் என்னை உற்றுநோக்கினார். மௌனம் அவரது கண்களைப் பார்க்க சக்தி இழந்து நின்றேன். நான் மிக விரும்பிய ஆசிரியை! என்மீது அளவு கடந்த அன்பும் நல் லபிப்பிராயமுங் கொண்டிருந்த ஆசிரியை! கையும் களவுமாய் அவர் முன் நிற்பது தூக்கு மேடையில் நிற்பது போன்ற உணர்வு. கத்தி கொண்டு வரப்பட்டது. மனோரஞ்சித அக்கா பழத்தை இரண்டு பாதிகளாக வெட்டி எங்கள் இருவர் கைகளிலும் ஒவ்வொரு பாதியையும் வைத்து விட்டு மௌனமாகச் சென்று விட்டார். அந்த மௌனம், "வேலி பயிரை மேயலாகாது, வேலி பயிரை மேயலாகாது " என்று அலறிக் கூறிய கூக்குரலின் ஒலி நமது காதுகளில் ஒலித்தது. சொல்லாமல்ச் சொல்லி நமக்குப் பாடம் புகட்டிய நல்லாசிரியை இன்று நம்மிடையே இல்லை. அவரது ஆத்மா சாந்திக்கு எங்கள் பிரார்த்தனை.

பாடசாலைப் படிப்பை நோக்கும் பொழுது, நமக்கு தாய்போல் இருந்து, அன்பும், பாசமும் காட்டிய திருமதி பிள்ளையைப் பாடசாலை அதிபராகப் பெற்றிருந்தமை நாம் செய்த புண்ணியம் என்றே கூறல் வேண்டும். கல்வி, கல்வி சார்ந்த ஏனைய விடயங்களிலும், விளை

யாட்டு, சாரணிய இயக்கம், சமய இலக்கிய மன்றங்கள் போன்ற துறைகளிலும் நாம் ஈடுபட்டு முன்னேற நம்மை ஊக்குவித்தார்கள்.

திருமதி பிள்ளை அவர்கள் தமது கடமையைச் செவ்வனே செய்ய அவர்களுக்குப் பக்க பலமாக கடமை உணர்ச்சி மிக்க ஆசிரியர்கள் இருந்தார்கள். திருமதி தங்கம்மா தளையசிங்கம், திருமதி மகேஸ்வரி நாகரத்தினம், செல்வி சிவபாக்கியம் கந்தையா, செல்விகள் காயத்திரி, மாயித்ரி பொன்னுத்துரை திருமதி அருணாசலம், செல்வி கலாவள்ளி சுப்பிரமணியம், செல்வி ஞானனேஸ்வரி தம்பு, இரமச்சந்திர மாஸ்டர், கணபதி ஐயர், இராமையர், ஐயங்கார், திருமதி தங்கராஜா போன்ற சிலரைக் குறிப்பிட விரும்புகின்றேன். இவர்கள் நம்மை ஒழுக்க நெறியில் இட்டுச் சென்று நம்மிடையே கடமை உணர்ச்சியை வளர்க்க அரும் பாடுபட்டவர்கள். நாம் கண்ணியத்துடனும், கட்டுப்பாட்டுடனும் வாழ வழி காட்டிய தெய்வங்கள்.

இவ்வாறு நமக்குச் சிறந்த ஆசிரியர்களைத் தந்து நம்மைச் சிறந்த மாணவியாக,சிறந்த மகளாக, சிறந்த மனைவியாக, சிறந்த பிரஜையாக, சிறந்த சமய சமூகத் தொண்டராக வாழ வழிகாட்டி வளர்த்த அன்னையை, இராமநாதன் கல்லூரியை நம்மால் மறக்க முடியுமா? நமது நல்வாழ்வுக்கு வித்திட்ட மாதாவை நாம் என்றென்றும் நினைவு கூரக் கடமைப் பட்டுள்ளோம்.

நம் அன்னை வாழ்க நீடுழி!

வாழ்க வளமுடன்

# இராமநாதன் கல்லூரியே வாழிய வாழியவே

திருமதி கௌரி, இரத்தினவேல்,
B.A, DIP - IN - EDU.
ஆசிரியர்
கொ/ இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு - 04
பொருளாளர்,
பழைய மாணவர் சங்கம், கொழும்பு

வையத்துள் வாழ் வாங்கு வாழ்ந்திடவே
சைவத்தின் பண்பாட்டுச் சின்னமெல்லாம்
சிறு பருவத்தே ஊட்டி விட்ட கல்லூரித் தாயவள்
வித்தாகி வந்த எம்மை விருட்சமாக அறிவென்ற நிழல் தந்து
வேரூன்றி தொடர்ந்து பணியாற்றி நூற்றாண்டு கண்ட
கல்லூரித் தாயவள் எங்கள் கல்லூரித் தாயவள்
நன்நெறி முத்துக்களை நல்கிடும் சிப்பி இவள்
விசும்பிலே ஆயிரம் ஆயிரம் விண்மீன்கள் போல
பிரசவிக்கும் நன்மதி மங்கையர் கூட்டம்
கரும்பிலும் சுவை மிகு தேன்மொழி தமிழொடு
சைவம் எனும் பாலில் கலந்து
அதைப் பருகும் பவித்திர மங்கையர்கள்
ஒழுக்கமதில் தழம்பாத மாணவர் கூட்டம்
கல்வி பயிலும் கலைக்கூடம் இது
தமிழ் மாதர் குலம் தம் பண்பை
தொன்று தொட்டு காலம் அழித்தாலும் அதன் கோலங்கள் குலையாது
பேணிக் காத்திடுவாள் கல்லூரித் தாயவள்
இலங்கைத் திருநாட்டின் மணிமுடியாம் யாழ்ப்பாணத்து
சுன்னாகத்தில் இக் கல்லூரி மேகம்
கலைகளில் வல்ல மாதர்களைப் பொழிந்திடும்
தமிழ் நெறியில் நின்று தவறா மாணவிகள் பாரினிலே
எந்த பட்டி தொட்டியிலும் வெற்றி கண்டிடுவர்.
அது கல்லூரியின் உழைப்புக்குச் சான்று

நவீன உலக நாகரீகம் எம்மவரைத் தாக்கினாலும்
இராமநாதன் கல்லூரி மங்கையர் நாம்
நின்ற நெறியில் இருந்து தவறேல்
என்ற வாசகத்தை நெஞ்சில் பதித்தோம்
பெருமைகளைக் கற்ற வித்தை மூலம் சொல்லிடுவோம்
ஒழுக்கக் கட்டுப்பாட்டைப் புகட்டி உண்மை ஒளி ஏற்றிவருவாய்
படிப்பதற்காய் நாடியவரை நயமோடு உயர்த்த
எழு பிறப்பும் தொடர மயக்கமறுக்கும் கல்வியிலே
எண்ணும் எழுத்தும் ஏற்றம் பெறவே நீடு பணி செய்து
சாதனைகள் பல படைத்த கல்லூரித் தாய்க்கு
இமயத்தில் கற்பகதருவை நாட்டிடுவோம்.
ஊருளி நீராய் உயர்நிலை பெற்று வரும்
அன்னை தமிழோடு சைவம் கலந்த
சீரிய நெறிய சங்கு முழங்க எங்கும் ஒளிதீபம் ஏற்றுவோம்
ஈழத்துப் பெரியாராம் சேர் பொன். இராமநாதன் உருவாக்கிய
கல்லூரித் தாயே வாழிய வாழியவே
நாளும் அறியாமை இருளகற்றி அறிவுக்கண் திறக்க
ஞான ஒளி விளக்காய்த் திகழும் தூண்டாமணி விளக்கே
நின்று நிலைத்து ஒளிதந்து நீடு புகழ் விளங்க வைத்தாய்
அன்பின் பெருமை உணர்ந்து அகமகிழ்ந்து போற்றுகின்றேன்.
பண்டும் இன்றும் என்றும் பாரில் வளம் பெற்று
தொண்டுக்காகவே செம்மைமிகு தாயுள்ளம் கொண்ட
மங்கையரைச் சமூகத்திற்கு வழங்கும் வள்ளல் நீயம்மா
உடதருள் மழையால் நனைந்து இம்மண்ணில்
சேவை செய்ய எம்மை உருவாக்கினாய்
நன்றியால் நாம் பணிந்தோம் நூற்றாண்டு விழாவில்
நீண்ட பயணம் தொடர வாழ்த்துகின்றேன்
வாழி நீ பல்லாண்டு வாழிய வாழியவே
ஈழ மணித் திருநாட்டில் நீ ஓங்கி
என்றென்றும் வாழிய வாழியவே.

# இராமநாதன் கல்லூரியின் பொற்காலச் சிற்பி திருமதி பிள்ளை

*இராமநாதன் கல்லூரி எழுந்தது:*

*குன்றை வில்லாய் வளைத்தபிரான்*
*குகனை ஈன்ற கண்ணுதலான்*
*மன்றுள் நடனம் செய்கின்ற*
*மங்கை பாகன் திருவருளால்*
*என்றும் என்றும் தழைத்தோங்கி*
*இராம நாதன் கல்லூரி*
*நன்று நாடும் சுன்னாக*
*நகரில் வாழ்க! வாழ்கவே!*

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை இராமநாதன் கல்லூரியை வாழ்த்திய பாடலிது. யாழ்ப்பாணத்துப் பாடசாலைகளிலே தென்னகத்திலே அந்நாளில் மிகப் பிரபலமான பாடசாலையாக இராமநாதன் கல்லூரி விளங்கியது. தமிழகத்தினைச் சேர்ந்த தமிழறிஞர் திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் நிறுவனர் சேர். பொன். இராமநாதனின் ஒரே மகளான சிவகாமசுந்தரியைத் திருமணம் செய்து இராமநாதன் கல்லூரியின் நிர்வாகப் பொறுப்பேற்று தமிழகத்தோடுள்ள உறவைப் பலப்படுத்தியுள்ளார். தமிழகத்திலேயிருந்து யாழ்ப்பாணம் வருகை தருகின்ற தமிழ் அறிஞர்களோ, கலைஞர்களோ இராமநாதன் கல்லூரிக்குள் கால் பதிக்காமல் தமிழகம் திரும்பியதில்லை. இராமநாதன் கல்லூரி ஏன் தோன்றியது? எப்படித் தோன்றியது?

சில நிகழ்வுகள் பதிக்கும் சுவடுகள் அடிக்கடி மேலெழுந்து இதயம் வரை நனைத்து குளிர வைக்கும் தன்மை உடையவை. ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலம் இலங்கையின் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த இராமநாதப் பெருந்தகை (1851 - 1933) தாபித்த பெண்கள் கல்லூரி இராமநாதன் கல்லூரி. கிறிஸ்தவ மிஷனரிமாரினால் நிறுவப்பட்டு விடுதிச்சாலையுடன் கூடிய ஒரு பாடசாலை உடுவிலில் இயங்கி வந்தது. 1824ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இப் பாடசாலை வெள்ளைக்கார அதிபர்களின் தலைமையிலே மிகவும் சிறப்பாக நடந்து கொண்டிருந்தது. ஆகவே வசதி படைத்த மற்றும் கல்வியறிவுடைய பெற்றோர்கள் தமது பெண் பிள்ளைகளை இப் பாடசாலைக்கு அனுப்பினார்கள். மத மாற்றமும் இதனால் ஓரளவு நடைபெற்றது என்பதை மறுப்பதற்கில்லை. இத்தகைய வசதிகளுடைய பெண்கள் பாடசாலை ஒன்று சைவச் சூழலில் இல்லையே என நம்மவர்கள் ஏங்கினர். உடுவிலில் உள்ள அந்தப் பெண்கள் பாடசாலையில் மதமாற்றம் நடைபெறுவதாக ஐயுற்ற உள்ளூர் வாசிகள் இராமநாதவள்ளலை அணுகிப் பெண்களுக்கான விடுதிச்சாலையுடன் கூடிய பாடசாலை ஒன்றை அமைத்துத் தரவேண்டுமென இறைஞ்சினர். அவர்களது வேண்டுகோளினை வள்ளல் அவர்கள் நிறைவேற்றியமையால் 1914ஆம் ஆண்டிலே இராமநாதன் கல்லூரி நிறுவப்பட்டது. மிஷனரிமார்களால் பெண்களுக்காக நடாத்தப்பட்ட பாடசாலைகள் அத்தனையிலும் அக்காலத்தில் வெள்ளைக்கார மாதர்களே அதிபர்களாகக் கடமையாற்றினார்கள். ஆகவே இராமநாதன் பெண்கள் கல்லூரியி

லும் அதே நடைமுறையைக் கையாண்டமை யால் வெள்ளைக்கார மாதர்களே ஆரம்பகால த்தில் அதிபர்களாகக் கடமையாற்றினார்கள்.

திருமதி Florence Farr இங்கிலாந்தில் பிறந்தவர். நிறைந்த அழகி. நடிப்பாற்றல் மிக்கவர். அத்துடன் ஆங்கிலத்தைக் கம்பீர மாக வாசிக்கும் அதீத திறன் படைத்தவர். ஆகவே பிரபல நாடகாசிரியரான Bernard Shawவுடைய நாடகங்களில் நடித்துப் பெரும் புகழ் ஈட்டினார். அத்துடன் Yeats என்கிற பிரபல கவிஞர் தனது கவிதைகளை மேடை களில் வாசிப்பதற்காக இவரை உபயோகித் தார். 1912ஆம் ஆண்டிலே புளோறென்ஸ் ஃபார் அவர்கள் அமெரிக்கா விற்குச் சுற்றுலா சென்றிருந்த சமயத்தில், சேர் இராமநாதன் அவர்களைக் காத்திராப்பிரகாரமாகச் சந்தி த்தார். திரு. இராமநாதன் அவர் களுடைய ஆன்மீகப் பேச்சுக்களால் கவரப் பட்ட அம்மையார், திரு. இராமநாதன் இளம் பெண்களுக்காக ஒரு பாடசாலையை நிறுவுதற் காகத் திட்டமிட்டுள்ளார் என்பதை அறிந்து மிகவும் உவகையுடன் அதனை வரவேற்றார். தான் அவரது முயற்சிக்கு உறுதுணையாக நிற்பேன் எனவும் உறுதி அளித்தார். 1914ஆம் ஆண்டிலே திரு. இராமநாதன் அவர்கள் உடுவிலில் பெண்களுக்கான கல்லூரி ஒன்றைத் தொடங்கிவிட்டார் என அறிந்த 52 வயதான புளோறென்ஸ் ஃபார் அவர்கள் இங்கிலாந் திலுள்ள தனது உடமைகள் யாவற்றையும் விற்றுவிட்டு யாழ்ப்பாணம் ஏகினார். திரு. இராமநாதன் அவர்கள் உடனடியாகப் பாடசாலையின் அதிபராக அவரை நியமித்தது டன் பாடசாலை நிர்வாகத்தினை அவரிடமே ஒப்ப டைத்தார். இயற்கையாக அமைந்த நிர்வாகத் திறனும் தமிழர்களின் பாரம்பரி யத்தை மதிக்கும் தன்மையும் அவரை ஒரு சிறந்த நிர்வாகியாக்கியது. பாடசாலை சிறப் பான வகையில் முன்னேறிக் கொண்டிருக் கையில், துரதிஷ்டவசமாக அம்மையாரின் மார் பகத்தில் காணப்பட்ட திரட்சி, புற்று நோய் என அறிவிக்கப்பட்டது. அவரது மார்பகம் அகற்றப்பட்டது ஆனால் நோய் பரவி விட்டமையால் 1917ஆம் ஆண்டிலேயே தனது 56 வயதிலே புளோறென்ஸ் ஃபார் அம்மையார் கொழும்பிலுள்ள மருத்துவ மனை ஒன்றிலே காலமாகிவிட்டார். அவரது ஆசைப்படி அவரது உடல் எரியூட்டப்பட்டு திரு. இராமநாதன் அவர்களால் புனித கல்யாணி ஆற்றில் கரைக்கப்பட்டது.

**ARP கொண்டு வந்த எழில் மங்கை:**

இரண்டாம் உலக யுத்தகாலம். துள்ளித் திரியும் பள்ளிப்பருவ இளம் பெண்கள் 28 பேர் ஒரு வகுப்பறையில் ஒரு நாள் மாலை எம் கல்லூரியின் கார் ஐயரது போர்ட் வண்டி, பல்வேறு சத்தங்களால் தன்வருகையைப் பறைசாற்றிக் கொண்டு வந்து பிரதான வாசலில் நிற்க முயன்று அருகே உள்ள எமது வகுப்பறைமுன் புகையைக் கக்கி விட்டு நின்றது. புதியன கண்டபோது விடுவரோ புதுமை காண்போர்? எல்லோரும் எழுந்து ஜன்னலை முண்டியடித்து எட்டிப் பார்த் தோம். அந்தக் காட்சியை இன்றும் எம்மால் மறக்க முடியவில்லை. அப்போது நீண்ட ஜிப்பாவும் காந்திக் குல்லாயுமாய் ஒருவர் இறங்கி கயிற்றால் கட்டியிருந்த கதவை இலாவகமாய்த் திறக்க, வெளிவருகிறார் ஒரு பெண். சேற்றில் ஒரு செந்தாமரையா? அழகில் ஒரு திருமகளா? செந்தாழை நிறம். நெளிநெளி என நீண்ட கருகரு கூந்தல். வட்டநிலாவென செவ்விய கழுத்தின் மேல் நிறைவதனம். தனத்திற்கு மெருகு சேர்க்கப் பட்டுப் புட வையும் மூத்தாரமுமாகத் தன் சிவந்த

மென்பாதங்களைக் கீழ்வைத்து இறங்குகிறார். யார் இவர்? ஒருவரை ஒருவர் வினவி விடை காண நாம் முயல, அழைப்பு வருகிறது. ARP (Air Raid Precaution) அதிகாரி திருமதி செல்லம்மா பிள்ளை வந்திருக்கிறார் பயிற் சிக்கு வாருங்கள் என்று. இரண்டாவது உலக யுத்தம் உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிரு ந்தது. யப்பானியர்களின் குண்டுவீச்சு எப்பவும் நடக்கலாம் என்ற பயத்தின் விளைவாக ARP தொண்டர்களைத் தேர்வு செய்து பயிற்சிகள் வழங்கப்பட்டன. அன்றைய அவர் வரவு நல்லவரவாக இராமநாதன் கல்லூரியின் பொற்காலத்திற்கு வித்திட்டது என்பதை அன்று நாம் உணரவில்லை. எனினும் மாணவர்களின் மனதில் ஒரு நப்பாசை. கண்டதுமே உள்ளத்தில் நிறைந்த இவர் எம் கல்லூரியிலேயே இருந்து விடக்கூடாதா? இந்தியாவின் கேரள மாநிலத்தின் திருவனந்த புரத்தினைச் சேர்ந்த அவர் அப்போது கொழு ம்பு சாஹீராக் கல்லூரியில் ஆசிரியையாகக் கடமையாற்றிக் கொண்டிருந்தாரென அறிந் தோம்.

'எம் தாபகர் வள்ளல் இராமநாதன் பல்வேறு நாகரீகங்களின் உன்னதங்களையும் உள் வாங்கி உருவான ஒரு தனித்துவ ஆளுமையுடையவர். இக்கல்லூரியை அவர் தாபித்தது ஒரு பெண் நிறைகல்வி பெற்றால் ஒரு சமுதாயம் பயனடையும் எனும் உயர் நோக்கால், Florence Emery Farr, செல்வி Carlton எனத் திறனுடைய ஆங்கிலப் பெண்கள் அதிபர் பதவி ஏற்று அவர் விருப் பினை நெறிப்படுத்தினர். எனினும் இருவர் மருகர் சான்றோன் சு. நடேசபிள்ளை அவர்கள் தான் வள்ளல் விழைந்து கொணர்ந்த பண்பாட்டுப் புரட்சிக்குத் தான் நியமித்த புதிய அதிபர் திருமதி செல்லம்மாபிள்ளை மூலம் முழுமையான வடிவம் கொடுத்தார் எனலாம்.

"ஒரு மாற்றத்தினைக் கொணர நீ விரும் பினால் முதலில் நீ அந்த மாற்றமாய் இரு" என்பது காந்தி அடிகளாரின் கூற்று. எந்த மாற்றத்தைப் பெண் சமுதாயத்தில் பொன். இராமநாதன் கொண்டுவர விரும்பினாரோ அந்த மாற்றத்தின் முழுமையான வெளிப்பா டாகப் பேரெழிலும், பண்பட்ட ஆளுமையும், நிமிர்ந்த மென்நடையும், நேரிய பார்வையும், நிறைகல்வியும், கேரள நாட்டுக் கலையார் வமும், எல்லாவற்றிற்கும் மேலாக அன்பு நிறைந்த ஒரு மென் உள்ளமுமாகத் திகழ்ந்த, திருமதி பிள்ளை அவர்களை முதல் பார்த் ததுமே சந்தன மென்காற்றாக மாணவர் மனதை இனிமை செய்தவர், **1944**இல் எம் கல்லூரி அதிபர் ஆனார். குதூகலித்தனர் மாணவிகள். படித்த இலங்கையராக முழு இலங்கைக்கும் (1911) சட்டநிருணய சபை யின் பிரதிநிதியான எம் தாபகர் வள்ளல் இராமநாதன் அவர்கள் இங்கிலாந்திலுள்ள Eton, Harrow என்ற முன்நிலைக் கல்லூரிக ளைப் பார்வையிட்ட பின்பே எம் கல்லூ ரியை, மாணவர் ஆசிரியர் உடன் உறைந்து கல்விகற்க ஒரு கலை எழில் நிறைந்த கூடமாக அமைத்தார். **1931**இல் அதிபர் வதிய வீடு, பவள விதைகளைச் சிந்தி விளையாடும் உயர் மஞ்சாடி மரங்கள், பொன்சொரியும் வேங்கை மரமென பெருவட்டமாக ஓடுபாதைகள் (drive way) நிறைந்த பச்சைக்குடை விரிக்கும் காயும் நல்கு நெல்லி, மணங் கொஞ்சும் மனோரஞ்சிதம், மகிழ் இனிது கந்தம், தென்னஞ்சோலைகள் சுவைதரும் வெள்ளைக் கொழும்பான் மரங்களும் என எழில் சிந்தும் விரிந்த வளாகம் கல்லூரிக்குப் பெருமை சேர்த்தது.

அதிபரானதும் பரபர எனச் செயற்பட்டார். திருமதி பிள்ளை. வளாகத்திலே அமைந்த தன் வீட்டிலிருந்து 7.30 மணிக்கே புறப்பட்டு விடுவார். ஸ்நானம் செய்த கூந் தலை நுனி முடிச்சிட்டு, பட்டுப் புடைவையும் குங்கும திலகமுமாக அவர் வருவது இராம நாதப் பெருந்தகை பெண்பெருமை பாடிய பாரதி கண்ட புதுமைப்பெண்ணை நினைவூட்ட, தோட்டக்காரரைப் பார்த்துச் சிரித்து அன்றாட வேலையைத் தெளிவாக எடுத்துக் கூறி, பூச்செடிகளைத் தடவிக் கொடுத்து, பள்ளிக் கூடப் படியில் ஏறும் பொழுது எதிர்ப்படும் மாணவர்களைப் பரிவுடன் விசாரித்து, நீண்ட சீருடை சிறிது குறுகிக் கணைக்கால் தெரிந் தால் அதைக் கறாராகச் சுட்டிக் காட்டி, வெள்ளை நிறம் சிறிது மங்கி இருந்தால், நாளை நன்றாக அலம்ப வேண்டுமென உரைத்து, நோயுற்ற சிறுமி சுகமாய்த் திரும்பியிருந் தால் அவள் நலம் விசாரித்து உள்ளே நுழைந்து பளிங்குத் தாமரையில் கொலுவிருந்து அருள் பாலிக்கும் சரஸ்வதி தேவிக்குச் சிரம் தாழ்த்தி விறாந்தையில் நடந்து கீழே குனிந்து முனியம்மா சரியாகக் கூட்டியிருக்கிறாளா எனப்பார்த்து அவர் அன்றைய கடமையைத் தொடங்குவார்.

அதிகாலை 6.30 மணி விடுதி மாணவிகள் வரிசையாகக் கோவிலுக்குப் போக நிற்கும் போது சில வேளைகளில் திடீரென வந்துவிடுவார். 9.00 மணிக்கு திறந்த வெளி மைதானத்தில் நடக்கும் கல்லூரிப் பிரார்த்தனைக்கு முன்னே எமது உடைகளை, தலை வாரிவிடும் முறை, எமது நெற்றியில் திலகம் இருக்கா என்பதைப் பார்வையிட்டு விடுவார். இரட்டைப் பின்னல் போடுவதை அவர் விரும்புவதில்லை. அழகாக அரைத் தாவணி போட்டுக் கணுக்கால்வரை எமது பாவாடை நீளமாக இருக்க வேண்டும் என்பதில் குறியாக இருப்பார்.

**அதிபரானதும் அவர் எதிர் கொண்ட முதல் சவால்**

அமர C.W.W. கன்னங்கரா 1944 இல் இலவசக் கல்வித் திட்டத்தினை அறிமுகம் செய்தார். அதன் விளைவு? பொதுவாக எல்லா ஆங்கிலப் பாடசாலைகளையும் பாதித்தது, பெருந் தொகையான மாணவ மாணவிகள் ஆங்கிலப் பாடசாலைகளை நோக்கிப் படையெடுத்தனர். மக்கள் மனதிலே தரமான பாடசாலைகள் என்ற கணிப்பைப் பெற்ற பாடசாலைகளில் மாணவர் தொகை திடீரென அதிகரித்தது. 150 மாணவர்களுக்கு 6கூட வீடு வசதியுடன் தாபகர் நிறுவிய கல்லூரியானது, குபுகுபு எனச் சுனாமிப் புயலாய்ப் புகுந்த மாணவர்கட்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. தளர்ந்து விடவில்லை புதுமைப் பெண். வசதி இருந்தது. வளாகம் விசாலமானதாக இருந்தது. அதிபரிடம் ஊக்கமும் இருந்தது. வந்தவர்களுக்கு இடமளிக்க வேண்டும் அதற்கான வசதி செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. புதுப்புதுக் கட்டிடங்கள் கடகட என எழுந்தன. முந்தைய வகுப்பறை களில் சிறுசிறு மாற்றங்கள் செய்யப்பட்டன. எல்லாக் குழந்தைகளுக்கும் சாதி, மத பேதமற்ற கல்வி கற்க இடம் கொடுத்தார். உறுதுணையாக அண்ணல் நடேசபிள்ளை இருந்தார். அவர்களின் பரந்த மனச் செயற் பாட்டை மறக்காத மக்களும் அவரைத் தொடர்ந்து பாராளுமன்றத்திற்கு அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

மாணவர்கள் தொகை 2000மாகப் பெருகிவிட்டது. இக் கல்லூரியை வந்தடைந்த பெண் பிள்ளைகளை ஆளுமை நிறைந்தவராக்க வேண்டும் நளைய சமுதாயத்தின்

தூண்களாக அவர்களை நிலைநிறுத்த வேண்டும். என்பது அதிபரின் பேரவா. அதற்கான கல்வியை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். நுண்கலைகளை வளர்க்க வேண்டும். புதுமைகள் புகுத்தப்பட வேண்டும். இராமநாத பெருந்தகை கல்லூரியின் மேல் அடுக்கைப் பெரும் கூடமாக அமைத்ததன் இடையறா நடனத்தால் உலகை இயங்கச் செய்யும் (Dances the world into being - Michail Wood) கலை எழில் பளீரிடும் திரு. நடராச மூர்த்தம் சிவகாமசுந்தரி சமேதரராய் குனித்த புருவமும் குமிண் சிரிப்புமாய் கொலு இருக்கும் இரத்தின சபையாக்கி, காலை, மாலை தாபகர் வகுத்த முறைப்படி தேவாரங் கள் பாடிச் சுற்றிக் கும்பிட்டு மாணவர் பூஜிக்க வேண்டும். - மருளாதீர். இத்தனையும் அதிபர் தலைமையில் முழுமையாக நிறை வேற்றப் பட்டன. பெருகி மாணவர் தொகையின் கல்வி மேம்பாட்டிற்கு உதவப் போதிய பட்டதாரி ஆசிரியர்கள் நாட்டில் இல்லாமை யால் பட்டதாரி ஆசிரியர்கள் தமிழ்நாடு மற்றும் கேரளாவிலிருந்து வருவிக்கப்பட்டன. அதிபரின் அற்புத செயற்றிறனால் சில வருடங்கள் செல்ல எம் மாணவிகள் கூட்டமாகப் பல்கலைக் கழகங்களில் கைகோர்த்து உலாவினர், கவனத்துடன் கற்றுத் தேறிக் கல்லூரிக்கும் அதிபருக்கும் பெருமை தேடிக் கொடுத்தனர். பல்கலைக்கழகங்களுக்குள் (ஆண்களுடன் படிக்க!) தம் பெண்களை அனுப்ப விரும்பா தோரும் அந்தக் காலம் இருந்தனர்! கற்க வேண்டும் என்ற ஆவல், அதே சமயம் பல்கலைக்கழகம் செல்வதற்கு மருட்சி என்ற அவர்கள் முன்னேறவும் வழிசெய்தார். பெண் பிள்ளைகளுடைய அபிலாசைகளையும் பெற்றோர்களின் மனப் பிராந்தியையும் தீர்ப்பதற்கான ஒரு வழியை அதிபர் கண்டுகொண்டார். London Inter Arts, வகுப்பை அமைத்து தகுதியுடையோர் படிக்க வசதி செய்ததால், நாங்கள் பேர் **1948**இல் சித்தி பெற்று கல்லூரிக்குப் புகழ் சேர்த்தோம். இதனை அதிபரின் சாதனை என்பது அவரது செயற்றிறனைக் குறைத்துச் சொல்வதாகி விடும். தொடர்ந்து அவர்கள் கற்பதற்கு B.A. Hons (Tamil) வகுப்பு ஏற்பாடு செய்து (**1951**இல்) கொடுத்தார் இந்த வித்தகி. இதில் சித்தி பெற்றவர் முதலாம் வகுப்புத் தொடக் கம் இக் கல்லூரியிலேயே படித்துப் பின் அங்கு ஆசிரியரானார். பல்கலைக்கழகக் கல்வி வேண்டும். ஆனால் அது தமிழ்ச் சூழலிலே, தனியாகப் பெண்கள் கற்பதற்கான சூழலிலே அமைய வேண்டும் என விரும்பியோர் பலரைத் தமிழ்நாட்டுப் பெண்கள் கல்லூரிகள் சென்று பட்டம் பெறவும் வகைசெய்தார். சில வருடங்களிலேயே எம் கல்லூரி மாணவரே பட்டதாரி ஆசிரியராய் வெளிநாட்டு ஆசிரியர் வரவிற்கு முற்றுப் புள்ளி வைத்தனர். உயர்தர வகுப்புகளிலே பாடபோதனைக்கு வேண்டிய பட்டதாரி ஆசிரியர்கள் நம் நாட்டிலே இல்லாமையால் இந்தியாவில், சிறப்பாகக் கேரளாவில் இருந்து வருவித்த நிலை மெல்ல மெல்ல மாறியது.

**வாசிப்பே ஒருவரை முழுமைபெற வைக்கிறது**

மாணவிகள் பரந்த அறிவையும் ரசனையையும் பெறக்கூடுதலாக வாசிக்க வேண்டும் என்று அதிபர் கருதினார். மாணவர் கல்வி வளர்ச்சிக்கு நூல்நிலையத்தின் அவசியத்தை உணர்ந்த இவர் ஒவ்வொரு வகுப்புக்கும் பாட வேளையில் ஒரு பாடத்தை இதற்கென ஒதுக்கி அவ்வேளையில் மாணவர் நூல்நிலையம் சென்று அங்கிருந்து வாசிக்க ஒழுங்குகள் செய்து கொடுத்தார். அத்தனை மாணவிகளும் தங்கி வாசிப்பதாயின் அதற்கென ஒரு வசதியான நூலகம் வேண்டுமே! விசாலமான ஒரு

கூடம் எடுத்து, சுவையான கவிதைகள், கட்டுரைகள், சஞ்சிகைகள், விஞ்ஞான, வரலாற்று நூல்கள் துப்பறியும் நாவல்கள், எனத் தமிழ், ஆங்கிலத்தில் ஆயிரக்கணக்கான நூல்களைப் பொறுக்கிப் பொறுக்கி எடுத்து பாங்காக அவற்றினை அடுக்கி மாதிரி நூலகம் ஒன்றை வடிவமைத்தார். இதனால் மாணவிகளுடைய ரசனைக்கேற்ற நூல்களை அவர்கள் தேர்ந்தெடுத்து வாசிக்க முடிந்தது. அவரது கணவர் திரு. பிள்ளை அவர்கள் நூலகப் பொறுப்பாளர் ஆளுமை மிக்கவர். அவரது கண்காணிப்பில் நூலகம் செல்வது மாணவர்களுக்கு மிகப் பிடித்தமானது. மாணவிகள் புதுப்புது நூல்களைத் துருவித் தேடி வாசித்து தமது அறிவை விருத்தி செய்து கொண்டதோடு தாம் சுவைத்த இனிய பொருள் பொதிந்த கருத்துக்களைச் சக மாணவிகளுடன் பகிர்ந்து, ஏனைய மாணவிகளுக்கும் வாசிக்கும் ஆற்றலை வளர்த்தனர். நாட்டினதும், பல்வேறு உலக நாடுகளிலும் நடைபெறும் அன்றாட செய்திகளை மாணவிகள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகப் பல்வேறு நாளாந்தச் செய்தித் தாள்களும் வரவழைக்கப்பட்டு நூலகத்திற்கு வெளியே பொது இடம் ஒன்றில் வைக்கப் பட்டன. மாணவிகள் பத்திரிகை களை ஆர்வத்துடன் வாசிக்கின்றார்களா, என்பதை அதிபர் அவர்கள் கருத்தோடு நேரடியாகக் கண்காணித்து வந்தார்கள்.

அக்காலத்துக் கல்லூரி அதிபர்கள் பொதுவாக உயர்தரவகுப்புகளில் கற்பிக்கின்ற பொதுஅறிவு என்ற பாடத்தையே திருமதி பிள்ளையும் கற்பித்தார். ஏனைய பாடங்களைப் போன்று இப்பாடத்திற்குத் திட்ட வட்டமான பாடவிதானம் இல்லை என்பதுடன் பரீட்சைக்கு முன்னர் இதைத்தான் கற்பித்து முடிக்க வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை. ஆகவே அதிபர்கள் தாம் கற்பிக்க வேண்டியதைக் கற்பிக்கிறார்களா என்பதை அறிந்து அவர்களை நெறிப்படுத்த முடிந்தது. அதிபர் திருமதி பிள்ளை அவர்கள் சமகாலத்து வெளியுலகச் செய்திகள் அனைத் தையும் விஸ்தாரமாக மாணவிகளுக்கு எடுத் துச் சொல்வதில் வல்லவர். நாவன்மை மிக்கவ ராக அவர் உள்ளமையால் மிகவும் கவர்ச்சிகர மாக உரையாற்றி மாணவியரின் உலக அறிவை வளர்த்தார்.

கல்லூரியில் உயர்தரவகுப்பிலே கல்வி கற்கின்ற மாணவிகள் அத்தனை பேர்களும் பல்கலைக்கழகமோ, வேறு நிறுவனங்களுக்கோ செல்லப் போவதில்லை என்பது அதிபர் அவர்களுக்குத் தெரிந்தே இருந்தது. மாணவிகளில் ஒரு பகுதியினர் திருமணமாகிக் குடும்பப் பொறுப்பை ஏற்க வேண்டிவரும் என்பதை உணர்ந்த அதிபர் அவர்கள் தனது பாடநேரத்தில் இடையிடையே தாயுள்ளத்துடன் குடும்பப் பாங்கான அறிவுரைகளையும் வழங்கத் தவறியதில்லை. அக்கால மாணவிகளின் நடையுடை பாவனையில் ஒரு கவர்ச்சி இருந்தது. பாவாடை, தாவணி உடுத்தி, தலையில் பூச்சூடி, பின்னிக் குஞ்சம்கட்டி, நெற்றியில் திருநீறணிந்து, திலகமிட்டு, தொங்கட்டான், வளையல், கால்சங்கிலி என்று விரும்பிய நகைகளை அணிந்து மலர்ந்த முகத்துடன், படிக்கும் வேளையில் படித்தும், மாலையில் பின்னல், தையல் போன்ற ஏதாவது கைவேலை செய்யக் கற்பதுடன் ஆடிப்பாடி விளையாடும் பெண் பிள்ளைகளிடம் ஒரு தெய்வீகக் கவர்ச்சி காணப்பட்டது உண்மையே.

அக்காலத்தில் இராமநாதன் கல்லூரியின் H.S.C வகுப்பை, `Husband Seeking Class'

என இளைஞர்கள் வேடிக்கையாக அழைப் பார்கள். இராமநாதன் கல்லூரி மாணவிகள், ஒரு குடும்பப்பெண் குடும்பவாழ் வுக்குத் தேவையான அத்தனை குண இயல்புக ளையும் அங்கே பெற்றுக் கொள்கிறாள் என்ற கருத்திலேயே இவ்விதமாகப் பேசப்பட்டது. உயர் வகுப்பு மாணவிகள் வெளியுலகத் தொட ர்புகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும், அவர்களுடைய மனப்பான்மை விசாலமான தாக அமைய வேண்டும், எதனையும் தர்க்க ரீதியாகப் பார்க்கின்ற சிந்தனை வேண்டுமென உணர்ந்த அதிபர் அவர்கள் உயர் வகுப்பு மாண வர்களுக்கான மன்றம் ஒன்றை அமைத்துக் கொடுத்தார். அதன் மூலமாக சமூக அரசியல் பிரமுகர்களை எந்தவித பாரபட்சமுமின்றி அழைத்து மாணவிகளுக்குப் பேச வைத்தார். கல்லூரி முகாமையாளர் திரு. சு. நடேச பிள்ளை இவரோ ஐக்கிய தேசியக் கட்சியின் பிரமுகர். ஆனால் திருமதி பிள்ளை அவர்கள் தமிழரசுக் கட்சியின் ஆற்றல் மிகு பேச்சாள ரான திரு. அமிர்தலிங்கத்தை அழைத்து சமஷ்டி ஆட்சி பற்றி மாணவிகளுக்குப் பேச ஒழுங்கு செய்தார். உரையாற்றும்படி அழைப்பு விடுக்கச்சென்ற மாணவர் மன்றச் செயலாளரிடம் நகைச்சுவையாக "ஐக்கிய தேசியக் கட்சிக் கூண்டுக்குள் எனக்கு வர வேற்பா?" எனக் கூறிய அமிர்தலிங்கம் அவர்க ளுடைய உரையினை உயர்தரப்பு மாணவிகள் மாத்திரமல்லாமல் ஆசிரியைகளும் கேட்ப தற்கு அதிபர் வசதி செய்து கொடுத்தார்.

**கலைத்துறை வளர்வதற்கு அவர் கொடுத்த ஊக்கம் அளப்பரியது**

அதிபர் அவர்கள் மாணவிகளின் கலைத் திறனை வளர்க்க வேண்டும் என்பதில் அதிக நாட்டமுடையவராய் விளங்கினார். கல்லூரி யில் மாணவிகளுக்கு இசை, நடனம், வாத்தியம் போன்ற கலைகளுடன் தேவாரம் ஓதுதலும் போதிக்கப்பட்டது. ஆனால் கற்கின்றோர் அரங்கில் ஏறிப் போட்டியிட்ட தால் தான் பாடுதிறன், தேர்ச்சி, தன்னம் பிக்கை, ஆர்வம், ஆளுமை வளரும் என்பதை உணர்ந்த அதிபர் அதனை ஊட்டிவிடுவதற் காக விடுதி களுக்கிடையான போட்டிகளை ஏற்படுத் தினார். அருந்ததி, சகுந்தலா, ஜானகி, கண்ணகி, தமயந்தி, லீலாவதி என ஆறு விடுதிகள் கல்லூரியில் இருந்தன. இதில் முதல் ஐந்து பெயர்களும் சமய இலக்கியக் கதாபா த்திரங்கள். லீலாவதி என்பது சேர். பொன். இராமநாதனின் மனைவியினது பெயர். வள்ளல் அவர்கள் செல்லாச்சி அம்மாள் எனும் பெண்மணியை முதலில் திருமணம் செய்திருந் தார். ஆனால் அவ்வம்மையார் இறந்து விட்டார். சேர். பொன். இராமநாதன் அவர்கள் அமெரிக்கா சென்றி ருந்த போது அவருக்குச் செயலராகக் கடமையாற்றியவர் செல்வி R. L. ஹரிசன் அவர்கள். வள்ளலின் சமயம்சார் உரைகளைக் கேட்ட ஹரிசன் தன் னையே பறிகொடுத்து விட்டார். இராமநாதன் அவர்களைத் திருமணம் செய்ததுடன் இந்து வாக மாறித் தன் பெயரையும் லீலாவதி என மாற்றிக் கொண்டார். இவரது மகளே சிவகாம சுந்தரி. திருமதி லீலாவதி தமிழையும் சைவத் தையும் நன்கு கற்றுத் தேறினார். சேர். பொன். இராமநாதனின் சைவத் தமிழ் நூல்கள் சிலவற்றை ஆங்கிலத்திற்கும் மொழி மாற்றம் செய்துள்ளார்.

அதிபர் அவர்கள் இந்த ஆறு விடுதி மாணவிகளுக்கிடையே தேவாரம் ஓதும் போட்டிகளை நடாத்தினார். நடுவரில் ஒருவ ராகத் தானும் அமர்ந்து போட்டி செவ்வனே நடைபெற வழிசெய்து வெற்றியீட்டிய மாண விகளைக் கௌரவித்தார். சமய இசைத் துறைக்கென நியமித்த ஆசிரியை செல்வி சுபத்திரா அவர்கள் வெண்புடவையில் (கேர

ளப் பண்பாடு) கண்களை மூடிக்கொண்டு பக்திபூர்வமாகப் பாடினால் கேட்ட கல்லும் கூடக் கரைந்த கொடுக்கும். மாணவர் சிக் கென இவரைப் பிடித்துக்கொண்டனர் கட கட எனச் சங்கீதத்தை முறையாகப் பயின்று தடதட என யாழ்ப்பாணத்து மற்றைய கல்லூரி களை வென்று மகிழ்ந்தனர். அதிபர் அவர்கள் நிறைந்த சங்கீத ஞானம் உடையவர், வெளியே போட்டிகளிலோ, நிகழ்ச்சிகளிலோ பாடப் போகு முன்னர் அதிபர் அவர்கள் பங்கு பற்றும் பிள்ளைகளைத் தன்முன்னே பாடிக் காட்டச் செய்வார். சில சமயங்களில் மாணவிகள் பிழையாக ஒருவரியைப் பாடிவிட்டால் கூட அதைக் கண்டு திருத்தும் ஆற்றல் மிக்கவராக விளங்கினார். அடுத்து நடனம் 1947ஆம் ஆண்டு வடமாகாணப் பாடசாலைகளி டையே நடைபெற்ற நடனப் போட்டியில், இராமநாதன் கல்லூரி மாணவிகள் ஆடிய 'ராதாகிருஷ்ண நடனம்' முதல் இடத்தைப் பெற்றதுடன் ஏகோபித்த பாராட்டுக்களையும் பெற்றது. கேரளத்தின் மோகினி ஆட்டம், தமிழ் நாட்டின் பரதம் கற்று ஆடினர். பார்த்தோர் திகைத்தனர். பிற கல்லூரிகள் தலைகுனிந்தன. நாடகங்கள் அரங்கேறின. இராமாயண நாடகம், மாளவிகா, அக்னி மித்திரன் (புகழ் பூத்த சமஸ்கிருதமொழி நாடகம்) இப்படிப்பல. இராமநாத வள்ளல் கணிப்பில் உடன் உறைந்த கல்வி கற்கும் மாணவர்திறன் முட்டிப் பெருகி பெருவட்ட மாய் சமுதாயத்தைத் தன்வசம் இழுக்கு மென்பதே! எம் கல்லூரி நாட்டியம், நாட கங்கள் தனித்துவமிக்கன. பிரமாண்ட எழிலு டன் நடைபெறும் எம் பரிசளிப்பு விழாக்களில் இவை அரங்கேறி பிற கல்லூரிகள் மனதை ஈர்த்து இன்று வரை பல்வேறு நிகழ்வுகளில் உலகெலாம் மேற்கொள்ளப்படும் ஒரு கலை வெளிப்பாடாகவும் திகழ்கிறது.

மாணவியர் வருட இறுதியில் வகுப்பு வகுப்பாக ஒரு குட்டி நாடகத்தை அரங்கேற்ற வேண்டும் என்பதுஅதிபரது நிபந்தனை. இது எமக்குள் இருக்கும் கலைத்திறனை வளர்க்க ஒரு சந்தர்ப்பம். நாம் எப்பொழுதும் போல வகுப்பில் முன்னேறிக் கொண்டிருந்ததால் H.S.C யில் பஸ்மாசுர மோகினி ஆட்டத்தை அரங்கேற்றினோம். அம்பிகை செல்லையா பிள்ளை என்ற மாணவி (பஸ்மாசுரனாக மேடையை அதிரச் செய்து மோகினி (நடேஸ் வரி) வலையில் விழுந்து சாம்பலாகிறாள். அம்பிகை பின் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இந் நாடகத்தை அரங்கேற்றி புகழப்படுகிறாள். கல்லூரியின் புகழ் சிதம் பரம் வரை சென்றது.

"மாலை முழுதும் விளையாட்டு" என்பது பாரதி பாட்டுடன் நின்றுவிடவில்லை. விடுதி மாணவர்க்கு கட்டாயம் மாலையில் விளையாடுவது ஊக்குவிக்கப்பட்டது. மாண விகள் ஆடிப்பாடுவதற்கு ஊஞ்சல்கள் கூடக் கட்டப்பட்டிருந்தன. வலைப்பந்தாட்டம் பிற பாடசாலைகளை வலைக்குள் வீழ்த்தின. உடற்பயிற்சி, யாழ். பாடசாலைகள் மட்டத் திலும் அகில இலங்கை ரீதியாகவும் திருமதி பிள்ளை காலத்தில் வெற்றிக் கேடயங்கள் பெறத் தவறியதில்லை. வருடாந்த விளையாட் டுப் போட்டியுடன் சேர்த்து நடாத்தப்படும் விநோத உடைப்போட்டியைப் பார்க்க வென்றே கூட்டம் அலைமோதும். பாட சாலை மாணவர் யாபேரும் விடுதி வாரியாகப் பிரிக்கப்பட்டு போட்டிகளில் பங்கு பற்று வார்கள். திருமதி பிள்ளை அவர்கள் நுண்கலை வளர்ச்சியிலும் அதீத ஈடுபாடு காட்டிய மையால் கோலம் போடுதல், தையற்கலை (embroidery) பூக்கோலம் (திருவோணச் சிறப் புடையது), மாலை தொடுத்தல் போன்றவற் றில் மாணவியரிடத்தே போட்டிகள் நடாத்திப் பரிசுகள் வழங்கப்பட்டன. இந்த முயற்சியின் சிறப் பியல்பு வேறு பல பாடசாலைகளையும் கவர்ந் திழுக்க அவையும் இராமநாதன் கல்லூரியைப் பின்பற்றின.

**தேவைகள் யாவும் செய்து கொடுக்கப்பட்டன**

கல்லூரியிலே கற்கின்ற மாணவிகளில் பெரும்பாலானோர் விடுதிச்சாலையில் வசித்து வந்தனர். பாடசாலையிலே கற்கின்ற மாணவிகளின் அன்றாட தேவைகளைத் தாமாகவே வெளியே சென்று கடைகளில் வாங்குதல் சற்றுச் சிரமமானதாக உள்ள தென்பதை அதிபர் உணர்ந்தார். எனவே ஒரே கல்லில் இரு மாங்காய்களை வீழ்த்திய முறையை அதிபர் கையாண்டார். கூட்டுறவு முறையிலே நிர்வகிக்கப்படும் கூட்டுறவுச் சாலையைத் தொடங்கி அதை நடாத்தும் பொறுப்பையும் மாணவிகள் வசமே ஒப்படை த்தார். இதனால் மாணவிகள் கூட்டுறவு முறையைப் பற்றித் தீர்க்கமாக அறிந்து கொள்வதற்கான வழிவகுத்துக் கொடுத்தார். மனையியல் ஒரு பாடமாக போதிக்கப் பட்ட போதிலும் அதற்கான எல்லா வசதிகளையும் கொண்ட ஒரு ஆய்வுகூடம் இல்லாமை பாடசாலைக்கு ஒரு பெரும் குறையாகவே இருந்தது. 2000க்கு மேற்பட்ட பெண்பிள் ளைகள் கல்வி கற்கும் இப்பெரிய கல்லூரியில் மனையியல் கூடம் இல்லாத குறையை ஈடு செய்யுமுகமாக திருமதி பிள்ளை சகல வசதி களையும் கொண்ட ஒரு பெரிய கட்டிடம் அமைத்து அன்றைய ஐக்கிய தேசியக்கட்சி அரசியல் அமைச்சராக இருந்த திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனாவைக் கொண்டு திறந்து வைத்தார். பெண்கள் மனையியல் கற்பதுடன் நின்றுவிடப்படாது. அவர்களின் கைவண்ணம் தையல் கலையிலும் துலங்க வேண்டும் எனபதில் சிரத்தை எடுத்து, அதிபர் அவர்கள் தையல் வகுப்புப் பிரிவையும் தொடக்கி வைத்தார். தையல்கள் தையலைக் கற்று 'தையல்' என்ற பெயருக்கு இலக்கணமாகினர்.

உலகப் போர் முடிந்தது. தொழில் நிமித்தம் மலேயா (மலேசியா சென்று அங்கு வாழ்ந்த நம்மவர்கள் போரின்போது பட்ட கஷ்டங்களால், இனிமேல் அங்கே வாழ்வதில்லை என குடும்பத்தினருடன் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். இவர்கள் தமது பிள்ளைகளின் கல்வியைத் தொடர்வதற்காகப் பிரபலமான பாடசாலைகளை அண்மித்தனர். பெண்களைப் பெற்றவர்கள் மனதினை ஈர்த்தது இராமநாதன் கல்லூரியே. திருமதி பிள்ளை அவர்கள் அலைந்துலைந்த பெற்றோர்களை ஏமாற்றவில்லை. கைகொடுத்து உதவினார். பெற்றோர்கள் அதிபரை வாழ்த்தினர். அவரது விசாலமான மனம் இடங் கொடுத்தது. விசாலமான வளவும் இருந்தது. ஏழாவதாக ஒரு விடுதி அமைக்கப்பட்டது. அதற்கு அதிபர் யசோதரா என்ற பெயரைச் சூட்டினார். மலையகம் மற்றும், கீழ்மாகாணத்தைச் சேர்ந்த பெண் பிள்ளைகளும் சைவச் சூழலில் கல்வி கற்க வேண்டும் என்ற வேட்கை காரணமாக இராமநாதன் கல்லூரியை நாடினர். இராமநாதன் கல்லூரி அகில இலங்கைப் பெண்கள் பாடசாலையாகத் திகழ்ந்தது.

**கனவு மெய்ப்பட வைத்தவர்**

திரு. சு. நடேபிள்ளையின் கனவு, நினைவு, இலட்சியமெல்லாம் கல்லூரியில் சங்கீதம் கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும் என்பது அவரது கனவு செயற்பட்டது. அதிபர் திருமதி பிள்ளை அவர்கள் சீமானின் கனவை நனவாக்கினார். பழம் பெரும் மகாராஜபுரம் சங்கீத பரம்பரையின் தலைமகன் மகாராஜபுரம் சந்தானம் தலைமையில் இராமநாதன் சங்கீத அக்கடமி உருவானது. அங்கு பயின்ற மாணவர் இன்று உலகெலாம் கர்நாடக சங்கீதத்தின் எழிலைப் பரப்புகிறார்கள். காலக்கிரமத்தில் யாழ். பல்கலைக்கழகம் உருவானபோது எமது அக்கடமி பல்கலைக் கழகத்து நுண்கலைப்பிரிவின் ஒரு பகுதியாகியது. பெருந்தகை இராமநாதன் உருவாக்கிய இரு பெரும் கல்லூரிகள் யாழ். பல்கலைக்

கழகமாவதற்கு வழிகோலின. பரமேஸ்வராக் கல்லூரியே யாழ். பல்கலைக்கழகத்தின் ஆரம்பகால பிரதம வளாகமாகியது. இராமநாதன் கல்லூரியின் அக்கடமி பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவின் பகுதியாகியது.

அன்றைய காலகட்டத்தில் வானொலியை வீடுகளில் வைத்திருப்பது பல மாணவருக்கு எட்டாக் கனியாக இருந்தது. ஆனால் மாணவர்கள் உலக நிகழ்வுகளை அறிந்து கொள்வதற்கு இதைவிடச் சிறந்த ஊடகம் இருக்க முடியாது என்பதை உணர்ந்த அதிபர் பாடசாலையிலே வானொலி மன்றம் ஒன்றை ஸ்தாபித்தார். பெரிய வானொலிப் பெட்டி ஒன்று வாங்கப்பட்டது. மாணவர்கள் அதன் மூலம் தமது உலக அறிவை விருத்தி செய்வதற்கு வழிவகுக்கப்பட்டது. மாணவர்களுக்குச் சமூகம்சார் பிரக்ஞை மிக அவசியம். அவர்களுக்குப் பாராளுமன்றம், தேர்தல் முறைகள் பற்றி எல்லாம் தெரிந்திருத்தல் வேண்டும். நாளைய குடிமக்களாகிய அவர்களுக்கு வேண்டிய திறன்களைப் பாடசாலை வழங்க வேண்டும். வெறும் கட்டுப் பெட்டிகளாக அவர்களைச் சமூகத்தில் விட்டால் அவர்களுக்கு வேண்டிய கல்வி அறிவைக் கொடுத்ததாகப் பாடசாலைகளைக் கருத முடியாது என்பதில் அசாத்திய நம்பிக்கை உடையவர் அதிபர் திருமதி. பிள்ளை அவர்கள். மாணவியருக்கு ஓரளவு சுதந்திரம் கொடுத்தவர், அவர்களது செயற்பாடுகளில் கட்டுப்பாட்டுடன் கூடிய சுதந்திரத்தையும் வழங்கத் தவறியதில்லை. மாதிரிப் பாராளுமன்றம் மாணவியரின் வாதிடும் திறன் பேச்சுத் திறனை வளர்த்தது. மன்றங்களுக்கான தேர்தல்கள் கோஷ்டி களாகப் பிரிந்து போட்டியிடுதற்கும் மாணவியரிடத்தே தலைமைத்துவம் ஏற்கக் கூடியவரை இனம்காணலுக்கும், நல்லியல்புகளுடையோர் எல்லோராலும் நாடப்படுவர் என்பதற்கும், வெற்றி தோல்வியை சுமுகமாகத் தோற்றவரும் சேர்ந்து கொண்டாடும் பண்பைப் பாடசாலை வளர்த்தது.

இசைஞானம், மாலைகட்டல், கோலம் போடல், நடனம், இறையுணர்வு, கல்வி மேம்பாடு என வளர்ந்த ஆளுமை ஒரு சேர வெளிப்படச் சிறந்த விழாவாக நவராத்திரி விழாவினை அதிபர் திருமதி பிள்ளை அவர்கள் அறிமுகம் செய்தார்கள். மஞ்சள் குங்குமம் கொடுத்து 6 விடுதி மாணவர், உயர் வகுப்புகள் ஒருவரை ஒருவர் அன்புடன் அழைப்பது, ஒவ்வொரு மாலையையும் திறம்படப் பக்தி பூர்வமாக அலங்காரம், கோலம், இசை எனக் கொண்டாடுவதும் பெண்கள் மனதிற் பெரிதும் நிறைந்த இவ்விழா, இன்றும் உலகெலாம் பரந்து வாழும் மாணவர் இல்லங்களில் எடுக்கப்பட்டு வருவது நாம் அறிந்ததே. அம்மையாரால் ஆரம்பிக்கப்பட்ட சிறு பொறி உலகெங்கும் சுடர் விட்டுப் பிரகாசிக்கின்றது.

பழைய மாணவர் சங்கம் புதுப்பிக்கப்பட்டு செயற்பட்டமையால் மிகப் பழைய மாணவர்கள் கல்லூரியுடன் தமது தொடர்பைக் குதூகலித்துத் தொடர்ந்தனர். அதிபர் அவர்களது தலைமையில் கல்லூரியின் பிரமாண்ட வளர்ச்சி பல கல்லூரிகளை ஈர்த்தது. A.R.P தொண்டராகவே இவருக்கு எம் சமூகத்தில் பெருமதிப்பு இருந்தது. பல பாடசாலைகளின் நிகழ்வுகளில் இவர் பிரதம அதிதியாக அழைக்கப்பட்டார். சமகாலத்தில் மகாஜனக் கல்லூரியின் அதிபராக இருந்தவர் T. T. ஜெயரத்தினம் அவர்கள். இரண்டு பாடசாலைகளுக்கும் நெருக்கமான தொடர்பு இருந்தது. திரு. சு. நடேசபிள்ளை அவர்களே மகாஜனக் கல்லூரிக்கும் முகாமையாளராகக் கடமையாற்றினார். அதிபர் ஜெயரத்தினத்தின் மனைவியாரும் இராமநாதன் கல்லூரியின் பழைய மாணவியாவார். ஆகவே இரு பாட

சாலைகளுக்குமிடையே அந்நியோன்யமான பாசமிக்க தொடர்பு இருந்து வந்தது. இராமநாதன் கல்லூரி விழாக்கள் யாவற்றிற்கும் மகாஜனவிற்கு அழைப்பு வந்துவிடும். அதிபர் ஜெயரத்தினம் அவர்கள் தமது பாடசாலையின் நிறுவியவர் தினத்திற்கு மிக்க பிரபல்யங்களை அழைத்துச் சிறப்பிப்பது வழக்கம். அச்சமயங்களிலே கல்வியியலாளர்களை வைத்து நிறுவியவர் நாள் பேருரை நிகழ்த்துவிப்பார். அத்தகைய பெருமையைத் திருமதி பிள்ளை அவர்களுக்கும் வழங்கிக் கௌரவித்தமை அவரது சிறப்பாற்றலுக்குக் கிடைத்த கௌரவம் எனலாம். உயர்தர வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களுடன் தோழமையுடன் பழகும் இவர் பண்பை விதமுறைக் காலங்களில் ஏற்படும் சுவாரஸ்யமான அனுபவங்கள் எடுத்துக் காட்டவல்லன. விடுமுறைக் காலங்களில் அவருடன் சுற்றுலா செல்வது ஆனந்தமயமான அனுபவம்.

**ஆனந்தமயமான அனுபவம், சென்ற இட மெல்லாம் சிறப்பு, அன்பு வரவேற்பு**

ஏனெனில் தொழில் அதிபர்கள், அரசியல் வாதிகள், தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் தங்கள் பெண்களை நிறைகல்வி பெறத் தேர்ந்தெடுப்பது எம் கல்லூரியை இசை மேதை M. S. சுப்புலட்சுமி முதல் நாட்டியப் பேரொளிகள் லலிதா, பத்மினி, தமிழ் அறிஞர் அ. ச. ஞானசம்பந்தன் எனத் தமிழக அறிஞர் பெருமக்கள் அத்தனை பேரும் எமது கல்லூரிக்கு வருவதைப் பெருமையாகக் கருதினர். விரிக்கிற் பெருகும் இவர் ஆளுமை நினைக்கில் இன்ப ஊற்று சுருக்கில் குறைவுபடும். 12 வருடங்கள் (1944 - 1956). இவர் சேவை கல்லூரியை நிறைத்தது. முட்டிப் பரந்து சமுதாயத்தைப் பெருமளவிற்குத் தொட்டு நெகிழ்வித்தது. கல்லூரி மாணவிகள் இவர் கண்முன் வளர்ந்து மணவினையை எதிர்நோக்க, பலரது வாழ்வில் இவர் பங்கு துல்லியமாகத் தெரிந்தது. முன் வரிசையில் இவர் திருமுகத்தைப் பார்க்கும் நிறைவு, இவர் மனம் நிறைந்த ஆசீர்வாதம் தரும் இன்பமும்; மாணவர் பெற்றோர் தேடிப் பெற்றுக்கொள்ளும் பெருமை, இன்பம், துன்பம், வறுமை, செல்வம், நன்மை தீமை எல்லா நிலைகளிலும் அம்மையார் மாணவரின் ஆதார சுருதி. கல்வி நிறைவுடை கேரளாவின் முதற்பட்டம் பெற்ற பெண் இவர். இவரை எமக்கு நல்கி பெருமையுற்றது. கேரளநாடு. நாமும் திரும்ப இவரைத் தமிழ்நாட்டின் காரைக்குடி உயர் பெண்கள் கல்லூரிக்கு புடம் போட்ட அதிபராக நல்கிப் பெருமையுற்றோம்.

உவப்பத் தலைக்கூடி உள்ளம் பிரிதல்
இதுவன்றோ சான்றோர் பெருமை.

(இக் கட்டுரையில் பெரும்பகுதி இராமநாதன் கல்லூரியின் பிரபல மாணவியும், அங்கே திருமதி பிள்ளையின் வழிகாட்டலில் பட்டப்படிப்பைக் கற்று முடித்து, அங்கேயே ஆசிரியப் பணியாற்றி ஓய்வு பெற்றவரும் திருமதி பிள்ளையிடம் அபரிமிதமான அன்பு கொண்டவருமான திருமதி சகிதேவி கந்தையா அவர்களால் எழுதப்பட்டது. இடையிடையே திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்கள் தந்த செய்திகள் சிலவற்றையும் சேர்த்துள்ளேன். தினக்குரலில் அக்கட்டுரை பிரசுரமான பின்னர் மேலும் தகவல்கள் சிலரிடமிருந்து கிடைத்தன. அவையும் இக்கட்டுரையில் சேர்க்கப்பட்டுள்ளன. இவர்களில் முக்கியமானவர் திருமதி சொர்ணவதி மாசிலாமணி அவர்கள். யாபேருக்கும் நன்றி).



# "வித்தை விருட்சமாக்கிய வியத்தகு வித்தியாலயம்"

**திருமதி சுபத்திரா விவேகானந்தன்**
கல்லூரி பழைய மாணவி
ஓய்வு பெற்ற ஆசிரியை , அதிபர்
லண்டன்.

என்றும் இறைவனைப் பிரார்த்தித்து எம் பணிகளை ஆரம்பிக்கப் பழக்கிய என் கல்லூரியை நாளாந்தப் பிரார்த் தனையின் போதும் நன்றியோடு வணங்குவேன். இராம நாதன் கல்லூரிக்குள் மருண்ட பார்வையுடன் பாவாடை சட்டையுடன் உள்ளத்தில் உயர்ந்த கனவுகளுடன் நுழைந்த அப் பொன்னாளை நினைத்துப் பார்க்கிறேன். என்னை மாணவி யாக அரவணைத்த கல்லூரித் தாய் மதிப் பார்ந்த பட்டதாரி ஆசிரியையாக, அதிபராக பகுதித் தலைவராக, உப அதிபராக, அனைத் துப் பதவிகளிலும் படிப்படியாக என்னை உயர்த்தி முழு மைப்படுத்தினாள். கல்லூரி அன்னையின் அரவணைப்பில் என் வாழ் நாளில் முக்கிய பெரும் பகுதியை முழு நிறைவுடன் கழித்துள்ளேன். மாணவ நிலை யிலும் (7 ஆண்டுகள்), பதவி நிலையிலும் (35 ஆண்டுகள்) .42 ஆண்டுகள் கல்லூரியுடன் இணைந்து வாழ்ந்தேன். இதனால் கல்லூரி யின் பொன் விழா, வைரவிழா, பவளவிழா மூன்றிலும் கல்லூரி ஆசிரியராக ஆனந்தமாக ஆத்மார்த்தமாக ஈடுபட்டு கொண்டாடி மகிழ்ந்தேன். இன்று நூற்றாண்டு விழாக் காணும் கல்லூரியை நீள நினைத்து நன்றி யோடு வாழ்த்தி மகிழ்கிறேன். தற்போது கடல் கடந்து வாழ்ந்தாலும் கல்லூரி மீதான எனது விசுவாசம் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கம் நடாத்திய நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தில் கடந்த ஆண்டு எதிர்பாராத விதமாக பங்குகொள்ள வைத்தது.

என்னைக் கற்பித்த ஒவ்வொரு ஆசிரி யர்களையும் வழிப்படுத்திய ஆளுமை மிகு அதிபர்களையும் நான் நன்றியுடன் நினைவு கூருகிறேன். அவர்கள் ஒவ்வொருவருமே ஒவ் வொரு குத்துவிளக்குகள். அவர்களால் ஒளி யூட்டப்பட்ட தீபங்களில் நானும் ஒருத்தி அவர்கள் ஒவ்வொருவரதும் தனித்துவங் களையும் ஆளுமைகளையும் எடுத்தியம்பின் கட்டுரை நீண்டுவிடும்.

பட்டதாரி ஆசிரியையாக நான் 1961ஆம் ஆண்டு எனது கல்லூரியில் கடமையேற்ற போது என்னைக் கற்பித்த ஆசிரியர்களுடன் இணைந்து கடமை யாற்றும் பேறு பெற்றேன். எனது ஆசிரியர்கள் என்னை அன்புடன் வரவேற்று சரியாசனம் தந்து என்னைத் திடப்படுத்தி வழிப்படுத்தினர். நான் அவர்களால் பண்படுத்தப்பட்டமையால்

அவர்களுக்கு பயபக்தியான மாணவியாகவும் எனது மாணவர்களுக்கு அன்பான ஆசிரியை ஆகவும் ஒரே நேரத்தில் திகழ்ந்தேன் என் பெற்றோர் சகோதரர்களும் எனது ஆசிரியர் களும், அதிபர்களும் என்றும் என்னை விசனப்படுத்தாதவர்களாக கௌரவமாக கண் ணியமாக நடாத்துபவர்களாக அமைந்தமை யால் நானும் என்றுமே அகமுக மலர்வுடன் ஆசிரியப் பணியை செவ்வனே செய்ய முடிந் தது. இவ்வாய்ப்பு இராமநாதன் கல்லூரி வளாகத்தில் எழுந்தருளியுள்ள சிவகாம சுந்தரி சமேத சிதம்பரேஸ்வரர் திருவருளே.

35 ஆண்டுகள் ஆசிரியப் பணியில் நான் நான்கு தலைமுறை மாணவர்களைச் சந்தித் தேன். நன் மாணாக்கர் பலரைக் கற்பித்து மன நிறைவு கண்டேன். ஒவ்வொரு மாணவரது தனித்துவங்களையும் உற்சாகமாக இனங் கண்டு ஊக்குவித்தேன். பாட நூல்களை மட்டும் போதியபது எனது ஆசிரியர்கள் வழி நின்று என் மாணவிக ளுக்கும் வாழ்க்கைக் கல்வியை அவர்கள் வசப் படும்படி வாஞ்சை யுடன் எடுத் துரைப்பேன்."வன்ன மணிப் பூவாடை வனிதயர்கள் பன்மொழியிற் சொன்ன கலை பல பயிலுஞ் சதுருடைத்திக் கல்லூரி" என்ற கல்லூரிக் கீத வாசகத் திற்கேற்ப ஆங்கில மொழிப் புலமையும், தமிழ் மொழிப் புலமையும், வடமொழிப் புலமை யும் கல்லூரி எனக்களித்த அருங்கொடைகள் அவற்றை வஞ்சகமின்றி கல்லூரி மாணவி களுக்கு வாரி வழங்கக் கிடைத்த வாய்ப்பை மகிழ்வோடு இயன்றவு நிறைவுசெய்தேன். சில மாணவிகளுக்கு ஆரம்ப வகுப்பில் இருந்து உயர்தர வகுப்பு வரை தொடர்ந்து கற்பிக்கும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. அவர்கள் என்னை மதிப்பார்ந்த முன்மாதிரியாக (Role model) மகிழ்வோடு பின்பற்றியமையும் நான் அறிவேன். அவர்கள் காட்டிய அன்பிலும் மதிப்பிலும் நான் என் சுயத்தை மதிப் பிட்டேன். சேவை மனப் பாங்குள்ள சிறு தோழர்கள், வழிகாட்டிகள் குழுக்களையும் நெறிப்படுத் தினேன். என் மாணவிகளிட மிருந்தும் நான் கற்றுக் கொண் டவை பல அவர்களிடமும் தனித் துவமான பல நற் பண்புகள், விசுவாசமான அர்ப்பணிப் பான செயற் பாடுகள், நுணுக்கமான ஆய்வுத் திறன்கள், வியத்தகு ஆளுமைப் பண்புகள் பல கண்டு யான் வியந்துள் ளேன். பாராட்டி ஊக்குவித்துள்ளேன். என்னிடம் ஆரம்ப வகுப்பிலிருந்தே கற்ற மாணவிகள் சிலர் யான் ஆசிரியராகக் கடமையாற்றும் போதே எமது கல்லூரியில் ஆசிரியப் பணியேற்று வந்தனர். நான் பணியேற்கும் போது என் ஆசிரியர்கள் என்னை அகமுக மகிழ்வோடு வரவேற்றது போல் நானும் என் மாணவிகளை வரவேற் றேன். வழிப்படுத்தினேன். அவர்கள் திறன் கண்டு மனம் குளிர்ந்தேன். எந்த ஒரு உயர் பதவிகளுக்கும் இல்லாத உன்னதப் பேறு ஆசிரிய சேவைக்கு உண்டு. சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்பும் இறுதி மூச்சு வரை தான் விதைத்த வித்துக்களின் அறுவடைகளை நுகர்ந்து அனுபவித்து மகிழலாம். அவ்வாறு என் மாணவிகளின் உயர்வுகள் கண்டு இன்று நான் மனப் பூரிப்புடன் வாழ்கின்றேன். கடல் கடந்து பல்லாயிரம் மயில்களுக்கு அப்பால் நான் வாழ்கின்ற போதும் ஈழ மண்ணில் பல சவால்களுக்கு முகம் கொடுத்து எதிர் நீச்சல் போட்டு தம் கல்வியில் உயர்ந்து நிற்கும் எம் அபிமான மாணவிகள் தம் உயர்வுகள் பற்றி உடனுக்குடன் எனக்கு அறியத்தந்து ஆசிகளை

யும் வேண்டி நிற்கின்றனர். ஆண்டு தோறும் உலக ஆசிரிய தினத்தில் உலகின் பல பாகங்க ளிலுருந்து என் மாணவிகளின் தொலைபேசி மூலமான வாழ்த்துக்களம் ஆசிகள் வேண்டுத லும் என் சேவையின் நிறைவை எனக்கு ஞாபகமூட்டுவனவாக உள. அந் நேரம் அவர்களை மனதார ஆசீர் வதிப்பதோடு என்னை ஆளாக்கிய ஆசான்களையும் என் கல்லூரியையும் நன்றியோடு மனம் நிறைந்து வாழ்த்தி வணங்குவேன்.

கல்லூரி கற்றுத் தந்த வாழ்வியல் என்னைப் பெற்றோருக்கு நல்ல மகளாக சகோதரர்களுக்கு நல்ல சகோதரியாக கணவ னுக்கு நல்ல மனைவியாக என் இனிய இரு குழந்தைச் செல்வங்களுக்கும் நல்ல தாயாக பேரக் குழந்தைக்கு நல்ல பாட்டியாக நிறை வாழ்வு வாழ வைத்தது. பிறர் பிள்ளை தலை தடவ தன் பிள்ளை தானே வளரும் என்பதற் கேற்ப யான் செய்த பணியின் பேறாக என் மகள் ஐரோப்பிய நாட்டுப் பல்கலைக் கழகத்தில் சிரேஷ்ட விரிவுரை யாளராக விளங்குகிறார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கணிதத் துறையில் முதற் பட்டப் படிப்பை மேற்கொண்ட போதே என் மகள் விவேகா முதல் மாணவியாக முத்திரை பதித்தவர். அவரது பரீட்சைப் பெறுபேற்றின் உச்ச நிலையை இன்றுவரை எவரும் தாண்ட வில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது. எனவே ஒரு உலகமறியாச் சிறுமியாக உள் நுளைந்த என்னை நன் மாணாக்கியாக்கி 4 தலைமுறை யினரைக் கற்பித்த நல்லாசிரியை எனப் போற்ற வைத்து அதிபர் பதவியையும் எட்ட வைத்த என் கல்லூரித் தாயை இமைப் பொழுதும் மறவேன். பதவி அவாக் கொண்டு என்றும் நான் ஓடியதில்லை. படிப் பறிவாலும் பட்டறிவாலும் பண் போடு பணி செய்தேன். பதவிகள் என்னைத் தேடி வந்தன. என் கடன் பணி செய்து வாழ்தலே என்ற நோக்கோடு திரிகரண சுத்தியுடன் செயற்பட்டேன். காரிய சித்தியை கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடும் கருணாகரக் கடவுள் நிறைவாக வழங்கியருளினார். தெய்வீகமான என் கல்லூரி சூரிய சந்திரர் உள்ளவரை நின்று நிலைத்து சைவத் தமிழ் பண்பாட்டைப் பிரகாசிக்கச் செய்யும். பல்துறை ஆற்றல் மிகு பாவையரை பாருக்களிக்கும் என்பதில் எனக்கு பூரண நம்பிக்கை யுண்டு. வாழ்க இராமநாதன் கல்லூரி, வளர்க அதன் பணிகள்.



# பதினெண் வருடங்களின் பல்துறை அனுபவங்களும் வாழ்த்துக்களும்

**திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம்**
B.A. Hons, Dip, in Edu, S.L.P.S.1, S.L.E.A.S
முன்னாள் அதிபர்
இராமநாதன் கல்லூரி

ஈழத்திருநாட்டின் சைவத்தமிழ்ப் பெண்களின் உயர்ந்தோர் கலைக் கோயிலான இராமநாதன் கல்லூரியில் பதினெட்டு வருடங்கள் நான் வாழ்ந்திருக்கின்றேன். யுகபுருஷரான சேர் பொன். இராமநாதன் வள்ளலால் ஆரம்பிக்கப்பட்ட அருங்கலைக் கூடத்தில் லேடி இராமநாதன் அம் மையார் அதிபராக இருந்து அலங்கரித்த கல்லூரியில் நான் அதிபராய் இருந்தமை பெருமிதத்தையும் பெருமையையும் தருகின்றது. அந்த நிறைவுடன் கடந்து வந்த பாதையின் நிகழ்வுகளையும், நினைவுகளையும் நீள நினைத்துப் பார்க்கின்றேன்.

அரசறிவியல் கற்கும் மாணவியாக இருந்த போது தேசியவாதியாக, பல்துறைப்பரிமாணங்களையும் கொண்ட தலைவராக சேர்.பொன். இராமநாதன் அவர்களை மனதில் பதித்த எனக்கு இராமநாதன் கல்லூரியில் அதிபர் பதவி கிடைத்தமை எதிர்பாராத ஆச்சரியம். கல்லூரி பாரம்பரியத் தின்படி மரபு ரீதியாக பழைய மாணவிகள் மட்டுமே அதிபராக வர முடியும். இந்தப் மரபு மாற்றப்பட்டு பலர் அதிபர் பதவிக்குப் போட்டியிட்டும் எனக்கு அதிபர் பதவி கிடைத்தமை எல்லோரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. நான் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் அதிபராக இருந்த காலம் அது. 1992ஆம் ஆண்டு வலிகாமம் வடக்கு மக்களின் இடப்பெயர்வில் நானும் இடம்பெயர்ந்து அகதி வாழ்க்கையை வாழ்ந்த போது அதிபர் பதவியை ஏற்குமாறு அப்போதைய மாநிலக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் அவர்கள் பணித்தார். அதை ஏற்றுக் கொள்ளும் மனத்துணிவு அன்றிருக்கவில்லை. எனது உள்ளம் தடுமாறிய போதும், கல்விப் பணிப்பாளரின் முடிவு தீர்க்க மானதாக இருந்தமையால் அதிபர் பதவியை ஏற்பது என்பது முடிவாகியது. இராமநாதன் கல்லூரிக்கு அதிபராகச் செல்லும் மகிழ்ச்சி, ஒருவகை பயம், இனம் புரியாத மரியாதை, நிர்க்கதியான நிலை என்பவற்றுள் நான் போராடிய பின், பதவியை ஏற்றுக் கொள்ள தயாரானேன். 1.9.1992இல் திருமதி மங்கயற் கரசி. திருச்சிற்றம்பலம் பதவியில் இருக்கும்

போது மேலதிக அதிபராக பதவி ஏற்று அவர் 14.9.1992 இல் இளைப்பாறும் போது பதவியை ஏற்க வேண்டுமெனக் கடிதம் கிடைத்தது. 14.09.1992இல் பெருமை மிகு இராமநாதன் கல்லூரியில் மிகுந்த பயபக்தியுடன் காலடி வைத்தேன்.

அன்றையதினம் ஷெல்வீச்சிற்கு இலக்காகிய சேர். பொன். இராமநாதன் அவர்களின் சமாதி ஆலயமான இராம நாதேஸ்வரம் புனருத்தாரனம் செய்யப் பட்டு மண்டலாபிஷேகம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. திருமதி மங்கயற்கரசி திருச்சிற் றம்பலம் பக்தி சிரத்தையோடு நிகழ்வுகளை நடாத்திக் கொண்டிருந்தார். மாணவர்கள் பூசைக்குரிய பொருட்க ளுடன் தமிழக் கலாசாரத்தைப் பிரதிபலி க்கும் உடைகளுடன் வண்ணத்துப்பூச்சி களாக நடமாடிக் கொண்டிருந்தார்கள். மாவிலை தோரணங்களும், நிறைகுடமும், ஆலய மணியோசையும், நாதஸ்வர இசையும் மனதில் நம்பிக் கையையும், உற்சாகத்தையும் தந்தது. சேர். பொன். இராமநாதனவர்களின் ஆசியுடன் உள்ளே நுழைந்த பெருமிதம் அன்று எனக்கு ஏற்பட்டது. அன்று மாலை நடைபெற்ற மணவாளக் கோலத்திருவிழாவில் கலந்து கொண்ட போது பழைய மாணவிகள் தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

மறுநாட் காலை எனது பணி கல்லூ ரியில் ஆரம்பமாகியது. தூர நோக்குடன் சேர். பொன். இராமநாத னவர்கள் அமைத் திருந்த கலைநயமிக்க கட்டிடங்கள் அருளாட்சி செய்யும் நடராசர் ஆலயம், பெண்கள் தங்கிக் கற்பதற்கான வசதியான விடுதிச்சாலை, விஞ்ஞான கூடங்கள், விளையாட்டு மைதானம் என்பன பிரமிப் பைத்தந்தன. 25 ஏக்கர் நிலப்பரப்பில் நிழல்பரப்பி நின்ற வேப்பமரங்கள், மஞ்சாடி மரங்கள், மலைவேப்பமரங்கள், புளியமரங்கள் கல்லூரியைப் பசுஞ் சோலையாக்கியிருந்தன.

காந்தியடிகள் கால்பதித்த முன் மண்டபத்தில் இருந்த மகுட வாசகமான "கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்த மிடும் கருணாகரக் கடவுளே" "திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய்" என்பது அன்றிலிருந்து ஆழப்பதிந்த வாசகமாகியது. காலைப்பிரார்த்தனையின் போது மாணவிகள்

"பரம்பரம் சோதி பரனே போற்றி"
சிந்தனைக்கரிய சிவனே போற்றி"

எனத் தொடங்கி இனிமையாகப் பாடிய தேவாரங்களும், கல்லூரிக் கீதமும் மனதைத் தொட்டது. இன்றும் அவை மறக்க முடியாததொன்றாகவே இருக் கின்றது. ஆலயத்திலிருந்து சமையலறை வரை இராம நாதனவர்களின் எக் காலத் திற்கும் பொருத்தமான தூர சிந்தனையைக் காணமுடிந்தது.

நான் கல்லூரிக்குச் சென்றபோது இடப் பெயர்வு தந்த வாய்ப்பாக அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி அவர்களும் மகளிர் இல்ல மாணவி களும் கல்லூரி விடுதியில் தங்கியிருந்தது எனக்கு வரப்பிரசாதமாக அமைந்தது. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் மகளிர் இல்ல மாணவிகளும் ஆலயங் களைத் தூய்மையாக்கியதுடன், கல்லூரிக்

குள் அமைந்திருந்த நடராஜர் ஆலயத்தை 1994ஆம் ஆண்டு பெருந் தொகைப் பணத்தை செலவழித்து புனரமைப்புச் செய்து வழங்கினர். மின்சார வசதியற்ற நிலையில் இடம்பெயர்ந்த நானும் கல்லூரி வளாகத்தில் சிறிய வீடொன்றில் தங்கியிருந்தேன். அன்றைய சூழ்நிலையில் அவர்கள் எனக்கு உதவியாகவும் கல்லூரிக்குப் பாதுகாப்பாகவும் இருந்தார்கள்.

உயர்ந்த நோக்குடன் பல இலட்சியப் பெண்களை உருவாக்கிய கல்லூரி நான் சென்ற போது போரின் வடுக்கள் மறையாமல் உருக்குலைந்து தன்னை நிமிர்த்த முடியாமல் நின்றதைக் காணக் கூடியதாக இருந்தது. விடுதிச் சாலைக்குள் வகுப்பறைகள், நூல்நிலையம் என்பன இயங்கின. முன்புறக் கட்டிடத்தை கல்விப் பணிமனை தனதாக்கியிருந்தது. சேர். பொன். இராம நாதனவர்களின் இல்லமும் சூழலும் பல்கலைகழகத்தின் நுண்கலைத் துறையின் வளாகமாக இருந்தது. பிரதான மண்டபமும், வகுப்பறைக் கட்டிடங்கள் சிலவும் இடம் பெயர்ந்த யூனியன் கல்லூரியின் பாவனையில் இருந்தது. இரு ஆலயங்களும் நிதியில்லாத நிலையில் பழைய மாணவர் சங்கத்தினால் பல கஷ்டங்களுக்கு மத்தியில் பரிபாலிக்கப்பட்டது. நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களும் போர்ச் சூழலும் இராமநாதன் கல்லூரியை வலுவாகத் தாக்கியிருந்தது என்பதையும் காணக்கூடியதாக இருந்தது. இந்திய இராணுவம் கல்லூரியில் நிலைகொண்ட போது இராணுவ முகமாக இருந்தமையால் கல்லூரி தனது கட்டுக் கோப்பையும், உடைமைகளையும் இழப்பது யதார்த்தமாகும். இந்நிலையில் அக் காலத்தில் இருந்த அதிபர்கள் இயன்றவரை கல்லூரியைப் பாதுகாத்து வந்திருக்கிறார்கள் என்பதை உணர முடிந்தது. 1990ஆம் ஆண்டு நடாத் தப்பட்ட பவள விழா கொண்டாட்டங்கள் முதல் நாள் நிகழ்வுடனே நிறுத்தப்பட்டதாகவும் அறிந்தேன். போர்க்கால சூழ்நிலையினாலும் இடப்பெயர்வு தந்த காயங்களினாலும் எல்லோருடைய மனங்களும் பாதிக்கப்பட்டிருந்தது. அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாலை நேரப் பாடசாலையாக வளா கத்தில் இயங்கத் தொடங்கியதுடன் இடப்பற்றாக் குறையினால் தற்காலிக கொட்டகைகளையும் அமைத்திருந்தது. இராமநாதன் கல்லூரியில் க.பொ.த (உயர்தரம்) விஞ்ஞானப் பிரிவும் மூடப்பட்டிருந்தது.

இந்நிலையில்தான் எனது பணி ஆரம்பமாகியதை மீட்டுப் பார்க்கின்றேன். அன்று உப அதிபர்களாக இருந்த திருமதி பரமேஸ்வரி பரராஜசிங்கம் அவர்களும் திருமதி சோமேஸ்வரி கைலாசநாதனவர்களும் காட்டிய ஒத்துழைப்பும் அன்பும் மறக்க முடியாதவை. திருமதி பரிமளம் பத்மநாதன் ஆசிரியையாக இருந்தாலும், நிர்வாகக் கடமைகளைச் செய்வதற்குப் பக்கபலமாக இருந்தார். பழைய மாணவர் சங்கம் நிதி நிலைமையில் மிக வறிதாக இருந்தபோதும் என்னுடன் ஒத்துழைப்பதில் தாராளமாக இருந்தனர். கல்லூரியில் 1475 மாணவர்களும் 51 ஆசிரியர்களும் இருந்தனர்.

தரம் 1-5 வரை பகுத்தித் தலைவராக இருந்த திருமதி குகானந்தநாயகி அப்புத்துரையின் கல்லூரி அபிமானமும் சுறுசுறுப்பும் என்னால் என்றும் மறக்க முடியாதவை. 1-5 வரை கல்லூரி ஆரம்பித்த காலங்களில் ஆண் பிள்ளைகள் கல்வி கற்றதாகவும் அந் நிலைமை மீண்டும் கொண்டுவர வேண்டும்மென்றும் என்னிடம் கேட்டுக் கொண்டார். நான் மாநில கல்விப் பணிப்பாளர் திரு இராமசுந்தரலிங்கம் அவர்களிடம் அனுமதி பெறுவதற்கு சென்ற போது "5ஆம் ஆண்டு வரைதான் ஆண்பிள்ளைகள் அனுமதிக்கப்படுவார் கள். அதற்கு மேல் கேட்க வரக்கூடாது" என ஹாஸ்யமாக அவர் தனது இயல்பான முறையில் கூறியது இன்றும் பசுமையான நினைவுகளாக உள்ளது. "நாங்கள் இராம நாதன் கல்லூரி பழைய மாணவர்கள்" என ஆண் பிள்ளைகள் இன்று உரிமையோடு கூறுவது இதனால்தான். 1995 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 17 மாணவர்கள் சித்தியடைந்ததுடன் செல்வன் லஸ்மன் சத்தியமூர்த்தி 186 புள்ளிகளைப் பெற்று யாழ் மாவட் டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று கல்லூரிக்குப் பெருமை தேடித்தந் தமைக்கு ஆண் பிள்ளைகளின் அனு மதியே காரணமாகும்.

30.11.1994 ஆம் திகதி கல்லூரி வரலாற்றில் என்றும் நினைவு கொள்ள வேண்டிய நாளாகும். அன்றுதான் சைவப் பெருவள்ளல் சேர். பொன். இராமநாதனவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக முழுஉருவச் சிலையை கல்லூரி முன்றலில் நிறுவிப் பெருமைப்பட்ட கல்லூரிச்சமூகம் எனது சிந்தனைகள் பின்நோக்கி நகர்ந்து அந்த நிகழ்வை மகிழ்வுடன் நினைவு கூருகின்றது. சிலை அமைக்கும் ஆதங்கத்தை நான் வெளியிட்டதும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் சிலை அமைப்புக் குழுவினை அமைத்து சிலை அமைக்கும் பணியைத் தொடங்கினர். சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர் கள் நிதி பெற்றுத் தரும் முயற்சியில் தீவிரமாகச் செயற்பட்டமை வரலாற்றுப் பதிவாகும். வயதில் இளையவராக இருந்த போதும் கலாநிதி ஆறு திருமுருகனவர்கள் வைரவர் கோயில் வாசலில் முதல் முதலாக நிதி வழங்கி ஆரம்பித்து வைத்தது இன்னும் நெஞ்சில் நிழலாடு கின்றது. பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் திரு. செ. இலகுநாதன் அவர்கள் நிதி சேகரிப்பதற்காக எங்களை அழைத்துச் சென்றதையும் மறக்க முடியாது. பா. அ. சங்க செயலாளர் திரு. ராஜதுரை அவர்களும் திரு நாகராஜா அவர்களும், பொருட்கள் மிகத் தட்டுப்பாடான நிலையில் துண்டு, துண்டாக கம்பிகள் சேர்த்துக் கொடுத்ததும் பல பிரயத்தனங்களின் பின்னரே பொருட்களைப் பெற்றுக் கொடுத்ததையும் உள்ளம் மறக்காது.

அறிஞர்களும், கல்விமான்களும், பேராசிரியர்களும், கல்லூரி அபிமானிகளும் தாங்களாகவே வருகை தந்து சேர்.பொன்.இராமநாதனவர்களின் முழு உருவச் சிலை திறப்பு விழாவைப் பெருமைப்படுத்திய நன்றியுணர்வை நினைத்துப் பார்க்கின்றேன். பெருவிழாவாக நடைபெற்ற அன்றைய தினத்தில்

துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் சிலை திறந்து வைக்கப்பட்டது. யாழ்ப் பாணத்தின் கல்விச் சமூகம் அந்நிகழ்வினை பெருமகிழ்வுடன் ஏற்றுக் கொண்டதை மீள நினைத்துப் பெருமையடைகின்றேன். அன்று தொடக்கம் கல்லூரியின் சகல நிகழ்வுகளுக்கும் ஸ்தாபகரின் சிலைக்கு மாலை அணிவித்து அவரது ஆசியுடன் ஆரம்பிப்பது வழமையாகி விட்டது.

ஏராளமான கெடுபிடிகள், படை நகர்வுகள், விமானத்தாக்குதல்கள், ஹர்த் தால்கள், ஷெல் சத்தங்கள் என்பவற்றுக் கிடையே கல்லூரியும் தன்னை வளர்த்துக் கொண்டது. 95ஆம் ஆண்டின் தரம் 5ஆம் புலமைப்பரிசில் பெறுபேற்றின் வெற்றி யினால் 125விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்று 60பேரை மட்டும் தொரிவு செய்து வைத்திருந்தோம். ஆனால் 30.11.1995ஆம் ஆண்டு மீண்டும் ஏற்பட்ட பாரிய இடப்யெர்வு கல்லூரியை பல வருடங்கள் பின் னோக்கித் தள்ளிவிட்டது. அந்த நாட்களையும் அவலங்களையும் மனது மறக்காது. மருதனார்மடச் சந்தி வெறிச் சோடிய நிலையில், கல்லூரி போருக்கு தயாராகியவர்களின் களமாகி நிற்க ஷெல் சத்தங்கள் அதிர்ந்து கொண்டிருக்க நானும், மணியண் ணையும் (முன்னால் அலுவலக ஊழியர்) இராமசாமியும் (கல்வி சாரா ஊழியர், தனிமையாக நின்று அலு வலக ஆவணங்களை அவசரம் அவசரமாக ஏற்றி இணுவில் இந்துக் கல்லூரிக்கு அனுப்பி வைத்ததை இப்ப நினைத்தாலும் புல்லரிக்கின்றது. திடீர் இடப் பெயர் வினால் ஏனைய பொருட்கள் எதனையும் எடுத்துச் செல்ல முடியவில்லை.

இந்த இடப் பெயர்வினால் மக் களும், மாணவர்களும் சிதறடிக் கப்பட்டனர். யாழ்ப்பாணக் கல்விக் கட்ட மைப்பும் மாறியது. உடமை களைத் தொலைத்தவர்கள் பலர் வெளி நாட்டி ற்குச் சென்றனர். வவுனியா, கொழும்பு போன்ற இடங்களுக்கு சென்றவர்களில் அதிகமானோர் திரும்ப வில்லை. வன்னிப் பெருநிலப்பரப்பிலும் மக்கள் குடியேறி வாழத் தொடங்கினர்.

96ஆம் ஆண்டு மீளக் குடியேற இரா ணுவம் அனுமதித்தபோது மக்களுக்கு துன்பங்களும், துயரங்களுமே காத்திரு ந்தன. அன்றைய கல்விப் பணிப்பாளர் திரு.சு. இரத்தினராசா உப அதிபர் திருமதி சோமேஸ்வரி கைலாயநாதன் திருமதி பத்மாவதி தியாகலிங்கம் ஆகியோர் கல்லூரிக்குச் சென்ற போது பொருட்கள் யாவும் சிதைக்கப்பட்டு, தளபாடங்கள் உடைக்கப்பட்டு, மனையியல், விஞ்ஞான கூட உபகரணங்கள சங்கீத அறையில் இருந்த தம்புரா, வீணை போன்றவை, முன்பு குடியேற வந்தவர்களால் களவாடப் பட்டு கல்லூரி முழுவதுமே சூனியமாக் கப்பட்டி ருந்தது. நூலகத்தில் இருந்த மீளப் பெற முடியாத பெருமை வாய்ந்த நூல்கள் அதன் அருமை, பெருமை தெரியா தவர்களால் கிழித்தெறியப்பட்டிருந்தது டன் நீரிலும் நனைந்திருந்தன. இவை எல்லாம் யுத்த தேவதைக்கு வழங்கிய சோகக் காணிக்கை யாகியது. கல்லூரியில்

அன்று வீடிழந்தவர்கள் உடமைகள் அற்றவர்கள் தங்கியிருந்ததனால் அகதி முகாமாக மாறியிருந்தது.

இந்த நிலையில் இருந்து கல்லூரி மீண்டெழ ஒரு வருடம் எடுத்தது. G.T.Z கல்வித்திணைக்களம் நலன் விரும்பிகள் உதவியுடன் ஓரளவு இயல்பு நிலைக்கு கல்லூரி கொண்டு வரப்பட்டது.

அப்போது வலி வடக்கிற்கு மீள முடியாத நிலையில் 10 பாடசாலைகள் கல்லூரியில் இயங்கின. இதனால் நேரப்பிரச்சனை, தண்ணீர்ப் பிரச்சனை, தளபாடப்பிரச்சனை, இடப்பிரச்சனை என எல்லா நெருக்கடிகளுக்கும் முகம் கொடுக்க வேண்டி எற்பட்டது. "எல்லோருக்கும் கல்வி என்ற நிறுவுனரின் நோக்கம் அன்று நிறைவேறியதாகவே நான் கருதுவதுண்டு. இத்தகைய பிரச்சனைகள் ஏற்பட்ட பொழுது உப அதிபர் திருமதி ப. பத்மநாதன், திருமதி ப. தியாகலிங்கம், திருமதி விக்னேஸ்வரி நரேந்திரா போன்றவர்கள் செய்த உதவிகளை என் மனது என்றும் மறக்காது.

படிப்படியாக மக்கள் மீளக் குடியேற ஆரம்பிக்க மாணவர் தொகையும் அதிகரிக்க கல்லூரி கல்வி, கலை, விளையாட்டுத்துறைகளில் பற் றாக்குறையான வளத்துடன் முன்னேறத் தொடங்கியது. 1997ஆம் ஆண்டு திடீரென வைத்த க.பொ.த (உயர்தரம்) தேர்வில் 16 மாணவிகள் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றனர். 1998இல் வர்த்தகத்துறையில் கலைச் செல்வி சிவஞானசுந்தரம் 300 புள்ளிகள் பெற்று முகாமைத்துவத் துறைக்கு தெரிவானார். 1999இல் 20 மாணவிகள் பல்கலைக்கழக அனுமதி பெற்றனர். 2003ஆம் ஆண்டில் 4 மாணவிகள் 4A யினைப் பெற்று முகாமைத்துறைக்கு அனுமதி பெற்றமை சாதனையாகியது. வருடா வருடம் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்ற போது வெட்டுப்புள்ளிகள் உயர்வடைந்த போது நாம் எதிர்பார்த்தளவிற்கு அனுமதிகளைப் பெற முடியவில்லை

க.பொ.த(சாதாரண) பரீட் சையில் 2000ஆம் ஆண்டு 10A யினைப் பெற்றுக் கல்வியில் உயர்வைப் கொண்டு வந்தமை மகிழ்ச்சிக்குரிய நினைவுகளாகும். ஆங்கில தினப் போட்டியில் செல்வி.கரீனா தர்மராஜா தேசிய மட்டத்திற்கும், கமி மாகாண மட்டத் திலும் முதல் நிலையைப் பெற்றமை அசாதாரண நிலையிலும் பெறப்பட்ட வெற்றியாகும். (முழு பெறுபேறுகளும் இக் கட்டுரையில் எழுத முடியாது) 2010ஆம் ஆண்டு 3 மாணவிகள் 10 A சித்தியினைப் பெற்றதுடன் ஏனையயோரும் உயர்ந்த பெறுபேறைப் பெற்றதனால் எனது சேவையில் முடிவு மகிழ்ச்சிகரமானதாகியது.

1999ஆம் ஆண்டு திருமலையில் நடைபெற்ற மாகாண மட்ட தமிழ்த் தினப் போட்டியில் "அரிச்சந்திரன்" நாட்டிய நாடகம் முதலாம் இடத்தைப் பெற்றதனால் அந் நாட்டியநாடகம் திருமலையில் மேடை யேற்றப்பட்டது. அன்று மாணவிகளும் நடன ஆசிரியை திருமதி நந்தினி சிவராஜனும் பெற்ற பாராட்டு

தல்கள் இன்றும் மறக்க முடியாதவை. இசையாசிரியர்களாக திருமதி விக்னேஸ் வரி, நரேந்திரா, செல்வி மாது சிரோன் மணி வேலாயுதர் தம்மை அர்ப்பணித்து பாடியதை திருமலையில் பாராட்டா தவர்களில்லை. அன்றைய தினம் நாம் பெற்ற மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. காலை 7 மணிக்கு பயணத்தைத் தொடங்கி 4 மணிக்கு கப்பல் ஏறி அடுத்த நாள் காலை வரையும் திருமலைப்பயணம் தொடரும் மாணவர்களும், ஆசிரியைகளும் பயணங் களின் போது படும் கஷ்டங்கள் எழுத்தில் வடிக்கமுடியாதவை. கப்பல், விமானப் பயணங்கள் மேற்கொள்ள முன்னர் இராணுவத்தினரின் அனுமதி பெறுவது, பரிசோதனைக் கெடுபிடி, நிதி தேடல் என பல தடைகளைத் தாண்ட வேண்டும். போக்குவரத்து தடைப்படும் பொழுது நீண்ட நாட்கள் திருமலையில் தங்க வேண்டும். இத்தகைய நிலைமை பல தடவைகள் ஏற்பட்ட போது உப அதிபர் களாக திருமதி ப.பத்மநாதன் திருமதி ப. தியாகலிங்கமும் இணைந்து தீர்வு கண்டிருக்கிறார்கள். எமது நடன நிகழ்வு கள் பல பிரச்சனைகளை ஊடறுத்துத் தந்து வெற்றிவாகை சூடி வந்தமையை இப் போது பெருமையுடன் நினைவு கூருறுகி றேன்.

கல்லூரி அரங்கேற்றிய இசை நாடக ங்களையும் அதன் வெற்றிகளையும் நான் ஓய்வு காலத்தில் மீட்டுப் பார்த்து புளங்காகிதம் அடைகின்றேன். முதன் முதலாக 1997ஆம் ஆண்டு செல்வி சிவகலை பஞ்சாட்சரத்தினால் தயாரிக்கப் பட்ட "சத்தியவான் சாவித்திரி" இசை நாடகம் யாழ் மாவட் டத்தில் முதலா மிடம் பெற்று மாகாண மட்டத்திற்கு தெரிவாகிய போதும் போக்குவரத்துச் சீரின்மையால் திருகோணமலைக்குச் செல்ல முடியாமையினால் பங்குபற்றும் வாய்ப்பு இழக்கப்பட்டது. செல்வி சிவகலை பஞ்சாட்சரத்தின் கன்னி முயற்சி மிகச் சிறப்பாக அமைந்ததுடன் பலரின் பாராட்டுக்களையும் பெற்றுக் கொண் டது. தொடர்ச்சியாகக் கல்லூரி ஆசிரியை செல்வி. ஈஸ்வரி, கிருஷ்ணர் இசை நாடகம் தயாரிப்பதில் தனது திறமையை வெளிக் கொணர்ந்து யாழ் மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பல தடவை பெறுக் கொண் டார். அவரால் மேடையேற்றப்பட்ட "அரிச்சந்திர மயான கண்டம்" என் மனதை மட்டுமல்ல பலரின் மனதை விட்டு இன்றும் அகலவில்லை. சந்திரமதியாக பாத்திரமேற்ற செல்வி தமிழினி தங்கவடி வேலினையும் அவரது நடிப்பையும் இன்று நினைத்துப் பார்க்கிறேன். "அவர் எனக்கு நடிக்க வராது என்னை விட்டு விடுங்கள்" என்று பரிதாபமாக என்னைக் கேட்டுக் கொண்டதும் "இசை நாடகத்திற்குப் பாடத் தெரிந்தவர்கள் தான் நடிக்க வேண்டும்." என அவரது வேண்டு கோளைக் கண்டிப்புடன் நிராகரித்ததும். இசை நாடகம் வெற்றி பெற்ற போது அவரது இசையும் நடிப்பும் மண்டபத்தை பூரண நிசப்தமாக்கியதும் ஆசிரியர், மாணவர்கள் நிரம்பிய மண்டபத்தில் இறுதியில் கைதட்டலினால் மண்டபம் அதிர்ந்ததும் என்னிடம் மறக்க முடியாத பெருமிதமான நினைவுகளாகும். இன்று செல்வி தமிழினி தங்கவடிவேல் நல்ல நடிகையாக பாடகியாக நுண்கலைத்

துறையின் விரிவுரையாளராக இருப்பதை யிட்டு மிக மகிழ்ச்சியடைகின்றேன். இசை நாடகங்கள் பெற்ற வெற்றிகளுக்குப் பின்னால் பல நடிகைகள், கலைஞர்கள் உருவாகியிருப்பது கல்லூரிக்குப் பெருமை யாகும்.

1959 - வரையான காலப் பகுதி களில் கல்லூரியின் வலைப்பந் தாட்ட அணியும், உடற்பயிற்சியணியும் மாகாண தேசிய மட்டங்களில் பல தடவை முதலா மிடத்தைப் பெற்றிருந்தது. அது வரலாறா கிவிட மீண்டும் 1998ஆம் ஆண்டு வலைப் பந்தாட்ட அணி மாகாணமட்ட சம்பிய னாகி தேசியமட்டத்தில் பங்கு பற்றியது. அப் போட்டிகளில் கடைசிநேர போராட்டங்களின் பின்னர் வெற்றியை உறுதிப்படுத்திய நினைவுகள் பசுமையாக இருக்கின்றது. தேசிய மட்டத்திற்குச் செல்லும் தகுதியை அன்றிலிருந்து வலைப் பந்தாட்ட அணி தக்க வைத்துக் கொண் டது. விளையாட்டுத்துறைப் பொறுப்பாசி ரியர் இல்லாத நிலையில் ஆங்கிலப் பாட ஆசிரியையான திருமதி பகீரதி கேசவன் அப்பொறுப்பினை ஏற்று 2008ஆம் ஆண்டு வலைப்பந்தாட்ட அணியை தேசிய மட்டம் வரை பங்கு பற்ற வைத்து கல்லூரியைத் தளரவிடாமல் காத்து நின்றமையை நான் நன்றியுடன் நினைவில் கொண்டுள்ளேன். தொடர்ந்து தடைகளப் போட்டிகளில் பங்குபற்ற மாணவிகள் செல்லும் போது அவர்களது தேவைகளை நிறைவேற்றி உட்சாகமூட்டி அவர் எப்ப வும் பக்கபலமாக இருந்ததை என்னால் மறக்க முடியாது. பந்தைப் பெறுவது கூட கஷ்டமாக இருந்த நிலையில் ஆசிரியைக ளான செல்வி. கிரிஜா கந்தசாமியும் திருமதி கோசலை குணபாலசிங்கம் மாணவிகளை பயிற்று வித்ததையும் கப்பல் பயணங்களை சளைக் காது மேற்கொண்டமையும் மீள நினைத் துப் பார்க்கிறேன். செல்வி ஜெயகாந்தினி கனகலிங்கம் எப்படியும் போக வேண்டு மென்ற மனத் தைரியத்துடன் மாணவர் களை தேசிய மட்டத்தில் தடகளைப் போட்டிகளில் பங்கு பற்ற வைத்தார். வலைப்பந்தாட்ட அணி, கூடைப் பந்தாட்ட அணி, தடகள போட்டிக்கான மாணவிகள் என கல்லூரியில் இருந்து ஒரு பெருந் தொகையான மாணவிகள் தேசிய மட்டத்திற்கு 2008, 2010ஆம் ஆண்டு களில் சென்றமை மனதை நிறைக்கின்ற நினைவுகளாகும்.

கூடைப்பந்தாட்ட அணி வெகு வேகமாக முன்னணிக்கு வந்தமை மிக மகிழ்ச்சியைத் தருகிறது. மைதானம் அமை த்த காலங்களை மீட்டுப் பார்க்கின்றேன் கூடைப்பந்தாட்ட மைதானம் அமைப்ப தற்கு பாடசாலை அபிவிருத்திச் சங்க செய லாளர் திருமதி. சரோஜா குலசேகரமும் நானும் பல தடவை பாராளுமன்ற உறுப் பினர்களைச் சந்தித்து பன்முகப்படுத்தப் பட்ட நிதியில் ஒரு தொகையைப் பெற்றுக் கொண்டோம். அந்த நிதியில் மைதானத் தின் அரைவாசிப்பகுதியே முற்றுப் பெற்றது. ஆனால் மாணவிகள் ஆர்வத்தி னால் முற்றுப் பெறாத அரைவாசி மைதானத்தில் பயிற்சி பெற்று முதல் முறை யிலே தேசிய மட்டத்தில் பங்குபற்றினர். இதனால் மாகாண கல்வி அமைச்சின் விளையாட்டுத்துறை பணிப்பாளர் நிதி

பெற்றுத்தருவதற்கு வழி செய்தமையால் மைதானத்தைப் பூரணப்படுத்தினோம். மழைக் காலத்தில் கல்விப் பணிமனை காலக்கெடு விதித்தமையால் அவசரமாகச் செய்த கட்டுமான வேலைகளை இரவோடு இரவாக மழை கரைத்துச் சென்றமை நினைவிற்கு வருகிறது. இந்நேரம் சித்திர ஆசிரியராக இருந்தும் எப்பவும் எங்கும் கூடைப்பந்தாட்ட அணியினை அழைத்துச் சென்ற திருமதி நிர்மலா அருமைநாதன் பக்கபலமாக நின்றதை மறக்க முடியவில்லை. பல விமர்சனங்களுக்கு மத்தியில் மைதானம் அமைக்கப்பட்டாலும் அதேவருடம் தேசிய மட்டத்திற்கு செல்லும் தகுதியைப் பெற்றமை எனக்கு பெரு வெற்றியாக அமைந்தது.

இன்று சைவத்தமிழ் மாணவர்களுக்கு விடுதியுடன் இருக்கும் ஒரே கல்லூரி இராமநாதன் கல்லூரியாகும். எனது நினைவுகள் 14 வருடங்கள் பின்நோக்கி அசை போடுகின்றன. 1987 இல் இந்திய இராணுவ நடவடிக்கையுடன் மூடப்பட்ட விடுதியை ஆரம்பிக்குமாறு பலர் வேண்டுகோள் விடுத்திருந்தனர். அவர்களது வேண்டுகோளை ஏற்று 5 மாணவர்களுடன் துணிவாக விடுதியை ஆரம்பித்தேன். அப்போது எனது துணிச்சலுக்கு துணையாக நின்றவர் உப அதிபர் திருமதி ப. பத்மநாதனவர்கள் 1987ஆம் ஆண்டு இராணுவம் கல்லூரியை ஆக்கிரமித்த போது விடுதியில் இருந்த பொருட்கள் யாவும் சிதைக்கப்பட்டு சின்னாபின்னமாக்கப் பட்டிருந்தமையால் விடுதிச்சாலைக்கு தேவையான தளபாடங்களிலிருந்து சமையல் உபகரணங்கள் வரை தேட வேண்டிய நிலை ஏற்பட்டது. அன்று வெளிநாட்டில் இருந்தும் உதவி கிடைக்கவில்லை. உள்ளூர் உதவியும் கிடைக்கவில்லை. எங்களுடைய பிரயத்தனத்தினால் விடுதி நன்றாக நடைபெற மாணவர் தொகையும் அதிகரித்தது. 2006இல் 120 மாணவர்கள் கல்வி கற்றனர். விடுதி மாணவர்வகளால் கல்லூரி ஆலயங்கள் கல்லூரி வளாகம் தூய்மையாக்கப்பட்டு கல்லூரி பொலிவுடன் திகழ்ந்தது.

"பொன் பூத்த மேனியர்கள் பூக்கொய்து பரமனுக்கு
பண்மாலை அணிவிக்கும் பாங்குடைத்திக் கல்லூரி"

என திரு. சு. நடேசப்பிள்ளையவர்கள் கல்லூரிக் கீதத்தில் கண்ட பெண்களாக விடுதி மாணர்வர்கள் பூந்தோட்டத்தில் மலர் பறித்த நடராஜப் பெருமானுக்கு அணிவித்த காட்சி என் உள்ளத்தை குளிர்வித்தது. வசதியற்ற இரு அறைகளில் நான் விடுதியில் தங்கியிருந்ததனால் மாணவர்களும் பெற்றோரும் நம்பிக்கையாக இருந்தனர். விடுதி சுமுகமாக இயங்கி வரும்போது 2006ஆம் ஆண்டு A9 வீதி மூடப்பட்டதுடன் ஊரடங்குச் சட்டமும் நாட்டில் அமுல்படுத்தப்பட்டது. நானும் விடுதி மாணவிகளும், காவலாளி சண்முகமும் பொறுப்பாசிரியை சுபாஜினியும் ஹரிக்கேன் லாம்புடன் பயப்பீதியுடன் விழித்திருந்த நாட்களை எண்ணிப் பார்க்கிறேன். ஊரடங்குச் சட்டத்தின் தளர்விற்காக காத்திருந்து ஒரு சில மணி நேரத்தில் சுவாமிநாதன் கடைக்கு அவசரம் அவசரமாக ஓடிப் போய் உணவுப் பொருட்கள் கொள்வனவு செய்த நாட்களை மறக்க முடியாது. ஒவ்வொருவரும் தமது பாதுகாப்பைத்

தேடியமையால் கல்லூரியை யாரும் எட்டிப்பார்க்கவில்லை. திருமதி பத்மாவதி தியாகலிங்கம், திருமதி ரஞ்சினி சிறீதரன், திரு அம்பிகைபாகன் ஆகியோர் கடைக ளுக்குச் சென்று வரிசையில் நின்று விடுதிக் குத் தேவையான உணவுப் பொருட்களை பெறுவது அன்றாட நிகழ்ச்சிகளாகியது. பாதுகாப்பற்ற நிலையும், மாணவர்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய கட்டாயமும் என்னைப் பெருஞ்சவால் களை எதிர் கொள்ள வைத்தது. அந் நேரம் மாணவிகளின் நிலைமையை உணர்ந்து இரண்டு பெரிய பிஸ்கட் பெட்டிக ளுடன் காலை 10 மணியளவில் கல்லூரிக்கு வந்துசேர்ந்த கோணேஸ்வரி இராமச்சந்திர னின் மனிதத்தை மனதில் நிறுத்திப் பார்க்கிறேன்.

2006ஆம் ஆண்டில் வெளி மாவட்ட மாணவிகளை பெற்றோர் அழைத்துச் சென்றமையால் அதன் பின்னர் குடா நாட்டு மாணவிகள் மட்டும் விடுதியில் தங்கியிருந்தனர். 2009ஆம் ஆண்டு யுத்த தில் உறவுகளை உடமைகளை இழந்து நிர்க்கதியாக வந்த மாணவிகளை பாதுகாப் புக்கருதி விடுதியில் அனுமதித்தோம். யுத்த அவலத்தில் உறவுகளைத் தொலைத்து விட்டு ஏதிலியாக நின்ற மாணவர்க ளிடம் எந்தக் கட்டணமும் அற விடாமல் அனு மதியளித்து அன்று எமக்கிருந்த தார்மீகக் கடமையை நிறைவேற்றினோம். அதனால் மாணவர் தொகை 160இற்கு அதிகமானது அப்போது பல பிரச்சனைகள் எழுந்த போதும் கட்டுக்கோப்பு குலையாமல் விடு தியைப் பாதுகாத்து நின்ற பொறுப்பாளர் திருமதி காஞ்சனமாலா உதயகுமார் செய்த சேவை காலத்தால் மறக்க முடியாதது யுத்தத்தின் கோரத்தின் போது அடிபட்டு முகவரியில்லாமல் அகதிமுகாமில் இருந்து விடுதிக்கு வந்த மாணவர்கள் விழாக்காலங் களில் யாரு மற்ற நிலையில் வீட்டிற்குச் செல்வ தில்லை. விழாக்காலங்களில் அம் மாணவ ர்களின் மகிழ்வுக்காக தனது வீட்டில் இருந்து காலையிலே பலகாரங் களுடன் கல்லூரிக்கு வந்து விடுவார். விடுதி மாணவர்களை இருமுறை அகில இலங்கை கல்விச் சுற்றுலாவிற்கு நானும் திருமதி கா. உதயகு மாரும் அழைத்துச் சென்றோம். மாணவிகளின் சுகநலன் ஒழுங்கு என்ப வற்றை தனது இயலாமை யிலும் மிகக் கவனமாக கண்காணித்த உப அதிபர் திருமதி சிவசோதி கந்தசாமியின் துணி வினையும் நினைத்துப்பார்க்கின் றேன். பலரின் கூட்டு முயற்சியினால் தடைகள் பல தாண்டி வளர்ந்த விடுதி தற்போது மிகக் சுமூகமாக நடைபெறுவது மகிழ்ச்சி யைத் தருகின்றது.

இன்று கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வளர்ச்சியும், பலமும் நிறை வைத் தருவதொன்றாகும். நான் கல்லூரி யில் கால் வைத்த போது நிதியற்ற நிலை யில் இராமநாதேஸ்வரர் ஆலயத்தையும் நடராஜர் ஆலயத்தையும் பழைய மாண வர்சங்கம் பொறுப்பேற்று தமது பணத்தி னைச் செலவிட்டே பரிபாலித்தனர். கல்லூரித் தேவைகளுக்கு அவர்களிடம் உதவி கோரியபோதெல்லாம் அங்கத்தர் வர்கள் தமது சொந்தப் பணத்தையே செலவிட்டனர். எந்த நிதியும் இல்லாத நிலையில் பொருளாளராக இருந்த திருமதி குககுமாரி விஜயரகுநாதன் பிரச்சனைகள்

பலவற்றை எதிர்நோக்கிய போதும் பழைய மாணவர் சங்கத்தை தளரவிடாது நடாத்திய சாதுரி யத்தை இப்போதும் நினைத்துப்பார்க்கின் றேன். நிதியின்றி நிறுவனம் நடத்த முடியாதென்ற நிலை ஏற்பட பழைய மாணவர்சங்க அங்கத்தவர் சந்தாவை அதிகரிக்க வேண்டுமென்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. பழைய மாணவரல்லாத ஆசிரியைகள் பலர் நீண்ட காலமாக கல்லூரியில் தங்களை முற்றாக அர்ப்பணித்து அரும்பணியாற்றினார். நிர்வாகத்திலும் ஆசிரியப்பணியிலும் கணிசமான பங்களிப்பை வழங்கிய மேலதிக அதிபர் திருமதி. பரமேஸ்வரி பரராஜசிங்கம் பழைய மாணவர்சங்கக் கூட்டத்தில் "இரண்டு மாதம் மாணவி யாக இருந்தவர், பழைய மாணவி என்ற உரிமையைக் கேரும்போது 15 வருடங் களுக்கு மேலாக ஆசிரியராக பணிபுரி ந்தவர்களுள் கல்லூரியில் உரிமைகோர முடியாதா ?" என்று எழுப்பிய கேள்வி நியாயபூர்வமானதாக இருந்தமையால் கல்லூரி ஆசிரியர்கள் அனைவரும் பழைய மாணவர்சங்க உறுப்புரிமை உடையவர்கள் என ஏகமனதாக தீர்மானம் எடுக்கப்பட்டது. இன்று வரை கல்லூரி அதைக் கடைப் பிடித்தும் வந்துள்ளது. நிதிப்பற்றாக்குறை எப்பவும் போராட்டத்திற்குரியதாக இருந்தமையால் 1994 ஆம் ஆண்டு ஒரு கலைவிழா நடத்தப்பட்டு நிதி சேகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. பழைய மாணவிகளான செல்வி செல்வாம்பிகை செல்வராஜா (திருமதி செ. வீரசிங்கம்) செல்வி அஜந்தா அப்புத்துரை, (வைத்தியகலாநிதி நரம்பியல் நிபுணர் திருமதி அஜந்தா கேசவராஜ்) ஆகிய பழைய மாணவிகள் நடன நிகழ்ச்சிகளை அளிக்க முன்வந்தனர். நடன ஆசிரியை திருமதி நந்தினி சிவராஜன் தரமான பல நிகழ்ச்சிகளை தயாரித்திருந்தார். கலைவிழா விற்கான நுழைவுச் சீட்டுக்கள் விற்பதில் திருமதி. கு. அப்புத்துரை, திருமதி. குககுமாரி. விஜயரகுநாதன் ஆகியோர் காட்டிய ஆர்வ மும் அதனால் ஏற்றுக்கொண்ட சிரமங்களும் என்னிடம் அழியாத பதிவுகளாய் உள்ளன. கலைவிழாவுக்கான நாள் நெருங்கியபோது திருமதி குகானந்தநாயகி அப்புத்துரை அவர்களுக்கு திடீரென ஏற்பட்ட ஒரு நிகழ்வினால் பொறுப்பு முழுவதையும் நான் ஏற்க வேண்டி வந்தது. ஆனால் அந்த நிலைமையிலும் அவர் வருகை தந்து விழாவை நடாத்தி முடித்தமை காலத்தால் கரையாத நினைவாகும். கலைவிழா முடிந்த பின்னர் 26,000/= ரூபாய் பழைய மாணவர் சங்க நிதியாக வைப்பிலிடப்பட்டது. பழைய மாணவர் சங்கத்தினர் இன்று விருட்சமாகியுள்ளமைக்கு அடித்தளம் அமைத்த போது ஏற்பட்ட சுமைகள் இன்று மகிழ்வாகத் தெரிகின்றன.

இராமநாதன் கல்லூரியில் எனது பயணத்தின்போது நிரந்தரமாக இதயத்தில் ஆழப்பதிந்து நிற்பவர்கள் மாற்றுத்திறனாளிகளான மாணவர்களும், மாணவிகளும் தான். 1993, 1994 ஆம் ஆண்டுகளில் செல்வி நிர்மலா வேலுப்பிளளையின் அரவணைப்பிபல் 14 மாணவ மாணவிகள் வந்து கொண்டிருந்தார்கள். பின்னர் மாணவ, மாணவிகள் தொகை அதிகரித்து சக மாணவர்களுடன் கல்வி பயிலத் தொடங்கினார்கள். வாழ்க்கைக்காக போராடும் அம் மாணவர்கள் வலி தெரி

யாமல் வாழவேண்டும் என்பதில் நானும், ஆசிரியைகளும் மிகக் கவனமாக இருந் தோம். உயர்கல்வி கற்பதற்காக மாண விகள் பல்கலைக்கழகம் சென்றிருப்ப துடன் பல திறமைகளையும் வெளி கொணர்பவர்களாகவும் அவர்கள் இருந் தனர். தரம் 5 புலமைப் பரீட்சை யில் நடந்த நிகழ்வொன்றை நினைத்துப் பார்க்கிறேன். தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது இம் மாணவர்கள் வயது கூடியவர்களாக இருப் பார்கள். கல்வித் திணைக்களம் இவர்களை யும் ஏனைய மாணவர்க ளுடன் கணித்து பரீட்சை அனுமதியட்டையினை அனுப்பு வதில்லை. மாணவர்கள் பரீட்சைக்குத் தயாரான நிலையில் ஏமாற்றத்தையளிக்கக் கூடாது என்பதற் காக பொழும்பிற்கு நான் நேரடியாகச் சென்று பரீட்சைத் திணைக் கள அதிகாரிகளுக்கு மாணவ நிலையை விளக்கி அனுமதி அட்டை யைப் பெற்று வந்தேன். இரண்டு முறை இப்படிஒரு நிலமை ஏற்பட்டது. நாங்கள் கொடுத்த அழுத்தங்களின் பின்னர் பரீட்சைத் திணைக்களம் இவர் கள் விண்ணப்பிப் பதற்கு ஒழுங்கு முறையைக் கொண்டு வந்துள்ளது. அனுமதி யட்டையைப் பெற்றுக் கொடுத்த அருண் குமார் 163 புள்ளிக ளைப் பெற்று பரீட்சையில் சித்திய டைந்த போது நான் பெற்றது மகிழ்ச்சி யல்ல ஆத்ம திருப்தி.

2004 ஆம் ஆண்டு நவராத்திரி விழாக்காலம் கல்லூரி மறக்க முடியாத காலமாகும். இந்து கலாசார அமைச்சின் அனுசரனையைப் பெற்று போக்கு வரத்து நெருக்கடியான நிலையில் கல்லூரிக் கலை நிகழ்ச்சிகள் தலைநகரில் மேடையேற்ற ஒழுங்குபடுத்தினேன். பம்பலப் பிட்டி கதிரேசேன் மண்டபத்தில் மேடை யேற்றப்பட்ட கலை நிகழ்ச்சிகளைப் பார்வையிட்ட பாராளுமன்ற உறுப்பினர் களின் வேண்டுகோளுக்கமைய பாராளு மன்றத்தில் நடைபெற்ற நவராத்திரி விழாவில் கலை நிகழ்ச்சிகள் அரங்கேறி யமை இராம நாதன் கல்லூரிக்கு கிடைத்த பெருமை யாகும். பொன்னம்பலவானேஸ் வரர் ஆலயத்தின் அறங்காவலர் டி. எம் சுவாமிநாதன் அவர் களின் அனுசரனை யில் பொன்னம்பலவானேஸ்வரர் ஆலயத் திலும் கலை நிகழ்வுகளை நடாத்தி பெரு மையுடன் திரும்பிய நாட் கள் மறக்க முடி யாதவை.

2009 அம் ஆண்டு எனது சேவையில் இறுதிக்காலகட்டத்தில் நடாத்தப்பட்ட கலை விழா கல்லூரி கண்ட பெருவிழா வாக அமைந்தது. தரமான கலைநிகழ்ச்சி களை யாழ்ப்பாண சமூகமே பாராட்டி யது. கலை விழாவின் வெற்றியின் பின்னால் நடன, சங்கீத, ஆசிரியர்களின் பாரிய பங்களிப்பு இருந்தது. நுழைவுச் சீட்டு விற்பனையில் சிரமங்கள் விழவின் உன்னதத்தில் அடங்கிப் போய்விட்டது. கலைவிழாவின் மூலம் 1.50,000 /= பாடசாலைச் அபிவிருத்திச் சங்கத் திற்கு வைப்புச் செய்து கல்லூரித் தேவை களை நிறைவு செய்தேன்.

யுத்த மேகங்கள் சூழ்ந்த நேரத்தில், இடப்பெயர்வுகள் ஹர்த்தாக்கள், குழப்பங் கள் மலிந்த சூழ்நிலையில் பதவியேற்ற எனது காலம் மிகவும் நெருக்கடியானது.

வேறுபட்ட இரு நிர்வாகத்தை கடமை யாற்றிய போது எதிர்கொண்ட சவால்கள் அனைத்திற்கும் துணிவுடன் நான் போராடியது உப அதிபர்களான திருமதி க. பத்மநாதன், திருமதி ப. தியாகலிங்கம், திரு. வி. பாலேந்திரா ஆகியோருக்குத் தெரியும். கல்லூரி பலதடவை அகதி முகாமாகவும் மாறியிருக்கின்றது. அன்றைய நிலையில் இடம்பெயர்ந்த பாடசாலைகளுக்கு தஞ்சமளிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாக இருந்தபோது பாடசாலைகளுக்கு அப்பால் இரு உயர் கல்வி நிறுவனங்களையும் கல்லூரி வளாகத்தில் வைத்திருக்க வேண்டிய நிலையில்தான் நாட்டின் நிலமை இருந்தது.

யாழ்ப்பாண கல்வியில் கல்லூரிக்கும், இராமநாதன் கல்லூரிக்கும், மறக்க முடியாது உறவொன்று இருக்கிறது என்பதை இதில் குறிப்பிட்டே ஆக வேண்டும். இடம்பெயர்ந்த கல்லூரி களின் வருகையினால் தளபாடப் பிரச்சனை, இடப்பிரச்சனை, என மூச்சுத்திணறி நின்ற வேளையில் அப்போதைய கல்விப் பணிப்பாளர் யாழ்ப்பாணத்தில் ஒரு கல்வியல் கல்லூரியை ஆரம்பிப்பதற்கு மிகவும் பிரயத்தனப்பட்டு இடம் கோரி நின்றார். இடம் வழங்காவிட்டால் யாழ்ப்பாணத்திற்குரிய கல்வியியல் கல்லூரி வேறு இடத்திற்குச் சென்றுவிடும் என்ற வேண்டுதலினால் கஷ்டத்தின் மத்தியிலும் விடுதியையும் முன் கட்டிடத்தின் ஒரு பகுதியையும் வழங்கினோம். 2000ஆம் ஆண்டில் அவர்கள் தனது இடத்திற்கு மீளச் செல்லும் வரைக்கும் கல்வியியல் கல்லூரிப் பீடாதிபதி விரிவுரையாளர்கள், மாணவர் கள் அனைவரும் கல்லூரிக்கு அனுசரனை யாக இருந்ததுடன் வளாகத்தைத் துப்பரவு செய்வதிலும் உதவி புரிந்தனர். கடவுளின் கொடையாக செழிப்பான மண் வளத் தைக் கொண்ட கல்லூரி வளாகத்தில் மாரிகாலத்தில் புட்கள், மரங்கள் மிக உத்வேகத்துடன் வளர்ந்து பச்சைக்கம்பளம் போர்த்தது போலிருக்கும் விடும். அதைத் துப்பரவு செய்வதற்கு எத்தனை விதமான முயற்சிகள் செய்தாலும் மீண்டும் மீண்டும் அதே வளர்ச்சியைக் காணலாம். கல்வியல் கல்லூரிப் பணியாளர்களும், பயிலுனர்களும் எமது வளாகத்தைத் தூய்மைப் படுத்துவதற்கு உதவி நின்ற நன்றிக்கடனை மீள நினைத்துப் பார்க்கின்றேன். அன்று அல்லாடிய கல்வியற் கல்லூரி இன்று மிகப்பெரிய கல்விப் பணியை ஆற்றுவதற்கு இராமநாதன் கல்லூரி துணையாக நின்றதென்பது வரலாறாகும். பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் எனபன பூரண ஒத்துழைப்பை வழங்கி யாழ்ப்பாண மாணவர்களுக்கான தார்மீகக் கடமை ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

கல்லூரி தனது வளர்ச்சிப் போக்கில் வெற்றிகளைப் பெறுவதற்கு தனித்துவமாகவும் சுதந்திரமாகவும் இயங்க வேண்டியது அவசியமாகும். ஆனால் இடம் பெயர்ந்த பாடசாலைகளுடன், யாழ்ப்பாண பல்கலைக்கழக நுண்கலைப்பீடமும், கல்வித் திணைக்களத்தின் பல பிரிவுகளும் கல்லூரி வளாகத்தில் இருந்த போது கல்லூரி தனது தனித்துவத்தையும், சுதந்திரத்தையும் இழந்திருந்தது. கல்லூரி நூலகம் பொருத்தமான கட்டிடமின்றி

அடிக்கடி மாற்றப்பட்டுக் கொண்டிருந்த போதும் விடுதிக்கட்டிடத்தில் வகுப்புக் கள் நடைபெற்றபோதும் நுண்கலைப் பீடமும் வளாகத்தினுள் இருந்தது. கல்லூ ரிச்சமூகம் பல தடவை துணைவேந்தர் களிடம் கல்லூரி தனித்துவமாக இயங்கு வதற்காக வளாகத்தை மீளளிக்குமாறு வேண்டுகோள் விடுத்தது. வேண்டுகோள் ஏற்கப்பட்டு 2008ஆம் ஆண்டு அப்போதி ருந்த துணைவேந்தரினால் ஏறத்தாள 20 வருடங்களின் பின்னர் நுண்கலைப்பீடம், இராமநாதன் கல்லூரி வளாகத்தை மீண்டும் கல்லூரியிடம் ஒப்படைத்தது. கல்லூரி சுதந்திரக்காற்றை அன்றிலிருந்து சுவாசிக்கத் தொடங்கியது. 1 - 5 வரையான வகுப்புக்கள் தனிமையாக சுதந்திரமான சூழலில் நடைபெறுவதற்கு வழி திறக்கப் பட்டது. விடுதிக்குள் சுருங்கியிருந்த நூலகம் சேர். பொன். இராமநாதனவர் களின் இல்லத்திற்கு அகலக்கால் பரப்பி யது. விசேட தேவைகள் கொண்ட மாண வர்கள் வசதியான கட்டிடத்தில் தமது கற்றல் செயற்பாடுகளைத் தொடங்கினர்.

கல்வித்திணைக்களத்தின் வலயம், கோட்டம் என்பனயும் வலயக்கல்விப் பணிப்பாளரின் முயற்சியினால் புதிய இடங்களுக்கு மாறின. நீண்ட காலத்தின் பின்னர் சுதந்திரமான சிந்தனையுடனும் தூரநோக்குடனும் அமைக்கப்பட்ட கல்லூரிக்கட்டடிடங்கள் முழுவதுமாக கல்லூரிப் பயன்பாட்டிற்குள் வந்தது.

இன்று கார்பெட் வீதிகளும், அழகான தெருவோரங்களும், வர்ணம் பூசப்பட்ட வீடுகளுமாக குடாநாடு மாறியிருக்கும் அழகைப் பார்க்கும் போது முன்பு கல்லூரியில் மேற்கொண்ட திருத்த வேலைகள் அனைத்திற்கும் போராடியதை நினைத்துப் பார்க்கின்றேன். கல்லும் மண்ணுமாக இருந்த உட்புற வீதியை திருத்துவதற்கு; தார் பெறுவதற்கும் பிரதான மண்டபம், G.T.Z மண்டபம் திருத்த வேலைகளின்போது மணல், சீமெந்து பெறுவதற்கும் பட்ட கஷ்டங் களும், மனதில் வந்து மோதுகின்றன. பிரதான மண்டபத்தின் மேடை மரத்தி னால் செய்யப்பட்டிருந்தமையால் நடன நிகழ்வுகளின் போது மாணவிகள் காயப்படுவது வழமையாகும். சீமெந்து மேடையாக்க நாங்கள் முயற்சித்தபோது நாங்கள் பட்ட சிரமங்களும் மேடை சீராக்கப்பட்ட பின்னர் நடனமாடும் மாணவிகளின் மகிழ்ச்சியும் காலத்தால் மறையாத நினைவுகளாகும்.

திடீர் திடீரென கூட்டங்கள் நடாத் தப்படும் இடமாக மட்டும் இருந்த பிரதான மண்டபம் கல்வித்திணைக் களத்தின் நிதி ஒதுக்கீட்டினைப் பெற்று பழைய மாணவர் சங்க அனுசரணையிலும் திருத்தப்பட்டு மின்சார வசதியும் செய்யப் பட்டது. இன்று மேலும் மெருகூட்டப் பட்டு அழகாகக் காட்சியளிப்பது மகிழ்ச்சி யைத்தருகின்றது. முன்னாள் அதிபர் சோதிப்பெருமாள் அவர்கள் தனது இல் லாளின் நினைவாக செதுக்கித்தந்த சரஸ் வதி சிலையும் கொள்ளை அழகுடன் மண்டபத்தின்முன் அருளாட்சி புரிகிறாள். கால வெள்ளத்தில் வரலாறுகள் அழிந்து போய் கற்பனைகள் நிஜமாகி விடக் கூடாது என்பதற்காக புதிதாக அமைக்கப் பட்ட மண்டபத்திற்கு ஸ்தாபகரின் மருகனும், தலைசிறந்த கல்விமானும் அரசியல்வாதியுமான செனற்றர் சு. நடேச னின் பெயரிடப்பட்டது. கல்லூரியை அணிசெய்த அதிபர்களின் படங்களை

பிரதான மண்டபத்தில் வைத்ததுடன் அவர்களது பெயர்களையும் பெயர்ப் பலகையில் பொறித்துள்ளேன். எதிர்கால சந்ததியினர் பெருமைமிகு கல்லூரியின் வரலாற்றை அறிந்து கொள்ளவேண்டும் என்று நான் எடுத்த முயற்சிக்கு திருமதி மோகனவதனி இரவீந்திரன் பக்கபலமாக நின்று உதவியது மறக்கமுடியாததாகும்.

கல்லூரியின் சகல நிகழ்வுகளும் பாண்ட் வாத்திய இசையுடனே ஆரம் பிப்பது இன்றுவரை வழமையாக உள்ளது. கல்லுரியின் பாண்ட் வாத்திய இசைக் கருவிகள் அனைத்தும் இடப் பெயர்வுடன் களவாடப்பட்ட பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் வழங்கிய நிதியிலும், பழைய மாணவி திருமதி. குமார் பொன்னம்பலம் தந்த நிதியிலும் யாழ்ப்பாணத்தில் வாத் தியக் கருவிக ளின்மையால் கொழும்பிற்கு நான் நேரடியாகச் சென்று கொள்வனவு செய் தேன். அவற்றைக் கொண்டுவரும் போது பரிசோதனைக் கெடுபிடிகளைத் தாங்கி, நாங்களே இறக்கி, ஏற்றி வந்ததை இன்றும் மறக்க முடியவில்லை. ஆனால் கல்லூரியின் பாண்ட் இசைக்குழுவி னரும், அவர்களது சீருடையும் பாராட் டப்பட்ட போது எனது சிரமங்கள் சாதாரணமாகி விட்டன.

சைவத்தமிழ்ப் பெண்கள் புத்து ணர்ச்சி பெறவேண்டும் என்பதற்காக திருமுறை விழா, நவராத்திரி விழா, மண வாளக்கோலத்திருவிழா என்பவை பக்தி பூர்வமாகவும், வருடந்தோறும் பரிசளிப்பு விழா, முத்தமிழ் விழா, விளையாட்டுப் போட்டி என்பன மிக எழுச்சியாகவும், நிறுவுனர்தினவிழா நன்றியுடன் உணர்வு பூர்வமாகவும் கல்லூரியில் கொண்டா டப்படுவது வழமையாகும். அந்நாட்களில் கல்லூரியின் அழகும் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் மாணவிகளின் ஆடை அலங்காரங்களும் கண்கொள்ளாக் காட்சி யாகும். சிவகாமசுந்தரர் சமேத நடராஜர் ஆலய ஆனி உத்தர அபிடேகமும், இராமநாதேஸ்வர ஆலய மணவாள கோலத்திருவிழாவும் மிகக்கோலாகலமாக வருடாவருடம் நடாத்தப்படுவது வழமை யாகும். கருங்கல்லினாலான இராமநா தேஸ்வரர் ஆலயமும் நடராஜர் ஆலயமும் கல்லூரிக்கு என்றும் மகிமையையும், மாட் சியையும் தந்துகொண்டிருக்கிறது.

நான் கடந்துவந்த பாதையில் இனிய நினைவுகள், மகிழ்ச்சியான சம்பவ ங்கள், சந்தோசப்படுத்திய நாட்கள், கரடு முரடான நிலமைகள் கவலையைத் தந்த நிகழ்வுகள், நிம்மதியைத் தொலைத்த இரவுகள் எல்லா வற்றையும் இன்றும் பகிர்ந்துகொண்டே போகலாம். ஆனால் விரிவஞ்சி சுருக்கி யுள்ளேன்.

சைவத்தமிழ் பெண்களின் பண் பாட்டின் கோபுரக்கலசமாக விளங்கும் இராம நாதன் கல்லூரியில் பதினெட்டு வருடங்கள் கழித்தது எனக்குக் கிடைத்த பாக்கியமாகக் கருதுகின்றேன். ஒரு பெண்ணின் உள்ளார்ந்த ஆற்றல்களை வளர்ப்பதனால் ஒரு சமூகத்தை உயர் நிலைக்குக் கொண்டுவரலாம் என்றும், கலாசார பண்பாட்டு விழுமியங்களு டன் பெண்களுக்கு வழங்கும் கல்வியினால் தான் அதைக் சாதிக்கமுடியும் என்று தீர்க்கதரிசனத் துடன் ஆரம்பிக்கப்பட்ட கல்லூரியை நாட்டில் ஏற்பட்ட யுத்தங் களும் அனர்த்தங்களும் பல வடிவங்களில் பாதித்தமையால் பல தளர்வுகளைச் சந்தித்தது மறுக்கமுடியாத தாகும். எனினும் பரீட்சைப் பெறுபேறு களிலும் கலை விளையாட்டுத் துறையிலும் பல

முறை தடம்பதித்தும் உள்ளது. என்னு டைய சேவையின் இறுதியில் 2010 ஆம் ஆண்டு கல்வியில் மாணவர்கள் சாதனை படைத்தனர் என்பது பெருமைக்குரிய தாகும். கல்லூரியில் நடந்த வெற்றிகள் அனைத்தின் போதும் தோள்கொடுத்த உப அதிபர்களான திருமதி பரிமளம் பத்ம நாதன், திருமதி பத்மாவதி தியாகலிங்கம், திரு. வை. பாலேந்திரா ஆகியோரையும் ஆசிரியை திருமதி ப. கேசவன், திருமதி. கே. ஆனந்தரட்னம், திருமதி. சுகுணா சீனிவாசகம், திருமதி. மகாலஷ்மி ஜெய நாதன் ஆகியோரை யும் நன்றியுடன் நினைவில் கொள்கின்றேன்.

கல்லூரி இன்று தனது கரடு முரடான பாதைகளைத் தாண்டி அமைதி யாகப் பயணிக்கத் தொடங்கி யுள்ளது. சுதந்திரமாக எந்தத் தலையீடு மின்றி கல்லூரியை நடாத்துவதற்கு காலம் அனுமதித்திருக்கின்றது. பழைய மாணவி அதிபராக இருக்கும் சந்தர்ப்பமும் கிடைத் திருக்கின்றது. ஆயிர மாயிரம் இராமநாதன் கல்லூரி மாணவிகளின் ஆத்மாவில் கல்லூ ரித்தாய் நிலை கொண்டிருப்பதனால், நாட்டில் சுமூக நிலை ஏற்பட உலகெங் கிலுமுள்ள பழைய மாணவிகள் விழுது களாக நின்று கல்லூரித் தாயைத் தாங்கி நிற்கின்றார்கள். அன்று இராமநாதன் கல்லூரி யின் மகோன்னதத்தைக் கண்ட பழைய மாணவர்கள் இன்றும் அதே உணர்வு டன் எதிர்பார்க் கின்றார்கள்.

இன்று பௌதீகவளத்தில் செழுமை கண்டிருக்கும் கல்லூரி, பண் பாட்டையும், கலாசாரத்தையும் பேணி அந்த மகோன் னதத்தை நோக்கி பயணிக்க வேண்டும். பழைய மாணவர்களின் ஆதரவினைப் பெற்று கல்லூரி சமூகத்தின் உறவுகளைப் பேணி சேர். பொன். இராமநாதனவர் களின் இலட்சியத்தை நிறைவு செய்ய கல்வி அபிவிருத்தி என்ற இலக்கினை நோக்கிச் செல்ல ஓடு தளம் அமைக்க வேண்டும் என நூற்றாண்டை நிறைவு செய்யும் வேளையில் கருதரிய சிற்சபை யில் ஆனந்த நிர்த்தமிடும் கருணாகரக் கடவுளை வேண்டுகின்றேன்.

மருதனார்மடத்தில் ஏற்றிவைத்த கல்வி விளக்கு நூற்றாண்டு நிறைவில் பிரகாசத்துடன் ஒளிர்ந்து நல்லொளிபரப்ப வேண்டும் என சிவகாமி சமேதர நடராஜப் பெருமாளை வணங்கி நூற்றாண்டு நிறைவு செய்யும் கல்லூரியை மானசீகமாக வாழ்த்து கின்றேன்.

# கடந்து வந்த பாதையில் கல்லூரிச் சுவடுகள்

**திருமதி நேசராணி ஸ்ரீகாந்தன்**
கல்லூரி பழைய மாணவி
ஓய்வுநிலை ஆசிரியை
இல. 16-5/1, வண்டெலட் பிளேஸ்,
வெஸ்ராவிலேஜ்,
தெகிவளை.

*மருத நிலத்து*
*மண்வாசனை வீசும்*
*மருதனார் மடச்சந்திக்கு*
*மணி மகுடம் சூட்டித்*
*திகழும்,*
*இனிய என்*
*இராமநாதன் கல்லூரியே!*

*கல்லூரிக் காலம்*
*எல்லோர்க்கும் போல*
*எனக்குமது*
*'நந்தவன நாட்கள்' தான்.*

*எங்கிருந்தோ வந்து*
*ஓரிடத்தில் ஒன்று கூடி*
*பொழிந்து விட்டுப் போகின்ற*
*கார்த்திகை மாதத்துக்*
*கருமுகில்கள் போல*
*வடமராட்சி, தென்மராட்சி*
*வலிகாமம் ஊர்கூடி*
*திரண்டதோர் குடும்பம்*
*இராமநாதன் கல்லூரி*
*எங்கள் முகங்கள்*
*வேறானாலும்*
*முகவரிகள்*
*ஒன்று தான்!*

*"மாதா.... பிதா....*
*குரு.... தெய்வம்"*
*எல்லாம் ஒன்றாய்*
*ஆசிரியர் என்னும்*
*ஓர் உருவில்*
*இங்கு கண்டோம்.*

*திருமதி இராஜரத்தினம்*
*குருவாய் வாய்க்க*
*இறைவனிடம்*
*இப்புவியும் மானிடப்*
*பிறப்பெடுக்கும் வரங்கேட்கும்,*
*புவியியல் கற்றுத்*
*தன்னியல்பைத் தானறிய!*

*சங்கம் கண்ட*
*சுந்தரத் தமிழை - திருமதி*
*சோமசுந்தரம்*
*வாய் வழி கேட்கையிலே*

அங்கமெலாம் தமிழ்
அணிகலன் அணிந்து
புது அழகு பூணும்.

பூமியின்
கருப்பைக்குள் கிடந்த
இந்து நாகரீக வரலாற்றை
இலாவகமாக,
எங்கள்
அங்கைக்குள் அடக்கும்
வித்தை கற்பித்த
வித்தகி திருமதி
குமாரசுவாமி!

நாற்காலிகளை
நிரப்பும் அரசியலை
நிராகரித்து
"அரசியல் பிழைத்தோர்க்கு
அறமே கூற்றாகும்" - எனும் கூற்றை
அரசியலில் அறிவூட்டிய
ஆசிரியை அருணாசலம்.

கவலைகள் களைந்து
கலைகள் பல பயின்று
ஒழுக்கத்தின் வழி உயர
வழிப்படுத்திய - எங்கள்
விழிக்குள் - வீற்றிருக்கும்
கல்லூரித் தாயே!

பெரு விருட்சமாய்
வியாபித்து
நூறு அகவையின்
வரலாற்றுப் பாதையில்
நீ விட்ட விழுதுகளில்
நானுமோர்
ஆசிரிய விழுதென்பதில்
அக மகிழ்வு கொள்கின்றேன்
வாழ்க பல்லாண்டு!!!

# இராமநாதன் கல்லூரியின் கலைப்பணி நாட்டிய நாடகங்கள்

**செல்வி மைதிலி சோமசுந்தரம்**
B.A Hons. S.L.A.S
உதவி அரசாங்க அதிபர் - யாழ்/கச்சேரி

அழகியலுணர்வு என்பது இளமைப் பருவத்திலேயே குழந்தைகளின் உள்ளத்தில் பண்படுத்தப்படவேண்டியதொன்று. எல்லை யற்ற சிக்கலும் முரண்பாடும் நிறைந்த இவ்வு லகில் வாழும் மாந்தர், பிரச்சினைகளின்றும் விடுபட நாடும் புகலிடமாக அழகியற்கலை கள் விளங்குகின்றன.

நமது இந்துமதப் பண்பாட்டுப் பாரம் பரியத்தில், இவை உலக பந்தத்தினின்று விடுத லைபெற்று மனிதன் இறைவனை அடைதற் கான மோட்ஷ சாதனமாகக் கருதப்படு கின்றன.

பண்டைய இந்துமத இலட்சியங் களுக்குப் புத்துயிர் அளிப்பது, இராமநாதன் கல்லூரி நிறுவப்பட்ட நோக்கங்களுள் ஒன் றாகும். தமிழ்மொழிப் போதனையும், அழகி யற் கலைப்போதனையும், இந்நோக்கத்திற்குப் பயனுள்ள கருவிகளாய் அமைந்தன

தமிழும் இசையும் இணைவதனால் ஏற்படுமின்பத்தினை இக்கல்லூரியிற் பயின்ற மாணவியர் பண்டுதொட்டே நுகர்ந்து வந்துள் ளனர். கல்லூரி மேன்மாடியிலமைந்த நடராஜர் ஆலய வழிபாட்டு மரபில் தமிழிசை முக்கிய இடம் பெறுகின்றது. தமிழ் மறையாம் திருமுறைகள் ஆங்கு பண்ணோடு ஓதப்படு கின்றன.

தவிர, இசையும் தமிழும் ஒன்றுகலந்த பிறிதொரு கலைவடிவம் இராமநாதன் கல் லூரியில் மேடையேறிய நாட்டிய நாடகங்க ளாகும். இது காரணமாக இலங்கையின் கலை வரலாற்றில் சிறப்பானதோர் இடத்தினை இக்கல்லூரி பெறுகிறது.

நாட்டிய நாடகங்கள் இந்துமதப் பண்பாட்டுப்பாரம்பரியத்திற்குப் புதியன வல்ல. எனினும் இராமநாதன் கல்லூரியில் இவை புத்துயிர் பெற்றுப் புதுமெருகோடு மேடையேறியமை **1965** ஆம் ஆண்டு முதலாகும்.

" தாயே நான் போய்வாறேன் " என இராமன் சுமித்திரையிடம் வனமேக விடை பெறலும் " இந்தா மரவுரி " எனச் சுமித்திரை தன் மைந்தன் இலக்குவனுக்கு மரவுரியளித்து தாயே சீதை உன் தகப்பன் இராமன் என அறிவுறுத்தி அரை நொடியேனும் பிரியாது இராமனைக் கண்ணின் இமைபோன்று கட்டிக்காக்கும்படி புத்திமதி பல கூறி

இராமனுடன் காட்டிற்குச்செல்ல விடை கொடுத்தலுமான இரு பாடல்கட்கு மாத்திரம் 1965க்கு முன்னர் அபிநயத்து வந்திருக் கின்றனர்.

1965 ஆம் ஆண்டில் நிறுவுநர் குரு பூஜை விழாவன்று முதன்முதலாக இராமன் கானேகலை மையப் பொருளாகக் கொண்ட கம்பரின் பாக்களினாலியன்ற நாட்டிய நாட கம் மேடையேற்றப்பட்டது. அருணாசலக் கவிராயாவர்களின் இராமநாடகக் கீர்த்தனை யிலிருந்து பொருத்தமான வகையிற் சில கீர்த்தனைகளும் இங்கு எடுத்தாளப்பட்டன. பிற்காலத்தில் கல்லூரி மேடையேற்றிய இரா மாயண நாட்டிய நாடகங்களுக்கெல்லாம் இதுவே முன்னோடியாய் மிளிர்ந்தது.

தசரதன் இராமனுக்குப் பட்டாபி ஷேகம் செய்ய எண்ணுதல் முதலாக "சீரை சுற்றித் திருமகள் பின்செல மூரி விற்கை இளையவன் முன்செலக் காரை யொத்தவன் வனம்போதல்" ஈறான நிகழ்ச்சிகளை இந் நாடகம் உள்ளடக்கியிருந்தது, இது 1966ஆம் ஆண்டு தை மாதம் ஸ்ரீமான் சு. நடேசபிள்ளை அவர்களின் ஓராண்டு நினைவஞ்சலி வைபவத் திலும் ஆடப்பெற்றது. பின்னர் 1973ஆம் ஆண் டில் நடைபெற்ற வைரவிழாவின் போதும் இந்நாட்டிய நாடகம் மேடையேறியது.

சிருங்கார ரஸமேவிய அழகர் குறவ ஞ்சி 1966ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நிறுவுநர் சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் குருபூஜை தினத்தன்று மேடை யேற்றப்பட்டது. அழகர் மலையில் வீற்றிருக் கும் திருமாலழகர் பவனி வருகையில் அவரி டத்துத் தன் மனதைப் பறிகொடுக்கின்றனள் மோகனவல்லி. அப்பொழுது ஆங்குவரும் குற மடந்தை "கங்கை மலைவளர் துங்கவழகர் சுகங்கள் தரவே இணங்கி அவளிடத்தில் வந்துசேருவார் " என்று குறியுரைக்கின்றனள் இறுதியில் மோகன வல்லி திருமாலழகர் திருமண வைபவத்தோடு இனிது நிறைவுறு கிறது. இந்நாட்டிய நாடகம், இது வைரவிழாக் கொண்டாட்டத்தின் போது மீண்டும் மேடை யேற்றப்பட்டது.

"புருஷோத்தமன் பரதன்" எனும் நாட்டிய நாடகம் 1967ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவின் பொருட்டுத் தயாரிக்கப்பட்டது. மாமுனி ஓலை கண்டு மாதுலன் மனையினின்று பரதன் அயோத்தி மீண்டு தாதை வானகமெய்தியமை கேட்டுத் துயருழல் முதலாய் கானகத்தில் இராமனிடம் அடித்தலமிரண்டையும் பெற்று முடித்தலத்திற் சூடி, படித்தலத்திறைஞ்சி நந்திக்கிராம மேகல் ஈறான நிகழ்ச்சிகளைப் பிரதானமாகக் கம்பர் பாக்கள் மூலம் சித்தரிக் கின்றது இந் நாட்டிய நாடகம்.

இது பின்னர் 1969 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நாவலர் விழா விலும் 5-4-70 இல் கொழும்பு நவரங்கஹல மண்டபத்தில் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத் தாபனம் நடாத்திய புத்தாண்டுக் கலை விழா விலும் மேடையேற்றப்பட்டு இரசிகர்களின் பாராட்டைப் பெற்றது.

"கண்ணுக்கும் கருத்துக்கும் , காதுக்கும் க(ா)ன கச்சிதமான இன்பத்தைக் குறைவின்றி அளித் தது. ஒரு மணித்தியாலம் வரை நடைபெற்ற இந் நாடகம் கம்பனின் கவி அமுதத்தால் தொடுக்கப்பட்டது. பார்ப்பவர் மனதில் கண நேரச் சலிப்பைக்கூட உண்டுபண்ணாத முறை யில் அமைந்திருந்ததென்றால் இதன் பெருமை சொல்லவும் வேண்டுமா?"

"செல்வி யோகாம்பிகை திக்கம் செல்லையாவின் இன்னிசை தனித்திறமையோடு விளங்கியது குறிப்பிடத்தக்கது. "புருஷோத்தமன் பரதன் பற்றிய இப்பத்திரிகை விமர்சனம் இந்நாட்டிய நாடகம் பெற்ற வெற்றிக்குத் தக்கதொரு சான்றாகும்.

இளங்கோ அடிகளின் சிலப்பதிகாரத்தை ஆதாரமாகக் கொண்ட " கண்ணகி வழக்குரைத்தல் " எனும் நாட்டிய நாடகம் 1969ஆம் ஆண்டில் " ஈழநாடு " பத்திரிகையின் பத்தாவது ஆண்டு விழாவின்போது மேடையேறியது.

1970ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இராமநாதனவர்களின் குருபூஜைத் தினத்தில் மாணிக்கவாசக சுவாமிகளின் திருவெம்பாவைப் பாடல்களினாலியன்ற "எங்கெழில் என் ஞாயிறு எமக்கு" எனும் நாட்டிய நாடகம் ஆடப்பட்டது. 1971 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் கல்வி விஞ்ஞானக் கலை ஸ்தாபன தின விழாவின்போதும் 1974 ஆம் ஆண்டில் வீரசிங்கம் மண்டபத்திலும் இந் நாடகம் மேடையேற்றப்பட்டது.

இராவணனாற் கவர்ந்து செல்லப்பட்டு அசோகவனத்தில் சிறை வைக்கப்பட்ட சீதையை அனுமன் கண்டு சூழாமணி பெறுதலைக் கருவாய்க் கொண்ட " கற்பின் திண்மை" எனும் நாட்டிய நாடகம் 1971 ஆம் ஆண்டு பரசளிப்பு விழாவிலும் 1972ஆம் ஆண்டில் யாழ்ப்பாண நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற சேர். பொன். இராமநாதன் அவர்களைப்பற்றிய திரு . M. வைத்திலிங்கம் அவர்களின் புத்தக வெளியீட்டு விழாவிலும், வீரசிங்கம் மண்டபத்தில் நடாத்தப்பட்ட கலாசாரக் காட்சியின் போதும் மேடையேறிற்று. அதே நாடகம் "இராவக தூதன்" என்ற பெயருடன் 1982 ஆம் ஆண்டு கல்வித்திணைக்களம் நடாத்திய அகில இலங்கை நடன, நாடக இசைப் போட்டியில் முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இராமாயணத்தை ஆதாரமாகக் கொண்ட "தம்பியர் மூவர்" என்ற இன்னுமொரு நாட்டிய நாடகம் 1974 ஆம் ஆண்டில் வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேற்றப்பட்டது.

இந்நாட்டிய நாடகங்கள் கம்பரது இராமாயணச் செய்யுட்களை ஆதாரமாகக் கொண்டவை இராமன் கானேகல், புருஷோத்தமன் பரதன் கற்பின் திண்மை இராகவ தூதன், தம்பியர் மூவர்; சிலப்பதிகாரத்தை ஆதாரமாகக் கொண்டது. (கண்ணகி வழக்குரைத்தல்) திருவாசகப் பாக்களை ஆதாரமாகக் கொண்ட பக்திச்சுவை ததும்பிய "எங்கெழிலஞ் ஞாயிறு எமக்கு" சிருங்காரச் சுவை விரவிய "அழகர் குறவஞ்சி" என நான்காக வகுக்கலாம். இந்நாட்டிய நாடகங்களில் கருத்தாழமும் மொழியழகும் ஒருங்கிணைந்த இலக்கிய நயமிக்க செய்யுட்கள் நாடகப் பண்புத்தன்மையையும் நன்கு பொருந்திவரத் தொகுக்கப்பட்டன. இசையும் அபிநயமும் அவற்றை மேலும் விளக்கி மெருகூட்டின. அதனால் செய்யுட்களின் சுவை அதிகரித்து அவையோர்க்கு இன்பத்தை ஊட்டி நின்றன.

1965 - 1977 காலப்பகுதியில் இராமநாதன் கல்லூரியில் யான் கல்வி பயிலுங்கால் ஆடப்பட்ட நாட்டிய நாடகங்கள் இவையாகும்.

இலக்கிய நயமும் கலையழகும் மிளிரும் இந்நாட்டிய நாடகங்கள் இளமைப்

பருவத்தில் என்னைப் போன்ற மாணவிகளின் உள்ளத்தில் கலையுணர்வினை வளர்க்கத் தூண்டு கோலாக அமைந்தன. நாட்டிய நாடகங்கள் பழகுவதைப்பார்ப்பது ஒரு சந்தோஷகரமான அனுபவம் கண்ணுக்கும் செவிக்கும் அரிய விருந்து. பாடசாலையில் வகுப்பு நேரம் முடிந்த பின்னர் மாலை வேளைகளிலும், சனி, ஞாயிறு தினங்களிலும், பாடசாலை விடுமுறை நாட்களிலும் இசையாசிரியர் , நடனாசிரியர், நெறிப்படுத்துநர், மூவரும் கூடி மாணவியர்க்கு நாட்டிய நாடகங்கள் பழக்குவதை மணிக் கணக்காகப்பார்த்து மகிழ்ந்திருக்கின்றோம். இலக்கியப்பாக்களை இசையுடனும் அபிநயத்துடனும் கேட்டும் பார்த்தும் இரசிக்கும் இனிய அரிய அநுபவம் எம்போன்றோர்க்கு மிக இளமைப்பருவத்திலே கிட்டிற்று. அநேக பாடல்கள் உளங்கவர்ந்தமையால் மனப்பாடமாயின. நான் மூன்றாம் வகுப்பிற் பயிலுங்கால் மிக விருப்பமாய்ப் பாடித்திரிந்தது. தன்னுடன் தங்கி இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்ட குகனை நோக்கி இராமர் கூறுவதாய் அமைந்துள்ளன., பின்வரும் கம்பராமாயணப் பாடல்கள்...

**ராகம் - ஸ்ரீ ரஞ்சினி.**
**தாளம் : ரூபகம்.**

என்னுயிர் அனையாய் நீ இளவல் உன் இளையான் இந்
நன்னுதல் அவள் நின்கோள் நளிர்கடல் நிலாமல்லம்
உன்னுடையது நானுன் தொழிலுரிமையினுள்ளேன்
முன்புளம் ஒரு நால்வேம் முடிவுளதெனவுன்னா
அன்புள இனிநாமோர் ஐவர்கள் உளரானோம்
சுடருறு வடிவேலாய் சொன்முறை கடவேன் யான்
வடதிசை வருமந்நாள் நின்னுழை வருகின்றேன்.

நாட்டிய நாடகம் என்பது ஜதிஸ்வரம், தில்லானா போன்ற தூய நிருத்த நிகழ்ச்சியன்று, அல்லது வர்ணம் பதம் போன்று பாவ வித்தியாசம் செய்து கற்பனை மூலம் அபிநய விஸ்தாரம் செய்வதற்கேற்ற வடிவமுன்று, இது நாடகப் பண்புகளும், நிருத்திய அம்சங்களும் மேவிய ஒரு சிறப்பான மேடைக்கலை வடிவமாகும். பாவினாலும் உரைநடையியன்ற வாசிகாபினயம் இங்கு முக்கியத்துவம் வகிக்கின்றது. நாடக ரூபத்தில் அமைந்துள்ள வாசிகாநயத்தின் பாவத்தை வெளிப்படுத்துகின்றன வாகவே இசை, ஆடல், வாத்தியம் என்பன அமைகின்றன.

மேலே குறிப்பிட்ட அடிப்படை அம்சங்கள் பொருந்திய இந்நாட்டிய நாடகங்களை ஆக்கி நெறிப்படுத்தியவர் என் தந்தை. தமிழ், ஆங்கில நாடக ஆக்கங்களை மேடையேற்றிய அவர் அனுபவமும், நாடக உத்திகளை ஏற்ற வகையில் கையாளும் திறனும் இந்நாட்டிய நாடகங்களை ஆக்கு வதிலும், நெறிப்படுத்துவதிலும் அவருக்குப் பெரும் துணையாயின.. நாடகப் போக்கிற்கு ஏற்ற வகையில் பாடல்களிலிருந்து சில வரிகளை மாத்திரம் எடுத்தும், காட்சிமுறை மையை மாற்றி அமைத்தும் தனிநடனம் , குழுநடனம் அகியவை மாறி மாறி வரும்படி தொடுத்தும், நாடக ஒட்டத்தைத் தடை செய்யாத வகையில் இசையையும் நாட்டியத் தையும் பயன்படுத்தியும் உரிய இடங்களில் சஞ்சாரி பாவத்திற்கு இடமளித்தும் பார்ப் பவர் மனதில் தனிநடன நிகழ்ச்சியொன் றினைப் பார்க்கும் உணர்வினைத்தவிர்த்து லயத்தினை அடிப்படையாகக் கொண்ட நாடகம் பார்க்கும் உணர்வே மேலோங்கி நிற்கும் வண்ணம் இவற்றை மேடையேற்ற உதவினார். கம்பராமாயணத்தை அடிப்படையாகக்கொண்ட நாட்டிய நாடகங்களில் சில விருத்தப்பாக்களின் வரி ஒழுங்கை மாற்றிக் கீர்த்தனமாகவும் அமைத்தார். திருவெம்

பாவையில் உள்ள மணிவாசகப் பெருமானின் அருட்பாக்களின் ஒழுங்கை ஏற்ற வகையில் மாற்றி அமைத்து கலைவண்ணமும் பக்தி வண்ணமும் ஒருங்கியைந்த நாடகத் தன்மை வாய்ந்த ஒரு சுவைமிக்க கதையாக அளித்தனர்.

விருத்தமாயும், தாளத்தோடும் அமைந்த இந்நாட்டிய நாடகப் பாடல்கள் அவற்றின் பாவத்தினையும் சந்தர்ப்பத்தினையும் அனுசரித்துக் கர்நாடக தேசிய இராகங்களில் பாடப்பட்டன. பல சந்தர்ப்பங்களில் பாடல்களின் கருத்திற்கும் பாவத்திற்கும் ஏற்ற இராகங்களைத் தெரிந்தெடுப்பதற்கு, இசையில் கேள்வி ஞானம் உடையவரான என் தந்தை ஆக்கபூர்வமான ஆலோசனைகளை அளித்தார். நாட்டிய நாடகத்திற்கு வழங்கப்படும் இசை இராகபாவமும் அர்த்த பாவமும் சமமாகப் பொருந்தியிருத்தல் வேண்டும். இலக்கியச் செய்யுட்களின் பொருளையுணர்ந்து ஏற்றவாறு தக்க இடங்களில் சொற்களைப் பிரித்தும் சேர்த்தும் பாடுவதற்கு இசையாசிரியைக்கு எனது பெற்றோர் உதவி செய்தனர். இதனாற் பாடசாலை மட்டுமன்றி வீட்டிலும் நல்லிசையினைக் கேட்கும் வாய்ப்பு எனக்கும் என் சகோதரர்கட்கும் உண்டாயிற்று. இதனால் இராகங்களைப் பற்றிய எமது அறிவும் வளர்ந்தது.

இராமநாதன் கல்லூரியில் 1965 ஆம் ஆண்டு முதல் 1970 ஆம் ஆண்டு முடியும் வரை நடன ஆசிரியராய் விளங்கியவர். "கீதாஞ்சலி" நல்லையா அவர்கள். இளமைப்பருவத்தில் யான் பார்த்து அனுபவித்த அவர் பழக்கி மேடையேற்றிய நாட்டிய நாடகங்கள் என் நினைவில் இன்னமும் நிலைத்து நிற்கின்றன. நாட்டிய நாடகம் என்ற கலை வடிவத்திற்குரிய அம்சங்களை அவர் நன்கு உணர்ந்து செயற்பட்டார். பாடலின் கருத்தை விளக்கும் சாதனங்களுள் ஒன்றாகவே ஹஸ்தாபிநயம் விளங்கிற்று. அத்துடன் ஏனைய உடல் அங்கங்களும் இசைந்தசைந்து கருத்துப் புலப்பாட்டிற்கு துணை புரிந்தன. இவ்வித அங்க அசைவுகளின் ஜீவ நாடியாய் முகபாவம் துலங்கிற்று. மிக எளிய ஜதிகளே இங்கு இடம் பெற்றன. இவ்விடத்தில் அவர் பழக்கிய கல்லூரிக்கீத நடன நிகழ்ச்சியும் சிறப்பாக அமைந்து என் மனதில் நிலையான ஓர் இடத்தைப் பெற்றுள்ளது. என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

சந்தர்ப்பத்திற்கேற்ற வகையில் இந்நாட்டிய நாடகங்களில் சேர்க்கப்பட்ட மக்கள் நடனங்கள் பொதுமக்கள் மனதை மிகவும் கவர்ந்தன. உதாரணமாக "இராமன் கானேகல் " நாட்டிய நாடகத்தில் இராமனின் பட்டாபிஷேகச் செய்தி கேட்டு மகிழ்ச்சி கொண்ட மங்கையர் கும்மியடித்தல் "புருஷோத்மன் பரதனில் இடம்பெறும் வேட்டுவ நடனம்" கற்பின் திண்மையில் இடம்பெறும் அரக்கியர் நடனம், "கண்ணகி வழக்குரைத்தலில் நிகழும் குரவைக் கூத்து" அழகர் குறவஞ்சியில் இடம்பெறும் குறவன் - குறத்தி நடனம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

கீதாஞ்சலி நல்லையா அவர்கள் சேவையிலிருந்து இளைப்பாறிய பின்னர் பாடசாலையில் நடன ஆசிரியராகக் கடமையேற்ற கலைச்செல்வன் திரு. ஏரம்பு சுப்பையா அவர்கள் முன்னவர் பணியினைத் தொடர்ந்தனர். "கற்பின் திண்மை, தம்பியர் மூவர் "என்னும் நாட்டிய நாடகங்கள் இவர் மேடையேற்றியனவாகும். இப்போது அவருடைய மகள் திருமதி. சாந்தினி சிவநேசன் தரமான நாட்டிய நாடகங்களைத் தயாரித்து மேடை

யேற்றி வருகிறார். அகில இலங்கைப் பரிசு பெற்ற "இராகவ தூதன்"நாட்டிய நாடகமும், ருக்மிணி திருமணம், ஆசாரியர் மகளும், அசுரராஜன் மகளும், கௌரிவிரத மகிமை" என்னும் நாட்டிய நாடகங்களும் இவரால் தயாரிக்கப்பட்டவை. இடைக்காலத்தில் செல்வி. கிருசாந்தி சேனாதிராஜா, செல்வி. மேனகா சிவசம்பு, செல்வி. நந்தினி பரராஜசிங்கம் ஆகியோரும் சில நாட்டிய நாடகங்களைத் தயாரித்து அளித்ததன் மூலம் நாட்டிய நாடகத்துறைக்குத் தம் பங்களிப்பைச் செய்துள்ளனர். 1973 ஆம் ஆண்டு நடைபெற்ற வைரவிழாவின் போதும், பரசளிப்பு விழாக்களிலும் இவை மேடையேற்றப் பட்டன.

மேற்குறிப்பிட்ட நாட்டிய நாடகங்களைக் கண்டும் கேட்டும் அநுபவித்ததன் மூலம் கல்லூரி மாணவிகளாகிய நாம் எய்திய நற்பலன்கள் பல. இதிகாச சமய மரபுகளை நாம் அறிவதற்கும் நாடக வடிவ வாயிலாக இசையிலும் நாட்டியத்திலும் எமது இரசனையை வளர்த்தற்கும், தமிழ் இலக்கியச் சிறப்பினை நயத்தற்கும் இவை உதவின. பொதுவாகக் கூறுமிடத்து முத்தமிழின் மாண்பினை மாணவப் பருவத்திலேயே நாம் உய்த்துணர்தற்கு இந்நாட்டிய நாடகங்கள் தூண்டுகோலாக இருந்தன. இவ்வகையில் சேர். பொன். இராமநாதன் அவர்களின் இலட்சியத்தின் பெரும் பாகத்தினை நிறைவேற்ற இந் நாட்டிய நாடகங்கள் உதவியிருந்தன எனக் கூறலாம்.



# இராமநாதன் கல்லூரியில் எனது அனுபவம்

**க. சண்முகரத்தினம்**
B.Sc, Dip, in Edu.
ஓய்வுநிலை பிரதி அதிபர்
யா/ பலாலி ஆசிரியர் கல்லூரி
ஐக்கிய இராட்சியம்

ஒருவருடைய வாழ்க்கையில் அவர் வாழும் சூழல் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. நாம் பிறக்கும் சூழலில் கல்விகற்கும் பாடசாலை முக்கிய இடம் வகிக்கின்றது. இதற்கு அடுத்ததாக வேலை செய்யும் பணியும் அதன் சூழலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. எனக்குக் கல்வி ஊட்டிய மாதா தெல்லிப்பழை மகாஜ னாக் கல்லூரி யாகும். கற்பித்தல் பணியை ஆரம்பித்த கல்லூரி இராமநாதன் கல்லூ ரியாகும்.

இக் கல்லூரிகளில் பெற்ற அனுபவங் கள் தான்; நான் ஆசிரியப் பணியைத் தேர்ந்தெடுப்பதற்குக் காரணமாக இருந்தன. மகாஜனாக் கல்லூரி ஆண் பெண் ஆகிய இருபாலாரும் கற்கும் ஒரு சைவசமயக் கலவன் பாடசாலை. இராமநாதன் கல்லூரி சைவசமயப் பெண்பிள்ளைகள் கற்கும் பாடசாலை. எனது பணி ஆரம்பத்திற்கு அடிப்படை அனுபவம் மகாஜனக் கல்லூரி யிலும் பல்கலைக்கழகத்திலிருந்து பெற்று இராமநாதன் கல்லூரியில் வளர்த்தேன்.

கந்தையா கதிராசிப்பிள்ளை தம்பதி யர்க்குப் புத்திரராக 1936ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பன்னாலையில் பிறந்தேன். எனது ஆரம்பக் கல்வியை இரண்டாம் வகுப்பு வரை பன்னாலை சேர்.கனகசபை வித்தியாசாலையிலும் பின் 1944ஆம் ஆண்டி லிருந்து க.பொ. த உயர்தர வகுப்பு வரை மகாஜனக் கல்லூரியிலும் கற்று, அங்கிருந்து 1956ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்திற்குத் தெரிவு செய்யப் பட்டேன். எனக்கு மகா ஜனக்கல்லூரியில் மாணவ தலைவராகவும், உதைபந்தாட்டம் 1ஆம், 2ஆம் அணிகளின் தலைவராக இருக் கும் வாய்ப்பும், மெய்வல்லுநர் கரப்பந் தாட்டம் போன்ற விளையாட்டுத் துறை களில் அனுபவமும் கிடைத்தது.

விஞ்ஞான பட்டதாரிப் படிப்பை முடித்து 01. 07. 1960 அன்று இராமநாதன் கல்லூரியில் பௌதிக கணித ஆசிரியராக நியமனம் பெற்றேன். அப்பொழுது எனக்கு வயது இருபத்தி மூன்று நான் நேர்முகப் பரீட்சைக்கு மகாஜனாக் கல்லூரி அதிபர் தெ.து. ஜெயரத்தினத்தின் சான்றிதழுடன் சென்றேன். மகாஜனக் கல்லூரியை ப்போன்று இராமநாதன் கல்லூாரியும் சைவச் சூழலில் இயங்கும் பாடசாலையாகையால் அதன்

முகாமையாளர் மாண்புமிகு சு. நடேச பிள்ளை அவர்கள் அதிபர் தெ. து. ஜெயரத்தினத்தின் சான்றிதழுக்கு மதிப்புக் கொடுத்து எனக்கு உடனடியாக நியமனம் வழங்கினார். முகாமையாளர் என்னைக் கல்லூரி அதிபர் திருமதி. த. முத்துக்குமாரு அவர்கட்கு அறிமுகம் செய்து உடனடியாக ஆசிரிய நியமனம் வழங்குமாறு கூறினார். அதிபர் தனது அலுவலகத்திற்கு மாணவர் களின் விடுதியூடாகக் கூட்டிச் சென்ற போது நான் கடிவாளம் பூட்டிய குதிரையைப் போன்று பின் தொடர்ந்தேன். அலுவ லகத்தில் ஆசிரியர்கள் வரவு இடாப்பில் என்னைக் கையொப்பமிடச்செய்து, கடமை ஏற்றதாகக் கடிதம் ஒன்றையும் என்னிடம் பெற்றுக் கொண்டு தான் தயாராக வைத்திருந்த நேர சூசிகையை என்னிடம் கொடுத்தார். பின்னர் என்னைக் க.பொ. த சாதாரணம் (G.C.E o/ட) பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் வகுப்புக்கு அழைத்துச் சென்று பின்வருமாறு அறிமுகம் செய்தார். " Here in a young genteman who will be teaching you physics from today Give all co - op operation to him and get beer fitted" கற்பித்தல் ஆங்கில மொழியிலேயே இருந்தது. மாணவர்கள் பௌதிக பாடத்தை முதலில் இருந்து துரித மீட்டல் செய்யுமாறு கேட்டனர். அதற்கு இணங்க நானும் எழுந்து நின்று கரும்பலகையின் உதவியுடன் விரிவான கற்பித்தலைச் செய்தேன். மாணவர்களும் ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டு குறிப்பும் எடுத்துக் கொண்டனர். இருபாட வேளைகள் முடிந்ததும் அடுத்த தாவரவியல் பாடத்திற்காக அதிபர் வெளியே நின்று கொண்டிருந்ததை அவதானித்ததும் பாடத்தை முடித்துக் கொண்டு வெளியேறினேன். அதிபர் புன்னகையுடன் வகுப்புக்குள் சென்றார். வகுப்பில் என்னுடைய கற்பித்தல் பற்றி அபிப்பிராயம் கேட்டதாகப் பின்னர் அறிந்தேன். பின் நான் அதிபர் அலுவலகத்திற்குச் செல்லும்போது பௌதிக ஆசிரியர் திருமதி காயத்திரி கணேசனைச் சந்தித்தேன். அவர் தன்னை அறிமுகப் படுத்திப் பௌதிக ஆய்வுகூடத்திற்கு என்னை அழைத்துச் சென்றார். இருவரும் ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்ததுடன் குடும்ப அங்கத்தவர்கள் பற்றிய விபரங் களையும் பரிமாறிக்கொண்டோம். ஆய்வுகூடத்தைப் பயன்படுத்தும் ஒழுங்கு பற்றிப் பேசினோம். குறுகிய இடைவேளையின் போது நான் விஞ்ஞான ஆசிரியர்களுக்கும் , ஆசிரியர் அறையிலிருந்த ஏனைய சில ஆசிரியர்களுக்கும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டேன். மதிய இடை வேளையின் போது சமஸ்கிருத ஆசிரியர் திருவாளர் இராமையா அவர்கள் எனக்கு அறிமுகமானார். அவரும் நானும் தான் அப்போது அங்கு கற்பித்த ஆண் ஆசிரி யர்கள், நாம் இருவரும் மதிய இடை வேளையின் போது வீட்டிலிருந்து கொண்டு வந்த உணவை அருந்துவோம். ஏனைய ஆசிரி யர்கள் நாளடைவில் அறிமுகமானார்கள்.

நான் இராமநாதன் கல்லூரியில் இருந்த காலத்தில் க.பொ. த உயர்தரம், க. பொ. த சாதாரணம் வகுப்புக்களுக்குப் பௌதிகவியலும் க.பொ.த சாதாரண வகுப்புக்கு கணிதம், எண்கணிதம் ஆகிய பாடங்களும் எட்டாம் வகுப்புக்கு விஞ்ஞானமும் கற்பித்தேன். நான் ஒரு பௌதீகவியல் ஆசிரியர் ஆதலால் பாடசாலையில் பயன்படுத்தப்படும் கட்புல செவிப்புல சாதனங்களுக்கு (Audio visual aids) பொறுப்பாக இருந்தேன். மாணவர்களின் ஒன்றுகூடலின்

போதும், மற்றும் பாடசாலையில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகள் சங்கீதக் கச்சேரிகள், அரங்கேற்றம் யாவற்றுக்கும் தேவையான கட்புல செவிப்புல சாதனங்களை ஒழுங்கு செய்தல், மேடை ஒழுங்கமைப்பு ஆகியவற்றின் பொறுப்பு என்னுடையதாகும். விளையாட்டுத் துறையில் எனக்கிருந்த அனுபவத்தை அறிந்த விளையாட்டுத் துறைப் பொறுப்பாசிரியர் செல்வி புனிதம் கதிரவேலு அவர்களின் வேண்டுதலுக்கு இணங்க பாடசாலை விளையாட்டுக் கழகத்தின் அங்கத்தவரானேன். விளையா ட்டுப் போட்டிக்குத் தேவையான தட தள அமைப்புகள், ஓட்டப் போட்டிகளுக்கான பாதைகள் (Tracks) அமைத்தல் ஆகியவற்றுக்கான பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. பாடசாலையில் உள்ள ஊழியர்களைக் கொண்டு இவ் வேலைகளை அவ்வப்போது செய்து முடித்தேன். இக் காலகட்டத்தில் இராம நாதன் கல்லூரியில் மட்டுமன்றி பாடசாலைக்கு வெளியேயும் மெய்வல்லுனர் போட்டிகளுக்கு மத்தியஸ்தராகவும் உதை பந்தாட்ட மத்தியஸ்தராகவும் கடமை யாற்றியதோடு மட்டுமல்லாது மெய்வல்லுநர் மத்தியஸ்தர் சங்கம், உதைபந்ததாட்ட மத்தியஸ்தர் சங்கம் ஆகியவற்றிற்கு உப தலைவராக இருக்கும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. இவை யாவற்றுக்கும் நான் மகாஜனக் கல்லூரியில் உதை பந்தாட்டம், மெய்வல்லுநர் போட்டிகளில் எனக்கிருந்த ஆர்வமும், அனுபவமும் பல்கலைக்கழகத்தில் உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் ஆகியவற்றில் எனக்கிருந்த அனுபவமும் பெற்ற விருதுகளும் பெரிதும் உதவின தவணைப் பரீட்சைக்கு மண்டபம் ஒழுங்குபடுத்தல், வினாத்தாள்கள் அச்சடித்தல், மனையியற் கூடத்தில் பழுதடையும் கருவிகளைத் திருத்து பவர்களை மேற்பார்வை செய்தல் போன்ற பொறுப்புக்களும் எனக்குத் தரப்பட்டன. இந் நாட்களில் நான் காலை எட்டு மணிக்குப் பாடசாலைக்கு வந்து மாலை ஆறு மணிக்கு த்தான் வீடு செல்ல வேண்டியிருந்தது. நான் இங்கு கற்பிக்கும் போது எனது தங்கை தங்கரத்தினம் என்னுடன் மோட்டார் வண்டியில் வந்து சில காலம் தையற் கலை பயின்றார். இவர் இராமநாதன் கல்லூரியில் கா. பொ. த சாதாரண வகுப்பு வரை கல்வி கற்றவராவர்.

யாழ்ப்பாணத்தில் ஒரு இசைக் கல்லூரி நிறுவ வேண்டுமென்ற நீண்டநாள் கனவை நனவாக்கினார் மாண்புமிகு சு . நடேசபிள்ளை அவர்கள் இதனை இராமநாதன் கல்லூரியில் நிறுவுதற்கு பிரபல சங்கீத வித்துவான் மஹாராஜபுரம் விஸ்வநாத ஐயர் அவர்களை அழைத்து இராமநாதன் இசைக்க ல்லூரி திறந்து வைக்கப்பட்டு இசை விழா நடாத்தப்பட்டது. அத்துடன் அவருடைய மகன் சந்தானம் அவர்களை இசைக் கல்லூரியின் அதிபராக நியமித்தனர். இவ் விழா எடுப்பதற்குத் தேவையான உதவிகளை நான் செய்ததோடு மட்டுமன்றி எனது மோட்டார் வண்டியில் ஏனைய ஆசிரியர் களுடன் பாடசாலைகளுக்குச் சென்று நுழைவுச் சீட்டுக்கள்விற்று விழாவை நல்ல முறையில் நடாத்த உதவினேன். என்னுடைய இம் முயற்சிகளை மாண்புமிகு சு. நடேசன் அவர்களை மகாஜனாக்கல்லூரி அதிபர் தெ. து. ஜயரத்தினத்துக்கு சொல்லிப் பாராட்டினார். அன்று ஆரம்பிக்கப்பட்ட இராமநாதன் இசைக் கல்லூரி தற்போது யாழ் பல்கலைக் கழகத்தின் நுண்கலைப்பீடமாக விளங்குகின்றது. மாண்புமிகு சு. நடேசன் அவர்கள்

காலமான போது அவருடைய அஞ்சலியும் , ஈமக் கிரியைகளும் செவ்வனே நடைபெற வேண்டிய ஒழுங்குகளை முன்நின்று செய்து முடித்தேன்.

பாடசாலைகளை அரசாங்கம் பொறுப் பேற்ற பின்அரசியல் பாடசாலைகளுக்குள் புக ஆரம்பித்தது. அரசியல் வாதிகளின் தலை யீட்டால் அரசாங்க பாடசாலைகளில் அதிபர், ஆசிரியர்களின் இட மாற்றங்கள் கல்வித் தரத்தில் பாதிப்புக்களை ஏற்படுத்தின. திருமதி த. முத்துக்குமாரு. அவர்கள் ஓய்வு பெற்ற பின் திருமதி G கணேசன் சில மாதங்கள் அதிபராக வும் பின் செல்வி y. கனகசபை வேறொரு பாடசாலையின் அதிபராக இருந்த போது இங்கு இடமாற்றம் செய்யப்பட்டார். திருவாளர்கள் அமிர்தலிங்கம், ஏகாம்பர நாதன், V பொன்னம்பலம், வல்லிபுரம் ஆகிய ஆண் ஆசிரியர்களும் இடமாற்றம் பெற்று வந்தனர். ஒரு கட்டத்தில் பௌதிகவியல் கற்பிக்கும் ஆசிரியர்கள் மூவர் இருந்தமை யாலும் நான் ஏழு வருடங்கள் இராமநாதன் கல்லூரியில் சேவையாற்றியமையாலும் 15. 07. 1967இல் வேம்படி மகளிர் கல்லூரிக்கு மாற்றம் பெற்றுச் சென்றேன். அங்கு க. பொ. த. உயர்தர வகுப்புக்களில் பௌதீகவியல் கற்பிக்க செல்வி மேபல் தம்பையா என்னைப் பயன்படுத்திக் கொண்டார். வேம்படி மகளிர் கல்லூரியில் 5 ஆண்டுகள் சேவை செய்த பின் ஏறக்குறைய பத்து ஆண்டுகள் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் கல்வி கற்பித்தேன். மூன்று ஆண்டுகள் விஞ்ஞான வெளிக்கள நிலையத்தின் பணிப்பாளராகவும் 01. 10. 1983 இல் இருந்து நான்கு வருடங்கள் சீசெல்ஸ் நாட்டின் கல்வி அமைச்சில் பௌதீ கப் பாடநெறி அபிவிருத்தி அலுவல கராகக் கடமையாற்றினேன். பின் மீண்டும் யாழ் ப்பாணத்தில் பலாலி ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளராகவும், இறுதி ஆறு வருடங் கள் பிரதி அதிபராகவும் இருந்து ஓய்வு பெற்றேன். ஓய்வு பெற்றபின் கொழும்பு பீவர் சர்வதேசக் கல்லூரியில் 10 வருடங்கள் உயர்தர வகுப்புக்கு பௌதீகவியல் ஆசிரியராக கடமையாற்றினேன். அத்துடன் ஸ்ரீலங்கா உயர்கல்வி முன்னே ற்றக்கழகம் (SLAAED) அங்கத்தவராக இருந்து மாணவ சமுதாயக் கல்வி வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தேன்.

மகாஜனக் கல்லூரியில் மாணவனாகப் பெற்ற அனுபவங்கள் இராமநாதன் கல்லூரி யில் ஆசிரியராகப் பெற்ற அனுபவ ங்கள் எனது பணியில் முன்னேற பெரும் உதவியாக இருந்தது இராமநாதன் கல்லூரியில் பௌதீக த்திற்குப் பொறுப்பாக இருந்தது. விளையா ட்டுத் துறையில் பல பாடசாலை களிலும் , பிரதேச மட்த்திலும் மெய்வல்லுனர் போட்டி களில் நேரக் கணிப்பாளர், மத்திய ஸ்தராக கடமையாற்றியமை, உதைபந்தாட்ட மத்திய ஸ்தராகக் கடமையாற்றியமை விளையாட்டுத் துறையில் எமது பணியை சமூகத்திற்குச் செய்ய உதவியது. JAAA , JFRA ஆகிய சங்கங்களின் உப தலைவராகவும் இலங்கை உயர்கல்வி முன்னேற்றச் சங்கத்தின் (SLAA ED) அங்கத்தவராகவும் இருந்து மாணவர் கல்வி வளர்ச்சியில் பங்களிப்புச் செய்யும் வாய்ப்புக் கிடைத்தது. எனது ஆளுமையை வளர்த்த கல்வி நிறுவனங்களுக்கு நான் நன்றி உடையவனாவேன்.

நான் கற்பிக்கும் போது மாணவர்கள் பிரச்சனை தராமல் ஒத்துழைப்பு நல்கினர் அவர்களைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திரு

ப்பதற்கு நாகரீகமான சொற் பிரயோகத்தைக் கடைப்பிடித்தேன். சொற்களால் ஏற்படும் தாக்கம்; அடிப்பதால் ஏற்படும் தாக்கத்திலும் வலுவானது. இராமநாதன் கல்லூரியில் பெற்ற அனுபவம் ஏனைய கல்லூரிகளிலும் பிரயோகிக்கக் கூடியதாக இருந்தது. என்னி டம் கல்வி கற்ற விஞ்ஞான மாணவர்கள் பல்வேறு தொழில்களை மேற்கொள்கின்றனர். அவர்களில் அனேகர் ஆசிரியர்களாவார். தற்போதைய அதிபரும் பழைய மாணவி ஆதலால் கல்லூரிப் பற்றும் ஆர்வமும் உடையவர். நாட்டில் ஏற்பட்ட உக்கிரமான போரினால் பாடசாலைக் கட்டிடங்களில் ஏற்பட்ட பாதிப்புக்களை திருத்தி அமைப்பது அவசியமாகும். எனவே பழைய மாணவர் களும் நலன் விரும்பிகளும் அவற்றைத் திருத்தி அமைத்து முன்னைய நிலைக்குக் கொண்டு வர உதவ வேண்டும். அதற்கு

1. கல்லூரியின் பழைய அமைப்பைப் பேணி கட்டிடத் திருத்த வேலைகளைச் செய்தல்.
2. தேவையான தளபாட்ங்கள் , உபகரணங்கள் நூல் நிலையத்திற்குத் தேவையான நூல்கள் வாங்குதல்.
3. கல்விசார் பிற செயற்பாடுகள், விளையாட்டுத் துறை ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு உதவுதல்.
4. ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல்
5. மேற்படி செயற்பாடுகளுக்கான மதிப்பீடு அதிபரிடமிருந்து பெறப்படல்.

முதலில் கல்லூரி நூற்றாண்டு விழாவிற்கு முன் செய்ய வேண்டிய திருத்த வேலைகளைச் செய்தபின் ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம். அண்மைக் காலத்தில் பாடசாலைகளின் முக்கிய செயற்பாடுகளுக்கு பாடசாலைக்கு அண்மையில் வசிக்கும் மக்களை ஈடுபடு த்துவதாகும். இதன் பிரகாரம் தாய்ச்சங்கத்தின் பங்களிப்பு முக்கிய இடம் வகிக்கும். தாய்ச்சங்கத்தின் ஊடாக கொழும்புச் சங்கத்தின் அனுசரணையுடன் ஏனைய வெளிநாட்டுச் சங்கங்கள் கல்லூரிக்குத் தேவையான உதவிகளை வழங்குவது சிறந்ததாகும். இராமநாதன் கல்லூரியின் மாணவிகள் கல்லூரிப்பற்றுடையவர்கள். கருத்து வேறுபாடு இருந்தாலும் கல்லூரியின் வளர்ச்சியைப் பாதிக்காது அதன் மேம்பாட்டிற்கு உதவும் பண்புடையவர்கள் ஆதலால் கல்லூரியை மீண்டும்உன்னத நிலைக்குக் கொண்டுவர எல்லோரும் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும் என்று வேண்டுகின்றேன். ஐக்கிய இராச்சியக் கிளை முன்மாதிரியாய் இருந்து கல்லூரியின் வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்புச் செய்தது பாராட்டுக்குரிதாகும். கல்லூரியின் வளர்ச்சி க்கு எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.



# நீங்கா நினைவில் நிறைந்தவர்கள்

**திருமதி. ப. பத்மநாதன்**
ஓய்வு நிலை உப அதிபர்
யா/ இராமநாதன் கல்லூரி

சைவ மணமும், தமிழ் மணமும் ஒருங்கே கமழ்ந்து கொண்டிருக்கும் கவின் மிகு கலைக் கோயிலான இராமநாதன் கல்லூரி நூற்றாண்டு விழாவினை அண்மித்துக் கொண் டிருக்கின்றது. சிவநெறிச் செம்மலும், தேசியத் தலைவருமான சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள், ஆழ்ந்த கல்வி அறிவும் ஒழுக்க சீலமும் சமயப்பண்பாடும் வாய்ந்த பெண்களே சமூக முன்னேற்றத்திற்கு உதவுவார்கள் என்ற பெருநோக்கில் 1913ஆம் ஆண்டு தைத்திங்கள் 20ஆம் நாள் பெண்களுக்கென சுன்னாகம் இராமநாதன் கல்லூரியை ஆரம்பித்து வைத்தார்கள். அன்றே இந்து சமூகத்தின் அறிவுக் கண்களும் திறக்கப்பட்ட தாக அன்றைய கற்றறிந் தோரால் இயம்பப் பட்டது.

எனது இடை நிலைப் பள்ளிப் பருவத் தில் இராமநாதன் கல்லூரியில் கல்வி கற்றுக் கொண்டிருந்த மாணவிகளின் பண்பாட்டு விழுமியக் கோலங்களை நேரில் கண்டும், செவி வழி கேட்டும் இக்கல்லூரியில் உயர்தர வகுப்பில் கல்வி கற்க வேண்டும் என்று என் மனதில் தோன்றியது. ஆனால் அது நிறைவேற இறை சங்கல்பம் கிடைக்கவில்லை. ஆயினும் 1977ஆம் ஆண்டு தொடக்கம் 2002ஆம் ஆண்டு வரை தொடர்ந்து கால்நூற்றாண்டு களாக ஆசிரியராக, பகுதித் தலைவராக, உப அதிபராகக் கடமையாற்றும் பெரும் பேறு இறை அருளால் கிடைக்கப்பெற்றது.

25 ஆண்டு காலப்பகுதியில் ஆளுமைத் திறன் வாய்ந்த 7 அதிபர்களின் நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் பணியாற்றினேன். அத்துடன் கற்பித்தல் செயற்பாட்டில் எண் ணம், சொல், செயலில் ஒருமையுடனும் தூய்மையுடனும் எனக்கு முன்மாதிரியாக வழி காட்டிய மூத்த ஆசிரியர்கள், என்னோடி ணைந்த இளந்தலை முறை ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள் ஆகியோரின் சேவை பற்றிய நினைவுப் பதிவுகளை நூற்றாண்டு மலரில் இடம் பெறத்தக்கதாக கட்டுரை வடிவில் அமைத்துள்ளேன்.

1977ஆம் ஆண்டு காலப்பகுதியில் கல்லூரியின் அதிபர் ஆசனத்தை அலங்கரித்த அம்மையார் திருமதி இராசநாயகம் அருணாசலம் ஆவார். அமைதியான பண் புள்ளம் கொண்டவர். இவரது முகத்தில்

கடுமையான போக்கினைக் காணமுடியாது. ஆனால் கட்டுப்பாட்டுடன் ஆசிரியர்கள், மாணவர்களின் ஒத்துழைப்பைப் பெற்று கல்லூரி நிர்வாகத்தைத் திறம்பட நடாத்தியவர். இவரது அயராத முயற்சியால் பல வழிகளாலும் நிதி சேகரித்து கல்லூரிக்கு ஒரு பெரிய மண்டபத்தை உருவாக்கிய பெருமைக் குரியவராவார். அம்மண்டபமே இன்று "அருணாசலம் மண்டபம்" என்ற பெயரில் புதுப்பொலிவு பெற்று மிளிர்கின்றது. முறைசார்ந்த கல்விச் செயற்பாடுகள் இவரது காலத்தில் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்க்கக் கூடிய வகையில் செயலாற்றினார். இறை நம்பிக்கை மீதுரப் பெற்றவர். காலையில் ஆலயத்திற்குச் சென்று வழிபட்டபின்னரே அலுவலகத்தில் கடமையில் ஈடுபடுவார். இவரது சேவைத்திறன் மாணவிகளால் என்றும் நினைவுகூரத்தக்கதாகும். இவர் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வின்போது அமரத்துவப் பேறடைந்தது விட்டார்.

திருமதி யோகலட்சுமி இராசரெத்தினம் *(1980-1982)* உப அதிபராகக் கடமையாற்றி அதிபர் பதவியை பொறுப்பேற்றுக் கொண்டவர். பழைய மாணவியான இவர் ஆசிரியராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் புவியியல் பாடத்தைத் திறம்படக் கற்பிக்கும் ஆற்றல் மிக்கவர். புவியியலை பெரு விருப்புடன் கற்றுப் பல மாணவிகளை புவியியல் சிறப்புப் பட்டம் பெறச் செய்த பெருமை இவருக் குண்டு. உப அதிபராகக் கடமையாற்றிய காரணத்தால் அதிபர் பதவிக் காலத்தில் நிர்வாகத்தைத் திறம்பட நடாத்தினார்கள். "குஞ்சக்கா" என அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்டவர். "இதனை இதனால் இவன் செய்வன் என ஆய்ந்து" அதற்கேற்ப பணிப்பங்களிப்புக்களைப் பொறுப்பானவர் களிடம் ஒப்படைத்துச் சிரமமின்றி கல்லூரி செயற்பாடுகளை திறம்பட நடாத்த வகை செய்தவர். *2003*ஆம் ஆண்டு கனடா நாட்டில் அமரராகி அனைவரையும் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டார். எனினும் குஞ்சக்காவின் பிள்ளைகள் கல்லூரிச் செயற்பாடுகளில் பங்காற்றி அவரது நினைவை நிலைத்து நிற்க வகை செய்கின்றனர். என்றும் இராமநாதன் கல்லூரி வரலாற்றில் நீங்கா நினைவாக குஞ்சக்கா நிறைந்திருப்பார்.

*1983-1986* வரையான காலப்பகுதியில் அதிபர் ஆசனத்தை அலங்கரித்தவர் திருமதி புவனேஸ்வரசச்சிதானந்தம் அவர்கள். கம்பீரமான தோற்றம் கருணை உள்ளம், பேச்சு வன்மை ஆகியவற்றால் அனைவரையும் ஈர்த்துச் செயலாற்றக்கூடிய திறன் மிக்கவராகத் திகழ்ந்தார். கல்லூரி வளாகத்தைச் சுற்றி மேற்பார்வை செய்யும் பாங்கினை அனைவரும் வியந்துரைப்பர். காரணம் அலுவலகத்திலிருந்து புறப்பட்டு சுந்தரி மண்டபம் "ப" மண்டபம் பிரதான மண்டபம் எனச் சுற்றிச் சுழன்று கடிதென வந்து அலுவலகத்தில் அமர்ந்து விடுவார். இவரது காலில் சில்லுப் பூட்டி உள்ளதா என வினவுவதை செவி மடுத்துள்ளேன். அத்தகைய நிர்வாகத்திறனும் கல்லூரி முன்னேற்றத்தில் அதீத அக்கறையும் காட்டியவர். "யார்க்கும் பணியுமாம் அறிவுடைமை" என்ற வாக்கிற்கமைவாக பழைய மாணவர், அபிவிருத்திச் சங்கத்தினர் அனைவருடனும் ஒத்துழைத்து கல்லூரி நிர்வாகத்தைத் திறம்பட நடாத்தி கல்லூரியின் வளர்ச்சியில் பங்காற்றினார்கள். தனது சகல துறை ஆற்றல்களையும் கல்லூரி மாணவிகளும்

பெற்று சோபிக்க வேண்டும் என ஆர்வத் துடன் செயலாற்றினார்கள். தற்போது கனடா நாட்டில் நோய்வாய்ப்பட்ட நிலையில் இருந்தபோதும் இராமநாதன் கல்லூரி பற்றிய தகவல்களைப் பெறுவதில் ஆர்வங்காட்டு கின்றார். இவர் சுகத்துடன் வாழ நடராசப் பெருமானின் பாதம் பணிகின்றேன்.

1986 - 1988தை வரையான காலப்பகுதி யில் அதிபர் பதவி வகித்தவர் திருமதி ஞானேஸ்வரி சோமசுந்தரம் ஆவார். இவர் இராமநாதன் கல்லூரிப் பழைய மாணவிகளில் தனிச்சிறப்பு வாய்ந்த மாணவியாகத் திகழ்ந்தவர். இவர் ஆசிரியராக, உப அதிபராக அதிபராகக் கடமையாற்றிய பெருமைக் குரியவராவார். ஆசிரியராக உப அதிபராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் அதிபர் களுக்கு மதியுரை கூறும் அமைச்சர் போன்று பணியாற்றிய காரணத்தால் அதிபர் பொறுப்பினைத் திறம்பட நடாத்த முடிந்தது. வரலாறு, வடமொழி, தமிழ் ஆகிய பாடங் களை உயர்தர வகுப்பு மாணவிகள் மனங் கொள்ளும் வகையில் திறம்படக் கற்பித்து பெருந்தொகையான மாணவிகள் பல்கலைக் கழகம் சென்று பட்டம்பெறச் செய்த பெருந்தகையாவார். அக்காலப்பகுதியில் மாணவிகள் பெற்ற பெருமதிப்புக்குரிய "ஞானகுரு" திருமதி ஞானேஸ்வரி சோம சுந்தரம் ஆவார். அறிவாழமும் ஆளுமைத் திறனும் மிக்கவராகையால் சகல துறைகளிலும் தன்னை முற்றுமுழுதாக ஈடுபடுத்தி கல்லூரி பெரும் சிறப்புடன் மிளிர வகை செய்தவர். இவரிடம் கல்வி கற்ற மாணவிகளும் இவரது குழந்தைச் செல்வங்களும் கல்வியிற் சிறந்து பெரும் பதவிகளில் அமர்ந்து சிறப்பாக வாழ்கின்றனர். பழைய மாணவியான இவர் பழைய மாணவிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி பழைய மாணவர்சங்கத்தைப் புது மெருகூட்டி அவர்களின் பூரண ஒத்துழைப் பைப் பெற்றுக்கொள்ள வகை செய்தார்கள். நடுவு நிலை தளம்பாது அனைத்து ஆசிரியர் களின் பூரண ஆதரவைப் பெற்று சகல துறையிலும் சிறப்பான செயற்பாடுகள் நடை பெற வகை செய்தார்கள். 1987 இன் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட அசம்பாவிதத்தின் போது கல்லூரியின் விடுதியில் தங்கியிருந்த 68 மாணவிகளையும் ஊழியர்களையும் திருமதி ஞானேஸ்வரி சோமசுந்தரம் அவர்களும் துணைவர் திருவாளர் சோமசுந்தரம் அவர்களும் பாது காப்புடன் அழைத்துச் சென்று உடுவில் மகளிர் கல்லூரி விடுதியில் தங்க வைத்து அவர்களின் பெற்றோரிடம் பாதுகாப் பாக ஒப்படைத்த தன்னிகரில்லாச் சேவை போற்ற வேண்டிய தாகும். "ஞானக்கா" என அனைவராலும் அன்பாக அழைக்கப்பட்ட திருமதி ஞானேஸ்வரி சோமசுந்தரம் அவர் களின் சேவை கல்லூரி வரலாற்றில் என்றும் நீங்கா நினைவில் நிறைந்திருக்கும்.

திருமதி சீமாட்டி ஸ்ரீமதி குமாரசாமி (1988-1996) திருமதி சோமசுந்தரம் அவர் களைத் தொடர்ந்து அதிபர் பதவியைப் பொறுப்பேற்றார். 1987 இன் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட பாரிய அசம்பாவிதத்தினால் அளவிட முடியாத இழப்பினை இராம நாதன் கல்லூரி சந்தித்தது. இக்கட்டான இக்காலப் பகுதியிலேயே ஸ்ரீமதி குமாரசாமி அவர்கள் பொறுப்பேற்றார்கள். "தெய்வத் தால் ஆகாததொன்றில்லை" என்ற இறை நம்பிக்கையைத் துணையாகக் கொண்டு செயலில் இறங்கினார்கள். இவரது கனிவான

பேச்சுவன்மை, தொடர்பாடல் திறன் ஆகிய வற்றால் அரச திணைக்களம் அரச சார்பற்ற நிறுவனங்கள் பழைய மாணவிகள் ஆகி யோரிடமிருந்து நிதி உதவி பெற்றுத் திருத்த வேலைகள் நடைபெற்றன. கற்பித்தலுக்கு வேண்டிய உள்ளீடுகள் அனைத்தும் சூறை யாடப்பட்டும் அழிவுற்றும் காணப்பட்டது. அதிபர் அவர்களினதும் ஆசிரியர்களினதும் தீவிர முயற்சியால் பொது நிறுவனங்களால் சில பொருட்கள் அன்பளிப்புச் செய்யப் பட்டது. இவ்வாறு அதிபர் ஸ்ரீமதி அம்மை யார் தேனீக்கள் தேன் சேர்ப்பது போன்று சிறு உதவிகள் மூலம் கல்லூரிக்கு வேண்டிய உபகரணங்களைப் பெற்றுக் கொண்டு கற்றல் கற்பித்தல் செயற்பாடு சீராக நடைபெற ஆக்க மும் ஊக்கமும் அளித்தார்கள். கல்லூரி நூலக மும் தாக்குதலுக்குத் தப்பவில்லை. நூலகத்தை நல்ல நிலைக்கு மாற்றி அமைப்பதற்குப் பல் கலைக்கழக நூலகர்களின் உதவியை நாடிப் பெற்று ஓரளவு சீரான நிலைக்கு மாற்றி அமைத்து அதிலும் வெற்றி கண்டார்கள்.

ஸ்ரீமதி குமாரசாமி அவர்கள் நிறைந்த கற்பனைவளம் மிக்கவர். சிறுவர் நாடகங்களை யாத்து மேடை ஏற்றுவதில் அதீத நாட்ட முள்ளவராய்த் திகழ்ந்தார்கள். பல சிறுவர் நாடகங்களைக் கல்லூரி நிகழ்வுகளில் மேடை யேற்றிப் பாராட்டினைப் பெற்றுக் கொண்ட வர். இவரிடம் காணப்பட்ட அனைவராலும் மெச்சப்பட்ட ஓர் அம்சம் ஆற்றொழுக்குப் போன்ற பேச்சாற்றல் இவரது மேடைப் பேச்சொன்றினை செவிமடுத்த கல்விப் பணிப்பாளர் ஒருவர் "சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தது" போன்று அவை யோரைக் கிறங்கவைத்தது எனப் பாராட்டி னார். சைவப் பண்பாட்டின் பாரம்பரியத் தைக் கட்டிக்காத்தவர். விரதங்களை அனுட் டிப்பதில் இவருக்கு நிகர் இவரேதான். மாணவிகளையும் சைவப் பண்பாட்டினைக் கடைபிடித்து வாழ வேண்டும் என வழி நடாத்துவார். 1987ஆம் ஆண்டு நடைபெற இருந்த பவள விழா நிகழ்வு அப்போதைய அதிபர் திருமதி ஞா. சோமசுந்தரம் அவர்களால் அடிகோலப்பட்டது. ஆனால் அது தடைப் பட்டிருந்தது. 1990ஆம் ஆண்டு பவள விழா வினை கோலாகலமாக நடாத்தி வைத்து பெருமை சேர்த்தார். ஸ்ரீமதி குமாரசாமி அவர்கள் கல்லூரி நூற்றாண்டு விழா மலருக்கு ஆக்கம் வழங்க இருந்த வேளையில் அமரத்துவம் அடைந்த செய்தி எம்மைத் துயரில் ஆழ்த்தியது. இவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் இவரது நினைவு வரலாற் றுப் பதிவாக இடம் பெற்றிருக்கும்.

திருமதி மங்கையற்கரசி திருச்சிற்றம் பலம் அவர்கள் (1990 - 1992) அதிபர் பதவியில் அமர்ந்து கொண்டார். இவர் கோப்பாய் ஆசிரிய கலாசாலை உப அதிபராகக் கடமையாற்றிக் கொண்டி ருந்தார். பழைய மூத்த மாணவி என்ற காரணத்தால் இராமநாதன் கல்லூரி அதிபராக அப்போதைய கல்விப் பணிப்பாளர் திருவாளர் இரா. சுந்தரலிங்கம் அவர்கள் மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் அவர்களை நியமித்தார்கள். சிறந்த கல்விப் புல வாரிசான இவர் ஆழ்ந்த சமயப் பற்றும் இறையுணர்வும் சமயச் சொற்பொழிவுகள் ஆற்றுவதில் தனிச் சிறப்பும் வாய்ந்த மங்கை யாகத் திகழ்ந்தார்கள். இவர் சைவ மங்கையர் கழக அங்கத்தவராகவும், பல்கலைக்கழக உறுப்பினர் பதவியில் அமர்ந்த ஒரே ஒரு பெண் உறுப்பினராகவும் அமர்ந்து

கல்லூரிக்குப் பெருமை சேர்த்தவராவார். இவரது காலத்தில் உப அதிபராகக் கடமையாற்றிய திருமதி பரமேஸ்வரி பரராசசிங்கம் அவர்கள் நிர்வாகச் செயற் பாடுகள் யாவும் ஒழுங் காகவும் சிறப்பாகவும் நடைபெற பேருதவி ஆற்றினார்கள்.

கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள இராமநாதேஸ்வர ஆலயமும் இடிபாடுகளுக் குட்பட்டு, பூசைகள் சிறப்பாக நடைபெற முடியாத நிலையில் காணப்பட்டது. அதிபர் அவர்கள் பாடசாலை மூத்த ஆண் ஆசிரிய ரான திரு. வெ. ஏகாம்பரநாதன் அவர்களின் பூரண ஒத்துழைப்புடன் ஆலயத்தை புனருத்தாரணம் செய்வித்து 1992ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் அவர் ஓய்வு பெறும் நாளில் கும்பாபிஷேகத்தையும் கண்டு கழித்து மன நிறைவடைய இறையருள் கிடைத்தது. அம்மையார் அவர்கள் திடீரென நோய்வாய்ப்பட்டு 2006ஆம் ஆண்டு வைகாசி மாதம் இறைபதம் அடைந்து விட்டார்கள். இவரது நினைவு கல்லூரியில் நிலைத்து நீடித்திருக்கும்.

தொடர்ந்து அதிபராகப் பதவி ஏற்றவர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்கள் (1992-2010) 1992 செப்ரெம்பர் மாதம் சிவன் ஆலய கும்பாபிஷேக தினத்தன்று (Auspicious Time) கடமை ஏற்ற காரணத்தால் 18 ஆண்டு கள் தொடர்ச்சியாக அதிபராகக் கடமை யாற்றிய சாதனை நாயகியாகத் திகழ்கின்றார். பழைய மாணவிகளே தொடர்ச்சியாக அதிபர்களாகக் கடமையாற்றிய பெருமை உடையது இராமநாதன் கல்லூரி. முதன் முதலாகப் பழைய மாணவியல்லாத திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார். இவர் ஆசிரியர்கள் கற்பித்தலில் ஆர்வத்துடன் செயற்படக் கூடிய வகையில் உத்திகளைப் பயன்படுத்தி ஆக்கமும், ஊக்கமும் அளிப்பார். இதனால் கற்றல் நடவடிக்கைகளுடன் மாத்திரமல்லாது இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் கல்லூரி முன்னிலை வகித்தது. எல்லா நிகழ்வுகளிலும் தன்னை முற்று முழுதாக ஈடுபடுத்திக் கருமமாற்றும் காரணத்தால் ஆசிரியர்களும் பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட வழிவகுத்தது. கலைநிகழ்வுகள் விளையாட்டுக்கள் ஆகியவற்றில் மாணவிகள் வெற்றியீட்டி தேசிய மட்டம் வரை சென்று அகில இலங்கை ரீதியாக வெற்றி வாகை சூடி கல்லூரிக்குப் புகழாரம் சேர்த்தனர்.

1995ஆம் ஆண்டில் ஏற்பட்ட பாரிய இடம்பெயர்வின்போது அதிபர் அவர்கள் கல்லூரி வளாகத்தில் தங்கியிருந்த காரணத் தால் சில முக்கியமான ஆவணங்களைத் தற்துணிவுடன் தனிமையில் எடுத்துச் சென்று தென்மராட்சியில் வைத்திருந்து பாதுகாத்த பெருந் தன்மை பாராட்டப்பட வேண்டிய தாகும். இக்காலப் பகுதியில் கல்லூரியிலிருந்த வளங்கள் யாவும் சூறையாடப்பட்டு இருந்தது. மீண்டும் மீளக்குடியமர்ந்தபோது பல இன்னல்களைச் சமாளிக்க வேண்டிய நிலைப்பாடு காணப்பட்டது. இக்காலப் பகுதியில் ஏற்பட்ட சவால்களை எல்லாம் தற்றுணிவுடன் எதிர்கொண்டு வெற்றி கண்டார். G.T.Z. நிறுவனத்தின் உதவியைப் பெற்று சுந்தரி மண்டபத்தைப் புதுப் பொலிவுடன் அமைப்பித்ததுடன் தேவையான மலசலகூட வசதிகளையும் அவர்களின் உதவியுடன் அமைப்பித்து கல்லூரியின் பழைய நிலையைப் படிப்படியாக

அடைய வகை செய்தார். இவற்றுக்கெல்லாம் காரணம் அவரது மும்மொழித் திறன் எனக் கூறின் மிகையாகாது. ஏனெனில் சிறந்த முகாமைத்துவத்தின் ஒரு அம்சம் தொடர் பாடல் திறன் ஆகும். இது ஆனந்தி அவர் களுக்குக் கைவரப்பட்ட கலையாகும். மேல்மாடியில் அமைந்துள்ள ஆலயத்தின் இடிபாடுகளை கலாநிதி தங்கம்மா அப்பாக் குட்டி அம்மையார் அவர்களின் உதவியுடன் திருத்தி செப்பனிடப்பட்டு கும்பாபிஷேகமும் சிறப்பாக நடாத்தப்பட்டு மாணவிகளின் நாளாந்தப் பிரார்த்தனை ஒழுங்காக நடை பெற வகை செய்யப்பட்டது.

இராமநாதன் கல்லூரியில் நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்தும் மாணவிகள் வந்து தங்கியிருந்து கல்வி கற்கக் கூடியதாக பாரிய அளவிலான விடுதிச்சாலை காணப்படுகின்றது. விடுதிச்சாலைக்கென தனித்தனியாக 5 மண்டபங்கள் காணப் படுகின்றன. நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங் களால் விடுதியில் மாணவர்கள் தங்குவதற்கு பெற்றோர் அனுமதிக்காததால் சில காலம் மூட வேண்டிய நிலை ஏற்பட்டது. அதிபர் ஆனந்தி அவர்கள் விடுதியில் தங்கியிருந்த காரணத்தால் பெற்றோர் மாணவிகளை விடுதியில் தங்கி இருந்து கல்வி கற்க அனுமதி அளித்தனர். இதனால் 100க்கு மேற்பட்ட மாணவிகள் விடுதியில் சேர் ந்து ஆசிரியர்களின் பூரண ஒத்துழைப்புடன் சிறப்பாக இயங்கி வருகின்றது.

வலிகாமம் வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த முதலாந்தரக் கல்லூரியான யூனியன் கல்லூரி அத்துடன் ஏனைய 6 பாடசாலைகள் இராமநாதன் கல்லூரி வளாகத்தில் உள்ள கட்டிடங்களின் ஒரு பகுதியில் இணைந்து கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட வாய்ப்பளித் தமை அவரது வந்தாரை வரவேற்கும் பண்புக்கு எடுத்துக்காட்டாக அமைந்தது. அத்துடன் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் இயங்கி வந்த கல்வியியற் கல்லூரியும் 1999-2000 ஆண்டுப் பகுதியில் விரிவுரைகள் நடைபெறுவதற்கும் ஆசிரிய மாணவிகள் விடுதியில் தங்கியிருந்து கற்பதற் கும் வசதிசெய்து கொடுத்தமை இன்றும் அவர் களால் நன்றியுடன் பாராட்டப் படுகின்றது.

90 ஆண்டுகளாக இராமநாதன் கல்லூ ரிச் சமூகத்தினரின் எண்ணத்தில் உதிக்காத, ஒரு பெரும் பணியான இராமநாத வள்ளலின் சிலையினை அமைப்பித்த கைங்கரியத்தால் வரலாற்றுப் பதிவாக ஆனந்தி அவர்களின் நாமம் நிலைத்திருக்கும். "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்ற முதுமொழிக்கிணங்க அவரால் மேற்கொள்ளப்பட்ட அனைத்துச் செயற்பாடுகளும் சிறப்பாக நிலையான பதிவாக இடம்பெற வழி சமைத்தமை அவ ரது செயற்பாடுகளுக்கு சிகரம் வைத்தது போன்றதாகும். 18 ஆண்டுகள் அதிபர் ஆசனத்தை அலங்கரித்த பெருந்தகையின் நினைவு கல்லூரி வரலாற்றில் மறைந்து, மறந்து போக சாத்தியமில்லை.

இடப்பெயர்வின்போது 1995இல் மீளக்குடியமர்ந்தவேளை ஆனந்தி அவர்கள் திருகோண மலை மாவட்டத்தில் அவரது துணைவருடன் தங்கியிருந்த காலப்பகுதியில் குறுகிய காலம் திருமதி சோமேஸ்வரி கைலாயநாதன் தற்காலிக அதிபராகக் கடமையாற்றினார். அத்துடன் திருமதி சுபத்திரா விவேகானந் தனும் அதிபர்

கடமையில் ஈடுபட்டார். 1997ஆம் ஆண்டு தை மாதம் ஆனந்தி அவர்கள் மீண்டும் பதவியைப் பொறுப்பேற்று 2010ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை கடமையாற்றினார். பின்னர் பதவி உயர்வுடன் கல்வித் திணைக் களத்தில் இணைந்து கொண்டு சுயவிருப்பில் பதவியை விட்டு விலகிக் கொண்டார்கள்.

அடுத்து இராமநாதன் கல்லூரியின் கல்வித் தரத்தினை மேம்பாடடையச் செய்த ஆசிரியப் பெருந்தகைகளில் எம் நினைவில் நிறைந்திருப்போர் பற்றிய தகவல்களை எடுத்தியம்ப முற்பட்டுள்ளேன்.

கல்லூரியில் விஞ்ஞானப் பிரிவு ஆசிரியர்களாகக் கடமையாற்றி எம் நினைவில் நிறைந்திருப்போர் திருமதிகள் புஸ்பராணி திடவீரசிங்கம், சாரதா நாகநாதன், குணபாக்கியம் சண்முகலிங்கம், கமலராணி உலகேஸ்வரன், தேவமனோகரி பேரின்பநாதன், மங்களராசேஸ்வரி தர்மசீலன், மேனகா சண்முகநாதன், பேரானந்தம். இவர்கள் ஆற்றிய சேவை பாராட்டுக்குரிய தாகும். திருமதி பரமேஸ்வரி பரராசசிங்கம் அவர்கள் உயர்தர வகுப்பிற்கு தாவரவியல் பாடத்தை சிறப்பாகக் கற்பித்து மாணவிகள் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றுக்கொள்ள ஊக்கமளித்தவர்கள் கல்லூரியில் உப அதிபராகக் கடமையாற்றி பொறுப்பான பணிகளை எதுவித சிரமமுமின்றி நிறைவேற்றி அதிபர்களுக்கு நிர்வாகம் சிறப்பாக நடைபெற உறுதுணை புரிந்தார்கள்.

திருமதி சரோஜினி கல்யாணசுந்தரேசன் அவர்கள் இரசாயனவியல் பாடத்தினை மாணவர் மனங்கொள்ளத்தக்க வகையில் உயர்தர வகுப்பிற்குக் கற்பித்து சிறந்த பெறுபேற்றினைப் பெற்று பல்கலைக்கழகம் செல்ல வழிவகுத்த பெருமைக்குரியவர். எதுவித ஆரவாரமும் இன்றி பொறுப்புக்களை ஆற்றும் பாங்கு அனைவராலும் பாராட்டப்படத்தக்க தாகும். முதலுதவி வகுப்புக்கள் சாரணீயம் ஆகிய பொறுப்புக்களை ஏற்று மாணவிகளுக்கு வழிகாட்டியாகக் கடமையாற்றினார். இவரும் பதவி உயர்வு பெற்றுக் கல்வித் திணைக்களத்திலும் கடமையாற்றியமை பெருமைக்குரியதாகும். திருமதி மீனா ஸ்ரீதரன் விஞ்ஞான பாடத்துடன் வயலின் வாசிப்பதிலும் சிறப்பான பணியாற்றினார். திருமதி சிவசோதி கந்தசாமி ஆசிரியை விஞ்ஞான ஆசிரியரா வார். க. பொ. த. சாதாரணதர மாணவிகளுக்கு பரீட்சைக்கான பின்னூட்டலில் சிறப்பாகப் பணியாற்றியவர். உப அதிபராகவும் விடுதிப் பொறுப்பாசிரியராகவும் பணியாற்றி அதிபர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கினார். பழைய மாணவியான இவர் பாடசாலை நிகழ்வுகள் யாவற்றிலும் தவறாது பங்குபற்றும் பாங்கு பாராட்டத் தக்கதாகும்.

விலங்கியல் பாட ஆசிரியர் திருவாளர் வெ. ஏகாம்பரநாதன், இவரது வகுப்புக்களில் மாணவிகள் ஈடுபாட்டுடன் கற்பதே இவரது கற்பித்தல் திறனுக்கு சான்றாகும். கற்பித்தற் செயற்பாட்டுடன் கல்லூரியின் வளங்களைப் பேணிப்பாதுகாப்பதில் முன்னுதாரணமாகத் திகழ்ந்தார்கள். அதிபர்களுக்கு எதுவித சிரமமும் ஏற்படாத வகையில் தானாகவே அனைத்து செயற்பாடுகளையும் முன்னின்று செயலாற்றும் பாங்கினை உடையவர். பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொருளாளராகக் கடமையாற்றிய காலப் பகுதியில் சீரான

முறையில் கணக்குகளைப் பேணி பூரண ஒத்துழைப்பை வழங்கினார்கள். திருமதி மங்கயற்சரசி திருச்சிற்றம்பலம் அவர்களின் காலப்பகுதியில் இராமநாதேஸ்வரர் கும்பாபி ஷேக நிகழ்வு சிறப்பாக நடைபெற பூரண ஒத்துழைப்பையும் வழங்கியவர் திரு. வெ. ஏகாம்பரநாதன் ஆசிரியர் அவர்கள். இவரது தாயார் புகழ்பூத்த ஆரம்பப்பிரிவு அதிபராகக் கடமையாற்றிய ஆரம்பகால ஆசிரியை திருமதி ருக்குமணி வெற்றிவேல் இவரது நாமம் இராமநாதன் கல்லூரி வரலாற்றில் நிறைந் திருக்கும்.

திருவாளர் இராமதிலகம், திருவாளர் அமிர்தலிங்கம் ஆகிய ஆசிரியர்களும் விஞ்ஞா னப் பிரிவு ஆண் ஆசிரியர்களாவர்.

கணிதபாட ஆசிரியர்கள் வரிசையில் நினைவுப் பதிவுகளாக விளங்குவோர் திருமதி சோமேஸ்வரி கைலாயநாதன். உயர்தர வகுப்புக்களுக்கு கணித பாட ஆசிரியராகவும், உப அதிபராகவும், சில மாதங்கள் அதிபராக வும் கடமையாற்றியவராவார். பழைய மாண வியான இவர் அமைதியின் இருப்பிடமாவார். அனைத்துக் கடமைகளையும் ஆரவாரம் எதுவுமின்றி அமைதியாக ஆனால் திறம்பட செய்து முடிக்கும் ஆற்றல் உடையவர். திருமதி கள் சுபத்திரா யோகலிங்கம், திருவேங்கட வல்லி ஜெயசிங்கம், மங்கையற் கரசி திட வீரசிங்கம், சம்பந்தர், இந்திரா சிதம்பரநாதன்.

திருமதி செல்லம்மா கார்த்திகேசு அவர் கள் இடைநிலைப் பிரிவு மாணவிகளுக்கு கணிதபாட ஆசிரியராகக் கடமையாற்றியவர். அனைத்து மாணவர்களின் ஆற்றல்களையும் கவனத்திற்கொண்டு கற்பிக்கும் பண்புடைய வர். செல்லம்மா அக்கா என அன்பாக அனை வராலும் அழைக்கப்பட்டவர் தற்போது கனடா நாட்டில் வசித்தபோதும் அவரது சிந்தனை முழுவதும் இராமநாதன் கல்லூரி யின் முன்னேற்றத்தில் ஈடுபடுத்தப் பட்டு ள்ளதை அறிய முடிகின்றது. கனடா நாட்டு இராமநாதன் கல்லூரிப் பழைய மாணவி களுக்கு ஊக்கமளித்து கல்லூரி தொடர்பான செயற்பாடுகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளி ப்பதற்கான முன்னேற் பாடுகளில் ஈடுபடு வதாக அறிய முடிகின்றது. இவரும் திருமதி மங்கையற்கரசி திடவீரசிங்கம் அவர்களும் கல்லூரி நினைவுப் பூங்காவில் மலர்ந்திருப்பர்.

கணித பாட ஆசிரியர் திருவாளர் வெ. பாலேந்திரா அவர்கள் க. பொ. த. சாதாரண தர மாணவிகள் பரீட்சையில் சிறந்த அடைவு மட்டத்தைப் பெறக்கூடிய வகையில் முன் னூட்டல் செய்து ஊக்கமளித்தவர். கல்லூரி வரலாற்றில் உப அதிபராகப் பதவி வகித்த முதலாவது ஆண் ஆசிரியர் என்ற பெருமை யைப் பெற்றவர். பாடசாலை நிகழ்வுகளில் தன்னை முற்றுமுழுதாக அர்ப்பணித்து செய லாற்றும் பண்புடையவர். விளை யாட்டுப் போட்டி நிகழ்வுகள் அனைத்தையும் சிறப்பாக ஒழுங்கமைத்து நடாத்துவதில் அர்ப்பணிப் புடன் ஈடுபடும் பாங்கு பாராட்டுக் குரியதாகும்.

கலைத்துறைப் பிரிவுக்குரிய பாடங் களான தமிழ், புவியியல், வரலாறு, இந்துநாகரீ கம், பொருளியல், அரசியல், இந்துசமயம் ஆகிவற்றைக் கற்பித்து அதிக மாணவிகள் இராமநாதன் கல்லூரியிலிருந்து பல்கலைக் கழக அனுமதியைப் பெறுவதற்கு அர்ப்பணிப் பான சேவையைப் புரிந்த ஆசிரியர்கள்

வரிசையில் திருமதிகள். கமலாதேவி அருள் தியாகராசா, புவனேஸ்வரி சண்முகலிங்கம், சரஸ்வதி அப்பாத்துரை, விஜயலக்சுமி சிவசுப்பிர மணியம், சாவித்திரி பரராசசிங்கம், நகுலாம் பிகை ஆனந்தரெத்தினம், சிவபாக் கியம் குமாரசாமி, உமாதேவி நடராசா, நேசராணி ஸ்ரீகாந்தன் ஆகியோர் அடங்குவர். திருமதி அங்கயற்கண்ணி சிவப்பிரகாச பிள்ளையவர்கள் புவியியல் பாடத்தினை மிக நுட்பமான முறையில் கற்பிப்பதில் கைதேர்ந் தவர் இவரது பாடத் தைக் கற்ற மாணவர்கள் பலர் புவியியல் பாடசிறப்புப் பட்டதாரி களாக வெளியேறி இவரது பெயருக்குப் பெருமை சேர்த்துள்ளனர். மேலதிக உப அதிப ராகக் கடமையாற்றி அதிபர்களுக்கு உறு துணையாக ஒத்துழைப்பு வழங்கினார்கள். செல்விகள் யோகேஸ்வரி கனகரெத்தினம், புளொசம் இராசதுரை ஆகியோர் பொருளி யல் பாடத்தினைச் சிறப்பாகக் கற்பித்த ஆசிரி யர்களாவர். செல்விகள் இலட்சுமி சின்னத் தம்பி, சிவயோகவல்லி ஐயாத்துரை ஆகியோர் மாணவிகள் சமயத்துறையில் சிறப்பான பணி யாற்றவும் பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, ஆகியவற்றில் பங்குபற்ற மாணவிக ளுக்கு பயிற்சியளித்து போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியீட்ட ஆக்கமும் ஊக்கமும் அளித்தவர்கள். இவர்களைத் தொடர்ந்து திருமதி வைகுந்தம் கணேச பிள்ளை சமயத் துறை சார்ந்த செயற்பாடுகள் கல்லூரி யில் சிறப்பாக நடைபெற தன்னை முற்று முழுதாக அர்ப்பணித்துச் செயலாற் றினார். பண்டிதை, கலாபூஷணம் ஆகிய இவர் சிறப்புக்கள் வாய்ந்த ஆசிரியர், கல்லூரியில் திருமுறை விழா வருடா வருடம் சிறப்பாக நடைபெறு வதற்கான ஒழுங்குகளை மேற் கொண்டு வருடந்தோறும் தொடர்ந்து நடைபெறுவதற் கான ஒத்துழைப்பினை வழங்கி வருகின்றார் கள். ஓய்வு பெற்ற பின்னரும் கல்லூரித் தொடர்பினை நிலை நிறுத்தி சுறுசுறுப்புட னும், நேர்மையுடனும் பணியாற்றி வருகின் றார்கள். இராமநா தேஸ்வர ஊஞ்சல் பாட் டினை இயற்றி மணவாழக் கோல நிகழ்வில் பாடுவதற்கான ஒரு தெய்வ கைங்கரியத்தை ஏற்படுத்தியுள்ளமை போற்றற் குரியதாகும். இவருடன் இணைந்து திருமதி பத்மாவதி தியாகலிங்கம் அவர்களும் தமிழ், சமய பாடப்பிரிவு கல்லூரியில் சிறந்த அடைவு மட்டத்தை எய்த பூரணமாகத் தன்னை அர்ப்பணித்த ஆசிரியர் உப அதிபரா கக் கடமையாற்றி அதிபர் அவர்களுக்கு பூரண ஆதரவை வழங்கியவர். பொறுப்புடனும், ஆரவாரமெதுவுமின்றி தனது பணியைத் திறம்பட செய்து நிறைவேற்றும் பாங்குடைய ஆசிரியராவார். திருமதி மகாலிங்கம் அவர்க ளும் பண்டிதைத் தரத்தில் உள்ளவர். கவிதை களையாத்து மாணவிகளை கவிதை கட்டுரைப் போட்டிகளுக்குத் தயார் செய்யும் ஆற்றல் வாய்க்கப் பெற்றவர். இவர்களின் நினைவு என்றும் நிலைந்திருக்கும்.

கல்லூரியில் நடேசர் அபிஷேகம் நடை பெறுவது என்றவுடன் நினைவு கூரத்தக்கவர் செல்வி தங்கம்மா ஆறுமுகம் ஆசிரியர். சமய பாடத்தினை மாணவர் மனங்கொள்ளும் வகையில் எல்லா வகுப்புக்களுக்கும் கற்பிக் கும் ஆற்றல் மிக்கவர். விடுதிச்சாலையில் தங்கியிருந்து விடுதிச்சாலையின் அனைத்துக் கடமைகளையும் தன்னலங் கருதாது சிறப்பாக மேற்கொண்டார்கள். மேல் மாடியில் அமைந் துள்ள நடராசர் ஆலய அபிஷேகம், ஏனைய நவராத்திரி, சிவராத்திரி போன்ற சமய நிகழ்வுகளைத் தானே பொறுப்பேற்று சிவாச்

சாரியர்களுக்கு உதவியாகச் செயலாற்றும் பாங்கு அவருக்குக் கைவந்த கலையாக அமைந்தது. விடுதி மாணவர் மனதில் என்றும் நீங்கா நினைவாக தங்கம்மா அக்கா நிறைந் திருப்பார்.

கமலாச்சி சுந்தரலிங்கம் அவர்கள் ஆங்கில பாட ஆசிரியராகக் கடமையாற்றி யதுடன் நிறைந்த சமூக சேவைப் பண்புடைய வர். எல்லோரது நலனிலும் அக்கறை செலுத் தும் போற்றத்தக்க பெண்மணியாவார். "செயற் கரிய செய்வர் பெரியார் என்ற முது மொழிக்கமைய கல்லூரியில் பணியாற்றிய மூத்த ஆசிரியப் பெருந்தகை. ஆலய சிவகாம சுந்தரி சமேத நடராசப் பெருமானின் அபிஷே கத்துக் கென நன்கொடை வழங்கி வருடா வருடம் அவரது பெயரில் சித்திரை மாதம் அபிடேஷகம் நடைபெறுவதற்கு வகை செய்து அமரத்துவம் அடைந்து விட்டார்கள். இவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த் தித்துக்கொண்டு நினை வில் நிறைந்திருப்பர் என்பது மறுக்க முடியாத தாகும்.

இராமநாதன் கல்லூரியில் எனது நியமனத்தின் பின்னர் 1977ஆம் ஆண்டு வர்த்தகப் பிரிவு ஆரம்பிக்கப்பட்து. க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு 1977ஆம் ஆண்டு முதன்முதலாக வர்த்தகப் பாடங்களுக்குத் தோற்றி அதிவிசேட சித்தி பெற்று பெருமை சேர்த்தனர். வர்த்தகப் பிரிவில் கற்ற மாணவி கள் பலர் இன்று உள்நாட்டிலும் வெளிநாட்டி லும் உயர் பதவிகளில் அமர்ந்து கல்லூரிக்குப் பெருமை சேர்க்கின்றனர். தொடர்ந்து திருவாளர்கள் கணேசு, சாந்திநாதன் திருமதி மண்டலநாயகி சுந்தரலிங்கம் வசந்தா சுப்பிரமணியம் ஆகியோர் வர்த்தகப் பிரிவுக் குரிய பாடங்களைக் கற் பித்து முகாமைத் துவம், வர்த்தகம் ஆகிய துறைகளில் பட்டம் பெறுவதற்கு ஊக்கத் துடன் கற்பித்த ஆசிரியர் களாவர். இராம நாதன் கல்லூரியில் வர்த்தகத் துறையை நினைவு கூரத்தக்க ஆசிரியர்களான இவர்கள் என்றும் நீங்கா நினைவில் நிறைந் திருப்பர்.

இரண்டாம் மொழியான ஆங்கிலக் கல்வி கற்பிப்பதில் தம்மை முற்று முழுதாக ஈடுபடுத்தி ஆங்கில அறிவை விருத்தி செய்ய ஊக்கத்துடன் பணிபுரிந்த ஆசிரியர்களாகத் திகழ்பவர்கள். திருமதிகள் சுபத்திரா விவேகா னந்தன், ருக்குமணி கணேசலிங்கம், ஏ. ஓ. கனகசிங்கம், இராசகுலதேவி, சிவகுல சிங்கம், செல்விகள் லலிதா நாகலிங்கம், நாகேஸ்வரி ஆசைப்பிள்ளை, திருவாளர்கள் ஆனந்தம கேசன், நமசிவாயம் இவர்கள் ஆங்கில தினப் போட்டிகளுக்கு மாணவிகளைத் தயார்ப டுத்தி பல பிரிவுகளில் வெற்றியீட்டி கல்லூரி க்குப் பெருமை சேர்க்க உழைத்தவர்களாவர்.

இராமநாதன் கல்லூரியில் மனையியல் பாடப்பிரிவு சிறந்த பங்கினை நீண்ட கால மாக வகித்து வருகின்றது. திருமதிகள் சாவித் திரி நவரெத்தினம், பகவதி தாமோதரம் பிள்ளை ஆகியோர் மிகத் திறமையாக மனையி யற் பிரிவை நெறிப்படுத்தி வந்தனர். பாட சாலையின் விளையாட்டுப் போட்டி, பரி சளிப்பு விழா, மாணவர் மன்ற ஒன்று கூடல் நிகழ்வுகள் யாவற்றுக்கும் சிறப்பான முறையில் சிற்றுண்டி வகைகள் வழங்கி விருந்தினரை உபசரிக்கும் பாங்கு அனைவராலும் பாராட் டப்பட்ட அம்சமாகும். எதுவித பிரச்சினை யும் இன்றி அமைதியாக செயலாற்றி நிறைவு செய்வதில் திருமதி தாமோதரம்பிள்ளை

அவர்களுக்கு நிகர் அவரேதான் என்று கூறின் மிகையாகாது. விருந்துபசார மண்டப அலங் காரமும் மிக்க அவதானத்துடன் அனைவரை யும் கவரத்தக்க முறையில் அழகுபடுத்தி வைப்பதில் கவனம் செலுத்துவார். அனைத்து அதிபர்களுக்கும் உதவியாக சிரமமின்றி கடமையாற்றிய ஆசிரியராவர். இவர்களுக்கு உதவியாக திருமதிகள் மீனா மகாலிங்கம், பத்மநாதன் ரஞ்சினி வரதராசன் ஆகியோர் கருமமாற்றி னார்கள்.

இராமநாதன் கல்லூரி பரந்த நிலப்பரப் பில் அமைக்கப்பட்டது. இங்கு விவசாயம் செய்வதற்கு ஏற்ற வகையில் போதிய நீர்வளம், நிலவளம் நிரம்பியதாக விளங்கியது. விவசாய ஆசிரியர்களாக திருமதிகள் பத்மாவதி, லோஜினி, திருவாளர் செல்வகுமார் ஆகியோர் பணியாற்றினர். திருமதி பத்மினி அருளா னந்தம் அவர்கள் விவசாயப் பட்டதாரியாகக் கடமை யாற்றிய ஆசிரியர் உப அதிபராகவும் விடுதிச் சாலைப் பொறுப்பாளராகவும் பங் காற்றிய ஆசிரியராவார். திருமதி சரோஜினி துரைராசா விவசாய ஆசிரியராகக் கடமை யாற்றினார்.

நடனம், சங்கீதம், சித்திரம் ஆகிய அழகியல் துறைப் பிரிவுக்குரிய ஆசிரியர்கள் வரிசையில் திருவாளர் சுப்பையா அவர்களைத் தொடர்ந்து அவரது புதல்வி திருமதி சாந்தினி சிவனேசன் நடன ஆசிரியராகப் பணியாற்றி னார். இராமநாதன் கல்லூரி மாணவிகளின் நாட்டிய நாடகம், தனி நடனம், குழு நடனம் ஆகியவை அனைத்துப் போட்டிகளிலும் பங்கு பற்றி வெற்றியீட்டி இராமநாதன் கல்லூரிக்கு வெற்றி வாகை சூடிப் பெருமை சேர்த்தது. நடன நிகழ்வுகள் தேசிய மட்டம் வரை வெற்றியீட்ட உழைத்தவர் திருமதி சாந்தினி சிவனேசன் அவர்கள் தொடர்ந்து நந்தினி சிவராசன் அவர்களும் நடனத்துறை ஆசிரிய ராக நீண்டகாலம் பணியாற்றி அத்தனை போட்டிகளிலும் வெற்றியீட்ட உழைத்தவர். நடன நிகழ்வுகள் சிறப்பாக அமைவதற்கு அனுசரணையாக அமைவது அதற்குரிய இசையமைப்பாகும். இராமநாதன் கல்லூரி யின் இசையாசிரியையாக முத்திரை பதித்தவர் செல்வி அம்பிகை திக்கம் செல்லையாபிள்ளை ஆவார். நவ ரசங்களும் ததும்பத்தக்க வகையில் பாடி கேட்போரைக் கிறங்க வைக்கும் பாங்கு அம்பிகை அக்காவுக்கே உரிய தனித்துவ மாகும். தொடர்ந்து அவரது மாணவியான விக்கினேஸ்வரி நரேந்திராவும் அவரின் குருவின் பாணியில் பாடி அனைவரது பாராட் டையும் பெறத் தவறவில்லை. திருமதி ஞானகுமாரி சிவனேசனின் குரல் கணீரென ஒலித்து, அவையோரை இசை மழையால் மூழ்கச் செய்துவிடும் தனித்துவம் வாய்ந்த ஆசிரியை உதவியாக மாதுசிரோன்மணி வேலாயுதர், திருமதி சிவானந்தன் திறமையான கற்பனை வளம் மிக்க சங்கீத ஆசிரியராவார். இவர்கள் யாவரும் அழகியல் துறைக்குப் பெருமை சேர்த்த நந்தா விளக்குகளாவர். திரு. ஆ. கல்யாணசுந்தரேசன் அவர்கள் நாடகத் துறையில் தனித்துவம் வாய்ந்த ஆசிரியரா வார். சித்திர ஆசிரியர்களாக திருமதி தம்பி ரெத்தினம் நீண்டகாலம் கடமையாற்றினார். திருவாளர் சிவப்பிரகாசம் அவர்கள் சிறந்த புகழ்பூத்த ஆசிரியர் இவரது சேவை இராம நாதன் கல்லூரிக்குக் கிடைத்தமை பெரும் பேறாகும். திருமதி புஸ்பநாதன் அவர்களும் கலகலப்பான சுபாவமும் கலை ஆர்வமும் உடையவர்.

உடற்கல்வி சார்ந்த நிகழ்ச்சிகளில் இராமநாதன் கல்லூரி பெரும் புகழ் ஈட்டி வரலாற்றுப் பதிவுகளைப் பதித்துள்ளது.

உடற்பயிற்சி, வலைப்பந்து ஏனைய சுவட்டு நிகழ்ச்சிகளில் போட்டி போட்டு வெற்றி யீட்டி கல்லூரிக்குப் பெருமை சேர்க்கத் தவறுவ தில்லை. இவ் வெற்றிகளுக்கு வித் திட்ட ஆசிரியர்களாக திருமதி கதிரவேலு வைத் தொடர்ந்து திருமதி ருக்குமணி கணேசலிங்கம், திருமதி குமாரசாமி, செல்வி கள் காமினி முருகையா, கிரிஜா கந்தசாமி, திருமதி கோசலை குணபாலசிங்கம் ஆகியோர் சேவை யாற்றினர்.

முறைசாராக் கல்விப் பிரிவும் இராம நாதன் கல்லூரியில் தனியிடம் வகித்தது. விவசாயம் பிரிவுக்கு பொறுப்பாக திரு. சிவராஜன், திரு செல்வகுமார் ஆகியோர் பணியாற்றி பாடசாலை விட்டு விலகிய மாணவர்களைப் பயிற்றுவித்து தொழில் வாய்ப்புப்பெற ஊக்கமளித்தனர். புடவையும் உடை அமைத்தலும், மனையியல் ஆகிய பாடப் பிரிவினை திருமதி பகவதி தாமோதரம் பிள்ளை அவர்கள் மிகச் சிறப் பாகப் பயிற்றுவித்து உள்நாட்டிலும் வெளிநாடு களிலும் வேலை வாய்ப்புக்களைப் பெறக் கூடிய முறையில் மாணவிகளை தயார்ப்படுத்தி உதவினார்கள். சுருக் கெழுத்துத் தட்டெழுத் துப் பாடப் பிரிவினை பாடசாலை விட்டு விலகிய மாணவிகளுக்குக் கற்பித்து அவர் களை அலுவலகங்களில் பணியாற்றக் கூடிய தகுதி நிலையடையச் செய்து அவர் களின் அன்புக்குப் பாத்திரவாளியானேன்.

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்ற முதுமொழிக்கு அமைவாக ஆரம்பப் பிரிவில் ஆண்குழந்தைகளையும் பெண்குழந்தைகளையும் அரவணைத்துக் கல்வி கற்பித்த ஆரம்பப் பிரிவை அலங்கரித்த மூத்த ஆசிரியை திருமதி ருக்குமணி வெற்றி வேற்பிள்ளை ஆவார். இவரிடம் கல்வி கற்று உயர் நிலையில் உள்ள மாணவர்கள் இவரது ஆசிரியத்துவத்தின் சிறப்புப் பற்றி மேடைக ளில் கூறுவதைக் கேட்கும்போது எவ்வளவு தூரம் மாணவர்களின் உள்ளங்களைக் கவர்ந் துள்ளார் என்பதை அறிய முடிகின்றது. தொடர்ந்து திருமதிகள் அமுதவல்லி சண்முக ராசா, தில்லிமலர் பசுபதி, செல்லையா, சிவபாக்கியம், சின்னத்துரை, சிவசோதி துரை சிங்கம், சரஸ்வதி பரராசசிங்கம், கமலேஸ்வரி சின்னத்துரை, சிவஞானசுந்தரம், செல்வி மனோன்மணி வேலுப்பிள்ளை ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களாக விளங்கினர்.

திருமதி குகானந்தநாயகி அப்புத்துரை அவர்கள் ஆரம்பப்பிரிவு பகுதித் தலைவராக அமர்ந்து தன்னிகரற்ற சேவையினை வழங்கி னார். புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தொடர் பயிற்சிகளைக் கொடுத்து ஊக்குவித்து அதிக மாணவர், பரீட்சையில் சித்தியெய்தி கல்லூரிக் குப் பெருமை சேர்க்க வைத்த பெருமைக் குரியவர். ஆரம்பப் பிரிவு விளையாட்டுப் போட்டி, கலை நிகழ்வுகள் ஆகியவற்றை நடாத்தி ஆரம்பப் பிரிவை தனித்துவமான முறையில் இயங்க வைப்பதில் பெரும் பங்காற்றினார். பழைய மாணவியான இவர் இராமநாதன் கல்லூரி பழைய மாணவர் சங்கச் செயலாளராகத் தொடர்ந்து பணி புரிந்து சங்க அங்கத்தவர்கள் எங்கிருந் தாலும் தேடி அறிந்து தொடர்பினை வலு வடையச் செய்த பெருமை இவருக்குரிய தாகும். பாட சாலை நிகழ்வுகளுக்கு பழைய மாணவர் சங்கப் பங்களிப்பையும் வழங்கி ஊக்கமளித்தார். இவரது தந்தையார் இராமநாதன் கல்லூரி அலுவலகக் கடமைகளைப் பொறுப்பேற்று நீண்டகாலம் பணியாற்றிய காரணத்தால் குடும்பப் பாரம்பரியமும் கல்லூரியுடன் இணைந் துள்ளது. இவரின் நாமம் கல்லூரி வரலாற்றில் நீண்டு நிலைத்திருக்கும்.

தையலருக்கே உரிய தையற்பாட ஆசிரி யராக திருமதி இராசேஸ்வரி முருகரெத்தினம்

அவர்கள் பணியாற்றி னார்கள். பாடசாலை யிலிருந்து வெளியேறிய மாணவிகளுக்கென தனியான தையல் வகுப்பு ஒன்று கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. நீண்டகாலமாக செல்வி யோகாம்பிகை அவர்கள் பயிற்சி ஆசிரியராகக் கடமையாற்றி னார். இவரது அயரா முயற்சியும் அமைதி யான பண்பும் மாணவர்கள் மத்தியில் நிரந்தர மான தன்னம் பிக்கையை வளர்க்க உதவியது. சிறந்த முறையில் கண்காட்சிகளை நடாத்தி அனை வரது பாராட்டுக்களையும் பெற்ற ஆசிரிய ராவார்.

இராமநாதன் கல்லூரி நூலகமானது கிடைத்தற்கரிய கலைக் களஞ்சியங்கள், சமயம் சார்ந்த பழமை வாய்ந்த நூல்கள், சமஸ்கிருதம், காப்பியங்கள், வரலாற்று நூல்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்ட ஒரு பெட்டகமாகத் திகழ்ந்தது. பல்கலைக் கழக முதுமாணிப்பட்டப் படிப்பினை மேற் கொள்வோருக்கு வேண்டிய உசாத் துணை நூல்கள் பல இங்கிருந்தன. பலருக்கு அறிவுப் பசியாற்றக் கூடிய நூலகமாக விளங்கிய இராமநாதன் கல்லூரி நூலகமும் அசம்பா விதத்தால் சின்னாபின்னப்படுத்தப் பட்டது. தொடர்ந்து வந்த அதிபர்களால் பெருமுயற் சியின் மத்தியில் ஓரளவு சீரமைக் கப்பட்டு ள்ளது. நூலகர்களாகப் பிற்காலப் பகுதியில் கடமையாற்றியவர்களாக செல்வி கள் கலா ஸ்ரீநிவாசன், மல்லிகா, சந்திரா உமா பசுபதி தங்கராணி, அருந்ததி, வானதி ஆகியோரைத் தொடர்ந்து தற்போது காஞ்சன மாலா உதயகு மாரன் நூலகராகக் கடமை யாற்றி திருப்திக ரமான நிலையில் நூலகம் காட்சியளிக்கின்றது. இவர்களது பணி போற்றற்குரியதாகும்.

கல்லூரியின் ஆரம்ப காலந்தொட்டு நடைபெற்ற வரலாற்றுத் தகவல்களை ஆவணப்படுத்தி பேணிப் பாதுகாக்கும் பொறு ப்பு அலுவலர்களாகக் கடமை புரிவோருக்கே உரியதாகும். கல்லூரியின் வருமானச் செலவி னங்களுக்குரிய கணக் கீட்டுத் தகவல்களும் எழுத்துருவில் பதியப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டியதும் அவர்களுக்கே உரிய கடமையாகும். தற்போது கணினி மூலம் பேணப்படும் தகவல்கள் யாவும் அன்றைய நாளில் மனிதவள செயற் பாடாகவே இருந் தது. இத்தகைய பொறுப்பு வாய்ந்த எழுது வினைஞர்களாகப் பணியாற்றி யோர் திருமதி சாரதா சண்முகசுந்தரம், திருவாளர்கள் பொன்னம்பலம், கனகரெத் தினம், கணேசு, தம்பிராசா. இவர்கள் கல்லூரி அதிபர்களுக்குப் பேருதவியாகப் பொறுப்பு வாய்ந்த கட மையை நேர்மையுடன் ஆற்றிய பெருந்த கைகளாவர்.

திருவாளர் முத்து சுப்பிரமணியம் அலுவலக ஊழியராக நீண்டகாலம் கடமை யாற்றியவர். கல்லூரியில் அதிக மதிப்பு உடையவர். காலம் காலமாகப் பணிபுரிந்த அதிபர்களுக்கு தன்னலங்கருதாச் சேவையாற் றியவர். தேவையான தகவல்களைத் தனது ஞாபகத்தில் வைத்திருந்து வழங்கக் கூடிய ஆற்றல் மிகுந்த ஒரு ஊழியர். நேர்மையும் தன்னம்பிக்கையும் உடைய ஒருவர். "மணி யண்ணை" எனப் பெரியோர் முதல் சிறியோர் வரை அன்புடன் அழைக்கப்பட்டவர். ஓய்வு பெற்ற பின்னரும் கல்லூரி வளங்களைப் பேணிப் பாதுகாக்கும் நோக்கில் கல்லூரி வளாகத்தின் ஒரு பகுதியில் தங்கியிருந்து கல்லூரியிலேயே அவரது ஆத்மா அமரத்து வம் அடைந்தது. என்றும் அவர் நாமம் நிலைத் திருக்கும்.

இராமநாதன் கல்லூரி விடுதிச்சாலை யாழ்ப்பாண மாவட்டத்திலேயே அதிக

மாணவர்களின் வதிவிடக் கல்விக்கு வசதி செய்து பேருதவியாற்றியது. இலங்கையின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் வருகை தந்து விடுதியில் தங்கியிருந்து உயர்கல்வி பெற்றுச் சென்ற மாணவிகள் இன்றும் கல்லூரியை நினைவுகூர்ந்த வண்ணம் உள்ளனர். விடுதிப் பொறுப்பாளராக செல்வி மேனகா கந்தையா நீண்டகாலம் சிறப்பான சேவையாற்றியவர். லீலா இராமசாமி விடுதி மாணவிகளின் உதவியாளராகவும் கல்லூரி அதிபர்களின் உதவியாளராகவும் நீண்டகாலம் பணிபுரிந்து அனைவரது அன்பையும் ஆதரவையும் பெற்றவர். லீலா அக்கா என அன்புடன் அழைக்கப்பட்ட பெண்மணி யாவார். இவரது கணவர் இராமசாமி விடுதி மாணவிகளின் சமையல் பொறுப்பாளராகப் பொறுப்புணர்ச்சியுடன் பணியாற்றியவர். விடுதியில் நீண்டகாலம் பணியாற்றிய இவர்களது நினைவு அனைத்து மாணவிகளினதும் நினைவில் நிறைந்திருக்கும்.

கல்லூரியின் பழைய மாணவிகளில் திருமதி குககுமாரி விஜயரகுநாதன் பொருளியல் பட்டம் பெற்று கல்லூரியில் பொருளியல் ஆசிரியராகச் சிறப்பாகப் பணியாற்றியவர். தற்போது யா/நல்லூர் விக்கினேஸ்வராக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றுவது இராமநாதன் கல்லூரிக்குப் பெருமை சேர்ப்பதாகும். திருமதி சசிகலா சிவநாதன் அவர்களும் இந்துநாகரீக ஆசிரிய ராகக் கடமையாற்றி யாழ்/இந்து மகளிர் கல்லூரியின் உயர்தர வகுப்பு பகுதித் தலை வராகவும் ஸ்ரீகலா ஜெகநாதன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமஸ்கிருதத் துறைத் தலை வராகப் பதவி வகித்துக் கொண்டி ருப்பது இராமநாதன் கல்லூரிக்குப் பெருமையுடைய தாகும். திருமதி விக்கினேஸ்வரி நரேந்திரா சங்கீத ஆசிரியராகக் கடமையாற்றி கல்வி யியற் கல்லூரி விரிவுரையாளராகப் பதவி உயர்வு பெற்று பணியாற்று வதும் பெருமையுடைத்தாகும்.

கால் நூற்றாண்டுகளாக இராமநாதன் கல்லூரியில் கடமையாற்றி கல்லூரியின் வளர்ச்சிகண்டு புளகாங்கிதம் அடைந்த, அடையும் ஒரு ஆசிரியர் என்ற வகையில் சிவகாமசுந்தரரி சமேத நடராசப் பெருமானின் பாதம் பணிந்து, நூற்றாண்டு நிகழ்வுகள் சிறப்புற அமையவும் மேலும் கல்லூரியின் புகழ் மேலோங்கி உலகெங்கும் பரவவும் பிரார்த்திக்கின்றேன்.



# இராமநாதன் கல்லூரியில் எமது குடும்பப் பிணைப்பு ஓர் ஆவணப்பதிவாக அமைகின்றது.

**(இயற்கைக்கு 66 வருடங்களுக்கான செய்தி இது)**


**திருமதி குகானந்தநாயகி அப்புத்துரை**
ஒய்வுபெற்ற கனிஷ்டபிரிவுத்தலைவர்
முன்னாய் பழைய மாணவர் சங்கச் செயலாளர்
யா/இராமநாதன் கல்லூரி.


**முதல் தலைமைக் கணக்காளர் தம்பித்துரை**

*எனது தந்தையார் தம்பித்துரை அவர்கள் இராமநாதன் கல்லூரியின் முதலாவது தலைமைக் கணக்காளர் ஆவார். யாழ்ப்பாணக்கச்சேரியில் லிகிதர் சேவையில் இருந்த அவரை சேர் பொன் இராமநாதன் அவர்களே கச்சேரிக்கு வருகை தந்து கேட்டுக் கொண்ட தற்கிணங்க தனது அரச பதவியை துறந்து இராமநாதன் கல்லூரியில் முதல் கணக்காளராக 1913ஆம் ஆண்டிலிருந்து சேவையைத் தொடர்ந்தார். அப்போது அவருக்கு வயது 19 ஆகும். அவர் தனது சேவையை 50 வருடங்கள் தொடர்ந்து ஆற்றி 1963 இல் ஒய்வு பெற்றார்.*

*எனது தந்தையாரின் தயவில் நானும் எனது சகோதரியும் இங்கு கல்விகற்கும் பேறு பெற்றோம். எமது கல்வி நிறைவு பெற்று கற்ற கல்லூரியிலேயே கற்பிக்கும் வாய்ப் பையும் பெற்றோம். நாம் மட்டுமன்றி எமது குடும்ப வாரிசுகளும் தொடர்ந்து கற்றும் கற்பித்தும் வருகின்றனர். எனது தந்தையாரின் சகோதரி கணித ஆசிரியையாக கடமையாற்றி மாணவியரின் உள்ளத்தில் அழியா இடம் பெற்றவர் அவரது மகள் பாமினி எமது கல்லூரியில் கற்றவர். இன்று மருத்துவ நிபுணராகக் கனடாவிற் பணி புரிகின்றார். எனது மூத்தசகோதரி சாவித்திரி இங்கு கல்வி கற்றுக் கலைப்பட்டதாரியாக இங்கேயே நியமனம் பெற்று, நீண்டகாலம் பணி யாற்றிப் பலநூறு மாணவியரை உருவாக்கி ஒய்வு பெற்றவர். அத்துடன் தனது பெண் பிள்ளைகளையும் எமது கல்லூரியிலேயே கற்கவைத்துப் பட்டதாரி ஆசிரியர்களாக்கிய பெருமைக்குரியவர். மேலும் அவரது மகள் நந்தினி இந்தியாவிலுள்ள அடையாறு இலட்சுமணஐயர் அவர்களிடம் நடனம் பயின்று , கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலா சாலையில் நடனம் சிறப்புப் பயிற்சி பெற்று இங்கு ஆசிரியப் பணியை மேற் கொண்டதோடு யாழ் பல்கலைக்கழகத்தின் வெளி வாரிக் கலைப் பட்டதாரிப் பரீட்சை யிற் சித்திபெற்று, டிப்ளோமாப் பட்டமும் பெற்றார். இன்று இராமநாதன் கல்லூரியில் பிரதி அதிபராகக் கடமை புரிகின்றார் . அவர் ஆசிரியராகக் கடமை யாற்றிய காலத்தில் நடனத்துறையில் தேசிய மட்டப்பரிசில்கள் பல பெற்றுத்தந்து கல்லூரிக்குப் பெருமை சேர்த்தவர் அவரது மகள் எமது கல்லூரி யிற்கற்று இன்று நுண்க லைப்பீடத்தில் கற்றுக் கொண்டிருக்கிறார். எனது மகள் அஜந்தா இராமநாதன் கல்லூரிப் பழைய மாணவி. அவர் மருத்துவத்துறையில் தேர்ச்சி பெற்றவர்.*

இன்று யாழ் போதனா வைத்தியசாலையில் நரம்பியல் நிபுணராகவும்,யாழ் மருத்துவ பீடத்தில் போதனா ஆசிரியராகவும் கடமை யாற்றுகின்றார். எமது குடும்பத்தைப் பல்கலைக்கழகமாக்கிய பெருமை இராம நாதன் கல்லூரியையே சாரும். எமது குடும்ப மும் இராமநாதன் கல்லூரியின் பிணைப்பும் செயற்பாடுகளும் எவ்வாறு இருந்தன என்பது பற்றிய கருத்துக்களுக்கு இக்கட்டுரை ஓர் ஆவணப்பதிவாக அமைகின்றது.

**எனது மாணவப் பருவமும் நான்கண்டு அனுபவித்தமையும். யான் கண்ட அதிபர்களும்.**

யான் கல்லூரி வாழ்வினை ஆரம்பித்த வேளை அதிபராக இருந்தவர் திருமதி N.Pபிள்ளை அவர்கள் திருவாளர் பிள்ளை அவர்கள். நூலகப் பொறுப்பாளராக இருந்தார்.

திருமதி பிள்ளை அவர்களின் பின் திருமதி இரத்தினா நவரட்ணம் அவர்கள் அதிபர் பொறுப்பினை ஏற்று நடாத்தினார். இவர் வித்தியாதிபதியாக பதவி உயர்வு பெற்றுச் செல்ல திருமதி முத்துக்குமார் அவர்களும், தொடர்ந்து செல்வி கனகசபை, செல்வி ப. ஆறுமுகம், திருமதி கா. கணேசன், திருமதி யோ. இராஜரட்ணம் , திருமதி ஞா. சோமசுந்தரம், திருமதி எஸ் குமாரசாமி, திருமதி ம.திருச்சிற்றம்பலம் திருமதி சோ. கைலாசநாதன் , திருமதி ஆ. சிவஞானசுந்தரம் ஆகியோரைத் தொடர்ந்து திருமதி வேணுகா சண்முகரத்தினம் ஆகியோர் அதிபர் பதவி வகித்த பின்னர், தற்போது திருமதி கமலராணி கிருஷ்ணபிள்ளை பொறுப் பேற்றுள்ளார். திருமதி ஆ. சிவஞானசுந்தரம் அதிபராக இருக்கும் வரை கல்லூரித் தொடர்பு அதாவது ஆசிரியராக , பழைய மாணவர் சங்கச் செயலாளராக 19 வருடங்கள் கடமை புரிந்துள்ளேன்.

**எனது நன்றிக்குரிய ஆசிரியர்கள்**

எனது நன்றிக்குரிய ஆசிரியர்களை என்னால் மறக்க முடியாது. அக்காலத்தில் ஆசிரியர்கள் அனைவரும் அக்கா என்ற உறவு முறையில் அழைக்கப்பட்டனர். இந்த வகையில் ருக்குமணி அக்கா, ஆயிலியம் அக்கா, தங்கம்மா அக்கா, மங்கை அக்கா.சிவம் அக்கா, அமுதவல்லி அக்கா, மனோரஞ்சிதம் அக்கா, காயத்தரிஅக்கா, கமலாட்சி அக்கா, சரசு அக்கா, செல்லம்மா அக்கா, புவனேஸ் அக்கா , ஞானாக்கா, நகுலாம்பிகை அக்கா ,சறோஜினி அக்கா என அக்கா பட்டியலிற் பலர் எனது அன்பு க்குரியவர்கள்.

நான் மாணவியாக இருந்த காலத்தில் திருமதி N. P பிள்ளையுடன் அவரது குடும்பத்தினரும் , செல்விகள் ராதா, சுபத்திரா, லீலா மேனன் ஆகியோரும் கணபதி ஐயர், இராமச்சந்திர ஐயர், சுந்தரராஜன் ஐயங்கார். இராமையர் ஆகியோரும் ஆசிரியர் பணிக்காக இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்டனர். இவர்கள் முறையே ஆங்கிலம், கணிதம், தமிழ், இலக்கியம், சமஸ்கிருதம், ஆகிய பாடங்களைச் சிறப்பா கக் கற்பித்தனர். அத்துடன் சைவ சமயம் பண்ணிசை கற்பிப்பதற்காக கொக்கு வில் பண்டிதர் குமார சுவாமிப் பிள்ளை நியமிக் கப்பட்டிருந்தார்.

அதிபர் குடும்பத்தினருக்கு கல்லூரியின் முகப்பில் அமைந்திருந்த இல்லமே வதிவிட மாக இருந்தது. செல்விகள் ராதா முதலியோர்

விடுதி அறைகளிலும், இராமச் சந்திரன் ஐயர், சுந்தர ராஜன் ஐயங்கார் ஆகி யோர் கல்லூரி வளாகத்தில் அமைந்த இல்லங்களிலும், கணபதி ஐயர் இராமையர் குடும்பத்தினர் கல்லூரிக்கு வெளியே வாடகை வீடுகளிலும் தங்கியிருந்து கல்லூரிப் பணி களைத் திறம்பட ஆற்றினர்.

சேர் பொன் இராமநாதன் அவர்கள் நீண்ட மேலங்கியும் தலைப் பாகையும் அணிந்தது. போலவே அவரது மருகர் திரு. சு. நடேசபிள்ளை அவர்களும் , ஆசிரியர்களில் சிலரும் கணக்காளர் தம்பித்துரை, கணக்கு ப்பிள்ளை சுப்பிரமணியம் ஆகியோரும் நீண்ட மேலங்கியும் தலைப்பாகையும் அணிந்தனர்.

**மாட்டுவண்டியில் கல்லூரி வளாகத்தை மேற்பார்வை செய்த சீமாட்டி லீலாவதி அம்மையார்**

சேர் பொன் இராமநாதன் அவர்களின் பின்னர் கல்லூரிக் கடமைகளை நிறை வேற்றியவர் திருமதி லீலாவதி அம்மையார் அவர்கள் அவரது ,இயற்பெயர் "ஹரிசன்" என்பதாகும். அவர் ஒரு ஆங்கில மாதுவாக இருந்தும் சைவத் தமிழ்ப்பண்பாட்டுடன் வாழ்ந்து காட்டிய பெருமைக்குரியவர். இராமநாத வள்ளல் விரும்பிய இலட்சியப் பெண்ணாக வாழ்ந்தவர். நடை, உடை, பாவனை பண்பாடு யாவற்றிலும் இந்து தமிழ்க் கலாசாரம் பேணியவராகக் காணப்பட்டார்.

25 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்த பாரிய கட்டட வசதி கொண்ட இராமநாதன் கல்லூரி வளாகத்தைச் சுற்றிப்பார்ப்பது இலகுவானதன்று. எனவே தான் சீமாட்டி லீலாவதி அம்மையார் மாட்டு வண்டியை உபயோகித்தார். கல்லூரி ஆரம்பமாகிச் சிறிது வேளையில், எருது பூட்டப்பட்ட வண்டியில் லீலாவதி அம்மையார் அமர்ந்தி ருப்பார். மஞ்சள் நிறப் பாவாடை சட்டை, தாவணி, கழுத்தில் உருத்திராக்க மணி மாலையும் அணிந்திருப்பார். பழனி என்பவர் நடந்தபடி மாட்டைச் செலுத்தி வர அம்மை யார் கல்லூரி வளாகத்தைச் சுற்றிப் பார்வை யிட்டு வருவார். அவர் கல்விச்செயற்பாடுகள், கல்லூரிச் சுத்தம் , வளாகத்தின் பிற்புறத் தோற்றம், பணியாளரின் பங்களிப்பு என்ப வற்றை முக்கியமாகப் பார்வையிடுவார். சேர். பொன் இராமநாதன் அவர்களின் பங்க ளாவிற்கு கிழக்கே உள்ள நிலப்பரப்பில் பழத்தோட்டம் இருந்தது. தோடை, மாதுளை, திராட்சை, என்பன பழுத்து தொங்கும் . இவை அவர்களின் சொந்தப் பாவனைக்குப் பயன் பட்டன. இவற்றை விட, பின் புறத்தோட்டத்தில் மரவள்ளி, இராச வள்ளி, கருணைக்கிழங்கு போன்றவையும் செய்கை பண்ணப்பட்டன. இவை விடுதி மாணவிகளின் உணவுக்கு பயன்படுத்தப் பட்டன. இந்த வேலைகளுக்கு பிரத்தியேக த் தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இவற்றைக் கணக்குப்பிள்ளை சுப்பிரமணியம் பொறுப்பாகக் கவனித்தார். இத்தனை செயற்பாடுகளையும் மாட்டுவண்டியில் சுற்றி பார்வையிட்டு வந்த சீமாட்டி அம்மை யாருக்கு உடல் நலம் குன்றிய போது முச்சக் கரவண்டியைப் பயன்படுத்தி பார்வையிட்டு வந்தார். இவ்வண்டியை மரியம்மா எனும் சேவகி தள்ளிச் செல்வார். மேலும் உடல்நிலை இயலாமல் போக உலா வருவதை நிறுத்திக்கொண்டார். தொடர்ந்து மருகர் திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் கல்லூரிச் செயற்பாடுகளை கவனித்து வந்தார்.

**லீலாவதி அம்மையாரின் தாயன்பு**

விடுதிச் சுத்தம், மாணவர்ஒழுங்கு, விடுதிச்சமையலறை, சமைத்த உணவு என்பவற்றில் நேரடியாகக் கவனம் செலுத்துவார். மாணவருக்கு கொடுக்கும் உணவினை தானே சுவைத்துப் பார்த்துக் கொடுப்பார். இது நாளாந்தம் நடக்கும் செயல் . நான் மாணவியாக இருந்த காலம் அது. மரியம்மா தினமும் வாழையிலை மூடிய தட்டுடன் சீமாட்டியின் இருப்பிடத்துக்குச் செல்வார். ஒரு நாள் நானும் வேறுசில மாணவிகளும் மரியம்மாவை வழிமறித்து, தட்டில் கொண்டு செல்வதைப் பற்றி வினவினோம் . மரியம்மா சிரித்துக்கொண்டே விசேடம் ஒன்றும் இல்லை, விடுதி மாணவிகளுக்குக் கொடுக்கும் உணவின் சுவையைச் சீமாட்டி அறிவதற்காக எடுத்துச் செல்கின்றேன் என்றார். அப்பொழுதுதான்அப் பெருமாட்டியின் தாயன்பை முழுமையாக அறிந்து கொண்டேன். ஆச்சரியத்துடனும் மன மகிழ்ச்சியுடனும் திரும்பினேன். அன்றிலிருந்து அம்மையாரை தாயாகவே பார்த்தேன் மதித்தேன்.

**லீலாவதி அம்மையாரின் இறைபதம்**

இற்றைக்கு 60 ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவம் இப்பொழுதும் என்மனதில் பசுமரத்தாணியாகவே இருக்கிறது. தன் இறுதிக் காலத்தில் முற்றும் திறந்த ஞானியாக விளங்கி 1930 இல் அமரத்துவம் அடைந்த தன் குடும்பத்தலைவரின் அடியொற்றி அவர் நினைவாகவே வாழ்ந்தவர் லீலாவதி அம்மையார். இவர் 1953 ஆண்டு தைமாதம் 30ஆம் திகதி குடும்பத்தினரும், கல்லூரிச் சமூகத்தினரும் கலங்கி நிற்க இறைபதம் அடைந்தார்.

அம்மையாரின் பூதவுடல் கல்லூரியின் நாற்சார் முற்றத்தில் அமைந்துள்ள மேடையில் வைக்கப்பட்டது. பெருந்திரளான மக்கள் கூட்டம் அஞ்சலி செலுத்தினார். சேர். பொன் இராமநாதன் அவர்களை அடக்கம் செய்த இடத்திற்கு அருகாமையில் அம்மையாரின் பூதவுடலையும் அடக்கம் செய்வதெனப் பெரியோர்கள் திட்ட மிட்டி ருந்தனர். ஆனால் அரசு அதற்கு மறுத்தது. அன்னாரின் மருகர் இறுதிக்கடன்களை செய்து முடித்தார். சாரி சாரியாக மக்களும் ஆசிரியர்களும், மாணவர்களும் புடைசூழ அம்மையாரின் பூதவுடன் பூவோடை மயானத்தைச் சென்றடைந்தது. சந்தனக் கட்டைகள் அடுக்கப்பட்ட சிதையில் பெருமாட்டியின் பூதவுடல் வைக்கப்பட்டது. அங்கு நடைபெற வேண்டிய இறுதிக் கிரியைகள் யாவும் நிறை வுற்றதும் ஸ்ரீமான் சு. நடேச பிள்ளை அவர்கள் கண்ணீர் மல்கி உள்ளம் உருகி நின்று சிதைக்குத் தீ மூட்டினார். அவரது ஆத்மா காற்றோடு காற்றாகக் கலந்தது. தேவார பாராயணத்துடனும் மலரஞ்சலியுடனும் பூதவுடல் ஊர்வலம் சென்றமையை என்னால் மறக்க இயலாது. இவ்வரிய நிகழ்வில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பம் எனக்கும் என் குடும்பத்தினருக்கும் கிடைத்தமையைப் பெரும்பேறாகக் கருதுகின்றேன். அவுஸ்ரேலியா மண்ணில் பிறந்த அவரது பூதவுடல் யாழ்ப்பாணம் மருதனார்மட மண்ணில் கலந்து விட்டது. அவரது புகழுடல் சைவத்தமிழ் உலகம் உள்ள வரை நிலைத்திருக்கும்.

**எனது மாணவப் பருவத்தில் நான் அனுபவித்தவை - ஸ்ரீமான் நடேசபிள்ளை காலத்தில்**

சீமாட்டி லீலாவதி அம்மையாரின் பின் கல்லூரிப் பொறுப்புக்கள் யாவற்றையும்

ஸ்ரீமான் நடேசபிள்ளை அவர்களே நடாத்தினார். எனது மாணவப்பருவத்தில் நான் கண்டு அனுபவித்தவை பல காலத்திற்கு காலம் சங்கீத வித்துவான்கள் , நடிகர்கள், நாட்டிய மணிகள் யாவரையும் இந்தியா விலிருந்து ஸ்ரீமான் நடேசபிள்ளை வர வழைப்பார்கள். அவர்கள் காலைக்கூட்டம் முடிந்ததும். மேடைக்கு அழைத் துவரப் படுவார்கள். தம்மை அறிமுகம் செய்ததன் பின் தங்கள் திறமைகளை இசைத்தும் , நடித்தும், பேசியும் எம்மை மகிழ்விப்பர். மாலை நேரமானதும் அவர்கள் பரமேஸ்வராக் கல்லூரிக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள். சனசமுத்திரத்தின் மத்தியில் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும். இத்தகைய வாய்ப்புக்களைப் பெற்ற இராமநாதன் கல்லூரி மாணவர்கள் அனைவரும் பாக்கியசாலிகள் என்று மகிழ்வேன்.

**கணக்காளர் அலுவலகமும் எனது தந்தையாரும்.**

கணக்காளர் அலுவலகம் இராமநாதேஸ்வரர் ஆலயத்தின் கிழக்கே அமைந்திருந்தது. உதவிக்கணக்காளர் காலை 8 மணியிலிருந்து மாலை 4 மணிவரை கடமையிலிருப்பார் . தலைமைக்கணக்காளர் பகல் 12 மணியிலிருந்து இரவு 8 மணிவரை பணியாற்றுவார். ஸ்ரீமான் நடேசபிள்ளை அவர்கள் தினமும் மாலை வேளையில் இராமநாதேஸ்வரர் ஆலய தரிசனம் முடிந்த பின் எனது தந்தையாரின் அலுவலகத்திற்கு வருவார். கல்லூரி விடயங்களைக் கலந்துரையாடுவார். கல்விச் செயற்பாடுகள் தவிர்ந்த ஏனைய பொறுப்புக்கள் யாவும் எனது தந்தையாருக்குரியது. விடுதி சம்பந்தமான வை, ஊழியர் தொடர்பானவை, பங்களாவிற்குத் தேவையானவற்றைக் கவனிப்பது யாவையும் என் தந்தையார் கவனிப்பார். அத்துடன் ஆசிரியர்கள், ஊழியர்களின் வேதனம் வழங்கும் பொறுப்பினையும் அவரே செய்து வந்தார்.

**கல்லூரியில் காலைப் பிரார்த்தனை**

கல்லூரியில் காலைப் பிரார் த்தனை நாற்சார் முற்றத்தின் மேற்குப் புறத்தே வில்வ மரத்தின் கீழே நடைபெறுவது வழக்கம். வாரத்திற்கொரு ஆசிரியை இதற்கு பொறுப்பாக இருப்பார். மாணவியரிற் சிறியவர்கள் குதிக்கால் மறையும் நீண்ட நிறப்பாவாடை, மேற்சட்டையும், சற்று வளர் ந்தவர்கள் நீண்ட பாவாடை மேற் சட்டையுடன் அரைத்தாவணியும், உயர்தர வகுப்பு மாணவியர் சேலையும் அணிவர். ஒற்றைப்பின்னலின் நுனியில் குஞ்சம் கட்டி, தலையிற் பூ அல்லது பூமாலை சூடி, திருநீறு அணிந்து கறுப்பு பொட்டும் இட்டுக் கொள்வர். அவர்கள் வகுப்பு , ரீதியாக வரிசை யாக வந்து நிற்கும் காட்சி சைவத் தமிழ்ப் பண்பாட்டை எடுத்தியம்புவதாக இருக்கும். மாணவிகள் அணிவகுத்து நின்றதும், காலைப் பிரார்த் தனைக்குப் பொறுப்பான ஆசிரியை நாற்சார் முற்றத்தின் வடமேற்காக அமைந்துள்ள அதிபர் அலுவலகஞ் சென்று அதிபரை அழைத்து வருவார். அதிபரும் ஆசிரியரும் மேடையில் நின்று பிரார்த்தனையை ஆரம்பித்து வைப்பார். சொற்றுணை வேதியன், பரம்பரஞ் சோதி , சிவபுராணம் இரண்டு அடிகள், உலகெல்லாம் என்ற ஒழுங்கிற்பாடியமை இன்றும் என்நினைவில் உண்டு. வெள்ளிக்கிழமை தோறும் ஸ்ரீமான் சு. நடேசபிள்ளை அவர்களால் ஆக்கப்பட்ட கல்லூரி கீதமும், இரகுபதிராகவா என்ற பாடலும் பாடும் வழக்கம் இருந்தது. சில வேளைகளில் திருமதி சிவகாமசுந்தரி நடேசபிள்ளை அவர்களும் சித்திரப்பாவை போல பிரசன்னமாயிருப்பார்

. பிரார்த்தனை நிறைவுற்றதும் அந்தந்த வரிசை மாண விகளோடு ஆசிரியைகளும் வகுப்ப றைக்குச் சென்று உடனடியாகவே பாடங்க ளைக் கற்பிக்கத் தொடங்கிவிடுவர். மணி அடி த்ததும் தாமதமின்றி அடுத்தபாடம் தொடரும்.

காலை 9.00 மணியிலிருந்து 11 மணி வரை பாடங்கள் நடைபெற்று 10 நிமிட குறுகிய இடைவேளையின் பின் 12.30 மணிவரை கற்றல் கற்பித்தல் தொடரும். மீண்டும் 12.30 மணியிலிருந்து 1.30 வரை மதிய இடைவேளை விடுவார்கள் அந்த ஒரு மணி நேரத்திற்குள் அவசரமாக உணவு உண்டவுடன் சிறகடித்துப் பறக்கும் சிட்டுக் கள் போல மைதானம் நோக்கிப் பறந் தோடுவோம். ஆங்கு கிளித்தட்டு, சக்கரம் பாய்தல், பேணிகளுக்குக் கல்லெறிந்து வீழ்த்துதல் போன்ற விளையாட்டுக்களில் ஈடுபடும் போது மீண்டும் மணியடித்ததும் வகுப்பறை நாடி ஓட்டம் பிடிப்போம். 1.30 - 3.30 வரை பாடங்கள் தொடரும். வகுப்பு முடிந்ததும் மனமின்றி வீடு செல்வோம். இந்த மாணவ வாழ்க்கை மீண்டும் வராதா என எண்ணத்தோன்றுகின்றது.

**விடுதியும் வழிபாட்டொழுங்கும்.**

கல்லூரி புதிதாக ஆரம்பிக்கும் போதே மாணவியர் விடுதிகளில் அனுமதிக் கப்பட்டனர். ஒவ்வோர் இல்லத்துடனும் ஒவ்வொரு தனி அறையும் அமைக்கப்பட்டு ள்ளது. அருந்ததி, சகுந்தலா, யானகி, கண்ணகி, லீலாவதி, தமயந்தி, யசோதரா என்பன இல்லங்கள் ஆகும். அந்தந்த இல்லத் துடன் இணைந்த அறையில் தங்கும் ஆசிரி யைகளே குறித்த இல்லத்திற்குப் பொறுப்பாக இருந்தார்.

விடுதி மாணவர்களை சந்திப்பதற்கு குறித்த ஆட்கள் மட்டுமே அனுமதிக் கப்படுவர். அதுவும் மேற்பார்வையாளர் அனுமதியுடன் தான் சந்திக்க முடியும். கணக்காளர். அலுவலகத்திற்குப் பக்கத்தில் உள்ள அறை இதற்கென ஒதுக்கப் பட்டி ருந்தது. காலை 5 மணிக்கு மணியொலிக்கும். மாணவிகள் துயில் நீங்கி எழுந்து நீராடி, தூய உடை அணிந்து இறைவழிபாட்டிற்குத் தயாராக இருப்பார். பூசகர் ஆலயத்தில் பூசை ஒழுங்குகளை மேற்கொண்ட பின் மணி எழுப் புவார். மாணவிகள் ஒழுங்காக கோயிலுக்குச் செல்வார். செல்ல இயலாதவர்கள் கோயிலின் பக்கத்திலுள்ள வகுப்பறையில் இருந்து அமைதிகாத்து கோவிற்செயற்பாடுகளைச் செவிமடுப்பார். பூசை பக்தி பூர்வமாக நிகழும் . கொத்துமணி ஒலிக்க, ஒற்றைத்தீபம், முத்தீபம், நாகதீபம், பஞ்சதீபம், அடுக்குத் தீபம், கற்பூரதீபம், எனும் ஒழுங்கிற் தீபங்கள் காட்டப்படும். தீபங்களை ஏற்றிப் பூசகரிடம் கொடுக்கும் பணி சமயத் தொண்டர்களு க்குரியது. அராலியூர் தங்கம்மா அக்கா இவர்களை நெறிப் படுத்துவார். மாணவிகள் பண்ணிசை பாடி , பஞ்சாங்க வணக்கம் செய்து விபூதிப் பிரசாதத்தை பூசகரிடம் பெற்றுக் கொள்வார். அதன் பின்னர் வரிசையாக கோயில் மண்டபத்தை சுற்றிப் பாடலிசைத்து வலம் வருவார். ஈற்றில் " ஸ்ரீ நடராஜருக்கு சுபமங்களம்" என்ற பாடலு டன் அன்றைய வழிபாடு நிறைவடையும். தவணை இறுதி நாளன்று காலையில் விசேட பூசை நடைபெறும். விடுதி மாணவிகளுடன் கல்லூரியின் ஏனைய மாணவிகளும் வழிபாட்டில் கலந்து கொள்ளுவார்கள். இறுதி யாக அனைவரும் பாடல் இசைத்தபடி கோயிலை விட்டிறங்கி நான்கு விறாந்

தைகளையும் சுற்றி வந்து மீண்டும் ஆலயம் சென்று இறுதி வணக்கம் செய்து தத்தமது வகுப்பறைகளுக்கு செல்வர். சேர். P. இராம நாதன் அவர்கள் வாரத்தின் 7 நாட்களும் பாடவேண்டிய பாடல்களை ஒழுங்காக நூலுருவாக்கி தந்துள்ளார் . அவ்வாறு கடைப்பிடிக்கப்பட்டும் வந்தது. யானும் சில காலம் விடுதியில் தங்கிப் படித்தமையால் இவற்றை கண்ணூடாக கண்டும். கேட்டும் அனுபவித்திருக்கின்றேன்.

**மாட்டுத்தொழுவம்**

விடுதிச்சமையலறையின் கிழக்குப் புறமாக பெரியதொரு மாட்டுத்தொழுவம் அமைந்திருந்தது. அங்குள்ள நல்லினக் கறவைகளைப் பராமரிக்க பழனி என்பவர் நியமிக்கப்பட்டிருந்தார். பழனி குடும்பத்துடன் தொழுவத்திற்கு அண்மையில் தங்கியிருந்தார். உதவியாட்களுடன் சேர்ந்து கறவைகளைக் குளிப்பாட்டுதல் , தீனி கொடுத்தல், எருசேகரித்தல், பால் எடுத்தல் ஆகியன அவரது நாளாந்த கடமைகளாக இருந்தன. அவரது மனைவி இலக்குமி ஆயி பாலைக் காய்ச்சுதல், தயிர் கடைதல் போன்ற வேலைகளைச் செய்வார்.

**சமையலறையும் சாப்பாட் டொழுங்கும்**

சமையலறை, சாப்பாட்டறை யாவும் சுத்தமாகப் பேணப்பட்டு வந்தன. சாப்பாட்டறையின் நாற்பக்கலும் நிலத்தில் ,நீண்ட பலகைகள் வைக்கப்பட்டிருந்தன. சமையற்கூடப் பொறுப்பாளராக கணபதிப்பிள்ளை நியமிக்கப்ட்டிருந்தார் . அவருக்கு உதவியாளராக சின்னட்டி, முருகையா, ஆறுமுகம், ஆகியோருடன் அவ்வவ் போது இலக்குமி ஆயியும் உதவி புரிந்து வந்தனர். பின்னர் இராமசாமியும், லீலாவும் சேர்ந்து கொண்டனர். இராமநாதன் கல்லூரி மாணவிகள் சிறந்த இல்லத்தரசிகளாக விளங்க வேண்டும் என்பதற்காக காலையில் ஒவ்வொரு இல்ல மாணவிகளும் குழுக் களாகச் சமையறைக்குச் சென்று காய்கறி நறுக்கிக் கொடுப்பர். உணவு வேளையின் போது மணி ஒலிக்கும் மாணவிகள் உணவுத் தட்டுடன் சாப்பாட் டறையிலுள்ள பலகைகளில் அமர்ந்திருப்பார்கள். ஒவ்வொருஇல்ல மாணவிகளுடன், இலக்குமி ஆயியும், மாரி ஆயியும் உணவு பரிமாறுவர். மதிய உணவின் போது தயிர் மோர் என்பனவும் வெள்ளி தோறும் பாயாசமும் வழங்குவார். " அன்னம் பாலிக்கும்" என்ற தேவாரம் பாடி இறைவனை வந்தித்த பின் உணவு உண்பது வழக்கம்.

மாலை வேளையில் போசாக்கான சிற்றுண்டியும் , தேனீரும் கிடைக்கும் அதன்பின்னர் மாணவிகள் மைதானம் சென்று தமக்கு இஷ்டமான விளையாட்டுக்களில் ஈடுபடுவர். இந்த மாணவிகளைக் கண்காணிக்க இராசம்மாக்கா, செல்ல ம்மாக்கா , விசாலாட்சியக்கா ஆகியோர் விடுதி மேற்பார்வையாளராக நியமிக் கப்பட்டிருந்தனர். இவர்கள் மாணவிகளின் இல்லங்களில் தங்குவர். பகல் வேளையில் பிரதான மண்டப வாயிலில் இராசம்மாக்கா அமர்ந்திருப்பார் அவரது பருத்த உடம்பும், காத்திரமான குரலும் இவரது கடமைக்கு உதவியாக இருந்தன . இரண்டு பின்னலுடன் மாணவிகளைக் கண்டாலோ , தோற்றம் கூடியவர்களை பாவாடை சட்டையுடன் கண்டாலோ பொறுக்க மாட்டார். மறு நாள் ஒற்றைப்பின்னலும் பாவாடை தாவணியும் அணிந்து வரச் செய்திடுவார்.

**சேர் பொன் இராமநாதனின் ( சிரார்த்த தினமும்) குருபூசையும் பரிசளிப்பு விழாவும்**

சேர் பொன். இராமநாதன் அவர்களின் சிரார்த்த தினமான கார்த்திகைத் திருவோண நாளன்று திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியிலிருந்து மாணவர்கள் இராமநாத வள்ளலாரின் திருவுருவப் படத்தைத் தாங்கி யவாறு ஊர்வலமாக வந்து எமது கல்லூரி மண்டபத்தில் படத்தினை வைப்பார். அதன் பின்னர் ஆலய வழிபாட்டிற் கலந்து சிறப்பிப்பர். அபிடேக ஆராதனைகள் நிறைவுற்றதும் மகேஸ்வர பூசை நிகழ்வது வழக்கம். விடுதி மாணவிகள் சாப்பாட்டு அறையிலும் வெளி மாணவிகள் விறாந்தை யிலும் அமர்ந்திருக்க பரமேஸ்வராக் கல்லூரி மாணவர்கள் வாழையிலையில் உணவு பரிமாறுவர். இது ஆண்டுக்கொரு நாள் நடைபெறும் மகிழ்ச்சியான நிகழ்வாகும்.

அன்றையதினம் மாலை 3மணிக்கு திருமதி இரத்தினா நவரட்ணம் அவர்கள் தலைமையில் சைவமங்கையர்சபைக் கூட்டம் இடம்பெறுவது வழக்கம் காலப் போக்கில் இச் சபை இயங்காது இருந்தது. மாலை 5 மணி அளவில் நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் ஆரம்பமாகும். நாற்சார் விறாந்தைகள் முற்றம், மேடை என் பன மின் விளக்குகளாலும், பூச்சரங்களாலும் அலங்கரிக்கப்பட்டு கண்ணைக் கவருவன வாக இருக்கும். இவ் விழாவினைச் சிறப்பிக்க பிரதம மந்திரி, மந்திரிமார்கள், கல்விமான் களுடன் டாக்டர் லீலாவதி அம்மையார், திருவாளர் சு. நடேசபிள்ளை அவர்கள், திருமதி சிவகாமசுந்தரி நடேசபிள்ளை அவர்கள், அதிபர் நடேசபிள்ளை அவர்கள் அதிபர், அதிபரின் கணவர் என்போரும் மேடையை அலங்கரிப்பர். உரைகள் நிறை வடைந்ததும். பரிசளிப்பும், தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். சிறுமிகளான எமக்கு இத்தகைய விழா என்றால் குதூகலம் தான். அந்த நாளில் நடைபெற்ற இராமாயண இதிகாசத்தில் இருந்து மேடை யேற்றப்பட்ட காட்சி என்நெஞ்சில் நீங்கா இடம் பெற்றது. குரும்பசிட்டி சத்தியபாமா தசரதன், கே. பரமேஸ்வரி இராமன், டி. கமலாசீதை, பரம் சோதி கோசலை , ஸ்ரீமான் நடேசபிள்ளை அவர்களின் வளர்ப்புமகள் பத்மினி (தேவிப் பிரசாத்) சுமித்திரை ஆக நடித்த உணர்ச்சி மிக்க காட்சிகளும், திக்கம் செல்லையா பிள்ளை யோகாம்பிகையின் "காண வேண் டும்" என்ற நடன நிகழ்வும் பார்வையாளரின் பாராட்டைப்பெற்றன.

**கல்விச் செயற்பாடு**

எமது கல்லூரியின் ஆரம்ப வகுப்பி லிருந்தே கல்விக்கு நல்ல அத்திவாரம் இடப்பட்டது. " கருதரிய சிற்சபையில் ஆனந்தநிர்த்தமிடும் கருணாகர கடவுளே திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய்" என்ற மகுடவாசகத்தை ஆசிரியர்கள் மனத்திருத்தி மாணவர்களை உருவாக்கினார். முதலாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்புவரை ஆண் பிள்ளைகளும் கற்றுவந்தனர். ஓய்வு பெற்ற கோட்டக் கல்வி அதிகாரி திரு. அ. தற்பரா னந்தன், ஓய்வு பெற்ற விஞ்ஞான ஆசிரியர் வெ. ஏகாம்பரநாதன், துர்க்கா தேவி தேவஸ் தானத் தலைவரும் ஓய்வு பெற்ற அதிபருமான கலாநிதி ஆறுதிருமுருகன் ஆகியோர் எமது கல்லூரிப் பழைய மாணவர்கள். உலகெலாம் சென்று உரையாற்றுங் கால் தாம் இராம நாதன் கல்லூரிப் பழையமாணவன் என்பதை யும், தனது ஆரம்பக்கல்விக்கு வித்திட்டது எமது கல்லூரி என்பதையும், பெருமையுடன்

கூறிக்கொள்வது பெருமைக்குரியதாகும். எமது கல்லூரியில் அக்காலத்தில் ஆங்கில மொழி மூலமே கற்பிக்கப்பட்டது. கனிஷ்ட பிரிவு தராதரப்பத்திரப் பரீட்சை, சாதாரண தரப்பத்திரப்பரீட்சை, பல்கலைக்கழக அனு மதிப் பரீட்சை என்பவற்றில் எமது கல்லூரி பெரும்சாதனை படைத்திருந்தது. விஞ்ஞா னத் துறையினரும் கலைத்துறையினரும், அயராது உழைத்து சிறந்த மாணவிகளை உருவாக்கினர். இவை தவிர எமது கல்லூரி யில் தமிழ்மொழி மூல ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியும் நடைபெற்று வந்தது. இவர்க ளின் கற்பித்தற் பயிற்சிக்காக தமிழ்மூலம் பாட சாலையும் ஒரு புறத்தே இயங்கி வந்தது. இதன் தலைமை ஆசிரியையாகருக்கு மணி அக்கா கடமையாற்றினார்.

**பிரத்தியேக வகுப்பு**

மேலும் மாணவிகள் தையற் கலையி லும் தேர்ச்சிபெற வேண்டும் என்ற நோக்கில் பிரத்தியேகமாகத் தையல் வகுப்பு நடை பெற்றது. உரும்பிராய் யோகபகவதி இளைய தம்பி பொறுப்பாசிரியராக இருந்தார். காலந் தோறும் தையற் கண்காட்சியும், உடைகள் விற்பனையும் இடம்பெற்றன. இவருக்குப் பின் இவரது மாணவி யோகாம்பிகை சுப்பிரமணியம் இதனை நடாத்தி வந்தார். நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களால் இவ் வகுப்பு கைவிடப்பட்டது. அத்துடன் சமாதி ஆலயத்தின் அருகே அமைந்துள்ள இல்லத் தில் லண்டன் பரீட்சை வகுப்புக்கள் நடை பெற்று வந்தன. ஸ்ரீமான் சு. நடேசபிள்ளை அவர்கள் அதிபராக இருந்து தமிழ் மொழி யினை ஆங்கில மொழிபெயர்ப்புடன் கற்பி த்து வந்தார். இடைநிலை பரீட்சைக்குத் தோற்றிய ஏழு மாணவிகளும் சித்தி பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்தமை பாரட் டப்பட வேண்டியதாகும். தொடர்ந்து சில காலம் BA வகுப்பு வரை நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

**கல்விச் சுற்றுலா**

யான் மாணவியாக இருந்த காலத் திலிருந்து எம்மைக் கல்விச் சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்வது வழக்கம். அக் காலத் தில் மாணவிகள் பாடசாலைக்குப் பாதணி அணிந்து வருவதில்லை. கல்லூரி மூலம் வெளியே செல்லும் போது மட்டும் அணிந்து கொள்வர். காங்கேசன்துறை சீமெந்தி தொழி ற்சாலை, கீரிமலை நகுலேஸ்வர் ஆலயம், ஆனையிறவு உப்பளம், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, கந்தளாய் சீனித்தொழிற் சாலை, புராதன நகரங்கள், துறைமுகங்கள், சிவனொளிபாதமலை எனச் சென்று கதிர்கா மத்தில் நிறைவடையும். ஆசிரியர்கள் விளக் கமளிக்க நாம் குறிப்பெழுதிக் கொள்வோம் சுற்றுலா நிறைவடைந்து கல்லூரிக்கு மீண் டும் வரும் போது வீடு செல்ல இயலாதவர்க ளுக்கு கல்லூரியில்தங்க வசதியும் உணவும் அளித்து உபசரிப்பது எமது கல்லூரிப் பண்பாடாகும்.

**கல்லூரி நூலகம்**

கணக்காளர் அலுவலகத்திற்கு அருகா மையில் விசாலமான மண்டபத்தில் நூலகம் அமைந்திருந்தது. இதன் பொறுப்பாளராக திரு. N.P பிள்ளை அவர்கள் நியமிக்கப்பட்டி ருந்தார். ஆரம்ப வகுப்பு முதல் பட்டதாரி வகுப்பு வரையான நூல்கள் வகுப்பு ரீதியாக வும், பாடரீதியாகவும் இலக்கமிடப்பட்டு ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்.

வாரம் ஒரு பாடவேளை ஒவ்வொரு வகுப்பினருக்கும் நூலகம் சென்று வாசிப்ப தற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. நூலகத்தில் எந்நேரமும் நிசப்தமாகவே இருக்கும். பெயர் களைப் பதிந்து விட்டு நூல்களை வெளியே எடுத்து சென்று வாசிக்கவும் அனுமதி உண்டு. நூலைத் திருப்பிக் கொடுக்கும் போது நூலகப் பொறுப்பாளர் வினாக்கள் வினவி எம்மைச் சோதிப்பர். மாணவிகள் ஆர்வத்துடன் நூல் நிலையத்தைப் பயன்படுத்தி அறிவை வளர்க்க ஏதுவாயிற்று.

**கல்லூரியின் விழாக்கள்**

மாசி பிறந்து விட்டால் மாணவிகளுக்கு ஒரே மகிழ்ச்சி. சிவராத்திரி அன்று விடுதி மாணவிகள் இல்ல ரீதியான நாடகங்களை மேடை ஏற்றுவர், இது போட்டி நாடகமாக அமையும். பெற்ற புள்ளிகள் இல்ல மெய்வன்மைப் போட்டிக்கு சேர்த்துக் கொள்ளப்படும்.

நவராத்திரிக் காலங்களில் ஒன்பது இரவுகளிலும் ஒவ்வொரு இல்லத்தினரும், வெளிமாணவர்களும், ஆசிரியர்களும் பொறுப்பேற்று பூசை விழாக்களை நடாத்துவார். சரஸ்வதி மண்டபப்படிகள் இருமருங்கும் அழகிய கோலமிட்டு, அகல்விளக்கேற்றி வெள்ளைப் போத்தலில் நிறச்சாய நீர் நிரப்பி மலர்ச்செண்டினை வைத்து அழகு படுத்துவர். வெளி மாணவிகள் தமது பூசைத் தினங்களில் விடுதியில் தங்கி அதிகாலையில் நீராடி திண்பண்டங்கள் தயாரித்து பூசைக்குப் படைப்பர் விஜயதசமியை முன்னிட்டு கோலம், மாலை கட்டுதல் போட்டி பண்ணிசைப் போட்டி என்பன நடாத்துவார். விஜயதசமி விழாவின் போது எல்லோரும் கலாசார உடை அணிந்து வருவர். ஏடு தொடக்கல் வைபவமும் நிகழும் ஈற்றில் கலை நிகழ்வுகளுடனும் விழா நிறைவடைந்து மாணவருக்கு பிரசாதம் வழங்கப்படும்.

**விளையாட்டு**

" மாலை முழுதும் விளையாட்டு" என பாரதியார் கூறிப்போனார் எமது மாணவியரும் மாலை வேளையில் வெகுஉற்சாகமாக விளையாட்டுக்களில் ஈடுபடுவர் மென் பந்து (Batminton) எறிபந்து (throw ball), வளையம் எறிதல், வலைப்பந்து, மேசைப்பந்து (Table tennis) கரம் ஆகிய விளையாட்டு க்களுக்கு விசேட பயிற்சி அளிக்கப்படும். விளையாட்டுத்துறைக்கு செல்வி புனிதவதி கதிரவேலு பொறுப்பாசிரியராக கடமையாற்றினார். அவரது அயராத உழைப்பும், அதிபர், ஆசிரியர், மாணவரின் ஒத்துழைப்பும் விளையாட்டுத் துறையில் அகில இலங்கை ரீதியில் பரிசில்களைத் தொடர்ந்து பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்க்க ஏதுவாயிற்று.

**ஆசிரியர் , மாணவர் தொடர்பு**

எனது காலத்தில் பெரும்பாலான ஆசிரியர்களும் மாணவர்களும் மோட் டார் வண்டியில் வருவார்கள், முன்னதாக வருகை தநத் மாணவிகள் மண்டப வாயிலில் பூக்களுடன் நிற்பார்கள். தமது ஆசிரியர்கள் வாகனத்தில் இருந்து இறங்கியதும் காலை வணக்கம் கூறி , மலர்களை கொடுத்து விட்டு ஆசிரிய ர்களின் பொருட்களை வாங்கிச் சென்று அவர்களின் அறைகளில் வைத்து மகிழ் ச்சியடைவார். பண்டிகைக் காலங்களில்

ஆசிரியர்களுக்கு வாழ்த்து மடல்களைத் தபாலில் அனுப்பி இன்பம் காண்பர்.

**இராமநாதன் கல்லூரியில் எமது ஆசிரியப்பணி**

எனது மாணவ வாழ்வு நிறைவு ற்றதும் 1960ஆம் ஆண்டு தை 18ந் திகதி முதல் ஆசிரியர் நியமனம் இராமநாதன் கல்லூரியிற் கிடைத்தது. பெரும்பாலான ஆசிரியர்கள் என்னைக் கற்பித்தவர்கள் சமமாக அவர்க ளுடன் அமரவோ, பழகவோ அச்சப்படு வேன். எனது சகோதரிமார் இருவர் அங்கு ஆசிரியப்பணியாற்றிக் கொண்டிருந்த படி யால் ஒருவாறு துணிவுடன் கடமையாற்றத் தொடங்கினேன். வயது, அனுபவம், எதை யும் பாராது அருந்ததி இல்லப் பொறுப் பாசிரியையாக என்னை நியமித்து விட்டனர். மாணவவாழ்வில் விளையாட்டு துறையில் எனக்கு ஈடுபாடு இருந்தது. அத்துடன் எடுத்த காரியத்தைத் திறம்படச்செய்ய வேண்டும் என்ற ஆர்வமும் இருந்தது. எனவே விளையாட்டுக்கள் , விநோத உடை, இல்ல அலங்காரம், போன்றவற்றில் முதலி டம் வகிக்கும் எனது இல்லம் , பெரும்பாலும் வெற்றிக்கேடயத்தையும் , சுவீகரித்துக் கொள் ளும் அந்த இனிய நாட்களை எண்ணிப் பூரிக்கின்றேன். சில ஆண்டுகளில் ஆசிரியர் பயிற்சி, வெளி மாவட்ட சேவை என கல்லூரிக்கு அப்பால் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. எனினும் 1985ஆம் ஆண்டு மீண்டும் இராமநாதன் கல்லூரியில் பணியாற்ற வாய்ப்பு கிடைத்தது. அக் காலகட்டத்தில் திருமதி செல்லையா அவர்கள் கனிஷ்ட பிரிவுத் தலைவராக இருந்தார். சில தினங்களில் அவர் ஓய்வு பெற்றதும் திருமதி சி. சின்னத்துரை அப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். குறுகிய காலத்தில் அவரும் ஓய்வு பெறவேண்டிய தாயிற்று. என்னிலும் மூத்தவர்கள் பலர் இருந்தும் வட்டாரக் கல்வி அதிகாரியும், கல்லூரி நிர்வாக மும் அப்பொறுப்பை என்னிடம் ஒப்படைத்து விட்டனர். ஐந்தாம் ஆண்டு புலமப்பரிசில் வகுப்பும் எனக்கு ரியதா யிற்று பரீட்சைக்கான தனியான வகுப் புக்களை நடாத்தியமையால் மாணவர் பெறு பேற்றினை அதிகரிக்க முடிந்தது. எனது மாணவன் லக்மன் சத்தியமூர்த்தி வடமாகா ணத்தின் முதன் மை மாணவ னாகச் சித்தி பெற்று கல்லூ ரிக்குப் பெருமை சேர்த்தான். எனது கால த்தில் கனிஷ்ட பிரிவு மாண வருக்கெனத் தனியான கலைவிழா, விளை யாட்டு என்பன நடாத்தி அனைவருக்கும் கூடிய சந்தர்ப்பம் கிடைக்க வாய்ப்பு அளிக் கப்பட்டது. யான் சேவையிலிருந்து ஓய்வு பெறும் வரை எல்லா மன்றங்களிலும் அங்கம் வகித்து எனது கடமையில் நிறைவு பெற்றேன்.

**அரசு பொறுப்பேற்றலும் கல்லூரியில் ஏற்பட்ட மாற்றங்களும்**

1960இல் ஆசிரியர் நியமனம் பெற்ற எனக்கு 1962இல் எனது கல்லூரியை அரசு பொறுப்பேற்றது ஒரு வரப்பிரசாதம் ஆகும். கல்லூரி விடுதி அதனோடு சம்பந்தப்பட்ட நிர்வாகம், ஆலயங்கள், சேர் பொன் இராம நாதன் அவர்களின் வாசஸ்தலம் யாவும் ஸ்ரீமான் சு. நடேசபிள்ளை அவர்களின் பொறுப்பில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இக் காலகட்டத்தில் எமது மதிப் பிற்கு, அன்பிற்குமுரிய திருமதி சிவகாம சுந்தரி நடேசபிள்ளை 1964இல் இயற்கை எய்தினார். அவரது துணைவர் இறுதிக்

கடன்களை நிறைவேற்றினார். 07. 01. 1965இல் தலைமைக்கணக்காளராக எனது தந்தையார் தம்பித்துரை காலமா னார் . இதனை அறிந்த ஸ்ரீமான். நடேசபிள்ளை அவர்கள் எமது வீட்டுக்கு வருகை தந்து இறுதிக் கிரியையிற் கலந்து கொண்டார். பாராளுமன்றக் கூட்டத்தில் கலந்து கொள் வதற்காகக் கொழும்பு சென்றவர் 15. 01. 1965 இல் இறைபதம் அடைந்து விட்டார். வாழ்வு ஒரு மாயம் என்பது தான் உறுதி.

1985இல் யான் மீண்டும் ஆசிரியர் பணியை மேற்கொண்ட வேளை திருமதி சச்சிதானந்தம் அதிபராக இருந்தார். தொட ர்ந்து திருமதி யோ. இராஜரட்ணம், திருமதி ஞா. சோமசுந்தரம், திருமதி ஸ்ரீமதி குமாரசு வாமி, திருமதி ம. திருச்சிற்றம்பலம் ஆகி யோரை தொடர்ந்து திருமதி ஆ. சிவஞான சுந்தரம், திருமதி சோ. கைலாசநாதன் அவரைத் தொடர்ந்து மாற்றலாகிச் சென்று திரும்பிய திருமதி ஆ. சிவஞானசுந்தரம் ஆகியோரின் காலம் வரை 11 வருட ஆசிரிய சேவை யாற்றியுள்ளேன். திருமதி ம. திருச்சிற் றம்பலம் அவர்களின் சேவைக் காலத்தில் பெற் றோரின் வேண்டு கோளுக்கிணங்க சீருடை மாற்றம் செய்யப்பட்டது. நீளப் பாவாடை, வெள்ளைச் சேலை, அணிய விரும்பாத மாண விகள் வேறு பாடசாலைக்குப் போகாமல் தடுப்பதற்கு இது உத்தியாகக் கைக் கொள் ளப்பட்டது. திருமதி திருச்சிற்றம்பலம் அவர்களின் கால கட்டத்தில் யாழ்ப்பா ணத்தில் ஏற்பட்ட அசம்பாவிதம் காரணமாக வலிவடக்கு பாடசாலைகள் இயங்க முடி யாது போயிற்று. வலிகாம வலய கல்வி பணிமனையினரின் அனுமதியுடன் தெல்லிப் பளை யூனியன் கல்லூரி, தந்தை செல்வா த.க. பா, சீனன் கலட்டி த. க. பாடசாலை, வீமன்காமம் மகா வித்தி யாலயம் அளவெட்டி அருணோதயா கல்லூரி, என 12இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் எமது கல்லூரி யில் இயங்கி வந்தன. அத்துடன் பற்சிகிச்சை நிலையம், முறைசாரா கல்வி நிலையம், கோட்டக்கல்வி அலுவலகம், வலிகாமம் கல்வி வலயமும் கூட இங்கு தான் இயங்கி வந்தன. இத்தனைக்கும் சேர். பொன். இராமநாதன் அவர்களின் 25 ஏக்கர் காணியும் பிரமாண்ட மான கல்லூரிக் கட்டடமும் சங்கப்பலகை போல இடமளித்துக் கொண்டே இருந்தது.

**சிவத்தமிழ்ச் செல்வியும் மங்கையர்க்கரசியும்**

சமாதானம் என்ற பெயரில் இந்தியா வில் இருந்து இலங்கைக்கு வரவழைக்கப் பட்ட அமைதிப்படையினரால் பாதிக்கப் பட்டோர் எண்ணிலடங்கார். விடுதி மாணவி கள் விலகிச் சென்றனர். இந்த வேளையில் தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவி மதிப்பார்ந்த சிவத்தமிழ்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுடன் தேவ ஸ்தான உத்தியோகத்தர்கள், இல்ல மாணவி கள், ஊழியர்கள் அனைவரும் பாதுகாப்பற்று இருந்தனர். அப்போது அதிபராக இருந்த திருமதி ம. திருச்சிற்றம்பலம் அவர்கள் ஆசிரி யர்களுடன் ஆலோசனை செய்த பின் அவர் களை உடனடியாக கல்லூரிக்கு வரவழை த்து, தங்க வசதி செய்து கொடுத்தார். அன்று முதல் கல்லூரியில் கலைமகளும் திருமகளும் ஒன்று சேர மீண்டும் சைவமணம் கமழத் தொடங்கிற்று. மூடப்பட்டிருந்த விடுதிச் சாலையும் துர்க்காபுரம் இல்ல கல்வி கற்ற மாணவிகளுக்காக திறக்கப்பட்டது. அனை த்து மாணவிகளும் எமது கல்லூரி யில் கல்வி கற்க அனுமதிக்கப்பட்டனர். பண்ணிசைப்

போட்டி சங்கீதப்போட்டி, மாலை கட்டுதல், கோலப்போட்டி, கதாபிரசங்கபோட்டி, வில் லுப்பாட்டு யாவற்றிலும் எமது கல்லூரி முதன்மை பெறலாயிற்று. யுத்த அனர்த்தங் களால் எமது கல்லூரியின் சில கட்டடங் களும் இராமநாதேஸ்வரன் ஆலயத்தின் சில பகுதிகளும் சேதமடைந்திருந்தன. அறங் காவலர் திரு. பத்மநாபன் அவர்களின் வேண் டுகோளின்படி திருமதி திருச் சிற்றம்பலம் அவர்கள் சிதைவுகளைத் திருத்த முற்பட் டார். அவ்வேளை முதன்மை ஆசிரியராகக் கடமை யாற்றிக் கொண்டிருந்த திரு. வெ. ஏகாம்பரநாதன் அவர்களின் பூரண ஒத்து ழைப்பு கிடைத் தது. எனவே ஆலயப்பணி சிரம மின்றி ஓரளவு நிறைவடைந்தது. அறங் காவலர், கல்லூரி ஆசிரியர்கள், சிவத் தமிழ்ச் செல்வி அவர்கள், பழைய மாணவர்கள் அனைவரதும் ஒத்து ழைப்புடன் 1992 புரட்டாதி மாதம் 14ஆம் திகதி அன்று திருமதி ம. திருச்சிற்றம்பலம் அவர்கள் குடமுழுக்கு பூசையை நிறைவு செய்த பின் அதிபர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். பெரும் இடர்பாடுகளின் மத்தியில் இத்தகைய கைங்கரியத்தினை நடாத்த ஒத்துழைப்பு நல்கிய அனைவருமே பாராட்டப்பட வேண் டியவர்கள். அன்று முதல் திருக்கல்யாண விழா துர்க்கா தேவி தேவஸ்தானத்தினரின் பொறுப்பில் நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

**திருமதி ஆ. சிவஞானசுந்தரம் அவர்கள் காலம்**

திருமதி ம. திருச்சிற்றம்பலம் அம்மை யாரின் ஓய்வின் பின்னர் திருமதி ஆ. சிவஞான சுந்தரம் அவர்கள் அதிபராகக் கடமையே ற்றார். கல்லூரிக்காக தன்னால் இயன்ற சேவை கள் அனைத்தையும் முழுமனதோடு ஆற்றிவ ந்தார். பலரது வேண்டு கோளுக்கிணங்க பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் அனுச ரணையுடன் சேர் பொன் இராமநாதன் அவர்களின் திருவுருவச் சிலையை 1994இல் கல்லூரி முன்றலின் நிறுவிய பெருமை அதிபர் ஆ. சிவஞானசுந்தரம் அவர்களையே சாரும். 1995இல் நாட்டுச் சூழ்நிலை காரணமாக தென்மராட்சிக்கு செல்ல வேண்டிய நிர்ப் பந்தம் ஏற்பட்டது. துர்க்காதேவி தேவஸ் தானத்தினர் உசன் கந்தசாமி கோயிலடியை வதிவிடமாக்கி கொண்டனர். எமது அதிபரும் ஆசிரியர் களிற் சிலரும் இடம் மாற்றம் பெற்று சென்றனர். குறைந்த எண்ணிக்கையான ஆசிரியர்களுடனும் மாணவர்களுடனும் எமது கல்லூரி சாவகச்சேரி இந்துக் கல்லூரி யில் இயங்கத் தொடங்கியது ஆறு மாத காலமாக நாம் பட்ட அல்லல் சொல்லில் அடங்கா எப்படியோ 1996 இல் மே மாதம் எமது சொந்தப் பாடசாலைக்குத் திரும்பி னோம். எமது கல்லூரியின் நிலைமை சீரற்றிருப்பினும் திருமதி சோ. கைலாசநாதன் அதிபர் பொறுப்பினை ஏற்றுக்கொண்டார் . இவர் அன்றைய வளத்திற்கேற்ப பாடசா லையை செம்மையாக நிர்வகித்தமை பாராட் டத் தக்கது.

துர்க்காதேவி தேவஸ்தானத்தினரும் எமது கல்லூரிக்கே மீண்டும் வந்தனர். 1996 இல் அதிபர் திருமதி கைலா சநாதனும் கனிஷ்டபிரிவுத் தலைவரான நானும் ஏக காலத்தில் ஓய்வு பெற்றோம். ஆயினும் கல் லூரிப் பற்றுக் காரணமாக எவ்வித பலனை யும் எதிர்பாராது தொடர்ந்தும் சேவை யாற்றிக் கொண்டிருந்தேன். அக்காலத்தில் குறித்த ஆண்டுகள் தொண்டராசிரியராக பணிபுரிவோருக்கு அரசினால் நிரந்தர நிய மனம் வழங்கப்பட்டு வந்தது. பிறர்

ஒருவருக்குக் கிடைக்கக் கூடிய வாய்ப்பு என்னால் தடைப்படக்கூடாது என்பதற்காக எனது கல்லூரி ஆசிரியர் பணியை முற்றாக நிறுத்திக் கொண்டேன்.

**கல்லூரி பழைய மாணவர் சங்கமும் நானும்**

ஏற்கனவே எமது முன்னாள் அதிபர் அமரர் திருமதி யோ. இராஜரட்ணம் அவர்கள் நல்லதொரு காரியத்தை ஆரம்பித்து வைத்திருந்தார். செயலற்றிருந்த பழைய மாணவர் சங்கத்திற்கு 1981 இல் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய பெருமைக் குரியவர் ஆவர். ஆண்டு உறுப்பினர்களும் ஆயுள் உறுப்பினர்களும் ஆர்வத்துடன் அங்கம் வகிக்கத் தொடங்கினார். நிதியினைச் சேர்த்து கல்லூரித் தேவைக்கென அன்பளிப்பினைச் செய்வதோடு இராமநாதேஸ்வரர் ஆலய பரிபாலனத்திற்கும் செலவிட ஏதுவாயிற்று. அத்துடன் ஆலயத்தின் அறங் காவலர் திரு. பத்மநாபன் அவ்வப்போது நிதியுதவி வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

அன்றைய நாளில் பழைய மாணவர் சங்கத்தின் செயலாளராக கடமையாற்றி வந்த ஆசிரியை திருமதி சாரதா நாக நாதன் காலமானதை அடுத்து 1985ஆம் ஆண்டு முதல் செயலர் பொறுப்பு என்னைச் சார்ந்தது. 2004 ஆம் ஆண்டு வரை 19 வருடங்கள் தொடர்ச்சியாக இப்ப தவிக்கு நானே தெரிவு செய்யப்பட்டேன். இயன்ற அளவில் அங்கத்தவர்களை சேர்த்துப் பலமான தொரு சங்கமாக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயற்பட்டேன். ஆரம்ப காலத்தில் பழைய மாணவிகளே தலைமைப் பதவிக்கு அமர்த்தப்பட்டனர். எனினும் கல்லூரி அதிபரே தலைவராக வேண்டும் என்ற அரசாங்க நிபந்தனைக்கமைய பழைய மாணவி அல்லாதவரான திருமதி ஆ. சிவஞான சுந்தரம் அவர்கள் பழைய மாணவர் சங்கத் தலைவராக நியமிக்கப்பட்டார். அவர் எமது சங்கத்திற்குப் பூரண ஆதரவு நல்கிவந்தமை குறிப்பிடத்தக்கது. பழைய மாணவர் சங்கத்தில் பெரும்பாலும் நிதிப்பற்றாக்குறை நிலவி வந்தது. எமது சங்கத்தின் அதிஷ்டம் திருமதி மலைமகள் இராமநாதன் ஆயுள் உறுப்பினராகச் சேர்ந்து கொண்டார். அவர் எமது நிலைமைகளைப் புரிந்து கொண்டு கொழும்பு, கனடா, இலண்டன், அவுஸ்திரேலியா ஆகிய பழைய மாணவர் சங்கக் கிளைகளுடன் தொடர்பினை ஏற்படுத்தித் தந்தார். அவர் உருக்கமான கோரிக்கை நிறைந்த கடிதங்களை எழுதி அனுப்ப பெரிதும் உதவினார். கைமேற்பலனாக நிதி சேரத் தொடங்கியது. நாமும் கல்லூரித் தேவைகளுக்கு உதவி செய்யக் கூடியதாக இருந்தது.

கல்லூரிவாசல் பெயர் வளைவுகள், திருமதி, அருணாசலம் மண்டபத்திற்குரிய [illegible]னல் வலையமைப்பு, இரும்புக்கதவு, மேடைதிருத்தம், யாவற்றுக்கும் பெருந் தொகையிலான நிதியினை செல விட்டோம். இன்னும் வலைப்பந்தாட்ட மாணவிகளின் சீருடைகள், நுண்கலை மாணவிகளுக்கான அலங்காரப் பொருட்கள், இல்ல மெய்வன்மைப் போட்டி, ஆசிரியர் தினம், பரிசளிப்பு விழாவிற்கான பரிசுப்பொருட்கள், போட்டிகளுக்கு வெளியே அமைத்து செல்வதற்கான நிதி உதவி மனையியற் கூடத்திற்கான குளிரூட்டி, தொண்டர். ஆசிரியருக்கான வேதனம்

எனப்பல வழிகளிலும் பங்களிப்புச் செய்திருக் கின்றோம். இவை யாவற்றுக்கும் வெளி நாட்டு பழைய மாணவர் சங்க கிளையினர் பேராதரவு நல்கியமையே காரணம் ஆகும். இவர் களுக்கு நாம் நன்றிகூறக் கடமைப் பட்டுள்ளோம். எமது பழைய மாண வியாகிய திருமதி சிவசத்தி அவர்கள் ஆண்டு தோறும் நடைபெறுகின்ற நிறுவுனர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாக்களுக்கான செலவினங்களுக்கு தனது சொந்த நிதியினை பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினூடாக அன்பளிப்பு செய்துள்ளார். இவர் நன்றியுடன் பாராட்டப்பட வேண்டியவர். அத்துடன் பழைய மாணவியான நரம்பியல் நிபுணர் DR. அஜந்தா கேசவராஜ் அவர்களும் வலைப் பந்த ாட்ட மாணவிகளுக்கான நிதியினை ஆண்டு தோறும் வழங்கிவருவது நன்றிக் குரியதாகும்.

**நடராஜர் ஆலய புணருத்தாரணம்**

கனடாப் பழைய மாணவர் சங்கத் தினர் கல்லூரியில் அமைந்துள்ள நடராஜர் ஆலயத்தினை முற்றாகத் திருத்தி அமைத்து சிவகாமசுந்தரி சமேத நடராஜர் சிலையி னைப் பிரதிட்டை செய்து குட முழுக்குப் பூசை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள் ளனர். யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் திருவாளர் சிற்றம்பலம் அவர்கள் பொறுப் பேற்றுள்ளார். அறங்காவலர் உயர் திரு. D. M. சுவாமிநாதன் அவர்களின் அனுசரணையுடன் பணிகள் தொடர்கின்றன. 21. 06. 2012 இல் அதிபராக இருந்த திருமதி வேணுகா சண்மு கரட்ணம் அவர்கள் கும்பாபிடேகத்தை செய்து வைத்தார். தற்போது கல்லூரி முகப் பும் வர்ணம் பூசப்பட்டு புது மெருகுடன் காட்சி தருகிறது.

**திருவாளர் மு. சுப்பிரமணியத்தின் தன்னலமற்ற சேவை**

இத்தகைய கைங்கரியம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் எமது கல்லூரியின் நம்பிக்கைக்கு பாத்திரமான அமரர் மு. சுப்பிரமணியம் அவர்களை மறக்க முடியாது. 1962 ஆம் ஆண்டு முதல் கல்லூரி யின் அதிபர் அலுவலக ஊழியராக இணை ந்து கொண்ட அவர் நேர்மை, கடமை, கண்ணியம் என்பவற்றிலிருந்து இம்மியும் தவறாதவராகச் செயற்பட்டு வந்தார். கல்லூ ரிச் சொத்துக்களைத் தனது சொத்தாகக் கருதி பேணிக்காத்து வந்தார். வங்கி நிதி தொடர் பாக அவர் ஆற்றிய பணி பாராட்டத்தக்கது. நாட்டின் அசம்பாவிதம் காரணமாக இடம் பெயர்ந்து வந்த அவரையும் குடும்பத்தின ரையும் கல்லூரியின் ஒரு புறத்தில் தங்க இடமளிக்கப்பட்டது. இந்த நன்றிக்காக தனது முழு நேரத்தையுமே கல்லூரிக்காக அர்ப்பணித்துக் கொண்டிருந்தார். கல்லூரி நினைவாகவே வாழ்ந்த அவர் அண்மையில் மாரடைப்பால் காலமானார். அவரது சேவை யைக் கல்லூரிச் சமூகம் என்றுமே மறக்க முடியாது.

இவரைப் போலவே நீண்ட காலமாக எமது கல்லூரியில் ஆசிரியராகக் கடமை யாற்றியவர் கலாபூசணம் திருமதி வை. கணே சபிள்ளை அவர்கள். இவர் சைவத் தையும், தமிழையும் திறம் படக்கற்பித்து சேர் பொன் இராமநாதன் அவர்களின் குறிக்கோளை நிறை வேற்ற முயற்சித்தவர். ஓய்வு பெற்ற பின்னரும்

தமிழ்த்தினப் போட்டிக்கான ஆக்கங்களை எழுதிப்பயிற்றுவித்து வருகின்றமை நன்றிக் குரியதாகும். பழைய மாணவர் சங்கத்தின் அங்கத்தவராக இருந்து ஆற்றி வரும் பணி மகத்தானது. திருமதி சரஸ்வதி கனகேஸ்வர னின் அனுசரணையுடன் இராமநாதேஸ்வரர் ஆலயத்தின் திருவூஞ்சல் பாடலை எழுதி நூலுருவாக்கிய பெருமைக்குரியவர்.

**கல்லூரிக் கவின் கலைகள்**

அக் காலத்தில் கலைத்துறையில் அதுவும் நடனத்துறையில் இராமநாதன் கல்லூரி க்கிணையாக எக் கல்வித் கூடத்தினையும் கூற முடியாதிருந்தது . திருவாளர் நல்லையா , திரு. ஏரம்பு சுப்பையா , செல்லப்பன் பவானி, திருமதி சாந்தினி சிவ நேசன், செல்வி மாலினி பரராஜசிங்கம் ஆகியோர் ஒருவர் பின் ஒருவராக நெறிப்படுத்தி வந்தனர். பின்னர் திருமதி நந்தினி சிவராஜன், திருமதி செல்வா ம்பிகை வீரசிங்கம் ஆகியோர் இணைந்து கொண்டனர். இவர்கள் இருவரதும் நெறிப் படுத்தலால் எமது கல்லூரி அகில இலங்கைப் பரிசில்களை பெற்று பெருமையடைந்தது.

இசைத்துறையிலும் எமது கல்லூரி சளைத்ததன்று செல்வி சுபத்திரா, செல்வி கருணாதேவி, திக்கம் யோகாம்பிகை, செல் லையாப்பிள்ளை, திருமதி விக்னேஸ்வரி நரேந்திரா, அன்பரசி, தாரணி, மகாலட்சுமி என இசை ஆசிரியர் பட்டியல் நீண்டு போகும் நடனத் துறைக்கும் இவர்கள் ஆற்றிய பங்க ளிப்பு மகத்தானது. இராமநா தன் கல்லூரி யின் பிணைப்பில் நான் கண்டும், கேட்டும் அனுபவித்தவை இவை என கூறி நிறைவு செய்கின்றேன். நன்றி



# ஆடற் கலையில் கல்லூரியின் சாதனைகள்

**திருமதி நந்தினி சிவராஜன்**
பிரதி அதிபர்
யா/ இராமநாதன் கல்லூரி

மனித உணர்ச்சிகளின் பிரதிபலிப்பின் வடிவமே கலைகளாக உருவெடுக்கின்றன. உணர்ச்சிகள் ரசங்களாகி பாவ, ரசபேதங் களில் இணைந்து வரும்போது அவை மனித மனத்துக்கு இன்பம் பயக்கும் தெய்வீக கலைகளாக உருப்பெறுகின்றன. இக்கலை கள் மனித உள்ளத்தில் பண்பையும், பண் பாட்டையும் வளர்த்து தெய்வீகச் சிந்த னையை மேம்படச் செய்து பக்திக் கலை களாக விளங்குகின்றன. இக்கலை வடிவங் களை ஆற்றுகை செய்கின்றபோது கலை ஞரின் உள்ளார்ந்த ரசனைக் கேற்ப ஆற்றுகை வடிவங்கள் அமைகின்றன். தற்கால ரசிகரின் தன்மைக்கேற்ப பல புதிய நுட்ப முறைகள் பயன்படுத்தப்பட்டு பல நிகழ்வுகள் ஆடப் படுகின்றன. இப் புதிய நுட்ப முறைகள் ரசிகனின் மனநிலையை மெருகுபடுத் துவதுடன் கலையின் தரத்தை யும் உயர்த்த வல்லது.

அழகியலுணர்வு என்பது இளம் பருவத்திலேயே குழந்தைகளின் உள்ளத்தில் பண்படுத்தப்பட வேண்டிய தொன்று. முரண்பாடுகளும் சிக்கலும் நிறைந்த இவ் வுலகில் வாழும் மாந்தர் பிரச்சனைகளினின் றும் தம்மை விடுவிப்பதற்கு நாடும் புகலிட மாக அழகியற்கலைகள் மிளிர்கின்றன.

சித்திரக் கலைஞன் தனது பரிசுத் தமான உணர்ச்சிகளை தனது கைவண்ணத் தினால் அழகான சித்திரம் வரைகின்றான். அவன் வரைந்த ஓவியம் தெய்வீகம் பெறுகின்றது. தேவாம்சம் பொருந்திய ஓவியங்கள் எமக்குப் பக்திப் பரவசத்தினை ஊட்டுகின்றன. கருங்கல்லுப்பாறைகளில் சிற்பக்கலைஞன் உளி கொண்டு செதுக்கி தன் உணர்ச்சி எல்லாவற்றையும் ஒருங்கு திரட்டி தெய்வீகச் சிலை வடிக்கின்றான். இத்தகைய சிலைகள் உயிரோட்டம் பெற்று எம்மைப் பக்திப் பரவசத்தில் மூழ்கச் செய்து தெய்வீக அருளைப் பெறவும் வாய்ப் புத் தருகிறது. ஓவியக் கலையில் வண்ணங்களும், சிற்பக் கலையின் கரணங்களும், இசைக்கலையின் இனிய கானமும் இணைந்து வரும் நாட்டியக் கலை ஆயகலைகள் அறுபத்து நான்கினுள்

## நடனத்துறையில் சாதனைகள்



அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டி - 2008
தனி நடனம் பிரிவு 5 - 1 ஆம் இடம்
செல்வி. சி. சிவதாரணி



அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டி - 2008
தனி நடனம் பிரிவு 2 - 1 ஆம் இடம்
செல்வி. பா. ஜஸ்திகா



மாகாணமட்டம்
நாட்டிய நாடகம் - 1 ஆம் இடம்




மயூரி சத்தியாகரன்



தமிழரசி ஜெயக்குமார்




உஷேனி நரேந்திரா (தனி நடனம்)

மாகாணமட்டம் – 1ஆம் இடம்

சிறந்ததாகும். நாட்டி யத்தின் நவரச பாவங்கள் பின்னிப் பிணைந்து வரும் தெய்வீக சாகித்தியக் கருத்துக் களுடன் உள்ளத்தைப் பரவசப் படுத்தும் இசையுடன், கரண மண்டல பேதங் களுடன் பரிமளிக்கும் போது நாட்டியக் கலையின் புனிதமான தெய்வீக இன்பம் பரிணமிக்கின்றது. இக்கலையின் புனிதத் துவத்தை நுகர்ந்த இறைவனே ஒரு ஆடவல் லானாக மிளிர்கின்றான் என்றால் நாட்டியக் கலையின் புகழுக்கு வேறென்ன வேண்டும்.

நமது இந்து மதப் பண்பாட்டுப் பாரம்பரியத்தில் இக்கலைகள் உலக பந்தத் தினின்று விடுதலை பெற்று மனிதன் இறை வனை அடைவதற்கான மோஷசாதன மாகக் கருதப்படுகின்றன. பண்டைய இந்து மத இலட்சியங்களுக்கு புத்துயிர் அளிப் பது, இராமநாதன் கல்லூரி நிறுவப்பட்ட நோக்கங்களுள் ஒன்றாகும். தமிழ் மொழிப் போதனையும், அழகியல் போதனையும் இந்நோக்கத்திற்குப் பயனுள்ள கருவிகளாய் அமைந்தன.

தமிழும் இசையும் இணைவதனால் ஏற்படும் இன்பத்தினை இக் கல்லூரியில் பயின்ற மாணவியர் பண்டுதொட்டே நுகர்ந்து வந்துள்ளனர். கல்லூரியின் முன் மேல் மாடியில் அமைந்துள்ள நடராஜர் ஆலய வழிபாட்டு மரபில் தமிழிசை முக்கிய இடம் பெறுகின்றது. இராமநாத வள்ளல் அவர்களின் தியான மண்டபமாக அமைந்த நடராஜர் ஆலயத்திலே தமிழ் திருமறை யாம் திருமுறைகள் பண்ணோடு ஓதப்படு கின்றன. தவிர இசையும், தமிழும் கலந்த வடிவமாய் இராமநாதன் கல்லூரியில் மேடையேறிய நாட்டிய நாடகங்கள் அமைந்தன. இது காரணமாக இலங்கை யின் கலை வரலாற்றில் சிறப்பானதோர் இடத்தினை இக்கல்லூரி பெற்றமை குறிப் பிடத்தக்கது.

நாட்டிய நாடகங்கள் இந்துமதப் பண்பாட்டுப் பாரம்பரியத்திற்கு புதியன வல்ல. எனினும் இராமநாதன் கல்லூரியில் இவை புத்துயிர் பெற்றுப் புதுப் பொலி வோடு மேடையேறியமை 1965ஆம் ஆண்டு முதலாகும்.

1965ஆம் ஆண்டு நிறுவுநர் குருபூஜை விழாவின்போது முதன்முதலாக இராமன் கானேகலை மையப் பொருளாகக் கொண்ட கம்பரின் பாக்களினால் நாட்டிய நாடகம் மேடையேற்றப்பட்டது. அருணா சலக் கவிராயரின் இராமநாடகக் கீர்த்தனை யிலிருந்து சில பாடல்களும் இதில் புகுத்தப் பட்டன. கல்லூரி மேடையேற்றிய இரா மாயண நாட்டிய நாடகங்களுக்கெல்லாம் இதுவே முன்னோடியாக மிளிர்ந் தது.

தசரதன் இராமனுக்குப் பட்டா பிஷேகம் செய்ய எண்ணுதல் தொடக்கம் "சீரை சுத்தித் திருமகள் பின் செல மூரி விற்கை இளையவன் முன் செலக்காரை யொத்தவன் வனம் போதல்" ஈரான நிகழ்ச்சிகள் இந் நாட்டிய நாடகத்துள் உள்ளடங்குகின்றன. இது 1966ஆம் ஆண்டு தைமாதம் ஸ்ரீமான் சு.நடேசபிள்ளையவர்களின் ஓராண்டு நினை

வஞ்சலி வைபவத்தில் ஆடப்பட்டது. பின் 1973ஆம் ஆண்டு வைர விழாவின் போதும் இந்நாட்டிய நாடகம் மேடை யேறியது.

"அழகர் மலையில் வீற்றிருக்கும் திருமாலழகர் பவனி வருகையில் அவரி டத்து தன் மனதைப் பறி கொடுக்கிறாள் மோகன வல்லி. அப்போது அங்கு வரும் குறமடந்தை " கங்கை மலைவளர் துங்கவழகர் சுகங்கள் தரவே இணங்கி அவளிடத்தில் வந்து சேருவார்." என்று குறி யுரைக்கின்றாள். இறுதி யில் மோகனவல்லி திருமாலழகர் திருமண வைபவத்தோடு இனிது நிறைவு பெறுகின்றது. இந் நாட்டிய நாடகம் 1966ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நிறுவுநர் சேர். பொன். இராமநாதன் அவர் களின் குருபூஜை தினத் தன்று மேடை யேற்றப்பட்டு வைரவிழாவின் போதும் மேடையேற்றப்பட்டது. 1967ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் நடைபெற்ற பரி சளிப்பு விழாவின் போது "புருஷோத்தமன் பரதன்" எனும் நாட்டிய நாடகம் மேடை யேறியது. இந் நாட்டிய நாடகம் 1969ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நாவலர் விழாவிலும் 5-4-1970 கொழும்பு நவரங்க ஹலா மண்டபத்தில் இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனம் நடாத்திய புத் தாண்டு கலை விழாவிலும் மேடையேற்றப் பட்டு பாராட்டைப் பெற்றது. "செல்வி யோகாம்பிகை திக்கம் செல்லையாவின் (அம்பியாக்கா) இன்னி சைத் திறமையோடு" புருஷோத்தமன் பரதன் " நாட்டிய நாடகம் வெற்றியளித்தது எனப் பத்திரிகை விமர்சனம் சான்று பகர்ந்தது.

1969ஆம் ஆண்டு "கண்ணகி வழக்கு ரைத்தல் "நாட்டிய நாடகம் "ஈழநாடு" பத்திரி கையின் பத்தாவது ஆண்டு விழா வின்போது மேடையேற்றப்பட்டது.

1970ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இராமநாதவள்ளலின் குருபூஜைத் தினத்தில் மாணிக்கவாசக சுவாமிகளின் திருவெம்பா வைப் பாடல்களினால் ஆக்கப்பட்ட "எங்கெ ழில் என் ஞாயிறு எமக்கு" எனும் நாட்டிய நாடகம் ஆடப்பட்டது. 1971ஆம் ஆண்டு ஐக் கிய நாடுகளின் கல்வி விஞ்ஞானக் கலை ஸ்தா பன தின விழாவில்(U.N.E.S.C.O) 1974ஆம் ஆண்டு வீரசிங்கம் மண்டபத்திலும் இந் நாட்டிய நாடகம் மேடையேற்றப்பட்டது.

அசோக வனத்தில் சிறைவைக் கப்பட்டு சீதையை அனுமன் கண்டு சூடா மணி பெறுதலைக் கருவாகக் கொண்ட "கற்பின் திண்மை" எனும் நாட்டிய நாடகம் 1971ஆம் ஆண்டு பரிசளிப்பு விழாவிலும் 1972ஆம் ஆண்டு யாழ் நகரசபை மண்டபத்திலும் நடை பெற்ற சேர். பொன். இராமநாதன் அவர் களைப் பற்றிய திரு. M. வைத்தியலிங்கம் அவர் களின் புத்தக வெளியீட்டு விழாவிலும், வீரசிங்கம் மண்ட பத்தில் நடாத்தப்பட்ட கலாசாரக் காட்சியின்போதும் மேடையேற் றப்பட்டது. 1982ஆம் ஆண்டு அகில இலங் கை நடன நாடகப் போட்டியின் "கற்பின் திண்மை" முதலாம் இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. 1974ஆம் ஆண்டு "தம்பியர் மூவர்" என்ற நாட்டிய நாடகம் வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேற்றப் பட்டன.

இந்நாட்டிய நாடகங்களில் கருத்தா ழமும், மொழியழகும், ஒருங்கிணைந்த இலக் கிய நயமிக்க செய்யுட்கள், நாடகப் பண்புத் தன்மையும் நன்கு மெருகூட்டி சபையோருக்கு இன்பத்தை ஊட்டி நின்றன. இந்நாட்டிய நாடகங்களை எழுதி நெறிப்படுத்தியவர் திரு. சோமசுந்தரம் அவர்கள். தமிழ், ஆங்கில நாடகங்களை எழுதி மேடையேற்றிய அவர் அனுபவமும், நாடக உத்திகளை ஏற்ற வகையில் கையாளும் திறனும் நாட்டிய நாட கங்களை அவர் நெறிப்படுத்துவதில் பெரும் பங்கு வகித்தன.

1965ஆம் - 1975ஆம் ஆண்டு காலப் பகுதியில் இராமநாதன் கல்லூரியில் நான் கல்வி கற்கின்ற போது ஆடப்பட்ட நாட்டிய நாடகங்கள் இன்றும் நினைவில் உலா வருகின்றன. இளம் பருவத்திலே என்னைப் போன்ற மாணவிகள் மாலை வேளைகளில், சனி, ஞாயிறு தினங்களிலும் நடன ஆசிரியராக இருந்த கீதாஞ்சலி நல்லையா அவர்களிடம் நடனம் பயின்றோம். தற்போது அமைந்துள்ள விவசாயப் பகுதியில் அமைக்கப்பட்ட வகுப்புக்களில் நடன வகுப்புக்கள் நடை பெற்றன. கல்லூரிக் கீதம், நாட்டிய நாட கங்கள் எமக்குப் பயிற்றுவித்து மேடை யேற்றிய பெருமை திரு. கீதாஞ்சலி நலையா அவர்களையே சாரும்

கீதாஞ்சலி நல்லையா அவர்கள் சேவையிலிருந்து இளைப்பாறிய பின் இராமநாதன் கல்லூரியின் நடன ஆசிரி யராக கடமையேற்ற "கலைச் செல்வன்" ஏரம்பு சுப்பையா அவர்கள் கலைப் பணியைத் தொடர்ந்தார். இவர் நெறியாள்கை செய்த நாட்டிய நாடகங்கள் அனைத்திலும் எனக்கு ஆடிய பெருமையுண்டு.

1) கற்பின் திண்மை (திரிசடை)
2) குற்றாலக் குறவஞ்சி (குறத்தி)
3) கைகேயி சூழ்ச்சிப் படலம் (கைகேயி)
4) சூடாமணி (திரிசடை, அரக்கி)
5) கீதோப தேசம் (அர்ச்சுனன்)
6) திருவெம்பாவை (பெண்கள்)
7) தம்பியர் மூவர் (இலட்சுமணன்)

ஆகிய நாட்டிய நாடகங்களாகும். இந்நாட்டிய நாடகங்களை சுப்பையா மாஸ்ரர் அவர்கள் பழக்குகின்றபோது; தான் நினைத்த படி நாம் ஆடாவிட்டால் எமக்குத் தகுந்த தண்டனை வழங்குவார். நாம் ஆட வேண்டிய பகுதியை பல தடவை சொல்லிச் சொல்லி ஆட வேண்டும் என்பது. இதனால் எமக்கு எமது ஆடுகின்ற பகுதி மறந்து விடாமல் நினைவில் நிற்கும். இது தவிர கல்லூரி கீதத்திற்கு நானும், செல்வி வசந்தா தேவராஜா, கௌரி சித்திரவேல் ஆகியோருக்கு திரு. சுப்பையா அவர்கள் நாட்டியம் அமைத்துப் பழக்கி பரிசளிப்பு விழாவில் ஆடியது இன்றும் ஞாபகத்திலுள்ளது இராமநாதன் கல்லூரி யின் முன்பகுதியில் அமைந்துள்ள நடேசர் ஆலயத்தில் பூஜைகள் நடைபெற்று அங்கி ருந்து விருந்தினர்கள் அழைத்து வரும் போது சரஸ்வதியின் முன்னுள்ள படிகளி னின்றும் இரு பகுதிகளாக மாணவிகள் கைகளில் மாலைகள், பன்னீர், சந்தணம், குங்குமம், தீபம் போன்றவற்றைக் கைகளில் ஏந்திய வண்ணம்

படிகளால் இறங்கி ஆடி ஆடி வரவேற்று நடனத்தை செய்தமை இராமநாதன் கல்லூரியின் பாரம்பரியங் களாகும்.

கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையா அவர்களைத் தொடர்ந்து அவருடைய மகள் திருமதி சாந்தினி சிவநேசன் தரமான நாட்டிய நாடகங்களை மேடையேற் றினார். அகில இலங்கைப் பரிசு பெற்ற "இராகவ தூதன் " நாட்டிய நாடகமும், ருக்குமணி திருமணம், ஆசாரியர் மகளும் அசுரராஜன் மகளும், கௌரி விரத மகிமை என்னும் நாட்டிய நாடகங்களும் இவரால் தயாராக்கப் பட்டவை.

இடைக்காலத்தில் செல்வி. கிருசாந்தி சேனாதிராஜா, செல்வி மேனகா சிவசம்பு, செல்வி நந்தினி பரராஜசிங்கம் ஆகியோர் நாட்டிய நாடகங்களைத் தயா ரித்தும் பங்கு பற்றியும் தமது பங்களிப்பைச் செய்துள்ளனர். 1973ஆம் ஆண்டு நடை பெற்ற வைரவிழாவில் பல நாட்டிய நாட கங்கள் மேடையேறின.

நாட்டிய நாடகங்களில் சந்தர்ப் பத்திற்கேற்ற வகையில் சேர்க்கப்பட்ட மக்கள் நடனங்கள் பொது மக்கள் மனதை மிகவும் கவர்ந்தன. உதாரணம் கும்மி யடித்தல், வேட்டுவ நடனம், அரக்கியர் நடனம், குறவன் குறத்தி நடனம் என்ப வற்றைக் குறிப்பிடலாம்.

திருமதி சாந்தினி சிவநேசன் அவர்க ளுடைய கலைப்பணியைத் தொடர்ந்து 1991ஆம் ஆண்டு இராமநாதன் கல்லூரி யின் நடன ஆசிரியராக திருமதி நந்தினி சிவராஜன், செல்வி நந்தினி பரராஜசிங்கம் அவர்கள் நடனப் பணியைத் தொடர்ந்தார். பள்ளிப் பருவத்திலேயே நாம் ஆடிய நாட்டிய நாடகங்கள் எமது கலைப் பணிக் குத் தூண்டு கோலாக அமைந்தன. இசையி லும், நாட்டியத்திலும் எமது ரசனை வளர்த் தற்கும், தமிழ் இலக்கிய சிறப்பினை நயத் தற்கும் எமது பள்ளிப் பருவ அனுபவங்கள் உதவின.

அகில இலங்கைத் தமிழ் மொழித் திறன் போட்டியின் இராமநாதன் கல்லூரி எனது நெறியாள்கையில் நாட்டிய நாடக த்தில் பெற்ற வெற்றிகள் பின்வரு மாறு: -

| | ஆண்டு | நிகழ்வு | நிலை |
|---|---|---|---|
| 1) | 1992 | சத்தியவான் சாவித்திரி | மாவட்டம் 1ஆம் இடம் |
| 2) | 1994 | சீதாபஹரணம் | மாவட்டம் 1ஆம் இடம் |
| 3) | 1995 | கணையாழி | மாவட்டம் 1ஆம் இடம் |
| 4) | 1997 | அரிச்சந்திர மயானகாண்டகம் | மாகாணம் 1ஆம் இடம் |
| 5) | 1998 | கண்ணகி | மாவட்டம் 1ஆம் இடம் |
| 6) | 1999 | நாமார்க்கும் குடியல்லோம் | மாவட்டம் 2ஆம் இடம் |
| 7) | 2001 | கற்பின் பெருமை | மாகாணம் 2ஆம் இடம் |
| 8) | 2002 | சாந்தி சமாதானம் | அகில இலங்கை தேசிய விருது பெற்றது 1ஆம் இடம் |

| | | | |
|---|---|---|---|
| 9) | 2003 | வந்ததே வசந்தம் | அகில இலங்கை தேசிய விருது பெற்றது 1ஆம் இடம் |
| 10) | 2004 | பாஞ்சாலி சபதம் | வலய மட்டம் 2ஆம் இடம் |
| 11) | 2005 | பாதுகா பட்டாபிஷேகம் | மாவட்டம் 2ஆம் இடம் |
| 12) | 2006 | பஞ்சபூதங்களும் மனித வாழ்க்கையும் | தேசிய விருது 2ஆம் இடம் |
| 13) | 2007 | கங்குல் பகல் படவந்தான் | மாகாணம் 2ஆம் இடம் |
| 14) | 2008 | 2ஆம் சுயம் வரம் | வலயம் 2ஆம் இடம் |
| 15) | 2009 | ஆணவமும் அகங்காரமும் | கோட்டம் 2ஆம் இடம் |

இவற்றை விட தமிழ் விழாக்களிலும், இந்து மன்ற விழாக்களிலும், பழைய மாணவர் சங்க நிதி சேகரிப்பு நிகழ்விற்காகவும் பல நாட்டிய நாடகங்கள் எனது நெறியாள் கையில் மேடையேறின.

1) திருஞானசம்பந்தர்
2) மார்க்கண்டேயர்
3) ஸதி
4) சீதா கல்யாணம்

ஆகியவற்றை மேடையேற்றப் பட்டன. மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட காவியகதா நாட்டிய நாடகப் போட்டி எமது பாட சாலை 1ஆம் இடத்தைப் பெற்றது. கலாநிதி மனோன்மணி சண்முக தாஸ் அவர்களால் எழுதப்பட்ட "வேள்வி காத்த வீரன்" எனும் நாட்டிய நாடகம் ஒரு மணித்தியால நிகழ்வாக என்னால் நெறி யாள்கை செய்யப் பட்டு மேடையேற்றப் பட்டது. பல பாடசாலை மாணவிகள் இந்நாட்டிய நாடகத்தில் பங்குபற்றிப் பாரா ட்டுதலையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

நாட்டிய நாடகங்களின் வெற்றிக்கு பின்னணியாக அமைவது இசை, வாத்தியங் களாகும்.எமது நாட்டிய நாடகப் பிரதி களை எழுதி எமது வெற்றிக்கு உதவிய வர்களை நாம் நோக்க வேண்டும். பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர், திருமதி. மனோன்மணி சண்முகதாஸ், திருமதி வைகுந்தம் கணேஷ பிள்ளை ஆகியோராவர். மொழியழகும் கருத்தாழ மும் ஒருங்கிணைந்த இலக்கிய நயம் மிக்க செய்யுட்கள், நாடகப் பண்புகள் நிறைந்த பாடல்களை எழுதி நாட்டிய நாடகப் பிரதி யாக எமக்கு அளித்த போது, இசையும் அபிநயமும் அவற்றை மேலும் மெருகூட்டி செய்யுட்களின் சுவையை அதிகரிக்கச் செய்து அலையோர்க்கு இன்பத்தை ஊட்டி நின்றன.

இவற்றோடு நாட்டிய நாடகங்களுக் குரிய பாடல்களைப் பாடியவர்களை இங்கே

குறிப்பிட வேண்டும். செல்வி திக்கம் செல்லையாபிள்ளை (அம்பியக்கா), திருமதி விக்கினேஸ்வரி நரேந்திரா, செல்வி மாது சிரோண்மணி வேலாயுதர், திருமதி ஞானகுமாரி சிவநேசன், திருமதி, திலகவதி பொன்குணரத்தினம், திருமதி அன்பரசி குகதாசன், திருமதி தாரணி சிவகரன், திரு. தவசீலன் ஆகியோர் தமது இன்னிசையால் நவரச பாவங்களை தமது குரலினூடாக வெளிப்படுத்தி நாட்டிய நாடக வெற்றிக்கு எமக்கு உறுதுணையாக இருந்தமை குறிப்பிட த்தக்கது. வயலின் இசை வழங்கும் திரு. அம்பலவாணர் ஜெயராமன் தனது மதுரமான இசையால் நாட்டிய நாடகர் காட்சி அமைப் புக்களைத் துல்லியமாக வெளிப்படுத்துவார். திரு. S. மகேந்திரன் அவர்கள் மிருதங்கத்திலே தனது கைவண் ணத்தால் ஒலி எழுப்பி சபையை அதிர வைப்பார். அவரைத் தொடர்ந்து அவரது மகன் லோகேந்திரன் மகேந்திரன் தனது கற்பனைத் திறனை நாட்டிய நாடகத்தில் புகுத்தி சபையோர் மெய் மறக்கச் செய்வது அவரது தனித்திறமை யாகும். திரு. நடேசு செல்வச்சந்திரன் தனது ஹார்மோனிய இசையாலும், கீபோட் இசையாலும் காட் சிகளை நகர்த்திச் செல்வார். பல ஒலிகளை எழுப்பி காட்சிகளைத் துல்லியமாக வெளிப் படுத்தும் திறனினால் நாட்டிய நாடகம் வெற்றி பெறுகின்றது. நாட்டிய நாடக வெற்றிக்கு எல்லோருடைய பங்களிப்பும் அவசியமானது.

ஆரம்பத்திலே எமது பாடசாலையில் உள்ள ஆசிரியர்களே பின்னணியாக அமைந் தார்கள் நாட்டிய நாடக நிகழ்விற்கும், நடன நிகழ்விற்கும் எமது விஞ்ஞான ஆசிரியர் திருமதி மீனலோசனி ஸ்ரீதரன் அவர்கள் மிருதங் கத்தையும் திருமதி ஜெபநாயகம் அவர்கள் வயலின் இசையை யும் இசைத்து பின்னணி இசைவாத்தியக் குழு பெண்களாக அமைந்தி ருந்ததை நாம் மறக்க முடியாது. திருமதி மாலினி உலகநாதன் அவர்களும் எமது நடன நிகழ்விற்கு வயலின் இசையையும், செல்வி கிளேயரா அவர்கள் வயலின் வாத்தியத்தையும் எமது நடன நிகழ்விற்கு வாசித்து உதவியதை நாம் மறந்து விட முடியாது.

நாட்டிய நாடக வெற்றிக்கு மேற்கூறப் பட்ட விடயங்கள் சிறப்பாக அமைந்தால் நாட் டிய நாடகம் வெற்றி பெறுவது நிச்சயம்.

மேலும் குழு நடனங்களும் தனி நடனங்களும் அகில இலங்கைத் தமிழ்த் திறன் போட்டியில் 1ஆம் இடத்தைப் பெற் றுத் தேசிய விருதைப் பெற்றன.

1) செல்வி அபிராமி பாஸ்கரன்தனி நடனம் பிரிவு 5 - 1ஆம் இடம்
2) செல்வி சிவதாரணி சிவராஜன் தனிநடனம் பிரிவு 5 - 1ஆம் இடம்
3) செல்வி ஜஸ்திக்கா பாலக்கிருஷ்ணன் தனிநடனம் பிரிவு 2 - 1ஆம் இடம்

மேலும் திருமதி செல்வாம்பிகை வீரசிங்கம் அவர்கள் எமது பாடசாலையில் நடன ஆசிரியராகக் கடமையேற்று தனி

நடனம், குழுநடனங்களையும், நாட்டிய நாடகங்களையும் மேடையேற்றியுள்ளார்.

1) சூரசம்ஹாரம் நாட்டிய நாடகம் - 2010ஆம் ஆண்டு கோட்டம் - 2ஆம் இடம்
2) கண்ணகி நாட்டிய நாடகம் - 2011ஆம் ஆண்டு கோட்டம் - 2ஆம் இடம்

மேற் குறிப்பிட்ட நாட்டிய நாடகங் களையும், குழு நடனங்களையும், தனி நடனங்களையும் எமது கல்லூரி மாணவிகள் கண்டும், கேட்டும், ஆடியும் அனுபவித்த தன்மூலம் எய்திய நற்பலன்கள் பல. இதி காச சமய மரபுகளை நாம் அறிதற்கும், நாடக வடிவங்கள் வாயிலாக இசையிலும், நாட்டியத்திலும் எமது ரசனையை வளர்த்த தற்கும், தமிழ் இலக்கியச் சிறப்பினை நயத்தற்கும் இவை உதவின. முத்தமிழின் மாண் பினை மாணவப் பருவத்திலேயே உய்த்துணர் வதற்கு இந்நாட்டிய நாடகங்கள் தூண்டுகோ லாக இருந்தன. இந் நாட்டிய நாடகங்கள் சேர். பொன். இராமநாதன் அவர்களின் இலட்சியத் தின் பெரும் பாகத்தினை நிறைவேற்ற இவை உதவியுள்ளன என்றே கூறவேண்டும்.



# இமைப்பொழுதும் மறவோம்

**திருமதி கோ. இராமச்சந்திரன்**
ஆசிரியர் (பழைய மாணவி)
யா/இராமநாதன் கல்லூரி

கோவில் மணியோசை கேட்டு இன்புற்று எழுந்து கல்லூரிக்குச் செல் வதற்கு ஆயத்தமாவோம். கல்லூரி வாசலில் இருந்து இணுவில் புகையிரத நிலையம் வரை வெள்ளைச் சேலைகளோடு வெள்ளை முழுப் பாவாடைகளோடு அக்காமார் அணி அணியாக வருவார். அவர்களோடு சேர்ந்து நானும் எனது சகோதரிமாரும் இணைந்து செல்வோம். காலைப் பொழுது இணுவில்ப் புகையிரத நிலைய வீதிகளை காட்டும் காலை 7.10 மணிக்கு காங்கேசன்துறை முதல் மாவிட்டபுரம், தெல்லிப்பழை, மல்லாகம், சுன்னாகம், புகையிரத நிலையங்களில் ஏறிய இராம நாதன் கல்லூரி மாணவிகள் இணுவில் புகையிரத நிலையத்தில் இறங்கி கூட்டம் கூட்டமாக வருவார்கள். இரு பது நிமிட வித்தியாசத்தில் பளை, கொடிகாமம் முதல் கோண்டாவில் வரையுள்ள புகையிரத நிலையங்களில் ஏறிய இராம நாதன் கல்லூரி மாணவிகள் புகையிரதத்தில் இருக்கைகள் கூட இன்றி நெருக்கமாக நின்று இணுவில் புகையிரத நிலையத்தில் இறங்குவார் கள். 7.00 மணி தொடக்கம் 8.45 வரை பல நூறு மாணவிகள் எங்கள் வீடு அமைந்த இணுவில் புகையிரத வீதி வாசலால் இராமநாதன் கல்லூரிக்குத் திரள் திரளாக வந்த காட்சி மறக்க முடியாது. புகையிரதங்களில் எமது கல்லூரி ஆசிரியர்களும் மாணவி களுக்கு காவல் செய்து வருவர். எங்கள் காலத்தில் பாடசாலை 8.50இற்கு ஆரம்பமாகி 4.00 மணிக்கு நிறைவுறும். பாடசாலை முடிவடைந்ததும் புகையிரத நிலையத்தை நோக்கி மாணவிகள் ஓடி ஓடிச் செல்வர். இவையெல்லாம் இன்று கனவாகி விட்டது. புகையிரத நிலையத்திற்கும் இராம நாதன் கல்லூரிக்கும் இடையில் எங்கள் வீடு தனி வீடாக விளங்கியது. பல அக்காமார் தண்ணீர்ப்பந்தலில் தண்ணீர் குடிப்பது போல் எங்கள் வீட்டுக் கிணற்றில் தண்ணீர் குடித்துவிட்டுச் செல்வார்கள்.

இராமநாதன் கல்லூரி மாணவிகளின் காவலுக்காக புகையிரத நிலையத்தில்

பொலிஸ்காவல், மருதனார்மடம் சந்தியில் பொலிஸ் காவல் இரண்டாவது தெரு வாசலுக்கு பொலிஸ் காவல் இருந்தது. காலையில் ஆசிரியர்களும் மாணவிகளும் பல ஊர்களில் இருந்து மோட்டார், காரில் வந்து இறங்கு வார்கள். சில கார்கள் மூன்று, நான்கு தடவை அணி அணியாக மாணவிகளை ஏற்றி வந்து விடுவது வழக்கம். இரட்டைத் தட்டு (டபிள் டெக்கர்) பஸ் காங்கேசன் துறை பொருந் தெருவால் வரும், படை, படையாக எம் கல்லூரி மாணவிகள் இறங்கி வருவர். எந்த ஒரு மாணவியும் இன்று போல் சைக்கிளில் வந்தது கிடையாது. இராமநாதன் கல்லூரி தொடங்கும் காலைக் காட்சியும் முடிவடையும் மாலைக் காட்சியும் முழுமையாக வர்ணித்துக் கூற முடியாது.

காலையில் தூய வெண்ணிற உடையுடன் வந்த மாணவிகள் மாலையில் வீடு செல்லும் போது சேலையிலே செம்பாட்டு மண்ணின் குறியீடுகளுடன் செல்வர். மைதானத்திலும் விவசாய நிலத்திலும் மற்றும் கல்லூரி வளாகம் முழுவதிலும் பம்பரமாகச் சுழன்று பல விடயங்களைக் கற்று மாலையிலே சிரித்து மகிழ்ந்து வீடுகளை நோக்கும் காட்சி வித்தியாசமானது.

கல்லூரியின் ஒழுக்காற்றுக் கடமைகளில் அதிபர், ஆசிரியர்கள் மட்டுமல்ல பணியாளர்களாகக் கடமையாற்றியவர்கள் கூட அக்கறையாக இருப்பர். கால் முட்டப் பாவாடை முழுமையாகக் காலை மூடாவிட்டால் கத்தரிக்கோலோடு சில ஆசிரியர்கள் உலா வருவார்கள். கடைசி மடிப்பைக் கழற்றுவதற்கு. தலை உச்சி பிரிப்பி லிருந்து ஒவ்வொரு அலங்காரமும் வரையறுக்கப்பட்டதாக இருந்தது. அதை மீறுபவர்கள் தண்டிக்கப் படுவார்கள்.

பாடசாலை வளாகத்தில் எவரும் மாமிச உணவு கொண்டு வந்து உட்கொள்ள முடியாது. கடதாசியிலும் சாப்பாடு கட்டி வர முடியாது. அலுமினியத்தில் அமைந்த மூடியோடு கூடிய வட்டப் பெட்டி, பிளாஸ்ரிக் பெட்டி எல்லாம் பிற்காலத்தில் வந்தவை. சைவமணங் குணத்தோடு கூடிய சாப்பாடு மாணவிகள் சாப்பிடுவார்கள். ஆசிரியர்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் சரளமாகப் பேசுவார்கள். எங்கள் பாடசாலைப் பிரார்த்தனைக் கூட்டம் மாணவர் தொகை அதிகம் என்ற காரணத்தால் மூன்று இடங்களில் இடம் பெறும் மூன்று இடங்களிலும் நற்சிந்தனைகள், அறிவிப்புக்கள் இடம் பெறும். வகுப்பறைகளில் நடைபெறும் கல்விச் செயற்பாடுகளை காலை ஒரு தடவையும் மாலை ஒரு தடவையும் அதிபர் வலம் வந்து கவனிப்பார். போட்டிகளிற்குப் பழக்குவதற்கு மாணவிகளை பொறப்பாசிரியர்கள் இரவு பகல் பாராது பயிற்சி அளிப்பர். சில போட்டிகளில் பங்குபற்றும் மாணவிகளை பெற்றோரின் அனுமதியுடன் விடுதிச் சாலையில் மறித்து கடும் பயிற்சி வழங்கப்படும். போட்டிகளிற்குச் செல்லும் போது S.T.M கம்பனி தனியார் பஸ் வர்ண நிறங்களோடு வரும்.

போட்டி முடிவடைந்து வெற்றியோடு திரும்பி வரும் போது மாணவிகளின் தொண்டை அடைபட்டு விடும். அந்த அளவிற்கு கல்லூரியின் வெற்றிக்காக மாணவிகள் உணர்ச்சி வசப்பட்டு குரல் எழுப்புவர்.

நாங்கள் படித்த காலத்தில் உடற் பயிற் சிப் போட்டி என்றால் அது இராமநாதன் கல்லூரிக்கே என்ற நிலை இருந்தது. அகில இலங்கை ரீதியில் எம் கல்லூரி அணி சாதனை படைத்தது மறக்க முடியாது. செல்வி கதிரவேலு காலத்தி லும், திருமதி மலர் குமாரசாமி காலத்தி லும் திருமதி கணேசலிங்கம் காலத்திலும் யான் உடற்பயிற்சிப் போட்டியில் பங்கு பற்றியுள்ளேன். செல்வி. கதிரவேலுவின் காலத்தில் ஒரு முறை மூன்று அணிகளும் வெற்றி பெற்றது. எங்கள் வீட்டில் நானும்எனது சகோதிரிகள் இருவரும் மூன்று அணிகளிலும் சமகாலத்தில் பங்கு பற்றினோம். வெற்றி பெற்றமைக்காக தியேட்டரில் பக்திப் படங்கள் பார்ப்ப தற்கு அழைத்துச் செல்வார்கள். பெரும் பாலும் வின்சர் பட மாளிகையில் நடை பெறும் படத்திற்கு மட்டும் அழைத்துச் செல்வர். படமாளிகை முகாமையாள ருடன் தொடர்பு கொண்டு ஒரு பகுதி இருக்கைகள் முழுமையாக எமக்காக ஒதுக் கப்படும். அந்த அளவிற்கு ஒழுங்குகள் கட்டுப்பாடுகள் இருந்தன.

எங்கள் காலத்தில் மிகப் பெரிய பொருட்காட்சி இடம் பெற்றது. பல்லா யிரக் கணக்கான மாணவர்கள் வடமாகா ணம் முழுவதிலிருந்தும் எமது பொருட் காட்சி பார்வையிட வந்தனர். அப் பொருட் காட்சியில் சகல மாணவிகளும் ஏதாவது ஒரு துறையில் தனது ஆக்கத் திறனை வெளிப்படுத்த வேண்டும் என்ற அதிபரின் கட்டளையை மாணவிகள் நிறைவேற்றினர். அப்பொருட் காட்சியில் புவியியல்த் துறை, விஞ் ஞானத்துறை, விவசாயத்துறை கடும் போட்டியிட்டு தங்கள் செயற்திறன்களை வெளிப்படுத் தினர். இணுவில் வைத்தியசாலை ஆய்வு கூடத்திலிருந்து குறைமாதக் குழந்தை ஒட்டிப் பிறந்த குழந்தை என பல விசித்திர மான குழந்தைகள் கண்ணாடிப் போத்தல் களில் அடைத்து விஞ்ஞானப் பிரிவு காட்சிக்குட்படுத்தியது. அக்காலத்தில் கண்காட்சியைப் மாணவர்களுக்கு விசித் திர அனுபவமாக இருந்தது.

எங்கள் பாடசாலை விளை யாட்டுப் போட்டிகளில் ஆறு இல்லங் களாக மாணவிகள் பங்குபற்றுவார்கள். குறிப்பாக தடை தாண்டல் போட்டியில் கிடுகு பின்னுதல் , சிறிய பாயிழைத்தல், தாவணி உடுத்துதல் போன்ற நிகழ்வுகள் விறுவிறுப் பாக அமையும். விநோத உடைப் போட்டி மிகவும் அற்புதமாக அமையும். விளை யாட்டுப் போட்டியின் போது வெளியில் இருந்து விருந்தினர் தவிர எந்த ஒரு ஆடவரும் அனுமதிக்கப்படார். எங்கள் கல்லூரியில் பரிசளிப்பு விழாக்களின் போது பெரும்பாலும் மந்திரிப் பதவியில் இருப்பவர்களும் உயரதிகாரிகளும் கலந்து

கொள்வர். பரிசளிப்பு விழாவில் நாட்டிய நாடகங்கள் முக்கியத்துவம் பெறும். நிகழ்ச்சிகள் முந்தாலும் பெற்றோர் சமூகமளித்தால் மட்டும் மாணவிகள் வீடு செல்ல அனுமதிக்கப்படுவர். விடுதிச் சாலை மாணவிகள் இடையே சிவராத்திரி கால நாடகப் போட்டி இடம் பெறும். விடியும் வரை போட்டிகள் இடம் பெற்று பரிசில் வழங்கப்படும். பாடசாலை வளாகத்துள் மல்லிகைப் பந்தல்கள் பல இடத்தில் அமைக்கப்பட்டிருந்தது எங்கும் மலர் வாசனை மனதைத் தொடும். மருதாணி மரங்கள் பல கல்லூரி வளாகத்தில் இருந்தன. பெரும்பாலான விடுதிச் சாலை மாணவிகள் மருதாணி பூசுவர். கோணற் புளி மரங்கள் பல திசைகளிலும் காட்சி அளித்தது. இடைவேளையின் போது கோணற்புளி, நெல்லி, கஜு, புளியம்பழம், மகிழம் பழம் என மரங்களை நாடி மாணவிகள் சூழ்ந்து கொள்வர்.

எமது கல்லூரி நவராத்திரி விழா தனித்துவமானது. ஆய கலைகள் அறுபத்து நான்கும் அரங்கேறும். எங்கும் கோலங்கள், கொலுக்கள் காட்சியளிக்கும்.

அன்று இக் கல்லூரியில் படித்த நாம் பாக்கியசாலிகள். போர்ச்சூழல் எங்கள் பாடசாலையை வெகுவாகப் பாதித்து விட்டது. யாரையும் குறை சொல்ல முடியாது. எங்கள் இனத்தின் விதிப்பயன் எங்கள் பாடசாலையையும் பாதிக்கத் தவற வில்லை. பசுமை நிறைந்த நிறைவுகளோடு என்னை ஆளாக்கிய ஆசிரியர்களையும் நினைத்த வண்ணம் நூற்றாண்டு விழாக் காலத்தில் என்னை ஆளாக்கிய பாடசாலையில் ஆசிரியராக வாழும் பேறு கிடைத்ததை இட்டு கடவுளுக்கும் என்னைக் கற்பித் தவர்களுக்கும் நன்றி கூறி அமைகின்றேன்.

# EARLY DAYS OF RAMANATHAN COLLEGE

**Miss Sangeetha Sivananthasothy**
old Student.

I have come to write something about the early day of my former school, Ramanathan College. The founder of our school was late Sir Ponnampalam Ramanathan, then, a world famous well educated religious man. After his retirement from service he sacrificed, rest of his life to our nation.

In a speech he said the following words:- " I hope to devote my service to my motherland. I certainly hope to be able to do some good things at least to some of our children and, children's, children".

He realized the truth that when you educate a man you educate an individual but when you educate a woman you educate a whole family. He wanted Hindu girls to grow up in Hindu environment. At the same time Hind parents realized the importance of higher education for their daughter in Hindu situation.

Our founder turned his attention to the founding of an institution. For the higher education of Hindu girls in Jaffna. He found that the Hindu girls had either to seek admission to chirstian schools or be at home, neglecting their studies.

So he decided too build a college for girls. The selection of suitable place was the big problem for him. He called upon all the leading citizens of Jaffna and explained them his plan about the boarding schools, and requested them to use their knowledge I the selection of a site most suited for the purpose.

Lastly they had chosen 25 acres of land at Chunnakam. The plan for the proposed girls college was drawn by one Mr. kandasamy of Mattale, a great architecd in those days and the building was given on contract basis.

On Friday 3rd of June 1910 about 7.30 p.m. the foundation stone was laid by Sir. Pon. Ramanathan. The school building was completed in two and half years. It provided comfortable accommodation for five hundred day scholars and two hundred and fifty boarders. It has besides a lecture hall and a library.

On Monday the 20th of January 1913, the college was formally opened. This college was aa priceless gift to Hindus of Jaffna. The pupils admitted to the college as well as in the boarding itself. The morning and evening worship in the college temple was made an important part in the student educational life. The college garden supplies a wide variety of flowers needed for this purpose. Many subjects were taught to the students. Our founder was keen about the personal cleanliness and the traditional Hindu dress of the students. He was a firm believer in the value of music and dance in education. So that he recruited experts from India for these subjects. He wanted the girls to be brought up as Hindu girls in every respect, so that they might become good Hindu wives and mothers.

He was a great believer in higher education for girls, and expected the college to expand to university rank. Now his dream has come true. Ramanathan university of fine arts is now functioning at the Ramanathan College premises

Thank you

# மனது மறக்காத விடுதி வாழ்க்கை (1972 - 1977)

**திருமதி தையல்நாயகி வாமதேவன்**
49/38F 01ஆம் ஒழுங்கை,
கோயில் வீதி,
குருமன்காடு, வவுனியா.

"நயனொடு நன்றி புரிந்த பயன் உடையார் பண்பு பாராட்டும் உலகு" என்ற வள்ளுவன் கூற்றுக்கு இணங்க அறத்துடனும் நீதியுடனும் தமிழர் தம் பண்பாட்டுக் கலாசாரத்துக்கமைய எம்மை வளர்த்தெடுத்த எமது கல்லூரித்தாய் நூற்றாண்டில் காலடி எடுத்து வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடையும் அன்புள்ளங்களில் நானும் ஒருத்தி.

"பாடசாலை வாழ்க்கை பாதிரியார் படலைமட்டும்" என்னும் நாட்டு வழமை ஒன்றுண்டு. அது அப்படியல்ல எமது நாடி நரம்புகளுடன் ஏன் எமது வாழ்க்கையுடனும் பின்னிப்பிணைந்துள்ளது என்பது யாரும் மறக்க முடியாத ஒன்றாகும்.

கடந்து வந்த என் பள்ளி வாழ்க்கையை ஓசையின்றி அசைபோட்டுப் பார்க்கின்றேன். ஒன்றாகப் படித்தபோது புழுதி பறக்கும் சாலைகளில் முகத்தில் மண் கலந்த காற்றடிக்க சிரித்து மகிழ்ந்த காலம் எங்கே? இப்பொழுது அறையில் உட்கார்ந்து மெயில் அனுப்பி உறவாடும் நட்பு எங்கே? மீண்டும் கிடைக்குமா அந்தப் பொற்காலம்? என்று எண்ணுகையில் சின்னஞ் சிறுமியாக பாவாடை சட்டையுடன் என் கல்லூரித்தாயை சுற்றி சுற்றித் துள்ளித் திரிந்த அந்த அழகிய விடலைப் பருவம் என் கண்முன்னே ஆனந்தக் கண்ணீருடன் விரிகின்றது.

ஆம்... வவுனியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட நான் 1972 ஆம் ஆண்டு தைத்திங்கள் வன்னி மண்ணிற்கு விடை கொடுத்துவிட்டு உயர்கல்வி கற்பதற்காக என் கல்லூரித்தாயை அணைத்துக் கொண்டேன். இக் கல்லூரியை எனது பெற்றோர் தேர்ந்தெடுத்ததன் முக்கிய நோக்கம் தமிழரின் பண்பாடு, கலை, கலாசாரம் மூன்றும் ஒருங்கேயமைந்த ஒரு கல்லூரி என்பதற்காகும். எனது கல்வியை விடுதியில் தங்கியிருந்தே தொடர்ந்தேன். அந்த நேரம் எனது வயது பதினான்கு மட்டுமே... அப்பொழுது நான் தரம் ஏழு இல் கல்வி பயில வந்தேன்.

அமைதியும் ஆனந்தமும் அமையப் பெற்ற எம் விடுதியில் "கண்ணகி" "லீலாவதி" "தமயந்தி" "ஜானகி" "சகுந்தலா"

"அருந்ததி" என்று இல்லங்கள் இருந்தன. பருவமடையாத (பூப்பெய்யாத) பிள்ளைகள் யாவரும் கண்ணகி இல்லம் என்று அழைக்கப் படும்.....

பாலா விடுதியில் (Baby Hostel) இல் சேர்த்துக் கொள்வது விடுதியின் மரபு. அவ்விதம் நானும் கண்ணகி இல்லத்தில் சேர்க்கப்பட்டேன். அந்த விடுதி மேற்பார் வையாளராக ஆசிரியர் செல்வி தங்கம்மா ஆறுமுகமும் எழுதுவினைஞராக செல்வி திலகவதி நமசிவாயமும் இவர்களுடன் கல்வி மேற்பார்வையாளரும் இருந்தனர். இதைவிட இல்லங்களை பராமரிப்பதற்கு ஒரு "மேற்றன்" சாப்பாடு ஒழுங்குகளைப் பார்வையிடுவதற்கு ஒரு மேற்றன் அமர்த்த ப்பட்டிருந்தனர். அத்துடன் ஒவ்வொரு இல்லத்திற்கும் தலைவி உபதலைவி என இருவர் நியமிக்கப்பட்டிருந்தனர். நானும் இல்லத்தலைவியாகவும் கோயில் தலைவி யாகவும் 1977இல் கல்வி மேற்பார்வை யாளராகவும் பணிபுரிந்தமை என் பாக்கியமே.

இந்த இடத்தில் எமது விடுதி ஒழுங் கமைப்பு, அங்குள்ள நடவடிக்கைகளைப் பற்றியும் கூறியே ஆகவேண்டும். அமைந் துள்ள ஆறு இல்லங்களுக்கும் அவற்றிற் கென ஒதுக்கப்பட்ட நிறங்கள் உள்ள யன்னல் சீலைகள், படுக்கை விரிப்புக்கள் வேறுபடுத்திக் காட்டப்பட்டிருந்தன. ஒரு இல்லத்தில் 25-30 பேர் வரை தங்க வைக் கப்பட்டிருப்பார்கள்.

ஆரம்பத்தில் விடுதியில் சேரும் போது சில ஒழுக்கவிதிகளை சொல்லட் டும் எம்மைப் பெற்றோரைவிட வேறு யாராவது சந்திக்க விரும்பினால் அல்லது லீவு நாட்களில் வீட்டுக்கு கூட்டிச் செல்ல விரும்பினால் அவர்களுடைய விபரம் கொடுக்கப்படவேண்டும். விருந்தினர் அறையில் ஒரு கையேடு இருக்கும் அதில் எம்மைச் சந்திக்க வருபவர்கள் (பெற்றோர் களாக இருந்தால் கூட) வந்த நேரம், உறவுமுறை போன்ற விபரங்கள் எழுதப் பட்டு மேற்றனிடமும் ஒப்பம் எடுக்க வேண்டும். பார்வையிட வருவோர் எக் காரணம் கொண்டும் விடுதிக்குள் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.

உடைகளைப் பொறுத்தவரையில் கூட பாலர் விடுதியில் உள்ளவர்கள் மட்டும் சட்டை போட அனுமதிக்கப்படு வர். ஏனையோர் எமது கலாசராத்துக்கு ஏற்ற வாறு முழுப்பாவாடை தாவணி போட வேண்டும். விடுதியிலிருந்து வெளியே செல்லும் போது கூட இவ்வாறுதான் செல்ல வேண்டும். தவணைக்கொரு தடவை சினிமா பார்க்க கூட்டிச்செல்வார் கள். சிவராத்திரி போன்ற சமய அனுட்டான காலங்களில் இல்லங்களுக்கு இடையே சமயம் சம்பந்தமான கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்து வெற்றிபெறும் இல்லங் களுக்குப் பரிசுகளும் கொடுக்கப்படும். மேலும் நாளாந்த நிகழ்வுகள் சிலவற்றை யும் இதில் குறிப்பிடலாம் என எண்ணுகின் றேன். அதிகாலை 5 மணிக்கு மணியோசை

கேட்கும் போது எல்லோரும் எழுந்து காலைக்கடன்களை முடித்துவிட்டு பாட சாலை சீருடையை அணிதல் வேண்டும்.

ஆறுமணிக்கு விடுதியிலுள்ள கோயில் மணி கேட்கும் போது எல்லோரும் வெளியே வந்து வரிசையாக கொயிலுக்குச் செல்ல வேண்டும். ஒவ்வொரு நாளும், இல்லங்களின் நிரைப்படி கோயில் வாசலில் கோலம் போட வேண்டும். பாலர் விடுதியில் உள்ளவர்கள் காலை 5 மணிக்கு எழுந்து காலைக்கடன்களை முடிந்தபின் குழுக்களாகிப் பிரிந்து பூப்பறித்து மாலை கட்டி பூஜைக்கு கொடுக்க வேண்டும்.

பூஜை முடிய தேநீருக்கும் பின் அரை மணி நேரம் கற்றல் நடவடிக்கைகளுக்காக செல்ல வேண்டும். பின் காலை உணவை முடித்து பாடசாலைக்குச் செல்ல வேண்டும். இங்கு உணவு அருந்தும் முறையில் கூட ஒரு ஒழுக்கம் இருந்தது. என்பதனை யும் குறிப்பிட வேண்டும். உணவுக்காக மணி ஒலித்ததும் எல்லோரும் தங்கள் இல்லத்திற்கு முன் நிரையாக நின்று சாப்பாட்டறைக்குச் செல்ல வேண்டும். அந்தந்த இல்லங்களின் அடிப்படையி லேயே மேசைகள் போடப்பட்டிருக்கும். உணவு பரிமாறப்பட்டதும் எல்லோரும் எழுந்து இறைவணக்கம் செய்தபின்பே உணவருந்த வேண்டும். மூன்று வேளையும் இவ்வாறே செய்யப்படும். மதியம் சாப் பாட்டு நேரம் இல்லங்களுக்குள் செல்ல முடியாது.

யாராவது நோய் காரணமாக பாடசாலைக்குச் செல்ல முடியாவிட்டால் அதற்கென ஒதுக்கப்பட்ட அறை (Sickroom) இல் ஓய்வு எடுக்க வேண்டும். நோய் கூடுதலாக இருப்பின் வீட்டாருடன் தொடர்பு கொண்டு அனுப்பிவைப் பார்கள்.

மாலை பாடசாலை விட்டதும் தேநீருக்குப்பின் ஒவ்வொரு இல்லங்க ளுக்கும் முன்னால் உள்ள பூந்தோட்டத் திற்குத் தண்ணீர் ஊற்ற வேண்டும். லீவு நாட்களில் அவற்றைத் துப்பரவு செய்ய வேண்டும். அதன்பின் இல்லங்களுக்கு நடுவே அமைந்துள்ள சிறிய விளையாட்டு மைதானத்தில் விளையாடி விட்டு 6 மணிக்கு கோயில் ஆயத்த மணி அடிக்க கோயிலுக்குச் செல்வோம். வெள்ளிக் கிழமைகளில் இரவு சாப்பாட்டு நேரம் வரை பஜனை நடக்கும். இரவுச் சாப்பாட் டிற்குப்பின் விரும்பினோர் படிக்கலாம் மற்றவர்கள் படுக்கலாம். படுக்கைக்கு முன்பும் எல்லோரும் இறைவணக்கம் செய்யவேண்டும்.

7ஆம் ஆண்டிலிருந்து உயர்தரம் வரை தொடர்ந்து விடுதியிலமர்ந்தே என் படிப்பை முடித்தேன். அக்காலத்தில் அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க ஒருவருடம் கல்வி மேற்பார்வையாளராக சேவை செய்தேன். இவ்வாறு தினமும் எமது கல்லூரி விடுதி வாழ்க்கை எம்மைச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைப்பதுடன் பற்பல அனுபவங்களைப் பெற்றுத்தந்தது. ஒரு நல்ல வாழ்க்கைக்கு அடிகோரியது.

"உயிர் பிரியும் வலியை ஓர் நொடி உணர்ந்தேன் உயிருடன் கலந்த என் பள்ளி வாழ்க்கையை வழியனுப்பி வைக் கையிலே."

1977ஆம் ஆண்டு வவுனியா வந்து வேலைகது விண்ணப்பித்தேன் வங்கியில் வேலை செய்ய சந்தர்ப்பம் கிடைத்தது. 35 ஆண்டுகள் வங்கிச்சேவை செய்து மாசி 2013 ஒய்வு பெற்றுவிட்டேன். எனது பள்ளி வழிகாட்டல், வேலைக்கும் சென்று எனது குடும்பத்தையும் நல்ல முறையில் நடத்திச் செல்ல பெரும் உதவியாக இருந்தது. என் வாழ்க்கைக்கு நல்லதொரு அனுபவ வழி காட்டியாகவும் அமைந்துள்ளது. என்ப தனை இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகின்றேன். என்னைப் போன்று பலபேருக்கு வழிகாட்டியாக இருந்து இன்று நூற்றாண்டு காணும் என் கல்லூரித்தாய் இன்னும் பல சாதனை களைப் புரிந்து பற்பல ஆண்டுகள் விழா எடுக்க வேண்டும் எம் மண்ணிற்கு இன்னும் பல பெருமைகளைச் சேர்த்துத் தர வேண்டும் என மனதார வாழ்த்து கின்றேன்.



# என்றும் என் நன்றிக்குரியவர்கள்

**திருமதி விக்னேஸ்வரி நரேந்திரா**
விரிவுரையாளர் (பழைய மாணவி)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

திருவாசகத்தில் மணிவாசகப் பெருமான் திருப்பெருந்துறையை எடுத்துரைத்தது போல் எங்கள் இராமநாதன் கல்லூரி விளங்கியது. இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால் இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால் துன்னிய பிணைமல கையினர் ஒருபால்...... என்ற திருப்பள்ளி எழுச்சிப் பாடல் போல் இசையும் இறைபக்தியும் இணைந்த கல்லூரியாக இராமநாதன் கல்லூரி சிறப்புற்றது. யாழ் இராமநாதன் கல்லூரியில் 1969 ஆம் ஆண்டு மாணவியாகச் சேர்ந்தேன். மூன்றாம் வகுப்பு மாணவியாக இருக்கும் போது காலைப் பிரார்த்தனையில் எனது தேவாரத்தைக் கண்ணுற்று அழைத்துச் சென்ற அன்று முதல் எனக்கு மானசீகக் குருவாக விளங்கியவர் ஆசிரியர் செல்வி. யோகாம்பிகை செல்லையாபிள்ளை (அம்பி அக்கா) யான் இன்று தேசிய கல்வியியற் கல்லூரியில் இசை விரிவுரை யாளராகப் பணியாற்றுவதற்கும் அத்திபாரமிட் டவர். என் ஆசிரியர் அவரது கடின முயற்சியால் மூன்றாம் தரம் படிக்கும் போது பா ஓதல் போட்டிக்கு தேசிய மட்டம் வரை அழைத்துச் சென்று போட்டியில் வெற்றி பெற வைத்தவர். மூன்றாம் வகுப்பு படிக்கும் போது சிறு பிள்ளை ஆகிய என்னை விடுதிச் சாலையில் மறித்து, உணவு தந்து, உற்சாக மூட்டி இராப்பகல் கடின பயிற்சி தந்து என் வெற்றிக்கு தன்னை உரமாக்கிய உத்தம ஆசிரியரை மறக்க முடியாது.

எனது வாழ்வில் இசையே எனக்குத் தஞ்சமெனப் பற்றிப் பிடிப்பதற்கு இவர் தந்த தீட்சையே காரணமாகும். "வாடி, போடி" என்று உரிமையோடு தன் இறப்பு வரை என்னை நேசித்த ஆசிரியர். அவர் ஆசிரியராக கல்லூரியில் பணியாற்றும் காலத்திலேயே யான் பட்டப்பட்டிப்பு முடிந்து அவரோடு ஆசிரியராகப் பணியாற்றும் பேறு பெற்றேன். எனது ஆசிரிய நியமனத்தின் போது முதலில் ஏழாலை மகாவித்தியாலத்தில் கடமையாற்றினேன். அங்கிருந்து என்னை இராமநாதன் கல்லூரிக்கு ஆசிரியராகக் கொண்டுவந்து சேர்த்தவர் என் மானசீகக்குருவே. கல்லூரியில் நடைபெற்ற ஒவ்வொரு விழாக்களிலும் மாணவியாக இருக்கும் போதும் ஆசிரியராக இருக்கும் போதும் அரிய வாய்ப்புக்களை வழங்கியவர்.

இராமநாதன் கல்லூரியில் இவரிடம் குருகுல வாசம் போல் கற்றோம். சனி, ஞாயிறு, விடுமுறை நாள் அனைத்திலும் அவரது வகுப்பு ஓய்ந்தது கிடையாது. கோயில் வழிபாடு, கோலம் போடுதல், திருமுறை பாராயணம், சேலை கட்டுதல், தலைச் சோடனை, ஆடை அணிகலன் எல்லாமே அம்பியக்காவிடம் நாம் கற்றுக் கொண்டோம். அம்பியக்காவிடம்

நாம் கற்றுக்கொண்டோம். அம்பியக்காவிடம் கற்றவர்கள் பெரும் பெரும் கலைஞர்களாக உலகளாவியரீதியில் இசைப்பணியாற்றி வருகிறார்கள். இசை வித்தகி சிவசக்தி சிவனேசன், கனடாவில் வாழும் நாதஸ்வர வித்துவான் அங்கப்பா அவர்களின் பிள்ளை கள் விஜயலக்ஷ்மி, ஹம்சா, மற்றும் மைதிலி, சிவானந்தி, வாஸஸ்பதி, சிவகெங்கா, இன்னும் பலர் இவரால் உருவாக்கப்பட்ட இசைவித் தகர்கள்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தில் சங்கீத பூஷணம் பட்டம் பெற்ற அம்பியக்கா அவர்களிடம் இசை மட்டுமன்றி நடன நாடகத் துறையிலும் உன்னதமான அனுபவம் இருந்ததைப் பலரும் அறிவர். எங்கள் காலத்தில் நடன ஆசிரியர்களாக விளங்கிய கீதாஞ்சலி நல்லையா, ஏரம்பு சுப்பையா, சாந்தினி சிவனே சன் இவர்களோடு இணைந்து அம்பியக் காவின் குரலில் எழுந்த நாட்டிய நாடகங்கள் மிகவும் பிரபல்யம் பெற்றன. எங்கள் பாடசாலையின் கீதத்தை நடனத்தில் உயிர் கொடுத்துப் பாடி நடேசப் பிள்ளையால் ஆக்கப்பட்ட கீதத்திற்குப் பெருமை சேர்த்தவர் இவர்.

பேரறிஞர் K.K.சோமசுந்தரம் அவர்க ளால் தயாரிக்கப்பட்ட பல நாட்டிய நாடகங் களைத் தனது கணீரென்ற குரலினால் உணர்வு பூர்வமாக சபையை இரசிக்க வைத்தவர். அவரி டம் லய சுருதி சுத்தம் சிறப்பாக இருந்தது. எந்தப் போட்டிக்கு எங்களை அழைத்துச் சென்றாலும் நடுவர்கள் முதல் ஏனைய பாடசாலை ஆசிரியர்கள் அம்பியக்காவைக் கண்டால் பயப்படுவார்கள். அவரிடமிருந்த ஆளுமை மாணவிகளாகிய எங்களுக்குப் பெரிய அரணாக அமைந்தது. எந்த ஆடவரும் அம்பியக்காவைக் கண்டால் பயப்படுவார்கள். அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து வருவார். கல்லூரியில் அமைந்துள்ள கோயில் பூசைப் பொறுப்புக்களை அக்கறையுடன் கவனிப்பார். உதவிக் குருக்கள் போல் செயற்படுவார். எம் கல்லூரி விழாக்கள் உச்சம் பெற்ற மறுநாள் அம்பியக்கா தொண்டை கட்டி இருப்பது வழக்கம். மாணவிகளாகிய எம் குரல் சீராக இருக்க வேண்டும் என்பதற்காக அதிமதுரம், கற்கண்டு, பால் யாவும் வழங்குவார். இத்த கைகய பிறவிகளை வாழ்நாளில் இனிமேலும் சந்திக்க முடியாது. யான் மாணவியாக இருக்கும் போது நாட்டிய நடன நிகழ்வுகளில் தனக்கு அருகிலிருத்தி சுருதிப் பெட்டியை இயக்க வைத்தார். அன்று பெற்ற அனுப வத்தால் முப்பத் தியெட்டு நாட்டிய நாடகத் திற்கு யானே இசையமைத்துப் பாடி பாராட் டுப் பெற்றேன். அவரிடம் பெற்ற அனுபவங் கள் எனது இசைத்துறை சார்ந்த வெற்றிகளுக்கு துணையாக உள்ளன. பல அறிஞர்கள் தயாரி த்த நாட்டிய நாடகங்களில் யான் பங்குபற்றும் போதெல்லாம் எனதுகுருவாகிய அம்பியக்கா என்னுள் இருக்கிறார் என்பதை உணர் கின்றேன்.

இராமநாதன் கல்லூரிக்கு எந்த ஒரு விருந்தினர்கள் வருகை தந்தாலும் அவர்களை வரவேற்பதற்கு வரவேற்புக் கீதம் பாடும் முறை இருந்தது. காந்தி மகான் இராமநாதன் கல்லூரி க்கு வந்தபோது சிவதமிழ்ச் செல்வி அம்மா மாணவியாக இருந்தார். காந்தியை வரவேற்று அக்காலத்தில் இனிய வரவேற்புக் கீதம் பாடியதை சொல்லி மகிழ்வார். நாம் மாண வர்களாக இருந்த காலத்தில் இரண்டு பிரதம மந்திரிகள் உட்பட பல மந்திரிமார்கள் தொட ர்ந்து வருகை தந்தனர். அவ்வேளைகளில் அம்பியக்காவின் வரவேற்புப் பாடலே, மொழிகளைத் தாண்டி, இனங்களைத் தாண்டி ஈர்த்து விடும். அவரது சேவைக்காலம் இராமநாதன் கல்லூரி வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய காலமாகும். அவரால் உருவாக்கப்பட் டவர்கள் அவருக்கு என்றும் நன்றிக்கடன் பட்டவர்கள்.

# ஏற்றமுறவைத்த ஏணிகள்....

**திருமதி நீலலோஜினி ஜெகதீஸ்வரன்**
உதவித் தொழில் ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

தமிழினப் பெண்கள் கற்றுத் தலை நிமிர்ந்து வாழ்வதற்காய் உருவாக்கப்பட்ட எமது இராமநாதன் கல்லூரி தனது நூறாவது ஆண்டினை இவ்வருடம் பூர்த்தி செய்து நூற்றாண்டு விழாவினைக் கொண்டாட உள்ளது என அறிந்து உள்ள மெல்லாம் பரவசம் அடைகின்றேன். இக் கல்லூரியை இந்துப் பெண்களுக்காக உருவாக்கிய வள்ளல் சேர். பொன். இராமநாதன் அவர்களை மனம் நன்றிப் பெருக்குடன் நினைவு கூருகின்றது. 1913ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இக் கல்லூரி அன்று முதல் இன்று வரை பல்லாயிரக்கணக்கான இந்துப் பண்பாடுடைய பெண்களை உருவாக்கியுள்ளது, உருவாக்கி வருகின்றது. அது மட்டுமன்றி இக் கல்லூரி எத்தனையோ வைத்தியர்களை, பொறியியலாளர்களை, கணக்காளர்களை, உயர் பதவியினரை, புத்திஜீவிகளை எல்லாம் உருவாக்கிய பெருமையை உடையது. ஆயிரக்கணக்கான ஆசிரியைகளை உருவாக்கியதுடன் அவர்களில் சிலரை தன்னகத்தே ஈர்த்து தன் பணியை மேலும் மெருகூட்டுகின்றது. குருசீட பரம்பரையை வளர்க்கின்றது. இத்தகைய பெருமை பெற்ற பாடசாலையில் நானும் கல்விகற்றுள்ளேன். எனக்கும் அந்த அரிய வாய்ப்புக் கிடைத்ததையிட்டு மகிழ்வடைகின்றேன். என் சிந்தனைகள் எனது பள்ளிப் பருவத்தை நோக்கி நகர்கின்றன. துள்ளித் திரிந்த காலம் துடுக்காக குறும்புகள் செய்த காலம், மாணவர்கள் எல்லோரும் சேர்ந்து கூடிக்குலாவிய காலம் என எத்தனையோ சொல்ல முடியும்.

1975ஆம் ஆண்டில் நான் தந்தையாருடன் இராமநாதன் கல்லூரிக்குள் நுழைந்தேன். அதிபர் திருமதி இராசநாயகம் அருணாசலம் அமைதியாக அன்பாக வரவேற்று கலந்துரையாடினார். அவரது பேச்சு வன்மையும், கண்டிப்பும் அவர்மேல் மதிப்பை உண்டுபண்ணியது. நான் 7ஆம் வகுப்பில் கற்பதற்காகச் சென்றிருந்தமையால் அதற்குப் பொறுப்பான ஆசிரியர்களான திருமதி. செல்லையா, திருமதி பசுபதி ஆகியோரிடம் அனுப்பி

வைத்தார். அவர்களைப் பார்த்ததும் பாசம் மிக்க அன்னையரைக் கண்ட உணர்வு ஏற்பட்டது. அன்பாக என்னை அழைத்து பதிவுகளை மேற்கொண்டபின் வகுப்பிற் குள் அனுமதித்தனர்.

புதிய இடம், புதிய மாணவர்கள், புதிய ஆசிரியர்கள் என எல்லாம் புதுமை யாக இருந்தது. காணியின் விஸ்தீரணம் கட்டடங்களின் அமைப்புக்கள் என்னை பிரமிக்கவைத்தன. வகுப்பில் மாணவர் கள், ஆசிரியர்கள் மிக அன்பாகப் பழகினர். ஒவ்வொரு ஆசிரியரிடமும் ஒவ்வொ விதமான அணுகுமுறைகளையும், அனுப வங்களையும் பெற்றுக்கொண்டேன், 7ஆம் வகுப்பில் தமிழ் கற்பித்த ஆசிரியை திருமதி. சிவபாக்கியம் சின்னத்துரை என்றும் மறக்க முடியாதவர். கண்டிப் புடன் கூடிய அன்பான கற்பித்தல் முறை யால் மாணவர்களை அவர் பால் ஈர்த்திடு வார். க.பொ.த சாதாரண தரத்தில் கற்கும் போது திருமதி சாவித்திரி பரராஜசிங்கம் வகுப்பாசிரியராக இருந்தார். அவரது அன்பு அரவணைப்பு கோபம் கண்டிப்பு எல்லாமே எனக்குப் பிடிக்கும். மொத்தத்தில் அவரது ஆளுமையே தனி. அவரது முடிவெடுக்கும் திறன் அவரது தற்துணிவைப் பறை சாற்றும். நாம் என்ன தான் குறும்புகள் செய்தாலும் கண்டித்து எம்மை அரவணைத்து வழிநடாத்துவார். அவர் வகுப்பில் உள்ள எல்லோருக்கும் ஆசிரியராக மட்டுமல்லாது அன்னை யாகவும் விளங்கினார். யாராவது எம்மைக் குறை கூறினாலோ, பிழை சொன்னாலோ பொறுத்துக்கொள்ள மாட்டார். மிகவும் வேதனைப் படுவார். ஆதலால் அவர் குரு மட்டுமல்ல அன்னையாக விளங்கினார் என்றால் மிகையாகாது. அவரது வழி நடத்தலில் க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தி பெற்று உயர் தரத்தில் வர்த்தகப் பிரிவில் கல்வி கற்க விளைந்தேன். அங்கு கிடைத்த ஆசிரியர்கள் என்னென்ன திறன்கள் ஒரு ஆசிரியைக்கு அவசியமோ அவற்றை எல்லாம் விஞ்சி; தமக்கென ஒரு உன்னத இடத்தைப் பெற்ற தன்னலமற்ற சேவை செய்யும் ஆசிரியர்களாகவே இருந்தனர்.

செல்வி இராஜலக்சுமி சின்னத்தம்பி பெயருக்கு ஏற்றாற்போல் அருட்கடா ட்சம் நிறைந்தவர். அவரது அன்பான பேச்சு, கனிவான பார்வை அன்பான நடை என்பன எல்லா மாணவர்களையும் அவர் பக்கம் இழுத்துவிடும். காலையில் கூட்டுப் பிரார்த்தனைக்குச் செல்லா விட்டால் அருகில் வந்து மகளே ஏன் பிரார்த்த னைக்குச் செல்லவில்லை என வினவும் போது சரஸ்வதி தேவியே வந்து கேட்பது போல் இருக்கும். அவர் எமக்கு இந்து நாகரீகம் கற்பித்தார். அவர் கற்பிக்கும் விதம் மாணவர்களது கவனத்தைக் கலையவிடாது. பிள்ளைகளே நான் விளங்கப்படுத்தும் போது தேவையான குறிப்புக்களை எடுத்துக்கொள்ளுங்கள். பின்னர் உங்களுக்கு விளங்கியவற்றை இவ் வினாவிற்கு விடையாக எழுதித் தர வேண் டும் என வினாவையும் கூறிவிடுவார். கற்பித்தலின் பின்னர் வினாவிற்குரிய

விடையையும் பெற்று மறுநாளே திருத்தங் களுடன் மீளத்தருவார். அவரது கற்பித்தல் தனிச் சிறப்பானது. சமய சம்பந்தமான விடயங் களை மிக ஆணித்தரமாகக் கூறி இந்துப் பண்பாட்டைக் கூறுவார். அதற்கு இலக் கணமாக தனது நடை உடை பாவனை களை அமைத்து எடுத்துக் காட்டாக விளங்கியவர். ஒரு இந்துப் பெண்ணுக்கு அவசியமான ஒழுக்கக்கட் டுப்பாடுகள், மத வழிபாடுகள், கலாசாரம் என்பனவே இந்து நாகரீகத்தில் பொதிந் துள்ளன. அவற்றை அனுபவித்து விளங்கப் படுத்துவார். ஒரு பெண்ணிற்கு அழிக்கும் கல்வி அந்த சமூகத்தையே வழிப்படுத்தும் என்பதனை உறுதியாக விளக்குவார். அவர் இன்று எம்மிடையே இல்லை. ஆயினும் அவரிடம் கற்றவர்கள் வாழும் வரை அவர்களது மனதில் அவர் வாழ்ந்து கொண்டிருப்பார்.

அடுத்து கணக்கியல் வர்த்தகப் பாடங்களைக் கற்பித்த ஆசிரியை திருமதி பரிமளம் பத்மநாதன் எனது மனதில் என்றும் நீங்காதவர். அவரது எளிமையான தோற்றம், சாந்தமான பேச்சு கண்டிப்பு நிறைந்த கற்பித்தல் அவரிடம் இழுத்துச் செல்லும். இராமநாதன் கல்லூரியில் அவர் கற்பித்த காலப்பகுதியில் வர்த்தகத் துறையில் கல்வி கற்ற எவரும் அவரை மறக்கமாட்டார்கள். வர்த்தக மாணவர்க ளுக்குக் கடினமான பாடம் கணக்கியலே. அதனை மிக இலகுவாக எளிதாக விளங்கும் வகையில் இரட்டைப் பதிவு முறையைத் தெளிவு படுத்துவதில் அவருக்கு நிர் அவரே தான். கணக்கியலில் அடிப்படை அறிவைத் தெளிவுறக் கற்றுக்கொண்டால் எந்தக் கணக்கினையும் செய்யலாம் என்ற தெளிவை உணர வைத்தார். அவரது கற்பித்தல் முறையினால் ஏனைய பாடங் களைவிட இலகுவானது என எண்ண வைத்தார். கிடைக்கும் ஓய்வு நேரங்களில் எல்லாம் கணக்குகளைச் செய்யும் ஆர்வத் தைத் தூண்டியவர். சந்தேகங்களை என் நேரத்திலும் எவ்விடத்திலும் வைத்துக் கேட்பதற்கு அனுமதித்து நடைமுறைப் படுத்தியவர். கணக்குச் செய்யாவிட்டால் ஏன் பிள்ளை செய்யவில்லை என அன் பாகக் கண்டித்து; தேவையான விளக்கங் களை அளிப்பார். வர்த்தகப் பாடத்தில் ஊழியர் சேமலாப நிதி பணிக்கொடை போன்ற தொழிலாளர் நலன்களை எமக் குத் தெளிவுற விளக்கியிருந்தார். இன்று இத் தொழிலாளர் நலன்களைப் பரி சீலனை செய்து அமுல்படுத்துகின்ற திணை க்களத்து உதவித் தொழில் ஆணையா ளராக கடமையாற்றுவதை யிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இன்றுவரை இவ் ஆசிரியருடன் இவ்விடயங்கள் தொடர் பாகக் கலந்துரையாடி வருகின்றேன்.

இதற்கு மேலாக இவ்விரு ஆசிரியர் களும் பாடசாலை விடுமுறைக் காலங் களில் வீட்டிற்கு அழைத்து சிறந்த முறை யில் கல்வி கற்க வைத்தவர்கள். வீட்டில் ஆசிரியர் மாணவர்கள் என்ற உறவு முறைக்கு அப்பால் தாய் மகள் என்ற முறையில் எங்களை வழிப்படுத்தியவர். என்றும் எம் மனதில் நின்று நீங்காத இவ் ஆசிரியர்களின் உதவியினாலும், ஆசியி னாலும் தான் நான் வியாபார நிர்வாக

மாணிக் கற்கைக்கு யாழ். பல்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டேன் என்பதனை நன்றியுடன் நினைவு கூருகின் றேன். பல்கலைக் கழகத்தில் கற்கும் போது கூட எனது கணக்கியல் ஆசிரியர் திருமதி பத்மநாதனுடன் கணக்கில் ஏற்படும் சந்தேகங்களைக் கலந்துரையாடுவேன். வியாபார நிர்வாக மாணியில் இரண்டாம் மேல்வகுப்பில் சித்தி பெற்று ஆசிரியராகக் கடமையாற்றி பின்னர் தொழில் திணைக் களத்தில் தொழில் உத்தியோகத்தராகவும், தற்போது உதவித் தொழில் ஆணையாள ராகவும் சிறப்பாகக் கடமையாற்றுகிறேன். என்றால் எனது ஆசிரியர்கள் என்னை வழிநடாத்தியமை மட்டுமன்றி; படிப்பறி வுடன் பட்டறிவையும் ஊட்டியமையே காரணம் ஆகும்.

கல்வியைப் போதித்து வழிகாட்டிய எனது ஆசிரியர்களுக்கு இந் நூற்றாண்டு விழாவில் நன்றி கூறுவதுடன், இக் கல்வியை உருவாக்கித் தமிழ்ப் பெண்களின் கல்விக் கும் வளர்ச்சிக்கும் உதவிய பெருந்தகை சேர்.பொன். இராமநாதன் அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். 'தோன்றிற் புகழொடு தோன்றுக' எனும் பொய்யா மொழிப் புலவரின் குறளினை உறுதிப்படுத்தி அந்தப் பெருந்தகையின் எண்ணம் இன்று வரை சீரியல் முறையில் பேணப்பட்டு வருகின்றமையைக் கண்கூடாகக் காண்கின்றோம். தொடர்ந் தும் சிறந்த ஆளுமை மிக்க தன்னம்பிக்கை மிக்க மாணவிகளை உருவாக்கி சமூகத் துடன் பலதரப்பட்ட தேவைகளையும் பூர்த்தி செய்யக் கூடிய சீரிய சிந்தனை யையும் செயற்திறனையும் கொண்ட புத்தி ஜீவிகளையும் நற்பிரஜைகளையும் வழங்க வேண்டும் என்ற எல்லாம் வல்ல நடராஜப் பெருமானை வேண்டுகின்றேன்.

# என் உள்ளத்திலிருந்து.....

**ஸ்ரீமதி மாலினி பரராஜசிங்கம்**
முன்னாள் இராமநாதன் கல்லூரி நடன ஆசிரியை
நாட்டியக்கலைமணி
கனடா (416-997-2428)

அந்தப் பசுமையான நினைவுகளை மீட்டிப் பார்க்கின்றேன். ஆஹா எத்தனை அழகான நாட்கள். என் நினைவு தெரிந்து காலடி எடுத்து வைத்த பாடசாலை இராம நாதன் கல்லூரி என்று சொன்னால் மிகையா காது. வெண்ணிற ஆடையுடன் தலைவாரிப் பூச்சூடி மல்லிகை மணம் கமழ இரட்டை ஜடையுடன் பூரண சந்திர வடிவத்தில் நெற்றித் திலகமுடனும் புத்தகக்கட்டுடன் அழகாக நடைபோட்டு பாடசாலை செல்லும் அழகே ஒரு தனி அழகு என்று கூறலாம்.

சேர் பொன். இராமநாதன் கல்லூரி என்றாலே பண்பாட்டுச்சிகரம் தான். பெண் கள் பாடசாலையாக இருந்த காரணத்தி னாலோ என்னவோ அங்கு கலை, கலாசார விழுமியங்களைக் கொண்டாக எங்கு பார்த் தாலும் வெண்மையுடன் பண் பாட்டையும் காணலாம்.

என் நினைவுகளில் ஒன்றாக இதைப் பதிக்க முனைகிறேன். தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்ற வாக்கிற்கிணங்க எம்மை வழிநடாத்திய எனது பாடசாலை ஆசிரியர் களையும் எனது தாயாராகிய இராமநாதன் கல்லூரி முன்னாள் தம்பித்துரை கிளாக்கரது மகாளகிய சாவித்திரி வழி தொடங்கி அவரது சகோதரி குகாநந்தநாயகி எனது மூத்த சகே ாதரி நந்தினி சிவராஜன் எனது இளைய சகோதரி ரோகினி வரை அப் பாடசாலை யிலேயே படித்து ஆசிரியைகளாகக் கடமை யாற்றியதற்கு இதை விட வேறு என்ன வேண்டும் அப்பாடசாலையின் பெருமைகூற வார்த்தைகளே இல்லை. அன்று போட்ட விதை விருட்சமாக வளர்ந்து இன்று பூத்துக் குலுங்குகின்றது என்றால் அது எம்மை வழி நடாத்திய தாயாருக்கும் எமது கல்விக்கு வித்திட்ட ஆசிரியர்களையுமே சாரும்.

எதை எடுத்தாலும் தோல்வி காணாது முன்னோக்கிப் போகும் திறனும், பெண்க ளுக்கு என பல வகையான தையல், விளை யாட்டுக்கள், கோலம்போடல், மாலைகட்டு தல், நடன, சங்கீத போட்டிகள், பேச்சுப் போட்டிகள், இப்படி எடுத் துக் கொள்வதற்கு எண்ணற்ற விடயங்களை எமது பாடசாலை எமக்குப் புகட்டி எங்களை இன்று ஒரு எல்லோராலும் போற்றும் அளவு வழி காட் டியுள்ளது எனது பாடசாலை. இனிமையான நாட்கள் என்று நிறையவே உண்டு.

பான்ட் அணியினர்











கல்லூரி அதிபர்களுடன் பான்ட் அணியினர்







எமது வாழ்க்கைக்கு எப்படி நாம் பண்பானவர்களாக வாழ வேண்டும் என்பதற்கு எமது இராமநாதன் கல்லூரியே ஒரு சான்று. எத்தனையோ மாணவிகளை வளர்த்து கல்வி என்னும் அறிவினையும் பண்பாட்டையும் ஊட்டிக் கொடுத்து நல்ல பிள்ளைகளாக, பார்போற்றும் நற் பெண்மணிகளாகத் திகழ எனது பாடசாலை எமக்குச் செய்த சேவையை மனதார நாம் நினைத்த வண்ணமே இருப்போம். இன்று எத்தனையோ இன்னல்களின் மத்தியிலும் பாடசாலையை எனது சகோதரி நந்தினி சிவராசன் உப அதிபராகப் பொறுப்பேற்று கடமையாற்றி வருகின்றார். வாழையடி வாழையாக எமது குடும்பம் இராமநாதன் கல்லூரிக்காக பாடுபட்டுக் கொண்டு தான் இன்றுவரையுள்ளது என்று சொல்வதில் எனக்குப் பெருமையாக இருக்கின்றது.

எனது தாயார் எம்மைப் பண்பாக வளர் த்து தான் படித்த, படிப்பித்த பாடசாலை யிலேயே எம் மூவரையும் சேர்த்து இன்று எல் லோரும் மெச்சும்படி எம்மை ஆளாக்கிய பெருமை எனது தாயாருக்கும் பாடசாலை ஆசிரியர்களுக்கும் சேரும். தாய்வழித்தோன்றி சகோதரிவழி வந்து அங்கே நடன ஆசிரியையாக கடமை யாற்றியமையும் என்னால் மறக்கவே முடியாது. வினோத உடைப்போட்டிகளாகட்டும் நடனப் போட்டிகளாகட்டும் நான் முதல் பரிசினை எனது பாடசாலைக்கு எடுத்துக் கொடுத்து விடுவேன். அதே போன்று தான் எனது சகோ தரியும். இப்பொழுது நினைத்தாலும் என்மனது பின்னோக்கி செல்லுகின்றது திரும்ப அந்த நாட்கள் வராதா என்று ஏங்குகின்றது. எனக்கு நல் அறிவினையும், தன்னம்பிக்கையினையும், விடா முயற்சியினையும் ஊட்டி வளர்த்த எனது பாடசாலைக்கு என்றும் நான் எனது சிரம் தாழ்த்தி வணங்குகிறேன்.

இராமநாதன் கல்லூரி வாழ்க வாழ்க.

# இராமநாதன் கல்லூரியால் வளப்பட்ட என் பரம்பரை....

**திருமதி கருணாநந்தன் தமிழரசி**
B.A. (Hons) University of Jaffna
Dip. in Education (open University)

நம் நாடு அன்னியரின் வசப்பட்டு கலாசார சீரழிவில் சிக்கிவிடுமோ என்ற அச்சப்பட்ட காலத்தில் தான் சைவவள்ளல் சேர். பொன் இராமநாதன் அவர்களால் சைவ சமய மறு மலர்ச்சியின் பொருட்டு நிர்மாணிக்கப் பட்ட மாபெரும் பாடசாலை...... அதுவும் பெண்களுக்கென கட்டப்பட்ட பாடசாலை இராமநாதன் கல்லூரி ஆகும்.

என் பரம்பரையின் இராமநாதன் கல்லூரி மீதான முதல் கால்த்தடம் 1926இல் எனது தாயின் தாயாரான சுப்பையா தெய்வானைப் பிள்ளையால் பதிக்கப்பட்டது. அக்காலத்தில் பெண்களுக்கான கல்வி பெரிதும் மதிக்கப்படாத நிலையில் அவரது கல்விப் பயணம் எட்டு ஆண்டுகள் வரையே தொடர்ந்தது. இருந்தும் பூமிசாஸ்திரம் எனும் பாடத்தில் அவரது அசாதாரண திறமை பல ஆசிரியர்களால் மதிக்கப்பட்டது. கல்வியை அவரால் தொடர முடியாவிட்டாலும் இக் கல்லூரியில் கற்ற கலாசாரம், பண்பாடு என்பன அவர் மூலம் என் தாயாருக்கும் அவரது சகோதரர்களுக்கும் கிட்டியது. எமது குடும்பத்திற்கு ஊரில் தனி மதிப்பிற்கும் மரியாதைக்கும் அதுவே ஆணிவேராய் அமைந்திருந்தது. என்பது நிச்சயம்.

அடுத்த கல்விப் பயணம் எனது தாயாரான கதிரவேலு மங்கையர்க்கரசி அவர்களால் 1957இல் இருந்து 1969வரை தொடரப்பட்டது. இக் காலகட்டத்தில் அவரும் சிறந்த முறையில் கல்வியைக் கற்றார் அவரது தாயாரைப் போலவே பூமிசாஸ்திர பாடத்தில் எனது தாயும் சிறந்த திறனை வெளிக்காட்டினார். அதற்குக் காரணம் அக்கால கட்டத்தில் கல்வியைக் கற்பித்த அங்கையற்கண்ணி ஆசிரியராவார். உயர் கல்வியை இங்கு சிறப்பாகக் கற்று முடித்த அவர் கூட்டுறவுத் துறையில் விசேட கல்வி கற்று முதல் பிரிவில் சித்தி பெற்றார். பாடசாலைக்குப் புகழும் தேடிக் கொடுத்தார்.

தொடர்ந்து 1981இல் இராமநாதன் கல்லூரியில் எனது கல்வி வாழ்வு ஆரம்பமாகியது. 1995 வரை நான் கற்ற காலத்தில் விளையாட்டுத்துறை, கலைத்துறை, கல்வியல்

சார் விடயங்கள் என அனைத்துத் துறையிலும் என்னை வளப்படுத்திய பெருமை இப் பாடசா லையையே சாரும். இங்கு சிறப்பாக கூற வேண்டிய விட யம் ஒன்று உள்ளது. அக் காலத்தில் தமது பிள்ளைகளை நகரத்துக்குப் பாடசாலைகளில் சேர்க்க பெற்றோர்கள் ஆர்வம் காட்டிய போதும்; சைவவமும் தமிழும் வளர்க்கும் இராமநாதன் கல்லூரியில் தான் எனது 3 பெண் பிள்ளைகளும் நிச்சயமாக படிக்க வேண்டும் என்ற எனது தந்தை இலகுநாதனின் கனவு நனவாகியது. நான் 1995இல் இங்கு சிறப்பாக உயர் கல்வியைப் பூர்த்தி செய்து யாழ் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகி அங்கு புவியியல் சிறப்புக்கலையைத் தொடர்ந்தேன். அது மட்டும் அன்றி புவியியல் துறையின் சிறந்த மாணவிக்கான விருதினையும் 2002ல் பெற்று ஏறத்தாழ 11/2 வருடங்கள் அங்கு உதவி விரிவுரையாளராக கடமையாற்றியுள்ளேன். தொடர்ந்து வடமாகாண நகர அபிவிருந்தி அதிகார சபையில் திட்டமிடல் உதவி யாளராக 2006வரை கடமையாற்றினேன். எனினும் ஆசிரியர் தொழில் மீது எனக்கிருந்த ஆர்வம் காரணமாக அத்துறையில் சேர்ந்து இன்று வரை ஆசிரியராக களுத்துறை அம்பலந்துவ முஸ்லீம் வித்தியாலயத்தில் பணிபுரிகிறேன்.

அவ்வாறே எனது மூத்த சகோதரி வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியில் கல்விகற்றுத் தனது வாழ்வை வளப்படுத்திக் கொண்டார். அது மட்டும் அன்றி எனது இளைய சகோதரி தமிழ்வாணி குமாரதாஸ் இக் கல்லூரியிலே கல்வி கற்று புவியியல் சிறப்புக் கலை பட்டம் பெற்று; தான் கல்வி கற்ற பாடசாலையிலேயே ஆசிரியப் பணியைத் தொடரும் நல்ல வாய்ப்பினை பெற்றுக் கொண்டார்.

இன்னும் பாடசாலையைக் கடந்து செல்லுகின்ற ஒவ்வொரு பொழுதும் நிமிடமும் எம்மை வளப்படுத்திய ஒரு கோயிலாகவே அதனை மதிக்கின்றேன். எமது வளர்ச்சி வானின் உச்சத்தினைத் தொட்டாலும் அதற்கான வித்திடப்பட்டது இந்த இராமநாதன் கல்லூரியில் தான் என்று கூறுவதில் மிகுந்த பெருமை அடைகின்றேன். இன்று நூற்றாண்டு காணும் எனது பாடசாலை மென்மேலும் வளர்ச்சிப் பாதையில் செல்ல வேண்டும் அதற்கு நிச்சயம் அந்த நடராஜப் பெருமான் வழிகாட்டுவார்.

# மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியும் சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாரும்

கா. சிவபாலன்

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி இவ்வாண்டு தனது நூறாவது ஆண் டைக் கொண்டாடுகின்றது. இக் கல்லூரியின் ஸ்தாபகர் சைவப் பெருவள் ளல் சேர். பொன். இராமநாதன் அவர்கள். கல்விச் செல்வமும், பொருட் செல்வமும் நிறைந்த பொன்னம்பல முதலியாருக்கும் செல்லாச்சி அம்மையா ருக்கும் திருமகனாக 16.04.1851ஆம் ஆண்டு அவதரித்தவர் இராமநாதன் அவர்கள். இவருக்கு குமாரசாமியும், அருணாசலமும் சகோதரர்கள் ஆவர். சென்னை மாநகரத் திலும் இலண்டன் கேம்பிறிச் சர்வக லாசாலையிலும் உயர்கல்வி கற்று முது மாணிப்பட்டம் பெற்றார். மேலும் சட்டத் துறையில் பரீஸ்டர் பட்டம் பெற்று சட்டத் துறை வல்லுனராக விளங்கினார். நாவல ரின் நீதி இலங்கை பிரதி நிதித்துவம் வரை சென்றது. இதனால் ஆறுமுகநாவலரின் ஆசியினால் சேர். பொன். இராமநாதன் அரை நூற்றாண்டு காலம் இலங்கை சட்டசபையில் உறுப்பினராக அரும் பணியாற்றினார்.

சைவப் பண்பாட்டையும், சைவக் கலாசாரத்தையும் உருவாக்க பெண்களுக் காக மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியை 1913ஆம் ஆண்டு நிறுவினார். அதேபோல ஆண்களுக்காகத் திருநெல் வேலியில் பரமேஸ் வராக் கல்லூரியை 1921ஆம் ஆண்டு நிறுவி னார். இக் கல்லூரியே இன்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமாக மிளிர்கின்றது.

சிவத்தமிழ்ச்செல்வி அம்மையார் சிவ நெறி காட்டிய திருவுடைக் கல்லூரி யான இராமநாதன் கல்லூரியின் மகிமைகள் பற்றி பல்வேறு சந்தர்ப்பங்களில் சொற் பொழிவு செய்திருக்கின்றார். இராமநாத வள்ளலின் பணிகள், லீலாவதி அம்மை யாரின் பணிகள், செனற்றர் நடேச பிள்ளையின் பணி, தாம் கல்வி கற்ற காலம் என்பனவற்றை எல்லாம் விதந்து போற்றி இருக்கின்றார் சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார்.

இவ்வாறாக தமது வாழ்வில் இராம நாதன் கல்லூரி அனுபவம் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்ற சிவத்தமிழ் செல்வி அம்மை யார் அவர்கள்....

"ஈழத்திரு நாட்டின் தமிழர் வரலாற்றிலே வள்ளல் சேர். பொன். இராமநாதன் அவர்கள் கல்விப் பணியிலும், அரசியல்ப் பணியிலும், கடவுட் பணியிலும் முன் னிடம் வகிக்கின்றார். 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இப் பெரியார் ஆற்றிய பணிகள் பொன் எழுத்துக்களால் பொறிக் கப்படத் தக்கவை. அரசியல் ஞானமும், உரையாற்றும் சிறப்பும், தெய்வீக உள்ளமும் இப் பெரியாரை ஈழ வரலாற்றிலே உயர்த் திவிட்டது எனலாம். இவரது பாரியார் லீலாவதிச் சீமாட்டியாருடைய அற்புத மான பணிகளும் இராமநாதன் கல்லூரி வரலாற்றிலே முன்னிடம் வகிப்பவை. சீமா ட்டியின் காலத்திலே நான் இராமநாதன் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் 1941ஆம் ஆண்டு தொடக்கம் 1944ஆம் ஆண்டு வரை ஆசிரியப் பயிற்சி பெற்றேன். இந்தக் காலத்தில் லீலாவதிச் சீமாட்டியார் கல்லூரி முகாமையை ஏற்று நடாத்தி வந்தார். அம்மையாரின் மருகர் கலாநிதி. சு. நடேசபிள்ளை அவர்கள் தொடர்ந்து கல்வி நிர்வாகத்தைப் பரிபாலித்து வந்தார். இந்தக் காலம் இராமநாதன் கல்லூரியின் பொற்காலம் என்று கூறுவது பொருந்தும். கல்லூரி விடுதியில் தங்கியிருந்த மாண விகள் திருவலகிடுதல், திருநந்தவனம் அமைத்தல், திருமாலை கட்டுதல், காலை மாலை கூட்டு வழிபாடு செய்தல், புராண படனம் நடாத்துதல், நடராஜப் பெருமானை காலை மாலை நடைபெறும் பூசையைத் தரிசித்து அருட்பாடல்களைப் பாடுதல் ஆகியவை அந்தக் காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளாகும். காலம் உருண்டோடிவிட்டது........"

31.05.1992 இல் தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் மீது நாட்டு யுத்த நிலைமை காரணமாக குண்டு வீச்சு விமானங்கள் குண்டுகளை வீசிச் சென்று விட்டன. இதனால் துர்க்கை அம்மன் கோவில் நிர்வாகச் செயற்பாடுகள் துர்க்கா புரம் மகளிர் இல்ல செயற்பாடுகள் என்பனவற்றில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. ஆயினும் கோயிற் குருக்கள்மார், பணியாளர்களின் ஒத்துழைப்பினால் கோயில் நித்திய பூசைகள் யாவும் வழமை போல நடைபெற்றது. அவ்வேளையில் துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகள் அவ்விடம் தங்குவதற்குப் பயங்கரமான சூழல் தான் அங்கு ஏற்பட்டது. 4.6.1992 தொடக்கம் துர்க்கா புரம் மகளிர் இல்லப் பிள்ளைகள் 63பேரும், மேற்பார்வையாளர் கள் 4 பேரும் இராமநாதன் கல்லூரியில் உள்ள விடுதியில் சேர்க்கப்பட்டு அங்கேயே கல்வி பயில ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டன. இடம் பெயர்ந்த மகளிர் இல்லம் 1992 முதல் 1997 பிற்பகுதி வரை தங்கி இருந்தனர். இப் பிள்ளைகளை கோழிகள் எவ்வாறு தமது குஞ்சுகளை (பிராந்து) பருந் துகளில் இருந்து காப்பாற்றி வளர்த்தனவோ அதேபோன்று சிவத்தமிழ்ச் செல்வி அம்மை யாரும் இவ் இல்லப் பிள்ளைகளைப் பாது காத்து கல்வி

கற்க வழியமைத்தார். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமே இல்லை. அம்மையார் இன்றைய நவீன கல்வி உலகுக் குச் செல்லாது ஏழைகளின் சிரிப்பினால் இறைவனைக் கண்டவர். இதற்குத் துர்க் காபுரம் மகளிர் இல்லப்பிள்ளைகள் கல்லூரியில் நடைபெறும், பண்ணிசை, பா ஓதல் விளையாட்டு, நடனம், நாடகம் போன்ற அனைத்து நிகழ்வுகளிலும் முதன்மை பெற்றனர்.

சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாரின் பொறுப்பில் மகளிர் இல்லம் மட்டுமல் லாது தேவஸ்தான தலைமைச் செயலகமும் இராம நாதன் கல்லூரியிலே இயங்க வேண்டிய கட்டாய நிலைமை ஏற்பட்டது. இதனால் ஐந்து ஆண்டுகள் சிறியேன் தினமும் 4.00 மணிக்குப் பின்னர் கோயில் சம்பந்தமான கணக்குவழக்குகள், கடிதத் தொடர்புகள், என்பன தொடர்பாக அம்மையாரிடம் சென்று இருக்கின்றேன்.

இராமநாதன் கல்லூரி மிகுந்த கட்டுப் பாடும், சிறந்த ஒழுங்குமாக இயங் கிய கல்லூரி. அங்கே ஆண்களின் நடமாட்டம் தலைக்கறுப்புக் காட்ட முடியாத காலம் ஆக ஒரு காலத்தில் இருந்தது. ஆயினும் கல்லூரி ஆட்சிக்குழுவில் இருந்த தமிழ் அறிஞர் ச. அம்பிகைபாகன், சைவப் பெரியார் ந. சிவப் பிரகாசம் போன்ற பெரியார்களின் அறிமுகத் தால் ஒரு சில தடவை சென்று கல்லூரியைப் பார்த்து இருக்கின்றேன். பின்னர் சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் 1992இல் இடம் பெயர்ந்து இருந்த காலத்தில் இப் புனித கல்லூரியைத் தரிசித்து இருக்கின்றேன். நாங்கள் சென்ற காலம் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரின் பேர்த்தியான மங்கையற்கரசி அம்மையார் அதிபராகப் பணியாற்றினார். அவரைப் பின்தொடர்ந்து 19 ஆண்டுகள் அதிபர் பணியை ஆற்றிய திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் அம்மையார் அதிபராக வந்தார். இவர்கள் இருவர்களுடைய வரவேற்பும் ஆதரவும் சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாரின் பணிகளுக்கு உறுதுணையாயின. இவர்களோடு இங்கு கற்பித்த ஆசியைகளும், பணியாளர்களும், சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாரை மனிதத் தெய்வமாக மதித்தனர். இவர்களின் பெயர்கள் இன்று என் நினைவுக்கு வரவில்லை. ஆயினும் ஒரு சிலரின் பெயர்களைக் குறிப்பிடாமல் விடுவது தவறு அவர்களில் திருமதி கு.அப்புத்துரை, பண்டிதர். வை. கணேசபிள்ளை, திருமதி ப. தியாக லிங்கம், திரு. வை. பாலேந்திரா, திருமதி.ப. பத்மநாதன், திருமதி V.P. சிவநாதன் போன்றோரைக் குறிப்பிடுகின்றேன். இதில் குறைகள் ஏற்படுவதற்கு வருந்துகின்றேன்.

சிவத் தமிழ்ச் செல்வி அம்மையாரும் துர்க்காபுரம் மகளிர் இல்லமும் இராமநாதன் கல்லூரியில் இயங்குவதற்கு உரிய அனுமதிகளைப் பெற கல்விப் பணிப் பாளர் திரு. சு. இரத்தினராசா, உதவிக் கல்விப் பணிப்பாளர், திரு. அ.தற்பரானந்தம் போன்றவர்கள் முன்னி

றனர். இவர்களைப் போன்று அலுவலக உதவியாளர்கள், காவலர்கள் ஆகியவர் களின் உதவிகள் மறக்கப்பாலனவல்ல.

அம்மையார் தாம் கற்ற கல்லூரிக் காகப் பெரும் பணி செய்தவர்களில் ஒருவராக உள்ளார். 30.11.0994 இல் கல்லூரி வளாக முன்றலில் சேர். பொன். இராமநாதனின் சிலை திறந்து வைத் தமையும், 15.03.1998இல் சிவகாமசுந்தரி சமேத நடராசர் கோயில் புனருத்தானம் செய்து மகாகும்பாபிஷேகம் செய்து வைத் தமையும் கல்லூரியின் ஸ்ரீ இராமநா தேஸ்வரர் சிவன் கோயில் கும்பாபி ஷேகம், நித்திய பூசைகளுக்கு உதவி செய்தமை யும் அம்மையாரின் பணிகளுக்குச் சான்று பகர்வனவாகும்.

புலம் பெயர் நாடுகளான கனடா, ஐக்கிய அமெரிக்கா, இங்கிலாந்து, மலே சியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் வாழும் பழைய மாணவர்களும், நண்பிகளும் சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் மீது இன்றும் பற்றுக் கொண்டவராக இருக்கின்றார்கள்.

சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் கல்லூரியின் பெருமையை தம் வாழ்நாள் பூராகவும் போற்றி வந்தார். இதே போன்று கல் லூரிச் சமூகம் சிவத்தமிழ்ச் செல்வி அம்மை யார் வாழ்ந்த காலத்திலும் மறைவிற்குப் பின்னரும் மறவாது இன்றும் முதன்மை அளித்து வருகின்றமை பெருமைக்குரிய தாகும்.

கல்லூரிச் சஞ்சிகைகள் மலர்கள் அனை த்திற்கும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பிவைத் திருக்கின்றார். லேடி லீலாவதி இராமநாதன் அம்மையாரின் நினைவுப் பேருரை செய்து இருக்கின்றார். அவ் உரையினை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் நூல்வடிவம் செய்துள்ளது.

இராமநாதன் கல்லூரிச் சமூகம் சிவத் தமிழ்ச் செல்வி அம்மையாரின் அழைப்பின் பேரில் துர்க்கா புரம் மகளிர் இல்ல ஆண்டு விழா, பரிசளிப்பு விழா, சிவத் தமிழ்ச் செல்வி அம்மா அறக்கொடை விழா போன்ற நிகழ்வு களுக்கு பங்குபற்றிச் சிறப்பிப்பதும் முதன்மை விருந்தினராகவும் வருகை தருவதும் சிறப்பு டையதாகும்.

இராமநாதன் கல்லூரியை அனுதினமும் போற்றி வந்த அம்மையார் இடம் பெயர்ந்த காலத்தில் நடராசப் பெருமாள், சிவகாமி அம்மை, இராமநா தேஸ்வர சிவன் வழிபாட் டில் ஈடுபட்டு பேரானந்தத்தைப் பெற்று இருந்தார். இன்று நூற்றாண்டு காணும் வேளையில் சிவத் தமிழ் செல்வி அம்மையார் இல்லையே என்ற மனக்குறைவு வாட்டு கின்றது. சித்தர் களினால் ஆசிபெற்ற இப் புனித கல்லூரி உலகு உள்ளவும் கல்விப் பெருங் கோயிலாக அமைய பிரார்த்திப்போமாக.

# கல்லூரி ஆசிரியர், மாணவர் கருத்தியல்



# கல்லூரி வரலாறு


**திருமதி சுலோசனா யோகராசா**
B.A. dip. in. Education, M.ED
ஆசிரியர்
யா/ இராமநாதன் கல்லூரி


இந்து சமுத்திரத்தின் முத்தெனத் துலங்கும் இலங்கைத் திருநாடு இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரித்தானிய குடியேற்ற ஆட்சியினுள் கட்டுண்டு இருந்தது. இத்திருநாட்டின் கல்வி, கலா சாரம் என்பன யாவும் மேலைத்தேய கிறிஸ் தவமதக் குழுக்களின் ஆதிக்கத்தினுள் கட்டுண்டு இருந்தது. கிறிஸ்தவ மதகுரு மார்கள் ஒவ்வொரு குடும்பத்தி னுள்ளும் கிறிஸ்தவ சமய ஈடுபாட்டை நிலைநாட்ட முயன்றனர். குடும்பங்களின் ஒளிவிளக் காம் பெண்களுக்கு கிறிஸ்தவ மரபில் கல்வி கற்பித்தல் ஊடாக கிறிஸ்தவ மத ஒளியை ஒவ்வொரு குடும்பத்திலும் ஏற்ற முயன்றதுடன் வெற்றியையும் பெற்றனர். இலங்கையின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணக் குடாநாடும் அந்த வரலா ற்று மாற்றத்திற்குள் உள் வாங்கப்பட்டு மதம், கலாசாரம் குன்றிக் காணப்பட்டது. இந்து மத மக்களின் செயலற்ற நிலையைக் கண்டு மனம் வருந்தி இதனைச் சீர் செய்ய எழுந்தார் தேசிய வீரரான வள்ளல் சேர். பொன். இராம நாதன் அவர்கள். வருங் காலச் சந்ததியின் முன்னேற்றம் கல்வி வளர்ச்சியிலேயே தங்கி உள்ளது என உணர்ந்தார். இப் பெரியார். சைவத்தமிழ்ப் பண்பாட்டுச் சூழலில் குருகுல முறைப்படி எம் குல சைவ மங்கையர் கல்வி பெற வேண்டும், இதன் மூலமே எம் தமிழினம் வளர்ச்சி பெற வேண்டும், எனும் குறிக் கோளுடன் வடபகுதியில் கல்லூரி ஒன்றை அமைக்க முன் வந்தார்.

அமைதியான சூழலில் பெண்களின் கல்வியை மிளிர வைப்பதற்கு கல்லூரியை அமைக்கக் கோப்பாயில் 20 ஏக்கர் நில த்தை கொள்வனவு செய்தார். ஆனால் அவ்விடம் போக்குவரத்துச் செய்வதற்கு வசதிக் குறைவானது எனக் கருதியமை யால் யாவரும் இலகுவாக வந்து செல்லும் வசதி கொண்ட காங்கேசன்துறை வீதியில் மருதனார்மடச் சந்தியிலே 25 ஏக்கர் நிலத்தைக் கொள்வனவு செய்தார். சேர். பொன். இராமநாதனின் நண்பரான மாத்த ளையைச் சேர்ந்த திரு. S.S. கந்தசாமி அவர்கள் பாடசாலையின் கட்டிட வரை படத்தை வரைந்து உதவினார். BLYTHE & CO நிறுவனம் கட்டிடத்தை அமைத்துக்

கொடுக்க முன்வந்தது. சுன்னாகம் மருதனார்மடம் சந்தியில் வாங்கப்பட்ட நிலத்தில் 03.06.1910 காலை 7.00 மணிக்கு கல்லூரிக்கான அடிக்கல் நாட்டப் பட்டது. நூற்றைம்பது அடி சதுரமான முற்றத்தைச் சுற்றி மண்டபம், வகுப்ப றைகள், மாணவர் விடுதி, ஆராதனைக் கூடம் எனச் சகல வசதிகளுடனும் கட்டி டம் நிர்மாணிக்கப்பட்டது.

சைவத் தமிழ்ப் பெண்களின் கல்வி யினை உயர்வடையச் சேவையாற்றப் போகும் இராமநாதன் கல்லூரி ஆரம்பிப் பதற்குரிய சுப வேளை 20.01.1913 இல் அமையப்பெற்றது. அன்று காலை 10 மணியளவில் சம்பிரதாய சடங்குகளுடன் இக் கல்லூரி திறந்து வைக்கப்பட்டது. 'கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்த மிடும் கருணாகரக் கடவுளே திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய்' என்னும் குறிக்கோள் வாசகத்துடன் இக் கல்லூரி தன் சேவையை ஆரம்பித்தது.

அன்றைய காலத்தில் அநேக பாடசா லைகள் சிறிய கட்டிடங்களாகவும், கொட்டில்களாகவும் அமைந் திருந்த பொழுது இராமநாதன் கல்லூரி பாரிய கட்டிடம் உள்ளதாக விளங்கியது. அக்கா லத்தில் வெளியான இந்து ஓகன் எனும் பத்திரிகை 'இராமநாதன் கல்லூரி ஆரம் பிக்கப்பட்டமையானது இலங்கைத் தேசியத்தின் வரலாற்றில் புதிய ஆரம் பத்தை உருவாக்கியதாக இருக்கும்' எனப் பாராட்டியது.

கல்லூரி ஒன்றின் உயர்வும், சிறப் பும், அக்கல்லூரியின் அதிபரின் ஆளுமைச் சிறப்பிலேயே தங்கியுள்ளது. இதை உணர்ந்த இராமநாத வள்ளலின் தேடு தலின் பயனாக இங்கிலாந்தின் இலக்கிய வட்டத்தில் பெரும் மதிப்புப் பெற்ற கல்வியலாளருமாகிய திருமதி புளோரன்ஸ் எமறி அம்மையார் இராமநாதன் கல்லூரி யின் முதலாவது அதிபராகத் தெரிவு செய்யப்பட்டார். அதிபருடன் நல் ஆசிரி யர்களும் நியமிக்கப்பட்டனர். இக் கல்லூரி ஆரம்பமானபொழுது 101 மாண வர்கள் இதில் இணைந்தனர். இக் கல்லூரி அமைக்கப்பட்ட காலத்தில் உயர் கல்வி கற்ற பெண்கள் யாழ்ப்பாணத்தில் இருக்க வில்லை. இதனால் இக்கல்லூரிக்கு ஆசிரி யர்கள் இந்தியா, இங்கிலாந்து போன்ற வெளிநாடுகளில் இருந்தே வந்தனர்.

திருமதி புளோரன்ஸ் எமறி அம்மை யாரின் ஆளுமைச் சிறப்பினால் கீழைத் தேசத்தின் ஒப்பற்ற கல்வி நிறுவனம் எனும் அளவிற்கு இக்கல்லூரி புகழ் பெற்றது. இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் இருந்தும் மலேசியா, பர்மா போன்ற நாடுகளில் இருந்தும் இந்துமதப் பண் பாட்டுடன் குருகுலக் கல்வியின் விழு மியப் பயன் பெறுவதற்குப் பல மாண வர்கள் இக்கல்லூரியை நாடினர். 02.03.1915 இல் இக் கல்லூரியின் பரி சளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக ஆளுநர் றொபேட் சாமஸ் வருகை தந்து சிறப்பித்தார். முதல் அதிபர் 1915 இல்

ஓய்வு பெற்றார். எனினும் இக்கல்லூரியில் காசாளராகப் பணியாற்றி, **1917** இல் காலமானார்.

மாணவனொருவன் ஆன்மீக அறிவியல் பண்புகளுடன் வளர்வதற்கு அவர் சீரிய பண்புள்ள ஆசிரியர்களுடன் கூடி வாழ்ந்து அவர்களை அடியொற்றி நடத்தல் அவசியம் என்ற இந்திய குருகுல வாசக முறையைக் கருத்தில் கொண்டு அமைக்கப்பட்டதே இக் கல்லூரியின் விடுதியாகும். நாட்டின் பல்வேறு பகுதியிலிருந்தும் இங்கு வந்து விடுதியில் தங்கி கல்வி கற்ற மாணவியர் சைவ உணவு உண்டு, சைவநெறி பேணி, தமிழர் தம் கலாசார ஆடை அணிந்து கூந்தலில் மலர் சூடிக் கல்வி பயின்றனர். விடுதியில் ஆலய வழிபாட்டிற்கும் இசைப் பயிற்சிக்கும் சிறப்பிடம் அளிக்கப்பட்டிருந்தது.

இக் கல்லூரியின் கலைத் திட்டம் இந்துமதப் பெண்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் உயர் தரக் கல்வி பெற வேண்டும் எனும் நோக்கில் உருவாக்கப்பட்டது. **1914**ஆம் ஆண்டிலேயே தமிழ் மொழி மூலம் கற்றல் பகுதி உருவானது. சமயம், தமிழ் இலக்கியம், ஒழுக்க நெறி என்பன தமிழில் கற்பிக்கப்பட்டன. ஆரம்பகால மாணவிகள் கேம்பிறிட்ஜ் ஜுனியர், சீனியர் பரீட்சைக்குத் தோற்றினர். பின்னர் இலண்டன் மெற்றிகுலேசன் பரீட்சைக்குத் தோற்றினார்கள். **1914** இல் நடைபெற்ற கேம்பிறிட்ஜ் சீனியர் பரீட்சையில் செனந்தர நாயகி வீராசாமி எனும் மாணவி தோற்றி சித்தி பெற்றார். இவர் தான் முதன் முதல் இக்கல்லூரியில் இருந்து தோற்றி சித்தி பெற்ற பெருமைக்குரியவர். இவர் பின்பு இக்கல்லூரியில் ஆசிரியராகவும் கடமையாற்றினார். இராமநாத வள்ளலாரின் மருமகன் திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் கல்லூரிக் கீதத்தைத் தொகுத்து அளித்தார்.

இராமநாத வள்ளலார் இக் கல்லூரி ஆரம்பமான காலம் முதல் இக்கல்லூரியில் இணைந்திருந்த இல்லத்திலேயே அன்னார் குடும்பத்துடன் வசித்தார். தமக்குப் பின்னரும், தாம் உருவாக்கிய பாடசாலைகள் இடையூறு இன்றி நடைபெற வேண்டும் என்று எண்ணினார். இதனால் பிருந்தாவன் என்னும் தென்னந் தோட்டத்தை குருநாகலிலும், தானிய லட்சுமி என்னும் **1000** ஏக்கர் நெல்விளை நிலத்தை கிளிநொச்சியிலும் கொள்வனவு செய்தார். இவற்றைக் கவனித்து வருமானத்தைப் பாடசாலைக்குச் சேர்க்கும் வண்ணம் ஒரு அறங்காவலர் குழுவையும் நியமித்தார். இக் குழுவின் தலைவராக திருமதி லேடி இராமநாதன் அம்மையார் நியமிக்கப்பட்டார். மேலும் இக் கல்லூரியின் அதிபர், ஆசிரியர்களை நியமிக்கும், நீக்கம் செய்யும் பொறுப்பை அவரிடம் வள்ளல் கையளித்தார்.

இக் கல்லூரியின் இரண்டாவது அதிபராக Miss. M.A. Needaham எனும்

ஆங்கிலப் பெண்மணியே கடமையாற்றினார். இவரின் பின் Mrs. Milicent Mackenzine எனும் அம்மையாரும் 1924 - 1931 வரை இராமநாத வள்ளலின் மனைவி லீலாவதி அம்மையாரும் கடமையாற்றினர். இக் காலத்தில் இக் கல்லூரி பல்வேறு துறைகளிலும் முன்னேறிய போதும் இக் கல்லூரியில் கற்பிப்பதற்குத் தகுதியான பெண் ஆசிரியர்களைப் பெறுவது பெரும் இடர்பாடு நிலவியது. இதனை நிவர்த்தி செய்யும் நோக்கில் சேர்.பொன். இராம நாதன் அவர்கள் 1926இல் ஒரு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையை இராமநாதன் கல்லூரியிலே நிறுவினார். இதன் தலைமை ஆசிரியராக திரு. K. M. விஸ்வலிங்கம் கடமையாற் றினார். இவர் ஓய்வு பெற்ற பின்னர் திருமதி அழகுமுத்து மயில் வாகனம், திரு. A. S. சுந்தரராஜ ஐயங்கார், திருமதி ராஜராஜேஸ்வரி திரு. க. கணேசலிங்கம் ஆகியோர் கடமையாற்றினர். இக்கல்லூரி 1947 இல் மூடப்படும் வரை ஆசிரியர்கள் பலரைப் பயில்வித்து உருவாக்கியது.

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெறும் மாணவிகளின் நலனிற்காக 1926இல் சிரேஷ்ட தராதரப் பத்திர வகுப்பு வரை கற்பிக்கும் ஒரு சாதாரண பாடசாலை இராமநாத வள்ளலால் உருவாக்கப்பட்டது. தமிழ்மொழி மூலம் இங்கு பாடங்கள் கற்பிக்கப் பட்டமையால் இதனை இராமநாதன் தமிழ்ப் பாடசாலை என அழைத்தனர். திருமதி ருக்குமணி வெற்றிவேற்பிள்ளை இதன் அதிபராகக் கடமையாற்றினார். இராமநாதன் கல்லூரியிலும், இராமநாதன் தமிழ்ப் பாடசாலையிலும் கற்றவர்கள் சித்தியெய்தி இராமநாதன் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்று ஆசிரியர்களாகக் கடமையாற்றினர். பின்னர் இப் பாடசாலை இராமநாதன் கல்லூரியுடன் இணைக்கப்பட்டது.

இராமநாதவள்ளல் சமூகத்தின் அநாதைப்பெண்களும் நல்லறிவு பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் அநாதை சிறுமிகளுக்காக அநாதை இல்லம் ஒன்றையும் இக்கல்லூரியில் இயங்கச் செய்தார். இந்துமதப் பெண்கள் அனைவரையும் ஒன்றிணைத்து சமூகப் பணியில் ஈடுபடச் செய்யும் நோக்குடன் 1942இல் "சைவ மங்கையர் சபை"யை உருவாக்கி இதன் தலைவராக லேடி இராமநாதன் அம்மையாரே பணியாற்றினார். 1965ஆம் ஆண்டு வரை இராமநாத வள்ளலின் குருபூசையை இச்சபையே நடாத்தி வந்தது.

இந்து மதப் பெண் கல்வியில் உயர்வு பெற வழியமைத்த சேர் பொன் இராமநாதன் அவர்கள் 24.11.1930இல் இறைவனடி சேர்ந்தார். இவரின் உடல் கல்லூரி வளவில் வைக்கப்பட்டு சமாதி அமைக்கப்பட்டது. இராமநாத வள்ளலின் மறைவின் பின்பும் மனம் தளராது லேடி இராமநாதன் அம்மையார் இராமநாதன் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, இராமநாதன் தமிழ்ப் பாடசாலை, சைவ மங்கையர் சபை, அநாதை இல்லம் யாவற்றையும் சிறப்புற நிர்வகித்தார்.

இவரது பல்முகப்பட்ட சேவையைப் பாராட்டிய இலங்கைப் பல்கலைக்கழகம் 1924இல் நடைபெற்ற முதலாவது பட்டமளிப்பு விழாவில் கலாநிதிப் பட்டம் அளித்துக் கௌரவித்தது.

1932-1936 ஆம் ஆண்டு வரையில் Miss. Veera Flova Carleton எனும் ஆங்கிலப் பெண்மணி அதிபராகக் கடமையாற்றினார். இவரே இக் கல்லூரியில் இறுதியாகக் கடமையாற்றிய ஆங்கிலப் பெண்மணியாவார். 1933 இல் இக்கல்லூரிக்கு ஆசிரியராக அடியெடுத்து வைத்த செல்வி R.R. செல்லையா அவர்கள் 1937 - 1943 ஆம் ஆண்டுவரை அதிபராகக் கடமையாற்றிய முதல் தமிழ்ப் பெண்மணி ஆவார். இவர் காலத்திலேயே இப் பாடசாலை வெள்ளிவிழாக் கண்டது. 1938ஆம் ஆண்டிலிருந்து இக் கல்லூரியில் இயந்திரத் தையல் கலைக்கென பிரத்தியேக வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வந்தன. இதிலே மாணவிகளுக்கு 15 மாத காலப் பயிற்சி வழங்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. செல்வி யோகாம்பிகை சுப்பிரமணியம் என்பவர் இதற்குப் பொறுப்பாக விளங்கினார். 1938ஆம் ஆண்டில் இருந்து இராமநாதன் கல்லூரியில் இருந்து பல மாணவியர் இலங்கை பல்கலைக்கழகத்திற்குச் சென்று உயர் கல்வி பெற்று பட்டதாரிகள் ஆகினர். மாணவி கள் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து வைத்திய கலாநிதிகள் ஆகினர். செல்வி சிவா சின்னத்தம்பி, செல்வி மங்கையற் கரசி கனகசபை, செல்வி வேதநாயகி கணபதிப்பிள்ளை, செல்வி ஸ்ரீஜெயதேவி பொன்னுத்துரை போன்றோர் இராம நாதன் கல்லூரியின் ஆரம்ப மருத்துவப் பட்டதாரிகள் ஆவர்.

1943ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கைப் பல்கலைக்கழக புகுமுக வகுப்புக்களும் H.S.C வகுப்புக்களும் ஆரம்பமாகின. ஆண்டுதோறும் மாணவிகள் பல்கலைக்கழகம் சென்றனர். இதே காலப் பகுதியில் இலண்டன் இளமாணிப் பரீட்சைக்கும், கலைமாணிப் பரீட்சைகளுக்கும் மாணவிகள் பயிற்றப்பட்டனர். 1960ஆம் ஆண்டில் இருந்து பெருந்தொகையான கலைப்பிரிவு மாணவிகள் இங்கிருந்து பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகினர். 1962இல் 27 மாணவியரும், 1963இல் 26 மாணவியரும், 1965இல் 34 மாணவியரும் தெரிவாகினர். இவ் ஆண்டுகளில் இராமநாதன் கல்லூரியே அகில இலங்கையிலும் கலைத்துறை யிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று மிகக் கூடிய தொகை மாணவியரைப் பல்கலைக் கழகம் அனுப்பியது.

இந்தியாவில் பிறந்து யாழ்ப்பாணம் வந்து தக்கதோர் அதிபராக 13 வருட காலம் 1946-1956 அரும்பணி யாற்றியவர் N. P. பிள்ளை. இலவசக்கல்வி இலங்கையில் நடைமுறைக்கு வந்தமையால் மாணவர் தொகை அதிகரித்தது. 1947ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் இக் கல்லூரி முதலாம் தரக் கல்லூரியாகத் தரம் உயர்ந்தது. இக் காலம் முதல் விஞ்ஞானக் கல்வியும் வளர்ச்சி பெறத் தொடங்கியது. இந்தியப் பல்கலைக்கழகங்களில் விஞ்ஞான மாணிப் பட்டம் பெற்ற ஆசிரியை

கள் இங்கு கற்பித்தனர். திருமதி N.P. பிள்ளை அதிபராகச் சேவையாற்றுகையில் தமிழ்ப் பண் பாடு அதிகளவில் பரிமளி க்கத் தொடங்கியது. றோஸ், டெய்சி, ஜஸ்மின், லோட்டஸ், லில்லி, வயலற் எனும் பெயருடன் விளங்கிய கல்லூரியின் இல்லங்களின் பெயர்கள் தமயந்தி, அருந்ததி, சகுந்தலா, ஜான்சி, கண்ணகி, லீலாவதி எனும் புராண இதிகாச நாயகி களின் பெயருடன் மிளிரத் தொடங்கியது.

பல்வேறு துறைகளையும் தன்னிடம் கொண்ட பாரிய நிறுவனம் ஆக விளங்கிய இராமநாதன் கல்லூரியை ஸ்தாபகரின் மறைவுக்குப் பின் நிர்வகிப்பதுடன் இந்துமதப் பண்பாட்டுடன் வாழ்ந்து காட்டிய லீலாவதி இராமநாதன் அவர்கள் 31.01.1953இல் காலமானார். அவரின் பின் இக்கல்லூரியின் நிர்வாகத்தை மகள் சிவகாமசுந்தரியும், மருகர் சு. நடேசபிள்ளை அவர்களும் நடாத்தினர். 1957இல் திருமதி தங்கமுத்து முத்துக்குமாரு என்னும் பெண் மணி கல்லூரி அதிபராகப் பொறுப் பேற்றார். 1963இல் இக்கல்லூரி தன் பொன்விழாவைக் கொண்டாடியது. 01.12.1960இல் வித்தியாபதியின் நிர்வாகத் திற்கு உட்பட்டு இருந்த இக் கல்லூரி 15.07.1962இல் அரசாங்கத்தின் நிர்வாகத் திற்கு உட்பட்டது.

இராமநாத வள்ளலுக்கு இசை, நடனம் முதலிய நுண்கலைகளில் மிக்க ஈடுபாடு உண்டு. இதனை நிறைவேற்றும் பொருட்டு அவரின் இருப்பிடத்தை மையமாக வைத்து 1960இல் இராமநா தன் கல்லூரி வளவில் மருகன் திரு. சு. நடேசபிள்ளை அவர்களால் இராமநாதன் இசைக் கல்லூரி நிறுவப்பட்டது. அன்றைய பிரபல இசைக் கலைஞர் மகாராஜபுரம் விஸ்வநாத ஐயரும் அவரின் மகன் ஸ்ரீ சந்தானமும் இக் கல்லூரியின் தொடக்க கால அதிபர்களாக விளங்கினர். இவ் இசைக்கல்லூரி பின்பு இலங்கைப் பல் கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகத் தின் நுண்கலைப் பீடமாக உள்வாங்கப் பட்டது. இராமநாதன் கல்லூரியில் இயங்கிய நுண்கலைப்பீடம் இன்று தனக்குரிய இடத்தில் சென்று இயங்கு கின்றது.

1964-1969 ஜனவரி வரையில் செல்வி யோகாம்பிகை கனகசபை அதிப ராகக் கடமையாற்றினார். இவர் விடுதி மாணவர்களுக்கு பல வசதிகளை அமைத் துக் கொடுத்தார். பழுதடைந்த நிலையில் இருந்த கட்டிடப் பகுதிகளைத் திருத்தி அமைத்தார். அவரைத் தொடர்ந்து பழைய மாணவியான திருமதி காயத்திரி கணேசன் அதிபரானார். விஞ்ஞானத்தில் பட்டம் பெற்று ஆசிரியையாகப் பணிபு ரிந்த பழைய மாணவி இவராவார். இவரைத் தொடர்ந்து திருமதி இராஜ நாயகம் அருணாசலம் 1969இல் அதிபரா னார், திருமதி லீலாவதி இராமநாதனுடன் இவர் நெருங்கிய தொடர்பு வைத்திருந் தமையாலும் விடுதிச் சாலையில் தங்கியிரு ந்தமையாலும் சேர். பொன். இராமநாத னின் இலட்சியங்களைப் புரிந்துகொண்டு செயற்பட்டார். 1973ஆம் ஆண்டில் வைர விழாவை இக்கல்லூரி கொண்டாடியது. அன்னாரது முயற்சியால் இராமநாதன்

கல்லூரியின் பிரதான மண்டபமான அருணாசலம் மண்டபம் கட்டப்பட்டது. 1969இல் இப் பாடசாலை 803 மாணவர் களையும் 39 ஆசிரியர்களையும் கொண்டி ருந்தது.

1979 இல் 1500 மாணவர்களையும் 61 ஆசிரியர்களையும் கொண்டதாக மாற்றம் பெற்றது. 1970ஆம் ஆண்டின் பின் மொழிவாரி தரப்படுத்தல் காரணமாக பல்கலைக்கழகப் பிரவேசம் பெறும் மாண வர் தொகை குறையத் தொடங்கியது. 1976ஆம் ஆண்டில் இருந்து வர்த்தகப் பிரிவு வகுப்புகளும் நடைபெற்று வருவ தால் இப் பிரிவிலும் மாணவர் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகினர்.

1975ஆம் ஆண்டு முதல் இக்கல்லூரி யில் விழிப்புல வலுவிழந்த மாணவிகள் கல்வி கற்று வருகின்றனர். இம் மாணவிகள் சாதாரண மாணவிகளுடன் இணைந்து கல்வி கற்றனர். 1988 இல் வாழ்வகம் உருவானதிலிருந்து விழிப்புல வலுவிழந் தோர் வாழ்வகத்தில் இருந்து வாகன உதவியுடன் இக் கல்லூரிக்கு வந்து கல்வி கற்கின்றனர். செல்வி ர. ரஞ்சினி, செல்வி தி. ரேகா, செல்வி ஞா. டிவ்வியா, செல்வி மா. ராஜலட்சுமி, செல்வி க. தயாளினி எனும் மாணவிகள் இராமநாதன் கல்லூரி யிலிருந்து பல்கலைக்கழகம் சென்ற வலுவிழந்த மாணவியராவர்.

1980 - 1988 வரை இக் கல்லூரியின் அதிபர்களாக பழைய மாணவிகளான திருமதி யோகலக்ஷ்மி இராஜரத்தினம், திருமதி புவனேஸ்வரி சச்சிதானந்தம், திருமதி ஞானேஸ்வரி சோமசுந்தரம் என்போர் கடமையாற்றினர்.

1987இல் நாட்டில் ஏற்பட்ட அசம் பாவிதங்களால் இக் கல்லூரி பெரிதும் பாதிக்கப்பட்டது. அரசியல் குழப்பம் காரணமாக இக் கல்லூரியில் தங்கியிருந்த 68 மாணவிகளும், ஆசிரியர்களும், ஊழியர் கள் பதின்மரும் அகதிகளாகக் கல்லூரியை விட்டு நீங்கினர். அவர்களுக் குப் புகலிடம், உணவு அளித்து அச்சமயம் பாதுகாப் பளித்தது உடுவில் மகளிர் கல்லூரியாகும். இக் கல்லூரியின் அதிபர் செல்வி S. செல்லையா அவர்களின் காலம் அறிந்து செய்த உதவி என்றும் போற்று வதற்குரியதாகும்.

வான்புகழ் மிக்க மகானும், இலங் கையின் தவப்புதல்வர்களில் ஒருவரான சேர். பொன். இராமநாதனின் நாமத்தைச் சுமந்து 75 வருட வரலாற்றுப் பெருமை மிக்க இக் கல்லூரி 75 நிமிடங்களில் அளிவுற்றது. செல்தாக்குதல்கள், மழை என்பனவற்றால் பெரிதும் பாதிப்ப டைந்தது. 1987இல் அதிபரான திருமதி ஸ்ரீமதி குமாரசாமி அவர்கள் சுடலையாகக் காட்சியளித்த கல்லூரியைக் கோவிலாக மாற்றியமைக்க முயற்சித்தார். 1988 ஆம் ஆண்டு வைகாசி மாதம் கல்லூரியின் நன்மை கருதி, பிராயச்சித்தமும், அன்னதா னமும் செய்து இங்கு இறந்த ஆத்மாக் களுக்கு விஷேட பூஜைகளும், சாந்திக்கிரி யைகளும் செய்து கல்லூரியைத் தூய்மைப் படுத்தினார். இக் கல்லூரியில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் T.R.R.O ஸ்தாபனம் மானிப்பாய் திரு. சுந்தர்சன் நலன்விரும்

பிகள் யாவர்களினதும் அயராத முயற்சி களாலும் இப் பாடசாலை மீண்டும் உயிர்பெற்றது. இச் சமயம் இக் கல்லூரி யில் 1325 மாணவியரும், 57 ஆசிரியர்க ளும் கற்றல் கற்பித்தலில் ஈடுபட்டிருந்தனர்.

1990ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் அளவில் இராமநாதன் கல்லூரியின் அதிபராகப் பழைய மாணவி யான திருமதி மங்கையற்கரசி சிற்றம்பலம் பொறுப் பேற்றார். பல வருடங்களாக இடிபாட டைந்து காணப்பட்ட சமாதி ஆலயத்தை ஆசிரியர்கள், செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி அவர்களின் உதவியுடன் 1992 ஆம் ஆண்டு புரட்டாதி 14ஆம் திகதி புனருத் தாரண அபிஷேகம் செய்வித்தனர். திரு முறை விழாவை முதன்முதல் நடாத்தி வைத்தார். இக் கல்லூரியின் மாணவி களின் சீருடை மாற்றியமைக்கப்பட்டு ஏனைய கல்லூரி மாணவிகளின் சீருடை போல அணியச் செய்தார். 1990இல் இராமநாதன் கல்லூரியின் பவள விழா மலர் வெளியிடப்பட்டது.

திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்கள் 14.09.1992இல் இக் கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்றார். 1995இல் வட இலங்கையில் நடைபெற்ற பாரிய இடப்பெயர்வு பாடசாலையைப் பாதித் தது. இக் காலத்தில் திருமதி சோ. கைலாயநாதன் அவர்கள் அதிபரானார். மீண்டும் 1996இல் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றார். இராமநாத பெரு வள்ளல் சைவ உலகிற்கு உவந்தளித்த இக் கல்லூரியில் இராமநாத வள்ளலின் உருவச் சிலையை அமைத்து சைவப் பெண்களின் நன்றியறிதலை வெளிக்காட்டினார். நீண்ட காலமாக மூடப்பட்டிருந்த இக் கல்லூரியின் விடுதிச்சாலையை இயங்கச் செய்தார். இக் காலத்தில் மாணவர்களின் பெறு பேறுகளும் உயர்வு அடைந்தன. க.பொ.த. (சா.த) 2006இல் செல்வி சர்மிகா அருணந்திசிவம், 2006இல் நிருஷா சிவானந்தசோதி என்போர் 10A பெற்றனர்.

2007இல் சாம்பவி, 2010இல் சங்கீதா சிவானந்தசோதி, ஜசிந்தா சண்முகசுந்தரம், 2012இல் தேவதர்சினி தர்மகுலராஜா என்போர் 9A பெறுபேறுகளைப் பெற்றனர். க.பொ.த (உ.த) 2008 இல் வினுஷா நாராயணன் 3A பெற்று யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இரண்டாம் நிலை பெற் றார். கா.பொ.த. (உயர்தரம்) 2013இல் கொன்சிற்றா கொன்ஸ்ரைன் கலைத்துறையில் 3 A. பெற்றார். 14.02.2011இல் திருமதி வேணுகா சண்முகரட்ணம் அவர்கள் சிறிது காலம் அதிபராகக் கடமையாற்றி இட மாற்றம் பெற்றுச் சென்றார். 26.09.2012 அன்று இக் கல்லூரியின் பழைய மாணவி யான திருமதி கமலராணி கிருஷ்ண பிள்ளை அவர்கள் அதிபராகப் பொறுப் பேற்றார்.

ஒரு ஆணுக்குக் கல்வி கற்பிக்கும் போது ஒரு தனிநபரே கற்பிக்கப்படுகின் றார். ஆனால் ஒரு பெண்ணைக் கற்பிக்கும்

போது ஒரு குடும்பம் முழுவதற்கும் கல்வி கற்பிக்கப்படுகின்றது எனும் மூதுரைக்கு ஏற்ப சைவப் பெண்களுக்கான முதலாவது பெண்கள் கல்லூரியாக உருவெடுத்த இராமநாதன் கல்லூரிக்கு 2013 ஆம் வருடம் அகவை 100 வந்து எய்தியது. இக் கல்லூரியின் பழைய மாணவியர் உல கெங்கும் பரந்து வாழ்கின்றனர். இங்கிலாந் தில் வாழும் பழைய மாணவியர் நலன் விரும்பிகள் இப் பாடசாலையைப் புனரமைக்க மனம் கொண்டனர். அன்று திரட்டிய நிதியினை திரு. ந. சச்சிதானந்தன் என்பவர் மூலம் அவரின் மேற்பார்வையில் பாடசாலையைப் புனரமைக்க அனுப் பினர். இதன்மூலம் நீண்டகாலமாக கவனிக்க முடியாதிருந்த பாடசாலையின் கட்டடங்கள், சுற்றாடல்கள் புனரமைக் கப்படுகின்றன. இக் கல்லூரியின் சமாதி ஆலயம் சேர். பொன். இராமநாதன் அறக்கட்டளை மூலம் புனரமைக் கப்பட்டு புனருத்தாரண அபிஷேகம் 02.07.2013இல் மேற்கொள்ளப்பட்டது. இராமநா தேஸ்வர சுவாமி வீதி வலம் வரத்தக்க சகடைத்தேர் திருமதி பு. கனகலிங்கம் ஆசிரியரால் உருவாக்கி அளிக்கப்பட்டது. நூற்றாண்டு விழாக் கொண்டாடும் இக் காலத்தில் கல்லூரி பல்வேறு முன்னேற்றங்களையும் கண்டு ள்ளது. இக் கல்லூரி மாணவி செல்வி கீதான்ஜனி பொன் ஞானந்தம் சுற்றாடல் முன்னோடிக்கான ஜனாதிபதி தங்கப்பதக் கத்தினை வென்ற முதல் தமிழ் மாணவி யாகத் திகழ்ந்தார். இவ் வருடம் பல்கலைக் கழகத்திற்கு 7 மாணவியரும், கல்வியியல் கல்லூரிக்கு 3 மாணவியரும் தெரிவா கினர். சுறுசுறுப்பு மிக்க அதிபர் திருமதி கமலராணி கிருஷ்ணபிள்ளை அவர்களின் சிறந்த நிர்வாகத்தால் இக் கல்லூரி புத்துயிர் பெற்று இராமநாத வள்ளலின் சிந்தனை யின் செயல்வடிவத்தை உயர்வு பெறச் செய்கின்றது.




# பூகோள சூடேற்றமும் பச்சை வீட்டு வாயுக்களும்

திருமதி. கோமளரஞ்சிதம் கந்தவேள்
யா / இராமநாதன் கல்லூரி

*அன்று இயற்கையுடன் இயற்கையாக வாழ்ந்த மனிதனை விஞ்ஞான வளர்ச்சி, தொழில்னுட்ப முன்னேற்றம், புதிய கண்டு பிடிப்புக்கள் என்பன இயற்கைக்கு எதிரியாக மாற்றிவிட்டது. தொழிற்சாலைகள் அதிக ரித்தன. வாகன போக்குவரத்து அதிகரித்தது. கைத்தொழில் புரட்சி வெடித்தது. விளைவாக காபனீரொட்சைட்டு ($Co_2$) செறிவு அபரிமித மாக வளிமண்டலத்தில் திரட்சியடைய, உலகளாவிய ரீதியில் வெப்பநிலை அதிகரி த்தது. புவி வெப்பநிலை அதிகரித்தல் இன்றைய சந்ததியினருக்கு புதிய சவாலாக அமைந்துள்ளது.*

*புவி வெப்பநிலை பத்து வருடங்களுக்கு ஒரு முறை 0.1°C ஆல் அதிகரித்து வருகின்றது. அடுத்து வரும் 10 ஆண்டு காலப் பகுதியில் இந்த அதிகரிப்பு 1.4°C - 5.8°C ஆகுமென விஞ்ஞானிகள் எதிர்வு கூறுகின்றனர். துணைக் கோள்கள், ஆர்க்டிக் வட்டாரத்தைக் கண்காணித்து பூகோள சூடேற்ற தாக்கத்தை மெய்ப்பித்திருப்பதுடன் அடுத்துவரும் 100 ஆண்டுகளில் முந்தைய காலத்தை விட 8 மடங்கு வேகத்தில் வெப்பச்சீற்றம் ஏற வாய்ப் புள்ளதென திடுக்கிடும் தகவல் ஒன்றையும் தந்திருக்கின்றன.*


*ஒவ்வொரு வருடமும் கடல்மட்டம் 3mm இனால் அதிகரித்து வருகின்றது. 1979ஆம் ஆண்டு முதல் துருவப் பனிப் பாறை கள் ஒவ்வொரு ஆண்டும் 1% கொள்ளளவு வீதத்தில் உருகி வருகின்றன.*



மேலும் அமெரிக்காவில் 2005ஆம் ஆண்டில் அடித்த ஹட்ரீனா, ஹரிக்கேனல் கடலும் நீர் வெள்ளமும் மீறி மூழ்கிய நியூ ஆர்லியன்ஸ் நகரைப் போல அகில நாடுகளிலுள்ள 15 பெரிய நகரங்களில் 11 நகரங்கள் கடற்கரையிலேயே உள்ளன. அத்துடன் உலகில் 70வீத மக்கள் கடற்கரைப் பகுதியிலேயே வாழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



300 ஆண்டுகளாக கனடாவில் வட கோடி ஆர்க்டிக் பகுதியில் துருத்திக் கொண்டிருந்த ஒரு பூதாகாரமான பனிக்குன்று பூகோள சூடேற்றத்திற்குப் புதிய சான்றாக உடைந்து கடலில் கரைந்து விட்டது.



ஆர்க்டிக்கின் மிகப்பெரும் பனிப்புடைப்பான இப் பனி மதில் உருகல் நூற்றாண்டுகளாக படிப்படியயாக ஏறிய வெப்பமும் 1960களின் பின்னரான திடீர் வெப்பநிலை உயர்வுமே முக்கிய காரணமென விஞ்ஞானிகள் கருத்துரைக்கின்றனர்.


2050ஆம் ஆண்டளவில் உலக சனத்தொகை 9.1 பில்லியனாக ஏறப்போகின்றது. இதன் காரணமாக எரிபொருள், உணவு, நீர்வளம், நிலவளம் என சக்தித் தேவை பன்மடங்கு அதிகரித்து, பூகோள சூடேற்றத்தினை மென்மேலும் மிகைப்படுதப்போகிறது. இதன் காரணமாக உலகம் பேரிடர்களை எதிர்கொள்ளப்போகின்றது. வெப்ப அலைகளாலும் பெரும்புயல், சூறாவளி, வரட்சி, பெருமழை என்பவற்றாலும் கரையோர பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்குவதனாலும் மாசடைந்த இரசாயன சேர்வைகள் கலந்த நீரினால் பல்வேறு தொற்றுநோய்கள் ஏற்படுவதாலும் நிலத்தடி நீர் வற்றிக்கொண்டே செல்வதனாலும் 40 வருடங்களுக்குள் மிக மோசனமான ஆபத்துக்களை புவிவாழ் அங்கிகள் சந்திக்கப் போகின்றனன. இப் பூகோள சூடேற்றத்தில் முக்கிய பங்கு வகிப்பவை சூரிய கதிர்வீசலும், புவியிலிருந்து மனித செயற்பாடுகளினால் வெளியேற்றப் படும் வாயுக்களுமே ஆகும்.

சூரியனின் வெப்பநிலை சீராக சுற்றிலும் நிலைபெற பிரமாண்டமான ஒரு வாயுக்

கோளம் பூமிக்குக் குடைபிடித்து வருகின்றது. இதனால ஞாயிற்று கதிர்வீசலில் புவியை வந்தடைகின்ற வெப்ப கதிர்களில் குறிப் பிட்டளவு கதிர்கள் புவியை ஊடுருவிதல் தடை செய்யப்படுகின்றது. புவியைச் சூழக் காணப்படும் இவ் வாயுக்குடையில் வாயுக் களின் கொள்ளவு கூடிக் குறையும் போது பூமியில் படும் பரிதியின் உஸ்ணமும் கூடிக் குறைகிறது. இந்த வாயு மண்டலத்தில் இயற்கையூட்டிய வாயுக்கள் தவிர காடழிப்பு, நகர மயமாக்கல், அதிகரித்த வாகனப் பாவனை, அகழ்வு நடவடிக்ககைகள், அணுப் பரிசோதனை, எரிபொருட்கள், தொழிற் சாலைப் புகை போக்கிகள் போன்றவற்றால் வெளியேற்றப்படும் $CO_2$, $CH_4$, CFC, $N_2O$, $SF_6$ போன்ற வாயுக்களுடன் நீராவி, தூசுதுணிக்கைகள் என்பனவும் மிகையாகும் போது புவி வெப்ப சேமிப்பும் மிகுதியாக உஸ்ணமும் அதிகரிக்கின்றது. காரணம், இவ் வாயுக்கள் சூரிய கதிர்ப்பின் வெப்பத்தை உறிஞ்சல் செய்வதாலும் புவிமேற்பரப்பினால் வளிமண்டலத்தை நோக்கி கதிர்க்கப்படும் (எதிர்க்கதிர் வீசல்) வெப்பத்தினை தடுப்பதனால் வளிமண்டல வெப்பநிலையும் புவி வெப்பநிலையும் உயர்வடைகின்றது.

குளிர்ப் பிரதேசங்களில் சில தாவரங்கள் வளர்ச்சிக்கு தேவையான வெப்பத்தை பேணும் பொருட்டு அமைக்கப்படும் கண்ணாடியிலான வீடுகள் பச்சைவீடுகள் (Green houses) எனப்படும். இந்தப் பச்சை வீடுகளின் கூரைகள் போன்று வெப்பத்தை அண்ட வெளிக்குக் கடத்தாமல் இவ் வாயுக்கள் போர்வையாக செயற்படுவதனால் இவை பச்சைவீட்டு வாயுக்கள் எனப்படும்.


பச்சை வீட்டு வாயுக்கள் மிக அதிக



ளவில் புவியிலிருந்து வெளியேற்றப்பட்டுக் கொண்டிருப்பது $CO_2$ ஆகும். இது போக்கு வரத்துச் சாதனங்களில் பயன்படுத்தப்படும் எரிபொருட்கள், வீடுகளில் பாவிக்கப்படும் எண்ணெய், விறகு கழிவுப் பொருட்களில் இருந்து பெறப்படும் எரிபொருட்கள், ஏனைய சுவட்டு எரிபொருட்கள், மின்சாரம், நீராவி உற்பத்தி நிலையங்களில் பயன்படும் நிலக்கரி என்பன எரிவதனால் வளிமண்டலத்திற்கு சேர்க்கப்படுகின்றது. காடழித்தலின் நேரடி

விளைவு $CO_2$ செறிவு வளி மண்டலத்தில் அதிகரித்தலாகும். இக் $CO_2$ அதிகரிப்பே


பூகோள சூடேற்றத்தை அதியுயர் வேகத்தில் மிகைப்படுத்திக் கொண்டிருக்கிறது.




பச்சை வீட்டு வாயுக்கள் அடுத்து குறிப்பிடத்தக்கது CFC. (குளோரோ புளோரோகாபன்) இது குளோரின் கொண்ட சேர்வைகள், புரோமின் சேர்வைகள், நைதரசன் ஒட்சைட்டுக்கள், வெப்பத்தணிப்பு முறைகள் (AC) வெளியிடம் ஹலோ காபன்களிலும் வளிபதனிகள், வாசனைப் பொருட்கள் விசிறுகருவிகள்(Perfume) என்பவற்றின் மூலம் வெளியேற்றப்படுகின்றது. CFC உறைய வைக்கும் தொகுதிகள், குளிரூட்டிகள், எரசோல்கள், கரைப்பான்கள் என்பவற்றில் பாவிக்கப்படும் ஒரு பொதுவான தொழில் உற்பத்திப் பொருளாகும்.


மொன்றியில் உடன்படிக்கையினைத் (1987) தொடர்ந்து உலகளாவிய ரீதியில் CFC வெளியீட்டினை தவிர்த்தலுக்காக காபன் நாற்குளோறைட்டு, மீதைல் குளோரோபோம், மீதைல் புரோமைட்டு ஆகியவற்றினைக் கட்டுப்படுத்த அல்லது குறைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. குளிர்சாதனப் பெட்டி உற்பத்தித்துறை, எரசோல் உற்பத்தித் துறை என்பவற்றில் CFC தவிர்க்கப்படுதலும் குறிப்பிடத்தக்கது.

பச்சை வீட்டு வாயுக்களில் ஒன்றான $N_2O$ அசேதன உர உற்பத்தி, சேதனப்பொருட்களின் தகனம், வாகன எரிபொருட்கள், விண்கலங்கள், ரொக்கட்டுகளினால் வெளியேற்றப்படும் புகைகள் என்பவற்றின் மூலம் வளிமண்டலத்தில் சேர்க்கப்படுகின்றது. $N_2O$ பச்சை வீட்டு வாயுவாக காணப்பட்டு பூகோள சூடேற்றத்தில் பங்கு கொள்வது மட்டுமன்றி சுவாசத் தொகுதியை பாதிப்படைய செய்யக் கூடிய நச்சுத்தன்மையான ஒரு வாயுவாகும்.




பச்சை வீட்டு வாயுக்களின் மற்றொரு விளைவு ஓசோன் வெறிதாக்கல் ஆகும்.

வளிமண்டலத்தில் நடைபெறும் பிரதான மாற்றங்களில் ஒன்று ஓசோன்படை குளிர்வடைந்து செல்வதாகும். இதற்கு புவிமேற்பரப்பின் எல்லா வெளிப்போக்குகளாலும் வெளியேற்றப்படும் பச்சைவீட்டு வாயுக்களே காரணமாகின்றன. இவ்வாறாக ஓசோன்படை குளிர்வடையும் போது (குறிப்பாக குளிர்காலத்தில்) முகில்கள் ஓசோன்படையில் உருவாகின்றது. இதன் போது நிகழும் இரசாயன மாற்றங்களில் பிரதானமானது CFC வாயு, சூரிய சக்தியை உறிஞ்சி பிரிகையடைவதால் உருவாகும் குளோரின் அணுக்கள் ஓசோனை அழிவடையச் செய்தவதாகும். இது ஓசோன் வெறிதாக்கல் எனப்படும்.




இவ்வோசோன் வெறிதாக்கல் (அழிவு) காரணமாக புறவூதா கதிர்கள் வடிக்கப்படாது நேரடியாகப் புவியை வந்தடைவதால் மிகப் பாரதூரமான விளைவுகளை புவிவாழ் அங்கிகள் சந்திக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அதாவது இன விருத்தி பாதிப்படையும், உயிரின செல்கள் சிதைவுறும், தோல் நோய்கள் ஏற்படும், கண்படல நோய்கள் ஏற்படும், கான்சர் உருவாக வழிவகுக்கும்.




WHO அறிக்கையொன்று ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் அசுத்த வாயுக்களை சுவாசிப்பதால் வருடாந்தம் 1.5 மில்லியன் மக்கள் மடிகின்றனர் எனக் கூறுகின்றது. குறிப்பாக வீட்டு எரிபொருட்களாக பாவிக்கப்படும் விறகு, எண்ணெய்கள், நிலக்கரி, ஏனைய எரிசக்தி முதல்கள் மூலம் வெளியாகும் அசுத்த வாயுக்களால் மடியும் இம் மக்கள் தொகையில் 800,000 குழந்தைகளாகும் என சுட்டிக் காட்டுகின்றது.

*21*ஆம் நூற்றாண்டின் முடிவில் பச்சை வீட்டு வாயுக்களின் பெருக்கத்தால் பூகோள உஸ்ணம் 6°F ஆல் ஏறிவிடும் என உலக உடல்நல பேரவை மதிப்பீடு செய்துள்ளது.


சமீபத்தில் இப்பேரவை வெளியிட்ட புள்ளி விபரங்களின்படி சூழ்வெளிக் காலநிலைப் பாதிப்புக்களால் மனிதருக்கு ஏற்படும் 5 மில்லியன் வேறுபட்ட நோய்களில் 150,000 நபர்கள் ஒவ்வொரு ஆண்டும் மரணம் அடைகின்றனர். 2000 ஆண்டுகளில் பூகோள சூடேற்றத்தால் கணிப்பிடப்பட்ட உடற் பாதிப்புக்களும் இழப்புக்களும் 2030ஆம் ஆண்டளவில் இரட்டிப்புக்கு மேலான எண் ணிக்கையில் அதிகரிக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளது.

பூகோள சூடேற்றம் காரணமாக இயற்கை சமநிலை குழப்பப்படுகிறது. இதனால் உயிர்ப் பல்வகைமை மிக மோசமாக பாதிக்கப் பட்டுள்ளது. புவியில் இதுவரை எத்தனை வகை உயிரினங்கள் வாழ்கின்றன என கண்டுபிடிக்கப்படவில்லை. எனினும் 5-100 மில்லியன் உயிரின வகைகள் வாழ்கின்றன எனக் கருதப்படுகிறது. ஆனால் 2050 ஆம் ஆண்டளவில் உலகளாவிய ரீதியில் காணப் படும் உயிர்ப்பல்வகைமையில் 0.25% பூகோள சூடேற்றம் காரணமாக அழிந்துவிடுமென Journal nature பற்றிய 2004ஆம் ஆண்ட றிக்கை தெரிவிக்கின்றது. அதாவது அடுத்த நூற்றாண்டுகளில் உயிர்ப்பல்வகைமையின் 10 - 43% அழிவடைந்து விடுமென சுட்டிக் காட்டப்படுகிறது.

புவியில் வெளியேற்றப்படும் பச்சை வீட்டு வாயுக்கள் 25% ஆனவை போக்கு வரத்து சாதனங்கள் மூலமாகவே வெளியிடப் படுகின்றன. இவ் எரிசக்தி பாவனையைக் கட்டுப்படுத்துவதன் மூலம் பச்சை வீட்டு வாயுக்கள் வெளிப்படுவதை 10% ஆல் குறைக்க முடியும் என்றும் சிறந்த கட்டட வடிவமைப்பின் மூலம் 60% சக்தி சேமிப்பு சாத்தியமாகும் என்றும் ஆய்வுகள் கூறுகின்றன.



இன்று மேற்குலக நாடுகள் பூகோள சூடேற்றத்தினைக் குறைக்க பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுக்கின்றன. இந்த வகையில் பல்வேறு மர நடுகைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுபட்டுவரு கின்றன. தனியார் வாகனங்கள் குறைக்கப் பட்டு பொதுப் போக்குவரத்து சாதன்ங்கள் (Public Transport System) மட்டுமே பெருமளவில் சேவையில் ஈடுபடுகின்றன. காற்றுசக்தி, சூரிய சக்தி மூலம் மின்சாரத்தை பெற்றுக் கொள்ளும் பாரிய திட்டங்கள் மேற்கொள்ளப்படுகி ன்றன.




இவ்வாறு உலகளாவிய ரீதியில் பச்சை வீட்டு வாயுக்களின் வெளியேற்றத்தினை REduce, Re - use, Recycle ஆகிய மூன்று செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலம் கட்டுப்படுத்த முடியும். அதாவது பச்சை வீட்டு வாயுக்களின் வெளியேற்றத்தினை இழிவாக்குதல், வெளியேறும் வாயுக்களை வளிமண்டலத்தில் சேர்க்காது மீள்பாவனைக் குட்படுத்தல், மீள்சுழற்சிக்கு உட்படுத்தல், ஆகிய செற்பாடுகளின் மூலமே எதிர்காலத்தில் மனிதர்கள் எதிர்கொள்ளப் போகின்ற பேரிடர்களைக் குறைக்க முடியும். எனவே ஒவ்வொருவரும் இயற்கையை நேசிப்பதுட்ன் அதன் சமனிலையைப் பேண ஆத்மாத்தமாக சிந்தித்துச் செயற்படுவதன் மூலம் வாழ்வதற்கு உகந்த ஒரே கோளான புவியை பேணிக் காப்போமாக.

# "ஈழத்து மகாகவி" து. உருத்திர மூர்த்தி ஒரு நோக்கு

**தி. விக்னேஸ்வரன்**
ஆசிரியர்
யா/இராமநாதன் கல்லூரி
மருதனார்மடம்

தமிழ் நாட்டில் கவிதை வரலாற்றில் ஒரு புத்துயிற்பினை ஊட்டிய பெருமைக்குரிய வராக மகாகவி சுப்பிரமணிய பாரதியார் திகழ்ந்தாரோ அதுபோல் ஈழத்து தமிழ்க் கவிதை வரலாற்றில் ஒரு புத்துயிர்ப்பினை ஏற்படுத்திய பெருமையையும் சிறப்பினையும் உடையவராகத் திகழ்ந்தவர். மஹாகவி .து. உருத்திர மூர்த்தி ஆவார். இவர் ஈழத்து நவீன தமிழ்க் கவிதை முன்னோடிகளுள் முக்கிய மானவராகக் கருதப்படுகின்றார். இவர் கவிதையின் உருவத்திலும், உள்ளடக்கத்திலும் பல புதுமைகளை புகுத்தியுள்ளார். மனித வாழ்க்கையின் ஓர் ஆழமான நம்பிக்கை யையும், மனிதாபிமானத்தையும் அவர் தம் கவிதைகளில் வெளியிட்டார். சாதாரண மக்களின் வாழ்வியலை கவிதைப் பொருளா கக் கொண்டவர் புதிய காவியங்கள் பா நாட கங்கள் ஆகியவற்றின் வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்டவர். பழைய யாப்பு வடிவங் களைப் பேச்சோசைப் பாங்கில் எளிமைப் படுத்தியவர். மக்கள் வாழ்வியலில் அன்றா டம் பயன்படுத்தும் கிராமிய வழக்கு சொற்க ளைத் தம் கவிதைகளில் கையாண்டார். தனி மனித அவலத்தை வெளிக் கொணர்வதில் பாரதியிலும் விஞ்சிக் காணப்பட்டார். இக் காரணங்களினால் ஈழத்து தமிழ்க்கவிதை வளர்ச்சியில் மஹாகவி முக்கிய இடத்தினைப் பெறுகின்றார்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பக் காலங்களில் சமயமே இலக்கியத்தின் முக்கிய பாடுபொருளாக இருந்து வந்தபோதும் சம கால சமூகத் தேவைகளையும், பிரச்சனை களையும் நோக்கும் தன்மை ஈழத்துக் கவிதை களில் இடம்பொறத் தொடங்கின. இம்மாற் றத்தின் முன்னோடிகளாக பாவலர் துரையப் பாபிள்ளை, ப.கு. சரவணபவன், நல்லதம்பிப் புலவர், சோமசுந்தரப்புலவர் என்போரைக் கொள்ளலாம். இம் மாற்றங்களின் வழி மேற் கிளம்பிய ஈழத்துக்கவிதை என்னும் ஒரு மரபுக்கு வித்திட்டவராக நாம் மஹாகவியைக் கொள்ளலாம்.

இவருடைய சமகாலத்தில் கவிதை படைத்தவர்களில்

* மஹாகவி - 1927 - 1971
* நீலாவணன் - 1931 - 1975

* முருகையன் - 1935 - 2009

என்போர் முக்கியமானவர்களாகக் கொள்ளப்படுகின்றனர். இவர்கள் 1950 - 1980 இடைப்பட்ட காலத்தில் படைப்புக்களின் அளவிலும் தரத்திலும் இலங்கையின் ஏனைய கவிஞர்களை விட உயர்ந்து நிற்கின்றார்கள். மூவரிலும் யார் சிறந்தவர்கள் என்பதில் அறிஞர்களிடையே கருத்து முரண்பாடுண்டு.

அளவெட்டியில் 1927 - 01 - 09 இல் பிறந்த இவர் 1940களில் "கிராம ஊழியனில்" ஆரம்பித்து, வரதரூபன்"தேனி", "மறுமலர்ச்சி"யில் இணைந்து விஜயபாஸ்கரனின் "சரஸ்வதியுடன்" ஊடாடி ஈழகேசரி, வீரகேசரி, சுதந்திரன், விவேகி, தேனருவி என ஈழத்துப் பேரேடு, சிற்றேடுகளில் தன் கவிதையை மனம் திறந்தவர்.

இவர் முதலில் பண்டிதன் என்னும் புனைபெயரிலும் பின்னர் மாபாடி, காப்பியாற்றூக் காப்பியனார், மஹாலட்சுமி, பாணன், வாணன், புதுக்கம்பன், புதுநாப் புலவன், போன்ற புனைபெயரிலும் கவிதைகள் எழுதியுள்ளார்.

இவர் சிறுசிறு கவிதைகளையும் எழுதியுள்ளார். வேதாந்தம், பிரமசாரி, பரமசிவம், ஈகை, உலகம் கோணலானது, நஞ்சு போன்றவை இவற்றுட்சில. எனினும் இவர் கவிதைத்துறையையே தனதாக்கிக் கொண்டார். சுமார் முப்பது வருடஙககளாக அவர் தமிழ்க் கவிதையை வளம் படுத்தி வந்துள்ளார். நூற்றுக்கணக்கான கவிதைகளும், இசைப் பாடல்களும், காவியங்களும், பாநாடகங்களும் எழுதியுள்ளார்.

மஹாகவியின் கவிதைகள் தனித்துவமானவை, இன்றைய நடைமுறை வாழ்க்கையை யதார்த்த பூர்வமாக கவிதையில் சித்தரித்து காட்டியமை தமிழ் கவிதைக்கு மஹாகவி வழங்கிய முக்கியபங்களிப்பு ஆகும். அதற்காக கவிதைக்கு என்று புதியவரை விலக்கணத்தை

"இன்னவைதாம் கவிஎழுத
ஏற்றபொருள் என்று பிறர்
சொன்னவற்றை நீர் திருப்பிச்
சொல்லாதீர்; சோலை, கடார்
மின்னல் முகில், தென்றலினை
மறவுங்கள், மீந்திருக்கும்
இன்னல், உழைப்பு, ஏழ்மை, உயர்வு
என்பவற்றைப் பாடுங்கள்"

என வகுத்துக் கொண்டார்.

இதற்கமைவாக காதலியின் பிரிவுத் துயர் பற்றிய ஒரு கவிதையில்

"வீட்டுக்குப் பின் புறத்தில்
வேப்பமரத்தருகில்
ஆட்டுக்கொட்டில் - அதனருகில்
நீட்டுமைக்கூந்தல் அவிழ்ந்துவிழக்
கூம்பிய....."

எனப் போகிறது பாடல். இவ்வாறு அன்றாடம் காண்கின்ற, பயன்படுத்துகின்ற சொற்களை பேச்சோசை பாங்கில் கவிதை புனைவதில் அவருக்கு நிகர் அவரே.

இவர் நகரப்புற நாகரீகத்தினால் ஒதுக்கித் தள்ளப்பட்ட பிச்சைக்காரர்கள், விவசாயி

கள், திருடர்கள் முதலியோர் இவரது சில கவிதைகளில் அனுதாபத்தோடு சித்தரித்துக் காட்டியுள்ளார். சீமாட்டி, விட்ட முதல், வீசா தீர், திருட்டு முதலிய கவிதைகள் இத்தகையன. நகர்ப்புற மத்தியதர வர்க்கத்தினரது வாழ்வும், மனப்பாங்குகளும் கூட இவரது கவிதைகளில் சித்தரிக்கப்பட்டுள்ளன. இதற்கு எடுத்துக் காட்டாக "ஒரு சாதாரண மனிதனது சரித் திரம்" எனும் கவிதையைக் கொள்ளலாம்.

மஹாகவியின் ஆரம்பகாலக் கவிதை கள் யாழ்ப்பாண கிராமமக்களை, மக்களின் வாழ்வியல்புகளை, இன்பதுன்பங்களை பாடுவதாகவே இருந்தது."கிராமியத்தை மஹாகவிபோல் கவிதைகளில் வெளிக் கொணர்ந்த பிறிதொரு கவிஞர் இல்லை எனலாம்" - என்கிறார் பேராசிரியர் எம். ஏ. நுஃமான் அவர்கள்.

தனிக் கவிதைகள் தன்னுணர்ச்சிக் கவிதைகள் என்று ஆரம்பத்தில் பாடினாலும் பிறகு ஏறத்தாழ அறுபதுகளில் மானுட வாழ்வை ஒரு பெரும்பரப்பில் நோக்கும் தன்மை அவரிடம் மேலோங்கிக் காணப் பட்டது.

"மீண்டும் தொடங்கும் மிடுக்கு....." எனும் கவிதையில் தான் வாழ்ந்த கிராமத்து உழவர்களின் கடினமான உழைப்பையும், எத்தகைய துன்பம் ஏற்பட்டாலும் தன்னம்பிக் கையுடன் கூடிய விடாமுயற்சியும், சலிப்போ, வெறுப்போ அடையாது போராடும் மனோ வலிமையும், மனோதிடமும் கவிஞரின் அனுபவ உணர்வின் ஊடாகக் கூறப்படுகிறது. இக்கவிதையில் சோகம், கோபம், பெருமிதம், வியப்பு ஆகிய உணர்வுகள் மேலோங்கி இருப் பதைக் காணலாம். இவ்வாறு கதிதையினூ டாக மனித வாழ்க்கையில் ஓர் ஆழமான நம்பிக்கையையும் மனிதாபிமானத்தையும் ஏற்படுத்தியவர்.

ஆங்கிலத்தில் ஐந்து வரிகளில் ஒரு குறிப்பிட்ட யாப்பு முறையில் அமைந்த கவிதைகளை லிமரிக் (LIMERICK) என்று அழைப்பர். இத்தகைய கவிதை முயற்சியை தமிழில் அறிமுகப்படுத்த வேண்டும் என்று மஹாகவிக்கு ஏற்பட்ட உந்துதலி விளைவே "குறும்பா"வாகும். இத்தகைய குறும்பாக் களின் நூறைத் தொகுத்து "மஹாகவியின் குறும்பா" எனும் தலைப்பில் 1966 இல் எம். ஏ. நுஃமான் தொகுத்து வெளியிட்டார். இக்குறும்பா எனும் வடிவம் தமிழுக்குப் புதியது. எனவே இக்குறும்பாவை அறிமுகம் செய்து வைத்த பெருமை மஹாகவியையே சாரும்.

இவரின் கண்மணியாள் காதை 1966 இல் எழுதப்பட இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்டு 1967 இல் வில்லுப்பாட் டாக மேடையேறியது. யாழ் அன்னை வெளி யீட்டகம் 1968 இல் நூலாக வெளியிட்டது.

இவர் மேடையேற்றுவதற்கென பல நாடகங்களை எழுதியிருக்கின்றார். அவற்றுள் கோடை, புதியதோர்வீடு முற்றிற்று என்பன பிரதானமானவையாகும்.

பெருங்காப்பிய, சிறுகாப்பிய மரபினை தவிர்த்து நவீன காப்பிய மரபை பாரதியைப் போல கல்லழகி, சடங்கு , கண்மணியாள் காதை, ஒரு சாதாரண மனிதனது சரித்திரம் என்பனவற்றில் படைத்தார்.

மஹாகவி செய்யுள் நடை வளர்ச்சியிலும் முக்கிய பங்கினை வகித்தார். தற்கால உரை நடைக்கு ஏற்ப செய்யுள் நடையினை நவீனப்படுத்துவதில் வெற்றி கண்டுள்ளார். இவர் அன்றாட வாழ்வியல் பயன்படுத்தும் சாதாரண மக்களின் பேச்சோசையே தமது செய்யுள் நடைக்கு கையாண்டார். இத்தகைய பண்புகள் மஹாகவியின் செய்யுள் நடைக்கு உரை நடைபோன்ற ஒரு பேச்சோசை பண்பை வழங்கி சிறப்பித்தது.

ஈழத்துக் கவிதை வரலாற்றில் தனக்கென சில பண்புகளை வகுத்துக் கொண்டு கவிதையுலகில் பிரவேசித்த மஹாகவிக்கு கவிதைப்புலத்தில் தனியான ஓர் இடம் உண்டு.


உசாத்துணை நூல்கள்:–

1) மஹாகவியும் நீல வாணனும் – அ.ப. மு. அஷ்ரஃப் நேஹாபப்பிளிஷர்ஸ்

2) தமிழியற்கட்டுரைகள் – நுஃமான் எம். ஏ. ஸ்ரீ. சுப்பிரமணிய புத்தகசாலை வெளியீடு

3) தேர்ந்த செய்யுட் கோவை – கிருஸ்ண பிள்ளை நடராசா பூபாலசிங்கம் பதிப்பகம்

4) மஹாகவி என்கின்ற மகத்துவம் – தெளிவத்த ஜோசப் – இணையம்.

# இந்துக்களின் அன்றாட வாழ்வில்....

திருமதி மாலினி சிவசுதன்

இந்துக்களாகிய நாம் நமக்கென்று சில பழக்கங்களை கொண்டிருக்கின்றோம். எப்பொழுதும் எக்காரியத்தைச் செய்யும் போதும் இறைசிந்தனையுடனேயே செயலாற்றுகின்றோம். காலையில் படுக்கையை விட்டு எழும்பும் போது "சிவசிவ" என்று சொல்லிக் கொண்டே எழுகின்றோம். இரவு தூங்கும் போது சிவ சிவ என்று சொல்லிக்கொண்டு திருநீறு அணிகின்றோம் அன்றைய பொழுது நல்ல பொழுதாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். இந்துக்களின் அன்றாட வாழ்வில் அமையும் செயல்கள் அனைத்தும் ஒரு காரணம் பற்றியே அமைகின்றன.

திருவிளக்கேற்றுதல், மாவிலை, தோரணம் கட்டுதல் வாழைமரம் கட்டுதல், நிறைகுடம் வைத்தல், கோலம் போடுதல் என்பன முக்கிய இடம் பெறுகின்றன. ஒளி அறிவையும் இருள் அறியாமையும் குறிக்கின்றன. இறைவன் அறிவு மயமானவன், அனைத்து ஞானத்திற்கும் கருத்தா அவனே. ஒளியை இறைவனாகக்கருதி வணங்குகின்றோம். தீபத்தை ஏற்றுவதன் மூலம் செல்வங்கள் அனைத்திலும் உயர்ந்த அறிவுச் செல்வத்தைப் போற்றி வணங்குகிறோம். தீபத்தின் ஒளி போன்று நாமும் நம்மை உயர் நிலைக்கு உயர்த்தும் அறிவைப் பெறவேண்டும். ஒரு விளக்கின் துணைகொண்டு ஆயிரக்கணக்கான விளக்குகளை ஏற்றலாம். ஆயினும் அதன் ஒளி குறைவதில்லை. அவ்வாறே அறிவானது பிறருக்கு போதிக்கும் போது குறைவதில்லை. மாறாக மேலும் மேலும் பிரகாசிக்கிறது.

நமது விழாக்களில் அலங்காரத்தில் மாவிலை, தோரணம், நிறைகுடம், வாழை மரம் என்பன முக்கிய இடம் பெறுகின்றன. இவை எமது சமய பாரம்பரியத்தைப் பேணுபவையாக அமைந்து காணப்படுகின்றன. மாவிலை, தோரணங்கள் தேவர்களைக் குறிக்கின்றன. தோரணங்கள் வீதிகளில் கட்டப்பட்டுள்ள விதத்தைப் பார்த்து என்ன நிகழ்வு என அறியலாம். சுபகாரியங்களின் போது தேவர்கள் விண்ணிலிருந்து மண்ணை நோக்கி வந்து கலந்து கொள்கிறார்கள் என்பதையும், அமங்கல நிகழ்வின்போது

உயிர் மேல் நோக்கி மோட்சத்தை அடைய வழி அனுப்புகிறார்கள் என்பதையும் எடுத்துக் காட்டுகிறது. சுப காரியங்களின்போது மாவிலையின் காம்பு நுனியை முன்புறமாக வளைத்து முன்பகுதியில் காம்பைக் குத்தி தொங்க விடுவர். தோரணங்களில் குருவிகள் நான்கிற்கு மேற்பட்டதாகவும் மேல் நோக்கிய வையாகவும் இருக்கும், அபரக்கிரியைகளின் போது மாவிலையின் காம்பு நுனியைப் பின் பக்கமாக மடித்துக் குத்தி தொங்கவிடுவர். தோரணங்களின் குருவிகள் மூன்றாகவும் கீழ் நோக்கியும் இருக்கும். கும்பம் வைக்கும் போது தேங்காயின் கீழ் 5, 7, 9 மாவிலைகள் அமைத்தல் சிறப்பானதாகும்.

ஆலயங்களிலும், வீடுகளில் திருமண வைபவங்களிலும் மற்றும் சுபகாரியங்களிலும் வாழை மரம் கட்டுவர். வாழைமரமானது மக்களுக்குப் பெரும் பயனைத் தரவல்லது. இதன் இலையில் உணவு அருந்துதல், இதன் தண்டு, காய், பழம், பூ என்பன உணவாகவும், நார் பூக் கட்டுவதற்கும் பயன்படுகிறது. வாழையின் பயன் எப்படியோ அதே போல் எல்லோருமே பயன்படும் நிலை வரவேண்டும். வாழையை அழிக்க முடியாது. இது வாழையடி வாழையாக வாழ வேண்டும் என்பதை எடுத்துக காட்டுவதாக அமைகிறது. சுபகாரியங்களுக்குப் பழுத்த கனியாகவும் மரணச்சடங்குகளில் துக்கத்தை தெரிவிக்கும் முகமாக சாம்பல் வாழைக்காயையும் கட்டப் படுவதும் மரபாகும்.

கும்பம் வைக்கும்போது தலை நுனிப் பக்கம் எப்பொழுதும் கிழக்குத் திசை, அல்லது வடக்குத்திசையாக வாழையிலையை வைத்து கும்பம் வைக்க வேண்டும். சாப்பிடும்போது வாழையிலையின் தலை நுனி இடப்பக்கமாக இருத்தல் வேண்டும். எனினும் அபரக் கிரியைகளுக்கு வாழையிலையின் தலைநுனி தெற்குப் பக்கமாக இருத்தல் வேண்டும். பச்சையிலைகள் பகற்காலத்தில் பிரதான வாயுவை வெளியிடுகின்றன. அவவை மக்கட் கூட்டத்தால் சூழல் மாசுபடும்போது காற்றி லுள்ள விஷக்கிருமிகளை வீடுகளுக்குள் புகவி டாமல் அழித்து தூய்மையான காற்றைப் புகச் செய்கின்றன. இதனாலேயே மாவிலைத் தோரணமும், வாழை மரமும் கட்டப் படுகிறது.

நமது விழாக்களில் கோலம் போடுதல் முக்கியமானதாகும். கோலத்தின் நடுப் புள்ளி சிவனையும் சுற்றுக் கோடுகள் சக்தியைக் குறிப்பதாகவும், முதுகு வளைத்து கோலம் போடும் போது அகம் பாவத்தை களைந்து தலைகுனிந்து பணிந்தால் சிவனை அடைய முடியும் என்பது கோலம் போடுதலின் தத்துவம் என்பர். கோலம் பச்சை அரிசி, மஞ்சள் மா கலந்து போடுதல் சிறப்பாகும். இவை உயிரினங்களுக்கு உணவாகப் பயன்படும் என்பதே இதன் நோக்கமாகும். மஞ்சள்தூள் கலப்பதால் தொற்றுநோய்க் கிருமிகள் வீட்டிற்குள் பரவாது. பாம்பு, தேள் போன்ற கொடிய உயிரினங்கள் தீய சக்திகள்

மஞ்சள் வாசனைக்கு வீட்டினுள் நுழையாது என்பது ஐதீகம்.

மங்கலப் பொலிவை எடுத்துக்காட்டுவதாக நிறைகுடம் என்ற சொல்லிலேயே நிறைவு எனும் சொல் சேர்ந்து இருப்பதைக் காண்கிறோம். நிறைகுடத்தின் அருகில் குத்துவிளக்கு ஒளிவீசிக்கொண்டிருக்கும். அதன் அருகில் ஏனைய பழம், பாக்கு, வெற்றிலை, திருநீறு, சந்தனம், குங்குமம், பூக்கள் என்பன காணப்படும்.

எமது பாரம்பரிய நிகழ்வுகளில் அழகிய பல்வகைப் பூக்களைக் கொண்டு மாலை தொடுத்தல் முக்கியமானதாகும். இறைவனுக்கும், மணமக்களை அலங்கரிக்கவும், பெரியோர்களை கௌரவிக்கவும், பெண்கள் கூந்தலில் சூடவும் மாலை பயன்படுகிறது. இது ஒரு சரியைத் தொண்டாகவும் செய்யப்படுகிறது.

அத்துடன் ஆலயம் செல்லல், தொண்டுகள் புரிதல், திருநீறுதரித்தல், திலகம் இடுதல், விருந்தோம்பல், பெரியோரைக் கனம் பண்ணல், பிறருக்கு உதவுதல் ஆகிய பண்புகளைக் கடைப்பிடித்தல் போன்றன ஓர் இந்துவை உயர்ந்தவனாக வாழ வழி செய்கின்றன.

இந்துவாக வாழ்வோம்

இந்து தர்மம் காப்போம்



# தாட்சாயினியின் சிறுகதையில் பெண்ணியம் பற்றிய ஒரு நோக்கு...

திருமதி ஈஸ்வரி செல்வம்
ஆசிரியை
யா/இராமநாதன் கல்லூரி

ஈழத்து சிறுகதை வரலாற்றிலே தற்காலத்தில் சிறுகதை எழுதி வருபவர்களில் தாட்சாயணியும் குறிப்பிட்டத்தக்க ஒருவராவர். அவர் ஒரு பெண் எழுத்தாளர். என்ற வகையில் பெண்ணியம் பற்றிய கருத்துக்களை ஆழமாக ஊடுருவியிருக்கிறார். இன்றைய காலத்தின் தேவையை கருத்திற் கொண்டு இவரது சிறுகதைகளில் காணப்படும் பெண்ணியம் பற்றிய நோக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் எனக் கூறலாம்.

தாட்சாயணியின் படைப்புக்களில் பெண்ணியம் பற்றி நோக்கும் போது இவரது படைப்புக்களான மழை, சோதனை, கருகல், பெண், விடுபடல், மழையிலே உதிர்ந்த மலர், இளவேனில் மீண்டும் வரும், வெளியில் வாழ்தல், அவனும் இவனும், பிஞ்சு மனம் சலனம், கண்ணீர்ப்பூக்கள், வேர் துளைத்த மண், அங்கயற் கண்ணியும் அவள் அழகிய உலகமும், மிதிபடும் நாணல்கள், விட்டு விடுதலையாகி, சாவித்திரி போன்ற கதைகளில் ஆசிரியர் பெண்ணியம் பற்றி மிக ஆழமாகப் பேசுகின்றார். இக் கதைகளில் பெண்களின் மன உணர்வுகளையும், அவர்களது அவலங்களையும் திறமைகளையும் மிக நுணுக்கமாகவும், அழுத்தமாகவும் சித்திரித்துள்ளார். எமது பெண்கள் தம்மிடம் இருக்கும் திறமைகளையும், பலத்தையும் அதாவது தமது பெறுமதிகளை சில சமயம் என்ன? என்று அறியாமல் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். இவர்களை தன்னம்பிக்கையும், தைரியமும், நிதானமும் கொண்ட சாதனை படைக்கும் பெண்களாக உருவாக்க வேண்டும். என்பதனை எடுத்துரைக்கும் அல்லது விழிப்படையச் செய்யும் வகையில் இவரது படைப்புக்கள் காணப்படுகின்றன.

தாட்சாயினியின் "கருகல்" என்னும் கதையில் பெண்ணியம் பற்றி நோக்குவோமாயின் இக்கதையில் ஆண் தான் காதலிக்கும் பெண்ணை தனக்கு அடிமை என எண்ணி அடக்க முற்பட்டான். ஆனால் அவள் அவனை விட்டு விலகி ஒரு பெரிய எழுத்தாளராக உலகில் வலம் வந்தாள். இதனைப் பொறுக்க முடியாத அவன் தான் திருமணம் செய்த

பெண்ணை கொடுமைப்படுத்துகின்றான். இதனால்அவள் தற்கொலை செய்கின்றாள். இக்கதையில் வரும் பெண் என்பவள் ஆணின் அடிமையாக அவர்கள் விருப்பு, வெறுப்புக் களை நிறைவேற்றுபவர்களாகவும் இருக்க வேண்டும். என ஆண் சமூகம் எதிர்பார்க் கின்றது. என்பதுடன் பெண் சமூகத்தில் முன்னுக்கு வரக்கூடாது என்ற கீழ்த்தரமான சிந்தனை கொண்ட ஆண்களை இங்கே காண்கின்றோம். இங்கே இவரது படைப்பில் பெண் தனக்குள் இருக்கும் திறமைகளையும், தைரியத்தையும் இழந்து விடக்கூடாது. சமூகத்தால் வரும் தடைகள் எல்லாவற்றையும் சவாலாக வாழ்ந்து காட்ட வேண்டும் என்ப தனை "அஜந்தா" என்ற பாத்திரம் ஊடாக எடுத்துக் காட்டி நிற்கின்றார். "லட்சுமி" தற்கொலை செய்தது ஆணின் அடக்கு முறையை தூக்கி எறிய அவள் கொண்ட முடிவு எனக் கூறலாம்.

அடுத்து "மழையிலே உதிர்த்த மலர்" எனும் சிறுகதையில் குடும்பத்தில் பொறுப் பற்றிருக்கும் ஆண்களால் சீரழிந்து போகும் பெண் பிள்ளைகளினதும் வாழ்வைப் பற்றி எடுத்துக் காட்டுகிறது. 'ரஜனி' பத்து வயது சிறுமி அவளுக்கு கீழ் ஐந்து சிறுசுகள். தகப்பன் குடிபோதையில் தனது பொழுதை கழிப்பவராகவும், தாய் அரிசி இடித்து உழைக் கும் கூலியோடு அந்தக் குடும்பம் நகர்கின்றது. போதாக்குறைக்கு தாய் கணவனிடம் வாங்கும் அடி உதையாலும் அவளது பாதி உயிர் போய்விடும். ஓய்ந்து ஓய்ந்து அவள் செய்யும் காரியங்களை பார்க்க ரஜனிக்கு பரிதாபப்பட வைத்தது. தாய் காய்ச்சலால் முனங்கியபடி பாயில் கிடந்தார். ரஜனி மழையையும் பொருட்படுத்தாது தாய்க்கு பனடோல் வாங்கச் செல்கின்றாள். தாய், தந்தைக்கு தெரியாமல் ஒழித்து வைத்திருந்த ஐந்து ரூபாய் குற்றியுடன் கடைக்குச் செல்கின்றாள். ஆனால் பனடோல் இருந்தும் கடைக்காரன் இல்லை என்று கூறி விட்டு "வா ..... வீட்டிலிருந்து எடுத்துத் தருகிறேன்" என கூறிவிட்டு கூட்டிச் சென்று ஆள் அரவம் அற்ற இடத்தில் வைத்து அந்தச் சிறுமியை அனுபவித்து விட்டு சிறுமிக்கு பனடோலும் கைநிறையச் சொக்கு லேட்டுகளையும் கொடுத்து விடுகின்றான். இக் கதையில் வரும் கடைக்காரனை நினைக் கும் போது எமது சமூகத்தில் எத்தனையோ ஆண்கள் தாங்களும் மனிதர்கள் என்று கூறிக்கொண்டு கீழ்த்தரமான செயல்களில் ஈடுபடுகின்றனர். அதைவிடக் கொடூரத் தகப்பன் ஸ்தானத்திலிருக்கும் ஆண்கள் அன்புடனும், அரவணைப்புடனும் பிள்ளை கள் வளர்க்கப்பட வேண்டியவர். ஆனால் இங்கே குடும்பத்தை நேசிக்காதவன் தன் சுகங்களை மட்டும் பகிர்ந்து கொள்ள மனைவி வேண்டும் என எண்ணுபவனும், தன் பிள்ளைகளைப் பற்றியும், அவர்கள் பசியைப் பற்றியும் நினைக்காத தந்தை இருப்பதை விட இல்லாமற் போவது மேல். மதுவுக்கு அடிமையாகும் ஆண்களால் எத்தனையோ குடும்பங்கள் சிக்கிச்சீரழிகின்றன. இங்கே எப்படிப்பார்த்தாலும் ஆண்களின் அடாவடித் தனங்களால் பாதிக்கப்படுவது பெண்கள் தான்

என்ற உண்மையை இக்கதை எடுத்துக் காட்டுகிறது. தகப்பன் குடிகாரன் என்பதால், அவள் தன் குடும்பத்தை நேசித்து காப்பாற்று கின்றாள்.

இது அந்தச் சிறுமியின் உயரிய சிந்த னையை வெளிக்காட்டி நிற்கின்றது. இக் கதையில் வரும் பின்வரும் கூற்று இந்த சிறுமி யின் மனநிலையை துல்லியமாக காட்டு கின்றது.

"விக்கிஎபடி வந்த அழுகையை அடக் கினாள். சோர்ந்து போய் நடந்தாள். அப் போது மழை இல்லை. ஆனாலும் பாதை சறுக்கியது அவள் மனதில் இந்த அப்பா செத்துப்போனால் தான் என்ன? என்று கொடூரமாய் ஒரு ஆசை வந்தது. ஆறு நாளில் அவள் ஏற்றவிருந்த தீபம் அணைந்து விடும் போல...... அவள் நடந்தாள்...." இன்னும் எத்தனை புயல்களுக்கிடையில் அவள் பூவாக உதிர்வாளோ...? என கூறுவதன் ஊடாக பெண்ணின் அவலமும் இந்த சமூகத்தில் பெண் என்றும் விழிப்பாய் இருக்க வேண்டும் என்பதையும் எடுத்துக் காட்டுகின்றார்.

மேலும் 'விடுபடல்' எனும் கதையில் பெண் என்பவள் சமூகம் அதனுள் இருக்கும் குடும்பம் என்பவற்றில் ஓர் அங்கமாகும். அவளுக்கும் உணர்வுகள், ஆசைகள் என்பன நிறையவே இருக்கின்றன. ஆனால் சமூகமும், குடும்பமும் அவளைப் பற்றி சிந்திக்காது தாம் விரும்பும் வகையில் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். அவளை பொம்மை போல வைத்து அழகு பார்க்கின்றனர். அதனால் அவள் விரக்தியடைவதும், வாழ்வை வெறுப்பதும், தனிமையை நாடுவதும் பற்றி கூறப்படுகிறது. என பெண்ணின் விருப்பு வெறுப்புகளுக்கு இடமளிக்காத குடும்பம், சமூகம் பற்றியும் அதனால் பெண்கள் பாதிப் படைவதும் பற்றி மிக அழகாக எடுத்துக் காட்டப்படுகிறது. 'பெண்' இக்கதையில் பெண்ணியம் பற்றி விரிவாக கூறியுள்ளனர். அதாவது பெண் என்றும் அன்பு, இரக்கம், எதிர்பார்ப்பு, மானிடர்கள், குடும்பம், சகோ தரரிகள், கணவன் போன்ற ஆயிரம் உறவுகள் இருப்பினும் அவளின் ஏலும், ஏலாமை, விருப்பு, வெறுப்பு, தேவைகள் என்பவற்றை யாரும் சரியாக புரிந்து கொள்வதில்லை. என்பதனை இக் கதை கருவாகக் கொண்டு ள்ளது. வாழ்க்கை என்பது மாட்டுவண்டிப் பயணம் போன்றது. இரு மாடுகளும் ஒருமித்துச் சென்றால் தான் பயணம் நிறைவாக முடியும். அது போல ஆணும், பெண்ணும் ஒருவரை ஒருவர் விளங்கிக் கொண்டு விட்டுக் கொடுத்து இன்பத்திலும் துன்பத்திலும் இணைந்து வாழ்வது தான் வாழ்க்கை இங்கே அவளுடைய தலைவலி கூட விளங்கிக் கொள்ளாத கணவன் ஆனால் அவளோ?, அவன் அன்பு, அரவணைப்புக்காக அந்த ஒவ்வொரு கணமும் ஏங்குகின்றாள். அது கிடைக்காது போகவே வேதனை அடைகின் றாள். ஒரு பெண்ணின் மனம் ஒரு பெண் தான் அறிவாள். என்பதை மிகத் தெளிவாக ஆசிரி யர் காட்டுகின்றார்.

தாட்சாயணியின் படைப்புக்களில்" வேர் துளைத்த மண்" எனும் கதை பெண் பற்றி பேசும் படைப்புக்களின் மிகச்சிறந்த கதை யாகும். அந்த வகையில் விதியினால் அல்லற் படும் ஒவ்வொரு மனித வாழ்வும் கரையேற வழியின்றி தவிக்கும் நிலை ஏற்படுகின்றது. இங்கே ஒரு பெண், காதலித்தவனை கரம் பிடிக்க முடியாமல் தவிப்பதும், இன்னொரு பெண் சமூகத்தினைச் சீரழிக்கும் சீதனம் எனும் கொடுமையால் வாழ வேண்டிய வயதை கடந்திருக்கும் நிலையை எடுத்துக் காட்டு கின்றார். இங்கே பெண்ணின் ஏக்கம் ஒரு புறம், கடமை ஒரு புறம் என இரண்டிற்கும் நடுவே இருக்கும் அவள் எங்கு சாய்ந்தாலும் ஏதோ ஒரு துயரம் அவனை கொல்லும் என்ற நிலையில் அவனும் "எல்லாம் விதி" என்று பெற்றோர் நிச்சயித்த திருமணத்தைதயே செய்கின்றான். எல்லாம் விதி என்று சொல்வது சுலபம் ஆனால் அனுபவிப்பது என்பது கடினம் ஆகும். அது போலவே இவளது துயரத்தையும் சுலபமாகக் கூறிவிட முடியாது. என்பதை தாட்சாயணியின் 'வேர் துளைத்த மண்' எனும் கதை எடுத்துக் காட்டுகிறது. மேலும் இக்கதையில் பெண் ணின் தியாகத்தை கூறுவதுடன் காதல் எனும் மரம் மண் எனும் பெண்ணுள் புகுந்து பிளவு களை ஏற்படுத்தி விட்டது. அதை மீண்டும் பிடுங்கி எடுக்க நினைப்பது அதை எடுத்தாலும் வேரை விட மண்ணுக்குத்தான் வலியும், காயங்களும், வடுக்களும் ஏற்படும். என்பதை எடுத்து விளக்குகின்றார்.

பெண்ணுக்குத்தான் எல்லாத் துயரங் களும். இதனை அவள் தாங்கித்தான் ஆக வேண்டும் என தைரியமூட்டுவதாக இக்கதை அமைகின்றது. இதனை பின்வரும் உரையா டல் மூலம் தெளிவாக உணரலாம்.

"விதி எத்தனை பேரின் வாழ்க்கையை இப்படி சதிராடி போட்டிருக்கின்றது. இப்படி யெல்லாம் நடந்திருக்கும் என்று தெரிந்தால் இருவருமே அந்த காதல் பாதையில் விலத்திப் போயிருக்கலாம். இருவருடைய வாழ்க்கை யுமே வெவ்றேு திசைகளில் இருக்கின்றது என்று புரிந்து எந்த உணர்வும் இன்றி பிரிந்திருக்கலாமே.....? அப்படியெனின் இந்த வலி தோன்றியிருக்காது. இன்று தனித்துப் போய்விட்ட உணர்வும் தோன்றாது..." மேலும் அவனோ சகோதரிக்கான தியாகம் என ஒருத்திக்கு வாழ்வு கொடுக்கப் போகின் றான். இவளால் என்ன செய்ய முடியும் மனதில் வேர் விட்ட அவன் நினைவுகளை பிடுங்கிப் போட முடியுமா? எல்லாம் விதி என்று கூறத்தான் முடியும் இவள் வேர் பிடுங்கிய ராணம் ஆற படுக்கையில் சரிகின்றாள். இங்கே ஒரு பெண்ணின் வாழ்வு மலர்கின்றது. அதாவது ஒரு பெண்ணின் தியாகத்தில் இன்னொரு பெண் வாழ்கின்றாள். என்ற உயர்ந்த சிந்தனை கருத்துக்களை இங்கே காண்கின்றோம்.

அடுத்து "அவளும், இவளும்" எனும் கதையினை நோக்கின் சமூகத்தில் பல்வேறு நிலைப்பட்ட மனிதர்கள் வாழ்கின்றார்கள்

ஒவ்வொருவரும் ஒரே மாதிரி இருப்பதில்லை. அடுத்தவர்களை பார்ப்பதை விட எமக்கு இவ்வளவு தன்னும் கிடைத்து விட்டதே என்று சந்தோசப்பட வேண்டும். இக் கதையில் வரும் பெண்கள் இருவரதும் நிலையும் "இக்கரைக்கு அக்கரை பச்சை" என்பது போல இருக்கின்றது. ஒருவரை ஒருவர் பார்த்து உன்னைப்போல் இருந்தால் என்ன? என்று ஏங்குவதும் பின்பு எல்லோருக்கும் எல்லாம் கிடைப்பதில்லை நிலவில் கூட மறை உண்டு எல்லோர் வாழ்விலும் நிறைவும் குறைவும் உண்டு என திருப்திப்படும் உணர்வை ஏற்படுத்துகின்றது. இக் கதையில் இரண்டு பெண்களை வைத்து எழுதப்படுகின்றது. அதாவது நீலவேணி, சித்திரா இருவரும் பள்ளித்தோழிகள் இதில் சித்திரா பிராமணப் பெண். இருவரும் காதல் எனும் வலையில் வீழ்கின்றனர். இதில் நீலவேணி இரு வீட்டுக் குடும்பத்தினரின் விருப்பத்திற்கு மாறாக ஓடிப்போய் திருமணம் செய்கின்றாள். சித்திரா சமூகம், பிராமணியம் என்ற கட்டுக்களால் பீடிக்கப்பட்டு அவற்றை மீறும் தைரியம் இல்லாதவளாக இருந்து விடுகின்றாள். அதனால் அவள் இன்னும் அவன் நினைவில் கன்னியாகவே இருக்கின் றாள். இங்கே ஒரு வழியில் வந்த இரு பெண் களின் வாழ்வு பேசப்படுகிறது. ஒருத்தி தைரிய சாலி, வாழ்க்கை வாழவே என்று கருதி தனக்கு பிடித்தவனுடன் சமூகக் கட்டுக்களை, தடை களை தாண்டி ஓடிப் போய் வாழ்கின்றாள். வாழ்க்கை சவால் நிறைந்தவை என கருதி அவள் வாழ்ந்து காட்டுகின்றாள். அவள் பாரதி கண்ட புதுமைப் பெண் போல இருக்கின்றாள். ஆனால் சித்திரா எப்படியும் வாழலாம் என எண்ணாது இப்படித்தான் வாழ வேண்டும் என எண்ணியதால் அவள் தனிமரமா கிவிட்டாள். அவள் தன் குடும்பம், சமூகம் என அஞ்சி அடங்கி வாழ்ந்தாள். அதனால் அவள் வாழ்வு எந்தப்பயனும் இல்லாது போய் விட்டது. அவள் என்ன படித்தும் பயனில்லை. ஏனெனில் அவள் வாழ்க்கை எனும் இனிய புத்தகத்தை அவள் இன்னும் படிக்கவில்லை. ஆனாலும் அவள் தன் காலில் தனித்து நிற்கும் தைரியமும், துணிவும், மிடுக்கும் அவளை வாழ வைக்கிறது.

தாட்சாயணியின் "சலனம்" என்னும் படைப்பில் மனம் குழம்பிய நிலையை சலனம் என கூறலாம். இங்கே தகப்பன் இறந்த பின் தாய், சகோதரியுடன் வாழ்ந்து வரும் பெண் அவளை சரித்திரன் என்னும் பையன் காதலிக்கின்றான். இதனால் சமூகத்தின், குடும்பத்தின் வசைச்சொற்கள் எல்லாம் கேட்கின்றாள். இவள் தாயார் தன் குடும்ப கஷ்ரத்தை எடுத்துக்கூறி அவனை மறந்து விடும்படி கூறுகின்றாள். இதே வேளை திடீரென அவளும், அவள் குடும்பமும் கொழும்பு செல்கின்றனர். பின்பு அவனைப் பற்றிய செய்தி எதுவுமில்லை. அவளது தங்கைக்கும் திருமணமாகிவிட்டது. ஆனால் வயதும்போய்விட்டது. அவள் இன்னும் அவனைப்பற்றியே நினைத்துக் கொண்டிருக் கிறாள். இவள் தன் இளமை, தன் கனவு, ஆசை எல்லாவற்றையும் தன் குடும்பத்திற்காக இழந்து விட்டாள். இங்கே வரும் மாலினி ஒரு

மெழுகுவர்த்தி போல தன்னை இழந்து பிறருக்கு ஒளி கொடுக்கின்றாள். இன்று எமது சமூகத்திலும் எத்தனையோ மாலினிகள் மெழுகுவர்த்திகளாய் உருகிக் கொண்டுதான் இருக்கின்றார்கள். தங்கள் குடும்பத்திற்காக என கூறலாம்.

அடுத்து "பிஞ்சுமனம்" பெண் அன்பு, அறிவு, இரக்கம் என்ற பண்புகளை கொண்டவர். அவள் சமூகத்தில் பல்வேறு பாத்திரங்களை தாங்கி தன் கடமைகளை செய்கின்றாள். அவள் அவ்வாறு செய்வதன் மூலம் குடும்பம் கோயிலாகின்றது. பாட சாலை பல்கழைக்கழகமாக மாறுகின்றது. அந்த வகையில் இக் கதையில் வரும் பெண் ஒரு ஆசிரியை. அவள் கற்பித்த மாணவன் மனம் உடைந்து போகக்கூடாது என்ற காரணத்திற்காக தன் சொந்த வாழ்வின் சுகங்களை தூக்கி வைத்துவிட்டு தன் இடமாற்றத்தையே வேண்டாம் என்று அதே பாடசாலையில் படிப்பிக்கின்றார். இக்கதையில் வரும் ஆசிரியயை ராதிகா அந்த ஆசிரியரின் பேச்சு, நடை, பழக்கம் எல்லாம் சேர்த்து அந்த சிறிய பையனுக்கு தன் தாய் போல இருக்கிறது. அவன் ஆசிரியை வடிவில் தாய்மையைத் தேடினான். அந்த ஆசிரியையும் தாயாக மாறினாள்.இங்கே இந்த ஆசிரியையின் தியாகம், அர்ப்பணிப்பு, அன்பு என்ற அனைத்திற்கும் பின்னால் எத்தனையோ மாணவர்களின் எதிர்காலங்கள் மலர்ச்சி பெறுகின்றன.

நல்ல மாணவனை, நல்ல சமூகத்தை உருவாக்க இந்த ராதிகாவால் முடியும் எனில் ஏன்? மற்றவர்களால் முடியாது. இங்கே அவளிடம் இருந்த பெண்மை, தாய்மை என்ற உணர்வுகளுமே அவளை உயர்ந்த சிந்தனை கொண்ட பெண்ணாக காட்டி நிற்கின்றது.

"மிதிபடும் நாணல்கள்" பெண்ணியம் பற்றி பேசிய படைப்புக்களில் சற்று வித்தியாச மானதாக இருக்கின்றது. அந்த வகையில் பெண்களின் மனவேதனைகள் பற்றி இதில் ஆழமாக பேசப்படுகின்றது. மிதிபடும் நாணல்கள் என்ற கதைத் தலைப்பிலே பேசப்போகும் பெண்கள் பற்றி கூறி நிற்கிறது இங்கே நாணல்கள் எப்போதும் தனித்து நிமிர்ந்து நிற்க சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. அதுபோல பெண்களும் தம் விருப்பு வெறுப்புகளை சுதந்திரமாக கூறவும் இந்த சமூகம் இடம் கொடுப்பதில்லை. பெண் என்றுமே தலையாட்டி பொம்மைகளாக சில சமயம் இருந்து விடுகின்றாள். அதற்குக் காரணம் குடும்பம், சமூகம், ஆணாதிக்கம் என்பனவாகும். இக்கதையில் தகப்பன் இல்லாத சுவேதா, தாய் நோய்வாய்ப்பட்டவள் வருத்தம் வந்த தங்கை என அவள் தன் குடும்பச் சுமைகளை தன் தோளிலே சுமந்து கொண்டிருந்தாள். அவளுக்கு திருமணம் வெளிநாட்டு மாப்பிள்ளை. சீதனம் கொடுக்க காணி விற்கிறார்கள். திருமணம் நடக்கிறது."அவள் முகம் எல்லாவற்றிற்கும் தன்னை தயார்படுத்திய மாதிரியான திட உணர்வில் இருந்து வளையல்களை தெரிவு செய்வதிலும் தலையலங்காரத்தை எவ்வகை பூக்களால் செய்யலாம் என்பதிலும்

அக்கறை காட்டிய அவளால் தனது வாழ்க்கை த்துணை இப்படித்தான் இருக்க வேண்டும் என்று அக்கறை காட்ட முடியாமல் போனதே...? சீதனப் பிரச்சனையை எங்கு மிக எளிதாக தீர்க்க முடிகிறதோ! அங்கு தான் அவளுக் கேற்ற துணை இருக்கும் என்று எங்கோ வரைவிலக்கணம் எழுதப்பட்டிருக்கிறது. இதுதான் பெண்களின் விதியா? இங்கே ஆண் துணை இல்லா குடும்பம் , வறுமை, நோய் என பீடிக்கப்பட்டு வாழ்வில் நொந்து போய் இருப்பவர்களை சீதனமும் ஆட்டிப் படைக் கின்றது. இவர்களுக்கு விடிவே இல்லையா? இது சமூகம் இவர்களுக்கு கொடுத்த சாபம் இவர்கள் வாழ்ந்து தான் ஆகவேண்டும். மிதிபடும் நாணல் போல் பெண்ணாகப் பிறந்து விட்டால் வேதனை துயரங்களை தாங்கத்தான் வேண்டும் என்ற தொனிப்பொருளில் பெண் ணியம் பற்றி ஆசிரியர் கூறுகிறார். மேலும், இதனை

"நாணல்களாய் மிதிபட்டுக்கிடக் கிறார்கள் அவர்கள் எத்தனை கால்கள் இவர் களை மிதித்து, மிதித்துக் கிடக்கின்றனர். மெல்லிய காற்றாய் வருடி அசையச் செய்ய யாரால் தான் முடியும்? நாணல்களாகப் பிறந் தால் தானே மரங்களுக்குத் தெரியும் நாணல் களின் வலி.....? என ஆசிரியர் உரை மூலம் தெளிவாகப் புலப்படுத்துகிறது. "கனவுகள் நனவல்ல"

இக்கதை இனம்புரியாத ஆழ்ந்த அன்பி னைப் பற்றியும், சுதந்திரம் அற்ற பெண்ணு ரிமை பற்றியும் எடுத்துக் கூறுகின்றது. இந்த அன்பு, காதலுமல்ல, நட்புமல்ல, சகோதர பாசமுமல்ல, ஆழ்ந்த அகன்ற, தூய்மையான அன்பு இதற்குப் பெயரும் இல்லை, உருவமுமில்லை. உணர்வுகள் மட்டும்தான் பேசுகின்றன. ஆம்... "கிச்சு" போர்க் கொடூரத் தால் தனது மூன்றரை வயதில் தன் தாய், தந்தை என்னும் உறவுகளை பறி கொடுத்தவன். பின்பு சித்தியின் அரவணைப்பில் அவன் வாழ்ந்து வருகிறான். அவன் மனம் பாலைவனத்துக்கு ஒப்பானது. எதிலும் நாட்டமில்லை. எதிலும் ஆசை இல்லாமல் நம்பிக்கை இல்லாமல் வாழ்ந்து வருகிறான். அவன் வீட்டிற்கு பக்கத்து வீட்டில் இவளுக்கு பத்து வயது குறைந்த சிறுமி அவள் பெயர் 'வித்தி' அவளின் பிரிவில் அவளின் செயலின் இவன் நெகிழ்ந்து போகின்றான். அந்த உறவுக்கு முறையல்ல. அப்படி ஒரு பாசம். காலம் உருண்டு செல்கிறது. 'வித்தி' சிங்கப்பூரில் வசிக்கும் செல்வந்தர் ஒருவருக்கு திருமணம் செய்து கொடுக்கப்படுகிறாள்.

அதன் பின் நீண்ட நாட்களுக்கு பின்'கிச்சு' தொழில் நிமிர்த்தம் சிங்கப்பூர் செல்கின்றான். 'வித்தி' வீட்டிற்கும் செல்கின் றாள். அங்கே அவன் வித்தியை கண்டதும் வேதனையடைகின்றான். அவளது கோலம், அவள் அங்கே எப்படி வாழ்கின்றாள். என் பதை எடுத்துக்காட்டியது 'வித்தி' இயல் பாகவே மென்மையுள்ளம் கொண்டவள். சிறுவயது தொடக்கம் தன் கற்பனைக்கு எட்டிய வகையில் பூக்களுடன் பேசுவாள். அதன் மணங்களை ரசிப்பாள். அதன் அழகை விபரிப்பாள். இன்று அவள் வாழ்வு வாசனை

யும் இல்லாது அழகும் இல்லாமல் வற்றி வரண்டு போய் இருப்பதனை 'கிச்சு' காண்கின் றான். அவளுக்கு ஆறுதல் சொல்கின்றான். அவளது மாமியார் இவர்கள் உறவை தப்பாக நினைத்து வித்தியை துன்புறுத்துகின்றாள். இறுதியில் அடுத்தநாள் பத்திரிகையில் புத்தியில்லாத, மனநோயாளியான பெண் இரயிலில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டாள். என்னும் செய்தி பரவுகின்றது. அவள் யாரும் அல்ல. வித்தியே தான். மனநோயாளி என்ற பெயர் வித்திக்கு கொடுத் தது அவள் கணவன் தான். இவ்வாறு செய்தியை பத்திரிகையில் கொடுத்ததும் கணவன் தான் என அறிந்தும் 'கிச்சு' பாலை வனமாக எந்தவித உணர்வுமற்ற அவன் மனம், அவள்மீது கொண்ட இனம்புரியாத அந்த ஆழ்ந்த, அகன்ற, தூய்மையான அன்புக்காக பெயர் சூட்ட முடியாத உறவுக்காக அவன் அழுது கொண்டே இருக்கின்றான்.

இக்கதையில் வரும் பாத்திரங்கள், செய்திகளை சேர்க்கும் போது ஒரு பெண்ணும் ஆணும் சுதந்திரமாக அன்பைப் பகிர்ந்து கொள்ள முடியாது என்பதனையும், அவ்வாறு பழகினால் இந்த சமூகம் ஆயிரம் பெயர்கள் சூட்டி கொடுமைப்படுத்தும் என்பதனை ஆசிரியர் எடுத்துக்காட்டுகின்றார்.

"கிச்சு வா, நான் உனக்கு யார்.... அண் ணனா.... நண்பனா.... எப்படி நீ நினைக் கிறாய்?..... காதலனாய் நீ நினைக்க வேயில்லை. நீ கிச்சு தான்... வெறும் கிச்சு தான்"

என்று கூறுவதன் மூலம் இந்த அன்புக்கு உறவு முறையல்ல என்பது தெரிகிறது. மேலும் "உங்களுக்கு யார் இந்த வாசம் தந்தது பூக்களே...."பூக்களோட கதைப்பாள் பூக்க ளுக்கு தண்ணீர் கொடுப்பாள். அது கனவா யிருந்தாலும் பரவாயில்லை அது எவ்வளவு சுகம்.... " என வித்தியின் மென்மையான பெண்மை உள்ளத்தையும், உணர்வையும் எடுத்துக் காட்டுகின்றது.

"உறவேயில்லாத என் உறவுக்கு பெய ரான வித்தி உன் கிச்சுவின் பின் இந்தக் கண்ணீர் மாலை உன்னை சேராமலே போய் விடு மோ....? உனக்கு இஸ்ரமில்லாத அந்தக் கொடிய வாழ்வில் வற்றிப்போன உன் கனவு களை எண்ணி என் கண்கள் இப்போது சுரக்கத் தொடங்கிவிட்டன. எனக்குத் தெரிகிறது கண் ணீர் கூட ஒரு சுகம் தான்... மனதால் சொரிந்த அன்பை கொச்சைப்படுத்திய இவர்களுக்கு இறைவன் என்ன தண்டனைதான் கொடுப் பானோ....?" நான் சொல்கிறேன் கனவுகளல்ல என்றாலும் உன் கனவுகளே எனக்கு நம்பிக் கையூட்டுகின்றன. உன்னுடனான அந்த அன்பில் என்றும் நான் கண்ணீர்த்துளியே தான்...."

என கூறுவதனூடாக கிச்சுவின் மன நிலை, அவனது உணர்வுகளின் தவிப்பு எடுத்துக்காட்டப்படுகிறது. பழி சொல்லும் இந் சமூகம் ஒருபோதும் வாழ வழி சொல்வ தில்லை என்பதுதான் யதார்த்தம் இதனை இக்கதை மூலம் ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார்.

மேற்கூறப்பட்டவற்றை தொகுத்து நோக்கின் ஈழத்து நவீன இலக்கியத்தின் வளத்துக்கும், வளர்ச்சிக்கும் உழைத்தவர்கள் பலர். அவர்களுள் சிறுகதைத்துறையில் தாட்சாயணி சிறுகதைகள் சிறப்பானதாகக் காணப்படுகின்றன. அந்த வகையில் சிறுகதைத் துறைக்கு இவருடைய படைப்புக்கள் வளர்ச்சிப் பாதையை காட்டிச் செல்லும் என நம்பப்படுகின்றது. இவர் கதை, நாடகம், கட்டுரைகள், சிறுகதைகள் என பல துறைகளிலும் தன் திறமைகளை இலக்கிய வடிவத்தீனூடாக இவரது ஆளுமை பெரிதும் வெளிப்பட்டு நிற்கின்றது எனக் கூறலாம்.

தாட்சாயணி 90களுக்கு பின்பு எழுத்துலகில் பிரவேசித்து இன்றுவரை ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு தனது பங்களிப்பை ஆற்றிவரும் இளம் எழுத்தாளர் ஆவார். இவர் தனக்கென ஒரு அடித்தளத்தில் நின்று கொண்டு படைப்புகளைப் படைத்திருக்கிறார். இவரது படைப்புக்கள் இன, மத, மொழி, சாதி பேதங்களைக் கடந்து பொது மனிதத்தளத்தில் நின்று எந்தப் பக்கமும் சாயாது உறுதியாக நின்று சமுதாய சிக்கல்களை, முரண்பாடுகளை, தனிமனித பிரச்சனைகளை, தனது படைப்புக்ளினூடாக ஆராய்வதைக் காணலாம். இயல்பாகவே இவரிடம் உள்ள மனிதநேய உணர்வும், விஞ்ஞான அறிவும் இணைந்து சிறுகதைகளில் பன்முகப்படுத்தப்பட்ட இவரது பார்வையை தருகிறது. எந்த விடயங்களையும் அஞ்சாது/ மறைக்காது துணிவோடு கூறும் போக்கை இவரது படைப்புக்களில் அவதானிக்க முடிகின்றது. தான் கூறவந்த விடயங்களை இருட்டடிப்புச் செய்யாமல் தெளிவாகவும் ஆழமாகவும் கூறும் திறன் இவருக்குண்டு. என்பதுடன் தன் கண்ணில் கண்ட காட்சிகள், அனுபவித்த சம்பவங்கள், அறிந்த விடயங்கள், என அனைத்தும் நேர்த் தரிசனம் போல் படைக்கும் ஆற்றல்கள் தாட்சாயணிக்கு இருக்கிறது. இதுவே அவரது படைப்புக்கள் வெற்றி பெறுவதற்கான அடிப்படையாக காணப்படுகிறது.

மேலும், தான் கூறவந்த விடயங்களைக் கூறும் போது உணர்ச்சிவசப்படாது பிரச்சனைகளின் காரணிகளை கண்டறியும் போக்கில் நிதானமாகக் கதையினை நகர்த்திச் செல்லும் திறன் சிறப்பாக காணப்படுகிறது. மேலும் தன் கதைகளில் பெண்ணியம் பற்றிக் கூறும் போது ஜதார்த்தமாக தான் கூறவந்த விடயங்களை உணர்ச்சிவசப்படாது பிரச்சனைகளுக்கான காரணிகளைக் கண்டறியும் போக்கில் நகர்திச் செல்கிறார். எனவே இவரது படைப்புக்களிலெல்லாம் பெண்ணியம் பற்றிய சிறந்த கருத்துக்களே ஆழமாக ஊடுருவியிருப்பதை அவதானிக்க முடிகிறது எனக் கூறின் மிகையாகாது.


உசாத்துணை நூல்கள்

தாட்சாயணியின் சிறுகதைத் தொகுதிகள்

# Brief history of Sir Pon Ramanathan and some anecdotes of the 100 years of College history

**Miss. J.Vaithilingam**
*MA (English Literature)*

The establishment of J/Ramanathan College by Sir Pon Ramanathan the great son of Srilanka forms a great landmark in the history of Hindu community. It is situated in the centre of Peninsula and its foundation was laid in the south west corner near Samadi Temple. The site selected is an excellent suitability as a residential college and it also enjoys a salubrious climate with very good water.

Sir PonRamanathan's aim was to give Hindu girls sound training in Saiva religion and wants to provide higher education both in English and Tamil. Therefore Sir Pon Ramanathan decided to found a fully equipped residential college for girls and J/Ramanathan College was formally opened on the 20th January 1913 with 101 girls.

Its first principal was Ferr Emerry a very cultured and well known English lady who admired greatly Sir PonRamanathan's religious and educational work. She was assisted by Mr Veerasamypallai (B.A) who acted as Head Master for a period of a year. Hindu women teachers were not available at that time Mr. M Kartikesu a trained teacher was appointed in January 1914. He proved himself to be a teacher of out standing merit.

The first girl to pass the Cambridge Senior Examination from the college was Srimathy Sunntharnayagam Veerasamy and became a teacher in 1915. One of the most loyal old girl who served the college for many years and as a teacher was Mrs. T Nadarajah. (Formally Miss Thangamma)

In 1917 Lady Ramanathan assumed duties as a principal. During the period the college became very popular owing to her keen interest.

For the benefit of the students a Training school was opened with spacious buildings, class rooms and dormitories in 1926 and Ramanathan's Orphanage for girls.

One of the earliest gifts to the college was the large bell given by Mr Cathirvelu of Penang from England brought to the college by his own expense. It hangs in our college tower and is rung daily.

From 1936 the college started to work for the Cambridge Examinations and began to prepare for Ceylon J.S.C and

.

With the lasting personality Sir Pon Ramanathan made this college a well recognized one today. He is all in action the noble divine still life of art could never represent him as he is. He is an unequalled leader of the Tamils. Sir Pon Ramanathan was a man of great foresight. Every community claim him as his own leader.

Emerson most truly says that character is far above intellect and this man's character surpassed even his exalted intellect controlling all his great endowment, made the consummate beauty of his life. His activities were so multifarious.

He was one of the few educationists of his days to realize the importance of the mother tongue in any scheme of National Education. Being a deep scholar in the language he was able to appreciate the untold advantage of the sound education in one's own language which is a vehicle of human thought. He also gave very strong views on the subject of religious instruction in school. This what he wrote for the Education Commission report of 1929.

It is hardly possible to over rate the importance of the two leading colleges in the life of the Tamils of Ceylon. Parameswara College for boys which he named his God Parameswara and Ramanathan College stand as imperishable monuments of the spirit of service of the great patriot and offer a fine example of the harmonious blending of the best of the cultures of the North and East.

The achievements of Sir Pon Ramanathan which have won for him a unique place in the annals of this Island. For over half a century he toiled hard for the upliftment of his country. He was a towering personality for over 55 years in the public life of his country. He devoted his later years to the school and passed away in 1930. It was an irreparable loss to the entire nation. Lady Ramanathan has to take up the burden of his work and great help was given by her son in law and daughter Mr and Mrs Nadeson.

Since its foundation in 1913 the college has been extending its activities in various directions. It has steered successfully through its initial stages under the wise guidance of our founder and the fostering care of our principals.

As a Teacher of English I joined this college in 2004. Mrs. A. Sivagnana - suntharam was the principal at that time who trusted me a lot and handed over the best divisions and appointed as a subject co-ordinator. For me and my co teacher Mrs.R.Parathan it was a remarkable year as we were able to secure 50% in English Language after many years.

In the same year Mrs. R. Nagules - waran was appointed as the Light House

Manageress and The Light House (English Activity Room) was opened by The Zonal Director of Education Mrs. R. Iruthayanathan. Since 2004 the Light House has been extending its activities in numerous ways such as conducting camping programmes, Quiz competitions, Teacher Conferences and training the neighbouring school students.

From 2004 onwards the college started to participate at the District, Provincial and National Level competitions.

The following are the achievements of English Language and Drama Competitions from 2004 to 2013 and the percentage of English language in GCE O/L Examination.

| **Year** | **Event** | **Name** | **District** | **Provincial** | **National** |
|---|---|---|---|---|---|
| **2005** | **Copy writing** | **S.Harina** | **1** | **2** | **Participated** |
| 2006 | Recitation | S .Jasintha | 2 | Participated | |
| 2007 | Oratory | S.Rahavarthani | 2 | Participated | |
| 2009 | Copy writing | K .Kami | 1 | Participated | |
| 2012 | News reading | B.Jastika | 2 | 1 | |
| | **Recitation** | **K. Kamsajini** | **2** | **1** | **Participated** |
| | Recitation | S.Joel. Shemilda | 1 | Participated | |
| | | | | Participated | |
| | Story telling | J.Kanista | 2 | | |
| | | M. Laxshika | 3 | | |
| **2013** | **Recitation** | **S Janani** | | **1** | **Participated** |
| | Story telling | B,Tharmila | | 3 | |
| | New reading | J Laxshika | | 3 | |
| | | E.M Roshana | | 3 | |

In the Centenary year 2013 we obtained 44 places at the Divisional level English Day Competitions securing 12 first places, 11second places and 21 third places. We also got 8 places at the Zonal level competitions and 4 places at the Provincial level Competitions.

## GCE O/L Examination Results from 2003 -2012

| Year | A | B | C | S | Total | Passed | Percentage |
|---|---|---|---|---|---|---|---|
| 2012 | 1 | - | 13 | 37 | 159 | 51 | 32.07% |
| 2011 | 1 | - | 8 | 22 | 147 | 31 | 21.08% |
| 2010 | 5 | 1 | 9 | 26 | 106 | 41 | 38.67% |
| 2009 | 3 | - | 8 | 21 | 154 | 32 | 20.77% |
| 2008 | - | - | 1 | 7 | 96 | 8 | 8.33% |
| 2007 | 2 | 4 | 7 | 20 | 93 | 33 | 35.48% |
| 2006 | 2 | 1 | 9 | 22 | 95 | 34 | 35.78% |
| 2005 | 4 | 1 | 6 | 32 | 114 | 43 | 37.7% |
| **2004** | **1** | **1** | **5** | **29** | **70** | **36** | **51.42%** |
| 2003 | - | - | 2 | 8 | 121 | 10 | 8.26% |

In 2011 Mrs.V.Shanmugaratam a genuine kind hearted lady joined this school, who gave enough support and co operation to our subject.

After the arrival of the new principal Mrs.K.Krishnapillai the college started to flourish again at the Provincial and National level competitions under her wise guidance. She was always cautious of every step she took and well known for her sense of punctuality doing everything well in time.

I also wish to thank the teachers of English Mrs. R. Naguleswaran, Mrs. B. Kesavan, Mrs.R.Parathan who worked hard with me to uplift English Language in all spheres.

I'm very proud to be a teacher of English of this leading college and I hope Ramanathan College will grow from strength to strength and Sir Pon Ramanthan's memory will be green in the hearts of grateful people and a perennial source of inspiration to the youth of our country.

Ramanathan College is the citadel of the Hindu faith and the treasure house bof the Hindu mothers of tomorrow





Cultural Festival - 2008

Colours Night - 2011

Prize Day - English Events



2013





2002

2012

நடனத்துறையில் சாதனைகள்




அகில இலங்கை தமிழ்த்திறன் போட்டி - 2002
“வந்ததே வசந்தம்” நாட்டிய நாடகம் 1 ஆம் இடம்



அகில இலங்கை தமிழ்த்திறன் போட்டி - 2002
“சாந்தி சமாதான நாட்டிய நாடகம் 1 ஆம் இடம்

# யா/இராமநாதன் கல்லூரியில் விசேட கல்வித்துறைச் செயற்பாடுகள்.

**திருமதி மோகனவதனி ரவீந்திரன்**
B.A.Dip. in Ed
ஆசிரியர்
யா/இராமநாதன் கல்லூரி.

இலங்கை மணித்திருநாட்டின் இணையற்ற புதல்வர்களுள் சேர். பொன். இராமநாதன் அவர்களுக்குத் தனியான ஓரிடமுண்டு. தன் உயர்ந்த மதி நுட்பத்தாலும் ஒப்புயர்வற்ற ஆற்றல்களாலும் உலகம் போற்றும் ஓர் உன்னதக் கல்விமானாகத் திகழ்ந்த இவருக்கு ஈழமணித் திருநாட்டின் வரலாற்றில் எப்போதுமே ஒரு தனியான இடமுண்டு இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பப்பகுதியில் எமது சைவ மங்கையர்களில் பெரும்பாலானோர் கல்வியறிவற்றவர்களாகவே காணப்பட்டனர். தமது வீட்டின் நான்கு சுவர்களுக்குள்ளேயே நாள் முழுவதும் நசுங்கிக்கிடந்த நமது பெண்களின் நிலை கண்டு அவர் மிகவும் மனம் வருந்தினார். பெண்கள் இவ்விதம் அறிவிலிகளாய்ப் பேதையராய் வாழும்வரை நமது சமுதாயம் ஒருபோதும் மேம்படாது என்பதை நன்குணர்ந்த அவர் நமது பெண்களை அறிவாற்றல்களில் உயர்ந்தோராய், ஒழுக்கத்தின் உறைவிடங்களாய், சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் சாதனை மங்கையராய் உலகம் போற்றும் உன்னதங்களாய் உயர்த்தத் திடசங்கல்பம் பூண்டதன் பயனாய் 1913ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம் திகதி யா/ இராமநாதன் கல்லூரி உதயமாகியது. நலிவுற்ற நிலையிலிருந்த பெண்களை நல்ல நிலைக்கு உயர்த்தி, நாட்டின் கண்களாக்குகின்ற பெரும் பணியில் ஈடுபட்டிருந்த இக்கல்லூரியானது அப்பெண்களில் மேலும் நலிவுற்ற நிலையிலிருந்த விசேட தேவைகொண்ட பெண் பிள்ளை களையும் அரவணைத்துக் கல்வி தந்து அவர்களையும் காசினியில் களிப்புடன் வாழ வைக்கும் பெரும் பணியினையும் தனதாக்கிக் கொண்டது. அதாவது விசேட கல்வித்துறை யின் வளர்ச்சியிலும் இக் கல்லூரி பங்கெடுத்துக் கொண்டது.

'விசேட கல்வி' என்பது உடல் ஊனமுற்றவர்களுக்கான கல்வி என்ற சிந்தனையின் அடிப்படையில் முகிழ்த்தெழுந்து இன்று உடல் ஊனமுற்ற மாணவர்களோடு இன்னும் பல் தரப்பினரையும் உள்ளடக்கிய ஒரு அகல் விரி துறையாக வளர்ச்சி கண்டுள்ளதோடு, தற்காலத்தில் "விசேட தேவைகள்சார் கல்வி" என்றவாறாகவும் பரிணமித்துள்ளது. ஆரம்ப காலங்களில் விசேட தேவையுடைய மாணவர்கள் வேறாக்கப்பட்டு தனியான கலைத்திட்டத்திற்கமைய கல்வி கற்பிக்கப்பட்டனர்.

இலங்கையில் விசேட தேவைகொண்டோருக்கான முதலாவது விசேட பாடசாலை 1912ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதுவே இன்று ரட்மலானை செவிப்புலன், விழிப்புலனற்றோர் பாடசாலை என அழைக்கப்படுகின்றது. இலங்கையில் விசேட கல்வி தொடர்பான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு நூறு ஆண்டுகள் பூர்த்தியினைக் கடந்த ஆண்டு நாம் கொண்டாடியது அனைவரும் அறிந்ததே. 1960ஆம் ஆண்டு அரசு கல்வி நிறுவனங்களைப் பொறுப்பேற்ற பின் 1964ஆம் ஆண்டு மனரீதியாகப் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான முதலாவது பாடசாலையை ஆரம்பித்தது. 1965ஆம் ஆண்டு பத்து விசேட பாடசாலைகள் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டன. இவை அனைத்தும் கிறிஸ்தவ அல்லது கத்தோலிக்க திருச்சபைகளாலும் பௌத்த நிறுவனங்களாலும் நிர்வகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 1976ஆம் ஆண்டில் தங்கியிருந்து கல்வி கற்கக் கூடிய 26 பாடசாலைகள் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டன. ஏறத்தாழ இக் காலப் பகுதியில் 1900 மாணவர்கள் இப் பாடசாலைகளில் கல்வி கற்றனர். இவ்வாறு விசேட பாடசாலைகளில் விசேட தேவையுடைய மாணவர்களைத் தனிமைப்படுத்துதல் அவர்களில் எதிர்மறையான அநீதியான விளைவை உண்டாக்குவது அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக ஒன்றிணைத்தல் பற்றி அரசு சிந்திக்கலானது. ஒன்றிணைப்பு என்பது வெறுமனே மாணவர்களை ஒன்றாகக் கற்க விடுதல் என்பது கருத்தல்ல. ஒரே கலைத்திட்டத்தின் கீழ் விசேட கல்வி மாணவர்களை ஒன்றிணைத்தல் எனப் பொருள்படும்.

1968ஆம் ஆண்டே அரசு இவ் ஒன்றிணைப்புக்கான முன்னெடுப்புக்களைச் செய்ய ஆரம்பித்தது. இலங்கையைப் பொறுத்தவரையில் ஆறு சாதாரண பாடசாலைகளில் 17 பார்வைக்குறைபாடுடைய மாணவர்கள் முதலாம் வகுப்பில் சேர்க்கப்பட்டனர். இம் மாணவர்கள் வீட்டுக்கு அருகாமையில் உள்ள பாடசாலைகளில் சேர்க்கப்பட்டதோடு அவர்களுக்கென விசேடமாகப் பயிற்று விக்கப்பட்ட ஆசிரியர்கள் அப்பாடசாலைக்குச் சென்று ஆலோசனை வழங்கும் செயற்பாடு இடம்பெற்றது.

"அனைவர்க்கும் கல்வி" என்ற ஐ.நா. ஸ்தாபனத்தின் எதிர்பார்ப்புக்கு வலுச்சேர்க்கும் வகையில் 1994இல் நடைபெற்ற சலமன்கார் மகாநாட்டில் உட்படுத்தல் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. அதாவது விசேட தேவைகொண்ட பிள்ளைகளை நிபந்தனைகள் எதுவுமின்றி சாதாரண பாடசாலைகளில் சாதாரண மாணவர்களுடன் உட்படுத்துவதே இதன் நோக்கமாகும். நமது நாட்டைப் பொறுத்தவரையில், இவ்வுட்படுத்தல் கல்வியானது பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகின்றது என்பது உண்மையே. எது எவ்வாறாயினும், யாழ் இராமநாதன் கல்லூரியைப் பொறுத்தமட்டில், விசேட கல்வித்துறை வளர்ச்சியில் பெருமளவு வெற்றி கண்ட ஒரு கல்லூரியாக அதனை நாம் கொள்வதில் எவ்விதத் தவறுமிருக்க முடியாதது.

1970களின் பிற்பகுதியில் இராமநாதன் கல்லூரியில் இரண்டு விழிப்புல வலுவிழந்த மாணவிகள் சாதாரண மாணவர்களோடு இணைந்து கல்வி பயின்றுள்ளனர். செல்வி. யோதீஸ்வரி வைத்திலிங்கம் என்ற மாணவி க.பொ.த சாதாரணதரம் வரையும் கல்வி

பயின்று உயர்தரத்திற்கு வேறு பாடசாலைக் குச் சென்று பல்கலைக்கழக அனுமதியை 1984ஆம் ஆண்டு பெற்றுள்ளார். முற்றாகப் பார்வைஇழந்த இம் மாணவி இராமநாதன் கல்லூரி வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெறுகின்றார்.

விழிப்புல வலுவிழந்த மாணவியான செல்வி ரஞ்சினி விஜயரட்ணம் அவர்கள் க.பொ.த உயர்தரம் கலைப்பிரிவில் சிறப்பான மாணவியாகத் திகழ்ந்து A, B, 2C பெறு பேற்றினைப் பெற்று 1987இல் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றார். தனது முதல் நியமனத்தை இக்கல்லூரியிலேயே பெற்று மீண்டும் இராமநாதன் கல்லூரியோடு இணைந்து சிறந்த ஆசிரியர் என்ற சிறப்பினையும் கல்லூரித் தரத்திற்குப் பெருமையையும் பெற்றுத் தந்த இவர் தற்போதும் ஆசிரியப் பணியைச் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றார்.

விழிப்புலவலுவிழந்த ஏனைய மாணவிகளான செல்வி இராஜினி விசுவரட்டிணம் தற்போது கனடாவில் வசிக்கின்றார். செல்வி தயானி விசுவரத்தினம் தற்போது ஐக்கியராட்சியத்தில் வசிக்கிறார். செல்வி பெனடிக்ற்றா செபமாலை தற்போது மன்னாரில் பட்டதாரி ஆசிரியராகப் பணியாற்றுகின்றார். செல்வி நந்தினி இரத்தினம், கைதடி நவில்ட் பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றுகின்றார். இக் கல்லூரித்தாயின் பெருமை மிகு பிள்ளை களாய் இவர்கள் இன்றும் மிளிர்ந்துகொண்டிருக்கின்றார்கள்.

விசேட கல்வி வரலாற்றில் ஒன்றிணைந்த கல்வித்திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டமை குறிப்பிடத்தக்க ஒரு படிக்கலாகும். அமரர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி அவர்களின் தலைமையில் 1972இல் இக்கல்வித்திட்டமானது யாழ்ப் பாணத்தில் முன்னெடுக்கப்பட்டது. இக்கல்வித்திட்டத்தினைச் செவ்வனே முன்னெடுப் பதற்கென அம்மையார் தேர்ந்தெடுத்த பாடசாலைகளில் யாழ் இராமநாதன் கல்லூரியும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அவரது உயர்ந்த கல்விப் பணிகளுக்கு உறுதுணை புரிந்த கல்லூரிகளில் யாழ் இராமநாதன் கல்லூரிக்கும் தனியான ஓரிடமுண்டு. இக்கல்லூரி இக் கல்விப் பணியில் சிறப்பாக ஈடுபடுவதற்கு வலிகாமக் கல்வி வலயத்தின் ஒத்துழைப்பும் பெருமளவு கிட்டியது என்பதை நாம் மறந்து விட முடியாது. 2000ம் ஆண்டு வாழ்வக நிறுவனமும் வலிகாமக் கல்வி வலயமும் இணைந்து நடத்திய ஆசிரியர்களுகான ஆறு மாத கால விசேட கல்விக் கற்கை நெறி இராமநாதன் கல்லூரியிலேயே நடை பெற்றது. மேலும் விழிப்புலவலுவிழந்தோர் இல்லமாகிய வாழ்வகம் 1988ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட காலம் தொட்டு, வாழ்வகத்தின் பல்வேறு நிகழ்வுகள் கருத்தரங்குகள் போன்றவை நடைபெறுவதற்கான இடவசதியினை இராமநாதன் கல்லூரியே வழங்கியது. அது மாத்திரமல்ல வாழ்வக மாணவர்களும் பெருமளவில் இங்கு கல்வி கற்க ஆரம்பித் தனர். வாழ்வகத்தால் பயிற்றப்பட்ட விசேட ஆசிரியர்கள் இக்கல்லூரியிலே பணியாற் றியும் வந்தனர். இவர்களும் இராமநாதன் கல்லூரி ஆசிரியர்களும் கரங்கோர்த்து இப் பிள்ளைகளை நல்லவிதமாக மேம்படுத்தி வந்தனர்.

வாழ்வக சமூகத்தினரும் இராமநாதன் கல்லூரி சமூகத்தினரும் இணைந்து விசேட

கல்வி அலகுக்கான செயற்பாடுகளை ஆரம்பித்தனர். 2002ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ்வலகின் மூலமாக அப்போது இங்கு பயின்ற பன்னிரண்டு விழிப்புலவலுவிழந்த மாணவிகள் நெறிப்படுத்தப்பட்டனர். பின்னர் இவ்வலகானது வலிகாமக் கல்வி வலயத்தால் அங்கிகரிக்கப்பட்டது. இதன் அடுத்த கட்டமாக மாகாணக் கல்வித் திணைக்களத்தால் இவ்வலகுக்குகான கட்மும் புனரமைக் கப்பட்டுத் தற்போது இவ்வலகு புதுப் பொலிவோடு விளங்குகின்றது.

தற்போதும் இக்கல்லூரி வலிகாமக் கல்வி வலயத்தின் அனைத்து விதமான விசேட கல்வி செயற்பாடுகளுக்கும் கைகொடுக்கும் ஒரு கல்லூரியாகத் திகழ்ந்து வருகின்றது. இக் கல்லூரியின் விசேட தேவைகொண்ட பிள்ளைகள் பலர் பல்வேறு போட்டிகளில் ஆர்வத்தோடு பங்கேற்றுப் பல வெற்றி களையும் விருதுகளையும் பெற்றுள்ளனர். 2010ஆம் ஆண்டு உலக ஊனமுற்றோர் தினத்தையொட்டி நடாத்தப்பட்ட நடனப் போட்டியில் இக் கல்லுரி மாணவியான செல்வி உசேனி நரேந்திரா மாகாணமட்டப் போட்டிக்குத் தெரிவானமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இங்கு பயிலும் விழிப்புலவலுவிழந்த மாணவர்களும் பல்வேறு சாதனைகள் படைத்துள்ளனர். 2013இல் உலக ஊனமுற்றோர் தினத்தையொட்டி நடாத்தப்பட்ட போட்டிகளில் பிரிவு 2 தனி இசையில் செல்வன் அலக்ஸ் ரனிஸ்ரன் மாகாண மட்டத்தில் முதலாம் இடம்பெற்றுள்ளார். மேலும் குழு இசையில் செல்விகள் சி. யதுசா, சி. லக்சிகா, ஜெ. தமிழரசி, வெ. யனுபா, செல்வன்கள் ந. கௌசிகன், அலக்ஸ் ரனிஸ்ரன் ஆகியோர் மாகாண மட்டத்தில் முதலாம் இடம் பெற்றனர். மேலும் தனி இசையில் செல்விகள் சி. அநந்தினி, நா. துசியந்தி ஆகியோரும் தனி நடனத்தில் செல்வி. ஜெனுபாவும் மூன்றாம் இடம் பெற்றனர். இக்கல்லூரியின் விசேட கல்வி வரலாற்றில் இது குறிப்பிடத்தக்க ஒரு முன்னேற்றமாகும்.

விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகம் ஆரம்பிக்கப்பட்டதன் பிற்பாடு, அதிலும் 2002ஆம் ஆண்டு அந்நிறுவனம் சுன்னாகத்தில் தனது பணிகளை ஆரம்பித்ததன் பிற்பாடு பெருமளவான விழிப்புல வலுவிழந்த பிள்ளைகள் இங்கு கல்வி கற்று வருகின்றனர். 2010இல் செல்வன் துரைராசா அருண்குமார் புலமைப்பரிசில் பரீட்சையில் 163 புள்ளிகள் பெற்று சாதனையொன்றினை நிகழ்த்தியுள்ளார். இதுவரை இலங்கை வாழ் தமிழ் பேசும் விழிப்புலனற்ற மாணவர் எவரும் புலமைப் பரிசில் பரீட்சையில் இந்த அளவு புள்ளிகள் பெறவில்லை என்பது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

மேலும் விழிப்புலனற்ற மாணவிகளுள் செல்வி கி. ரேகா இங்கு கற்றுப் பல்கலைக்கழகம் சென்று தற்போது ஒரு பட்டதாரியாக வெளியேறியுள்ளார். இன்னும், செல்விகள். டில்வியா ஞானசீலன், இராஜலட்சுமி மார்க்கண்டு ஆகியோர் யாழ் பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவு இறுதியாண்டிலும் செல்வி தயாளினி வெற்றிவேல் கலைப்பிரிவு முதலாம் ஆண்டிலும் கல்வி கற்றுவருகின்றனர். இன்னும் பல மாணவர்கள் பல்வேறு நிலைகளில் பயன்பெற்றுள்ளனர். இவர்கள் தொடர்பான விரிவான விபரங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

**யா/இராமநாதன் கல்லூரியில் கல்வி பயின்று பல்கலைக்கழகம் சென்ற மாணவர்கள்**

| மாணவர் பெயர் | ஆண்டு |
|---|---|
| செல்வி ரஞ்சினி விஜயரட்ணம் | 1987 |
| செல்வி ரேகா கிருவானந்ததேவர் | -2008 |
| செல்வி இராசலட்சுமி மார்க்கண்டு | -2009 |
| செல்வி டிவ்வியா ஞானசீலன்- | 2009 |
| செல்வி தயாளினி வெற்றிவேல்- | 2011 |

**யா/இராமநாதன் கல்லூரியில் கல்வி பயின்று புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் விபரம்**

| மாணவர் பெயர் | புள்ளிகள் |
|---|---|
| சோதிப்பெருமாள் செல்வராசா | 129 |
| செல்வி காயத்திரி அரியசீலன் | 143 |
| அருண்குமார் துரைராசா | 163 |

**புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற பிள்ளைகளின் விபரம்**

| | |
|---|---|
| செல்வி ஜனனி கணேஸ் | 120 |
| செல்வி அனந்தினி சிவபாதசுந்தரம் | 103 |
| செல்வன் அமலநிதூசன் தவநாயகம் | 102 |
| செல்வன் ராஜ்குமார் ஜெயக்குமார் | 115 |
| செல்வி மயூரா சத்தியாகரன் | 113 |
| செல்வி லோகேஸ்வரி ஜெயராசா | 134 |
| செல்வி தர்சோதினி தர்மலிங்கம் | 99 |

**யா/இராமநாதன் கல்லூரியில் கல்வி பயின்று க.பொ.த சாதாரண தரம் சித்தி பெற்ற மாணவர்கள்**

*செல்வி மரிஸ்ரெலா ரவீந்திரபாலன்*

*செல்வி துஸ்யந்தி நாகராசா*

**2010 வலையமட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான பேச்சு, கட்டுரை, நடனம், பாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்கள்**

| | | | |
|---|---|---|---|
| லோகேஸ்வரி ஜெயராசா | பிரிவு 01 | பேச்சு | 1ஆம் இடம் |
| ஜனனி கணேஷ் | பிரிவு 02 | பேச்சு | 2ஆம் இடம் |
| அனந்தினி சிவபாதசுந்தரம் | பிரிவு 03 | பேச்சு | 2ஆம் இடம் |
| இராஜ்குமார் ஜெயக்குமார் | பிரிவு 01 | தனியிசை | 2ஆம் இடம் |
| மரிஸ்ரலா ரவீந்திரபாலன் | பிரிவு 04 | தனியிசை | 2ஆம் இடம் |

**மாகாண மட்ட அழகியல் மட்டம் 2013**

| | | | |
|---|---|---|---|
| அலைக்ஸ்றனிஸ்ரன் யேசுதாஸ் | பிரிவு 02 | தனி இசை | 1ஆம் இடம் |
| வெற்றிவேல் ஜெனுபா | பிரிவு 02 | தனி நடனம் | 3ஆம் இடம் |
| சிவபாதசுந்தரம் அனந்தினி | பிரிவு 04 | தனி இசை | 2ஆம் இடம் |
| நாகராசா துசியந்தி | பிரிவு 05 | தனி இசை | 2ஆம் இடம் |

**குழு இசைப் பிரிவு 02 1ஆம் இடம்**

| |
|---|
| ந. கௌசிகன் |
| ந. கௌதமன் |
| சி. யதுஷா |
| வெ. ஜனுபா |
| ஜெ. தமிழரசி |
| யே. அலைக்ஸ்றனிஸ்ரன் |
| சி. லக்சிகா |

## விசேட தேவையுடைய மாணவர் விபரம் - 2013

| தரம் | முற்றாகப் பார்வை | அரைகுறைப் பார்வை | முற்றாகக் கேட்டல் | கேட்டல் குறைபாடு | கை, உடல் இயக்கம் கால் | | பேச்சுக் குறைபாடு | கற்றல் இயலாமை | சுகாதாரக் குறைபாடு | பல்லினக் குறைபாடு | ஓட்டிசம் | மொங்கோலிசம் | மனவளர்ச்சி குன்றியோர் | உளப்பாதிப்பு | மீத்திறன் | நீண்டகால நோய் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | - | 01 | - | 01 | 01 | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 2 | 02 | - | - | - | - | - | 01 | - | 01 | - | - | - | - | - | - | - |
| 3 | 01 | - | - | - | - | - | - | 02 | 02 | - | - | - | - | 01 | 01 | - |
| 4 | 01 | 02 | - | - | - | - | - | 01 | - | - | 01 | - | - | 02 | 01 | 01 |
| 5 | 02 | 01 | - | 01 | - | - | 01 | - | - | 01 | - | - | - | 01 | - | - |
| 6 | - | 01 | - | - | - | - | - | - | 02 | - | - | - | - | 06 | - | 03 |
| 7 | 01 | 01 | - | - | - | 01 | - | - | 03 | 01 | - | - | - | 05 | - | 03 |
| 8 | - | 01 | - | - | - | - | - | - | 07 | - | - | - | - | 02 | - | - |
| 9 | - | 01 | - | - | - | - | - | - | 03 | - | - | - | - | 06 | - | 01 |
| 10 | 01 | - | - | - | - | - | - | - | 04 | - | - | - | - | 09 | - | 04 |
| 11 | 01 | - | - | - | - | - | - | - | 05 | - | - | - | - | 02 | 06 | 03 |
| A/L Arts 14, 15 | 01 | - | - | - | - | - | - | - | 03 | - | - | - | - | 02 | 17 | 10 |
| A/L com 14, 15 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| A/L Bio 14, 15 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |

யா/ இராமநாதன் கல்லூரியில் கல்வி பயின்ற மாணவர்களுக்குப் பல்வேறு நாடுகளிலிருந்து அன்பர்கள் பலர் உதவிகளைப் புரிந்துள்ளனர் அவர்களை நாம் இவ்விடத்தில் மறந்து விட முடியாது.

திரு. P. கிருஸ்ணகுமார் (லண்டன்)
திரு. S. பாலசுப்பிரமணியம் (லண்டன்)
திரு. மா. லோகநாதன் (கனடா)
திரு. S. இராஜேந்திரன் (கொழும்பு)
திரு. சண்முகரட்ணம் (கொழும்பு)
திரு. ந. அனல்தாஸ் (பிரான்ஸ்)
திரு. பஞ்சலிங்கம் (உரும்பிராய்)
திரு. மகேஸ்வரி (பிரான்ஸ்)

இன்று நூற்றாண்டு கடந்த நிலையில் யாழ் இராமநாதன் கல்லூரி மாறா இளமைத் துடிப்போடு நிமிர்ந்து நிற்கின்றது. விசேட கல்வித்துறையைப் பொறுத்தமட்டில் இன்றும் அது காத்திரமான பணியினை ஆற்றிய படிதான் உள்ளது. இக்கல் லூரியின் பணிகள் இன்னும் சிறக்க அனைத் துத் தரப்பினரும் முடிந்தளவு உதவி ஒத்துழைப் புக்களை வழங்கவேண்டும். விசேட கல்வித் துறையின் மேலான வளர்ச்சிக்கு இது நிச்சயம் துணைசெய்யும். மிக நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டுள்ள இந்தக் கல்லூரியின் பக்கம் அதன் பழைய மாணவர்களின் பார்வை திரும்பவேண்டும். கல்லூரியின் வளங்களும் வசதிகளும் இதன் மூலம் நிச்சயம் பெருக வாய்ப்பேற்படும். விசேட தேவை கொண்ட பிள்ளைகளின் விடிவுக்காய்ப் பாடுபடும் இக்கல்லூரியின் கல்விப் பயணம் மேன்மேலும் வலுப்பெற, வளம்பெற பழைய மாணவர்களின் பங்களிப்பு நிச்சயம் வழி சமைக்கும்.

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம் எமது மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி உதவியது. சுன்னாகம் இலங்கை, வங்கி விளையாட்டு நலன்புரிக் கழகத்தினர் கணினி ஒன்றை விசேட கல்வி சஞ்சிகை வழங்கி உதவினர்.

தற்போது விசேட கல்வித் துறைசார்ந்த பல்வேறு நவீன கற்றல் உபகரணங்கள் காணப்படுகின்றன அவற்றை எமது மாணவர்கள் அறிய மாட்டார்கள். இவ்வுபகரணங்கள் கிடைக்குமிடத்து அவர்கள் தம்நிலை விருத்தி செய்யமுடியும்.

உசாத்துணை நூல்கள்:

1. Open University of Srilanka, (2002) Known Theories in Education, Open University of Sri lanka.
2. Raveendran A and Selvanayagam, (2007) Seeriya Sinthanai.
3. WWW.hrw.org/childrern/2006
4. WWW.UNESCO.org

திருமதி மோகனவதனி ரவீந்திரன் B.A.Dip. in. Edu
ஆசிரியர்
யா/இராமநாதன் கல்லூரி.



# குழந்தைப் பருவத்திலிருந்தே தலைமைத்துவத்திற்கு அத்திவாரமிடுங்கள்

**திரு. நித்தியானந்தன் மதிரூபன்**
ஆசிரியர், யா/இராமநாதன் கல்லூரி

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" எனப் பட்டி தொட்டி யெங்கும் குழந்தை வளர்ப்பின் முக்கியத்து வம் பேசப்பட்டு வருகின்றது. மனிதக் குழந்தை ஜனித்த நிமிடத்திலிருந்தே, தலைமைத்துவப்பண்பு உணரப்படு கின்றது. குழந்தை ஜனித்ததும் வீரிட்டு அழுகின்றது. சிலவேளையில் சில குழந்தை கள் அழுவதில்லை. இது கர்ப்பத்திலி ருக்கும்போது தாயினால் கடத்தப்பட்ட தலைமைத்துவத்தின் வெளிப்பாடு என இந்திய மகப்பேற்று மருத்துவர். Dr. சந்தானலட்சுமி ஆனந்தவிகடனில் குறிப்பி ட்டுள்ளார். இன்றைய சவால்மிக்க உலகில் இளம் தலைமுறையினர் மத்தியில் தலை மைத்துவப் பண்பு வளர்த்தெடுக்கப்பட வேண்டியது அவசியமானதொன்றாகக் கருதப்படுகின்றது.

பிள்ளைகள் குழந்தைப்பருவத்தில் விளையாடும் போது திட்டமிடுவார்கள் "நான் அப்பா, நீ அம்மா இல்லை நான் டீச்சர் நீ மாணவன் என" அப்போது அவர்களைத் தட்டிக் கொடுத்து ஊக்கப் படுத்துங்கள் இது தலைமைத்துவப் பண்பு வளர்வதற்கு அவசியமானது. சிலநேரங் களில் அரசனாக, அரசியாக, வைத்தியராக, ஏன் மாடுமேய்ப்பவனாகக் கூடத் தங் களை உருவகித்து விளையாடுவார்கள். அப்போது கூட அவர்களது தலைமைத் துவப் பண்பு வளர்த்தெடுக்கப்படுகின்றது. மூன்று வயது தொடக்கம் ஐந்து வயது வரையான பருவத்தில் முன்பள்ளியில் இணைகின்றார்கள். இப்பருவத்தில் அவர்கள். பாடல், நாடகம், விளையாட்டு பேச்சு என மேடையேறி தமது தலைமை த்துவத்தின் துளிர்களை, வளர்த்தெடுக்கின் றார்கள். சிலவேளைகளில் ஏனைய சிறார்களின் மத்தியில் முன்மாதிரியாகவும் செயற்படு வார்கள். அவற்றைப் பார்த்து ஊக்கப்படுத் துங்கள், உங்கள் செல்வங்கள் செயற்படும் போது நீங்கள் பெறும் சந்தோஷத்திற்கும் உங்கள் பாராட்டால் அவர்கள் பெறும் சந்தோ ஷத்திற்கும் நிகராக எதுவும் கிடை யாது. "ஈன்ற பொழுதிற் பெருதுவக்கும் தன்ம கனை சான்றோன் எனக் கேட்ட தாய்" என வள்ளுவர் பாடியது எத்தனை மகத்தானது.

ஆபிரகாம்லிங்கன், அறிவியல் மேதை

அப்துல்கலாம், எடிசன், இவர்க ளின் வரலாற்றுப்பாதைகள் ஒவ்வொன்றும் வலிசுமந்த ரணங்களின் சுவடுகளாயினும் அவர்களுக்கு உலகம் இன்று வழங்கி யிருக்கும் அங்கிகாரம் அவர்களது தலை மைத்துவத்தின் பால் கிடைத்த வெற்றியே! ஆபிரகாம் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்யும் போதெல்லாம், கூலியா ட்களை முன்வந்து கணக்கிடுவது, சாப் பாட்டுப் பொதிகளைப் பகிர்ந்து கொடுப் பது என பல தலைமைத்துவ வெளிப்பாடு களைக் காட்டியுள்ளார். அறிவியல் மேதை அப்துல்கலாம் பத்திரிகைவிற்றும், பட கோட்டியும் எத்தனை துறைகளில் குடும் பத்தின் தலைமைத்துவத்தைச் சுமந்தார் கள். இன்று எங்கள் எல்லோர் மனங்களி லும் அவர்கள் தலைமைத்துவ நாயகர்கள். பாடசாலைப்பருவம் தலைமைத்துவத்தை வளர்த்தெடுப்பதற்கு மிகவும் பொருத்த மான களமாகும்.

நிகழ்வுகளில் தலைமைதாங்குவது
விளையாட்டுக்களில் தலைமை தாங்குவது
வகுப்புத்தலைவராக இருப்பது
மாணவ தலைவராக இருப்பது
மன்றங்களில் அங்கம் வகிப்பது

இவையெல்லாம் மாணவர்களிற்கு கிடைத்த தலைமைத்துவக் களங்களாகும். துடிப்புள்ள மாணவர்களாக எந்தவொரு செயற்பாட்டிலும் ஆர்வம் கொண்டு முன் மாதிரியாக செயற்படவேண்டும் அப் போதுதான் தலைமைத்துவம் கட்டி யெழுப்பப்படும்.

பிரச்சினைகளை இனங்காணும் திறன்.
திட்டமிடும் திறன்.
சவால்களை எதிர்கொள்ளும் திறன்.
இலக்குகளைத் தீர்மானிக்கும் திறன்.
சூழலுக்கு இயைபாதல்

என எண்ணிலடங்காத பண்புகள் தலைமைத்துவத்தினால் கட்டியெழுப்பப் படுகின்றன.

இதனைக் கருத்திற்கொண்டு இலங்கை அரசாங்கம் பாடசாலை மாணவர்கள் மத்தியில், சமூகத்தினர் மத்தியில், பல் கலைக்கழக மாணவர்கள் மத்தியில் தலை மைத்துவத்தினை வளர்ப்பதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

தேசத்தின் அபிமானம்.
தேசத்தின் மகுடம்.

எனப் பல நிகழ்ச்சித்திட்டங்கள் உருவாக்கப்பட்டு தலைமைத்துவம் போதி க்கப்படுகின்றது. இன்றைய சவால்மிக்க உலகில் தலைமைத்துவப் பண்பு கொண்ட இளம் சமுதாயத்தைக் கட்டியெழுப்புவது நம் எல்லோரினதும் கடமையாகும்.

# மாற்றுவலுவுள்ள மாணவர் சாதனைகள்

**திருமதி கீதாகிருஷ்ணன் தாமரைச்செல்வி**
(விசேட கல்வி ஆசிரியர்)
(2012 தொடக்கம் 2012.05.14)

*உலகில் உள்ள பிறப்புக்களில் உயரிய பிறப்பாக விளங்குவது மானிடப்பிறப்பு. மானிடர்களாகப் பிறந்தவர்களில் சிலர் ஏதோ ஒரு காரணத்தினால் பிறக்கும் போதோ அல்லது அற்குப் பின்னரோ விசேட தேவைக்கு ட்பட்டவர்களாகிவிடு கின்றனர். இவ்வாறான வர்களை எமது யாழ் மாவட்டத்திலும் காண லாம். இவர்கள் தங்களது மாணவப் பருவத்தில் பல தடைக்கற்களைப் படிக்கற்களாய் மாற்றி தேர்ச்சிகளைப் பெறுகின்றனர்.*

*இவ்வாறான சில மாணவர்கள் வெற்றி இலக்கை அடைவதற்கு வழிகாட்டிய பாடசா லைகளுள் ஒன்றாக எமது இராமநாதன் கல்லூரி விளங்குகின்றது. அன்று முதல் இன்றுவரை பல மாற்றுத் திறனாளிகளை அறி வாளிகளாக்கி எமது சமூகத்திற்குத் தந்துள்ளது. 2002ஆம் ஆண்டு விசேட கல்வி அலகு ஆரம்பிக்கப்பட்டு இம் மாணவர்களினது வளர்ச்சிக்குத் துணைபுரிந்து வருகின்றது. இவ்வலகின் ஊடாக பிளைன்ட், டவுன்ஸ், ஓட்டிசம் போன்ற நிலையிலுள்ள மாற்றுத் திறன் உடைய மாணவர்களுக்கான பியிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. இதனூடாக இம் மாணவரது தேர்ச்சிமட்டமும் அவர்களின் விருத்தி செயற்பாடுகளும் மேம்பட் டுள்ளன. அந்த வகையில் விசேட தேவைக்குட்பட்ட*

**மாணவர்களின் சாதனைகள் வரு மாறு:-**

*டவுன்ஸ் மாணவியாகிய செல்வி நரேந்திரா உசேனியின் சாதனைகள். 2009, 2010, 2011, 2012ஆம் ஆண்டுகளில் வலிகாம வலயத்தினால் நடாத்தப்பட்ட மாற்று ஆற்றல் உடை யோருக்கான விளையாட்டுப் போட்டியில் குண்டு, தட்டு, ஓட்டம் ஆகிய விளையாட்டுக்களில் பங்குபற்றி வெற்றிக் கிண்ணத் தைப் பெற்றுக் கொண்டார். மேலும் 2011ஆம் ஆண்டு கிளிநொச்சியில் நடை பெற்ற மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றி முதல் இடங் களைப் பெற்று தங்கப் பதக்கங்களையும், வெற்றிக் கிண்ணத்தையும் பெற்றுக் கொண்டார். மேலும் 2010, 2011ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற மாற்று ஆற்றல் உடையோருக் கான வலய மட்ட நடனப் போட்டியில் பங்குபற்றி முதல் இடத்தை பெற்றார்.*

*ஓட்டிச மாணவனான விஸ்னுகுமார் புருஷோத்தமனின் சாதனைகள் 2011ஆம், 2012ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற மாற்று ஆற்றல் உடையோருக் கான வலய மட்ட விளையாட்டுப் போட் டிகளில் பங்கு பற்றி முதல் இடத்தைப் பெற்று, பதக்கங்களையும் வெற்றிக் கிண் ணத்தையும் பெற்றுக் கொண் டார்.*

**பார்வையற்ற மாணவர்களது சாதனைகள்:-**

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 2004ஆம் ஆண்டு செல்வி அ. காயத்திரி, செ. சோதிப்பெருமாள் ஆகியோரும், 2010ஆம் ஆண்டில் செல்வன் து.அருண்குமாரும் சித்தியடைந்தனர். க.பொ.த. உயர்தர பரீட்சையில் 2007 செல்வி கி. ரேகாவும், 2008 செல்வி ஞா. டில்வியா, செல்வி மா. இராசலட்சுமி ஆகியோரும் 2011இல் செல்வி வெ. தயாளி னியும் சித்தி அடைந்து பல்கலைக்கழகம் சென்றனர்.

பார்வையற்ற மற்றும் பார் வைக் குறைபாடுடைய 18 மாணவர்கள் 2011ஆம் ஆண்டு மாகாண மட்டத்தில் நடைபெற்ற விசேட தேவையு டையோருக்கான விளையாட்டுப் போட் டியில் பங்கு பற்றி வெற்றிகளைப் பெற்றுள் ளனர்.

இம் மாணவர்கள் மாற்று ஆற்றல் தினத்தை முன்னிட்டு வலிகாம வலய விசேட கல்விப் பிரிவினால் நடாத்தப்பட்ட கட்டுரை, கவிதை, பேச்சு, நடனம், இசை போட்டிகளில் பங்குபற்றி வெற்றிகளைப் பெற்றுள்ளார்கள்.

2007ஆம் ஆண்டு முதல் வலிகாம வலயத்தினால் விசேட தேவைக்குட் பட்டோருக்காக நடாத்தப் பட்டு வருகின்ற விளையாட்டுப் போட் டியில் எமது கல்லூரியில் இருந்து விசேட தேவைக்குட் பட்ட மாணவர்கள் பங்கு பற்றி வெற்றி களையும் சாதனைகளையும் படைத்து வருகின்றனர். இம் மாணவர்கள் பாடசாலை இல்ல விளையாட்டுப் போட் டிகளிலும் தங்கள் திறமைகளை வெளிப் படுத்தியுள்ளனர்.

இவ்வாறான 2002ஆம் ஆண்டு முதல் விசேட தேவைக்குட்பட்ட மாணவர்கள் கல்வி விளையாட்டு மற்றும் இணைப்பாட விதான விதான செயற்பாடுகள் என்பவற் றில் பங்கு பற்றி வெற்றிகளைப் பெற்றுள் ளனர். இவர்களின் வெற்றிக்கு விசேட கல்வி அலகும் பங்களிப்புச் செய்துள்ளது.

# விவசாய மன்றம் - 2013

யாழ்ப்பாணத்தில் மருதனார்மடம் எனும் இடத்தில் நான்கு பக்கமும் மதிலால் சூழப்பட்ட கலைக்கூடமே இராமநாதன் கல்லூரியாகும். பெருவள்ளலான சேர். பொன். இராமநாதன் அவர்களால் உருவாக்கப்பட்டது. இக்கல்லூரி ஆகும்.

சேர்.பொன்.இராமநாத வள்ளல் சமய, சமூக, பண்பாடு விழுமியங்களை மேம்படுத்திய தோடு விவசாய வளர்ச்சியில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியவர் ஆவார். 25 ஏக்கர் காணியில் 03 கிணறு 01 கேணியும் அமைத்து தென்னந்தோட்ட பயிர்செய்கை மேம்படுத்தினார். பாடசாலையில் மாட்டுப்பண்ணை அமைத்து விடுதி மாணவர்களுக்கு பயன்படக் கூடியதாக வசதி செய்தார். கிளிநொச்சி இராமநாதபுரத்தில் 300 ஏக்கர் காணியில் நெல் பயிரிடப்பட்டு அங்கு நெல் உடைக்கும் இயந்திரத்தை அமைத்து நெல்லை உடைத்து அரிசியாக்கி விடுதி மாணவர் பெறக்கூடியதாக வசதி செய்தார். தென்னிலங்கை பகுதி தென்பிருந்தாவனம் எனும் தோட்டம் 147 ஏக்கர் பரப்பளவில் அவரின் சொத்தாக விளங்குகிறது.

ஆரம்பகாலகட்டத்தில் தரம் 06 -13 வரை விவசாயவிஞ்ஞான பாடம் ஒரு பாடமாக கற்பிக்கப்பட்டது. விவசாய விஞ்ஞான ஆசிரியராக செல்வி.பத்மாவதி இராஜதுரை என்பவரும் பின்னர் செல்வி செல்வலோஜினி. இராஜதுரை என்பவரும் விவசாயத்தை கற்பித்தார்கள். அன்றைய காலகட்டத்தில் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் வு.மாணிக்கவாசகர் பொறுப்பாக இருந்தார். 1974ஆம் ஆண்டு எங்கள் பாடசாலையின் வைர விழா இடம் பெற்றது.

1978ஆம் ஆண்டு விவசாய மூலவள நிலையம் மானிப்பாய் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கம் என்பவரால் புதிதாக திறந்து வைக்கப்பட்டது. விவசாய உதவிக்கல்விப்பணிப்பாளராக ப. கணேசமூர்த்தி என்பவர் இருந்தார். அன்றைய கால கட்டத்தில் உருளைக்கிழங்கு, வெங்காயம், பெருமளவு உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. விஞ்ஞான ஆசிரியர் சா.நாகநாதன் உதவியுடன் முந்திரிகைச்செடியும் அதிகளவில் நாட்டப்பட்டது. அதில் பெருமளவு பணம் கிடைத்தது. உடுவில் கோட்டமட்டத்தில் நாற்றுமேடை அமைப்பதில் எங்கள் பாடசாலை முதலாம் இடத்தை பெற்றது. இதனால் ஊர் மக்களால் பரிசில்கள் கிடைத்தன. அன்றையகாலகட்டத்தில் விவசாய பணியாளராக அரியாலையைச் சேர்ந்த இரட்ணசிங்கமும் பின்னர் சுப்பிரமணியம், கணநாதன், சிவபாலன், சர்வேஸ்வரன் போன்றோரும் விவசாய செயற்பாடுகளை மாணவர்களுடன் சேர்ந்து ஒத்துழைப்பு நல்கினார்கள்.



யா/இராமநாதன் கல்லூரி விவசாய விஞ்ஞான அலகை கொண்டது. இக்கல்லூரி முன்பு மருதனார்மட கோட்டப் பாடசாலை களுக்கும் தற்போது வலிகாமம் வலய பாடசா லைகளுக்கும் விவசாய விஞ்ஞான பாடத்தை அறிமுறையையும் செயல்முறையையும் கற்பிக்கும் முன் மாதிரிப்பாடசாலையாக விளங்குகிறது. நீர், நில, வளமும் போதியளவு உண்டு விவசாய பாட செயல்முறைப் பரீட்சை களும் இங்கு நடைபெறுகிறது.

திருமதி பத்மினி அருளானந்தம் ஆசிரியர் (விவசாய விஞ்ஞான பட்டதாரி) 1985-2002 ஆண்டு வரை இப்பாடசாலையில் விவசாய ஆசிரியராக கடமையாற்றினார். 1985 -1996 தொடக்கம் ஆசிரியராகவும் 1996-2002 வரை உதவி அதிபராகவும் எங்கள் பாடசாலையில் கடமையாற்றினார். அவரது காலப்பகுதியில் மரம் நடுகைச் செயற் பாடுகளை திறமையாக நடாத்தியமையும் வீட்டுத்தோட்ட போட்டியிலும் முதலாம் இடத்தை பெற்றமை சிறப்புக்குரியது.

1987ஆம் ஆண்டில் இடம் பெற்ற உள்நாட்டு யுத்தத்தை தொடர்ந்து இந்திய அமைதிப்படை வருகையின் பின் இந்த நாட்டில் இருந்து வெளியேறிய மக்கள் மீண் டும் இலங்கைக்கு வந்தனர் அவர்களுக்கு தொழில் வாய்ப்பு ஏற்படுத்தும் முகமாக முறை சாரக்கல்விப்பிரிவில் யாழ் மாவட்டத்திற் கான விவசாய பயிற்சி நிலையம் 15.05.1989 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு இதற்கான நிதியை UNHCR நிறுவனம் வழங்கியது. போதனாசிரியராக திரு. க. செல்வக்குமாரன் (ISA) விவசாய பாடத்திற்காக நியமிக்கப் பட்டார். வளவாளர்களாக திருமதி ச. துரை ராஜா ISA விவசாயவிஞ்ஞானம், செல்வி S. தம்பிஜயா விவசாய ஆசிரியர், திரு. வீ. கருணா நிதி (பூங்கனியியல் நிபுணர்) திரு. S. நாகேந் திரம் விவசாய அலுவலகர், திரு. S. கதிர்காம நாதன் (தொழில்நுட்பக்கல்லூரி) திரு. சி. சிவராஜன் (விவசாய ஆசிரியர்) ஆகியோ ருடன் பல சிறப்புக் கருத்துரை வழங்குவதற்கு வன பரிபாலன அதிகாரி உட்பலரும் கலந்து கொண்டனர்.

விலங்கு வேளாண்மையும் விவசாய தொழில்நுட்பமும் என்ற பயிற்சி நெறியில் 40 மாணவர்கள் 1989ஆம் ஆண்டு அனுமதிக்க ப்பட்டு 18 பேர் சித்தியடைந்தனர். 1990 ஆம் ஆண்டு மேலதிகமாக பண்ணை முகாமைத் துவ பயிற்சி ஆரம்பிக்கப்பட்டு 09 மாணவர் கள் அனுமதி பெற்று ஒன்பது மாணவர்க ளுக்கும் சித்தி பெற்றனர் திறமைச்சித்தி 06 சாதாரண சித்தி 03 பயிற்சிக்காலத்தில் நடைபெற்ற குறிப்பிடதக்க விடயங்கள்

01. தேனீ :- வளர்க்கப்பட்டு செயல்முறை அனுபவம் வழங்கப்பட்டது. தேனீ வளர்ப்பு கையேடு தயாரிக்கப்பட்டு வெளியிடப் பட்டது.

02. நாற்று மேடையில் கத்தரி, தக்காளி, மிளகாய், கோவா நாற்றுக்கள் உற் பத்தி செய்யப்பட்டு கல்லூரியிலும் சந்தையிலும், வெளியூரிலும் விற் பனை செய்யப்பட்டது.

03. நிலநீரை சிக்கனப் படுத்துவதற்காக பொலித்தீன் மண்ணின் கீழ் இடப் பட்டு அதன் மேல் பயிர்செய்யும் நுட்பம் காண்பிக்கப்பட்டது.

04. மஸ்கன்ஸ் யாழ் கிளை அனுசரணை யுடன் தரைக்கீழ் நீர்ப்பாசனமுறை அறிமுகச்செய்யப்பட்டது. இறப்பர் நுண்துளைக்குழாய் மூலம் நாற்று மேடைகளுக்கு நீரப் பாய்ச்சும் முறை சிறப்பாக வெற்றிகரமாக செய்து காண்பிக்கப்பட்டது.

05. இரண்டு சில்லு உழவு இயந்திரம் செலுத்தும் பயிற்சியும் அதன் பராமரிப்பு தொடர்பான பயிற்சியும் வழங்கப்பட்டது.

06. பாடசாலையில் மரநடுகை சிறப்பாக நிறைவேற்றப்பட்டது.

07. பண்ணைச்சுற்றுலா, களைப்பயிற்சி முதலியன வழங்கப்பட்டது. மேற் பார்வையாளராக செல்வி பெரிய தம்பி பிரதிக்கல்விப்பணிப்பாளர், திரு. ச. சுப்பிரமணியம் உதவிக் கல் விப் பணிப்பாளர் தொழில் நுட்பம், முறைசாராக்கல்வி, அவர்களும், பாடசாலை அதிபர், திருமதி S. குமா ரசாமி, திருமதி ம. திருச்சிற்றம்பலம் ஆகியோர் கடமை புரிந்தனர்.

1991ஆம் ஆண்டு முறைசாராக் கல்விப் பிரிவு (விவசாயம்) திரு. ச. சிவராஜன் அவர் களிடம் ஒப்படைக்கப்பட்டு திறம்பட தொட ர்ந்து நிர்வாகிக்கப்பட்டது. திரு. க. செல்வக் குமாரன் 21.06.1989 ஆந் திகதி முதல் 20.10.1991 வரை இக்கல்லூரியில் கடமை யாற்றினார். இப்பாடசாலை ஆசிரியர்களு டன் ஒத்துழைத்து விவசாயபாடத்தை கற்பித் துள்ளார். ஆசிரிய ஆலோசகராக விருந்த கால ப்பகுதியில் ஆசிரியர்களுக்கான கருத்தரங் குகளும், கண்காட்சிகளும் இங்கு நடை பெற்றன.

கல்லூரியின் கிழக்கெல்லையினூடாக கட்டாக்காலி கால்நடைகள் உள்நுளைந்து விவசாய பிரிவினுள் உள்ள பயிர்களை அழித் துவந்துள்ளன. அதனைத் தடுப்பதற்கு கல்லூரி யின் சார்பில் திரு.க.குலசேகரன், கோட்டக் கல்விப்பணிப்பாளர், கல்லூரி பிரதி அதிபர் திருமதி ப. பரராஜசிங்கம் முறைசாரக்கல்வி ப்பிரிவு பொறுப்பாசிரியரும் ஆசிரிய ஆலோச கருமான திரு. க. செல்வக்குமாரனும் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வி.துரைராஜா, அவர்களை சந்தித்து மதில் அமைக்கும்படி கோரிக்கை விடுத்தனர். பல்கலைக்கழக பொறியிலாளர் திரு. S. தயாபரன் மூன்று மாதத்தில் கட்டிமுடிப் பதாக கூறி அதனை சிறப்பாக நிறைவேற்றி னார். பல்கலைக்கழக பதிவாளரும் சந்திப்பின் போது ஒத்துழைப்பு நல்கினார்.

எங்கள் பாடசாலை தரம் 01 13 வரையிலான வகுப்புக்கள் உள்ள போதிலும் தற்போது விவசாய விஞ்ஞானம் தரம் 10 13 வரையுமே இருக்கிறது. கௌரவ ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷஅவர்களின் திட்டத்தின் படி தரம் 06 09 வரை செயல் திட்டப்பாடமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. பெண் மாணவிகளாக இருந்தபோதிலும் விருப்புடன் பல மாணவர்கள் கற்று பல்கலைக்கழகம் விவசாயக்கல்லூரி விவசாயத்தொழில் நுட்ப நிறுவனங்களுக்கும் சென்றுள்ளார்கள்.

2010ம் ஆண்டு ஐப்பசிமாதம் I. O. C நிறுவனத்தின் மூலமாக இருபத்தாறு மாண வர்களுக்கு மரக்கன்றுகள் அன்பளிப்பு செய்து ஒரு மரம் பராமரிப்பதற்காக 100%கவும் அதற் கான வட்டியும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றது. மாணவர்கள் விருப்புடன் அந்தச் செயற்பாட்டில் ஈடுபாட்டுடன் தொழில் பட்டு வருகின்றார்கள்.

பாடசாலை அபிவிருத்திச் செயற் பாட்டில் இலண்டன் கிளை 100 மரக்கன்று கள் நாட்டி கன்றுகளின் வளர்ச்சிக்காக போதிய ஆக்கமும் ஊக்கமும் செயல்படுத்தி வருகின்றது. இதற்கெல்லாம். முழுமையான

பங்களிப்பை செய்பவர் இணுவிலைச்சேர்ந்த திரு.நடராஜா சச்சிதானந்தம் அவர்களேயாவர் அவரின் செயல்பாட்டிற்கு பாடசாலை என்றும் நன்றி உடையவர்களாக இருப்போம்.

மாணவர்கள் செயல்பாட்டில் ஈடுபட்டு தோட்டத்தில் பல பயிர்களை நாட்டி அவற்றின் விளை பொருட்களை விடுதி மாணவர்களுக்கும் பாடசாலை மாணவர் உணவுக்காகவும் கொடுக்கின்றார்கள் மேலதிக மாகவுள்ளவற்றை விற்று அப்பணத்தில் மேலும் உற்பத்திச்செயல்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

எங்கள் பாடசாலை பெண்களுக்காக இருந்த போதிலும் பல பாடசாலை தோட்டம் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியும் ஈட்டியு ள்ளார்கள். பல

01. விவசாய அபிவிருத்தி கமநல சேவை கள் அமைச்சினால் அமுல் செய்யப் படும் "நாம் பயிரிடுவோம். தேசத்தை உருவாக்குவோம். உள்ளூர் உணவு உற் பத்தியை ஊக்குவிக்கும் தேசிய செயற் றிட்டத்தின் கீழ்2008ம் ஆண்டில் நடாத்தப்பட்ட தேசிய வீட்டுத் தோட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தில் வெற்றி பெற்றுள்ளது. (அரச பாடசாலைகளுக் கிடையிலான போட் டியில் உடுவில் பிரதேச செயலக மட்டம்)

02. "பயிர் வளர்ப்போம் நாட்டை முன் னேற்றுவோம்" உள்ளூர் உணவு உற்பத் தியை ஊக்குவிக்கும் தேசிய செயற்றி ட்டத்தின் கீழ் 2011ம் ஆண்டில் யாழ்ப் பாண மாவட்ட செயலகத்தால் நடாத் தப்பட்ட பிரதேச செயலகத்தால் நடா த்தப்பட்ட பிரதேச செயலக மாவட்ட வீட்டுத்தோட்டப்போட்டியில் யாழ்ப் பாண மாவட்டப் பாடசாலைகளுக் கிடையிலான வீட்டுத்தோட்டப் போட்டியில் எங்கள் பாடசாலை இரண்டாம் இடத்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவை மாணவிக ளின் ஆளுமை விருத்திச் செயல் பாட்டினையே பிரதிபலித்து காட்டு கின்றது. என்பது மிகையாகாது.

நான் கடந்த இருபத்திநான்கு வருடங் களாக இப்பாடசாலையில் விவசாயத்தை ஒருபாடமாக கற்பித்து வருகின்றேன். நான் கல்வி பயிலும் காலங்களிலும் விருப்புடன் கற்கும் பாடங்களில் இதுவும் ஒன்றாகும். அப்போதைய விவசாய பாடஆசிரியர் செல்வி பத்மாவதி இராஜரட்னமாகும். மிகுந்த ஆளுமை நிறைந்த ஆசிரியர் அவரின் அன்புக்கட்டளைக்கு அடி பணிந்து விவசாய செயல்பாடுகளில் முன்னின்று செயலாற்று வோம். களைகட்டல், பயிர்நடல், அறுவடை போன்ற செயல்பாடுகளில் முழுப்பாவாடை போட்டாலும், சேலை உடுத்திருந்தாலும், அனைத்து கருமங்களிலும் முன்னின்று விருப்புடன் செயலாற்றுவோம். அன்றைய நாட்களில் விவசாய பாடத்திற்கென பணியா ளர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இப் போது அப்படியான உதவிகள் குறைந்தே காணப்படுகிறது.

நான் இப்பாடசாலையில் கற்பிக்க வந்தபோது நாட்டிய மரங்கள் (தென்னை, மா, மரமுந்திரிகை, கொய்யா, வாழை, எல்லாம் தற்போது பயன்பாட்டினுள்ளவைகளாக காணப்படுகின்றது. எனக்கு அவற்றை பார்க் கும் போது பெருமையாய் உள்ளது. எம் உயிர் உள்ளவரை பாடசாலை வளர்ச்சிக்கு உறுது ணையாய் இருப்போம் என உறுதியளிக்கின் றேன்.

# யா/ இராமநாதன் கல்லூரி இந்துமன்றமும் செயற்பாடுகளும்

**திருமதி க. லிங்கேஸ்வரன்**
இந்துமன்றப் பொறுப்பாசிரியர்
இராமநாதன் கல்லூரி

*கருதரிய சிற்சபையில் ஆனந்த நித்தமிடும்*
*கருணா கரக் கடவுளே திரிகரண சுத்தியும்*
*காரிய சித்தியும் அருள்வாய்."*

என்பது இராமநாதன் கல்லூரியின் மகுடவாசகம். இது எல்லோர் மனங்களிலும் எழுதப்பட வேண்டிய மந்திரம். இதனை வரம்பிட்டுக் காட்டியவர் சேர். பொன். இராமநாதன் அவர்கள். ஆத்மீகக் கல்விக்கு அழுத்தங் கொடுத்த இராமநாதன் அவர்கள் இக்கல்லூரியைக் கட்டும் பொழுதே ஆலயத்தையும் இணைத்துக் கட்டினார். மாணவர்கள் வழிபாட்டு முறைகளை நெறிப்படுத்திக் காட்டினார்.

இந்து தமிழ்ப் பெண்களுக்கென முதன் முதலாக மருதனார் மடத்தில் அமைக்கப் பெற்ற இக் கல்லூரி தனக்கெனச் சிறந்த கொள்கைகளை உடையதாக விளங்கின்றது. சைவ நெறி நின்று மனையறங் காக்கும் நல்ல இல்லறத்தரசிகளைத் தோற்றுவிக்க வேண்டுமென்று விரும்பினார். இங்கே கல்வி கற்ற மாணவிகளின் நடை, உடை, உணவு, ஒழுக்கக் கல்வி பண்பாடு யாவும் பின் தோன்றிய பாடசாலைகட்கு எல்லாம் முன்னோடியாகத் திகழ்ந்தது.

சேர். பொன். இராமநாதன் எந்த நோக்கத்தோடு இக்கல்லூரியைக் கட்டினாரோ அந்த நோக்கம் நிறைவேற அதிபர்கள், ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செயல்பட்டார்கள். விடுதி மாணவர்களும் ஏனைய மாணவர்களும் வழிபாட்டு ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடித்தனர். மாணவர்களிடையே இந்து மன்றம்இ தமிழ் மன்றம் முதலிய மன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டுச் சமயம் சார்ந்த அனைத்துச் செயற்பாடுகளும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

ஒரு நூற்றாண்டு கால எல்லையை நிறைவு செய்து நூற்றாண்டு விழாவைக் கொண்டாட இருக்கும் கல்லூரியின் இந்து மன்றச் செயல்பாடுகளை கூறுவதில் இந்து மன்ற பொறுப்பாசிரியர் என்ற வகையில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

நான் இக்கல்லூரியின் பழைய மாணவி. இக்கல்லூரியில் 24 வருடங்களாக் கல்வி கற்பித்து வருகிறேன். இத்தனை வருடகாலங்களிலும் இந்து மன்றச் செயல்பாடுகளில் எனது பங்களிப்பு இருந்தே வந்தது. இந்த வகையில் நான் இந்து மன்றப் பொறுப்பாசிரியராக இருக்கின்றேன். இதே வேளை

இங்கே கல்வி கற்பித்து இந்து மன்றப் பொறுப்பாசிரியராக விளங்கிய செல்வி தங்கம்மாக்கா, திருமதி சிவப்பிரகாசபிள்ளை, அங்கையக்கண்ணியக்கா, மனோரஞ்சிதாக்கா இவர்கள் என் வணக்கத்திற்குரியவர்கள். அவர்கள் என் ஆசான்கள்.

இந்து மன்றச் செயற்பாடுகளுக்கு அமைவாக கல்லூரி வழிபாட்டிடம் அதாவது நடராஜர் ஆலயம், சரஸ்வதி மண்டபம், சமாதி ஆலயம் என்பன அமைந்துள்ளன. விடுதி மாணவர்கள் காலை மாலை வேளைகளில் ஆலயத்தில் நடைபெறும் பூசை வழிபாடுகளில் கலந்து கொள்வர். பூந்தோட்டத்தில் மலர் பறித்து மாலைகள் தொடுத்துப் பூசைக்கு உதவுதல், ஆலயத்தையும் இதற்கென அமைந்த பூந்தோட்டத்தைப் பாதுகாத்து நீருற்றி வளர்த்தலும் விடுதி மாணவர்களின் செயற்பாடுகளாகும். பண்ணோடிசை பாடுதலும் ஆலயத்தொண்டுகளில் ஈடுபாடும் உடையவராக மாணவர்களை இந்துமன்றம் வழிநடத்தி வந்தது.

கல்லூரி காலைப்பிரார்த்தனையின் போது நற்சிந்தனை வழங்கல், திருக்குறளுக்கு விளக்கமளித்தல், அதிபர் ஒழுக்கம் சம்மந்தமான கருத்துரை வழங்கல் என்பவற்றை இந்து மன்றம் முன்னெடுத்துச் செல்கின்றது.

மாணவர்கள் ஒவ்வொரு நாளும் சமாதி ஆலயத்திற்கு காலைப்பூசையின் போது மலர் கொண்டு வழிபாடு செய்வது வழக்கம். வெள்ளிக்கிழமைகளில் நடராஜர் ஆலயத்தில் வகுப்பு ரீதியாக பூசைப்பொருட்கள், பிரசாதங்கள் கொண்டு வந்து சிவபுராணம் ஓதுதல் பூசை வழிபாடுகளும் இடம் பெறுவது வழக்கமாக உள்ளது. நாயன்மார்களது குருபூசை தினங்களும் ஆலயத்தில் கொண்டாடி பெரியார் ஒருவரை அழைத்து நாயன்மார் பெருமைகளும் சொல்லப்படும் அத்தோடு சேர். பொன். இராமநாதன் குருபூசை, சீமாட்டி லீலாவதி இராமநாதன் குருபூசை, அமைச்ச ரும் செனற்றருமாகிய சு. நடேசபிள்ளை அவர்களின் குருபூசை சீமாட்டி சிவகாமசுந்தரி நடேசபிள்ளை அவர்களது குருபூசைத்தினங்களும் நடராஜர் ஆலயத்தில் வழக்கமாக செய்யப்படுகிறது. மகாசிவராத்திரி விடுதி மாணவர்களால் கொண்டாடப்பட்டு வருகின்றது. வருடத்தில் ஆறு நடேசர் அபிடேகங்களும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது. நவராத்திரி பூசை வகுப்பு முறையில் ஒவ்வொருநாளும் சிறப்பாக நடைபெறுகிறது. நவராத்திரி விழாவை முன்னிட்டு போட்டிகள் (கோலம், சரம் கட்டுதல், கழுத்து மாலை, கொண்டை மாலை, தோரணம் கட்டுதல், கும்பம் வைத்தல், சகலகலாவல்லி மாலை, பாராயணம் செய்தல்) முதலிய பல போட்டிகளை நடாத்தி வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வாணி விழாவன்று பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றது. வாணி விழா சிறப்பாகக் கொண்டாடி வருவதோடு விஜய தசமியன்று சிறுபிள்ளைகளுக்கு அதிபரால் ஏடு தொடக்கல் வைபவமும் இடம் பெறுதல் வழக்கம். இராமநாதேஸ்வரர் ஆலயத்தில் ஆனி உத்தர விழா, மணவாளக்கோல விழா, இராமநாதர் குருபூசை என்பனவும் சிறப்பாக இடம் பெறுவது வழக்கம் மணவாளக்கோல விழாவின் போது பார்வதி பரமேஸ்வரர் சமேதராக ஊஞ்சல் ஆடுவது வழக்கம். எம்பெருமான் பார்வதி சமேதராய் வருவார்.

இராமநாதேஸ்வரர் ஆலயத்தில் ஆனித் திருவிழா, மணவாளக்கோலவிழா, சேர்.

பொன் இராமநாதன் குருபூசை என்பன சிறப் பாகக் கொண்டாடி வருவது வழக்கம். மண வாளக்கோல விழாவின் போது பார்வதி சமேத பரமேஸ்வரர் வீதி உலா வருங்காட்சி கண் கொள்ளாக்காட்சியாகும். அதன் பின் எல்லோ ருக்கும் அன்னதானமும் வழங்கப்படும்.

மணவாளக்கோலவிழாவைச் செய்யும் நாம் ஆலயத்திற்குச் சொந்தமாக சுவாமி ஊஞ்சலில் ஆடத திருவூஞ்சலும் வீதி உலா வருவதற்கு சகடையும் இல்லாது இடர்ப்பட் டோம். இந்தக் குறை இறைவனருளால் நிறைவு பெற்றது.

முன்னாள் இந்து மன்றப்பொறுப்பா சிரியராக இருந்த திருமதி. வை. கணேச பிள்ளை அவர்கள் திருவூஞ்சல் ஒன்றை எழுத அதனைப் பழையமாணவர் சங்கம் 18.07. 2003ல் வெளியிட்டது. வெளியிட்ட செலவி னத்தை திருமதி.சரஸ்வதி கனகேஸ்வரன் தானே பொறுப்பேற்றார். அன்றிலிருந்து பார் வதி பரமேஸ்வரர் ஊஞ்சல் பாடும் வைபவம் அதிபர் திருமதி.சிவஞானசுந்தரம் தலைமயில் இடம் பெற்றது. தொடர்ந்து பார்வதி பரமேஸ்வரர் ஆடுவதற்குரிய அழகிய ஊஞ்சல் ஒன்றையும் திருமதி. வை. கணேசபிள்ளை ஆசிரிய ரின் முயற்சியால், சேர். பொன். இராமநாதன் அவர்களின் உறவினரைக் கொண்டு செய்து கொடுக்கப்பட்டது. அன்றி லிருந்து மண வாளக்கோலத்தில் எம்பொரு மான் ஊஞ்சலாட ஆசிரியர்கள் பாடி மெய்யு ருக வைக்கும் காட்சி கண் கொள்ளாக் காட்சியாகும்.

இதுவரை காலமும் சுவாமி வீதிஉலா வருவதற்கு தோழில் சுமந்து இடர்ப்பட்ட குறையும் தீர்ந்தது. இறைவன் அருளால் மனையியல் ஆசிரியை திருமதி. புஸ்பராணி கனகலிங்கம் அவர்களால் 1 லட்சம் ரூபா செலவில் அலங்காரச் சகடை ஒன்றைச் (பெற்றோர் ஞாபகார்த்தமாக 2013.06) அன்பளிப்புச் செய்துள்ளார். இந்த வருட மணவாளக்கோலத்தில் பார்வதி பரமேஸ்வரர் புதிய அலங்காரச்சகடையில் வீதியுலா சிறப் பாக நடைபெற்றது.

2013 ஆனிஉத்தரவிழாவிற்கு புதிதாக உருவாக்கப்பட்ட சகடை

மேலும் நாயன்மார் குருபூசைத்தினங்க ளோடு 1992ம் ஆண்டில் அதிபராக இருந்த திருமதி.மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் அவர்களால் திருமுறைவிழாவும் ஆரம்பிக்கப் பட்டு நடராஜர் ஆலயத்தில் இருந்து திரு முறை ஏடுகளும் சமயகுரவர்களும் வீதிஉலா வரப்பின்னே ஆசிரியர், மாணவர்கள் திரு முறைகளைப் பண்ணோடிசைந்து வந்தனர் இந்த நிகழ்வு திருமதி.சிவஞானசுந்தரத்தின் காலத்திலும் தொடர்ந்து திருமுறை விழாவின் போது சோமசுந்தரபரமாச்சாரியார் (நல்லை ஆதீனம்) சிவத்தமிழ் செல்வி ஆகியோரின் சொற் பொழிவுகள், புராணபடன நிகழ்வுகள், கதாப்பிரசங்கம் என்பன இந்து மன்றத்தினால் நடாத்தப்பட்டது. அப்பொழுது இருந்த இந்துமன்ற பொறுப்பாசிரியர் திருமதி. கணேசபிள்ளை ஆசிரியர் முயற்சியால் சமய குரவர் ஐவரும் சேக்கிழர் திருவுருப்படங்களும் நடராஜர் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவை இன்னும் உள்ளன. தொடர்ந்து திருமதி சீனிவாசகம் சுகுணா, திருமதி இரவீந்திரன், திருமதி பு. கனகலிங்கம், திருமதி சி. சிறிதரன் திருமதி மா.சிவன்சுதன், திருமதி அ. சண்முக குமார், திருமதி த. குமாரதாஸ், திருமதி பு. குமரவேள், திருமதி கோ. இராமச்சந்திரன் ஆகியோரும் இந்துமன்ற செயற்பாடுகளில் முன்னின்று செயற்படுவார்கள்.

2013ல் இந்து மன்றத்தில் இருந்த

திருமதி பகீதரன் சிவராசசோதி ஆசிரியர் அவர்கள் நடராஜர் ஆலயப்படிகளுக்கு வர்ணம் பூசியும் சரஸ்வதி மண்டபம் முதலியவற்றுக்கு மாபிள் பதித்துள்ளார். திருமதி. லிங்கேஸ்வரன் அவர்கள் சரஸ்வதி படத்தில் உடைந்திருந்த கண்ணாடிகளை பொருத்தி மயிலுக்கு வர்ண ஒப்பனை செய்துதந்துள்ளார்.

மேலும் கீரிமலைச்சிவன் ஆலயம், திருக்கேதீஸ்வர ஆலயத் திருவிழாக்களை இந்து மன்றம் முன்னின்று பாடசாலை நிகழ்வாக வருடாவருடம் செய்து வருகின்றது. மேலும் நடராஜப்பெருமான் அருளால் சேர்.பொன்.இராமநாதன் அவர்களின் பணி தொடருவோம். வாழ்க! இராமநாதன் பணிகள்.

"என் கடன் பணிசெய்துகிடப்பதே"

# புகழின் சிகரம் இராமநாதன் கல்லூரி

சு. டெசிந்தா
A/L ( 2015)
கலைப்பிரிவு

வளம் பலவும் கொண்ட மருதனார் மடத்தில் இன்பமாய்
கழிந்த நூற்றாண்டில் இராமநாதன் கல்லூரியின்
இன்ப சாதனைகளும் இன்னமும் மறவாத வீரக்கதைகளும்
நூற்றாண்டு கடந்தும் எம் கண்களில்..............

பத்து தசாப்தப் பாதையிலே எமது பார்வை
அவை கடந்தும் இன்னமும் பழைய நினைவுகளில் - எம் கனவுகள்
பற்பல அறிஞர்களும், ஆசானும், கவிஞனும் சுவாசித்த - காற்றிது.
பண்புடனே சுவாசித்துப் பழகிடுவோம் பணியிதனை
பத்துத் தசாப்தப் பாதையிலே பல்லாயிரம் சாதனைகள்
கல்வி, ஒழுக்கம், தூய்மையைப் பாடசாலைப் பண்பு - எனக் கொண்டு
கல்வியோடு விளையாட்டும் , தெய்வீகஞான சேவை - ஊக்கமும்

கனிவுடனே பல தந்து எம்மை வளர்த்திட்ட பூமியிது
பத்துத் தசாப்தப் பாதையிலே பண்பினார், அன்புளார், - அறிவினார் பலராகி
பயிற்சியும், முயற்சியும் எதனையும் வெல்லும் என
மெய் நெறி ஊட்டிடும் மேதகு சேவையால்
எல்லார்க்கும் எழில் ஒளி காட்டிட்ட பூமியிது

ஜாதி மதமின்றி ஒரினமாய் ஒன்றிணைந்து
கல்வி எனும் பொது மறையைப் பொறுப்புடனே
கற்பிக்கும் ஆசானின் கண்டிப்பு பாசத்தில் பணிந்து
கற்கப் பழக்கிட்ட பூமியிது.

பத்து தசாப்த பாதையிலே நாம் கண்ட நினைவுகளை
நம் வாழ்வாக்கி உயிரூட்டம் கண்டு
பல்லாயிரம் ஆண்டுகளிலும் கல்லூரி தழைத்தோங்க
நாம் உழைப்போம், கல்லூரிக்காய் உழைப்போம்.

# தாய் நிலம்

**சி. சுகிர்தா**
கலைப்பிரிவு 2015

மழைக்கால மேகங்கள்
மூடிக்கழிந்த
மார்கழி முடிந்து
தை பிறந்திருக்கிறது.

நீருக்கு மேலுயர்ந்து
கதிர் தள்ளிய பயிர்களை
மேய்கிற விழிகளில்
மேவுகிற ஞாபகங்கள்

எங்கள் அரிசியை
நாங்களே விளைவித்தோம்
எங்கள் ஆடைகளை
நாங்களே நெய்தோம்
எங்களுக்கானவற்றை
நாங்களே ஆக்குவோம்

எங்கள் நிலங்களை
காளைகளும் மண்புழுக்கழும்
உழுதன.
எங்கள் தோட்டங்களில்
செம்பகங்கள்
பூச்சிகளைப் பொறுக்கின
வேலிப் பூவரசில்
புலுனிகள் விளையாடின.

மாவிலும் முருங்கையிலும்
கிளிகளும் அணில்களும்
இசைவுற அசைந்தன
வேப்பம் துளிரிலும்
தென்னங் கீற்றிலும்
தென்றல் நடமாடியது

வண்ணப் பூச்சிகளும்
தேனிகளும்
பூக்களைக் காய்களாக்க
கனித் தோட்டமாய்
எங்கள் வளவு
நினைவுகளை விழுத்திவிட்டு
திறக்கிற கண்கள்
கம்பளப் பாதையில்
வழுக்கியோடுகின்றன.

அந்தக் குண்டுகளையும்
அந்த ஷெல்களையும்
அந்தத் துப்பாக்கி
வேட்டுக்களையும் விட
பயங்கரமானவை

எப்போது நாங்கள்
சந்தைகளாக்கப்பட்டோம்
எப்போது நாங்கள்
மந்தைகளாக்கப்பட்டோம்
எம் தாய் நிலத்தில்....

# இராமநாதன் கல்லூரி மாதா

**து. சுபாசினி**
தாரம் 10 A

ஆலம்விருட்சம் போல் அவனியிலே
அத்திவாரமெனும் வேரூன்றி விழுதூன்றி
ஆயிரம் உறவுகளை அணைத்து
அறிவுடன் வளர்க்கும் கல்லூரிமாதா

நற்பழக்கங்களுடன்
நல்ல அறிவும் புகட்டி
தரணியிலே உயர்த்தி விடும்
தன்னலமில்லா ஆசான்கள்

அறிவான ஆசிரியர் குழாந்தந்து
அன்பான நட்புகழ் தந்து
அன்னை அதிபரைத் தந்து
அண்டம் சிறக்கவைத்த கல்லூரித்தாயே

பிரிவு பார்த்து உதிப்பதில்லை சூரியசந்திரன்
பிரிவு காட்டி வளர்ப்பதில்லை கல்லூரிமாதா
ஆயிரமாயிரம் உறவைநாடி வளர்த்து
நூற்றாண்டு காணும் கல்லூரி அன்னையே

வாழ்த்து கின்றேன் உன் பணியை
வணங்குகின்றோம் உன் திருவடியை
யாழ் மண்ணில் சிறக்கும் உன்னை
யாழோசையும் வாழ்த்தி நிற்கிறது.

# கற்றவற்றில் சில கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.....

ஜெ. விருட்சிகா
கலைப்பிரிவு 2013

- இது நான்கு எழுத்துச் சொல்
- இது முதல் எழுத்து மட்டும் பாதுகாத்தலைக் குறிக்கும்.
- இதில் இரண்டாம் எழுத்தை நீக்கினால் ஒரு பறவையின் பெயர் வரும்.
- இதில் மூன்றாம் எழுத்தை நீக்கினால் விலங்குகள் பறவைகள் வாழும் இடத்தைக் குறிக்கும்.

அச்சொல் எது?

**(காணகம்)**

- இது மூன்று எழுத்துச் சொல்
- இதில் இறுதி எழுத்தை நீக்கினால் ஆரம்ப காலத்தில் ஆயுதமாக பயன்படுத்தப்பட்ட பொருள்
- இதில் நடு எழுத்தை நீக்கினால் பாட்டின் ஒத்தசொல் வரும்.
- இதில் மூன்றாம் எழுத்தையும், இரண்டாம் எழுத்தையும் சேர்த்தால் ஆரம்பகாலத்தில் வேட்டையாடப் பயன்படுத்திய ஒரு பொருள்.

அச் சொல் எது?

**(கல்வி)**

- இது நான்கு எழுத்துச் சொல்
- இதில் முதல் எழுத்து கவிதையைக் குறிக்கும்.
- இதில் முதல் இரு எழுத்துக்களும் சேர்ந்தால் வினையெச்சமாக அமையும்.
- முதல் எழுத்தும் இறுதி எழுத்தும் சேர்ந்தால் ஐவகை நிலங்களில் ஒன்றைக் குறிக்கும்.
- இதன் இறுதி இரு எழுத்துக்களும் சேர்ந்தால் விதியைக் குறிக்கும்.

அச் சொல் எது?

**(பாடசாலை)**

- இது மூன்று எழுத்துச் சொல்
- இதில் முதல் இரு எழுத்தும் பாட்டின் ஒத்த சொல்
- இதில் முதல் எழுத்தையும், இறுதி எழுத்தையும் சேர்த்தால் பாட்டிமாரிடம் நாம் கேட்கும் ஒன்றைக் குறிக்கும்.
- இறுதி எழுத்து ஒரு மாதத்தைக் குறிக்கும்.

அச் சொல் எது?

**(கவிதை)**

- இது நான்கு எழுத்துச் சொல்
- இதில் முதல் எழுத்து கவிதையைக் குறிக்கும்.
- இதில் முதல் இரு எழுத்துக்களும் சேர்ந்தால் வினையெச்சமாக அமையும்.
- முதல் எழுத்தும் இறுதி எழுத்தும் சேர்ந்தால் ஐவகை நிலங்களில் ஒன்றைக் குறிக்கும்.
- இதன் இறுதி இரு எழுத்துக்களும் சேர்ந்தால் வீதியைக் குறிக்கும்.

அச் சொல் எது?

**(பாடசாலை)**

- இது ஐந்து எழுத்துச் சொல்
- முதல் இரு எழுத்தும் சேர்ந்தால் தெரிந்துகொள் என்பதனைக் குறிக்கும்.
- இறுதி மூன்று எழுத்தும் சேர்ந்தால் அகத்தின் அழகு இதில் தெரியும்.
- முதல் எழுத்தும் இறுதி இரு எழுத்தும் சேர்ந்தால் உள்ளம் என்பதன் பொருளைக் குறிக்கும்.

அச் சொல் எது?

**(அறிமுகம்)**

- இது ஆறு எழுத்துச் சொல்
- இதில் முதல் எழுத்து முன்னிலை ஒருமையாக வரும்.
- முதல் இரு எழுத்துக்களும் சேர்ந்தால் நேர்மையைக் குறிக்கும்.
- இறுதி நான்கு எழுத்துக்களைச் சேர்த்தால் ஒரு குழுவைக் குறிக்கும்.
- மூன்றாம் எழுத்தும் இறுதி இரு எழுத்தும் சேர்ந்தால் அறத்தின் எதிர்ச்சொல்லைக் குறிக்கும்.
- இதில் மூன்றாம், இரண்டாம் எழுத்தைச் சேர்ந்தால் சந்திரனைக் குறிக்கும்.

அச் சொல் எது?

**(நீதி மன்றம்)**

- இது ஏழு எழுத்துச் சொல்
- முதல் மூன்று எழுத்துக்களும் ஒரு பறவையைக் குறிக்கும்.
- இறுதி நான்கு எழுத்துக்களும் நாம் பிரயாணம் செய்வதைக் குறிக்கும்.
- இறுதி நான்கு எழுத்துக்களில் இரண்டாம் எழுத்தை நீக்கினால் ஆகாயத்தின் மறுபெயரைக் குறிக்கும்
- இறுதி மூன்று எழுத்தும் பாரத்தைக் குறிக்கும்.

அச் சொல் எது?

**(மயில் வாகனம்)**

- இது ஆறு எழுத்துச் சொல்
- முதல் இரு எழுத்தும் இறுதி எழுத்தும் சேர்ந்தால் ஓசையைக் குறிக்கும்.
- இறுதி நான்கு எழுத்துக்களும் சேர்ந்தால் சங்கீதத்தில் முக்கியமான ஒன்றைக் குறிக்கும்.
- இறுதி மூன்று எழுத்தும் இணைந்தால் நாம் கடவுளிடம் வேண்டி நிற்பதைக் குறிக்கும்.
- முதல் எழுத்தும், இறுதி எழுத்தும் சேர்ந்தால் அனைவரையும் குறிக்கும்.

அச் சொல் எது?

**(நாதஸ்வரம்)**

- இது ஆறு எழுத்துச் சொல்
- இறுதி எழுத்தின் அயல் எழுத்தை நீக்கினால் ஒரு குறியீட்டைக் குறிக்கும்.
- இறுதி மூன்று எழுத்தும் கூட்டத்தைக் குறிக்கும்
- இதனை மொழியின் வரம்பு என்றும் கூறுவார்கள்.

அச் சொல் எது?

**(இலக்கணம்)**

- ஐந்து எழுத்துச் சொல்
- முதல் எழுத்துப் பசுவைக் குறிக்கும்
- முதல் இரு எழுத்துக்களும் இணைந்தால் பெரியோரிடம் நாம் கட்டாயம் பெற வேண்டியதைக் குறிக்கும்.
- இரண்டாம் எழுத்தும், மூன்றாம் எழுத்தும் இணைந்தால் மகிழ்ச்சியின் வெளிப்பாட்டைக் குறிக்கும்.
- முதல் எழுத்தும், இறுதி இரு எழுத்தும் ஆடுகள் மேய்ப்பவரைக் குறிக்கும்.

அச் சொல் எது?

**(ஆசிரியர்)**

# உண்மை விருட்சமுறை

**சி. சிவரூபி**
கலைப்பிரிவு 2013

உண்மை அட்டவணை முறையைப் போன்று உண்மை விருட்சமுறையும் எடுப்பளவையியலில் இணைப்பாக்கம் செய்யும் போது முடிவு ஒன்றினைப் பெற்றுக் கொள்ளும் முறை எனக் கொள்ளப்படுகிறது. இது உண்மை அட்டவணையைப் போன்று அமைகின்றது.

தற்க அமைப்புக்களின் வரைபு ரீதியாக அடுக்கப்படும் அதாவது வரிசைப்படுத்தல், கிளையாக்கல் போன்றவற்றைச் செய்தவதன் மூலம் வாதங்களை வாய்ப்புப் பார்க்கின்ற முறை இதுவாகும். இம் முறையில் வாதங் களின் வாய்ப்பினை உண்மை அட்டவணை முறையை விட விரைவாகவும் இலகுவாகவும் துணியலாம்.

உண்மை விருட்சமானது வாத அடுக்கு முறையில் அவை தற்க ரீதியாக ஏற்கக் கூடியதா இல்லையா? என்பதைத் துணிவதற்கு எடுப்பு இணைப்புகளினதும் மறுப்புக் களினதும் பிரிவுகளைப் பயன்படுத்துகின்றது. இம் முறையில் தரப்பட்டுள்ள எடு கூற்றுக்கள் முதலில் வரிசையாக்கப்படும். அதன் பின்பு முடிவின் மறுப்பு வரிசைப்படுத்தப்படும். இதன் அடிப்படையில் இங்கு எடுகூற்றுகள் உண்மையாகும் போது முடிவு பொய்யாக காட்ட முயற்சிக்கப்படுகிறது.

இதற்கு முதலில் எடு கூற்றுக்கள் வரிசை யில் எழுதிய பின்னர் எமக்குத் தரப்பட்ட முடிவுக்கூற்றின் மறுப்பைக் கொண்டுஅந்த மறுப்பின் அடிப்படையில் ஒன்றில் கிளை யாக்கல் அல்லது வரிசைப்படுத்தல் வேண்டும். அதற்கு முடிவின் மறுப்பு எந்த விதிகளை (வரிசைப்படுத்தல் விதி OR கிளையாக்கல் விதி) என்பதை அவதானித்து செயற்படுத்தல் வேண்டும். இங்கு வாதத்தின் முடிவு மாறிகள் உடன்பாடாகவும் மறுப்பாகவும் காணப்பட் டால் செயற்கை மூடப்படும் (×) இதனை வாய்ப்பாக அல்லது உண்மையாகக் கருத்தில் கொள்ளப்படும். மாறாக செய்கை முறை பூரணப்படுத்த முடியாது விட்டால் அது திறந்ததாகக் காணப்படும். இதனை வாய்ப் பற்றதாக பொய்யாக கருத்தில் கொள்ளப் படும்.

இம் முறையின்படி வாதங்கள் எறியீட் டாக்கம் செய்யப்பட்டு விதிகளின் அடிப்

படையில் அவற்றின் வாய்ப்பினைத் தீர்மானிக் கப்படும்போது பின்வரும் இரண்டு விதிகள் முக்கியமானவையாகக் கொள்ளப்படுகின்றது.

1) வரிசைப்படுத்தல் விதி

2) கிளையாக்கல் விதி

உண்மை விருட்ச முறையை முதல் முதலில் விருத்தி செய்தவர் றேமன் S. முல்லையன் ஆவார். இதனால் S. முல்லையன் உண்மை விருட்ச முறை எனவும் அழைக்கப் படுகின்றது.

**வரிசைப்படுத்தல் விதி**

**விதி I**

இரண்டு தடவைகள் மறுக்கப்பட்ட மாறி ஒன்றினை உடன்பாட்டு ரீதியில் கொண்டுவர முடியும்.

Eg :- NNP

P

**விதி II**

இணைக் கூட்டு வாக்கியம் காணப்படுமாயின் முன்னைய நிகழ்ச்சியும் பின்னைய நிகழ்ச் சியையும் தனித்தனியாக வரிசைப்படுத்தலாம்.

Eg :- (P n Q)

P

Q

**விதி III**

நிபந்தனைக் கூற்று ஒன்று மறுக்கப்படும் சந்தர்ப்பத்தில் முன்னைய நிகழ்ச்சியும் பின் னைய நிகழ்ச்சியின் மறுப்பும் வரிசைப்படுத் தப்படும்.

Eg :- N (P ->Q)

P

NQ

**விதி IV**

ஒரு உறழ்வு கூற்றுவாக்கியமானது மறுக்கப் படும் சந்தர்ப்பத்தில் முன்னைய நிகழ்ச்சியின் மறுப்பும் பின்னைய நிகழ்ச்சியின் மறுப்பும் வரிசைப்படுத்தப் படும்.

Eg :- N (P V Q)

NP

NQ

**கிளையாக்கல் விதி**

**விதி I**

ஓர் நிபந்தனைக் கூற்றுக் காணப்படுமாயின் கிளையாக்கல் விதியின் அடிப்படையில் முற் கூற்றின் மறுப்பும் பிற்கூற்றும் கிளையாக்கம் செய்யப்படும்.

Eg :- (P n Q)

NP Q

**விதி II**

ஓர் இணைப்புக் கூற்று ஒன்று மறுக்கப்படு மாயின் அதன் முன்னைய நிகழ்ச்சியின் மறுப்பும் பின்னைய நிகழ்ச்சியின் மறுப்பும் கிளையாக்கம் செய்யப்படும்.

Eg :- N (P →Q)

NP Q

**விதி III**

ஓர் உறழ்வு கூற்று காணப்படுமாயின் முன் னைய நிகழ்ச்சியும் பின்னைய நிகழ்ச்சியும் கிளையாக்கப்படும்.

Eg :- N (P V Q)

P Q

**விதி IV**

தரவாக இரட்டை உட்கிடை மாறிலியுடன் சேர்ந்த வாக்கியம் தரப்படும் இடத்து, முடிவாக அதன் முன்னைய நிகழ்ச்சியும், முன்னைய நிகழ்ச்சியின் மறுப்பும் அதே போல் பின்னைய நிகழ்ச்சியும் பின்னய நிகழ்ச்சியின் மறுப்பும் கிளையாக்கப்படும்.

Eg :- $(P \leftrightarrow Q)$

P      NP

Q      NQ

**விதி V**

இரட்டை உட்கிடை மாறிலியின் கூற்று மறுக்கப்படுமாயின் இங்கு முன்னைய நிகழ்க்சியின் மறுப்பும் அத்தோடு பின்னய நிகழ்ச்சியின் மறுப்பும் பின்னைய நிகழ்சியும் கிளையாக்கப்படும்.

Eg :- $(P \leftrightarrow Q)$

P      NP

NQ      Q

# சிந்தனைத் துளிகள்

டி. கில்மியா

10 A

1) தடுமாற்றம் இல்லாத சிந்தனை ஒருவருக்குத் தகுதியான பயனைத் தரும்.

2) கண்கள் இல்லாதவன் குருடன் அல்ல உள்ள குறைகளை மறைப்பவனே குருடன்.

3) திட்டமில்லாத செயல்கள் யாவும் ஒருவருக்கு கஷ்டத்தையே தரும்.

4) தோல்வியடைந்து விடுவோமோ என்று எண்ணும் போதுதான் தோல்வி நம்மை நெருங்கும்.

5) உள்ளே நுழையும் முன்வெளியே வருதைப் பற்றி சிந்தனை செய்

6) நெருப்பை உன்னால் மறைக்க முடியும். புகையை நீ என்ன செய்ய போகின்றாய்.

7) ஒரு பெண்ணின் கல்விக்காகச் செலவிடப்படும் பணம் ஒரு குடும்பத்தின் வளர்ச்சிக்கு செலவிடப்படும் முதலீடு ஆகும்.

8) போரை இலகுவில் தொடங்கி விடலாம் அவற்றுக்கு தீர்வு காண்பதில் தான் கடினம்.

9) இறைவன் தன்னால் எங்கும் இருக்க முடியாது. அதனால் தான் தாயைப் படைத்தான்.

10) அமைதியாகப் பேசுங்கள். அது உங்கள் இரகசியங்களைப் பாதுகாக்கும். உண்மை யையைப் பேசுங்கள் அது உங்கள் வார்த்தைகளைப் பாதுகாக்கும்.

11) வெற்றி என்பது பெற்றுக் கொள்வதற்கு, தோல்வி என்பது கற்றுக் கொள்வதற்கு.

12) எனக்கென்று உள்ளதை யாரும் தடுக்க முடியாது. எனக்கென்று இல்லாததை யாரும் கொடுக்க முடியாது.

13) வாழ்க்கை என்பது இயற்கை அளிக்கும் செல்வம். ஆனால் நல்ல வாழ்க்கை என்பது ஞானம் அளிக்கும் செல்வம்.

14) தோல்வியைக் கண்டு அஞ்சுபவனிடம் இருந்து வெற்றி விலகுகிறது.

15) ஒருவன் விழாமல் வாழ்ந்தான் என்பது பெருமை அல்ல. விழுந்து போவதெல்லாம் எழுந்தான் என்பதே பெருமை.

# கல்வி விருட்சமே நீ நீடூழி வாழ்க.

கே. கிருசனா
கலைப்பிரிவு 2015

*சதம் அடித்துச் சாதனை புரிந்த*
*துடுப்பாட்ட வீரனைப் போல்*
*இதமாகப் புன்முறுவல் பூத்த முகத்துடன்*
*எடுப்பாகத் தோன்றும் இராமநாதன் கல்லூரித்தாயே*
*மத நெறியில் செம்மையாய் எமை நீ நிறுத்திட*
*கெடுதியின்றித் தெளிந்த சிந்தனையுடன்*
*நிதம் நாம் கற்றோங்குகின்றோம் நின்நிழலில்*
*நெடு உயரம் படர்ந்த நிழல் மரமே*

*நீடூழி வாழ்க!*

*பத்துத் திங்கள் தான் எம்மைப்*
*பெற்றவள் சுமந்து நின்றாள்*
*எத்தனை வருடங்கள் கல்லூரித்தாயே!*
*பற்றுடன் எமைநீ சுமக்கின்றாய்!*
*சுற்றமென விளங்கும் ஆசிரியர் குழாம்*
*இத்துணைப் பெருமை சேர்த்திட மருதனார் மடத்தில்*
*பற்றிப் படந்து பயன்தரு மரமே! நீ*

*நீடூழி வாழ்க*

*வருந்திக் கற்றுத் தேறி உனைப் பிரிந்து*
*விலகிச் சென்ற பழைய மாணவர்கள்*
*பெருகிடும் நன்றியோடும பற்றோடும்*
*உலகின் பல பாகங்களில் பரந்து வாழ்ந்து*

விருப்புடனும் துடிப்புடனும் தொடர்பு கொண்டு
நிலவும் உன் குறைகள் கேட்டறிந்து
மெருகூட்டி பசுமை பேண நிதியுதவி புரிந்திட
பலம் மிக்க பழமரமே நீ பொலிவுடன்

நீடூழி வாழ்க

அன்னை மடிநாம் விட்ட கன்று
அச்சமுடன் வந்த வேளை
இன்முகம் காட்டி நல்லறிவு ஊட்டி
உச்சப்பயன் பெறவைத்த தாயே
என்னென்பேன் ஏதென்பேன் எப்படி
மெச்சிடுவேன் அதிபரின் ஆற்றல்களை
தன்னம்பிக்கை ஊட்டியெமை வெற்றிமேல்
வெற்றி விசேடசித்திகள் பெறவைத்து
கச்சிதமாய் வளர்ந்த கல்விவிருட்சமே
நீ காலமெல்லாம் நிலைபெற்று (நீடூழி வாழ்க)

# சர்வதேச மகளிர் தினமும் இன்றைய புதுமைப் பெண்களும்

**மைதிலி யோகேஸ்வரன்**
2013 A கலைப்பிரிவு

மனித வாழ்வில் இரண்டு சோகங்கள் மட்டுமே உள்ளன. "ஒன்று நாம் ஆசைப்படுவது கிடைக்காமல் போவது, மற்றயது நாம் ஆசைப்படுவது கிடைத்து விடுவது." என பேர்னாட்ஷா கூறுகின்றார். மார்ச் 8ஆம் திகதி சர்வதேச மகளிர் தினமாகும். ஆண்டு தோறும் முழு உலகமும் இத்தினத்தைக் கொண்டாடி மகிழ்கின்றது. பெண்களின் அடிப்படை உரிமை, பொருளாதார உரிமை, சமூக அமைப்பு என்று பல வகைகளிலும் ஆணாதிக்கம் மேலோங்கி, விசேடமாக வறுமைக்கு உட்பட்ட பெண்கள் மீது கட்டவிழ்ந்து விடப்பட்ட வன்முறைகள் அவர்களின் உழைப்பில் ஏற்பட்ட சுரண்டல்கள் இவற்றிற்கெல்லாம் எதிராக எழிச்சிப் போராட்டத்தின் வெற்றி நாளாகவே இந்த சர்வதேச மகளிர் தினம் மிக விமரிசையாகக் கொண்டாடப் படுகிறது.

பெண்களின் அனைத்து விதமான உரிமைகளையும் பாதுகாப்பது, ஆண்களுக்கு இணையாக மதிப்பு, மரியாதை, கௌரவம் வழங்குவது சம்மந்தமான ஒரு தீர்மானத்தை அமெரிக்க சோசலிசக் கட்சி கொண்டு வந்து அதன் அடிப்படையில் பெப்ரவரி 28ஆம் திகதி பெண்கள் தினமாகக் கொண்டாடுவதற்கு அறிக்கை வெளியிடப்பட்டு இருந்தது. அந்த வகையில் **1910**ஆம் ஆண்டு சோசலித்திற்கான இரண்டாவது சர்வதேச மாநாடு கோபேர்ன்கேகனில் நடைபெற்ற போது க்ளீரா செட்டிகன் என்ற தொழிலாளர்கள் தலைவி சமத்துவத்திற்காகப் பெண்கள் நடத்திய போராட்டத்தை ஞாபகப்படுத்த சர்வதேச பெண்கள் தினத்தை பிரகடனப் படுத்துமாறு கோரினார். அதன் பின்பு மேற்கைத்தேய மற்றும் ஐரோப்பிய நாடுகள் **1913**இல் ஒன்று கூடி மார்ச் 8ஆம் திகதியை சர்வதேச பெண்கள் தினமாக கொண்டாட முடிவெடுத்தன. எனவே தொழிலாளர் போராட்டம் அரசியல் போராட்டம் பெண்கள் ஆண்களுக்கு எந்த வகையிலும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை எடுத்துயம் புவதற்கு இச் சர்வதேச பெண்கள் தினத்தை நினைவில் நிறுத்துகின்றோம். இன்றய காலகட்டத்தில்

சமுதாயத்தில் எத்துறையினைஎடுத்து நோக்கி னாலும் பெண்கள் இல்லா துறையே இல்லை. ஒரு காலத்தில் தாழ்த்தப்பட்ட அடிமையாகப் பேச்சுரிமை மறுக்கப்பட்டி ருந்தது.

"குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும் - மஞ்சள் அழகும் அழகல்ல நெஞ்சத்து நலம் யாம் என்றும் நடு நிலமை யால் கல்வி அழகே அழகு"

என்று நாலடியாரின் கூற்றுக்கிணங்க ஒருவருக்கு கல்வி அழகு தான் உண்மையான அழகாகும். இந்தக் கல்வி அழகைப் பெற்றுக் கொள்வதற்கு ஒரு காலத்தில் பெண்களுக்கு தடை விதிக்கப்பட்டு இருந்தது. மேலும் திருமணம் முடிப்பதற்கான சுதந்திரத்திற்கு தடை, வழிபாட்டிற்குத் தடை விதிக்கப்பட்டு வீட்டு மூலைக்குள் பெண்கள் முடங்கிக் கிடந்தனர். ஆனால் இன்றைய காலகட் டத்தில் பெண்கள் சகல துறைகளிலும் சுதந்திரமான முறையில் செயற்பட்டு இன்று எல்லாத்துறைகளிலும் பணி புரிகின்றனர். மண்ணில் இருந்து விண்வரை சகல துறைக ளிலும் பெண்கள் பெருமையும் புகழும் செருக்கிக் கொண்டே செல்கின்றன. இவ்வாறு பெண்கள் சகல துறைகளிலும் தமது பெருமை யையும் புகழையும் நிலைநாட்ட ஒரு முன் னோடியாக விளங்கியவர் பாரதியார் எனக் கூறினால் மிகையாகாது.

தான் வாழ்ந்த சமுதாயச் சூழலில் பெண்களுக்கெதிராக செயற்பட்ட அடக்கு முறைகளையும், அடிமைத் தனங்களையும் வேரோடு அழிக்க வேண்டும். என்றான் பாரதி "அவனது பாடல்கள் புதுமைப்பெண்கள், பெண்கள் விடுதலைக் கும்மி போன்றவை இதற்கு எடுத்துக்காட்டாக குறிப்பிட்லாம். இவ்வாறான பாரதியாரின் முயற்சியின் பயன் தற்காலத்தில் பெற்றுக்கொண்டுள்ள சுதந்திரம் என்றே கூறலாம்.

அடக்கு முறைகள், அடிமைத் தனங்கள் என்பவை நீங்கி பெண்கள் சுதந்திரமாக்காணப் பட்டாலும் இன்றுவரையும் பெண்களுக்கெதி ரான வன்முறைகள் ஓயவில்லை என்றே கூறலாம். அதாவது பெண்கள் எவ்வளவு தான் உழைத்து முன்னேறினாலும் குடும்பத்திலும், சமுதாயத்திலும் அவளுக்கு மறைமுகமாக இரண்டாம் பட்சநிலைதான் கிடைக்கின்றது. பெண்களுக்கெதிரான வன்முறைகள் உலகள விலும் அதிகரித்த வண்ணமே இருக்கிறது. படிக்கின்ற, பணிபுரிகின்ற பெண்களில் ஐம்பது சதவீதமானவர்களுக்கு அத்துமீறல்கள் நடைபெறுகின்றன. இதனைப் புள்ளி விபரங் கள் தெரிவிக்கின்றன. இன்று பெண்களுக்கெ திரான வன்முறைகள் பல கோணகங்களில் உருவாகி இருப்பதைக் காணலாம். குடும்ப வன்முறை, பாலியல் தொல்லைகள், உடல், உளரீதியான துன்புறுத்தல்கள், உணர்வுத் துஷ்பிரயோகம் எனத் தொடர்ந்து விரிவாக

நோக்கினால் சீதனப் பிரச்சனை , அகதி மகாம்களிலுள்ள பெண்களின் நிலமை, சிறைச் சாலையில் வாழும் பெண்களின் பிரச்சனை, விதவைகளில் நிலைமை என அடுக்கிக் கொண்டே போகலாம்.

உலகில் நடாத்தப்பட்ட ஐம்பது ஆராய்ச்சிகளின் அடிப்படையில் மூன்றுக்கு ஒன்று என்ற விகிதத்தில் அவர்கள் உடல், உள, பாலியல் ரீதியான வன்முறைக்கு உள்ளாக்கப்படுவது தெரிய வந்துள்ளது. இவை எல்லாவற்றிற்கும் மிக மிக அடிப்படைக் காரணம் ஆண்கள் மீது பெண்கள் பொருளாதார ரீதியில் தங்கியிருத்தல். பெண்களின் பொருளாதார சுதந்திரத்திற்கு ஆண்களின் விரோதத் தன்மை மற்றும் வாழ்நாள் முழுவதும் கடினமாக வேலையில் ஈடுபட்டிருக்கும் இயந்திரமாகவே பெண்கள் கணிக்கப்படுவது என நாம் அடுக்கிக் கொண்டே செல்லாம். இன்றும் நாளுக்கு நாள் பெண்கள் மீதான பிரச்சனைகள் அதிகரிக்கின்றனவே தவிர குறைந்தபாடில்லை. பாதையில் செல்வது தொடக்கம் பணிபுரியும் நிறுவனம் வரை பெண்கள் பாதிக்கப்படாமல் இல்லை என்றே நாம் கூறலாம். இவற்றிற்குக் காரணம் பெண்கள் உரிமை, மரியாதை தொடர்பான தெளிவின்மை, ஆண்கள் மத்தியில் நிலவுவதுடன் தமது அதிகாரத்தையும், ஆதிக்கத்தையும் சகல வழிகளிலும் பிரயோகிக்க முற்படுவதால் தன்நிலை மறக்கும் நிலை ஏற்படுகின்றது. பெண் சம்மந்தமான பக்கங்களிலும் இவர்களுக்கு ஒரு மயக்க நிலை உள்ளது.

இவ்வாறு பெண்களின் உரிமை விடயத்தில் தேடல்கள் தொடர்கின்றன. அதே நேரம் மேற்கைத்தேய நாகரீக மோகத்தில் விழுந்து அல்லற்படும் இன்றைய எமது பெண்களின் நிலைமையை எடுத்தும் பார்த்தால் இன்றைய பெண்ணினவாதிகளின் உரிமையில் அளவுக்கு மீறிய ஐதார்த்தம் அற்ற தன்மையே மிகையாகக் காணப்படுகிறது. நாம் கண்கூடாகப் பார்க்கின்ற பல விடயங்களை எடுத்து நோக்கினால் மகளிர் உரிமை, சுதந்திரம் என்ற போர்வை போர்த்திக் கொண்டு கட்டுப்பாடு பண்பாட்டை இழந்து நாகரீகத்தின் விழைவால் பல விதமான கலாச்சாரங்களுக்கேற்ப பாதை அமைக்கபடுகின்றது. ஆணும், பெண்ணும் வித்தியாசம் தெரியாத அளவுக்கு "ஒன்று கலந்த உரிமைகள்" வென்றெடுக்கப்படுகின்றன. பெண்ணும் பெண்ணும் சேர்ந்து வாழ ஒரு போராட்டம் விபச்சாரத்திற்கு சட்ட அங்கீகாரம் தேவை என இன்னுமொரு குரல். சில நாடுகளில் நினைத்த நேரத்தில் கற்பை ஏலம் விடுவதற்கு ஜனநாகய ரீதியிலான உரிமை என்ற பேரில் போராட்டம், மணம் முடித்தாலும் முடிக்காவிட்டாலும் சேர்ந்து வாழவும், பிரிந்து வாழவும் ஒரே சமயத்தில் பல கணவன்களுடன் சேர்வதும் மாற்றுவது மான ஒரு புரட்சிகரம். மேலும் பொருளாதார (பணம்) கவர்ச்சி, விளைவாக ஊடக விளம்

பரத்துறையை எடுத்துக் கொண்டால் எந்த விளம்பரம் என்றாலும் கூட பெண்ணின் அங்க அசைவு ஒட்டி உரசி கவர்ச்சி கரமான முறையில் இருந்தால் தான் வாகன விற்பனைக்கு ஓர் உத்வேகம் வருகின்றது. ஆண்கள் சேறைக் கண்டால் மிதிப்பார்கள். தண்ணீரைக் கண்டால் கழுவிவிடுவார்கள். ஆனால் பெண் பூஜிக்கப்படவேண்டியவள். கையெடுத்துக் கும்பிடுமளவுக்கு பெண் இருக்க வேண்டும்.

பெண் சார்பாகப் பல விடயங்கள் இருப்பதால் அவற்றை இவள் தான்தோன்றித் தனமாக பயன்படுத்திக் கொள்வதை மற்றும் செயற்பாடுகள், நடத்தைகள், சமூக விரோதச் செயல்களை, வன்முறைகளைத் தூண்டுவதாக அமையக் கூடாது. பெண் என்பவள் குடும்பத்தையும், சுற்றாடலையும் சீரழிக்கக் கூடிய ஒரு நாசக்காரரியாக இருக்கக்கூடாது. எல்லாவற்றிற்கும் ஒரு சுய கட்டுப்பாட்டை அவளே நிர்ணயித்துத் கொள்ள வேண்டும்.

இவ்வாறான பெண்களுக்கு எதிராக இடம் பெறும் வன்முறைகளைக் குறைப்பதற்கு நாட்டில் சட்டங்களை ஏற்படுத்துவதன் மூலமும், பெண்களும், ஆண்களும் பாராபட்சம் இன்றி ஒரே சமமாக மதிக்கப்படுவார்கள் ஆயின் இன்றைய புதுமைப் பெண்களின் வளர்ச்சி இன்னும் பல்வேறு துறைகளில் மிக உயர்ந்த வளர்ச்சியைப் பெற்றுக் கொள்ளும்.

# தொலைபேசிகள் தொல்லையாக............

ர. விதுஷா
A/L (2015)
கலைப்பிரிவு

நாகரிகம் என்ற போர்வையில்
நாசமாகிப் போகும் மானிடா - நீ
புதைகுழியில் புதைந்து கொண்டு - இருக்கின்றாய்
இன்னும் புரியவில்லை அது உனக்கு
புரியும் காலம் வெகு விரைவில்

தொலைபேசிகள் உன் காதுக்குள்
ஏதோ கினுகினுக்கின்றனவா
சநதோசச் சாரலில் நனைந்திடும் நீ - மறந்துவிடாதே
உன் காதுக்குள் சந்தோசச் சாரல் இல்லை
பற்றீரியாக்களின் இரைச்சல்

அறியாமல் சிரித்தாயானால் அச்சிரிப்பு நிலைத்திடாது
ஒரு முறை காதுகளை சோதித்து விடு - நீ
மற்றவரை ஏமாத்துகிறாயா - இல்லை
நீ இன்னும் புரியவில்லை உன்னை ஏமாற்றுவதை
எதிர்காலம் உன்னைத் தூற்றாமல் இருந்திட - நீ

உனக்கு வாழ்வு கொடுத்திட
தொல்லை பேசியான தொலைபேசியின்
பாவனையைக் குறைக்கப் பறை சாற்றி - உன்
தீய எண்ணத்திற்கு விடுதலை அளித்து
அடியோடு விரட்டி விடு தொல்லை பேசிகளை

# கல்லூரியின் மடியில் ..................

ப. ஜீவிதா
A/L ( 2015)

மண் போற்ற மனம் வாழ்த்த
விண்போற்ற விரைந்தொழுக
எளியவன் என்னை ஏணியாய் நின்று
எட்டாத் தூரத்தில் ஏற்றி வைத்து
தற்பெருமையின்றி தன்னைத் தாழ்த்தி
உருவாக்கிய என்னை
உயரத்தில் கண்டு உவகை கொண்டு
அன்புடன் பார்க்கும் எந்தன் அன்னை
மடியில் தவழ்கிறேன் சிறுமியாய்

கற்பவை பல கருத்துணர நடப்பவை சில
காலத்தில் தேவையதில் கருத்துணர நட
எண்ணிறைந்த கலைகளை என்னுள் கொணர்ந்து
ஏற்றத் தாழ்வை என்னுள் அழித்து
பாசப் புரிந்துணர்வை எனக்குள் ஊட்டி
பண்பாட்டு விழுமியத்தை பண்புடன் காட்டி
கனத்தையும் கணத்தையும் கணப் பொழுதினில்
கற்றுத் தந்தாள்

சேவைகள் பல புரிந்தால்
செவ்வனவே விளங்கிடலாம்
பாவைகள் நாமெல்லாம்
பாங்காக மிளிர்ந்திடலாம்
அண்ணல் இராமநாதன்
அழகாய் ஏற்றிவைத்தார்
அடுக்கான அடுக்குத்தீபம்
ஆகா! அது சுடர் விட்டு எரிகிறதே!

புண்ணியம் செய்தோமா?
புதுமைகள் கண்டோமோ?
என்னவென்று சொல்வதுவோ?
அன்னயவள் மிளிர்கின்றாள்
ஆனந்த நூற்றாண்டாய்
அறிவை புகட்டிய என் அன்னையை
ஆசான் வழியில் காண்கிறேன்.
ஆசையாய் நினைக்கின்றேன் கல்லூரி
அன்னையின் மடியில் உல்லாசமாய்
உவகையுடன் கற்று மகிழ்வதை.

# விடியலே .......

ப. ஜீவிதா
A/L ( 2015)

மெல்லத் தவழும் தென்றல் போல்
எம்மைத் தாக்கிய போர்
இன்னும் அவலங்களாகத்
திரையில் ஓடுகின்றது
ஒரு கனவாக ........
கலவரம் தோன்றி
மக்கள் புதையுண்டு
பல புரட்சிகள் எழுந்து
விடியலே கேள்வியாகச்
சிதைகின்றது..........
இன்னும் உணவின்றி.....
உடைமையின்றி.....
ஊர் இன்றி....
அகதிகளாக.....

சுதந்திர மனிதன் கூண்டுக்கிளி போல்
அகதி முகாங்களிலே.......
இருக்க இடமின்றி
உடுக்க உடையின்றி தவிக்கும் எம்
இன மக்கள்......
வாழ்கையிலே எப்போது வரும்
சுவைத்துப் பார்க்க ஒரு வாழ்வு
இனி தோன்றுமோ......
வாழ்ந்துபார்க்க விடியல் விடியுமா!!!!!

# கல்லூரி அன்னை

**மாயழகு . தனுஜா**
A/L ( 2015)
கலைப்பிரிவு

*இசையும் நடனமும் இறைவனின் தேடலும்*
*இன்னிசையும் கலையும் இன்பமாய் வளரும்*
*இனிய ஊராம் மருதனார் மடத்தில்*
*முத் தென ஒளிவீசும் முழு நிலவு போல*
*நித்தமும் கல்வியை நிலைபெறச் செய்யும்*
*நிகரில்லா இராமநாதன் கல்லூரியே வாழி!*
*கல்வியில் சிறந்த சான்றோர்கள் ஒரு பால்*
*கலையிலக்கியங்களில் தடம்பதித்த கலைஞர்கள் ஒருபால்*
*வல்லமை மிக்க வணிகர்கள் ஒரு பால் என*
*உயர்ந்திட்ட தாயே வாழி! வாழி!!*
*பல்கலை பயின்ற பட்டதாரிகள்*
*தொல்லைகள் களையும் வைத்திய நிபுணர்கள்*
*நுண்ணறிவுடைய பொறிமுறை அறிஞர்கள்*
*சொல்வன்மை செய்யும் சொற்பொழிவாளர்கள்*
*பல்துறை அறிஞர், பாடஆசிரியர்கள், பண்டிதர், பாவலர்,*
*பாடல் சொல்வோர் என பட்டியல் காட்டும்*
*உம் ஒப்பிலாப்புகழை நிதம் துதிப்போம் நீடுழி வாழ்க*
*மாகாணமட்டம் - தேசிய மட்டம் வெற்றி சாதனைகளை*
*சொல்லவும் இனிக்குதே !*
*ஆசிரியர் குழாத்தை ஒன்றுபடுத்தி ஒரு தாயாய் பலவாய்*
*எல்லாமாய் நின்று ஓங்கியே உம் புகழ் மிளிரச் செய்யும்*
*உத்தம அதிபரைப் பெற்ற மாண்புடைக் கல்லூரித்தாயே*
*உன் பாதம் தொழுவோம் காலத்தை வென்று*
*ஞாலத்தை வெல்வாய் நின்புகழ் உலகறியும் படி வாழ்க!*

# தேசிய வீரர் சேர். பொன். இராமநாதன்

ஜெ பார்த்தீபா
யா/ இராமநாதன் கல்லூரி
தரம் - 10 B

இலங்கை வரலாற்றில் அழியா இடம் பெற்ற பெரும் தலைவர்களுள் சேர். பொன். இராமநாதன் குறிப்பிடத்தக்க பெருமைக் குரியவர். இலங்கை மக்களின் விடுதலைக்காக இனமத பேதமின்றிப் பணியாற்றிய பண் பாளர். இவர் சிறந்த சட்டவாதி: பழுத்த அரசியல் வாதி ; சீரிய சமயத் தொண்டர் கல்விக் கூடங்கள் பல நிறுவிக் கல்லூரி வளர்ச்சிக்கு வித்திட்டவர் இலங்கை வாழ் மக்கள் அனைவரதும் நலனுக்காக வாழ் நாள் முழுவதும் பணியாற்றிவர்.

#### பிறப்பும் படிப்பும்

இராமநாதன் அவர்கள் மானிப்பாயைச் சேர்ந்தவரும் கொழும்பில் வாழ்ந்தவருமான முதலியார் பொன்னம்பலம் அவர்களுக்கும் செல்லாச்சி அம்மையாருக்கும் புதல்வராக **1851**ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் **16**ஆம் திகதி கொழும்பில் பிறந்தார். வளரும் பயிரை முளையில் தெரியும் என்னும் முதுமொழிக் கிணங்க இளமையிலே விவேகம் மிக்கவராக வும் விளங்கினார். தற்போது றோயல் கல்லூரி என அழைக்கப்படும் கல்லூரியில் தனது ஆரம்பக்கல்வியைப் பெற்றார். பின்னர் சென்னை பிரசிடென்சிக் கல்லூரியில் கல்வி பயின்றார். சட்டத்துறையில் ஈடுபட விரும்பினார். சேர் றீசாட் மோர்கன் என்னும் பிரபல சட்ட வாதியின் கீழ் சட்டக்கல்வி பயின்று **1873**இல் உயர் நீதிமன்ற வழக்கறிஞர் ஆனார். சட்டத்துறையில் பிரபலம் பெற்று விளங்கி னார். இதன் காரணமாக இலங்கை மக்களின் பெருமதிப்புகுரிய தலைவரானார். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் போன்ற அறிஞர்களின் அன்புக்குரியரானார்.

#### மக்கள் பிரதிநிதி

**1911**இல் முதலாவது சட்டசபையில் படித்த இலங்கை மக்களின் பிரதி நிதியாகத் தெரிவு செய்யப் பெற்றார். இலங்கையில் உள்ள அனைத்து மக்களினதும் அன்புக்குரிய வராக விளங்கினார். தன் சொல் வன்மையா லும் மதிநுட்பத்தாலும் ஒப்பற்ற தலைவராகி மிளிர்ந்தார்.

**அரசியலில் 50 ஆண்டுகள்**

அரசியல் துறையில் இவர் ஆற்றிய பணிகள் அனேகம் சாதி, மத, இன பேதமின்றிச் சகல மக்களினதும் நன்மைக்கா உழைத்தார். இலங்கை மக்கள் தங்களைத் தாங்கள் ஆளும் சுதந்திரத்தை பெற வேண்டுமென வலியுறுத்தினார். இலங்கையின் சுதந்திரத்திற்காகப் பெரிதும் பாடுபட்டார். இலங்கை அரசியல் வராற்றில் 50 ஆண்டுகளுக்கு மேல் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதியாகவும் அரச சபை அங்கத்தவராகவும் விளங்கினார்.

**பணிகள்**

கொழும்பு மாநகரில் கொட்டாஞ்சேனையில் தமது தந்தையாரால் அமைக்கப் பெற்ற பொன்னம்பலவாணேசுவரர் ஆலயத்தைப் புணரமைத்தும் கும்பாபிஷேகத்தை (21.11. 1912) சிறப்புற நடத்தினார். தமிழ்ப் பிள்ளை கள் சைவச் சூழலில் தமது கல்வியைத் தமிழி லும், ஆங்கிலத்திலும் பெற வேண்டுமென விரும்பினார். இதன் பொருட்டு 1913 இல் சுன்னாகம் மருதனார் மடத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரியையும் நிறுவினார். யாழ்ப்பாணம் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் மூலம் சைவப் பாடசாலைகள் பல தோன்றுவ தற்கு வழிகாட்டினார் சைவ சமய வளர்ச்சிக் காக பணிகளுக்கு உதவினார்.

சமூக, சமய, அரசியல் பணிகளில் தீவிர பங்கு கொண்டு உழைத்த இப் பெரியார் தமிழிலும் ஆங்கிலத்திலும் பல நூல்களை எழுதியுள்ளார். இவரது அளப்பெரும் சேவைகளை நினைவுகூரும் வகையில் கொழும்பிலுள்ள பழைய பாராளுமன்றக் கட்டடக் முன்றலில் இவரது உருவச் சிலை இன்றும் காட்சியளித்துக் கொண்டு இருக்கின்றது.

**பெற்ற சிறப்புக்கள்**

இலங்கையில் தேசிய வீரர்களில் ஒருவராக இலங்கை அரசு இவரைக் கௌரவித்துள்ளது. இவரது நினைவாக முத்திரை ஒன்றினையும் வெளியிட்டுள்ளது. இவர் தாபித்த கல்லூரிகளும் இன்றும் இவரை நினைவூட்டிய வண்ணம் உள்ளன. இவரது ஒப்பற்ற சேவைகளைப் பாராட்டி இவருக்குச் சேர் பட்டம் வழங்கப்பட்டது.

**மறைவு**

இலங்கையின் விடுதலைக்கும் இலங்கை வாழ் மக்கள் அனைவரதும் நல் வாழ்வுக் காகவும் பேதம் எதுவுமின்றித் தொண்டாற்றிய பெருந்தகை இவரென மக்கள் போற்றுகின்றனர். வாழ் நாள் முழுவதும் நாட்டு மக்கள் நலனுக்காகத் தொண்டாற்றிய இப் பெரியார் 1930ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் திகதி இவ்வுலக வாழ்வை நீத்தார். சேர். பொன். இராமநாதன் பூதவுடல் மறைந்ததேயன்றி இவரது புகழ் என்றும் இலங்கை மக்கள் மனதில் நின்று நிலைபெறும் என்பது திண்ணம்

# Teacher's Day

**S. Premila.**
12^A 2015

Today We are Here to wish you teachers
You are great and second to our parents
You guide us and show us the path
You are god to us protecting from bad and sins.

You taught us Alphabats
You taught us Words
You taguht us Sentences
And you taught us the speech.

You taught us what is good
You taught us what is hight
Yiu taught us what is might
And you taught us the entire word.

You scoided us when we were wrong
You founded us when we were lonely
You made us merry when we were sad
And you punished us when we were adamant.

You Have been really our guardians
And you will live in our memory for ever
Until our lifes end and until we die
You teachers will remain in our memory like a shinning moon.

# எங்கள் கல்லூரி வாழியவே

சி. அபிராமி
A/L (2015)
கலைப்பிரிவு.

01. வானுயர் சிறப்புடை வள்ளல்
இராமநாதன் நாமம் சூடும்
வான் புகழ் கல்லூரியின்
புகழ் வீசும் நூற்றாண்டில்
வாழ்த்தி வணங்குவோம்...
வாழ்த்தி வணங்குவோம் சிரம்
தாழ்த்தி வணங்குவோம் சீர்பெறு
கல்லூரி சிறப்புடன் வாழ்க.

02. சீர்மை மிகு கல்வியுடன்
சீரிய நன்நெறி ஊட்டும்
செங்கதிரோன் பேரொளியெனத்
திகழும் மாண்புகழ் பலவும் கொண்ட
மருதனார் மடத்தில் இலங்கியே மாண்புற
அகிலமெங்கும் புகழ் வீசிடும்
இராமநாதன் கல்லூரி வானுற ஓங்கி
வளம்பல பெற்று வாழியவே

03. கல்விக்கோர் கல்லூரியென நின்றெழும்பி
கவிபாடும் ஞாலமதில் களிகொண்டு
வைத்தியம், பொறியியல், தெய்வத்தமிழ்,
வணிகம், கலை பல் நெறியென
பல்கலைக் கழகதில் முதன்மை
மாணவராய் மேன்மை பெற்றே
ஞாலமெங்கும் புகழ் பரப்பும் எங்கள்
இராமநாதன் கல்லூரி வாழியவே.

04. கவின் கலை விளையாட்டுக்கள்
களப்பயணங்கள் களியாட்டங்கள்
ஆய்வுகள் தேடல்களுக்கு எல்லாம்
ஆய்வுகூடம், நூலகமென
அறிமுறையும் செயல் முறையும்
சுவை பட ஊட்டி வளர்க்கும்
அறிவுடை ஆசான்கள் பண்புடைப் பணியாளர்கள்
திறன் மிகு சாரணர் வீரருடன்
தீரமுள்ள மாணவரும் கொண்டு விளங்கும்
எங்கள் கல்லூரி வளமுடன் வாழியவே.

# நெப்போலியன் பொனபாட்

**பா. சிந்துஜா**
தரம் 13B (2013)
கலைப்பிரிவு

ஐரோப்பிய வரலாற்றில் எல்லோருடைய மனதிலும் தடம் பதித்துச் சென்றவனாக நெப்போலியன் பொனாபாட் திகழ்கின்றான். 1762 ஆம்ஆண்டு கோசிக்காவின் தேசிய உணர் வெழுச்சியைக் கண்ட பேரறிஞரான ரூசோ "இச்சிறிய தீவும் என்றோ ஒருநாள் ஐரோப்பாவில் வியப்பில் ஆழ்த்தவுள்ளது." என்ற அவருடைய கூற்றிற்கிணங்க 1769 ஆம் ஆண்டு கோர்சிக்கா தீவிலே சார்லஸ் பொனபாட்டுக்கும் லெட்சீனியா சமேளினாவுக்கும் மகனாகப் பிறந்தார். 1800 ம் ஆண்டளவில் அனைத்து ஐரோப்பிய நாடுகளையும் தன்னடியின் கீழ்க் கொண்டுவந்தான். இவன் பிரான்சியப் புரட்சியின் குழந்தையாக வர்ணிக்கப்படுகின்றான்.

அக்கால இத்தாலிக்கு சொந்தமான கோசிக்கா தீவு பிரான்சிடம் குத்தகையாக வழங்கப்பட்டு அது மீட்கப்படாமல் பிரான்சின் கட்டுப்பாட்டில் இருந்தது.இதனால் பிரான்சிற்குச் சென்று குடியேறி அதன் எழுச்சிக்குப் பாடுபட்டான். 1785ஆம் ஆண்டு பிரான்ஸ் இராணுவக் கல்லூரியில் சேர்ந்து கல்வி பயின்று 17வது வயதில் பிரெஞ்சுத் தளபதி ஆனான். அப்பொழுது டூலன் நகரை ஆங்கிலக்கடற்படை முற்றுகை இட்டு இருந்தது. 1793 இல் டூலன் நகரை முற்றுகை இட்டு ஆங்கிலேயரை வெளியேற்றினான். இதனால் பிரிகேடியர் ஜெனரல் ஆகப் பட்டம் பெற்றான். 1793ம் ஆண்டின் பிற்பகுதியில் 16 உறுப்பினர்களைக் கொண்ட பணிப்பாளர் சபையில் ஒருவராக அங்கத்துவம் பெற்றான். 1795ம் ஆண்டு 5 பேர் கொண்ட பணிப்பாளர் சபையில் ஒருவராக அங்கத்துவம் பெற்றான்.

1796ஆம் ஆண்டு ஆஸ்திரியா மீது போர் தொடுத்து மத்துவாக்கோட்டையைக் கைப்பற்றி பேடினந்துடன் 1797இல் கம்போடியா ஒப்பந்தம் செய்து பிரான்சின் எல்லைகளை றைன் நதிவரை விஸ்தரித்தான். இவனது எழுச்சியைக்கண்டு பொறாமையுற்ற டைரக்ரறி ஆட்சியாளர் 1798இல் இங்கிலாந்தை அடக்க எகிப்து மீது படையெடுக்க அனுப்பினர் அங்கு இடம்பெற்ற அபூகீர் வளைகுடாப் போரில் வெற்றி பெறவில்லை. இங்கு ஆங்கிலேயத் தளபதி அட்மிரல் நெல்சனால் தோற்கடிக்கப்பட்டான். எகிப்தில் சிறிது காலம் தங்கி அங்கு உள்ள பிரமிட் பற்றி ஆராய்ந்தான். ஒரு நாள்முழுவதும் இவன் பிரமிட்டுக்குள் இருந்ததாகவும், இவனே உலகிற்கு பிரமிட்டை அறிமுகப்படுத்தியதாகவும் கூறப்படுகின்றது. இவன் மீண்டும் பிரான்சிற்கு வந்தபோது இவனுக்கு மக்களின் ஆதரவு கிடைத்தது.

1799இல் டைரக்ரறி ஆட்சியைக் கலைத்து விட்டு 3 கொன்சல்கள் கொண்ட ஆட்சியை ஏற்படுத்தினான். பின் 1802ஆம் ஆண்டு தான் முதலாவது ஆவது கொன்சலாக பொறுப் பேற்றான். பின்னர் 1804ஆம் ஆண்டு பிரான் சின் பேரரசனாக முடி சூடிக் கொண்டான். இவன் பிரான்சிற்குப்

பேரரசனாக வந்ததும் அரசியல், பொருளாதாரம், நிதி, நீதி, கல்வி, சமயம் என்பவற்றை சீர்படுத்தினான். அரசி யலை நோக்குமிடத்து நாடு முழுவதும் 12 கொம்யூன்களாகப் பிரிக்கப்பட்டு ஆட்சி இடம்பெற்றது. கொம் யூன்களை திணைக் களங்களாகப் பிரிக்கப் பட்டது. புரிபெக்ர், உப புரிபெக்ர், நியமித்து ஆட்சியை நிர்வகித்தான். அரசியலை ஸ்திரப்படுத்த டிரியூரினற் சபை, சட்டமன்றம், செனற் மன்றம், ராஸ்ய சபை உருவாக்கினான். அடுத்து சமயத்தை நோக்கின் 1801ஆம் ஆண்டில் பாப்பாண்டவர் 7ஆம் பயசுடன் கண்காட் உடன்படிக்கை செய்து கத்தோலிக்க சமயத்தை அரச மதமாக்கினான். அடுத்து நிதிச் சீர்திருத்தத்தில் 1800ல் பிரான்ஸ் வங்கி தாபித்து மதிப்பிழந்த காசோலைகளை நிரற்படுத்தினான். அயல் நாட்டிலிருந்து கிடைத்த நிதி சிறப்பு நிதி என்னும் பேரில் வைப்பிலிடப்பட்டு அயல் நாட்டுப்படை யெடுப்பிற்குப் பயன்படுத்தப்பட்டது.

நீதிச்சீர்திருத்தத்தில் நவீன ஜஸ்ரீனியன் சட்டத்தொகுப்பு தொகுக்கப்பட்டது. நீதிமன் றங்கள் உருவாக்கப்பட்டது. பொருளாதார த்தை நோக்கின், கைத் தொழிற்சாலை உரு வாக்கி துறைமுக நகரை விருத்தி செய்து நில வரி அறவிட்டும், பட்டு பருத்தி கைத் தொழிலை விருத்தி செய்தும், வீதிகள் பாலங்கள் அமைத்தும் பொருளாதாரத்தை சீர்படுத்தினான். தனியார் கல்வி நிலையங் களை ஊக்குவித்து 1795 இல் பிரான்ஸ் இன்சிற்றியூட், 1808ல் பேரரசர் பல்கலைக் கழகம் நிறுவிச் சீர்படுத்தினான். இவனுடைய வெளிநாட்டுக் கொள்கையை நோக்கும் போது 1800இல் 2 ஆவது தடவை ஆஸ்திரியா மீது படையெடுத்து 1801இல் லுனேவில் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. 1802 இல் ஏமியன்ஸ் உடன்படிக்கை மீறி 1805 இல் இங்கிலாந்து மீது படையெடுத்தும் அதே ஆண்டில் 3 ஆவது தடவை ஆஸ்திரியா மீது படையெடுத்து பூரஸ்பேர்க் உடன்படிக்கை யும் 1806 ல் ரஸ்சியா மீது படையெடுத்தான். மொஸ்கோ வரை சென்றான். இவன் காலம் பிந்தி படையெடுத்ததால் அவனு டைய படைகள் குளிருடன் மோத வேண்டி ஏற்பட்டது. இதனால் பாரிய இழப்பும் இவன் படைக்கு ஏற்பட்டது. இதனால் 1807 ஆம் ஆண்டில் தில்சிற் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. 1806இல் இத்தாலி மீது படையெடுத்து இத்தாலியக் கூட்டாட் சியை ஏற்படுத்தி ஜேர்மனி மீது படையெடுத்து றைன் கூட்டமைப்பை ஏற்படுத்தினான். இங்கி லாந்தை அடக்க 1806 இல் பேர்ளின் மிலான் கட்டளை சட்டத்தின் ஊடாக கண்டத் திட்டக் கொள்கை பிறப்பித்தான். ஆரம் பத்தில் எல்லா நாடுகளும் ஏற்றது. 1812இல் போர்த்துக்கல், ஸ்பானியா, ஆஸ்திரியா, போன்ற நாடுகள் எதிர்க்க கண்டத்திட்டம் தோல்வியடைந்தது. கண்டத்திட்டம் தோல்வியடையக் காரணம் பிரான்சின் பிர தான பொருளாதார வீழ்ச்சி, சகோதரர்களை ஆட்சியாளர்களாக நியமித் தமை. கண்டத் திட்டத்தினால் ஏனைய நாடுகள் கடத்தல் களில் ஈடுபட்டதும் காரணமாகும் இதுவே நெப்போலியன் வீழ்ச் சிக்குக் காரணம் ஆகியது.

1812இல் எல்லா நாடுகளும் எதிர்க்க 1814இல் வாட்டர்லூ என்ற இடத்தில் போர் இடம்பெற்றது. இதில் தோல்வி கண்ட நெப்போலியன் சிறைபிடிக்கப்பட்டு எல்பா தீவில் சிறை வைக்கப்பட்டான். மீண்டும் அங்கிருந்து தப்பி வந்து 18ஆம் லூயியை கலைத்துவிட்டு ஆட்சி செய்தான். மீண்டும் 1815ல் வெலிங்டன் தலைமையில் படையெ டுத்து வாட்டர்லூ யுத்தத்தில் தோற்கடிக்கப் பட்டு சென்ஹென்னாத் தீவில் சிறைவைக்கப் பட்டான். 1821இல் மாரடைப்பு நோயினால் இறந்தான். உலகிலேயே இரு பெரும் மா வீரர்கள் தோன்றி மறைந்தார்கள். ஒருவர் அலெக்சாண்டர், மற்றையவர் நெப்போலியன் ஆவார். எவ்வாறு இருந்தாலும் மக்கள் மனதில் ஒரு நீங்காத ஆட்சியாளனாகவும், மாவீர னாகவும் நெப்போலியன் காணப்படுகின் றான்.

# ஆய்வியல்

# பல்துறை விற்பன்னரான பண்பாளர் சுப்பையா நடேசபிள்ளை (21.05.1895 - 15.01.1965)

பேராசிரியர் வி. சிவசாமி

இருபதாம் நூற்றாண்டு இலங்கைத் திரு நாட்டின் கல்வி, அரசியல், சைவசமயம், தத்துவம், வரலாறு நுண்கலைகள், சமஸ்கிரு தம் முதலிய பல துறைகளிலே நன்கு குறிப் பிடத்தக்க பங்களிப்புகள் செய்தவர்களில் இலக்கிய கலாநிதி சுப்பையா நடேசபிள்ளை நன்கு குறிப்பிடற்பாலர். இவர் தமிழகத் திலுள்ள தஞ்சாவூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தமது ஆரம்ப, இடைநிலை, பல்கலைக்கழகக் கல்வியைத் தழிழகத்திலே பயின்ற பின்னர் சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் வேண்டுகோளின் படி இலங்கைக்கு வந்து இலங்கையராகி இலங்கை மக்களுக்குப் பல்வேறு பணிகளும் செய்து புகழ் பெற்றார்.

தமிழகத்திலே தொன்மையும் சிறப்பும் வாய்ந்த முக்கியமான பண்பாட்டு மையங் களின் ஒன்று தஞ்சாவூர், சைவத்திற்கும், தமிழுக்கும் கலைகளுக்கும் பெயர் போன இவ் விடத்திலே 19ஆம் நூற்றாண்டு பிற்பகுதி யிலும், 20ஆம் நூற்றாண்டு முற்பகுதியிலும் வாழ்ந்த அருள் பரானந்த சுவாமிகள் என்னும் இலக்கணம் முத்துக்குமார சுவாமிப்பிள்ளை நன்கு குறிப்பிடற்பாலர். இவர் தலைசிறந்த தமிழ், சைவ அறிஞராகவும், பெரிய ஆத்மீக ஞானியாகவும் விளங்கினார். இவர் ஓர் இல்லறஞானி எட்வேர்ட் காப்பென்ரர் எனும் பிரபல ஆங்கிலேயப் பேராசிரியர் ஆத்மீக ஞானத்தைத் தேடி இவரிடம் வந்து அருள்ஞானம் பெற்றவர். இப் பெரியாரைப் பற்றி இவர் "ஒரு ஞானியின் தரிசனம்" (A Visit to a Gnani) எனும் நூலிலே இவரைப் பற்றியும் தன்னைப் பற்றியும் பின்வருமாறு கூறியுள் ளார்." யான் முதலில் குருநாகல் என்ற இடத்தில் தான் பிள்ளை அவர்களைச் சந்தித்தேன். அந்த இடத்தில் மழை வீழ்ச்சி அதிகம். சிறிய மலைக்குன்றுகள், அகன்ற நீர் நிலைகள், உயர்ந்த தென்னந் தோப்புகள், அடர்ந்த காடுகள் முதலியன ஒன்றுசேர்ந்து அந்த இடத்திற்கு இயற்கை அழகையும், பொலிவையும் கொடுத்துக் கொண்டிருந்தன. உயர் அநுபூதி பெற்ற சான்றோரின் உள்ளம் போல் செம்மையும், தூய்மையும், சாந்தமும் ஒருங்கே பொலிந்து விளங்குவது அப்பிர தேசம். அந்தச் சூழ்நிலையின் மத்தியில் அந்தச் சூழலை நிலைக்குத்தாக கொலு வீற்றிருந்து கொண்டிருக்கும் ஒரு தெய்வம் போலப் பிள்ளை அவர்கள் வீற்றிருந்த அந்த அற்புத மான முதற்பெருங் காட்சியைத் தான் யான் என்றும் மறக்கமுடியாதவனாய் இருக்கின் றேன். நான் ஒரு ஆங்கில மகன். கணிதத்துறை யில் பெரிய பட்டதாரி கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கணிதப் பேராசிரியன். தாய்நாட்டிலிருந்து இலங்கைத் தீவுக்குப் பெரிய ஆத்ம விசாரியாக வந்தவன். அங்ஙனம்

வந்த எனக்கு பிள்ளை அவர்களின் தோற்றமும் பொலிவும் என் விசாரத்தையெல்லாம் அகற்றி யான் தேடித்திரிந்த பரானுபவநிலையைத் தத்ரூபமாகக் காட்டி என் வாழ்க்கையின் போக்கையே முழுவதாக மாற்றிவிட்டது என்பதாகும். தஞ்சாவூரைச் சேர்ந்த இந்தப் பெரிய ஞானி இலங்கைக்கும் சிலவேளை களில் வந்து செல்வது வழக்கமாகும். இவ்வாறு வந்து தங்கியிருந்த போதுதான் பேராசிரியர் மேற்குறிப்பிட்ட குருநாகலில் இவரைச் சந்தித்தார்.

இப் பெயரிடப்பட்ட பெரிய ஆத்ம ஞானியும் அறிஞருமான இலக்கணம் இராமசாமிப்பிள்ள திரு. சு. நடேசபிள்ளை யின் தாய் வழிப்பாட்டனார். சேர். பொன். இராமநாதன் சேர்.பொன்னம்பலம் அருணா சலம் சகோதரர்களின் ஆத்மீக ஞான குரு. இவர்கள் இருவரும் குருவிடம் செல்லும் போது சிறுபிள்ளையாக விளங்கிய நடேச பிள்ளையைக் கவனித்தனர். சிறுவனுடைய தோற்றமும், விளையாட்டும் சேர். பொன். இரமநாதனைக் கவர்ந்தன. எனவே ஒருமுறை அச்சிறுவனின் பெயரைக் கேட்டார். அதற்கு அவன் 'நடேசன்' எனக் கூறினானாம். ஆனால் பாட்டனார் நடேசன் அல்ல, நாக நாகதனே இவன் பெயர் என்றார். ஆனால் சேர் பொன் இராமநாதன் குருவிடம் மன்றாடிக் கேட்டுச் சிறுவனின் பெயர் அன்று தொடக்கம் 'நடேசன்' என விளங்குமாறு செய்வித்தார்.

திரு. சு. நடேசன் 19 வயதிலே கலை மாணிப் பட்டதாரியாகவும் 21 வயதில் சட்டமாணிப் பட்டதாரியாகவும் விளங் கினார். இதன் பின் சில காலம் வழக்கறி ஞராகச் செயற்பட்டார். அப்போது இவருக்கு தமிழ் இலக்கியம், இலக்கணம், ஆங்கிலம், சட்டம், சமஸ்கிருதம், சைவசித்தாந்தம், வரலாறு, நுண்கலைகள் முதலிய பல அறிவியல்களிலே குறிப்பிடத்தக்க தேர்ச்சி ஏற்பட்டு விட்டது. தமிழ், சைவம் போன்றவற்றைக் குடும்பச் சூழ்நிலையாலும் பெற்றிருந்தார்.

இக்கால கட்டத்தில்தான் இவரைச் சிறு பிராயம் தொட்டு அவதானித்து இவரின் பெரு விருப்பம் கொண்டிருந்த சேர் பொன். இராமநாதன் 1923இல் இவரை இலங்கைக்கு வரவழைத்துத் தாம் நிறுவிய பரமேஸ்வராக் கல்லூரியில் ஓர் ஆசிரியராக நியமித்தார். இவருடைய தகைமைகளையும், ஆற்றலையும் நன்கு அவதானித்தார். குறுகிய காலப் பகுதியில் அக்கல்லூரியின் அதிபராக நியமித் தார். சேர் .பொன் .இராமநாதனின் அருமைப் புதல்வியாகிய சிவகாமசுந்தரியை நடேசன் திருமணம் செய்தார். இத்திருமணத்திற்கு இவரின் உறவினர் எதிர்ப்புத் தெரிவித் தாகவும், பின்னர் திருச்செந்தூர் முருகப் பெரு மானின் திருவருள் பெற்ற பின்னரே திருமணப் பதிவு கொடைக்கானலில் நிறைவேறிய தாகவும் கூறப்படுகின்றது. எவ்வாறாயினும் இத்திருமணத்தின் பின்னர் திரு. நடேசன் பல வழிகளிலும் சேர். பொன். இராமநாதன் அவர்களின் வாரிசாக அவர் செய்து வந்த பல்வேறு நற்பணிகளைச் செய்தற்கான வாய்ப்புகள் எற்பட்டன. மேலும் சேர் பொன் இராமநாதனின் வாழ்க்கையின் இறுதிக் கட்டமும் ஏற்பட்டுவிட்டது. தம்முடைய ஓர் அந்தரங்கச் செயலர் போல அவருக்குப் பல பயிற்சிகள் அளித்து வந்தார். இங்கிலாந்துக்குச் சென்ற போது அவரைக் கூட்டிக் கொண்டு சென்றார். திரு. நடேசன் மாமனாரிடம் பல திறம்பட்ட அறிவியல்களையும் பயிற்சி

களையும் பெற்று அவரின் வாரிசாக விளங்கத் தொடங்கினார். மாமனார் 1930 இல் இறந்த பின்னர் திரு. நடேசனின் ஆளுமைத் திறன், பல திறம்பட்ட கல்வி அறிவு, முதலியன நன்கு வெளிப்படலாயின. இவருடைய சில முக்கியமான பங்களிப்புகளே இச் சிறு கட்டுரையில் சுட்டிக் காட்டப்படும்.

1931ஆம் ஆண்டுடொனமூர் அரசியல் நடைமுறைக்கு வந்த போது யாழ்ப்பாணத் தமிழர் அத் தேர்தலைப் பகிஷ்கரித்தனர். பின்னர் தேர்தல் 1934இல் நடைபெற்ற போது காங்கேசன் துறைத் தேர்தல் தொகுதிக்கு உறுப்பினராக அரசாங்க சபைக்கு இவர் தெரிவு செய்யப்பட்டார். இத்துடன் இவரின் அரசியல் வாழ்வு தொடங்கியது. இவர் அரசியலில் ஈடுபடுவதற்கு முக்கியமான காரணமாக விளங்கியவர் இவரின் மாமியாராகிய சீமாட்டி இராமநாதன் ஆவார். கணவர் ஐம்பதாண்டுகளுக்கு மேலாக செய்து வந்த தொண்டினை மருமகனார் தொடர்ந்து செய்ய வேண்டுமென விரும்பினார் எனக் கூறப்படுகின்றது. அரசாங்க சபை உறுப்பினராகத் தொடர்ந்து பத்து ஆண்டுகளுக்கு மேலாக 1947 வரை விளங்கினார். கல்வியோடு சம்பந்தமுள்ள பல குழுக்களில் ஒரு முக்கியமான உறுப்பினராக இலங்கினார். எடுத்துக் காட்டுகளாக கல்விச் சபை, கல்வியின் மத்திய ஆலோசனைக் குழு, பரீட்சைகள் சபை, கல்வி ஆராட்சி சபை என்பன குறிப்பிடர்பாலான. 1934 தொடக்கம்1947வரை அரசாங்க சபையில் கல்வியின் நிர்வாகக் குழு உறுப்பினராக விளங்கினார். இக் குழுவினரே இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதனையில் அமைக்கப்பட வேண்டுமென தெரிவு செய்தனர். பல்கலைக்கழக சட்ட மசோதாவையும் தயாரித்தனர். இலவசக் கல்வியை நியமனம் செய்ததற்காக நியமிக்கப்பட்ட விசேட சபையில் ஓர் உறுப்பினராகவும் விளங்கிய இவர் இலவசக் கல்வியின் தந்தையாகக் கூறப்படும் சி.டபிள்யூ கன்னங்கரா அவர்களோடு சேர்த்து இலவசக் கல்விக்கு முழுமையான ஆதரவு வழங்கினார். மேலும் 1961ஆம் 1962ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட தேசியக் கல்விச் சபையின் ஓர் உறுப்பினராகவும் இவர் விளங்கினார்.

இவர் இலங்கைப் பல்கலைக்கழகத்துடன் மிக நீண்டகால தொடர்புள்ளவராக திகழ்ந்தார். 1938-1942வரை பல்கலைக்கழக கல்லூரியின் மேற்சபை ஓர் உறுப்பினராக செயற்பட்டார். 1942 தொடக்கம் இப் பல்கலைக்கழகத்தின் பேரவை (Court) உறுப்பினராகவும், 1952 தொடக்கம் மூதவை உறுப்பினராகவும், 1952 தொடக்கம் இப் பல்கலைக்கழகம் கீழைத்தேசக் கற்கை நெறிகளின் பீட உறுப்பினராக பல ஆண்டுகள் நன்கு செயற்பட்டார். இலங்கை வரலாற்றை எழுதுவதற்குப் பல்கலைக்கழகம் அமைத்த ஆசிரியர் குழுவிலும் ஓர் உறுப்பினராகக் குறிப்பாக வட புல அரசு எனும் தலைப்பிலே யாழ்ப்பாண அரசின் வரலாற்றினை நன்கு எழுதியுள்ளார்.

இலங்கை சுதந்திரமடைந்த கால கட்டத்திலே கௌரவ டி. எஸ். சேனநாயக்க தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சியை உருவாக்கியவர்களிலொருவராகவும், அதன் துணைத் தலைவராகவும் இவர் செயற்பட்டார். முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் இவர் வெற்றி பெற்றவர். பின்னர் 1952 இல் நடைபெற்ற தேர்தலிலே காங்கேசன்துறை ஐக்கியத் தேசியக் கட்சி தொகுதி உறுப்பின

ராகத் தெரிவு செய்யப்பட்டு அமைச்சரவை யிலே தபால் தந்தி தொடர்பு ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சராக நியமிக்கப்பட்டார். இப்பதவியிலே நற்பணிகள் செய்து கொண்டி ருக்கும் கால கட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி இலங்கையிலே சிங்களம் மட்டுமே உத்தி யோக மொழியாக இருக்க வேண்டும் எனத் தீர்மானித்தது. இவர் அக்கட்சிக்கு மிகுந்த விசுவாசமுள்ளவராக இருந்த போதிலும் அதனைத் தடுக்க முடியவில்லை. சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்து அத்தியாவசி மென்பதை பாராளு மன்றத்திலே வலியுறுத்தினார். தான் இக் கட்சிக்கு விசுவாசமாக இருந்த படியால் ஏனைய தமிழ்த் தலைவர்களுக்கு துரோகம் செய்துவிட்டதாகக் கவலைப்பட்டார். காலந் தோறும் தமிழர்கள் சிங்களவர்களுக்கும் பௌத்த சமயத்துக்கும் செய்து வந்த நற்பணிகளைச் சுட்டிக் காட்டினார். இலங்கை வரலாறு சிங்கள மக்களுக்கும் வரலாறு போலத் தமிழ் மக்களுடைய வரலாறுமாகும் எனவும், இது ஜனநாயகமின்றி, பெரும்பான் மையினரின் கடுங்கோண்மை, மொழி வெறி எனவும் கூறினார். பெரும் பண்பாட்டுச் சிறப்பு டைய தொன்மையான தமிழ் மொழிக்கு சுய மரியாதை உடைய எந்தத் தமிழனும் குறைவான அந்தஸ்து வழங்கப்படுதலை ஏற்றுக் கொள்ள மாட்டான். எனவும் குறிப்பிட்டு மிக மனவருத்தத்துடன் அமைச்சர் பதவியைத்துறந்து தனது மிகுந்த தமிழ்ப் பற்றினை எவரும் மனம் நோகாதவகையில் வெளிக் காட்டினார். அன்று பாராளுமன் றத்தில் இவர் ஆற்றிய உரை நன்கு பிரசித்தி

இதன் பின்னர் இவர் அரசியலைத் துறந்து யாழ்ப்பாணத்திலே தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைத்தல், தமிழ், சைவசித்தாந்தம், நுண்கலைகள் போன்றவற்றில் கூடுதலாக ஈடுபட்டார். சேர் பொன். இராமநாதன் யாழ்ப்பாணத்திலே பல்கலைக்கழகம் நிறுவப்படுதலை விரும்பினார். 1956இல் காலம் சென்ற முன்னாள் பிரதம மந்திரி கௌரவ எஸ். டபிள்யூ. ஆர். டீ, பண்டார நாயக்கா வித்தியோதியா, வித்தியாலங்கார எனும் இருபிரிவெனாக்கள் கலாச்சார பல் கலைக்கழகங்களாக உயர்த்தினார். இதனைப் பின்பற்றி இருவரும் சேர் பொன் இராமநாதன் நினைவாக ஒரு தமிழ் கலாசார அல்லது இந்து பல்கலைக்கழகம் நிறுவுவதற்கு பெரிதும் பாடு பட்டார். அப் பல்கலைக்கழகம் சேர் . பொன். இராமநாதன் நிறுவிய பரமேஸ்வராக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி ஆகிய இரண்டையும் மையமாக வைத்து இராமநாதன் பல்கலைக் கழகம் என அழைக்கப்படலாம் எனவும் அவர் கூறினார். இவர் விரும்பியவாறு பல்கலைக் கழகத்தை நிறுவுவதற்கு அன்றைய இலங்கை அரசாங்கம் அனுமதித்து அடையாள மான்யமும் 1960இல் வழங்கிற்று. ஆனால் சில காரணங்களால் இவரின் நோக்கம் நிறைவேற வில்லை. எனினும் இவர் மனம் தளர்ந்திலர். என்றோ ஒரு காலம் தனது நோக்கம் நிறைவேறும் என நம்பினார். அதற்கு முன்னோடி யாக 1960ஆம் ஆண்டு ஒக்டோ பர் மாதம் 16ஆம் திகதி விஜய தசமித்தி னத்தன்று மாமனாருடைய பெயரிலே இராமநாதன் இசைக் கல்லூரியை தனது செலவிலே சமகாலப்பிரபல கர்நாடக இசைக் கலைஞர் மஹாராஜபுரம் சந்தானம் அவர் களை அதிபராக நியமித்துத் தொடங்கி வைத் தார். தமிழ்நாட்டிலுள்ள பிரபல பல்கலைக் கழகங்களில் ஒன்றான அண்மைப் பல்கலைக் கழகத்திற்கு முன்னோடியாக அங்குள்ள

அசைக் கல்லூரி அமைந்துள்ளதோ அது பேலவே இவ் இசைக் கல்லூரியும் யாழ்ப் பாணத்தில் அமைக்கப்படவுள்ள பல்கலைக் கழகத்துக்கு முன்னோடியாக அமையும் எனத் தீர்க்க தரிசனமாகக் கூறினார். அவர் எதிர்பார் த்தவாறே 14 ஆண்டுகளின் பின் 1974இலே யாழ்ப்பாண வளாகம் நிறுவப்பட்டது. திரு. நடேசன் அமரராகிவிட்ட போதிலும் அவரு டைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கனவு நனவாகியமை நன்கு குறிப்பிடற்பாலது. சமகாலக் க்லவி அமைச்சின் செயலாளரான திரு. ஆர் பாஸ்கரசிங்கம், வளாகத் தலைவர் பேராசிரியர் கைலாசபபதி, மனிதப் பண்பியல் பீடாதிபதி பேராசிரியர்களாக இந்திரபாலா ஆகியோரின் நன்முயற்சியால் இராமநாதன் இசைக் கல்லூரி, இராமநாதன் நுண்கலைக் கழகம் எனும் பெயருடன் 1975இல் யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தின் ஒன்றிணைந்த பகுதியாயிற்று இராமநாதன் இசைக் கல்லூரி நிறுவராக மட்டுமன்றி யாழ்ப்பாணத்தின் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்) முன்னோடியாக திரு நடேசன் திகழ்ந்தமை நன்கு நினைவு கூரற்பாலனது. முன்னர் திரு. நடேசன் அவர்களுடைய வேண்டுகோளின் படி நிறுவப்படவிருந்த பல்கலைக்கழக அமைப்பைப்பே பெரும்பாலும் 1974 இல் யாழ்ப்பாண வளாகமாக அவர் கருதியதாலே பரமேஸ்வராக் கல்லூரியை மையமாகக் கொண்டு நிறுவப்பட்டமை குறிப்பிடற் பாலானது.

திரு நடேசன் அவர்களின் பிறபங்க ளிப்புகளும் நன்கு குறிப்பிடத்தக்கவை. அவர் 1923இல் இங்கு வந்த காலம், அமரராகும் வரை (1965) செய்த மிகச் சிறப்பான பிற பணிகளும் நினைவுகூறற்பாலயின. இக்கால கட்டத்திலே குறிப்பாக 1920 - 1948 வரை இந்தியாவிலும், இலங்கையிலும் சுதந்திரப் போராட்டங்கள் வலுவாக நடைபெற்றன. இதனால் மக்களின் பாரம்பரிய சமய, மொழி, பண்பாட்டுக்கூறுகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டது. இதன் விளைவாகப் பல சங்கங்கள் தோன்றின. யாழ்ப்பாணத்தில் தோன்றிய கலாநிலையம் ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கம், வட இலங்கைச் சங்கீத சபை, வட இலங்கை சமஸ்கிருதக் கழகம், யாழ்ப்பாண வரலாற்றுக் கழகம் முதலியன குறிப்பிடத் தக்கன. இவற்றில் இவர் ஒரு முக்கிய பிரமுகராக விளங்கினார். இவற்றுள்ளே கலைப்புலவர் நவரத்தினம், திருமதி ம. நவரத்தினம் ஆகியோருடன் சேர்ந்து கலாநிலையத்திலே அவர் பல்லாண்டுகாலம் கலைத் தொண்டுகள் செய்தார். இலங்கை அறிஞர், கலைஞர் மட்டுமன்றிப் பிரபல இந்தியக் கலைஞர், அறிஞர்களும் இந்நிலையத்திலே மிகப் பயனுள்ள பங்களிப்புகள் செய்தனர். இவர் வட இலங்கைச் சங்கீத கலைக்கும் பங்களிப் புகள் செய்தார். இலங்கையில் தமிழர் மத்தி யில் தொன்று தொட்டு நிலவி வந்துள்ள இசைப் பாரம்பரியம் பற்றி மேற்குறிப்பிடப் பட்ட சபையின் கூட்டங்களிலே வலியுறுத்தி அதை வளர்ப்பதற்கு ஒரு நிறுவனம் அவசியம் எனவும் கூறியுள்ளார். அரசாங்கம் இவரின் இசை நிறுவனம் பற்றிய கோரிக்கையை அரசாங்க சபைக் காலத்தில் ஏற்கவில்லை. எனவே 1960இல் மேற் குறிப்பிடப்பட்ட இசைக் கல்லூரியை தனது செலவிலே தொடங்கினார். ஆரிய திராவிட விருத்திச் பாஷா சங்கம் மூலம் தமிழ், வடமொழி ஆகிய இருமொழிகளிலும் நன்கு பயிலப்பட்ட வராகவும் செயலாற்றினார். இதனைப்

போலவே யாழ்ப்பாண வரலாற்றுச் சங்கம் தொடங்குவதற்கும், செயற்படுவதற்கும் உறுதுணையாகவும் அதன் தலைவராக விளங்கினார். கொழும்பிலுள்ள விவேகானந்தா சபையின் தலைவராகவும் பல ஆண்டுகளாக நற்பணிகள் செய்துள்ளார். இவ்வாறு பல நிறுவனங்கள் ஊடாகவும் சமய, சமூக பண்பாட்டுப் பணிகள் செய்துவந்துள்ளார்.

தமிழிலும், சைவசித்தாந்தத்திலும் இந்தியாவிலும், இலங்கையிலுள்ள அறிஞர்களாலும் பெரியோர்களாலும் நன்கு மதிக்கப்பட்டவராகவும் இவர் விளங்கினார். தமிழகத்திலே மதுரைத் தமிழ்ச் சங்கத்தினதும் சென்னை சைவசித்தாந்த சமாசத்தினதும் பொன் விழாக்களிலே தலைமை வகித்து சிறப்புச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழாவிற்கு மாணிக்கவாசகரின் காலம் பற்றி இவர் எழுதியுள்ள ஆய்வுக் கட்டுரையும், அதே பல்கலைக்கழகத்தில் திருக்குறள் பற்றி இவர் ஆற்றியுள்ள சொர்ணாம்பாள் மானிய விரிவுரைகளும் பிறவும் இவரின் ஆராய்ச்சித் திறனுக்கு உரைகற்களாக விளங்குகின்றன.

தாயகத்திலும் புகுந்த இடத்திலும் இவர் தமிழ், சைவசித்தாந்தம், வரலாறு, கலைகள் முதலியவற்றில் பல விரிவுரைகளும், சொற்பொழிவுகளும் நிகழ்த்தியுள்ளார். இவற்றுள் 1951ஆம் ஆண்டு பரமேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் விழாவிற்கு, வரவேற்புச் சபைத் தலைவராயிருந்து, விழாவை சிறப்புற நடாத்துவதற்கு இவர் பேருதவி புரிந்தார். இவ்விழாவிலே இலங்கையிலிருந்தும் பல அறிஞர்களும், பிறரும் பங்குபற்றினர். இவ்விழாவின் சிறப்புகளை கல்கி அவர்கள் தெய்வதரிசனம் எனும் நூலில் விரிவாகக் கூறியுள்ளார். திரு. நடேசப்பிள்ளையின் வரவேற்புரை பற்றி செந்தமிழ்ச் சொற்களைக் கொண்டு இலக்கண வழுவில்லாத வாக்கியங்களை அமைத்து அவர் ஆற்றியுள்ள வரவேற்புரை அழகிய நல் முத்துக் கொண்டு யாத்துத் தமிழ் அன்னைக்குச் சூட்டிய ஆரமாக மிளிர்ந்தது. எனக் கூறியிருப்பது நன்கு கவனித்தகற்பாலது.

மேலும் இவர் ஒரு ஆக்கக் கவிஞர் ஆவர். 1930ஆம் ஆண்டு இவர் இயற்றிய இராமநாதன் கல்லூரிப் பாட்டுக் குறிப்பிடற்பாலது. இலங்கைக் கல்லூரியின் நிறுவுனர். இலட்சியங்கள், மாணவர்களின் சிறப்பு, முதலியன இதில் நன்கு புலப்படுகின்றன.
"பொன் இலங்கைத் திருநுதலாய் பொலிவது யாழ்ப்பாணம்"
"பண்மிழற்றும் பாவையர்கள் பரமனது பதம் பாடி விண்களிக்கச் செயும் கீர்த்தி விர குடைத்திக் கல்லூரி"

ஈழத்தைக் காத்திவ்விரு நிலத்தைத் தன்
புகழாற் சூழ்ராமநாதன் கல்லூரி - வாழியவே
தாவிலுமித்தண்ணளி மாவலி கங்கை
மணலினும் மிகவே" எனவரும் பகுதிகள் கல்லூரியின் சிறப்புக்களை மண்வாசனையுடன் புலப்படுத்தப்படுகின்றன. இதுபோன்ற தனிப்பாடல்களை விடச் சகுந்தலை வெண்பா பல சிறப்புக்களும் பொருந்தியதாகும். வடமொழியிலே சிறந்த புலவரும், நாடகாசிரியருமான காளிதாசர் எழுதியுள்ள மிகச் சிறந்த அபிஜ்ஞான சகுந்தலை நாடகத்தை எளிமையான தமிழ் வடிவிலே வெண்பா யாப்பிலே காப்பியமாக எழுதியுள்ளார். இது பொதுவாக ஒரு மூல நூல் போலவே விளங்குகின்றது. இந்நூலிலே நூலாசிரியர் தமது மாமனாராகிய சேர். பொன். இராமநாதனை திரையோ

தஞ்சூழ்ந்தொலிக்குந் தென்னிலங்கை காக்கும் துரை ராமநாதன் கீர்த்தி -பரவும் புலமல்லாம் சென்றதே பூமடந்தை போற்றும் குல மன்னன் தண்ணளிச் செங்கோல் எனப் புகழ்ந்துள்ளார். இந்நூல் அண்ணாமலைப் பல்கலைக்கழக த்தில் அதன் துணை வேந்தர் சேர். சி. பி. இராமசுவாமி ஐயர் தலைமையில் வெளியிடப் பட்டது. "தமிழ்க் கவிதையில்காணப்படும் மிகச் சிறந்த அம்சங்களும், சமஸ்கிருத கவிதையிலும் புலப்படும் சொன்னயம். தவனியும் குறிப்பாக புலப்படுத்தலும் இதில் நன்கு இணைந்து விளங்குகின்றன. என அவர் தனது தலைமையுரையில் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

தமிழகத்தில் வெளிவந்துள்ள பல களஞ்சியக் குழுவில் ஓர் உறுப்பினராகவும் எழுத்தாளராகவும் திரு. நடேசபிள்ளை செயற்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தில் முன்னர் வெளிவந்த ஞாயிறு எனும் சஞ்சிகையில் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். வேறு சில சஞ்சிகைகள் பிரசுரங்களிலும் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

இராமநாதன் கல்லூரி வளாகத்திலே சேர். பொன். இராமநாதன் அமைத்து வாழ்ந்து வந்த அதே இல்லத்தில் மருகராகிய இவரும் வாழ்ந்து குறிப்பாக தமிழ் இலக்கியம், சைவ சித்தாந்தம், நுண்கலைகள் பற்றிய கலந்துரையாடல்களையும், சொற்பொழிவுகளையும் இலங்கை, இந்தியா அறிஞர்கள் ஒருசாராரோடு சேர்ந்து நடத்தியுள்ளார். இதில் ஈடுபாடுள்ள பலர் அங்கு சென்று நன்கு பயன் அடைந்தனர். இவர் சிறப்பாக தமிழ் இலக்கியம், சைவசித்தாந்தம் முதலிய துறைகளிலே மிக புலமைவாய்ந்தவர். இலங்கைப் பல்கலைக்கழகத்திலே முதலாவது தமிழ்ப் பேராசிரியராக விளங்கிய சுவாமி விபுலாநந்தர் காலமாகிய பின் அவருடைய வாரிசாக இவரை நியமிக்க ஒருசாரார் விரும்பியதாகவும், ஆனால் அம் முயற்சி வெற்றி அளிக்கவில்லை எனவும் அறியப்படுகின்றது.

இவர் பரமேஸ்வராக் கல்லூரியிலே ஆசிரியராகவும், சிறப்பான அதிபராகவும் பல்லாண்டுகள் நற்பணிகள் செய்துள்ளார். இக்கல்லூரியினதும், இராமநாதன் கல்லூரியினதும் முகாமையாளராகப் பல்லாண்டுகளாக விளங்கி, அந்நிறுவனங்களின் மேம்பாட்டுக்காகச் செயற்பட்டார். வடமாகாண அதிபர்களின் சங்கத் தலைவராகவும் திகழ்ந்தார்.

இவர் கல்விக்கே கூடுதலான பெரும் பணிகள் செய்துள்ளார் என ஒரு சாரணர் கருதினாலும், அரசியல், குறிப்பாக தமிழ், சைவசித்தாந்தம், வரலாறு, நுண்கலைகள் முதலியவற்றிக்கு இவர் ஆற்றியுள்ள பணிகளைக் குறைத்து மதிப்பிட முடியாது.

தனிப்பட்ட வகையில் இவர் அனைவருக்கும் உதவி செய்யும் மனப்பாங்கு கொண்டவர். எப்பொழுதும் தூய வெண்ணிற ஆடையும், தலைப்பாகையும் தரித்து ஓர் உதாரண தமிழ்ப் பெருமகனாக விளங்கினார். தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த பேச்சாளர். இவர் அரசாங்க சபையிலும், பாராளுமன்றம், மேல் சபையிலும் ஆற்றிய பேச்சுக்களை சமகாலச் சிங்களம், தமிழ் அரசியல்வாதிகளும், அறிஞர்களும் பாராட்டியுள்ளனர். எவ்வகையான அசைவுமின்றி தமிழிலும், ஆங்கிலத்திலும் தெளிவான நீரோட்டம் போல இவரின் பேச்சுக்கள், சொற் பொழிவுகள் அமைந்து காணப்படும் இவ்விரு மொழிகளிலும் மிகவும் செம்மையான எழுத்தாற்றலும் இவரிடம் நன்கு காணப்பட்டது.

இவ்வாறு பல துறைகளிலும் தனித் சிறப்பான தகைமை வாய்ந்து விளங்கிய இவர் சேர். பொன். இராமநாதனின் வாரிசாக மூன்று தசாப்பதங்களுக்கு மேலாக நன்கு போற் றத்தக்க பயனுள்ள சேவைகள் புரிந்துள்ளார்.

தோன்றிற் புகழோடு தோன்றுக அப்பதிலர்
தோன்றிலிற் தோன்றாமை நன்று எனும்

திருவள்ளுவர் திருவாக்கிற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இவர் இலங்கினார். இவரு டைய பல்வேறு சேவைகளைப் பாராட்டிப் பல நிறுவனங்கள் இவரைக் கௌரவித்தன. இவற்றிலே தமிழகத்திலுள்ள திருவாவடுதுறை ஆதீனம் முதலியன குறிப்பிடப்பாலன. எல்லா வற்றிற்கும் மேலாக இலங்கைப் பல்கலைக் கழகம் கௌரவ இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கி இவரை நன்கு கௌரவித்தது.

இவருடைய இல்லற வாழ்வும் சிறப் பாக விளங்கிற்று. சேர். பொன். இராமநாதன் அவர்களின் தவப்புதல்வி சிவகாம சுந்தரியைத் திருமணம் செய்தார். தம்முடைய அருமை மனைவியார் சென்னைப் பல்கலைக்கழகத்தில் இசை கற்க வாய்ப்புகள் செய்தார். அப் பல்க லைக்கழகத்தில் இசைப்பட்டங்கள் பெற்ற முதலாவது இலங்கையர் இவரே. பொதுவாகத் தாம் செல்லும் இடங்கள் தோறும் பாரியா ரையும் கூட்டிக் கொண்டு செல்வார். இறுதி யாக அவர் நோய்வாய்ப்பட்ட போது அவர் அருகிருந்து இறுதிவரை அவரை நன்கு கவனித்துவந்தார். அவர் அமரராகி நான்கு மாதங்களில் இவரும் அவருடன் அமரரானார்.

இவருடைய சைவசமயப் பற்றும் அனுஷ்டானங்களும் நன்கு குறிப்பிடத்தக் கவை. ஏற்கனவே குறிப்பிட்டவாறு தமிழகத் தைச் சேர்ந்த பிரபல தமிழ், சைவக் குடும்பத் திலே பிறந்த இவருக்கு இயல்பாகவே தமிழி லும், சைவசமயம், சைவசித்தாந்தம் ஆகியவற் றிலே மிகுந்த புலமையும், பற்றும் கொண்டி ருந்தார். மேலும் அவர் திருமணம் செய்த குடும்பமும் இவற்றிலே மிகுந்த பற்றுள்ளவர் கள். நாடோறும் காலையிலே துயிலெழுந்து பின்னர் நீராடி சிவபூசை செய்த பின்னரே அன்றா செயற்பாடுகளை இறுதிவரை கவனித்து வந்தார்.

இவ்வாறு திரு. சு. நடேசபிள்ளை அவர் கள் பலவழிகளில் நினைவுகூரத்தக்க பெரியா ராகத் திகழ்கிறார். கண்ணும், கருத்துமாக அவர் போதித்து வளர்த்த இராமநாதன் கல்லூரியும், அவர் நிறுவிய இராமநாதன் நுண்கலைக்கழகமும், இவருடைய முன் னோடிச் செயற்பாடுகளைத் தொடர்ந்து நிறுவப்பட்ட யாழ்ப்பாணம் கல்கலைக் கழகமும் இவரை நினைவு கூருதல் சாலவும் நன்று.

# மீயறிகையும் எழுதும் முயற்சியும்

**பேராசிரியர் சபா. ஜெயராசா**
தலைவர்
கொழும்பு தமிழ்ச்சங்கம்
கொழும்பு.

"மீயறிகை" (METACOGNITION) என்பது நவீன கல்வி உளவியலில் ஒரு முக்கியமான எழு பொருளாகவுள்ளது. ஒருவர் தாம் கற்றுக் கொள்ளும் விதத்தையும் நிலையையும் தாமே அறிந்து கொண்டு அதனை நெறிப்படுத்திச் செல்லல் மீயறிகைச் செயற்பாட்டில் அடங்கும். அதாவது தமது உளச் செயல் முறையைத் தாமே அறிந்து கொள்ளலும் வழிப்படுத்திக் கொள்ளலும் வினைத்திறன் மிக்க கற்றலில் அதிக முக்கியத்துவம் பெறுகின்றது.

தாம் கற்பதைத் தாமே அறிந்து கொள் ளல் ஒரு முக்கியமான செயற்பாடாகின்றது. கற்றல் நிலையில் ஒருவர் தான் எங்கே நிற்கின் றார் என்பதைப் புரிந்து கொள்ளும் பொழுது தமக்குரிய ஆற்றலையும் மட்டுப் பாடுகளை யும் அறிந்து முன்னேற்றத்தைத் திட்டமிட முடியும்.

ஒருவர் தம்மைத் தாமே நெறிப்படுத்திக் கற்றுக் கொள்ள நவீன கல்வி உளவியல் முக்கியத்துவப் படுத்துகின்றது. கற்றலில் வெற்றி பெறுவதற்கு மீயறிகை ஒரு சிறப் பார்ந்த செயற்பாடாக இருத்தலை கட்டுமை இயல் (CONSTRUCTIVISM) உளவியல் வலியுறுத்துகின்றது.

ஒருவர் தாம் கற்கும் ஒவ்வொரு பாடத் திலும் மீயறிகையைப் பயன்படுத்திக் கொள் ளும் பொழுது வேகமாக முன்னேற்றம் பெற முடியும். அதனால் பாடங்களைக் கற்போ ருக்கு மட்டுமன்றி, கற்பிப் போருக்கும் அது பற்றிய அறிவு அவசியமாகின்றது.

கற்கும் விடயத்திலே கவனம் செலுத்து தல், ஊக்கல் கொள்ளல், கிரகித்தல், விளக்கம் கொள்ளல், நினைவில் வைத்தல், பிரயோகித் தல் என்ற அனைத்துச் செயற்பாடுகளையும் முன்னேற்றகரமாக மேற்கொள்வதற்கு மீயறிகை துணை செய்தவண்ணமிருக்கும். கிரகித்துக் கேட்டல், பேசுதல், வாசித்தல் எழுதுதல் என்ற செயற்பாடுகள் ஒவ்வொன்றிலும் வினைத் திறனை மேற்கொள்வதற்கு அது கை கொடு த்து உதவும்.

மீயறிகையை வளர்த்துக் கொள்ளல் கற் றலை வளர்த்துக் கொள்ளலாகின்றது. பெரும் பாலான கற்றல் கேட்டலில் இருந்தும் வாசித் தலில் இருந்தும் மேலெழுகின்றது. ஊன்றிய அவதானம் அந்த இரு செயற்பாடுகளிலும் முக்கியமானது. தமது கவனம் எவ்வாறு இருக்கின்றது கிரகித்தலின் இயல்பு எத்தகைய நிலையில் உள்ளது, என்பவற்றைத் தாமே அறிந்து கொண்டால் தமக்குரிய மட்டுப்பாடு

எழுதல் வகைப்படுத்தலுடன் இணைந் துள்ளது. குவிந்து நிறைந்துள்ள தகவல் களையும் தரவுகளையும் பொருத்தமான வகைப்பாட்டினுள் கொண்டு வரும் செயற் பாட்டினையும் உள்ளம் மேற்கொள்கின்றது.

எழுதும் இலக்கைத் தெளிவாக மனதில் இருத்தி செயற்பாடுகளை முன்னெடுத்தலும் மீயறிகை நுட்பத்தின் பிறிதொரு பரிமாண மாக அமைகின்றது. எழுதுபவரின் தற்போ தைய நிலை என்ன என்பதும் மேலும் எவ்வாறு மேம்பாட்டுக்கு இட்டுச் செல்ல வேண்டும் என்பதும் மீயறிகை நுட்பத்தில் உள்ளடங்கு கின்றன. ஓர் எழுத்தாக்கத்தின் சிறப்பு அதனோடு தொடர்புபட்டு நிற்கும்.

ஓர் எழுத்து வடிவம், தொடக்கம், வளர்ச்சி, நிறைவு என்ற பரிமாணங்களைக் கொண்டிருக்கும். அவற்றுக்கிடையே உள்ளா ர்ந்த தொடர்ச்சி காணப்படும். தொடர்ச்சி யின் செயற்பாடுகளின் ஊடே உளநிலை மதிப் பீடுகளைச் செய்து கொண்டிருத்தல் முக்கிய மானதொரு உளச் செயல்முறையாகக் கருதப் படுகின்றது.

பொறிமுறையாகத்திருத்தங்களை மேற் கொள்ளல் உள்ளத்தால் நிகழ்த்தப்படும் மேலோ ட்டமான செயற்பாடாகும். ஆழ்ந்த ஈடுபாட் டுடன் திருத்தங்களை மேற்கொள்ளும் நடவடிக்கை மீயறிகையுடன் தொடர்பு டையது. அது எழுத்துருவாக்கத்தின் விளை வைப் பிரக்ஞை பூர்வமாக நோக்குதலுடன் இணைந்தது.

மீயறிகை என்பது பல தளங்களைக் கொண்டது. ஆரம்பநிலையிலிருந்து மிகவு யர்ந்த நிலைகளை நோக்கி அது வளர்ந்து செல்லும். மேலோட்டமாக நோக்குதல் ஆரம்ப நிலையாகும். திறனாய்வுடன் ஆழ்ந்து நுணுகி நோக்குதல் உயர்ந்த நிலை மீயறிகையாகும். எழுதுதல் என்பது "அறிவை எடுத்தியம்பும் செயல்முறை" (KNOWLEDGE TELLING PROCESS) என்று கூறப்படுகின்றது. புனைவு எழுத்தாக்கங்கள் அறிவை அழகுற எடுத்தி யம்பும் செயல்முறையாக அமையும். அது ஒவ்வொருவரதும் ஆளுமையுடன் தொடர் புடையது. அந்த ஆற்றல் பிறப்பினால் அன்றி கல்வியாலும் பொருத்தமான அனுபவங் களினாலும் வளர்த்தெடுக்கப்படக்கூடியது.

எழுதும் செயற்பாடு திட்டமிடுதல் மற்றும் செயற்படுத்தல் என்ற இரு பரிமாணங் களைக் கொண்டது. திட்டமிடுதல் வரன் முறை யாகவும் நிகழ்த்தப்படலாம். வரன் முறை சாராது மனத்தினால் நிகழ்த்தப்படலாம்.

திட்டமிடலை முக்கியப்படுத்தாது எழுதும் செயற்பாட்டிலே மட்டும் கவனம் செலுத்துதல் கூடுதலான மீளாய்வுக்கு இட்டுச் செல்லும் நடவடிக்கையாக அமையும்.

கட்டுமை உளவியலின் அண்மைக்கால த்தைய வளர்ச்சி மீயறிக்கைச் செயற்பாட்டுக்கு அதிக முக்கியத்துவத்தை வழங்கத் தொடங்கி யுள்ளது. அறிவை மனதிலே பதித்து வைப்பதி லும், எடுத்தியம்புதலிலும் ஒருவர் இயந்திரப் பாங்காகவோ பொறிமுறையாகவோ செயற் படுதல் இல்லை. அவை ஒவ்வொன்றும் சிக்க லான உளத் தொழிற்பாடுகளுடனும் உள் ளார்ந்த திறனாய்வுக் கோலங்களுடனும் இணைந்து நிற்கும்.

முன்னைய அறிவுத் திரட்டும் பின் னைய அறிவின் சேர்க்கையும் ஒன்றிணைந்து

களை நீக்கி வேகமான கற்றலை முன்னெடுக்க முடியும்.

எழுத்துச் செயற்பாடு கற்றலிலும், கருத்து வெளிப்பாட்டிலும் முக்கியமானதாகும். எழுதுதல் ஒரு சிக்கலான செயற்பாடு. அறிவைத் தொகுத்துப் பயன்படுத்துதல், தெரிந்தெடுத்துப் பயன்படுத்துதல், தருக்க நிலையிற் பயன்படுத்துதல், உணர்ச்சி நிலையிற் பயன்படுத்துதல், புத்தாக்க நிலையிற் பயன்படுத்துதல், பிரச்சினை விடுத்தலில் பயன்படுத்துதல் முதலிய செயற்பாடுகளுடன் எழுதுதல் தொடர்புடையது.

எழுதுதல் ஒவ்வொருவரதும் வாழ்க்கையிலே முக்கியத்துவம் பெற்ற செயற்பாடாகவுள்ளது. எழுதுதல் இரண்டு பரிமாணங்களைக் கொண்டது.

(அ) எழுதும் செயல் முறை (PROCESS)
(ஆ) எழுத்தின் வழியாக மேலெழும் உற்பத்தி அல்லது விளைவு (PRODUCT)

மேற்கூறிய இரண்டினுக்குமிடையே தொடர்புகள் உண்டு. எழுதும் செயல் முறையில் ஒருவருக்குரிய மொழியறிவு, தமக்குரிய சொற்களஞ்சியத்திலிருந்து சொற்களைத் தெரிந்தெடுக்கக் கூடிய ஆற்றல், எழுதும் பொழுது நிகழ்ந்து கொண்டிருக்கும் மீயறிகைத் தொழிற்பாடு முதலியவை முக்கியத்துவம் பெறுகின்றன. எழுத்தாளர்களைப் பொறுத்தவரை இந்தச் செயற்பாடு எழுத்தின் ஆளுமையைத் தீர்மானிப்பதாக அமையும்.

எழுத்தின் விளைவு அது ஏற்படுத்தும் தாக்கங்களையும் செல்வாக்குகளையும் பொறுத்தது. கூறும் முறைமையும் தெரிந்தெடுக்கப்பட்ட பொருளின் வீரியமும் விளைவைத் தீர்மானித்தலிலே செல்வாக்குச் செலுத்தும்.

எழுதியவற்றை மீள்நோக்கித் திருத்தங்களை மேற்கொள்ளும் செயற்பாடு மீயறிகையுடன் தொடர்புடையது. அறிவு பூர்வமான விழிப்புணர்ச்சியை மீயறிகை ஏற்படுத்துகின்றது. நெறிகை செய்தல், கட்டுப்படுத்துதல், ஒழுங்கமைத்தல் என்ற மூன்று முக்கிய செயற்பாடுகள் மீயறிகை நிலையிலே தொழிற்படும். நெறிகை செய்தல் திட்ட மிடலுடனும், எழுதுதல் கட்டுப்படுத்துதலுடனும், ஒழுங்கமைத்தல், நிறைவான ஆக்கவடிவுடனும் தொடர்புடையவை தம்மைத் தாமே சுயமதிப்பீடு செய்தலும் மீயறிகையுடன் தொடர்புடையது. தன்னிலை மதிப்பீடுகளின் வழியாக தான் சிறந்த ஆக்கங்கள் மேலலெழ முடியும்.

மீயறிகைச் செயற்பாடு பல்வேறு பரிமாணங்களைக் கொண்டது. செயற்பணியை விளங்கிக் கொள்வதிலிருந்து அது ஆரம்பிக்கின்றது. செயற்பணி (TASK) யின் விளக்கம் அதனை முன்னெடுத்துச் செல்வதற்கு அடிப்படையானதாகும். எழுதுதலின் தேவைபற்றிய உற்றுணர்வும் அதனோடு தொடர்புடையது. அந்நிலையில் உள்ளத்திலே ஒரு முக்கியமான செயற்பாடு நிகழ்கின்றது. அதாவது எழுதும் தகவல்களை இசைவாக்கி அமைத்தல் என்று குறிப்பிடப்படும். அதனோடு இணைந்த செயற்பாடாக சுய நெறிப்பட்ட கோடலாக்கம் (CODING) நிகழும்.

எழுதும் செயல் முறையிலே பன்முகப்பட்ட உளச் செயற்பாடுகள் ஒன்றிணைந்து கொள்கின்றன. ஓர் எண்ணக் கருவிற்குப் பதிலீடாக அமையும் வேறு எண்ணக் கருக்கள் விரைவான தெரிவிற்கு உள்ளாக்கும் செயற்பாட்டை மூளை மேற்கொள்கின்றது. அந்தத் தெரிவின் வெற்றி ஆக்கத்தின் வெற்றியை நோக்கி நீட்சி கொள்ளும்.

தொடர்ச்சியாக உளக் கட்டுமானத்தை உருவாக்கிக் கொண்டிருக்கும். கற்பவரே கட்டுப்படுத்துதலிலும் நெறிப்படுத்திக் கொள்வதிலும் தனித்துவமானவராக விளங்குதல் கட்டுமை உளவியலிலே விளக்கப்படுகின்றது. உள்ளே செலுத்தப்படும் தகவல்கள் ஒருவரது உள இயல்புக்கு ஏற்றவாறே உள்வாங்கப்படும். அவ்வாறே ஒருவருக்குரிய மீயறிகைச் செயற்பாடும் அவரது உளவியல்புக்கேற்றவாறு உருவாக்கம் பெற்ற வண்ணமிருக்கும் நவீன கட்டுமையியல் (CONSTRUCTIVISM) மீயறிகையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது. தமக்குரிய அனுபவத்தளத்தை அடியொற்றியே ஒவ்வொருவரும் புதிதாகக் கிடைக்கும் அறிவைக் கட்டுமை செய்கின்றனர். அதாவாது அறிவு என்பது ஒவ்வொருவரதும் உள இயல்புக்கு ஏற்றவாறே உள்ளத்தில் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றது. உள்ளத்திலே பொருண்மை கொண்ட பிரதிநிதித்துவப் படுத்தலை மேற்கொள்வதற்கு மீயறிக்கைச் செயற்பாடுகள் துணைசெய்வதாக அமையும். கட்டுமை நிலைக் கற்றலும் கற்பித்தலும் அறிவைக் கட்டுமை செய்யும் செயல் முறைக்குரிய அனுபவங்களை ஒழுங்கமைத்தலிலே கூர்ந்த கவனம் செலுத்துகின்றன. கற்றலை வளம் படுத்தலிலே மீயறிகைச் செயல்முறையைத் தொடர்புபடுத்தி நோக்குதல் கட்டுமையியலில் வலியுறுத்தப் படுகின்றது.

கற்றல் என்பது கிடைக்கப்பெறும் தகவல்களைப் பொறி முறையாக நெட்டுருச் செய்து உள் வாங்குதலை மட்டும் கருத்திலே கொள்ளல் அன்று. அறிவைக் கட்டுமை செய்தலிலே மேற்கொள்ளப்படும் கவனக் குறிப்பே நவீன கற்பித்தலில் முன்னெடுக்கப் பட்டு வருகின்றது. அத்தகைய முன்னெடுப்பு மீயறிகை செயற்பாடுகளைச் தூண்டும் தந்திரோபாயங்களுடனும் உற்றறியும் நுட்பங்களுடனும் தொடர்புடையது.

கற்கும் செயற்பாட்டை மீயக்கையுடன் இணைந்த வினைப்படும் நடவடிக்கையாக மாற்றும் நுட்பங்கள் கற்பித்தலிலே முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளன. அந்தச் செயற்பாட்டிலே கற்போரின் பன்மை நிலைகளும் கருத்திலே கொள்ளப்பட வேண்டியுள்ளது.

கற்றலை ஒரு வழிப் பாதையாக முன்னெடுத்துச் செல்லும் இறுகிய நிலையில் மாற்றங்களை முன்னெடுத்தல் நவீன கல்வியின் தேவையாகவுள்ளது. உலகின் அறிவுவீச்சோடு நாமும் நகர்ந்துசெல்லும் பொழுதுதான் தர மேம்பாடுகளை எட்டமுடியும். தரமேம்பாட்டிலே முக்கிய பரிமாணமாக அமையும் எழுதும் முயற்சி மீது ஊன்றிய கவனத்தை ஒன்றிணைந்து மேற்கொள்ள வேண்டியுள்ளது

REFERENCES


Cheek, D.W (1992)Thought ful Teaching, London, Chassell

Ching ,C.C (2001) Making Learing happen, (Online) Availalbe, URAL

Kizilik, B (2001) Tips on Becoming a Teacher, ADPRIMA. Com

Merrill, M.D (1992) Contructivism and Instructinal Design, Hillsdale, N.J. Lawrence Erlbum Associates

SAARC Journal of EducationalReseaarch (2008) v ol : 6. No 1 Colombo : NIE



# சமஸ்கிருத இலக்கியங்களில் காணப்படும் புராதன இந்தியரின் கேளிக்கைகள், திருவிழாக்கள்

**திருமதி ஸ்ரீகலா ஜெகநாதன்**
தலைவர், சமஸ்கிருதத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

புராதன இந்திய சமூகம் சிறப்பாகக் கொண்டாடும் விழாக்கள் கேளிக்கைகள் குறித்து புராதன வடமொழி இலக்கியங்களில் இருந்து அறிய முடியும். இந்திய ஆரியரின் முதல் இலக்கியமாகிய ரிக்வேதம், மனுதர்ம சாஸ்திரம், காமசாஸ்திரம், அர்த்த சாஸ்திரம், நாடகங்களான அபிக்ஞான சாகுந்தலம், மிருச்சகடிகம்போன்ற இலக்கியங்களிலிந்து சூதாட்டம், காமன் பண்டிகை, சோமபான விழா எனப்பல விழாக்கள் குறித்து நாம் தகவல்களைப் பெறக்கூடியதாயுள்ளது. செல்வரும், வறியவரும் வேறுபாடின்றி கலந்து கெண்ட இவ் விழாக்களில் இன்பக் கேளிக்கைகளும், ஊர்வலங்களும் சிறப்புக் கூறுபாடுகளாய் இருந்தன.

**விழாக்காலங்களைக் கொண்டாடப் பொது இடங்களில் கூடல்**

சரஸ்வதி கோயில் அல்லது விழாக் கோலங்காணும் பண்டிகை நாட்களில் நாகரீகக் குடிமகன்கள் அனைவரும் குறிப்பிட்ட இடத்தில் கூட வேண்டும் பாடகர்கள், நடன மணிகள், நாடகக் கலைஞர்கள், சான்றோர் பலர் அருகில் உள்ள ஊர்களிலிருந்து வந்து கூடுவார்கள். திறமைகளை ஊக்குவிக்கப் போட்டிகளும், பரிசுகளும் வழங்கப்பட்டன. இம்மாதிரி விழாக்கள் இருமாதங்களுக்கொருமுறை கூட்டப்பட்டன. சமூகத்திலுள்ள அனைவரும் இம்மாதிரிக் கூட்டங்களை நடாத்த தாராளமான நிதியுதவி செய்தனர். நாடு செழிப்பாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் இம்மாதிரி விழாக்கள் நடாத்தப்பட்டன. வெளியூர்களிலிருந்து இம்மாதிரி விழாக்களுக்கு வரும் அனைவருக்கும் குறிப்பாகக் கலைஞர்களுக்கு நாட்டு மக்கள் பெரும் ஆதரவு தந்தனர். அவர்களை ஊக்குவித்தனர். இந்த விதி எல்லா விழாக்களுக்கும் பொதுவானது.

**சோமபானவிழா (சோம பானகா)**

குடிமக்கள் நெருங்கிய நட்புறவுடன் ஒருவர் வீட்டிற்கு மற்றவர் போய்க் கலந்து பழகும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். இம் மாதிரிச் சமயங்களில் சோமபானம் பருகினர். எல்லா வகை மதுக்களையும் கலந்த சோம பானம் சுவையுள்ளது.

**தோட்ட விருந்து (உத்யான கமானா)**

அலங்காரமான அழகு நிறைந்த தோட்டம் விருந்து கொடுக்க ஏற்ற இடமாகும். இம் மாதிரித் தோட்டங்களுக்குப் பிரயாணமாக

பலரும் சேர்ந்து செல்வதே இனிய ஒரு அனுபவமாக அமையும். மதிய நேரமே இவ்விழாக்களை தொடங்க ஏற்ற நேரமாகும். பகல் நேரம் முழுவதும் விதம்விதமான பொழுது போக்குகளில் ஈடுபட வேண்டும். சதுரங்கம், தாயக்கட்டான், நடனம், நாடகம், விநோத விளையாட்டுக்கள், சேவல் - ஆட்டுக் கிடாய் சண்டைகள் போன்ற பல்வேறு கலைநிகழ்ச்சிகளில் ஈடுபட வேண்டும். மழை காலமாக இருந்தால் ஊஞ்சல் விளையாட்டுக் களையும், கோடை காலமாக இருந்தால் செயற்கைக் குளங்களில் நீச்சல் போட்டிகளை யும் நடத்தினார்.

இம்மாதிரித் தோட்ட விழாக்களில் கணிகையரான பொதுமகளிருக்கு குடிமக்கள் மலர்ச்செண்டு வழங்குதல், மாலைகளை இட்டு அவர்களை மகிழ்வித்தல் போன்ற இன்பப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். இம் மாதிரி நிகழ்வுகளில் இடப்படும் மாலைகள் அதே தோட்டத்தில் பூத்த மலர்களை கொண்டு தொடுக்கப்பட்டனவாய் இருத்தல் வேண்டும்.

**வேனில் விழா**

காதற் கடவுளாகிய காமன் பொருட்டு எடுக்கப்பட்ட வேனில் விழாவே (வசந்த விழா) பண்டைக்கால மக்களால் சாலவும் விரும்பிக் கொண்டாடப்பட்ட விழாவாகும். காமன் - மன்மதன் மக்களால் பெரிதும் நயக்கப்பட்ட தெய்வம். இவ்விழாக் காலத்தில் மக்கள் தம் சாதி வேற்றுமைகளை மறந்து, அயலவர்கள் மீது செஞ்சுண்ணம் வீசியும், நீர் விசிறியும் பல்வகை பகிடி விளையாட்டுக் களைப் புரிந்து திரிந்தனர். ரத்னாவளி என்னும் வட மொழி நாடகம் இவ்விழாவைப் பற்றி இனிதே எடுத்துக் கூறுகின்றது. இந்துக்கள் எல்லோருமே எல்லாக் கட்டுப்பாடுகளையும் மீறி இன்ப விளையாட்டில் ஈடுபடும் ஒரு களியாட்டமாக இவ்விழா இருந்தது.

**யக்கூஷராத்திரி - (தீபாவளி திருவிழா)**

இந்தத் தீபாவளி நாளில் மக்கள் தங்கள் வீடுகளில் விளக்குகளை ஏற்றி வைப்பதுடன் இரவு முழுவதும் விழித்திருந்து சதுரங்கம், தாயக்கட்டான் போன்ற பல்வகை விளையாட் டுக்களில் ஈடுபட்டிருப்பர்.

**சககாரா பாஞ்சிகோ (மாம்பழவிழா)**

இந்த விழாவின் போது மாந்தோப்பில் புகுந்து மாம்பழங்களை மக்கள் மனம் மகிழ வாய் இனிக்க உண்ணுவர்

பிசகாதிகா (தாமரைத் தண்டு திருவிழா)

சித்திரை மாதத்தில் பொதுமக்கள் குளங்கள், ஆற்று நீர்ப்பகுதிகள் ஆகியவற்றில் தாமரை மலர்ந்திருக்கும் இடங்களுக்குச் சென்று தாமரைத் தண்டுகள், மலர்கள் ஆகியவற்றைப் பறித்து பயன்படுத்துவர்.

**கடம்பாயுத்தா (கடம்பமலர் விழா)**

இந்த விழாவின் போது கடம்ப மரங்களில் மலரும் மலர்களால் மாலை தொடுத்து அவற்றைத் தங்கள் மனதிற்கு இனியவர்களுக்கு அணிவித்து மகிழ்ந்தனர்.

**கௌமுதினாகாரா (பௌர்ணமி நிலவு நாள்)**

பௌர்ணமி நாட்களில் இரவு முழுவதும் விழித்திருந்து, நிலவின் அழகை ரசிப்பதுடன் பல்வகை அன்னங்களை தயாரித்து, முழு நிலவின் ஒளியில் கூடி உண்பர். பால், சர்க்கரை, தேன், வெண்ணெய் கள் போன்றவற்றைக் கொண்டு இனிப்புக் களைத் தயாரித்தும் தாங்களும் உண்டு மகிழ்வார்கள்

**உதகாக்ஸவேதிகா (தண்ணீரால் விளையாடும் விழா)**

ஒருவர் மீது ஒருவர் வண்ணத் தண்ணீர்களை தெளித்துக் கொள்ளும் இனிய விழா இது.

**நவபத்ரிகா**

பொதுமக்கள் இந்த விழாச் சமயங்களில் பொதுத் தோட்டங்களுக்குச் சென்று அங்கு மலர்ந்தும் அரும்பியும் இருக்கும் பல்வகைப் பூக்களைப் பறித்து தங்கள் செவியில் அலங்காரமாக அணிவார்கள்.

**சூதாட்டம்**

பண்டைய ஆரியரிடத்தில் பெருவழக் காயிருந்த கேளிக்கைகளில் ஒன்றாகும். இருக்கு வேதத்தில் வரும் 'சூதன் இரங்கல்' பண்டைய ஆரியரிடத்தில் சூதாட்டம் பெரு வழக்காய் இருந்தமைக்குச் சான்றாகும். சூதாடியொருவன் தன்தாய், மனைவி மக்கள் யாவரும் கைவிட்ட நிலையில் பாடுவதாய் அமைந்த வட மொழிச் செய்யுளொன்றின் மொழி பெயர்ப்பு வருமாறு.

"இல்லீன்றாளு மென்னை வெறுப்ப
இல்லாடானும் எள்ளி விலக்க
அல்லல் துடைப்போர் யாரு மில்லேன்
உழைத் திளைத் தோய்ந்த மாவொப்ப
கவற்றொடு படியெனக் கைவிட்டனரே"

அரசனுடைய மங்கலச் சடங்கிலே சூதாட்டமும் இடம் பெற்றது. அரசனது அரண்மனையின் ஒரு பகுதியாக அமைந்த சூதாடு மண்டபம். ஒருவகை மந்திரச் சிறப்பு, சமயச்சிறப்பு வாய்ந்ததாக கருதப்பட்டது மகாபாரதக் கதை பெரும் சூதாட்டத்தைக் கருவாகக் கொண்டது. இச் சூதாட்டத்தில் தருமர், துரியோதனன் என்னும் கொடி யோனுக்கு தன் அரசைப் பலி கொடுத்தான். சூது கண்டிப்பாக கடியப்பட வேண்டும் என்று அர்த்தம் சாஸ்திரம் கூறுகிறது.

பொதுவாக நல்லதொரு குடிமக்க ளாயும், பணமும், வசதியும் மிக்கவர்களாய் இருப்பவர்கள் மேற்குறிப்பிட்ட எல்லா நிகழ் ச்சிகளிலும் பங்கு பெறுவதுடன், மற்றவர் களால் மதிக்கப்படுவதற்காக பல விழாக்களை கொண்டாட காரண கர்த்தாக்களாயும் இருக்க வேண்டும். பிதாமர்தா என்பவன் பொருள் வசதி இல்லாதவன். வெளி மாநிலத்தில் இருந்து உள்ளூருக்கு வரும் இவன், பலவித கலைகளில் தேர்ச்சி பெற்றவனாய் இருப்பான். பொது மக்களுக்கும் பொதுப் பெண்களுக்கும் 64 கலைகளையும் கற்பிப்பவர் இந்தப் பிதாமர் தான். இம்மாதிரி பல கலைகளைக் கற்பித்துக் கொடுத்தே தன் வாழ்க்கைக்குத் தேவையான பொருளை ஈட்டுவான். சமஸ்கிருத நாடக இலக்கியங்களில் வரும் விதூஷகன் என்பான் கோமாளித்தனங்களால் எல்லாரையும் சிரிக்க வைப்பான்.

64 கலைகளிலும் முழுத்தேர்ச்சி பெறாத இவன் பிரிந்திருக்கும் ஜோடிகளை இசை, தந்திரம், மாஜா ஜாலம் என்பவற்றால் சிரிக்க வைப்பான், பிறகு அவர்களை ஒன்று சேர்ப்பான். இவன் இம்மாதிரி விழாக்களில் கலந்து கொள்வான். பொதுமக்களால் பாராட் டும், பரிசும், பொருள்களும் பெற்று இவன் தன் வாழ்நாளைக் கழிப்பான்.

இளைஞர்கள் நல்வழி நடக்கச் செய்து சமூகத்திற்கு உதவியாக இருக்கச் செய்ய இத்தகைய விழாக்கள் உதவின. நல்லதொரு குடிமகன் இவ் விழாக்களில் பங்கு பற்றி பொதுமக்களின் குறைகளைக் கேட்டறிந்து தேவையான உதவிகளைச் செய்து தான் புகழ் பெறுவதுடன் பொதுமக்களின் நலனுக்கும் உதவி புரிந்தான்.



# நிதி நெருக்கடியும் உலகப் பொருளாதாரத்தில் அதன் விளைவும்

# Financial Crisis and its Impact on World Economy

**பேராசிரியர் க. தேவராஜா**
தலைவர்,
வணிகத்துறை,
முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

## 1.0 அறிமுகம்:

இன்று உலக நாடுகளைப் பெரிதும் அச்சுறுத்தும் விடயமாக நிதி நெருக்கடி காணப்படுகிறது. நாடுகளுக்கிடையில் இடம்பெறும் நாணயப்போர், நாணயங்களில் ஏற்பட்டுவரும் பெறுமான வீழ்ச்சி என்பன எந்தவொரு உலக நாட்டிற்கும் அச்சுறுத்தலாகவே உள்ளன. இன்றைய உலகில் ஒரு நாட்டிற்கு ஏற்படும் தாக்கம் தொடராக மற்றைய நாடுகளையும் பாதிப்புள்ளாக்குவதனால் சர்வதேச நிதி நெருக்கடியும் அதனால் ஏற்படும் பாதிப்புக்களையும் கண்டறிவது உலகப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியம் ஆகின்றது.

அரசியல், சமூக, பொருளாதார, கலாசார, சமய நடவடிக்கைகள் ஊடாக உலக நாடுகள் ஒன்றிணைந்து காணப்படுகின்றன. ஒவ்வொரு நாடும் தம் உற்பத்திகளை விற்பதற்காகவோ, தமது மத நம்பிக்கைகளை மற்றவர்களுக்குப் பரப்புவதற்காகவோ தமது ஆட்சி அதிகாரத்தினை விரிவு படுத்துவதற்காகவோ, குடியேற்றங்களை விஸ்தரிப்பதற்காகவோ தொழில்நுட்ப அறிவினைப் பகிர்ந்து கொள்வதற்காகவோ, மற்றைய நாடுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்கின்றது. இன்று எந்தவொரு நாடும் தனித்தோ, அல்லது மூடப்பட்ட நிலையிலே இருக்க முடிவதில்லை.

ஏதோ ஒரு வகையில் ஒரு நாடு இன்னொரு நாட்டில் சார்ந்திருக்க வேண்டியதாகவே உள்ளது. 20ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலாண்டுப் பகுதியில் விருத்தியடைந்த உலக மயமாக்கற் செயற்பாடு பொருளாதார சார்பு நிலையை மேலும் வலுப்படுத்தியுள்ளது. உலக மயமாக்கம் பொருளாதார தொடர்புகளை வலுப்படுத்துவதோடு, உலக வர்த்தக விரிவாக்கத்தின் ஊடாக எல்லா நாடுகளும் நன்மையடைய முடியும் என அபிவிருத்தியடைந்த நாடுகளால் பரப்புரை செய்யப்பட்டது. இவ்வாறான வர்த்தக விரிவாக்கத்தின் ஊடாக நேரடி

யாகவோ, மறைமுகமாகவோ, வறிய, சிறிய நாடுகளும் நன்மைஅடைய முடியும் எனக் கருதப்பட்டது.

**2.0 நிதி நெருக்கடியின் அடிப்படை**

உலகமயமாக்கம் நேரடியானதும் மறைமுகமானதுமான முதலீட்டு வசதிகளை எல்லா நாடுகளுக்கும் விரிவுபடுத்தியுள்ளது. அவ்வாறான செயற்பாடுகளுக்குப் பொருத்தமான வகையில் பங்குச் சந்தைகள் உலகளாவிய ரீதியில் விரிவடைந்துள்ளன. ஒரு நாட்டின் குடிமகன் இன்னொரு நாட்டில் உற்பத்தித் துறைகளிலோ, அல்லது முதலீட்டுச் சந்தைகளிலோ பங்குகளை வாங்கி முதலீட்டு நடவடிக்கைகளில் தன்னைப் பங்குதாரராக இணைத்துக்கொள்ள முடியும். இவ்வாறான பொருளாதார செயற்பாட்டிற்கான வாய்ப்பு இருப்பதால் ஒரு நாட்டின் பொருளாதாரச் செயற்பாடோ அல்லது ஒரு பொருளாதார நிறுவனத்தின் செயற்பாடோ, அல்லது கடன்களை வழங்கும் வங்கிகளின் செயற்பாடோ, அல்லது தனிப்பட்ட ஒருவரது பங்குக் கொள்வனவு விற்பனைச் செயற்பாடோ அத்தகைய பொருளாதாரங்களில் தாக்கங்களை ஏற்படுத்தவல்லனவாகும்.

இவ்வாறான பின்னணிகளைக் கொண்ட இன்றைய உலகப் பொருளாதாரத்தில் ஒரு நாட்டில் ஏற்பட்ட பொருளாதாரப் பிரச்சினையின் விளைவை ஏனைய நாடுகளும் எதிர்கொள்ள வேண்டியதாய் இருந்தது. குறிப்பாக இன்றைய உலகளாவிய நிதி நெருக்கடிக்குக் காரணமாய் இருந்த அமெரிக்கப் பொருளாதாரப் பிரச்சினை அமெரிக்காவை மாத்திரம் பாதிக்கவில்லை. உலகின் எல்லா நாடுகளையும் பாதித்துள்ளது. இவ் ஆய்வுக் கட்டுரை அமெரிக்காவில் ஏற்பட்ட நிதி நெருக்கடிக்கான காரணங்களைக் கண்டறிவதோடு அதன் தாக்கம் அமெரிக்காவில் என்ன விளைவை ஏற்படுத்தியுள்ளது. ஏனைய உலக நாடுகளில் என்ன விளைவை ஏற்படுத்தியுள்ளது என்பதை ஆராய்வதாகவே இருக்கும்.

உலக மயமாக்கத்தின் நன்மைகளை எல்லாம் தன்னகத்தே உள்வாங்கக் கூடிய தான பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்குவதில் அக்கறை செலுத்திய நாடுகள் பல அமெரிக்கா பலம் பொருந்திய அரசியல் பொருளாதார வல்லாதிக்க நாடாக இருந்த வேளையில் 2006 இற்குப் பின்னர் துணை முதன்மை ஈட்டுக் கடன் நெருக்கடியோடு நிதி நெருக்கடிக்கு முகம் கொடுத்து பொருளாதாரம் மந்த நிலைக்குத் தள்ளப்பட்டது. இதன் பெறுபேற்றை எல்லா உலக நாடுகளும் உலக மயமாக்கம் என்பதன் வழியாகச் சேர்ந்து அனுபவிக்க வேண்டியதாயிற்று.

நிதி உலக மயமாக்கத்தின் விளைவுதான் இதுவா? என்ற வினா எழுகின்றது. நிதி நெருக்கடிகள் விரிவாகப் பரந்த அளவில் கடந்த நஎற்பது வருடங்களாக ஏற்பட்டுள்ளது. அவை பின் வருமாறு.

1) 1986 தொடக்கம் 1996 வரையிலான அமெரிக்காவின் சேமிப்பும் கடன்

வசதிகளும் நிதி நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

2) 1990 தொடக்கம் 1995 வரை இருந்த யப்பான் வங்கி நெருக்கடி இன்னொரு காரணியாகும்.

3) 1998 தொடக்கம் 1999 வரையான ஆசிய நிதி நெருக்கடி மற்றொரு காரணியாகும்.

4) 2007இல் அமெரிக்காவில் ஏற்பட்ட வீட்டுக் கொள்வனவுக்கு வழங்கப் பட்ட துணை முதன்மை ஈட்டுக்கடன் நெருக்கடி இதில் மிகப்பெரிய பாதிப் பைக் கொண்டுள்ளது.

5) அண்மைக் காலத்தில் உலகில் ஏற்பட்டிருக்கும் நாணயப்போர், (Currency War) குறிப்பாக அமெரிக்கா நாட்டினதும் சீன நாட்டினதும் நாணயப்போர் இன்னொரு நிலையாகும்.

இவை எல்லாவற்றிற்குமான நெருக் கடிகளுக்கு எல்லாம் அடிப்படை 1929 வருட பொருளாதார பெருமந்தம் எனக் குறிப் பிட்டால் அது மிகையாகாது.

இன்றைய அமெரிக்க நிதிப் பிரச் சினை வீட்டு விலைகளின் பொங்கு நிலையில் (Housing/bubble) இல் ஏற்பட்ட தாகும். இப் பொங்குநிலைக்கு அமெரிக் காவில் வீட்டுக் கொள்வன விற்காக வழங்கப்பட்ட துணை முதன்மை ஈட்டுக் கடன் வசதிகள்தான் அடிப்படைக் காரண மாயிற்று. கடன் பெற்றவர்கள் கடனை மீளச் செலுத்தும் வல்லமை குன்றிக் காணப்பட்ட போதும் அவர்கள் கேட்கும் கடனை வழங்குவதற்கு சாதகமான வகையில் வங்கிக் கட்டுப்பாடுகளை ஒழுங்காகப் பின்பற்ற முடியாத அளவிற்கு உத்தேச செயற்பாடுகளும் இலாபத்தை எவ்வழியிலன்றாயினும் பெற்றுவிட வேண்டுமென்ற போட்டியுடனான கடன் வழங்கற் செயற்பாடுகளும் இந் நிதி நெருக்கடியை விரிவாக்கியது.

கடன் கொடுப்போருக்கும் கடன் பெறுவோருக்கும் இடையில் கடனுக்கான துணைப் பிணைகளுக்கு அடிப்படையான மெய்ச் சொத்துக்கள் கடன் பத்திரங்கள் சாட்டுதல் பங்குகள் நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள் அவர்களின் உத்தரவா தங்கள் நிறுவனக் காப்புறுதி வசதிகள் ஈட்டுக் கடன் வழங்குவோரை மிகையள வில் செயற்பட வைத்தது.

முதன்மை ஈட்டுச் சந்தையில் கடன் வழங்கு நடவடிக்கைகள் மிக ஆரோக்கி யமான அமெரிக்க உற்பத்தி வளர்ச்சி யுடன் 1990 மத்தியில் இருந்து ஏற்பட்டது. அதற்குப் பண வீக்கம் தவிர்ந்த நிலையில் 1974 - 1995 காலப்பகுதியில் சராசரியாக வருடம் ஒன்றிற்கு 1.4 % வளர்ச்சி என்பது 1996 தொடக்கம் 2007இல் 2.5 % விரைவான வளர்ச்சியினை எட்டியதால் கடன் வழங்கலுக்கான சாத்தியத் தன்மை அதிகரித்துக் காணப் பட்டது.

இதனால் வீடுகளிற்கான கேள்வி அதிகரித்தது. U.S வீட்டுச் சந்தைப் பெறுமதி $20 Trillion ஆக இருக்கும் போது வீட்டு நிர்மாணத் தொழில் $13 Trillion அளவை எட்டியிருந்தது. வீட்டுத்துறைச் செல்வம் $45 Trillion ஆகவும் அதில் துணைமுதன்மை ஈட்டுக்கடன் செல்வம் $6.5 Trillion ஆகவும் வீட்டு ஈட்டுக் கடன் $10 Trillion ஆகவும் அதில் துணை முதன்மை $2.5 Trillion அது 25 வீதமாகவும் காணப்பட்டது. இந் நிலையில் சராசரி வீட்டு விலை அதிகரிப்பு 40 வீதமாகவும் இருந்தது. இந் நிலையில் 2000-2006 சராசரியாக ஒரு வீட்டின் விலை $234400 ஆக இருந்தது.

### 3.0 நிதி நெருக்கடி அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் ஏற் படுத்தும் விளைவுகள்

இன்றைய நிதி நெருக்கடியும் நாணயப்போரும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பல பாதிப்பை ஏற்படுத் தியுள்ளன. குறிப்பாக இரண்டு சாத்திய மான வழிகளில் தாக்கத்தினை ஏற்படுத்து கிறது.

### 3.1 நிதி கடத்தப்படும் நிலை (Financial Contagion)

ஒன்றிலிருந்து இன்னொன்றுக்கு நிதி கடத்தப்படும் நிலை உதாரணமாக பங்குச் சந்தையின் வழியாக மேலெழுந்தவை சந்தைக்கும் பரவுதல் 2008 மே மாதத்தில் ரஷ்யப் பங்குச்சந்தை இரண்டு முறை வர்த்தகத்தை நிறுத்தியது. ஒரு நாளில் இந்தியாவின் பங்குச் சந்தை 8% அளவிற்கு வீழ்ச்சியடைந்து அதே நேரம் அமெரி க்காவினதும், பிறேசிலதும் பங்குச் சந்தை குழப்பமடைந்து காணப்பட்டன. 2008 மேயிலிருந்து உலகத்தில் வளர்ச்சிய டைந்த, வளர்ச்சியடைந்து வரும் நாடு களில் குறிப்பிடக்கூடிய அளவிற்கு பங்கு விலை வீழ்ச்சியடைந்தது. அமெரிக்கா வின் பங்கு விலை 12 வீதம் - 19 வீதம் வீழ்ச்சியடைந்தது. அக் காலத்தில் ஐக்கிய இராச்சியத்தினதும் யப்பானினதும் பங்குச் சந்தைவிலை 23 வீதம் வீழ்ச்சியடைந்தது. இது பிறேசில் தென்னாபிரிக்கா, இந்தியா, சீனா போன்றவற்றின் பங்குச் சந்தைகளி லும் ஏற்பட்டது. ஒன்றிலிருந்து இன்னொ ன்றிற்குப் பரவும் அபாயம் நிதிச்சந்தையில் ஏற்பட்டது.

### 3.2 பொருளாதாரச் சரிவு

அபிவிருத்தியடைந்த நாடுகளில் பொரு ளாதாரச் சரிவின் விளைவு அபிவிருத்தி யடைந்து வரும் நாடுகளில் பின்வரும் விளைவுகளை ஏற்படுத்தியது.

#### அ. வர்த்தக விளைவு

சீனாவினதும் இந்தியாவினதும் வளர்ச்சி அதிகரித்த இறக்குமதியிலும் தூண்டப்பட்ட செப்பு, எண்ணை மற்றும் இயற்கை வளங்களுக்கான கேள்வி உயர்வு, ஆபிரிக்க நாடுகளில் ஏற்று மதியை உயர்த் தியதோடு விலையிலும் அதிகரிப்பினை ஏற்படுத்தியது. இதனால் சீனாவினதும், இந்தியாவினதும் வளர்ச்சி வேகம் குறைந் தது. இது ஏனைய வறிய நாடுகளையும் பாதித்தது.

### ஆ. பெறுகைகள்

வெளிநாட்டு வருமானப் பெறுகைகள் வீழ்ச்சியடைந்தது. பொருளாதார மந்தத்தால் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு வந்த தொழிலாளரின் வருமானமும் வீழ்ச்சியடைந்ததால் ஒருவருக்கான வெளிநாட்டு வருவாய் குறைந்த அளவிற்கு வீழ்ச்சியடைந்தது.

### இ. வெளிநாட்டு நேரடி முதலீடு

வெளிநாட்டு நேரடி முதலீடும் (FDI) பங்கு முதலீடும் அண்மைக் காலங்களில் பதிவு செய்யப்பட்டதன் படி அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் குறைந்தது.

### ஈ. வர்த்தகக் கடன் பெறுகைகள்

அபிவிருத்தியடைந்த நாடுகளின் வங்கிகளுக்கு ஏற்பட்ட நெருக்கடியால் முன்னைய காலங்களில் பெற்ற அளவு கடனை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பெற முடியவில்லை. இதனால் வங்கிக் கடன்களின் அளவு குறைந்து காணப்பட்டது.

முதலீட்டாளர்கள் கஷ்டங்களை எதிர்நோக்கியதால் கடன் வழங்க முன்வரவில்லை. ஐஸ்லாந்தின் நிதி உடைவு அல்லது முறிவு கடன் ஆபத்தினை வெளிப்படுத்தியது. இதனால் முதலீடு மட்டுப்படுத்தப்பட்டது. குறிப்பாக ஆஜென்ரீனா, ஐஸ்லாந்து, பாகிஸ்தான், உக்கிரேயின் போன்றவை குறைந்த முதலீட்டாளர்களால் பாதிக்கப்பட்டன.

### உ. வெளிநாட்டு உதவி

பலவீனமான அரசிறை நிலைமைகளால் வளர்ச்சியடைந்த நாடுகள் உதவிக்காக ஒதுக்கும் தொகை பாரியளவில் வீழ்ச்சியடைந்தது U.K., EU, USA போன்றவை 2005ஆம் ஆண்டு Gleneagles மகாநாட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்ட உதவிகளைக் கூட; கடந்த 5 வருடங்களாக வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### ஊ. அரச முதலீட்டின் வீழ்ச்சி

ஏனைய அரச பாய்ச்சல்கள் முதல் பற்றாக்குறையாகவுள்ளது நிதி நிறுவனங்களுக்கு ஏற்பட்ட ஆபத்து அரச முதலீடுகளும் பாதிப்படையக் காரணமாகி விட்டது. இந்நிலையில் உலக மயமாக்கத்தினை நிராகரிக்கும் நேரமாக இதைக் கருத முடியாது. இதை எவ்வாறு முகாமைத்துவப்படுத்தி ஒழுங்குபடுத்த வேண்டும் என்பதனையும் அது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு நன்மையளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

### 4.0 நிதிநெருக்கடி ஏற்படுத்தும் ஆபத்துக்கள்

1. ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் பொருளாதாரச் சரிவு நெருக்கடியால் பாதிக்கப்பட்டிருக்கும் போது நேரடியாகவும் மறைமுகமாகவும் இந் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நாடுகள் பாதிப்படையும். இதற்கு மெக்சிகோ நல்ல உதாரணமாகும்.

2. ஏற்றுமதி செய்யும் நாடுகளின் பொருட்களுக்கான விலை அல்லது உற்பத்தி உயர் வருமான நெகிழ்ச்சியினால்

பாதிக்கப்படும். உதாரணமாக சாம்பியா செம்பின் விலை வீழ்ச்சியாலும் கருபியன் நாடுகள், ஆபிரிக்க நாடுகள் சுற்றுலாத்துறை வருமான வீழ்ச்சியாலும் பின் தள்ளப்பட்டமை குறிப் பிடத்தக்கது.

3. வெளிநாட்டில் வேலை செய்வோர் அனுப்பும் வருமானம் அல்லது பெறுகையின் வீழ்ச்சியால் லண்டனில் இந்தியத் தொழிலாளர் குறைந்த வருமானத்தையே பெற்று இந்தியாவுக்கு அனுப்புகின்றனர். தற்போது வேலை வாய்ப்பும் வெகுவாகக் குறைந்துள்ளதுடன் வேலையின்மைப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

4. வெளிநாட்டு முதலீடுகளில் தங்கியுள்ள நாடுகள் நடைமுறைக்கணக்கிலும் பிரச்சினையை எதிர்கொள்கின்றன. தென் ஆபிரிக்காவில் வட்டி வீதத்தினைக் குறைக்க முடியாததால் வெளிநாட்டு முதலீடுகளை இழக்கும் நிலை தோன்றியுள்ளது. நடைமுறைக் கணக்கில் குறைநிலை ஏற்பட்டது. இந்தியா அதிக பணவீக்கத் தினால் மதிப்பிறக்கம் செய்ய நேரிட் டது. இறக்குமதிப் பொருட்களாலும் ஏற்கனவே நடைமுறைக் கணக்கு பலவீனமடைந்திருந்தது என்பதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகும்.

5. அரசாங்க வரவுசெலவுக் குறைநிலை உயர்வாக இருந்தது. பலவீனமான அரச இறைநிலைமை காரணமாக இந்தியா பலவீனம் அடைந்தது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் இனி வரும் காலங்களில் வெளிநாட்டு உதவியைப் பெறுவதில் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியதாயிருக்கும் என்பதுடன் இக்கடன்களின் அளவும் குறைவடைந்துவரும் என்பதில் ஐயமில்லை.

நிதி நெருக்கடியும் பொருளாதாரச் சரிவும் அதன் போக்கில் ஏற்பட்ட பொருளாதார மந்தமும் ஏற்படுத்திய விளைவுகள் நாடுகளுக்கு நாடு வேறுபட்ட அளவான பாதிப்பை ஏற்படுத்தியது.

அ. பலவீனமாக ஏற்றுமதி வருவாய்
ஆ. சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கில் அழுத்தம்.
இ. குறைந்த வீத முதலீடும் வளர்ச்சி வீதமும்.
ஈ. வேலை இழப்பும் வேலையில்லாப் பிரச்சினையும்
உ. நிதி மற்றும் பொருளாதார நிறுவனங்கள் முறிவடைந்து போதல்
ஊ. வாகன உற்பத்தி வீழ்ச்சியும் விற்பனை வீழ்ச்சியும்.

இதன் சமூக விளைவாக குறைந்த வளர்ச்சி வீதம் அதிகளவான வறுமையை ஏற்படுத்தி விடும் அதிக குற்றச்செயல், ஒழுங்கற்ற சுகாதார முறைமைகள் நூற்றாண்டு இலக் கினை அடைவதில் சிரமங்களை ஏற்படுத் திவிடும் என்பதும் குறிப் பிடத்தக்கதாகும்.

**5.0 நிதி நெருக்கடியைக் குறைப்பதற்கான வழிகள்**

1. நிதி உறுதிப்படுத்தல் சர்வதேச நிதிச் சட்டங்களுக்கேற்பவும் அபிவிருத்திக் கேற்பவும் பொதுப் பொருளை உற்பத்தி செய்து சந்தைக்கு விடுதல்.

2. எப்படியாவது இந் நாடுகள் ஒன்றிலிருந்து ஒன்றிற்குத் தாவும் நிதிப் பிரச்சினையைக் குறைத்தல்.

3. இன்றைய மெதுவான பொருளாதார அமுல்படுத்தல் குறிப்பாக கட்டமைப்புடைய காரணிகளின் வளர்ச்சி சர்வதேச பருநிலைப் பொருளாதார (Marco Economics) முகாமைத்துவம் நோக்கிய கொள்கை நகர்வுகள் இறைக் கொள்கை நாணயக் கொள்கையில் மாற்றங்கள் செய்ய வாய்ப்புண்டா என்பதை அறிதல்.

4. அபிவிருத்தி அடைந்த நாடுகளில் நிதி நிறுவனங்கள் சில ஆபத்துக்களின் மத்தியில் முதலீட்டுப் பாய்ச்சலை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் ஏற்படுத்த வேண்டும். ஆபத்து விளைவிக்கக்கூடிய நிதி நிறுவனங்களின் செய்கைகளுக்கு உட்படாதிருத்தல் வேண்டும்.

5. வேலையின்மையின் அதிகரிப்பு

2008 மே - ஒகஸ்ட் இற்குமிடையில் 164000 பேர் வேலையை இழந்தனர். இது வேலையின்மையில் உள்ளவர்களில் 10% அதிகரிப்பை காட்டியது. இது இன்று 1.63 மில்லியன் அளவாகவுள்ள துடன் எதிர் காலத்தில் அதிகரிக்கும் சாத்தியமும் உள்ளது.

6.0 முடிவுரை

துணை முதன்மை ஈட்டுக் கடனுக்கான பிணை (Collateralized debt obligation and sup rime mortgage line) அவற்றிற்கான பாதுகாப்பு சொத்துக்கள் (Securitization and Foreclosures) அவற்றின் வருவாய் வீதங்கள் கடன்பட்டோர் திருப்பிச் செலுத்தத்தவறின் கொடுத்த கடனை மீளப் பெறுவதற்கான வழிவகைகள் போன்றவற்றில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தக் கூடிய பருநிலைப் பொருளாதாரக் கொள்கையை அமுலாக்கக்கூடிய அதிகாரம் உள்ள மத்திய வங்கி எல்லா நாடுகளிலும் நிதி நாணயப்பொறுப்புகளை ஏற்று செயற்பட வேண்டும். தவறின் உத்தேச நோக்கில் செயற்படும் சூதாட்டக் காரரிடம் நாணய நடைமுறைகள் மீண்டும் சென்று மீண்டுமொரு உலகளாவிய நிதி நெருக்கடி ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது போய்விடும். எவ்வாறாயின் சர்வதேச நிதி நெருக்கடி குறைவிருத்தி நாடுகளை அதிகம் பாதிக்கும் என்பதனால் அவற்றின் மீது அதிக கரிசனை காட்டுப் படுதல் வேண்டும். அத்துடன் நாணயங்களுக்கிடையிலான போர் ஏற்படுவதை முடிவு க்குக் கொண்டுவருதல் வேண்டும். இவை பொதுவில் சர்வதேச நிதி நெருக்கடியை சமாளிக்க உதவும் என்பதை மனதில் கொள்ளுதல் வேண்டும்.



# ஈழத்தமிழ்ச் சமூகமும் ஆவணவாக்கமும்

**ஸ்ரீகாந்தலட்சுமி. அ**
பிரதம நூலகர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
sriarul91@gmail.com

**.அறிமுகம்**
இன்றைய நிகழ்வு நாளைய வரலாறு. நிகழ்வு வரலாறாகுவதற்கு அது ஏதோ ஒரு வகையில் பதியப்படுவது அவசியமாகிறது. பதியப்ப டாதவை அனைத்தும் மறைந்து போகின்றது. உரு, வரி, வடிவம், அலை ஆகிய நான்கு வகைப்பட்ட தகவல் வெளிப்பாட்டு வடிவங் களினூடாக இந்த நிகழ்வு பதியப்படுவதும், பாதுகாக்கப்படுவதும் அடுத்த தலைமுறை க்குக் கையளிக்கப்படுவதும் தொடர்ச்சியாக நடைபெறும்போது சமூகம் ஒன்றிற்குரிய அறிவுத் தொகுதி அதன் அறிவிலும் ஆழத் திலும் கனதிமிக்கதாக மாறுகின்றது. சமூகம் ஒன்றின் ஒட்டுமொத்த அடையாளத்தையும் சமூக உறுப்பினர் ஒவ்வொருவரும் அறிந்து கொள்வதற்கு ஒன்றுக்கொன்று தொடர்பு டைய நிகழ்வுகள் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு வடிவங்களில் பதியப்படுவதும் அவை பொதுப்பயன்பாடு கருதி ஓரிடப்படுத் தப்படுவதும் அவசியமானது. ஒரு சமூகத்தின் அடையாளத்தை உறுதி செய்வது அந்த சமூகத்தின் எழுத்துருவப் பதிவேடுகள். இது வெளியிடப்பட்டதாகவோ வெளியிடப்படா ததாகவோ இருக்கலாம். தனிமனிதனின் அடையாள அட்டை, தகுதிச் சான்றிதழ்கள், அவனது நாட்குறிப்பேடு, காணி உறுதி போன்றவை வெளியிடப்படாத ஆவணம். தனிமனிதனின் சிந்தனையிலிருந்து உருவாக் கம் பெற்று அது அச்சு வடிவம் பெறும்போது அது வெளியிடப்பட்ட ஆவணம். தனிமனி தன் போன்றே இந்த ஆவணங்கள் குடும்பம் சார்ந்தவை, சமூகம் சார்ந்தவை, நாடு சார்ந் தவை எனப் பரந்துபட்டதாகவும், தொடர் செயற்பாடு கொண்டதாகவும் இருக்கும்.

**ஈழத்தமிழ்ச் சமூகமும் ஆவணவாக்கமும்**
இலங்கைத் தமிழர் என்ற சொற்பதம் உள்நாடு சார்ந்து இலங்கைத் தீவின் வட மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர், கண்டிப் பிரதேசத்தில் வாழும் மலையகத் தமிழர், கொழும்பு மற்றும் கொழும்பைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் கொழும்புத் தமிழர், கிழக்கு மாகாணத்தில் செறிவாகவும் இலங்கையில் பரவலாகவும் வாழும் இஸ்லா மியத் தமிழர் என நான்கு வகையான தமிழரை யும் வெளிநாடு சார்ந்து உலகெங்கிலும் பரந்து வாழும் புலம்பெயர் தமிழரையும் உள்ளடக்கு கின்றது. ஈழத்து இலக்கிய வரலாற்றில் ஈழத் துப் பூதந்தேவனார் என்ற பெயர் 3000 ஆண்டு கால பழமையை கொண்டிருந்தபோதும் கடந்த இரு நூற்றாண்டு கால வரலாறே எமது கைக்கும் கிடைக்கும் வரலாறாக உள்ளது என்பதைக் கருத்தில்கொண்டு ஈழத் தமிழ்ச் சமூகம் ஆவணப்படுத்தல் செயற்பாட்டில்

மிகப்பலவீனமான சமூகம் என்றதொரு குற்றச்சாட்டும் உண்டு. ஈழத்தமிழர் வாழ்வியலில் தனிநபரை விட சமூகத்திற்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவம், தகவலைப் பதிந்து வைப்பதற்கு ஏற்ற நிரந்தர மற்றும் நீடித்துழைக்கக்கூடிய சாதனங்களின் இல்லாமை, வாய்மொழிப் பாரம்பரியத்தில் அதிகம் தங்கியிருக்கும் பண்பு போன்றவை ஆவணவாக்கச் செயற்பாடு சார்ந்து பலவீனமான சமூகம் என்ற கருத்துநிலைக்குள் ஈழத்தமிழ்ச் சமூகத்தை சுலபமாக தள்ளியிருப்பதும், கடந்த இரு நூற்றாண்டு கால வரலாற்று ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டே அதன் ஆவணவாக்கச் செயற்பாட்டை அறிவதும் கருத்திற்கொள்ளப்பபடவேண்டிய தொன்று

ஆவணவாக்கம் என்ற கருத்துநிலை ஈழத்தமிழ்ச்சமூகத்திற்குப் புதியதொன்றல்ல. பதப்படுத்திய பனையோலைகள் மட்டுமே தாள்களின் கண்டுபிடிப்புக்கு முந்திய ஈழத் தமிழ்ச்சமூகத்தின் ஒரேயொரு பதிவு ஊடகமாக இருந்தவகையில் படியெடுத்தல் மூலமான ஆவணவாக்கச் செயற்பாடு பரவலாக இருந்திருக்கிறது என்பதையே நாவலர் மற்றும் சி.வை.தாவின் பதிப்புரைகளில் ஒரே விடயம் தொடர்பாக பல ஏட்டுப் பிரதிகள் பயன்பாட்டில் இருந்தமை புலப்படுத்துகின்றது. ஆரம்பகாலத்தில் அரச குடும்பத்துடன் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்த சிந்தனைப் பதிவேடுகளின் பயன்பாடு, இலவசக் கல்வி, தாள்களின் அறிமுகம் மற்றும் அச்சின் கண்டுபிடிப்பு போன்றவற்றால் பொதுசனமயப்படுத்தப்பட்ட காலமுதற் கொண்டு இன்றுவரை பல பண்புகளைக் கொண்டிருக்கிறது.

**1.1 ஆவணவாக்கம்: வரைவிலக்கணம்**

ஆவணவாக்கம் அல்லது ஆவணப்படுத் தல் என்ற பதம் பரந்து விரிந்த பொருள் கொண்டது. பொதுவான நோக்கில் தரவுகள் நிகழ்வுகள் தகவல்கள் மற்றும் அறிவு ஆகியவற்றைப் பதிகின்ற ஒரு செயற்பாடே ஆவணவாக்கம் (Documentation) என்ற பெயர் கொண்டழைக்கப்படுகின்றது. நூலகவியல் நோக்கில் ஆவணங்களை பெறுதல் கையாளுதல், தொடர்புபடுத்தல் போன்ற செயல் முறைகள் உள்ளடங்கிய கற்கையாக இது பொருள் கொள்ளப்படுகின்றது. (Harrod 1987). நிகழ்நிலை நூலகத் தகவல் அறிவியல் அகராதி ஒன்று ஆவணவாக்கம் சார்ந்து பொதுநோக்கு, நூலகவியல், தகவல் அறிவியல், புலமை சார் வெளியீடுகள், தரவுச் செய்முறை மற்றும் ஆவணக்காப்பகம் என ஆறு வகையான வரைவிலக்கணங்களைத் தருகின்றது. பொதுவான நோக்கில் எந்தவொரு செய்முறை சார்ந்த முறையான எழுத்து வடிவ விளக்கம் ஆவணவாக்கம் என பொருள் கொள்ளப்படுகின்றது. நூலகவியல் நோக்கில் நிறுவன வளங்களை பாதுகாக்குமுகமாகவும் ஆய்வுக்கு உதவும் வகையிலும் விசேட ஆவணங்களை குறிப்பாக அறிவியல், தொழில்நுட்ப மற்றும் சட்டம் சார்ந்த ஆவணங்களை முறைப்படி சேகரித்தல் ஒழுங்கமைத்தல், சேமித்தல், மீள்பெறுகை செய்தல் மற்றும் பரவலாக்கம் செய்தல் ஆகிய செய்முறைகளை உள்ளடக்குகின்றது. தகவல் அறிவியல் சார்ந்து புலமைசார் வெளியீடு என்ற வகையில் ஆய்வு முயற்சிக்கு துணை போகின்ற தகவல்களை மேற்கோள் காட்டும் நடைமுறை ஆவணவாக்கம் எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. ஆவணக் காப்பகங்களில் உசாத்துணை நோக்கத்துக்காகவும் பாவனையாளருக்கான தேடுதல் கருவியாக உதவும் வகையிலும் பதிவேடுகளுக்கு விபரங்களைத் தயாரித்து ஒழுங்கமைக்கும் செயற்பாடாக கருதப்படுகின்றது. தரவுச் செய்முறையில் பொறி

முறை வாசிப்பு தரவுக் கோவைகளை உருவாக்குதல், செயற்படுத்தல், பராமரித்தல் போன்றவற்றுக்கு தேவைப்படுகின்ற விரிவான தகவல்களாக இது பொருள் கொள்ளப்படுகின்றது. (Reitz 2004).

ஆவணவாக்கம் என்ற பதம் அது பயன் படுத்தப்படும் தகுதியினடிப்படையில் வெவ்வேறுபட்ட பொருள் கொண்டதென்று கூறும் கீழைத்தேச நூலகவியலின் தந்தையான எஸ்.ஆர் இரங்கநாதன் நூல்களின் உயிருடன் அதாவது கருத்துசார் உள்ளடக்கத்துடன் இணைந்து செய்யப்படும் பணியை - குறிப்பாக விசேட பொருட்துறை ஒன்றில் வெளியிடப்பட்ட நூல்கள் மற்றும் பருவ இதழ்க் கட்டுரைகளின் பேரினநுண்ணினக் கருத்துப் பொருளின் பட்டியை ஆவண நூல் விவரப் பட்டியல் எனப்பெயரிடுவதுடன் அத்தகைய பட்டியானது விசேட பொருட்துறை வல்லுனர்களின் தேவைகளை பூர்த்தி செய்யுமுகமாக தயாரிக்கப்படும்போது அது ஆவணவாக்கப்பட்டி என்றும் அத்தகைய பட்டியை உருவாக்கும் கலை ஆவணவாக்கம் எனவும் குறிப்பிடுகின்றார் (Ranganathan 1974).

**ஆய்வும் ஆவணவாக்கமும்**

ஈழத்தமிழ் இலக்கிய உருவாக்கங்களில் காணப்படும் அடிப்படைப் பிரச்சினைகளில் முக்கியமானது ஆய்வுக்கும் ஆவணவாக்கத்துக்கும் இடையிலான தனித்தன்மைகள், வேறுபாடு மற்றும் உறவுநிலைகளைத் தெளிவாகப் புரிந்து கொள்ளாமையாகும். இதனால் ஆவணவாக்கப் பண்புகளை மிகுதியாகக் கொண்ட இலக்கியங்கள் ஆய்வு நூல் எனப் படைப்பாளரால் விதந்துரைக்கப்படுவது பொதுவான போக்காக உள்ளது. ஆய்வு என்பது புதிதாக ஒன்றை உருவாக்குவது. ஏற்கனவே உள்ள அறிவின் இருப்பில் சேர்த்துக்கொள்ளப்பட்டு புதிய அறிவை உருவாக்குவதற்கு அடிப்படையாக இருப்பது. ஆவணவாக்கம் என்பது ஏற்கனவே உருவாக்கப்பட்ட அறிவை உள்ளது உள்ளபடியேயோ, சுருக்கியோ, விரித்தோ, குறை களைந்தோ, தொகுத்தோ மீள உருவாக்கப்படுவது. ஆய்வு என்பது புதிய கண்டுபிடிப்பாகவோ, ஏற் கனவே கண்டுபிடித்த ஒன்றின் தொடர்ச்சி யாகவோ அன்றி அதன் இற்றைப்படுத்த லாகவோ அமையலாம். ஆவணவாக்கம் இன்றேல் ஆய்வு இல்லை. ஆய்வுக்கு மூலமே ஆவணவாக்கம். இதன்காரணமாகவே ஆவணவாக்கம் அறிவியல் துறையாக (Documentation Science) ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. தனி நிறுவனமாகவோ அல்லது நிறுவனத்தின் ஒரு பகுதியாகவோ இயங்கி தகவல் வளங்களைப் பெற்றுக் கொள்ளுதல், செய்முறைப்படுத்துதல், பாதுகாத்தல், சுருக்கப்படுத்தல், சாராம்சம் தயாரித் தல், சொல்லடைவுபடுத்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளும் நிலையங்கள் ஆவணவாக்க நிலையங்கள் என அழைக்கப் படுகின்றன. குறிப்பிட்ட துறை சார்பாக வெளியாகின்ற அண்மைக் காலத் தகவல்களைச் சேகரித்து முறைப்படுத்தி ஒழுங்குபடுத்தும் சாதாரண நூல்விவரப்பட்டியல் முதற் கொண்டு குறிப்பிட்ட துறை சார்பாக வெளியிடப்படுகின்ற அண்மைக்கால வெளியீடுகளை தேடிக் கண்டுபிடித்துச், சேகரித்து, ஒழுங்கு படுத்தி, அத்துறையின் வளர்ச்சிநிலை பற்றிய மதிப்பீட்டை புதிய ஆக்கமாக ஆய்வாளருக்கு வழங்கும் பொருட்படிநிலை யறிக்கைகள் (State-of-the-art-Report) வரை இவற்றின் ஆவண வாக்கச் செயற்பாடுகள் பரந்து பட்டதாகவும் ஆழமானதாகவும் அமையும். ஆவணவாக்க த்தின் மிகச் சிறந்த பெறுபேறாக உருவாக் கப்படும் பொருட்

படிநிலை அறிக்கைகள் ஆய்வுக்கான அத்தி வாரமாக அறிவியல் சார்ந்த துறைகளில் முக்கியத்துவப்படுத்தப் படுத்தப்படுவதுடன் இதற்கான உருவாக்கச் செலவு ஆயிரங் களிலிருந்து இலட்சங்கள் வரை கூடிக் குறை யும். துரதிருஷ்டவசமாக ஈழத்தமிழ்ச் சமூகத்தின் பட்ட மற்றும் பட்டப் பின்படிப்பு சார்ந்த ஆய்வுகளில் பெரும்பாலா னவை ஆவணவாக்கச் செயற்பாடுகளுடன் மட்டுப் படுத்தபட்டுவிடுகின்ற, ஆய்வுக்கான ஆரம்ப முயற்சிகளாக இருப்பதே கண்கூடு.

**1.2 ஆவணவாக்கம் - வகைகள்**

பரந்த நோக்கில் ஆவணவாக்கத்தை மூலவகை ஆவணவாக்கம் (Source Documentation) கருவி வகை ஆவணவாக்கம் (Tool type documentation) என இருபெரும் பிரிவாக வகைப்படுத்தலாம். மூல வகை ஆவணவாக்கத்தில் தரவு, நிகழ்வு மற்றும் தகவல்கள் கூடியவரை உள்ளது உள்ளபடியே பதியப்படுகின்றன. இது அன் றைய சுவடிப்படியெடுப்பு முதற்கொண்டு இன்றைய முழுப்பாட ஆவணப்படுத்தல் (Full text Documentation) செயற்பாடுவரை உள்ள டக்கும். ஏற்கனவே உள்ள மூல ஆவணத்தை பாதுகாப்பு மற்றும் பயன்பாடு கருதி படியெ டுத்தல், குறிப்பிட்ட ஒரு ஆவணம் பல பிரதிகளைக் கொண்டிருக்கும் பட்சத்தில் அவற்றைப் பரிசோதித்து, ஒப்பு நோக்கி மூல ஆவணத்தை இனங்கண்டு பதிப்பித்தல், பல தரப்பட்ட வெளியீடுகளிலும் வெளிவந்த குறிப்பிட்ட படைப்பாளரின் ஆக்கங்களை அல்லது குறிப்பிட்ட துறைசார்ந்த ஆவணங் களைத் தேடிச் சேகரித்து தொகுத்து வெளியி டுதல், கள ஆய்வின் மூலம் வாய்மொழி வரலாறுகள் மற்றும் பாடல்களைப் பதிதல், பண்பாட்டு நிகழ்வுகளை ஆவணப்படுத்தல் போன்றவை மூலவகை ஆவணவாக்கத்தில் உள்ளடங்கும் கருவி வகை ஆவணவாக் கமானது ஆய்வாளர்களின் இலகுவான பயன்பாட்டைக் கருத்திற் கொண்டு குறிப்பிட்ட படைப்பாளர் சார்ந்த அல்லது துறை சார்ந்த இலக்கியங்களை முறைப்படி பட்டியலிடுதல் என்பதாகும். இது ஒரு நூலகம் அல்லது தகவல் நிலையத் திலுள்ள அனைத்து ஆவணங்களின் விபரங் களைப் பட்டியலிடுகின்ற நூலகப் பட்டிய லாகவோ அல்லது குறிப்பிட்ட துறை சார்ந்து அல்லது படைப்பாளர் சார்ந்து உருவாக்கப் படும் நூல்விபரப்பட்டியல் மற்றும் சொல்ல டைவு, சாராம்சச் செயற்பாடாகவோ இருக்கும்.

ஆவணவாக்கத்தின் பண்புகளின் அடிப் படையில் பதிப்புசார் ஆவணவாக்கம் தொகு ப்புசார் ஆவணவாக்கம் என்ற இருபெரும் பண்புகளாக வகைப்படுத்தலாம். பொதுவான நோக்கில் தொகுப்புப் பணி என்பது பரந்த பொருள் கொண்டது. குறிப்பிட்ட பொருள் சார்ந்த தரவுகள், தகவல்கள் நிகழ்வுகள் போன் றவற்றை பலதரப்பட்ட ஆவணம் சார்ந்த மற்றும் ஆவணம் சாராத தகவல் வளங்களி லிருந்து தேடிச் சேகரித்து பதிதலை இது குறிக்கின்றது. நூலகவியல் நோக்கில் தொகுப் புப் பணி என்பது படைப்புகளின் தொகுப் புகளுடன் மட்டுப்படுத்தப்பட்டுவிடுகின்றது. இது தனித்த ஒரு படைப்பாளரின் பல ஆக்கங்களை தொகுத்தலாகவோ அல்லது பல படைப்பாளரின் ஆக்கங்களின் தொகுப் பாகவோ அமையக் கூடியது. மூல ஆவணத் தில் எந்தவொருமாற்றத்தையும் செய்யாது இது மேற்கொள்ளப்படுவது. பரந்த நோக்கில் குறிப்பிட்ட கால வரையறையில் குறித்த துறை சார்நத அல்லது குறித்த படைப்பாளர் சார்ந்த ஆக்கங்களின் விபரங்களைப் பட்டியலிடு கின்ற செயற்பாடும் தொகுப்பு பணியாகவே பார்க்கப்படுகின்றது. பதிப்புப்பணி என்பது தமிழ்ச் சூழலில் பலதரப்பட்ட வகையில்

பொருள் கொள்ளப்படுகின்றது. நூல் ஒன்றை புதிதாக உருவாக்கி அதனை வெளியிடும் செயற்பாடு மற்றும் அச்சிடுதல் செயற்பாடு போன்றவையும் பதிப்புப் பணி என்றே பொருள்கொள்ளப்படுகின்றது. இங்கு அச்சிடுதல்(printing), பதிப்பித்தல்(editing), வெளியிடுதல் (Publishing), மீள்பதிப்பு (Reprint) ஆகிய நான்கு பதங்களுக்குமிடையிலுள்ள வேறுபாடு தொடர்பான தெளிவு அவசியமானது. பதிப்பு வேறு. வெளியீடு வேறு. ஏற்கனவே உள்ள ஒன்றை திருத்தம் செய்தோ அன்றி செய்யாமலோ மீள வெளியிடுவது பதிப்புப் பணி. ஆக்கம் ஒன்றை அந்த ஆக்கத்தின் படைப்பாளரோ அல்லது வேறு தனி நபரோ அல்லது நிறுவனமோ பொறுப்பேற்று வெளியிடுவது வெளியீட்டுப் பணி. வெளியிடுவதற்கான அச்சிடுதல் பணிகளை மேற்கொள்வது அச்சிடுதல் பணி. வெளியிட்ட பிரதிகள் போதாதபோது அதனை இற்றைப்படுத்தாமலோ, மீளாய்வு செய்யாமலோ அப்படியே மீள வெளியிடுவது மீள்பதிப்பு. சமூகத்தில் குறிப்பிட்ட ஆக்கத்தின் ஆசிரியர் அறியப்படாதவிடத்து பாதுகாப்பு நோக்கங்கருதியும் பயன்பாடு கருதியும் அதனைப் மீளப்படியெடுத்தல், பருவ இதழ்களில் அல்லது மாநாட்டு வெளியீடுகளில் வெளியிடும்பொருட்டு பதிப்புக்குழு ஒன்றினூடாக ஆய்வுக் கட்டுரைகளை அதன் ஆசிரியரைக் கொண்டே திருத்துவித்தல், பலதரப்பட்ட வெளியீடுகளிலும் வெளிவந்த குறிப்பிட்ட துறைசார்ந்த அல்லது குறிப்பிட்ட படைப்பாளர் சார்ந்த ஆக்கங்களை தேடிச் சேகரித்து ஒழுங்குபடுத்தி வெளியிடுதல் போன்றவை பதிப்புப் பணிகளில் உள்ளடங்கும். பதிப்புப் பணியானது பலதரப்பட்ட பண்புகளையும் பல படிநிலைகளையும் கடந்து வந்திருக்கிறது. சுவடிகள் மற்றும் நூல்களிலிருந்து எழுதி எடுத்து பாதுகாத்தல், சுவடிகள் கையெழுத்துப் பிரதிகளாக தாள்களில் அல்லது சுவடிகளில் இருப்பவற்றை அப்படியே அச்சு வடிவத்துக்கு மாற்றுதல், பல சுவடிகளை ஒப்பு நோக்கி பாட வேறுபாடுகளை உள்ளடக்கி மீள வெளியிடுதல், ஒரு ஆக்கம் சார்ந்து எழுதப்படுகின்ற பல்வேறு ஆக்கங்களை தொகுத்து வெளியிடுதல், ஒரு ஆக்கத்தை பயன்படுத்துவதற்கான பல்வேடு தேடல் வழிமுறைகளை ஆக்கத்தின் முன்னே அல்லது பின்னே உருவாக்குதல் போன்ற பல்வேறு அம்சங்கள் பதிப்புப் பணியில் உள்ளடங்குகின்றன.

ஆவணத்தின் உருவமைப்பு சார்ந்து இது சுவடிகள், பத்திரிகைகள், நூல்கள், சஞ்சிகைகள், இலத்திரனியல் வளங்கள் போன்ற நூலுருச் சாதனங்களை ஆவணப்படுத்தலை குறிக்கிறது. தொழிற்பாடு சார்ந்து நிகழ்வுகள் தரவுகளைப் பதிதல், ஏற்கனவே உருவாக்கப்பட்ட இலக்கியங்களை பதிப்பித்தல், தொகுத்தல், சொல்லடைவுபடுத்தல், சாராம்சப்படுத்தல் போன்றன உள்ளடங்குகின்றன. ஆவணப்படுத்தலின் வியாபகத்தன்மை சார்ந்து தனிமனிதன், குடும்பம், சமூகம், நாடு என்ற வகையில் இந்த ஆவணவாக்கச் செயற்பாடு நடைமுறையில் உண்டு.

## 2. ஆய்வின் நோக்கம், பிரச்சனை மற்றும் ஆய்வுமுறைமை

இந்த ஆய்வின் நோக்கம் ஈழத்தமிழ்ச் சமூகத்தின் ஆவணவாக்கப்பண்புகளை மீள்பார்வை செய்து இனங்காணலும் முறைப்படி வகைப்படுத்தலுமாகும். இவ்வாய்வானது ஈழத்தமிழ்ச் சமூகத்தின் ஆவணவாக்கம் தொடர்பான பேணப்பட்டுவரும் தகவல்களின் அடிப்படையிலான விரிவான இலக்கிய மீளாய்வின் வழி பெறப்பட்டு, நேர்காணல்கள் மற்றும் கலந்துரையாடல்கள் மூலம் செவ்வை பார்க்கப்பட்ட தரவுகளைத் தேவைக்கேற்ப வரலாற்று, விவரண உத்திகளைப் பயன்படுத்திப் பகுப்பாய்வு செய்து ஈழத்தமிழ்ச் சமூகத்தின் ஆவணவாக்கப்பண்புகளை மீள்

பார்வை செய்து இனங்காணவும் முறைப்படி வகைப்படுத்தவும் முனைந்து நிற்கிறது.

ஆய்வில் சரியான தகவல்களைச் சேக ரித்து அவற்றை பரிசோதித்துப் புதிய நோக்கு களையும் வெளிப்படுத்தல்களையும் ஒப்பீடுக ளையும் இனங்காணும் வகையில் ஆய்வு முறைமை அமைவது இன்றியமையாதது. இந்த ஆய்வினைப் பொறுத்த வரையில் ஆய்வு முறைமையானது தரவுகளை அடிப்படை யாகக் கொண்டமைந்த வரலாற்று ரீதியான நிரற்படுத்தல்களையும், கோட்பாட்டு ரீதி யான வகையீடுகளையும், எளிதில் விளக்கிக் கூறும் வகையில் தொடர்புபடுத்தி விளக் கிக்கூறும் விவரண முறைமையினை அடிப்ப டையாகக் கொண்டுள்ளது. தனித்து விவரண முறைமையினை மாத்திரம் பின்பற்றின் அது பண்புகளை வகைப்படுத்தத் தவறிவிடும் என்பதாலும், வரலாற்று ரீதியான பார்வை தகவற் சேகரிப்பு என்ற வட்டத்தினுள் ஆய்வை முடிவுறுத்த முனையும் என்ற காரணத்தினாலும் ஆராய்ந்து பெறப்பட்ட ஒத்திசைவான முறைமைகள் பலவற்றை இணைத்து ஆய்வின் முழுமையான பரிமா ணத்தை வெளிக்கொணரும் வகையில் ஆய்வு முறைமையானது நெறிப்படுத்தப்பட்டு ள்ளது.

**4. இனங்காணப்பட்ட ஆவணவாக்கப்பண்புகள்**

கீழே குறிப்பிடப்படுகின்ற ஆவணவாக் கப்பண்புகள் குறித்த ஆவணத்திற்கென்றே பிரத்தியேகமாக உள்ள பண்பு அல்ல. ஏனெ னில் குறித்தவொரு ஆக்கம் கீழே குறிப்பிடப் படும் பண்புகளில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ கொண்டிருப்பது தவிர்க்க முடியாதது எனினும் அந்த ஆக்கத்தில் எந்தப் பண்பு மேலோங்கியிருக்கின்றதோ அந்தப் பண்பினடிப்படையில் வகைப்படுத்தப்பட் டிருக்கிறது. ஒரு சில ஆக்கங்களில் ஆய்வுத் தன்மை அதிகமாக இருக்கக்கூடும் எனினும் பிரதான பண்பு ஆவணவாக்கமெனில் அதுவே இங்கு கருத்திற்கொள்ளப்படுகின்றது. அதுமட்டுமன்றி ஈழத்தமிழ்ச் சமூகத்தில் இதுவரை எழுந்த அத்தனை ஆக்கங்களையும் இங்கு பட்டியல்படுத்துவது இக்கட்டுரையின் நோக்கமன்று. மாதிரிக்கு சில எடுத்துக்காட் டுக்களைத் தருவதும் கூடியவரையில் ஆரம்ப கால இலக்கியங்களை எடுத்துக்காட்டுகளாக கையாள்வதும் இதன் நோக்கமாகும். அவை கிடைக்காத போது தற்போதைய ஆக்கங்க ளின் மாதிரிகள் எடுத்தாளப்பட்டிருக்கின்றன.

**வரலாற்றுத் தகவல்களை ஆவணப்படுத்தும் பண்பு**

வரலாற்றுத் தகவல்கள் குறிப்பிட்ட இனம், மதம், மொழி பண்பாடு மற்றும் பொருட்துறை சார்ந்தவை என பலதரப்படும். இவை தொகுப்புப் பணியூடான ஆவணவாக்க செயற்பாட்டின் ஊடாக உருவாக்கப்படு பவை. ஈழத்தமிழ்ச் சமூகத்தின் தொகுப்புப் பணியூடான ஆவணவாக்க செயற்பாட்டின் முன்னோடி என்ற பெருமை சைமன் காசிச் செட்டி அவர்களையே சாரும். இவரது "தமிழ் புளூராக்" என்ற தமிழ்ப் புலவர் சரிதமும் சிலோன் கசற்றியரும் (1834) ஆய்வுடன் இணைந்த மிக முக்கியமான ஆவணவாக்கப் பணிகளாகும். சிலோன் கசற்றியர் நாடு சார்ந்த வகையில் இலங்கை பற்றிய புவியியல் ரீதியான தகவல் அனைத்தையும் அகர ஒழுங்கில் தொகுத்து தருகின்றது. இதற்கான தரவுகள் நொக்ஸ், கோர்டின், பேர்சிவல், டேவி முதலியோர் எழுத்துக்களிலிருந்தும் சுதேசிய நூல்களிலிருந்தும் பாரம்பரியச் செய்திகளிலிருந்தும் தொகுக்கப்பட்டிருக் கிறது. (பூலோகசிங்கம் 1970). ஊர் சார்ந்த வகையில் ஆத்மஜோதி நா. முத்தையாவின் ஏழாலை(1977), எங்களூர் ஏழாலையூர்(1994) சீர் இணுவைத் திருவூர் (2004), புங்குடுதீவு

மான்மியம் (2012) போன்றன புவியியல் அம்சங்களை மட்டுமன்றி ஊர் தொடர்பான தகவல்களை கூடுதலான வரையில் உள்ளடக்கி தொகுக்கப்பட்டுள்ளது. கலாநிதி பாலசுந்தரத்தின் இடப்பெயராய்வு: காங்கேயன் வட்டாரம்(1988) வடமராட்சி தென்மராட்சி (1989) போன்றவை மற்றும் ஊர்ப் பெயர் தோன்றிய வரலாற்றை ஆவணப்படுத்துகிறது.

யாழ்ப்பாணத்து மானிப்பாய் முத்துத் தம்பிப் பிள்ளை அவர்களால் தொகுக்கப் பட்டு நாவலர் அச்சகத்தினால் 1902இல் வெளியிடப்பட்ட அபிதானகோசம் ஈழத்தின் முதலாவது கலைக்களஞ்சியம் என்ற பெருமையைப் பெறுவது. வேதாகம புராண இதிகாசங்களில் கூறப்பட்ட தெய்வங்கள், தேவர்கள், ரிஷிகள், முனிவர்கள், அசுரர், அவதார புருஷர் போன்ற வாழ்க்கை வரலாற்றுத் தகவல்களையும், நதிகள், புண்ணிய தீர்த்தங்கள் போன்ற இடங்களின் வரலாறுகள், தமிழ்நாட்டின் பண்டைய அரசர், புலவர், வள்ளல்களின் வரலாறுகள் போன்றவை இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்நூலில் உள்ளவை பெரும்பாலும் பல நூல்களிலிருந்தும் எடுக்கப்பட்டவை. பல பதிவுகள் உள்ளதை உள்ளபடியே கூறுபவை, இன்னும் சில சுருக்கமாக்கப்பட்டவை, சில விரிவாக்கப்பட்டவை. பல பதிவுகள் கலைக் களஞ்சியம் போன்று விரிவான தகவலை உள்ளடக்கியவை.

**வாழ்க்கை வரலாற்றுத் தகவல்களை ஆவணப் படுத்தும் பண்பு**

வாழ்க்கை வரலாற்றுத் தகவல்கள் தனி நபர் சார்ந்ததாகவோ அன்றி குடும்ப வரலாறாகவோ அமையலாம். இதுதவிர தனிநபர் ஒருவரை மையப்படுத்திய விரிவான ஆவண வாக்கமாகவோ அல்லது பல நபர்களை உள்ளடக்கிய தொகுப்பாக்கமாகவோ இருக்கலாம். தமிழ் இலக்கியத் துறையில் தமிழ்ப்புலவர் பலருடைய வாழ்க்கை வரலாறுகளை ஒரே நூலில் உள்ளடக்கி வெளியிடப்பட்ட முதல் நூல் என்ற பெருமையைப் பெறும் சைமன் காசிச்செட்டி அவர்களின் “தமிழ் புளூடடாக்“(1859) என்னும் தமிழ்ப்புலவர் சரிதம் தமிழ் இலக்கிய நூல்களைப் பற்றியும் அவர்களின் ஆசிரியர்களைப் பற்றியும் ஆங்கிலத்தில் எழுதப்பெற்ற ஒரு தொகுப்பு நூலாகும். 197 தமிழ்ப்புலவர்களின் வரலாறுகள் இதில் இடம்பெற்றுள்ளன. மேற்படி நூல் உருவாக்கத்திற்கான தகவல் சேகரிப்பானது ஒரு தசாப்பதங்களுக்கும் மேலாக மேற்கொள்ளப் பட்டது என்பதை 1840ம் ஆண்டு தொடக்கம் வெளிவந்த சிலோன் மகசின் என்ற சஞ்சிகையில் சைமன் காசிச் செட்டி அவர்களால் எழுதப்பட்ட முப்பத்தியிரண்டு அறிஞர்களின் செய்திகள் சான்றாக உள்ளன. இதனை அடிப் படையாகக் கொண்டு எழுந்த சதாசிவம் பிள்ளையின் பாவலர் சரித்திர தீபகம்(1886) முதலாவது தமிழ் நூல் என்ற பெருமையைப் பெறுகின்றது. இதனைத் தொடர்ந்து வெளிவந்த குமாரசுவாமிப் புலவரின் தமிழ்ப் புலவர் சரிதம்(1916), கணேசையரின் ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதம்(1933) போன்றவை இவ்வகையைச் சார்ந்தவை.

முத்துக் குமாரசுவாமிப்பிள்ளையால் எழுதப்பட்ட குமாரசுவாமிப்புலவர் வரலாறு (1970), வைத்திலிங்கத்தின் சேர். பொன் இராமனாதனின் வரலாறு(1971), கனக செந்தி நாதனின் கவின் கலைக்கு ஒரு கலாகேசரி (1974) போன்றவை மிக விரிவான வகையில் தனிநபர் வாழ்க்கை வரலாற்றை ஆவணப் படுத்திய பண்பு கொண்டது. இதற்குப் பின்னரான காலங்களில் தனிநபர்கள் சார்ந்து உருவாக்கப்படும் மணி விழா மற்றும் வைர விழா சார்ந்தோ அன்றி அவர்கள் நினைவாக கொண்டாடப்படும் நூற்றாண்டு விழா சார்

ந்தோ வெளியிடப்படும் சிறப்பு மலர்களினூடாகவோ தனிநபர் வரலாறுகள் எண்ணிறந்த அளவில் ஆவணப்படுத்தப்பட்டிருக்கின்றன.

1901இல் வெளியிடப்பட்ட விநாசித்தம்பி அவர்களின் 'maniampathiar Santha - thimurai' என்ற ஆங்கில நூலானது குடும்ப வரலாறை ஆவணப்படுத்திய பண்பு கொண்டது. இதே போன்று தமிழில் எழுதப்பட்ட குடும்ப வரலாற்று நூலாக காசிநாதனின் "எமது உற்றார், உறவினர் முறை" (1963) அமைகிறது. சில்லாலை இன்னாசித்தம்பி வைத்திய நிலையத்தால் 1983இல் வெளியிடப்பட்ட காக்கும் கரங்கள் என்ற நூலானது இன்னாசித்தம்பி வைத்திய மரபின் பத்துப் பரம்பரையை இரத்தினச்சுருக்கமாக எடுத்துக் கூறுகிறது.

**அனுபவங்களை ஆவணப்படுத்தும் பண்பு**

தனிநபர் அனுபவங்கள் பெரும்பாலும் நேர்காணல்கள், சொற்பொழிவுகள், மற்றும் கடிதங்கள் வாயிலாகவோ அன்றி பயண இலக்கியங்களாகவோ ஆவணப்படுத்தப்படும் பண்பு பொதுவானதாகும். சுதந்திரன் பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட சுவாமி சச்சிதானந்தாவின் கைலாசம் கண்டேன் என்ற தலைப்பிலான பயண அனுபவங்கள் பின் 1960இல் கண்டி திவ்விய ஜீவன சங்கத்தால் நூல் வடிவில் வெளியிடப்பட்டது. ஈழத் தமிழர் போராட்டவரலாற்றில் தனது நூறு நாள் சிறையனுபவங்களை "தடுப்புக்காவலில் நாம்"(1961) என்ற தலைப்பில் புதுமைலோலனால் தனது மகள் அன்பரசிக்கு மடல்களாக வரையப்பட்டிருக்கிறது.

**மொழிசார் சொற்களை வரிசைப்படுத்தித் தரும் பண்பு**

சொற்களின் தொகுப்பு சார்ந்த ஆவணவாக்கப் பணியில் நூல்களின் சொல்லடைவாக நூலில் கையாளப்படும் முக்கிய சொற்களையும் அதன் அமைவிட பக்கத்தையும் நூலின் இறுதியில் உள்ளடக்குதல், அருஞ்சொல் அகராதியாக துறை சார்ந்த அருஞ்சொற்களையும் அதற்கான விளக்கத்தையும் தருகின்ற வகையில் குறித்த நூலின் ஆரம்ப அல்லது இறுதிப்பகுதியிலோ அன்றி தனி நூலாகவோ உருவாக்கப்படல், மொழியின் சொல்வளத்தை அகர ஒழுங்கில் தரும் ஒரு மொழி, இரு மொழி மற்றும் பலமொழி அகராதி வடிவத்தில் தொகுக்கப்படல், குறிப்பிட்ட பொருட்துறை சார்ந்த அருஞ்சொற்களுக்கான விளக்கங்களைப் பட்டியலிடுகின்ற பொருள் அகராதியாக உருவாக்கப்படல் போன்ற பண்புகளை இனங்காண முடியும்.

ஜி.யூ போப் அவர்களால் 1900 ம் ஆண்டு திருவாசகத்துக்குச் செய்யப்பட்ட ஆங்கில தமிழ்ச் சொல்லடைவு நூலின் பகுதியாக உருவாக்கப்படும் சொல்லடைவுப் பண்பைக் கொண்டது. தமிழ்மொழியின் சொல்வளத்தை அகர வரிசையில் முழுமையாகத் தரும் முதல்முயற்சியாக 58,500 சொற்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்ட யாழ்ப்பாண அகராதியானது (1842), ஒரு மொழி அகராதிக்கான பண்பைக் கொண்டது. சங்க இலக்கியங்களிலும், சங்க மருவிய இலக்கியங்களிலும் பிற்றைச் சான்றோர் இலக்கியங்களிலும் வருகின்ற அருஞ்சொற்களாகிய இலக்கியச் சொற்களை தொகுத்து உருவாக்கப்பட்ட குமாரசுவாமிப்புலவரின் இலக்கியச் சொல்லகராதி, சொற்பொருளுக்கு அடிப்படை ஆதாரமாக நூற்சான்றுகளைப் பயன்படுத்தும் புதிய பண்பை உள்ளடக்கி

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கு. கதிரவேற் பிள்ளையின் அரும்பணியில் உருவான தமிழ்ச் சொல் அகராதி, ந.சி கந்தையாபிள்ளையின் செந்தமிழ் அகராதி(1950) தமிழ்ப்புலவர் அகராதி, தமிழ் இலக்கிய அகராதி (1953) காலக்குறிப்பு அகராதி 1960, திருக்குறள் அகராதி (1961) போன்றன ஒரு மொழி அகராதிப்பண்பு கொண்டவை.

**நூல்விபரத்தரவுகளைத் திரட்டித்தரும் பண்பு**

நூல்விவர ஆவணவாக்கமானது நூலின் அடிப்படைத் தகவல்களை மட்டும் தரும் முறைப்படுத்தப்பட்ட நூல்விவரப்பட்டிய லாகவோ அல்லது நூலின் விவரங்களுடன் நூல் பற்றிய சிறு குறிப்புகளை உள்ளடக்கும் குறிப்புரை நூல்விவரப்பட்டியலாகவோ அதுவுமன்றி குறிப்பிட்ட நூல் தொடர்பான அதிகளவு விவரங்களைத் தரக்கூடிய விளக்க நூல்விவரப்பட்டியலாகவோ அமையலாம்.

முறைப்படுத்தப்பட்ட வகையில் நூல் களின் விவரங்களைத் தரும் பண்பானது பொதுவானதும் அதிகம் வழக்கிலுள்ளது மான நடைமுறையாக உள்ளது. இது படைப் பாளர் நூல்விவரப்பட்டியலாகவோ அல்லது பொருள் சார் நூல்விவரப்பட்டியலாகவோ அமையலாம். பொருள் சார் நூல்விவரப்பட்டி யலானது நாடு, மொழி, இனம், பொருட் துறை என மேலும் வகைப்படுத்தப்படுகிறது. முறைப்படுத்தப்பட்ட நூல்விவர ஆவணவாக் கத்தின் முன்னோடி என்ற பெருமையையும் சைமன் காசிச்செட்டியே பெறுகின்றார். 1848 ம் ஆண்டு யூன் 3, 1849 பெப்ரவரி 24, மற்றும் டிசம்பர் 1 ஆகிய திகதிகளில் திகதி இலங்கை றோயல் ஏசியாற்றிக் சங்கத்தில் இவரால் வாசிக்கப்பட்ட தமிழ் நூற்பட்டியலானது ஈழத்து நூல்விபரப்பட்டியல் வரலாற்றின் முன்னோடி முயற்சி எனக் கருதத்தக்கது. மூன்று பிரதான பொருட்தலைப்புகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இப்பட் டியலின் முதலாவது பிரிவான மொழியியலில் 74 நூல்களின் விபரங்களும் இரண்டாவது பிரிவான புராண இலக்கியம் மற்றும் வரலாறு வாழ்க்கைச் சரிதம் என்ற பகுதியில் இந்து க்கள், கிறிஸ்தவர், இஸ்லாமியர் ஆகிய மூன்று மதம் சார்ந்தும் உள்ள படைப்பாளரின் 82 ஆக்கங்கள் பற்றிய தகவல்களும் மூன்றாவது பிரிவான சமயம் தத்துவம் பற்றிய பகுதியில் 153 நூல்களும் ஆக மொத்தம் 309 நூல்களின் விபரங்கள் இடம்பெறுகின்றன. தமிழ் தவிர் ந்த ஏனைய மொழிகளில் வெளியிடப்பட்ட தமிழியல் சார்ந்த 1322 நூல்களை பதினான்கு பொருட்தலைப்புகளின் கீழ் பட்டியல் படுத்துகின்ற தனிநாயகம் அடிகளின் 'Reference guide to Tamil Studies'(1966), 1955-70 காலப்பகு தியில் ஈழத்தில் எழுந்த நூல்களின் விவரங் களை பதினொரு தலைப்புகளில் ஒழுங்குபடுத் தித்தரும் கனகசெந்திநாதனின் "ஈழத்துத் தமிழ்நூல் வழிகாட்டி"(1971), இலங்கையில் முஸ்லிம் எழுத்தாளர்கள் ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை 1977 நூல்களில் கால அடிப்படையில் எடுத்து க்கூறும் "சுவடி ஆற்றுப்படை" (4 தொகுதிகள் 1850-2000) என்பன முறைப்படுத்தப்பட்ட நூல்விவரப்பட்டியற் பண்பைக் கொணடவை.

அப்புத்துரையின் "காங்கேயன் கல்வி வட்டாரத்தில் எழுந்த நூல்கள்" என்ற நூல் விபரப்பட்டியலும், 'batticalonia' என்ற பெயரில் மட்டக்களப்புப் பிரதேசம் சார்ந்த ஆக்கங்களின் தொகுப்பான செல்வராஜாவின்

நூல்விவரப்பட்டியலும் பிரதேசம் சார்ந்த நூல்களின் விவரங்களை முறைப்படுத்திய ரீதியில் தரும் பண்பைக் கொண்டிருக்கிறது.

இலண்டனிலிருந்து 2000ம் ஆண்டு முதல் செல்வராஜா அவர்களால் வெளியிடப் படும் "நூல்தேட்டம்" குறிப்புரைப் பண்பை யும் உள்ளடக்கிய தொன்று. இலங்கை எழுத் தாளர்களால், தமிழில் வெளியிட்ட அனை த்து நூல்களும் குறிப்புரையுடன் கூடியதாக இத்தொகுப்பில் இடம்பெறுகின்றது. ஒவ் வொரு தொகுதியிலும் 1000 நூல்கள் என்ற ரீதியில் இதுவரை எட்டு தொகுதிகளில் 8000 ஈழத்துத் தமிழ் நூல்கள் பற்றிய தகவல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. 1970 இல் உருவான எவ்.எக்ஸ்.சி நடராசாவின் "ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு" விளக்க நூல்விவரப்பட்டியல் பண்பைக் கொண்டிருக்கிறது. 1993இல் சிவசண்முகராஜாவினால் எழுதப்பட்ட "ஈழத் துச் சித்த மருத்துவ நூல்கள்: ஓர் அறிமுகம்" என்ற நூலும் விளக்க நூல்விவரப்பட்டியல் என்ற வகைக்குள் அடங்குகின்றது. 1980 களுக்குப் பின்னர் குறிப்பிட்ட படைப்பாள ரின் ஆக்கங்களைப் பட்டியற்படுத்தும் பண்பு இனங்காணப்படுவதுடன் நாவலர், கைலாச பதி, சிவத்தம்பி, கமால்தீன், எவ்.எக்ஸ். சி நடசாசா ஆகியோரின் ஆக்கங்களின் விவரங் கள் பட்டியல்படுத்தப்பட்டு நூலுருவம் பெற்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

**பத்திரிகைச் செய்திகளின் பதிவு பேணும் பண்பு**

பத்திரிகைச் செய்திகளை வெட்டிப் பொருத்துமான தலைப்புகளில் ஒழுங்கு படுத்தும் பணியானது ஆவணப்படுத்தலின் மிக முக்கிய அம்சமாகக் கருதப்படுகின்றது. இந்த வகையில் ஈழத்தமிழர்களின் 100 வருட வரலாற்றை பத்திரிகைச் செய்திகள் மற்றும் தகவல்கள் இரண்டும் இனைந்த வகையில் ஆவணப்படுத்தி வருங்காலத் தலைமுறையி னருக்கு வழங்கும் ஆவணவாக்கப்பணியாக கடந்த 45 ஆண்டுகளாக குரும்பசிட்டி இரா. கனகரத்தினத்தின் பத்திரிகை துணுக்குச் சேகரிப்பைக் கொள்ள முடியும். இலங்கை வாழ் தமிழர்கள் என்றில்லாது, உலகளாவிய தமிழர்களின் வரலாற்றுப் பதிவுகளை வாழ்க்கை வரலாறுகள், சமய வரலாறுகள், பெரியார்கள், சமயமும் சமயத் தலங்களும், இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள், தமிழக - இலங்கைத் தொல்லியல் ஆய்வுகள், சிங்கள மக்கள் மொழி, பண்பாடு, சிங்களவர் - தமிழர் தொடர்புகள், தமிழர் கலைகள், தமிழர் கலையும் பண்பாடும், உலகளாவிய தமிழர் ஆகிய பொதுத் தலைப்பு மற்றும் தனித்தலை ப்புகளில் ஏறத்தாழ 7000 கட்டுரைகளை அவர் சேகரித்து வைத்துள்ளார். ஒவ்வொரு தலைப் பையொட்டி 10 முதல் 300 கட்டுரைகள் வரை அவருடைய ஆவணக் காப்பகத்தில் உண்டு.

இதேபோன்று சுனாமி: பத்திரிகை நறுக்குகள் என்ற தலைப்பில் சங்கானையைச் சேர்ந்த கணேஷ் அவர்களால் பலதரப்பட்ட பத்திரிகைளிலிருந்தும் வெட்டியெடுக் கப்பட்டு 4500க்கும் மேற்பட்ட பத்திரிகை நறுக்குகளை A3 அளவுள்ள 338 தாள்களில் ஒட்டி 34 பொருட்தலைப்புகளின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்ட 4500க்கும் மேற்பட்ட பத்திரிகை நறுக்குகளும் குறிப்பிடப்பட வேண்டியதொன்று..

இலங்கையில் வெளியிடப்பட்ட பலதரப் பட்ட பத்திரிகைகளையும் மையப்படுத்தி அனலைதீவு சௌந்தரரா ஜனின் தனிப்பட்ட ஆர்வம் காரணமாக தொடங்கப்பட்ட பத்திரிகை நறுக்குகளை உருவாக்கும் பணியானது சுனாமி, வடக்கின் வசந்தம், தேச அபிவிருத்தி, பிரதேச அபி விருத்தி, கல்வி, விவசாயம், மருத்துவம் உள்ளி ட்ட 25க்கும் மேற்பட்ட தலைப்புகளின் உடுவில் மற்றும்

சுன்னாகம் பொது நூலகங்க ளில் சேமிக்கப்பட்டிருக்கிறது. இது பத்திரிகையில் வெளியாகின்ற கட்டுரைகளை மட் டும் வெட்டிப் பொருத்தமான தலைப்புகளின் கீழ் ஒழுங்குபடுத்திச் சேகரிக்கும் பண்பாக இனங்காணப்படுகின்றது. இந்தவகையில் இசை, நடனம், அரங்கு எனக் கலைத்துறையை மட்டும் முதன்மைப்படுத்தி கணிசமான பத்திரிகைத் தகவல்களை ஆவணப்படு த்தியிருக்கும் ஆசிரியர் குகதாசனின் பணியும் குறிப்பிடத்தக்கது.

**தொடர்புடைய தகவல்களைத் தொகுத்தளிக்கும் பண்பு**

ஈழத்தமிழ்ச் சமூகத்தின் அண்மைக் காலங்களில் அதிகம் இனங்காணப்படும் பண்பாக இது உள்ளது. சஞ்சிகைகள் மற்றும் பத்திரிகைகளில் வெளியிடப்படும் ஆக்கங் களையோ தகவல்களையோ ஒரு தொகுப்பாக ஆவணப்படுத்தும் பண்பு ஈழத் தமிழ் இலக்கி யங்களின் முக்கிய போக்காக இனங்காணப் படுகிறது. இந்த வகையில் த.இராமநாத பிள்ளையின் இலக்கிய இலக்கண ஆய்வு ரைகள் (1965), சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்களால் எழுதப்பெற்ற பதிப்புரைகளை தொகுத்து வெளிவந்த "தாமோதரம்" (1971), ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியர் தலையங் கத்தின் தொகுப்பான ந. சபாரத்தினத்தின் "ஊரடங்கு வாழ்வு(1985), சற்றடே றிவியூ ஆங்கலப்பத்திரிகைகளின் தலையங்கம் உட் பட பல பதிவுகளை உள்ளடக்கிய சிவநாயகத் தின் ' Pen and the Gun', தினக்குரல் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத் தொகுப் பாக தனபாலசிங்கத்தின் நோக்கு மற்றும் ஊருக்கு நல்லது சொல்வேன் போன்றவை, பத்தி எழுத்துகளின் தொகுப்பான யேசுராசா வின் தூவானம் போன்றவை இத்தகைய பண்பைக் கொண்டவை. இதே போன்று சஞ்சிகைகளில் வெளிவந்த கவிதைகள் கட்டுரைகள் மற்றும் சிறுகதைகள் அவ்வப் போது தொகுக்கப்பட்டு ஆவணப்படுத்தப் பட்டிருப்பது கண்கூடு.

**சமூக வழக்காறுகளை ஆவணப்படுத்தும் பண்பு**

சமூக வழக்காறுகளை ஆவணப்படுத் தும் பண்பு ஈழத்து இலக்கியங்களில் மிக குறைவாக இனங்காணப்படினும் நாட்டார் பாடல்கள் கணிசமான முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கிறது. முல்லைத்தீவைச் சேர்ந்த த. கைலாயபிள்ளையின் கதிரையப்பிள்ளை (1927), முள்ளியவளையைச் சேர்ந்த சி. ச. அரியகுட்டிப்பிள்ளையின் அருவிச்சிந்து, கதிரையபபிள்ளை, பண்டிப்பிள்ளை, குருவிப் பிள்ளை என்ற தலைப்பிலான அருவி வெட்டு ப்பாடல்கள் (ஆண்டு இல்லை) கீழ்கரவை யம்பதி வ.கணபதிப்பிள்ளையின் வேலப்ப ணிக்கன் பெண்சாதி அரியாத்தை பேரில் ஒப்பாரி(1934), முல்லைமணியின் கமுகஞ் சண்டை(1979) கல்விவெளியீட்டுத் திணைக் களத்தின் நாட்டார் பாடல்கள்(1976), யாழ்ப் பாணம் மு. இராமலிங்கத்தின் வட இலங்கை யர் போற்றும் நாட்டார் பாடல்கள்(1961), தி. சதாசிவ ஐயரின் மட்டக்களப்பு வசந்தன் திரட்டு (1961), சு. வித்தியானந்தனின் மட்டக் களப்பு நாட்டுப் பாடல்கள்(1960) குறிப்பிடத் தக்கவை.

பேராசிரியர் சு. வித்தியானந்தனின் அலங்காரரூபன் நாடகம்(1962), மூவிராசாக் கள் நாடகம்(1966), ஞானசவுந்தரி நாடகம் (1967) போன்றவை கூத்துச் சாந்த ஆவணப் படுத்தல் முயற்சியாகும். பீற்றர் பேர்சிவல் பாதிரியாரின் திருட்டாந்த சங்கிரம் (1843) பழமொழி சார்ந்து 1823 பழமொழிகளை தொகுப்பாகும். சச்சி மாஸ்ரரின் மக்கள் வாழ்வில் பழமொழி என்பது விளக்கக் கட்டுரைப் பாங்கைக் கொண்டது. சி.

பத்மநாதனின் இலங்கைத் தமிழர் தேச வழமைகளும் சமூக வழமைகளும் என்ற நூல் சமூகத்தின் சட்டநெறிகளைத் தொகுத்துத் தரும் ஒரு தொகுப்பு ஆவணப் பண்பு கொண்டது.

**உருநிலைச் சேகரிப்புகளை ஆவணப்படுத்தும் பண்பு**

நூலகமொன்றின் முக்கிய தகவல் வளமாகக் கருதப்படும் உருநிலைச் சேகரிப்புகளில் கலைப்பொருட்கள், கருவிகள், உபகரணங்கள் போன்றவை உள்ளடங்கும். இவை 1. கலை பிரயோக அறிவியல் சார்ந்தவை. (எ-டு விளையாட்டுப் பொருட்கள்) 2. மனிதப்பண்பியல் சார்ந்தவை (எ-டு இசைக்கருவிகள்) 3. அறிவியல் சார்ந்தவை (எ-டு மனித எலும்புத் தொகுதி) 4. சமூக அறிவியல் சார்ந்தவை (நாணயங்கள், தபால் தலைகள்) என நான்கு வகைப்படும். உருநிலைச் சேகரிப்புகளை ஆவணப்படுத்தும் தன்மையில் பொழுதுபோக்கு நோக்கம், பண்பாட்டு அம்சங்களை பாதுகாக்கும் நோக்கம் ஆகிய இரண்டும் முக்கியம் பெறுகின்றன. இந்த வகையில் அருள்சந்திரனின் "யாழ்ப்பாணப் பெட்டகம்" கணிசமானளவு யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய கட்டிட அமைப்புகள், கலைகள், பண்பாட்டுப் பொருட்கள் உள்ளிட்ட உருநிலைச் சேகரிப்புகளை 32 பொருட்தலைப்புகளில் 3250 புகைப்படங்களினூடாக ஆவணப் படுத்தியிருக்கிறது. தபால்தலைகள் மற்றும் நாணயங்களை அதன் உண்மை வடிவத்தில் ஆவணப்படுத்துவதாக அனலைதீவு தர்சனின் பணி அமைகிறது. ஆயிரம் மூலிகைத் திட்டத்தினூடாக தமிழர்பிரதேசத்தில் காணப்படும் அரிய மூலிகைகளை ஓரிடத்தில் சேகரித்து பராமரிப்பது மட்டுமன்றி அது தொடர்பான விவரக்குறிப்புகளைப் பட்டியல்படுத்துவதாகவும் மூலிகை பாதுகாப்புச் சபையின் ஸ்தாபகர் வைத்தியர் சந்திர மோகனின் பணி அமைகிறது.

**படியெடுத்தல் மூலம் மீட்டுருவாக்கும் பண்பு**

மூல ஆவணத்தில் எந்தவித மாற்றமும் செய்யாது அதனை பாதுகாப்பு நோக்கங்கருதி மீள வெளியிடும் இப்பணியானது எழுதிப் படியெடுத்தல், கையெழுத்துப் பிரதியை அச்சுக்கு மாற்றுதல், கையெழுத்துப் பிரதியை பரிசோதித்து அச்சுக்கு மாற்றுதல், அச்சுப் பிரதியை மீள அச்சிடுதல், அச்சிலுள்ளதை அதன் வடிவத்திலேயே ஆவணப்படுத்தல் போன்ற பலதரப்பட்ட பண்புகளைக் கொண்டது. எழுதிப் படியெடுக்கும் பணியானது அச்சின் கண்டுபிடிப்பிற்கு முன்னரான பொது வழக்கிலிருந்த ஆவணவாக்கச் செயற்பாடாகும். நாவலர் மற்றும் பதிப்புப் பணியில் ஈடுபட்ட 19ம் நூற்றாண்டுப் புலமையாளர்களின் பதிப்புப் பணிக்கு மூலமாக இருந்தது எழுத்துமூலத்திலிருந்த மூல ஆவணத்தின் பிரதிகளேயாகும். இது சுவடிகளில் எழுதப்பட்ட ஆக்கங்களை பல்வேறு பிரதிகளாக ஆக்கும் செயற்பாட்டைக் குறிக்கிறது. பஞ்சாட்சரசர்மாவின் "அஷரபோதினி", விவித்த பதாவலி போன்ற கிரியா பத்ததிகள் படியெடுத்தல் மூலம் மீட்டுருவாக்கும் பண்பு கொண்டவை. (கோப்பாய் சிவம் 1980)

இதுதவிர அச்சிடப்பட்ட ஆவணமொன்றின் பிரதிகள் அனைத்தும் அழிந்த நிலையிலோ எடுக்கமுடியாத நிலையிலோ இருக்கும் அதேசமயம் மீள்பதிப்புச் செய்வதற்கான வாய்ப்பும் இல்லாத போது அச்சுப் பிரதியை மீண்டும் கையெழுத்துப் பிரதியாக ஆவணப்படுத்திய முயற்சியொன்றும் இவ்வாய்வில் இனங்காணப்பட்டிருக்கிறது. குமாரசுவாமிப்புலவரின் இலக்கியச் சொல்லகராதியானது அவரது மகன் முத்துக்குமார சுவாமிப்பிள்ளையால் 1965இல் நான்கு தொகு

திகளாக எழுதித் தொகுக்கப்பட்டு குமாரசுவாமிப்புலவர் நூலகத்தில் பேணப்படுகிறது.

**அச்சுப்பதிப்பின் வழி பாதுகாக்கும் பண்பு**

ஈழத்தமிழரின் பெரும்பாலான ஆரம்ப கால இலக்கியங்கள் சுவடிகளில் பதியப்பட்டு பின்னர் கையெழுத்துப்பிரதிகளாக தாள்களில் பேணப்பட்டு அதன் பின்னர் அச்சு வடிவம் பெற்றவை. சித்தமருத்துவத்தின் முக்கியத் துவத்தை உய்த்துணர்ந்து அது தொடர்பான சுவடிகளை தேடிச் சேகரித்து அவற்றை அடிப்படையாகக் கொண்டு ஏழாலை க. பொன்னையா அவர்களின் பதிப்பில் உருவான பரராசசேகரத்தின் ஏழு தொகுதிகள் (1930-36), சொக்கநாதர்தன்வந்திரியம் (1933), செகராசசேகர வைத்தியம், அமிர்தசாகரம் (1927), பதார்த்தசூடாமணி (1927), வைத்திய சிந்தாமணி (1932). வைத்திய புராணம் (1933), அங்காதிபாதம், வைத்தியதெளிவு (1930) போன்றவை சுவடிநிலையிலிருந்து நேரடியாக அச்சுப்பதிப்பாகவும் முத்துக்குமாரசுவாமிப் பிள்ளையின் கவித்திரட்டு (1964) கையெழுத்துப் பிரதிநிலையிலிருந்து அச்சுப்பதிப்பாகவும் மாற்றம் பெற்றவை.

**மீள்பதிப்பினூடாக தகவலைப் பரவலாக்கும் பண்ப**

தமிழ்மண் பதிப்பகம், ஆசிய கல்விச் சேவை நிறுவனம் ஈழத்தமிழரின் ஆரம்பகால இலக்கியங்களை அழியவிடாது பாதுகாக்கும் நோக்குடன் மீள்பதிப்புப் பணிகளை மேற்கொண்டிருக்கின்றன. ஈழத் தமிழ் இலக்கியம் சார்ந்து மீள்பதிப்புப் பணிகள் எண்ணிறந்த அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளமையால் இதற்கான எடுத்துக்காட்டுகளை இங்கு பட்டியலிடுவது தேவையற்றது எனினும் ஒருசில ஆரம்ப கால நூல்களின் மீள்பதிப்பு பணிகளை குறிப்பிடுவது பொருத்தமானது. மீள்பதிப்புப் பணிகளில் சுன்னாகம் குமாரசாமிப் புலவரால் பதிப்பிக்கப்பட்ட இதோபதேசம் (1886), சகுலமலைக்குறவஞ்சி நாடகம் (1895) இரண்டும் குறிப்பிடத்தக்கவை (முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை 1970). கணேசையரின் ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதம் (1939), சுவாமி ஞானப்பிரகாசரின் யாழ்ப்பாண வைபவ விமர்சனம் (1928) போன்றவை குறிப்பிடத்தக்கவை.

**பாடபேத ஆய்வுடன் கூடிய குறை களையும் பண்பு**

சுவடி வடிவில் கவனிப்பாரற்றுக் கிடந்த பழம்பெரும் இலக்கியங்களின் பிரதிகளை தேடிச் சேகரித்து பதிப்பிக்கும் பணியாகவே ஈழத் தமிழ்ச் சமூகத்தின் ஆரம்பகால ஆவணப் படுத்தல் முயற்சிகள் இனங்காணப்படுகின்றது. இத்தகைய பதிப்பு முன்னோடிகளாக ஆறுமுகநாவலரையும் (நாவலர்) சி. வை. தாமோதரம்பிள்ளையையும் (சி. வை. தா) குறிப்பிடுவது மிகப் பொருத்தமானது. பதிப்புத் துறையில் 19ம் நூற்றாண்டின் மத்தியபகுதி நாவலர் காலம் எனப்படுகின்றது. “நல்லைநகர் நாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே சுருதி எங்கே“ சி. வை. தாவினால் புகழப்படுமளவிற்கு நாவலரின் பணி மகத்தானது. சிறந்த உரையாசிரியர், நூலாசிரியர், சொற்பொழிவாளர், பிரசங்கி என்பதற்கும் மேலாக அழிவுறும் நிலையிலிருந்த பெரும்பாலான சுவடி நூல்களை மீளத் தமிழ்ச்சமூகத்திற்கு அளித்த ஆவணவியலாளர் என்பது அனைத்திலும் மேலானது. நாவலரின் பதிப்பு முயற்சிகள் 1849இல் சௌந்தியலகரி மூலமும் எல்லப்பநாவலர் உரையும் என்ற நூலுடன் தொடங்குகின்றன. தொடர்ந்து நாவலர் சூடாமணிநிகண்டு (1849), நன்னூல் விருத்தியுரை மூலமும் உரையும்(1851), திருக்கோவையார் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் (1860), கொலை மறுத்தல் (1860), மறைகையந்தாதி (1860), திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும் (1861), உபமான சங்கிரகமும்

இரத்தினச் சுருக்கமும் (1866) சேதுபுராணம் (1866), இலக்கணக்கொத்து, இலக்கணச் சூறாவளி, தொல்காப்பியச் சூத்திரவிருத்தி (1866), அருட்பா (1866), சிதம்பரமும் மணிக் கோவை (1867), அருணகிரிநாதர் திருவகுப்பு (1867), பதினொராம்திருமுறை (1869), கோயிற்புராணம், நால்வர் நான்மணிமாலை, பெரிய கோயிற்புராணம், பெரியநாயகி கலித் துறை, முதலான எழுபதுக்கும் மேற்பட்ட நூல்கள் பிழையறப் பதிப்பிக்கப்பட்டது (கனகரத்தினம் 2007).

பதிப்புப் பணியில் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதி சி.வை.தா காலம் எனப்படுகின்றது. சி. வை. தாவின் பதிப்புகளில் இறையனார் களவியலுரையும் தொல்காப்பியப் பொருள திகாரமும் தமிழ் அன்னையின் இரு கண்கள் என்றும் இந்த இரண்டையும் பதித்துவியதே சி.வை.தாவுக்கு இம்மைக்கும் மறுமைக்கும் போதுமானது என்கிறார் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை. (கணபதிப்பிள்ளை) இவரின் பதிப்புரைகள் பலதுறைப்பட்ட ஆராய்ச்சிகளைக் கொண்டவை. பதிப்புப் பணியிலே நாவலரை தனது குருவாகக் கொண்ட சி. வை. தா நாவலரின் மறைவுக்குப் பின்னர் பதிப்புப் பணியையே தனது வாழ் நாள் கடமையாகக் கொண்டிருந்தார். இவரது பதிப்பு முயற்சிகள் 1853இல் தொடங்கு கின்றன. நீதிநெறி விளக்கம் (1853), தொல் காப்பியம்- சொல்லதிகாரம்- சேனாவரையம் (1868), வீரசோழியம் - பெருந்தேவனாருரை (1881), தணிகைப் புராணம், இறையனாரகப் பொருள்- நக்கீரருரை (1883), தொல்காப்பியப் பொருளதிகாரம் (1885), கலித்தொகை (1887), இலக்கண விளக்கம், சூளாமணி (1889), தொல் காப்பியச் சொல்லதிகாரம் (1892) முதலான நூல்களைப் பதிப்பித்து வழங்கியதன் மூலம் சிறந்ததொரு ஆவணவியலாளராக இனங்கா ணப்படுகின்றார். குமாரசுவாமிப்புலவரின் யாப்பருங்கலக் காரிகை உரை (1900), ஆசா ரக்கோவை (1900), நான்மணிக்கடிகை (1900), ஆத்திசூடி வெண்பா மற்றும் சிசேத்திர விளக்கம் (1901), உரிச்சொனிகண்டு, பழ மொழி விளக்கம், திருவாதவூரர் புராணம் (1902) ஆகியனவும் இத்தகைய பண்பைக் கொண்டது.

**தொழினுட்பத் துணையுடன் எண்ணிமபபடுத்தும் பண்பு**

ஈழத்தமிழர் இலக்கியங்களை எண்ணி மப்படுத்தும் பணியில் நூலக நிறுவனத்தின் பணி அளப்பரியது. இதனால் உருவாக் கப்பட்ட எண்ணிம நூலகமானது நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுபிரசுரங்கள் உட்பட்ட 12,000க்கும் மேற்பட்ட ஆக்கங் களை முழுமையாக எண்ணிமப்படுத்தியிரு ப்பது குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை**

மூலவகை ஆவணப்படுத்தலானது பொருட்துறைசார்ந்த புலமையில் முழுக்க முழுக்க தங்கியிருக்கும் அதேசமயம் கருவிசார் ஆவணவாக்கப் பணி என்பது பொருட்துறை சார்ந்த புலமை, ஆவணப்படுத்தலுக்கான நூலகவியல் அறிவு ஆகிய இரண்டையும் வேண்டிநிற்பதொன்று. ஈழத்தமிழ்ச்சமூகத் தின் ஆவணவாக்கப்பணியானது தனிநபர் களின் ஆர்வத்தின் அடிப்படையிலேயே கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது என்பதை மேற்குறித்த ஆய்வு வெளிக்காட்டி நிற்பதுடன் ஆவணப்படுத்தலின் பலதரப்பட்ட பண்புகளிலும் ஆக்கபூர்வமான பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதையும் இந்த ஆய்வு சுட்டி நிற்கிறது.

**உசாத்துணைகள்**


1. Harrod, Leonard Montague. Harrod's librarians' glossary of terms used in librarianship, documentation and the book crafts and reference book. 6th ed. London: Gower.pp254.

2. Ranganathan,S.R(1974). Physical bibliography for librarians. 2nd ed. Bombay: Asia publishing house.. p21.

3. Reitz, Joan.M. ( 2006). Online Dictionary for Library and Information Science. http://www.abc-clio.com/ ODLIS/ odlis b.aspx

4. Selvarajah,S.J (1988). Batticaloania: a bibliography of Batticaloa. Batticaloa: Municipal Council. 81p

5. Simon Casie Chitty (1949). The Tamil Plutarch. Colombo: General publishers. 135p

6. Thani Nayagam, Xavier S.(1966). A Reference guide to Tamil Studies: books.Kuala Lumpur:University of Malaya Press. 122p.

7. Vali North Cultural society (2008). Yarlppanap pettakam kankardchi-01(The Exhibition on Treasure House of Jaffna-01) Yarl Thinakkural. 14th.Oct.2008. p3.

8. *அப்புத்துரை, சி. (1985) காங்கேசன் கல்வி வட்டாரத்தில் எழுந்த நூல்கள். காங்கேசன் கல்விமலர். காங்கேசன்துறை: காங்கேசன்துறை கல்விவலய அதிபர்கள் சங்கம் பக் 209-223.*

9. *அப்புத்துரை, சி. (1939). ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதம். சென்னை தமிழ்மண் பதிப்பகம். 156 ப.*

10. *கனகரத்தினம், இரா. கனகரத்தினம், பி (1996). உலகத் தமிழர் அவணக் காப்பகம். கண்டி: ஆசிரியர். 26 ப.*

11. *கோப்பாய் சிவம் (1980). கிரியா பத்ததிகள் தொடர்பான கையெழுத்துப் பிரதிகளின் விளக்கப் பட்டியல். (வெளியிடப்படவில்லை).*

12. *சண்முகதாஸ், மனோண்மணி (2007). சி. வை. தாமோதரப்பிள்ளை. பொழும்பு: குமரன். ப 20.*

13. *சதாசிவம்பிள்ளை, அ. (1886) பாவலர் சரித்திர தீபகம். மானிப்பாய்: ஸ்றோங்அஸ்பரி இயந்திரசாலை.*

14. *சந்திரகுமார், எம் (2009). பழைய வரலாறுகள் எதிர்கால ஆவணங்கள்: கணேசுடனான நேர்காணல். யாழ் தீபம்* www.virakesari.lk.

15. *நடராசா, எவ். எக்ஸ், சி (1970) ஈழத்துத் தமிழ்நூல் வரலாறு. கொழும்பு: அரசு வெளியீடு*

16. *பூலோகசிங்கம், பொ (1970). தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெருமுயற்சிகள். யாழ்ப்பாணம்: கலைவாணி புத்தக நிலையம். 276 ப.*

17. *முத்துககுமாரசுவாமிப்பிள்ளை, கு (1970). குமாரசுவாமிப்புலவர் வரலாறு. சுன்னாகம்: புலவரகம். ப. 43*

18. *ஜமீல், எஸ். எச். எம் (1994). சுவடி ஆற்றுப்படை. 4 தொகுதிகள். கல்முனை: இஸ்லாமிய நூல் வெளியீட்டுக் கழகம்.*



# நினைவாற்றலும் மாணவர்களும்

Dr. திருமதி. அஜந்தா கேஷவராஜ்
நரம்பியல் நிபுணர்,
யாழ் போதனா வைத்தியசாலை.

ஞாபக சக்தி என்பது நினைவாற்றலைக் குறிக்கும் சொல்லாகும். இது ஒருவரால் எவ்வளவு தரவுகளை மூளையில் தேக்கி வைத்திருக்க முடியும் என்பதைக் கணிப்பிடும் ஓர் அளவீட்டு முறை எனலாம்.

**புத்திக் கூர்மை (Intelligence)**

புத்திக் கூர்மை எனப்படுவது நுணுக்கமான அறிவாகும். இது ஒருவரால் எவ்வளவு தூரம் நுட்பமான முறையில் தன்னகத்தேயுள்ள தரவுகளையும், செயற்திறன்களையும் (Skills) உபயோகிக்க முடியும் என்பதை அளவிடுவதாகும். மேலோட்டமாகப் பார்க்குமிடத்தில் இவ்விரு சொற்களும் ஒன்றுபட்டுக் காணப்பட்டாலும் இவை ஒன்றுக்கொன்று வேறுபட்ட கணிப்பீட்டைக் கொண்டுள்ளன.

**மட்டுப்படுத்தப்பட்ட அறிவும் வினைத் திறனும்**

ஒருவருக்கு அதிகளவு தேக்கி வைக்கும் ஆற்றல் இருந்தாலும் அவருக்கு அதை எவ்வாறு பிரயோகிப்பது என்பதை அறிந்திராவிடின் அவ்வறிவால் பயனேதுமில்லை. மாறாக, ஒருவர் மட்டுப்படுத்தப்பட்ட அறிவினை வைத்துக் கொண்டு தமது நுண்ணறிவினைப் பயன்படுத்துவதன் மூலம் வினைத்திறனுடன் செயற்பட வாய்ப்புக்கள் உள்ளன. அங்ஙனமாயின் மூளையின் எப்பகுதியில் இத்தகைய செயற்பாடுகள் ஏற்படுகின்றன. இது எவ்வாறு கட்டுப்படுத்தப்படுகின்றது என்பதை ஆராய்வோம்.

**மூளை நரம்புத் தொகுதி**

மனித மூளையானது பல மில்லியன் நரம்புக்கலன்களால் பின்னப்பட்ட ஓர் அங்கமாகும். இதன் சரியான தொழிற்பாடு முறையாக அறியப்படவில்லையென்றாலும் அதன் முக்கிய சில தொழிற்பாடுகள் பற்றிப் பல ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுத் தெளிவான முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

**ஞாபக சக்தி**

ஞாபக சக்திக்கு மூளையின் "Hippocampus" எனப்படும் பகுதி பொறுப்பாக உள்ளது. இது Temporal Lobe எனப்படும் மூளையின் பாகத்தில் சற்று உட்பகுதியில் அமைந்துள்ளது. எமது சுட்டு விரல்களைக் காதுகளின் சோணைக்குப் பின்னேயுள்ள எலும்புப்பகுதியைத் தொடும் முறையில் பிடிப்போமானால் இரு சுட்டுவிரல்களும் எமது "Hippocampus"

எனப்படும் மூளைப் பகுதியை நோக்கிய படி இருப்பதை நாம் உணர்ந்து கொள்ள லாம்.

**மனித மூளையின் வளர்ச்சி வரையறைக் குட்பட்டதா?**

ஒரு முழு மனிதனின் மூளையிலுள்ள கலங்களின் எண்ணிக்கை அவன் குழந்தை யாகத் தாயின் கருவறையில் இருக்கும் போதே தீர்மானிக்கப்படுகின்றது. இம் மூளைக் கலங்களின் தன்மை, அதன் வலையமைப்பு மற்றும் ஒழுங்கு முறைகள் என்பவை குறிப்பாக அதன் கர்ப்ப காலத் தில், அதுவும் முதல் மூன்று மாத காலங் களில் தீர்மானிக்கப்பட்டு விடுகின்றன. மூளைக் கலங்களின் பெருக்கம், அதனு டைய அமைவிடம் என்பன முதல் மூன்று அல்லது நான்கு மாதங்களின் பின் நிறுத்தப்பட்டாலும் மூளைக் கலங்கள் படிப்படியாக வளர ஆரம்பிக்கப்படு கின்றன. இவ் வேளையில் ஒட்டுமொத்த மூளைக் கலங்களின் எண்ணிக்கையானது மாற்றப்படமாட்டாது. ஆனால் ஒவ் வொரு கலமும் பருமனில் அதிகரித்துக் கொண்டும் அதேவேளை அதன் கொழு ப்பு உறையை (Myeline Sheath) யும் ஒரு கலம் இன்னொரு கலத்துடன் தொடர்பு கொள் ளும் இரசாயனப் பதார்த்தத்தின் அள வினையும் (Chemical Trasmitters) அதிகரி த்துக் கொண்டு செல்லும். இவ்வளர்ச்சி யினைப் பருமட்டாகக் குழந்தையின் தலையின் அளவினைக் கணிப்பிடுவதன் மூலம் (Head Circumfernce) அறிந்து கொள்ளலாம்.

இது குழந்தையின் நான்கு வயது காலப் பகுதி வரை நடைபெறுகின்றது. பின்னர் மூளையின் பருமன் வளரும் வீதம் படிப்படியாகக் குறைந்து விடும். ஆனால், ஞாபகசக்தி வரையறையின்றி அதிகரித்துச் செல்லும். ஒரு மூளைக் கலம் இன்னொரு மூளைக் கலத்தோடு தொடர்பினை ஏற்ப டுத்தும் தன்மை நிறுத்தப்படுவதில்லை. இது தொடர்ந்து கொண்டே செல்லும். இதன் முலம் சிக்கலான வலைப் பின்னல் கள் உருவாக்கப்படுகின்றன. இச் செயற் பாட்டிற்கு இரசாயனப் பதார்த்தங்களே காரணமாகும். இதனால் ஞாபகசக்தி வளர்கின்றது.

**இந்த வலிமையான வலைப்பின்னலை உருவாக்குவது எப்படி?**

நல்லதொரு பல்வேறுபட்ட சூழற்கார ணிகள் (Healthy Enviornmental Circum Stances)

தன்னூக்கம் (Self Mortivation)

அவதானம் (Attention)

ஆர்வம் (Interest In Knowing Thungs)

விடாமுயற்சி (Hard Working)

என்பன முக்கியமாகும்.

**மாணவர்களின் செயற்பாடு**

மாணவரைப் பொறுத்த வரை அவர் களது அறிவு ஒரு குறித்த காலத்திற் குள் பெற்றுக் கொள்ள வேண்டும். தான் பெற்ற அறிவைத் தகுந்த முறையில் பயன்படுத் தவும் தெரிந்திருக்க வேண்டும். இதற்கான இலகு முறைகள் உண்டு. முதலில் குறிப் பிட்ட பாட அலகு சம்பந் தமான வினாக் களை அறிந்திருந்தாலும் அவற்றிற்கான

விடையினை அறியும் வண்ணம் பாட விதானத்தை மேலோட்டமாக வாசித்த லாகும். இதற்குக் குறிப்பாக தலையங் கங்களையும், அதனுடன் இணைந்த பந்திகளையும் மேலெழுந்த வாரியாகப் படித்தல் வேண்டும். பின்னர் மீண்டும் அக் குறிப்பிட்ட வினாக்களுக்கு விடையளிக்க முயற்சிக்க வேண்டும். அப்போது நாம் அப் பாடவிதானத்தின் முக்கிய பகுதிகளை அறிந்துகொள்ளலாம். இதனைக் குறிப் பேட்டில் எழுதுவதன்மூலம் கற்றுக் கொள்ளமுடியும். பின்னர் அந்த அலகை உன்னிப்பாக விளங்கி வாசித்து அறிந்து கொள்வதன் மூலம் (Scanning) அதனைப் பூரணப்படுத்தலாம். மீண்டும் பயிற்சி செய்வதன் மூலம் நீண்ட காலத் திற்கு மூளையில் தேக்கி வைக்கவும் முடியும். (Long Term Memory).

நாம் சாதாரணமாகப் படிக்கும் அல்லது அறியும் தகவல்கள் மூளையின் தற்காலிக சேமிப்புப் பகுதிக்கே (Short Term Memory) செல்கின்றது. ஆனால் மீண்டும் மீண்டும் கருத்தூன்றிப் படிக்கும் போது மூளைக்கலங்களுக்கிடையிலான வலைப் பின்னல்கள் அதிகரிக்கும். இங்ஙனம் பெறப்பட்ட தகவல்கள் ஆரோக்கிய மடைந்த அவை நிரந்தர ஞாபக சக்தியாக (Permanent Memory) மாறுகின்றது. வேறு புதிய கருத்துக்களைச் சேர்க்கும் போதும் படிப்பவை புதியவையாக இருப்பினும் நேரடியாகவே நிரந்தரமான ஞாபகத் திற்குச் செல்கின்றன. படிப்பது மட்டு மன்றிப் படித்தவற்றை மீட்டுக்கொள் வதும் முக்கியமாகும். இங்ஙனம் தொட ர்ந்து செல்வதால் மூளைக் கலங்களுக்கு முடிவில்லாத தகவல்களைத் திரட்டி வைக்க முடியும் என்பதைக் கல்வியில் ஆர்வமுள்ளோர் அறிந்து கொள்வது அவசியமாகும்.

**ஞாபகசக்திக்கு வலிப்பு ஒரு காரணியா?**

ஞாபகசக்திக்கு வினைத்திறனான மூளையின் வலையமைப்பு மிக முக்கிய மாகும். வலிப்பின் போது இவ் வலைப் பின்னலில் பாரிய குறுஞ்சுற் றோட்டம் ஏற்படுகின்றது. இதனால் படிப்படியாக ஞாபகசக்தி குறைகின்றது.

நினைவுத் திறன் பாடசாலை மாண வர்களின் கற்றலுக்கு மிக இன்றியமை யாதது. இவர்களுக்கு ஏற்படும் திடீர் மந்த நிலைக்கு வலிப்பு ஒரு காரணியாகலாம். எனவே பாடசாலை செல்லும் மாணவர் களின் துலங்கலில் காரணமில்லாத தளர்வு ஏற்படும் போது பெற்றோர்களும் ஆசிரிய ர்களும், குழந்தையின் செயற்பாட்டில் அதிக கவனஞ் செலுத்தி இது பற்றி ஆராய்ந்து தீர்வு காண்பது மிக முக்கிய மாகும்.

# பெண்களின் கல்வியும் சமுதாய முன்னேற்றமும்

**இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்**
Ma (medical antihropology) BA (Hons)
Flim 7 Vedio, Cert in health Ed, RGN, RSCN

மக்களின் கல்வியறிவு, உலகத்தில் நடக்கும் எந்த மாற்றத்திற்கும் அடித்தளமாகிறது. அது சமயத்துடன்சம்பந்தப்பட்டதாக விருக்கலாம். அல்லது விஞ்ஞானத்துடன் சம்பந்தப்பட்டதாகவிருக்கலாம். அவைகளின் வளர்ச்சிக்கும் மாற்றங்களுக்கும் ஒரு சமுதாயம் மேற்கொள்ளும் கல்வி அமைப்பு இன்றியமையாதது. அதிலும் பெண்களின் கல்வி ஒரு காத்திரமான அறிவுத்தளத்தில் சமுதாயம் வளர உதவுகிறது. சமுதாயத்தின் மூலமான ஒரு குடும்பம் நல்லமாதிரியமைய அந்தக் குடும்பத்தைக் கொண்டு நடத்தும் பெண்ணின் அறிவு உதவிசெய்கிறது. இன்றையகால கட்டத்தில் பெண்களின் படிப்பு பல விதத்திலும் வளர்ச்சியடைந்திருக்கின்றது. வீட்டில் அடைந்து கிடந்த பெண்கள் விண்வெளிப் பிரயாணம் செய்ய அவர்களின் கல்வி துணை செய்கிறது. குடும்பத்தின் பொருளாதாரம் சீர் சிறப்பாகவிருந்து நிம்மதியான வாழ்க்கை வாழ, பெண்கள் படிப்பதும் வேலைக்குப் போவதும் தவிர்க்க முடியாத அம்சமாக இன்று கருதப் படுகின்றது. கடந்த இருநூறு வருடங்களாகத் தொடரப்படும் பெண்கள் கல்வியால் இலங்கை பல விதத்திலும் மற்றைய தென்னாசிய நாடுகளை விட முன்னேறியிருக்கிறது. உதாரணமாக, குழந்தைகள் ஆரோக்கியமாக வளரப் பெண்களின் படிப்பும் அதனால் அவர்கள் பெறும் பல் விதமான அறிவும் மிகவும் இன்றிய மையாதது என்பதற்கு, இலங்கையில் பெண்களின் படிப்பு நிலை உயர தாய்சேய் நலமும் உயர்ந்திருக்கின்றது. என்று சுகாதார திணைக்கள அறிக்கைகள் சொல்கின்றன.

பெண்கள் சமுதாயத்தின் கண்கள் என்று முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கண்கள் தங்களுக்கும் தங்கள் சமுதாய முன்னேற்றத்துக்கும் வளம் கொடுக்கும் நல்ல பல பாதைகளை அவர்கள் பெறும் கல்வி மூலம் கண்டு தெரிந்துகொள்கிறார்கள். செல்வத்தில் பெரும் செல்வம் கல்விச் செல்வம் என்பதை உணர்ந்து கொண்ட எங்கள் மூதாதயர் தங்களால் முடிந்தவரை அந்தச் செல்வத்தைப் பெண்களுக்கும் கொடுக்க நினைத்துப் பல கல்வி நிலையங்களைப் பெண்களுக்காக அமைத்தார்கள். அவற்றில் இராமநாதன் பெண்கள் கல்லூரியும் ஒன்றாகும். இலங்கையின் தமிழ்ப் பெண்களின் கல்விக்கு அத்திவாரமிட்ட பல பழைய ஸ்தாபனங்களில்

ஒன்றான, இராமநாதன் கல்லூரியின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் அத்தனை பேருக் கும் எனது வாழ்த்துக்களைச் சொல்லிக் கொண்டு பெண்களின் கல்வியால் அவர்களின் குடும்பம் மட்டுமல்ல அவர்கள் வாழும் சமுதாயமும், எப்படிப் பயன்பெறுகிறது. என்பதையிட்டு இச்சிறு கட்டுரையைப் படைக்கிறேன்.

பெண்களுக்கான கலை, கலாசார சமய அறிவு பற்றிய கல்வியின் முக்கியத்துவத்தை, மூவாயிரம் வருடங்களுக்கு முன்னரே உரோமா ஆதிக்கவர்க்கம் உணர்ந் திருந்தது. உரோம ஆட்சியில் மேன்மட்ட வர்க்கத்துப் பெண்களுக்கு பலதரப்பட்ட கல்விகள் கொடுக் கப்பட்டன. அந்தக் காலகட்டத்துக்கு முன்னரே கி. மு. 5ஆம் நூற்றாண்டு காலகட் டத்தில் இந்தியாவில் பெண்களுக்காக ரக்ஸில் (இன்றைய பாகிஸ்தான்), நாலந்தா போன்ற இடங்களில் சமயம், கலைகள் பற்றிய விபரங்கள் படிக்கப்பட்டன. என்று ஆய்வுகள் சொல்கின்றன. ஆண்களுக்கான கல்வி குருகுல முறையில் இருந்தபோது பெண் களுக்காகத் தனியாகக் கல்வி நிலையங்கள் இந்தியாவில் இருந்திருக்கின்றன.

கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் மனு தர்ம சாஸ்திரம் குடும்பத்துப் பெண்கள் எப்படி வாழ வேண்டும் என்ற விதிமுறைகளை முன்னெடுத்தது. "வயதுக்கு வந்த பெண்களோ அல்லது வயது போன பெண்கள் என்றாலும் எக் காரணம் கொண்டும் ஆண் துணையற்று வெளியே போகக் கூடாது என்பதை வலியுறுத்தியது.

பெண்கள் சிறு வயதில் தகப்பனின் கட்டுப்பாட்டிலும், மணம்முடித்ததும் கணவனின் கட்டுப்பாட்டிலும், விதவையானால் மகனின் கட்டுப்பாட்டிலும் வாழ வேண்டும் என்று வலியுறுத்தியது அதனால் பல இந்துப் பெண்கள் வெளியே சென்று படிக்க அனுமதிக் கப்படவில்லை ஆனாலும் பெண்களின் படிப்பு ரக்ஸலிலும், நாலந்தாவிலும் 13ஆம் நூற்றாண்டு வரை இருந்ததாகச் சொல்லப் படுகின்றது. இந்த இடங்கள் புத்த மதத்துடன் சம்பந்தப்பட்டதால் அங்கு புத்த மதம் , கலை , கலாசாரம் பற்றிய கல்விகள் முன்னெடுக்கப்பட்டிருக்கலாம்.

ஆதி காலத்திலேயே மனுதர்ம சாஸ்திரம் பெண்களின் கட்டுப்பாட்டை வலியுறுத் தினாலும், தமிழ் நாட்டில் பல பெண்கள் கல்வி அறிவுடன் இருந்ததற்கான பல சான்றுகள் உள்ளன. தமிழ்ச் சங்க காலத்தில் பல படித்த பெண்கள் வாழ்ந்திருக் கிறார்கள் என்பதற்கு ஔவையார் போன்ற பெண்கள் சான்றுபகர் கிறார்கள். பெண்கள் பல நாடுகளிலும் பல தரப்பட்ட சமய வேலைகளிலும் ஈடுபட்டிருக் கிறார்கள் என்பதற்கு காரைக்கால் அம்மையார், ஆண்டாள் போன்றோர் உதாரணமா கவிருக்கிறார்கள் அதே போல் இஸ்லாம் பரவுவதற்கு நபிகள் நாயகத்தின் துணைவியார் கதிஜா அம்மையார் பெரும் பணி செய் திருக்கிறார் என்று ஆய்வுகள் சொல்கின்றன. கிறிஸ்தவ சமயத்தின் ஆரம்பத்தில் மேரி மக்டலினின் பணியும் முக்கியமானது.

வட இந்தியா மொகலாயர் ஆட்சியிலிருந்த போது, பதினொராம் நூற்றாண்டில்

பலதரப்பட்ட கல்விகளுக்கும் முன்னிடம் கொடுக்கப்பட்டது. டெல்கி , லக்னோ அலக பாத் போன்ற இடங்களில் பல்கலைக் கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

பிரித்தானியர் ஆட்சியிலிருந்த நாடு களுக்குக் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பு வதற்குக் கல்வியை மிகவு ம் முக்கியமான விடயமாகப் பபாவித்தார்கள். பிரித்தானியர் ஆட்சி செய்த இடங்களில் ஆங்கிலக் கல்வி யுடன் மதமும் பரப்பப்பட்டது. முக்கியமாக இந்தியாவில், கிழக்கிந்தியக் கொம்பனி அடி யெடுத்த காலத்தில் அவர்களில் பலர் இந்தியப் பெண்களைத் திருமணம் செய்தார்கள். அவர் கள் தங்கள் குழந்தைகளின் தேவைக்கு மட்டு மல்லாது தங்களுக்கு வேலை செய்பவர்க ளுக்கு ஆங்கில அறிவும் தேவை என்பதால் பல கல்வி நிலையங்களை ஆரம்பித்தார்கள். பெண்கள் கல்விக் கூடங்கள் பலவற்றையும் ஆரம்பி த்தார்கள்.

1857இல் பம்பாய (மும்பாய், கல்கத்தா, மெட்றாஸ், ( சென்னை) போன்ற இடங்களில் பல்கலைக்கழகங்களை ஆரம் பித்தார்கள் இவற்றில் கிறிஸ்தவ, பார்ஸி சமயப் பெண்கள் கணிசமான வீதத்திலும் இந்துப் பெண்கள் மிகக் குறைந்த வீதத்திலும் சேர்ந்து படித்தா ர்கள். 1885இல் இந்திய காங்கிரஸ்கட்சியின் பெண்கள் அமைப்பு உருவானது சரோஜினி நாயிடு, அன்னி பெஸன்ட் அம்மையார். போன்றோர் பெண்களின் கல்வியின் முக்கியத் துவம் பற்றி பல பிரச்சாரங்களை மேற்கொண் டார்கள் இப்படி இந்தியாவில் பெண்கள் கல்வி வளரத் தொடங்கியது. 1882ஆம் ஆண்டு இந்தியாவில் படித்த பெண்களின் தொகை இரண்டு விகிதமாகவும் இந்தியா சுதந்திரம் பெற்ற போது 6 விகிதமாகவும் இருந்தது. அதிலும் பெரும்பாலானவர்கள் மேன் மட்டத்தைச் சேர்ந்த குடும்பத்துப் பெண்களாகும்.

யாழ்ப்பாணத்தில் பெண்களுக்கான பாடசாலை அமெரிக்க மிஷனரியால் 1813 இல் தொடக்கப்பட்டது. பெண்களுக்காக தென்னாசிய நாடுகளில் உருவாக்கப்பட்ட முதலாவது பாடசாலை உடுவில் மகளிர் கல் லூரியாகும். 1834இல் வேம்படி மகளிர் பாட சாலை தொடக்கப்பட்டது. 1896இல் சுண்டுக் குளிப் பெண்கள் கல்லூரி தொடக்கப்பட்டது. பல பாடசாலை களில் கிறிஸ்தவ சமயப் படிப் புக்கள் முன்னெடுக்கப்பட்டதால் இந்து சமய த்தைச் சேர்ந்த பெண்களுக்கு சைவ சமயத் தையும் அதனை ஒட்டிய கலை கலாசாரங் களையும் படிப்பிக்க வேண்டும் என்று கருதி இராமநாதன் பெண்கள் கல்லூரி சேர் பொன் னம்பலம் இராமநாதன் அவர்களால் 1913இல் அமைக்கப்பட்டது. ஆரம்பத்தில் சமய, கலை, கலாசாரத்தில் வளர்ந்த கல்லூரியில் நாளடை வில் பலதரப்பட்ட உயர் கல்விகளும் போதிக் கப்பட்டு வட மாகாணத்தில் பெண்களின் படிப்புக்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும் அடித்தளம் போட்ட கல்வி நிலையங்களில் ஒன்றாக முன்னிலை வகிக்கிறது இராமநாதன் பெண் கள் கல்லூரி எனக் கூறலாம்.

ஒரு சமுதாயம் எப்படி வளர்கிறது என்பதை அவதானிக்க அந் நாட்டில் பெண் களின் கல்வியும் அந்தக் கல்வி மூலம் பெண்கள்

சமுதாயத்துக்குச் செய்யும் பலதரப் பட்ட பணிகளையும் வைத்து அளவிடலாம்.

கடந்த 200 வருடங்களாகப் பெண்களின் உயர்கல்வியின் நிலை படிப்படியாக உயர்ந்து இன்று பல நாடுகளில் ஆண்களை விடப் பெண்கள் சிறந்த முறையில் சித்தி அடையும் வீதம் பெருகிக் கொண்டு வருகின்றது. 1981 (அல்லது 82) ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி அமைப்பால் நடாத்தப்பட்ட ஆய்வின் படி தென்னா சியாவில் உயர் கல்வியை நாடும் பெண்களின் தொகையில் இலங்கை முன்னிடம் வகிக்கின்றது. அதிலும் வடபகுதிப் பெண்கள் பலர் இலங்கையின் தென்பகுதிப் பெண்களை விட ( விகிதாசாரப் படி) கூடிய கல்வித் தரத்தில் இருந்தார்கள் என்பதை இவ் அறிக்கை எடுத்துக் காட்டுகின்றது.

அண்மைக் காலத்தில் பெற்றுக் கொண்ட கணிப்பின் படி இலங்கையின் ஒட்டு மொத்த சனத்தொகை 21,283, 913 என்றும், அதில் பெண்களின் எண்ணிக்கை ஆண்களின் எண்ணிக்கையை விடக் கூடுதலாக இருப்பதை அவதானிக்க முடிகின்றது. அதில் பெண்களின் சனத்தொகை 10,864, 073 என்றும், ஆண்களின் சனத்தொகை 10,419, 840 எனவும் கூறப்படுகின்றது . எனவே இலங்கையில் பெண்களின் கல்வி தென்னாசிய நாடுகளை விட மிகவும் உயர் நிலையில் உள்ளது என்பதுடன் இலங்கையின் செலவாணியில் 5. 4 விகிதம் கல்விக்காகச் செலவிடப்படுகின்றது. என்பதை அறிய முடிகின்றது.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின் திரு கன்னங்கரா என்பவரால் கொண்டு வரப்பட்ட கல்வித் திட்டத்தால், 1931இல் இலங்கையிலுள்ள அனைத்து மக்களுக்கும் கல்வி கொடுக்கப்பட வேண்டும் என்ற சட்டம் அமுலுக்கு வந்தது . இதனால் இன்று இலங்கையில் 9830 பாடசாலைகளில் 4.030.000 மாணவர்கள் கல்வி பயில்கிறார்கள் இலங்கையின் ஒட்டு மொத்த மாணவர்களின் கல்வியை எடுத்துக் கொண்டால் 15 வயதிற்கும் மேற்பட்ட மாணவர்களில் 92 விகிதமானர்வர்கள் உயர்கல்வியை நாடு கிறார்கள் ஆனால் ஆண்கள், பெண்கள் என்று பிரித்துப் பார்த்தால் மேற்படிப்புப் படிக்கும் ஒட்டுமொத்த ஆண்கள் 95.8 என்றும் பெண்களின் தொகை93 விகிதம் என்றும் இலங்கை கல்வி மந்திரியின் செயலகம் அறிவிக்கும் போது இந்த உயர்வு இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் சமமாக இல்லை என்றும் தெரிகிறது. கடந்த 30 வருடங்களாக நடந்த போரின் பல காரணத்தாலும் வேறு பல காரணங்களாலும் இலங்கையில் சில பகுதிகளில் கல்வி நிலை பாதிக்கப் பட்டிருக்கிறது எனக் கூறலாம். உதாரணமாக மட்டக்களப்பில் மேற்படிப்புப் படிக்கும் பெண்களின் 81.3 விகிதம் , அம்பாறைப் பகுதியில் 87.2 விகிதம் , நுவரெலியாப் பகுதியில் 80.1விகிதத்தில் காணப்படுகின்றது.

2010 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்குப் போனவர்களில் 58 விகிதம் பெண்களாகும். இந்த மாற்றம் பல காரணங்களால் ஏற்பட்டிருக்கலாம். உதாரணமாக இலங்கையில் தொடர்ந்து நடந்த போரால் பல இளவயது ஆண்கள் இறந்தார்கள் சிலர்

மேற்படிப்பற்று படையில் சேர்ந்தார்கள். வசதியான குடும்பத்து ஆண்கள் மேற்படிப் புக்காக வெளிநாடு சென்றார்கள் எனக் கூறலாம். மேற்படிப்பைத் தொடரும் பெண்க ளில் கூடுதலானவர்கள் (78.80 விகிதம்) விஞ்ஞான பாடங்களற்ற துறைகளை கலை , வர்த்தகம்) நாடுவதால் பல்கலைக் கழகப் படிப்பு முடிந்ததும் பெண் பட்டதாரிகளுக்கு வேலையில்லாப் பிரச்சினை ஏற்படுகின்றது.

சைவ சமயத்தைச் சேர்ந்த பெண்க ளுக்காகத் தொடங்கப்பட்ட இராமநாதன் பெண்கள் கல்லூரியில் ஆதிகாலத்தில் சமயம் கலை, கலாசாரம் போன்ற படிப்புக்கள் முன் னெடுக்கப்பட்டாலும் நாளடைவில் அங்கு விஞ்ஞானப் பாடங்களும் போதிக்கப்பட்டன எனக் கூறலாம். ஆதிகாலம் தொடக்கம் காலத்துக்குக் காலம் பெண்களின் படிப்பு பல திருப்பு முனைகளைக் கண்டிருக்கின்றது. அந்த வகையில் படித்த பெண்கள் அவர்கள் வாழ்ந்த சமுதாயத்தின் சமய வளர்ச்சிக்கும் கலை, கலாசார வளர்ச்சிகளுக்கும் உதவி இருக்கி றார்கள் எங்கள் தமிழ்ச் சமுதாயம் 30 வருடப் பேரால் துயருற்று வாடியது. எங்களின் கல்வி கலை கலாச்சார வளர்சிகள் மிகவும் பாதிக்கப் பட்டன. இன்று அமைதி யான சூழ்நிலையில் மக்கள் தங்கள் வாழ்க்கை யைச் சீர் திருத்தித் கொள்ளவும் தங்கள் குழந்தைகளுக்குத் தங்க ளால் முடிந்த அளவு உயர் கல்வியைப் புகட் டவும் பாடு படுகிறார்கள் அந்தக் காலகட்டத் தில் பழம் பெருமை வாய்ந்த இராமநாதன் கல்லூரியின் கடமை பல அவற்றில் படிக்கும் மாணவிகள் எதிர்நோக்கும் சவால்கள் பல எனக் கூறலாம். இன்று பெண்களுக்கு முன்னால் விரிந்து கிடக்கும் பல தடைகளை யும் தாண்டித், தன்னையும் தான் வாழ்ந்து கொண்டிருக்கும் சமுதாயத்தையும் மேம்படுத் துபவர்கள் தமிழ்ப் பெண்கள் அந்த அடிப்ப டையில் இராமநாதன் கல்லூரி மாணவிகளும் தங்களின் வளர்ச்சிக்கும் தமிழ்ச் சமுதாயத்தின் எதிர்கால வளர்ச்சிக்கும் உதவி செய்ய எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.



# இணுவையூர் சின்னத்தம்பிப் புலவரின் பஞ்சவன்னத்தூது பற்றிய ஒரு ஆய்வு

இணுவில் கார்த்திகாயினி கதிர்காமநாதன் M.A
பழைய மாணவி
இராமநாதன் கல்லூரி
(அவுஸ்திரேலியா)

**அறிமுகம்**

கி.பி 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இணுவையூர் சின்னத்தம்பிப் புலவர் ஈழத்து இலக்கிய வரலாற்றில் ஒரு தனி இடத்தைப் பெறுகின்றார். ஈழத்து இலக்கிய வரலாற்றை நோக்கின் இது நன்கு புலப்படும். யாழ்ப் பாணத் தமிழ் வேந்தர் காலத்தில் இருந்து இற்றைவரை எழுந்த நூல்களிற் பல வட மொழித் தழுவல்களாகவும், தமிழ் நாட்டில் எழுந்த நூல்களின் தழுவல்களாகவுமே காணப்படுகின்றன. சில புலவர்கள் மட்டும் ஈழத்திற்கே சிறப்பான முறையில் பிரதேச நாட்டுத் தனித்தன்மை கொண்டனவாக நூல்களை யாத்துள்ளனர். அவற்றுள்ளும் ஒரு சில புலவர்கள் இலக்கியத்திற் பல புதுமை களைப் புகுத்தியும் பாடியுள்ளனர். அவ்வக் கால நூல்களை ஆராயின் இது நன்கு புலப்படும்.

இந்தப் பின்னணியில் ஈழத்தில் எழுந்த அகப்பொருள் இலக்கியங்களுள் இப்போது கிடைப்பவற்றுள் காலத்தால் முற்பட்ட வையும். கி.பி 18 ஆம் நூற்றாண்டில் எழுந்த வையுமானவை சின்னத்தம்பி ப்புலவரின் பஞ்சவன்னத்தூதும், வரதபண்டிதரின் குரு நாதசுவாமி கிள்ளைவிடுதூதுமாகும். இவற் றிலே கிள்ளைவிடு தூது மரபுவழியான இலக்கியத்திற்கமையப் பாடப்பட்டது. ஆனால் பஞ்சவன்னத்தூது மரபுவழியான இலக்கணத் திற்கமையாது, பல வகையிலே பிறதூது இலக்கியங்களில் நின்றும் வேறுபட்டுக் காணப்படுகின்றது.

அரசனைத் திருமாலுக்கும் சிவனுக்கும் ஒப்பிட்டுக் கூறுவதைப் பல இலக்கியங்களிற் காணலாம். அவ்வாறே புலவரும் இங்கு கயிலாயநாதனைப் பாட்டுடைத் தலை வனாகக் கொண்டு அவரைத் திருமாலுக்கும், சிவனுக்கும் ஒப்பிட்டும் அவரது வீர தீரங்க ளைப் புகழ்ந்து பாடுகின்றார். அத்துடன் மட்டும் நின்றுவிடாது அவரையே தெய்வ மாகக் கொண்டு வீடுபெறப்பாடிய இலக்கி யத்தை ஈழத்திற்கு அளித்துள்ளார்.

தமிழ் நாட்டுப் புலவர்கள்தான் அரசர் மீது உலா, தூது போன்ற இலக்கியங்களைப் பாடியுள்ளனர். ஈழத்தில் அவ்வாறு இலக்கியம் செய்தவர் இணுவிற் சின்னத்தம்பிப் புலவர் ஒருவரே. இலக்கியத்திற் பல புதுமைகளைப் புகுத்தி பஞ்சவண்ணத்தூது என்ற இலக்கிய

வடிவத்தை ஈழத்து இலக்கியம் வராற்றுக்கு ஆக்கிக்கொடுத்த பெருமை இவரையே சாரும் இவர் காலத்திற்கு முன்னரோ பின்னரோ தோன்றவில்லை.

**தூது**

ஒருவர் தம் கருத்தை இன்னொரு வருக்குப் புலப்படுத்த இடையே பிறிதொரு வரை அனுப்புவதே தூதாகும். அரசர்கள் பகைவர்களிடத்தும், புலவர்கள் வள்ளல்க ளிடத்தும், தலைவர் தலைவியரிடத்தும், தலைவியர் தலைவரிடத்தும் தூது அனுப்பி யுள்ளனர். இதற்கான சான்றுகளைத் தொல் காப்பியத்தின் மூலமும், சங்க இலக்கியத்தின் மூலமும் அறியலாம்.

தொல்காப்பியர் காலம் முதலே தமிழரி டத்தில் அமைந்திருந்த தூதுவிடும் மரபு படிப் படியாக சங்கப்பாடல்களிலும், அதற்குப் பின் தனிப்பாடல்களிலும், பக்தி இலக்கியங் களிலும், காப்பியங்களிலும் இடம்பெற்று கி.பி 14ஆம் நூற்றாண்டளவில் தனியொரு வகைச் சிற்றிலக்கியமாக உருப்பெற்று விட்டது.

**நெஞ்சுவிடு தூது**

இந்த வகையில் எழுந்த முதற் சிற்றிலக் கியமாக கி.பி 14ஆம் நூற்றாண்டின் முற்பகுதி யில் வாழ்ந்த உமாபதிசிவாச்சாரியரின் நெஞ்சு விடு தூதினைக் குறிப்பிடுவர்.

நெஞ்சுவிடு தூது காப்புச் செய்யுளாக வெண்பா ஒன்றைப் பெற்று நூற்றியிருப்பத் தொன்பது கண்ணிகளையும் கொண்டுள்ளது. நூலின் முற்பகுதியில் சிவபெருமானைப் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. இப்பகு தியல் பூமேவும் உந்திப்புயல் வண்ணனும் நாமேவும் மாதுபுனர் நான்முகத்தோனும் பன்றியும் அன்னமுமாய் உருவெடுத்துச் சென்று தேடியும் அறியா இயல்பினன் சிவன் எனக் கூறிச் சிவபெருமானின் பரம்பொருள் உண்மை விளக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து சைவசித்தாந்தக் கருத்துக்கள் மிக எளிமை யாகக் கூறப்பட்டுள்ளன. அடுத்து பாட்டு டைத் தலைவியாராகிய மறைஞான சம்பந்த ரின் பெருமைக்குரிய தலைவர் பவனிவரும் பொழுது அவர் அழகிலே மையலுற்ற மங்கை யொருத்தி தனது விரக வேதனையை விரித்து ரைப்பதாகவும், நெஞ்சைத் தூதாகச் சென்று பூங்கொன்றை வாங்கிவருமாறு விடுப்பதாக வும் அமைகிறது.

சிவனாகவே விளங்கும் ஞான குரவ ரைத் தலைவராகவும் தம்மையே தலைவியாக வும் உருவகித்துப் பதியைச் சேரப் பற்றுக் கொண்ட ஓர் உயிரின் பேரின்ப அனுபவத்தி னைக் கூறும் நூல் இது!

இதனைத் தொடர்ந்து எழுந்த தூது நூல்கள் பெரும்பாலும் சிற்றின்பப் பொருள் முதன்மைபெற, அகத்திணை தழுவிய அஃறி ணையைத் தூது விடுப்பனவாகவும், தலைவிய ராலே தூதாக விடுவிக்கப்படுவனவாகவும் அமைந்து விளங்குகின்றன.

**பஞ்சவன்னத்தூது**

இந்தவகையில் ஈழத்தில் எழுந்த பஞ்ச வன்னத் தூதின் அமைப்பைச் சற்று நோக்கு வோம். இந்நூல் கி.பி 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இந் நூலில் இணுவிலில் உறையும் தெய்வங்களான கயிலாயநாதன், சிவகாமி அம்மன், சுப்ரமணியர், வைரவசுவாமி, பத்திர

காளி அம்மன் ஆகிய கடவுளர்ளின் துதி முதலிற் பாடப்பட்டுள்ளது. இதன்பின் கட்டியக்காரணின் வருகை கூறப்பட்டு கயிலாய நாதன் என்ற பாட்டுடைத் தலைவன் உலா வர்ணிக்கப்பட்டுள்ளது. அதன்பின் சந்திர மோகினி என்ற தலைவி காட்சியளிக்கிறாள். அதன் மேல் அத் தலைவி காமவேளை நோக்கித் தனக்கு கயிலாயநாதன் மீது ஏற்பட்ட காதலைக் கூறித் தன்னை வருத்த வேண்டாம் என இரங்குகின்றாள். அதைத் தொடர்ந்து வெண்ணிலாவைப் புகழ்ந்து கூறித் தன்னை வருத்தாது தலைவன்பாற் தூது சென்று தம் காதலுரைத்து அவன் மாலை வாங்கிவருமாறு வேண்டுகின்றாள். பின் தென்றலையும் அவ்விதமே புகழ்ந்து தன்னை வருத்தாது தலைவனிடம் சென்று தம் மையல்கூறி அவன் தொடையல் வாங்கிவரக் கோருகிறாள். அதன் மேற் கிளியினையும், அன்னைத்தினையும் அவ்வாறே தூதாக அனுப்புகிறாள். இறுதியாகத் தன் பாங்கியைப் புகழ்ந்துரைத்து வீதியிற் பவனி வந்த கயிலாய நாதன்மேற் தனக்கேற்பட்ட காதலைக் கூறி அவன் புகழ்விரித்து மதியம், தென்றல், தத்தை, அன்னம் ஆகியவற்றைத் தான் தூது விடுத்தும் அவை கயிலாயநாதனின் மாலையை வாங்கி வரவில்லை எனக்கூறி, தன் சகியைத் தூது போய் அவன் மாலையை வாங்கிவருமாறு கோருகிறாள்.

பாங்கி தலைவனிடம் சென்று அவனைப் புகழ்ந்துரைத்து சந்திரமோகினிப் பெண்ணைப் பற்றிக் கூறி அவன் மீது அவள் கொண்ட மையலினை எடுத்துக் கூறுகிறாள். அதன் மேற் பாங்கி தலைவியிடம் திரும்பச் சென்று அவனை வியந்துரைத்து, தலைவன் அத் தலைவியின் காதலை ஏற்ற செய்திகூறி, அவன் அவளை மணந்து கொள்வதற்கு விரைவில் வருவான் என்றும் தெரிவிக்கிறாள்.

நெஞ்சுவிடுதூதுடன் ஒப்பிட்டு நோக்கும் போது, உமாபதிசிவம் எவ்வாறு தமது குருவாகிய மறைஞான சம்பந்தரை தலைவனாகவும் தம்மைத் தலைவியாகவும் கொண்டு பேரின்பத்தை அனுபவிக்க விரும்பினாரோ, அதேபோல இங்கு சின்னத்தம்பிப் புலவரும் கயிலாயநாதனைத் தலைவனாகக் கொண்டு அவரினூடாகப் பேரின்பத்தினைக் காண விளைகின்றார்.

நெஞ்சுவிடுதூதில் தன்மை, இயல்பு, புகழ் என்பவற்றை உமாபதிசிவம் அழகுற விளக்குகிறார். அதேபோற் புலவர் இங்கு கயிலாயநாதன் புகழ், தன்மை என்பவற்றை "கஞ்சனே நேர் கயிலாயநாததுரை", "நூறாயிரந்தளங்கண்ட மறங்கண்ட புயத்தான்", "சத்துருக்ககனைப் புறங்கண்ட வயத்தான்", "சிவகாமிமேயபதம் பெறுவோன்", "தோளொன்றுசாவு மலர்த்தாரான்", "அமரர் யாரும் தொழும் கயிலாயநாததோன்றல்" என பல உவமைகளாலும், மிக எளிய சொற்களாலும் விளங்கவைக்கின்றார்.

சின்னத்தம்பிப் புலவரின் நோக்கம் பேரின்பமே. அவர் பல இடங்களில் சிவகாமியம்மனையும் இறைவனையும் மனதார வேண்டிக்கொள்ளும் பாடல்கள் இதற்குச் சான்றாக அமைகின்றன.

தேவர் புரந்தரன் முகன்
றொழு தேனுல வுங்கமலச்
சேய பதந்தமி யேநித முந்தொழு
தேமகி மும்படியே

எனவும்

சிவகாம சவுந்தரி மேயப தம் பெறு வோன்

எனவும் கூறுமாற்றல் இவர் தூதின் மூலம் வேண்டி நிற்பது பேரின்பமே என்பது உறுதி யாகின்றது.

நெஞ்சுவிடு தூதில் மறைஞான சம்பந்தர் வீதி உலாச் செல்லுங்காலை தலைவி அவரைக் காண்கிறாள். அந்நிலையில் தலைவி தன்நிலை இழக்கின்றாள். தலைவி தனக்கேற்பட்ட பேரின்ப அனுபவத்தை,

"வானோன் பவனி வரக்கண்டு வல்லினையேன்
ஏனோரும் ஏத்துதல்கண் டேத்தினேன் - தான் என்னைப்
பார்த்தான் பழயைவினைப் பஞ்சமலக் கொதையெல்லாம்
நீத்தான் நினைவுவே றாக்கினான்
எனக் கூறுகின்றாள்."

பஞ்சவன்னத்தூதிலும் தலைவி தலைவனைக் கண்ட பின் தனக்கேற்பட்ட அனுபவத்தை,

அந்தக் குரிசிலழகை மனமுருக
மையல் பெருகக் கண்டேன்
இங்கு சிலைவேள் தனக்கொத்த நலவேள்
பொற்பெனச் சித்த முருகுதே
அவன் செயமுகமும் மார்பும்
கையுமனதிற் குடியிருக்குதே

எனக் கூறுகின்றாள்.

உமாபதி சிவம் தூதுவிடும் நெஞ்சை நோக்கி

ஈசன் பெருமை இருவினையேன் இன்றுனக்குப்
பேசுந் தகைமை யெல்லாம் பேணிக்கேள்

அஞ்செழுத்தை நெஞ்சமுழுத்தி நேயமய லாக்கி என்று நெஞ்சை வழிப்படுத்தி,

இகலே பேசும் உலகாயதன் பால் உறாதே"

என்றும்

வென்றிப் பொறையே யெனும் புத்தன்
பொல்லாத புன் சொல்
மிறையே விரும்பி விழாதே

என்றும்,

வஞ்சமணன் பாழி மருவாதே

என்றும்

உற்ற திருநீறும் சிவாலயமும் உள்ளத்துச்
செற்ற புலையர்பாற் செல்லாதே

என்றும்,

நீட அழித்துப் பிறப்பதறியா தரனைப்
பழித்துத் திரிபவரைப் பாராதே

என்றும், தலைவி தன் நெஞ்சத்திற்கு அறிவுறுத்துகின்றாள். இதிலிருந்து மனமானது மாறும் தன்மையது என்பதும், உலகியல் இன்பத்தையே பெரிதென மதித்து மயங்கும் இயல்புடையது என்பதும், அதனை இறைவன் பால் நெறிப்படுத்தி பேரின்பம் நுகர்தலே இலட்சியம் என்பதால் நெஞ்சைத் தூதாக இறைவன் பால் செல்லவிடுத்தார் என்பதும் தெளிவு. வேற்றுச் சமயங்கள் இங்கே மயக்கம் திரோதான சக்தியாகவும், சைவம் திருவருட் சக்தியாகவும் கொள்ளக்கிடக்கின்றது. இவ்வ கையிற் புலவர் கூறிய நால்வகைத் தூதையும் வேற்றுச் சமயங்களுள் ஒப்பிட்டு, உயிர்த் தோழியை உமாபதிசிவாச்சாரியார் கூறும் நெஞ்சிற்கு அதாவது ஆன்மாவை வழிப் படுத்தும் திருவருட் சக்திக்கு ஒப்பிடலாம்.

பஞ்சவன்னத்தூதைப் பேரின்பத் தூதா கக் கொள்வதற்கு வேறும் சில சான்றுகள் சைவ சித்தாந்தத்திலும் கடவுளின் இயல்பு கூறும் போது அன்பினால் வணங்கும் அடியார்கள் நெஞ்சத்தில் அறிவு வடிவாக இறைவன் விளங்குவார். வெந்நீரிலே வெப்பமானது எங்கும் வியாபித்துள்ளது போல எல்லா இடங்களிலும், எல்லாப் பொருள்களிலும் வியாபித்துள்ளார். ஆயினும்அவர் அவற்றின் வேறாய்த் தனித்தும் உள்ளார். அவர் வணங்குதல் வணங்காமைகளினால் விருப்பு

வெறுப்புக் கொள்பவரல்லர். எக்காலத்தும் யாருக்கும் நன்மையே செய்கிறார். இக் கருத்தினையே சின்னத்தம்பிப் புலவர்,

"தஞ்சமென அடைந்தோரைத் தாபரிக்கும்
கடவுளிளந் தாரி ராசா
பக்தசனர் வாழ்நிறை பாக்கியந்தந்
தாட்கொள்ளும் வேள்
கருங்குவளைத் தார்மார்பன் கயிலாயநாததுரை
வருந்துமடி யார்களிடர் மாற்றியருள் புரிவாரே"

என்ற அடிகளிற் குறிப்பிட்டுச் சென்று ள்ளார்.

ஆன்மா ஆணவத்தினால் மறைக்கப் பட்டிருந்தால் தானாக ஒன்றையும் அறியமாட் டாது. பளிங்கானது எந்த நிறப் பொருளைச் சார்ந்துள்ளதோ அந்த நிறத்தைத் தானும் அடைதல் போல, ஆன்மாவும் எந்தப் பொரு ளைச் சார்ந்து நிற்கின்றதோ அந்தப் பொரு ளின் தன்மையை உடையதாகின்றது. ஆன்மா ஆணவத்தைச் சார்ந்த பொழுது அஞ்ஞான மும், நிலையற்ற தன்மையும், துன்பமும் பொருந்தியதாயும், சிவத்தைச் சார்ந்த போது அறிவும், நிலைத்தன்மையும், ஆனந்தமும் பொரிந்தியதாயும் இருக்கும். ஆணவத்தைச் சார்ந்தபோது ஆன்மாவானது உலகத்தையும் உலகியல் இன்பத்தையும் மெய்யென்றும், சிவமும் சிவானந்தமும் பொய்யென்றும் காண்கின்றது. அவ்வாறே அது சிவத்தைச் சார்ந்தபோது உலகம் முதலியவற்றைப் பொய் என்றும், சிவத்தை மெய்யென்றும் காணும். இது சைவசித்தாந்தக் கருத்து.

இங்கு பஞ்சவன்னத் தூதில் ஆன்மா வாகிய சந்திரமோகினி மதன்விட்ட கணை யில் (அஞ்ஞானமாகிய இருளில்) மூழ்கி அனுபவிக்கும் துயரைச் சின்னத்தம்பிப்புலவர் உலகியலில் வைத்து

அருந்து மனத்தை மறந்தாள்
மறந்து நிலத்தில் வீழ்ந்தாள்
பிதற்று மனத்தோ டெழுந்தாள்
பத்தினி மின்னாள்

என்று கூறுகின்றார்.

ஆன்மாவை இறைவனிடம் சேர்ப்ப தற்கு முதலிற் தொழிற்படுவது திரோதான சக்தி. அடுத்து திருவருட்சக்தியே ஆன்மாவை எல்லாச் செயல்களிலும் வழிகாட்டிச் செல்கி றது. ஆன்மாவிற்கு உயிராய் நின்று ஒன்றினை அறியவும், செய்யவும் தூண்டுகின்றது. ஆன்மா வானது திருவருளை அறிந்து துணைகொள் ளாமல் வீட்டின்பத்தை அடையமுடியாது. அது எப்போது திருவருளைப் பற்றுமோ அப் போதுதான் துன்பத்திலிருந்து விடுதலை யடையும்.

இங்கே புலவர் பஞ்சவன்னத் தூது பாடும் போது முதலில் வெண்ணிலா, தென்றல், கிளி, அன்னம் முதலிய நான்கையும் தூது விட்டு அது வெற்றியளிக்காது விடவே சந்திர மோகினி தன் உயிர்த்தோழியாகிய மந்தாயி னியைத் தூதுவிடுவதாக அமைத்துள்ளார். உயிர்த்தோழியே சந்திரமோகினியின் துயர த்தை நீக்கி நல்லின்பத்திற்கு வழி காட்டு கின்றார். இதில் உயிர்த்தோழி தவிர்ந்த ஏனைய தூதுக்கள் திரோதான சக்தியையும் உயிர்த் தோழி திருவருட் சக்தியையும் குறிப்பாக உணரலாம்.

சின்னத்தம்பி புலவரின் இலட்சியம் தலைவி தலைவனோடு கலந்து வாழவேண்டும் என்பதே. இதுவே பேரின்ப அனுபவத்தில் முக்தி எனப்படும். முக்தி என்பது ஆன்மா

இறைவனோடு இரண்டறக் கலக்கும் நிலை. இதைத் திருவருட் பயன்.

தாடலைபோற் கூடியவை தானிகழா
வேற்றின்பக் கூடலை நீஏகம் எனக் கொள்"
என்று

என்று கூறுகின்றது. தாள் + தலை என்ற சொற்கள் புணரும் போது எவ்வாறு தாடலை என்றாகிறதோ அதேபோல ஆன்மா முக்தி நிலையில் இறைவனோடு அத்துவிதமாகக் கலந்துவிடும். இதனால் உண்டாகும் ஆனந்தம் சிவாநந்தம் ஆகும். இவ் ஆனந்தம் இடையில் நீக்கப்பெறாதது . அதனால் இது சதானந்தம் எனப்படும்.

முக்தி நிலையில் இருபொருள் இரண்டற்று நிற்றலுக்குச் சித்தாந்த சாஸ்திரங்கள் 'அப்பினிடைஉப்பு' என்பதை எடுத்துக் காட்டுகின்றது. ஒருபடி அப்பும் ஒருபடி உப்பும் கலந்தபோது இரண்டுபடி ஆகாமால் ஒருபடியே ஆயினவாறு ஆன்மாவும், சிவமும் கலந்து இரண்டற்று நிற்கும். உப்பு தன்னுருவம் மாறி நீருருவம் அடைந்ததுபோல ஆன்மா சிவரூபம் பெற்றுவிடும். அப்பு தன்னுள் உப்பை அடக்கியிருப்பதுபோல சிவம் ஆன்மாவை முக்தி நிலையில் அடக்கி நிற்கும். அன்றியும் இவ்வுப்பு நீர்க்கலப்பினால் ஒன்றாகியும், பொருண்மையால் இரண்டாகியும் நின்றவாறு சிவனும் சீவனும் ஒன்றாகியும் இரண்டாகியும் நிற்கும்.

சின்னத்தம்பிப் புலவர் பஞ்சவன்ன தூதின் முடிவில்

> **கந்தநேர் துரை யுன்றனனோடு**
> **கலந்து வாழ நினைந்தனன்**

என்றும்,

> **கம்பிச் சோலையும் பைம்பொற் றாலியும்**
> **மகிமையோ டுனக் கருளுவான்**
> **மன்னவன் கயிலாய வேள் உன்னை**
> **மணஞ் செய்யும்படி வருகுவான்**
> **நீயும் மனமகிழ்வோடே நீடுபுகழ்வோடே**
> **ஊழி வாழுவாய் தெய்வமாதே**

என்றும் பாடுகின்றார்.

இதில் வரும் "ஊழி வாழுவாய் தெய்வ மாதே" என்ற ஓர் அடியே அவர் பேரின்ப அனுபவத்தையே பெறத் துடித்துள்ளார் என்பதற்குச் சான்றாய் அமைகின்றது. மேலும், பேரின்ப அனுபவத்தைப் பெறுவது மட்டும் அல்லாமற் தொடர்ந்து முத்தி நிலையிலிருந்து சிவானுபத்தை அனுபவிக்கவும் விரும்பினார். என்பதற்கும் இவ் அடி சான்றாக அமைகின்றது. எனவே உமாபதி சிவாச்சாரியார் நெஞ்சுவிடுதூது ஆதிமுதல் அந்தம்வரையும் தெய்வீகக் கருத்தைப் புலப்படுத்த, பஞ்சவன்னத்தூது பெயருக்கோற்ப உலகியலும் கலந்து கூறி இறுதி முடிவாகப் பேரின்பத்தினையே சுட்டுகின்றது.

பிறதூது இலக்கியங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது பஞ்சவன்னத்தூது பலவகையிலும் வேறுபாடுடையதாகவே காணப்படுகின்றது. முதலாவதாக, இத்தூது கலிவெண்பாவினாற் பாடப்படாது அகவல், விருத்தப்பா, கலிப்பா, சந்தப்பா ஆகியவற்றால் பாடப்பட்டிருக்கின்றது. இரண்டாவதாக, ஒரு நூலில் ஒரு பொருளைத் தூதாக அனுப்புதலே மரபாயிருக்க இந் நூலில் ஐந்து பொருள்கள் தூதாக அனுப்பப்படுகின்றன. மூன்றாவதாக, வழக்கத்திற்கு மாறாக உயர்திணைப் பொருளும், அஃறிணைப் பொருளும் கலந்து தூது அனுப்பப்படுகின்றன. நான்

காவது பொதுவாகத் தூது நூல்களின் அமைப் புமுறையில் நாம் மூவகைப் பகுதியைக் காணலாம்.

1. தூது செல்வதற்குப் பிற பொருள்கள் பயனற் றவை எனக் கூறுதல்.
2. தூது செல்வதற்கு இது ஒன்றே தகுதியுடையது எனக் கூறல்.
3. தலைவனிடம் கூறவேண்டிய தூதுப் பொருளு ரைத்து வேண்டுதல்.

என்ற மூன்று பகுதிகளையும் தூது நூல்களிற் காண்கின்றோம். இந்நூலில் ஒவ் வொரு தூதுப் பொருளையும் முதலில் வர்ணித் துப் பின் தான்கண்டு மையலுற்ற தலைவன் எப்படிப்பட்டவன் எனக்கூறித் தூதுப் பொருள் உரைக்கப்படுகின்றது. நான்கு பொருள்களைத் தூதாக அனுப்பியும் பயனில்லை எனக்கூறி இறுதியின் தோழி அனுப்பபடுகிறாள்.

ஐந்தாவதாக, ஏனைய அகப் பொருள் சார்ந்தத தூது நூல்கள் தலைவன் பெயர் சுட்டினுந் தலைவி பெயர் சுட்டாதிருக்க, இது தலைவன் பெயரும் தலைவி பெயரும் சுட்டியுரைக்கும். ஆறாவதாக, அகப்பொருள் சார்ந்த தூது நூல்கள் தலைவியின் காதலை தலைவனுக்குக் கூறி, அவனும் மாலையை வாங்கிவருமாறு தலைவி தூதனுப்புவதுடன் முடிவடைவது வழக்கமாயிருக்க, இங்கே நூலிலே தூது செல்லும் தோழி தலைவனைக் கண்டு, அவனைப் புகழ்ந்து பேசி, தலைவியின் தூதினைச் சொல்லும் முகமாக அவளின் விரகதாபத்தை அவனுக்கு எடுத்து உரைத்து, அவன் அவளை மணக்கச் சம்மதித்ததைத் தலைவியிடம் மீண்டும் சென்றுரைத்து அவளை ஆற்றுகிறாள். அடுத்து, தூது நூல்கள் பெயர் பெற்று விளங்குவதில் ஒரு பொது விதியைக் காண்கிறோம். தூது விடுப்போர் பெயராலோ, யாருக்குத் தூது விடப்படு கின்றதோ அவர் பெயராலோ தூது நூல்கள் வழங்கப்படுவதில்லை. தூது விடப்படும் பொருள் பெயர் எதுவோ அதனோடு சார்த் தியே தூது நூல்கள் பெரும்பாலும் பெயர் பெறுகின்றன. தூது நூல்கள் அனைத்திற்கும் இவ்விதி பொருந்துவதாய் உள்ளது. இந்த நூலில் தூது விடப்படும் பொருள்களின் பெயர் கொண்டு நூல் அமையவில்லை. ஐந்து பொருள்கள் தூதாக விடப்படுவதால் ஐந்து பொருள்களின் பெயரையும் குறிப்பிட முடியா தபடியாற் போலும் ஐந்து பொருள்களால் விடப்படும் தூது என்ற கருதப்படப் பஞ்ச வன்னத் தூது எனப் பெயர் பெற்று விளங்கு கின்றது. இவ் வகையிற் பஞ்சவன்னத்தூது மரபுக்கு மாறாக நடந்து ஒரு புதுவகையான தூது இலக்கியத்தைத் தோற்றுவித்துள்ளது.

**நிறைவுரை**

புலவர்கள் வாழ்வு பொற்புடையது. அவர்களது உள்ளம் - உணர்வு - அறிவு என்பன ஒன்றியைந்து செயற்படும்போது, அரிய ஆக்க ங்கள் பிறக்கின்றன. இவ் ஆக்கங்கள் காலத் தையும் கடந்து நிற்பன. அவை நிலைபேறு டைய உண்மைகளை மக்கட்கு விண்டுரை ப்பன. ஆன்மாவுக்கும் பொருளுக்கும் உள்ள தொடர்பினைப் புலவர்கள் உணர்ந்தவர்கள்.

சொற்கள் பொருளுடையன. அச் சொற்களால் அமைந்த கூற்றுக்கள், புலவன் எண்ணும் கருத்துக்களைத் தெளிவுபடுத்து கின்றன. புலவன் தான் உணர்ந்த உண்மை களைக் கவிதைகளின் கருவாக அமைத்து வெளியிட முனைவதே உண்மையறிவு. இந்த

உண்மையறிவு பிறந்தவுடன், உலகியல் பற்றிய அறிவு பின்தள்ளப்படுகின்றது. பேரன்பின் இருப்பிடம் ஆன்மா. இவ் ஆன்மா அரியவற்றுள் எல்லாம் அரியது, பெறுபவற்றுள் எல்லாம் பெறற்கரியது. அதன் முன் எதுவுமே நிகரில்லை. ஆத்மாவின் உள்ளிருப்பை உணரும்போது அருள் நிறைந்த சொற்கள் இயைவுபாட்டுடன் பிறக்கின்றன. அவை உலகைக் கவிந்து நிற்கின்றன. கவிதை வடிவம் பெறுகின்றன. இந்த வகையில் இணுவிற் சின்னத்தம்பி புலவரின் ஆக்கங்கள் உண்மையில் ஒளியைக் காண உதவுகின்றன. புலவரின் வாழ்க்கை வரலாறு, இலக்கியப்பணி என்பன அவர் வாழ்ந்த காலத்தினையும், அக்கால நிகழ்வுகளையும், நிலப்பண்பினையும் அடிப்படையாகக் கொண்டு முகிழ்ந்தன என நவிலல் பொருத்தப்பாடுடையது. இயல் - இசை - கூத்து என்னும் முத்திறனும் தமிழாக அமைவுற்று இருப்தற்கு புலவர் பிறந்த மண் இன்பம் சான்றுரைத்தே நிற்கின்றது.

பாடல்களில் வரும் சந்த இன்பமும், உண்மையின் தெளிவும் உள்ளத்தைப் பிணித்து நிற்கின்றன. உணர்வினை ஒருவழிப்படுத்தி உயர்நிலையடையச் செய்கின்றன. புலவரின் பஞ்சவன்னத்தூது இதற்குச் சான்றுபகர் கின்றது.

சின்னத்தம்பிப் புலவரின் கவிதைகள் மக்களால் அறியப்படவில்லை - உணரப் படவில்லை - அனுபவிக்கப் படவில்லை. அவரது அறிவுச் செல்வத்தை நயந்து முன்னெடுத்துச் செல்வதற்கு இற்றைவரை யாரும் முயலாமையே இதற்குக் காரணமாகும். அவரைப் பற்றிய முழுமையான ஆய்வு வெளிவரும் போதுதான் இலக்கிய உலகம் அவரையும் அவரது இலக்கியத்தினையும் நன்கு உணர்ந்து கொள்ளமுடியும்.

**ஆய்விற்கு உதவிய நூல்கள்**


செயராமன் ந.வி – தூது இலக்கியங்கள், சிதம்பரம், 1965

நடராசா க. செ – ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி கொழும்புத் தமிழ்ச் சங்க வெளியீடு 1982

சித்தாந்த சாஸ்திரம் – சைவசித்தாந்த மாகசமாஜம், 1940

தொல்காப்பியனார் – தொல்காப்பியம் பொருளதிகாரம் முதற்பாகம் கனகசபாதிப்பிள்ளை பதிப்பு, சென்னை, 1934 – 2ஆம் பாகம் ந. பொன்னையா பதிப்பு, 1943

நடராசா கா. செ – இணுவை அப்பர், 1979

லஷ்மணன் கி – இந்திய தத்துவ ஞானம், சென்னை 1960



*திருமதி கார்த்திகாயினி கதிர்காமநாதன் யாழ் பல்கலைக்கழகத்தில் தமிழ் சிறப்புப் பட்டாரியாவார். 1985 இல் பாரதியின் சமயக் கொள்கை என்ற இவரது ஆய்வுக் கட்டுரை அகில இலங்கையில் முதற்பரிசைப் பெற்றக் கொண்டது. நாவுக்கரசர் சிறை வாசம் என்ற கதாப்பிரசங்கத்தை தயாரித்து வழங்கியுள்ளார். 1988இல் இணுவையூர் சின்னத்தம்பிப்புலவர் என்ற நூலை வெளியிட்டுள்ளார். கர்நாடக சங்கீதத்திலும் பண்ணிசையிலும் தேர்ச்சிபெற்றவர். யாழ் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராகவும் கொழும்பு றோயல் கல்லூரியில் ஆசிரியராகவும் பணிபுரிந்தார்.*

# சிறுவர் இலக்கியக் கோலங்களும் அறுவடைகளும் - ஒரு அவதானிப்பு

**தம்பு சிவசுப்பிரமணியம்**
(தம்பு சிவா)
தமிழ்த்தென்றல்

1965 ஆம் ஆண்டு இலங்கை சாகித்திய மண்டலம் "குழந்தை இலக்கியம்" பற்றிய கருத்தரங்கு ஒன்றை நடாத்தியது. அக்கருத் தரங்கில், 'இலங்கையில் சிறுவர் இலக்கியம்' என்னும் பொருளில் திரு. செ. வேலாயுத பிள்ளையும், 'குழந்தைப் பாட்டு' குறித்து செல்வி அசாரியா ஜமீல் என்பவரும் சமர்ப் பித்த கட்டுரைகள் கருத்தரங்கில் முக்கியத்து வம் பெற்றிருந்தன.

" சிறுவர் பொருள் விளங்கிப் படிக்கும் போதே இலக்கியத்தில் சுவை காண்பர். சிறுவர் இலக்கியங்களில் அளவுக்கு மிஞ்சி அறங்களை யும் நீதிகளையும் புகட்டும் மரபொன்று தொன்றுதொட்டே தமிழில் இருந்து வருகின் றது. குழந்தைகளின் உள்ளத்தை உணராமலும், குழந்தைகளின் வேட்கைகளை நிறைவேற்றா மலும், முதிர்ந்தவர்கள் தங்கள் மனம் போன வாறு குழந்தைகளுக்கு நூல் எழுதித் தங்கள் கருத்துக்களையும் நியதிகளையும் வலிந்து குழந்தைகளின் மனதில் திணித்து விடுகின் றார்கள்." என்று திரு. செ. வேலாயுதபிள்ளை தமது கட்டுரையில் தெரிவித்துள்ளமை நோக் கற்பாலது.

ரூசோ என்ற ஆய்வாளர் தமது கருத் தைப் பின்வருமாறு கூறியுள்ளார். " வளர்ந் தோரின் தலையீடுகள் அற்ற நிலையில் சிறுவர் களின் வளர்ச்சிக்குத் துணைநிற்றல், தாமாகவே முயன்று கற்றுக்கொள்வதற்கு உதவுதல், இயற் கையோடு இசைந்து வாழ்வதற்கு வளஞ் செய்தல்" முதலாம் கருத்துக்களை முன் வைத்த அவரின் கூற்றுக்கள் சிறுவர் இலக்கி யம் தொடர்பான மரபுவழி அணுகுமுறை களில் மாற்றங்களை ஏற்படுத்தலாயின.

இயற்கை இயல்பும், சமூக இயல்பும் ஒன்றிணைந்து சிறுவர் இலக்கியங்களைத் தோற்றுவித்தன. குழந்தை வளர்ப்பு முறையில் மொழி இடையுறவு கொள்ள சிறுவர் இலக்கிய ஆக்கங்கள் முதலிலே வாய்மொழியாகவே உருவாக்கம் பெற்றன. மனித செயற்பாடு களிலிருந்தே சிறுவர் இலக்கியங்கள் தோற்றம் பெறத் தொடங்கலாயின. உணவூட்டடல், தூங்க வைத்தல், நடக்க வைத்தல், ஓட வைத்தல் போன்றவற்றை அடியொற்றிய சிறுவர் பாடல், சிறுவர் கதை என்பன இணக்க வடிவில் ஆக்கம் பெற்றன.

" குழந்தைகளின் வயது, மூளை வளர்ச்சி, மொழித்திறன், ஆற்றல், ஏற்புடைமை இவற்றை யெல்லாம் கவனத்திற் கொண்டு சீரிய பாடல்களை எழுதுவோர் பொதுவில் குறைவு. ஆயினும் எண்ணிக்கையை நோக்கினால் ஏராளமானோர் எழுதியிருப்பது புலானகும்.

பெரியவர்களுக்குப் பாடல்களை இயற்றிய தமிழ்க்கவிஞர்கள் பலர் சிறுவர் பாடல் களையும் அவ்வப்போது எழுதினர். பாரதி சிறுவர்களுக்குப் பாடல்கள் எழுதியதைப் பின்பற்றி அவருக்குப் பின்வந்த கவிஞர்களும் குழந்தைப் பாடல்கள் எழுத முற்பட்டிருக் கின்றார்கள். பாரதி பரம்பரையில் பாரதி தாசன், கம்பதாசன், தமிழழகன், சுப்பு ஆறு முகம், மின்னூர் சீனிவாசன், சக்திக்கனல், யாழ்ப்பாணன், தமிழண்ணல் முதலியோரும் மற்றும் பலரும் குறைந்தது ஒரு தொகுதி யாகிலும் வெளியிட்டிருக்கின்றனர். இவற்றில் குழந்தை இலக்கியத்தின்பாற் கொண்ட 'ஆசை பற்றி' இயற்றப்பட்டவை என்று பேராசிரியர் க. கைலாசபதி 1981 இல் மல்லிகையில் வெளிவந்த கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டி ருந்தார்.

சிறுவர் இலக்கிய ஆக்கத்திலும், பாடநூல் ஆக்கத்திலும் கல்வியியலாளர் கொமீனியஸ் அவர்களின் பங்களிப்பு உலக ளாவிய முறையிலே முக்கியத்துவம் பெறுகின் றனது. எளிமையான மொழி தழுவியதும், படங்களுடன் கூடியதுமான நூல்களை அவர் ஆக்கித் தந்துள்ளார். இதை எல்லா மொழி களிலும் உருவாக்கக் கூடிய சிறுவர் இலக்கியங் களுக்கான பொதுப் பண்பாக நோக்கலாம்.

ஆங்கில மொழியில் வெளிவந்த இலக் கியங்கள் நீண்டகால வரலாற்றைக் கொண்ட வையாக புகழ் பெற்று நிற்கின்ற அதே வேளை, அம்மொழியில் ஏராளமான சிறுவர் இலக்கிய நூல்கள் அற்புதமாக வெளிவந்துள்ளன. சிறார் களின் சிந்தனையைத் தூண்டும் வகையில், அவர்களைக் கவரும் வகையில் படங்கள், சித்திரங்கள், இயற்கை வனப்புக்கள், மிரு கங்கள், பறவைகள், மலர்கள் போன்ற வற்றையும் உள்ளடக்கி அவை ஆக்கப்பட்டு ள்ளன. கதைகள், பாடல்கள், சித்திரக் கதைகள் என்று அவை துறை சார்ந்து விரிவு பெறு கின்றன. சிறுவர் கல்வியும், அவர்களுக்கான இலக்கிய ஆக்கங்களும், உளவியல் சார்ந்த அணுகுமுறைகளும் உலகளாவிய முறையிலே மேலும் முக்கியத்துவம் பெறத் தொடங் கியுள்ளன.

சிறுவர்களின் மூளை விருத்தியை அடிப்படையாகக் கொண்டு உளவியல் ரீதி யில் பல அணுகுமுறைகள் முன்வைக்கப் படுகின்றன. இலக்கியங்கள் சிறுவர்களுக்குரிய மன வெழுச்சிப் பாதுகாப்புக்கு இசைவான ஆளுமை வளர்ச்சிக்கு அடிப்படையாகின்றது. பயத்திலிருந்து விடுபடல், அச்சமூட்டும் கற்ப னைகளிலிருந்து நீங்குதல், இழப்புக்களினால் ஏற்படும் துன்பங்களைத் தாங்கிக் கொள்ளல் முதலியவற்றுக்கு உதவவல்ல சீர்மியப் புனைவு களாகவும் சிறுவர் இலக்கியங்கள் அமைதல் வேண்டும்.

வாய்மொழி சார்ந்த சிறுவர் இலக்கியம் சமூக அடுக்கமைப்பில் தாழ்நிலைகளிலே வாழ்ந்த உழைப்பாளரிடத்து வளர்ச்சி கொண் டது. அதேவேளை எழுத்துரு வடி விலான சிறுவர் இலக்கியம் சமூக அடுக்கின் உயர் நிலைகளிலே வாழ்ந்தோரிடத்து வளர்ச்சி

பெற்றது. சிறுவர் இலக்கிய ஆக்கங்களிலே அடுத்ததாகச் செல்வாக்குச் செலுத்திய கருத்தியல் விசையாக மார்க்சியம் அமைந்ததெனலாம். எவ்வகையான சுரண்டலிலிருந்தும், ஒடுக்கு முறைகளிலிருந்தும் சிறுவர்களை விடுவிப்பதற்கான தருக்கத்தை மார்க்சியம் முன்வைத்தது.

மேலைநாட்டு முன்னேற்றம் நம்மவர்களால் கூர்ந்து அவதானிக்கத் தக்கதாயும் பல விடயங்களில் பின்பற்றத் தக்கதாயும் இருத்தல் உண்மையே. ஆயினும் இது குறித்து நாம் விழிப்பாகவும் இருத்தல் இன்றியமையாதது. கலை, இலக்கியத்தின் பெருவளர்ச்சியின் ஒரு அங்கமாகத் தவிர்க்க இயலாதவாறு வணிக நோக்கு சிறுவர் இலக்கியத்தையும் ஆட்டிப் படைக்கிறது. பிரபல சோவியத் விமர்சகர் செர்கேய் மிகால்கோவ் நாம் மனங்கொள்ள வேண்டியவற்றைப் பின்வருமாறு விபரித்துள்ளார்.

"குழந்தைகள் எதைப் படிக்க வேண்டும் என்று பெற்றோர்கள் அறிவது மிக அவசியமாகும். பல ஆண்டுகளாகக் குழந்தை இலக்கியத்தில் நான் ஈடுபட்டுள்ளேன். மேலை நாடுகளில் குழந்தை இலக்கியங்கள் வியாபாரப் பொருளாகவே கருதப்படுகின்றன. புத்தகத்தில் என்ன அடங்கி இருக்கின் றது என்பது பற்றி வியாபாரிகளுக்குக் கவலை யில்லை. அவர்களுக்குத் தேவையெல்லாம் புத்தகம் நிறைய விற்பனையாக வேண்டும் என்பது தான். அதனால் தான் குற்றவாளிகள் நவநாகரிகத் திருடர்கள், பாங்கர்களைக் கவரும் இளம் அழகு மங்கையர், சொகுசான வாழ்க்கை நடத்தும் பணக்காரக் கனவான்கள் போன்றவர்களைப் பற்றிய குழந்தைப் புத்தகங்கள் மேலை நாடுகளில் ஏராளமாக வெளிவருகின்றன. இம்மாதிரியான புத்தகங்களைப் படிக்கும் சிறுவர்கள் தவறான பாதையைத் தேர்ந்தெடுப்பர் என்பது தெளிவாகும்."

சிறுவர் இலக்கியம் சம்பந்தமாக மேலைப்புல பல்கலைக்கழகங்கள் மேற் கொள்ளும் ஆய்வுச் செயற்பாடுகள், தமிழ் மொழியைப் பொறுத்தளவில் இத்தகைய முன்னெடுப்புக்களைக் காண முடியவில்லை. தமிழ்ச் சூழலிலே சிறுவர் இலக்கியம் சம்பந்தமான ஆய்வு முயற்சிகள் இன்னமும் வலிமை பெறவில்லை. இத்துறை சார்ந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு ஆரோக்கிய மான சிறுவர் இலக்கியப் படைப்புக்கள் வெளிக் கொண்டு வரவேண்டியது அவசியமா கின்றது.

வளர்ந்தோர் கவிதைகளுக்கும் சிறுவர் பாடல்களுக்குமுள்ள வேறுபாடுகளைத் தெளிவாக விளங்கிக் கொள்ளாமையும் விளங்கிக் கொள்ள முயலாமையுமே தமிழில் குழந்தை இலக்கியம் படைக்க முற்படுவோர் பலர் தோல்வி காண்பதற்குரிய அடிப்படை ஏதுக்களாகும். இது பற்றி ஜேம்ஸ் ரீவ்ஸ் என்பவர் " முதியோர் கவிதைக்கும் சிறுவர் பாடல்களுக்கும் இலகுவில் வரையறை செய்து காட்டக்கூடிய பிரதான வேறுபாடு ஒன்று உண்டு. அது என்னவெனில், முன்னையது துருவி ஆய்ந்தறிகின்றது. பின்னது புலன்களுக்குப் புலனாகும் புறவுலகை, வெளியுலகினை நாடி அறிகின்றது" என்று விளக்கியுள்ளார்.

" சிறுவர் இலக்கியங்கள் பயனுள்ள இலட்சியங்களை உருவாக்கிக் கொள்ள உதவுதல் வேண்டும். அவை சிறுவர்களுக்கு

முன்னேற்றத்தை வழங்கும் விசையாக அமையும். மேலும் இலக்கியங்கள் வாயிலாக எடுத்துக்காட்டான மாதிரி வடிவினர் (Role Model) முன்வைக்கப்படுகின்றனர். அவர் களைப் போன்று தாமும் உருவாக வேண்டும் என்ற ஊக்கமூட்டலையும் விசையூட் டலையும் தருதல் சிறுவர் இலக்கியத்தின் உன்னதமான குறிக்கோளாகின்றது" என்று பேராசிரியர் சபா ஜெயராசா தெரிவித் துள்ளார்.

ஆங்கிலேயர் வருகைக்குப் பின், எம்ம வர்கள் ஆங்கில மொழியில் பெற்றிருந்த அறிவின் புலமை காரணமாக புதிய இலக்கிய வடிவங்கள் தமிழ்மொழியில் தோற்றம் பெற்றன. கதைகள் பாடல்கள் போன்றன சிறுவர் இலக்கியத்தில் இடம் பிடித்தன. இந்த விசை, வளர்ச்சி பெற்று உலகம் தழுவிய புதிய புதிய செல்நெறிகளை நம்மவர்கள் உள்வாங்கி படைப்பாற்றலை மேலும் விசாலப்படுத்தினர்.

ஈழத்தைப் பொறுத்தளவில், உரைநடை இலக்கியம் தந்த ஆறுமுக நாவலர் பெருமான் சிறுவர்க்குரிய பாடநூலாக்கத்தின் முன் னோடி ஆவார். சிறுவர்களுக்கான "பாலர் பாடம்" என்னும் நூலைப் பல பாகங்களாக வெளியிட்டும், 'சைவ வினாவிடை' என்னும் சமய அறிவைப் போதிக்கும் நூல்களை வெளிக் கொணர்ந்தும், தமிழ்மொழியின் அறிவையும் சைவ சமய நெறிமுறைகளையும் சிறுவர்கள் தெரிந்துகொள்ள உதவினார். பள்ளிக்கூடப் பாட விதானத்துடன் இவரது நூல்கள் இணைக்கப்பட்டதன் மூலம் புதிய பரிமாண ங்களைப் பெறலாயிற்று. அந்தவகையில் நாவலர் பெருமானின் பணி முக்கியத்துவம் பெறுகின்றது.

தங்கத் தாத்தா சோமசுந்தரப் புலவர் அவர்களின் சிறுவர் பாடல்கள் பல்வகை அம்சங்களை உள்ளடக்கியிருப்பதை அவ தானிக்கலாம். குதூகலம், உற்சாகம், புலக் காட்சி, கல்விச் சிந்தனை என்பவற்றை உருவாக்கக்கூடியனவாக அமைந்திருப்பதைத் தரிசிக்கலாம்.

" ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே!
கூடிப் பனங்கட்டி கூழும் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!"

என்று சிறுவர்களுக்கு மகிழ்ச்சியை ஊட்டும் பாடலையும்,

"கத்தரித் தோட்டத்து மத்தியில் நின்று
காவல் புரிகின்ற சேவகா!"

என்ற கத்திரித் தோட்டத்து வெருளிப் பொம்மையைப் பற்றிய பாடலும், படித்த வர்கள் மனதில் இன்றும் நிலைத்து நிற்பதை நோக்கும்போது தங்கத் தாத்தா சோமசுந்தரப் புலவரின் சிறுவர் இலக்கியப் படைப்புக்கள் யாவும் முனைப்புப் பெற்று நிற்கின்றன.

தமிழ் மரபில், சிறப்பாக ஈழத்துச் சிறார் கல்வி மரபில் பல்வேறு கல்வியியற் சிந்தனைகளைத் தமது கவிதைகள் வாயிலாக உதிர்த்தவர்களுள் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் தனித்துவமாகக் குறிப்பிடத்தக்கவர். இவரது சிறார் கல்விச் சிந்தனைகள் இயற் பண்பு நெறி தழுவி மலர்ச்சியடையத் தொடங் கின. சிறார்களுக்கான கற்பித்தலில் குழவிப் பாடல்களின் முக்கியத்துவம் சோமசுந்தரப் புலவரினால் வலியுறுத்தப்பட்டது. சிறார் கல்வியில் குழுநிலைக் கற்பித்தல், குழுச்

செயற்பாடு முதலியனவும் முன்னெடுக் கப்படல் வேண்டும் என்பதை புலவர் தமது குழந்தைப் பாடல்களிலே குறிப்பிட்டுள்ளார்.

வித்துவான் க. வேந்தனார், கவிஞர் தில்லைச்சிவன் போன்ற தமிழ் பேரன்பர்கள் சிறுவர் இலக்கியப் படைப்புக்களைத் தந்துள்ளனர்.

"காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக்
கட்டிக் கொஞ்சும் அம்மா
பாலைக் காய்ச்சிச் சீனி போட்டுப்
பருகத் தந்த அம்மா"

என்ற வித்துவான் க. வேந்தனாரின் பாடலின் அடிகள் ஈழத்துத் தமிழ்ச் சிறுவர் சிறுமியரின் மழலை மாறா வாய்களி லெல்லாம் தவழ்ந்தன. இதுபோன்ற சிறுவர் பாடல்கள் பலவற்றையும் சிறுவர்கள் தம் பட்டறிவு, சொற்களஞ்சியம் ஆகிய எல்லைக் குள் நின்று பாடிய வித்துவான் வேந்தனார் 'மாம்பழம்', 'அக்கா', 'பொன் இராமநாதன்' ஆகிய சிறுவர்களுக்கான படைப்புக்களையும் தந்துள்ளார்.

கவிஞர் தில்லைச்சிவன் அவர்களும் சிறுவர் இலக்கியத்துக்கான தமது பங்களிப்பை வழங்கியுள்ளார். 'தாய்', 'பாப்பாப் பாட்டுக் கள்', 'பூஞ்சிட்டு' 'சிறுவர் கதைப் பெட்டகம்' போன்றவற்றை ஆக்கித் தந்துள்ளார். பொது வாக மேலே கூறப்பட்டவர்களுடைய ஆக்கங் கள் சிறார்களை மகிழ்ச்சியடைய குதூகலிக்கச் செய்வனவாகவே அமைந்திருந்தன.

சொல்லறிதல், பொருளறிதல், எழுத்தறி தல், எண்ணக்கருவாக்கம் செய்தல் என்பவற் றுக்கும் அதன் வழியாக அடிப்படையான மொழித்திறன்களை வளர்த்தலுக்குமான நூலாக தமிழ்வேள் க.இ.க. கந்தசுவாமி அவர்களின் 'பாலர் மலர்' என்னும் நூல் வெளிவந்துள்ளது. பன்மொழிப் புலவர் க. கனகரத்தினம் அவர்கள் 'சிறுவர் பாடல்' என்னும் நூலைத் தந்துள்ளார்.

கல்வி அதிகாரியாக இருந்த க. ச. அருள்நந்தி என்னும் கல்விமான், ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெற்றோரின் சிறுவர் ஆக்கங்களைத் தொகுத்து 'பிள்ளைப்பாட்டு' என்னும் நூலை 1935 இல் வெளிக்கொணர்ந் துள்ளார். தமிழ் உலகில் வெளிவந்த முதலா வது சிறுவர் பாடல் தொகுப்பு என்ற பெருமை இந்நூலுக்குண்டு.

பாலர் கல்வியில் மிகவும் வலிமைமிக்க சாதனமாகக் கதைகள் விளங்குவதற்குக் காரணம், அவற்றின் வாயிலாகத் தூண்டப் பெறும் மனவெழுச்சிகளும் எதிர்பார்ப்பு இன்பமும் ஆகும். கதை அசைவுகளினூடாகக் குழந்தைகள் உள அசைவுகளை அனுபவிக் கின்றனர். கதாபாத்திரங்களுடன் ஒன்றிணைத் துக் கற்பனை இன்பத்தையும் எளிமையான சீராக்கத்தையும் அனுபவிக்கின்றனர். பாலர் கதைகளுக்குரிய பலமும், வலிமையும் கொண்ட தளம் நாட்டார் மரபுகளில் இருந்து கிடைக்கப் பெறுகின்றது. நாட்டார் கதைகளில் இடம்பெறும் எண்ணக்கருக்கள் காட்சி வடிவிலிருந்து கருத்து வடிவை நோக்கிச் செல்வதாக அமையும்.

"பொதுவாக எல்லாச் சமுதாயங் களிலும் வழக்கிலுள்ள நாட்டுப் பாடல்களிலே கணிசமான பகுதி குழந்தைகள் சம்பந்த மானவையாகும். இவற்றைப் பற்றுக் கோடாகக் கொண்டு புதிய புதிய ஆக்கங் களைச் செய்வதற்கு ஏற்ற மனப்பக்குவம்

வேண்டும். அதற்கு ஆசிரியர்கள் சமூகவியல் அறிவுடையோராய் இருத்தல் அவசியம். " என்று பேராசிரியர் க. கைலாசபதி குறிப்பிட்டுள்ளார்.

பிரபல குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் நாட்டுப் பாடல்களின் இன்றியமையாமையை வலியுறுத்தி வந்திருக்கிறார். "புதிய குழந்தை இலக்கியத்தை மறந்துவிடக் கூடாது" என்று சொல்லியுள்ளார். நாட்டுப் பாடல்களைச் சேகரிப்பதிலும், குழந்தைகளுக்குக் கதைப் பாடல் எழுதுவதிலும் தனித்துவமான பங்களிப்பை சென்னை வானொலியில் பணிபுரிந்த ர. அய்யாசுவாமி அவர்கள் ஆற்றியுள்ளார். அவர் குழந்தைகளுக்கு 'நாடோடிப் பாடல்கள்' என்ற நூலையும் வெளியிட்டிருக்கின்றார்.

வட்டுக்கோட்டை மக்கள் கவி மு. இராமலிங்கம் அவர்கள் தாம் சென்றவிடமெங்கும் கிடைத்த நாட்டார் பாடல்களை தேடித் தொகுத்துச் சுவைத்து நூலுருவில் கொண்டு வந்தவர். இவருடைய நாட்டார் பாடல்கள் சிறுவர்கள் மத்தியில் ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியிருந்ததையும் குறிப்பிடுவது பொருந்தும். நாட்டுப்புறத் தாலாட்டுப் பாடல் கள் இவற்றில் முக்கியத்துவம் பெறுகின்றன.

தாலாட்டுப் பாடல் என்று நோக்கும் போது

"பச்சை இலுப்பைவெட்டி
பால்வடியத் தொட்டில் கட்டி
தொட்டிலுமோ பொன்னாலை
தொடுகயிறே முந்தாலை"

இலங்கையில் ஆசிரிய வழியிலான சிறுவர் ஆக்க மரபில் புலவர் மு. நல்லதம்பி, கனக செந்திநாதன், வ. இராசையா, பண்டிதர் க. வீரகத்தி, ஏ. இக்பால், திமிலைத் துமிலன், பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம், அம்பி, சத்தியசீலன், கல்வயல் வே. குமாரசுவாமி, துரையர், ச. அருளானந்தம், கவிஞர் த. துரைசிங்கம் முதலானோர் தடம் பதித்தனர்.

"இலங்கையிலே குழந்தைப் பாடல் கள் குறித்து எழுதப்பட்டிருக்கும் விவரண விமர்சனக் கட்டுரைகளை நோக்குமிடத்து சில குறிப்பிட்டுச் சொல்லக் கூடியனவாய்க் காணப்படுகின்றன. என் கண்ணில் பட்ட வற்றுள் கனக. செந்திநாதன் எழுதிய 'குழந்தை இலக்கியம்' (கவிதைகள் - 1966), 'பிரதம வகுப்புக்களுக்கான ஈழத்துத் தமிழ்க் கவிதைகள்' (1971), நியாஸ் புர்கான் பீ எழுதியுள்ள 'சிறுவர் இலக்கியம்' (1971) என்பன படித்துப் பயன்பெறத் தக்கவை எனக் கூறுவேன்" என்று பேராசிரியர் க.கைலாசபதி 'தமிழில் குழந்தை இலக்கியம்' என்னும் கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

'சிறுவர் இலக்கியம்' என்று நோக்கும் போது வ. இராசையா மாஸ்டரின் பங்களிப்பு முக்கியமானது. வானொலி அண்ணாவாக, வானொலி மாமாவாகப் பணியாற்றிய காலத்தில் கதை சொல்லல், கவிதை பாடல், நாடகம் நடித்தல் ஆகிய துறைகளில் மிகுந்த கவனம் செலுத்தி தரமான நிகழ்ச்சிகளை நடத்தி வந்துள்ளார். அத்தகைய நிகழ்ச்சிகள் சிறுவர்கள் மத்தியில் புதிய ஈர்ப்பை ஏற்படுத்தியிருந்தன.' சண்டியன் ஓநாய்' , ' சந்தனக் கிண்ணம்', 'புதிய பூக்கள்' போன்ற சிறுவர்களுக்கான அவருடைய படைப்புக்கள் பலராலும் பேசப்பட்ட கதையம்சத்தைக் கொண்ட சிறுவர் இலக்கியமாகும். ஆசிரியர் என்ற வகையில் அவருடைய அவதானிப்புக்கள், மாணவர்களுடன் அவர் கொண்டி

ருந்த அந்நியோன்னிய உறவு, இவற்றுக்கும் மேலாக அவருடைய அனுபவம் என்பன இத்துறைசார் பங்களிப்பை வழங்க உந்துசக்தி யாக இருந்துள்ளன.

தமிழறிஞர் புலவர் ம. பார்வதி நாத சிவம் எளிய நடையில் குழந்தைப் பாடல் களைத் தந்து நிற்கின்றார். இவரின் 'மழலை மலர்கள்', மகாஜனன் 'குழந்தைக் கவிதைகள்' என்பன முக்கியத்துவம் பெறுகின்றன.

சிறுவர்களுக்கான இலக்கியப் பரப்பு இன்றைய காலகட்டத்தில் சற்று வியாபித் தருப்பதை அறிய முடிகின்றது. பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் கல்வியியல் சம்பந்த மான பல நூல்களைப் புலமை வழி நின்று எழுதியுள்ளார். சிறுவர்களின் கல்வி மேம் பாட்டுக்கான கற்றல், கற்பித்தல் செயற்பாடு கள் எவ்வகை யில் அமையவேண்டும் என்பதை உளவியல் ரீதியில் ஆய்வு செய்து அவற்றை நூல்களாக வெளிக்கொணர்ந் துள்ளார். 'கற்றல் உளவி யல்', 'தாய்மொழிக் கல்வியும் கற்பிக்கும் கலையும்' , 'குழந்தை உளவியலும் கல்வியும்' ஆகிய அவருடைய நூல்கள் எடுத்துக் காட்டாக உள்ளன.

சிறார்கள பற்றிய தெளிந்த புலக் காட்சியை ஏற்படுத்துவதற்கும் முன்னேற்ற கரமான அணுகுமுறைகளை முன்னெடுப் பதற்கும் பயனுள்ள ஆக்கமாக 'குழந்தை உளவியலும் கல்வியும் எனும் நூல் அமை கின்றது. இந்நூல் இத்துறை சார்ந்த ரீதியில் முதன்மையானதொன்றாகும். சிறார் இலக்கி யத்தை மற்றும் சிறார் உளநலத்தை மேம் படுத்துவதற்கு இந்நூல் ஆற்றுப்படுத்தல் நூலாகவும் அமைந்துள்ளது. மேலும் இவருடைய 'பாலர் கல்விப்பாடல்', 'சிறார் களுக்கான அறிவியற் கதைகள்' என்பன இலக்கியன் வெளியீடாக வெளிவந்துள்ளது.

பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் 'கிராமத்துக் கதைகள்' என்ற சிறுவர் இலக் கியப் படைப்பையும் தந்துள்ளார். சமகால நிலையில் கிராமத்துவாழ்க்கையுடன் ஒட்டிய தாக சிறுவர்களின் சிந்தனை வளத்தைத் தூண்டுவனவாக இந்நூலிலுள்ள கதைகள் அமைந்திருப்பதைக் காண முடிகின்றது. அவை மேலும் கிராமங்களில் மங்கியும் மறைந்தும் கொண்டிருக்கும் பண்பாட்டு விழுமியங்களை சிறார்களுக்குக் கையளிக்கும் வகையில் 'கிராமத்துக் கதைகள்' படைப் பாக்கம் பெற்றுள்ளன. இந்நூல் சிறார் இலக்கியம் தொடர்பான புலக்காட்சியில் பல்பரிமாண நோக்கில் வெளிப்படுத்தும் கதை சொல்லல் பண்பை அறிமுகப்படுத்துகின்றது.

அண்மையில் பேராசிரியர் சபா ஜெயராசாவின் புதிய படைப்பாக 'சிறுவர் இலக்கியம்' என்னும் நூல் வெளிவந்துள்ளது. இந்த நூலை ' குமரன் புத்தக இல்லம்' பதிப்பித்து வெளியிட்டுள்ளது. ''சிறுவர் கல்வியையும் இலக்கிய ஆக்கங்களையும் வளம்படுத்தாது தொடர்ந்து செல்லும் கல்வியை முன்னேற்றகரமாக எடுத்துச் செல்ல முடியாது சிறுவரிடத்தே வாசிப்பு இரச னையை ஏற்படுத்தும் பொழுதுதான் அவர்கள் வளர்ந்தோர் நிலையில் உயர்நிலை வாசிப்பில் ஈடுபடுவர்" என்று நூலாசிரியர் குறிப்பிட்டு ள்ளார். இந்நூல் கல்வியியல், /உளவியல், சமூகவியல் போன்ற அனைத்துத் துறைகளின் பார்வைகளையும் உள்ளடக்கிய முழுமையான ஆழ்ந்த நூல் ஒன்றின் தேவையை நிறைவு செய்யும் வகையில் ஆக்கம் பெற்றுள்ளது.

குமரன் புத்தக இல்லம் பேராசிரியர் செ.யோகராசா அவர்களின் 'ஈழத்துச் சிறுவர் இலக்கியக் களஞ்சியம்', 'ஈழத்து சிறுவர் பாடல் களஞ்சியம்' ஆகிய இரண்டு நூல்களையும் தந்துள்ளது. ஈழத்தில் இன்றுவரை வெளியான சிறுவர்க்கான கட்டுரைகளும் சிறுவர் பாடல்களும் தொகுப்பாக வெளியிடப்பட்டுள்ளன. மேலும் செ. கணேசலிங்கன் அவர்களின் 'உலக மகா காவியங்கள் கூறும் கதைகள்' என்னும் நூலும் வெளி வந்துள்ளது.

ஈழத்துச் சிறுவர் இலக்கியப்பரப்பில் சிறுவர் பாடல், சிறுவர் கதை, சிறுவர் கட்டுரைகள் என்று பலதுறை சார்ந்து எழுதி வருபவர் திருகோணமலை ஆலங்கேணியைச் சேர்ந்த முன்னாள் கல்விப் பணிப்பாளர் ச. அருளானந்தம் (கேணிப்பித்தன்) மொத்தமாகச் சிறுவர் இலக்கியப் படைப்புக்கள் முப்பத்து மூன்றைத் தந்து நிற்கும் கேணிப்பித்தன் அருளானந்தம் வித்தியாசமான ஒரு புதிய நடையைக் கையாண்டு தமது ஆக்கங்களை வெளிக்கொணர்ந்துள்ளார். 'இன்பக் கனிகள்', 'காகமும் தம்பியும்', 'சகோதரராய் வாழ்வோம்', ' கடலும் காவிரியும்' போன்ற பதின்னான்கு சிறுவர்பாடல் நூல்களையும், ' பூஞ்சிட்டுக்கள்', 'தங்க மாம்பழம்', 'சின்னத் தேவதைகள்', 'சாதனையாளர்' போன்ற ஒன்பது சிறுவர்கதை நூல்களையும், 'பேனாவினால் பேசுவோம்' என்னும் சிறுவர்களுக்கான கட்டுரை நூலையும், மேலும் 'பளிங்குத்தீவு', 'உல்லாசப் பயணம்', 'பயங்கொள்ளலாகாது பாப்பா', 'மனதில் உறுதி வேண்டும்','துணிச்சல் மிக்க சுந்தரி' போன்ற எட்டுச் சிறுவர் நாவல் களையும், 'வித்தகன் விபுலானந்தன்' என்னும் சிறுவர் இலக்கிய நூலையும் தந்து சாதனை படைத்துள்ளார்.

பொதுவாக நோக்குமிடத்து ச. அருளானந்தம் அவர்களின் படைப்புக்கள் சிறுவர்களை நல்வழிப்படுதுவதற்கும் அவர்களின் ஆற்றல்களை மேம்படுத்துவதற்கும், வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்கும் ஏற்ற வகையில் எழுதப்பட்டுள்ளன. ஒழுக்கம், நேர்மை, துணிவு, ஒற்றுமை, பெரியோரை ஆசிரியர்களை மதித்தல், அன்பு காட்டுதல், மற்றவர்களுக்கு உதவுதல் போன்ற பண்புகள் வலியுறுத்தப்பட்டுள்ளனவாக அவரது படைப்புக்கள் அமைந்திருந்தன.

மலையகத்தில் இருந்தும் நாட்டார் பாடல்களை உள்ளடக்கிய சிறுவர்களுக்கான நூல்கள் வெளிவந்துள்ளன. அந்தனி ஜீவாவின் 'திருந்திய அசோகன்' சிறுவர் இலக்கியப் படைப்புக்களில் ஒன்றாகும். இளைப்பாறிய கல்வி அதிகாரி மொழிவரதன் அவர்கள் சிறுவர் இலக்கியப் படைப்புக்களை வெளிக் கொண்டு வந்ததாக அறிய முடிகிறது.

இளைப்பாறிய அதிபர் சுன்னாகம் துரைசிங்கம் அவர்கள் துரையர் என்று தம்மை அறிமுகப் படுத்திக்கொண்டு சிறுவர்களுக்கான இலக்கியப்படைப்புக்களை நூல்களாக வெளியிட்டுள்ளார். 'பாலன் வருகிறான்', 'தோட்டத்தில் ஆடு', ' நட்பே உயர்வு', 'உண்டு மகிழ்வோம்', ' வயல் செய்வோம் என்பன அவருடைய ஆக்கங்களாகும். ஆசிரியராக, அதிபராக இருந்து மாணவர்களுடன் கொண்டிருந்த ஊடாட்டம் காரணமாகப் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் மற்றும் சூழலுடன் அவதானித்த விடயங்கள் என்பவற்றை உள்வாங்கி தமது ஆக்கங்களைத் தந்துள்ளார்.

முருங்கன், ஆத்திக்குளி கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஓய்வு பெற்ற

பாடசாலை அதிபர் திரு. பி.பி. அந்தோனிப் பிள்ளை சிறுவர் இலக்கியதுறைக்குப் பெரும் பங்காற்றியவர்களில் ஒருவராக மதிக்கப்படு கின்றார். 'பாடி மகிழ்வோம்', 'பாடிப்பயன் பெறுவோம்', ' பாட்டுப் பாடி ஆடுவோம்', ' சிறுவர் கதம்ப மாலை', 'பாடல் சொல்லும் கதைகள்', ' கிராமத்தின் இதயம்', ' சிறுவர் சிந்தனை விருந்து' (கதைககள்), 'வரலாற்றில் தடம் பதித்தவர்கள்', 'பாடலும் சூழலும்' என்பவற்றுடன் 'கதைக்கொத்து', ' சிறுவர் நாடகங்கள்', ' கட்டுரைக்கனி', 'கட்டுரைச் சுரங்கம்' ஆகியனவும் இவரது படைப்புக்க ளேயாகும். இதுவரை இருபத்தைந்துக்கும் மேற்பட்ட சிறுவர் இலக்கிய நூல்களை வெளியிட்டுள்ளார். சிறுவர் இலக்கியத் துக்கான வட மாகாண ஆளுநர் விருதை 2008 இல் பெற்றுக் கொண்ட இவர் தொடர்ந்தும் எழுதி வருகின்றார்.

மேலும் வவுனியாவைச் சேர்ந்த் அகளங் கன் மற்றும் பண்டிதர் து. தெட்சாணமூர்த்தி, மு. பொன்னம்பலம், முத்து இராதா கிருஸணன் ஆகியோர் சிறுவர் இலக்கியத் துக்கான தமது பங்களிப்பை வழங்கி வருகின்றனர். 'பந்து அடிப்போம்', 'சிரிக்க விடுங்கள்', ' சின்னச்சிட்டுக்கள்', 'சுட்டிக் குருவிகள்' என்பன அகளங்கனின் படைப் புக்களாகும். 'பால் நிலா', 'குயிலோசை', 'உறவுகள்' ஆகிய நூல்களை து. தெட்சணா மூர்த்தியும், 'செவ்வாய் மனிதன்', 'நான் அரசன்' ஆகிய ஆக்கங்களை மு. பொன்னம் பலமும், 'நரி மேளம்', 'கடலின் துயரம்', 'பூதம் காத்த புதையல்' போன்ற படைப்புக்களை முத்து இராதாகிருஷ்ணனும் தந்துள்ளார்கள். இதில் நான் அரசன்' என்னும் நூல் 'இலக் கியன்' வெளியீடாகவும் ஏனைய நூல்கள் யாவும் 'பத்மம்' பதிப்பகத்தின் வெளியீடா கவும் வெளிவந்துள்ளன. பொதுவாக இச்சிறுவர் படைப்புக்களில் கற்பனைவாதம் மிஞ்சியிருப்பதை அவதானிக் கலாம்.

கிழக்கு மாகாணத்திலிருந்து பலர் சிறுவர் இலக்கியப் பங்களிப்பிலும் தடம் பதித்துள்ளனர். மாஸ்டர் சிவலிங்கம், யோக யோகேந்திரன், வாகரை வாணன், மணிக்க விராயர், திமிலை மகாலிங்கம், ஓ.கே. குணநா தன் ஆகியோர் முக்கியமானவர்கள். மாஸ்டர் சிவலிங்கம் சிறந்த கதை சொல்லியாக எல்லோராலும் மதிக்கப்பட்டவர். அவர் பாடசாலைகளிலும், வானொலி தொலைக் காட்சியிலும் சிறுவர்பாடல்கள் கதைகள் என்பவற்றைச் சொல்லி வந்துள்ளார். 'சிந்தா மணி' பத்திரிகையிலும் சிறுவர்களுக்கான பல படைப்புக்களை எழுதி வந்துள்ளார். ஓ.கே. குணநாதன் எழுதிய 'பறக்கும் ஆமை' சிறந்த சிறுவர் இலக்கியத்துக்காகவும், சிறந்த ஓவியம் வடிவமைப்பு நூலுக்காகவும் 2011 ஆம் ஆண்டு அரச இலக்கிய விருதுகள் இரண்டி னைப் பெற்றுள்ளமை சிறுவர் இலக்கிய ஆக்கத்திற்குக் கிடைத்த மிகப் பெரிய அங்கீ காரமாகும்.

நாடறிந்த கவிஞர் காவியகோ ஜின் னாஹ் ஷரிபுத்தீன் சிறுவர் இலக்கியத்துக்கான தமது பங்களிப்பில் 'கடலில் மிதக்கும் மாடி வீடு', ' எங்கள் உலகம்' ஆகிய சிறுவர் பாடல் நூல்களையும், 'அகப்பட்ட கள்வன்' (சிறுவர் படக்கதை) மற்றும் 'சிறுமியும் மந்திரக்கோ லும்' போன்ற படைப்புக்களைத் தந்துள்ளார்.

சாய்ந்த மருதைச் சேர்ந்த் திரு. ஏ. பீர்மு கம்மது 'கடல் ஒருநாள் எங்கள் ஊருக்குள்

வந்தது' (சிறுவர் கவிதை நூல்), 'அனுபவம் பெறுவோம்' (சிறுவர் பாடநூல்), ' குழந்தை உளவியல்' (நூலாக்க ஆலோசனைக்குழு உறுப்பினர்) ஆகிய சிறுவர் இலக்கியப் படைப்புக்களை உருவாக்கியுள்ளார். முன்னாள் சுவடிகள் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. நவசோதி 'ஓடிப் போனவன்' என்னும் சிறுவர் ஆக்கத்தைப் படைத்துள்ளார்.

சிறாரின் அறிவு விருத்தியையும் உணர்திறன் கூர்மையையும் நோக்கியதாக 'இலக்கியன் வெளியீட்டகம்' பல சிறுவர் இலக்கியப் படைப்புக்களை வெளிக்கொணர்ந்துள்ளது. செ. கணேசலிங்கனின் 'உலகச் சமயங்கள்', மருத்துவப் பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்களின் 'தம்பி தங்கைக்கு' ஆகிய ஆக்கங்கள் குறிப்பிடத்தக்கன. மேலும் சிங்கள மொழியில் சிறுவர் இலக்கியங்களை உருவாக்கிய சிபில் வெத்த சிங்ஹ என்பவருடைய ஆக்கங்களை மொழிபெயர்த்து தமிழில் தரப்பட்டுள்ளது. அந்த வகையில் 'சண்டை', 'வெசாக் தீபம்', 'தம்பையா', 'பணியாரப் பயில்வான்', 'குட்டி முயலுக்குப் பரிசு', 'குடைத் திருடன்', 'ஓடிப் போன தாடி', 'சின்னப்பாட்டி', 'மோதக மாமா' ஆகிய சிறுவர் கதைகளைக் குறிப்பிடலாம். இச்சிறுவர் கதைகள் சிறுவர்களுக்கான நல்ல அறிவுரைகளைக் கூறுவனவாக அமைந்திருந்த போதிலும், சிங்கள மக்களின் கலாசாரம், பண்பாடு என்பவற்றைப் பிரதிபலிப்பனவாகவே அமைந்திருக்கின்றன என்பதையும் குறிப்பிடுவது பொருந்தும். இருந்த போதிலும் வேற்றுமொழிப் படைப்புக்கள் தமிழ் மொழிக்கு மொழி மாற்றம் செய்வதும் ஆரோக்கியமான செயற்பாடேயாகும்.

தாய்மொழிக் கல்வியின் முக்கியத்துவம் பல கல்வியியலாளரால் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. "தாய் மொழிக் கல்வியின் வாயிலாகவே புதிய கண்டு பிடிப்புக்களையும் சமூக நலன்களையும் விரிந்த அளவிலே பெற்றுக் கொள்ள முடியும்." என்பதை பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரன் பல ஆதாரங்களுடன் தமது 'கல்வித் தத்துவம் ' என்னும் நூலில் விளக்கியுள்ளார். சிறுவர் இலக்கியங்களும் தாய்மொழி வாயிலாகவே முகிழ்ந்தெழ வேண்டும். அப்பொழுதுதான் அவை சிறார்களின் ஆற்றலையும் சிந்தனை வளத்தையும் பெருக்கக் கூடியதாக அமையும் என்று பேராசிரியர் சபா ஜெயராசா தமது 'தாய்மொழிக் கல்வியும் கற்பிக்கும் கலையும்' என்னும் நூலில் தெளிவுபடுத்தியுள்ளார்.

தமிழ் மரபில் சிறுவர் இலக்கியம் தொடர்பான புலக்காட்சியிலும் ஒற்றைப் பரிமாண நோக்குக் காணப்படுகின்றது. ஒற்றைப் பரிமாண நோக்கு என்றால் குறித்த ஒரு தளத்தில் மாத்திரம் கவனம் செலுத்தும் அணுகுமுறையாகும். அதாவது முன்பள்ளிச் சிறுவர்களையும் மற்றும் ஆரம்ப பாடசாலைச் சிறுவரையும் மட்டுமே குவியப்படுத்திய இலக்கிய ஆக்கங்கள் பெருமளவில் மேற்கொள்ளப் படுகின்றன. முன் கட்டிளமைப் பருவம், கட்டிளமைப்பருவம் ஆகியவற்றைக் குவியப் படுத்தும் எழுத்தாக்கங்கள் மிகக் குறைவாக வேயுள்ளன.

பெரும்பாலான சிறுவர் இலக்கியங்கள் மத்தியதர வகுப்பினரதும் சமூகத்தின் உயர் வகுப்பினரதும் விழுமியங்களை அடியொற்றி பேச்சுமொழியை அடியொற்றியுமே எழுதப் படுகின்றன என்ற அவதானிப்பு இடம்

பெற்றுள்ளதையும் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. பிரதிகூலமடைந்தோர், எல்லைப் படுத்தப்பட்டோர், தலித்துக்கள், மாற்று வலுவுடையோர் முதலியோரின் விழுமியங்களும் அவர்களுக்குரிய சிறப்பான மொழியும் வழக்கில் உள்ள தமிழ்ச் சிறுவர் இலக்கியங்களிலே பெருமளவில் இடம்பெறு வதில்லை என்ற குறைபாடும் முன்வைக்கப்பட் டுள்ளது. இவை கவனத்தில் கொள்ளவேண் டிய விடயங்களாகவுள்ளன.

இன்றைய உலகம் விரைந்த மாற்றங்களை எட்டிய வண்ணமிருக்கின்றது. அனைத்துத் துறைகளிலும் தொழில் நுட்பப் புரட்சி ஏற்பட்ட வண்ணமுள்ளது. புதிய வளர்ச்சிகளையும் மாற்றங்களையும் எழுத்தாக்கங்களில் உள்ளடக்கல் வேண்டும் என்பது ஒரு சிறப்பான குறிக்கோளாகக் கொள்ளப்படுகின்றது. உலக மாற்றங்களை அறிந்துகொள்ளும் வேளை அவர்கள் உலகப் பொறுப்புள்ளவர்களாகவும் சமூகப் பொறுப்புள்ளவர்களாகவும் வளர்க்கப்படல் வேண்டும் என்பதும் முக்கியத்துவம் பெறுகின்றது. அந்த வகையில் சிறுவர் இலக்கியங்கள் இத்தகைய பயனுள்ள பணியை முன்னெடுத்துச் செல்ல முடியும்.

# தொற்றா மற்றும் தொற்று நோய்களை தவிர்த்தல் எப்படி?

**Dr. ஜெயந்தி**

பழைய மாணவி

1. தனிநபர் உடல் உழைப்பிற்குத் தேவை யான கலோரிகளை விட மேலதிகமான கலோரி களைக் கொடுக்கும் நாளாந்த தேவைக்கு அதிகமாக உணவை உட் கொள்ளும் போது அவை உடலில் கொழுப்பாக சேமிக்கப் படும். இதை தொப்பை விழுதல் அல்லது உடம்பு குண்டாதல் எனப்படும்.

2. அளவுக்கு அதிகமான மாச்சத்து, கிழங்குவகைகள், அரிசி உணவு, கோதுமை, எண்ணெயில் பொரித்த உணவுகளான சமாசுவடை, றோல்ஸ், கொத்துரொட்டி, முட்டை மஞ்சட் கரு, தேங்காய் எண்ணெய், நெய், சீஸ் போன்ற உணவுகளையும், இனிப்புக் கூடிய ஐஸ்கிறீம் சொக்கலேட், குளிர்பானங்கள், சோடா, மென்பானங்கள், கூடிய உப்புடைய கருவாடு, பதப்படுத்தப் பட்ட பப்படம், ஊறுகாய் போன்ற உணவுகள் அளவுக்கதிகமான சீனி, உப்பு, காரம், புளி பாவனை என்பன காரணமாகும்.

3. தேவையான உடல் உழைப்பு இன்மை, உடற்பயிற்சி இன்மை, தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன் அதிகநேரம் செலவழித்தல் என்பன காரணம்.

4. குண்டாதல், கொலஸ்ரோல், இருதய நோய், சலரோகம், அதி உயர் குருதி அமுக்கம் என்பன ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ள ஒரு வட்டமாக நிகழும் தொற்றா நோய்களாகும். அதிகமாக முதியோரையும் இளம் வாலிபர்களையும் கூட இருதய நோய், குருதிக் குழாய் அடைப்பு, பக்கவாதம், சிறுநீரகப் பிரச்சினை, கண்களில் புரை என்பன ஏற்பட ஏதுவாகிறது.

5. ஆகவே ஒவ்வொருவரும் தங்களது வயது, உயரம், நிறைக்கேற்ற சுத்தமான ஆரோக் கியமான எல்லாச் சத்தும், காபோவை தரேற்று, கொழுப்பு, புரதம், கனியுப்புக்கள், விற்றமின்கள் நிறைந்த சமச்சீர் உணவை உட் கொள்வது தேவையான அளவு உடற் பயிற்சி செய்வது அவசியம்.

6. கைத்தொலைபேசி, கணினி, தொலைக் காட்சி என்பன பற்றி தேவையற்ற விசயங் களில் அதிக நேரம் செலவு செய்வதை பள்ளிச் சிறார்கள் தவிர்க்க வேண்டும்.

7. சவர்க்காரம் இட்டு கைகளைச் சுத்தமாக கழுவுவது, சுகாதார வழிகளைக் கையாளு வது, சுத்தமான குடிநீர், சுத்தமான காற்றைத்

சுவாசித்தல், கீரைவகைகள், பழங்கள் பச்சைக் காய்கறிகளை நன்றாகக் கழுவி, உள்ளி, இஞ்சி, வெங்காயம் என்பன சேர்த்து உயிர்ச் சத்துக்கள் போகாமல் சமைத்தல். அவற்றை இளஞ் சூட்டில் நன்றாக மென்று உண்ணுதல், காலையும், மாலையும், படுக்கைக்குப் போகும் பொழுது பற்களை பற்பசை பாவித்து தூரிகையால் சுத்தம் செய்வது, தினமும் காலையில் குளிப்பது என்பன ஆரோக்கியமாக உடலை வைத்திருக்க உதவும்.

8. மற்றும் சன நெருக்கமான வாகனப் பயணம் சனக்கூட்டம் அதிகமுள்ள இடங் களைத் தவிர்த்தல். சுத்தமான குடிநீரைப் பருகுதல், தொற்று என்பவற் றால் நோய் களான நியுமோனியா, அம்மை, ஜலதோசம், கசம், சளிக்காய்ச்சல் என்பவற் றையும் தவிர்க்கலாம்.

9. புகைத்தல், போதைப் பொருட்கள், பான் மசாலா, மது போன்றன உடல் ஆரோக்கியத்திற்கு கேடு விளைவிப்பன. வீட்டையும் சுற்றாடலையும் சுத்தமாக வைத்திருத்தல் மலேரியா, டெங்கு, சிக்குன்குனியா போன்றவற்றிலிருந்து நம்மைப் பாதுகாக்க உதவும். இதனால் நாம் ஆரோக்கியமாக நோயற்று வாழ முடியும்.

# இயற்கையோடு தமிழ் பேசும் சோலைக்கிளி

**இராஜி கெங்காதரன்**
ஓய்வு நிலை ஆசிரியை
இராமநாதன் கல்லூரி
பழைய மாணவி

இலங்கையின் நெற்களஞ்சியம் என்றும், மீன்பாடும் தேன் நாடு என்றும் புகழப்படும் கிழக்கிலங்கை பல கவிஞுர் களையும் பெரியோர்களையும் பெற்று வளர்த்துப் பெருமை பெற்றது. முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தரும் புலவர்மணி பெரிய தம்பிப் பிள்ளையும் கிழக்கின் இரு மணிகள் எனலாம். கவிபாடுவதற்கு ஏற்ற மனம் கவரும் இயற்கைச் சூழல் அமைந்த பிரதேசம் அது.

ஈழத்து நவீன தமிழ் கவிதைத்துறை 1940களில் இருந்துதான் அதன் முழு அர்த்தத் தோடும் வீச்சோடும் தோன்றி வளரத் தொடங் கியது. 1980 களில் ஐந்தாவது தலைமுறைக் கவிஞர்களின் தோற்றம் என்று பேராசிரியர் நுஃமான் வரையறை செய்துள்ளார். இன்று இத்துறை ஏழு தலைமுறைகளைக் கடந்திருக் கலாம். 80களில் தோன்றிய தலைமுறையி லேதான் சோலைக்கிளியும் அடங்குகிறார்.

1957ல் கிழக்கிலங்கையில் பிறந்த உதுமா லெவ்வை முகமது அதீக் என்பவர் எந்த மதத்தையும் குறிக்காத "சோலைக்கிளி" என்னும் புனைப் பெயரைச் சூட்டிக் கொண் டார். 1980 களில் எழுதத் தொடங்கிய இவர் 2012 ஆம் ஆண்டில் பதினொரு கவிதைத் தொகுதிகளை வெளியிட்டு முடித்தார் என்பது பெருமைக்குரியது. 1996 இல் "பாம்பு நரம்பு மனிதன்" என்ற தொகுதிக்காகவும் 1997 இல் "பனியின் மொழி" எழுதி என்ற தொகுதிக் காகவும் இலங்கை சாகித்திய விருதினைப் பெற்றார். 1991 இல் "காகம் கலைத்த கனவு " சுதந்திர இலக்கிய விழாவில் சிறந்த தொகுதிக் கான விருதைப் பெற்றது.

1988இல் வடக்குக்கிழக்கு மாகாண சபையின் சாகித்திய விருதினை "எட்டாவது நரகம்" என்ற தொகுதிக்காகவும் பெற்றார். 2005 ஆம் ஆண்டில் ஜப்பான் அரசின் கலா சார வுங்கா விருதினைப் பெற்றார்.

யாப்பிலக்கணத்துள் அடங்கிய செய்யுள் மரபுக்கவிதைகள் என்ற படிகடந்து இலக் கணம் விலக்கிய புதுக்கவிதை முகிழ்ந்த போது மொழியாற்றல் பெற்றவர்கள் இலகுவாக இத் துறையில் ஈடுபடமுடிந்தது. இத்துறையின்

வளர்ச்சிப்பாதையில் இலக்கணம் இலக்கியம் என்ற நிலை கடந்து, அதுவும் ஒரு கட்டுக் கோப்புக்குள் அடங்கி விட்டது. என்பது கவிக்கோ அப்துல்ரகுமான் போன்ற சில பெரியார்களின் கருத்தாகிவிட்டது.

காலத்துக்குக் காலம் கவிதை இலக்கியம் பல மாறுபாடுகளை உள்வாங்கிக் கொண்டுள்ளது. மொழிவளம், பொருள்வளம், வெளிப்பாட்டு முறைமை, வடிக்கப்படும் உணர்வுகள் மொழியும் வகை எனப் பலவேறுபாடுகள் காணப்படுகின்றன. புதியதொரு புரிதலுடனும், பிரக்ஞையுடனும், ஆட்சுமம் பொதிந்தும், உவமை உருவகங்கள் கடந்து குறியீட்டு வடிவங்களுடனும், படிம வளத்துடனும் இன்றைய நவீன கவிதைகள் உருவாக்கப்படுகின்றன.

மனிதன் இயற்கையோடு இணைந்து வாழ்பவன். அஃறிணைப் பொருட்களின் தயவில் வாழும் உயர்திணையாய் அமைந்தவன். அஃறிணைப் பொருட்களை அகற்றி விட்டு அவனால் வாழ முடியாது. இயற்கைச் சூழலின் இனிமையில் கிறங்கித்தான் சங்க காலம் முதல் இன்று வரை தன் புனைவுகளில் விண்ணின் கோலங்களையும், மண்ணின் வளங்களையும் கலந்தே சமைக்கின்றான்.

இயற்கையோடு அதீதமாகத் தன்னை இணைத்துக் கொண்ட காரணத்தினால் சோலைக் கிளியும் எந்தக் கருப்பொருளைக் கொண்டாலும் அதனை இயற்கையோடு இணைத்துவிடுகிறார். அளவுக்கதிகமாக அஃறிணை பற்றிப் பேசுகிறார் என்று சிலர் குறை கண்டாலும் கூட அவரது வாழ்வியல் அத்தகையது என்றே கருத வேண்டி உள்ளது. பரந்த வயல் வெளிகளும், புள்ளினங்களும், விலங்கினங்களும், மரஞ்செடிகளும், விலங்கினங்களும் அவரோடு பேசுகின்றன. எனவே அவரும் அவற்றைப் பேசுவது தவிர்க்க முடியாததாகியுள்ளது.

கதிரவனின் வரவினையும் அதன் அழகினையும் பலர் பாடியுள்ளனர். "காலையென்னும் கோழிக்குஞ்சு" என்று பாடுகிறார் சோலைக்கிளி

இரவு அடைபடுத்து
பொரித்த இந்தக் கோழிக்குஞ்சு
ஊரில் இரை பொறுக்க வரும் போது
காகங்கள் கரைகின்றன
..................................
..................................
அந்தக்
குஞ்சுக் கோழிக்கு
இப்போது இறகு
நல்ல குணம் மாறியது
ஊரைப் பொசுக்கி ஈயப்
பால் வார்க்கும் மனிதனாகி
நெருப்பைத் தின்கிறது
என்கிறார்.

கோழிகுஞ்சாய் வந்த கதிரவன் குணம் மாறிச் சுடுகிறான் என்று மட்டுமல்ல, குழந்தைக் குணம் மாறி மனிதன் படும் பாட்டையும், படுத்தும் பாட்டையும் கூறுகிறார்.

இளங்கன்று பயமறியாது தவறுதலாய் மட்டுமன்றி தற்துணிவாய் நடக்கும் சிலர் எதனைப் பற்றியும் சிந்தியாது காரியத்தில் இறங்கிக் கவலையைத் தேடிக் கொள்வ

துண்டு"சாணக்குவியனும் சின்ன இலந்தையும்" என்ற கவிதை இவ்வாறு கூறுகின்றது.

பாவம் இந்த சின்ன இலந்தைக்கு சீக்கிரமாய்த்
தலைப்பட்டு பூத்துக் குலைகுலையாய் பழங்
கொடுக்க வேண்டுமென்று நெஞ்செல்லாம்
ஆவல் பெருக்கெடுத்து அணைதாண்டி விட்ட
தாலா சட்டென்று உக்காத சாணத்தில்
எழுகிறது
..............................................
..............................................
என் செய்வோம்
இடத்தை நன்றாக எடைபோட்டுப்
பார்க்காமல் முளைத்த இலந்தையொரு
மாபெரும் முட்டாள்தான் ஆழமறியாது
காலை விட்டு அவதிப்படுவோர் இங்கே சின்ன
இலந்தையாகிவிட்டனர்.

இடப் பெயர்வுக்கு உள்ளாகி அகதியாய் அலையும் வாழ்க்கையில் பாகுபாட்டில்லாமல் ஆண்டவன் அனைவரையும் இணைத்து விட்டான். இடம் பெயர்ந்த அகதிக் கவிஞன் கூறுவதாய் ஏக்கத்தையும் இயற்கையோடு பகிர்ந்து கொள்கிறார்.

எப்படிப் பாடல் எழுதுவேன் நிலவே
தொண்ணூறாயிரம் வெள்ளிகளையும்
உன்னையும் வானத்தையும்
தொலைத்த நிலையில்
என் வண்ணத்துப் பூச்சியையும்
கட்டிலின் இடவில் வாழ்ந்த பல்லியையும்
இழந்த நிலையில்
நீ மேதகத்தை எடுத்து முகத்தை மூடிக்கொள்
கவிஞன் பெருமூச்சு விட்டால்
குளிர் தென்றலும் கருகும்

என்று உயிர்மூச்சுத்தொடரமுடியாமல் புலம்புகிறார். ஆசைகள் எண்ணங்கள் மனதில் தோன்றுவன. வேண்டாம் என்று தவிர்த்தாலும் கட்டுடைத்து எழுவன.

தனிய இருந்து சிந்தித்து நெருப்பில்
எரிந்து கருகுகிறேன்
மனதுக்குள்
பசளை போடுகிறேன்
அற்ப ஆசை விளையாமல் நல்ல
எண்ணங்கள் பிஞ்சுவிட
முளைத்துக் கொண்டுதான் இருக்கிறது

களை என்று ஆசைகளின் விரும்பா வளர்ச்சியை இயற்கையோடு உருவகிக்கிறார். இடம் பெயர்ந்து, புலம் பெயர்ந்து வாழ்வோர் தாம் வாழ்ந்த நிலத்தை மரங்களை, ஆசையோடு வளர்த்த பூஞ்செடிகளை, தம் இல்லத்தை மனதிற்குள் படம்போட்டுப் பார்ப்பதுண்டு. அந்த உணர்வை அழகாகக் கூறுகிறார் கவிஞர்.

அந்த ஊரை
நாலுமூலையில் நாலு குயில் தூக்கி
கொண்டு வந்து
என் நெஞ்சுக்குள் வைத்தன
இன்று காலையில்
அந்தக் கிராமத்தின் பெருவாவி
இப்போது எனக்குள்ளே ஓடியது
அதில் பூத்திருக்கும் தாமரைகள்
.......................................
துப்பாக்கி வேலிகளால் அடைபட்டுக்
கிடந்த அந்த
சர்க்கரை மணக்கும் மணல் கிராமம்
எனக்குள்ளே இன்று விடிந்தது
என்று பாடுகிறார்.

"குழம்பி சண்டையிட்டு பிறகு புன்னகைத்து" என்ற தலைப்பில் மனிதர் இயல்பைப் பார்த்து அஃறிணை உயிர்கள் சிரிப்பதாகப் பாடியுள்ளார். மனிதர்கள் மீண்டும் நகருக்கு வந்தார்கள்

..................................
காகங்கள் கண் கெழித்துப் பார்த்தன
இவர்களும் இவர்களுடைய கூத்தும்
என்று நினைத்தது தெருநாய்
பல நாள் அடைபட்ட மனிதன்
கோடுகளைப் போட்டுச் சீரழிந்த சாதி
வருகிறான் என்று
மாடு கத்தியது சாணம் விழ
இவர்கள்
பழையபடி சிரித்தார்கள்
எதுவுமே நடக்காத மாதிரி
ஆடை உடுத்துத் திரிந்தார்கள்

அந்த ஆடைக்குள் இருந்தது மானம்
காக்கைக்கும் நாய்க்கும்
ஆடைகள் இல்லை

என்று முடிகிறார் மான உணர்வு மக்கள் மத்தியில் மங்கி வருகிறது என்பதை இவ்வாறு அஃறிணைப் பொருட் களைக் கையாண்டு கூறியுள்ளார். கல்வி என்பது உயர்வினை ஊற்று, வாழ்வின் மூலதனம். கல்வி பெறாதவனைக் கண்டு கவலை கொள்ளும் அவர், ஒரு நதியாய் அவன் வாழ வழியில்லை என்று கூறுகிறார்.

மீசைக்கு விதை தூவி இளமை மழை பெய்ய
பயிர் முளைத்த பருவம்
ஏதோ அலுவலுக்கு வந்திருந்தான்
கையொப்பம் இடு என்றேன்
இடது கையின் பெருவிரலை ஊன்றி
வெட்கிச் சிரித்தான்
அது ஒரு
செத்த சிரிப்பு
உலகப் பாடசாலை அனைத்தையுமே நினை
த்துவிட்டு
எண்ணுகிறேன்
அந்த நதி வரும் நாளில்
சீறி ஒலியெழுப்பிப் பாய்ந்து ஓடாது
உறையும் சிறு துளியாய்

என்று கூறி பாடசாலைகள் பலவிருந்தும் படிப்பைப் புறக்கணிப்போர் வாழ்வு, சீறிப் பாயும் நதியாக இராது என்பதை வேதனை யோடு விளம்புகிறார். வீதியில் இயல்பான, போக்கு வரத்துக்கு தடையாக அமைந் திருக்கும் படை வீடுகள் அகலாதா? என்ற ஏக்கம் பரந்த நிலப்பரப்பின் ஏக்கப் பெரு மூச்சு. மூடப்படும் கடற்கரைப் படைவீடு என்ற கவிதையிலும் இயற்கையை இணைத்தே பேசுகிறார்.

நான் வாய்க்கு போடும் சீனி
மணல் கடற்கரை இது
தென்றல் தனது கரங்களில் ரோஜாப்பூவை
ஒவ்வொரு மாலையிலும்
இந்தக் கடற்கரையில் வைத்துக்
கொண்டே வருவோரை தடவிக்
கொடுத்து இதயத்தின் கோளாறு
திருத்தி வழியனுப்பி வைக்கும்
தொழில் நுட்ப மேதை அந்த மேதையை நீ
மீண்டும் அழைத்துத்
தந்து விட்டுப் போ போர் வீரா

என்று கேட்டுக் கெள்கிறார். எந்த மனச் சுமையும் இல்லாமல் கைவீசி நடைபோட்ட இடங்களில் மீண்டும் நடக்க விரும்பும் உள்ளத்தின் ஏக்கமாக அமைகிறது.

கலியுகம் என்பதாலோ மனிதர் பண்பும் மாறிவிட்டது. பொய்யும் மெய்யாகித் தாண்டவமாடுகிறது. வாழ்க்கை காட்டாற்று வெள்ளத்தில் அடியுண்டு போகிறது. நியாயத்தை உணர்ந்து தீமைகளைத் தட்டிக் கேட்கும் பண்பும் குறைந்து கொண்டு வருகிறது. "புதிய கிளிப் பாட்டு" இதனைப் பேசுகிறது.

உண்மையெல்லாம் பொய்யாகி
பொய்யே மெய்யான
உலகத்தில் பிறந்து விட்டேன்
கிளியே
..............................
................................
திருடனிங்கு தலையாரி
தலையாரி தரம் போச்சு
எண்ணெயிலே பொரிகின்ற
மீன் போல உணர்ச்சியற்றுக்
கிடந்தாலும் கிடக்கலாமா
ஒரு கள்ளி முள்ளாகி
சிலர் காலில் குத்தாமல்
சிச்சிச்சீ எனப் பாடிப்
பறக்கின்ற பச்சை நிறத்
தங்கத்துண்டே உன் மூச்சிலும் தீயின் முளை என்று குறியீடாக, பிழை பொறுத்தல் தகாது என்பதைக் காட்டுகிறார்.

ஆன்மீகக் கருத்துக்களைக் கூட மிக இலகு வாக எடுத்துக் கூறுகிறார்.

நமக்கு இரை இந்தத் தேனும் பாலுமல்ல
இவற்றிற்கு மேலாக
இன்னும் இரசம் இருக்கிறது
அதனை உண்ண உண்ண
இந்தப் பூலோகம் பொய்த்துவிடும்
நமக்குள்ளே நாம் முளைப்போம்
நமது கிளைகளை "இந்தப் பக்கம்" நீட்டாமல்
உண்மை கூறும் பக்கமே நீட்டி
வானத்தைத் துளைத்துப் போய் காய் பழுக்க

முயற்சிப்போம் என்று பாடுகிறார். இவருடைய கவிதைகள் இயற்கைப் பொருட்களையே குறியீடுகளாகவும் படிமங்களாகவும் கொண்டு பல்வேறு செய்திகளைச் சொல்கின்றன. இவரது கவிதை நூல்களில் இருந்து தெரிவு செய்த தொகுப்பாக 'ஆவணம்' என்ற கவிதைத் தொகுதி இருநூற்றெழுபத்தொரு கவிதைகளைக் கொண்டுள்ளது. முழுமையான கிராமியச் சூழலில் தன்னை மூழ்க வைத்து பிரதேச மொழி வழக்கைப் பெருமளவு கையாண்டு உருவாக்கப்பட்ட அவரது கவிதைகள் கிழக்கிலங்கையின் தனித்துவத்தைப் பறைசாற்றுகின்றன என்றே கூறலாம்.

# இந்து மெய்ஞானிகளின் விஞ்ஞான சிந்தனைகள்

N.P. ஸ்ரீந்திரன்
B.A. (Hons), M.A
சைவப்புலவர், ஆசிரிய ஆலோசகர்
வலிகாமம் கல்வி வலயம்

இந்து சமயம் மிகத் தொன்மையா னது; தோற்றம் முடிவற்றது; தொடர்ந்து வளர்ந்து வருவது; காலத்துக்குக்காலம் மறுசீரமை க்கப்பட்டு வருவது; கால வெள்ளத்தால் அழிக்க முடியாதது. இத் தகு மேன்மை மிக்க இந்து சமயத்தைக் காலத்துக்குக் காலம் இந்து சமய ரிஷி களும், முனிவர்களும், சித்தர்களும், நாயன்மார்களும் வளர்த்து வந்துள்ளனர். வருகின்றனர். இந்த மெய்ஞானிகளால் தோற்றுவிக்கப்பட்ட வேதங்களும் ஆகம ங்களும் இதிகாச புராணங்களும் திருமுறை களும் சித்தாந்த சாஸ்திரங்களும் அவர்களது விஞ்ஞான சிந்தனைகளை எடுத்து விளக்கி நிற்கின்றன. இன்றைய நவீன விஞ்ஞானிகளை ஆச்சரியப்பட வைக்கும் வகையில் இந்து மெய் ஞானிகளின் விஞ்ஞானச் சிந்தனைகள் காணப்ப டுகின்றன.

இந்துக்களின் முதல்நூலான வேதம் "வித்" என்ற வடமொழிச் சொல்லில் இருந்து பிறந்தது. இதன் தமிழ்க்கருத்து "அறிவு" என்பதாகும். "ஆகமம்" என்ற சொல்லுக்குக் கருத்து "தொன்று தொட்டுவரும் அறிவு" என்ப தாகும். இதிகாச புராணங்களும், இந்து க்களது அறிவுக்களஞ்சியங்கள் என்பர். பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் விஞ்ஞானம் என்ற பதமும் "அறிவு" என்ற பதமும் ஒன்றையே சுட்டும். இந்த அடிப் படையில் விஞ்ஞானி களும் மெய்ஞ்ஞானி களும் அறிவாராய்ச்சியில் ஈடுபட்டு பலகண்டு பிடிப்புக்களை மேற்கொண்டு மக்கள் நலவாழ் விற்கு வழிகாட்டியுள் ளனர்.

இந்து மெய்ஞானிகளின் சிந்தனை களையும், நவீன விஞ்ஞானிகளின் சிந்தனை களையும் இப்பிரபஞ் சத்தின் ரகசியம் பற்றி ஆராய்ந்து கூறுவதாகவே அமைந்துள்ளன. இந்து மெஞ்ஞானிகள் மனத்தினைக் கருவி யாகக் கொண்டு ஆன்மீக வழிநின்று செபம், தவம், தியானத்தின்மூலம் ஞானத்தைப் பெற்று, பிரபஞ்சத்தை, பிரபஞ்சரகசியத்தை அகக்கண்ணினால் கண்டுணர்ந்து அவ்வப் போது வெளிப்படுத்தி வந்து ள்ளனர். ஆனால் நவீன விஞ்ஞானிகள் புறக்கருவிகளைத் துணை கொண்டு ஆய்வுகூடப் பரிசோதனைகள் மூலம் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களைச் செய் துள்ளனர். இந்து மெய்ஞானிகள் இப் பிரபஞ்ச ரகசியங்களை மட்டுமின்றி கண்ணுக் குப் புலப்படாத கருத்தியல் வடி வில் இருந்து வந்த கடவுள், ஆன்மா பற்றியும் அவற்றின்

இருப்பு, செயற்பாடு, இயல்புகள் பற்றியும் ஞானக்கண்ணால் கண்டுணர்ந்து கூறியுள்ளனர்.

இந்து மெய்ஞானிகள் தங்கள் மனத்தினைப் பிரபஞ்ச வெளியுடன் தொடர்பு படுத்திப் பல உண்மை களைக் கண்டுணர்ந்து வெளிப்படுத்தியுள்ளனர். இதனை நவீன விஞ்ஞானி களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். தோமஸ் அல்வா எடிசன் என்ற விஞ்ஞானி தனக்குப் புதிய கருத்துக்கள் ஆகாயத்திலிருந்து கிடைத்து ள்ளதாகக் கூறியுள்ளார். நம் நாட்டுச் சித்தாந்த மேதை அளவெட்டியூர் கைலா சபதி தனது மெய்யியல் என்ற நூலிலும் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாம் வாழும் இந்தப் பூமிக்கு புவியீர்ப்புச் சக்தி உண்டு என்பதைச் சேர். ஐசக். நியூட்டன் என்ற விஞ்ஞானி கண்டு பிடித்துள்ளதாக அறிகின்றோம். ஆனால் இற்றைக்கு 5000ஆண்டுகளிற்கு முன்பே தோற்றம்பெற்ற பிரஸ்தான உப நிடத த்திலே இருவிதமான சக்திகள் பற்றிப் பேசப்பட்டிருப்பதனைக் காணலாம். ஒன்று "பிராண சக்தி", இது எதிர்ப்புச் சக்தி எனப்படுகின்றது. மற்றயது "அபான சக்தி". இது ஈர்ப்புச்சக்தி எனப்படுகின்றது. இந்த ஈர்ப்புச் சக்தியினையே நியூட்டன் பிற்காலத்தில் கண்டு பிடித்துள்ளார்.

இந்து சமயத்தவர்களைப் பொறுத்தவரை ஆலய வழிபாடு முதன்மையானது. அந்த ஆலயத்தில் வான மண்டலத் திலுள்ள நவகோள்களிற்கு முக்கிய இடம் கொடுக்கப் பட்டிருப்பதனைக் காணலாம். நவகோள் களை நவக்கிரகங்களாகப் பிரதி ஷ்டை செய்து வழிபட்டுவருவது இந்துக்களது மரபாகும். இதற்குக் காரணம் நவக்கிரகத்தின் தாக்கத்திலிருந்து மனிதன் தன்னைக்காத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே! நவீன விஞ்ஞானி களும் கோள்களின் செயற்பாடுகளினால் பூமியில் பல மாறுதல்கள் ஏற்படுகின்றன என்பதை ஏற்றுக் கொண்டுள்ளனர். கடும் மழை, வெள்ளப்பெருக்கு, கடல் கொந்தளிப்பு, சூறாவளி என்பன கோள்களின் செயற்பாடு களினாலேயே ஏற்படுகின்றன என்பர். பௌர்ணமியில் கடல் அமைதி பெறு வதும், அமாவாசையில் கடல் கொந்தளிப்பதும் கோள்களின் செயற் பாட்டினாலேயே. என்பது இந்துக்களது நம்பிக்கை.

இந்துக்கள் இறைவனைச் சிவனாகவும் சக்தியாகவும் கண்டு வழி பட்டு வருகின்றனர். "சிவமில்லையேல் சக்தி யில்லை" , "சக்தியில்லையேல் சிவமி ல்லை" என்பது இந்து சமயத் தத்துவம். இதன் வெளிப்பாடாக அர்த்தநாரீஸ்வரர் வடிவம் விளங்குகின்றது. நவீன விஞ்ஞானிகள் கூறும் அணுத்தத் துவத்தின் வெளிப்பாடாகவே இந்த வடிவம் இருந்து வருகி ன்றது.

அணுவின் அமைப்பானது மின்துகள்களால் ஆனது எனவும் புரோத்திரன் எனப்படும் பொசிட்டிவ் துகள்களும், எலத்ரேன் எனப்படும் நெகட்டிவ்துகளும் அந்த அணு அமைப்பில் காணப்படு வதாகவும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அணுவின் அமைப்பிலுள்ள புரோத்தி ரனையும் எலத்திரனையும் தான் இந்துக்கள் தெய்வீக நிலைப்படுத்திக் குறி யீட்டுத் தன்மையில் சிவ சக்தியாக வழி பட்டு வந்துள்ளனர் என்பதைப் புராணங் கள் கூறும்.

அணுக்கட்டமைப்பைச் சிதை க்கும் போது அதனுள்ளிருந்து பிர மாண்டமான

சக்தி வெளிப்படுவதாகவும் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். சிவன் ஊழிக்காலத்தில் உருத்திரனாக மாறி, ஊழித்தாண்டவம்புரிந்து அழித்தல் தொழிலைச் செய்வதாக சைவசித் தாந்தம் கூறுகிறது. இதனைத் "ருத்திர தாண் டவம்" எனச் சிவாகமங்கள் செப்புகின்றன. அணுத் தத்துவத்தின் பேருண்மையை உணர் ந்த இந்து மெய்ஞானிகள் அதனைத் தெய்வீக நிலைப்படுத்துவதிலும், வழிபடு வதிலும் மக்களை நல்வழிப்படுத்தி வந்துள்ளனர்.

இந்தப்பிரபஞ்சம் வெடித்துச் சிதறும் தத்து வத்தின் மூலம் (Big bang) தோன்றியது என்பது நவீன விஞ்ஞானிகளின் கண்டுபிடி ப்பு. இந்த வெடித்துச் சிதறும் தத்துவத்தின் வெளிப் பாடாகவே , குறியீடாகவே நடராஜர் வடிவம் காணப்ப டுவதாக கலாநிதி ஆனந்த குமாரசுவாமி தனது "Dance of Siva" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

நடராஜத் திருவுருவத்தில் உடுக்கேந் திய கை ஓங்கார ஒலியையும், (வெடிப்புச் சிதறலின் போது ஏற்பட்ட ஒலி) அது பிரபஞ்சப் படைப்புத் தத்துவத்தையும் விளக் கும் என்பது ஆகமங்களின் முடிபு. மேலும் நடராஜத் திருவுருவின் தனு முடிச்சிதறல், அணு வெடிப்புச் சிதறலை யும், நடனக் கோலம் ; அணுவினுள்ளே உள்ள அணுத் துகள்களின் தொடர்ச் சியான செயற்பாட்டை விளக்கும்.

இந்துக்கள் சிவன் அணுவுக்குள் அணு வாகவும், அணுவுக்கு அப்பாலும் உள்ளான் என்ற கொள்கை உடையவர் கள். அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்று இந்துக்கள் கூறுவதும் நவீன விஞ்ஞானம் கூறும் அணுத்தத் துவத்தையே ஐரோப்பிய அணு ஆராய்ச்சி நிலையம் ஹிக்போசன் அல்லது கடவுளின் துணிக்கை என்ற புதிய கண்டுபிடிப்பினை மிக அண்மையில் வெளியிட்டுள்ளது. இந்தக் கண்டுபிடிப்பினையே மணிவாசகப் பெரு மான் திருவாசகத்தில் "நோக்க ரிய நோக்கே, நுணுக்கரிய நுண்ணு ணர்வே! போக்கும் வரவும் புணர்வில்லாப் புண்ணியனே!" எனப் பாடியுள்ளார்.

வில்சன், பெஞ்சியாஸ் ஆகிய விஞ்ஞானிகள் மைக்றோ றேடியேசன் (Micro radiation) என்ற ஆய்வினைச் செய் துள்ளார். இவர்களது ஆய்வின் முடிபின் படி "ஓம்" என்ற ஒலியின் அதிர்வு பிரபஞ்சம் முழுவதும் ஒலித் துக் கொண்டிருப்பதாகவும், ஒருலட்சத்து எண்பதி னாயிரம் மைல்களுக்கு அப்பால் இந்த ஒலி அதிர்வு மிக அதிகம் எனவும், இப் பகுதியில் விமானம் சென்றால் வெடித்துச் சிதறும் எனவும் தெரிவித்துள்ளனர். இந்தப் பிரபஞ்சம் எங்ஙனமும் சிவன் நாதப் பிரமவடி வினனாக உள்ளான் என்ற இந்துக்களது தத்துவமும் விஞ்ஞானி களது மைக்றோ றேடியேசன் ஆய்வும் ஒரே உண்மையினையே கூறுகின்றன எனலாம்.

இதிகாசங்களில் ஒன்றான இராமா யணமும் நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப் புக்களான தொலைக் காட்சிப் பெட்டி, கணினி, கைத் தொலைபேசி, சினிமா போன்ற பல்வேறு துறைகளுக்கும் கண்டு பிடிப்புக் களும் வழிகாட்டியுள்ளது. இராமாயணத்தை இயற்றிய வான்மீகி ஒரு சிறந்த மெய்ஞானி, அவர் இராமாயணக் காட்சிகளை மனத் திரையில் பார்த்த பின்பே எழுதினார் என்பது வரலாறு. இந்த மனத்திரை த்தத்துவமே மேற்கூறிய விஞ்ஞானக் கண்டுபிடிப் புக்களுக்கு முன்னோடி எனலாம்.

விமானத்தைக் கண்டு பிடித்த வர்கள் ரைட்ச கோதரர்கள் என்பது மேற் கத்தேச வரலாறு. ஆனால் இராமாய ணத்தில் இராவணன் புஷ்பக விமானத் தைப் பயன் படுத்திய செய்தியினை நாம் அறியமுடிகிறது.

மகா பாரதச் செய்தியின்படி பாண் டவர் பாணத்தினால் வானத்துக்கு ஏணிய மைத்து இந்திரலோகம் சென்று ஐராவதம் என்ற வெள்ளை யானையினை தாயின் விரதத்தின் பொருட்டு பூமிக்குக் கொண்டு வந்ததாக அறிகின்றோம். சந்திர னில் நீல் ஆம் ஸ்ரோங் காலடி வைப்பதற் கும், செவ்வாய்க் கிரகத்துக்கு விண்கலம் அனுப்புவதற்கும். இந்த மகா பாரதச் செய்தியே முன்னோடி எனலாம்.

நவீன விஞ்ஞானத்தின் முக்கிய கண்டு பிடிப்பாக இன்று இருப்பது உயிரினங்களைப் புதிய முறையில் உரு வாக்கும் (Test tube) கண்டுபிடிப்பு முறை யாகும். இம் முறையின் மூலம் இந்திய விஞ்ஞானிகள் 27 குழந்தை களை உருவாக்கிச் சாதனை படைத்துள்ளனர் என்பது பத்திரிகைச்செய்தி. இங்கிலாந்து விஞ்ஞா னிகள் இந்த முறையில் முதன் முறையில் செம்மறி ஆட்டை உருவாக்கியி ருந்தனர். ஆனால் கௌரவர்களின் தாயான காந்தாரி யின் சிதைந்த கரு விலிருந்து அவர் களின் குருவானவர் 100 ஆண் பிள்ளைகளை மந்திர சக்தியினால் உருவாக்கினார் என்பதை மகாபாரதம் கூறும்.

இவ்வாறு இந்து சமயத்தின் எந்த நூல்களை எடுத்து நோக்கினும் இந்து மெய் ஞானிகளின் விஞ்ஞானக் கருத்துக்கள் பொதிந்திருப்பதைக் கண்டு கொள்ள முடியும். மேற்கத்தைய விஞ்ஞானிகள் தங்கள் விஞ்ஞானக்கண்டு பிடிப்புக் களினை ஆக்க, அழிவிற்குப் பயன்படுத்துவர். இந்து மெய் ஞானிகள் தங்கள் விஞ்ஞானக் கண்டு பிடிப்புக் களைப் பெரும்பாலும் ஆக்க சக்திகளிற்கே பயன்படுத்தி வந்திருப்பதை இந்துசமய இலக் கியங்கள் வாயிலாக அறிந்து பெருமைப் படக்கூடிய தாக வுள்ளது.

# சாதகமற்ற கற்றல் பின்புலம் கொண்ட பிள்ளைகளுக்கான நாளாந்த வகுப்பறைகள்- இன்றைய தேவைகள் இவைதான்

**கணேசபிள்ளை சிவகரன்**
MA முதன்மை ஆசிரியர்
வலயக்கல்வி அலுவலகம்,
வலிகாமம்.

**அறிமுகம்**

சிறிய நடுத்தர மற்றும் பெரிய பாடசாலைகளில் கூட பெருமளவு கற்றல் பின்னடைவு கொண்ட பிள்ளைகள் காணப் படுகின்றனர். இவர்கள் பொருத்தமான கற்றலுக்குரிய பின்பு லத்தைக் கெண்டிருப்பதில்லை என சுட்டிக் காட்டப்படுகிறது. இப் பின்புலம் எனப்படுவது அவர்களின் குடும்ப ,சமூகப் பொருளாதார மற்றும் கற்பதற்கான வீட்டுச் சூழலில் காணப்படும் குறைபாடுகளாகும். இவற்றை வெளிக்காட்டும் பல அவதானிப்புக்களை ஆசிரியர்கள் முன்வைப்பதைக் காண முடிகிறது. இத்தகைய பிள்ளைகளின் கற்றல் மேம்பாட்டிற்கு உரிய வழிமுறையாக நாளாந்த பாடசாலை வகுப்பறைகளை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பது இவ் ஆய்வின் பிரதான நோக்கமாகும். பிள்ளைகளின் பின்புலம் தொடர்பான அவதானிப்புக்களை வெளியிடும் அதே வேளை அதற்குப் பதிலீடான திறன் மிகு வகுப்பறைகளை அமைத்துக் கொள்ளும் முயற்சிகளில் ஈடுபடும் செயற்பாட்டாளர்களை கண்டு கொள்ளவும் வேண்டிஉள்ளது . இத்தகைய அவதானிப்புக்களை வியப்படுத்தி மேற் கொள்ளப்படும் மேம்பாடுகள் பாடசாலைகளினதும், ஆசிரியர், அதிபர்களினதும் செயற்றிறனுக்கு வலுவூட்டும் செயற்பாடாக அமைவதைக் கண்டு கொள்ள முடியும்.

**சாதக மற்ற கற்றல் பின்புலம்**

சாதகமற்ற கற்றல் பின்புலம் ஆனது வெளிப்படையாகக் கண்டறியப்பட்ட ஒன்றாக உள்ளது. கிராமிய மட்டத்தில் பொதுவாக பெற்றோரின் பலவீனங்கள் பிள்ளைகளில் தெரிகின்றது. வீட்டுச் சூழலில் அவர்கள் சிறு வயது முதல் பெற்றுக் கொள் ளும் கற்றல் தொடர்பான பயிற்சி மற்றும் வழி காட்டல்களும் அவர்களின் இயலுமைகளை தீர்மானிக்கின்றது. இதனால் அவர்கள் பாடசாலையில் நாளாந்த கலைத்திட்ட வளர்ச்சியுடன் இணைந்து பயணிக்க முடிவதில்லை. அவர்களின் வெளிப்பாடு பூரணமானதாக அமைவதுமில்லை. பொது வான அவதானிப்புக்களும் ஆசிரியர்களின் தகவல்களும் இவற்றை வெளிக்காட்டு கின்றன. கற்றலுக்கு வேண்டிய பல்வேறுபட்ட பின்புல மேம்பாடுகள் அவர்களின் கற்றல் எழுச்சிகளுக்கு அடிப்

படை என்பது மறுக்க முடியாதது. எனினும் துரதிஸ்டவசமாக அவை அவர்களுக்குக் கிடைப்பதே இல்லை அதற்காக அவர்களின் கற்றல் குறைபாடுகளை சீர் படுத்தி கற்றலில் ஈடுபடுத்த முடியாது. எனும் நோக்குத் தென் படலை ஏற்றுக்கொள்ள முடியாது. உள்ளது. இதற்குக் காத்திரமான மாற்று ஏற்பாடு நாளாந்த வகுப்பறைச் செயற்பாடுகளை வலுவூட்டுவதாகவே அமைய முடியும்.

**நாளாந்த வகுப்பறைச் செயற்றிறன்கள்**

நாளாந்த வகுப்பறையின் செயற்றிறன் ஆசிரியர்களின் திட்டமிடல் பாட முன்வைப்பு கணிப்பீடு வகுப்பறைக் கட்டுப்பாடு போன்ற பயன்மிகு செயற்பாடுகளின் அப்பாற்பட்டதாகும். விளைவும் வினைதிறனும் கொண்ட நாளாந்த வகுப்புக்களில் மாணவர்கள் எட்டக் கூடிய அடைவுகள் அவர்களின் குடும்ப சூழலின் பலவீனங்களை வெற்றி கொண்டு இயலுமைகளைக் கட்டியெழுப்பக் கூடிய ஆற்றல் கொண்டவை என்பதை அறிந்து கொள்ளவேண்டி உள்ளது.

**பிரதான நோக்கங்கள்**

இங்கு பின்வரும் நோக்கங்கள் முதன்மைப் படுத்தக் கூடியனவாய் உள்ளன.

- நாளாந்த வகுப்பறைச் செயற்பாட்டின் காத்திரமான பங்களிப்பை விளங்கி கொள்ளல்
- திறன்மிகு வகுப்பறை நடைமுறைகளை அடையாளம் காணல்
- நாளாந்த வகுப்பறைகளை வலுவூட்டி அதன்படி பிள்ளைகளின் கற்றல் திறன்களை மேம்படுத்தல்.
- நாளாந்த வகுப்பறைகளில் நடை முறைப் பயன்பாட்டு வடிவமொன்றைக் கண்டறிந்து முன்னெடுத்தல்.

**ஓர் ஆய்வு முறைமையின் நோக்கில்**

நேரடியான வகுப்பறை அவதானிப்புக்களும் ஆசிரியர்களுடனான நேர் காணல்களும் இங்கு பொருத்தமான தகவல்களை வழங்கி உள்ளன. இவற்றுட் கல்வியியல் நூல்களில் சுட்டிக் காட்டப்படும் பயன்மிகு வகுப்பறை நுட்பங்களும் இணைந்து நோக்கப்படுகின்றன. அடைவு மட்டங்களைக் காட்டும் வகுப்பறை மட்டத்தேர்ச்சி அறிக்கைகள் மற்றும் மாணவர் வேலைகள் பயிற்சிக் கொப்பிகள் போன்றவற்றிலிருந்து இரண்டாம் தரத் தகவல்கள் பெறப்ப டுகின்றன.

ஓர் பண்புசார் ஆய்வாகவே இவ் விடயத்தை நோக்க முடிகின்றது. இங்கு பிள்ளைகளின் குடும்பப் பின்னணி அவர்களின் வெளிப்பாடுகள் ஆசிரியர்களின் கருத்துக்கள் நாளாந்த வகுப்பறையின் செயற்பாடுகளின் பண்புத்தரங்கள் என்பன தர ரீதியான ஆய்வாகவே (Qualitative) அமைய முடிகிறது. அத்துடன் வகுப்பறைச் செயற்பாடுகளைக் கட்டியெழுப்பும் எண் ணக் கரு மாதிரியைக் கட்டமைத்தல் விவரண ரீதியாக ( desctipTive) மேற் கொள்ளப் படுகிறது.

**வழிகாட்டற் கருத்துக்களும் நடை முறை இடைவெளிகளும்**

கல்வியின் சமூகவியல் அடிப்படைகள் தொடர்பாக பெருமளவு ஆய்வுகளும் கருத்துக்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. இவை கற்றல் உளவியல் சமூக உளவியல் ஆய்வுகளு

டன் தொடர்புபட்டன. கற்றலின் வளப் பயன்பாடு கற்றல் வளங்களின் சரிநிகர் சமத்துவம் என்பன தொடர்பான நோக்கு களிலும் இவை எடுத்தாளப்படுகின்றன. சாதக மற்ற சமூகப் பின்புலம் கொண்ட பிள்ளைக ளுக்குரிய பயிற்சிமுறைகள் வழிகாட்டற் திட் டங்கள் பல முன்வைக்கப்பட்டுள்ளன. இவற் றைக் கல்வியல் பரப்புக்களில் தொடர்ச்சியாக கண்டுகொள்ள முடிகின்றது. இவற்றை இங்கு விரிவாகக் குறிப்பிடல் விரிவு அஞ்சி விலக்கப் பட்டுள்ளது.

வகுப்பறைத் திட்டமிடல் வகுப்பறை மேம்பாடு நாளாந்தப் பாடத் திட்டமிடல் முறைகள் என்பன ஆசிரிய வாண்மையின் பகுதியாக உள்ளன. பாட அறிமுகம் , பாட வளர்ச்சி கற்பித்தல் திறன்கள் ஆசிரியர்களுக்கு அடிப்படைத் தராதரங்களாக அமைந் துள்ளன.

நடைமுறையில் நாளாந்த வகுப்ப றையில் இவற்றின் பயன்பாடும் செயற்றிறனும் எந்தளவிற்கு உள்ளது என்பதும்; பொருத் தமான உபாயங்கள் வடிவமைக்கப்பட்டு உள்ளதா என்பதும் வகுப்பறை அவதானிப் புக்களின் மூலம் ஆய்வு செய்யப்பட வேண் டிய விடயங்களாகின்றன. இவற்றை விரிவாக நோக்க வேண்டியது இங்கு அவசிய மாக உள்ளது.

**நாளாந்த வகுப்பறை அவதானிப்புக்களின் கண்டறிதல்கள்**

நாளாந்த வகுப்பறைகளைக் கற்றல் மேம்பாடு தொடர்புபட்ட வகையில் அவதா னிக்கும் பொழுது பின்வரும் அடிப்படைக ளில் விடயங்களை ஒழுங்குபடுத்தி நோக்கப் படுகின்றது.

- வகுப்பறையும் பிள்ளைகளும்
- ஆசிரியர்களும் அபிப்பிராயங்களும்
- ஆசிரியரின் திட்டமிடல் பண்புகள்
- நாளாந்த பாட முன்னெடுப்புக்கள்
- பிள்ளைகளின் செயற்பாடுகள்
- ஆசிரியர்களின் கணிப்பீட்டு மதிப்பீட்டு நுட்பங்கள்
- உள்ளக மேற்பார்வை
- அர்ப்பணிப்பும் செயற்றிறனும்

**வகுப்பறையும் பிள்ளைகளும்**

சாதகமற்ற கற்றல் பின்புலம் கொண்ட பிள்ளைகளைக் கொண்ட நாளாந்த வகுப்ப றைச் செயற்பாடுகளை அவதானிக்கும் ஒருவர் பின்வரும் விடயங்களை வகுப்பறை ஒழுங்க மைப்பில் கண்டு கொள்ள முடியும்.

- சாதகமற்ற கற்றல் பின்புலத்தைக் கொண்ட பிள்ளைகள் எந்த ஒரு வகுப்பிலும் காணப் பட முடியும்.
- வகுப்பறையில் கற்றல் வேலைகள் பெரும ளவு குறைபாடாக உள்ளது. OH P பயன்பாடு சாதன அலுமாரி, வகுப்பறை நூலகம் போன்றன காணப்படுவதில்லை.
- வகுப்பறையில் அறிவித்தல் பலகை காட் சிப்பலகை, மாணவராக்கப்பலகை, என் பன வைக்கப்படல் மிகவும் குறைவாக உள்ளது.
- பிள்ளைகளின் புத்தகப்பை வைக்கும் முறை

மற்றும் இருக்கைகள் ஒழுங்கமைப்பு மிகவும் குறைபாடானதாக உள்ளது.

- ♦ வகுபாசிரியர்கள் மதிய உணவு வழங்கல் மாணவர்களின் வரவு ஒழுங்குபடுத்தல் என்பவற்றில் பங்கு பற்றல் குறைவாக உள்ளது.
- ♦ ஆசிரியர்களின் பிரசன்னமற்ற வகுப்புக்கள் அதிகரித்துச் செல்கின்றன.

இவை நாளாந்த வகுப்பறை ஒழுங் கமைப்புக்களில் பலவீனங்களாகக் காணப்ப டுகின்றன. இதனால் வகுப்பறைகளின் கவி நிலையானது பாதிக்கப்படுவதுடன் வகுப்ப றைச் சூழல் கவர்ச்சியுள்ளதாகவும் எழுச்சியு டையதாகவும் பிள்ளைநேயமுடனும் அமைவு பெற வேண்டிய தேவைகளை இவை இனம் காட்டி நிற்பதைக் காண முடிகிறது.

**ஆசிரியர்களின் கருத்துக்கள்**

பிள்ளைகளின் கற்றல் தடைகளாக ஆசிரியர்கள் சுட்டிக் காட்டும் விடயங்கள் பின்வருவனவாகும்

- வீட்டு வேலைகளைச் செய்து வருவதில்லை ஒப்படைகளுக்குரிய பொருட்களை கொண்டு வருவதில்லை
- எழுத்தாற்றல் பேச்சாற்றல் என்பன குறை வாக உள்ளமை
- பாடசாலை வரவு ஒழுங்கீனங்கள் உண்டு
- செவிமடுப்பதும் வகுப்பறை வேலைகளை
- உடனுக்குடன் முடிப்பதும் குறைவு
- ஆசிரியர்களின் சொற்களை அலட்சியம் செய்தல்
- வகுப்பறைக் கட்டுப் பாடுகளை மீறுதல்
- தமது திறமைகளை வெளிக்காட்டி முன் னேறும் மனப்பாங்கு இல்லை
- தமது நாளாந்தப் பிளைகளைத் திருத்திக் கொள்வதில்லை

பெற்றோரின் சந்திப்புக்கள் சாத்தியமில்லை

மேற்படி குறைபாடுகள் அவர்களின் கற்றல் பின் தளத்தை சரியாகப் பயன்படுத்தக் கூடிய இயலுமைகளின் அளவைக் காட்டு கின்றது. இது அவர்களின் கற்றல் விருத்திக் கான தடைகளாக உள்ளமையும் இதனால் ஆசிரியர்களும் மனச்சோர்வு அடைந்து விடு கின்ற நிலமைகளையும் காண முடிகின்றது.

**ஆசிரியர்களின்திட்டமிடல் பண்புகள்**

ஆசிரியர்கள் நாளாந்த வகுப்பறைத் திட்டமிடலின் போது வகுப்பறையின் ஒழுக் கம், கட்டுப்பாடு அத்துடன் தமது செயற்பாடு என்பவற்றை முகாமை செய்யக்கூடிய வலு வான திட்டம் ஒன்றைக் கொண்டிருக்க வேண்டும் இங்கு பின்வரும் அவதானிப் புக்களை முன் வைக்க முடிகின்றது.

- வகுப்பறைகளின் சுத்தம் , மேசைகளின் அமைப்பு . ஆசிரியர்களின் மேசை
- அலங்கரிப்பு என்பன சீரற்று உள்ளன.
- மாணவ முதல்வரின் கடமைகள்
- வகுப்றைப்பதிவேடு ஆசிரியர் வரவு ஒழுங்கு என்பன சீரற்று உள்ளது.
- வகுப்பறையில் கழிவுப்பொருட்டெ பட்டி அல்லது கூடை மதிய உணவு பரிமாறும் ஒழுங்குகள் சுத்தமான குடிநீர் ஒழுங்குகள் என்பன .
- ஆசியர்களின் பாட திட்டமிடலின் நுணுக்கமான பொருத்தமான உபாயங்கள் கொண்ட திட்டங்கள் வறிதாக உள்ளது.
- வகுப்பறையில் பாடம் கற்பிக்கும் கரும் பலகை ஏனைய சாதனங்களின் பொருத்

தப்பாடு என்பன அவதானிக்கப்பட வேண்டி உள்ளது.

மேற்படி குறைபாடுகள் நாளாந்த வகுப் பறையின் பண்பையும் செயற்றிறனையும் அழகு கவர்ச்சி என்பவற்றையும் பெருமளவு தீர்மானிப்பவையாகும். இவற்றில் காணப்ப டக் கூடிய குறைபாடுகள் கற்றல் சூழலைப் பாதிக்கின்றன.

**நாளாந்த பாட முன்னெடுப்புக்கள்**

நாளாந்த பாட முன்னெடுப்புக்களில் ஆசிரியர் பின்பற்றக் கூடிய ஆக்கபூர்வமான செயற்பாடுகள் பல உள்ளன. எனினும் அவ தானிப்புக்களின் மூலம் அவை முழுமையாகப் பின்பற்றப்படுகின்றதா என்பதை கண்டறிய முடிகின்றது.

ஆசிரியர்களின் பாடம் தொடங்கு திறன் பலவீனமானதாக உள்ளது. மாணவர் களின் உள அமைதியை ஏற்படுத்தல் கவனத் தைப் பெறுதல். தலைப்பை அறிமுகம் செய் தல், முன்னறிவை மீட்டல் என்பன சிறப்பாக முன்னெடுக்கப்படுவதை அவதானிப்பது கடி னமானதாகவுள்ளது.

மாணவரின் செயலைத் தூண்டக்கூடிய மாணவர் செயற்பாடுகள் திட்டமிடப்பட்டு முன்வைக்கப்படுவது குறைவு, செயற்பாடு குன்றிய மாணவர்களும் விரிவுரை முறையும் பொதுப்பண்பாகவுள்ளது.

குழுச்செயற்பாடுகளில் ஈடுபடும் பொழுது வேலைப்பகிர்வு, கணிப்பீடு உதவி செய்தல் போன்ற நுட்பங்கள் பயன்படுத் தப்படுவது குறைவு

வினாக் கேட்டல், துருவி ஆராய்தல், பகுத்துக் காட்டல் விளங்கி உரைத்தல், தொகுத்துக் காட்டல் போன்ற நுட்பங்கள் பாட வளர்ச்சியில் ஆசிரியர்கள் குறைவாகவே பின்பற்றுகின்றனர்.

சிலர் வினாக்கள் தூண்டற் செயற் பாடுகள் கூட்டுக் கலந்துரையாடல் போன்ற பல்திறநுட்பங்கள் பயன்படுத்தப்படுவது குறைவு.

இதனால் பாட முன்னெடுப்புக்கள் உரிய கற்றல் பேறுகளை எல்லாப் பிள்ளைக ளும் பெற்றுக்கொள்ள வழிவகுப்பதில்லை.

**பிள்ளைகளின் செயற்பாடு**

- பிள்ளைகளின் நாளாந்த செயற்பாட்டில் பல்வேறுபட்ட தடைகளும் செயற் திறன் களும் குன்றிய தன்மைகளும் அவதா னிக்க முடிகின்றது.
- பாடநூல் பாடக் கொப்பி என்பவற்றை பிள்ளைகள் ஒழுங்காகக் கொண்டு வருவ தில்லை.
- எழுத்து வேலைகளில் நாளாந்த திகதியி டல் அழகாக எழுதுதல் உடனே செயலில் இறங்குதல் என்பன குறைவு.
- மெதுவாக எழுதுதல் ,எழுத்துப் பிழைகள் விடல், என்பன வகுப்பு நேரத்தை கடத்த உதவுகிறது.
- நோக்கின்றிச் செயற்படல் ஆர்வமின்மை தன்னம்பிக்கை குறைவு என்பன பிள்ளை களின் செயற்பாட்டைக் குறைக் கின்றது.
- எல்லாப் பிள்ளைகளும் கேட்டல், எழுது தல் உரத்துப் பேசுதல் வாசித்தல் என்பன வற்றில் பங்கு பற்றுவது இல்லை.

- ஆசிரியர்களிடம் தேவையற்ற பயம் ஆசிரியரை அனுசரித்துச் செயற்பட முடியாமை. போன்ற உளப்பாங்குகள் சில பிள்ளைகளின் செயற்பாட்டை மந்தம் அடைய வைக்கின்றது.

இவை நாளாந்த வகுப்பறைகளின் செயற்பாட்டைப் பெரிதும் தீர்மானிப்பவையாக உள்ளன.

**ஆசிரியர்களின் கணிப்பீட்டு மதிப்பீட்டு நுட்பங்கள்**

பிள்ளைகள் கற்கும்பொழுது அவர்கள் எப்படிக் கற்கின்றனர். அவர்கள் ஏன் கற்றுக் கொள்ளவில்லை? இவர்களுக்குத் தடைகள் எவை ? என்பன தொடர்பில் ஆசிரியர்கள் கணிப்பிட்டுக் கொள்வது தொடர்பான அவதானிப்புக்களில் பின்வருவனவற்றைச் சுட்டிக் காட்ட முடியும்.

- பல நாட்களாகப் பல பிள்ளைகளின் கொப்பிகள் ஆசிரியர்களினால் பார்வையிடப்படவில்லை.
- எழுத்துப்பிழைகள் திருத்தப்படல் பிழைகள் மீளவும் திருத்தமாக எழுதப்படல் என்பன குறைவு.
- பின்னூட்டல் முன்னூட்டல் என்பன சரியாக முன்னெடுக்கப்படுவதில்லை.
- பிரச்சினைகளின் அடிப்படையில் செயற்பாடுகள் இனங் காணப்படுவது இல்லை.

இதனால் பிள்ளைகளை அன்றாட வகுப்பில் திருத்தும் செயற்பாடுகளில் பின்னடைவு உள்ளமை அவதானிக்கப்பட முடிகின்றது.

**உள்ளக மேற்பார்வை**

அன்றாட வகுப்பறைகளைத் திறன்பட இயக்க உள்ளக மேற்பார்வை உதவ முடியும். ஆயினும் பாடசாலைகளில் உள்ளக மேற்பார்வை தொடர்பான பின்வரும் குறைபாடுகளை இனங்காண முடிகின்றது.

- உள்ளக மேற்பார்வையில் ஈடுபடுவோர் மாணவர் வேலைப் பயிற்சிக் கொப்பிகளைப் பார்வையிட்டு ஒப்பமிடல் குறைவு.
- உள்ளக மேற்பார்வையில் பொருத்தமான மதிப்பீடு நுட்பங்கள் பின்பற்றப்படுவது இல்லை.
- உள்ளக மதிப்பீட்டில் வகுப்பறை மதிப்பீட்டு உச்ச புள்ளிகள் பெறப்பட்டு உள்ளமை. வளர்ச்சி பற்றிய சிந்தனைக்குத் தடையாகவுள்ளது.
- உள்ளக மேற்பார்வையில் ஈடுபடுவோர் பின்னூட்டல் செய்வது குறைவு
- நாளாந்த வகுப்பறைகளைச் சுற்றிப்பார்க்கும் உள்ளக மேற்பார்வை அளவுகள் குறைவு
- உள்ளக மேற்பார்வையில் ஈடுபடுவோர் தமக்கு ஒதுக்கப்பட்ட நேரங்களில் அலுவலக வேலைகளைச் செய்வது அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.
- இறுக்கமான உள்ளக மேற்பார்வை வேலைத் திட்டம் பாடசாலைகளில் இல்லை.

மேற்படி அவதானிப்புக்களின் அடிப்படையில் பாடசாலைகளில் பலவீதமான உள்ளக மேற்பார்வை அமைப்புக்கள் நாளாந்த வகுப்பறைகளைப் பலவீனப்படுத்தி உள்ளமையைக் கண்டு கொள்ள முடிகின்றது.

**அர்ப்பணிப்பும் செயற்திறனும்**

பின்னடைவான பின்னணி கொண்ட பிள்ளைகளிடையே வேலை செய்யும் அர்ப்பணிப்பும் செயற்திறன் வெளிப்பாடும் ஆசிரி

யர்களிடம் குறைவாகவுள்ளது. பலவீனமான பெற்றோரின் பிள்ளைகளையும் பலவீனமான வர்களாகவே ஆசிரியர்கள் இனங் காண்ப துடன் அவர்களின் கணிப்பையும் மதிப் பையும் உதாசீனம் செய்யும் பண்பும் காணப் படுகின்றது. இதனால் ஆசிரியர்கள் அர்ப் பணிப்புடன் செயற்படுவதில்லை.

ஆசிரியர்கள் தமது செயற்றிறனை மேம்படுத்தக் கூடிய திட்டங்கள் செயற் பாடுகள் தொடர்பாக அவதானிக்கும் போது

- கற்பித்தல் வளங்கள் எனும் அடிப் படையில் ஆசிரியர்களிடம் சாதனங் களில் சேமிப்பு பயன்பாடு குறைவு
- பதிய கற்பித்தல் திட்டங்கள் உபாயங்கள் என்பன குறைவு
- மாணவர் மைய செயற்பாட்டுத் திட்டங் கள் நடைமுறைப்படுத்துவது குறைவு
- கண்காட்சி கல்விச் சுற்றுலா போன்ற ஊக்கந்தரும் செயற்பாடுகளில் ஆசிரியர் கள் ஈடுபடுவது குறைவு.

மேற்படி பண்புகள் ஆசிரியர்களின் நாளாந்த வகுப்பறைச் செயற்றிறன் தொடர் பான கணிப்பீட்டை வெளிக்காட்டுவனவாக வுள்ளது.

**குறைபாடுகளின் பின்னணியில் இருந்து விடு பட்டு செயற்திறனுக்கு நகர்தல்**

மேற்படி குறைபாடுகள் சுட்டிக்காட் டப்பட்ட பொழுது இவையாவும் நாளாந்த வகுப்பறையின் பலவீனங்கள் என்பதுடன் மட்டும் அமையாது இவற்றை மாற்றி அமைக்கும் போது அவை பலங்களாக அமைவு பெறுவதையும் நோக்க முடியும். எனவே மேற்படி சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளில் இருந்து செயற்திறன் மிக்க மாதிரி ஒன்றை வடிவமைத்துக் கொண்டு அதை பின்பற்றத்தொடங்குவது நாளாந்த வகுப்பறைச் செயற்திறன்களுக்கு அடிப்ப டையாக அமையமுடியும்.

**நாளாந்த வகுப்பறையாக செயற்திறன்கள்**

நாளாந்த வகுப்பறையில் மாணவர்கள், ஆசிரியர்கள், பாடத்திட்டம், பாடபோதனை முறைகள், வகுப்பறைச்சூழல் என்பன பிர தான இடத்தைப் பெறுகின்றன. இவற்றை வகுப்பறை அவதானிப்பு அடிப்படையில் நோக்கும் பொழுது.

- ஆசிரியத் திறன்கள்
- மாணவர் ஈடுபாடு
- வகுப்பறைச் சூழல்
- கற்றல் சூழல்

என்பனவாக இனங் கண்டு கொள்ள முடியும். இங்கு ஆசிரியர்கள் திறன்கள் என்ற அடிப்படையில்

- ஆசிரியர்களின் தோற்றமும் முழுமையும்.
- ஆசிரியரின் திட்டமிட்ட திறன்கள்
- ஆசிரியரின் பாடந் தொடங்கு திறன்கள்
- கவனத்தைப் பெறும் முயற்சிகள்
- பாட வளர்ச்சி, கற்பித்தல் முறைகள்
- கணிப்பீட்டு மதிப்பீட்டு, பின்னூட்டல் உத்திகளின் பயன்பாடு.
- பாடம் முடிக்கும் திறன்கள்.

என்பவற்றைச் சுட்டிக் காட்ட முடியும்

**மாணவரின் வகுப்பறைத் திறன்கள் அடிப் படையில்**

- செவிமடுத்தல்
- ஏற்றுக் கொள்ளல்
- கலந்துரையாடல்
- முன்வைத்தல்

- பயிற்சியில் ஈடுபடல்
- நேரக் கட்டுப்பாடு
- ஆர்வம்

போன்றவற்றைக் கண்டு கொள்ள முடியும்.

**வகுப்பறைச் சூழல்**

வகுப்பறைச் சூழல் என்னும் போது அங்கு நடைபெறும் இடைவினைகள் மட்டு மன்றி தளபாட ஒழுங்கமைப்பு, காற்றோட்டம், வெளிச்சம், சந்த அளவு பொருத்தமான சாதனங்களின் கிடைப்பனவு, அழகு, கவர்ச்சி என்பன முதன்மையான விடயங்களாக வுள்ளன.

**கற்றல் சூழல்**

ஆசிரியர் மாணவர் கற்றல் இடைவிளை கொள்ளும் செயற்பாட்டில் கற்றல் சூழல் பிறக்கின்றது. ஆசிரியரின் சரியான வழிகாட்டலில் மாணவரின் செயற்பாடுகள் கண்டறிதல் முன்வைத்தல் கலந்துரையாடல் என்பனவும் கற்றல் சூழலில் இடம் பெறுகின்றன. கேட்டல், விடை கூறல், பாடத்தை வளர்த்துச் செல்லல். பரிசோதனைகள் புத்தகப் பயன்பாடு எளிய சாதனங்களின் பயன்பாடு என்பன கற்றல் சூழலை மேலும் மேம்படுத்துவதாக அமைய முடியும்.

**செயற்திறன் மிக்க வகுப்பறை மாதிரி**

ஆசிரியர்களின் செயற்திறன், மாணவரின் ஈடுபாடு, வகுப்பறைச் சூழல், கற்றல் மேம்பாடு என்பவற்றின் அடிப்படையில் செயற்திறன் மிக்க வகுப்பறை ஒன்று தோற்றம் பெறுகிறது. முன்னர் சுட்டிக் காட்டிய காரணிகளின் அடிப்படையில் காணப்படும் பலவீனங்கள் கொண்ட வகுப்பறையாக இவை அமையமாட்டா. மேற்படி சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளைச் சீர் செய்வதன் மூலம் வகுப்பறையின் முழுமையான அர்த்தத்தையும் மீட்டுக் கொள்ளமுடியும். எனவே பின்புலம் பலவீனமாகக் காணப்பட்ட பொழுதும் வகுப்பறையின் எழுச்சி காரணமாகப் பிள்ளைகள் கற்றலில் கவர்ச்சியுடன் ஈடுபட முடியும். அத்தகைய செயற்திறன் மிக்க வகுப்பறைகளே இன்றைய தேவையுமாகும்.

இத்தகையை பின்னணியில் இன்றைய நிலையில் பின்னடைவான பிள்ளைகள் கொண்ட பாடசாலைகளிடையே நம்பிக்கையும் ஊக்கமும் ஊட்டும் செயற்பாடாக நாளாந்த வகுப்பறைச் செயற்றிறன் விருத்தி எண்ணக் கருவை முன்வைத்து அதன் அடிப்படையில் இனங்காணப்பட வேண்டிய விடயங்களுடன் தொடர்புபடுத்தி ஓர் எண்ணக்கருவாக்க வடிவமைப்பைப் பெற்றுக் கொள்ள முடியும். கீழ் வரும் உருவில் மேற்படி வகுப்பறை செயற்திறன் விருத்தியைக் காட்டும் நான்கு பரப்புக்களும் ஓர் எண்ணக்கருவாக வடிவமைக்கப்பட்டு வகுப்பறைச் செயற் றிறன் விருத்திக்கு ஊக்கம் கொடுப்பதை காண முடிகின்றது.

## நாளாந்த வகுப்பறைச் செயற்றிறன் விருத்தி எண்ணக்கருவாக்க மாதிரி

**ஆசிரியத் திறன்கள்**

திட்டமிடல்
முன்வைப்பு
பாட வளர்ச்சி
உத்திகள் முறைகள்
சாதனப் பயன்பாடு
கணிப்பீடும், மதிப்பீடும்
பின்னூட்டல்

**மாணவர் கற்றல்**

கவனமும் ஈடுபாடும்
குழுவேலை ஈடுபாடு
தனியான துலங்கல்கள்
முன்வைப்புக்கள்
விரிவும் விளக்கமும்
கற்றற் பேறுகள்

**கற்றல் சூழல்**


உரையாடல்
வினாக் கேட்டல்
பரிசோதனைகள்
வகுப்பறை வேலைகள்
ஒப்படைகள்
பயிற்சிகள்
முன்வைப்புகள்
நூல்களின் பயன்பாடு

**வகுப்பறைச் சூழல்**

பௌதீக வளங்கள்
காட்சிப்பலகை
அமைதியும் அழகும்
வேண்டிய சாதனங்கள்
பொருட்களின் ஒழுங்கு
பாதுகாப்பு

→ வகுப்பறைச் செயற்றிறன் விருத்தி


மேற்படி செயற்திறன் வாய்ந்த வகுப்பறையை உருவாக்க ஆசிரியர்களின் ஒத்துழைப்பும் அர்ப்பணிப்பும் செயற்பாடும், அவசிய மானதாகும். நடைமுறை அவதானங்களின் படி காணப்படும் வகுப்பறைகளைப் பின்வரும் அடிப்படையில் ஒழுங்குபடுத்திக் காட்ட முடியும். அவதானிக்கப்பட்ட ஒழுங்கு முறைகள்: -




மேற்படி உருவில் பின தங்கிய மாணவர்கள் திறன் குன்றிய வகுப்பறையில் வழி நடாத்தப் பட்டு கற்றல் பின்னடைவு களுடன் மீண்டும் பின்னடைவு கொண்ட மாணவராக உரு வாக்கப் பெற்று வட்டமாகத் தொடர்ந்து பின்னடைவுச்சக்கரம் ஆகச் செயற்ப டுவதைக் காண முடிக்கின்றது.

எனினும் வகுப்பறைச் செயற்றிறன் விரிவாக்க மாதிரியில் வகுப்பறைச் செயற் திறன் விருத்தி செய்யப்பட்ட மாணவர் களின் மேம்பாட் டையும் முன்னேற்றத்தையும் கண்டுகொள்ள முடியும். என நம்பப்படு கின்றது.

**திறன்மிகு வகுப்பறைகளும் கற்றல் மேம்பாடுகளும்**




மேற்படி காட்டுருவில் திறன் மிகு வகுப்பறைச் செயற்பாட்டின் மூலம் நாளாந்த கற்றல் செயற்பாடுகளைத் தூண்டி; பின்ன டைவுள்ள சாதகமற்ற கற்றல் பின் புலம் கொண்ட மாணவரையும் பொருத்தமான கற்றல் செயற் பாட்டில் கொண்டு வரக்கூடிய செயற் பாட்டு மாதிரியொன்று அறிமுகம் செய்யப் பட்டு விளக்கப்பட்டுள்ளது.

**முடிவுரை**

இக் கட்டுரையில் சாதகமற்ற கற்றல் பின்புலம் காணப்படும் மாணவர்களின் பிரச் சினைகள் இனங் காணப்பட்டுள்ளது. அவர் கள் கற்கும் நாளாந்த வகுப்பறையில் குறை பாடு அவதானிக்கப்பட்டு தெளிவாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. செயற்திறன் மிக்க வகுப் பறைகளின் பண்பு ஆராயப்பட்டுள்ளது. செயற்றிறன் மிக்க வகுப்பறை ஒன்றின் ஊடே பின்னடைவுள்ள மாணவரின் கற்றல் மேம் பாடு சாத்தியப்படும் என்ற எண்ணக்கரு தெளி வாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இவை ஆசிரியர் அதிபர் மற்றும் கல்விப் புலம் சார்ந்த செயற்பாட்டாளர்களுக்கு அவர்தம் செயற்பாடுகளுக்கு நிச்சயம் வழிகாட்டும் என்பதுடன் இவைதான் இன்றைய தேவைகள் என்பதை யாவரும் ஏற்றுக் கொள்வார்கள். என்பதில் ஐயமில்லை.



# முரண்பாடுகளற்ற மாணவ சமுதாயத்தை உருவாக்குவோம்

திருமதி விஜிதா பிரதாபன்
B.A. Dip. in. Edu.
ஆசிரியை
யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை

நமது சமூகத்தில் பல்வேறு குணங்களையும் தன்மைகளையும் கொண்ட மனிதர்கள் காணப்படுகின்றார்கள். மனிதர்கள் மத்தியில் அன்றாடம் முரண்பாடுகள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. முரண்பாடு என்றால் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தரப்பினரிடையே சம்மதமின்மை, எதிர்ப்புக்கள், விரோதமான இடையூறுகள் என வரைவிலக்கணம் செய்யலாம். சிறந்த ஆளிடைத் தொடர்புகள் முறிவடையும் போது முரண்பாடுகள் தோன்றுகின்றன. கடந்த காலத்தை விட; தற்காலத்தில் இன, மத, கலாசார ரீதியிலும் அரசியல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் முரண்பாடுகள் ஏற்படுகின்றன. முரண்பாடுகள் வாய்ச்சண்டையாக மாறி கைகலப்பாகி பல உயிர் இறப்புக்கள் ஏற்படக் காரணமாகின்றன.

முரண்பாடுகள் வயது வேறுபாடின்றி, பால் வேறுபாடின்றி எந்த நிலையினரிலும் ஏற்படக் கூடியனவாகும். குடும்பங்கள், பாடசாலைகள், வேலைத்தளம், சமூகம் எனப் பல்வேறு இடங்களில் பலவிதமான முறைகளிலும் முரண்பாடுகள் காணப்படும்.

அந்த வகையில் மாணவ சமுதாயத்திலும் முரண்பாடுகள் ஏற்படுவதுண்டு. இன்றைய மாணவ சமுதாயமே நாளைய சமூகத்தினதும், நாட்டினதும் வளர்ச்சிக்கு வித்திடுபவர்களாக இருப்பதனால் நல்ல மாணவ விதைகளை சமூகத்திற்கு உருவாக்கிக் கொடுப்பது பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களினதும் பெரும் கடமையாக உள்ளது. முரண்பாடுகளைத் தவிர்க்கும் அல்லது குறைக்கும் செயற்பாடுகளை மாணவர் மத்தியிம் மேற்கொள்ளுவதன் மூலம் எதிர்காலத்தில் சிறந்த சமுதாயத்தை உருவாக்க முடியும்.

விலங்கியல் விஞ்ஞானியாகிய "கொன்ராட் லோறன்ஸ்" என்பவர் முரண்பாடுகளையும் வன்முறைத் தன்மைகளையும் குறைக்க பின்வரும் வழிகளைக் குறிப்பிடுகின்றார்.

1. தன்னை உணர்த்தல், தன்னைப்பற்றிய நினைவோடு இருத்தல், பல்வேறு நடத்தைகளுக்காத் தம்மை உள்ளூரச் செயற்படுத்தல், உந்துதல்கள், எழுச்சிகள், எண்ணங்கள் உணர்வுகள் என்பவற்றை இனங்க

கண்டு கொண்டால் முரண்பாட்டைத் தவிர்க்கலாம்.

2. வரைதல், இலக்கியம், நடனம், நாடகம், விளையாட்டுப் போன்ற செயற்பாடுகள் வாயிலாக ஆழ்மன உந்துதல்கள் மற்றும் எழுச்சிகளை விடுவிக்கலாம்.

3. குழுக்களிடையே இனப்பிரிவுகளிடையே தோழமையை விருத்தி செய்வதால் சிறந்த சமாதான சூழ்நிலையைத் தோற்றுவிக்க லாம்.

4. சமூகத்தில் மானிட முன்மாதிரிகள், எண் ணக்கருக்கள் உணர்வுகளைப் பரப்புதலும் அவற்றின் மீது சமூகத்தைக் கட்டி யெழுப்புதலும் ஆகும். இதற்கு கல்வி மிகப் பிரதானமாகும்.

அந்த வகையில் சிறு வயதிலிருந்து மாணவர்களை வழிநடாத்துவதற்கேற்ற களமாக பாடசாலைகள் அமைவதால் ஆசிரியர்கள் பின்வருமாறு செயற்படுவதன் மூலம் மாணவர்களில் பெரும்பான்மையான வர்களை முரண்பாடுகளில் இருந்து மீண் டெழச் செய்ய முடியும்.

**மாணவர்களை ஜனநாயகமாகச் செயற்பட விடல்**

பாடசாலைகளில் கற்பித்தலை நேரடியாக பாடவிடயம், மனப்பாங்குகள், சிறப்புக்கள், என்பவற்றைக் கற்ப்பிப்பதற்குப் பதிலாக அவற்றைப் பிள்ளைகளிலிருந்து தோற்று வித்துக் கொள்ளக்கூடிய பல்வேறு செயல் களை கல்வியாகக் கொள்ளலும், சுதந்திரமான நிலையை ஏற்படுத்தலும், மாணவர்களின் கருத்துக்களுக்கு செவிமடுத்து ஒழுங்கு படுத்தி பின்னூட்டல் செய்வதும் பிள்ளைகளின் கருத்துக்கள் அபிப்பிராயங்களுக்கு மதிப் பளித்து அதிக மாணவர்களின் விருப்பத்திற்கு அமைவான முடிவுகளை மேற்கொள்ள வும் இடமளித்தல் வேண்டும்.

**பிள்ளைகளின் கற்றல் திறன்களை நம்பிக்கை யோடு நோக்கச் செய்தல்**

பிள்ளைகள் வெற்றுப்பாத்திரங்கள் அல்லர். பொருத்தமான ஆர்வத்தை உருவாக் கினால் அவர்களுக்கு தம்மில் நம்பிக்கை ஏற்படும். தனிநபர் வளர்ச்சி அபிவிருத்தி என்ற எண்ணக்கருக்களை மாணவர்களில் கட்டி யெழுப்புவதும் அதன் வாயிலாகத் தெளிவான தனித்துவத்தை உருவாக்கிக் கொள்வதும் அதனோடு சார்ந்த தமது நாளாந்த வெகுசனத் தொடர்பு நிலைப்பாடு, விமர்சனப் பாங்கு ஆகிய தனிநபர் திறன்களைக் கூர்மையாக்கி அவர்களின் ஆளுமை விருத்தியை சிறப்பான தாக்கி ஆசிரியர்கள் துணைபுரிய வேண்டும்.

தற்காலத்தில் வெகுசனத் தொடர்பு சாதனங்களின் பயன்பாடுகள் மாணவ சமுதா யத்தை பாரியதொரு அழிவுப் பாதையில் இழுத்துச் சென்று சமுதாயத்தில் பல்வேறு விதமான கலாச்சார சீரழிவுகளை மேற்கொள் ளவும், முரண்பாடுகளை தோற்றுவிக்கவும் வழியேற்படுத்திக் கொடுத்து வருகின்றது. மாணவ சமுதாயத்தைத் தவறான பாதையில் இட்டுச் செல்லும். இவ் வெகுசனத் தொடர்பு சாதனங்களை சிறந்த முறையில் பயன்படுத்தி சிறந்த பலன்கள் செயற்பாடுகளை மாணவர் பெற்றுக்கொள்வதற்கும் ஆசிரியர்கள் மாண வர்களை சிறந்த முறையில் வழிப்படுத்தி செயற்பட வைக்கச வேண்டும். தொலைக் காட்சிப் பாவனை மோகத்தால் திரைப் படங்கள், நாடகங்கள் என இன்று எதை எடுத்துக் கொண்டாலும் கொலை, கொள்ளை கலாசார சீரழிவுகளை மையப் படுத்தியவை

யாகவே காணப்படுகின்றன. இவற்றின் விளைவு இன்றைய மாணவ சமுதாயம் தம்மையும் அத்திரைப்பட கதாபாத்திரமாக பாவிக்க முற்படுவதுடன் சண்டை, சச்சரவு எனப் பல்வேறுபட்ட இன மோதல்கள் முரண் பாடுகளைத் தோற்றுவிப்பவர்களாகவே காண ப்படுகின்றனர். இவற்றைக் களைந்து மாணவர் களை குறுகிய வட்டத்திலிருந்து வெளியேற்றி வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்லும் வகையில் தொடர்பு சாதனங்களைப் பயன் படுத்த ஆசிரியர்கள் வழிப்படுத்த வேண்டும்.

**தொழிலுக்கான வழிகாட்டியாக செயற்படல்**

இன்று வேலையற்ற பட்டதாரிகள் கூட முரண்பாடுகள் காரணமாக வன்முறையில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்கள் பரவலாக அதிகரித்து வருகின்றன. இதற்கு அடிப்படைக் காரணம் தொழிலுக்கான கல்வி மாணவர் களுக்கு வழங்கப்படாமையே ஆகும். மாணவ ர்களின் கற்றல் தொழில் நோக்கம் கருதியதாக அமையுமாயின் எதிர் காலத்தில் விரக்தி மனப்பான்மையில் இருந்து அவர்கள் விடுபட முடியும். ஆதலால் மாணவர்களின் பாடத் தெரிவானது கற்று முடிந்ததும் வேலை உலகில் பிரவேசிப் பதற்கான படிக் கல்லாக அமை வதற்கு ஆசிரியர்கள் மாணவர்களிற்கு வழி காட்டுவது அவசியமாகும்.

எனவே முரண்பாடுகள் வன்முறைக ளைத் தோற்றுவிக்கும் காரணியாக இருப்ப தால் அவற்றில் இருந்து மாணவர்களை மீண்டெழச் செய்வதற்கு ஆசிரியர்கள் மட்டு மன்றி பெற்றோரும் சிறு வயதிலிருந்தே மாணவர்களிடையே விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, பொறுமை, சகிப்புத் தன்மை போன்ற பண்புகளை வளர்த்தெடுக்க துணை புரிவதினூடாக முரண்பாடுகளைத் தவிர்த்து பொன்னான நல்வாழ்வு வாழக் கூடிய ஓர் மாணவ சமுதாயத்தை உருவாக்குவோம்.

# இராமநாதன் கல்லூரியின் இணைபிரியா உறவுகள்



பாலாரீச்சர்
அதிபர் தரம் III

1. பாலாரீச்சர் எனும் பார்போற்றும்
அறிவுத்தாயின் நாமம் வாழி நீடுழி
வையத்துள் நீர்வையின் சீர்மை
சிறந்து சிற்றின்பம் பெருக வைத்த
சிறப்பெனவே தம்பணி சிறந்து வாழீ.

2. வாழக் கல்மின் என்ற ஞாலக் கொள்கைக்கு
இருபதாம் நூற்றாண்டின் விடியலாய்
எழுத்தறிந்து ஏழ்மை தொலைந்து
சிறந்து சிந்தை நேர்ந்திடவைத்த ஞாலம்
நீர்வை மகள் நெடிதுயர் பணி சிறந்து வாழி

3. எண் திசை உலகம் சூழ ஏட்டுரு
கல்வி புகட்டி ஏமாப்புடன் ஏற்றம்
பெறவே சகலருமென அத்தியாரெனும்
அறிவியல் கூடம் தந்த மணிமகுடம்
மாதுமையையாள் புகழ் ஞாலம் எங்கும்
பரவட்டும்



நாகரத்தினம் ரீச்சர்

1. இயல்பு தமிழ் கலைகள் யாவும் இங்குதான்
உண்டு என இங்கிதமாய் பேசும் இணுவையூர்
மத்தியிலே ஒய்யார நடையுடனே
புன்முறுவல் பூத்த எங்கள் நாகரத்தினம்
அம்மையாரின் ஆசிரியப் பணிதான் என்னே
என்னே

2. பக்தியுடன் கருமம் ஆற்றி பௌவியமாய்
ஏட்டுக்கல்வி தந்து இணுவையின்
உயர்வுக்கு உன்னதமாய் பணிகள் நல்கி
உத்தமராய் எங்களை வாழ வைத்த
ஞான விளக்கே நின் புகழ் நீடுழி வாழி

3. கண்ணியமாய்கடமையாற்றி கல்விதனை
வெறுப்பின்றியே அருமை தரு
நயங்களுடன்
நயமாய்ப் போதித்து பாங்குடனே சீர்மைபெற
வாண்மை விருத்தியாய் வலுச்சேர்த்த எங்கள்
ரத்தினம் அம்மையார் நாமம் வாழி நீடுழி.

1. இணுவையும் நீர்வையுமாய் இணைபிரியாத
உறவு சேர்க்க மங்கை ராஜேசின் பால்
மணவாளன் சிவகுமாரன் மாண்புறவே மணமுடித்து
வலுவான தம்முறவும் பௌத்திரத்தின் உறவுமாய்
பவனியிலே உறவு வர மனைத்தக்க மாண்புடையராகின்றரன்றோ

2. இராமநாதன் கல்லூரியில் இனிதெனவே உதித்த
உறவுகளாய் அல்லும் பகலும் ஆர்வமுடன் கற்ற
கல்வி அறமெனவே ஆசிரியராய் பணிநல்க வைத்து
கேடில் விழுச் செல்வம் நீங்கி கேட்போர் செவி நல்க
பணிகள் நயந்த வாழ்வு சிறக்க வாழ்ந்தனர் அறமெனவே

3. இன்று மலரும் நூற்றாண்டு மலர்தனில் மாணவர்க்கு கலங்கரையாய்
கடமை தனில் சிறப்பெனவே கல்லூரியின் முதல்வராய் கமலராணி
கிருஸ்ணபிள்ளையை கனிவெனவே தம்வழியில் தந்து.
மணி மகுட சிறப்பினராய் மலரும் இவ்விரு மங்கையரும்
ஊர்சிறக்க உயர்வு தந்து நண்பத்துவத்தின் நிலை சிறந்து
வாழ்வியலிலும் வளம் சேர்த்து வளமான வாழ்வு பெற்றவரே
மீளாத் துயிலிலும் கல்வி கூட மயிற்கல்வாய் மலரும் நினைவுகள்
என்றும் மாநிலத்தின் பசுமை போல் ஆகட்டும் என்றும்.

**பா. அருணாசலமுதலியார்**

**கனடா.**

# இராமநாதன் கல்லூரி பழைய மாணவர் சங்கங்கள் மேற்கொண்ட கோவில் புனருத்தாரணப் பணி

**திருமதி செல்வநாயகி ஸ்ரீதாஸ்**
தலைவி, இராமநாதன் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்
(அவிஸ்திரேலியா, கனடா, லண்டன், உள்ளிட்ட புலம் பெயர் நாடுகள்)

வணக்கம்

*2005ஆம் ஆண்டு ஆரம்பப் பகுதியில் இராமநாதன் கல்லூரிப் பிரதானக் கட்டிடத்தின் கூரை மிக மோசமான நிலையில் இருப்பதாகவும் அதனைத் திருத்துவதற்கு ரூ 300,000 தேவை என்னும் விடயம் பழைய மாணவர் சங்கக் கனடாக் கிளையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ரூபா 200,000 நிதி திரட்டி அனுப்புவதாகத் தீர்மானிக்கப்பட்டது.*

*2005ஆம் ஆண்டு ஆவணி மாதம் மேற்படி உத்தேசச் செலவு ரூ 1, 650 000 ஆக உயர்ந்தது. அப் பாரிய தொகையைத் திரட்டுவது கனடாக் கிளையின் இயல்புக்கு அப்பாற் பட்ட விடயமாக இருக்கவே அவுஸ்திரேலியா, லண்டன் பழைய மாணவர் சங்கக் கிளைகளின் உதவியையும் நாடவேண்டியதாயிற்று.*

*2006ஆம் ஆண்டு மே 13ஆம் திகதி நடந்த ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் நிதி சேகரிப்பு ஆரம்பமாகியது. இந் நிதியைச் சேகரிப்பதற்கும் சேகரிக்கப்பட்ட பொதுச் சொத்தை உரிய முறையில் செலவு செய்வதற்குமுரிய கட்டுப்பாட்டுக் கட்டுமானம் நிறுவப்பட்டது.* Murugesu Neelakandan, Attoneys-at-Law & Notaries Public *என்னும் சட்ட வல்லுனர் தாபனம் இந்நிதியைப் பராமரிக்கும் சட்ட ரீதியான நம்பிக்கைப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டது. இத் தாபனத்தின் பங்குதாரரான திரு.கந்தையா நீலகண்டன் அவர்கள் எமது தொடர்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.*

*2006ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அளவில் கட்டிடத்தின் மோசமான நிலை காரணமாகவும் விலைவாசி ஏற்றம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களாலும் கட்டிடத் திருத்த வேலை ரூ.4.1 மில்லியனாக உயர்ந்தது. திருத்த வேலை* Rudra Engineering & Architectural Consultancy Organization (Pvt) Ltd . *என்னும் தாபனத்தின் உரிமையாளரும் பிரதான நிர்வாக உத்தியோகத்தருமான திரு. சிவலிங்கம் உருத்திரலிங்கம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.*

கோவில், அதனை அண்மித்த வகுப்பறைகள், படிக்கட்டுக்கள், அதனை அடுத்துள்ள பெரிய வகுப்பறை ஆகிய பகுதிகள் மரத்தளத்தினால் அமைக்கப் பட்டிருந்தன. கட்டிடத்தின் கூரை மரத் தீராந்திகளைக் கொண்டிருந்தது. மரத்தினாலான இப் பகுதிகள் பெருமளவில் கறையானுக்கு இரையாகியிருந்தன. சில வகுப்பறைகள் அவற்றின் மோசமான நிலை காரணமாக, மாணவர் பாவனைக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. கூரை பெருமளவு பழுதடைந்த நிலையில் இருந்தது. இது தான் இப் புனருத்தாரண வேலை ஆரம்பித்த கதை. மிகுதியும் சொல்வதானால் இன்னும் நான்கு பக்கங்கள் போதாது.

இராமநாதன் கல்லூரியில், சிவகாமசுந்தரி சமேதராக எழுந்தருளி அருள் பாலிக்கும் நடராசப் பெருமானின் திருக்கோவிலையும் அதனைச் சூழவுள்ள கட்டடப் பகுதிகளையும் ரூ 7 கோடி செலவில் புனருத்தாரணம் செய்யத் திருவுள்ளம் கொண்டு அதற்கான பெருளுதவியுடன் ஆக்கமும் ஊக்கமும் அளித்த புலம் பெயர் நாடுகளில் வாழும் இராமநாதன் கல்லூரிப் பழைய மாணவர்கள் அனைவருக்கும் முதற்கண் ஒருங்கிணைந்த புலம் பெயர் நாடுகளின் செயற்குழுக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக ரூ 2 கோடியை சைவ அறக்கட்டளையிலிருந்து மனமுவந்து இத் திருப்பணிக்கு வழங்கிய சேர்.பொன்.இராமநாதனின் வாரிசான திரு.டி.எம். சுவாமிநாதனுக்கும் இப் பணத்தை சைவ அறக்கட்டளையிலிருந்து பெறுவதற்குக் காரணமாயிருந்த பேராசிரியர்.சிற்றம்பலம் அவர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

அடுத்ததாக வெளிநாடுகளிலிருந்து இவ் வேலையைச் சிறப்புறச் செய்து முடிப்பதற்குக் காரணமாக அமைந்த சட்டத்தரணி திரு.கந்தையா நீலகண்டன் (Murugesu & Neelakandan, Attorneys-at-Law & Notaries Public) அவர்களுக்கு எமது நன்றிகள் உரித்தாகுக.

அடுத்ததாக இக் கட்டிடப் பணியை பொறுப்பேற்றுத் திறமையுடன் முடித்துக் கொடுத்த திரு. சிவலிங்கம் உருத்திரலிங்கம் (Rudra Engineering and Architectural Consultancy Organisation) அவர்களுக்கு எமது நன்றிகள் உரித்தாகுக.

அடுத்ததாக இக் கட்டிடப் பணியை மேற்பார்வை செய்து எமது பங்குப் பழுவைக் குறைத்த பேராசிரியர் சிற்றம்பலம், திருமதி.பாலாம்பிகை சுப்பிரமணியம், திருமதி.சரஸ்வதி கனகசிங்கம் ஆகியோருக்கும் எமது பணிவன்பான நன்றிகள் உரித்தாகுக. தொடர்ந்து இக் கட்டிடத்தைப் பராமரிக்கும் பாரிய பொறுப்புக் கல்லூரி அதிபரைச் சார்ந்தது.

கோவில் புனருத்தாரண வேலைத்திட்டம்:
பங்களிப்பு (கனேடிய டாலர்களில்)

| | |
|---|---|
| கனடா பழைய மாணவர் சங்கம் | *34.39.23* |
| அவுஸ்திரேலியா பழைய மாணவர் சங்கம் | *12,201.97* |
| இலண்டன் பழைய மாணவர் சங்கம்: | *9,159.45* |
| திரு. னு.ஆ. சுவாமிநாதன்: (ளுசை. ஞ. சுயஅயயேவாயே கூசரளவ) | *18,572.00* |
| 2006 ஆம் ஆண்டு முதலாக அனுப்பப்பட்ட பணம் ஈட்டிய வட்டி: | *8, 290.75* |
| மொத்த வரவு: | *$82, 615.40* |

மேற்குறிப்பிட்ட பணம் அத்தனையும் முதலீடு செய்து, தேவைப்பட்ட போதெல்லாம் சிறிதும் காலம் தாமதியாது உரியவர்களிடம் சேர்ப்பித்தது மட்டுமல்லாது நேரம் கிடைத்தபோதெல்லாம் பாடசாலைக்குச் சென்று கட்டிய வேலைகளைப் பார்வையிட்டு வந்த திரு. நீலகண்டன் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

இறுதியாக, முன் ஒரு காலத்தில் நாட்டின் மிக உயர் நிலையிலிருந்து கல்லூரிகள் சிலவற்றில் முன்னிலையில் நின்ற இராமநாதன் கல்லூரி, இன்று, சில பல காரணங்களால் அதன் உயரிய தரத்திலிருந்து தாழ்ந்திருப்பதை மிக்க மனவருத்தத்துடன் நினைவு கூர்கிறேன். கல்லூரி மீண்டும் தன் பொற்காலத்தைக் கல்வி, கலை, கலாசாரம், விளையாட்டு முதலிய சகல துறைகளிலும் எட்டவேண்டும் என்ற புலம் பெயர் பழைய மாணவர்களின் வேணவாவை முன்வைத்து எதிர்வரும் காலத்தில் அதை நோக்கிக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணாக்கர்கள் பணிப்பாளர்கள் பயணிக்கவேண்டும் என்று ஆசிகூறி நிறைகிறேன்.

# 1995 - 2011 வரை
# பல்கலைக்கழகம், கல்வியற்கல்லூரி சென்ற மாணவர்கள்

**1996**

பல்கலைக்கழகம்

1. சொக்யையா கம்சாஷினி
2. சிவஞானசுந்தரம் கலைச்செல்வி
3. சைமன்விக்டர் றெஜினோல்ட் நிகாரா
4. குணசிங்கம் நவநீதா
5. தியாராசா உமைதேவி
6. வைரவபிள்ளை சுதர்ஜினி
7. கந்தசாமி சுசீலலா
8. கனகரட்ணம் அகிலா

நுண்கலைப்பீடம்

1. மார்க்கண்டு கவிதா
2. திருச்செல்வம் மேரிகலிஸ்ரியா

1. பல்கலைக்கழம்

1. ஜெயகௌரி துரைசிங்கம்
2. இந்திரா ராஜரட்ணம்
3. வனிதா நவரட்ணம்
4. பானுரேகா சபாரட்ணம்
5. நிரஞ்சினி சண்முகநாதன்

நுண்கலைப்பீடம்

1. தயானந்தன் பகீரதி
2. கணபதிப்பிள்ளை கேதீஸ்வரி

**1998**

பல்கலைக்கழகம்

1. மகேந்திரன் கஜேந்தினி
2. குலநாயகம் யசோதா
3. இலகுநாதன் தமிழ்வாணி
4. சற்குணசிங்கம் யசோதா
5. மணியம் அகிலினி
6. மகிந்தா தியாகராசா
7. பிரியதர்சினி குழந்தைவேல்

நுண்கலைப்பீடம்

1. நிசாந்தினி சுப்பிரமணியம்
2. கவிதா சுப்பிரமணியம்
3. தனுஷா சற்குணநாதன்
4. கலைவாணி அருளானந்தம்

கல்வியற் கல்லூரி

1. நட்பினி கதிரேசு
2. சகுந்தலாதேவி சின்னமணி
3. பகீரதி நல்லநாதன்
4. கோமதி சிவலிங்கம்
5. நிதர்சினி பாலசிங்கம்
6. சிவதர்சினி இராமசாமி

**1999**

பல்கலைக்கழகம்

1. கிருஷ்ண குமாரி குமாரலிங்கம்
2. ரகுவதனி இராஜேந்திரம்க
3. யோகேஸ்வரி நடராசா
4. வாகினி தம்பிரட்ணம்

நுண்கலைப்பீடம்

1. கோகிலவாணி குகநாதன்
2. கலைவாணி அருளாநந்தம்
3. பற்றிசியா சுபோதினி சௌந்தரநாயகம்

**2000**

பல்கலைக்கழகம்

1. கீர்தனா
2. சுதாஞ்சலி
3. மிதுலா விஜயரட்ணம்
4. மேரியக்ளின் எட்மண்
5. சிவராஜினி தவராசா
6. கோகிலவாணி கிருஷ்ணமூர்த்தி

7. சர்மினி சுப்பிரமணியம்
8. தயாளினி சுப்பிரமணியம்

கல்வியற் கல்லூரி
1. சிவானுஜா சுப்பிரமணியம்
2. தீபா சிவயோகம்
3. ஜெயகாந்தினி கனகலிங்கம்
4. தர்மிலா ராஜரட்ணம்

**2001**
கல்கலைக்கழகம்
1. ரேகா. சுப்பிரமணியம்
2. ஜெயசுகி பரராஜசிங்கம்
3. சிந்துஜா இரட்ணசிங்கம்

நுண்கலைப்பீடம்
1. சசிலா சந்திரசேகரம்

**2002**
பல்கலைக்கழகம்
1. கவிதா அரியதுரை
2. சர்மிலா குணரட்ணம்
3. கலாநிதி முத்தையாபிள்ளை
4. சிறிஜீவனி விநாயகமூர்த்தி
5. மருவீயா கனகரட்ணம்
6. கலைவாணி ஸ்ரீஸ்கந்தராசா
7. சிவதாரணி சிவலோகநாதன்
8. சந்தியா சுப்பிரமணியம்
9. தயாளினி மாணிக்கராசா

கல்வியற் கல்லூரி
1. நிவேதினி பாலசிங்கம்

நுண்கலைப்பீடம்
1. சோபனா நந்தகுமார்
2. தமிழினி தங்கவடிவேல்

**2003**
பல்கலைக்கழகம்
1. கஜேந்தினி விஷ்வநாதன்
2. கலைவாணி வைரவநாதன்
3. கௌரி பேரின்பநாதன்
4. நயந்தினி பாலசிங்கம்
5. மாலதி நடராசா
6. ஜெயபுஸ்பா கந்தையா

நுண்கலைப்பீடம்
1. மேனகா சத்தியமூர்த்தி
2. இன்பநிதி வசந்தராஜா

**2004**
பல்கலைக்கழகம்
1. விநோதினி பாஸ்கரதேவன்
2. விதுஷா தியாகராசா

நுண்கலைப்பீடம்
1. வித்தியா குலதுங்கசேகரம்
2. ஜீவிதா ஆனந்தராசா

கல்வியற் கல்லூரி
1. தட்சாஜினி மகேஸ்வரன்
2. விநோதினி மொன்பேட்
3. ஜெனனி தவேந்திரன்
4. பிரகாசினி முருகையா
5. கிருபாளினி நாகேந்திரம்
6. ரதீப்தா நாகேந்திரன்
7. சுகிர்தா தில்லைமகாராசா

**2005**
பல்கலைக்கழகம்
1. மான்மகள் நித்தியானந்த வடிவேல்
2. சிந்துஜா
3. விதுசா தியாகராசன்

நுண்கலைப்பீடம்
1. சுவானியா குலதுங்கராசா

கல்வியற்கல்லூரி
1. சிவநாதன் கவிதா
2. நாகேந்திரம் கிருபாலினி

**2006**
பல்கலைக்கழம்
1. செல்வி பாலசுந்தரம் கார்த்திகா
2. அழகரட்ணம் சித்திரால
3. சற்குணராசா சபிதா

நுண்கலைப்பீடம்
1. பாஸ்கரன் அபிராமி
2. அப்பாசாமி சிந்துஜா

3. சிவானந்தம் கவிதா
4. சிவானந்த சோதி நிருபா

கல்வியியற் கல்லூரி
1. இராமச்சந்திரன் கேதுஷா
2. சிவலிங்கம் கஜந்தினி

**2007**

பல்கலைக்கழகம்
1. இராஜதுரை திசாயினி
2. கனகசபாபதி சத்தியா
3. சுப்பிரமணியம் ஜெயவரணி
4. மகேந்திரராசா சிந்துஜா
5. திருநாவுக்கரசு சரண்யா
6. ஐயாத்துரை சர்மாலா
7. ஆனந்தராசா சோபனா
8. செல்லையா தர்சிகா
9. சிவஞானம் யாழினி
10. செல்வராசா பாரதி

நுண்கலைப்பீடம்
1. யோகேஸ்வரன்
2. ஸ்ரீஸ்கந்தராசா சோபிகா

கல்வியியற் கல்லூரி
1. மகாலிங்கம் வாசுகி
2. செல்வரட்ணம் றேமியா
3. அருமைராஜா கனிதீபா

**2008**

பல்கலைக்கழகம்
1. நாராயணன் வினுஜா
2. சிவானந்தம் சங்கவை
3. ஞானசீலன் டிவ்வியா
4. மார்க்கண்டு கிரானுலஷ்மி

நுண்கலைப்பீடம்
1. ஸ்ரீஸ்கந்தராசா பிரதீபா
2. சிவபாலன் சமிலா
3. செல்வராஜா சிந்துஜா
4. குணசீலன் சிபோஜா
5. சிவராஜன் சிவதாரணி

கல்வியற் கல்லூரி
1. சற்குணசிங்கம் தமிழினி

**2009**

பல்கலைக்கழகம்
1. விக்னேஸ்வரன் தாட்சாயினி
2. சிவராஜா சபிதா
3. மகேந்திரன் கௌசியா
4. கணேசலிங்கம் லோஜினி
5. கீதபொன்கலன் சில்வா கீத்திகா

நுண்கலைப்பீடம்
1. றஞ்சன் கௌதமி
2. கருணாநிதி சுஜீபா
3. அழகராசா ஜெயந்தினி
4. நல்லையா பிரியதர்சினி
5. ஸ்ரீஸ்கந்தராஜா ராகவர்த்தினி
6. யேசுதாசன் மேரிதர்சினி
7. சிறிலிங்கம் சிவாஞ்சினி
8. பொன்ராசா தீபப்பிரியா

கல்வியற் கல்லூரி
1. விஜயகுமார் ஜலஜா
2. செல்வநாதன் தமிழ்விழி

**2010**

பல்கலைக்கழகம்
1. ஆனந்தராஜா றூபனா
2. ஸ்ரீராம் ஸ்ரீ துவாரகா

நுண்கலைப்பீடம்
1. நடராசா சுஜானி
2. துரைசிங்கம் துஷ்யந்தினி
3. இராசபாதம் ஜானகி
4. மோகன் சர்மிளாராணி
5. சாந்தனேஸ்வரன் ஸ்ரீத்தா

கல்வியியற் கல்லூரி
1. நாகலிங்கம் சோபிதா
2. சிவகுமார் பிந்துஜா
3. இராஜேந்திரகுமார் சுஜா
4. நடேசன் தக்ஷாயினி

**2011**

பல்கலைக்கழகம்
1. திருச்செல்வம் ஜனனி
2. பூலோகம் செல்வகியம்மை
3. சண்முகராசா இந்திராணி
4. வெற்றிவேல் தயாளினி
5. பாலசந்திரன் விதுஷாயினி
6. கந்தசாமி டார்சிகா
7. சிவராஜசிங்கம் சிவராஜினி

கல்வியியற் கல்லூரி
1. சோதிநாதன் அபர்ணா
2. சதாசிவம் கோபிதா
3. தர்மகுலசிங்கம் தேவதர்மிளா

**புனராவர்த்தன மகா கும்பாபிடேக மண்டலாபிடேகப் பூர்த்தி தின வெளியீடு**
**பழைய மாணவர்சங்கம் இராமநாதன் கல்லூரி 18.07.2013**

## இராமநாதேஸ்வரப் பெருமான் திருவூஞ்சல்
## காப்பு

ஏரார்ந்த பொழில்விளங்கு எழில்சூழ்ந்த
மருதனார் மடத்தில் மேவியுயர்
பாரார்ந்த புகழ்படைத்த இராமநாதன்
கல்லூரி வளாகத்தின் முன்றலிலே
சீரார்ந்த சிறப்புடனே வீற்றிருக்கும்
இராமநாத ஈஸ்வரர்மேல் ஊஞ்சல்பாட
காரார்ந்த கருணை மழைபொழியும்
கணபதியாம் பரராசசேகரனே காப்பு

1. பக்தியுடன் பரவும் அடியவர்தம்
அகலாத அன்பதுவே வடங்களாக
முத்தி பெற வழிகாட்டும் ஞானிகளின்
உள்ளமே உகந்த பீடமாக
கொத்துமலர்க் கோதை பார்வதியும்
இடமாய் இனிதமர்ந்த கோவே
நித்த மருள் பொலி மருதனார் மடமுறையும்
இராமநாத ஈஸ்வரரே ஆடீரூஞ்சல்

2. நந்தியொடு நாரதரும் இசைகள் பாட
நாரணனும் நான்முகனும் வடந்தொட்டாட்ட
முந்திவந்த பூதகணம் பொலிந்து ஆட
பூமகளும் நாமகளும் வாழ்த்துக்கூற
கந்தமலர் தூவிப் பணிப்பெண்கள் வந்து
வழிபாடு செய்து நின்று, நடனமாட
எந்தை இராம நாதஈஸ்வரரே இறைவியொடு
இங்கிதமாய் இருந்தமர்ந்து ஆடீரூஞ்சல்

3. வேதவொலி மந்திரங்கள் பூசனைகளேற்று
பாடுமடியவரின் பண்ணிசையும் கேட்டு
தீதகற்றும் திருவிழாப் பொலிவுங்கண்டு
உளமகிழும் இராமநாத ஈஸ்வரரே
போதுமலர்க் கரங்கள் கூப்பி வழிபாடாற்றும்

அடியவர்தம் அகத்திருளை அகற்றியென்றும்
ஆதியயன் மாலொடு அகில மெல்லாம்வாழ
அருள்பொழிந்து நின்று ஆடீரூஞ்சல்

4. பொன்கொன்றை தாதுசிந்திப் பொலிந்திலங்கப்
பொருந்திய நற்பூமரங்கள் அலங்கரிக்க
தேன் சிந்தும் கனிகள்தரும் மாமரங்கள்
பலாமரமும் வாழையொடு வில்வமேவி
வான்சிந்தும் மாமழையால் பொலிந்திலங்கும்
வாழிடங்கள் வனப்புமிக்க மரநிழற்கீழ்
மன்னும் மருதனார் மடமுறையும் மாமணியே
இராமநாத ஈஸ்வரரே ஆடீரூஞ்சல்

5. செந்தமிழும் செழுங்கலையும் ஓங்குபதி
மருதனார் மடமுறையும் தேவதேவே
பைந்தமிழில் பண்ணிசைத்துப் பாடலோடு
ஆடல்கண்டு மகிழப்பெரும் பார்புகழும்
இராமநாதன் கல்லூரிவளாகந் தன்னில்
நுண்கலைப்பீடந்தனை நன்கமைத்தீர்
சீர்பரவும் சிறப்புடையோய் இராமநாத
ஈஸ்வரரே அருள்சிறக்க ஆடீரூஞ்சல்

6. கருதரிய சிற்சபையில் நர்த்தமிடும்
கருணாகரக் கடவுளே கருணைக்கடலே
அரிபிரமாதி யார்க்கும் காண்டற்கரிய
சிவனே கற்பகமே இராமநாதேஸ்வரா
திரிபுரமெரித்தாயன்று தீயவர்க்கு அருளும்
செய்தாய் முக்கண்ணா முனிவரேறே
வருமிடர் களையவென்று கல்லூரியமர்ந்த
எங்கள் இராமநாதேஸ்வரரே ஆடீரூஞ்சல்

7. ஏழுலகும் வாழ ஆகமங்கள்வாழ மறைவாழ
சைவநெறி தானும் வாழச்
சூழுலகில் அரசரோடு அறவோர்வாழ
அந்தணரும் ஆனினமும் மகிழ்ந்துவாழ
நீழுலகம் நீதியுடன் நின்று நீடுவாழ
பூவையர்தம் கற்புநெறி பொலிந்துவாழ
வாழும் மருதனார்மடம் உறையும் செல்வ
இராமநாத ஈஸ்வரரே ஆடீரூஞ்சல்

8. கங்கையும் மதியுமாடக் காதிலணி
கண்டிகையும் செஞ்சடையும் மானுமாட
அங்கையினில் ஏந்துமனலுமாட அணிசெய்
உடுக்குடனே படம்விரித்து அரவுமாட
நங்கையவள் பார்வதியும் நயந்து ஆட
பல்லப்ப வைரவரும் முன்னின்றாட
பொங்கரவம் அசைந்தாடும் இராமநாத
ஈஸ்வரரே அருள் பொலிய ஆடீரூஞ்சல்

9. இந்திரனும் சந்திரனும் இமையவரும்
போற்றநாளும் நயந்து ஆடீரூஞ்சல்
தொந்திக் கணபதியும் குமரேசனோடு
சேர்ந்து மகிழ்ந்திடவே ஆடீரூஞ்சல்
தக்கனுக்குத் தக்கபடி தலையைக்கொய்து
தண்டனைகள் தந்தவரே ஆடீரூஞ்சல்
திக்கற்றவர் புகலிடமே ஆடீரூஞ்சல்
திருமேவும் பெருமானே ஆடீரூஞ்சல்

10. முத்துமணித் தாமமாட ஆடீரூஞ்சல்
முழுவைரத் தோடாட ஆடீரூஞ்சல்
உத்தரியப் பட்டாட ஆடீரூஞ்சல்
உத்தமி பார்வதியுடனே ஆடீரூஞ்சல்
சித்தம் களிகூர ஆடீரூஞ்சல்
பத்தர்கட்கு அருள்செய்ய ஆடீரூஞ்சல்
எத்திக்கும் புகழ்மணக்க ஆடீரூஞ்சல்
எந்தை இராமநாதேஸ்வரரே ஆடீரூஞ்சல்

வாழி

திருவிழிகள் ஓர் மூன்றும் வாழி வாழி
தீங்களுஞ் செஞ்சடையும் வாழி வாழி
திருப்புயங்கள் இரண்டும் வாழி வாழி
செழுங்கருணைத் திருவருளும் வாழி வாழி
திருமுறைகள் பன்னிரண்டும் வாழி வாழி
திருமறைகள் ஒரு நான்கும் வாழி வாழி
திரு விளங்கும் கல்லூரி வாழி வாழி
கல்வி கற்கும் மாணவரும் வாழி வாழி

ஜெய மங்களம்

பார்வதி சமேதருக்கு ஜெயமங்களம்
 பல்லுயிரும் காப்பவற்கு ஜெயமங்களம்
ஊரும் பேரும் அற்றவற்கு ஜெயமங்களம்
 மருதனார் மடத்துறைபவற்கு ஜெயமங்களம்
ஆண்டி வேடம் பூண்டவற்கு ஜெயமங்களம்
 அம்பலத்தில் ஆடுவாற்கு ஜெயமங்களம்
வேண்டும் வரம் தருவோற்கு ஜெயமங்களம்
 வெள்ளை ஊர்தி வாகனற்கு ஜெயமங்களம்

எச்சரிக்கை

பஞ்ச பூதமானவா பழவினை தீர்ப்பவா
 வேதாகமமானவா எச்சரீக்கை
வஞ்சகப் பேய்களை வேரோழிப்பவா
 மருதனார்மடத்துறைபவா - எச்சரீக்கை
ஆண்டி, அரசன், வேடன், புலவனாய்
 புலையனாய் குருவாய் வந்தவா எச்சரீக்ளை
வேண்டிய வரங்கள் தந்து சைவநெறி காப்பவா
 பார்வதியின் மணவாழா (பரமனே) எச்சரீக்கை

பராக்கு

கல்லூரி வளாகத்தில் அமைந்தவரே பராக்கு
நல்லபதி மருதனார்மடப் புண்ணியனே பராக்கு
விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும் மேலானவனே பராக்கு
கண்ணை இமைகாப்பது போல் காப்பவனே பராக்கு

லாலி

தேவ லாலி சிவயோக லாலி - அவனி
 துயர் துடைக்கும் தூய லாலி
போக லாலி பரஞ்சுடரே லாலி - சிவ
 கங்கை சுமந்த பெருமானே லாலி
சூல லாலி சுடர்கொடியே லாலி - போர்
 அரக்கர் குலமழித்த கோவே லாலி
மூல லாலி மூவா முதலே லாலி - என்றும்
 எம்மிடர் களைவாய் தாயே லாலி.

சுபம்

ஆக்கம் திருமதி வை. கணேசபிள்ளை

# பரிகாரக் கற்பித்தலும் ஆசிரியரும்

**திருமதி. க. இராஜமனோகரன்**
ஆசிரியை
யா/ சுன்னாகம் இராமநாதன் கல்லூரி

கற்றலில் பின்னிற்கும் மாணவர்களுக்கு அல்லது கற்கையில் இடர்களையும் சிரமங்களையும் எதிர்நோக்கும் மாணவர்களுக்கு வழங்கப்படும் விசேடமான கற்றல் உதவியே பரிகாரக் கற்பித்தல் ஆகும். இது பொதுவான கற்றல் - கற்பித்தல் கருமத்தொடருக்கு மேலதிகமாக வழங்கப்படும் ஒரு விசேட உதவியாகும். மாணவர்கள் எவ்வெவ் விடயங்களைத் தெளிவாகி அறிந்துள்ளார்கள் என்பதில் தொடங்கி, அவர்கள் எவ்வெவ் விடயங்களை அறிந்து கொள்வதில் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள் என்பது வரையிலான செயற்பாடுகளில் பரிகாரக் கற்பித்தல் ஆரம்பமாகிறது.

கற்றலானது ஒருபோதும் முற்றுப் பெறுவது இல்லை. கற்றல் தனிநபர் சார்ந்தது. கற்றல் ஓர் சமூகச் செயற்பாடு ஆகும். சில வேளைகளில் கற்றல் களிப்பூட்டுவதாகவும் அமைகிறது. கற்றல் தொடர்பான கோட்பாடுகளை அர்த்தமுள்ளதாக்குவதற்கு பரிகாரக் கற்பித்தலின் தேவை இன்றியமையாததாகும். வினைத்திறன், பயனுறுதி, மிக்க கற்பித்தலை மேற்கொள்ள பரிகாரக் கற்பித்தல் பிரதான உபாயமாக அமைகிறது.

மாணவரின் உள்ளார்ந்த திறமைகளை மாணவர்களுக்குச் சார்பாக உச்ச அளவிற்கு விருத்தி செய்வதற்காக சுற்றாடலை ஒழுங்கமைப்பதும், தோன்றும் தடைகளை நீக்குவதும் பரிகாரக் கற்பித்தல் தொடரின் முக்கிய பொறுப்பாகும்.

**பரிகாரக் கற்பித்தலின் படிமுறைகளாவன**

- கற்றலில் குறைபாடுகளை வெளிக்காட்டும் மாணவர்களை இனங்காணல்
- குறைபாடுகளின் தன்மைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாக்குதல்
- ஒவ்வொரு குழுவிற்கும் பொருத்தமான கற்றல் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல்
- தேவையான கற்றல் துறைகளைத் தயாரித்தலும் பிரயோகித்தலும்
- குறைபாடுகளைக் காட்டும் மாணவர்களுக்கு மேலதிக உதவி புரிதல்
- ஒரு தடவை சமர்ப்பிக்காத பாடத்தையோ செயற்பாட்டையோ மீண்டும் செயற்படுத்தல்
- மதிப்பீடுகளை மீண்டும் தொடர்தல்

அடுத்து பரிகாரக் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர் பரிகாரம் பெறும் மாணவரிடையே அன்னியோன்னிய தொடர்பையும், நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் வளர்ப்பவராக இருத்தல் வேண்டும். அப்பொழுது தான் பரிகாரக் கற்பித்தலில் முழு வெற்றியடைய முடியும். இவற்றை விட பரிகாரக் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்கள் பல்வேறு பண்புகளையும்

திறன்களையும் கொண்டிருத்தல் வேண்டும். என எதிர்பார்க்கப்படுகின்றது. அவற்றைப் பின்வருமாறு நோக்குவோம்

- கருணை உள்ளமும், நற்குணமும் , பொறுமையும் கொண்டவராகவும், பரிகாரம் பெறுபவருடன் பண்புடன் கரும மாற்றுபவராகவும் இருத்தல் வேண்டும்.
- துரிதமாகவும், குறுகிய மனப்பாங்குடன் முடிவுகளையும், தீர்மானங்களையும் மேற்கொள்பவராய் இருத்தல் கூடாது.
- பரிகாரக் கற்பித்தலின்போது அவசரப் படாமலும் நம்பிக்கை இழக்காமலும் இருத்தல் வேண்டும்.
- இக்கற்பித்தலில் பிரயோகிக்கப்படும் துணைச் சாதனங்களையும், உபகரணங் களையும் திருத்தமாகவும், சிக்கலின்றியும், தெளிவாகவும், மாணவர் விரும்பும் வகையில் தயாரிக்கக் கூடியவராக ஆசிரியர் தம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும்.
- பரிகாரக் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர் அதில் ஈடுபடும் மாணவர்களின் பெற்றோர்களுடன் பரஸ்பரத் தொடர்பைக் கொண்டிருப்பவராக இருத்தல் வேண்டும். அத்துடன் பெற்றோர்களின் உச்ச ஒத்துழைப்பைப் பெற முயற்சிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.
- பரிகாரம் பெறும் ஒவ்வொரு மாணவனும் வகுப்பறையுள் முறையான கற்றல் - கற்பித்தல் கருமத் தொடரில் ஈடுபடும் சாதாரணமானதொரு மாணவன் என்பதை ஆசிரியர் மறந்து விடக் கூடாது.
- ஆசிரியர் பன்முகத் தேர்ச்சியுடையவராகவும், சமூகப் பொறுப்புடையவராகவும் இருத்தல் வேண்டும்.
- பரிகாரம் பெறும் மாணவனைத் தனிமைப்படுத்தி நோக்காது சமூகப் பொருளாதாரப் , பண்பாட்டுப் பின்புலத்தை இணைத்து நோக்கும் திறன் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
- பரிகாரக் கற்பித்தல் என்பது மாணவரின் குறைபாட்டுக்காகப் பிரயோகிக் கப்படும் ஒரு நடவடிக்கை மாத்திரமன்றிச் சிறப்பான மனிதத் திறன்களைக் கண்டறிந்து அவர்களை முறையாக விருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப் படுவது ஒன்றாகும்.

எனவே ஆசிரியர்களாகிய நாம் ஒவ்வொரு பிரிவுகளிலும் காணப்படும் பின்னடைவைக் காட்டும் மாணவர்களை இனங்கண்டு அவர்கள் மேல் சினங்கொள்ளாமல் கருணை காட்டி அவர்களையும் எதிர்காலத்தில் சிறந்த மாணவர்களாக மிளிர்ந்திட இயன்றவரை செயற்படுவோமாக.

நன்றி

# யா/இராமநாதன் கல்லூரி - சுன்னாகம்
# J/Ramanathan College - Chunnakam

1913 2013

## நூற்றாண்டு விழா ஞாபகார்த்த நிகழ்வு
## Centenary Anniversary

## நினைவு முத்திரை வெளியீடு

திகதி :- 20/01/2014
இடம் :- அருணாசலம் மண்டபம்
நேரம் :- மு.ப. 9.00 மணி

*யா/இராமநாதன் கல்லூரியின் நூற்றாண்டு விழாவின் சிறப்பு நிகழ்வாக **20/01/2014**ஆம் திகதி நினைவு முத்திரை வெளியீடு நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் கௌரவ தபால் சேவைகள் அமைச்சர் உட்பட அமைச்சு அதிகாரிகள் தபால் திணைக்கள அதிகாரிகள் அதிதிகளாகக் கலந்து கொள்ள உள்ளமை சிறப்பம்சமாகும். இவ் வரலாற்று நிகழ்வில் வெளியிடப்படும் நினைவு முத்திரை கல்லூரியின் அழகிய கட்டடத்தின் முகப்புத் தோற்றம், இராமநாத வள்ளலின் உருவப்படம், பாடசாலைச்சின்னம் ஆகியவற்றைத் தாங்கி பாடசாலை நிறங்களான பச்சை, மஞ்சள் வர்ணத்துடன் வெளிவருகின்றது.*

*அஞ்சல் சேவையின் ஊடாக முத்திரை வடிவில், பழைய மாணவிகள், நலன் விரும்பிகள் ஊடாகவும் இலங்கை, சர்வதேசம் உட்பட உலக நாடுகளில் நினைவு முத்திரை செல்ல இருப்பது பெரு மகிழ்வைத் தருகின்றது. இவ் வரலாற்று நிகழ்வு சேர்.பொன்.இராமநாத வள்ளலுக்கு நாம் செய்யும் கைமாறாகக் கருதுகின்றோம். இந்நிகழ்வுக்கு ஒத்துழைத்த அனைவருக்கும் முத்திரை வெளியீட்டுக்குழு நன்றி பகர்கின்றது.*

*நன்றி.*

**முத்திரை வெளியீட்டுக்குழு**

- திருமதி.கமலராணி கிருஷ்ணபிள்ளை - அதிபர், யா/இராமநாதன் கல்லூரி.
- திருமதி.நந்தினி சிவராஜன் - பிரதி அதிபர், யா/இராமநாதன் கல்லூரி.
- திரு.சிதம்பரப்பிள்ளை சிவராஜன் - முன்னாள் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர், நலன் விரும்பி.
- திரு.செல்லையா இலகுநாதன் - முன்னாள் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர், நலன் விரும்பி.
- திருமதி.சசிகலா சிவநாதன் - பழைய மாணவி, யா/இராமநாதன் கல்லூரி. நூற்றாண்டு விழாக்குழுச் செயலாளர்.
- திருமதி.சிவராஜசோதி ஸ்ரீதரன் - சிரேஷ்ட ஆசிரியர்
- திரு.சபாநாயகம் பாலமுரளி - ஆசிரியர்
- திரு.நித்தியானந்தன் மதிரூபன் - ஆசிரியர்
- செல்வி.ஜெயந்தி வயித்திலிங்கம் - ஆசிரியர்

# இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் கல்லூரியில் சேவையாற்றிய ஆசிரியர்கள்

| | | |
|---|---|---|
| 1. | திரு. சோமசுந்தரம் | 1913 – 1944 |
| 2. | திருமதி T. முத்துக்குமாரு | 1925 – 1964 |
| 3. | திரு. C. S. கணபதி ஐயர் | 1925 – 1957 |
| 4. | திரு. S. இராமச்சந்திர ஐயா | 1925 – 1955 |
| 5. | திருமதி R. வெற்றிவேற்பிள்ளை | 1927 – 1966 |
| 6. | திருமதி M. கனகரத்தினம் | 1930 – 1966 |
| 7. | திருமதி T. தளையசிங்கம் | 1930 – 1968 |
| 8. | செல்வி M. ஆறுமுகம் | 1937 – 1966 |
| 9. | திரு. S. இராம ஐயா | 1944 – 1970 |
| 10. | திருமதி R. அருணாசலம் | 1945 – 1980 |
| 11. | திருமதி T. பசுபதி | 1947 – 1952 – 1958 – 1978 |
| 12. | திருமதி K. தியாகராஜா | 1947 – 1980 |
| 13. | திருமதி B. சண்முகலிங்கம் | 1949 – 1981 |
| 14. | திருமதி M. திலகரத்தினம் | 1949 – 1984 |
| 15. | திருமதி Y. இராஜரத்தினம் | 1949 – 1983 |
| 16. | திருமதி S. அப்பாத்துரை | 1949 – 1980 |
| 17. | திருமதி A. சண்முகராஜன் | 1950 – 1978 |
| 18. | திருமதி G. சோமசுந்தரம் | 1951 – 1988 |
| 19. | திருமதி C. கார்த்திகேசு | 1952 – 1981 |
| 20. | திருமதி K. சுந்தரலிங்கம் | 1953 – 1981 |
| 21. | திருமதி S. பரராஜசிங்கம் | 1953 – 1981 |
| 22. | திருமதி T. தம்பிரத்தினம் | 1953 – 1980 |
| 23. | திருமதி R. முருகரத்தினம் | 1953 – 1982 |
| 24. | திருமதி P. S. குமாரசுவாமி | 1953 – 1986 |
| 25. | திருமதி A. சிவப்பிரகாசபிள்ளை | 1954 – 1992 |
| 26. | திருமதி N. ஆனந்தரத்தினம் | 1955 – 1987 |
| 27. | திருமதி P. பரராஜசிங்கம் | 1955 – 1993 |
| 28. | திருமதி S. K. சுந்தரேசன் | 1956 – 1987 |
| 29. | திருமதி S. S. குமாரசுவாமி | 1959 – 1990 |
| 30. | செல்வி T. ஆறுமுகம் | 1960 – 1988 |
| 31. | திருமதி S. நாகநாதன் | 1960 – 1986 |
| 32. | திருமதி S. விவேகானந்தன் | 1961 – 1996 |
| 33. | திரு. V. ஏகாம்பரநாதன் | 1965 – 1995 |
| 34. | செல்வி Y. செல்லையாபிள்ளை | 1965 – 1990 |
| 35. | திருமதி ஶ்ரீசோ. கைலாசநாதன் | 1973 – 1996 |
| 36. | திருமதி ப. பத்மநாதன் | 1977 – 2002 |

# இராமநாதன் கல்லூரியில் கற்ற புகழ் பூத்த பழைய மாணவர்களில் சிலர்

**பாராளுமன்ற உறுப்பினர்கள்**

1. திரு. வி. தர்மலிங்கம் MP
2. திருமதி இரங்கநாயகி பத்மநாதன் MP
3. திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன் MP

**கௌரவ கலாநிதிகள்**

1. சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
2. ஆறு திருமுருகன்

**இலங்கை நிர்வாக சேவை**

1. மைதிலி சோமசுந்தரம்
2. விஜயலக்சுமி கார்த்திகேசு
3. சுகுணரதி தெய்வேந்திரம்

**இலங்கை கல்வி நிர்வாக சேவை**

1. திரு. தற்பரானந்தன்
2. செல்வி பத்மாசனி ஆறுமுகம்
3. திருமதி ஸ்ரீமதி குமாரசுவாமி
4. திருமதி சிவா இராமநாதன்
5. திருமதி மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம்
6. திருமதி கலாரஞ்சிதம் மகேந்திரன்
7. செல்வி புனிதச்செல்வி முருகேசு

**பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள்**

1. பேராசிரியர் திருமதி கலைவாணி இராமநாதன்
2. செல்வநாயகி ஸ்ரீதாஸ்
3. மகேஸ்வரி மகாதேவா
4. நித்தியவதி ஜெயசிங்கம்
5. ஸ்ரீகலா ஜெகநாதன்
6. கலாநிதி சண்முகநாதபிள்ளை
7. சிவசக்தி சிவநேசன்
8. அருட்செல்வி கிருபைராஜா
9. தமிழினி தங்கவேல்

**குண்டசாலை அதிபர்**

1. பத்மாசனி வரதராஜன்

**பல்கலைக்கழக நூலகர்கள்**

1. இராஜேஸ்வரி கருணானந்தராஜா
2. தயானந்தி ஸ்ரீதரன்
3. ஸ்ரீகாந்தலக்சுமி அருளானந்தம்
4. ரஜனி சோதிநாதன்

**வைத்திய கலாநிதிகள்**

1. சிறந்த மகப்பேற்று நிபுணர் செல்வி. சிவா சின்னத்தம்பி
2. மங்கையற்கரசி மகாதேவா
3. வேதநாயகி வேலும்மயிலும்
4. ஸ்ரீஜெயதேவி பொன்னுத்துரை
5. நவமலர் கனகரத்தினம்
6. செங்கமலம் தெய்வேந்திரம்
7. பாமினி பாலச்சந்திரன்
8. சாரதா சிவஞானவேல்
9. பங்கஜம் S.
10. கோசலா S.
11. யோகலக்சுமி குமார் பொன்னம்பலம்
12. ஜெயந்தினி கந்தையா
13. வசந்தா தேவாராஜா
14. சாந்தினி க.
15. ஜெயந்தி சேனாதிராஜா
16. சிவானந்தி ரகுபரன்
17. சித்திரா கடம்பநாதன்
18. தர்மலக்சுமி முருகேசம்பிள்ளை
19. மகாலக்சுமி முருகேசம்பிள்ளை
20. ஸ்ரீரஞ்சனி சிவகுருநாதன்
21. நிர்மலா ஸ்ரீநிவாசன்
22. கலாவல்லி சுப்பிரமணியம்
23. தர்மினி குமாரசுவாமி

24. அஜந்தா கேசவராஜ்
25. ஜானகி சிவபெருமான்

**பல்வைத்திய நிபுணர்கள்**

1. ஜானகி சின்னத்துரை
2. சிவகுமாரி அருணாசலம்
3. கிருஷ்ணானந்தி சோமசுந்தரம்
4. கமலவதி சுப்பிரமணியம்
5. ஜானகி மகேசன்

**சித்த வைத்திய கலாநிதிகள்**

1. பிறேமா அம்பலவாணர்
2. சிவசக்தி இராஜரட்ணம்
3. திரிபுரநாயகி சிதம்பரநாதன்
4. தர்சிகா செல்வராஜா
5. ரஜனி S.

**துறைசார் கலாநிதிகள்**

1. இரதிதேவி சண்முகநாதன்
2. கிருபாதேவி சண்முகநாதன்
3. மைதிலி தயாநிதி
4. மீரா வில்வராஜா
5. கல்யாணி குமாரசுவாமி

**சட்ட நிபுணர்கள்**

1. சாந்தா அபிமன்ஜசிங்கம்
2. சுபாசினி சித்திரவேல்
3. ஜெயரஞ்சிதம் சுப்பிரமணியம்
4. கௌசல்யா வேலாயுதம்
5. மோகனகுமாரி சிவசுப்பிரமணியம்

**இலங்கை அதிபர் சேவை**

1. காயத்திரி கணேசன்
2. யோகலக்சுமி இராஜரத்தினம்
3. புவனேஸ்வரி சச்சிதானந்தம்
4. ஞானேஸ்வரி சோமசுந்தரம்
5. ஸ்ரீமதி குமாரசுவாமி
6. பத்மாசனி ஆறுமுகம்
7. விஜயராணி பசுபதிப்பிள்ளை
8. மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம்
9. வனஜா சண்முகானந்தன்
10. சரஸ்வதி ஜெயராஜா
11. திருமதி க. சிதம்பரநாதன்
12. சோமேஸ்வரி கைலாசநாதன்
13. சுபத்திரா விவேகானந்தன்
14. வசுமதி முத்துக்குமாரசுவாமி
15. கலாநிதி ஆறுதிருமுருகன்
16. சாரதா கிருஸ்ணதாஸ்
17. சறோஜா துரைராஜா
18. புனிதச்செல்வி முருகேசு
19. குககுமாரி விஜயரகுநாதன்
20. கமலராணி கிருஸ்ணபிள்ளை
21. பிரதா நவரத்தினம்

**ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர்கள்**

1. பொன்னம்மை பத்மநாதன்
2. மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம்
3. சிவா இராமநாதன்
4. கலாரஞ்சிதம் மகேந்திரன்

**தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்**

1. விக்னேஸ்வரி நரேந்திரா

**தகவல்கள் கிடைக்கப்பெற்றவர்களின் விபரங்கள் மட்டும் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது.**

கல்லூரி





அருட்பரானந்த சுவாமிகள்



சேர் முத்துக்குமாரசுவாமி



Dr. ஆனந்தக்குமாரசுவாமி



சேர் பொன் அருணாசலம்



பொன்னம்பல முதலியார்



சேர் பொன் இராமநாதன்
அரசியல் மேதையாக



சேர் பொன் இராமநாதன்
30 ஆவது வயதில் ஞான நிஷ்டையில்

## 50 களில் இராமநாதன் கல்லூரியின் நிகழ்வுகள்













தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற உடற்பயிற்சிக் குழுக்கள் சில



1958



1959



1976

## புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்



கு. குனசர்மிலா (2009)



பா. தர்மிலா (2012)



பா. கலைப்பிரியா (2013)

## க.பொ.த உயர்தரப் பரீட்சையில் உயர்சித்தி பெற்ற மாணவர்கள்



நா. வினுசா (2008) – 3A



கொ. கொன்சிற்றா (2013) – 3A



பா. ஜஸ்திகா (2013) –2A, B



பா. சிந்துஜா (2013) –2A, B

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்



1993



2008



2010

பல்கலைக்கழகம் சென்ற விசேட தேவையுடைய மாணவிகள்



ரஞ்சினி விஜயரட்ணம்
1989 ஆம் ஆண்டு




ரேகா கிருபானந்தம்



டில்வியா ஞானசீலன்
2008 ஆம் ஆண்டு




இராசலட்சுமி மார்க்கண்டு
2008 ஆம் ஆண்டு



தயாளினி வெற்றிவேல்
2013 ஆம் ஆண்டு

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் உயர் சித்தி பெற்ற மாணவர்கள்



அ. சர்மிகா (2005) - 10A



சி. நிரூபா (2007) 10A



ர. சாம்பவி (2009) - 9A



சி. சங்கீதா (2010) - 9A



ச. ஜசிந்தா (2010) - 9A



த. தேவதர்கினி (2012) - 9A




சுற்றாடல் முன்னோடி படையின் சிறந்த மாணவிக்கான ஜனாதிபதி விருதினைப் பெற்ற முதல் தமிழ் மாணவி – செல்வி பொ. கீதாஞ்சலி




உளவளநாளை முன்னிட்டு நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் தேசிய மட்டத்தில் 1ஆம் இடம் பெற்ற மாணவி – செல்வி. வ. வர்த்திகா



கல்வித் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட புத்தாக்குநர் போட்டியில் தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவி செல்வி. த. வைஸ்ணவி

ஆசிரியர் தின நிகழ்வுகள்



1997



2010



2011

## ஆசிரியர் தின நிகழ்வுகள்



2012



2013

தேசிய மட்டத்தில் பங்குபற்றிய வலைப்பந்தாட்ட அணியினர்



1959



1999



2001




2008



2012



P.T. Squad in 1971




C. Gowry
Winners - N.P.T.A
1st Place - Inters - English



J. Niththiyaeathy
Elocution Contest - 1971
1 st Place Seniors Tamil

இராமநாதேஸ்வர ஆலயமும் சிற்பங்களும்













Provincial Level English language and Drama Competition - 2013
B. Tharmila, R. Roshana, S. Jenani, J. Laxshika



Provincial Level English language and Drama Competition - 2012
K. Kamshajini, B. Jasthika



Provincial Level English language and Drama Competition - 2005

Copy writing - 1st Place

T. Careena


## கலாசார நிகழ்வுகள்











1970
S.Sivasakthy
Prize - Winners - N.P.T.A

1971
K. Shanthy
Music Competition



S. Krisnananthy, A. Vigneswary, S.Mythily
Prize - Winners - 1st Prize
(District Level) பா. ஓதல்



S. Mythily
All Island Competition
Grade V & VI

A. Hamsavalli
பா.ஓதல்
Grade VII & VIII



S. Lthaya D.Chandreswary
R. Lalitha S. Gnanam
Athletic Champians - 1971



சேர் பொன் இராமநாதன் சைவசித்தாந்த ஆய்வுகள் செய்ய அமர்ந்திருந்த இடம்



சேர் பொன் இராமநாத;னின் வாசஸ்தலம்




Light House Opening Ceremony - 2004




English Quiz - 2005

Prize Day - English Events



2004



2006



2007



2009



District Level English language and Drama Competition - 2012



Zonal Level English language and Drama Competition - 2012



Zonal Level English language and Drama Competition - 2013

பல்கலைக்கழக, கல்வியியற் கல்லூரிக்கு அனுமதி - 2011



சிங்கள மொழி பேச்சுப் போட்டி மாகாண மட்டம் - 2013



கு. குணசர்மிலா



ச. கீர்த்திகா

ஆசிரியர் குழாம் - 1994





விவாதபோட்டி - 2001
(தங்கப்பதக்கம்)
செல்வி. ஸ்ரீ.ஸ்ரீரங்கநாயகி



மாகாணமட்ட விஞ்ஞான
வினாடிவினா போட்டி - 2008
1 ஆம் இடம்
செல்வி. ர. சாம்பவி



மாகாணமட்ட தனி இசை
பிரிவு 2 - 2008
2 ஆம் இடம்
செல்வி. ர. நிஷா



மாகாண மட்ட மெய்வல்லுனர் போட்டி.
2007 - 2008
செல்வி. சி. யாழினி

ஆசிரியர் குழாம் - 2008





வடக்கின் வசந்தம் நிகழ்வின் தேசியமட்ட குழு நடனம் 1 ஆம் இடம்



இசை நாடகம் "ஏழு பிள்ளை நல்ல தங்காள்" மாவட்டமட்டம் 1 ஆம் இடம்



கிராமிய நடனம் மாகாணமட்டம் 1 ஆம் இடம்

முத்தமிழ் விழாக்கள்



1991



1998



2010



2010



2010

விசேட தேவையுடைய மாணவர்கள்







கல்லூரி விடுதி மாணவர்கள் - 2010





கல்லூரியின் உயர்தர மாணவர்கள் - 2014



கல்லூரியின் உயர்தர மாணவர்கள் - 2015



கல்லூரியின் தரம் 11 மாணவர்கள் - 2013



கல்லூரி விடுதி மாணவர்கள் - 2013



கல்லூரியின் தரம் 09 மாணவர்கள் – 2013



கல்லூரியின் தரம் 10 மாணவர்கள் – 2013

கூடைப்பந்தாட்ட மைதான திறப்பு விழா - 2011





கூடைப்பந்தாட்ட அணியினர் - 2013





கல்லூரியின் தரம் 07 மாணவர்கள் – 2013



கல்லூரியின் தரம் 08 மாணவர்கள் – 2013

## கல்லூரி இல்ல மெய்வல்லுனர் போட்டி



1971



1993



2002



2009



2010



2012



கல்லூரியின் தரம் 05 மாணவர்கள் – 2013



கல்லூரியின் தரம் 06 மாணவர்கள் – 2013

மாணவத் தலைவிகள்



2002



2007



கல்லூரியின் தரம் 01, 02 மாணவர்கள் – 2013



கல்லூரியின் தரம் 03, 04 மாணவர்கள் – 2013

## மன்றங்கள்



கிறீஸ்தவ மன்றம்



உயர்தர மாணவர் மன்றம்



நுண்கலை மன்றம்



சுகாதாரக் கழகம்



இந்துமா மன்றம்



கணித விஞ்ஞான மன்றம்



கல்லூரியின் தரம் 05 மாணவர்கள் – 2013



கல்லூரியின் தரம் 06 மாணவர்கள் – 2013

மாணவத் தலைவிகள்



2002



2007



பெண் சாரணியர்



குருளைச் சாரணியர்



சுற்றாடல் முன்னோடிப்
படையணி - 2008



சுற்றாடல் முன்னோடிப் படையணி - 2013

# Names of Non Academic Staff



Mr.P.Ambigaivagan



Mrs.K.Uthayakumaran



Mrs.V.Navaratnam



Mr.S.Sivapalan



Mr.K.Sureshkumar



Mrs.L.Kathiravelu



Mr.K.Jeevakumar



Mr.T.Tharmasothy



Mrs.N.Pirabakaran

## நூல் வெளியீடுகள் சில



1994




2008




2013

# Names of Staff



Mrs.K.Kirushnapillai
Principal



Mrs.N.Sivarajan
Deputy Principal



Mrs.K.Lingeswaran



Mrs.P.Kesavan



Mrs.J.Chanthirasri



Mrs.S.Seenivasagam



Miss.P.Kanagalingam



Miss.Neelajini



Mrs.S.Yogaraja



Mrs.P.Kiritharan



K.Ramachandran



Mrs.T.Lingeswaran



Miss.J.vaithilinga



Mrs.M.Raveendran



Mrs.T.Sivakaran



Mrs.M.Jeyanathan

2013 ஆம் ஆண்டின் விளையாட்டு நிகழ்வுகள் சில










# Names of Staff


Miss.P.Kathiravelu


Mrs.M.Sivasuthan


Mrs.Y.Sornalingam


Mrs.S.Asokan


Mrs.S.Sathyalingam


Miss.S.Barathy


Mr.A.Suganthan


Mrs.Selvampikai


Mrs.T.Kobibalamurali


Miss.S.Niveka


Mrs.N.Arumainathan


Mrs.B.Sivagnanam


Mrs.J.Kanagalingam


Mrs.R.Sritharan


Mrs.S.Rajenthiram


Mrs.R.Parathan

## கலாசார நிகழ்வுகள்












"பாரி வள்ளல் நாடகம்"
2009 மாகாண மட்டம் 3ஆம் இடம்



சிறுவர் அரங்கு - 2012
மாவட்ட மட்டம் 3ஆம் இடம்

கல்லூரியின் உடற்பயிற்சிக் குழுக்கள்



1971



1993



2010

# Names of Staff


Miss.Daisipaul


Mrs.S.Sritharan


Miss.K.Sellathurai


Mrs.E.Selvam


Mrs.T.Gengatharan


Mrs.L.Komaleswaran


Mr.T.Kumarathas


Mrs.R.Ragulan


Mrs.S.Vigiyakirushnan


Mrs.S.Keetheeswaran


Mrs.S.Vilvarajan


Mr.N.Mathiruban


Mrs.J.Inpanithy


Mrs.S.Gananendran


Mrs.S.Bavasayanthan


Mrs.K.Rajamanokaran

## திருமுறை விழாக்கள்







# Names of Staff


Mrs.S.Rathitaran


Mrs.M.Vasuthevan


Mrs.J.kumaravel


Mrs.K.Thevakumar


Mrs.T. Kumarathas


MR.S.Balamurali


Mr.T.Vikneswaran


Mrs.S.sathiyaseela


Mrs.A.Jayaseelan


Mrs.A.Shanmukakumar


Mrs.C.Kiritharan



Mrs.J.Varatharajan


Mrs.K.Kanthavel


Mrs.M.Vishnukum


Mrs.P.Balakrishnan


Mrs.R.Balachandran



Harikanan, Jaffna.